


# மா.பா.சி. கேட்டவை

தினக்குரல் பதிவுகள்

புதிய பண்பாட்டுத் தளம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மா. பா. சி.
# கேட்டவை
## ('தினக்குரல்' பதிவுகள்)

மா. பாலசிங்கம்

புதிய பண்பாட்டுத்தளம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைப்பு: மா. பா. சி. கேட்டவை ('தினக்குரல்' பதிவுகள்)

ஆசிரியர்: மா. பாலசிங்கம்

முதற்பதிப்பு: சித்திரை 2016

விடயம்: இலக்கியக் கூட்ட உரைகள்

வெளியீடு: புதிய பண்பாட்டுத் தளம்
13, மவுன்ட் அவனியு, கல்கிசை

வடிவமைப்பும் அச்சாக்கமும்:
ஆர் எஸ் ரி என்டர்பிறைஸ்ஸஸ் (பி) லிமிற்றெட்
114, டபிள்யு. ஏ. சில்வா மாவத்தை
கொழும்பு 6

Title: Maa. Paa. C. Kaettavai
('Thinakkural' Pathivukal)

Author: M. Balasingham

First Edition: April 2016

Subject: Litterary Meeting Speeches

Publication: Puthiya Panpattuth Thalam
13, Mount Avenue, Mount Lavinia

Design & Printers : RST Enterprises (Pvt) Ltd
114, W.A. Silva Mawatha
Colombo 6
T.P. 0777878772

ISBN: 978 -955-41109-2-2

Price : 900/=

(Bar Code: 9 789554 110922)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



"எதிர்வுகளையும்
நிராகரிப்புகளையும்
அங்கீகாரமாக ஏற்றல்
என் வழி" என்ற
இலக்கில்,
நச்சாதார்க்கும்
இனியவராகத்
தமிழிலக்கிய எழுத்தாலும்
மேடைப் பேச்சாலும்
தமிழுலகைப்
பிரமிக்க வைத்து,
தமிழிலக்கிய வரலாற்றில்
வாழ்ந்து கொண்டிருக்கும்
இலக்கிய ஞானி
எஸ். பொன்னுத்துரை
(எஸ். பொ.)க்கு
இந்நூல் படையல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நன்றி

* தம்புசிவா, பூ. ஸ்ரீதர்சிங், சதபூ பத்மசீலன்,
  க. குமரன், ராஜன் பூபாலசிங்கம், மு. தயாபரன்

* அவுஸ்திரேலியா
  க.தயாளன், T. பிரபானந்தன்

* லண்டன் - R. உதயணன்

* டென்மார்க் - V. ஜீவகுமாரன் T. தருமகுலசிங்கம்

* கனடா
  P. பாலசுப்பிரமணியம், S. சிவகுமார், P. விஜயானந்தன்,
  T. தவராஜா, T. கிருஸ்ணராஜா, K. சிறீகரன்,
  K. சிவனேஸ்வரன், சிவனேசன் மஹத்,
  பிரபாகரன், சிவசிதம்பரம்.

* புதிய பண்பாட்டுத் தளத்தின் முதலாவது வெளியீடான "இரட்டைத் தேசியமும் பண்பாட்டுப் புரட்சியும்" நூல் இலங்கையிலும் கனடாவிலும் வெளியிடப்பட்டதற்கான முழுச் செலவுகளையும் ஏற்றுக்கொண்ட மறுமலர்ச்சி மன்ற (காலையடி), கனடா கிளையினர்க்கு "புதிய பண்பாட்டுத் தளம்" தனது மனங்கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1 | கொம்யூனிஸ்ட் கார்த்திகேசன் நினைவுப் பேருரை | 1 |
| 2 | பேராசிரியர் கா. சிவத்தம்பி பவளவிழா மலர் | 7 |
| 3 | சுபைர் இளங்கீரன் இனிய நினைவுப் பகிர்வு | 15 |
| 4 | 'அந்தரத்து உலவுகிற சேதி', 'மஹாகவியியல்' நூல்கள் வெளியீடு | 24 |
| 5 | உழைக்கும் மக்களின் வாழ்வை இலக்கியமாக்கியவர் செ.யோகநாதன் | 30 |
| 6 | கவிநாயகர் கந்தவனத்துடனான இலக்கியச் சந்திப்பு | 37 |
| 7 | வி. ரி. வி. தெய்வநாயகம்பிள்ளை ஒரு திறந்த புத்தகம் | 46 |
| 8 | பேராசிரியர் கைலாசபதி நினைவுப் பேருரை | 51 |
| 9 | 'ஞானம்' எஸ். பொ. சிறப்பிதழ் | 55 |
| 10 | தமிழ்நேசன் அடிகளாரின் 'நெருடல்கள்' | 64 |
| 11 | சங்கீதபூஷணம் அமரர் திலகநாயகம் போல் அஞ்சலியுரையும் பிறவும் | 70 |
| 12 | "திருக்குறளின் கல்விச் சிந்தனை- சமூக நோக்கில் ஒரு மறுவாசிப்பு" நூல் அறிமுகம் | 77 |
| 13 | எஸ். மோசேஸ் 'கலை இலக்கியக் கட்டுரைகள்' வெளியீடு | 84 |
| 14 | மல்லிகை டொமினிக் ஜீவாவின் பிறந்தநாள் விழா | 90 |
| 15 | வைத்திய கலாநிதி ச.முருகானந்தனின்"அவர்கள் துணிந்துவிட்டார்கள்" | 99 |
| 16 | மூத்த பத்திரிகையாளர் ஈ.வி.டேவிட் ராஜுவின் பவளவிழா | 108 |
| 17 | லெனின் மதிவானம் எழுதிய "உலகமயம், பண்பாடு, எதிர்ப்பு அரசியல்" நூல் ஆய்வரங்கு | 117 |
| 18 | தகவம் பரிசளிப்பு : 2009 | 123 |
| 19 | இதயராசனின் "முரண்பாடுகள்" | 132 |
| 20 | சுதாராஜ் நூல்: "உயிர்க்கசிவு" | 139 |
| 21 | ஐங்கரநேசனின் "ஏழாவது ஊழி" | 149 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 22 | நீர்வை பொன்னையனின் 'காலவெள்ளம்' ஆய்வரங்கு | 155 |
| 23 | 'நீலாவணன் காவியங்கள்' | 163 |
| 24 | 'ஊருக்கு நல்லது சொல்வேன்' | 170 |
| 25 | தம்பிஐயா தேவதாஸின் இரு நூல்கள் வெளியீடு | 179 |
| 26 | கலைஞர் கலைச் செல்வனின் இரு நாடக நூல்கள் | 187 |
| 27 | இரா.சடகோபனின் 'கசந்த கோப்பி' | 194 |
| 28 | மட்டுவில் ஞானகுமாரனின் கவிதைத் தொகுதி வெளியீடு | 202 |
| 29 | 'சரஸ்வதி' விஜயபாஸ்கரன் அஞ்சலிக் கூட்டம் | 208 |
| 30 | புலோலியூர் இரத்தினவேலோனின் 'புதிய பயணம்' நூல் அறிமுகம் | 213 |
| 31 | கவிஞர் மன்னார் அமுதனின் 'அக்குரோணி' | 220 |
| 32 | தொழிற்சங்க இயக்கத்தின் தியாகிகளை நினைவு கூர்ந்த யாழ்நகர்க் கூட்டம் | 227 |
| 33 | கே.ஏ.சுப்பிரமணியத்தின் 22வது நினைவுப் பதிவு | 232 |
| 34 | தம்பு சிவாவின் 'முதுசம்' வெளியீடு | 239 |
| 35 | சுமதி குகதாசனின் 'தளிர்களின் சுமைகள்' | 249 |
| 36 | மல்லிகை 47வது ஆண்டு மலர் | 255 |
| 37 | 'குழந்தையும் தேசமும்' | 262 |
| 38 | பொதுவுடைமைப் புரட்சிகர முன்னோடி நா.சண்முகதாசன் நினைவு | 267 |
| 39 | பாரதியின் "ஆன்மீக நாத்திகம்" உரையும் கலைமுகம் - 52 பற்றிய வாசகர் நோக்கும் | 273 |
| 40 | பேராசிரியர் அல்லாமா ம.மு.உவைஸ் நினைவு தின ஒன்று கூடல் | 280 |
| 41 | 'நினைவுப் பெருவெளி' நூல் வெளியீடு | 287 |
| 42 | சிற்பனை கீதா கணேஷின் 'எத்தனங்கள்'நூல் அறிமுகம் | 294 |
| 43 | வசந்தி தயாபரனின் 'காலமாம் வனம்' நூல் வெளியீடு | 301 |
| 44 | நோக்கு | 306 |
| 45 | முற்போக்கு படைப்பாளிகளின் இலக்கியச் செழுமை | 311 |
| 46 | மண்ணின் முனகல் | 316 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 47 | சமூகஜோதி றபீக்கின் 'சங்கநாதம்' வெளியீடு | 321 |
| 48 | தகவம் நிகழ்வில் தமிழறிஞர் சோ. சிவபாதசுந்தரம் நூற்றாண்டுச் சிறப்புரை | 325 |
| 49 | முற்போக்குச் சிந்தனையாளர் வி.ரி. இளங்கோவனின் நான்கு நூல்கள் | 331 |
| 50 | 'கண்ணீரினூடே தெரியும் வீதி' | 339 |
| 51 | அருட்திரு தனிநாயகம் அடிகளார் நூற்றாண்டுச் சிறப்புரை | 347 |
| 52 | 'விரல்கள் அற்றவனின் பிரார்த்தனை' | 351 |
| 53 | 'இலங்கையின் வன்னி மாவட்டங்கள் - ஒரு கையேடு' அறிமுகம் | 356 |
| 54 | நாச்சியாதீவு பர்வீனின் 'மனவெளியின் பிரதி' | 364 |
| 55 | உ.வே. சாமிநாத ஐயரும் - கி.வா.ஜகந்நாதனும் | 371 |
| 56 | மூத்த முற்போக்கு எழுத்தாளர் கௌரவிப்பு | 377 |
| 57 | 'குதிரைகளும் பறக்கும்' விமர்சன அரங்கு | 386 |
| 58 | முடியா நெடும் பகல் கவிஞர் இ.முருகையன் நினைவுப் பேருரை | 391 |
| 59 | இசைத் தமிழ் - வளமும் வரலாறும் ஆய்வரங்கு | 395 |
| 60 | சுவாமி விவேகானந்தரின் 151 ஆவது அகவை | 403 |
| 61 | 'புதிய தளம்' சஞ்சிகை ஆய்வு | 407 |
| 62 | நடராஜா ஜனகனின் 'இலங்கையில் இடதுசாரி இயக்கத்தின் வரலாறு' ஆங்கில நூல் | 413 |
| 63 | துரை விஸ்வநாதனின் 83ஆவது பிறந்த தினம் | 419 |
| 64 | ஈழத்துச் சோமு நினைவுப் பரவல் | 426 |
| 65 | க.கோபாலபிள்ளையின் 'யாரிலிகள்' நூல் வெளியீடு | 438 |
| 66 | 'அமுதிலும் இனிய சொற்புலவர் ஔவை' | 443 |
| 67 | காப்பியக்கோ ஜின்னாஹ் ஷரிபுத்தீனின் 'எல்லாள காவியம்' | 452 |
| 68 | புதுமைப் பித்தனின் 108 ஆவது பிறந்த தின விழா | 460 |
| 69 | 'நல்லிணக்கத்திற்கான ஆக்கங்கள்' நூல் ஆய்வரங்கு | 466 |
| 70 | ப. ஆப்டீனின் 'கொங்காணி' | 471 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

புதிய பண்பாட்டுத் தளத்தின் இரண்டாவது வெளியீடாக "மா. பா. சி. கேட்டவை ('தினக்குரல்' பதிவுகள்)" நூல் வெளிவருவதையிட்டு மிகுந்த மனநிறைவை அடைகிறோம். இது எமது அமைப்பின் அடிப்படைப் பண்பை வெளிப்படுத்தி நிற்கின்ற ஒரு பனுவல்.

ஈழத்தமிழின் மூத்த படைப்பாளியான மா. பாலசிங்கம், தனது ஆக்க இலக்கிய முயற்சிகளை ஒதுக்கி வைத்துவிட்டு இலக்கிய அரங்குகளின் உரைவீச்சுகளைப் பதிவாக்க முன்வந்திருந்தமை காரணமாக இந்த நூல் சாத்தியப்பட்டுள்ளது. இது எப்படி புதிய பண்பாட்டுத் தளத்தின் பண்பு வெளிப்பாடாக அமையும் என்ற கேள்வி நியாயமான ஒன்று!

இலக்கிய அரங்க உரைகள் அனைத்தின் சாராம்சங்களைப் பதிவாக்கியமையும், அவை இலங்கையின் முன்னிலைத் தினசரி ஒன்றில் வெளிவரச் சாத்தியமானமையும் பற்றி என்னுரை - முன்னுரை என்பவற்றின் வாயிலாக அறியக் கூடியதாயுள்ளது. இலக்கிய நிகழ்வுகளை நாடு பூராவும் அறிந்துகொள்ளத் 'தினக்குரல்' களமாக அமைவதற்கு இடம் ஏற்படுத்தித் தர அதன் ஆசிரியர் வீ.தனபாலசிங்கம் முன்வரும் போது, எந்தவொரு குறிப்பிட்ட அமைப்பையும் பிரசித்தப்படுத்தும் நோக்கம் அடிப்படையானதாக இருந்திருக்காது. பல்லாயிரக்கணக்கான வாசகர்கள் பல்வேறு அமைப்புகளது கருத்து நிலைகளை அறியும் ஆர்வம் உடையவர்களாயே இருப்பர். அதனை மனங்கொண்டு வெவ்வேறுபட்ட பல கருத்துகளை வெளிப்படுத்திய நிகழ்வுகள் தினக்குரலில் பதிவாகியிருந்தன.

எந்தவொரு சிந்தனை முறைமைக்குள்ளும் 'சிறைப்பட்டுக்' கொள்ளாது, கலந்துகொள்ளக்கூடிய அனைத்து இலக்கிய அரங்குகளிலும் கேட்டவற்றைப் பக்கச்சார்பின்றிப் பதிவாக்க மா.பா.சி. முயன்றிருக் கிறார். அத்தகைய நிகழ்வுகளது கருத்தியல் தளம் - நோக்கம் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கு என்பன வேறுபட்டவை; அதன் பேறான பேசு பொருட்களும் பன்முகப்பட்டன.

இந்த அம்சம் புதிய பண்பாட்டுத் தளம் (பு.ப.த.) தனது அக்கறைக்குரியது என எப்போதும் வலியுறுத்தி வருகின்ற ஒன்றாகும். அதன் பேறாகவே பு.ப.த. இன் சஞ்சிகையான 'புதிய தளம்' முதல் இதழில் மா.பா.சி. அவர்களது செவ்வி இடம்பெற இயலுமாயிற்று. பல்வேறு இலக்கியத் தளங்களது கருத்து வெளிப்பாடுகளை மிகுந்த அக்கறையுடன் எழுத்துருவாக்கி நாடு பூராவும் அறிவதற்கு வகை செய்யும் அவரது நேர்காணல் முதல் இதழில் பதிவாக வேண்டும் என்பது பு.ப.த. நண்பர்கள் பலரது விருப்பாக இருந்தது.

மா.பா.சி. தனக்கென ஒரு கருத்தியல் நிலைப்பாட்டைக் கொண்டிருந்தவாறே தான் எந்தவொரு சிந்தனை முறைமைக்குள்ளும் 'சிறைப்படாத' தனது பங்களிப்பை நல்குபவராய் உள்ளார் என்பதைக் கவனங்கொள்வது அவசியம். எமது அமைப்புக்கும் உயர் விழுமியங்களுடன் கூடிய புதிய பண்பாட்டுத் தளம்நோக்கி மக்கள் முன்னேற உதவுகின்ற சமூக மாற்றத்துக்கு வழிகோலுவனவாக இலக்கியம், தத்துவம், செயற்பாடு என்பன அமையவேண்டும் என்பது சார்பான கருத்தியல் உண்டு. இந்த நிலைப்பாட்டில் உடன்பாடின்றி ஒற்றைப் பரிமாணக் கோட்பாட்டில் இயங்குகின்ற அமைப்புகள் பலவும், ஏனையவை அனைத்தும் ஏதொவொருவகையில் புறக்கணிக்கத்தக்கன என்ற முன் அனுமானங் கொண்டுவிடுகின்றன. அவ்வாறன்றி, பல்வேறு அமைப்புகளும் உயர் விழுமியங்கள் நோக்கிச் சமூகம் மாற்றம் பெற வேண்டும் என ஏதோவொரு வகையில் முயற்சிக்கின்றன எனும் எடுகோளின் பாற்பட்டதே எமது 'கோட்பாட்டுச் சிறைப்படாமை யின்' அடிப்படையாகும்.

அந்தவகையில், பல்வேறு கோட்பாட்டுத் தளங்களில் இயங்குகிறவர்கள் ஒரு புள்ளியில் சந்தித்துச் சுதந்திரமாகக் கருத்துப் பரிமாறும் களத்தை ஏற்படுத்திக் கொடுக்கும் பணி முதன்மைத் தேவை ஆகின்றது. இதனைப் பு. ப. த. ஏற்படுத்தித் தருகின்றது. அவ்வாறு கலந்து கொள்ளும் அமர்வொன்றில் மாற்றுத் தளங்களில் இயங்குவோரது அபிப்பிராய மோதல்கள் வாயிலாக ஒவ்வொரு அமைப்பினரும் தத்தமது நிலைப்பாடுகளை மறுபரிசீலனை செய்யவும், திருத்திக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளவும், செப்பனிடவும், செழுமைப்படுத்தவும், மேலும் சரியானதாக ஆக்கிக் கொள்ளவும் இயலுமாக இருக்கும். இந்த நூல் ஏற்கனவே மேடைகளுடாக அமைப்புகள் வெளிப்படுத்திய கருத்துச் சிதறல்கள் என்கிற வகையிலேயே பு.ப.த. இன் பண்பை உணர்த்துவதாகக் கூறுகின்றோம்.

இந்த அம்சத்தை மனங்கொண்டதன் காரணமாகவே இதனை பு.ப.த. வாயிலாக வெளியிடுவதற்கு மா. பா. சி. உடன்பாடு தெரிவித்திருந்தார். அவரது நேர்காணல் "புதிய தளம்" முதல் இதழில் வெளியான திலிருந்து அவரும், அவரது தினக்குரல் பதிவுகள் நூலுருப்பெற வேண்டும் என்ற கருத்தும் கூடுதல் கவனிப்பைப் பெற்றிருந்தன; வேறு தளங்கள் ஊடாக இந்த நூலை வெளியிடும் வாய்ப்பும் ஏற்பட்டிருந்தன. அவ்வாறு வெளியிட முன்வரும் பதிப்பகங்களுக்கு தனது வேறு நூல்களை வழங்க உடன்பாடு தெரிவித்த மா. பா. சி. இந்த நூலை நாம் வெளியிட வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தார்.

அவ்வாறு நாம் வெளியிடுவதில் ஏற்படத்தக்க ஒரு தடையாக அவர் கருதியது நூலின் சமர்ப்பணம் எமக்கு சம்மதமற்றதாக அமையுமோ என்ற ஒரு தயக்கம் மட்டுமே! தமிழ் இலக்கியத்தில் தனக்கென வலுவான இடத்தை தனது படைப்புகள் வாயிலாகப் பெற்றுக் கொண்டுள்ளவரான எஸ். பொ. (எஸ். பொன்னுத்துரை) அவர்களுக்கு மா. பா. சி. யின் இந்த நூல் சமர்ப்பணம் செய்யப்படுவதில் பு. ப. த. நண்பர்கள் எவருக்கும் ஆட்சேபனை ஏதும் இருந்ததில்லை. இந்த விடயத்தில் எமக்கு உடன்பாடு இருக்காது என அவர் ஏன் கருதியிருக்க வேண்டும் என்பதுதான் புதிய பண்பாட்டினருக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்துவதாக அமைந்தது.

இந்தச் சந்தேகம் அவருக்கு ஏற்படுவதற்கான காரணியாக அமைந்த விடயம், பு. ப. த. இல் இயங்குவதில் பெரும்பாலானவர்கள் முற்போக்கு இலக்கிய இயக்கத்துடன் தொடர்புடையவர்கள் அல்லது அதன் மீது கூடுதல் அபிமானம் கொண்டவர்கள் என்ற உண்மையின்பாற்பட்டதாகும். முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தில் இயங்கிய எஸ். பொ. பின்னர் அதனின்றும் விலகி, நற்போக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற கோட்பாட்டை முன்னிறுத்தினார் என்பதையும் முற்போக்கு இயக்கத்தை இறுதிவரை கடும் விமர்சனத்துக்கு உட்படுத்தினார் என்பதையும் அறிவோம்.

இலங்கைத் தேசியம் என்பதற்கு முற்போக்கு இயக்கம் அழுத்தங் கொடுத்து, அதற்கு உட்பட்டதானதாகத் தமிழ் இனத் தேசியத்தினதும் ஏனைய தேசிய இனங்களினதும் சுயநிர்ணய உரிமைக் கோரிக்கைகள் அமைய வேண்டும் என வலியுறுத்திய போது, எஸ். பொ. இலங்கைத் தேசியத்தைக் கேள்விக்குள்ளாக்கித் தமிழ்த் தேசியத்துக்கு அதிக அழுத்தம் கொடுக்கும் நிலைக்குச் சென்றார். தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையை ஆணித்தரமாக வலியுறுத்தும் அதேவேளை, முற்போக்கு இயக்கத்தோடு எத்தகைய தொடர்பும் கொண்டிராதவர் களாயும் உள்ள பலரும் பு. ப. த. இன் கருத்தியல் - நடைமுறை என்பவற்றோடு உடன்பாடு கொண்டு இணைந்து செயற்படுகிறார்கள் என்பது கவனிப்புக்குரிய ஒரு அம்சம். இதனை வலிமையாக இங்கு வலியுறுத்துவது அவசியமாகிறது; அவர்களுக்கு முற்போக்கு இயக்க ஆளுமைகளைவிட அதிகமாயே எஸ். பொ. உடன்பாட்டுக்கு உரியவர்!

அதேவேளை, முற்போக்கு இயக்கத்தில் செயற்பட்டவர்கள் - மற்றும்அனுதாபிகள் என்போரிலும், அனைவருமே ஒற்றைப் பரிமாணக் கருத்துகளுடன் இல்லை என்பதையும் கவனிக்க வேண்டும். ஐம்பதாம் - அறுபதாம் ஆண்டுகளில் வீறுடன் இயங்கிய ஆளுமைகளில் ஒருவரைத் தமது ஆதர்சமாகக் கருதித் தத்தமது சிந்தனை முறைமையையும் செயற்பாடுகளையும் முன்னெடுப்பவர்களாக இவர்கள் விளங்குகின்றனர், (நாற்பதாம் ஆண்டுகளில் முற்போக்குக் கருத்தியலை விதைத்தவர்களையும் உட்படுத்துவது அவசியம்). ஆர். ஆர். தருமகுலசிங்கம் (ஜெயம்), பொன். கந்தையா, மு. கார்த்திகேசன், வைத்திலிங்கம், நா. சண்முகதாசன், வி. ஏ. கந்தசாமி, எம். சி. சுப்பிரமணியம், கே. ஏ. சுப்பிரமணியம் போன்றோருட்பட இன்னும் சில ஆளுமைகள் இவ்வகையில் முன்னோடி ஆதர்சங்களாய், இயக்கு சக்திகளாகத் துலங்குகின்றனர்.

இந்தப் பட்டியலைக் காணும் போதே தெற்றெனத் தெரிகிற ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்சம், இவர்கள் ஒரே கருத்தியல் நிலைப்பட்டு இருக்கவில்லை என்பதாகும். மார்க்சிஸ - லெனினிஸம் என்ற பொதுவான கோட்பாட்டுத் தளம் இருந்த போதிலும் ட்ரொஸ்கியிஸம், ஸ்டாலினிஸம், சோவியத் சார்பு, சீன சார்பு, மூன்றாம் உலகக் கோட்பாடு என்பதான வேறுபட்ட கருத்தியல் மோதல்களால் இந்த ஆளுமைகள் சிதறுப்பட்டுப் போயிருந்த ஒரு வரலாறு அரங்கேறியிருந்தது. ஒவ்வொரு தரப்பும் தாம் மட்டுமே மக்கள் விடுதலையைச் சாத்தியப்படுத்தும் மார்க்கத்தை மிகச் சரியான கோட்பாட்டுத் தளத்தில் நின்றவாறு முன்னெடுத்து வந்ததாகக் கூறுவர். ஆயினும், எந்தவொரு பாதையும் அவர்கள் விரும்பிய மக்கள் விடுதலைக்கான திசை வழியில் முன்னேற இயலாதவாறு முடக்கம் ஏற்படுத்தியிருப்பதையே வரலாறு உணர்த்தி நிற்கின்றது.

இத்தகைய சூழலில் அவர்கள் இன்று இருந்திருப்பார்களாயின் என்ன செய்திருப்பார்கள்? அனைவருக்கும் மார்க்சிஸம் - லெனினிஸம் பொதுவான வழிகாட்டு நெறியாக இருந்த போதிலும் வழிமுறை தொடர்பான கருத்து வேறுபாட்டினால் எமக்குள்ளே மோதுப்பட்டுப் பிளவேற்படுத்தியமையினால் முற்போக்கு இயக்கம் தொடர்ந்து முன்னேறுவதற்கு இயலாதவாறு நெருக்கடியை ஏற்படுத்தி விட்டோம் என்ற சுயவிமர்சனத்தையே முன்வைத்திருப்பார்கள். முன்னெடுக்க வேண்டிய வழிமுறை தொடர்பில் கருத்து வேறுபாடுகள் கொண்டிருந்த போதிலும் ஒரே இலக்கைக் குறிக்கோளாகப் பெற்றுள்ள காரணத்தினால் அமைப்பொன்றினுள் வலுவான ஸ்தாபனக் கட்டுக்கோப்புடன் இயங்கும் அவசியத்தை எடுத்துக்காட்டியிருப்பார்கள். முன்னெடுக்கப்படும் ஒரு மார்க்கம் இடர்ப்பாட்டை எட்டும்போது உள்ளமைப்பு விவாதங்கள் வாயிலாக மாற்றுத்திசை வழியை முன்னெடுத்து அதனைச் செயலுருப்படுத்த முயற்சிப்பர்; அதுவும் செப்பனிடப்பட ஏனையவர்கள் கருத்துகள் கை கொடுக்கும். தத்தமது தனித்தலைமைப் பிரதாபங்களைவிட மக்கள் விடுதலை கூடுதல் முக்கியத்துவமுடையது என்பதனை வலியுறுத்தியிருப்பர்.

அந்த முன்னோடி ஆளுமைகளது கோட்பாட்டுத் தளங்களைத் திரிபுபடுத்துகிற கருத்து இதுவெனக் குற்றம் சாட்டியவாறு, அவரவர்களது தனித்தனி வழியிலேயே இன்னமும் முயற்சிக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழுக்கள் இப்போதும் இயங்கியவாறு உள்ளன. அந்த முன்னோடிகளது விருப்பத்துக்கு மாறாக அவர்களை வழிபடு தெய்வங்களாக்கியவாறு ஏனைய ஆளுமைகள் மீது சேறு வீசும் கைங்கரியங்களும் நடந்தபடியுள்ளன. இந்தச் சேறு பூசுதலைக் காணும் இளைய தலைமுறையினருக்கு, வலுவான ஒரு கோட்பாட்டின் பன்முகத் தன்மைகள் தகர்க்கப்படுவதுதான் தெரிகிறது; இவர்கள் காட்ட முனையும் அந்த ஒற்றைப் பரிமாணக் கோட்பாடோ இவர்களால் முன்னிறுத்தப்படும் அந்தத் தனிநபர் வழிபாட்டுத் தலைவரோ தெரியாமற் போகிற சந்தர்ப்பங்களே அதிகம். அதனையும் தாண்டி ஏதாயினும் ஒரு அணிக்குள் இணையும் இளைய தலைமுறைச் சக்தி, சமூக மாற்ற இயக்கத்துக்கு உண்மையில் ஆற்றக்கூடியதாய் இருந்த பங்களிப்பை இழந்து ஒரு முனைவாதத் தவறுகளுக்கு ஆட்பட்டுச் சிதைவுற நேர்கிறது.

அரசியலின் பேரில் இன்று இத்தகைய தவறுகளுடன் இயங்குவதில் உடன்பட மறுத்த முற்போக்கு சக்திகள் இணைந்து அரசியலுக்கு மாற்றாகப் பண்பாட்டுத் தளமொன்றில் செயற்படும் அவசியம் ஏற்பட்டதன் காரணமாக உருவாக்கப்பட்டதே "புதிய பண்பாட்டுத் தளம்". முற்போக்கு இயக்கத்தை அடுத்து மேற்கிளம்பிய தமிழ்த் தேசிய செயற்பாட்டாளர்களும் இந்த அமைப்பாக்கத்தில் பங்கேற்றுள்ளனர். எத்தகைய அரசியல் வடிவம் உயர்ந்த பண்பாட்டுத்தளத்துக்கு மக்களை வளர்த்தெடுக்கும் என்பது அடிப்படையான ஒரு விடயமாகும். ஆம், பெறப்பட வேண்டிய தீர்வில் பண்பாட்டுத் தள மேன்மையை அடைதல் பிரதான அம்சம்! அத்தகைய புதிய பண்பாட்டுத் தளத்தைத் தமக்குள் முன்னதாக வடிவமைத்தவாறு, பலதரப்பட்ட கருத்து பேதங்களையும் சுதந்திரமாக விவாதித்து, மக்கள் இயக்கத்துக்கான மார்க்கங்களைத் தேடுவதற்கான களம் பு. ப. த. இல் சாத்தியப்படுத்தப்படும். இது அரசியல் அமைப்புகள் தமது ஒற்றைப் பரிமாண முடக்குவாதத்தை வெற்றி கொண்டு சரியான திசை வழியைக் கண்டறிய உதவுகிற முயற்சியாகவும் அமைகிறது.

அந்த வகையில் எமது முன்னோடி ஆளுமைகள் அனைவரது பங்களிப்புக்களையும், அவர்களது பலமான - நல்ல அம்சங்களையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்த தலைமுறையிடம் கையளிக்க வேண்டும் என்ற குறிக்கோளையும் பு. ப. த. தனக்கு உரியதாக வரித்துக் கொண்டுள்ளது. இவ்வாறு கூறும் போது அவர்கள் மீதான விமர்சனங்களைக் கவனங்கொள்ளாது சரியானவற்றை மட்டுமே பேசுபொருளாக்க வேண்டும் என்று சொல்ல முற்படவில்லை. தனிநபர் வழிபாட்டு விசுவாசிகளே அவ்வாறு செயற்படுவர். புதிய பண்பாட்டினர் கடந்த காலத்தின் சாதனைகளை வெளிக்கொணரும் அதேவேளை, ஏற்பட்ட தவறுகள் குறித்த மறுபரிசீலனைகளையும் மேற்கொள்வர். முற்போக்கு மற்றும் தமிழ்த் தேசியம், உள்ளிட்ட இனத்தேசியங்களின் செயற்பாட்டாளர்களில் பலர் மக்கள் விடுதலை மார்க்கத்துக்கான பங்களிப்பில் படிப்பினைகளுக்குரிய பல அம்சங்களை வழங்கிச் சென்றுள்ளனர். அவற்றைக் கையேற்று வளர்த்தெடுப்போம்; அவர்கள் மீதான விமரிசனங்களை எதிரிக்குரிய நிலைப்பாட்டிலன்றி நட்புணர்வுடன் அணுகி வெளிக்கொணர்வதன் வாயிலாக, தவறுகளிலிருந்து கற்றுக்கொள்ள முயல்வோம்!

அறுபதுகளில் முற்போக்கு இயக்கமே இலங்கை வரலாற்றுச் செல்நெறிக்கான பிரதான அம்சம்; இலங்கைத் தேசியம் எனும் உணர்வுடன் தமிழ் - சிங்கள - முஸ்லிம் - மலையகம் எனும் தேசிய இனப்பிரிவினர்களும், பறங்கியர் - மலாயர் உள்ளிட்ட சிறுபான்மை இனத்தவர்களும் ஒன்றுபட்டுப் போராடித் தொழிலாளர் - விவசாயிகள் - ஆசிரியர் - மாணவர் - நாட்டு வைத்தியர் போன்ற உழைக்கும் மக்களது உரிமைகளை வென்றெடுத்து, வாழ்வாதாரங்களைப் பெருக்கி வந்தனர். இதன் போது தமிழ்த் தேசியத்தின் தலைமைகள் மக்கள் விரோத நிலைப்பாட்டுடன் ஏகாதிபத்தியச் சார்பிலான பிற்போக்கான பங்குப்பாத்திரத்தையே வகித்தனர். அவர்கள், முற்போக்கு சக்திகள் முன்னெடுத்த அரசியல் - பொருளாதார போராட்டங்களுக்கு எதிராகச் செயற்பட்டதோடு சாதியத் தகர்ப்புப் போராட்டங்களுக்கு எதிராகவும் இயங்கினர்.

ஆயினும், தமிழ்த் தேசியத் தலைமைக்கு எதிராகப் போராடும் வேகத்தில், அதன் இடது பிரிவு ஒன்று இயங்கிய களங்களையும் - அவர்கள் முன்வைக்கும் தமிழ்த் தேசியத்தின் நியாயமான கோரிக்கைகளையும் கவனங்கொள்ளாமற்போன தவறு நேர்ந்தது;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமகாலத்தில் அரசு - சமூகம் என அனைத்துத் தளங்களிலும் சிங்களப் பேரினவாதம் பெருங்கேடாக வளர்ந்து வந்தமையையும் முற்போக்கு இயக்கம் போதிய அளவு கவனங்கொள்ளவில்லை. கூடவே, இனவாதத்தை எதிர்க்கும் முனைப்பில் இனத்தேசியங்களையும் அவற்றின் சுயநிர்ணய உரிமைக் கோட்பாட்டையும் நிராகரிக்கும் நிலைக்கும் முற்போக்கு இயக்கம் சென்றது. இதன் விளைவாக முற்போக்கு இயக்கத்தில் இணைந்திருந்த தமிழ்த்தேசியத்தின் இடதுபிரிவினர் விலகிச் சென்றனர். தொடர்ந்து அரசியல் காரணிகளால் பல்வேறு பிளவுகளை முற்போக்கு இயக்கம் சந்திக்க வேண்டியதாயிற்று.

நாற்பதாம் ஆண்டுகளில் முளைவிட்டு வளர்ந்த முற்போக்குச் செயலணி இவ்வகையில் அறுபதுகளில் உச்ச நிலையடைந்து, தொடர்ந்த பிளவுகளால் பின்னர் பலவீனமடையத் தொடங்கிய போதிலும் எண்பதுகளின் நடுக்கூறுகள் வரை முற்போக்கின் குரல் அரசியல் - சமூக - பண்பாட்டு - கலை - இலக்கியக் களங்களில் ஏதோவொரு வடிவில் ஓங்கி ஒலித்து வந்துள்ளது. இத்தகைய எழுச்சியின் இலக்கிய ஆளுமையாகத் திகழ்ந்த ஒரு படைப்பாளிக்கு (எஸ். பொ. அவர்களுக்கு) இந்நூல் படையலாகும் போது உண்மையில் வீறுமிக்க அந்த வரலாற்றுக் காலத்துக்கான போர்க்குணம்மிக்க மக்கள் அனைவரும், கூடவே அவர்களது பிரதிநிதிகளாக வெவ்வேறு தளங்களில் செயற்பட்ட ஆளுமைகள் எல்லோரும் மதிக்கப்படுகிறார்கள், நினைவு கூரப்படுகிறார்கள் என்பது பொருளாகும். உண்மையில் வரலாறு படைப்பது மக்கள்தான்; அவர்களது பிரதிநிதிகளாக மேற்கிளம்பும் ஆளுமைகள் மக்களின் உணர்வுகளை ஒருமுகப்படுத்தி மக்கள் விடுதலைக்கான கோரிக்கைகளை வடிவப்படுத்தி - அவற்றை முன்னெடுத்துப் போராடும் மக்களை அமைப்பாக்கி, போராட்டக் கனியை மக்கள் அனுபவிப்பதை உறுதிப்படுத்தும் வழிவகைகளைச் செப்பனிடும் கைங்கரியங்களை ஆற்றுபவர்கள் மட்டுமே!

தலைவர்கள் இல்லையெனில் எழுச்சிகள் ஏற்படாதென்பதில்லை; எழுச்சிகள் தமக்கான தலைமையை உருவாக்கும். மக்களது எழுச்சி உணர்வால் உருவாகும் தலைமை கிளர்ச்சிகளைத் தொடக்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைக்கும் பணியை மேற்கொள்கிறது. அத்தகைய முன்னேற்றச் செயற்பாட்டுக் களத்தில் குதிக்கும் மக்கள் புதிய பண்பாட்டை எட்டுவதற்கு உதவும் வகையில் மக்களுக்கான அமைப்புகள் பங்குப்பணி ஆற்றுவது அவசியமாகிறது. நாற்பதாம் ஆண்டுகளில் இருந்து ஏறத்தாழ அரை நூற்றாண்டுக் காலம் வளர்ந்து வந்த மக்கள் எழுச்சிகளும், அவற்றின் காரணிகளும் வெளிப்பாடுகளுமான அமைப்புகளும் எமக்குக் கற்றுத் தந்தவற்றை இந்நூலின் பேசு பொருட்கள் வெவ்வேறு தொனிகளின் வாயிலாக வெளிப்படுத்தி நிற்கின்றன. அத்தகைய சமூக விழிப்புணர்வின் பேறான கலை - இலக்கிய ஆக்கங்கள் சார்ந்த கூட்ட நிகழ்வுகளின் உரை வீச்சுகளில் மேற்படி நாம் அலசிய சமூக - அரசியல் இயங்கு தளங்களின் அனுபவச் செழுமைகள் வெளிப்பட்டிருப்பதைக் காணலாம்.

வானொலி, சினிமா, நாடகம், கூத்துக்கலை, இசை, சஞ்சிகை, நூல் வெளியீடு - விமரிசனம், நினைவேந்தல், நினைவுப்பேருரை, கல்வி, வைத்தியம், சுகாதாரம், அரசியல் - சமூக - பண்பாட்டுப் பிரச்சனைகள், நவீன - மரபு இலக்கியங்கள், பத்திரிகை என்பன சார்ந்த பல்வேறு துறைகள் இங்கே பதிவாகியுள்ளன. கடந்த ஒரு தசாப்த காலக் கூட்டங்களின் பதிவுகளாக அமைகிறபோது எமது வரலாற்றுச் செல்நெறியின் பன்முக விசாரங்கள் இங்கே ஊடாடி வரக் காண்கிறோம். இத்தகைய பல்துறைகளிலும் செயற்பட்ட ஆளுமைகள் பலர் பற்றிய விவகாரங்கள் பலதும் இங்கே பேசப்படுகின்றன. (அவர்களது பெயர்களை இங்கு குறிப்பிடுவதைத் தவிர்ப்பதற்கான காரணம், நூலின் இறுதியில் 'பெயர்ச்சுட்டி' இயன்றவரை முழுமையான பட்டியலைக் காட்டி நிற்கிறது என்பதனாலாகும்).

நிகழ்வுகளின் பதிவான ஒவ்வொரு கட்டுரைகளிலும் மூன்று சக்திகள் கவனிப்புக்குரியன. கூட்ட ஏற்பாட்டாளர்கள் - பேச்சாளர்கள் - வாசகர்கள் என்போர் அந்த மூன்று சக்திகள். அரங்கம் நிறைந்த பார்வையாளர்கள் வரவில்லை என்ற வருத்தத்தைப் போக்குவதாக அமைவது, அங்கே மா. பா. சி. வந்திருக்கிறார் என்ற செய்தி கூட்ட ஏற்பாட்டாளர்களுக்கு! ஓரிரு தினங்களில் 'தினக்குரல்' பத்திரிகையில் 'கேட்டவை' வரும் என்பதனால் கூட்டத்துக்குப் போக முடியவில்லை என வருந்தியவர்கள் அடுத்துவரும் நாட்களில் தினக்குரல் பக்கங்களைப் புரட்டுவதைப் பார்த்திருக்கிறோம். கணிசமான தொகை வாசகர்கள் 'கேட்டவை' பக்கங்களுக்கு வாடிக்கையாளர்களாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைந்திருந்தனர் என்பது அழுத்தி உரைக்கப்பட வேண்டிய ஒன்றாகும். அந்த வகையில் வீ. தனபாலசிங்கம் அவர்களுக்கு நன்றி தெரிவிப்பதோடு, ஆசிரியர் பதவியிலிருந்து அவர் ஓய்வுபெற்ற பின்னரும் இந்தப் பணியைத் தினக்குரல் மேற்கொண்டு வருவது தொடர்பில் எமது மகிழ்வினைப் பதிவு செய்கிறோம்; அதன் புதிய ஆசிரியர் ஹரனும் நிர்வாகத்தினரும், இதன் பொருட்டுப் பலரது நன்றி பாராட்டுதல்களைப் பெறுகின்றனர். இப்பணி தொடர வேண்டும் என இறைஞ்சுகிறோம்!

பேச்சாளர்களுக்குத் தமது உரை இவ்வடிவில் வெளிவந்திருப்பதில் மகிழ்விருக்கும் அதேவேளை சிற்சில விடயங்களில் வேறுபடுகிற இடங்களையும் சுட்டிக்காட்டுகின்றனர். தனது கருத்து வெளிப்பாட்டின் தொடர்ச்சி பேணப்படாமல் பாய்ந்து செல்லும் நடையில் எழுதப்பட்டிருப் பதாகக் கூறுவர். இது தவிர்க்க முடியாத ஒன்று. பத்திரிகை ஒன்று இந்த அளவில் இடம் வழங்கியிருப்பதே பெரிய விடயம் - முழுப் பேச்சுகளையும் அப்படியே வழங்க இயலாது என்பது யதார்த்தம். பிரதான அம்சம் இந்தப் பாணியை வாசகர்கள் விரும்பி வரவேற்கிறார்கள்; என்ன பேசப்பட்டது என்பதனை முழுமைப்படுத்திப் புரிந்து கொள்வதற்கு மா. பா. சி. யின் நடை உதவிகரமாயுள்ளதெனக் கூறுகின்றனர்.

இருப்பினும் சிற்சில சந்தர்ப்பங்களில் பேச்சாளர் பேசியதற்கு மாறான கருத்து வெளிப்பாடு ஏற்பட்டிருப்பதையும் அவதானிக்கக்கூடியதாய் உள்ளது. பேச்சுகளை சுருக்கக் குறிப்பாகப் பதிவுசெய்த பின்னர் நிதானமாய்க் கட்டுரை ஆக்குகின்றபோது இந்தத் தவறு சிறிய அளவிலேனும் ஏற்பட்டுவிடுகிறது. குறிப்பினை மீட்டுருவாக்கி எழுதும் போது தனக்குள் உள்ள பதிவில் இருந்து மா. பா. சி. முழுமைப்படுத்திய உரை வடிவம் ஒன்றை வெளிக்கொணர வேண்டும்; அப்போது பேச்சாளரது கருத்து நிலை எதுவெனத் தான் கருதியிருந்தாரோ, அந்த அடிப்படையில் நினைவின் இடைவெளிகளை நிறைவுபடுத்த வேண்டியிருக்கும். இது தவறாகி இருந்த இடங்களைப் பேச்சாளர்கள் சுட்டிக் காட்டும் பட்சத்தில் புதிய பதிப்பில் திருத்தங்களை மேற்கொள்வோம். வாசகர்களைப் பொறுத்தவரை பேச்சாளர்கள் வேறு வடிவங்களில் அது தொடர்பில் எழுதியிருக்கக் கூடிய கருத்தின் அடிப்படையிலேயே குறித்த அந்தப் பேச்சாளர் இவ்வாறு பேசியிருப்பாரா என்ற முடிவுக்கு வருவர் எனும் நம்பிக்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமக்கு உண்டு.

மேடையில் பேசப்பட்டவை காற்றோடு கலந்து கரைந்து போய்விடாமல் மா. பா. சி. இவ்வகையில் எழுத்துருவாக்கிக் காலாகாலத்துக்கும் மீட்டிப்பார்க்க வகை செய்திருப்பதற்கு என்றென்றும் அவருக்கு நாம் நன்றிக்கடன்பட்டுள்ளோம். இது தினசரித்தாளோடு மடிந்து போய்விடக் கூடாது என்பதனால் மிகுந்த சிரமங்களோடு, பு. ப. த. இப்போது நூலுருவாக்கியுள்ளது. இதன் உயிர்ப்பு வாசகர்களாலேயே முழுமைபெறும்; வாசகர்களே ஒரு நூலை வாழ வைப்பார்கள். இதனை முழுமனதோடு தமிழ்கூறு நல்லுலகம் வரவேற்கும் என நம்புகிறோம்!

உங்களுடைய வரவேற்பின் தன்மைக்கு அமைவாக விடுபட்ட நிகழ்வுகளின் பதிவுகளும், இங்கு பதிவாகியுள்ள 2014க்குப் பின்னரான பதிவுகளும் தொடர்ந்து வெளிவரும் என்பதனை உத்தரவாதப் படுத்துகிறோம். இதன் மீதான விமரிசனங்கள் அடிப்படையில் இரண்டாம் பதிப்பில் திருத்தங்களை மேற்கொள்ள இயலும்; அவை அடுத்து வருகிற பதிப்புகளைச் செப்பனிடவும் உதவும்.

இயன்றவரை தவறுகளின்றி வெளியிடுவதற்காக ஒத்துழைத்த RST Enterprises (Pvt) Ltd அச்சக ஊழியர்கள் மற்றும் பொறுப்பாளர் V. சடகோபன் ஆகியோருக்கு எமது நன்றிகள். மிகுந்த பொருட்செலவைச் சுமையாகக் கருதிச் சோர்ந்துவிடாதிருக்க நிதியுதவி நல்கிய நண்பர்களுக்கு மனங்கனிந்த நன்றிகள். நூலினைப் பெற்றுப் படித்துக் கருத்துகளையும் விமரிசனங்களையும் முன்வைக்கவுள்ள உங்களுக்கும் நன்றிகள்.

புதிய பண்பாட்டுத்தளச் செயற்பாடுகளுக்கும் பதிப்பு முயற்சிக்கும் உங்களுடைய ஆதரவுகளைத் தொடர்ந்து வேண்டியபடி,

ந. இரவீந்திரன்
அமைப்புக்குழு
புதிய பண்பாட்டுத் தளம்

10.02.2016
13, மவுண்ட் அவனியு, கல்கிசை.
முகநூல்: புதிய தளம் puthiyathalam
e-mail: puthiyathalam@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

## தினக்குரலும் மா. பா. சி. கேட்டவையும்

நண்பர் பாலசிங்கம் ஒருநாள் கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் நடைபெற்ற இலக்கிய நூல் வெளியீட்டு விழாவொன்றின்போது சபையோர் மத்தியில் இருந்து நிகழ்வுகள் பற்றிய குறிப்புகளை எடுத்துக் கொண்டிருந்தார். அவர் அருகில் சென்று அமர்ந்த நான் எதற்காக இந்தக் குறிப்புகளை எடுக்கிறீர்கள் என்று கேட்டேன். அவரும் இந்த விழாவைப் பற்றிய தொகுப்பை மல்லிகை இதழ் வெளியிடுவதற்காக எழுதிக் கொண்டிருக்கிறேன் என்று பதில் தந்தார்.

உடனே என் மனதில் ஒரு யோசனை. இத்தகைய கலை இலக்கிய நிகழ்வுகளின் தொகுப்பை தினக்குரலிலும் பிரசுரித்தால் என்ன? "நீங்கள் எழுதுவதை மல்லிகைக்காக ஜீவாவிடம் கொடுங்கள். எங்களுக்கும் தினக்குரலில் பிரசுரிப்பதற்காக ஒரு பிரதியைத் தர முடியுமா?" என்று பாலசிங்கத்திடம் கேட்டேன். ஜீவாவிடம் கேட்டுத் தான் என்னால் இதற்குப் பதில் கூறமுடியுமென்பதே அவரின் பதில்.

ஜீவாவிடம் கேட்டபோது அவரோ, 'அடேயப்பா பத்திரிகைக்காரன் இலக்கிய நிகழ்வுத் தொகுப்பை வெளியிட ஆர்வமாக இருக்கிறான் என்றால், அது வரவேற்க வேண்டிய காரியம் அல்லவா. தினசரிப் பத்திரிகையில் இலக்கிய நிகழ்வுத் தொகுப்பு பிரசுரமாவது என்பது இலக்கிய உலகிற்கு ஒரு வரப்பிரசாதம் அல்லவா. மல்லிகையிலும் பிரசுரிப்போம். தனபாலசிங்கத்திடமும் கொடு'' என்று அவர் பாலசிங்கத்தை உற்சாகப்படுத்தினார்.

மறுநாள் பாலசிங்கம் கொழும்பில் தினக்குரல் தலைமை யலுவலகத்திற்கு வந்து என்னிடம் அந்த இலக்கிய நிகழ்வுத் தொகுப்பைத் தந்தார்.

அடுத்த ஓரிரு நாட்களில் அது ஆசிரியத் தலையங்கப் பக்கத்துக்கு எதிராக முழுப்பக்கத்தில் பிரசுரமானது. அதைப் பார்த்தவுடனேயே காலையில் ஜீவா எனது வீட்டுக்கே தொலைபேசியில் தொடர்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு 'ஒரு சரித்திரம் படைக்கத் தொடங்கியிருக்கிறது தினக்குரல்' என்று பெருமகிழ்வுடன் பாராட்டினார். 'இதைத் தொடர்ந்தும் செய்வீர்களா?' என்று கேள்வி தொடுக்கவும் ஜீவா அன்று தவறவில்லை.

இவ்வாறு தொடங்கியது தான் 'மா. பா. சி.' என்ற புனைபெயரில் நண்பர் பாலசிங்கத்தின் இலக்கிய நிகழ்வுத் தொகுப்புப் பிரசுர வரலாறு.

2006 ஆம் ஆண்டிலிருந்து தினக்குரல் மா.பா.சி.யின் தொகுப்புகளை அனேகமாக முழுப்பக்கத்தில் இடையறாது பிரசுரித்து வந்திருக்கிறது. கலை-இலக்கியவாதிகள் பற்றியும் அவர்கள் சம்பந்தப்பட்ட நிகழ்வுகள் பற்றியும் தினசரிப் பத்திரிகைகளின் ஞாயிறு இதழ்களிலேயே செய்திகளோ, கட்டுரைகளோ வெளிவருவது வழமையாக இருந்தது. மா. பா. சி. யின் உதவியுடன் தினக்குரல் செய்யத் தொடங்கிய பணி அன்றாடச் செய்திகளுடன் சேர்த்துக் கலை-இலக்கிய நிகழ்வுகள் பற்றிய தொகுப்புக்களையும் வாசிக்க வைக்கும் பழக்கத்தைத் தமிழ் வாசகர்கள் மத்தியில் ஏற்படுத்தத் தொடங்கியது என்பதில் தினக்குரல் பெருமைப்படுகிறது.

வேறு ஒரு ஞாயிறு பத்திரிகையின் ஆசிரியர் மா. பா. சி. யுடன் தொடர்பு கொண்டு 'எமது பத்திரிகையில் தொடர்ச்சியாக கலை இலக்கிய நிகழ்வுகளைத் தொகுத்து எழுதும் பணிக்கு நிரந்தரமாக சேர்ந்து கொள்ள முன்வருவீர்களா? மாதச் சம்பளம் தருகிறோம்' என்று கேட்டதாக அறியக் கிடைத்தது. ஆனால், மா. பா. சி. யோ 'இதை நான் பிழைப்புக்காகச் செய்யவில்லை. கலை இலக்கியத்தில் எனக்கு இருக்கும் ஆர்வம், ஈடுபாடு காரணமாகவே செய்து கொண்டிருக்கிறேன்' என்று பதில் கூறி அதற்கு உடன்பட மறுத்து விட்டார். தலைநகரில் இடம் பெறுகின்ற கலை இலக்கிய நிகழ்வுகளைத் தொகுத்து வெளிப்படுத்துகின்ற தினக்குரலின் பணி வேறு ஊடகங்களின் மத்தியிலும் மாற்றத்தை ஏற்படுத்தியது.

பாலசிங்கம் பிரதிபலன் எதிர்பார்க்காமல் இந்தப் பணியைப் பல வருடங்களாகத் தொடர்ந்து கொண்டிருக்கிறார். கலை-இலக்கிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிகழ்வுகளுக்கு ஆட்கள் வருவது பெரும்பாலும் குறைவு என்றாலும், ஏற்பாட்டாளர்கள் பாலசிங்கம் வந்திருக்கிறார் என்றால் திருப்தியுடன் நிகழ்வை ஆரம்பித்து விடுவார்கள். ஏனென்றால் பாலசிங்கம் தினக்குரலின் மூலமாக இந்த நிகழ்வு பற்றிய சங்கதிகளை முழு நாடும் அறியச் செய்து விடுவாரல்லவா? தலைநகரில் கலை-இலக்கிய நிகழ்வுகளை ஏற்பாடு செய்கிறவர்கள் பாலசிங்கத்துடன் முன்கூட்டியே தொடர்பு கொண்டு நீங்கள் வருவீர்களா, என்று கேட்கின்றளவுக்கு இவரின் பணி நாமெல்லோரும் பெருமைப்படக்கூடிய ஒரு தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

பாலசிங்கம் இல்லையென்றால் இந்தப் பணியை தினக்குரலினால் தொடர முடியுமா? என்று என்னிடம் பலர் கேட்டிருக்கிறார்கள். வேறு ஆட்களினால் இதைச் செய்ய முடியாது என்று நான் கூற முன்வரவில்லை. ஆனால், அவரைப்போன்று பிரதிபலன் எதிர்பார்க்காமல், இலக்கிய உலகின் மேம்பாட்டுக்காக அர்ப்பணிப்புச் சிந்தையுடன் இதைச் செய்வதற்கு எவரும் முன்வருவார்கள் என்று என்னால் கூற முடியவில்லை. பாலசிங்கம் இல்லையென்றால் கலை இலக்கிய நிகழ்வுகளைத் தொகுக்கும் பணிக்கு இன்றைய பத்திரிகைகளின் ஆசிரியர்கள் தங்களது அலுவலக நிருபர் ஒருவரை அமர்த்துவதில் அக்கறை காட்டுவார்களா? அல்லது பாலசிங்கம் போன்ற இன்னொருவரையாவது தேடிப் பிடித்து இந்தப் பணியை விடாமல் தொடருவதில் அக்கறை காட்டுவார்களா? இக்கேள்விகளுக்கான பதில்களை இன்றைய தமிழ்ப் பத்திரிகைகளின் ஆசிரியர்கள் தான் தர வேண்டும். இதை அவர்களிடமே விட்டுவிடுவோம்.

எனது நினைவுக்கு எட்டியவரை பாலசிங்கம் இதுவரையில் ஆயிரத்திற்கும் அதிகமான கலை-இலக்கிய நிகழ்வுகளைத் தொகுத்தளித்திருக்கிறார். அவற்றில் பலவற்றை தொகுத்து இரு கட்டங்களில் நூலாக ளியிடுகின்ற மகத்தான ஒரு பணியைப் 'புதிய பண்பாட்டுத் தளம்' அமைப்பு முன்னெடுத்திருக்கிறது. அன்றாடப் பத்திரிகையில் வெளியான தொகுப்புகளை ஒரு நூலுருவில் வரலாற்று ஆவணமாகக் கொண்டு வருகின்ற அந்தப் பணியைத் தினக்குரல் பெரிதும் பாராட்டுகிறது. அத்துடன் தினக்குரல் தொடங்கிய பணி தமிழ்க் கலை-இலக்கியவாதிகள், ஆர்வலர்கள் மத்தியில் ஏற்படுத்தியிருக்கக் கூடிய தாக்கத்தைக் கண்டு நாம் பெருமையடை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கின்றோம். மா. பா. சி. யின் தொகுப்புகளை வரலாற்று ஆவணமாக்கும் அரும் பணியில் முன்னின்று பாடுபட்ட நண்பர் கலாநிதி ந. இரவீந்திரனுக்கும் தினக்குரலின் மனமார்ந்த நன்றிகள்.

மா. பா. சி. யின் வாழ்வுப் பணி தொடரட்டும். தமிழ்ப்பத்திரிகை உலகம் மேலும் புத்தாக்கமான வழிமுறைகளில் தமிழ்க்கலை-இலக்கிய உலகிற்கு அதன் சேவையைச் செய்யட்டும்!

வீரகத்தி தனபாலசிங்கம்,

தினக்குரல்,
9, 1/5, அல்விஸ் பிளேஸ்,
கொழும்பு 13.
23 டிசம்பர் 2015.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை

## கேட்டவர் சொல்கிறார்

உலகப் பொது மறை திருக்குறள்

“செவியிற் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள்
அவியினும் வாழினும் என்?”
- என வையத்தோருக்குப் புகட்டுகின்றது. அத்தோடு

“செல்வத்துள் செல்வம் செவிச் செல்வம் அச்செல்வம்
செல்வத்துள் எல்லாம் தலை”

- எனவும் செவி வழிக் கேட்டலை மேன்மைப்படுத்துகின்றது.

அவ்வகையான திருவள்ளுவப் பேராசானின் வாக்கை உள்வாங்கிச் செவிச் சுவை அனுபவிப்பதில் பெருமிதம் கொள்வேன். சுற்றாடல் ஊட்டும் மக்கள் வாழ்வைச் செம்மைப்படுத்தும் அறிவொலிகளைச் செவி வழி ஆழ்ந்து உள்வாங்கி, என் அறிவுத் தேட்டத்தைப் பெருக்குவேன். வானொலி, தொலைக்காட்சிப் பகிர்வுகள், அரசியல் - இலக்கியம் அத்தோடு சமயம் சார்பான பொதுக் கூட்டங்களிலும் கதாப் பிரசங்கங்களிலும் நிகழ்த்தப்படும் உரைகளையும், முன் வரிசையில் உட்கார்ந்து கூர்மையாகக் கேட்டு நற்பொருள் கொள்வேன். எனது வாழ்வின் நடவடிக்கைகளின் நிகழ்ச்சி நிரலில் இச் செயற்பாடு நிரந்தரம் கொண்டுவிட்டது.

மானுட சிந்தனைப் புலத்தில் காலாதிகாலமாக மரபியல் தான் வீச்சைக் கொண்டிருந்தது. மறுமலர்ச்சி விசை கொண்டு பகுத்தறிவுச் சிந்தனையைப் பிரசவித்தது. அதன் வழி வந்த மார்க்சியம் மரபை நொருக்கியது. அதன் சிதறல் உலகெங்கும் வியாபித்தது. இலங்கையையும் கௌவிப் பிடித்துக் கொண்டது. இதன் தாக்கத்தால் இலங்கையில் எதிரும் புதிருமான சிந்தனைகளை ஆராதிக்கும் கன்னைகள் பிரிந்தன. மக்களில் இருப்புக் கொள்ள இக் கன்னைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டி, தொட்டியெங்கும் பொதுக் கூட்டங்களை நடாத்தின. வசதிக்கேற்றபடி இக்கூட்டங்களில் பங்குகொண்டும் ஆற்றப்பட்ட உரைகளைக் கேட்டேன். விரும்புவோரோடு செவிமடுத்த விடயங்களைப் பகிர்ந்தும் கொண்டேன்.

இச் செயற்பாட்டை அவதானித்த "மல்லிகை"ச் சஞ்சிகையின் ஆசிரியர் டொமினிக் ஜீவா, கேட்டதை மல்லிகையில் எழுதி வாசகரோடு பகிர்ந்து கொண்டாலென்ன? என விருப்பம் தெரிவித்தார். ஒப்புக் கொண்டு இலக்கிய நிகழ்வுகள் பற்றி எழுதி "மல்லிகை" இல் பிரசுரித்தேன். அவைகளை வாசித்த அன்றைய "தினக்குரல்" பத்திரிகை ஆசிரியர் வீ. தனபாலசிங்கம் தனது தினசரியிலும் அதைச் செய்யும்படி கேட்டுக் கொண்டார். ஏற்றுக் கொண்டேன். "மா. பா. சி." என்ற அடையாளத்தோடு வெளியிட்டனர். நாடாளுமன்ற "ஹன்சாட்" பாணியில் எழுதுவது நிகழ்வின் ஏற்பாட்டாளர்களையும் வாசகரையும் திருப்திப்படுத்தியது. நேரிலும் என்னைப் பாராட்டினர். வெளிமாவட்டத்தவர்கள் தமது நிகழ்ச்சிகளையும் தொகுத்து வெளியிடும்படி அழைத்தனர். எப்படி நிறைவேற்ற முடியும்? அங்கெல்லாம் பத்திரிகை நிருபர்கள் உண்டே? அவை மட்டுமா? இன்னும் சொல்லப் போனால் ....... இந்த இலக்கியத் தொகுப்பால் கணிசமான பரம்பலை நான் பெறுவதை உணர்ந்தவர்கள் - மற்றவர்கள் என்னைப் பற்றிச் சொல்வதில் தமது இருப்பைத் தக்க வைத்துக் கொள்வதாக அபிப்பிராயங்களையும் கக்கினர்.

இலங்கை புதிய பண்பாட்டுத் தளம் என்ற அமைப்பின் வெளியீடான, "புதிய தளம்" முதல் இதழில் அதன் ஆசிரியர் கலாநிதி ந. இரவீந்திரன் என்னை நேர்காணல் செய்தார். அதிலொரு கேள்விக்கு, மா. பா. சி. இன் இலக்கிய நிகழ்வுத் தொகுப்புக்கள் ஒருங்கு சேர்க்கப்பட்டு நூலாக்கப்பட்டால் வெளியீட்டுக் கலாசாரத்தில் வித்தியாசமாக அமையும்; எதிர்காலத் தலைமுறைக்கும் பயனளிக்குமெனப் பதிலளித்தேன். அதை ஏற்றுக் கொண்டனர்.

இலக்கிய நிகழ்ச்சித் தொகுப்பை நூலாக்க வேண்டுமென்ற எண்ணக் கரு என்னில் சூழ் கொண்டதில்லை. அவ்வப்போது பத்திரிகையில் வெளிவந்தவைகளைச் சேகரித்தும் வைக்கவில்லை! எனது முந்தைய இத்தகு தேட்டங்களை வகுப்புவாத யுத்தம் தின்றதே இதற்கு காரணம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத்து இலக்கியத்தின் உச்சப் பயனைக் கருதி, இதற்கான கடும் உழைப்பையும், சிரமத்தையும் "நாமெல்லாம் உழைக்கும் வர்க்கமே" என்ற கருத்துள் புதைத்து விட்டு தேசிய நூலக ஆவணமாக்கல் சேவைகள் சபைக்குச் சென்றேன். அதன் நகல் பிரதிகள் வழங்கும் கிளையின் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த ஊழியர்கள் வியத்தகு ஒத்துழைப்பைத் தந்து எனது தேவையை நிறைவேற்றினர். நூறுக்கும் மேற்பட்ட நிகழ்வுகளின் பத்திரிகை நகல் பிரதிகளைப் பெற்றுக் கொண்டேன். மனம் குளிர்ந்தது. சாத்தியப்படுத்திய சபையின் ஊழியர்கள் நெஞ்சில் நிறைந்தனர்.

இதற்காக ஒலிப்பதிவு நாடாப் பொறியொன்றை அன்பளிப்புச் செய்யத் தகவம் மு. தயாபரன் முன் வந்தும் ஏற்கவில்லை. நிகழ்ச்சி மண்டபத்தில் அமர்ந்து, ஒலி பெருக்கி ஊடாகச் செவிகளில் நுழைந்து கொள்ளும் - மேடையில் பேசிக் கொண்டிருக்கும் பேச்சாளரின் பேச்சுகளைப் பதிவேட்டில் பதிந்து கொள்வேன். "கேள்விச் செவியன் ஊரைக் கெடுப்பான்'' என்ற வாய்ப்பாடு இன்னமும் தமிழர் சமுதாயத்தில் உயிர்ப்போடுள்ளது!. கணனி அச்சுப் பிசாசு எந்தவொரு நூலாசிரியருக்கும் வில்லங்கத்தைக் கொடுக்கக்கூடியது. தொனிப் பொருளையே திரிபுபடுத்தும் பாதகச் செயலைச் செய்யக் கூடியது. அந்த விபத்து இந்த நூலுக்கும் வந்துவிடக் கூடாதென்ற முன்னெச்சரிக்கை மனத்தை உதைத்தது.

பேராசிரியர்கள், கலாநிதிகள், புத்திஜீவிகள் மற்றும் தடம்பதித்த சான்றோர்களாலாற்றப்பட்ட- நூல் வெளியீட்டு, அறிமுக, விமர்சன - தகைசார் பெரியோர் நினைவு, பாராட்டு உரைகள் உட்பட்ட நிகழ்வுகளின் உரைகளே இத்தொகுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன. இவ்வுரைகளைப் பிசக்கி விடக்கூடாதென்ற பொறுப்புணர்வு மனதை நெருடியது. அத்தோடு வாசகனின் அறிவைப் பெருக்க வேண்டுமென்ற சமூக உணர்வும் வழி நடாத்தியது. பதிப்பாசிரியர் கலாநிதி ந. இரவீந்திரனையும் உதவிக்கழைத்துப் பெற்ற பத்திரிகை நகல்களைக் கணனித் தட்டச்சுச் செய்து பிரதிகளெடுத்து, இரண்டு பிரதிகளையும் ஒப்பிட்டு - எழுத்தெண்ணி வாசித்துப் பொருத்தத்தை உறுதிப்படுத்தினோம். அவ்வகையில் தேறியவையே இந்நூலில் தொகுக்கப் பட்டுள்ளன.

நூலை நூலாசிரியரின் அபிமானியொருவருக்குப் படையல் (சமர்ப்பணம்) செய்வது இன்றைய புத்தகவாக்கக் கலாசாரமாகி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டது. இந்நூலை அப்படி யாருக்குச் செய்யலாமென்ற பட்டி மன்றம் என்னுள் முகிழ்ந்தது. அமரர் பொன்னுத்துரை (எஸ். பொ.) எவருக்கும் முதுகு சொறியாதவர்; மேடைப் பேச்சுக்களினால் ஈழத்து இலக்கிய நிகழ்ச்சி மேடைக்கு ஈர்ப்பை ஏற்படுத்திய நற்போக்காளார். அச்சிறப்பாளுமைக்கே படையல் செய்வது பொருத்தமாகப்பட்டது. அதைச் செய்துள்ளேன்.

எனக்கென்றால் இஃதொரு வித்தியாசமான எழுத்துரு! பத்திரிகை Reporting சார்ந்தது. புனைவு, கட்டுரை ஆகிய இலக்கியங்களில் பெற்ற சிறப்பை இதிலும் பெறுவேனென நம்புகிறேன். ஏறத்தாழ ஒரு தசாப்த காலமாக இதைத் தொடர்ந்து வாசித்து வரும் அபிமான வாசகர்கள் பேராதரவால் இம்முயற்சி மேலும் நீட்சி கொள்ளுமென நம்புகிறேன். எனது மூன்றாவது நூலாக "மா. பா. சி. கேட்டவை" வெளிவரக்கால் கோளிட்டவர் மதிப்புக்குரிய கலாநிதி ந. இரவீந்திரன். எனது மதிப்பும் மரியாதையும் நன்றியும் என்றும் அவருக்கிருக்கும். அத்தோடு, என்னை ஊருக்கு நல்லதைச் சொல்ல வைத்து, அபிமானமான முன்னுரையும் தந்திருக்கும் "தினக்குரல்" முன்னாள் ஆசிரியர் வீ. தனபாலசிங்கம் என்றென்றும் என் நெஞ்சுக்கு இனியவராக இருப்பார். தனது பங்களிப்பையும் செய்த "தினக்குரல்" உதவி ஆசிரியர் கே. ஜெயேந்திரனுக்கும் என் நன்றிகள்.

மா. பா. சி.
(மா. பாலசிங்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1

## கொம்யூனிஸ்ட்
## மு. கார்த்திகேசன்
## நினைவுப் பேருரை

இலங்கை இடதுசாரி இயக்கத்தின் முன்னோடித் தலைவர்களில் ஒருவரும் சிறந்த கல்விச் சிந்தனையாளருமாகிய மு.கார்த்திகேசனின் 30வது நினைவு தினத்தை முன்னிட்டு 07.10.2007 ஆம் திகதி கொழும்பு வெள்ளவத்தை பெண்கள் கல்வி ஆய்வு நிறுவன கேட்போர் கூடத்தில் நினைவுப் பேருரையும் நூல் வெளியீடும் நடைபெற்றது. இந்நிகழ்வுக்கு மூத்த இடதுசாரியும் இலக்கியவாதியுமான நீர்வை பொன்னையன் தலைமை தாங்கினார்.

**தலைமை உரை:**
**நீர்வை பொன்னையன்**

அமரரான பின் எந்தவொரு தேசிய இயக்கத் தலைவரும் பெறாத கௌரவத்தைத் தோழர் கார்த்திகேசன் பெறுகிறார். ஒவ்வொரு ஆண்டும் அவரை நினைவுகூரும் நிகழ்வுகளை நாம் நடாத்துகிறோம். இத்தகைய பேறு சிங்கள இடதுசாரிகளுக்குக் கூட கிடைப்பதில்லை! இதற்குக் காரணம், கார்த்திகேசனின் அர்ப்பணிப்பான மக்கள் சேவை தான். இத்தகைய மரியாதையைப் பெறும் இன்னொருவர் பேராசிரியர் க.கைலாசபதி. தமிழ் இலக்கியத்தில் ஒப்பியல் முறையைக் கட்டி எழுப்பினார். தன்னைப் போல் மற்றவர்களையும் சிந்தனையாளர்களாக ஆக்குவதற்குப் பாடுபட்டார். இந்த நல்ல தன்மையைக் கைலாஸ் தோழர் கார்த்திகேசனிடமிருந்து தான் கற்றிருக்க வேண்டும். அவர் மார்க்சியப் பார்வைக்கு வழிவகுத்தார். எனது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலொன்றுக்குக் கூட கைலாசபதியோ சிவத்தம்பியோ முன்னுரை எழுதவில்லை. இருந்தும் கைலாசபதியின் அணுகுமுறைகள் என்னை ஈர்க்கச் செய்தன.

தோழர் கார்த்திகேசனோடு 1947 - 1948 களில் கொம்யூனிஸ்ட் கட்சி அலுவல்களுக்காக மிகவும் நெருங்கிப் பழகிய அனுபவம் எனக்குண்டு. ஒருமுறை நான் அவரைச் சந்திக்க முயன்று, தற்பொழுது மனோகரா தியேட்டர் இருக்கும் சூழலில் அரிவாள், சுத்தியல் இலச்சினையைக் கண்டு அவ்விடம் சென்று கார்த்திகேசனை விசாரித்தேன். இல்லையென்று கூறிவிட்டார்கள். அது இலங்கை சமசமாஜக் கட்சியின் பணிமனை, எனக்கு ஏமாற்றமாகிவிட்டது. பின்னர் கொழும்பிலிருந்து ஹரி அபே குணவர்த்தனாவோடு தொடர்பு கொண்டு, கார்த்திகேசனைத் தேடி யாழ்ப்பாணம் விக்ரோறியா றோட்டுக்குச் சென்றேன். இது 1947இல் நடைபெற்றது. வீட்டு விறாந்தையில் சாரத்தோடும், துவாயோடும் இருந்தார். எனக்கு ஆச்சரியமாக இருந்தது. பின்னர் தோழர்கள் எம்.சி.சுப்ரமணியம், இராமசாமி ஐயர், கே. டானியல், டொமினிக் ஜீவா ஆகியோரும் வந்தனர். இப்படியாகவே எனது உறவு அவரோடு ஆரம்பித்தது.

1947 இல் நடைபெற்ற முதல் தேர்தலில் பங்கு பற்றினோம். இணைந்து கட்சிக்காக உழைத்தோம். நாங்கள் ஒழுங்கு செய்த முதல் மே தினக் கூட்டத்துக்கு 14 பேர் மட்டுமே வந்திருந்தனர். கட்சிக்கு இல்லாத செல்வாக்கு கார்த்திகேசனுக்கு இருந்தது. கட்சி அலுவலகம் அமைக்கக் காத்திரிகேசனின் முகத்தைப் பார்த்தே இடம் தந்தனர். யாழ்ப்பாண மாநகரசபைக்கு முஸ்லிம் ஒருவர் நகர பிதா ஆவதற்கு அவரது உழைப்பு பெரிதும் உதவியது.

கட்சி நோட்டீஸ்களை ஒட்ட அவர் அதிகாலை 4 மணிக்கு எங்களோடு நிற்பார். இதில் ராமசாமி ஐயர், எம்.சி.சுப்ரமணியம் ஆகியோரும் பங்குபற்றுவர். கட்சிப் போராட்டங்களுக்குப் பக்கபலமாக இருந்தார். அவரது கையில் எப்பொழுதும் கட்சிப் பிரசுரங்களே இருக்கும். நாமும் அதைப் பின்பற்றுவோராகினோம். கொழும்புத் தலைமைக் காரியாலயத்துக்கு வந்தால் ஊழியர்களோடு தங்குவார். சாப்பிடுவார். சிங்கள மக்கள் மத்தியிலும் அவருக்குப் பெருஞ்செல்வாக்கு இருந்தது. எந்தவொரு செயல்திட்டத்திலும் தன்னை அர்ப்பணித்தே செயல்படுவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நினைவுப் பேருரை:**
**கல்வியியலாளர் தை. தனராஜ்:**
**"ஒடுக்கப்பட்டோருக்கான கல்வி"'மலையகத்தை சிறப்பாகக்கொண்ட ஆய்வு**

*இலங்கை பல்கலைக்கழக கலைப்பீட முதுநிலை விரிவுரையாளர் தை.தனராஜ், ஒடுக்கப்பட்டோருக்கான கல்வி - மலையகத்தைச் சிறப்பாகக் கொண்ட ஆய்வு என்ற பொருளில் நினைவுப் பேருரை நிகழ்த்தினார்.*

மனிதன் எப்படி வாழ வேண்டுமென்பதை வாழ்ந்து காட்டியவர் கொம்யுனிஸ்ட் கார்த்திகேசன். தமிழ்ச் சமூகத்தில் சாதி அமைப்பு மேலோங்கி இருந்த காலத்தில் அவர் இடதுசாரி இயக்கத்தை முன்னெடுத்தார். அதைத் தேசிய ரீதியாக்கினார். றொசாரியோ பெனாண்டோ என்பவர் மலையகத்தில் இடதுசாரி இயக்கத்தைப் பரப்பினார். உறுதியான எடுத்துரைப்பு, வாதத்திறமை, நகைச்சுவை என்பன கார்த்திகேசனின் சிறப்பு ஆளுமைகள். சுய ஆத்ம கௌரவத்தோடு அவர் வாழ்ந்தார். இன்றைய அரசியல்வாதிகள் ஏதாவது சலுகைகளைப் பெறுவதற்காக அலைவதுண்டு. ஆனால், இதற்கு மாறானவர் கார்த்திகேசன். அவரது வாழ்வில் நடந்த சம்பவமொன்றை இதற்கு உதாரணமாகக் கூற முடியும்.

பொதுவுடமைக் கட்சிக்காரரும் அமைச்சருமான துடாவை ஒரு முறை யாழ்ப்பாணம் சென்ற பொழுது கொம்யுனிஸ்ட் கட்சியின் முக்கிய தூணாக இருந்த கார்த்திகேசன் அமைச்சரைப் பார்க்கச் செல்லவில்லை. மாறாக அமைச்சர் துடாவை தேடிச் சென்று சந்தித்தார்.

ஏனைய மக்கள் அனுபவிக்கும் சுதந்திர உரிமைகளைப் பெறாதவர்களே மலையக மக்கள். இந்தியாவின் சனத்தொகை, வறுமை, சாதி ஒடுக்குமுறை என்பவற்றால் பாதிப்புக்குள்ளாகி இலங்கைக்கு வந்தவர்கள். இரு நூற்றாண்டுகளுக்கு மேலாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். பெரும்பான்மை இனத்தவரான சிங்களவர்கள் பெருந்தோட்டங்களில் தொழில் செய்ய விரும்பவில்லை. கல்விக்கு முற்று முழுதான வரைவிலக்கணம் கிடையாது. பிள்ளைகளின் அறிவுத் திறனை வளர்த்தெடுக்க, தன்னை விளங்கிக் கொள்ளக் கல்வி உதவுகின்றது. மனித வாழ்வுக்கு கல்வி முக்கியமானது. குறிப்பிட்ட காலத்துக்கு மட்டுமே கருத்துக்கள் மேலோங்கி நிற்கும். தனிப்பட்ட மனிதரின் வளர்ச்சிக்கான கருவி கல்வி. திறமை யாருக்கு உண்டோ அவர்கள் கல்வியில் முன்னுக்கு வரலாம். வர்க்க பேதத்தினை அகற்றக் கல்வி எதுவும் செய்யவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகில் இன்று ஒரு பில்லியன் மக்கள் எழுத, வாசிக்கத் தெரியாதவர்களாக இருக்கின்றனர். மலையகத் தோட்ட மக்கள் கடனோடு வந்து, கடனோடு வாழ்ந்து, கடனோடேயே மடிந்தார்கள். இப்படிச் சிங்களப் புத்திஜீவியான குமாரி ஜெயவர்த்தனா கூறி இருக்கிறார். ஒரு தோட்டத் துரையின் வீட்டைச் சுத்தம் செய்யாததற்குத் தொழிலாளி ஒருத்தன் மர்ம உறுப்பில் அடிக்கப்பட்டு மடிந்தான். அவன் மரணித்துக் கிடந்ததைக் கண்ட தோட்டத்துரை அவன் பாசாங்கு செய்கிறான் என்றாராம். 90வீதமான தொழிலாளருக்குத் தொழிற்சங்கம் உண்டு. பேரம் பேசுவது பலவீனமானது. 1931 இல் இந்திய வம்சாவளியினரான பெரி.சுந்தரம் அமைச்சராக்கப்பட்டும். 1948 இல் தோட்ட மக்களின் சுதந்திரம் பறிக்கப்பட்டது. 1952 இல் அமைந்த பாராளுமன்றத்தில் மலையக மக்களின் உறுப்புரிமை இல்லாது போனது. இலங்கை - இந்திய ஒப்பந்தம் இந்திய மக்களது செறிவை இல்லாமல் செய்தது. அந்நிய மண்ணில் தம் நாட்டவர்கள் பாதிப்புக்கு உள்ளாவதைத் தாய்நாடுகள் கண்டுகொள்ளவில்லை. தோட்ட மக்கள் ஆடு, மாடுகள் போல் அடைக்கப்பட்டு இராமானுஜம் கப்பலில் திருப்பி அனுப்பப்பட்டனர்.

இன்று மலையகத்தில் பாடசாலை செல்லாத பிள்ளைகள் 20 வீதம் இருக்கின்றனர். எழுத்தறிவுள்ளோர் தொகை இலங்கையில் 92 வீதத்திற்கு உயர்ச்சி கண்டுள்ளது. மலையகத்தில் 43 வீதம் மட்டுமே ஆரம்பக் கல்வியைப் பெற்றிருக்கின்றனர். மலையகத்தில் மலசல கூட வசதி 2 சதவீதமானோர்க்கே உண்டு. தொழில்நுட்பம் உச்சக்கட்டத்தை அடைந்து வரும் இன்று, மலையக மக்களுக்கு ஒரு சதவிகித கணினி வசதியே உண்டு! தோட்ட மக்களுக்கு கல்வியைக் கொடுத்தால் அவர்கள் எதற்கும் உதவாதவராகிவிடுவர் என்ற கருத்துண்டு. தோட்டக் கூலிகளுக்குக் கிரகிக்கும் ஆற்றல் இல்லையென்கின்றனர். தேசிய கல்வியில் புகட்டப்படும் நல்ல அம்சங்கள் மலையகச் சிறுவர்கள் பெறும் கல்வியில் இல்லை. மலையகத் தமிழ், கல்விக்குப் பொருத்தமில்லையெனக் கூறுவோருமுண்டு. இலங்கை முழுதும் 1939 இல் கல்வி கட்டாயமாக்கப்பட்டது. பாடசாலை செல்லாதவருக்கு 50 சதத் தண்டமும் இருந்தது. தோட்டத்துப் பிள்ளைகள் கல்வி கற்றால் தோட்டத்துரைக்கு வளம் இல்லாது போய்விடும். இதனால் சகலருக்குமான கல்வித் திட்டம் இங்கு முழுமையாகச் செயல்படுத்தப்படவில்லை. எட்டு இலட்சத்துக்கும் மேல் தோட்ட மாணவர்கள் கற்கிறார்கள். அங்கு தோட்ட மாணவருக்குத் தோட்டத் துரையே பொறுப்பென்ற நிலை. பாரபட்சம் மேலோங்கிக் காணப்படுகிறது. தமிழ்க் கல்வி கவலையையே தருகின்றது. பல்கலைக்கழகத்தில் எத்தனை மாணவர்கள் கற்கின்றார்கள் என்பதற்கு உரிய பதிவுகள் கிடைப்பதில்லை. மலையகத்தைப் பொறுத்த மட்டில் கொள்கை மாற்றம், திட்டங்கள் என்பவையெல்லாம் வெறும் பாசாங்காகவே இருக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூல் : பேராசிரியர் சபா ஜெயராசாவின் "தாய்மொழிக் கல்வியும் கற்பித்தலும்"

*அடுத்த நிகழ்வில், பேராசிரியர் சபா.ஜெயராசாவின் "தாய்மொழிக் கல்வியும் கற்பித்தலும்" என்ற நூல் ஆய்வு செய்யப்பட்டது. ஆய்வுரைகளை பேராசிரியர் சோ.சந்திரசேகரமும் அதிபர் பி.கே. இராசரத்தினமும் நிகழ்த்தினர்.*

### ஆய்வுரைகள்:
### பேராசிரியர் சோ. சந்திரசேகரம்

ஓய்வு பெற்ற பின்னர் பேராசிரியர் சபா. ஜெயராசா காத்திரமான நூல்களை எழுதி வெளியிட்டுக் கொண்டிருக்கிறார். அவரும் நானும் ஒரே கற்கை நெறியை நான்கு ஆண்டுகள் பயின்றவர்கள். பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் எழுத வேண்டும். ஆய்வுப் பணிகளில் ஈடுபட வேண்டும். தமிழ்ச் சமூகத்துக்குப் பணி ஆற்றுவதற்கு எழுத்துப்பணி மிகவும் முக்கியமானது. இந்நாட்டில் இரண்டு இலட்சத்துக்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் இருக்கின்றார்கள்.

நான், சபா. ஜெயராசா, எனக்கு முன் பேருரை நிகழ்த்திய தை. தனராஜ் ஆகியோர், எமது பதவி வழியாக ஆசிரியர்களுக்குக் கற்பிக்கின்றவர்கள் பாடசாலைகளில் மாணவருக்குக் கற்பிக்கும் ஆசிரியர்கள் நாளாந்தம் தாமும் கற்க வேண்டும். இந்த நூல் கல்வியைச் சார்ந்தது. ஆசிரியர்கள் கற்பதற்கு அநேக நூல்கள் உண்டு, இத்தகைய நூல் பெருக்கத்துக்குச் சபா ஜெயராசாவும் உதவுகின்றார்.

"தாய் மொழிக் கல்வியும் கற்பித்தலும்" என்ற நூலில் நவீன சிந்தனைகள் காணப்படுகின்றன. இதில் தமிழ்ப் பாடத்தைக் கற்பதற்கான தத்துவங்கள் உண்டு. மொழி என்றால் என்ன? இதை உளவியல், தத்துவம், சமூகவியல் ஆகியவற்றின் நோக்கில் விளக்கமாக எழுதி இருக்கிறார் சபா ஜெயராஜா. மொழி கருத்துப் பரிமாற்றத்துக்கான ஊடகம் என்பதே எமது கருத்தாகும்.

இதன் மூலம் சமூக அடையாளங்கள் பாதுகாத்தலும் கையளித்தலும் நடைபெறுகின்றது. மொழியின் ஊடாகவே கையளிப்பு நடந்தது. இப்படிப் பல கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன.

இலங்கையில் சராசரி 9 ஆம் வகுப்பு படித்தவர்களை அதிகமாக இனங்காண முடிந்தது. 5 ஆம் வகுப்புக்கு இது மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது பெற்றோருக்குத் தமது பிள்ளைகள் ஆங்கிலம் கற்க வேண்டுமென்பதே கொள்ளை ஆசை. தாய் மொழியைக் கற்க வேண்டிய அவசியத்தை இந்நூல் தருகின்றது. ஆங்கிலம் படித்தால் கல்வித் தரம் முன்னேறும். 3 Aயைப் பெற முடியுமென்ற நம்பிக்கையில் எமது பெற்றோர்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். தற்காலத்து மாணவ சமூகத்துக்கு அவர்களது கற்கை நெறிகளுக்கு அப்பால் எதுவும் தெரியாது. இது பல்கலைக்கழகத்துக்குள் நுழைவோருக்கும் பொருந்தும். பொது விடயங்களை வாசிப்பதில்லை. தனித் தமிழை மட்டும் அறிந்தவர்கள் அறிஞர்களல்ல என்ற கருத்தும் எமது தமிழ்ச் சூழலில் உண்டு. அதற்குச் சமஸ்கிருத ஞானமும் தேவை என்கின்றனர். எந்த நாட்டிலும் இரு மொழிகளில் பாடத்திட்டம் அமைவதில்லை. ஆனால், இலங்கையில் இரு மொழிகளில் கல்வி புகட்டப்படுகிறது. தாய்மொழியின் நிராகரிப்பு கல்வியின் நிராகரிப்பு என்பதை உணர வேண்டும். சமூக மாற்றத்திற்குத் தாய் மொழிக் கல்வியே உதவும். இந்நூலில் அடக்கப்பட்டிருக்கும் ஏராளமான விடயங்கள் ஆசிரியர்களுக்குப் பொருத்தமானவை. இவைகள் தமிழ் ஆசிரியர்கள் அறிந்திருக்காத விடயங்கள்.

**அதிபர் பி. கே. இராசரத்தினம்**
**(வடகோவை இராசரத்தினம்)**

இந்நூலை வெளியிட்டதுக்குப் பேராசியருக்குத் தமிழ்ச் சமூகம் நன்றி கூற வேண்டும். பல வகைப்பட்ட நூல்களை வெளியிட்டு அசுர சாதனை புரிகின்றார் பேராசிரியர். இந்நூல் ஆசிரியர் எனக்கு ஆசானாக இருந்தவர். நெல்லியடி மகா வித்தியாலயத்தில் நான் அவரிடம் புவியியல் கற்றேன். தனித்துவமான எழுத்து நடை அவருக்குண்டு. புதிய சொற்களை அறிமுகப்படுத்துகிறார். அனுபவங்களைப் பதிவாக்கி இருக்கிறார். இந்நூலின் வரவு அனைவருக்கும் பொதுவானது. கோளமயமாக்கலின் எதிர்வினையாகத் தாய்மொழி இயக்கம் பெறுகிறது. இந்நூல் பல செய்திகளைத் தந்துள்ளது. ஒழுக்க, சமய, இலக்கிய, மொழிகள் பற்றி ஆசிரியர் கூறியிருக்கிறார். தாய் மொழியே முதலில் அறியப்படுவது. தாய்மொழி என்றால் என்ன? என்பதை விபரித்திருக்கிறார். உளமொழி, சமூக மொழி ஆகிய மொழி நுட்பங்களை ஆசிரியர் அறிய வைக்கிறார். சமூகமே மொழியின் தாயகமாகின்றது. மொழி தொட்டில் போன்றது. சிந்தனை இயக்கத்தை நெறிப்படுத்த மொழி உதவுகின்றது.

*கார்த்திகேசன் நினைவுக் குழுவும் முற்போக்குக் கலை இலக்கியப் பேரவையும் இந்நிகழ்வை ஒழுங்கு செய்திருந்தன.*

**- 12.10.2007**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2

## பேராசிரியர் கா. சிவத்தம்பி பவளவிழா மலர்

முதுபெரும் தமிழ் அறிஞர் பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பியின் 75வது அகவையை முன்னிட்டு - கலை இலக்கிய மாத சஞ்சிகையான "ஞானம்" தயாரித்த பவள விழா மலர்; 11.11.2007 ஆம் திகதி கொழும்பு தமிழ்ச்சங்கத்தின் சங்கரப்பிள்ளை மண்டபத்தில் வெளியிடப்பட்டது. திருமதி ரூபவதி சிவத்தம்பி மங்கள விளக்கேற்றித் தொடக்கி வைக்க கலாபூஷணம் சுழிபுரம் நடேசன் சிவசண்முகமூர்த்தி தமிழ் வாழ்த்துப் பாடினார். வரவேற்புரையைத் திருமதி ஞானாம்பிகை ஞானசேகரன் நிகழ்த்தினார். இந்நிகழ்வுக்குப் பேராசிரியர் எஸ்.தில்லைநாதன் தலைமை தாங்கினார்.

### தலைமையுரை:
### பேராசிரியர் சி. தில்லைநாதன்

எனக்கும் பேராசிரியருக்கும் இடையில் 45 வருட கால உறவு. அவரைக் கொழும்பு காலி முகத்திடலில்; அன்றிருந்த பாராளுமன்றக் கட்டிடத்தில் சந்தித்தேன். லேக் ஹவுஸ் பத்திரிகை நிறுவனத்தில் வேலை வெற்றிடம் இருப்பதாக அறிந்து, அதன் பொருட்டே அவரைச் சந்திக்கச் சென்றேன். சென்ற விஷயத்தைத் தெரிவித்த பொழுது சான்றிதழ்கள் கொண்டு வந்தாயா? எனக் கேட்டார். அத்தகைய பத்திரங்கள் எதையுமே நான் கொண்டு செல்லவில்லை. அதைச் சொன்ன பொழுது பேராசிரியர் கணபதிப் பிள்ளையிடம் ஒரு சான்றிதழைப் பெறும்படி கூறினார். இதுவே எமது முதல் சந்திப்பு. இதைத் தொடர்ந்து அடிக்கடி எனது கரைச்சல் அவருக்குக் கிடைத்தது. அவரது இல்லம் வரை சென்று உதவிகளைக் கேட்டிருக்கிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர் க.கைலாசபதி, சிவத்தம்பி, நான் ஆகிய மூவரும் நண்பர்களாக இருந்தோம். ஒரே நாளில் பல்கலைக்கழகப் பரீட்சைக்குத் தோற்றினோம். எனது கலியாணப் பதிவுக்குச் சாட்சியாகச் சிவாவே ஒப்பமிட்டார்.

பேராசிரியர் சிவத்தம்பியின் தமிழ் ஆய்வுப் பணிக்கு அங்கீகாரமளிப்பதே இவ்விழா. சிவாவின் ஆய்வுகளுக்குச் சமூக அக்கறையே அடிப்படையாக இருப்பதை நாம் உணர வேண்டும். ஆய்வுகள் மனித மேம்பாட்டுக்கு உதவ வேண்டும் என்ற நோக்கில் தனது ஆய்வுகளைச் சிவா மேற்கொண்டார்.

அடக்கப்பட்ட, ஒடுக்கப்பட்ட மக்கள் மீது மிகுந்த அக்கறை கொண்டவர். மற்றவர்களுக்குத் தெரியாதபடி அவர்களது துன்பங்களைப் பார்த்துக் கொள்வார். வாசிப்பதில் சிவா மிகுந்த அக்கறை கொண்டவர்.தி.மு.க.வின் சீர்திருத்தக் கருத்துக்களை நிறையவே வாசித்தார்.

இன்றைய ஆசிரிய சமூகத்திடம் எதிர்க் கேள்வி கேட்க முடியாது. ஆனால், எமது கால கட்டத்தில் அத்தகைய நிலை இருக்கவில்லை. அச்சமில்லாதவர், தொடர்ந்து கேள்விகளை தொடுக்கக் கூடியவர். நல்லது, கெட்டதுகளை அறிந்து கொள்ளும் கல்வி அன்று எமக்கு கிடைத்தது. பழிவாங்கும் தன்மை அவரிடம் இருந்ததில்லை.

உலகில் மாற்றங்களை உருவாக்க வேண்டும் என்ற சிந்தனைகளை 1938இல் கொல்கத்தாவில் நடைபெற்ற முற்போக்கு எழுத்தாளர் மாநாடு விதைத்தது. யதார்த்தம் ஓர் ஆரம்ப புள்ளியே. தமிழ்க் கலை உலகு, மரபு வாதிகளிடமிருந்து சிறை எடுக்கப்பட வேண்டுமென்பது சிவாவின் நோக்கமாகும்.

எதையும் ஆய்ந்தறிந்து, உண்மை நிலையை மக்களுக்குத் தெரிவிக்காது இன்று அவசரத்தில் கருத்துக்களைச் சொல்கின்றனர். தமிழ், தமிழர் சம்பந்தப்பட்ட விடயங்களை 1963-1964 களில் ஆங்கிலப் பத்திரிகைகள் பிரசுரிப்பதில்லை. எனது முயற்சியின் மூலமாகவே ஒப்சேவர் ஆங்கிலப் பத்திரிகையில் பிரசுரமான விடயமொன்றை அமரர் ஏ.ஜே.கனகரத்னா பிரசுரித்ததாக செய்தியொன்று பரப்பப்பட்டது. இதை கண்டு ஏ.ஜே.யே வியந்தார். அன்று என்னை ஒப்சேவரிலிருந்து வெளியேற்ற ஏராளமான பெட்டிசங்கள் குவிந்ததுண்டு. எனக்குச் சிவா எப்பொழுதும் உதவியாக இருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வாழ்த்துரை:**
**வே. விமலராஜா**
**(முன்னாள் தொழில் நீதிமன்ற நீதிபதி)**

பூக்களுக்கு விளம்பரம் தேவை இல்லை. நானும் சிவத்தம்பியும் கரவெட்டி, விக்னேஸ்வராக் கல்லூரியில் கற்றோம். எமக்கு கணக்கு வாத்தியாராக இருந்த கே.வி.கந்தையாவிடம் இருவரும் செப்பமாக அடி வாங்குவோம். பேராசிரியரின் தந்தையும் இக்கல்லூரியின் பழைய மாணவர் தான். பேராசிரியருக்கு ஏற்பட்ட நோயின் காரணமாகத் தந்தையார் வித்வான் பரீட்சைக்குத் தோற்றாது பண்டிதராகவே இருந்தார். அவர் சோதிடக் கலையில் பாண்டித்தியம் பெற்றவர். எனது ஜனன சாதகக் குறிப்பைப் பார்த்துவிட்டு என்னை அரசியலுக்குப் போகக்கூடாதென ஆலோசனை சொன்னார். யோகர் சுவாமிகள் பேராசிரியரின் தகப்பனாரிடம் உமக்கு ஒரு மகன் பிறப்பார் அவர் பெரும் அறிஞராகப் புகழீட்டுவார் எனச் சொல்லியிருந்தார். அந்தத் திருவாக்கு இன்று பலித்துவிட்டது.

நானும் பேராசிரியரும் சுண்டிக் குளத்தில் நீந்தி விளையாடி இருக்கிறோம். பகிடிகளை நசுக்கிடாமல் சொல்லித் தனது உடல் குலுங்கச் சிரிப்பார். நாங்கள் வாய் வலிக்கச் சிரிப்போம். அப்பொழுது எமது ஆசிரியர்கள் ஒவ்வொரு மாணவருக்கும் ஒவ்வொரு பட்டப் பெயர் வைப்பதுண்டு. ஆசிரியர் சிவப்பிரகாசம் எனக்கு வைத்த பெயர் சொட்டை ஆகாசம். நான் பேராசிரியருக்குச் சூட்டி மகிழ்ந்த பெயர் ராசையா. அவரையொரு பேரதிஷ்டக்காரரெனலாம். ஏராளமான அரிய நூல்களை வெளியிட்டிருக் கிறார். அவருக்கு நல்லதொரு குடும்பம் அமைந்திருப்பது அவர் பெற்ற வரமாகும். பேராசிரியரது சாதனைகளுக்கு அவரது மனைவி ரூபவதிக்கே நன்றி தெரிவிக்க வேண்டும்.

பேராசிரியர் நூறாண்டுகளுக்கு மேல் வாழ்ந்து அவரது பெயர் கின்னஸ் புத்தகத்தில் பதிவாக வேண்டும். அதுவே என் வாழ்த்து.

**வெளியீட்டுரை:**
**தி. ஞானசேகரன்**
**(ஆசிரியர்: ஞானம்)**

பேராசிரியர் தனக்கு விழா எடுக்க வேண்டாமென மறுத்தார். அவர் 10.05.1932இல் பிறந்தார். பிறந்த தினமெனில் கோயிலுக்குச் செல்வோம், அர்ச்சனை செய்வோம். இதுவொரு சம்பிரதாயமான நடவடிக்கை. ஈழத்து நவீன இலக்கியத்துறைக்கு பங்களிப்புச் செய்தவர்களை கௌரவிக்கும் முகமாக எமது ஞானம் சஞ்சிகையில் அவர்களை அட்டைப்பட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாயகர்களாக்குகின்றோம். நேர்காணல்களை, கட்டுரைகளை வெளியிடுகின்றோம். இதன் நீட்சியாகவே இந்த மலர் வெளியீடு அமைகின்றது. சாதிக் கொடுமைக்கு எதிராகத் தனது குரலை ஓங்கி ஒலித்த 'மறுமலர்ச்சி' சஞ்சிகையை வெளியிட்ட வரதரைக் கௌரவித்தோம்.

முற்போக்கு எழுத்தாளர் சங்கத்திற்கு இலங்கையில் அத்திவாரமிட்ட, ஜப்பானில் பாராட்டப் பெற்ற மலையக எழுத்தாளர் கே.கணேஷைப் பாராட்டினோம். பேராசிரியர் கா.சிவத்தம்பி 5 தசாப்தங்களாகத் தமிழ்ப் பணி செய்து வருகிறார். மரபுக் கெதிராக அவர் செய்த பணி அளப்பரியது. உலகில் எங்கு தமிழ் மகாநாடு நடந்தாலும் அங்கு சென்று தமிழுக்குச் சேவை செய்பவர். பல்துறைகளின் சங்கமமே அவரது ஆய்வுகள். அவர் அறிவை வழங்கும் அட்சய பாத்திரம். தமிழகத்தில் திரு.வி.க.விருதைப் பெற்ற ஒரே ஒரு ஈழத்தமிழர் பேராசிரியரே தான். பேராசிரியரின் பவள விழாவை முன்னிட்டு எந்தவொரு சஞ்சிகையும் மலர் வெளியிடவில்லை. அதை நாம் செய்து காட்டுகிறோம். பெரும் வரவேற்பு கிடைத்தது. பேராசிரியரின் ஆய்வுகள், கையாண்ட அடிப்படை விடயங்கள், விருதுகள் என்பவற்றை அறிந்து கொள்வதற்கு இப்பவள விழா மலர் உதவும்.

பேராசிரியர் சிவத்தம்பியைக் கௌரவிக்காது விட்டால் எதிர்கால சந்ததி எம்மைத் தூற்றுமென மல்லிகை ஆசிரியர் டொமினிக் ஜீவா என்னிடம் சொன்னார். பேராசிரியருடைய இந்த உயர்ச்சிக்கு அவரது குடும்பமே காரணமெனலாம்.

**அறிமுகவுரை:**
**எஸ். எச். எம். ஜெமீல்**
**(முன்னாள் மேலதிகச் செயலாளர், சமய - கலாசார அலுவல்கள் அமைச்சு)**

இது எனக்குக் கிடைத்த பெரும் பாக்கியம் என்பேன். ஞானம் சஞ்சிகையின் 84 ஆவது இதழான இச்சிறப்பு மலர் பேராசிரியரின் பவள விழா மலராக வெளிவந்துள்ளது. இதில் 16 கட்டுரைகள் உண்டு. அவைகள் பேராசிரியர் கா.சிவத்தம்பியின் தமிழ் சார்ந்த பன்முகப் பணிகள்; வேறுபட்ட பார்வைகள் ஆகியவற்றைக் கொண்டிருக்கின்றன. நவீன மரபு, பண்பாடு, தொடர்பாடல் குறித்த ஆய்வுகளைப் பேராசிரியர் செய்துள்ளார். அவர் இயற்றிய தமிழ் நூல்கள் 35. ஆங்கிலத்தில் பதினொன்று.

அவரது மாணவ, ஆசிரிய காலங்கள், ஆய்வுகள் என்பன விஸ்தாரமாகச் சொல்லப்பட்டுள்ளன. அவருக்கு இராசையா என்ற செல்லப் பெயர் இருந்திருக்கின்றது. எம்.ஏ.எம்.சமீம் பேராசிரியர் கா.சிவத்தம்பியை சாஹிராவில் கண்டவுடன் அசந்து விட்டாராம். அனைத்து மாணவரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீருடையோடு காணப்பட பேராசிரியர் வேஷ்டி சால்வையோடு காணப்பட்டாராம். அப்போது அக்கல்லூரியின் அதிபராக இருந்த ஏ.எம்.ஏ.அஸீஸ் அதற்கு அனுமதி கொடுத்திருந்தாராம். 20 ஆம் நூற்றாண்டு தமிழ் இலக்கியங்களை மாணவர் அறியத் தூண்டினாராம். புதுமைப்பித்தன் கதைகளைப் படித்தீர்களா? எனக் கேட்டாராம். வானொலி நாடகங்களில் பேராசிரியர் நடித்தவர். தினகரன் தமிழ் விழாவில் அரங்கேற்றப்பட்ட நாடகத்தில் குலோத்துங்க சோழனாக நடித்த பொழுது உணர்ச்சி வசப்பட்டு நடித்து மேடையை உடைத்தாராம். ஆசிரியர் பணி செய்த பொழுது, தன்னிடம் கற்க வந்த மாணவர்களின் அறிவை பாடநூல்களுக்குள் அடைத்து வைக்காது, வெளியே அழைத்துச் செல்லவும் முயன்றிருக்கிறார். மகாவம்சத்தைத் தேடி வாசிக்கச் செய்துள்ளார்.

அக்கால கட்டத்தில் அதாவது பேராசிரியர், ஆசிரியப் பணி செய்த பொழுது - பழம் தமிழ் இலக்கிய நூல்கள் மலிவுப் பதிப்புகளாக வந்து கொண்டிருந்தன. கலிங்கத்துப் பரணியில் வரும் பாடல்களோடு "கார் குழலை" ஏன் வளர்த்தாய் என்ற சினிமாப் பாடலை ஒப்பிட்டுக் காட்டினார். வாரத்தில் ஒரு தடவை மாலை நேரத்தில் வானொலி நிலையத்துக்குக் கூட்டிச் செல்வார். நிகழ்ச்சி ஒலிபரப்பிய பின்னர் வானொலிக் கன்ரீனுக்கு அழைத்துச் செல்வார். அங்கே நாவுக்கினிய விருந்து கிடைக்கும். இந்த விருந்தை அனுபவிப்பதற்காக வானொலிக்குச் செல்லும் நாளை எதிர்பார்த்திருப்போம்.

பேராசிரியர் சிவத்தம்பி, அமரர் சு.வித்தியானந்தனின் முயற்சிகளுக்கு உறுதுணையாக இருந்துள்ளார். அண்ணாவிமாரைத் தேடி கிழக்கு மாகாணத்தின் ஒழுங்கைகளுக்குள் அலைந்துள்ளார். பேராசிரியரிடம் கற்காத பலர் அவரைத் தமது பிதாமகராக ஏற்று ஆலோசனைகளைப் பெறுகின்றனர். ஆறுமுக நாவலர், சுவாமி விபுலானந்தர், அல்லாமா எம்.எம்.உவைஸ் ஆகியோர் தமிழகத்தின் கௌரவத்தைப் பெற்றவர்கள். உவைஸ் தமிழை எஸ்.எஸ்.சி.வரை படிக்கவில்லை. பாளி, சிங்களம், ஆங்கிலம் ஆகிய மொழிகளையே கற்றறிந்தார். இருந்தும் உவைஸும் பேராசிரியருக்குக் கற்பித்துள்ளார். சிவத்தம்பியொரு தமிழ் இயல் பேராசிரியர். அவர் தமிழ் பேசும் சமுதாயத்துக்குப் பல சாதனைகளை விட்டுச் செல்வார். மார்க்சிய கோட்பாட்டுக்கான அவரது பங்குப் பணி பாரியது. தமிழ், கலை, இலக்கியத்துக்கு அவர் ஆற்றி இருக்கும் பணி வியப்புக்குரியது. தனது நூலொன்றைத் தனது ஆசான் ஏ.எம்.ஏ.அஸீஸுக்குச் சமர்ப்பணம் செய்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராசிரியர் மனிதர்களை எப்படிப் புரிந்து கொள்வதென்பதைக் கற்றுத்தந்தார். இலவசக் கல்வியின் தந்தையான சி. டபிள்யு. டபிள்யு. கன்னங்கரா மூளை, இருதயம், கை என்பவற்றை அபிவிருத்தி செய்வதற்கான கல்வியைத் தான் சிபார்சு செய்தார். இன்றைய கல்வியின் மூலம் எமது பிள்ளைகள் தலையைத் தான் அபிவிருத்தி செய்கின்றனர்.

பேராசிரியர் பண்பைக் கற்றுத் தந்தார். இந்த மலர் ஓர் அருமையான ஆவணம். இன்னும் அரை நூற்றாண்டுக்குப் பின்னர் நிச்சயமாகக் கற்போர் இதை தேடுவர்.

இன்றைய இளைஞர் மத்தியில் வாசிக்கும் பழக்கம் அருகிவிட்டது. வளர்ந்தோர் மத்தியிலும் இத்தகைய நிலையே இருக்கின்றது. வேலைப்பளு, வாழ்க்கைப் போராட்டம் இவைகளே இதற்கான காரணங்கள்.
அக்காலத்தில் நாம் கமக்கட்டுக்குள் புத்தகங்களை வைத்துக் கொண்டு பாடசாலை செல்வோம். இன்றோ 15 வயதுச் சிறுவன் 8 கிலோ புத்தகப் பையைக் காவுகிறான். அவன் இருந்து படிக்கக் கிடைக்கும் ஆசனத்தின் முக்கால் பகுதியைப் புத்தகப்பை பிடித்துக் கொள்கிறது. பாடசாலை முடிந்ததும் 7 மணிக்கு ஹோம்வேக்கை பிள்ளைகளுக்காக பெற்றோர்கள் செய்கின்றனர். நாடுகளின் தேசியக் கொடிகளை ஒட்டும் படி மாணவர்களைக் கேட்கின்றனர். இவைகளுக்கான மாற்றம் ஒருநாள் வரும்.

இது போன்ற பணிகளை ஞானசேகரன் தம்பதி தொடர்ந்து செய்ய வேண்டும். விக்னேஸ்வராக் கல்லூரி பழைய மாணவர் வே.விமலராஜா சுண்டிக்குளத்தில் பேராசிரியரோடு நீந்தியதை பற்றிக் கூறினார். - அதை இப்பொழுது செய்திருந்தால் எப்படி இருக்கும் எனக் கற்பனை செய்து பார்த்தேன்; விமலராஜா முதல் குதிக்கத் தொடர்ந்து பேராசிரியர் குதித்திருந்தால் விமல்ராஜா நீருக்குள் அமிழ்ந்திருப்பார்.

அடுத்து ஞானம் சஞ்சிகை ஆசிரியர் பேராசிரியருக்கு உருக்கமான வேண்டுகோளொன்றை விடுத்தார். பேராசிரியருக்கு அவரது அபிமானிகள் இன்னொரு விழா எடுப்பதாகில் அது முத்து விழாதான். அதற்கு இன்னமும் ஐந்து ஆண்டுகள் காத்திருக்க வேண்டும். இந்த விழாவில் பேராசிரியரை கௌரவிக்கப் பலர் விரும்புகின்றனர். அவர்களது உணர்வுகளைப் பேராசிரியர் மதிக்க வேண்டுமென்பதே அவ்வேண்டுகோள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*இதன் பின்னர் தி.ஞானசேகரன் தம்பதி, பூ. ஸ்ரீதரசிங் தம்பதி, வீ.ஏ.திருஞானசுந்தரம், கொழுந்து ஆசிரியர் அந்தனி ஜீவா, எழுத்தாளர் பொன்னுத்துரை ஆகியோர் பொன்னாடை போர்த்தியும் மலர்மாலை அணிவித்தும் பவள விழா நாயகரைக் கௌரவித்தனர்.*

*பூபாலசிங்கம் புத்தகசாலை அதிபர் பூ.ஸ்ரீதரசிங், சேமமடு பொத்தகசாலை அதிபர் சதபூ. பத்மசீலன் ஆகியோர் "பேராசிரியர் கா. சிவத்தம்பி பவள விழா மலர்" ; முதல் பிரதியைப் பெற்றனர்.*

**ஏற்புரை:**
**பேராசிரியர் கா. சிவத்தம்பி**

இந்த விழா இத்தகைய வடிவத்தை எடுக்குமென நான் நினைக்கவில்லை. அடக்கமாகக் குறைந்த பட்ச நிலையில் நடாத்துமாறு கேட்டிருந்தேன். தில்லைக்கு நன்றிக்கடன் பட்டுள்ளேன். வித்யோதயவின் உதவி விரிவுரையாளர் பதவிக்கு விண்ணப்பிக்கக் கோரி தில்லைநாதனே எனக்குக் கடிதம் எழுதினார். எனக்கு அக்கடிதம் கிடைத்திருக்காது விட்டால் எனக்கு பல்கலைக்கழக உறவு கிடைத்திருக்காது. அது எனக்குத் தில்லை செய்த மாபெரும் உதவி. எமது தலைமுறையைச் சேர்ந்தவர்கள் இப்பொழுது இல்லை. எமது தலைமுறையில் நானும் சமீமும் மிஞ்சி இருக்கிறோம். கைலாசபதி, செல்வநாயகம், கணபதிப்பிள்ளை ஒரே தலைமுறையைச் சார்ந்தவர்கள்.

நான் கைலாசபதியின் சிந்தனைகளுக்குக் கருத்து வேறுபாடு காட்டி வருவதாகக் கூறுவது எனக்கு வேதனையைத் தருகின்றது. நாங்கள் தேடல்களை மேற்கொண்டோம் . கைலாஸ் ஒப்பியல்வாதி. கருத்து வேறுபாடுகளிலும் நாங்கள் ஒற்றுமை கொண்டோம். கைலாசின் அறிவியல் பரப்பு வித்தியாசமானது.

நான் வாழ்ந்து கொண்டிருப்பதைக் குறித்து சந்தோஷப்படுகிறேன். கைலாஸ், கணபதிப் பிள்ளை இருந்திருந்தால் எனக்கிந்த மரியாதைகளும், கௌரவங்களும் கிடைத்திருக்காது. நாங்கள் வந்த பின்புலத்தால் தமிழைத் தமிழியலைப் பார்க்கும் நிலை ஏற்பட்டது. விமலராசா விக்னேஸ்வராக் கல்லூரியின் பழைய மாணவத் தலைவர். ஜமீல் சாஹிரா கல்லூரி மாணவர். எனது ஆளுமை விருத்தி முக்கியமாக இடம்பெற்ற, சாஹிராவே என்னை வாழ்த்த வேண்டும். 75 வயதில் எதிர்பாராத வகையில் என்னைப் பற்றிய மதிப்பீடுகள் வந்து கொண்டிருந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத்து இலக்கிய வளர்ச்சிக்கு முக்கியமானது ஒரு ஒட்டுமொத்தமான தமிழ் வளர்ச்சியின் தெளிவு. அந்தப் பார்வையை இழந்து விடக்கூடாது. முற்போக்கு வாதம் காலத்தோடு மாறும். 1950 இல் இருந்தது தான் 2007 இலும் இருப்பதாகக் கூறினால், அது முற்போக்கு மார்க்சியத்துக்கு முரணானது. எமது கவிதைத் துறையில் மாற்றம் ஏற்பட்டிருக்கின்றது. நாம் தமிழகத்துக்கு முன் உதாரணமாகிறோம். அடுத்த படிக்கான முன்னெடுப்பில் தெளிவு வேண்டும். நடப்பதை விளங்க வேண்டும். இதைப் பற்றிய சிந்திப்புகள் நிறைய வேண்டும். கவிதையில் இது உண்டு. சரிகளைச் சரியென ஏற்கும் மனப்பான்மை வேண்டும். பிழைகளைப் பிழையெனக் கூறும் துணிவு வேண்டும். இலக்கிய வளர்ச்சிக்கு இது தான் உதவும். இப்போக்கை வளர்க்க மல்லிகை, ஞானம் உதவ வேண்டும். மல்லிகை சஞ்சிகையை அகற்றிவிட்டு ஒரு போதும் எமது விமர்சன வரலாற்றை எழுத முடியாது.

- 20.11.2007

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3

## சுபைர் இளங்கீரன்: இனிய நினைவுப் பகிர்வு

**வ**ட இலங்கையில் மார்க்சிய வித்துக்களை ஊன்றியவர்களுள் ஈழத்தின் முன்னோடி மார்க்சியக் கதைஞர் சுபைர் இளங்கீரனின் பங்களிப்பும் முன்னரங்கில் நிறுத்திப் பேசப்பட்டது. அத்தோடு, ஈழத்து முஸ்லிம் இனத்தின் மார்க்சியப் பங்களிப்புக்கும் இது சான்றாக இன்றும் இருக்கின்றது.

சொற்பொழிவுகளினூடாகவும் படைப்பிலக்கியத்தினூடாகவும் இளங்கீரன் இச்சாதனையை நிறுவினார். அன்று பிரபல மார்க்சியவாதிகளாகத் தடம்பதித்த தோழர்கள் மு.கார்த்திகேசன், பொன்.கந்தையா, வி.பொன்னம்பலம் ஆகியோரோடு ஒரே மேடையில் தோன்றி அரசியல், இலக்கியச் சொற்பொழிவுகளை நிகழ்த்தினார். இவரது சொற்பொழிவுகள் தெளிவும் ஜனரஞ்சகமுடையவையாக, வெகுஜனக் கவர்ச்சியைக் கொண்டிருந்தன. இதனால் அடித்தட்டு மக்களும் இவரது பேச்சை விரும்பிக் கேட்டனர். அவர்களது பார்வையை மார்க்கசியத்துக்கு இழுக்க இச்சொற்பொழிவுகள் உதவின. சுபைர் இளங்கீரன் 'இளங்கீரன்' என்ற நாமத்தில் அன்று நாடு போற்றும் எழுத்தாளராகவும் பிரகாசித்தார். இன்றைய பாஷையில் கூறுவதாகில் 'மெகா' எழுத்தாளர். கட்டுரை, நாவல், நாடகம் என்பவற்றில் அவர் தனது தனித்துவத்தை நிறுவினார். இது தமிழக இலக்கியவாதிகளுக்கும் அச்சுறுத்தலாக இருந்தது.

இன ஒருமைப்பாடு, மானுட நேயம், சாதியம், வர்க்கம் என்ற வாழ்வின் கூறுகளில் ஆழ ஊடுருவி, தான் வாழ்ந்த காலத்தின் வாழ்வின் அவலங்களையும் அலங்கோலங்களையும் படைப்புக்களில் பதித்தார். இவரது எழுத்துக்கள் மேற்கோள்களுக்கு உதவக் கூடியவையாகவும் சற்றுச் சுலோகத்தன்மை கொண்டவையாகவும் இருந்தன. நாவலாசிரியர்களான மு.வரதராசன், நா.பார்த்தசாரதி(மணிவண்ணன்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன்முடி) ஆகியோரது எழுத்து நடையின் சாயலையும் பெற்றிருந்தன. ஆனால் தொனிப்பொருளில் இவர்களிடமிருந்து விலகியே எழுதினார்.

தினகரன் பத்திரிகையில் இளங்கீரன் எழுதிய நாவல்கள் வாசகரின் அமோக வரவேற்பைப் பெற்றதுண்டு. அப்பத்திரிகையின் நகர்விற்கும் உந்து சக்தியாக உதவிற்று. இவரது புனைவுகள் குறுகிய எல்லைகளைத் தாண்டி சர்வதேசங்களில் வாழ்ந்துகொண்டிருக்கும் தமிழ் பேசும் மக்கள் வாசித்துச் சுவைக்கக் கூடியவையாக இருந்தன. கதை மாந்தரின் பேசு மொழியிலும் பிரதேச அடையாளம் அழுத்தமாக இருக்கவில்லை. இவரது படைப்புக்களில் இத்தன்மை செறிந்திருக்கக் காரணம் இவர் மலேசியா, தமிழகம், இலங்கை ஆகிய முத்தேசங்களில் வாழ்ந்ததாக இருக்கலாம். அத்தோடு தேசிய இலக்கியக் கொள்கையும் பின்புலமாக இருந்தது. இளங்கீரன் இறக்கும்வரை அசல்கொம்யூனிஸ்டாகவே வாழ்ந்தார். இவரது எளிமையான வார்ப்பு இவரை மக்கள் நெஞ்சங்களில் ஆழமாகப் பதித்தது. ஆரம்பத்தில் தையல்காரராகவும் இருந்ததாக அறியப்படுகிறது. 'மரகதம்' என்ற சஞ்சிகையின் ஆசிரியராக இருந்தவர். இவருக்கு உதவியாக ராமநாதன் (சுருட்டர்) இருந்தார். இச்சஞ்சிகையின் பணிமனை கொழும்பு 13, புனித அந்தோனியார் வீதியில் (தம்பையா சத்திரத்துக்கு அருகே) இருந்தது.

ஈழத்து இலக்கிய உலகு இன்று இருப்பெடுப்புகளில் உரத்த அக்கறை காட்டிவருவதைக் காணமுடிகின்றது. இதில் முற்போக்காளரது கரிசனை அதி உச்சமாக இருக்கின்றது. இந்த அலைக்குள் இளங்கீரனும் இனங் காணப்பட்டுள்ளார். சென்ற 22.12.2007ஆம் திகதி கொழும்பு, தமிழ்ச்சங்க மண்டபத்தில் "சுபைர் இளங்கீரன் நினைவுப் பகிர்வுகள்" என்றோர் நிகழ்வு நடைபெற்றது. இந்நிகழ்வுக்கு இலங்கை தேசிய நூலக அபிவிருத்திச் சபை, அனுசரணையாக இருக்க கவிஞர் ஜின்னாஹ் ஷரிபுத்தீன், எழுத்தாளர் இலக்கியவாதி சுதாராஜ் ஆகியோர் அமைப்பாளர்களாக விளங்கினர். பிரதம அதிதியாகக் குணசேன விதகன அழைக்கப்பட்டிருந்தார்.

கலை, இலக்கியப்பிரமுகர்கள் மங்கள விளக்கேற்றித் தொடக்கி வைத்த இந்நிகழ்வில் கொழும்பு தமிழ்ச் சங்கத்தின் ஆட்சிக்குழு உறுப்பினர் எழுத்தாளர் பத்மா சோமகாந்தன் தமிழ் வாழ்த்துப்பாடினார்.

எழுத்தாளர் தில்லை நடராசா (மேலதிகச் செயலாளர், கல்வி அமைச்சு) தலைமை தாங்கினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வரவேற்புரை:**
**கவிஞர் ஜின்னாஹ் ஷரிபுத்தீன்**

படைப்பாளிகள் படைப்பு வாழும்வரை மட்டுமே சமூகத்தில் நிலைத்திருப்பர். தமிழ்த் தொண்டர்களோவெனில் தமிழ் வாழும் வரை பேசப்படுவர். தமிழ் மொழிக்குச் சேவை செய்த சுபைர் இளங்கீரனுக்குச் சிங்கள இனத்தவரான குணசேன விதான விழா எடுத்திருப்பது வித்தியாசமாக இருக்கின்றது. இருபதுக்கும் அதிகமான நாவல்களைப் படைத்தவர் சுபைர் இளங்கீரன்; உலகளாவிய ரீதியில் அறியப்பட்டவர். சிறந்த கட்டுரையாளர், விமர்சகர். இவரது நாவல்களை வெளிநாட்டவரும் வாசித்தனர். இவரது நாவல்கள் தினகரனில் வெளிவந்த பொழுது வாசகர்கள் காத்திருந்து பெற்றுப்படித்தனர்.

**தலைமையுரை:**
**தில்லை நடராசா**

இருமொழிகளைப் பேசும் மூவின மக்கள் மத்தியில் உரையாற்றும் இந்த வாய்ப்பானது மிக அருமையானது. இளங்கீரனுக்கு அவர் படைத்த நாவல்களும் வானொலி நாடகங்களும் புகழை ஏற்படுத்தின. தனது உன்னதமான படைப்புக்களால் அவரொரு இந்திய எழுத்தாளரோவென வாசகரை எண்ணவைத்தவர். ஐம்பது, அறுபதுகளில் வெற்றிடமேற்படாத வகையில் ஈழத்து எழுத்தாளரின் தொடர்ச்சியைப் பேணிக்காத்தவர். அதிர்ஷ்டமற்ற, ஒதுக்கப்பட்ட மக்களின் வாழ்வின் நகர்வை உயிரோட்டத் தோடு சித்திரித்துக் காட்டியவர். அவரது படைப்புக்கள் வாசகனுக்குப் பல தகவல்களைக் கடத்தின. அவரது படைப்புக்களில் "நீதியே நீ கேள்", "அவளுக்கொரு வேலை வேண்டும்" என்பவை சிறந்தவை.

பொது நிருவாக அமைச்சர் அண்மையில் ஒருவரையொருவர் புரிந்துகொள்ளும் பொருட்டுச் சிங்கள மக்கள் தமிழையும் கற்கவேண்டு மெனக் கூறியுள்ளார். எமக்குள் நிலவும் பல பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ள இது உதவுமெனவும் கூறி இருக்கிறார். இது வரவேற்கத்தக்க ஆலோசனை. 1994ஆம் ஆண்டு தோழர் குணசேன விதான 'நிர்வாணம்' என்ற எனது தமிழ்க் கதையைச் சிங்கள மொழியில் வெளியிட்டார். இந்நூல் இரண்டாவது பதிப்பையும் கண்டது. சிங்கள எழுத்தாளர் சுரங்கவின் புத்தகமும் தமிழில் வெளியிடப்பட்டது. வெளியீட்டாளராகக் கொடகே செயல்பட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமது இலக்கிய வழிமூலம் படைப்பாளிகள் அரசியல் வாதிகளுக்கு முன் மாதிரியாக இருக்கவேண்டும். பதவிகள் தற்காலிகமானவை. ஆனால், படைப்புகள் நிரந்தரமானவை. இச்சமயத்தில் ஒரு நிகழ்வைச் சொல்லவேண்டி இருக்கின்றது. கடந்த காலத்தில் சுமைதாங்கிகள், பொதுக்கிணறுகள், ஆவுரஞ்சிக் கற்கள் என்பவற்றைப் பொதுமக்களின் வசதிக்காக அரசாங்கம் சில பொது இடங்களில் நிர்மாணித்திருப்பதை இன்றும் பார்க்கலாம்.

இப்படியான பொது நலனுக்காகப் பொதுக்கிணறொன்றை உருவாக்கும்படி ஏஜிஏ ஒருவர் ஒப்பந்தகாரரொருவருக்குப் பொறுப்புக் கொடுத்திருந்தார். ஒப்பந்தக்காரர் பணத்தைப் பெறும் நோக்கோடு தோண்டிய கிணற்றில் தண்ணி காணும் முன்னர் தண்ணீர்ப் பம்ப்பால் தோண்டிய கிணற்றுக்குள் நீரை இறைத்து நீர் ஊறிவிட்டதென ஏஜிஏ யைக்கொண்டு வந்து காட்டி உரிய பணத்தைப் பெற்றுக்கொண்டார். கொஞ்ச நாளில் இந்த ஏமாற்று, ஏஜிஏக்கு கசிந்து விட்டது. அப்பொழுது இன்னொரு பொதுக் கிணற்றுக்கான வேலைகளும் நடந்துகொண்டிருந்தன. பணத்தைக் கோரியபொழுது முன்னைய அனுபவத்தை மனதில் கொண்டு உண்மையை அறிவதற்குப் பொதுக்கிணறு தோண்டப்பட்ட இடத்துக்குச் சென்றார். நீரைப் பார்ப்பதற்காகக் குனிகையில் ஏஜிஏ தவறிக் கிணற்றுக்குள் விழுந்துவிட்டார். அங்கு நின்றவர்கள் கிணற்றுக்குள் விழுந்த ஏஜிஏயை வெளியே தூக்கி எடுக்கின்ற பொழுது ஒருவன் கடிதமொன்றுடன் ஓடிவந்து அதை ஏஜிஏயிடம் கொடுத்தான். அக்கடிதத்தை வாசித்தபொழுது சம்பந்தப்பட்ட ஏஜிஏ அப்பிரதேசத்திலிருந்து மாற்றப்பட்டிருப்பதான பணிப்புரை காணப்பட்டது. இது தான் அரச அதிகாரிகளின் நிலை. ஆனால் படைப்பாளிகளுக்கான நிலை ஸ்திரமானது. அதனால் தான் இன்று நாவலாசிரியர் இளங்கீரனை நினைவு கூருகிறோம். எனவே, நாம் படைப்பாற்றலை ஊக்கப்படுத்த வேண்டும். சிங்கள, தமிழ் வேற்றுமை அற்ற காலமொன்று உருவாகும். அதற்கு வழிகாட்டப் போகிறவர்கள் படைப்பாளிகள் தான்.

**கருத்துரைகள்:**

**தம்பு சிவசுப்பிரமணியம் (இலக்கிய விமரிசகர்)**

சிறப்பான வரலாற்றுப் பதிவுகளை இளங்கீரன் ஏற்படுத்தியவர். மரபை எதிர்த்து தேசிய இலக்கியத்தை முன்னெடுத்து உழைத்தவர். முற்போக்கு இலக்கியத்துக்கு உந்து சக்தியாகக் கைகொடுத்தவர். சோஷலிச யதார்த்தவாதத் தத்துவத்தை அவர் தனது இறுதி மூச்சாகக் கொண்டிருந்தார். சமூக, அரசியல் முன்னேற்றத்தில் கரிசனை காட்டினார். அவரது சொல்லும் எழுத்துக்களும் அவர் வாழ்ந்து கொண்டிருந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமுதாயத்தைப் பிரதிபலித்தன. உயர்ந்த வாழ்க்கைத்தரத்தை எட்டும் விமோசனத்துக்கான சரியான பாதையைச் சுட்டிக்காட்டி இலக்கியம் படைத்தார். சாதி அமைப்பு, பெண்ணடிமைத்தனம் போன்றவற்றைச் சாடினார்.

இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் 1954.10.25 ஆம் திகதி முன்வைத்த இலக்கிய வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு தனது உழைப்பை அர்ப்பணித்தார். ஈழத்து இலக்கியப் பரப்பில் 1961,1962 களில் அனலாய்க் காய்ந்த மரபுப் பேராட்டம் குறிப்பிடத்தக்கது. அதில் இளங்கீரன் காட்டிய அக்கறை இமயமானது. யாழ்நகர மண்டபத்தில் 1961ஆம் ஆண்டு சாகித்திய விழா நடைபெற்ற பொழுது முற்போக்குக் கொள்கைகளைக் கொச்சைப்படுத்தி மரபுவாதிகள் எள்ளி நகையாடினர். இளங்கீரன் துணிந்து மேடையேறி முற்போக்கு இலக்கியம் செழுமையானது; சமூக அக்கறை கொண்டதென வாதாடினார். நிரூபித்துக் காட்டினார். அதன் பின்னர் முற்போக்குக் கொள்கைகளும் கொள்ளத் தக்கவையெனத் தலைவர் ஒப்புக் கொண்டு பேசினார். முற்போக்கின் எழுச்சிக்கு இளங்கீரனின் பங்குப் பணி பாரியது. 1950 களிலிருந்து 1970கள் வரை முற்போக்கு அணிக்காக மும்முரமாக உழைத்தார். அவரது நாடகங்களும் தகவல்களும் சமூக மாற்றத்துக்கான சமிக்ஞைகளை அடையாளமிட்டன.

இந்திய நூல்களுக்கான தடையை வரவேற்றார். அவை ஈழத் தமிழரைப் பிரதிபலிக்கவில்லையெனச் சுட்டிக்காட்டினார். புதியபாதையை நோக்க வேண்டிய விழிப்பை ஏற்படுத்தினார். இதனால் "தேசியம்" என்ற சொல்லின் வருகை ஈழத்து இலக்கியத்துக்குக் கிடைத்தது. 1960 இல் தேசிய இலக்கியத்தை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் பிரகடனம் செய்தது. 1961 இல் இளங்கீரன் "மரகதம்" என்ற மாசிகையை வெளியிட்டார். தேசிய இலக்கியம் குறித்த முதல் கட்டுரையை இதில் பேராசிரியர் க.கைலாசபதி எழுதினார்.

இளங்கீரனின் முதலாவது நாவல் "நீதியே நீ கேள்". "அவளுக்கொரு வேலை வேண்டும்" நாவலின் மூலம் வெகுஜன வாசகரது செல்வாக்கைச் சுவீகரித்தார். இவரது இலக்கியப் பயணம் பேராசிரியர் க.கைலாசபதியின் வழியில் சென்றதென்பதில் உண்மையுண்டு.

## டொமினிக் ஜீவா (மல்லிகை ஆசிரியர்)

அவரது இலக்கியப் பெயர் இளங்கீரன். ஆரம்பத்தில் மலேசியாவில் வாழ்ந்தவர். இந்தியாவில் வாழ்ந்த சிறிது காலம் திராவிட முன்னேற்றக் கழகத்தோடு ஐக்கியமாகிக் கட்டுரைகள் எழுதினார். அன்று மிகப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரபலமாக விளங்கிய வீரகேசரி நிருபர் செல்லத்துரையோடு இளங்கீரனின் வதிவிடம் சென்று அவரைச் சந்தித்தேன். கருத்து ஒற்றுமை இருவரையும் ஐக்கியப்படுத்தியது. கூட்டமொன்றை ஒழுங்கு செய்தோம். இளங்கீரனும் ஒத்துழைத்தார். மரபுவாதிகள் தமது அயோக்கியத்தனத்தை அரங்கேற்றினர். வெளிச்சமிட்டுக் கொண்டிருந்த பெற்றோமக்ஸ் விளக்குக்கு கற்களை வீசி அதை நொருக்கினர். இருந்தும் இருட்டுக்குள் கூட்டத்தை நடாத்தி முடித்தோம். சிறிது நாட்களின் பின்னர் பிரமுகர்கள் குலக் கொடுமைகளை அம்பலப்படுத்த வேண்டாமெனத் தூது வந்தனர். இருந்தும் அதே இடத்தில் மீண்டுமொரு கூட்டம் ஏற்பாடு செய்து முற்போக்குக் கருத்துக்களைப் பரப்பினோம். சிங்களக் காடையர்களின் எதிர்ப்புக்கு மத்தியில் கண்டியில் கூட்டம் நடாத்தினோம். எமது வாழ்வு பேனாவின் வாழ்வு. இளங்கீரன் முஸ்லிம் அல்ல, தோழன். அதுபோல் குணசேன விதானவும் எமது தோழன். இன்று மூவினத் தோழர்களும் ஒன்றிணைந்து விழா எடுக்கின்றோம். முஸ்லிம் மக்கள் பிற்படுத்தப்படவில்லை. அவர்களும் இந்நாட்டின் மக்கள்.

1956 இல் செ.கணேசலிங்கனின் ஒரேயொரு சிறுகதைத் தொகுப்பு மட்டும் வெளிவந்தது. ஆனால், இன்றோ கிழமைக்கு நான்குக்கும் அதிகமான இலக்கிய நூல்கள் பதிப்பாகி அறிமுக விழாக்கள் நடைபெறுகின்றன. சந்தோஷந்தான். ஆனால் இவைகளுக்குச் சந்தை வாய்ப்புக் கிடைப்பதில்லை. அலுமாரிகளிலும் பெட்டிகளிலும் அடுக்கி வைக்கப்பட்டுள்ளன. இதுதான் இலக்கிய நெஞ்சங்களை வருத்துகின்றது. ஆர்வமிகுதியால் எமது படைப்பாளிகள் ஐம்பதாயிரத்துக்கும் அதிகமான பணத்தை இந்நோக்கத்திற்காக முடக்குகின்றனர். எமது நூல்களுக்கு இக்கதியிருக்க எமது புத்தகச் சந்தையில் அருவருப்பான தமிழக நூல்கள் கொட்டப்படுகின்றன. நுகர்வோரது செல்வாக்கையும் பெறுகின்றன. எமது வாசகருக்கு ஏற்பட்டிருக்கும் இந்நிலையை யார் தடுப்பது? எமது ஆயுதம் பேனா தான். எமது இலக்கியப் பயணத்தில் எம்மோடு ஒன்றிணைந்து உழைத்த இளங்கீரனுக்கு முற்போக்கு எழுத்தாளராகிய நாங்கள் கூட்டம் ஒழுங்கு செய்யாத போதும் இலங்கை தேசிய நூலக அபிவிருத்திச் சபை பெருவிழா எடுத்திருக்கிறது. அதுதான் இளங்கீரனின் வெற்றி.

### சோக்கெல்லோ சண்முகம்

1991 ஆம் ஆண்டில் நடைபெற்ற எனது "கவிராசன் கதை" என்ற நூல் வெளியீட்டு விழாவுக்குத் தலைமை தாங்குவதற்குப் பொருத்தமான ஒருவரைத் தேடினோம். ஏற்பாட்டுக் குழு ஒருமுகமாக இளங்கீரன் தான் பொருத்தமானவரெனத் தீர்மானித்தது. அவரையே அழைத்தோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்மதித்தும் இருந்தார். இருந்தும் நெஞ்சுவலி காரணமாக அவர் வரவில்லை. அப்பணியைத் தேசிய கலை இலக்கியப் பேரவையைச் சேர்ந்த சட்டத்தரணி சோ.தேவராசா நிறைவேற்றினார். இளங்கீரன் தலைமை தாங்காதது எனக்கு வேதனையாகவே இருந்தது. இந்தியச் சஞ்சிகைகளுக்குத் தடை வந்த பொழுது இளங்கீரனின் குரல் அதற்கு ஆதரவாகவே ஒலித்தது. பாலமென்றால் இரு வழியாக இருக்க வேண்டும். ஒரு வழிக் கலாசாரப் பாலமாக அது இருந்ததால் அதைத் தகர்க்கப் போராடினோம். ஈழத்துத் தமிழறிஞர் பண்டிதமணி கணபதிப் பிள்ளையின் நூலுக்கு கூடத் தமிழகத்தில் சந்தைப்படுத்த அனுமதி இல்லை.

அண்மையில் இலங்கையில் வெளியிடப்பட்ட "இருக்கிறம்" சஞ்சிகை பெயருக்கு ஏற்றாற் போல் அறைகளிலும் பெட்டிகளிலும் இருந்து கொண்டிருக்கிறது. தமிழகத்தின் வணிக சஞ்சிகைகளான ஆனந்த விகடன், குமுதம் என்பவைகளோடு ஒப்பிடும் பொழுது எமது "இருக்கிறம்" சஞ்சிகையில் என்ன குறைதான் காணப்படுகின்றது? எமது நாட்டவருக்கு எமதெழுத்தாளர்கள் கலைஞர்களைத் தெரியாது. ஆனால், தமிழகத்தவரை நன்கு தெரியும். இத்தயை போக்கை இளங்கீரன் மிகக் கடுமையாகச் சாடினார். யாழ். பல்கலைக்கழகத்தின் உருவாக்கத்திற்கு இளங்கீரனின் பங்களிப்பு பாரியது. இதன் திறப்பு விழாவன்று கறுப்புக்கொடி கட்டும் படியும் அன்று குரல் கொடுத்தனர். இத்தடைகள் அனைத்துக்கும் முகம் கொடுத்தே யாழ்ப்பாணத்தில் பல்கலைக்கழகம் நிறுவப்பட்டது. சகோதர மொழியைப் படிக்கக்கூடாதென்ற கருத்தை இளங்கீரன் நிராகரித்தார். வாழ்வை வளப்படுத்தக் கூடிய நல்ல கருத்துகளை மேடைப் பேச்சுகளிலும் படைப்புகளிலும் சொன்னார். கொம்யூனிஸ்ட் கட்சியின் உத்தியோகபூர்வமான இதழாகவிருந்த "தேசாபிமானி" யை ஜனரஞ்சகப்படுத்தினார். தனது நாவல்களில் சமுதாயத்தை வழிநடாத்தக்கூடிய நல்ல கருத்துக்களை சகலருக்கும் சொன்னார். அ.ந.கந்தசாமி, லத்தீப், இளங்கீரன் போன்றோர் எம்மோடு இணைந்து செயல்பட்டவர்கள். இலக்கிய பரப்பில் என்றும் மறக்கப்பட முடியாதவர் இளங்கீரன்.

**பிரதம அதிதி உரை:**
**குணசேன விதான (பிரபல இலக்கியவாதி)**

அக்காலத்தில் இந்நாட்டில் எழுத்தாளர்கள் மிகக் குறைவாகவே இருந்தனர். இலங்கையர் என்ற உணர்வோடும் நாம் செயற்பட வேண்டும். நூல்கள் மும்மொழிகளிலும் வெளிவர வேண்டும். எதிர்வரும் 2008ம் ஆண்டில் மும் மொழிகளிலும் சிறுவர் இலக்கிய நூல்களை வெளியிடத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திட்டமிட்டுள்ளோம். இதற்கான செயலமர்வு நடைபெற்ற பொழுது தமிழ் எழுத்தாளர்களிடமிருந்து எமக்குத் தேவையான ஆதரவு கிடைக்கவில்லை.

இளங்கீரனின் ஆக்கங்களைப் பாராட்டுகிறேன். இனித் தமிழ் எழுத்தாளர்களுக்காக நாம் எடுக்கப் போகும் விழா மூத்த முற்போக்கு எழுத்தாளர் கே.கணேசுக்கானதாகும். இவ்விழா வெற்றி பெற உங்கள் அனைவரது ஒத்துழைப்பையும் நாடுகிறேன்.

*இந்நிகழ்வில் இலக்கிய நூல் பொதிகள் சில பாடசாலைகளுக்கு அன்பளிப்பு செய்யப்பட்டன. பிரதம அதிதி குணசேன விதான பொதிகளை வழங்கினார். கொழும்பு விவேகானந்தா கல்லூரி, பம்பலப்பிட்டி புனித மரியாள் தமிழ் வித்தியாலயம், பம்பலப்பிட்டி முஸ்லிம் மகளிர் கல்லூரி, பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரி, கப்பிகாவத்தை தொண்டர் வித்தியாலயம் ஆகியன அழைக்கப்பட்டிருந்தன. சில கல்லூரிகள் வருகை தரவில்லை. கொழும்பு தமிழ்ச் சங்கமும் இலக்கிய நூல் பொதியைப் பெற்றது.*

## இளைய சந்ததிப் பேச்சாளர்

எனக்கு இளங்கீரனைத் தெரியாது. இவர் படைத்த நாவல்களின் பட்டியல் மிகவும் நீண்டது. நான் அவைகளில் எதையும் படிக்கவில்லை. ஆனால், அவரது கட்டுரைகளைப் படித்ததுண்டு. இளங்கீரன் காலத்தில் தேசிய சோஷலிச சார்பு அரசாங்கம் ஆட்சி நடாத்தியது. இந்திய வணிக நோக்கங்கள் கொண்ட நூல்களும் சஞ்சிகைளும் சினிமாப் புத்தகங்களும் இந்நாட்டுக்குள் வருவது மட்டுப்படுத்தப்பட்டது. அன்றொரு விசாலித்த வாகசர் வட்டம் இருந்தது. வாசிப்பதற்கு நல்ல விடயங்கள் கிடைத்தன. இப்படியான ஒரு காலத்தைத் தொடர்ந்தும் இருக்க வைக்க முற்பட்டவர் இளங்கீரன். இன்றைய இளைய சந்ததிகளுக்கு அவரொரு குறியீடுதான். காலத்துக்கு உகந்தவையாக இக்குறியீட்டிலிருந்து புதிய சிந்தனைகள் மலர வேண்டும். மரபுவாதிகள் ஏற்படுத்திய மாய வலைகளை அவர் தகர்க்க முயன்றார். வளர்ந்து கொண்டு போகிற மக்களைச் சேர்த்து நகர்வது, முற்போக்கு இலக்கியம்; சமுதாயம் முன் செல்ல உதவுகிறது. மரபை உடைத்து விடலாமென்பது சாதாரண விடயமல்ல. அதை வன்முறையால் தான் அடித்து உடைத்தனர். இன்று சமூக இலக்கியங்களைப் படைக்க முடியும். முந்திய தலைமுறையும் பாராட்டப்பட வேண்டியது. இன்றைய நிலையில் நாம் புத்தக உற்பத்தியாளர் அல்ல; வாங்குபவர்கள். இன்றைய முற்போக்காளர்கள் மாய வலைகளை உடைப்பவர்கள். நாம் முன்னோக்கி நகர முயல வேண்டும். புதிய தலைமுறைகளுக்கு ஒரு பொறியை ஏற்படுத்த வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பேச்சாளர் பேசும் பொழுது வருகை தந்திருந்த மாணவர்களை நோக்கி முற்போக்கு இலக்கியம் என்றால் என்ன? என்பதை விளக்க முடியுமா எனக் கேட்டார். கொழும்பு விவேகானந்தா கல்லூரியின் மாணவனொருவன் எழுந்து அதற்கான விளக்கத்தைக் கூறினான்.

## நாவலாசிரியர் திக்குவெல்ல கமால்

யாழ்ப்பாணத்து முஸ்லிம்கள் குறித்துப் பேசுவதாகில், அப்துல் காதர், எம்.எம்.சுல்தான், மக்பூல், ஏ.எம்.ஏ.அஸீஸ் ஆகியோர் குறித்துப் பெருமைப்படலாம். சந்தோஷப்படலாம். சுபைர் இளங்கீரன் 25 நாவல்களைப் படைத்துள்ளார். இதில் ஒன்றாவது யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த முஸ்லிம்களின் வாழ்வியல் பிரச்சினைகள் சம்பந்தமானவையாக இல்லை. தனது பிரபல நாவலான "நீதியே நீ கேள்" என்ற படைப்பில் அன்சாரி என்ற கதை மாந்தரொருவரை நடமாட விட்டுள்ளார். இதை எப்படிப் போதுமானதென ஏற்றுக் கொள்வது. இன்னமும் அந்தச் சகாப்தம் முடிவடைந்து விடவில்லை. இளங்கீரனின் படைப்புகள் குறித்தான மீளாய்வு மிகவும் அத்தியாவசியமானது.

## நன்றியுரை:
## சட்டத்தரணி சோ.தேவராசா

விழா அரங்கச் சுவரில் தொங்க விடப்பட்டிருக்கும் பதாகையில் "ஸ்ரீலங்கா" என்றிருக்கிறது. இது தவறு. தமிழில் "இலங்கை" என்று தான் இருக்க வேண்டும். தற்பொழுது தமிழ், சிங்கள உறவு, நூல் இழையில் தொங்கிக் கொண்டிருக்கின்றது. இளங்கீரன் யாழ்ப்பாண முஸ்லிம்கள் குறித்து எழுதவில்லையெனக் கமால் குற்றம் கண்டார். கொம்யூனிஸ்ட்டுகள் ஒடுக்கப்பட்ட மக்களுக்காகத் தர்மாவேசம் கொள்பவர்கள். அது மானுட தர்மம். ஒடுக்கப்பட்ட பொழுது இளங்கீரன் தானொரு முஸ்லிம் என்ற அடையாளத்தை மறைக்கவில்லை. பல்லினத் தேசியப் பண்பாட்டை ஆரம்பிக்க வேண்டுமென அமரர் ஏ.ஜே.கனகரத்னா சொன்னார். இலங்கை எங்கள் மண், நாம் இதைவிட்டு ஓட மாட்டோம். சிங்களத்தோடு சேர்ந்து தமிழையும் தேசிய மொழியாக்கச் சிங்கள மக்கள் போராட வேண்டும். இது சம்பந்தமாக இரண்டு, மூன்று நாள் ஆய்வரங்கு நடாத்தப்பட வேண்டும்.

*நிகழ்த்தப்பட்ட உரைகளை திருமதி.சகுந்தலா மனோகரன் தமிழிலும் சிங்களத்திலும் மொழி மாற்றம் செய்து பேசினார்.*

-05/07.01.2008

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4

## ‘அந்தரத்து உலவுகிற சேதி’, ‘மஹாகவியியல்’ நூல்கள் வெளியீடு

**ஸ்ரீ** பிரசாந்தன் என்றவுடன் கம்பன் கழகம் தான் மனதிலாடும். அதன் நடவடிக்கைகள் அத்தனையிலும் நனைந்து தோய்பவர். கவிச்சக்கர வர்த்தியின் புகழைக் கடல்கடந்தும் பரப்பிவருபவர். ‘இலக்கண வித்தகர்’ இ.நமசிவாய தேசிகரிடம் தமிழை முறையாகக் கற்றுத்தேர்ந்தவர். கவிஞர் சா.வே.பஞ்சாட்சரம் போன்ற தமிழ் ஆசிரியர்களது கற்பித்தலைப் பெற்றவர். கம்பவாரிதி இ.ஜெயராஜோடு தோழமை கொண்டு ‘‘கம்பன் அடிப்பொடி’’ ஆனவர். ஜெயவர்தன பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளர். கோப்பாய்ச்செம்மண் தமிழுக்குத்தந்த பண்பின் சிகரம். மரபு இலக்கியத்தின் உபாசகரான இவர் தற்பொழுது நவீன இலக்கியத்திலும் தனது ஆளுமையை நிறுவி வருகின்றார். “இருபதாம் நூற்றாண்டு ஈழத்துத் தமிழ்க் கவிதைகள்’’ என்ற நூலின் தொகுப்பாசிரியர்.

‘அந்தரத்து உலவுகிற சேதி’ என்ற தன் கவிதைத் தொகுப்போடு, தமிழுலகின் அங்கீகாரத்தைப் பெற்ற கவிஞர் மஹாகவி குறித்து எழுதப்பட்ட கட்டுரைகளைத் தேடிச் சேகரித்து ‘மஹாகவியியல்’ என்ற தொகுப்பாக்கி வெளியிட்டுள்ளார். ‘இருநூல்கள் அரங்கேற்றம்’ என்ற இந்நிகழ்வு 18.01.2008 இல் கொழும்பு தமிழ்ச்சங்க மண்டபத்தில் நடைபெற்றது. பெருந்திரளான மக்கள் வந்திருந்தனர்.

பேராசிரியர் மா.செ.மூக்கையா தலைமை தாங்கினார். ஸ்ரீ பிரசாந்தனுக்கு கம்பரசத்தைச் சுவைக்க வைத்த கம்பவாரிதி இ.ஜெயராஜ், ஆசிரியரும் அதிபருமான கனகசபை ஆகியோர் மங்கள விளக்கேற்றினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரி. கருணாகரன் கடவுள் வாழ்த்தும் தமிழ்த்தாய் வாழ்த்தும் பாடினார்.

பேராசிரியர் மூக்கையா,'தினக்குரல்' நிறுவகர் எஸ்.பி.சாமி, பேராசிரியர் திஸ்ஸ காரியவாசம், மல்லிகை ஆசிரியர் டொமினிக் ஜீவா, எஸ்.சிவகுமார்(யூ.கே.ஈ. அதிபர்),ஞானம் ஆசிரியர் தி.ஞானசேகரன், திரு.ரி.கருணாகரன், கவிஞர் ஜின்னாஹ் ஷரிபுத்தீன், கிருஷ்ணமூர்த்தி ஐயர், பூ. ஸ்ரீதர்சிங்(அதிபர், பூபாலசிங்கம் புத்தகசாலை) ஆகியோர் இந்நிகழ்வில் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டனர். நூல் வெளியீட்டு நிகழ்வில் 'அந்தரத்து உலவுகிற சேதி'என்ற நூலை பேராசிரியர்.திஸ்ஸ காரியவாசத்திடமிருந்து தினக்குரல் பத்திரிகை நிறுவகர் எஸ்.பி.சாமி பெற்றார். 'மஹாகவியியல்' என்ற நூலைப் பேராசிரியர்.மா.செ.மூக்கையாவிடமிருந்து யூ.கே.ஈ.அதிபர் எஸ்.சிவகுமார் பெற்றார். இதே நூலை மஹாகவியின் மகள் ஔவை விக்கினேஸ்வரனின் மருமகன், பூ.ஸ்ரீதர் சிங்கிடமிருந்து பெற்றார்.

**தலைமையுரை:**
**பேராசிரியர் மா.செ. மூக்கையா**

பல பிரச்சினைகள் மத்தியில் தமிழ் மக்கள் அல்லற்பட்டுக்கொண்டிருக்கும் இக்காலத்தில் இத்தகைய நிகழ்வுகள் அவர்களுக்கு ஒத்தடம் கொடுப்பவை. நானொரு இலக்கியவாதி அல்ல. இதழியல் கல்லூரிப் பணிப்பாளர் ஆ.சிவனேசச்செல்வன், கம்பவாரிதி இ.ஜெயராஜ் ஆகியோரது சேர்க்கையால் எனக்கும் இலக்கிய அறிவு வந்து சேர்ந்துவிட்டது. நூல் வெளியீடானது கல்வி சார்ந்த புற நடவடிக்கையாகும். இப்பொழுது பல்கலைக் கழகங்களுக்கு வெளியேயும் நல்ல நிகழ்ச்சிகள் நடக்கின்றன. அந்தந்தத்துறை சார்ந்தவர்களே அவைகள் பற்றிக் கருத்துக் கூறவேண்டும். இலக்கியவாதிகளை ஏற்றுக்கொள்வது பல்கலைக்கழகங்களின் பணி. பிரசாந்தன் மரபு இலக்கியவாதி என இனங்காணப்பட்டவர். இன்று தன்னை நவீன இலக்கியவாதியாக இனம் காட்டுகிறார். போர் அல்லல்களை உணர்ந்து கவிதை பாடி இருக்கிறார். குற்றம் குறைகளை எடுத்துச் சொல்லும் ஆண்மை பிரசாந்தனிடம் உண்டு.

அவரது இலக்கியத்துக்கு அடிப்படை மரபின் பலம் தான். மனித உணர்வுகளைக் கவிதைகளில் தந்துள்ளார். தனது அடையாளத்தை அவர் பேணிக் காக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புவியியல், தாவரவியல், மெய்யியல், இதழியல் என்பது போல் "மஹாகவியியல்" அர்த்தபுஷ்டியாக இருக்கின்றது. இந்த அரங்கேற்றத்துக்கு பேராசிரியர் திஸ்ஸ காரியவாசம் வந்திருப்பது மகிழ்ச்சியைத் தருகின்றது. இளம் தமிழறிஞர் பிரசாந்தனையும் ஆசீர்வதிப்பதாக இருக்கின்றது. எமது அடுத்த தலைமுறைக்குத் தமிழைக் கற்பிப்பதற்குத் தமிழரான பிரசாந்தனை சிங்களப் பல்கலைக்கழகமான ஜெயவர்த்தன பல்கலைக்கழகம் வளர்க்கின்றதென்று சொன்னால் அதில் உண்மையுண்டு.

இந்த மண்டபத்தில் மேடையில் மலையகம், யாழ்ப்பாணம், கிழக்கிலங்கை ஆகிய பிரதேசங்களும் பத்திரிகை, சஞ்சிகையாளர்களும் நூல் வெளியீட்டாளர்களும் ஒருமித்துக் காணப்படுவது சந்தோஷத்தைத் தருகிறது. அத்தோடு மூவின மக்களும் கலந்திருப்பது உறவைப் பலப்படுத்துவதாக இருக்கிறது. கூட்டங்களுக்கு தமிழ்ச்சங்கத்தில் ஆர்வலர்கள் கூடுவதில்லையெனக் கேள்விப்பட்டதுண்டு. இக்கூட்டம் அதை மறக்கடிக்கின்றது. மண்டபம் நிறைந்த கூட்டம். இது பிரசாந்தனுக்கு கிடைக்கும்பெருமை. அவருக்கு தமிழ் இலக்கிய ஆர்வலர்கள் தெரிவிக்கும் பொங்கல் வாழ்த்து. இது எனது மூத்த மகனின் திருமணம் போல ஆனந்தமடைகிறேன்.

பிரசாந்தனின் பெயரில் ஒரு மயக்கம் ஏற்படுகிறது. 'ஸ்ரீ' அவரது தந்தையின் பெயரின் முதலெழுத்து. அந்த மங்களமான எழுத்து பிரசாந்தனை உயர்ச்சியடையவைக்கும்.

மேடைப் பேச்சென்பது எனக்கொரு கலை. 62 ஆண்டுகளாக மேடையில் பேசி வருகிறேன். பல கசப்பான, உடல் ரீதியான பாதிப்புக்கள் ஏற்பட்டும் அதை என்னால் நிறுத்த முடியவில்லை. அது எனக்கு தமிழ் தந்த கொடை.

கோப்பாய்ச் செம்மண் பூமி எமக்களித்த பரிசு பிரசாந்தன். செம்பாட்டு மண்ணில் விளையும் கறுத்தக் கொழும்பான் மாம்பழம், வாழைப்பழம், இராசவள்ளிக்கிழங்கு எப்படி எமக்குப் பலமோ அது போலவே பிரசாந்தனும். தமிழ்ச் சமுதாயத்தில் கம்பன் கழகம் விதைத்துவரும் சீலமான பண்பாடு பிரசாந்தனிலும் நிறையவே உண்டு. இவர் வெளியிட்ட முதல் தொகுப்புக்கு பெருத்த கண்டனங்கள் எழுந்தன. கண்டனங்களைக் கண்டு கெலிக்கக் கூடாது. அப்போதான் வளருவீர்கள். எழுத்தாளர் என்ற திமிர் இருக்கவேண்டும். பிரசாந்தன் நல்ல குருவிடமிருந்து வந்தவர். குறும்பாக் கவிஞன் மஹாகவியை நினைவுபடுத்துவது வரவேற்கத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வெளியீட்டுரை:**
**பேராசிரியர் திஸ்ஸ காரியவாசம்**

இலங்கையின் கவிதை வரலாற்றில் இன்றொரு நன்னாள். 'மஹாகவி' ஒரு படைப்பிலக்கியவாதி. அவர் காலனித்துவக் காலத்திலும் வாழ்ந்தவர். பிரித்தானியரது ஆட்சியையும் விமர்சித்தவர். அவரது கோடை பா நாடகம் மக்களது செல்வாக்கைப் பெற்றது. 'மஹாகவியியல்' என்ற நூலில் 14 கட்டுரைகள் காணப்படுகின்றன. 'அந்தரத்து உலவுகிற சேதி'என்ற நூலில் 33 கவிதைகள் உண்டு. நாங்கள் சாதாரண மக்கள். உயர்தரத்தையுடையவர் ஜெயராஜ். அவரது வழிகாட்டலே பிரசாந்தனை இந்நிலைக்குக் கொண்டுவந்தது. எனவே, ஜெயராஜைக் 'குருதேவர்' என்பது தகும்.

*இச்சிங்கள இனப்பெரியார் ஒருமைப்பாட்டாளராகத் தனது உரையைத் தமிழில் எழுதி வந்து வாசித்தது அனைவரையும் மெய்மறக்க வைத்தது. மண்டபம் அதிரக் கைதட்டி அவரது நல்ல நோக்கை வரவேற்றனர்.*

அண்மையில் ஒளிபரப்பான சக்தி தொலைக்காட்சியின் 'GRAND MASTER' என்ற நிகழ்ச்சியில் ஒரு போட்டியாளர் தனக்குப் பிடித்த 'பிரபலஸ்தராக' கவிஞர் மஹாகவியைத் தேர்ந்து, தயாரிப்பாளரைத் திணறடித்தார். இந்த மஹாகவி யார்? தனக்குத்தானே 'மஹாகவி' எனப் பெயர் சூட்டிக்கொண்டவரா? நடுவர்களுள் ஒருவராக இருந்த பிரபல ஊடகவியலாளரும் கவிஞருமான இளைய தம்பி தயானந்தா சிறிது வெளிச்சம் காட்டினார். 'இவரது முழுப்பெயர் து. உருத்திரமூர்த்தி. மஹாகவி' என்பது புனைபெயர். கவிஞர் சேரன், சிறந்த தமிழ் புலமையாளர் ஒளவை ஆகியோரது தந்தை' என்றார். நூலுக்குள் போனபோது கஷ்டத்தை உணர்ந்தேன் ஒரு மணித்தியால அவகாசத்துள் நயப்புரை கூறமுடியாது'.

**நயவுரைகள்:**
**"ஞானம்" தி. ஞானசேகரன்**

மஹாகவி, முருகையன், நீலாவணன் ஆகிய கவிஞர்களை விடுத்து ஈழத்து நவீன கவிதையைப் பேசமுடியாது. இவர்களுள் முதன்மையாளர் யார்? பேராசிரியர்களான க.கைலாசபதியும் கா.சிவத்தம்பியும் மஹாகவியைக் கண்டு கொள்ளவில்லை. கைலாசபதி முருகையனைக் 'கவிஞருக்குக் கவிஞர்' என்றார். மு.பொன்னம்பலம் (மு.பொ.) நீலாவணனைப் 'பரவாயில்லை' என்கிறார். ஆத்மார்த்தமாக மஹாகவியை முன் நிறுத்துபவர் கவிஞர் எம்.ஏ.நுஃமான் தான். மஹாகவியை நிறைய வாசித்தவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதிதாசனைக் குருவாக வரித்துக்கொண்டவர் மஹாகவி. பின்னர் அவரையும் மிஞ்சியது போல் பாடினார். அவர் காலத்துப் பிரச்சினைகளைப் பாடினார். இன்னல், ஏழ்மை, உழைப்பு என்பன அவரது கவிதைகளுக்கான தொனிப்பொருளாகின. மனித வல்லமையை மதித்தார். முற்போக்கு எதிராளியாகக் கணிக்கப்பட்டார். மார்க்சியத்துக்கு வெளியேயும் முற்போக்கு இருக்கின்றதென்பதை ஆர்வலர்கள் விளங்கிக் கொள்ள வேண்டும். கவிதையானது யாப்பு நிலைப்பட்டே இயங்குகிறது. பாரதியின் கவிதையாக்கம் செவிப்புலக் கவிதையாக்கம். மஹாகவி கட்புலக்கவிதை யாக்கத்தையே தனது கவிதைகளில் கையாண்டார். அவரது கவிதைகளைக் கேட்கும்பொழுது மனதில் படம் ஓடும். அவைகள் காட்சிகள் நிறைந்தவை. அவரது படைப்புக்களின் மேல் பெரும் விமர்சனப்பார்வை விழவில்லை. கிராமியத்தைக் கவிதைகளில் காட்டினார். மஹாகவியல் நிறைவான தொகுப்பு. தொகுப்புக்கு முத்தாய்ப்பாகப் பிரசாந்தன் கட்டுரை காணப்படுகிறது. மஹாகவியைச் சிறந்த கவிஞராக நிறுவி இருக்கிறார்.

## கவிஞர் ஜின்னாஹ் ஷரிபுத்தின்

'அந்தரத்து உலவுகிற சேதி'என்ற கவிதைத் தொகுப்பின் ஆசிரியர் ஸ்ரீ பிரசாந்தன் - என்னை வாழ்த்தவே அழைத்திருப்பாரென நினைத்தேன். ஆனால் , பத்திரிகையைப் பார்த்த பொழுது எனக்கு நயப்புரை தரப்பட்டிருக்கிறது. நான் விமர்சகனல்ல. விமர்சனமானது படைப்பிலுள்ள நல்லதையும் கெட்டதையும் எடுத்துச் சொல்லிப் படைப்பாளியைப் புண்படுத்துவது. ஆனால், நயப்புரையோ மகிழ்விப்பது. இந்நூல் காரமான கடுகு. தம்பி பிரசாந்தன் சிறந்த தமிழ் அறிஞரால் வளர்க்கப்பட்ட கம்பன் கழகப் பாசறையில் இருப்பவர். கம்பன், திருவள்ளுவன் ஆகியோரை அறிந்தோரே அறிஞர்கள். பிரசாந்தனை மரபுவாதியெனவே எண்ணி இருந்தேன். இடைக்காலத்தில் நவீன சிந்தனைகளைத் தரும் கவிதைகளைப் படைத்தார். மரபை யார் மீறுவது? யார் முடிப்பது? மரபுக்கு அருகில் வராது தூரத்தில் நின்று பெருமை பேசுவது வித்துவமல்ல. தம்பி பிரசாந்தன் யாப்பிலக்கணத்தைச் சிறப்பாகக் கற்றவர். அவர் முழுமையானவர். செய்து காட்டி இருக்கிறார். தான் அனுபவித்த செய்திகளைக் கவிதைகளாகத் தந்திருக்கிறார். போரின் கொடூர அனர்த்தங்களைப் பதியாமல் விடுவது குற்றம். அதைத் தம்பி நிறைவுபடுத்தி இருக்கிறார். அவரிடமிருந்து இனிவரப்போகும் உன்னதமான படைப்புக்களுக்கான பதச்சோறு இத்தொகுப்பு. தொகுப்பின் முதலாவது கவிதையில் கவிஞரின் ஆளுமை தெரிகின்றது. தன்மண்ணில் கொண்டிருக்கும் உரிமையை வெளிப்படுத்துகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவீன இலக்கியவாதியெனப் பேசப்படும் வ.ஐ.ச.ஜெயபாலன் அணிந்துரை கொடுத்துள்ளார். புலம்பெயர்ந்தவர்கள் எமது மண்ணைப் பாடவில்லை. புலம்பெயர்ந்தோர் தமது சுயத்தை இழப்பார்களோ என்ற அச்சத்தோடு பிரசாந்தன் பாடுகிறார்.

கம்பன் கவிதைகளுக்குள் புகுந்தோருக்குச் சொல் பஞ்சம் இருக்காது. அதை நிரூபிக்கிறார் பிரசாந்தன். கவிதைக்கென்று வார்த்தைகள் இருக்கின்றன. அதைக்கண்டு பிடிப்பதற்குக் கவிஞனால்தான் முடியும். இத்தொகுப்பொன்றே போதும், பிரசாந்தனைச் சிறந்த கவிஞராக இனங்காட்ட. மரபுக் கவிஞர்களால் நினைத்தாலும் முடியாது அதிலிருந்து விடுபட.

**பதிலுரை:**

**ஸ்ரீ பிரசாந்தன்**

நாம் இன்று கவிதைக்கான ஆரோக்கியமான சூழ்நிலையில் இருக்கிறோமோ? எனப் பார்க்கவேண்டும். விமர்சகர்கள் ஏற்படுத்திய பிம்பத்திலேயே இன்றைய கவிதை உலகு இருக்கின்றது. நாலடியாரும் திருக்குறளும் கவிதை இல்லை என்கின்றனர். ஈழத்தில் கவிஞனாக இருப்பது வேதனைக்குரிய விடயம்.

*நிகழ்ச்சிகளின் ஒருங்கிணைப்பாளராக கம்பன் கழகத்தைச் சேர்ந்த சிவசங்கர் பணிபுரிந்தார். இவர் கூறிய குறுங் குறிப்புகள் அரிய தகவல்களைத் தந்தன.*

- 30.01.2008

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5

## உழைக்கும் மக்களின் வாழ்வை இலக்கியமாக்கியவர் செ.யோகநாதன்

ஈழத்து முற்போக்கு இலக்கிய அமைப்பின் ஆரம்பக் காலங்களில், கற்பனா முற்போக்காளனாக அல்லாது சாதனா மார்க்சிவாதியாகத் தன்னை அடையாளப்படுத்தி - ஆக்க இலக்கியம் படைத்தவர் செ.யோகநாதன். தமிழகத்து ஜெயகாந்தன், சிதம்பர ரகுநாதன் ஆகியோரோடு ஒப்பிடக்கூடிய தீவிர மார்க்சியவாதியான அவர் 21.01.2008 இல் அமரரானார்.

அவரைக் கௌரவிக்குமுகமாக ஞானம் கலை, இலக்கியப் பண்ணை - பிரபல எழுத்தாளர் செங்கை ஆழியான் தலைமையில் 24.02.2008 இல் கொழும்பு, தமிழ்ச்சங்க, குமாரசாமி விநோதன் மண்டபத்தில் - அஞ்சலிக் கூட்டமொன்றை நடாத்தியது.

### தலைமையுரை:
### செங்கை ஆழியான்

யாழ்ப்பாணத்தில் அமரர் செ.யோகநாதனின் இறுதிச் சடங்கில் கலந்துகொண்ட கலை இலக்கியவாதிகளைக் காட்டிலும் இங்கு அதிகமானோர் கூடி இருக்கின்றனர். நான்கு எழுத்தாளர்கள் மட்டுமே இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்டனர். செ.யோ.மிகவும் பின்தங்கிய குடும்பத்தில் பிறந்தவர். ஆரம்பத்தில் தீவிர தமிழரசுக்கட்சி ஆதரவாளராக இருந்து இலங்கை அரசுக்கு எதிராக சுவரொட்டிகள் ஒட்டும் பணியில் ஈடுபட்டார். ஆசிரியர் தொழிலையே முதலில் செய்தார். அவரது இலக்கியப் பணி 'கலைச் செல்வி' சஞ்சிகையிலேயே முதன் முதலில் தொடங்கியது. அவரது இலக்கியச் செல்நெறியைக் கலைச்செல்வி ஆசிரியர் சிற்பி செம்மைப்படுத்தினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறந்த மார்க்சியவாதியாக வாழ்ந்த அவர் பேராசிரியர் கைலாசபதியோடு மிகவும் நெருக்கமாக இருந்தார். அக்கால கட்டத்தில் பல்கலைக்கழகத்தில் மூன்று மாணவ அணிகள் இருந்தன. இவைகளுக்கு சு. வித்தியானந்தன், க.கைலாசபதி, ஆ.சதாசிவம் ஆகியோர் தலைமை தாங்கினர். ஏதாவது ஓர் இயக்கத்தோடு சேர வேண்டுமெனக் கைலாசபதியும், மரபு தெரியாது எழுத வேண்டாமென வித்தியானந்தனும், மரபை மீறக்கூடாதென சதாசிவமும் தங்களது அணி மாணவர்களுக்கு அறிவுறுத்தினர்.

செ.யோ.வின் "பாசக்குரல்" என்ற முதல் சிறுகதையை கலைச்செல்வி சஞ்சிகையே வெளியிட்டது. அவரது சிறுகதைகளில் "சோளகம்" அதிமுக்கியமானது. தன்னைக் காதலித்த வாசகியையே திருமணம் செய்தார். திருமணம் மரபைக் கண்டுகொள்ளப்படாது நடைபெற்றது. தீண்டாமை ஒழிப்புப் பேராட்டத்தில் தீவிர அக்கறை காட்டினார். ஏ.ஜி.ஏ.ஆக இருந்து கொண்டே நோட்டீஸ் ஒட்டும் முற்போக்கு இயக்கப் பணியையும் செய்தார். 1983 ஆம் ஆண்டுக்குப் பின்னர் செ.யோ.வின் சிந்தனையில் பாரிய திருப்பம் ஏற்பட்டது. தமிழ்த் தேசியச் சிந்தனையை ஏற்றுக்கொண்டார். தமிழகத்தில் 16 ஆண்டுகள் வாழ்ந்தார். எழுத வேண்டுமென்ற தணியாத தாகத்தில் நிறையவே எழுதினார். சிறுகதைகள், குறுநாவல்கள், நாவல்கள் என்பவற்றைப் படைத்தார். தனது படைப்புக்குத் தங்கப் பதக்கத்தையும் பரிசாகப் பெற்றவர் செ.யோ. தமிழ்த் தேசியம் குறித்த இவரது சிந்தனை மாற்றம், இவரது உற்ற நண்பர்களையும் இவரிடமிருந்து பிரித்தது. இது இவரது தமிழக வாழ்விலும் எதிரொலித்தது.

தமிழகஎழுத்தாளர் பொன்னீலன் செ.யோ. மீது பலத்த - அக்கறை காட்டினார். "இரவல் தாய்நாடு" அவர் படைத்த குறுநாவல்களில் அற்புதமானது. தான் மட்டுமே எழுதிப் பெருமை பெற வேண்டும் என எண்ணாதவர். ஏராளமான எழுத்தாளர்களை அறிமுகப்படுத்தினார். தமிழகத்துச் சிறுவர் சஞ்சிகையான "ரத்ன பாலா" ஆசிரியர் குழுவில் இருந்தார். ஈழத்து "வசந்தம்" சஞ்சிகையின் ஆசிரியர். அமரர் பெனடிக் பாலனைத் தமிழ் வாசகனுக்கு அறிமுகப்படுத்தியதில் செ.யோ.வின் பங்குப் பணி மிகவும் பெரியது. அவரது படைப்புக்களைத் தேடி பார்க்கும் பொழுது தமிழ் இலக்கியத்துக்குச் செ.யோகநாதன் செய்திருக்கும் பங்களிப்பு மிகவும் பெரியது என்பதை உணர்ந்து கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இரங்கல் உரைகள்:**
**மல்லிகை ஆசிரியர் டொமினிக் ஜீவா**

யோகநாதன் தமிழகத்தில் வாழ்ந்த பொழுது அவரை அங்கு மூன்று தடவைகள் சந்தித்தேன். இலக்கியத்துக்காக மிக அர்ப்பணிப்போடு இயங்கினார். ஓவியர் ஆதிமூலத்தை எனக்கு அறிமுகப்படுத்தினார். "வெள்ளிப்பாதசரம்" "ஒரு கூடைக் கொழுந்து" ஆகிய அவர் தொகுத்த பாரிய ஈழத்து சிறுகதைத் தொகுப்புகள் மூலமே ஈழத்து எழுத்தாளர்களது ஆழமான இலக்கிய ஆற்றலைத் தாம் கண்டதாக தமிழகத்து இலக்கியவாதிகள் கூறினர்.

1960கள் ஈழத்து இலக்கியத்துக்கு உச்சகாலம். இலங்கை பல்கலைக் கழகத்திலும் இலக்கியப் பெருவிழிப்பு இருந்தது.

இக்கால கட்டத்திலேயே செ.யோகநாதன் ஈழத்து முற்போக்கு அணியில் சேர்ந்தார். அவரது எழுத்துக்களில் புதிய பார்வையைக் காண முடிந்தது. டானியலோடு இலக்கியப் பணி செய்தார். செ.யோகநாதனின் இறுதி ஊர்வலத்தில் நான்கு எழுத்தாளர்கள் மட்டுமே கலந்து கொண்டனரென்பதை கேட்கத் துக்கமாக இருக்கிறது. மண்ணை நேசிக்கும் எழுத்தாளனை மக்கள் மறக்கக்கூடாது.

'யோகநாதனுக்கு அஞ்சலிக் கூட்டம் தேவையா?' எனத் தொலைபேசியில் சிலர் கேட்டனர். எழுத்தாளரைப் பிரிக்கும் கிளித்தட்டு விளையாடும் சமூகம் இது. பேராசிரியர் மு.வரதராசனிடம் பாரதிதாசன் குறித்த அபிப்பிராயத்தைக் கேட்டனராம். சமைத்த சாப்பாட்டிற்கு ருசியைத்தான் பார்க்க வேண்டுமே தவிர சமையல்காரனைப் பார்க்கக்கூடாதென மு.வ.சொன்னாராம். எழுத்தாளனைப் பார்க்காது அவனது எழுத்தைப்பார். நான் பின்பற்றுவது இதைத்தான். கலைஞனைப் பாதுகாப்பது மிக முக்கியம். ஒதுக்கினால் இந்த மண் நாசமாவது சர்வ உண்மை. யோகநாதன் படைப்பாளிகளை மரியாதை செய்தவர். இரண்டரை ஆண்டுகளுக்கு முன்னர் மல்லிகை அட்டையில் செ.யோகநாதனின் படத்தை வெளியிட்டேன். மன முரண்பாடு எதுவுமின்றி இன்று செ.யோ.வுக்கு அஞ்சலி செய்வதற்காக இங்கு குழுமி இருக்கிறோம். அவர் ஏற்படுத்திய இலக்கியத்தாக்கமே இதற்கு அடிப்படையான காரணமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரபல தமிழ், ஆங்கில இலக்கியவாதி கே.எஸ்.சிவகுமாரன்

செ.யோகநாதன் உயிரோடிருந்த பொழுது நன்றி தெரிவிக்காதிருந்து விட்டேன். முதல் முதலில் என்னைப் பல்கலைக்கழகச் சமூகத்துக்கு அறிமுகப்படுத்தியவர். முன்பின் தெரியாத என்னைப் புத்தக, அறிமுக விழாவுக்கு அழைத்துப் பேச வைத்தார். பத்தி எழுத்தாளராகவும் பக்க அமைப்பாளராகவும் "ஆதவன்" பத்திரிகையில் சேவை செய்தார். 1964 இல் செ.யோ.வைச் சந்தித்தேன். நான் யாழ்ப்பாணம் சென்ற பொழுது என்னைத் தேடி வந்து சந்தித்தார். நெஞ்சுருகப் பழகினார். அவர் எழுத்துக்களில் சமூக அக்கறை இருந்தது. "இந்தியா டுடே" சஞ்சிகை ஆசிரியர் வாந்தி நான் அனுப்பிய கட்டுரையைப் பிரசுரிக்காது செ.யோ.வின் கட்டுரையைப் பிரசுரித்தார். அது மிகவும் காத்திரமாக இருந்தது. ஆக்க இலக்கியம், திறனாய்வு, சினிமா என்ற பன்முகப் பரிமாணங்களில் அவர் ஊக்கமுடன் உழைத்தார்.

## கொழுந்து ஆசிரியர் அந்தனி ஜீவா

அமரர் யோகநாதனின் உழைப்பில் வெளி வந்த "வசந்தம்" தனித்தன்மைமிக்க சஞ்சிகை. மார்க்சிய அரசியல் பின்னணியைக் கொண்டது. அதன் காலத்தில் தான் செ.யோ. நல்ல சிறுகதைகளைப் படைத்தார். அவரது"ஒளி பிறந்தது" குறுநாவல் உண்மைக் கதை. அதைச் சிங்களக் கலைஞர் ஹென்றி ஜயசேனா நாடகமாக மேடையேற்றினார். ஈழத்து எழுத்தாளரது படைப்புகளைத் தேடி எடுத்துத் தொகுத்தார். அவர் தொகுத்த இரண்டு சிறுகதைத் தொகுப்புகளுக்கும் என்னிடம் இருந்த சிறுகதைகளையும் கொடுத்தேன். இதே மாதிரியான உதவியைத் தமிழ்நாவல், சிறுகதை வரலாற்றை வெளியிட்ட "ஈழகேசரி" சோ.சிவபாதசுந்தரத்துக்கும் சிட்டிக்கும் செய்தேன். நூல் வெளிவந்த பொழுது செ.யோகநாதன் மட்டுமே என் உதவியைக் கனம் பண்ணி நூல் பிரதியொன்றை எனக்கு அனுப்பினார். மற்றிருவரும் அனுப்பவில்லை. செ.யோ. திட்டமிட்டிருந்த மூன்றாவது சிறுகதைத் தொகுதியும் வெளிவந்திருந்தால் இளைய சந்ததிப் படைப்பாளிகள் பெரும் பயனைப் பெற்றிருப்பர். அது நடக்கவில்லை. செ.யோ.முந்திவிட்டார்! அவரது உழைப்புக்கு மற்றொரு மார்க்சியவாதியான பிரபல எழுத்தாளர் செ. கணேசலிங்கன் உந்து சக்தியாக இருந்ததை நானறிவேன். தினகரன் வார மஞ்சரியின் முன்னாள் ஆசிரியர் அமரர் எம்.ஆர்.சுப்பரமணியத்தின் வெற்றிடத்துக்கு நீண்ட காலம் ஈழத்து எழுத்தாளர் சங்கத்தின் செயலாளராக இருந்த பிரேம்ஜி ஞானசுந்தரத்தின் செல்வாக்கில் செ.யோ.நியமனம் பெற இருந்தார். ஆனால். செ.கணோசலிங்கனோடு முரண்பட்டதால் அது கைகூடவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழகதில் வெளியாகும் "குங்குமம்" "அன்பு" ஆகிய சஞ்சிகைகளின், பெயர் பிரசித்தப்படுத்தப்படாத ஆசிரியராக இருந்தார். நுணுக்கமான மொழி பெயர்ப்பாளர். சினிமாத்துறையோடும் ஈடுபாடு கொண்டிருந்தார். ஈழத்தவரான பிரபல சினிமா நெறியாளர் பாலுமகேந்திரா செ.யோ.வின் ஆலோசனைகளைக் கேட்டறிந்தார். தன் எழுத்தின் மூலமாகப் பல்வேறு சாதனைகள் புரிந்தவர் செ.யோகநாதன். அவரது படைப்புக்கள் பல்கலைக்கழக மட்டத்தில் ஆய்வு செய்யப்பட வேண்டும்.

**ஞானம் சஞ்சிகை ஆசிரியர் தி.ஞானசேகரன்**

இந்த அஞ்சலிக் கூட்டத்தை ஏற்பாடு செய்வதற்கு எங்களுக்கு உந்து சக்தியாக இருந்தவர் தினக்குரல் பிரதம ஆசிரியர் வி.தனபாலசிங்கம். சிறுகதை பெறுவதற்காக செ.யோ.வை மூன்று தடவைகள் சந்தித்தேன். "ஞானம்" சஞ்சிகையின் நான்காவது இதழில் செ.யோ.வின் நேர்காணலை வெளியிட்டேன். பிரபல எழுத்தாளர் கே.ஆர்.டேவிற் சொன்னார். நான் ஒரு நாளைக்கு பத்து சிகரட்டை ஊதித்தள்ளுகிறேன். அதேபோல் எல்லோரிடமும் பலவீனம் உண்டுதான். செ.யோகநாதனைத் தவிர்த்து விட்டு ஈழத்து இலக்கிய வரலாறு எழுத முடியாது என.

சிறுகதை, குறுநாவல் என்பவற்றிற்கும் பாரிய பங்களிப்புச் செய்தவர். சுந்தரின் "சிரித்திரன்" சஞ்சிகை 1974 ஆம் ஆண்டு நடாத்திய குறுநாவல் போட்டியில் செ.யோ.வின் "காவியத்தின் மறுபக்கம்" என்ற குறுநாவல் முதல்பரிசைப் பெற்றது. பதினைந்து குறுநாவல்களைப் புனைந்தார். "இரவல் தாய் நாடு" புகழை அள்ளிக் கொடுத்தது. பிரபல வெளியீட்டாளர் நர்மதா ராமலிங்கம் செ.யோ.படைப்புகளைப் பிரபலப்படுத்தினார். சிறுவர் இலக்கியத்தில் நிறைய ஈடுபாடு காட்டினார். அவரது மகன் சத்தியனும் சிறுவர் இலக்கியப் படைப்பாளி. தந்தையும் மகனும் ஒரே மேடையில் தமது படைப்புகளுக்காகப் பரிசு பெற்றும் இருக்கின்றனர். தமிழகச் சஞ்சிகையான "ரத்தினபாலா" இதழின் ஆசிரியர் குழுவிலும் இலக்கியப் பணி செய்த இவர் குழந்தை இலக்கிய நூல்கள் பதினொன்றை வெளியிட்டார்.

தமிழகத்தில் ஈழத்து எழுத்துக்கு அங்கீகாரத்தைத் தேடித் தந்தார். தமிழகப் பிரபல எழுத்தாளர்களான பொன்னீலன் பிரபஞ்சனோடு ஒரே அறையில் தங்கி வாழ்ந்தார். செ.யோ.வுக்குத் தமிழகத்தில் பெருத்த வாசகர் கூட்டம் இருந்தது. அவர் சுகவீனமுற்றுத் தமிழகத்தில் இருந்த பொழுது செலவுகளைத் தமிழக எழுத்தாளர்களே பொறுப்பேற்றனர். அவருக்கு இரத்தம் தேவைப்பட்ட பொழுது - செ.யோ.வின் அபிமானிகளான தமிழகத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயாரொருவரும் மகளும் இரத்தம் கொடுக்க முன்வந்தனர். இச்செய்தியைக் கூறிய பொழுது அமரரின் கண்கள் கலங்கியதைப் பார்த்தேன்.

20 ஆயிரம் பக்கம் வரை எழுதிக் குவித்தார். 87 நூல்களை வெளியிட்டார். தமிழ் இலக்கியச் செல்நெறிக்குத் தாக்கத்தை ஏற்படுத்தினார்.

செ.யோ.வின் இறுதி ஊர்வலத்தில் நான்கு எழுத்தாளர்கள் மட்டுமே கலந்து கொண்டனர் என்பது ஜீரணிக்க முடியாத கவலை தரும் தகவல்.

*கேட்போர் அஞ்சலி உரை நேரத்தில் பல பெரியோர்கள் இரங்கல் உரை நிகழ்த்தினர்.*

**எஸ்.சண்முகலிங்கம்**
**(வட - கிழக்கு மாகாண முன்னாள் மேலதிக செயலாளர்)**

மூன்றாண்டுகள் ஒரே அறையில் நானும் யோகநாதனும் இருந்தோம். இலங்கை நிர்வாக சேவைப் பரீட்சைக்கும் 1970 இல் தோற்றினோம். 1966 இல் அவருக்கு முல்லைத்தீவு மாவட்டத்தில் ஆசிரியர் நியமனம் கிடைத்தது. எழுத்தாளன் அநாமதேயமாக இருக்க முடியாது. பிரபலம் தேடி வரும். செ.யோ.ஆற்றல் மிக்கவர். அவரைப் புகழ் தேடி வந்தது. ஆசிரியர்கள், நிர்வாக சேவை உத்தியோகத்தர் ஆகியோரது பலவீனங்கள் பூதாகரமாக வெளிவரும். இவர்களது குறைகளை மன்னிக்க முடியாது.

சாதாரண மனிதராக இருந்தால் குறைகளை மன்னிக்கலாம். பொறுப்புக்களை வகிப்பவர்கள் தமக்கெனத் தர்மத்தைப் பேண வேண்டும்.

**'மணிமேகலை பிரசுரம், லேனா தமிழ்வாணன்**

எனது தந்தையார் தமிழ்வாணனின் வாசகர் செ.யோகநாதன். அவரது "கிட்டி" குறுநாவலை எமது மணிமேகலை நிறுவனமே வெளியிட்டது. அவரது மறைவு ஈழத்துக்கும் தமிழகத்துக்கும் பாரிய இழப்பாகும்.

**திருக்குமரன் - (செ.யோ.வின் பக்கத்து வீட்டுக்காரர்)**

யோகநாதனின் இறுதி நாட்களில் அவரது மனைவி அர்ப்பணிப்போடு அவருக்குச் சேவை செய்ததைப் பார்த்தேன். அடிக்கடி அவரை வந்து பார்த்தவர் எழுத்தாளர் செங்கை ஆழியான். செ.யோ.வின் சிறுகதையைக் கடைசியாக வெளியிட்டது "வெளிச்சம்" சஞ்சிகையே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பிரபல மார்க்சிய விமர்சகர் எம்.ஏ.எம் சமீம்**

செ.யோகநாதனை யாழ் சாஹித்திய விழாவிலேயே முதன்முதலில் சந்தித்தேன். மீண்டும் வாகரையில் சந்தித்தேன். "ஒளி நமக்கு வேண்டும்" என்ற அவரது நாவலை வெளியிட்டவர்களில் நானுமொருவன். இதை "ஒளி" என்ற தலைப்பிலேயே வசந்தம் சஞ்சிகையில் எழுதினார். இருதய சத்திர சிகிச்சைக்கும் உதவினேன்.

**சட்டத்தரணி சோ.தேவராசா**
**(தாயகம் ஆசிரியர் குழு)**

ஈழத்து எழுத்தாளர்கள் சமூக இயக்கத்துக்காக எழுதுபவர்கள். செ.யோகநாதன் உழைப்பாளி மக்களின் வாழ்க்கையை எழுதியவர். மனிதன் போராட வேண்டும். மாற்றங்களை ஏற்றுக்கொள்ள வேண்டும். ஈழத்து எழுத்தாளர் பணி குறித்து ஆராயும் சூழல் இன்னமும் இங்கு ஏற்படவில்லை. கேரளம், வங்கம் போன்ற இந்திய மாநிலங்களில் பண்பாட்டுத் தளத்தில் மாற்றங்கள் ஏற்பட்டதை நாம் கவனிக்க வேண்டும். அத்தகைய மாற்றம் இங்கும் ஏற்பட வேண்டும்.

*ஞானம், கலை இலக்கியப் பண்ணையின் செயலாளர் பூ.ஸ்ரீதர் சிங் நன்றியுரை ஆற்றினார்.*

**- 28.02.2008**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6

## கவிநாயகர் கந்தவனத்துடனான இலக்கியச் சந்திப்பு

ஈழத்தின் புகழ் பூத்த கவிஞர், புகலிட இலக்கியவாதி கவிநாயகர் வி. கந்தவனம் சந்திப்பு, இலக்கிய நிகழ்வு 29.11.2009ஆம் திகதி கொழும்பு தமிழ்ச் சங்க விநோதன் மண்டபத்தில் நடைபெற்றது. மதி கதைஞர் வட்டத் (மகவம்) தின் தலைவர் குரும்பசிட்டியூர் மாயெழு வேல் அமுதன் தலைமை வகித்தார்.

திருமதி பவானி மகாதேவன், சட்டத்தரணி சு. க.சிவபாதம், டாக்டர் திருமதி. ராணி செல்வரெத்தினம் ஆகியோர் மங்கல விளக்கேற்றி நிகழ்வைத் தொடக்கி வைத்தனர்.

**வரவேற்புரை:**
**சட்டத்தரணி கே. வி. மகாதேவன்**

சூரியன் அலுவல்களை முடித்து, மறைந்த பின் தமது தேவைகளைப் பூர்த்தி செய்ய அங்கலாய்ப்போருக்கு, ஓர் அகல்விளக்கே மீண்டும் செயலாற்ற உதவும். இந்த விழாச் சிறிதாக இருந்தாலும் பெரிய சாதனையை ஏற்படுத்தும். கங்காரு தன் உடலில் இருக்கும் பையில் இன்னொரு கங்காருவைத் தாங்குவது போல் இந்த நிகழ்வும் ஒத்த நோக்கமுடைய இரு சந்ததிகளை மையப்படுத்தி ஏற்படுத்தப்பட்டிருப்பது சிறப்பாகத் தோன்றுகின்றது. முதிர்ச்சியை நோக்கிச் சென்ற அமரர் மாவை வரோதயனையும் உள் வாங்கியதாக இந்நிகழ்வு அமைகின்றது. புனிதம் நட்புறவுச் சங்கம், முன்னாள் அமைச்சர் காலஞ் சென்ற மு. திருச்செல்வத்தின் மனைவியார் புனிதம் திருச்செல்வத்தின் ஞாபகார்த்தமாக அமைக்கப்பட்டது. அவர் முழு நேரச் சமூக சேவை செய்தார். மனித சேவையைச் சிறந்த சேவையாக மதித்தவர். அவரது மரணத்தை அறிவித்தபோது இலங்கை வானொலி தலை சிறந்த சேவகி புனிதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்செல்வம் காலமானாரென அறிவித்தது. இந்நிகழ்வை ஆர்வத்தின் நிமித்தமே ஏற்படுத்தினோம். மனதில் களங்கமற்றோரைச் சந்திக்கும் போது சந்தோஷம் ஏற்படுகின்றது.

இம் மண்டபத்தினுள் நுழையும்போது ரம்மியமான உணர்வே ஏற்பட்டது. இத்தகைய நிகழ்வுகள் என்றும் நிகழாதோ என ஏங்கினேன். திருமணத்தின் பின்னர் தான் கந்தவனம் அறிமுகமானார். அது விஸ்வரூபத்தை ஏற்படுத்தி இருக்கின்றது. நயக்கக்கூடிய கவிதைகளை எழுதுகிறார். வானொலி நிகழ்வொன்றிலும் இதைச் சொன்னேன். எழுத்துக்கு வல்லமை பெரிது. குரும்பசிட்டி இவரால் பெருமை பெறுகின்றது. ஆங்கிலப் புலமையும் இவருக்குண்டு. நடமாடும் அறிவாளர்.

மாவை வரோதராயன் கவிஞர், எழுத்தாளர், சிறுகதை ஆசரியர். அவரைப் பற்றிப் பேசுவதற்கு இன்றே எனக்கு வாய்ப்புக் கிடைத்துள்ளது. பகலில் விளக்கொன்றை வைத்துத் தேடிக்கொண்டிருந்த கிரேக்க தத்துவஞானி டைனிஸ் 'அன்பு, ஞானம், நேர்மைமிக்க மனிதனைத் தேடுகிறேன்' என்றார். மாவை வரோதராயன் மனிதம் உடையவர். அவரை விழிசிட்டியில் முதன் முதலாகச் சந்தித்தேன். கடிதம் போடுவார். அக்கா என்றே என்னை அழைப்பார். மரியாதையைக் குறைக்கும் நோக்கோடு இப்படி அழைப்பவர்களும் சில நன்மைகளை எதிர்பார்த்தும் அப்படிக் கூப்பிடுவர். ஆனால் வரோதயனின் அக்காவுக்குப் பெறுமதி இருந்தது. சுயநலம் இருக்கவில்லை. பல நெருக்கீடுகளோடு வாழ்ந்தார். மற்றவர்களுக்கு துன்பம் வரும் போது உதவுவார். அவரிடம் சகோதரத்துவம் இருந்தது. பண்பு கலந்த நட்பு இருந்தது. சத்திரசிகிச்சைக்கு இரத்தம் தேவைப்பட்ட போது பெரிய எழுத்தாளர்களோடு கூடத் தொடர்பு கொண்டு உதவும்படி கேட்டேன். தட்டிக்கழித்து ஏமாற்றினர்.

ஆனால், வரோதயன் அதை உதவி, எனது கணவருக்கு உதவினார். எழுத்துலகில் அநீதிகள் நடக்கும் போது பொறுக்கமாட்டார். ஏற்கமாட்டார். அவரது கொடு நோய் தலையிடியோடுதான் தொடங்கியது. அந்தக் கட்டத்தில் என்னிடம் வந்த போது எழுத்தாளராக வரவில்லை. Client ஆக வந்திருக்கிறேன் என்றார். தலையிடிக்கு என்றார். Stress USU கவுன்சிலிங் கொடுத்தேன். மீண்டும் சந்தித்த போது நினைத்தது நடக்கவில்லை என்றார். பாதை தெரியாது போகுது. வித்தியாசமான மணம் மூக்கிலிருந்து வருகுது, பயமாக இருக்கிறதென்றார். எனது நிலையின்படி கவுன்சிலிங் பெற வருவோர் சாவதில்லை. அது ஒரு வரம் தான். அவரை, மாவை வரோதயனை இறந்து போக விட்டிட்டோமே என வருந்தினேன். இந்தியாவுக்குப் போக உதவி கேட்டார். தனது மூத்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளையை எழுந்து நடக்கச் செய்ய வேண்டுமென்றார். அப்பிள்ளை இப்போ இல்லை. எமது கையில் எதுவுமில்லை. உதவி செய்தவருக்கு உதவமுடியாத நிலையிலிருக்கிறோம்.

யாழ்ப்பாணம் சென்ற பின்னர் நன்றாகக் கதைத்தார். நாடகமெழுதுகிறேன் என்றார். மேடையேற்றும்படி கேட்டார். அது எழுதப்படவில்லை. தனது வேப்பமரம் சிறுகதைத் தொகுப்பை அறிமுகப்படுத்தும் விழா எடுக்கவிரும்பினார். அதுவும் நடக்கவில்லை. ஓரிரவு எனக்கு SMS வந்தது. அவர் எம்மை விட்டுப் போய் விட்ட செய்தி இருந்தது. மனம் கஷ்டப்பட்டது. கனவில் அவரது இறுதிக் கிரியைகளைக் கண்டேன். உண்மையாக போக முடியாது. பாஸ்போட் தொலைந்து விட்டது. எப்படி இதை ஆற முடியுமென்ற தலையிடி இப்போ எனக்கு. மனிதத்தை உணர்த்தும் பல காரியங்களைச் செய்தார். அவருக்கான எனது பதிவுகளை எழுதுவேன். மாவை வரோதயனின் எழுத்துக்களைப் பேணிப் பாதுகாக்க வேண்டும். கவிஞர் கந்தவனத்தைக் கனடா சென்ற பின்னர் தான் அதிகமாகத் தெரிந்து கொண்டேன். இங்கிருந்ததை விடக் கனடாவில் அவருக்குப் புகழ் அதிகம். அங்கு கனகசபாபதி, கந்தவனம் இல்லாது எந்த இலக்கிய நிகழ்வும் நடக்காது. அவர் புலம்பெயர்ந்தது ஒரு வகையில் சந்தோஷம் தான்.

**தலைமையுரை:**
**'மகவம்' வேல் அமுதன்**

கவிநாயகர் வி.கந்தவனம் நுணாவிலில் 1933 இல் பிறந்தார். 76 வயது. சம்பந்தவழியாகவும் குரும்பசிட்டிக்கு வருவோரைக் குரும்பசிட்டி உள்வாங்கிக் கொண்டு விடும். அதுவே கந்தவனத்துக்கும் நடந்திருக்கிறது. யாழ். இலக்கிய வட்டத்தை ஸ்தாபித்தவர். 30 ஆண்டுகளுக்கு முன் தாயகத்திலிருந்து புலம்பெயர்ந்தார். மிசிது என்ற நாடு, தென் ஆபிரிக்கா இப்படிச் சுற்றிவந்து இப்போ கனடாவில் வாழ்கிறார். 1993 இல் மணி விழா கொண்டாடப்பட்ட போது ஜெகதீசன் நூல் வெளியிட்டார். இன்றும் கந்தவனம் கவிநாயகராக இருக்கிறார். யாழ்ப்பாணத்தின் மிகத்திறமையான கவியரங்கக் கவிஞராக இருந்தவர். இவரில்லாத கவியரங்குகளே இல்லை என்ற அளவுக்குத் தாக்கத்தை ஏற்படுத்தினார். மதுரகவி இ.நாகராசன், சொக்கன் போன்றோரது வாழ்த்தையும் பெற்ற கவிஞர். எளிமையானதும் காரசாரமானதுமான பாடல்களைப் படைத்தவர். நிரம்பப்பாடி இருக்கிறார். 1959 இல் மாத்தளையில் படிப்பித்தார். அங்கு கலை இலக்கிய வட்டத்தை இயக்கினார். 'சிட்டுக்குருவி' என்ற சஞ்சிகையை வெளியிட்டார். இதுவரை 44 நூல்களை வெளியிட்டுள்ளார். சாதியத்துக்கு எதிராகப் பாடிய பாடல்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்பார்த்தபலனை அளித்தனவா? என விமர்சித்துப் பாடியும் இருக்கிறார். கேள்வி எழுப்பி இருக்கிறார். தெளிவாகவும் அதேநேரம் ஆணித்தரமாகவும் பாடுவார். தமிழில் மட்டுமன்றி ஆங்கிலத்திலும் கவிதை நூலொன்றை வெளியிட்டுள்ளார். ஆங்கிலக் கவிஞருக்கு நிகராகக் காணப்படுகிறார். சொல்நயத்தோடும் பாடும் திறமை உண்டு. THE TIME LOST, CANNOT BE FOUND என வாசகருக்கு உணர்த்துகிறார். இப்போது இங்கே மேடைகள் வெறிச்சோடிக் கிடக்கின்றன. அன்பினால் மீண்டும் அவைகளைக் கட்டியெழுப்ப முயலவேண்டும்.

*கவிநாயகர் வி.கந்தவனம் தம்பதிக்கு பொறியிலாளர் வே.அ.மதிமகன் தம்பதி, தொழிலதிபர் எஸ்.பி.நடராசா (அண்ணா கோப்பி) ஆகியோர் பொன்னாடை போர்த்தி பூமாலை சூட்டிக் கௌரவித்தனர். சைவப்புலவர் சி.செல்லத்துரையும் பொன்னாடை போர்த்தினார்.*

**சிறப்புரை:**

**'கனடாவில் கலை இலக்கிய முயற்சிகள்'**

**புலம்பெயர் தமிழ் இலக்கியவாதி கவிநாயகர் வி. கந்தவனம்**

சுமங்கலி விடுதியில் கண்டபோது மகவம் வேல் அமுதன் இச்சந்திப்பு நிகழ்வு பற்றிச் சொன்னார். சட்டத்தரணி மகாதேவனும் அதேதான் தமது விருப்பமெனத் தொலைபேசியில் சொன்னார். நான் ஒப்புக் கொண்டேன். அதன் விளைவே இக்கூட்டம். மண்டபம் நிறைந்த அபிமானிகள் வந்திருந்திருக்கிறார்கள். இதைக் கனடாவில் சொல்வேன். என்னால் அதிகம் அறியப்படாத மாவை வரோதயன் அரங்கில் இது நிகழ்வது மனதுக்கு நிறைவாக இருக்கின்றது.

குறிப்பெழுதாது பேசுவது இதுவே முதல் தடவை. வரோதயன் மனித நேயம் படைத்தவர். சொல்வதொன்று செய்வதொன்றாக இருப்பதை ஏற்கமாட்டேன், மதிக்கமாட்டேன். வரோதயன் வாழ்க்கையைப் பற்றி அறிந்தேன். 29 ஆண்டுகளாகக் கனடாவில் இருக்கிறேன். அங்கு கலை இலக்கியம் நல்ல முறையில் வளர்க்கப்படுகிறது. பல முயற்சிகள் மேற் கொள்ளப்படுகின்றன. கிடைக்கின்ற வசதிகளும் இதற்குக் காரணமாக இருக்கின்றன. இருந்தும் காலநிலைதான் தடைபோடுகின்றது.

சில காலத்தில் குளிர் -35 பாகை, -45 பாகை டிகிரிக்கும் சென்று விடுவதுண்டு. பொருளாதார மேம்பாடு உண்டு. வாகனம் இல்லாதவரில்லை. ஈழத்தில் ஏற்பட்ட கலவரத்தைத் தொடர்ந்து தமிழ் பேசும் மக்கள் இடம்பெயர்ந்தனர். இது 1983 லிருந்து தொடர்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடந்த எட்டாண்டுகளாகக் கலை இலக்கிய முயற்சிகள் களைகட்டத் தொடங்கின. 'யார் இந்த குவேனி?', இது செல்வராசா எழுதியது. ரொறொன்டோவில் தான் முதன் முதல் தமிழ் அச்சுக்கூடம் ஆரம்பிக்கப்பட்டது. கணினி முறையிலான அச்சகங்கள் கனடாவில் இப்போ நிறைய உண்டு. பத்திரிகைகள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. 'செந்தாமரை'யே. முன்னோடி, 'தமிழருவி' 'தாயகம்' என்பன நின்று விட்டன. 'உலகத் தமிழன்' 'உதயன்' 'முரசொலி' 'விளம்பரம்' 'தாய்வீடு' 'தீபம்' என்பன இப்போ வெளிவந்து கொண்டிருக்கும் ஏடுகளாகும். இளங் கனடா எழுத்தாளரையும் இவை காணவைக்கின்றன. பண்பாடு, ஒழுக்கம் யாழ்ப்பாணத்தில் சீர்குலைகின்றது. ரொறொன்றோவில் கனகசபாபதி பண்பாட்டைக் கட்டிக்காத்தார். அந்தக் காலத்தில் படிப்பிக்கும்போது ஆணோடு பெண்பேசினால் தண்டித்தவர்கள், இப்போ வெறொன்று பேசுகின்றனர்.

அங்கு நிறையக் கல்விமான்கள் இருக்கின்றனர். இளம் சந்ததியினர் எழுதுகின்றனர். 'தமிழர் தகவல்' எஸ்.திருச்செல்வத்தால் 21 ஆண்டுகளாக நடாத்தப்பட்டு வருகிறது. அதைப் பார்த்து யார், யார் கனடாவில் புலம்பெயர் எழுத்தாளர்களென அறியலாம். காலத்துக்கு ஏற்றவகையில் கட்டுரைகளை எழுதுகின்றனர். பேராசிரியர் நா.சுப்பரமணியம் இருக்கிறார். குறமகள், பொன். குலேந்திரன், உதயணன், சேரன், செழியன், இரா.சம்பந்தன், துறையூரான் ஆகிய இலக்கியவாதிகளும் எழுதுகின்றனர். வானொலியில் கவிதை அரங்கு நடத்துகிறேன். புலவர் மயில்வாகனம், முருகவேள் பரமநாதன், ராஜ்மீரா, குரும்பசிட்டி இராசரெத்தினம், பொன்னையா விவேகானந்தன், நக்கீரன், ஈழத்துப் பூராடனார், வித்துவான் செபரெத்தினம், பாலசுந்தரம், எஸ்.திருச்செல்வம், வசந்தா நடராசன் போன்றோர் தமிழ்ப் பணி செய்கின்றனர்.

நாடகக் கலை சிறப்பாக வளர்த்தெடுக்கப்படுகிறது. நாடக விழாக்கள் நடைபெறுகின்றன. 'மனவெளி' நாடக அமைப்பு இயங்குகிறது. நல்ல நாடகங்களை அரங்கேற்றுகிறது. 'இரண்டுக்கும் நடுவே' நல்ல நாடகம் குழந்தைகள் படும் பாட்டை அற்புதமாக மேடையில் காட்டுகிறது. அற்புதமான நடிகர் கே.எஸ்.பாலச்சந்திரன். 'வானவில்' என்ற நிகழ்ச்சி உடுப்பிட்டி, அமெரிக்க மிஷன் பாடசாலைக்கு நிதி உதவி செய்யும் பொருட்டு நடாத்தப்பட்டது. திவ்வியராஜன் மற்றுமொரு கலைஞர். 'திகம்பர சக்கரம்' 1000 தடவைகள் மேடையேற்றப்பட்டது. கணபதி ரவீந்திரன் இதில் வெறிகாரனாக நடிக்கிறார். நடிகவேள் எம்.ஆர்.ராதா இரத்தக் கண்ணீர் நாடகத்தில் (படமும்) நடித்தது போல் ஒரு அரங்காற்றுகையில் பேசி நடித்த வசனத்தை அடுத்த ஆற்றுகையில் பேச மாட்டார். அச்சுதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளை, கோதை அமுதன் ஆகியோரும் சிறப்பான கலைஞர்கள். கனடாவில் மாதமிரு நூல்கள் வெளியாகிக் கொண்டிருக்கின்றன. இங்கிருந்து தான், அதிகமான புலம்பெயர்ந்தோர் இலக்கிய நூல்கள் வெளியாகிக் கொண்டிருக்கின்றன. இதைச் சொல்லும் போது எழுத்தாளர் எஸ்.பொ. என்ன குண்டுச் சட்டிக்குள் குதிரை ஓட்டும் கதையா? என்கிறார். வெளியிடும் புத்தகங்கள் தமக்குக் கிடைப்பதில்லை எனக் குறைபடுகிறார். அதுதான் தமிழ் எழுத்தாளனின் தலைவிதி! படைப்பாளியே சகலதையும் செய்ய வேண்டியிருக்கிறது. வெளியாகிக் கொண்டிருக்கும் நூல்களை ஏற்ற முறையில் விநியோகம் செய்யக் கூடிய கரிசனையுள்ள அமைப்புகள் எங்களிடமில்லை.

வருமானத்துக்காக நாம் எழுதுவதில்லை. மகாகவி பாரதி சொன்னார் 'எமக்குத் தொழில் கவிதை எழுதுவது' என்று. தமிழோடு இரண்டறக் கலந்து உறவாடியவர்கள் தினசரி எதையாவது எழுதாது இருக்க முடியாது. குயில் எப்படிக் கூவாமல் இருக்க முடியாதோ, மயில் எப்படி ஆடாமல் இருக்க முடியாதோ அப்படியே எழுத்தாளனும் எழுதாமல் வாழ முடியாது. செல்வா 'இலங்கையன்' காலமாகிவிட்டார். அயலில் வாழ்ந்த பிள்ளைகளை அழைத்து அவர் போன்ற கல்விமான்கள் தமிழைக் கற்பித்தார்கள். கனடாவில் மனித உரிமைச் சாசனத்தின் படி சகல இனங்களும் அதன் மொழியை, கலாசரத்தை வளர்க்க உரிமை உண்டு.

22 பிள்ளைகள் சேர்ந்தால் கற்பிக்க ஒரு ஆசிரியரைப் பெற முடியும். அரசாங்கம் நியமிக்கும். இதற்கு ஒத்துழைப்பு இருக்கவில்லை. இது எனது மனதில் சுமையாக இருந்தது. சில பிள்ளைகளுக்கு முதியோர் தமிழ்க் கல்வியைப் பாரம்பரியங்களைக் கற்பிக்கின்றனர். முதியவரொருவரது மரண வீட்டில் அவரது பேரன் தேவாரம் பாடினான். நான் புகலிடக் குழந்தைகளுக்குத் தாய்மொழி, பண்பாடு என்பவைகளை வற்புறுத்தி உரை நிகழ்த்தினேன். பக்கத்திலிருந்த இன்னொரு தமிழர் அது எதுக்கெனக் குறைபட்டார். பயன்கருதி அல்ல. புலத்தில் தமிழ்க்கல்வி அது உரிமை.

பரத நாட்டியக் கலை மிக அற்புதமாக வளர்க்கப்படுகிறது. நிரஞ்சனா சந்துரு கலாமன்றமொன்றை நடத்துகிறார். திறமையுள்ளோருக்குப் பட்டமளிப்பும் செய்கின்றனர். வாசுகி சின்னராசா, பத்மினி, சிவசக்தி ஆகியோரும் இதில் சம்பந்தப்பட்டிருக்கின்றனர்.

சங்கீதம், மிருதங்கம் என்பனவும் உன்னதமான கவனத்தைப் பெறுகின்றன. தமிழிசை வளர்க்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வானொலியின் ஆதரவும் கிடைக்கிறது. CTBC என்ற வானொலியில் 'நகர வலம்' என்ற நிகழ்ச்சி நடத்தப்படுகிறது. மூன்றாண்டுகளாக எனது வரலாறு ஒலிபரப்பப்பட்டது. இது 500 பக்கங்களில் நூலாக்கப்பட்டுள்ளது. கீதவாணி தொலைக்காட்சி தமிழ் நிகழ்ச்சிகளை ஒளிபரப்புகின்றது. சொல்லப் போனால் இன்றுள்ள சந்ததி நம்பிக்கையைத் தருகின்றது. அடுத்தடுத்த சந்ததிகள் எப்படி இருக்குமோ..? ஈழத்தமிழர் எங்கு குடிபெயர்ந்தாலும் தமிழை வளர்ப்பார்கள். உரத்த கஷ்டங்களின் மத்தியிலும் இங்கு இலக்கியத்தை வளர்க்கிறார்கள். உள்ளத்தை உருக்கும் வரலாறு ஈழத்தின் இன்றைய கால கட்டத்துக்கு உண்டு. இங்கு நல்ல கவிஞர்கள் இருக்கிறார்கள். யாழ்ப்பாணத்தில் 'உதயன்' பத்திரிகைக்காகத் தேவி பரமலிங்கம் என்னிடம் பேட்டி எடுத்தார். குரும்பசிட்டியில் வாழ்க்கையில் துன்பப்பட்டுக் கொண்டிருக்கும் அநாதரவான 21 பேருக்குத் தலா ரூபா 5 ஆயிரம் கொடுத்து உதவினார். கஷ்டங்களின் மத்தியிலும் சுதந்திரத்தைப் பேண வேண்டும்.

*கூட்டத்துக்கு வருகை தந்திருந்த சிலரும் சுருக்கமான உரைகளை நிகழ்த்தினர்.*

## பேராசிரியர் கனகசபாபதி நாகேஸ்வரன்

கவிநாயகர் என்பதில் 'விநாயகர்' இருக்கிறார். சமய நம்பிக்கையினால் தான் நம்மினம் வாழ்கிறது. தமிழுக்கு ஏற்றந் தந்த தமிழ்த் தலைமைக் கவி எனப் பத்து வருடங்களாகக் கூறி வருகிறேன். அநாயாசமாக எதுகை மோனையோடு கவிதை சொல்வதில் உலகத்தில் முதன்மை வகிப்பவர் கந்தவனம். சமயத் தடம் இருக்கும் வரை தமிழ் அழியாது. தோடுடைய செவியன் என்ற தேவாரத்தை இங்கிலீசிலும் எழுதிப் பாடுகிறார்கள். சம்பந்தரின் தமிழ் ஆங்கிலத்திலும் இருக்கின்றது. ஆத்மஜோதி ஒரு காலத்தில் ஆங்கித்தில் வரும்.

## சைவப் புலவர் சி.செல்லத்துரை

1960 இல் கந்தவனத்தை சன்மார்க்க சபையில் சந்தித்தேன். பட்டிமன்றங்களில் இவரோடு பங்குபற்றினேன். தாம் பிழைக்க வேண்டுமென்பதற்காகப் பத்திரிகைக்காரர்கள் விடய 'தானம்' செய்யச் சொல்வர் என்பார் கனக செந்திநாதன். அப்போ அப்படித்தானம் செய்யும் எழுத்தாளர் கதி என்ன? யாழ், வேர் ஓடி நிலத்தில் முளைத்தாலும் கனடாவில் ஐரோப்பாவில் பூத்துக்காய்த்து வருகிறது. இழுபறிதான்! அங்கு தமிழ் வாழ்வது ஆறுதல் தருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சட்டத்தரணி சு. க. சிவபாதம்**

கந்தவனம் 1960-1964 களுக்கு இடைப்பட்ட காலத்தில் எமக்குக் கற்பிக்க வந்தார். புவியியல் பாடத்தைக் கற்பித்தார். மீசையோடு வித்தியாசமான ஆசிரியராக இருந்தார். இப்போ மீசையை எடுத்துவிட்டார். கலகலப்பானவர். குரும்பசிட்டியில் தானொரு சிறந்த கவிஞரென்பதை நிலைநாட்டினார். 1989 இல் ஊரை விட்டுச் சென்றார். துக்கப்பட்டோம்.

**மூத்த பத்திரிகையாளர் ஆ.சிவனேசச்செல்வன்**

அம்பனையில் 30 ஆண்டுகளுக்கு முன்னர் கவி அரங்கு நடாத்தியது மனதில் இழையோடியது. கவிநாயகரின் பேச்சு கனடாவின் இலக்கியப் பாரம்பரியத்தை அறிமுகம் செய்தது. சும்மா இருக்கும் சுகம் அற்புதமானது. அடுத்த ஆண்டு கனடாவுக்குப் புலம்பெயர இருக்கிறேன். இலக்கியத்துக்கு அங்கு அற்புதமான தடம் இருக்கிறது. கன வேலைகளை அங்கு செய்ய முடியும். பத்திரிகைத்துறைக்கு வந்த பின் கசடுகள், நெருடல்கள் மத்தியில் இருக்க வேண்டிய நிர்ப்பந்தம். யாழப்பாணத்தில் ஆரோக்கியமான சூழ்நிலையில் இலக்கிய வேலைகளைச் செய்தோம். மஹாகவி, சில்லையூர் செல்வராசன் ஆகியோரோடு கவிதைக் கடிதமெழுதித் தொடர்பு கொண்டோம்.

இங்கு புத்தகம் போட்டு கெட்டுப் போகலாம். நூலாக்கத்தக்க 10 எழுத்துப் பிரதிகள் உண்டு. புலம்பெயர்ந்தோர் இலக்கியத்தில் ஆர்வமுண்டு. இப்போது கதைக்க முடியாது. மீண்டும் தொடங்கும் பழைய மிடுக்கு. 'செந்தாமரை' என் கட்டுரைகளை வெளியிட்டது.

**எழுத்தாளர் பத்மா சோமகாந்தன்**

உலகம் சுற்றும் தம்பதி கந்தவனம் தம்பதி. கனடாவில் நாடக 'விழாவொன்றுக்கு' பிரதம விருந்தினராக வந்திருந்தார். அப்போ நானும் 'என் கணவர்' சோமகாந்தனும் அங்கிருந்தோம். கனடாவின் தேசிய கீதத்தை தமிழில் மொழி பெயர்த்தவர் கந்தவனம். கனடாவிலுள்ள ஆலயங்களில் கலாசாரம் மிகவும் ஒழுங்காகப் பேணப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நன்றியுரை :**
**கவிஞர் மா. குலமணி**

கவிநாயகர் க.கந்தவனம் சிறந்ததோர் சிறுகதைப் படைப்பாளியென்பது 'அடக்கியே' வாசிக்கப்படுகிறது. 2004 இல் இலண்டனில் பத்மநாப ஐயரோடு பத்திரிகை நடாத்திக் கொண்டிருந்த போது, கந்தவனத்தின் சிறுகதையொன்று பிரசுரத்துக்கு வந்தது. 'பகைவனுக்கு அருள்வாய்' குமார், சூசன் என்ற கீழைத்தேய ஆணுக்கும் மேலைத்தேயப் பெண்ணுக்குமான காதல் கதை. சூசன் பண்புள்ள பெண்ணாகச் சித்திரிக்கப்பட்டிருந்தார். அவள் அப்பாவின் பாத்திரப்படைப்பும் என்னைக் கவர்ந்தது. ஆனால், குமாரின் மரபுப் பாரம்பரியங்களைப் பேணும் தமிழ்ப் பெற்றோர் இருவரையும் பிரிக்க முயன்றனர். பிரித்து வைத்தும் பார்த்தனர். சமூகத்தை வாழ வைக்கும் தன்மையே சிறுகதை. எமது மொழிக்கு இலக்கணத்தை வகுக்க வேற்று நாட்டவரான வீரமாமுனிவர் வரவேண்டி இருந்ததை நாம் மறக்கக்கூடாது. மகவம் 1980இல் ஆரம்பிக்கப்பட்டது. ஊரெழுவில் தான் தவழத் தொடங்கியது. அங்கே தான் மாவை வரோதயனைக் கண்டேன். மகவம் குரும்பசிட்டி, ஊரெழு ஆகிய இடங்களில் 41 கருத்தரங்குகளை நடாத்தி இருக்கிறது. கொழும்பில் சாதனையை நிலை நாட்டியது. சிறந்த தொழிலாளி, ஓவியர், குடும்பத்தலைவி என்போரைக் கௌரவித்துப் பாராட்டி இருக்கின்றது.

சங்கீத பூஷணம் திருமதி, நேச பூபதி நாகராஜனின் தமிழ் வாழ்த்துப் பாடலோடு நிகழ்வு நிறைவு பெற்றது.

-07/08.12.2009

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7

## வி. ரி. வி. தெய்வநாயகம்பிள்ளை ஒரு திறந்த புத்தகம்

**அ**ண்மையில் அமரரான பிரபல தொழிலதிபர் தேசபந்து வி.ரி.வி. தெய்வநாயகம்பிள்ளையின் அஞ்சலிக் கூட்டம் 09.03.2008 ஆம் திகதி கொழும்பு கொட்டாஞ்சேனை, ஐங்கரன் மண்டபத்தில் நடைபெற்றது.

சி.பாலசுப்ரமணியம் (கனடா) தலைமை தாங்கினார். அருட்கலைத் திலகம் வே.தம்பிராசா தேவாரம் பாடி நிகழ்வைத் தொடக்கி வைத்தார். ஸ்ரீ வரதராஜ விநாயகர் ஆலய அறநெறிப் பாடசாலை மாணவிகள் பஜனை பாடினர்.

### தலைமை உரை: சி. பாலசுப்பிரமணியம்

தெய்வநாயகம்பிள்ளை 6 வயதில் தந்தையையும் 10 வயதில் தாயையும் இழந்தவர். 12 வயதில் இலங்கைக்கு வந்தார். உடுப்புக்கும் சாப்பாட்டுக்குமாகக் கடையில் வேலைசெய்தார். ஐயா' பாவனையாளர் களோடு பழகும் விதத்தைக் கண்டு மகிழ்ந்த கடை உரிமையாளர் ஐயாவுக்கு மாதம் 20 ரூபா சம்பளம் கொடுத்தார். அன்றைய நிலையில் இது பெரிய பணம். மருதானை, தெமட்டக்கொடை போன்ற இடங்களில் வேலை செய்திருக்கிறார்.

தனது கடந்த காலத்தை எண்ணிப் பார்த்தே தன் சந்ததியை நல்ல நிலைக்குக் கொண்டுவர வேண்டுமென்ற ஊக்கத்தோடு உழைத்தார். அரச மரமொன்றின் கீழ் புத்தர் சிலையை வைப்பதற்கு உதவினார். எவ்விதமான துவேஷமும் காட்டாது அனைவரையும் அரவணைத்து வாழ்ந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திறமையைக் கண்டு பாராட்டினார், உதவினார். கஷ்டமான நேரத்தில் மற்றவர்களைத் தூக்கிவிட்டார். அவரின் கருணை உள்ளமும் எளிமைத் தோற்றமும் தன்னடக்கமுந்தான் அவரை இன்றொரு பெரியாராகக் கணிக்க வைத்தவை. இந்நாட்டில் அனைத்து ஜனாதிபதிகளோடும் நல்லுறவைக் கொண்டிருந்தார். இதனால், இந்நாட்டின் பெரிய விருதுகளான தேசபந்து, விஸ்வபிரசாதினி ஆகிய விருதுகள் அவருக்குக் கிடைத்தன.

## அஞ்சலி உரைகள்:
## ஆர். வைத்த மாநிதி

"அரிது அரிது மானிடராகப் பிறப்பது, அதனிலும் அரிது வி.ரி.வி.போன்ற உதார புருஷர்களாகப் பிறப்பதாகும்." அடிமட்டத்திலிருந்து ஆரம்பித்துத் தனது சலியா உழைப்பால் தனக்கென்றொரு சாம்ராஜ்யத்தை உருவாக்கியவர். அதில் தானும் வளமாக வாழ்ந்து குடும்பங்களையும் வாழவைத்தார். மனித நேயம்கொண்ட மாமனிதர். நன்றி மறவாதவர். சோதனைகளைச் சாதனைகளாக்கிய வியத்தகு பெரியார். ஐயாவுக்கு திருமணம் நடந்த பின்னர் இலங்கைக்கு மனைவியோடு வந்து வாழ ஒரு வீடு தேவைப்பட்டது. இதை நண்பரொருவருக்கு அறிவித்தார். அவரும் தனது வீட்டருகே வசதியான வீடொன்றை ஏற்பாடு செய்தார். அங்கு வந்து அவர் தனது இல்லற வாழ்வைத் தொடங்கினார். கந்த சஷ்டி விழாவை முன்னேஸ்வர தேவஸ்தானத்தில் மிக எளிமையான முறையில் நடத்த ஏற்பாடுகள் செய்தார். சஷ்டி விழா நாயகனை வாழ்த்த தகுதியான ஒருவர் தேவை. ஐயாவோ நாடறிந்த பெரியார். தனக்கு வீடு ஒழுங்கு செய்தவரையும் மனைவியையும் தன்னை வாழ்த்த அழைத்தார். அவர்கள் அப்பொழுது பொருளாதாரத்தில் மிகவும் அடிநிலையில் இருந்தனர். இருந்தும் தான் நொந்து போய் இருந்தபோதும் தனக்குச் கைகொடுத்தவர்களை மறக்காது கௌரவித்தார். அந்தப் பண்புதான் அவரை மாமனிதனாக்கியது.

இறந்த பின்னர் எதையெதையோவெல்லாம் புழுகலாமென எம்மத்தியில் கதைப்பதுண்டு. இப்பொழுது நான் சொன்ன பழைய சம்பவமும் அப்படியானதெனச் சிலர் நினைக்கக் கூடும். ஆனால், அதில் உண்மையுண்டு. ஐயாவுக்குப் புதுவீடு எடுத்துக் கொடுத்தவர் எனது தந்தையார் தான். தமிழுக்குத் தொண்டு செய்பவர்கள் இறப்பதில்லையென்பர். தெய்வநாயகம்பிள்ளை தமிழுக்கும் சமயத்துக்கும் பெருந்தொண்டு செய்தவர். அவருக்கு இறப்பில்லை. நாங்களனைவரும் அவரின் மனைவியாருக்குக் கடமைப்பட்டுள்ளோம். அவரை மக்களால் இனங்காண வைத்தவர் அந்த அம்மையார் தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எழுத்தாளர் பத்மா சோமகாந்தன்

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான் உறையும் தெய்வத்துள் வைக்கப்படும்" என்றார் திருவள்ளுவர். வி.ரி.வி.ஐயாவுக்காகத்தான் திருக்குறள் படைக்கப்பட்டதா? என எண்ணத் தோன்றுகின்றது. அவரை மையமாக வைத்தே இயற்றப்பட்டதா? என்ற உணர்வையும் தருகின்றது. அநேக குறள்கள் வி.ரி.வி. க்கும் பொருத்தமாகவே இருக்கின்றன. பொருட் செல்வம் மனிதரை விட்டு நீங்கக் கூடியது. எனவே அதை நம்பாமல் நிலையான அறத்தைச் செய்ய வேண்டும். ஐயா சோதனைகளைச் சாதனையாக்கிக் காட்டியவர். அவர் ஒரு சிறந்த புத்தகமாகவே வாழ்ந்தார். அவரது இறப்புச் சகல உள்ளங்களிலும் தைத்துவிட்டதை அவரது இறுதி ஊர்வலம் காட்டியது. அவர் நடமாடும் பல்கலைக்கழகம். 5ஆம் வகுப்பு வரையே படித்தவர். மற்றவர்களது உள்ளங்களை உணர்ந்து கொள்ளும் உளநூல் வல்லுநராக வாழ்ந்தார். ஆண்டவன் படைப்புகள் அனைத்தும் ஒன்றே என வாழ்ந்தவர்.

இரவு 9 மணி வரை உழைத்தார். சிறந்த முருக பக்தர். வி.ரி.வி. அறக்கட்டளை மூலமாக ஏழை மாணவர்களுக்கு உதவினார். புனித ஜுட் என்ற கிறிஸ்தவ தேவலாயத்தை வழிபாடு செய்ய கிறிஸ்தவர்களுக்கு உதவினார். இஸ்லாமியரின் பள்ளிவாசல் அமைக்க இலவசமாக காணி வாங்கிக் கொடுத்தார். சமயங்களின் உயர்வுக்காக ஐயா இவைகளைச் செய்தார். மலையகத்திலுள்ள ஒரு பின் தங்கிய கிராமத்தில் பாடசாலை அமைத்துக் கொடுத்தார். இந்தப் படிக்காத மேதை பிற நாட்டில் பிறந்திருந்தால் பெரிய மகாத்மாவாகத் திகழ்ந்திருப்பார். ஒருவரைக் காணும்போது "முருகா" எனக் கை குவிப்பார். இந்த முருகா என்ற மூவெழுத்துக்கள் எளிமை, உழைப்பு,அன்பு என்பவற்றையே குறிப்பன.

## ஏ. ஈ. அருணாசலம்

சாதாரண மனிதர் மாமனிதரானார். மகாகவி பாரதி சொன்னார்: "இன்னறுங்கனிச் சோலைகள் செய்தல் இனிய நீர்த்தண் சுனைகள் இயற்றல் அன்னசத்திரம் ஆயிரம் வைத்தல் ஆலயம் பதினாயிரம் நாட்டல் பின்னருள தருமங்கள் யாவும் பெயர் விளங்கியொளிர நிறுத்தல் அன்ன யாவினும் புண்ணியம் கோடி ஆங்கோர் ஏழைக்கெழுத்தறிவித்தல்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாமா கல்விக்கெனச் செய்த தொண்டு கல்லில் எழுத்துப் போல அவரது பெயரை நிலைக்க வைக்கும். அவர் செழிப்பான குடும்பத்தில் பிறந்திருந்தால் அவருக்கு இத்தகைய சிறப்புகள் கிடைத்திருக்காது. அவரது உள்ளம் போல் அவருக்குப் பெரு வாழ்வு கிடைத்தது.

## கம்பவாரிதி இ. ஜெயராஜா

ஐயாவுக்கு அஞ்சலி தெரிவிக்க எனக்குக் கிடைத்த இரண்டாவது வாய்ப்பு இது. இங்கு பேசப்பட்ட பேச்சுக்களில் சோகமே மிகுந்திருந்தது. அவரை சோகத்தோடு நினைவு கூராது, சந்தோஷத்தோடு நினைக்க வேண்டும். உலக வாழ்வென்பது பெரும் கனவு. மரணம் இயற்கையானது. ஐயா பூரணமான வாழ்வை எழுதிவிட்டுச் சென்றிருக்கிறார். அவர் எதைச் சாதித்தார்? அதன் முக்கியத்துவம் என்ன? தனித்துவம் என்ன?

முருகனுக்கு ஆறுமுகங்கள், குடும்ப வாழ்க்கையில் எமக்கும் பல முகங்களுண்டு. அலுவலக முகம். மனைவிக்குக் காட்டும் முகம். பிள்ளைகள் - பேரப்பிள்ளைகளுக்குக் காட்டும் முகம். இப்படி எத்தனையோ முகங்கள். ஒரு நல்ல தந்தை மறைந்துவிட்டார். அவர் நல்ல உழைப்பாளி. நல்ல பாட்டனார். மாமன், சம்மந்தி. உழைப்பால் முன்னேறலாம் என்ற நம்பிக்கையைத் தந்தவர். ஒப்பற்ற முருக பக்தர். தெய்வநாயகம்பிள்ளை ஐயாவுக்கு 6 முகங்களல்ல நூறு முகங்கள்! அவரிலிருந்து துளிர்த்த குருத்துக்களிடம் நல்ல தன்மைகளைக் காண முடிகின்றதென்றால் அது ஐயாவின் வேரிலிருந்தே எழுந்தவை. அவரிடம் அறம் சொல்லவைத்த முகம், தொழிலாளி முகம் இருந்தன. கடைசிக்காலம் வரை தனது தொழில் நிறுவனத்தைத் தனது மேற்பார்வையிலேயே வைத்திருந்தார். குறிப்பிட்ட நேரத்தில் அலுவலக மேசையில் உட்கார்ந்திருப்பார். கணக்குக்குப் பொறுப்பாக இளைஞரொருவர் ஐயாவுடன் வேலை பார்த்தார். ஒரு கணக்கில் ரூபா 10 வித்தியாசப்பட்டு விட்டது, குறைந்துவிட்டது. சின்னக்காசு பத்து ரூபா என்ற நினைப்பில் அந்த இளைஞர் தனது பையில் இருந்த 10 ரூபாவைச் சேர்த்துக் கணக்கைச் சமன்படுத்திவிட்டார். அடுத்த நாள் காலை ஐயா வந்து கணக்குப் பேரேடுகளைச் சரி பார்த்தார். சம்பந்தப்பட்ட இளைஞரைக் கூப்பிட்டார்.ரூபா 10 வித்தியாசப்பட்டிருக்குமே எனக்கேட்டார். என்ன செய்தீர்? எனக்கேட்டார். பதற்றத்தோடு இளைஞர் நடந்ததைச் சொன்னார். அப்பொழுது ஐயா சொன்னார், குறைந்த காசை உன் பொக்கட்டுக்குள் இருந்த காசைப் போட்டுக் கணக்கை சரிபடுத்திவிடாதே. காசு கூடியிருந்தால் கூடியதை எடுத்து உனது பொக்கட்டுக்குள்ளும் போட்டு விடாதே. அவரது இந்த ஆலோசனையைக் கேட்ட அந்த இளைஞர் இன்று வாழ்வில் உயர்ந்துவிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகல மனிதர்களாலும் ஈர்க்கப்பட்டார். தொழிலாளிகள் ஒருநாள்' சாப்பிடாது வேலை செய்வதைக கண்டுவிட்டார். உடனே தொழிலை நிறுத்திச் சாப்பிடும்படி கூறினார். அவரது முகங்கள் அனைத்துமே வாழ்வில் வெற்றி கண்டன. தோற்ற முகமென்று ஒன்று இருக்கவில்லை. சாப்பிடுவதில் ஒழுங்கிருந்தது. குறிப்பிட்டவைகளைத் தான் சாப்பிட்டார். அமிர்தத்தைக் கொடுத்தாலும் சாப்பிட்டுப் பழகாததைச் சாப்பிடமாட்டார்.

சங்க இலக்கியத்தில் ஒரு சம்பவம், அரசன் இறந்துவிட்டான். அவனைப் புதைப்பதா? எரிப்பதா? என்ற தடுமாற்றத்தில் அமைச்சர்கள் தடுமாறினர். மறைந்த அரசனின் நல்ல நண்பரான புலவரொருவர் வந்தார். அவரிடம் பிரச்சினையைச் சொன்னார்கள். அதற்குப் புலவர் சொன்னார் மன்னன் பூரணமான வாழ்வை அனுபவித்தவன். அவன் உடலைச் சுட்டாலென்ன புதைத்தாலென்ன? எனக் கூறிவிட்டு நகர்ந்தார். அத்தகைய வாழ்வைக் கண்டவர்தான் தெய்வநாயகம்பிள்ளை ஐயா, அவருக்காக ஒருவரும் வருந்தவேண்டாம்.

*பாலா சபாரத்தினம், ஏ.சுப்பிரமணியம், நல்லசிவம் ஆகியோரும் அஞ்சலி தெரிவித்துப் பேசினர்.*

*மாவை சோமசுந்தரம் அஞ்சலி கவிதை பாடினார். ஈஸ்வரன் தெய்வநாயகம் பிள்ளை நன்றி கூறினார்.*

- 12.03.2008

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 8

## பேராசிரியர் கைலாசபதி நினைவுப் பேருரை

இலங்கை முற்போக்குக் கலை இலக்கியப் பேரவையும் பேராசிரியர் க. கைலாசபதி நினைவுக் குழுவும் இணைந்து 6.12.2009 ஆம் திகதி பேராசிரியர். க.கைலாசபதியின் 27 ஆவது நினைவு தினத்தை முன்னிட்டு நினைவுப் பேருரையொன்றை ஒழுங்கு செய்திருந்தன. 'மார்க்சியமும் உளவியலும்' என்ற தொனிப் பொருளிலான இப்பேருரையைப் பேராசிரியர் சபா.ஜெயராசா நிகழ்த்தினார். கவிஞர் ஏ.இக்பால் தலைமையேற்ற இந்நிகழ்வு, கொழும்பு வெள்ளவத்தையில் உள்ள பெண்கள் கல்வி ஆய்வு மையக் கேட்போர் கூடத்தில் நிகழ்ந்தது.

**தலைமையுரை :**
**கவிஞர். ஏ. இக்பால்**

பேராசிரியர் க.கைலாசபதியோடு எனக்கு உறவுகள் அதிகம். பதுளையில் படிப்பித்துக் கொண்டிருந்த போது பேராசிரியர் தினகரன் பிரதம ஆசிரியராக இருந்தார். அடிக்கடி சந்திப்பேன். சில்லையூர் செல்வராசன் கொள்ளுப்பிட்டியிலிருந்த போது அவரது இல்லத்தில் கைலாஸ், எஸ்.பொன்னுத்துரை, அ.ந.கந்தசாமி, பிரேம்ஜி, காவலூர் ராஜதுரை ஆகியோர் கூடுவோம். சேர்ந்து நடந்து கோல்பேசுக்குப் போவோம். அப்போ அவர்கள் பேசும் இலக்கியம் எனக்கு விளங்காது. இச் சந்தர்ப்பங்களில் நான் கொடுக்கும் கவிதைகளை கைலாஸ் மடித்து பொக்கற்றுக்குள் வைப்பார். அது வராது. பின், கருத்தைத் திணித்திருக்கிறாய். பிரசுரத்துக்கு ஏற்றதல்ல. திருப்பி எழுது என்ற குறிப்போடு கவிதை வரும். அவர் எங்களை வழி நடத்தினார். தற்காலத்தில் இப்படி எந்தப் பத்திரிகையில் நடக்கின்றது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விவேகானந்த மண்டபத்தில் அ.ந.கந்தசாமி மார்க்சிஸ வகுப்புகளை நடத்தினார். எம்.எஸ்.எம். இக்பால், அப்துல் லத்தீப் சேர்ந்தால் இலக்கியம் தான் பேசுவோம். 1972 இல் தினகரன், 'எழுத்துலகம்' பகுதியில் எனது பேட்டி வெளியாகியது. கேள்விகள் ஆறு. இரு கேள்விகளுக்கு இப்படித்தான் பதில் சொல்ல வேண்டுமென கைலாஸ் சொன்னார். எங்களுக்குப் புத்திகளைக் கூறி வழி நடத்தினார். இத்தகைய ஆற்றல் மிக்கோரின் செம்மைப்படுத்தல்கள் இப்போ இல்லை. அவரது வீட்டு நூலகத்தில் மொழிபெயர்ப்பு நூல்கள் நிறைய இருந்தன. என்னத்துக்குப் படித்திருக்கிறோம்? தமிழில் மொழிபெயர்க்க முடியாத நிலை இருக்கின்றது. கைலாஸ் சிறந்ததோர் இலக்கியவாதி, ஆங்கிலம் படித்தவர். கைலாசபதி, கா. சிவத்தம்பி, சில்லையூர் செல்வராசன் ஈழத்து இலக்கியம் பரவுவதுக்கு நிறையவே உதவி இருக்கின்றனர்.

**நினைவுப் பேருரை :**
**'மார்க்சிய உளவியலும் அழகியலும்' பேராசிரியர் சபா. ஜெயராசா**

இரு மாத அவகாசம் இருந்ததால் பல நூல்களைப் படித்தேன். 200 பக்கங்களுக்கும் மேலாகத் தகவல்களைத் திரட்டினேன். பேராசிரியர் கைலாசபதி எமது காலத்தில் வாழ்ந்த அறிகை விசை. அவரது அறிவைப் பல நிலைகளிலும் அறிய வேண்டும். அறியப்படுத்த வேண்டும். தமிழியல் ஆய்வுத் தரத்தைச் சர்வதேசத்துக்கு எடுத்துச் சென்றவர். சிறந்த விரிவுரையாளர், அவரது விரிவுரைகள் முன் ஆயத்தம் செய்யப்பட்டவை களாக இருக்கும். கனதியாகவும் இருக்கும். ஒருவர் செல்வாக்குப் பெற அவரது அறிவுப் பலந்தான் காரணமாக இருக்கும். யாழ். பல்கலைக் கழகத்தில் புலமை சார்ந்த ஆராயப்படாத துறைகளை அறிமுகப்படுத்தினார். பொருளியல், கவின் கலைகள் போன்ற நவீன பாடங்களைக் கற்க ஆவன செய்தார். யாழ் இராமநாதன் நுண்கலைக்கழகத்தை யாழ். பல்கலைக்கழகத்தோடு இணைத்தார்.

நுண்கலைகளுக்கான பட்டப்படிப்பை ஆரம்பித்தோம். புலமை எழுச்சிக்கு அடித்தளமிட்டார். அவரது சாதனைகளில் யாழ். பல்கலைக்கழகத்து நூலகம் மற்றொன்று. அதன் கட்டட அமைப்பு வித்தியாசமானது. நூலகக் கூடத்துள் சுவர்கள் இல்லை. நூலகத்தில் ஆழ்ந்த கவனத்தைச் செலுத்தி அதை விரிவுபடுத்த உதவினார்.

மார்க்சியம், உளவியலைக் கருதுவதில்லை என்றொரு கண்டனம் இருக்கிறது.

'MARXISM THEORY OF PERSONALITY' என்ற நூலை எடுத்த போது அதன் முதல் பக்கத்தில் பேராசிரியர் கைலாசபதியின் கையெழுத்திருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதேபோல் இன்னொரு நூலிலும் அவரது கையெழுத்திருந்தது. கைலாஸ், கைலாசநாத குருக்கள், கனகராயர் ஆகிய மூன்று தமிழ்ப் பெரியார்களது நூல்கள் யாழ். பல்கலைக்கழகத்தைப் பலப்படுத்துகின்றன. மார்க்சியப் பொருளாதாரத்தைத் தளமாகக் கொள்ளும் போக்கே காணப்படுகின்றது. பூர்வீக மனிதன் இயற்கையைக் கட்டுப்படுத்த முயன்றான். சடங்குகளில் அழகியல் அம்சங்கள் இருந்தன. மனிதனது மனச் சுகத்திலிருந்தே உளவியல் ஆம்பிக்கிறது. உடல், உள உழைப்புகளின் வேறுபாடு முரண்பாடாக மாறியது. உயர்ந்த மூளை வளத்தின் பால் உடல் உழைப்புக் குன்றியதாகக் கணிக்கப்பட்டது. நாட்டார் கலைகள் மேலோங்கின. பௌத்த மெய்யிலாளர்கள் மனம் பற்றி ஆராய்ந்து மாறுபாடான விடயங்களைக் கொடுத்தனர். மனதின் வளர்ச்சியோடு உளவியல் எழுச்சி பெற்றது. சிந்தனா கூடங்கள் வளர்ச்சி பெற்றன. சிக்மன்ட் பிராய்டிஸம் நனவிலி மன வலிமை, ஆழம், தாக்கம், செல்வாக்கு என்பனவற்றிற்கான ஆய்வை முன்னெடுத்தது. ஆழ்மனம் பற்றிய கருத்தாடல் அழகைக் கொடுக்கும் என்ற வாதம் தொடங்கியது. மானிட உளவியலுக்குப் பங்களித்தவர் கால்றோய்ஸ். கவுன்சிலிங் கொடுப்பவர்கள் இவரையே பின்பற்றுகின்றனர்.

தலைப்பாகை அணிவது தமிழ்ப் பாரம்பரியம். தமிழ்ப் பெரியார் பொன்.இராமநாதன் தலைப்பாகையோடு காணப்படுவார். தலைப்பாகை ஒருவரது தன்னியல் நிலையைக் காட்டும். ஒருவன் தனது சுய உழைப்பில் வீடொன்றைக் கட்டினால் தன்னியல் நிலையை அடைந்தவனாவான். அதேபோல் ஒருவர் நூலொன்றையாக்கி வெளியிட்டவராகில் அவரும் தன்னியல் நிலையை அடைந்தவரே. இன்றைய வெளிப்பாடுகள் அறை கூவல்களாக இல்லை. பேராசிரியர் கைலாசபதி மாணவருக்குச் சவாலாக இருந்தார். நோட்ஸ் கொடுப்பது CHALLENGE இல்லாமலாக்குகின்றது. அவர் கால்றோய்ஸின் கோட்பாட்டைப் பயன்படுத்திய சீர்மியர். மேலை நாட்டில் ஒருவரது நுண்மதி ஆற்றல் இல்லை. நுண்மதியே ஆக்கத் திறனை உண்டாக்குகிறது. இலங்கையின் நிர்வாகத் தடமும் மேலைத்தேயத் தடத்தில் தான் செல்கின்றது. இந்த நடைமுறையில் புலமை அவல நிலையை நோக்கித்தான் செல்கின்றது. பாரம்பரியமே ஒருவரது ஆற்றலை நிர்மாணிப்பதாகவும் கருதப்படுகின்றது.

மார்க்சிய உளவியல் பல்வேறு திருப்பங்களைத் தந்துள்ளது. மனிதனது ஆக்கத் திறனை அவனது இருப்பால் எவ்வாறு தீர்மானிக்க முடிகின்றது? சமூக இயல்புகள் மனதில் உண்டாகின்றன. மனிதன் ஏன் அந்நிய மாகின்றான்? அந்நியமாவதைப் புனைதல் அழகென மேலைத் தேயத்தினர் நம்புவர். உழைப்பு அபகரிப்புத் தொழிலிலிருந்து தொழிலாளியை அந்நியப்படுத்துமென கார்ல்மார்க்ஸ் அறிவுறுத்தினார். தொழிற்பாடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாயிலாக அனைத்தும் ஏற்படும். கலைப்படைப்பைக் கார்ல்மார்க்ஸ் SOCIAL ACT என்ற முறைக்குக் கொண்டு வந்தார். உற்றுணர்வு மனம் எப்படி உண்டாகின்றது? மனம் சூக்குமமானதென்றனர். அருவமானது உள்ளம், என்ற விதியை மார்க்ஸ் காட்டினார். பொருத்தமான கருத்துக்களை முன்வைத்தார்.

கலைப்படைப்புகளைத் தீர்மானிப்பதில் ஒருவரது உளப்பாங்கு முதன்மை பெறுகிறது. மார்க்ஸ் சிந்தனைகள் பல நிலைகளில் எதிர்ப்பாளருக்கு உதவியது. மார்க்ஸியம் நேரடியாகவும் மறைமுகமாகவும் உள்வாங்கப் படுகிறது. ஒடுக்குவோர், ஒடுக்கப்படுவோர் சார்பானவற்றை ஏற்று ஒடுக்கப்பட்டோரைக் கிளர்ந்தெழ வைக்கத்தக்க அறிதல்களை உருவாக்க வேண்டும்.

ரஷ்ய வர்ண முறையான உருவ வாதம் வேறுபட்டது. லெனின், கார்ல்மார்க்ஸ் சிந்தனை மார்க்ஸிய அழகியலைத் திரிபுபடுத்த விரிவுரையாளர்கள் ஒழுங்கு செய்யவும் பட்டனர். மார்க்ஸியம் வாய்ப்பாடா கின்றதை வர்ண முதல் வாதம் முற்றாக எதிர்த்தது. மனவெழுச்சியின் வடிவமே இலக்கியம். அதுவொரு இலக்கிய வழி முறை, இலக்கியமல்ல என ரஷ்ய மார்க்ஸிய உளவிலாளர் எதிர்த்தனர். யாழ்ப்பாணத்தில் சிறுகதை எழுத்தாளரொருவர் சிறுகதையொன்றை எழுதித் திருத்தக் கொடுத்த போது எழுத்தாளர் எஸ்.பொன்னுத்துரை (எஸ்.பொ.) கதையில் காணப்பட்ட 'குளிர்காற்று' என்ற சொற்களை மாற்றிச் 'சீதளக்காற்று' என எழுதச் சொன்னார். தெளிவான மொழிக் கண்ணோட்டத்தையே மார்க்சியவாதிகள் முன் வைத்தனர். இங்கிலாந்தில் படித்து வந்த பட்டதாரிகள் கைலாசின் செல்வாக்கைத் தணிக்கவும் முயன்றிருக்கின்றனர்.

- 14.12.2009

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 9

## 'ஞானம்' எஸ். பொ. சிறப்பிதழ்

திருமறைக் கலாமன்றத்தின் கொழும்புக்கிளை மாதந்தோறும் நடத்தும் நோன்மதி இலக்கியச் சந்திப்பு 31.12.2009 ஆம் திகதி அதன் பணிமனையின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. புத்தக விற்பனையாளரும் வெளியீட்டாளருமான பொன்.சக்திவேல் (பிறைற் புக் சென்ரர்) தலைமை தாங்கினார். 'ஞானம்' மாசிகையின் எஸ்.பொ.சிறப்பு மலர் பற்றிய விமர்சன உரைகள் நிகழ்த்தப்பட்டுக் கருத்தாடப்பட்டன.

### தலைமையுரை: பொன்.சக்திவேல்

எனது மானசீகக் குருவான எஸ்.பொன்னுத்துரை அவர்களது சிறப்பு மலர் குறித்தான இந்நிகழ்வில் கலந்து கொள்வதில் பெருமையடைகிறேன். 200 இற்கும் அதிகமான பாட நூல்களை யாத்து வெளியிட்ட நான் இப்போது சிறகொடிந்த பறவை போல் உள்ளேன். இந்நிலையில், இப்படியாக என்னை இனங்கண்டு கொண்டது ஒத்தணம் கொடுப்பது போல் இருக்கின்றது. அதற்காக நன்றி தெரிவிக்கிறேன். இந்தியாவிலிருந்து வரும் இன்றைய மூன்றாந்தரப் பத்திரிகைகள், சஞ்சிகைகளோடு ஒப்பிடும் போது 'ஞானம்' ஒப்பில்லாச் சஞ்சிகையாக விளங்குகின்றது. எஸ்.பொ.சிறப்பு மலரைப் பார்த்த போது ஏற்கனவே வெளியாகிய 114 'ஞானம்' இதழ்களைப் பாாக்காததையிட்டு வெட்கப்பட்டேன்.

சொல்லப்போனால் நான் பெரும்பாவி. பத்தாண்டுகளுக்கு முன் எனது நிறுவனமான பிறைற் புக் சென்ரர் மலையகத்தில் புத்தகக் கண்காட்சியையும் மலிவு விற்பனை நிகழ்வொன்றையும் நடாத்தியது. அந்நிகழ்வுக்கு டாக்டர் ஞானசேகரன் அதிதியாக வந்திருந்தார். அப்போது அவர் எப்படி இதற்குள் வந்தார் எனச் சிந்தித்தேன். அவர் ஆற்றிய உரையைக் கேட்ட பின்னர் அவரது இலக்கியப் புலமையை அறிந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆச்சரியப்பட்டேன். எஸ்.பொ.மண்வாசனையை அழுத்தி எழுதும் எழுத்தாளர்களில் மிகவும் முக்கியமானவர். சடங்கு, தீ, நனவிடை தோய்தல் ஆகிய அவரது நூல்களைப் படித்தால் சினிமாப் படம் பார்த்தது போன்ற திருப்தி ஏற்படும். நனவிடை தோய்தலில் அந்தக் கால யாழ்ப்பாண மில்ரி (அசைவ) சாப்பாட்டுக் கடையொன்றில் மத்தியானச் சாப்பாட்டுக்குப் பின் இலவசக் கோடா போட்ட சுருட்டொன்றும் கொடுக்கப்பட்டதாக எழுதியிருக்கிறார். அவரைக் கண்டிப்பவர்கள் 'இந்திரிய' எழுத்தாளர் என முத்திரை குத்துகின்றனர்.

'என்னுடைய இலக்கிய ஆளுமையை எதிர்ப்பதற்கு நான் செக்ஸ் எழுதிவிட்டேன் என்பதைக் காரணமாக்குகிறார்களே தவிர, நான் சொன்ன முழுமையான வாழ்க்கை நெறி தமிழர்களது வாழ்க்கைக்கு அப்பாற்பட்டதொன்று என்பதை அவர்களால் நிறுவ முடியவில்லையே' என எஸ்.பொ.குற்றம் சொல்வோரது கையாலாகாத் தன்மையைச் சுட்டிக்காட்டியுள்ளார். இவ்விதழில் காணப்படும் மானா மக்கீனின் 'ஓசையில்லாத ஓசைகள்', குறிஞ்சி நாடனின் 'சமகால கலை இலக்கிய நிகழ்வுகள்', 'வாசகர் பேசுகிறார்' ஆகிய ஏனைய அம்சங்களும் சிறப்பானவையாக இருக்கின்றன.

**கருத்துரைகள்:**
**விமர்சகர் செ.சக்திதரன் (சுங்க அதிகாரி)**

வாசிக்காமல் விமர்சனம் செய்வதில் எனக்கு உடன்பாடில்லை. ஒரு கோட்பாட்டுக்குள் தன் பணியை அடக்கிக் கொள்ளாது, ஞானம் நடுநிலைப்படுகிறது. நல்லதைக் கௌரவிக்கின்றது. எஸ்.பொ.சிறப்பிதழ் இதையே வெளிப்படுத்துகிறது. தம்மோடு சேர்ந்து கொண்டால் புகழ்வது இல்லையென்றால் அடித்துத் தள்ளுவதென்ற போக்கே எமது இலக்கிய உலகில் காணப்படுகின்றது. உள்ளதை உள்ளபடி பார்க்கும் பாங்கினால் எஸ்.பொ.பல சிக்கல்களில் மாட்டிக் கொண்டவர். இந்த இதழில் 5 இந்தியத் தமிழ் எழுத்தாளர்கள் எழுதியிருக்கின்றனர். இதில் எழுதியிருக்கும் புலம்பெயர் எழுத்தாளர்கள் வேர் கொண்டது ஈழத்திலேயே. எஸ்.பொ.பேச்சு வழக்கைப் பற்றி விரிந்த கட்டுரையொன்றை ஆக்க முடியும். 'தீ' யையும் 'சடங்கு' நாவலையும் மட்டும் தனித்துப் பார்த்து அவரது கருத்தியலை கணிப்பது தவறாகும். மனித இயல்புகள் மாறுந்தன்மை கொண்டவை. கோவை ஞானி, எஸ்.பொ.வின் நல்ல பக்கங்களை இனங்கண்டிருக்கிறார். 'மித்ர' பதிப்பகத்தைப் பற்றி கூறியிருக்கிறார். பேராசிரியர் அ.சண்முகதாஸ் 'பந்த நூலை' இனங்காண்கிறார். இந்நூலில் காணப்படும் அடிக்குறிப்புகளில் இப் பிரமுகர்கள் நளினப்படுத்தப்பட்டிருக்கின்றனர். இந்த இதழில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எஸ்.பொ.வின் 'தேர்' சிறுகதையைப் படிக்க முடிகின்றது. இக்கதை மிக இலாவகமானது. தமிழ்ப் புதுவருடப்பிறப்புப் பேசு பொருளாக அமைந்துள்ளது. சித்திரை வருடக் கொண்டாட்டத்துக்கு இறைச்சிக் கறி காய்ச்சுவது வழக்கமில்லை.

ஆனால், இக்கதையில் அது குறித்தும் சொல்லியிருப்பது வலிந்து புகுத்தியிருப்பதாகவே தோன்றுகின்றது. இந்த விடயம் சேர்க்கப்படாதிருந்தால் கதை நிஜமானதாக இருந்திருக்கும். இச்சிறுகதை குறித்தான கலாநிதி துரை மனோகரன் மதிப்பீடு மிக அருமையாக இருக்கின்றது. க.இரகுபரன் 'ஆண்மை' என்ற தலைப்பில் வெளியான சிறுகதைகளை அலசுகிறார். கலாநிதி செ.யோகராசா எஸ்.பொ.வின் 'மாயினி' நாவலை அறிமுக ரீதியில் பார்த்திருக்கிறார். இதில் அரசியல்வாதிகள் பாத்திரங்களாக்கப்பட்டிருக்கின்றனர். செங்கை ஆழியான் சொல்ல வேண்டியவைகளைத் துணிந்து சொல்கிறார். மலேசிய எழுத்தாளர் சை.பீர் முகம்மது அங்கீகாரமில்லையென்ற ஆதங்கத்தை வெளிப்படுத்துகிறார்.

முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தில் எஸ்.பொ.உறுப்பினராக இருந்ததில்லை. இத்தகைய ஒரு சிறப்பு மலரை ஈழத்துச் சஞ்சிகையான 'மல்லிகை வெளியிட்டிருக்க முடியாது. 'ஞானம்' இன், கோட்பாட்டுக்குள் அடங்கிப் போகாத் தன்மை தொடர வேண்டும்.

## கவிஞர் மன்னார் அமுதன்

விவசாயப் பெருநிலப்பரப்பில் குறிப்பிட்ட பயிரின் நடுகை தவிர்ந்த இடைவெளிகளில், ஊடுபயிர் நடுவார்கள். கவிதையும் ஊடு பயிரே. இந்த இதழில் கனம் பொருந்திய கவிதைகள் சேர்க்கப்பட்டுள்ளன. தெளிவான கவிதைகள் அருவியின் ஓட்டத்தை நினைவுபடுத்துகின்றன. 'நிலவு இராச்சியம்' நாச்சியாதீவு பர்வீன் எழுதியது. குறியீடுகளைப் பயன்படுத்தி எழுதப்பட்டிருக்கின்றது. நிலவு, நட்சத்திரம், குட்டி நட்சத்திரம் என்பன கவிஞரால் குறியீடுகளாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. நிலவுக்கு ஒளியைச் சூரியனே கொடுக்கின்றது. இளந்தலைமுறை நசுக்கப்படுவதைச் சொல்வதாகப்படுகின்றது.

சிந்திக்க வேண்டிய விடயம். ஆதிக்க சக்தி மக்களை அடக்கி வைக்கின்றது. இன்னொரு நிலவுக்கான வருகை எதிர்பார்க்கப்படுகிறது. நிலவுகள் நிலவுகளாகத் தான் இருக்கும். 'ஆண்டு அனுபவித்த கதை' பத்தனையூர் வே.தினகரன் எழுதியது. ஒப்பாரிக்கவிதை. இசை நயமான தாலாட்டைப் போல் முக்கியமானது. தாயின் கதை மனிதன் வாழ்ந்ததை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒப்பாரி புலப்படுத்தும். வறுமை, போர்ச்சூழல், இடப்பெயர்வு இவைகளால் நம்மவன் அல்லற்படுகிறான். வடக்கின் இளைஞன் இழப்புகளைச் சந்தித்த வைரம் பாய்ந்த மரம். கருத்தை மேம்படுத்தும் கவிதை வட அல்லை. க.சின்னராஜன் கவிதை. அல்வாயூர் சி.சிவநேசன் கவிதை 'தட்டிக் கொடுங்களய்யா' முதுக்குப் பின்னால் செய்யப்படும் காரியம் தட்டிக் கொடுப்பது. ஜாம்பவனாக்குவது. சாதாரண மக்கள் மூலமாகச் சஞ்சிகைகளைப் படிப்பது. அதனால் ஜாம்பவானாவது ஏற்றுக் கொள்ள முடியாத விடயம்.

விமர்சனம் பக்கச்சார்பற்றதாக இருக்க வேண்டும். தழுவலைத் தழுவலெனச் சொல்வது விமர்சகர் கடமை. எதையும் இருட்டடிப்புச் செய்யக் கூடாது. பாரதியும் தழுவல் என இனங்காட்டியிருக்கிறாரே! முடிவு வாசகருடையதே. பிரபல கவிஞர் பிரமிளின் கவிதை வரிகள் ஒரு கவிதையுள் புகுத்தப்பட்டுப் பாவிக்கப்பட்டிருக்கின்றன. அதைக் கவனிக்காத விமர்சகர்களும் இடைச் செருகலுற்ற அக்கவிதையைச் சிலாகித்துமிருக்கின்றனர். நிதி குறைந்தவர் வெறும் வாய்ச் சொல்களையாவது தாரீர் எனக் கூறப்படுகின்றது. குறைகள் சுட்டிக் காட்டப்படத் தான் வேண்டும். 'இவையும் அவை போலோ' என்ற த.ஜெயசீலன் கவிதையும் இருக்கின்றது. மார்க்சியத்தைப் பரப்புவதாகவுள்ளது. வளர்ச்சியை எச் சக்தியாலும் தடுக்க முடியாது. இன்று பாடுபட்டால் நாளை நலமாக இருக்கலாம். வாய்ப்புகளுக்கான கதவைத் தட்ட வேண்டும். கதவுகளைத் திறந்து வைத்திருக்க வேண்டும். சந்தர்ப்பங்களுக்காகக் காத்திருக்காது சந்தர்ப்பங்களை ஏற்படுத்த வேண்டும். வாய்ப்புக்களையும் பயன்படுத்த வேண்டும்.

## 'கொழுந்து' ஆசிரியர் அந்தனி ஜீவா

மன்னார் அமுதனின் உரையில் அவரது திறமையைக் காணக்கூடியதாக இருந்தது. புதிய தலைமுறை வளர்ந்து வருவதை அறிகிறேன். கலை, இலக்கியப் பேரவை நிகழ்வில் கோகிலரூபன் கட்டுரை படித்தார். மஹாகவி, நீலாவணன் மறைந்த பின்னரே இ.முருகையனைக் கண்டார். விஞ்ஞான ரீதியாக முருகையன் சிந்தித்ததாக அவர் கூறுகிறார். கூடுதலாக மஹாகவியைத் தூக்கிப் பிடித்தவர் பேராசிரியர்.எம்.ஏ.நுஃமான். அவர் பல்கலைக்கழகத் தமிழ்ப் பீடத்தின் தலைவர். யார், யாருக்கோ பயந்து ஏனையோருக்கு இருட்டடிப்பு. ஆனால், இளைய தலைமுறை நேர்மையான, உண்மையான தேடுதலை நடாத்துகின்றது. எஸ்.பொ.எழுதவந்த போது எனக்கு வயது 3, ஒரு சஞ்சாரியாகச் சுற்றித் திரிந்திருக்கிறேன். கலை, இலக்கிய உலகை. சிங்கள நாடகங்களைப் பார்த்திருக்கிறேன். எஸ்.பொ.மிகப்பெரிய ஆளுமை. அவரது 'வரலாற்றில் வாழ்தல்' நூலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரு தடவைகள் படித்தேன். மொழி ஆளுமை, நடைமிகவும் சிறப்பாக இருக்கின்றது. நீண்ட காலம் அவரோடு நெருங்கிப் பழகிய என்னைப் பற்றியும் ஒரு நான்கு வரிகள் நையாண்டியாக எழுதியிருக்கிறார். அரசுவும் நுஃமானும் அப்பட்டமான பொய்கள் நிறைந்த நூல் அதுவென்கின்றனர். செங்கை ஆழியான் நம்பிக்கையீனமானது என்கிறார். மிகப் பெரிய பொய்களைச் செய்திருக்கிறார் என்கின்றனர். ஆனால், இவர்களெல்லாம் தமது உணர்வுகளை வெளிக்காட்டி எழுதமாட்டார்கள்! ஆனால், கதைகளைப் பரப்புவர். கோவை ஞானி எஸ்.பொ.வை மிகப் பெரிய ஆளுமை என்கிறார். சுந்தர ராமசாமிக்கு அவரது மகன் விழா எடுத்ததை ஜெயகாந்தனிடம் கேட்டேன். அதற்கெல்லாம் காலம் பதில் சொல்லுமென அவர் சொன்னார்.

கைலாசபதி, சிவத்தம்பியைப் போற்றுவதை எஸ்.பொ.குறை கூறுகிறார். சாகும்வரை தான் அவர்களை விமர்சிப்பேனெனச் சொல்கிறார். தமிழகம் இலங்கையரை ஒதுக்குகின்றது. ஆனால், எஸ்.பொ.வுக்குத் தமிழகத்தில் இடமுண்டு. எஸ்.பொ.காலத்தில் கே.டானியலும் எழுதியவர். தனது படைப்புகளை எஸ்.பொ.திருத்திக் கொடுத்ததை டானியல் ஒப்புக் கொண்டார். எஸ்.பொ.வுக்குக் கவிதை, மொழி பெயர்ப்புப் போன்றவற்றிலும் ஆளுமை உண்டு. எஸ்.பொ.வின் புனைவாற்றலை அ.முத்துலிங்கத்தின் சிறுகதைகளிலும் காண முடிகின்றது. 'ஞானம்' திறமையை மதிக்கின்றது. கே.கணேஸ், வரதர், கா.சிவத்தம்பி ஆகியோருக்கும் ஞானம் சிறப்பு மலர் வெளியிட்டிருக்கின்றது. இவைகளைக் கட்டாயம் இளைய தலைமுறை படிக்க வேண்டும். ஞானத்தில் எழுதுபவர்கள் உலக அரங்கில் வெளிப்படுத்தப்படுகிறார்கள். இலக்கியச் சிற்றிதழ் வெளியீட்டு வரலாற்றில் ஞானத்துக்கும் நிச்சயமாக உரிய இடம் கிடைக்கும். எஸ்.பொ.இலக்கிய ஆற்றல்களை ஓரளவாவது இந்த இதழில் அறிய முடியும். பரபரப்பாக எழுத வேண்டுமென ஆவல் கொள்பவர் எஸ்.பொ. தமிழகத்தின் நூல் வெளியீட்டு நிறுவனமான ராணிமுத்து எஸ்.பொ.வின் நாவலான 'தீ' இன் 35,000 பிரதிகளை வெளியிட்டது.

எஸ்.பொ.ஆங்கிலம் படித்தவர். 'மகாவம்சம்' நூலைத் தமிழில் தந்திருக்கிறார். ஆங்கிலத்தைச் சரியாக உச்சரித்துப் பேசக் கூடியவர்கள் எமது நாட்டில் தான் இருக்கின்றனர். தமிழகத்தில் 'சூப்பர், சூப்பர்' எனத் தவறான உச்சரிப்புகள் செய்கின்றனர். தமிழ் நாட்டில் நாய் செத்தால் செய்தியாக வெளியிடுவார்கள். ஆனால், இங்கு கவிஞர் இ.முருகையன் செத்த பின் 'தினக்குரல்' பத்திரிகை அந்த இழப்புக்காகத் தலையங்கம் தீட்டியது. சிங்கள மொழியில் உளவியலாளர்கள் சிக்மண்ட் பிராய்ட்டைப் பற்றி வாசிக்க முடிகின்றது. இன்றும் ஏராளமான தமிழ் வாசகரைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னகத்தே கொண்டிருக்கும் அமரர் கல்கியின் 'பார்த்திபன் கனவு' என்ற நாவல் சிங்கள மொழியில் மொழி பெயர்க்கப்பட்டு சிங்கள வாசகர்களால் வாசிக்கப்படுகின்றது. யாழ்ப்பாணத்து மக்களின் வாழ்வை யதார்த்தமாகச் சித்திரித்தவர்கள் கே.டானியலும் தெணியானும். ஜெயகாந்தனின் சிறுகதைகள் சிங்களத்தில் மொழி பெயர்க்கப்பட்டிருக்கும் போது ஏன் இன்னமும் டானியலின் படைப்புகள் சிங்களத்தில் மொழி பெயர்க்கப்படவில்லை?

மலையகத்தின் இளைய சந்ததி தங்களது வாழ்வு பற்றிச் சிந்திக்க வேண்டும். மலையகப் படைப்பாளிகளை வெளிச்சத்துக்குக் கொண்டு வந்ததில் ஞானம் சஞ்சிகையின் பங்கு பாரியது. மலையகத்தின் இளைய தலைமுறை தமது வாழ்வை நிமிர்த்துவதற்கான தேடல்களைச் செய்ய வேண்டும். நகரத்துக்கு வரும் வடக்கு, கிழக்கு இளைஞர்கள் எத்தகைய வழிகளில் தமது வாழ்க்கையை முன்னேற்ற விரும்புகிறார்கள் என்பதைத் தெரிந்து தாமும் தமது மக்களை வாழ்வில் முன்னேற்றப் பாடுபட வேண்டும்.

**சிறப்புரை:**
**'இன்றைய தமிழ் மாணவரும் தமிழும்'**
**எஸ்.அசோக்பரன் (விமர்சகர்)**

உலகின் பழமையான முக்கிய மொழி தமிழ். பேசப்படாவிட்டால் மொழி வழக்கொழிந்து போகும். இப்போது ஹீப்ரு, சமஸ்கிருத மொழிகள் இல்லை. லத்தீனும் அருகி வருகிறது. தமிழ் இணையத்திலும் வாழ்கிறது. இலங்கை, தமிழ் நாடு இவைகள் தமிழ் மண்கள். இங்கே தமிழ் மாணவருக்குத் தமிழ் உணர்வை வெளிக்காட்டத் தயக்கம். கொழும்பில் தமிழைப் பேசத் தயங்குகின்றனர். நாட்டில் நிலவும் சூழ்நிலையை எண்ணித் தமிழ்ப் பற்று இருப்பினும் மாணவர்கள் பேசப் பயப்படுகிறார்கள். இதையொரு தாழ்வு மனப்பான்மை என்றே கூற வேண்டியிருக்கின்றது. தமிழ் நாட்டைப் போல் ஆங்கில மோகம் இங்கும் தமிழ் மாணவர் மத்தியில் தலைவிரித்தாடுகின்றது. எமது கல்வித் திட்டத்தை வகுத்தவர்களுக்கு நன்றி கூறவேண்டும். சுயமொழிக் கல்வி கட்டாயப் படுத்தப்பட்டிருக்கின்றது.

இத்தாலியில் உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு நடைபெறுகின்றது. Autograph களில் கையெழுத்தை மட்டும் தமிழில் எழுதுகின்றனர். இந்தியாவில் தமிழ் இல்லை. இதை அறிஞர்கள் ஒத்துக் கொண்டால் மட்டும் போதுமா? சங்க கால இலக்கியம், கம்பராமாயணம், திருக்குறள், சிலப்பதிகாரம் என்பன இன்னமும் வாழ்கின்றன. வாழ்த்துகிறோம். மொழி மீதான ஆர்வம் குறைந்து வருகின்றது. தமிழர்கள் தொழில்நுட்பங்களைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டு பிடிக்கவில்லை. அவைகளைத் தமிழுக்கு மாற்றவும் முயற்சி எடுக்கவில்லை. மேற்கத்தைய மொழி மோகம் வந்துவிட்டது. சொல்லப் போனால் தமிழ் மக்களை இப்படிப் புரட்டிப் போட்டது பிரித்தானிய ஆட்சிதான். அதிலிருந்து வெளிவரக் கஷ்டப்படுகின்றனர். ஆங்கிலத்தில் கூடுதலான புள்ளிகளைப் பெறுவதே தமிழ் மாணவரது இலக்காக இருக்கின்றது. கணிசமான ஈழத்தமிழர் இப்போது புலம்பெயர்ந்துள்ளனர். இணையத்தில் இன்று தமிழ் வாழ்வதற்கு இவர்களே அபயமளிக்கின்றனர். இத்தகைய தமிழ்ப் பணிகளை இப்போதைய சந்ததி மட்டுமே செய்ய முடியும். இவர்களது பிள்ளைகள் ஆங்கிலந்தான் கற்கின்றனர். பிந்திய இச் சந்ததிக்கு தமிழ் எழுத்துக்கள், கலாசாரம் தெரியாது. மொழியின் வளர்ச்சி அதைப் பேசுவதில் தான் தங்கியுள்ளது. இஸ்லாமியர் அரபு மொழியை வளர்க்கின்றனர். தமிழை வாழ வைக்கத் தமிழ் மாணவர்கள் முன்வர வேண்டும்.

தமிழை ஆர்வத்தோடு படிக்க வேண்டும். இத்தாலியர், பிரான்ஸ்காரர் ஆங்கிலத்தில் பேசமாட்டார்கள். ஜப்பானில் மருத்துவக் கல்வி தாய் மொழியில் தான் கற்பிக்கப்படுகின்றது. எமது சுய அடையாளந்தான் முக்கியம். நாமதைக் காப்பாற்ற வேண்டும். இலக்கியத்திலிருந்து வெவ்வேறு துறைகளுக்கும் தமிழை விரிவுபடுத்த நாம் முயற்சிக்கவில்லை. உலகின் மாற்றங்களைப் புரிந்து கொள்ள வேண்டும். அல்லாது போனால் தமிழ் வழக்கொழிந்து போகும். இந்த விடயத்தில் தமிழ் மாணவர்களையும் ஊக்கப்படுத்த வேண்டும்.

**ஏற்புரை:**

**தி.ஞானசேகரன் ('ஞானம்' ஆசிரியர்)**

இந்நிகழ்வில் சக்திவேல், சக்திதரன் என்ற சக்தியில் தொடங்கும் பெயரையுடையவர்கள் இருக்கிறார்கள். எனக்குச் சக்தியைப் பிடிக்கும். எனவே சக்தி எனக்குச் சக்தியைத் தருகின்றது. இங்கே பல்வேறு கருத்துகள் முன்வைக்கப்பட்டன. அவைகளில் எனக்கு உடன்பாடு இல்லாதவையுமுண்டு. உள்ளவையுமுண்டு. எனது 'ஞானம்' சஞ்சிகை தொடக்கத்திலிருந்து தடங்கல் காணாது தொடர்ந்து வந்து கொண்டிருப்பது அதற்கான பெருமை எனலாம்.

ஈழத்து இலக்கியவாதிகளுக்குச் சிறப்பு மலர்களை வெளியிட்டிருக்கிறோம். கே.கணேஸ், கா.சிவத்தம்பி, வரதர், சிற்பி ஆகியோருக்கு ஏற்கனவே சிறப்பு மலர்களை வெளியிட்டோம். எஸ்.பொ.உச்சமான பலமும் ஆளுமையுமுடைய எழுத்தாளர். அவரது சிறப்பு மலர் இப்போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்திருக்கின்றது. அடுத்து வெகு சீக்கிரத்தில் வரவிருப்பது மலையக இலக்கியவாதி தெளிவத்தை ஜோசப்பினுடையது. பல்வேறு கருத்துகள், கோட்பாடுகள் கொண்டோர் மத்தியில் 'ஞானம்' சஞ்சிகையை நடுநிலையோடு நடாத்துகின்றோம். அதை மீற மாட்டோம். நாற்பதுக்கும் மேற்பட்ட புதிய எழுத்தாளர்களை உருவாக்கி இருக்கிறோம். அந்தனி ஜீவா சொன்னார் 'எஸ்.பொ.சிறந்த படைப்பாளி. தனது சுய வரலாறான 'வரலாற்றில் வாழ்தல்' என்ற நூலில் பொய்களைச் சொல்லியிருக்கிறார், கைலாசபதி, சிவத்தம்பியைத் திட்டித் தீர்த்திருக்கிறார்' என. ஒரு காலத்தில் இவர்களோடு எஸ்.பொ.குழுவாக இயங்கியவர்.

ஆனால், இவர்கள் எஸ்.பொ.வை இருட்டடிப்புச் செய்தனர். விலத்தி வைக்க முயன்றனர். இதுவே உண்மை. இதனால் தான் எஸ்.பொ.அவர்களைச் சாடுகிறார். இவர்கள் திட்டமிட்டே அப்படிச் செய்தனர். 'தட்டிக் கொடுங்கள்' கவிதையை விமர்சித்த மன்னார் அமுதன் கொப்பி பண்ணி எழுதிய கவிதையைப் பேராசிரியரொருவர் பாராட்டியதாகச் சொன்னார். எனது முதல் சிறுகதைத் தொகுப்பான 'கால தரிசனம்' கதைகளிலொன்று புதுமைப்பித்தன் படைப்பு எனக் கூறினர். நான் அப்படி எழுதவில்லை. எனக்கு மட்டுமல்ல. முல்லை மணியின் 'அரசிகள் அழுவதில்லை' தொகுப்புக்கும் இதே குற்றச்சாட்டை முன்வைத்தனர். இலங்கையர்கோன் படைப்பென்றனர்.

இதொரு வியாதி. திட்டமிட்டே எதிர் முகாங்களை ஒழிக்கப் பார்த்தனர். எஸ்.பொ.வின் 'சடங்கு'க்கு பின்னர் இன்னொரு 'சடங்கு' வெளிவந்தது. செ.கணேசலிங்கம் படைத்தார். தங்களுக்குத் தேவையானவர்களைத் தம்மோடணைத்தும் ஏனையோரை ஓரவஞ்சகப்படுத்தியும் தம் காரியங்களைச் செய்தனர். கொள்கை, கோட்பாடுகளுக்கு அப்பால் சென்று அறிஞர்களை மதித்து நான் சிறப்பு மலர்களை வெளியிடுகிறேன். அநியாயங்களைக் கேட்க அப்போ ஆளில்லை. ஆனால், இன்று இருக்கிறார்கள். இதற்கான ஆதாரங்களைத் தருவோம். இத்தகைய ஓரங்கட்டல்கள், ஓரவஞ்சகச் செயல்கள் தொடரக்கூடாது. தமிழ்ச் சங்கக் கூட்டமொன்றில் சக்திதரன் எனது 'புதிய சுவடுகள்' நூல் பற்றிப் பேசியிருக்கிறார். இந்நூல் சாகித்திய மண்டலப் பரிசைப் பெற்றது. ஆனால், இந்நூலை இங்குள்ள விமர்சகர்கள் கண்டுகொள்ளவில்லை. தனக்குப் பிடித்த நாவலெனவும் அப்போ சக்திதரன் சொன்னார். டானியல் நாவல்களோடு ஒப்புநோக்கினார். ஒரு படைப்பை 4 பேர் சேர்ந்து அளக்க முடியாது. ஒரு பக்கத்தை மட்டுமே பார்த்துச் சொன்னார்கள்; கணித்தனர். பல கண்டனங்களைத் தாண்டித்தான் இப்படி இந்த நிலைக்கு வந்தோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு அசோக்பரன் தெரிவித்த கருத்துகளை நான் நேரில் கண்டிருக்கிறேன். திருமணமொன்றிற்கு யாழ்ப்பாணம் போவதுக்கு வெளிநாடொன்றிலிருந்து குடும்பமொன்று வந்தது. வந்த பிள்ளைகள் ஆங்கிலத்தில் தான் பேசினர். இவர்களால் யாழ்ப்பாணத்து உறவினரோடு தமிழில் பேச முடியுமா? ஆபிரிக்க நாட்டில் இந்து சமயக் கோயில் உண்டு. ஆனால், அங்கு தமிழ் பேச முடியாது. கோயில் கிறிஸ்தவக் கோவில் வடிவத்தில் அமைக்கப்பட்டிருக்கிறது. சேட் அணிந்து செல்லலாம். இது போதாது. தமிழ் புலம்பெயர் நாடுகளிலும் பேசப்படவேண்டும். ஞானத்தோடு அந்தனி ஜீவாவுக்குக் கூடிய தொடர்புகள் இருக்கின்றது. அதில் எழுதி, எழுதி அதை வளர்த்தெடுத்தார். கவிஞர் முருகையனும் குறைந்தவரல்ல. ஆய்வில்லாமல் நுஃமான், மஹாகவியைச் சொல்லவில்லை. ஸ்ரீ பிரசாந்தன் வெளியிட்டிருக்கும் 'மஹாகவி இயல்' என்ற நூலில் மஹாகவியின் தலைமை சொல்லப்பட்டிருக்கின்றது. கைலாசபதி கவிஞருக்கு கவிஞர் முருகையன் என, அதே குழுவைச் சேர்ந்த நுஃமான் மஹாகவி என்கிறார்.

*கவிஞர் வதிரி ரவீந்திரனும் கருத்துரை வழங்கினார். எஸ்.சதீஷ் நன்றியுரை வழங்கினார்.*

*நிகழ்வுகளைத் தொகுத்து அறிவிப்புகளைச் செய்த எம்.ஐ.லோசன் (ஆசிரியர் 'நதி') தனது குறுங்குறிப்புரைகளோடு ஈழத்துச் சஞ்சிகை ஆசிரியர்களது உறவு மிகவும் ஆரோக்கியமானது, நான் ஞானம் ஆசிரியரிடம் சஞ்சிகை நடாத்துவது சம்பந்தமான ஆலோசனைகளைக் கேட்டபோது மனந்திறந்து சிறந்த ஆலோசனைகளைச் சொன்னார். பிறைற் புக் சென்ரரின் தபால் மூலக் கல்வியைப் பெற்றவர்களில் நானுமொருவன் - எனவும் சொன்னார்.*

-08/09.01.2010

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10

## தமிழ்நேசன் அடிகளாரின் 'நெருடல்கள்'

மன்னார் மறை மாவட்டக் கத்தோலிக்க மாசிகை 'மன்னா'வின் ஆசிரியர் அருட்பணியாளர் தமிழ்நேசன் அடிகளாரின் 'நெருடல்கள்' கவிதைத் தொகுப்பு அறிமுக விழா 10.01.2010 ஆம் திகதி கொழும்பு தமிழ்ச் சங்க மண்டபத்தில் நடைபெற்றது. நாடறிந்த இலக்கியவாதி கலைவாதி கலீல் தலைமை தாங்கினார். மங்கல விளக்கேற்றல், தமிழ்த்தாய் வாழ்த்து, கடவுள் வாழ்த்து, விருந்தினர் கௌரவம் என்பவற்றோடு விழா ஆரம்பிக்கப்பட்டது. வானொலி அறிவிப்பாளர் கலையரசி வரதராணி வரவேற்புரை நிகழ்த்தி நிகழ்ச்சிகளை ஒருங்கிணைத்து அறிவிப்புகளையும் செய்தார்.

**தலைமையுரை :**
**கலைவாதி கலீல்**

கிறிஸ்தவ அருட் தந்தை ஒருவரின் கவிதை நூல் வெளியீட்டு விழாவுக்கு முஸ்லிம் ஒருவர் தலைமை தாங்குவது மிகுந்த மகிழ்ச்சியைத் தருகின்றது. இது எனக்குக் கிடைத்த பேறு. இங்கு சைவப் பெருமக்கள், கிறிஸ்தவர்கள், முஸ்லிம்கள் ஒன்றுகூடி இருக்கின்றோம். மன்னாரில் இப்படித்தான் ஐக்கியமாக வாழ்ந்தோம். மன்னாரில் திறந்த வெளி அரங்கில் நடைபெறும் கலை, இலக்கிய நிகழ்ச்சிகளுக்குப் பெரும்பாலும் நானே தலைமை தாங்குவேன். இனியும் இத்தகைய ஐக்கியத்தோடு வாழ்வோம்.

இத்தொகுப்பின் 155 ஆம் பக்கத்தைப் புரட்டினேன். அதில் மனிதத்தைக் கண்டு மெய்மறந்தேன். உணர்ச்சி வசப்பட்டேன். நான் பழம் கவிஞன், அருட்பணியாளர் தமிழ்நேசன் கவிஞர் தான். உங்களுக்குப் பிடித்தமான கவிஞர் யார்? என நடிகர் திலகம் சிவாஜிகணேசனைக் கேட்ட போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிஞர் கண்ணதாசன் எனச் சிவாஜி சொன்னார். ஏன்? எனக் கேட்டபோது நதியில் விளையாடி, கொடியில் தலை சீவி நடந்த இளந்தென்றலே எனக் கவிஞரின் கவிவரிகளைச் சிவாஜி சொன்னார். எழுதிக் குவிப்பதைத் தவிர்த்து இத்தகைய மனதை மெய்மறக்க வைக்கும் ஒன்றை எழுதினாலேயே போதும் அது கவிஞனை நினைக்க வைக்கும்.

அடிகளார் நகைச்சுவைப் பாங்கிலும் கவிதைகளை எழுதி இருக்கிறார். அத்தோடு காதலையும் பாடி இருக்கிறார். சொல்லப் போனால் சிருங்கார ரசனையைத் தவிர்க்க முடியாது. வைத்தியரின் கையெழுத்தைத் திருத்த முடியாதது போன்றது தான் தமிழ் பேசுவோரின் தலைவிதியும், அடித்துத் திருத்த முடியாது. செருப்புக்குக் கூட பாதுகாப்பில்லாத இடம் இது. தமிழ்நேசன் அடிகளாரின் தந்தை சாந்தான் பாவிலு, மன்னாரில் பெரிய அண்ணாவியார். இந்த அண்ணாவியாரின் கலைத் தொண்டு மிகவும் கடினமானது. சினிமாவில் பானுமதி கதாசிரியர், நடிகர், நெறியாளர், இசையமைப்பாளர், பாடகர், தயாரிப்பாளர் போன்ற பாரிய பொறுப்புகளைத் தானாகப் புரிந்து தன் பெயரை நிலைநாட்டினார். இந்த அண்ணாவிமாரின் பணிகளும் நாட்டுக்கூத்தை வடிவமைத்தல், இசை அமைத்தல், நடித்தல் எனப் பலவற்றைக் கவனிக்க வேண்டும். இன்று நாட்டுக் கூத்து அழிந்துவிட்டதாகவே கூற வேண்டியுள்ளது.

இத்தகைய பாரிய பொறுப்பொன்றைத் தன் வாழ்நாளில் செய்த அண்ணாவியாரின் புதல்வர் தமிழ்நேசன் அடிகளார் கவிதையோடு நின்று கொண்டார். பேராசிரியர் சு.வித்தியானந்தன் நாட்டுக்கூத்துக்கு ஒரு நிமிர்வைத் தந்தார். இன்று மௌனகுரு தொடர்கிறார். இருந்தும் அழிந்து கொண்டு தான் போகின்றது. நேசன் அடிகளார் கவிதையோடு நிற்காமல் நாட்டுக் கூத்துக்கும் உதவ வேண்டும்.

மன்னாரில் பெரும் புலவர்கள் வாழ்ந்ததுக்கான வரலாறு உண்டு. நொண்டிப் புலவர், விதானைப் புலவர் ஆகியோர் மன்னாரின் பழம் பெரும் புலவர்கள். நொண்டிப் புலவர் கால் வழங்காதவர். மாட்டு வண்டியில் வந்துதான் கவி அரங்குகளில் கவி பாடுவார். விதானைத் தொழில் புரிந்த படியால் புலவரொருவரை விதானைப் புலவரென அழைத்தனர். இப்போது மன்னார் அமுதனும் இருக்கிறார். தமிழ்நேசன் அடிகளார் போன்றோர் இப்படிச் செய்யாவிட்டால் மன்னார் கவிஞர்களின் முகம் தெரியாது போய்விடும். மார்க்கம் சம்பந்தமான பத்திரிகையல்ல 'மன்னா'.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னாரில் இப்போ கொழும்புக்கு நிகராக வித்தியாசமான வடிவங்களில் புத்தகங்களை வெளியிடுகின்றனர். கவித்துவம் மிகுந்ததாக 'நெருடல்கள்' தொகுப்பு இருக்கின்றது. இத்தகைய விழாக்களுக்கு வருகை தருவோரின் தொகை முக்கியமானதல்ல. வகை தான் முக்கியம்.

**ஆசியுரை :**
**அருட் பணியாளர் சாந்திகுமார்**

தமிழ் நேசன் அடிகளாரின் கவிதை ஆளுமையைக் கலைவாதி கலீல் பாராட்டினார். சாந்தான் பாவிலு ஏற்றிய சுடர் பிரகாசிக்கின்றது. ஒன்பது ஆண்டுகளாக நேசன் 'மன்னா' பத்திரிகையின் ஆசிரியராக இருக்கிறார். இப்பத்திரிகை பாராட்டத்தக்க வளர்ச்சியைக்கண்டுள்ளது. மன்னாவில் பல விடயங்களைப் படிக்கக் கிடைக்கின்றது. மறையோடு இணைந்தவையோடு கலாசார, இலக்கியம் போன்ற பல்சுவை விடயங்களைத் தமிழ் வாசகருக்குத் தருகின்றது. இந்த விழாவில் நேசன் 'நெருடல்கள்' கவிதைத் தொகுப்பை வெளியிடுகின்றார். மகிழ்ச்சியைத் தருகின்றது. முன்னர் மறக்க முடியாத இருநூல்களைத் தந்திருக்கிறார்.

கவிதையினூடாகப் பல விடயங்களைத் தரும் ஆசிரியர் இன்றைய மனித வாழ்வுக்கு மிகவும் இன்றியமையாத மனிதத்தை மிகத் தெளிவாக வற்புறுத்துகிறார். மறை, அரசியல், கலாசாரம், பொருளாதாரம், வாழ்வின் அடிப்படை நிலை, அதற்கெதிரான போராட்டம் என்பன பாடுபொருள்களாக்கப்பட்டுள்ளன. தமிழ் இலக்கியத்துக்குச் சமயம் மாபெரும் பங்களிப்புச் செய்திருப்பது வரலாறு. இன்னும் அதை ஊக்கப்படுத்தும் அருட்தந்தையின் செயற்பாடுகள் மிக முக்கியமானவையாகக் கருதப்பட வேண்டியவை.

**வாழ்த்துரை :**
**மல்லிகை டொமினிக் ஜீவா**

கிறிஸ்தவக் குருமாரோடு எனக்கு நிறையத் தொடர்புகளுண்டு. அயர்லாந்து நாட்டவரான வணக்கத்துக்குரிய பிதா லோங் மகத்தான மனிதர். அவர் வட இலங்கைக்குச் செய்த பாரிய சேவைகள் அவரைக் காலங்கடந்தும் மக்களால் நினைக்க வைத்திருக்கின்றன. புனித பத்திரிசியார் கல்லூரியின் அதிபராக இருந்தார். அந்தக் காலத்தில் முக்கியமான உத்தியோகத்தரெனில் அவரொரு பற்றீசியனாகத் தான் இருப்பார். இவ்விழாவுக்கு அதிக எண்ணிக்கையில் அருட்சகோதரிகள் வந்திருப்பது சந்தோசமாக இருக்கின்றது. பன்னிரண்டு வயதில் மாணவனாக இருந்த போது என்னைப் பார்த்து வேதக்காரப் பயலுக்கு என்ன தெரியும் என்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த மண்ணை நாங்கள் மாற்றி அமைத்தோம். 2007 நவம்பரில் தமிழ்நேசன் அடிகளாரின் படத்தை மல்லிகை அட்டையில் வெளியிட்டேன். மன்னாரின் தவப்புதல்வன் 'மன்னா' ஏட்டோடு மிகச் சிரமப்படுகிறார். அந்த வேலைகளோடு கவிதைகளையும் எழுதுகிறார். தொகுப்புகளையும் வெளியிடுகிறார்.

வாழ்க்கையின் கஷ்டங்களைப் பற்றி எழுதுகிறார். பூந்தான் ஜோசப் மகத்தான நாட்டுக் கூத்துக் கலைஞர். அவரது கூத்துப் பார்க்க கரையூருக்குச் சிறுவனாக இருந்த போது சென்றேன். வீட்டில் விடமாட்டார்கள். ஆச்சிக்குச் சுருட்டு வாங்கிக் கொடுத்து அவரது சம்மதத்தோடு செல்வேன். பூந்தான் ஜோசப் பின் ராசாவாக வருவார். சிறுவர்களாகிய எங்களுக்குக் கொண்டாட்டந்தான். நாட்டுக் கூத்துக் கலைக்கும் மன்னாருக்கும் பெருந்தொடர்புண்டு. பாதுகாக்கின்றது. இலக்கியகூட்டமொன்றுக்கு மன்னார் சென்றேன். இரவு 11 மணி இருட்டு ராங்க் ஒன்றுக்குள் கையை விட்டோம். தண்ணீர் இருந்தது. அள்ளிக்குடித்துத் தாகத்தைத் தீர்த்தோம். அதிகாலை எழுந்ததும் நாங்கள் குடித்ததும், மேல் கழுவியதும் அழுக்குத் தண்ணீரென்பதை அறிந்தோம். இத்தகைய பெரிய விலைகளைக் கொடுத்துத் தான் இத்தகைய நிலைக்கு வந்தோம். இப்போ மன்னாரில் புதிய இரத்தம் பாய்கிறது. பல வருடங்களுக்கு முன் கிறிஸ்தவ பாதிரிமார் கவிதை எழுதியதில்லை. தமிழை விளங்குவது தமிழனை விளங்கியதாகும். தமிழை நேசிப்பது தமிழ் எழுத்தாளனை நேசிப்பதாகும். கிரோஷிமா, நாகசாகி அழிக்கப்படடது. ஜப்பானென்ன அழிந்தாவிட்டது.? புதிய ஜப்பானை உருவாக்கி ஜப்பானியர் உலகுக்குக் காட்டினர். எமது புதிய தலைமுறை நிச்சயமாக புதிய வரலாற்றை எழுதிக் காட்டும்.

*'நெருடல்கள்' கவிதைத் தொகுப்பு வெளியீட்டில், சிறப்பு விருந்தினர் அம்புறோஸ் பீற்றர்(திருமறைக் கலாமன்றக் கொழும்புக் கிளை இயக்குநர்) முதல் பிரதியை ராஜா என்பவருக்கு வழங்கினார். சிறப்புப் பிரிதிகளும் கலை, இலக்கிய, மறை மற்றும் பொதுப்பணி பிரமுகர்களுக்கு வழங்கப்பட்டன.*

**நயவுரை :**
**கவிஞர் மேமன் கவி**

நூல்களின் முகவுரை, ஆசியுரைகளை வாசித்து படைப்புகள் மீதான கருத்தை உருவாக்க முடியாது. அப்படிச் செய்வது வாசகரின், திறனாய்வாளரின் சுய கருத்துக்குத் தான் இழப்பாகும். இந்நூலின் அமைப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏமாற்றத்தைத்தான் தருகின்றது. நானும் இதேபோல் நூலமைத்து வெளியிட்டேன். கவிதைகளோடு படங்களையும் சேர்த்தால் கவிதை பின் தள்ளப்படும். கவிதை தான் மிக முக்கியமானது. இது கிரபிக் அச்சு யுகம். அதன் தாக்கமே புத்தகங்களை இந்த வகையில் ஆக்குவதுக்குக் கருவியாக இருக்கின்றது. இந்த நூற்றாண்டில் மக்கள் ஆயுதமாகக் கவிதையே செயற்படுகின்றது. தமிழ்ச் சூழலில் சிறிய கவிதைகள் துணுக்குகளாகிக் கொண்டிருக்கின்றன. உலகின் கவிதைப் பரப்பை நோக்கின் அங்கு குறைந்த சொற்களாலாக்கப்பட்ட கவிதைகள் மிகவும் ஆழமானவையாக இருக்கின்றன. இங்கு துணுக்குகளாகவே காணப்படுகின்றன. இத்தொகுப்பில் தமிழ்நேசன் அடிகளார், வாழ்க்கை குறித்தான பல்வேறுபட்ட சிந்தனைகளை மிகவும் ஆழமாகச் சொல்கிறார். அதிர்வை ஏற்படுத்துகிறதா? என்பதில் தான் நல்ல கவிதை இனங்காணப்படும்.

படைப்பின் உள்ளடக்கமே உருவத்தை நிர்ணயிக்கும். சமூகத்தின் தொன்மங்களைத் தருகிறார். கூர்மையாக நோக்க வைக்கிறார். யேசுநாதரைப் பற்றிய கவிதையே கேள்விக் குறியாக இருக்கின்றது. சிலுவை என்ற கவிதை வாயிலாகக் கவிதை யாத்தலில் நிறைவைத் தருகிறார். விழிக்கவும் நிமிரவும் வைக்கிறார். பெரும்பாலான கவிதைகள் கேள்விக்குறிகள். கேள்வி என்ற பெயரிலும் கவிதை எழுதி இருக்கிறார். சமூகத்தில் தான் சந்தித்த விடயங்களை எழுதியுள்ளார். மனிதாபிமானம், மனித நேயம் குறைபாடுகளை பின் தள்ளுகின்றன. லத்தீன் அமெரிக்க கத்தோலிக்க குருமாரின் தடத்தை உணர முடிகின்றது. தமிழ்நேசன் தைரியமான அடிகளார் தான்.

**கருத்துரை:**

**கலைதீபம் சுகைதா ஏ.கரீம்**

கலைக்கு மதம் கிடையாது. எனது தந்தையின் பூர்வீகம் மன்னார் தான். அந்த வகையில் எனக்கும் உறவுண்டு. பாதரை மக்கள்தான் வாழ்த்த வேண்டும். இதுவொரு அதிசய நிகழ்ச்சி. பாதருக்குக் குழந்தைகள் பிறந்திருக்கின்றன, கவிதைகள் குழந்தைகள். கவிதை வரிகளில் விம்மி அழுகிறார். இறைநேசரான அடிகளாரை, பாதிரியார் என்று, துறவி என்று யார் சொன்னது? கரண்ட் அடிப்பது போல் சமூகத்துக்குக் கவிதைகளால் அதிர்ச்சியைத் தருகிறார். அனுபவபூர்வமான கவிதைகள் ஆவேசமாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முழங்குகின்றன. முரண்பாடுகளும் உண்டு தான். இக்காலத்துக்குப் பொருத்தமான கவிதைகள், மனமார்ந்த வாழ்த்துக்கள்.

*வளர் இளம் நர்த்தகி செல்வி கனிமொழி தேவதாசன், இசைக்கேற்ப அபிநயித்துப் பரத நாட்டியமாடிச் சதங்கை ஒலி எழுப்பிப் சபையோரை மெய்மறக்க வைத்தார்.*

**ஏற்புரை:**

**தமிழ்நேசன் அடிகளார்**

சென்ற நவம்பரில் மன்னார் நகர மண்டபத்தில் இந்நூல் வெளியிடப்படுமென விரும்பினேன். அது நடைபெறவில்லை. இன்று இங்கு நடைபெறுகின்றது. மேமன்கவியின் கருத்துரைகளை ஏற்றுக்கொள்கிறேன். கவிதையோடு படம் இணையும் போது படத்திலே தான் கவனம் செல்லும். கவிதை அடிபட்டுப் போகும். அந்த ஆபத்தைச் சொன்னார். ஏற்றுக் கொள்ளத் தான் வேண்டும்.

கவிதையொன்று பல வாசிப்புகளைத் தரும். அதை வாசகர்கள் புரியலாம். நயப்புரை மிகவும் ஆழமாக இருந்தது. விடுதலை இறையியல் லத்தீன் அமெரிக்க நாடுகளில் உருவாகியது. திருச்சபை லத்தீன் அமெரிக்க, இந்திய இறையியலாளரை மிகவும் உன்னிப்பாகக் கவனித்து வருகிறது. நான் அப்படியல்லவென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். பாரம்பரியங்களை நாம் கடைப்பிடிக்க வேண்டும். எனது பொறுப்பில் வெளிவரும் மன்னா பத்திரிகை ஏழு ஆண்டுகளாக வெளியிடப்படுகின்றது. கொழும்பில் 400 இதழ்கள் விநியோகிக்கப்பட்டன. கற்கை நெறியொன்றைக் கற்க யாழ்ப்பாணம் போக வேண்டி இருப்பதால் அப்பணியை நிறுத்த வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டு விட்டது.

- 23.01.2010

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 11

## சங்கீதபூஷணம் அமரர் திலகநாயகம் போல் அஞ்சலியுரையும் பிறவும்

**கொ**ழும்பு, திருமறைக்கலாமன்றத்தின் நோன்மதி தின இலக்கியச் சந்திப்பு 2 ஆவது ஆண்டுக்கு நகர்ந்து அதன் 13 ஆவது அமர்வு 29.01.2010 ஆம் திகதி கொழும்பு-13 இலுள்ள, மன்றத்தின் பணிமனையின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. மன்ற இயக்குநர் அம்புறோஸ் பீற்றர் தலைமை தாங்கினார்.

அண்மையில் காலமான அமரர் சங்கீதபூஷணம் திலகநாயகம் போலுக்கு 2 நிமிடம் மௌனம் அனுஸ்டிக்கப்பட்டது.

**அஞ்சலி உரை:**
**சங்கீதபூசணம் ஏ.கே.கருணாகரன்**

அமரர் திலகநாயகம் போல் இந்நாட்டின் மூத்த இசைக்கலைஞர். கர்நாடக சங்கீத வித்துவான். அனைவராலும் மதிக்கப்பட்ட ஒரு சிறந்த அதிகாரி. இங்கு கர்நாடக இசைக் கலைஞர்கள் சிலரே இப்போ வாழ்கின்றனர். அதுவும் அனுபவம் மிக்கவர்கள் மிகச் சிலரே. ஜனரஞ்சகமான இசைக் கச்சேரிகளையும் செய்து காட்டியவர் திலகநாயகம்போல். அவரோடு மிக நெருக்கமாகப் பழகிய அனுபவம் உண்டு. அவரது சங்கீத அரங்கேற்றம் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் நடைபெற்றது. மிகவும் வித்தியாசமானதாக, சிறப்பாகவிருந்தது. அனைவரும் பாராட்டி வாழ்த்தினர்.

முதிர்ந்த ஞானம், குரல் வளம் என்பன அவரது பாட்டின் தனித்தன்மையாக இருந்தது. அப்போது அவர் 24 வயது இளைஞராக இருந்தார். இசைத்துறையில் மிகப் பரபரப்பை ஏற்படுத்தினார். எனது தூரத்துச் சொந்தக்காரர் திலகநாயகம் போல். நான் யாழ்ப்பாணம் மருதனாமடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இசைக்கல்லூரியில் கர்நாடக இசையைக் கற்றுவந்தேன். பரீட்சை எடுப்பதற்கு அவரிடம் உதவிக்குப் போனபோது பல உதவிகளைச் செய்து நான் கர்நாடக இசையில் மேன்மை பெற உதவினார். என்னை நெறிப்படுத்தினார். இலங்கை வானொலியில் இசைப்பிரிவின் கட்டுப்பாட்டாளராக அமரர் கே.எஸ்.பாலசுப்பிரமணியம் ஐயர் கடமை புரிந்த போது அவரோடு இணைந்து கடமையாற்றினேன். திலகநாயகம் போலை மூன்று மாதத்திற்கு ஒருமுறை வானொலியில் இசைக்கச்சேரி செய்ய அழைப்போம். அக்காலகட்டத்தில் தேசிய ஒலிபரப்பில் மெல்லிசைப் பாடல்களையும் ஒலிபரப்பினோம். அதன் வளர்ச்சியில் ஊக்கம் காட்டினோம்.

அமரர்கள் எஸ்.கே.பரராசசிங்கம், குலசீலநாதன் ஆகியோரது பங்களிப்பு களும் குறிப்பிடத்தக்கவை. இதுவே பின்னர் ஈழத்தின் மெல்லிசைப் பாடல்கள் என ஒலிபரப்பப்பட்டன. கர்நாடக இசையையும் மெல்லிசையையும் அப்போது சிலர் பாடினர். அவர்களுள் போல் மிக முக்கியமானவர். நிறைய மெல்லிசைப் பாடல்களை வானொலியில் பாடி ரசிகர்களின் பாராட்டைப் பெற்றார். இவர் பாடிய பல மெல்லிசைப் பாடல்களை இவரது மனைவி பத்தினியம்மா (சிதம்பர பத்தினி) எழுதினார். யாழ்ப்பாணத்தில் ஒவ்வொரு ஊர்களிலும் கர்நாடக இசைக்கச்சேரிகளைச் செய்து கர்நாடக சங்கீதம் மக்கள் மத்தியில் பரவ உதவினார். யாழ்.பிரதேச உதவிக் கல்விப் பணிப்பாளராக மறக்கமுடியாத பணிகளைச் செய்துள்ளார்.

இராமநாதன் நுண்கலைக் கல்லூரியின் பரீட்சகராகவிருந்தார். இந்தப் பரீட்சகர் பதவி மிகவும் கஷ்டமானது. ஆயிரக்கணக்கான பரீட்சார்த்திகளின் இசையைக் கேட்க வேண்டிவரும். இதனால், பரீட்சகர்கள் தமது இசை ஞானத்தையும் இழக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும். பரீட்சார்த்திகள் தப்பும் தவறுமாக இசை நுணுக்கங்களைக் கையாளுவதுண்டு. நம்நாட்டில் கர்நாடக இசையை வளர்க்க வேண்டுமென்ற நோக்கோடு திலகநாயகம் போல் மிகப் பொறுப்பாக அர்ப்பணிப்போடு இக்கடமையைச் செய்ததை காணமுடிந்தது. இசை மாணவனை மாணவன் என்ற நிலையிலிருந்துதான் பார்க்க வேண்டுமென அடிக்கடி எம்மிடம் கூறுவார். மெல்லிசைப் போட்டிகளுக்கு நீதிபதியாகச் செல்வார்.

கர்நாடக இசையைக் கற்றவர்களுக்கு ஒரு வரம் உண்டு. அவர்கள் எல்லா இசையையும் பாடுவர். கர்நாடக இசையோடு போல் மெல்லிசையையும் சிறப்பாகப் பாடுவார். ஆஜானுபாகுவான தோற்றத்தை உடையவர். அழகாக உடையணிந்து இருப்பார். மதத்துக்கு அப்பாற்பட்டவர் போல். விபூதி பூசுவார். நல்லூர் உற்சவங்களிலும் இசைக்கச்சேரி செய்வார். கலைஞர்கள் மதங்களுக்கு அப்பாற்பட்டவர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூர் முருகன் கீர்த்தனைகளைப் பாடியிருக்கிறார். யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரியில் கற்றவர். சங்கீத வித்வான்கள் ஆங்கில அறிவு பெற்றிருப்பது குறைவு. ஆனால், போல் சரளமாக ஆங்கிலத்தில் உரையாடுவார். திலகநாயகம் போல் நகைச்சுவையாகப் பேசுவார். இன்றைய நிலையில், சங்கீத வித்துவான்களாக பெண்கள் அதிகமாகவிருக்கின்றனர். ஒருசில கவிதைகளை எழுதியவர்களுக்கும் தொகுப்புகளை வெளியிட்டோருக்கும் இப்போ உரத்த பாராட்டுக் கூட்டங்கள் நடத்துவதுண்டு. ஆனால், கொழும்பில் இசைக்கலைஞர்களுக்கு அஞ்சலிக் கூட்டங்கள் கூட நடத்துவது கிடையாது. ஆனால், யாழ்ப்பாணத்தில் அப்படியில்லை. மேடைகளில் பாராட்டுகிறார்கள். பத்திரிகைகளில் சஞ்சிகைகளில் சங்கீதக்காரர்கள் பற்றிய தகவல்கள் வருவதில்லை.

நான் நடிகர் 'சோ' வின் விசிறி. எனக்கு நகைச்சுவை பிடிக்கும். சென்னை இசைக்கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த போது ஒரு கோயிலிலிருந்து கொண்டு பாடுவதுண்டு. அச்சந்தர்ப்பத்தில் ஒரு மொட்டந்தலைக்காரர் வந்து நீ யார் என வினவினார். நான் ஒரு யாழ்ப்பாணத்தவர் எனச் சொன்னேன். அப்பெரியவர் சென்றுவிட்டார். இதை நான் தங்கியிருந்த வீட்டுக்காரரிடம் சொன்னபோது 'அவர்தான் சாண்டில்யன்' என்ற எழுத்தாளர், என்றார். பின்னர் நான் கிரமமாகச் சாண்டில்யன் வீடு சென்று அவரைச் சந்தித்ததுண்டு. அவரது நாவல்களையும் படிக்கலானேன். அண்ணாமலையில் திலகநாயகம் போல் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் இசை கற்றபடியால் அவருக்கு இத்தகைய சந்தர்ப்பம் கிடைக்கவில்லை.

திராவிடத் தந்தை பெரியார் ஈ.வெ.ராமசாமி, அறிஞர் அண்ணாதுரை, ராஜாஜி ஆகியோரது மேடைப்பேச்சுக்களை நேரில் கேட்டிருக்கிறேன். மயிலாப்பூரில் இந்திரா காந்தி, சா.கணேசன் ஆகியோரது பேச்சையும் கேட்டிருக்கிறேன். திலகநாயகம் போல் சாகித்தியங்கள், தில்லானாக்களைப் போட்டிருக்கிறார். ஆரம்பத்தில் பிரபல பாடகர் பாலமுரளி கிருஷ்ணாவின் பாணியில் தான் பாடினார். பின்னர் சொந்தமான தனது தனித்துவத்தை வகுத்துப் பாடினார். தாளத்தைக் கணக்கு வழக்காகப் போடுவார். அமரர் போல் இறந்த போது நான் யாழ்.நுண்கலைக் கல்லூரியின் வெளிவாரித்துறைப் பரீட்சகராக இருந்தேன். தகவல் கேள்விப்பட்டு உடனே அவரது வீடு சென்றேன். யாழ்ப்பாணத்து சகல பள்ளிக்கூட மாணவர்கள், ஆசிரியர்கள் வந்திருந்தனர். கர்நாடக இசை வளர வேண்டுமென்பதுக்காக உழைத்தவர். லண்டன், நோர்வே, ஜேர்மன் போன்ற நாடுகளுக்கு இசைப்பயணம் சென்றார். மறக்க முடியாத இசைக்கலைஞர். தமிழ் இசைக்குப் பெருத்த இடைவெளியை ஏற்படுத்திச் சென்றுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திலகநாயகம் போலின் இசைத் தொண்டை மறக்கமுடியாது. ஆனால், ஒரு குறையைச் சொல்ல வேண்டியுள்ளது. அவரது பிள்ளைகள் இசைத்துறையில் இல்லை.

**சிறப்புரை:**
**கவிஞர் மட்டுவில் ஞானகுமாரன் (புலம் பெயர் எழுத்தாளர்)**

அமரர் சங்கீதபூசணம் திலகநாயகம் போலைப் பார்த்திருக்கிறேன். யாழ்.மத்திய கல்லூரியில் நான் மாணவனாக இருந்த போது அவர் ஆசிரியராக இருந்தார். UNIVERSITY இல் படித்த நான் ஜேர்மனியில் எட்டாம் வகுப்பில் கல்வி கற்க நேர்ந்தது. எனக்கு அந்நாட்டின் டொய்ஸ் மொழி விளங்கவில்லை. நான் எனது பிரச்சினைகளை எண்ணிச் சிரித்தால் மாணவர்கள் என்னை விநோதமாகப் பார்ப்பார்கள். புகலிடத்தில் எனக்கு எனது துன்ப துயரங்களையும் வாழ்ந்த பூமியையும் நினைவுபடுத்த ஒரு வடிகால் தேவைப்பட்டது. அதனால் தான் எழுத்துத் துறைக்குள் நுழைந்தேன். சொல்லப் போனால் இப்படி இலக்கியத்துக்குள் நான் வந்தது ஒரு விபத்துத்தான். 'பூவரசு', 'ஈழமுரசு' ஆகிய ஏடுகளுக்கு எனது ஆக்கங்களை அனுப்பினேன். சிறந்த வரவேற்புக் கிடைத்தது. இரு கவிதைத் தொகுப்புகளை வெளியிட்டுள்ளேன்.

ஜேர்மன் நிலத்தில் எங்கெல்லாம் தமிழர்கள் வாழ்கிறார்களோ, சிரமத்தைப் பொருட்படுத்தாது அங்கெல்லாம் சென்று தமிழ்ப் பிள்ளைகளுக்குத் தமிழைக் கற்பித்தேன். படைப்பாளி சமுதாயத்தில் அக்கறை கொள்ள வேண்டுமென்பதே எனது எதிர்பார்ப்பு. ரஷ்யாவில் போக்குவரத்து நெருசல் உண்டு. இந்த நெருசலில் பறந்து கொண்டிருந்த வண்ணாத்திப் பூச்சியொன்றை சிறுமியொருத்தி பிடிக்க எத்தனித்துக் கொண்டிருந்தாள். காரை நிற்பாட்டி, வண்ணாத்திப்பூச்சியைப் பிடித்துக் கொடுத்தார். அவர் அந்தச் சிறுமியிடம் ஏன் அதைப் பிடிக்க கஷ்டப்பட்டாய் சாரதி எனக் கேட்டபோது அது வாகனங்களுக்குள் நசிந்து விடக்கூடாது என்பதற்காக எனப் பதில் சொன்னாள். உண்மையான மனிதநேயம், மனிதாபிமானம், இதைத்தான் எதிர்பார்க்கிறேன். எழுத்தாளனின் படைப்புகள் உயிருக்காகக் குரல் கொடுக்க வேண்டும். நாங்கள் படித்த இதிகாசங்கள் வஞ்சனையைத் தான் எமக்கு ஊட்டின.

'இரவினில் வாங்கினோம். இன்னும் விடியவில்லை' என்றொரு எட்டுவரிக் கவிதை. இது எவ்வளவு பிரபலமாக இருக்கின்றது. 'நீங்களும் எழுதலாம்' என்ற சிற்றிதழில் அமரர் சுபத்திரன் எழுதிய கவிதையொன்றை வாசித்தேன். 'நான் ஒரு கோடி.....' எனத் தொடங்கி 'ஒரு சொட்டு உரிமைக்குத் தூசு தூசு.....' எனத் தொடர்கின்றது. இது என் மனதில் ஆழமாகப் படிந்துவிட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படிக்கும் கவிதைகள் வாசகருக்கு நம்பிக்கையைக் கொடுக்க வேண்டும். முயற்சிக்கு வரைவிலக்கணமாக மனிதன் இருக்க வேண்டும். புலம்பெயர்ந்த மக்கள் ஏக்கப்படுகிறார்கள். எப்போது ஊர் போகலாம் என்ற ஏக்கம் அவர்களுக்கு உண்டு. ஏக்கங்களைக் கவிதைகளாக நாடகங்களாகத் தந்து கொண்டிருக்கின்றனர். 120 தமிழ்ப் பாடசாலைகள் ஜேர்மனியில் இருக்கின்றன. 12,000க்கும் மேற்பட்ட மாணவர்கள் அங்கு தமிழைக் கற்கின்றனர். 300 கிலோமீற்றருக்கு அப்பால் சென்று கூடப் படித்துள்ளேன். இங்குள்ளோர் தூய தமிழில் தமது பிள்ளைகளுக்குப் பெயர் வைக்கின்றனர். மொறிசியஸ், பிரான்ஸ் நாடுகளிலும் தமிழர்கள் வாழுகின்றனர். பெயரிலாவது தமிழ் இருக்க வேண்டும். மொழி எம்மை அடையாளப்படுத்த வேண்டும். மக்களது துன்பங்களையும் உத்வேகத்தையும் உணர்த்துவதுதான் கலை.

*கலை, இலக்கிய, சமூக விஞ்ஞான காலாண்டிதழான 'தாயகம்' சஞ்சிகையின் 76ஆம் இதழ் குறித்தான கண்ணோட்டங்கள் பேசப்பட்டன.*

**சட்டத்தரணி இரா. சடகோபன்**
**'கவிதை'**

போட்டியொன்றுக்குப் புகழ் பூத்த சர்வதேச ஓவியர் தனது ஓவியமொன்றைச் சமர்ப்பித்திருந்தார். 10 ஆயிரம் ரூபா பரிசு கிடைத்தது. பரிசைப் பெற அவர் விழாவுக்குச் சென்ற போது அவரது பரிசு பெற்ற ஓவியம் தலைகீழாக வைக்கப்பட்டிருந்தது. அதைப் பார்த்துத்தான் அர்த்தத்தைப் புரிந்து பரிசைக் கொடுத்துள்ளனர். இதே போலத்தான் ஒரு படைப்புப் பல அர்த்தங்களில் பார்க்கப்படும். இந்த இதழில் அழ.பகீரதன் என்ற கவிஞர் 'மாண்டவர் யாரோ' என்ற தலைப்பில் கவிதையொன்றைத் தந்துள்ளார்.

அண்மைக் காலத்தில் எமது நாட்டில் எத்தனை பேர் மாண்டனர். சில மாதங்களுக்கு முன்னர் முள்ளிவாய்க்காலில் 35,000 - 40,000ற்கு மேற்பட்டோர் மாண்டு அந்நிலத்தை மண்மேடாக்கினர். இக்கவிதை ஊடாக மூன்று விடயங்கள் மக்கள் முன் வைக்கப்படுகின்றன. 'ஆண்ட பரம்பரை ஆள நினைத்து வீழ்ந்த போதும் வீழ்ந்த போது மாண்டவர் யார்?' என உரக்கக் கேட்கிறார். 'தத்தம் மொழி பேசிக் கூடிய இயல்பாய் இன்புற வாழ்ந்த இனமென உணராமாந்தர்' என மானுடத்தைச் சாடுகிறார். இப்படியாக இன்றைய கால கட்டத்தினை இக்கவிதை பிரதிபலிக்கின்றது. கவிஞர் நி.பிரதீபன் 'சுதந்திரம்' என்ற தலைப்பில் கவிதை பாடியிருக்கிறார். 20.05.2009 எனத் திகதியும் இடப்பட்டுள்ளது. இது எம்மைப் பொறுத்தவரை மிக முக்கியமான திகதியென்பதும் கவனத்துக்குரியதே. ஒரு பகுதி மக்கள் மரணப் பொறிக்குள் அகப்பட்டுத் தவித்துக் கொண்டிருந்த போது இங்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெடி கொளுத்திக் கொண்டாடப்பட்டது. பாட்டாளி வர்க்கத்துக்கு ஒரு நாள் சுதந்திரம் வரும் என்ற நம்பிக்கையைக் கவிதை தருகின்றது. பொருத்தமான கவிதை.

'போராடல் பற்றி.....' என்ற மாக்ஸ் பிரபாஹர் கவிதை சமூகம் தொடர்பான கொள்கை இருக்க வேண்டுமென்பதை வற்புறுத்துகின்றது. இது மனிதருக்கு மட்டுமல்ல, பத்திரிகைகள், எழுத்தாளர்களுக்குத் தேவையானதொன்று. யுத்தத்தில் ஏற்பட்ட துன்பங்கள் மீள் பரிசீலனை செய்யப்பட வேண்டும். தொடர்ந்தும் நாம் பார்வையாளர்களாகவே இருக்கிறோம். இவை யாவற்றையும் விதியாகவே பார்க்கிறோம். சாட்டை அடி கொடுக்கும் கவிதை 'பித்தாய் அலைகின்றார்' புசல்லாவை குறிஞ்சி நாடன் எழுதிய கவிதை. 18 வயதுக்குட்பட்டோரை வீட்டு வேலைக்கு அமர்த்தக் கூடாதென்று சட்டம் உண்டு. ஆனால், இது கவனிக்கப்படுவதில்லை. 'நெஞ்சமது பதை பதைக்க... நீதிக்காய் போராடும்....' எனக் கவிஞர் அறைகூவல் விடுகின்றார். அடிப்படைக் காரணத்தை அறிய வேண்டும்.

மாற்றம் நோக்கிய சிந்தனையை விதைக்க வேண்டும். 'புரட்சியின் பாட்டு' பிறமொழிக் கவிதையைத் தமிழில் தந்திருக்கிறார் மணி. எந்த மொழிக்கும் நாட்டுக்கும் விடுதலை வேண்டும். இதுவொரு விடுதலைக் கீதம். ஆபிரிக்கக் கறுப்பு இனத்தவர்க்கான கவிதை என ஊகிக்க இடமுண்டு. 'குறையினைக் கூறிடும் குறை' இதயராசன் கவிதையில், மன ஆதங்கம் ஒலிக்கின்றது. ஆதங்கப்படுவதால் மனத்துன்பம் குறையலாம். ஆனால், இல்லாமல் போகாது. 'அந்த அந்தி நேரம் இன்று வருமா.....?' க.செந்தில்குமார் கவிதை. சேரும் நினைவுகள் யாருக்குத்தான் மகிழ்ச்சியாக இருக்காது?

வாழ்ந்த சூழ்நிலைக்கு அழைத்துச் செல்கின்றது 'எங்களது தெய்வங்கள்' த.ஜெயசீலன் எழுதிய கவிதை. தெய்வங்கள் யார்? தவறான தெய்வங்களை வணங்குகிறோம். சரியான தெய்வங்கள் யார்? என்பதை அறிந்திருக்க வேண்டும். மக்களிடம் தான் சென்றிருக்க வேண்டும். தவறான தெய்வங்களை நம்பியதால் இன்று முற்றுமுழுதாக வெளிநாட்டுத் தெய்வங்கள் காப்பாற்றுவரென நம்புகிறோம். மாவை வரோதயன், கவிஞர் இ.முருகையன் ஆகியோரின் அஞ்சலிக் கவிதைகளும் உண்டு.

**கவிஞர் மேமன் கவி: 'சிறுகதைகள்'**

இலக்கியம் என்னத்தை செய்யும்? என எமது இலக்கியச் சூழலில் பேசப்படுவதுண்டு. இலக்கியம் வாசகரை நெகிழ வைக்க வேண்டும். ஈழத்துச் சிறுகதைகளில் இத்தன்மையைக் காண்கிறோம். சிறுகதைக்கு களம் குறைவாக இருக்கின்றதென்ற பற்றாக்குறை இருந்தது. இன்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறுகளங்களுக்குள்ளும் சென்றிருக்கிறோம். இணையத்தளம், புலம் பெயர் இலக்கியம் என்பவற்றிலும் எமது சிறுகதைகளைக் காண்கிறோம். சிறுகதைக்கு வியக்கவைக்கும் உருவமும் உள்ளடக்கமும் இருத்தல் வேண்டும். இந்த இதழில் மூன்று சிறுகதைகள் இருக்கின்றன. பதுளை சேனாதிராஜா, ஆனந்தி, சமரபாகு சீ.உதயகுமார் ஆகியோர் எழுதியிருக்கின்றனர். வெவ்வேறு விடயங்களை வெளியிடுகின்றன. பெரும்பாலான விமர்சகர்கள் போர்ச் சூழலை மட்டுமே கண்டு பேசுகின்றனர். சமூகத்தில் காணப்படும் சாதியம், வர்க்கப் பிரச்சினைகள் என்பவை குறித்துப் பார்ப்பதில்லை. இந்த வகையில் பிழையான கருத்துகளை முன்வைக்கின்றனர். போர் முடிந்துவிட்டது. இன்னமும் போர்ச் சூழல் முடியவில்லை. பல்வேறு நிலைகளில் போர் இன்னமும் தன்முகத்தைக் காட்டிக் கொண்டு தான் இருக்கின்றது. போராட்டங்களின் பதிவுகளைத் தரும் இலக்கியம் வீச்சானது. அதுவே நல்ல இலக்கியமும்.

ஒரு வகையில் தனிமனிதப் போராட்டங்களை மூன்று கதைகளும் பேசுகின்றன. 'செந்நீரும் கண்ணீரும்....' சமகாலப் படப்பிடிப்பு. முன்னேற்பாடாக எழுதப்பட்டதல்ல. சிறுகதைக்கு இத்தன்மை மிகவும் முக்கியம். உருவச் செழிப்பில் தொய்வு நிலையே காணப்படுகின்றது. 'யாருக்காக அழுதாள்?' கதையில் ஆனந்தி ஊனமுற்ற சமூகத்தைப் பிரதிபலிக்கின்றார். உடன்பாடில்லாவிட்டாலும் மதிக்கிறோம். மலையகப் பின்னணியில் 'இன்னொரு ஹிரோஷிமா' பதுளை சேனாதிராஜாவால் எழுதப்பட்டுள்ளது. எனது தொகுப்பொன்றின் பெயரில் ஹிரோஷிமா உள்ளது! மிக முக்கியமான கதை. நல்ல படிமங்கள் கையாளப்பட்டுள்ளன. கதைகளில் கதைசொல்லி இடையீடு செய்வது கதையின் ஓட்டத்தைக் குறைக்கும்.

*பார்வையாளர் சிலரும் கருத்துரைத்தனர்.*

*'நதி' ஆசிரியர் கே.ஆர்.லோசன் நன்றி கூறினார்.*

-03/04.02.2010

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 12

## "திருக்குறளின் கல்விச் சிந்தனை - சமூக நோக்கில் ஒரு மறுவாசிப்பு" நூல் அறிமுகம்

**வி**ஞ்சு வெளியீட்டகமும் வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டமும் இணைந்து வெளியிட்ட ந.இரவீந்திரனின் 'திருக்குறளின் கல்விச் சிந்தனை - சமூக நோக்கில் ஒரு மறு வாசிப்பு' என்ற ஆய்வு நூலின் அறிமுக நிகழ்வு 06.06.2010 ஆம் திகதி தேசிய கலை இலக்கியப் பேரவையின் க.கைலாசபதி கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. பேராசிரியர் சி.சிவசேகரம் தலைமை தாங்கினார்.

மௌ.மதுவர்மன் வரவேற்புரை நிகழ்த்தினார்.

**தலைமையுரை :**
**பேராசிரியர் சி. சிவசேகரம்**

திருக்குறள் சம்பந்தமான ஆய்வுகள் நிறையவே நடந்துள்ளன. திருக்குறளை விளங்கிக் கொள்வதில் பிரச்சினை இருக்கிறது. அது எழுதப்பட்ட காலத்திலிருந்து இன்றுவரை வாழ்க்கையில் எவ்வளவோ மாற்றங்கள் நடந்திருக்கின்றன. இந்த நூலின் ஆசிரியர் ந. இரவீந்திரன் முரண்பாடுகளை நன்கு விளக்கிச் சொல்கிறார். திருக்குறளின் தனித்துவம் தொன்மம் என்பவைகளால் அதற்கு மரியாதை உண்டு. வடமொழியிலிருந்து வந்ததல்ல. சமய சார்பற்ற நூலாகவே பயன்படுகின்றது. பொதுவானதாக இருக்கின்றது. இன்றும் காணும் திருவள்ளுவரின் தோற்றத்தில் சர்ச்சை இருக்கின்றது. அவருக்குத் தலையில் முடி இருந்ததா? இல்லையா? என்பது தெரியாது. அவர் உண்மையான சைவர் என வாதிடுகின்றனர். தமிழருக்கும் சைவத்துக்கும் முக்கிய பங்குண்டு. புத்த மதத்தின் கணிசமான பாதிப்பு திருக்குறளில் உண்டு. அதே போல் சமணப்பாதிப்பும் இருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறநெறி ஊடாகக் கல்விக் கண்ணோட்டம் எப்படி வருகின்றதென்பதை இந்நூல் எடுத்துச் சொல்கிறது.

திருவள்ளுவர் வாழ்ந்த காலத்துக்கு முன் நிற்கிறார். ஒருவனுக்கு ஒருத்தி என்ற கருத்தியல் அவர் மூலமாகவே வருகின்றது. வர்ணாசாரத்தை ஆரியர் கொண்டு வந்தனர். வர்ணாசாரக் கோட்பாடே சாதி ஏற்றத் தாழ்வுகளை ஏற்படுத்தியது. அடுக்குகள் பிறப்பாலேயே தீர்மானிக்கப்பட்டன. சாதியம் கொடுமையானது. பெண்கள் தம் சாதியைப் பாதுகாத்தனர். ராமர் கொலை செய்கிறார். மனு தர்மத்தை மீறிக் கீதை போக முடியாது. தமிழ்நாட்டில் முன்னர் வர்ணாசாரம் இல்லை. சத்திரியர் என்ற சாதி இருந்ததில்லை. ஆறுமுக நாவலர் வேளாளரைச் சற்சூத்திரர் எனக் கூறி பிராமணருக்கு அருகே கொண்டு வந்தார். வள்ளுவர் காலத்திலும் சாதி இருந்தது.

**விமர்சன உரைகள்:**
**கவிஞர் ஏ.இக்பால்**

நான் மு.வரதராசனின் பிரியன். அவரது 'திருக்குறள் அல்லது வாழ்க்கை விளக்கம்' என்ற நூலைக் கரைத்துக் குடித்தேன். திருக்குறள் குறித்தான எனது தேடல் 1960 களிலிருந்து ஆரம்பமாகி விட்டது. அப்போது எங்களுக்குப் படிப்பித்தவரும் மு.வரதராசனின் பிரியர். க .நா.சு. வின். 'விமர்சனக் கலை' நூலின் வசன நடை நல்லது. ஆர்.வி., அகிலன், மு.வ. நல்ல விடயங்களைத் தொட்டு எழுதினர். ஆசிரியரிடமும் கொடுத்தோம். இந்த வாசிப்புக்களால் திருவள்ளுவரைப் படிக்கும் ஆசை ஏற்பட்டது. அதற்கு எங்களுக்குப் பரிமேலழகர் உரை தான் கை கொடுத்தது. 1960 இலேயே படித்தோம். கற்பிக்கத் தொடங்கிய காலத்தில் பரிமேலழகரின் கருத்துக்களை முன்வைக்க வேண்டிய நிலை தான் இருந்தது. 1991க்குப் பின் ஞா.மாணிக்க வாசகர், மு.கருணாநிதி, சுஜாதா ஆகியோரது உரைகள் வெளிவந்தன. அவைகளையும் படித்த பின் மேலும் அவா ஏற்பட்டது.

முனுசாமியின் நூலையும் வாசித்தோம். பசியைத் தீர்த்தோம். 1968 இல் வந்த மணியனின் 'குறள் வழிச் சிந்தனை' புதிய சிந்தனையைத் தந்தது. 'தகவம்' வ.இராசையா 2005 இல் இலங்கையில் 'குறள் வழிக் கதைகள்' என்ற நூலை வெளியிட்டார். 'திருவள்ளுவர் அகராதி' உரை கண்டு பிடிக்க லேசானது. 'வள்ளுவம்' என்ற சஞ்சிகையையும் படித்தேன். திருக்குறள். கௌடில்யர், அறம் அல்லது அகராதி ஆகியன என்னைக் கவர்ந்தன. கௌடில்யர் கி.மு 3ம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். திருக்குறளில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி பற்றிய சிந்தனை சொற்பமானது. 15 அல்லது 20 குறள்களே கல்வியைப் பேசுகின்றன. 'திருக்குறளின் கல்விச்சிந்தனை' முழு நிலையைத் தருகிறது. இது பெரும் கொடையென்றே சொல்ல வேண்டும். 5 இயல்களில் நூலாக்கப் பட்டுள்ளது. சங்க கால கல்விச் சிந்தனைகளை நூல் பேசுகின்றது. திருக்குறளில் கல்விக் கோட்பாடு இருப்பதை நூலாசிரியர் விளக்கித் தருகிறார். நூலின் அடக்கம் சர்வ கலாசாலை மட்டத்திலிருந்து வியாபித்தது. பாடசாலை மட்டத்திற்கு மட்டுமல்ல இந்நூல் சகல உலகுக்கும் தேர்ந்த நூல்.

## லெனின் மதிவானம்
**(உதவி ஆணையாளர், பாடநூல் வெளியீட்டுத் திணைக்களம், கல்வி அமைச்சு)**

திருக்குறள் பற்றிய சிந்தனைக் களத்துக்கு இந்நூல் புதிய வரவு. வணிக ஆதிக்கக் குரலாக நிலமான்ய பெண்கள் சம்பந்தப்பட்ட சகல விடயங்களுக்கும் திருக்குறள் முகம் கொடுத்துள்ளது. 'திருக்குறளின் கல்விச் சிந்தனை' பல புதிய விடயங்களைக் கண்டறிய முயற்சிக்கின்றது. மூல விடயத்தை விடுத்துப் பொழிப்புரைகளையே இது வரை ஆராய்ந்துள்ளனர். திருக்குறள் பற்றி மயக்கம் ஏற்பட்டது.

துணிந்து கருத்துக்களை கூறுவது சவாலாகிறது. நூலாசிரியர் ந.இரவீந்திரன் ஏற்கனவே பிரபல்யத்தைப் பாராது பாரதியை வித்தியாசமாக ஆராய்ந்து பார்த்த தைரியந்தான் திருக்குறளையும் ஆராய இட்டுச் சென்றிருக்கிறது. உலகமயமாக்கலுக்கு இரு போக்குகள் உண்டு. ஒரே கலாசாரம் ஒன்று. அமெரிக்கர் பண்பாட்டுப் போக்கை முன்னெடுக்க முனைந்தனர் செய்தும் வருகின்றனர்.

பின் நவீனத்துவம் மரபுகளை நிராகரிப்பது. ஆதிக்க சிந்தனைப் போக்கு ரஷ்யாவில் இருந்தது. பாட்டாளி வர்க்கத்தைப் பாட்டாளியால்தான் சித்திரிக்க முடியும் என லெனின் கருதினார். திருக்குறள் பெண் அடிமைத்தனத்தை மறுத்துரைப்பதை இந்நூலாசிரியர் காட்டுகிறார். காமத்துப் பாலை வாசித்தபோது 'வீரம் விளைந்தது' என்ற நாவல் ஞாபகத்துக்கு வந்தது. கருத்துகளை ஆதாரத்தோடு சொல்லி இருக்கிறார். திருவள்ளுவரிடம் ஆண்மையச் சிந்தனை உண்டு. கல்வி உரிமையை மறுப்பது சுதந்திரத்தை மறுப்பது போன்றதாகும். கல்வியைச் சகலருக்கும் வழங்க வேண்டும். இதற்கான போராட்டங்களும் நடந்திருக்கின்றன. பிரான்ஸியப் புரட்சியின் பின்னர் நிறுத்தப்பட்டது. சகலருக்கும் கல்வி என்ற தீர்மானம் கொம்யூனிஸ்ட் அறிக்கையில் தான் வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறுதியான கருத்தியல் நடத்தை பேசுகிறது திருக்குறள். திருக்குறள் தோன்றிய காலத்தில் பகவத் கீதை சாதியை நிறுவியது. மரபை உடைத்த சிந்தனைகளை இந்நூல் பேசுகிறது. வாழ்வின் சகல பக்கங்களையம் வள்ளுவர் தொட்டுச் செல்கிறார். மரபை உடைத்துச் செல்லும் போக்கை ஆசிரியர் காண்கிறார். சொல்கிறார். திருக்குறள் வெளிப்படுத்தும் கல்விச் சிந்தனை மேம்பாட்டை ஒப்பிட்டு நோக்குகிறார்.

திருக்குறள் சமூகத்தை மாற்றி அமைக்க உதவுமென்பதைக் காட்டுகிறார். திருக்குறளில் கல்விச் சிந்தனை வளம் பெற்றிருக்கின்றது. ஒருவர் படித்து வைத்தியராக வருவதற்கு 1½ கோடிக்கு மேல் தேவைப்படுகிறது. இது எல்லோருக்கும் முடியுமா? இன்றைய கல்வி மாற்றுச் சிந்தனைக்குத் திருக்குறளைத் தான் கையிலெடுக்க வேண்டும். பாரதியின் கல்விச் சிந்தனையை வாசித்தேன். அந்தக் கருத்துக்களை அவர் திருவள்ளுவரிடமிருந்து தான் பெற்றிருக்கிறார். எமது பண்பாட்டுக்குரிய கல்வியை ஆக்கவே திருவள்ளுவர் சிந்தித்தார். பாரதியை நாம் உணராதிருக்கிறோம். ந.இரவீந்திரனின் இந்நூல் துணிந்த முயற்சி. புதிய பார்வை. நூலாசிரியர் நேர்மை மிக்க மார்க்சியவாதி.

**விரிவுரையாளர் பசீர் றில்சாட்**

'திருக்குறளின் கல்விச் சிந்தனை' என்ற நூலின் ஆய்வுமுகத்தை நூலாசிரியர் ஆய்வு முறையில் கொண்டு வந்திருப்பது சிறப்பாக இருக்கிறது. வருங்கால ஆய்வாளருக்குச் சிறப்பான களத்தைக் கொடுத்திருக்கிறார். நுணுக்கமான விடயங்களைப் பெற்றுக் கொள்ள முடிகின்றது. நூலுக்குள்ளுக்கான அருமையான பிரவேசத்தை இயல் 1,2 களில் வைத்துள்ளார். அறிதலுக்காகக் கற்றல், வாழ்வதற்காகக் கற்றல் செயலாற்றுவதற்காகக் கற்றல், சேர்ந்திருந்து வாழ்வதற்காகக் கற்றல் என நான்கு அம்சங்களை யுனெஸ்கோ வெளியிட்டிருப்பதாகக் கூறினாலும் அதை நான் மறுதலிக்கிறேன். இயல்கள் 3,4 இல் தன் கருப்பொருள் விடயத்தைச் சொல்ல ஆசிரியர் இவ்விடயங்களைத் தொட்டு சென்றிருக்கிறார். காலத்துக்குப் பொருத்தமாக இருக்கிறது. ஆசிரியர் குறித்தும் சமூக மாற்றம் குறித்தும் நூலில் நோக்கப்படவில்லை. இது கவலையைத் தான் தருகிறது. மக்களுக்குள் திருக்குறள் போய்ச் சேர்ந்திருக்கிறது. நுணுக்கமான பார்வை தேவையில்லை. குறளுக்குத் தெளிவற்ற தன்மை இருந்திருப்பின் அது மக்களைச் சேர்ந்திருக்காது. மக்கள் மனங்களில் இந்தளவுக்கு நிலைத்திருக்காது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலக, இந்தியக் கல்விச் சிந்தனைகள் முன்னுரையில் பேசப்பட்டுள்ளன. இந்த, இயல், முக்கியமான விடயம். திருவள்ளுவருக்கு முன்பே தமிழ்ப் பேசும் மக்களின் வாழ்க்கைப் போராட்ட வடிவங்கள் மிக அழகாகத் தொட்டுக் காட்டிய போதிலும் 3 தசாப்த போராட்டம் கேள்விக்குறியாக இருக்கிறது. திருக்குறளுக்கு முன்பே தமிழ்ச் சூழலில் போராட்டங்கள் ஏற்பட்டிருக்கிறது. அதன் வடிவ மாற்றங்கள் நூலில் சுட்டிக் காட்டப்பட்டிருக்கின்றன. வறுமைக்கு, உழைப்புக்கு எதிராக வணிகப் பண்புகள் விலகி நிற்பதை நூல் நுட்பமாக ஆராய்கிறது. திருவள்ளுவர் முப்பாலையும் அறியக் காரணமாக இருந்தார். பொருத்தமான பெயர் திருக்குறள் என்பதற்கு ஆதாரங்களைத் தந்துள்ளார். ஆசிரியர் சிலப்பதிகார காலத்தை ஒப்பீட்டு ரீதியாக எடுத்துக் காட்டியிருக்கிறார். திருக்குறள் சமய சார்பற்றது. திருவள்ளுவர் சமணர் என்ற கருத்துப் பதிந்திருப்பதை கூறுகிறார். உழைப்பின் அவசியம் பற்றி, இல்லறத்தில் ஏற்படுத்தும் தாக்கம் பற்றி அன்றே திருவள்ளுவர் குறிப்பிட்டுள்ளார். காலத்துக்கேற்ற பொருத்தமான செயற்பாடு இந்த ஆய்வு. பெண்ணுரிமை சுதந்திரம் பற்றி இயல் 1 இல் சொல்லியிருக்கிறார். தமிழகத்தோடும் பொருத்திப் பார்த்துள்ளார். நூலின் பிற்பகுதியைச் சுருக்கமாகவே தந்திருக்கிறார். கருப் பொருளை இயல் 3 இல் ஆசிரியர் தொடுகிறார்.

பக்கம் 82 பந்தி 2 இல் கீதையின் போதனைகள் பொது நலநோக்கில் கடமையை வற்புறுத்துவன எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. வருணாசிரம தர்மம் கீதையில் காணப்படுவதைக் காணலாம். அதற்காகவே ஆக்கப்பட்டதாகும் என்ற விமர்சனத்துக்கு உரியது. இது எதிர்கால ஆய்வாளருக்குப் புலமாகும். பகவத் கீதை குல கோத்திரங்களை எடுத்துச் சொல்வதென்பதை ஏற்றுக் கொள்ள முடியாது. கல்வியின் தூண்களில் கருப்பொருள் வடிவமைக்க முனையக் குறுகிய காலத்தையே செலவழித்திருக்கின்றார். கூடுதலான காலத்தை பிற்புலம்பற்றி வெளிப்படுத்துவதற்கே செலவழித்திருக்கிறார். இது மிக அருமையான நூல்.

## கருத்துரை: தமிழ்த்தென்றல் தம்புசிவா

திருக்குறள் 3 பால்களாக வகுக்கப்பட்ட 1330 குறள்களைக் கொண்டது. பொதுமறை எனப் போற்றப்படுகின்றது. இன, மத, சாதி, மொழி எல்லைகளைக் கடந்து சமத்துவம் பேசுவது. அதிகாரங்கள் பலவற்றைக் கொண்டது. கல்விச் சிந்தனைகளைக் கொண்டது. அறிவு வேட்கையை உண்டாக்கக் கூடியது. மார்க்சியம் சார்ந்தது. ந.இரவீந்திரன் முனைவர் பட்டத்துக்கு மேற்கொள்ளப்பட்ட ஆய்வே இந்நூலாகும். பல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூற்றாண்டுகளுக்கு முன் தோன்றிய நூல் திருக்குறள். அறிவார்ந்த சிந்தனைகளின் ஊற்றுக்களமாக இருக்கின்றது. இன்றைக்கும் பொருத்தமான வலுவான கல்விச் சிந்தனைகளை வழங்கி இருக்கின்றது. காலத்துக்குக் காலம் சமூகம் மாறக் கூடியது. வள்ளுவம் கல்வியை உணர்த்தும் அம்சங்களைக் குறித்துப் பலரது உரைகள் வெளி வந்தன. இவைகளில் பரிமேலழகர் உரையே பேசப்பட்டது.

மு.வரதராசன், அறவாணர் ஆகியோரது உரைகளும் குறிப்பிடத்தக்கவை. தான் பெற்ற இன்பம் இவ்வையகம் பெறுக என்ற பொது நோக்கில் நூலாசிரியர் இரவீந்திரன் திருக்குறளின் கல்விச் சிந்தனைகளை மிக நுட்பமாகத் தந்துள்ளார். 5 இயல்களில் ஆய்வு நடைபெற்றுள்ளது. பிறப்பால் அனைவரும் சமம். உழுதுண்டு வாழ்தல் என்பன திருக்குறளின் கருத்தியல். மக்கள் நலன்பட்ட பெரும்பாலான சிந்தனை வீச்சை உள்வாங்கியது திருக்குறள். நூலின் இயல் 3, கல்வி பற்றித் தெரிவிக்கின்றது. அறிவுக் கோட்பாட்டிற்குப் புதிய தளத்தை ஏற்படுத்தியவர் திருவள்ளுவர். கல்வியை நெறிப்படுத்தும் கைந்நூல். தற்காலத்துக்குப் பொருத்தமான சிந்தனைகளைத் தந்துள்ளது. இயல் 5 இல் கல்வி பற்றிய ஆழமான வீச்சு இருக்கின்றது. கல்விச் செயற்பாடுகளை வெளிப்படுத்துகின்றது. திருக்குறளின் ஒவ்வொரு குறளையும் ஆய்வுக் கண்ணோட்டத்தோடு நுணுக்கமாகக் கற்றுத் தனித்துவமான ஆய்வை இரவீந்திரன் மேற்கொண்டுள்ளார்.

**ஏற்புரை :**
**நூலாசிரியர் ந.இரவீந்திரன்**

இந்த நிகழ்வுக்கு பேராசிரியர் சி.சிவகேசரம் தலைமை தாங்குவது குறித்துப் பெருமைப்படுகின்றேன். இந்நூலை முதன் முதலாக வவுனியாவில் வெளியிட்டேன். அதைப் பேராசிரியர் கா.சிவத்தம்பிக்குச் சொன்னவுடன் வாழ்த்துரை தந்தார். இந்த ஆய்வில் என்னை நெறிப்படுத்திய தமிழ்ப்பல்கலைக்கழக மேனாள் துணைவேந்தர் முனைவர் இ.சுந்தரமூர்த்திக்கு மரியாதை செய்ய வேண்டும், அவர் திருக்குறளில் நிபுணர், அவர் அங்கீகரித்த பின்னர் இந்நூலை ஏற்காதிருக்க முடியாது, எனக் கூறுவதாக அமையும் அந்த வாழ்த்துரையானது பிரதானமாக பேராசிரியர் சுந்தரமூர்த்திக்கு உரியதாக அமைந்திருந்தது. 'பாரதியின் மெய்ஞ்ஞானம்' என்ற எனது நூல் எனது ஆய்வறிவைச் செழுமைப்படுத்தி அத்துறையில் முன்னேற வைத்தது. திருக்குறளின் கல்விச்சிந்தனை நூலின் பிற்பகுதி சுருங்கியதற்கு எனது கற்கைக்கான லீவு முடிந்ததே காரணம். 'இராமாயணத்தில் இன்று போய் நாளை வா' என்று மட்டும் கம்பர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராமனின் வீரத்தைச் சொல்லி இருக்கிறார். ஆனால் இராவணனின் வீரத்தைக் கூடுதலாகப் பேசி இருக்கிறார். மார்க்சியம் - பாரதி கல்விச் சிந்தனைகள் என்பவற்றில் சமநிலை உண்டு. திருக்குறளிலும் உண்டு. அதுவரை தொடாத இடங்களுக்குள் வள்ளுவர் சென்றுள்ளார். இத்தகைய சிந்தனை எப்படி வந்தது? அந்தக்காலச் சூழல் என்ன? பரிமேலழகர் ஊடாக மட்டும் திருக்குறளைப் பார்க்கக் கூடாது. சங்கானை நூலகத்தில் திருக்குறளுக்கான மரபுரையாளர் பத்துப்பேருடைய உரையுடன் கூடிய கி. வா. ஜகந்நாதன் தொகுத்த பெரியதொரு தொகுப்பு இருந்தது. படித்தேன். உலகம் முழுவதும் வணிகர் பரம்பல் உண்டு. தமிழகத்திலும் உண்டு. வீரயுக(சங்ககால) முடிவுடன் அல்லாமல் தொடக்கத்திலிருந்தே தமிழில் வணிகத் தாக்கம் உண்டு. சுமேரியரும் வணிகத் தொடக்கத்துக்குப் பங்களித்துள்ளனர். உழைப்பைப் பிராமணர்கள் கேவலமாக மதித்தனர். வள்ளுவர் உழைப்பை மதித்தார். எனவே தான் முக்கியத்துவம் கொடுத்தேன். அறத்தில் கல்வி சார்ந்தவை சொற்பமாகவே உள்ளன. பெரியோர் நண்பர் என்பதன் ஊடாக வள்ளுவரின் கல்விச் சிந்தனையில் ஆசிரியருக்கான பங்குப் பாத்திரம் வெளிப்படுகிறது. கல்வி உலகமும் அங்கீகரித்துள்ளது.

-16/17.06.2010.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13

## எஸ். மோசேஸ் 'கலை இலக்கியக் கட்டுரைகள்' வெளியீடு

ஈழக்கலை, இலக்கிவாதிகளின் பேரபிமானத்தைப் பெற்றவர் எஸ்.மோசேஸ். இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் நிரந்தர நிகழ்ச்சித் தயாரிப்பாளர். இவர் தயாரித்த தொலைக்காட்சி நாடகம், தொலைக்காட்சி விவரணச் சித்திரம் என்பவற்றிற்கு அரச விருதுகள் கிடைத்திருக்கின்றன. இவரது கவிதை, சிறுகதை, நாடகம், ஆய்வுக் கட்டுரை நூல்களுக்கு அரச சாஹித்திய விருதும் கிடைத்துள்ளது. இவைகளுக்கும் மேலாக இவர் வருகைதரு ஊடகத்துறை விரிவுரையாளராகத் தனது பணியையும் தந்து கொண்டிருக்கிறார். இதுவரை இவர் எட்டு நூல்களைத் தமிழ் வாசகருக்குத் தந்துள்ளார். இதில் பெரும்பாலானவை ஊடகம் சம்பந்தமானவையே. இவரது ஒன்பதாவது நூலான 'கலை இலக்கியக் கட்டுரைகள்' கிருஷி வெளியீடாகத் தற்போது வெளிவந்துள்ளது.

திருமறைக் கலாமன்றத்தின் கொழும்புக் கிளையின் ஜூன் மாத நோன்மதி இலக்கியப் பாசறையில் இந்நூல் வெளியிடப்பட்டு, நயவுரையும் நிகழ்த்தப்பட்டது. 25.06.2010 இல் இந்நிகழ்வு கொழும்பு - 13, புனித ஆசீர்வாதப்பர் வீதியின் 5ஆம் ஒழுங்கையில் அமைந்துள்ள மன்றப் பணிமனையின் கேட்போர் கூடத்தில் நடாத்தப்பட்டது. கலைஞான தீபம் அம்புறோஸ் பீற்றர் (இணைப்பாளர் - தி.க.ம.கொழும்புக் கிளை) தலைமை தாங்கினார்.

இரு நிமிட மௌன இறைவணக்கத்துக்குப் பின் கலாசேத்ரா நர்த்தகி ஜொஸிற்றா பீற்றரும் செல்வி எம்.ஷகியும் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடினர். விரிவுரையாளர் திருமதி பகீரதி மோசேஸ் வரவேற்புரை நிகழ்த்தினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தலைமையுரை :**
**கலைஞான தீபம் அம்புறோஸ் பீற்றர்**

வடகொழும்பில் கலை, இலக்கிய உணர்வுகளை மேம்படுத்தும் வகையில் நோன்மதி இலக்கியப் பாசறையைத் தொடர்ந்து நடாத்தி வருகிறோம். கொழும்பு தமிழ்ச் சங்கம் பல சிறந்த இலக்கிய நிகழ்ச்சிகளைத் நடாத்துகிறது. அதைக் குழப்பாதிருக்கும் பொருட்டே எமது நிகழ்ச்சிகளைக் காலையில் ஏற்பாடு செய்கிறோம். இந்நூலாசிரியர் எஸ்.மோசேஸ் பதினொரு ஆண்டுகளுக்கு மேலாக கிறிஸ்தவப் பாடல்களை ஒளிபரப்புகிறார். ஊடகத்துறையை ஆராய்ந்து ஆழமாக எழுதுகிறார். ஒன்பது நூல்களை வெளியிட்டுள்ளார். நூல்களை வெளியிடுவதென்பது பாரிய சுமை. பெரிய தாக்கத்தை ஏற்படுத்தும்.

இந்நூலாசிரியர் இளவயதினர். எனவே இவரது வயதுக்கு இன்னும் பல நூல்கள் வருமென எதிர்பார்க்கலாம். இவர் ரூபவாஹினி வேலையோடு கொழும்பு பல்கலைக்கழகத்திலும் விரிவுரையாளராகப் பணி செய்கிறார். இந்த வேலைப் பளுக்களின் மத்தியில் நூல்களையும் எழுதி வெளியிட்டுக் கொண்டிருக்கிறார். இவர் தமிழ்மேல் கொண்டிருக்கும் தாகமே இவைகளைச் செய்யத் தூண்டுகின்றன. தமிழ் மொழியில் ஊடக நூல்கள் வெளிவருவதை வரவேற்கிறோம். மதிக்கிறோம். கடமை ஆர்வம் கொண்டவர் மோசேஸ். இவரில் காணப்படும் குழந்தைத் தன்மை எவரையும் வசீகரிக்கக்கூடியது. அதுவே இப்பணிக்குப் பொருத்தமானது. ஊடகத்துறை சம்பந்தமான பயிற்சி வகுப்புகளைக் கவின்கலை மன்றத்தில் நடாத்தத் திட்மிட்டுள்ளோம். மோசேஸோடு இணைந்தும் பணி செய்ய எத்தனிப்போம்.

**வாழ்த்துரை:**
**காப்பியக்கோ ஜின்னாஹ் ஷரிபுத்தீன்**

என்னைப் பேட்டி கண்டவர் இந் நூலாசிரியர் எஸ்.மோசேஸ். இந்த இளைஞருக்கு வாழ்த்துச் சொல்லும்படி என்னைக் கேட்டனர். இங்கு வந்த பின் தான் அவரைப் பற்றிக் கூடுதலாக அறிந்தேன். இப்புத்தகத்தின் மூலமாகவே இவருமொரு தமிழ்ப் படைப்பாளியென அறிந்தேன். நூலின் பின் அட்டையில் நூலாசிரியர் குறித்தான விபரங்கள் நிறைய இருக்கின்றன. இந்த வயதில் நான் சாதித்ததை விட அதிகம் சாதித்துள்ளார். ஒன்பது நூல்களைக் கொணர்ந்துள்ளார். இச்சின்ன வயதில் அவர் செய்ததில் அரைவாசியையே நான் செய்துள்ளேன். சிறுகதை, கவிதை, நாடகம், விமர்சனம் எனப் பலதுறைகளைத் தொட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே அவரை வாழ்த்த எனக்குத் தகுதி காணாது. மலேசிய தமிழ்ப் பண்பாட்டுக் கழக விழாவில் கலந்து கொண்டேன். தமிழ் பேசுவோர் அனைவரும் ஒன்றாக வேண்டுமென்ற என் விருப்பத்தைத் தெரிவித்தேன். எம்மத்தியிலுள்ள விரிசல்களை முடிவுக்குக் கொண்டு வர வேண்டுமென்றேன். அப்போ சலசலப்பு ஏற்பட்டது. இப்போதாவது முஸ்லிம்களும் தமிழரும் ஒன்றிணைந்து வாழ வேண்டும்.

இங்கு பேச வந்திருக்கும் கிருபாகரனும் அவைகளையே நினைவுபடுத்தினார். இந்நூலில் பல கட்டுரைகள் உள்ளன. நான் மரபு சார்ந்தவன். முதல் கட்டுரை சந்தோஷத்தைத் தருகிறது. இப்படியான கட்டுரைகள் அற்புதமானவை. சங்ககாலம், சங்கமருவியகாலம் என்பன பற்றியும் இருக்கின்றன. இவைகளை இன்றைய இளைய சந்ததி படிக்க வேண்டும். நவீன இலக்கியம் பற்றியும் எழுதி இருக்கிறார். எனக்கு நவீன இலக்கியத்தில் பரிச்சயமில்லை.

இலக்கியத்தில் ஒரு குறிப்பிட்ட காலம் இருண்ட காலமாக இருந்திருக்கிறது. அக்காலத்திலும் இஸ்லாமிய இலக்கிய நூல்கள் வெளிவந்துள்ளன. இதை மர்ஹூம் அல்லாமா எம்.எம்.உவைஸ் குறிப்பிட்டிருக்கிறார். சொல்லப்போனால் பெரும்பான்மையான இஸ்லாமியப் பங்களிப்புகள் சொல்லப்படுவதில்லை. தம்பி மோசேஸ் இத்தகைய தேடல்களையும் செய்து வெளிச்சத்துக்குக் கொண்டு வர வேண்டும். சிலப்பதிகாரம் அருமையான நூல். அது பற்றிய முழுமையான கட்டுரை உண்டு. பல இராமாயணங்கள் உண்டென்பது அறியாத் தகவல். மதங்கள் பல இருக்கின்றன. கிறிஸ்தவம், இஸ்லாம், பௌத்தம் ஆகியவற்றின் பங்களிப்புகள் பற்றிய சிந்தனைகள் இளைய படைப்பாளிகளிடம் வர வேண்டும். அவைகளை உலகம் அறிய வேண்டும். என்னைத் தமிழுக்கு இனங்காட்டியவர் பத்திரிகை உலக ஜாம்பவான் எஸ்.டி.சிவநாயகம். வளர்ச்சிக்கு முழுமையான காரணம் மனைவிதான். எனது தந்தையார் (ஆ.மு.ஷரிபுத்தின்) தமிழைக் கற்றுத் தந்து ஊக்கப்படுத்தினார்.

*நூல் வெளியீட்டில் வீ.நடராசா முதல் பிரதியை நூலாசிரியர் எஸ்.மோசேஸிடமிருந்து பெற்றார். ரூபவாஹினி ஒளிபரப்புக் கூட்டுத்தாபனத் தமிழ்ப் பிரிவைச் சேர்ந்த எம்.ரவீந்திரன் கௌரவப் பிரதியைப் பெற்றார். கலைஞர் மோகன்ராஜ், ஆன்மீகப் பாடகர் சி.தியாகராஜா, வைத்திய கலாநிதி தனராஜ், கவிஞர் வதிரி ரவீந்திரன், லயன் எஸ்.கந்தையா ஜே.பி., நவீன எண் சோதிட நிபுணர் மொழிவாணன் ஆகியோருக்குச் சிறப்புப் பிரதிகள் வழங்கப்பட்டன.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நூல் நயவுரை :**
**வி.கிருபாகரன்**
**(ஆசிரியர், புனித ஆசீர்வாதப்பர் கல்லூரி, கொழும்பு)**

இது அதிமுக்கியமான பணி. நூலாசிரியர் எஸ்.மோசேஸ் இளைய விற்பன்னர். பல்வேறு வித்தியாசமான கோணங்களில் ஆய்வுகள் செய்யப்பட்டுள்ளன. நூலாசிரியர் சிறுவருக்குக் கூறுகிறார். முதியோரோடு பேசுகிறார். தனக்குரிய சட்டகத்தைத் தாண்டிச் சிந்தித்திருக்கிறார். தொகுத்திருக்கிறார். சங்க காலத்திலிருந்து தொடங்குகிறார். ஆசிரியரது ஆரம்பகால நூல்கள் இலத்திரனியல் சார்ந்தவை. தேடலை அகல விரித்து நவீன இலக்கியத்துக்கும் சென்றுள்ளார்.

நூலின் முதல் கட்டுரை சங்க இலக்கியச் செய்யுளமைப்பில் திணைக்கோட்பாடும் திணைப் பகுப்பில் அடங்காத பாடல்களும் என்பது. அகம், புறம் என்பவை காதல், வீரம் போன்றவைகளைச் சார்ந்தவை. மனம் சார்ந்ததே அகம். புறம் புறச் செயற்பாடுகளைக் காட்டுவது. அவ்வாறான பாடல்களைக் கண்டு பிடித்து எழுதுகிறார். இது இதுவரையும் ஆராயப்படாத விடயம். நமக்குத் தெரியாதவை. பல உதாரணங்களும் காட்டப்பட்டிருக்கின்றன. அறிவு பூர்வமான ஆழமான பார்வை.

2ஆவது கட்டுரை, சங்கமருவிய காலம் அறநூற் காலமா? என்பது. சங்ககாலம் இயற்கை நெறிக் காலமாகும். கேள்வியை எழுப்பி விடையைத் தருகிறார். சங்கமே இல்லாத போது எப்படி மருவிய காலம் வந்தது எனக் கேட்கிறார். விவாதித்துக் கூறுகிறார். அறநூல் காலமா? சங்க மருவிய காலமா இருண்டது. மாற்றங்கள் வந்துள்ளன. வெளிநாட்டார் அடக்கினர் என்பதுக்கு ஆதாரமில்லை. பல அர்த்தங்களைத் தரும் சொல் நுணுக்கங்களைக் காட்டியுள்ளார். கோட்பாடுகள் தெரிகின்றன. திருப்பி வாசிக்க, வாசிக்க விளக்கங்கள் அதிகரிக்கின்றன. திருக்குறள், நாலடியார் தோன்றிய காலம் இருண்ட காலமா? பௌத்தமும் சமணமும் அந்தக் காலத்திலேயே வந்தன. மன்னர்களால் கொண்டு வரப்பட்டிருக்கலாம்.

1525 இல் முகலாயப் பேரரசுகள் கலைகளில் ஆதிக்கம் செலுத்தின. 3ஆவது கட்டுரை பக்தி இலக்கியம் என்ற மதிப்புத் தவறு. காரைக்கால் அம்மையார் புரட்சி செய்தவர். இது இலக்கியத்துக்கு மாற்றத்தைக் கொண்டு வந்தது. ஆழ்வார், நாயன்மாருக்கு வழிகாட்டியது. பெண்ணியத்துக்கு உதாரணமாகக் காரைக்காலம்மையார் விளங்கினார். மிக அருமையான கட்டுரை. திருப்பித் திருப்பி வாசித்தேன். 4 ஆவது கட்டுரை இராமாயணம் ஒன்றல்ல பல என்பதை வெளிப்படுத்துகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெலுங்கு மொழியில் ஆயிரமிருக்கும். இந்திய கலாசாரம் இராமாயண பண்பாட்டுக்குரியதே. இராமாயணம் இந்தியாவையும் தாண்டி தென்னாபிரிக்கா போன்ற நாடுகளிலும் ஊடுருவி இருக்கின்றது. இராமன் ஏகபத்தினி விரதன்.

பல மொழிகளில் இராமாயணம் எழுதப்பட்டுள்ளது. மூலம் வான்மீகியுடையது தான். இஸ்லாத்தில் எழுதப்பட்டிருந்தால் பல திருமணங்களை இராமன் செய்திருந்ததாக எழுதப்பட்டிருக்கும். பிரதேசத் தன்மைகள் இராமாயணங்களில் தொனிக்கின்றன. இக்கட்டுரை இக்காவியம் பற்றிய பல தகவல்களைத் தருகின்றது. ஆசிரியர் இதற்காக நீண்ட காலத்தைக் கழித்திருக்கிறார். 5ஆவது சிலப்பதிகாரம் பற்றியது. சிலப்பதிகாரத்தில் வாதிடும் தன்மை இருக்கிறது. திணையைப் படம் பிடிப்பது சங்ககாலம். சிலப்பதிகாரம் அனைத்தையும் தொட்டு நகர்கிறது.

6ஆவது கட்டுரையில் சீவக சிந்தாமணி பேசப்படுகிறது. அதொரு காவியமேயென நூலாசிரியர் எழுதுகிறார். தண்டியலங்காரம் போன்றது. அறம், பொருள், இன்பம் என்பன இருக்கின்றதென்கிறார். மீண்டும் சங்ககாலத்தைக் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளார். 7ஆவது கட்டுரை தமிழ்ச் சிறுகதையும் வ.வே.சு.ஐயரும் என்பது. வ.வே.சு. ஐயர் சிறுகதை எழுதுவதற்கு முன்னரும் சிறுகதை எழுதப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகின்றது.

இலங்கையில் அளவெட்டி ஆர்னோல்ட் சதாசிவம் சிறுகதை எழுதியதாகச் சொல்லப்படுகிறது. மகாகவி சுப்பிரமணிய பாரதியார் சிறுகதை எழுதி இருக்கிறார். சரியான ஆய்வு நோக்கு வேண்டும். ஈழத்துப் பூதந் தேவனார் ஈழத்தவரா? என்பது இன்னமும் முடிவாகவில்லை.

சிங்கள இனத்துக்கு வரலாறுண்டு. தமிழருக்குச் சரியான வரலாற்றிற்கான தொடக்கப் புள்ளி இல்லை. சொல்லப்போனால் இது வ.வே.சு.ஐயருக்கான பிரச்சினை இல்லை. நமக்குரியதேயென ஒப்புக் கொள்ள வேண்டும். 8ஆவது, கலையை விளங்கிக் கொள்வதெப்படி? என்பது கலைக்கு வரைவிலக்கணம் கூற முடியாது. கலைஞனுக்கும் சுவைஞனுக்கும் இடையிலான ஊடகமே கலை. கலை மாறுந் தன்மை உடையது. ஆரம்பத்திலிருந்து, காலக்கிரமத்தில் விட்டுப் போகும். அந்தக் காலத்துக் கூத்துக்கள் இன்று வேறுபட்டுள்ளதை இதற்கு உதாரணப்படுத்தலாம்.

9ஆவது, ஓவியக் கலை சம்பந்தமானது. ஓவியம் குகைகளில் வளர்ந்தது. இலைகளினால் வரைந்தனர். இக்கட்டுரையில் பிக்காசோ என்ற ஓவியரது வரலாறு சொல்லப்படுகிறது. டாவின்சியைச் சோம்பேறி என்கிறார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலாசிரியர். அவர் மிகச் சொற்பமான ஓவியங்களை வரைந்தவர். 10ஆவது, நவீனத்துவம் கொணர்ந்த கலை, இலக்கியக் கோட்பாடுகள்.

இறுதியான 11ஆவது கட்டுரை நவீனத்துவமும் அது ஊடுருவியுள்ள துறைகளும். இங்கு வந்த வெளிநாட்டார் தமிழ்க்கலை, இலக்கியங்களில் மாற்றங்களை உண்டு பண்ணினர். கிறிஸ்தவத்தின் வருகையும் அதையே செய்தது. பாரதி கலை, இலக்கியத்துக்குப் பல நன்மைகளைச் செய்தார். இந்நூல் சங்க காலத்தில் ஆரம்பித்து நவீனத்துவம் விரிவடைவதைச் சொல்கிறது. ஒவ்வொரு பந்தியிலும் பல விடயங்களைப் படிக்க முடிகின்றது. எம்.ஏ.மாணவரது ஆய்வுக்குரிய நூல். புத்தகமே விமர்சனமாக இருப்பது தெரிகிறது. இதுவொரு முக்கியமான படைப்பு.

**ஏற்புரை :**
**நூலாசிரியர் எஸ்.மோசேஸ்**

கலை, இலக்கிய ஊடகங்கள் மூலமாக நம் கலாசாரம், பண்பாடுகளை அறியலாம். இருண்ட காலம் சங்கமருவிய காலமா? இதுவொரு அறநூல் காலமா? எனக் கேட்கிறேன். எம் மனதில் கேள்விகள் பிறக்கும். எந்த விடயத்துக்கும் கேள்விகள் கேட்பேன். வினாக்களும் போட்டேன். அவைகளைக் கட்டவிழ்ப்புச் செய்து முடிவுரைகளைச் சொல்லியிருக் கிறேன். அவைகள் முடிந்த முடிவுகளுமல்ல. பல ஆரம்பம். இன்னும் பல சிந்தனைகள் வரும். அவைகளையும் நூலாக்க வேண்டும்.

என்னிடம் 80 இற்கும் மேற்பட்ட கட்டுரைகள் உண்டு. நிச்சயமாக அறநூல் காலத்தை இருண்ட காலமாகக் குறிப்பிடவில்லை. 1ஆவது நூல் தொல்காப்பியம். முதல் எழுத்திலக்கண நூல். எனவே இவைகள் தோன்றிய காலம் இருண்ட காலமல்ல. சிலப்பதிகாரம், மணிமேகலை என்ற காப்பியங்கள் அக்காலத்திலேயே தோன்றின. இரு மூத்த காப்பியங்கள் தோன்றிய காலத்தை எப்படி இருண்ட காலமெனலாம். பொய்யா மொழியான திருக்குறள் கி.மு.3ஆம் ஆண்டில் தோன்றியது. பரிபாடலும் இதே காலந்தான். இராமாயணம் பல்வேறு உண்டு. அது குறித்து 16 பக்கங்களில் எழுதியுள்ளேன். கலை, இலக்கியங்கள் ஒவ்வொரு வீடுகளிலும் சின்னத்திரை ஊடாக வருகின்றன. தெளிவைப் பெற்றுக் கருத்தினை உறுதியாக வைக்கும் போது அது எச்சமூகத்துக்கும் பயன்தரும். அதுவே எனது அடிப்படை நோக்கமாகும்.

-01.07.2010

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 14

## மல்லிகை டொமினிக் ஜீவாவின் பிறந்தநாள் விழா

தமிழ் மண்ணில் 50ஆவது ஆண்டை நோக்கிப் பவனிவந்து கொண்டிருக்கும் "மல்லிகை" மாசிகையின் ஆசிரியர், டொமினிக் ஜீவாவின் 84ஆவது பிறந்ததின நிகழ்வு ஈழத்துத் தமிழிலக்கிய வரலாற்றில் முக்கியப்படுமளவுக்குச் சிறப்புப் பெற்றிருந்ததை இலக்கிய நோக்கர் கண்டு ஆனந்தமடைந்தனர்.

வடகொழும்பில் தமிழ் எழுத்தாளர், இலக்கியவாதிகள் சந்திப்புகளையும் இலக்கிய விழாக்களையும் நடத்த ஒரு மண்டபம் அல்லது அதை அமைக்க ஒரு பத்தடி நிலமாவது கிடைக்குமாவென மல்லிகை ஆசிரியர் அடிக்கடி கருத்துரைப்பதுண்டு. அந்த எதிர்பார்ப்பும் இப்பிறந்த நாளன்று நிறைவு கண்டதே இந்த அதிகப்படியான மகிழ்ச்சிக்குக் காரணமாகிறது.

கொழும்பு - 13 ஸ்ரீ கதிரேசன் வீதி, இல: 24இல் அமைந்துள்ள லீலா என்ரப் பிரைஸ் (முன்னர் லீலா சலூன்) என்ற வர்த்தக நிறுவனத்தின் மேல் மாடியில் இரு மண்டபங்கள் இதற்காகக் கிடைத்தன. அதன் திறப்பு விழாவும் மல்லிகை ஆசிரியரின் பிறந்த நாள் விழாவோடு இணைத்து, 27.06.2010ஆம் திகதி கொண்டாடப்பட்டன. டொமினிக் ஜீவாவின் அபிமானிகளும் பொதுப் பணியாளர்களும் இலக்கிய ஆர்வலர்களுமான செல்வமும் மணியமும் இம் மண்டபத்தை இலக்கியவாதிகளுக்கு ஒதுக்கித் தந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

இலக்கிய உபாசகர் மில்லேர்ஸ் எஸ்.ஆர்.பாலச்சந்திரன் நாடாவை வெட்டி "மணி மஹால்" என்ற இம் மண்டபத்தைத் திறந்து வைத்தார். மணியும் செல்வமும் அவரோடு சேர்ந்து மங்கல விளக்கேற்றினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரபல கவிஞர் மேமன்கவி நிகழ்வுகளுக்குத் தலைமை தாங்கி நெறிப்படுத்தினார். தலைமையுரையில் அவர் பேசுகையில்,

ஏதோவொரு செய்தியை அறிவிப்பதற்கே பிறந்தநாள் நிகழ்வுகள் கொண்டாடப்படுகின்றன. ஜீவாவின் இந்தப் பிறந்த தினம் மிக முக்கியமானது. ஒரு குறிப்பிட்ட காலத்தில் மல்லிகை ஆசிரியர் மாதா மாதம் யாழ்ப்பாணத்திலிருந்து வந்து இந்த நிறுவனத்தில் தான் தங்குவதுண்டு. ஆரம்பத்தில் மலிபன் வீதியிலிருந்த ஓட்டப் பிடாரம் ஆ.குருசாமியின் வர்த்தக நிறுவனத்தில் தங்கினார். நானும் அங்கு சென்று அவரைப் பார்த்ததுண்டு. எழுத்தாளர் அமரர் வி.தம்பையாவின் ஓரியன்டல் சலூன் இலும் தங்கியிருக்கிறார். அவருக்கு நீண்ட காலம் தங்க வசதி செய்து கொடுத்தது லீலா சலூனில் தான். இலக்கிய ஆர்வம்மிக்கவர் மணி. செல்வமும், மணியும் கவிதைகளும் படைத்திருக்கின்றனர். மல்லிகையில் செல்வம் எழுதியதுண்டு. அவரது கவிதைகள் சர்ச்சைகளையும் ஏற்படுத்தியதனை நானறிவேன். 10 அடி நிலம் கேட்ட ஜீவாவின் நெடுநாள் ஆசை இன்று நிறைவேறுகின்றது. நிச்சயமாக இது இலக்கியத்தில் வரலாற்றைப் படைக்கும். இம்மண்டபம் இலக்கியவாதிகள் படைப்பாளிகளுக்கென ஒதுக்கப்பட்டிருக்கின்றது. எதிர்காலத்தில் இலக்கியக் கூட்டங்களை இதில் நடத்தலாம்.

**வாழ்த்துரைகள்:**

**கலாநிதி ந.இரவீந்திரன்**

முதல் பேச்சாளராக என்னை அழைத்திருப்பது ஒருவகையில் சிக்கலாகவே இருக்கின்றது. மல்லிகை ஆசிரியர் டொமினிக் ஜீவா பாதையை வெட்டிச் சீரமைத்து, அதில் நாம் நடை போட வைத்தவர். மிகப் பெரிய சிக்கலான பாதையைக் கடந்து வந்துள்ளார். இம்மாதம் வெளியான ஞானம் சஞ்சிகையில் பிரசுரமான, ரஞ்சகுமாரின் "நவகண்டம்" என்ற சிறுகதையை இதற்கு உதாரணப்படுத்த முடியும். அக்கதையின் கடைசி வசனம் மிகவும் முக்கியமானது. வயது 30. முன், சிறந்த வீரன். கிராமத்துச் சண்டியன் எப்படி வளர்ந்தான்? ஆசிரியரை மோதிச் சென்றோடினான். சண்டியனாக இருந்தவன் இயக்கத்தால் கொல்லப்படுகிறான். அடுத்த கட்ட 30 வருடம் சர்வதேசச் சண்டியர் ஆண்ட காலம். 60 வருடங்கள் முக்கியமானது. மல்லிகை ஆசிரியர் முதற்கால கட்டத்தின் நாயகர்.

முற்போக்கு இலக்கியம் என்ன தாக்கத்தை ஏற்படுத்தியது? கணக்குத் தவறெனச் சுட்டிக்காட்டியதை ஏற்காத ஆசிரியர் சாதியைச் சொல்லித் தாக்கியதின் ஊடாக ஜீவா படைப்பாளியானவர். மக்கள் பிரதிநிதியாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நின்று படைப்பாளியாக வரமுடிந்தது. எல்லாக் கால கட்டத்திலும் ஜீவா இயங்கியிருக்கிறார். சாதிய சமூகமென்பது என்ன? தீண்டாமை, சாதிய இழிவுகள் என்பன தகர்க்கப்பட வேண்டியவை. அதற்கான பாதைகளை இலக்கியம் காட்ட வேண்டும்.

## கலாநிதி செல்வி திருச்சந்திரன்
## (பணிப்பாளர், பெண்கள் கல்வி ஆய்வுமையம்)

ரவீந்திரனுக்கு அடுத்ததாகப் பேச வந்தது சிக்கலாக இருக்கிறது. கடந்த ஆண்டுகளில் பட்ட இன்னல்கள் ஏராளம். சாதியம், தமிழர் பிரச்சினைகள் இவைகளைத் தாண்ட வேண்டும். சண்டித்தனத்தாலும் சில விடயங்களைச் சாதிக்க முடியும். இதை வரலாறு நிரூபித்திருக்கிறது. மல்லிகை ஆசிரியரின் தனித்துவமான சுயகௌரவம் பேணல், என்னதான் நடந்தாலும் தலை வணங்கமாட்டேன் என்ற கர்வம் என்பன என்னைக் கவர்பவை.

## எஸ். இதயராசா
## (உதவிப் பணிப்பாளர், கல்வி அமைச்சு)

எழுத்துக் கூட்டி வாசித்துக் கொண்டிருந்த காலத்திலேயே மல்லிகை சஞ்சிகையைப் பார்த்திருக்கிறேன். அப்பா வாங்கி வந்து வாசித்தார். அதை இப்போ தொடர்கிறேன். நேசிப்பாகத் தொடர்ந்து கொண்டிருக்கிறது. எழுத்துத் துறையில் என்னையும் ஈடுபட வைத்தது மல்லிகை தான். தூண்டுதலைத் தந்தது. பஸ்ஸுக்குள் நான் மல்லிகை படித்துக் கொண்டிருந்ததைப் பார்த்த ஒருவர், அக்காலத்தில் அதைப் பிடித்து இழுத்து இதை என்னத்துக்குப் படிக்கிறாய்? என என் முகத்தில் வீசினார். இருந்தும் இந்தளவுக்கு மல்லிகை முன்னேறி இருப்பது அதன் ஆசியர் டொமினிக் ஜீவாவின் உழைப்புக்குக் கிடைத்த பலன்தான். சாதனைதான்.

## பேராசிரியர் மோகனதாஸ்

நான் இலக்கியத்தைப் பாராட்டுபவன், இலக்கியவாதியல்ல. இரசாயனவியல் பேராசிரியர். ஜீவாவைச் சிறுவயதிலிருந்தே அறிவேன். என்னால் இலக்கியம் படைக்க முடியவில்லை. பேனா சக்தி வாய்ந்தது. தனிய எழுதாதுமைக்குப் பின்னால் இதயம் இருக்கிறது. இதயம் படைக்க வாழ்ந்து காட்ட வேண்டும். சவால்களுக்கு முன் சென்று கொண்டிருப்பது பெரிய சரித்திரம். மல்லிகைப் பணிமனைக்குச் செல்ல வேண்டுமென நினைத்தேன். ஜீவாவைச் சந்திக்க எண்ணினேன். இது பெரிய வாய்ப்பாகிவிட்டது. எமது முயற்சிகள், போராட்டங்கள் தொடர வேண்டும். தமிழர் சமுதாயம் நிமிர்ந்து நிற்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கலாநிதி ம. கருணாநிதி**
**(விரிவுரையாளர், கொழும்பு பல்கலைக்கழகம்)**

மல்லிகை ஆசிரியரை வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சி. பெருத்த சவால்களுக்கு மத்தியில் மல்லிகை வெளிவந்து கொண்டிருக்கிறது. மாற்றங்களுக்கு முகம் கொடுத்திருக்கிறது. எழுத்தாளர் பங்களிப்புகளுக்கு நேசக்கரம் நீட்டியிருக்கிறது. நெருக்கடியான காலகட்டங்களிலும் ஜீவா விடா முயற்சியோடு இயங்கியுள்ளார். மல்லிகையை மிகுந்த அக்கறையோடு வாசிப்பேன்.

**"ஞானம்" தி.ஞானசேகரன்**

ரவீந்திரன் பேச்சு சிந்தனையைத் தந்தது. என்ன கருத்தில் சண்டியர் காலம் பின் தொடார்ந்தது என்றார்? ஏன் அவரதைப் பொருத்திப் பார்த்தார்? செல்வியும் தொடர்ந்து சண்டித்தனத்தைப் பேசினார். என்னால் ஜீவாவைப் புரிய முடியவில்லை. சிறுகதைகளை அனுப்பினேன். பிரசுரிக்கவில்லை. உங்களது சிறுகதைகளைக் கொண்டு வந்து தாருங்கள். மல்லிகைப் பந்தல் மூலம் வெளியிடுவோம் எனக் கேட்டார். கொடுத்தேன். ஏற்கனவே அவரால் நிராகரிக்கப்பட்ட கதைகளையும் சேர்த்துக் கொடுத்தேன். ஏற்றுக் கொண்டு தொகுப்பை வெளியிட்டார். "அல்சேஷனும், பூனைக்குட்டியும்" என்ற அத் தொகுப்பு இப்போ சப்ரகமுவ பல்கலைக்கழகக் கலைமாணிப் பட்டத்துக்கான பாடநூல் மல்லிகைப் பந்தலால் வெளியிடப்பட்டவைகளில் எனது நூலுக்கு மட்டுமே இத்தகுதி கிடைத்தது. அதுக்காக ஜீவாவுக்குக் கடமைப்படுகிறேன். அவரிடமிருந்து நாம் கற்றுத் தெரிந்து கொள்ள எத்தனையோ இருக்கின்றன. மல்லிகைப் பந்தல் வெளியீடுகளைத் தவறாது வாசிப்பேன்.

**எழுத்தாளர் திக்குவல்லை கமால்**

மல்லிகைப் பணிமனைக்குச் செல்லும் போது நான் 24 ஆம் இலக்கத்தைப் பார்க்கத் தவறமாட்டேன். அந்த நேரங்களில் சந்தோஷமும் கவலையும் ஏற்படும். ஏனென்றால் 24 ஆம் இலக்கக் கடைக்கு ஏறி இறங்கும் சந்தர்ப்பம் - இவ்வாறு போயிருந்தது. 1970 களில் இக்கடைக்குத் தான் மல்லிகை வரும். ஆசிரியரும் வருவார். அவரை வந்து சந்திப்போம். மேல் மாடிக்கு ஏறிச் செல்வோம். நீண்ட நேரம் ஜீவாவோடு பேசிக் கொண்டிருப்போம். அமரர்கள் மு. கனகராசன், 'சிரித்திரன்' ஆசிரியர் சிவஞானசுந்தரம் ஆகியோரோடும் உரையாடுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வம், மணியம் எங்களை அன்போடு உபசரிப்பார்கள். இது இலக்கியக் களமாக இருந்தது. இவ்விருவரும் தொழிலைப் பார்க்காது இலகியத்தை வளர்த்தனர். கலை, இலக்கியவாதிகளைச் சந்திக்க வாய்ப்பளித்தனர். சிரித்திரன், மல்லிகை சஞ்சிகைகளுக்கு ஏஜென்டாகக் லீலா விளங்கியது. இத்தகையதொரு இடம் சலூன் மீண்டும் இலக்கியத்துக்குத் திறப்பு விழாக் கண்டது மகிழ்ச்சியான செய்தி. எமது இலக்கியச் செயற்பாடுகளுக்கு இது உதவும். இனி நிறையவே இலக்கியச் சந்திப்புகள் ஏற்படும். அதனால் பல்வேறு நன்மைகள் ஏற்படும். இதை ஜீவா செய்துள்ளார். அவரது அடுத்த பிறந்த தினத்துக்கும் இப்படியான இலக்கியத்துக்கு நன்மையளிக்கும் செயற்பாடு களை அவர் செய்ய வேண்டும்.

**தெளிவத்தை ஜோசப்**
**(பிரபல இலக்கியவாதி)**

84 வயது கிட்டத்தட்ட சச்சின் செஞ்சரி போன்றது. ஜீவாவென்றால் மல்லிகை, மல்லிகை என்றால் ஜீவா என்ற அபிப்பிராயம் இலக்கிய உலகில் செல்வாக்குப் பெற்றுவிட்டது. சி.சு.செல்லப்பாவின் எழுத்து சஞ்சிகை வரலாறுக்குச் செய்தது போல் மல்லிகை வரலாறு ஆராயப்பட வேண்டும். ஓர் இலக்கிய சஞ்சிகையை நீண்ட காலம் நடாத்தத் தனித்திறமை வேண்டும். எப்படியோ மல்லிகை கைக்கு வந்து சேர்ந்துவிடும். எத்தனையோ இழப்புக்களை தாங்கி ஜீவா இதைச் செய்கிறார். இலக்கியவாதிகள் மல்லிகையைப் படித்தேயாக வேண்டுமென்ற நிலை ஏற்பட்டுவிட்டது. ரஞ்சகுமாரின் 'நவகண்டம்' அருமையான கதை.

50ஆவது ஆண்டை நோக்கி மல்லிகை சென்று கொண்டிருக்கின்றது. 1984க்கு இடைப்பட்ட காலமான 30தான் அசாதரனமான காலம் அந்த நிலையிலும் மல்லிகை தமிழ் இலக்கியத்துக்கு அருந்தொண்டு புரிந்துள்ளது. எனது எழுத்துகளுக்கும் உந்துதலாகவே இருந்து வருகிறது. நுண்ணியமாக மல்லிகையை ஆராயும்போது அதில் இதழியல் வரலாறு வெளியாகும். மணியத்தின் இச்செயற்பாடுகள் மல்லிகையின் செயற்பாடுகளுக்கு இணையானவையாகும்.

**"கொழுந்து" அந்தனி ஜீவா**

இது மிகவும் மகிழ்ச்சியான நாள். இம்மாத மல்லிகை இதழை ஜீவா தந்தார். வியப்பாக இருந்தது. அட்டைப் படத்தில் காணப்படும் நடிகவேள் லடீஸ் வீரமணி ஜிந்துப்பிட்டிப் பிரதேசமான இப்பிரதேசத்தில் வாழ்ந்தவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது இறுதிக் காலத்தில் எல்லோராலும் ஒதுக்கப்பட்டவர். மிகவும் கஷ்டத்தோடுதான் வாழ்ந்தார். இந்த இதழை அவரது மகளிடம் கொடுத்தபோது ஆச்சரியப்பட்டார். தனது அப்பா, வாழ்ந்தபோது கவனிக்காதவர்கள் இன்று மதிக்கிறார்களெனத் துக்கப்பட்டார். ஒரு கால கட்டத்தில் கலைஞனைச் சமூகம் இழிவாகப் பார்த்தாலும் பின்னர் அவனுக்குக் கிடைக்க வேண்டிய மரியாதை கிடைத்தேயாகும். அதையே இந்த அட்டைப்படம் வெளிப்படுத்துகிறது. பிரசுரமாகி இருக்கும் கட்டுரை நாடக வரலாற்றுக்கு ஆதாரமாக இருக்கும். கனவொன்றை நனவாக்கி இருக்கிறது மணிமஹால். வீ.தம்பையாவும் துரைவியும் விரும்பியதை மணியம் செயலாக்கியிருக்கிறார். தமிழ்ப் படைப்பாளிகள் கலந்து பேச வாய்ப்பளிக்கிறது. மகிழ்ச்சியாக இருக்கிறது. இது வரலாற்றுப் பதிவை ஏற்படுத்தும். தமிழ் சமூகம் டொமினிக் ஜீவாவை முன்னர் மதிக்கவில்லை. இன்று மதிக்கப்படுகிறார். சமூகத்தை இன்று மதிப்பதால் அவர் மதிக்கப்படுகிறார். ஜீவாவின் உழைப்புக்குக் கிடைத்த பரிசு பாராளுமன்ற உறுப்பினர் அஸ்வர் இங்கு வந்திருப்பது!

**ஏ.எச்.எம்.அஷ்வர் (பாராளுமன்ற உறுப்பினர்)**

மல்லிகையின் மணம் நுகர வந்தேன். ஜீவா 84 ஆண்டுகளைக் கண்டு வாழ்வது பெரிய சாதனை தான். யாழ் நூலகம் எரிக்கப்பட்ட பின்னரும் மல்லிகை சிங்கள இலக்கியவாதிகளை அட்டையில் பிரசுரித்து மரியாதை செய்தது. அதற்குப் பாரிய பாரம்பரியமுண்டு. மிகவும் மேலான பணி. இன்று கோவையில் நடைபெறும் செம்மொழி மகாநாட்டின் இறுதி நாள். அதற்கு மல்லிகை ஆசிரியரையும் தான் கூப்பிட்டுப் பாராட்டி இருக்க வேண்டும்.

ஹன்சாட்டில் பாராளுமன்ற நிகழ்வுகள் வெளியாவது போல் இலக்கிய நிகழ்வுகள் தினக்குரல் பத்திரிகையில் பிரசுரமாகி வெளிவருகின்றன. இலக்கியத்துக்குச் செய்யும் இந்த அரிய பணிக்காகத் தினக்குரல் ஆசிரியர் வீ.தனபாலசிங்கத்துக்கு நன்றி கூறவேண்டும். ஹன்சாட்டில் இதையும் பதிவு செய்ய ஆவன செய்வேன்.

**எழுத்தாளர் வைத்திய கலாநிதி ச.முருகானந்தன்**

35 ஆண்டுகளாக எழுதுகிறேன். முதல் பத்து ஆண்டுகளாக மல்லிகை ஆசிரியரைப் பார்க்கவில்லை. எனது நூலொன்றை வெளியிட்டு வைத்தார். ரவீந்திரன் பேச்சுக்குச் செல்வி கூறியவை ஆறுதலைத் தந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சட்டத்தரணி ரெங்கன்

மல்லிகையையும், ஜீவாவையும் 40 ஆண்டுகளாகத் தெரியும். சகோதரியின் வேண்டுகோளுக்காக, லெனின் சிறப்பிதழ் வாங்குவதற்காக மாணவனாக இருந்தபோது யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, மல்லிகை அலுவலகத்துக்குச் சென்றேன். அப்போ ஜீவா இருக்கவில்லை. சந்திரசேகரம் இருந்தார். ஜீவா வரும்வரை காத்திருந்தேன். வந்தார். வயதில் சிறியவனாக நானிருந்தும் என்னையொரு சமமனிதனாகவே மதித்துப் பேசினார். அது எனக்குப் பெரிதாகப்பட்டது. தீவிர வாசகனானேன். சிறந்த நூல்களின் பரிச்சயம் ஏற்பட்டது. மல்லிகையைப் படித்து வந்தால் நல்ல நூல்களைப் படிக்க வேண்டுமென்ற தூண்டுதலேற்படும். எழுத்தாளர்கள், அறிஞர்கள் பலரை அறிமுகம் செய்தது மல்லிகை தான். இடம்பெயர்ந்து 1984இல் அயல் நாடு சென்றேன். அதற்கு முன் மாதத்தில் இரண்டு மூன்று தடவைகள் மல்லிகைக் காரியாலயம் செல்வேன். யாழ்ப்பாணத்தில் பல சஞ்சிகைகள் வெளியாகி இருக்கின்றன. இருந்தும் மல்லிகைதான் சாதனை ஏற்படுத்தியுள்ளது. அது டொமினிக் ஜீவாவின் சாதனைதான். அவரில்லாது விட்டால் மல்லிகை இந்த மட்டில் சாதித்திருக்க முடியாது. சாதிப் பிரச்சினையால் இப்போது கூட அடுத்த வீட்டுக்காரனோடும் முகந்தெரியாமல் பழகும் போக்கு இருக்கிறது.

எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டவர் ஜீவா. யாழ்ப்பாணத்திலிருந்து பிடுங்கி இப்போ கொழும்பில் நடப்பட்டுள்ளார். அரசியலில் வந்து ஆளுமை செலுத்த வேண்டியிருப்பவர். பேசிக் கொண்டிருக்கும்போது இந்தியா வகிக்கும் ஆக்கபூர்வமான பணிகளை அழகாகச் சொன்னார். சிங்கள எழுத்தாளர்களை அறிமுகப்பத்தியவர். எமக்குக் கவசமாக இருக்கிறார். அதுவே இக்கால கட்டத்தில் மிகவும் தேவையாக இருக்கிறது. ஜீவா யாழ்ப்பாணம் வரவேண்டும்.

## 'தகவம்' மு .தயாபரன்

எனக்கும் ஜீவாவுக்குமிடையில் முப்பதாண்டு வயது இடைவெளி. நல்ல மனிதர். என்னடா எனத்தான் அழைப்பார். 30 வருடங்கள் சண்டித்தனத்தில் வாழ்ந்தோம். ஜீவா எதற்கும் ஈடு கொடுக்கக் கூடியவர்.

## வீ.தனபாலசிங்கம் (பிரதம ஆசிரியர், தினக்குரல்)

இரண்டு முக்கியமான விடயங்களை ஜீவாவிடம் காணலாம். ஒன்று உழைப்பு. மற்றது கிறுக்கு. பஸ்ஸில் போகும்போதும் அதே மிடுக்குத்தான். எதையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்து முடிக்கத் தன்னால் முடியுமென்ற துடிப்பு அவரிடமுண்டு. அதுதான் அவரை இலக்கிய உலகில் உச்சத்திற்கு கொண்டு வந்திருக்கிறது. 80ஆவது பிறந்த நாளுக்குத் தினக்குரலில் தலையங்கம் எழுதினேன். இம்முறை ஏன் எழுதவில்லை? எனக் கேட்கின்றனர். 90க்கும் எழுதுவேன். 100 க்கும் எழுதுவேன். நான் இருப்பேனா என்பதுதான் சந்தேகமே தவிர ஜீவா நிச்சயம் உயிருடன் இருப்பார். எங்கள் அலுவலகத்துக்கு ஓடி வருவார். மிடுக்கோடு பேசுவார். இலக்கியவாதிக்கு நீங்கள் பாராட்டுப் போடவில்லையென்றால் அவன் துவண்டு விடுவான் என நினைக்க வேண்டாமென துணிச்சலோடு சொல்வார்.

## 'மில்லேர்ஸ்' எஸ்.ஆர்.பாலச்சந்திரன்

பத்தடி நிலம் கேட்டவருக்கு இன்று அது கிடைத்திருக்கிறது. எனக்கு மகா சந்தோசம். கலைஞருக்கு, பெருமை ஏற்படுத்துகிறார். சண்டியரை நான் ஆதரிக்கிறேன். ஐந்தாம் வகுப்பு மட்டுமே படித்து 'சேர்ச்சில் மணி அடித்தவனை ஓ*ஃ*எல் படிக்கும்படி ஆலோசனை சொல்ல' அவன் அதைக் கேளாது தொழில் செய்து முதலாளியானான். படித்திருந்தால் இப்படி வந்திருக்க முடியுமா? எனப் பிற்காலத்தில் கேட்டான். அவமானம் ஏற்பட்டிருக்காவிட்டால் ஜீவாவும் இப்படி வந்திருக்க முடியாது. எழுத்தாளர் ஜீவா இரவில் வீட்டுக்கு வருவார். மகளை எழுப்பி 'வந்துவிட்டார்', சாப்பாட்டைப் போடு, என மாமன் சொல்வாராம். மாமன் வியூ சரியானதுதான். எனக்குப் பிடித்த முகம் எழுத்தாளர் முகம். பிறந்த தினப் பரிசாகப் பென் கொடுத்தேன். பொன்னாடை போர்த்துவதில் எனக்கு நம்பிக்கை இல்லை. அணிவதுக்கு ஆடைதான் வேண்டும். விலையும் குறைவு. ஜீவா எழுதியதை வாசித்து அவருக்கு இத்தகைய மனவுறுதி எப்படி வந்ததெனச் சிந்தித்ததுண்டு. சந்திப்பும் அபூர்வமானது. அடை மழையில் அவரை சந்தித்தேன். சுவைகள் பலவிதம். சுவைக்கும் விதமும் பலவிதம்.

*கே. எல். மணியம் மல்லிகை ஆசிரியருக்குப் பொன்னாடை போர்த்தி மாலை அணிவித்தார். லயன் கந்தையா (ஜே.பி.) வும் மாலை அணிவித்து மரியாதை செய்தார். பிரபல திறனாய்வாளர் கே.எஸ்.சிவகுமாரனும் ஜீவாவின் பணிகளைச் சுருக்கமாகக் கூறி வாழ்த்தினார்.*

## ஏற்புரை:
## மல்லிகை ஆசிரியர் டொமினிக் ஜீவா

திமிர் பிடித்தவனென்று பலர் சொன்னார்கள். அது எனது இலக்கியத் திமிர்தான். 325க்கும் மேற்பட்ட இலக்கிய ஆளுமைகளை மல்லிகை அட்டையில் பிரசுரித்திருக்கிறேன். மல்லிகைக் கட்டுரைகளை நியூயோர்க் நூலகமும் கேட்டது! சொல்ல முடியாத துயர். அடிபட்டவன். அதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிப்பாடே எனது இன்றைய எழுத்து. மல்லிகை வெளியானதுக்கு இரண்டு ஆண்டுகள் முன்தான் மகன் திலீபன் பிறந்தான். சமூகம் என்னை விளங்கிக் கொள்ளவில்லை. சாஹித்தியப் பரிசு கிடைத்தபோது கீரிமலைக்குப் போக நண்பர்கள் அழைத்தனர். போனேன். சாப்பிடுவேன். படுப்பேன். சாராயம் குடிக்க அழைத்தனர். எனது அப்பன் நாசமானது சாராயத்தால், அதைப் பார்த்து நான் குடிப்பதில்லையெனச் சபதமெடுத்தேன். மது போதையில் எனக்கும் சாராயம் பருக்க நண்பர்கள் முயன்றனர். என்னை தூக்கிக் கேணிக்குள் எறிந்தனர். நடந்து வந்து கதவில் தட்டினேன். விறாந்தையில் படுத்துக் கொண்டேன்.

என்னிடம் ஒரு நோக்கமுண்டு. அதுவே என்னை வழி நடாத்துகின்றது. கொழும்புக்கு வந்தபோது என்னிடம் 220 ரூபா தான் இருந்தது. தம்பையா அண்ணரும், மணியும் திரும்பிப் போகக் கூடாதெனத் தடுத்தனர். இதே மாடியில் (மணி மஹால்)தான் தங்கினேன். அதை மணி மறக்கவில்லை. இதற்குப் பின்னால் எனது சம்பந்தி தம்பையா அண்ணரின் பணியும் இருக்கிறது. என் நம்பிக்கை திலீபனே. அவரிடம் இலட்சியம் இருக்கிறது. அவரைக் கொஞ்சுவது எனக்கு இன்பம். மல்லிகை இப்படி அழகாக வருவதுக்குத் திலீபன் காரணம். என்னிடம் வீரியம் இருப்பதால் இயங்குகிறேன். நிச்சயம் நான் கிழவனாக மாட்டேன். எனது மனம் 30 வயதுக்குரியது. இப்படி உற்சாகம் தந்தால் 85ஆவது விழாவுக்கும் உங்களை அழைப்பேன். மருமகள் சொன்னா 'அவர் காசுதந்திருக்கிறார். புதுச்சட்டை வாங்கட்டாம்' எண்டு. எனது மகனுக்கு வெயர்வையோடு சட்டை போட்டுக் கொண்டு திரிவது பிடிப்பதில்லை. இந்தப் புதுச்சட்டை எடுத்தது அந்த வேண்டுகோளால் தான். இலக்கியத்துக்குப் பக்க பலம் இருக்க வேண்டும். தினக்குரலில் இன்று கட்டுரை வந்திருக்கிறது. தம்பையா, மணி, செல்வம் ஆகியோரைப் பற்றிய தகவல்கள் வெளியாகி இருக்கின்றன. இலக்கிய அமைப்புக்கள் நடாத்தும் இலக்கியவிழா நிகழ்வுகளைத் தினக்குரல் பாரபட்சமற்ற முறையில் வெளியிடுவதால் பல்லாயிரக்கணக்கான ரசிகர்கள் பயன்பெறுகின்றனர்.

## நன்றியுரை: கே.எல்.மணி

எனக்கிப்போ 60வயது. யாழ் கொட்டடிச் சந்திக் கடையில் 16 வயதில் நான் வேலை செய்து கொண்டிருந்தபோது, பூபாலசிங்கத்தோடு, ஜீவாவைக் கண்டேன். அன்று ஏற்பட்ட தாக்கம் என்னுள் வளர்ந்தது. கூர்மையான அன்பு இருந்தது. எங்கள் மனங்களில் கற்பனைக் குழந்தையாக இருந்த மண்டபம் இன்று மணி மஹால் என்று நிஜக்குழந்தையாகப் பிறந்துள்ளது. இது பெரியதொரு சுகப் பிரசவம்.

- 06.07.2010

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 15

## வைத்தியகலாநிதி ச.முருகானந்தனின் "அவர்கள் துணிந்துவிட்டார்கள்"

வைத்திய கலாநிதியும் பன்முக ஆளுமை மிக்க எழுத்தாளருமான ச.முருகானந்தனின் மணிவிழாப் பரிசாக, அவர் தமிழ் இலக்கிய வாசகருக்குத் தந்துள்ள நூல், "அவர்கள் துணிந்து விட்டார்கள்".

மலையகப் பிரதேச வாழ்வை ஊடறுத்துப் பார்க்கும் 14 சிறுகதைகள் இதில் தொகுக்கப்பட்டு, மல்லிகைப் பந்தல் வெளியீடாக வெளிவந்துள்ளது. இந்நூல் வெளியீட்டு விழா 10.07.2010 ஆம் திகதி கொழும்புத் தமிழ்ச் சங்க, சங்கரப்பிள்ளை மண்டபத்தில் நடைபெற்றது. பேராசிரியர் சோ.சந்திரசேகரன் தலைமை தாங்கினார். இலக்கிய நேசர் எஸ்.ஆர். பாலச்சந்திரன் பிரதம விருந்தினராக வருகை தந்திருந்தார்.

கல்வி, கலை, இலக்கிய சமூகங்களைச் சார்ந்த பிரமுகர்கள் மங்கல விளக்கேற்றினர்.

க.கேதீஸ்வரி தமிழ்த் தாய் வாழ்த்துப் பாடினார்.

நாடறிந்த கவிஞர் மேமன்கவி, வரவேற்புரை நிகழ்த்தி, நிகழ்வுகளைத் தொகுத்து அறிவிப்புகளையும் செய்தார்.

**தலைமையுரை:**
**பேராசிரியர் சோ.சந்திரசேகரன்**

கொழும்பு தமிழ்ச் சங்கம் இந்நிகழ்ச்சியைப் பெருமையோடு நடாத்துகின்றது. படைப்பாளிகள், கவிஞர்களை ஊக்குவிப்பதே இதன் நோக்கம். தமிழை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலோங்கச் செய்ய வேண்டும் என்பதில் இதொரு பிரதான பணி. இம் மண்டபத்தில் இதன் தூண்டுதலாலேயே பல நூல் வெளியீடுகள் நடைபெறுகின்றன. பலரை ஒன்றிணைக்கும் தமிழ்மொழி போல் தமிழ்ச்சங்கமும் சேவை புரிகிறது. ஐரோப்பியர், கிறிஸ்தவர், இஸ்லாமியர் தமிழால் ஒன்றிணைக்கப்பட்டனர். ச.முருகானந்தனின் இந்நிகழ்சியும் அந்த இணைப்பை ஆதாரப்படுத்துகிறது.

இதன் தனித்துவம் தான் என்ன? அவரொரு மருத்துவர். இலங்கையில் மருத்துவர்கள் 12000 பேர் இருக்கின்றனர். ஒரு சிலருக்கு மட்டுமே இலக்கிய வாசனை உண்டு. மலையகத்தில் வாழ்ந்த நந்தி "மலைக்கொழுந்து" நாவலைத் தந்தார். மலையகம் வந்த யாழ்ப்பாணத்தவர், மலையக மக்களின் வாழ்வு நிலைகளை நாவலாகப் படைத்தனர். அங்கு தொழிலுக்காக வந்தவர்கள் எழுத்தாளர்களாக மாறினர். அமரர் பெனடிக்கற் பாலன் பதுளையில் பணி செய்தவர். "சொந்தக்காரன்" என்ற மலையக நாவலைத் தந்தார். இதொரு தலை சிறந்த நாவல். யாழ்ப்பாணத்தவர்கள் மலையகத்தில் தமது தொழிலை மட்டும் பார்க்கவில்லை. மக்கள் பணிகளையும் செய்தனர். தொண்டாற்றினர்.

தென் புலோலியூர் க.சதாசிவம் மக்களின் வாழ்வைப் படித்து எழுதினார். மேம்பாட்டைக் காணத்துடித்தார். தி.ஞானசேகரன் மருத்துவராகப் பணி செய்து கொண்டே "குருதி மலை"யைத் தந்தார். "ஞானம்" சஞ்சிகையையும், மலையகத்திலிருந்து வெளியிட்டார். ச.முருகானந்தன் "அவர்கள் துணிந்து விட்டார்கள்" என எழுதுகிறார். மக்களோடான மருத்துவர்களின் ஈடுபாடு பேசத் தக்கது. அவர்கள் மனித உடலை கவனிப்பவர்கள். ஆனால் இதயத்தை கவனிக்காதவர்கள். நோயாளருக்கும் தனக்கும் 10 அடி இடைவெளிவிட்டு மருத்துவர்கள் உட்காந்திருப்பர். இதற்குக் காரணம் நோய் பிடித்து விடுமென்ற பயந்தான். இந்நூலாசிரியர் முருகானந்தனின் இதயம் நல்லது. இது அவரது 14ஆவது நூல். கவிதை, சிறுகதை, குறுநாவல், மருத்துவத்துறை சார்ந்த கட்டுரைகள், விமர்சனம் என்பவற்றை எழுதுகிறார். எழுதப்பட வேண்டிய விடயங்கள் மலையகத்தில் ஏராளம் இருக்கின்றன. அவைகளையும் அவர் எழுத வேண்டும். எயிட்ஸ் சம்பந்தமானவற்றைக் கையிலெடுக்க எல்லோருக்கும் பயம். எயிட்ஸ் பற்றிய நாவலொன்றும் இங்கு வழங்கப்படவிருக்கிறது. அதையும் ச.முருகானந்தனே எழுதியிருக்கிறார். அவரது பணி தொடர வேண்டும்.

## ஆசியுரை: மல்லிகை டொமினிக் ஜீவா

மல்லிகைப் பந்தல் மூலமாகச் ச.முருகானந்தனின் சிறுகதைத் தொகுப்புகள் மூன்றை வெளியிட்டிருக்கிறோம். 'மீன்குஞ்சுகள்' முதலாவது, இரண்டாவது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'தரை மீன்கள்', மூன்றாவது 'அவர்கள் துணிந்து விட்டார்கள்' தொகுதி. தரை மீன்கள் சாஹித்திய மண்டலத்தின் பரிசைப் பெற்றது. இந்நாட்டில் நாம் பல அழிவுகளைச் சந்தித்திருக்கிறோம். பெருத்த நாசங்களைக் கண்டோம். மரணங்கள் எத்தனை? எமது பொக்கிஷமான யாழ் நூல் நிலையம் எரிக்கப்பட்டது. செத்தவர்கள் பட்டியலில் சிறுவர்களும் அடங்குகின்றனர். இவைகளை அநுபவித்தும் நாம் நிமிர்ந்து தான் நிற்கிறோம். நாம் பெற்ற துன்பங்களை முருகானந்தன் கதைகளில் காணலாம். இவரது மனைவி எழுத்தாளர் சந்திரகாந்தா முருகானந்தன். குடும்ப ரீதியாக இலக்கிப் பங்களிப்புச் செய்கிறார்கள். எமது எழுத்துகள், நூல்கள் இந்தியாவுக்குப் போக முடியாது. தடை உண்டு. இந்திய மொழிகளில் தமிழும் ஒன்று.

இந்தியத் தமிழ் மொழி மட்டுந்தானா தமிழ் மொழி? அகில உலகமெங்கும் சுற்றித் திரியும் மொழி தமிழ். அது இப்போ சர்வதேச மொழி. இன்று உலகில் 32 நாடுகளில் தமிழ்மொழி புழக்கத்திலுள்ளது. இத்தகைய மொழியின் வெளியீடுகளுக்கு இந்தியாவில் வேலியிட்டுத் தடை செய்திருக்கின்றனர். மல்லிகை 45 ஆண்டுகளாக வெளிவந்து கொண்டிருக்கிறது. இருந்தும் இந்தியாவிலிருந்து அதற்கு ஒரு சந்தாகூட இல்லை! அங்கு தமிழுக்கு விழா எடுக்கின்றனர். தமிழை அழகாகப் பேசுபவர்கள் இலங்கைத் தமிழர். இருந்தும் எமது நூல்களுக்குத் தடை விதிக்கப்பட்டிருக்கிறது. நிலைமை இப்படி இருக்கத் தமிழ் எப்படி வளரும்? சிங்கள எழுத்தாளருக்கு உள்ள உரிமைகள் எமக்கில்லை. புதுடில்லிக்குப் போகிறார்கள். வருகிறார்கள். எமக்குப் பலமான பின்னணி இல்லை. அரச ஆதரவு இல்லை. எமது வெளியீடுகளை ஓசியில்தான் பெற்றுப் படிக்கின்றனர்.

இங்கு இலக்கியவாதிகளுக்கு, நூல் வெளியீட்டாளருக்குப் பிரச்சினைகள் இருக்கின்றன. கண்ணீர் விடுகின்றனர். எமக்குள்ள நெருக்கடிகள் யாருக்குத் தெரியும்? தொகுப்பொன்றைப் பதிப்பிக்க உற்பத்திச் செலவு ரூபா 50,000 தேவை. எதுவித பின்னணியும் இல்லாது இயங்குகின்றோம். நிச்சயமாக நாம் புதிய பரம்பரையொன்றை உருவாக்கிக் காட்டுவோம். நாம் விழித்து விட்டோம். இந்தியத் தமிழ் இங்கு வருவதைத் தடைப்படுத்துவோம். புதிய அறிவைப் பெற்றுள்ளோம். எமக்கெனச் சிறந்த குழந்தைகளைப் பெற்றோர் விட்டுச் சென்றிருக்கின்றனர். புதிய பரம்பரை யாருக்கும் மணி கிலுக்காது. எவராகிலும் சவாலை விட்டுப் பார்க்கட்டும். புதிய வரலாறு படைப்போம். எம் தமிழ் உன்னதம் பெற்று உயர உழைப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நூல் வெளியீட்டுரை:**
**பேராசிரியர் செ.யோகராசா**

ஈழத்து இலக்கிய வரலாற்றைப் பிரதேச பண்பியல்படுத்தி பேராசிரியர் கா.சிவத்தம்பி பார்த்திருக்கிறார். ஈழத்து இலக்கியத்துக்கு உப பிரதேசங்களின் செல்வாக்கும் உண்டு. யாழ்ப்பாணத்து வடமராட்சி, தீவுப்பகுதி என வடபிரதேசப் படைப்புக்களைப் பிரதேசப் பண்பியல் ரீதியாகப் பகுக்கலாம். இது குறுகிய கண்ணோட்டமாக இருக்காது. வடமராட்சிச் சிறுகதை எழுத்தாளருக்கு நீண்ட பாரம்பரியமொன்றுண்டு.

ஆனந்தன் சிறந்த சிறுகதை எழுத்தாளர். "தண்ணீர்த் தாகம்"என்ற சிறுகதையே முதல் சிறுகதையாகக் கொள்ளப்படுகிறது. "மறுமலர்ச்சி" எழுத்தாளர் பெரியதம்பி தரமான சிறுகதைகளைப் படைத்தவர். புலோலியூர் க.சதாசிவம், தெணியான், ராஜஸ்ரீகாந்தன், ஈழத்து சோமு இப்படி நீட்டிக் கொண்டே போகலாம். இதில் மிக முக்கியமான இடத்தைச் ச.முருகானந்தன் பெறுகிறார். இதுவரை மூன்று சிறுகதைத் தொகுப்புக்களை வெளிக் கொணர்ந்திருக்கிறார். ஈழத்து இலக்கியத்துக்குப் பெரும் பங்காற்றிய வரலாறு விக்னேஸ்வராக் கல்லூரிக்குண்டு. மருத்துவர்கள் பலர் இலக்கியத்திலும் வரலாறு படைத்துள்ளனர். அந்த வரிசையிலும் ச.முருகானந்தனின் பங்குப் பணி இருக்கிறது. ஈழத்து இலக்கியத்தில், மருத்துவ உலகப்பணி, போதியளவு வரவில்லை. ஏறத்தாழ முருகானந்தன் நூறு கதைகளுக்கு மேல் எழுதியிருப்பார். ஈழத்துச் சிறுகதை இலக்கியத்துக்கு மல்லிகையின் பங்களிப்பு மிகவும் முக்கியனமானது. இதில் பித்தனின் சிறுகதைத் தொகுப்பு வெளியிட்டது மகத்தானது. முதன்மை இடத்தைப் பித்தனுக்குக் கொடுத்திருக்கிறது.

முருகானந்தன் இந்திய இலக்கிய சிந்தனைப் பரிசைப் பெற்றவர். தெளிவத்தை ஜோசப்பின் தொகுப்பில் துரைவி வெளியீடாக வெளிவந்த "உழைக்கப் பிறந்தவர்கள்" மலையகச் சிறுகதைத் தொகுப்பில் முருகானந்தன் விடுபட்டுள்ளார்? எனவே அதை முழுமையானதாகக் கருத முடியாது. "அவர்கள் துணிந்து விட்டார்கள்" மலையகத்துக்கு முக்கியமான பங்களிப்பைச் செய்கிறது. பிற பிரதேசத்தவரால் வெளியிடப்படும் முதல் மலையகச் சிறுகதைத் தொகுதி இதுவெனலாம். இது அமரர் செ.கதிர்காமநாதனின் அடுத்த கட்ட நகர்வாகத் தெரிகிறது.

*முதல் பிரதி வழங்கலில் பேராசிரியர் சோ.சந்திரசேகரனிடமிருந்து முதல் பிரதியை எஸ். ஆர். பாலச்சந்திரன் பெற்றார்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூல் நயவுரைகள்:
## "தகவம்" வசந்தி தயாபரன்

ச.முருகானந்தனின் மூன்றாவது சிறுகதைத் தொகுப்பு இன்று வெளியிடப்படுகிறது. மலையகத்தில் மருத்துவராகத் தொழில் பார்த்தவர். சிறுகதை எழுத்தாளராகி இருக்கிறார். சிறுகதை எழுதுவது ஒரு மாயவித்தை. ஏராளமாக எழுதிக் குவிக்கும் முருகானந்தன் மலையகத்தையும் பார்த்ததில் சந்தேகமில்லை. தோட்டத் தொழிலாளிக்குச் சுபீட்சம் எப்போ என்ற தெளிவோடு எழுதுகிறார். சு.முரளிதரனின் அணிந்துரை நன்றாக இருக்கின்றது. நூலில் சமூக நகர்வுக்கான எத்தனிப்புகள் தெரிகின்றன. எத்தனிப்புகளையும் விஞ்சி நிற்கிறார். நூலின் தலைப்பு ஆங்கில எழுத்தாளர் பாணியில் கொடுக்கப்பட்டுள்ளது மகிழ்ச்சியூட்டு கின்றது. மக்களது அக நிலையில் ஏற்படும் மாற்றத்தைப் பேசுதல் நூலாசிரியரின் சிறப்பாக இருக்கிறது. பாத்திர உணர்வுகள், உரையாடல்கள் மூலம் கதைகள் நகருகின்றன. சில கதைகள் ஆர்வத்தைத் தூண்டுகின்றன. முடிவுகள் சிந்தனையைத் தூண்டுகின்றன. ஒட்டுமொத்தமான சிறப்பான கதை "கபடத்தனம்". ஆனால் ஆரம்பம் ஈர்க்கவில்லை. முடிவு கூடச் சலிப்பை ஏற்படுத்துகிறது.

தனிமனித உரைகளோடு கதைப்பின்னல் செய்கிறார். "தேயிலைப் பெண்" ஆழமாகச் செல்கிறது. கதையொன்று நீண்டு போயுள்ளது. திருஷ்டி கழிப்போ? "அவர்கள் துணிந்து விட்டார்கள்" காட்சிகளைக் கண்முன் கொண்டு வருகின்றது. "புரியாத புதிர்கள்" வேலு கதாபாத்திரம் அற்புதமானது. கிளிக்கூண்டு திறத்தலை விட்டிருக்கலாம், நெருடலாக இருக்கிறது. "தேரில் வந்த ராஜகுமாரர்னுளு" போடாமல் விட்டிருக்கலாம். பிரதேச மொழி சறுக்கிவிட்டது. முதல் 7 கதைகளைச் சொல்லும்படிதான் கேட்கப்பட்டேன். 7 மலர்களும் ஒன்றுக்கொன்று குறைந்தவையல்ல.

## கலாநிதி பிரவீனன் மகேந்திரன்

இலங்கைக்கு இந்தியாவிலிருந்து பலவந்தமாகக் கூலியாட்கள் கொண்டு வரப்பட்டனர். அதேபோல் வேறு தேசங்களுக்கும் கொண்டு செல்லப்பட்டுள்ளனர். மகாகவி சுப்ரமணிய பாரதியார் கரும்புத் தோட்டங்களில் வேலை செய்த இந்தத் தொழிலாளரைப் பற்றிப் பாடியிருக்கிறார். புதுமைப்பித்தனின் "துன்பக்கேணி," என்ற சிறுகதையும் வெளிவந்திருக்கின்றது. இலங்கை எழுத்தாளர்கள் இங்குள்ள பெருந்தோட்டங்களில் வேலை செய்யும் வாழ்வை அடிப்படையாக வைத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவல்கள் எழுதியிருக்கின்றனர். இந்தத் தொழிலாளர்களது முன்னேற்றம் மிகவும் ஆறுதலாகச் செல்கிறது. மலையக மக்களின் முதுகின் மேல் எல்லோரும் சவாரி செய்கின்றனர். இது மருத்துவரான முருகானந்தனின் மனதை உறுத்தி இருக்கிறது. மருத்துவர்கள் நோயைச் சுகப்படுத்துபவர்கள். இலங்கையின் இன்றைய மலையக மக்கள், விடுதலை கோரத்தலைப்பட்டு விட்டனர். துணிந்து விட்டனர். இறுதி ஏழு கதைகளைப் பற்றிச் சொல்லும்படி நான் கேட்கப்பட்டிருக்கிறேன். ஏழு சுரங்களில் எது நல்லது கெட்ட தென்பதைச் சொல்ல முடியாது.

"எல்லோரும் மனிதர்களே!" என்ற கதையில் மனிதகுல நம்பிக்கை காணப்படுகிறது. இனத்துவ முரண்பாட்டைக் காட்டியிருக்கிறது. யார்த்தமானது. பிடித்தமான முடிவு. "மாறியது நெஞ்சம்" பொதுப்பிரச்சினை. மிகவும் துணிகரமான முடிவு. "வேலியே பயிரை மேய்ந்தால்" இறந்த பின்னர் நல்ல இயல்புகள் கண்டு கொள்ளப்படும் பாரம்பரியத்தைக் காட்டுகிறது. "தரை இறங்கும் விமானங்கள" சிறந்த சிறுகதை. அமரர் நெல்லை கா.பேரனின் நாவலை ஞாபகப்படுத்துகிறது. வெளிநாடுகளில் ஏற்படும் கஷ்டங்களை ஆவணப்படுத்துகிறது. சுனாமியில் கொல்லப்பட்ட பிணங்களின் நகைகளைக் கழற்றினர். அப்படியிருந்தும் மனிதர்கள் கெட்டவர்களல்ல, நல்லவர்களென்பதைக் காட்டுகிறது "ஆறிலிருந்து அறுபது வரை". மலையக முதியவர் பட்ட துன்பத்தை வயோதிபரொருவர் பார்க்கிறார். மலையக மக்களது துன்பத்தை இந்நூலாசிரியர் சிறப்பாகப் பார்த்திருக்கிறார். அத் துன்பங்கள் நீக்கப்படுமென எழுதியிருக்கிறார்.

## பிரதம விருந்தினர் உரை:
## எஸ். ஆர். பாலச்சந்திரன்

1958ஆம் ஆண்டில் எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்கா பாலமொன்றை ஒரு தொழிலாளியைக் கொண்டு திறந்து வைத்தார். எனவேதான் எனக்கு இலக்கிய அறிவு குறைவான நிலையிலும் துணிந்து இவ்விழாவுக்குப் பிரதம விருந்தினராக வந்தேன். கலைஞர்கள், தொழிலாளிகள் கண்ணீர் வடிக்கக்கூடாது. கொடையாளருக்கும், கலைஞருக்குந்தான் மரியாதை. ஒரு காலகட்டத்தில் இங்கும் இந்திய மாயை இருந்தது. ஈழத்து எழுத்தாளர்கள் யதார்த்தவாதிகள், அவர்களுக்கு இப்போ பொற்காலம். அதற்குக் காரணமாக இருப்பவர் மல்லிகை ஆசிரியர் டொமினிக் ஜீவாவேதான். சிறுகதையொன்றில் கதாபாத்திரம்தான் பேசவேண்டும். டொமினிக் ஜீவாவின் "பாதுகை" சிறுகதை யதார்த்தமானது. சிப்பிக்குள் முத்து இருப்பதாக உணர்ந்தேன். தொழில் செய்யும்போது மற்றத் தொழிலாளருக்கும் மரியாதை கொடுக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு டொக்டரை இன்னொரு டொக்டர் ஒருபோதும் குறைசொல்ல மாட்டார். செங்கை ஆழியான் படைத்த "முற்றத்து ஒற்றைப் பனை" யதார்த்தமானது. இரசிக்கத் தக்கது. எனக்குப் பிடித்தது. மலையகத்தின் பிரச்சினைகளுக்கு வறுமை, படிப்பின்மை, சுயநலம், தலைமைகள், குடிபோதை இவைகளே அடிப்படை. மலையக மக்களுக்காக என்.எம்.பெரேரா போராடினார். இப்போதுள்ள இடதுசாரிகள் மலையகத்தை மறந்து விட்டனர். மலையக மக்கள் வஞ்சிக்கப்படுகின்றனர். இதை எல்லோரும் உணர வேண்டும். முதலாளிகளைத் தூக்கி எறிய வேண்டும். டொக்டர்கள் எழுதும்போது வைத்திய அறிவு வரும். இதனால் கதை பாதிக்கப்படும். நூலில் வைத்திய அறிவு புலப்படவில்லை. இப்போது யாழ்ப்பாணத்தான் தான் கள்ளத்தோணி.

*கொழும்பு நியூ செஞ்சரி லயன்ஸ் கிளை அனுசரணையுடன் வைத்திய கலாநிதி ச.முருகானந்தன் எழுதிய மருத்துவ நூலான "எயிட்ஸ் இல்லாத உலகம்" பிரதியை மீரா பதிப்பக அதிபரும், பிரபல இலக்கியவாதியுமான புலோலியூர் ஆ. இரத்தினவேலோன் பெரியார் சங்கரலிங்கத்துக்கு வழங்கினார்.*

**வாழ்த்துரைகள்:**

**சட்டத்தரணி சோ.தேவராசா**

இக்காலகட்டத்தில் 60 வயது வரை வாழ்வதென்பது அதிசயச் செய்திதான். கடந்த வருடத்தில் மொட்டுகள், பிஞ்சுகள் கூட அழிந்து போயின. எமது எழுத்தாளர் ச.முருகானந்தன் அறுபதைப் பூர்த்தி செய்வது அற்புதமானது. எமது தேசிய கலை இலக்கியப் பேரவையின் சார்பாக அவரை வாழ்த்துகிறேன். டொமினிக் ஜீவாவின் 84ஆவது பிறந்த தினத்தை "மணி மஹால்" என்ற புதிய மண்டபத்தில் கொண்டாடினார். எமக்கெல்லாம் அது உற்சாகத்தைத் தருகிறது. திக்குவல்லை கமாலும் மணி விழாவைக் கொண்டாடினார். ஈழத்து எழுத்தாளர்கள் வியாபாரத்துக்காகவும் விளம்பரத்துக்காகவும் எழுத மாட்டார்கள். சமூகத்திற்கான புதிய நூல்களை எழுதுகிறார்கள். எமது மக்கள் ஈழத்து எழுத்தாளர்களது நூல்களை வைத்திருக்க வேண்டும். வாசிக்க வேண்டும். யாழ்ப்பாணத்தில் யார் பண்பாட்டைத் தீர்மானிப்பது? இப்போ யாழ்ப்பாணம் பண்பாட்டுப் புரட்சியை வேண்டி நிற்கிறது. இளைஞர்களும் தயாராக இருக்கின்றனர். எமது குச்சுக் குடிசைகளுக்குள்ளும் அதைக் கொண்டு வரும் காலம் கனிந்திருக்கிறது. மலையகம் நிமிர்ந்தால் நிச்சயம் உயர்வு பெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எழுத்தாளர் திக்குவல்லை கமால்

ச.முருகாந்தனின் முதலாவது சிறுகதைத் தொகுப்பான "மீன்குஞ்சுகள்" வெளியீட்டு விழாவுக்குத் தலைமை தாங்கினேன். இது இரட்டிப்பான விழா. மணி விழா, அத்தோடு நூல் வெளியீட்டுவிழா. நூலாசிரியரைக் காணும்போது நந்திதான் ஞாபகத்துக்கு வருகிறார். சிறந்ததொரு படைப்பாளி. தேடல் மிக்கவர். நவீன கருத்தியலால் குழம்பியிருந்தபோது பின் நவீனத்துவத்தை அறிமுகப்படுத்தினர். படிக்கும் விடயங்களை ஆழமாக நோக்கி எழுதும் ஆற்றல் ச.முருகானந்தனுக்கு உண்டு. சிங்கள நண்பன் ஒருவர் "அங்காடித் தெ" சினிமாவின் சி.டியைத் தரும்படி கேட்டார். அப்படத்தை தான் பார்க்க வேண்டுமென்று சொன்னார். எப்படி சிங்கள இனத்தவரான அவருக்கு இந்த ஆவலேற்பட்டது? என்று ஆச்சரியம் கொண்டேன். அவருக்குத் தமிழ் வாசிக்கத் தெரியும். அந்தப் படத்தைப் பற்றி ச.முருகானந்தன் எழுதிய விமர்சனத்தை அவர் படித்தாரென்பதை அறிந்தேன். இத்தகைய கலை, இலக்கியப் பணிகளை ச.முருகானந்தன் தனது எழுத்துக்கள் மூலம் செய்கிறார். தமிழ் சினிமாக்களை சிங்கள ரசிகர்களிடம் கொண்டு சேர்க்கிறார். மனதைப் பண்படுத்துபவர்கள் இலக்கியவாதிகள். அது போலவே முருகானந்தனும் வாழ்கிறார்.

## "கொழுந்து" அந்தனி ஜீவா

கம்பளையில் "மீன் குஞ்சுகள்" சிறுதைத் தொகுப்பு அறிமுகவிழாவில் முருகானந்தனைச் சந்தித்தேன். மலையக எழுத்தாளரல்லாத ஒருவரால் வெளியிடப்படும் மலையகத்தைக் களமாகக் கொண்ட முதல் சிறுகதைத் தொகுதி.. "அவர்கள் துணிந்து விட்டார்கள". செ.கதிர்காமநாதனின் தாக்கம் இந்நூலாசிரியருக்குண்டு.

## "ஞானம்" தி.ஞானசேகரன்

நானும், முருகாந்தனும் ஒரே தொழிலையே செய்கிறோம். நீண்ட காலமாக மலையகத்தில் வாழ்ந்திருக்கின்றேன். 1994இல் முதல் முதல் முருகானந்தனைச் சந்தித்தேன். "மீன் குஞ்சுகள்" அறிமுக விழாவுக்கு வந்தபோது விருந்து கொடுத்தேன். அத்தோடு மிக நெருக்கமானோம். இங்கு தமிழில் "எயிட்ஸ் இல்லாத உலகம்" நூலை வெளியிட்டுள்ளார். தமிழுக்கு வந்த மிகச் சிறந்த மருத்துவ நூல். வட மாகாண கல்வி, பண்பாட்டு அமைச்சின் பரிசைப் பெற்றது. நந்தியைப் போல் மருத்துவ அறிவை எழுத்தில் கொடுப்பவர். அகவாழ்வு, மருத்துவ ஆலோசனைகளைக் கூறுபவர். அவரது பணி அளப்பரியது. தொழில் ரீதியான தனது அறிவைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரப்புகிறார். "அவர்கள் துணிந்து விட்டார்கள்'' கதையை 1979இல் எழுதியிருக்கிறார். ஆண்டுகள் 30 ஆகிவிட்டன. 14 சிறுகதைகளைத் தந்திருக்கிறார். மலையகத்தில் ஆக்க இலக்கியத்துக்கான கருப்பொருள்கள் ஏராளம் இருக்கின்றன. பிற மாநிலத்தவர்கள் என்ற வகையில் ச.முருகானந்தனின் பங்கென்ன? புதுமைப் பித்தன் "துன்பக்கேணி'' எழுதினார் அந்தச் சுவட்டில்.

மலையக இலக்கியப் படைப்பு விடயத்தில், ஏன் முருகானந்தனின் பெயர் பேசப்படவில்லை? இது சிந்திக்க வேண்டிய விடயம். மலையக மக்கள் பாவப்பட்டவர்களல்ல. போர்க்குணம் படைத்தவர்கள். பேரினவாதத்துக்கு எதிராக முதலில் கிளர்ந்தெழுந்தவர்கள் அவர்கள்தான். பேரினவாதத்திற்கு எதிராகவே "குருதி மலை'' நாவல் வெளிவந்தது. இதை இங்குள்ள எந்தவொரு விமர்சகரும் வெளிப்படுத்தவில்லை. ஏனென்றால் அதன் ஆசிரியரான நான் அக்குழுவிலே இருக்காததாலேயே. அந்த நாவலை எம்.ஏ. பட்டத்துக்கான பாடநூலாகத் தமிழகம் ஏற்றுக் கொண்டது. தெளிவத்தை ஜோசப் துரைவிக்காகத் தொகுத்த "உழைக்கப் பிறந்தவர்கள்'' மலையகச் சிறுகதைகள் தொகுப்பில் ச.முருகானந்தனின் சிறுகதை இல்லை. ''காளிமுத்துவின் பிராஜாவுரிமை'' என்ற அ.செ.முருகானந்தனின் சிறுகதை இருக்கின்றது. ச.முருகானந்தன் வேகமாக எழுதுகிறார் பேராசிரியர் செ.யோகராசா "அவர்கள் துணிந்து விட்டார்கள்'' என்ற தொகுப்பைத்தான் பிற பிரதேச எழுத்தாளரொருவரால் வெளியிடப்பட்ட முதல் மலையகச் சிறுகதைத் தொகுப்பு என்றது தவறானது. அதை அந்தனி ஜீவாவும் ஏனோ ஆமோதித்தார். புலோலியூர் க.சதாசிவத்தின் "ஒரு நாள் பேர்'' என்ற சிறுகதைத் தொகுப்பே முதலாவது. மொழி, நடை சம்பவங்களால் ஆழமான கதைகயைக் கொண்டு வர முடியாது. இத் தொகுப்பை வரவேற்கிறோம். ச.முருகானந்தத்தை "ஞானம்'' அட்டைப்பட அதிதியாகக் கௌரவித்திருக்கிறது. இவரது மனைவி சந்திரகாந்தா முருகானந்தனும் ஓர் எழுத்தாளர். இப்படி எழுத்தாளர் தம்பதியைக் காண்பதரிது.

*ஏற்புரையை நூலாசிரியர் ச.முருகானந்தன் வழங்கினார்.*

-19.07.2010

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 16

## மூத்த பத்திரிகையாளர் ஈ.வி.டேவிட் ராஜுவின் பவளவிழா

**த**மிழ் நெஞ்சங்களின் பேரபிமானத்தைப் பெற்ற, தடம் பதித்த மூத்த பத்திரிகையாளர் ஈ. வி. டேவிட்ராஜு ஈழத்து ஆரம்ப காலத்துப் பத்திரிகை எழுத்தைச் சீரமைத்து அதற்கொரு நிமிர்வைக் கொடுத்த முன்னோடி. இலங்கையின் வட புலத் தீவகம் தந்த பத்திரிகையுலக ஜம்பவான் ஈழகேசரி ஆசிரியர் சோ.சிவபாதசுந்தரம் எந்தளவுக்கு எழுத்தாளர் மட்டத்தில் இன்றும் பேசப்படுகிறாரோ, அதுபோல் வீரகேசரி, தினக்குரல் ஆகிய பத்திரிகைகளுக்கு ஆற்றிய, ஆற்றிவரும் எழுத்துப் பணிகளால் டேவிட் ராஜு தமிழ்க் கல்விமான்கள், இதழியலாளர்கள், இலக்கியவாதிகளின் உயர் மரியாதையைப் பெறும் தீவகம் தந்த மற்றுமொரு உன்னத பத்திரிகையாளர். வாழ்வில் இவர் எழுபத்தைந்தாவது அகவையைத் தொட்டுப் பவளவிழா நாயகராகத் திகழ்கிறார். அத்தனை தமிழருக்கும் பேரானந்தத்தைத் தரும் இந்நிகழ்வை அவரது நண்பர்கள், அபிமானிகள் ஆகியோர் அவரது பிறந்த நாளான ஆகஸ்ட் மாதம் (2010) 7ஆம் திகதி வெகு விமர்சையாகக் கொண்டாடி மகிழ்ந்தனர். கொழும்பு 12, மெசஞ்சர் வீதியில் அமைந்துள்ள பிறைற்றன் றெஸ்ற் மண் டபத்தில் இவ்விழா நடைபெற்றது. "தினக்குரல்" பத்திரிகை அதிபர் எஸ்.பி.சாமி தலைமை தாங்கினார்.

*சாமி, டொமினிக்ஜீவா, ஆ.சிவநேசச்செல்வன், காசிம் உமர், தெளிவத்தை ஜோசப், கே.எஸ்.சிவகுமாரன், மானாமக்கீன், அன்னலெட்சுமி ராஜதுரை, திலக் பெரேரா, டேவிட்ராஜு, முத்தப்பன் செட்டியார் ஆகியோர் மங்கல விளக்கேற்றி விழாவைத் தொடக்கி வைத்தனர்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹப்பி பேத் டே இசை இசைக்க விழா நாயகர் டேவிட்ராஜு பிறந்ததினக் கேக்கை அவரது பேத்தி சாலினிவலன்ரைனோடு இணைந்து வெட்டி பரஸ்பரம் உண்டு, அவரது மகள் லக்கி ரூபராணிக்கும் சபையோரின் பலத்த கரகோசத்துக்கு மத்தியில் ஊட்டினார்.

**வரவேற்புரை:**

**புலோலியூர் ஆ.இரத்தினவேலோன்** (பிரபல இலக்கியவாதி)

பத்து வயது சிறுவனாக இருந்த காலத்திலிருந்தே எனக்குப் பத்திரிகைத் தொடர்புகள் கிடைத்தன. கார்மேகம், பொன். ராஜகோபால், கே.எஸ்.சிவகுமாரன், முருகபூபதி, ராஜநாயகன் பாரதி, தனபாலசிங்கம் ஆகிய

பத்திரிகையாளரோடு எனக்கு நெருங்கிய தொடர்புகள் இருந்தன. இருக்கின்றன. டேவிட் ராஜ் ஐயாவில் சிறந்த அபிமானம் இருக்கின்றது. உறுதியான உரமாக எமக்கவர் விளங்குகிறார். மதிய போசன இடைவேளையொன்றின்போது தினக்குரல் அதிபர் சாமி என்னை அழைத்து டேவிட் ராஜுஐயாவை அறிமுகப்படுத்தினார்.

தமது பத்திரிகை தினக்குரலுக்கு ஆலோசராக டேவிட் ராஜுஐயா வந்திருப்பதாகச் சொன்னார். எதையும் வெளியாகச் சொல்லும் பக்குவம் ஐயாவிடம் இருக்கிறது. பழக இனியவர். தன்னடக்கமுடையவர். சந்தித்ததில் சந்தோசமடைந்தேன். கைகுலுக்கி மகிழ்ந்தேன். ஆரம்பத்தில் அவருக்கு என்னருகே தான் ஆசனம் கிடைத்தது. பின்னர் தனி அறை ஒழுங்கு செய்யப்பட்டது. அதுவும் எனக்கு நெருக்கமாகத்தான். இன்றும் அதே பண்புகளோடுதான் எல்லாரோடும் புழங்குகிறார். எனக்குப் பிதாபோன்றவர். ஐயா என என் அப்பாவைத்தான் அழைப்பேன். அது போல் என்னால் அழைக்கப்படும் மற்றவர் டேவிட் ராஜு ஐயாதான். எப்போதும் எல்லோரும் கலகலப்பாக இருக்க வேண்டுமென விரும்புபவர். காலையில் அலுவலகத்துக்குள் நுழையும்போது (GOOD MORNING) சொல்லிக் கொண்டே வருவார். சகலரோடும் நட்புடன் பழகி நண்பர்களாக நடத்துவார். இதழியல் பயிற்சி பெறுவோரோடு கூட இதே மனப்போக்கைத்தான் காட்டுவார். பதற்றமோ, கோபமோ ஐயாவிடம் காணப்படாது. திட்டமிடாதல், சலிப்பு அவருக்குப் பிடிக்காது. ஐயாவைப் பார்த்தபோது வயது 65 ஆகத்தான் இருக்குமென மட்டிட்டேன். அடையாள அட்டையைப் பார்த்தே உண்மையான வயதை அறிந்து கொண்டேன். பத்திரிகை உலக ஜாம்பவான். தமிழ் பத்திரிகையின் தரத்தை உயர்த்திய முன்னோடி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*பொன்னாடை போர்த்தியும் மாலை அணிவித்தும் பூச்செண்டுகள், அன்பளிப்புகள், வாழ்த்துப்பா என்பன வழங்கியும் விழா நாயகன் கௌரவிக்கப்பட்டார். இம்மரியாதைகளை எஸ்.பி.சாமி, காசிம் உமர், அந்தனி ஜீவா, கங்கை வேணியன், கலைச்செல்வன், முத்தப்பன் செட்டியார், ராஜப்பன், கு.செல்வரத்தினம், மானா மக்கீன், திலக் பெரேரா ஆகியோரும் தினக்குரல் விளம்பரப்பிரிவினரும், கணனிப்பிரிவினரும் என்பனவும் ஈழத்து இதழியல் துறைக்கு அர்ப்பணிப்போடு தனது சேவையை வழங்கிய டேவிட் ராஜுவுக்கு செய்து மனங்குளிர்ந்தனர்.*

**தலைமையுரை: எஸ்.பி.சாமி (தினக்குரல் அதிபர்)**

என்னைவிட ஒரு வயது கூடியவர் டேவிட் ராஜு. பழக இனியவர். யாருக்கும் உதவி செய்யும் மனப்பக்குவமுடையவர். கூர்மையான புத்தியும் நிமிர்ந்த நடையும் அவரிடமுண்டு. நண்பர் வேலணை வீரசிங்கம் இவரது சேவையைத் தினக்குரலுக்குப் பெறலாமென்றார். பேசச் சொன்னார். அந்தக் காலத்தில் டேவிட்ராஜு ஓய்வாக இருந்தார். எமது விருப்பத்தை ஏற்றார். அவர் எமக்கு வழிகாட்டியாக இருக்கிறார். பத்திரிகைத் துறையின் அத்தனை பேரும் அவரை வாழ்த்தி வந்திருக்கின்றனர். எல்லாம் இறைவன் கொடுத்த வரந்தான்.

**இலக்கியவாதி மானா மக்கீன்:**

ராஜ் தமிழ்ப் பத்திரிகையுலக ராசா. எனக்கு இப்போ 73 வயது. ஒரு காலத்தில் நான், கலைச்செல்வன், அந்தனி ஜீவா சந்து பொந்துகளெல்லாம் சுற்றி வந்தோம். அது சோதனையான காலம். எனது 19ஆவது வயதில் ராஜ் வீரகேசரியில் பணிசெய்தார். வெளிநாட்டு, உள்நாட்டுச் செய்திகளை எழுதி வெளியிட்டார். 50சத ரிக்கற்றில் ஆங்கிலப் படம் பார்ப்பேன். அண்ணாதுரை, கருணாநிதி, சி.பி.சிற்றரசு போன்றோரது நாடகங்களை அப்போ வாராவாரம் போடுவார்கள். வீரகேசரியில் "கலாமன்றம்" பகுதியை ராஜ் பரத் தயாரித்து வெளியிட்டார். அதில் நாடகம், சினிமா பற்றிய எழுத்துகள் வரும். அப்பகுதியில் எமக்கு வழிசமைத்துக் கொடுத்தவர் தான் ராஜ் பரத் என்ற ராஜ். அல்பிரட்கிச்கொக்கின் "டயல் எம் போ மேடர்" என்ற ஆங்கிலப் படத்தைக் காட்டினர். லிபர்ட்டிப் படமாளிகையில் அதைப் பார்த்து அதைத் தமிழில் நாடகமாக்கி லயனல் வெண்ட் அரங்கில் நடித்துக் காட்டினோம். ஆரம்பத்தில் முயற்சியெடுத்தபோது ஒரு கல்விமான் சொன்னார் சிறுபிள்ளை வேளாண்மை வீடு வந்து சேராதென்று. ராஜ் பரத் கலாமன்றத்தில் அருமையான செய்தியொன்றை வெளியிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில்லையூர் செல்வராசன் யானைக்கு அடிசறுக்கும்.1 பூனைக்கு அடி சறுக்காது எனக் கட்டுரை எழுதிப் போட்டார். ராஜ் கலைத்துறைக்குச் செய்த சேவைக்குத் தான் இந்தத் தலைப்பாகைக் கிரீடம், (*பவளவிழா நாயகருக்கு தலைப்பாகைக் கிரீடத்தை சூட்டுகிறார்.* ) திக்குத் தெரியாத எம்போன்றோரை, வழி காட்டிய கலாமன்றத்தை மறக்கமாட்டோம். சாமானியர்களை அடையாளம் காட்டினீர்கள். உங்களை என்றென்றும் காலம் பாராட்டும்.

## 'மல்லிகை' டொமினிக் ஜீவா

இந்த விழாவுக்கான அழைப்பிதழ் ஆங்கிலத்தில் இருந்தது எனக்கு அதிர்ச்சியைத் தந்தது. தமிழ்ப் பத்திரிகை ஏற்பாடு செய்திருக்கும் விழா இது. நேற்றைக்கு வீரகேசரியின் எண்பதாவது ஆண்டு விழா, வாழ்த்துகிறேன். இன்று தினக்குரல் விழா. வீரகேசரி தட்டிக்கொடுத்தது. ஞாயிறு வீரகேசரி எழுத்தாளராக்கியது. வீரகேசரி வெளியிட்ட சிறப்புப் அனுபந்தத்தில் டேவிட்ராஜூவும் இடம்பெற்றுள்ளார். எட்டாண்டுகளுக்கு முன்னர் டேவிட்ராஜூவை இனங்கண்டு மல்லிகை அட்டை நாயகனாக்கியிருக்கிறேன்.

## வேலணை வேணியன் (பிரபல கவிஞர்)

இளமையில் அண்ணா எனத்தான் அழைப்பேன். மூன்று வயதில் இளையவன். இரண்டு ஆண்டுகளாக டேவிட்ராஜூவைத் தெரியும். புலமைப்பரிசு பெற்றுக் கல்வி கற்றவர். நயினாதீவில் பிறந்தவர். எதையும், சிந்தித்துப் பேசும் குணக்குன்று. (வாழ்த்துப்பா பாடி, வழங்கினார்.)

## மூத்த பத்திரிகையாளர் ஆ.சிவநேசச்செல்வன்

முப்பத்தெட்டு ஆண்டுகளாக டேவிட் ராஜூவைத் தெரியும். யாழ் பல்கலைக்கழகத்திலிருந்தபோது பேராசிரியர் வித்தியானந்தன் மலரைப் பார்த்தேன். அதில் டேவிட்ராஜூவும் எழுதியிருந்தார். அது தொடக்கம் பின்னாலானவற்றை திருச்செல்வம் மூலம் அறிந்தேன். 1984 இல் வீரகேசரியின் பொறுப்பை ஏற்றேன். டேவிட்ராஜூ சவூதிக்குச் சென்றார். மனவருத்தமாக இருந்தது. சிறந்த பத்திரிகையாளர். அற்புதமான செய்தியாசிரியர். பலருக்குப் பயிற்சி கொடுத்து சிறந்த பத்திரிகை யாளர்களாக்கினார். கார்மேகம், சேதுபதி ஆகியோருக்குப் பயிற்சி கொடுத்துத் தமிழ்ப் பத்திரிகையைத் தரமாக்கினார். 'உள்ளதைச் சொல்வேன்' பத்தி எழுத்தின் மூலமாக நுணுக்கமான எழுத்துப் பண்பை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவாக்கியவர். முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்தனா, டேவிட் ராஜூவின் தலையங்கங்களைப் பாராட்டியிருக்கிறார். தெளிவான சிந்தனை மிக்க பத்திரிகையாளர்கள் அன்று இருந்தனர். ஆனால், இன்றில்லை. சிறந்ததோர் இளைய தலைமுறையை உருவாக்கித் தந்தார். செய்தி ஆசிரியர்களாக ஒழுங்கான முறையில் கார்மேகம், சேதுபதி போன்றோர் தோன்றினர். எஸ். டி. சிவநாயகத்தோடும் வேலை செய்தார். இப்போ விளம்பரத் துறையில் இருக்கிறார். Advertisment Life wire of Journalism என்பர். வீரகேசரியில் வணிகப் பகுதியை ஆரம்பித்தோம். இப்போ தினக்குரலில் ஆங்கிலப் பத்திரிகைக்கு நிகராக வெளிவருகிறது. டேவிட் ராஜூவின் கைவண்ணம் தெரிகிறது. தினக்குரலுக்குக் கிடைத்த மணி டேவிட்ராஜூ.

## மூத்த பத்திரிகையாளர் அன்னலெட்சுமி இராசதுரை:

டேவிட் ராஜூ 17 வயதில் பத்திரிகைத் தொழிலுக்கு வந்தார். அக்காலத்தில் எழுத்துப் பண்புள்ள கூட்டம் பத்திரிகையில் இருந்தது. தில்லைநாதன், ஸ்ரனிஸ்லொஸ், கார்மேகம் ஆகியோர் கடமைபுரிந்தனர். சிறந்த பண்பாளர், விடா முயற்சியாளர், தன்னம்பிக்கை கொண்டவர், தட்டிக் கொடுப்பதில் அருமையானவர். தானொரு எழுத்துப் பயிற்சியாளர் என்பதாகக் கொள்ளவில்லை. அதனால் பத்திரிகையும் அவரை அன்பாக ஏற்றுக் கொண்டது. பரபரப்பாக இருந்து கொண்டிருப்பார். தனக்குக் கீழுள்ளோரைக் கடியமாட்டார். செய்திக்குத் தட்டுப்பாடென்றால் மாவட்ட சபை இருக்கென ஆறுதல் தருவார். செய்திப் பாங்கான எழுத்தாளர். 1962 இலிருந்து 1982 வரை செய்தி ஆசிரியராகக் கடமை புரிந்தவர். பத்திரிகையாளர்கள் பின்பற்றுவதற்குரிய சிறந்த ஆளுமை. 1960க்குப் பின்னரே பெண் பத்திரகையாளர்கள் வீரகேசரியில் பதவிக்கு வந்தனர். பெண் உதவியாளர்களோடு பண்போடு பழகினார். இலங்கையின் வரலாற்றில் மிக முக்கியமான காலகட்டங்களான சதிப்புரட்சி, ஜே.வி.பி. புரட்சி, சத்தியாக்கிரகப் போர், பயங்கரவாதம் ஆகியவற்றில் தனது எழுத்துகளின் மூலம் தமிழ் வாசகருக்குப் பெரிதும் உதவினார். நிறைந்த விடயங்களைத் தெரிந்தவர். அவைகளை அடக்கிய சிறந்ததொரு நூலை வெளியிடலாம். பொருத்தமானதாகவும் இருக்கும். அதைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

## எழுத்தாளர் தெளிவத்தை ஜோசப்

சிறுகதை எழுதுவதோடு சரி. அதுவே எனது நிலை, பல்கலைக்கழகம் செல்ல வேண்டிய 21 வயதில் டேவிட்ராஜூ வீரகேசரியில் சேர்ந்தார். வா.ரா., கே. வி. எஸ். வாஸ் போன்ற இந்தியப் பிராமண வர்க்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீரகேசரியில் வழி, வழியாக ஆதிக்கம் செலுத்தி வந்த பாரம்பரியத்தை முதன் முதல் மாற்றி வரலாறு படைத்தவர் டேவிட் ராஜு. ஒரு சமயத்தில் புதுமைப் பித்தனை அணுகி வீரகேசரியில் பணிக்கு வரும்படி அழைத்தனர். இங்கிருந்து வேலைக்கு அங்கு ஆட்களைக் கூட்டிக்கொண்டு போவது போல் என்னையுமா? கூட்டிப்போக வந்திருக்கிறீர்கள் என அவர் மறுத்து விட்டார். அதனால் வா.ரா.வீரகேசரியில் கடமையாற்ற வேண்டியேற்பட்டது. அக்காலத்தில் தென்னிந்தியப் பத்திரிகையாளர் "ஸ்திரி" என்ற சொல்லைத் தான் பாவித்து வந்தனர். அதை உடைத்துப் பெண் என்ற தமிழ் சொல்லை வீரகேசரியில் நடமாடவிட்டவர் டேவிட்ராஜு. விசாப் பிரச்சினை இருந்தபோது D.R.P. என்ற திட்டத்தில் மலையக மக்களைத் தமிழகத்துக்கு அனுப்பினர். அதனால் தமிழ் வாசகர் தொகை குறைந்தது. இதைச் சீர்ப்படுத்த வீரகேசரி நிர்வாகம் இவரைக் கண்டி வதிவிட நிருபராக மலையத்துக்கு அனுப்பியது. (நல்லதொரு பத்திரிகையைப் பல்கலைக்கழகமென்பர்.)

எனது வீட்டில் மின்சாரம் திருத்த வேலை நடந்து கொண்டிருந்தது. அந்த வேலைக்காரனோடு பேசிக்கொண்டிருந்தபோது எனது பத்திரிகைத் தொடர்புகளைச் சொன்னேன். அப்போ அந்த வேலைக்காரன் டேவிட் ராஜுவை தெரியுமா? எனக் கேட்டான். தான் அவரோடு சவுதியில் வேலை பார்த்ததாகவும், தனக்கு அவர் "பொஸ்'' ஆக இருந்ததையும் கூறி, அவரை "ரத்னம் மாத்தயா" எனப் புகழ்ந்தான். தான் கடமைக்கு வந்த புதிய தினக்குரல் பத்திரிகையை நெறிப்படுத்தி அதையொரு அற்புதச் சிலையாக்கியவர் டேவிட் ராஜு.

## முஹம்மது மதனி

சவுதியில் 1994இல் டேவிட்ராஜுவோடு கடமை புரிந்தேன். 1994இல் சதாம் ஹுசைன் படைகள் பொம்களை வீசிச் சேதங்களை ஏற்படுத்தியது. பிரச்சினைக்குள்ளான அமெரிக்க, பிரித்தானிய, ஊழியருக்கு எமது கொம்பனி மூலம் உணவு கொடுத்தோம். ஒரு பகுதியினர் ஸ்ரைக் செய்ய ஆயத்தமாகினர். அப்போ அவர்களோடு பேச்சுவார்த்தை நடாத்தி ஸ்ரைக்கை, நிறுத்த டேவிட் ராஜுதான் அனுப்பப்பட்டார். அவரது பேச்சு வார்த்தையும் வெற்றி பெற்றது. 1995இல் அவரது மகன் இறந்தார். உடன் அவருக்கு லீவு கிடைக்காதது மனவருத்தமான விடயம். சில தினங்கள் தாமதித்தே வந்தார். வீடு சென்றேன் மகன் உடல் இருந்தது. டேவிட் அமைதியாக இருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தினக்குரலில் ஆசிரியத் தலையங்கத்தை நான் முதன் முதல் பார்ப்பேன். ஜெனரல் சரத் பொன்சேகா இப்போ மனித உரிமைகள் பற்றிப் பேசும்போது, அவர் படைத்தளபதியாக இருந்தபோது செய்யப்பட்ட மனித உரிமை மீறல்களுக்கு என்ன பதில்? எனக் கேட்டது பொருத்தமானதே.

## தினக்குரல் பிரதம ஆசிரியர் வீ.தனபாலசிங்கம்

தோற்றம் இப்போ 62 மாதிரித் தான் இருக்கு. பெரும் கல்லுக்குத்தி மாதிரி இருக்கிறார். பொறாமையோடு தான் வாழ்த்துகிறேன். பல சோதனைகளைத் தாண்டியும் மனம் இளமையோடுதான் இருக்கின்றது. கவலைகளைப் பார்ப்பதில்லை. தன் மகனைப் புதைக்கும்போது சிரித்தபடிதான் நின்றார். பக்குவமான மனத்தவர். வெளிநாடு சென்று வந்தவர். தான் மீண்டும் பத்திரிகையாளராக வேண்டுமென நினைக்கவில்லை. ஒரு நாள் தினக்குரலுக்கு வந்தார். நீங்கள் வேலையைச் செய்யுங்கள் எனக் கூறி 3 மணித்தியாலங்கள் செய்தி ஆசிரியராக இருந்த என் முன் இருந்தார். சகலவற்றையும் அவதானித்தார். எழுந்து சென்றபோது "இளம் குறூப் தாக்குப் பிடிக்கும்" என வாழ்த்திச் சென்றார். வீரகேசரியில் சமமான ஆற்றல் கொண்டவர்களான டேவிட் ராஜு, நடராசா, கார்மேகம் ஆகிய மூன்று சிறந்த பத்திரிகையாளர்கள் அருகருகே இருந்து கடமை புரிந்திருக்கின்றனர். இவர்களைப் பார்த்துத் தான் நான் வளர்ந்தேன். அப்படி இன்றைய பத்திரிகையாளர்கள் இணைந்து செயல்பட மாட்டார்கள். டேவிட்ராஜு பதற்றப்படமாட்டார். எதையும் சிரித்தபடிதான் செய்வார். அனுபவம் மூலம் படிக்கும் ஆசை வேண்டும். டேவிட் ராஜு எங்களை மாற்றி அமைத்தார். வீரகேசரியில் ஏற்பட்ட சோதனை அவருக்கு நல்லதாகி விட்டது. சுயமரியாதைக்காக வீரகேசரியில் வகித்த பதவியைத் தூக்கி எறிந்தார்! அந்தச் சுயமரியாதைப் பண்பு இப்போ உள்ளவர்களுக்கு இல்லை. கதவைச் சாத்தி விட்டுக் காலில் விழுகிறார்கள்!

## கலாபூஷணம் கலைச் செல்வன்

எனது எழுத்துகளுக்கு வீரகேசரியில் களந்தேடித் தவம் கிடந்தேன். 1965 இல் நடிகவேள் லடீஸ் வீரமணி அழைத்துச் சென்றார். வீரகேசரியில் கலா மன்றத்தை உருவாக்கிய முன்னோடி டேவிட் ராஜு. கொழும்பு கலாபிவிருத்திச் சபையின் தலைவராக இருந்தார். 75 வயதிலும் 25 வயது நாயகனாக இருப்பதுக்கு இதய சுத்தம் தான் காரணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"கொழுந்து" அந்தனி ஜீவா**

என்னை வளர்த்தது வீரகேசரி. அன்னலெட்சுமி ராசதுரை கேசரியில் அறிமுகப்படுத்தினார்.

டேவிட் ராஜுவின் வழிகாட்டலில் தினக்குரல் ஒரு குடும்பமாக இயங்குகிறது.

**எச்.எச் விக்கிரமசிங்க**

டேவிட் ராஜு முதல் பக்கச் செய்தியில் மிகவும் கவனமாக இருந்தார். 3 மணிக்கு தான் மதிய போசனத்துக்குப் போவார். 7,8 மணி வரை அலுவலகத்தில் நிற்பார். றங் கோல் போட்டு யாழ்ப்பாணத்திலிருந்து நிருபர் செல்லத்துரை யாழ்ப்பாணச் செய்திகளைக் கூறுவார். அல்பிரட் துரையப்பா சுடப்பட்டதையும் அப்படித்தான் சொன்னார். வீரகேசரிக்கு உந்துசக்தியாக இருந்தார் டேவிட் ராஜு. மலையகச் சிறுகதைப் போட்டி நடக்க உதவியவர். தெளிவத்தை ஜோசப், என்.எஸ்.எம்.ராமையா மலையகத்திலிருந்து தோன்ற உதவினார். தோட்ட மஞ்சரி முன்னேறக் கார்மேகத்துக்கு ஆலோசனைகளை வழங்கினார்.

**பிரபல விமர்சகர் கே.எஸ்.சிவகுமாரன்**

1958இல் வீரகேசரியில் "இளைஞர் மன்றம்" என்ற பகுதியை நடத்திக் கொண்டிருந்தபோது எனது புகைப்படத்தைப் பிரசுரித்து அறிமுகக் கட்டுரையும், எழுதியவர் டேவிட் ராஜு வானொலி சம்பந்தமான கூட்டமொன்றிற்காக அனுராதபுரம் சென்றிருந்தேன். அப்போ டேவிட் ராஜுவும் வந்திருந்தார். ஒரே அறையில் தங்கினோம். அப்போதான் இவரது குண இயல்புகளை அறிந்து கொண்டேன். அற்புதமான மனிதர்.

**ஏற்புரை: டேவிட் ராஜு**

வணிக மாநாடு ஒன்றிற்குச் சென்றேன். HOW YOUNG ARE YOU என ஒருவர் கேட்டார். YOU GUESS எனப் பதில் சொன்னேன். அறுபத்தைந்து எனச் சொன்னார். ஆம் எனத் தலையை ஆட்டினேன். அப்படி இருந்த என்னை இப்படி ஆக்கிவிட்டனர்! நீண்ட கால இரகசியம் வெளியாகிவிட்டது. முன்னர் என்ன மன நிலையில் இருந்தேனோ அதுவே இப்போதும் எனக்கிருக்கிறது. காரணம் சலிப்பற்ற தொழில். 1984 இல் ஊடகத்துறையை இராஜினாமாச் செய்து விட்டு வெளிநாடு போனேன். நல்ல பதவியில் 16

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருடங்கள் இருந்தேன். பணப் பெட்டி நிறைந்தது. ஆனால் எனது மனம் நிறையவில்லை. இப்போ மன நிறைவோடு வாழ்கிறேன். நாணயத்துக்கு இரு பக்கங்கள், பத்திரிகைக்கும் அப்படியே. மக்களின் நலனைத் தான் முதன்மையாக வைக்க வேண்டும். சமுதாயத்தின் பேச்சாளர்கள் பத்திரிகையாளர்கள், அரசியல்வாதிகளல்ல. பாராளுமன்ற அங்கத்தவ ரொருவர் தனது செய்தியை முன் பக்கத்தில் வெளியிடச் சொன்னார். அப்படியே செய்தோம். மறுநாள் கொள்ளுப்பிட்டியில் நடந்த நிகழ் வொன்றுக்கு எமது படப்பிடிப்பாளர்கள், நிருபர்கள் சென்றிருந்தனர். அந்தப் பாராளுமன்ற உறுப்பினரும் வந்திருந்தார். அவரது ஆதரவாளரொருவர் ஐயா உங்களது செய்தி இன்று முன் பக்கத்தில் வந்துள்ளது என்றார். அப்போ அந்த அரசியல்வாதி "அவங்களுக்கு வேலை இல்லை" என்றார். இவர்கள் தான் அரசியல்வாதிகள்.

உண்மையான சமுதாயப் பேச்சாளர் ஊடகமே. ஊடகவியலாளர்களான நாம் எமது பொறுப்புக்களை உணர வேண்டும். எவ்வளவு பிரமாதமாகச் செய்திகளைப் பிரசுரித்தாலும் அவைகள் வாசகருக்கு உரிய நேரத்தில் கிடைக்காவிட்டால், அதனால் எந்தப் பிரயோசனமும் இருக்காது. பதற்றத்தோடு எழுதும் செய்தி நிதானமாக இருக்காது. EASY AVAILABILITY, CORDINATION, CORPORATION என்பவைகள் இல்லாது பத்திரிகையை வளர்க்க முடியாது.

11/13-08-2010

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 17

## லெனின் மதிவானம் எழுதிய "உலகமயம், பண்பாடு, எதிர்ப்பு அரசியல்" நூல் ஆய்வரங்கு

பன்முக ஆளுமைகளைத் தன்னகத்தே கொண்டுள்ள கல்வியாளர் லெனின் மதிவானத்தின் "உலகமயம், பண்பாடு, எதிர்ப்பு அரசியல்" என்ற நூலின் ஆய்வரங்கு இலங்கை முற்போக்குக் கலை இலக்கிய மன்றத்தின் ஏற்பாட்டில் 15.08.2010 இல் கொழும்பு 06, பெண்கள் கல்வி ஆய்வு மையக் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

**தலைமையுரை :**
**நீர்வை பொன்னையன்,**
**முதுபெரும் முற்போக்குப் படைப்பிலக்கியவாதி**

"உலகமயம், பண்பாடு, எதிர்ப்பு அரசியல்" என்ற நூலின் ஆசிரியர் எமது மன்ற ஏற்பாட்டில் மார்க்சிம் கோர்க்கியிலிருந்து கவிஞர் இ.முருகையன் வரையில் மறைந்த முற்போக்கு இலக்கிய முன்னோடிகளுக்கான நினைவுப் பேருரையை நிகழ்த்தியுள்ளார். அத்தகைய நினைவுப் பேருரையே இந்நூல். அமெரிக்க ஏகாதிபத்தியம் நேரடியாக உலகை ஆக்கிரமித்து வருகிறது. வெவ்வேறு வடிவங்களில் இதைச் செய்கிறது. அவைகள் போன்றே உலக மயமாக்கல், அதன் பொருளாதார ஆக்கிரமிப்பு இன்று 32 நாடுகளில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இதற்காக வெவ்வேறு தந்திரோபாயங் களைச் செய்கிறது. இலங்கை உட்பட பல நாடுகளின் மூல வளத்தைச் சுரண்டி அந்நாடுகளைச் சீரழிக்கின்றது. பிலிப்பைன்ஸ், தாய்லாந்து, இந்தோனேசியா போன்ற நாடுகளின் அரிசி ஏற்றுமதி இதனால் சீரழிந்தது. இதில் பல்தேசியக் கம்பனி தலையிட்டு அந்நாடுகளின் வளத்தைப் பழுதாக்கியது. அரிசி, நெல் உற்பத்தியிலும் பார்க்க கோதுமைச் செய்கை நல்லதெனச் சிபாரிசு செய்தனர். இக்கம்பனி இந்தியாவின் பருத்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உற்பத்தியில் தலையிட்டு அதை நாசமாக்கியது. இது அந்நாட்டின் தற்கொலைக்குச் சமமமானது. கருத்தடையை இந்தியாவுக்கு வற்புறுத்தியது. அதை வடஇந்தியா ஏற்காத போதும் தென்னகம் தமிழ் நாட்டில் ஏற்றது. எதிர்ப்பும் இருந்தது.

இலங்கையில் முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தன பிரச்சினைகளை யுத்தமாக மாற்றி உலக மயமாக்கலுக்கு இலங்கையின் கதவைத் திறந்து விட்டார். இது பல்தேசியக் கம்பனி வருகைக்கு அத்திவாரமிட்டது. இது சம்பந்தமாக நூலொன்றை எழுதிய சரத் சந்திர அடிவாங்கினார். அமெரிக்க விசுவாசியாகிய ஜே.ஆரே இந்நாட்டை நாசமாக்கியவர். இன்றைய அரசும் கூடக் கண்மூடித்தனமாகப் பல்தேசியக் கம்பனிகளை வரவேற்கின்றது. இக்கம்பனிகளின் நோக்கம் குறைந்த காலத்தில் கூடிய இலாபம் ஈட்டுவதே. வத்தளையில் உள்ள ஆடைத் தொழிற்சாலைகளில் நடைபெறுபவை கைத்தொழில்களாகா. தொழிலாளருக்குக் குறைந்த கூலியைக் கொடுத்து கூடிய இலாபத்தைச் சுருட்டுகின்றனர். வர்த்தகத்துக்கு இக்கம்பனிகள் விசாலித்த விளம்பரங்களையே நம்பி இருக்கின்றன. விலைப்படாத பொருட்களையும் விற்றுக் காசாக்குகின்றன. தேநீர்க் கடைகளில் டயலொக் (DIALOG) விளம்பரங்கள் காணப்படுகின்றன. மோசடியான முறையில் குழாய் நீரை விற்பனை செய்கின்றன.

ஞாயிறு பத்திரிகைகளில் முதல் பக்கத்தில் இவர்களது விளம்பரங்கள் வெளியாகின்றன. கேவலம் பணத்துக்காகவே இது செய்யப்படுகின்றது. தொலைக்காட்சிகளில் ஆபாசமாகப் பெண்கள் தோன்றும் விளம்பரங்கள் வெளியாகின்றன. இதனால் சமூகம் அவமானத்துக்குள்ளாகின்றது. இச் சீர்கேடுகளை முன்னெடுத்து எதிர்ப்பியக்கம் நடாத்த இந்நாட்டில் இன்னமும் அமைப்புகள் தோன்றவில்லை. பண்பாடான உலகை அழிப்பதே இக்கம்பனிகளின் நோக்கம். அதேவேளை தமது பண்பாடுகளை வேறு நாடுகளில் நிலைநாட்ட எத்தனிக்கின்றன. இந்திய தேசிய கீதத்தை சோனி கம்பனி நாசமாக்கி அதன் ஆத்மாவையே அழித்தது. எம்நாட்டைச் சகல துறைகளிலும் சூறையாடுகின்றனர். அடிமைப்படுத்துவதே அவர்களது எதிர்பார்ப்பு. இந்த அழிப்புகளுக்கு இடங்கொடுக்கக் கூடாது. ஆனால் அழிவுகளுக்கு இடம்கொடுக்கிறோம். நாம் இவற்றை ஆழமாகச் சிந்தித்து எதிர்க்குரல் எழுப்ப வேண்டும்.

**ஆய்வுரைகள்:**

**கலாநிதி செல்வி திருச்சந்திரன்**

நூலாசிரியரைப் பக்கத்தில் வைத்துக்கொண்டு நூலைப் பற்றிப் பேசுவது தர்மசங்கடமாக இருக்கிறது. கோட்பாட்டு வாதத்தின் தொகுப்பே இந்நூல். உலகமயமாதல் வரலாற்றுக் காலம் தொடக்கம் தொடர்ந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அதை நிராகரிக்க முடியுமா? கிரேக்க வணிகம் தமிழ் நாட்டில் உலகமயமாக்கலைத் தொடக்கியது. பண்பாட்டில் பெறுமதி ஏற்பட்டதா? TRIBUNE, LANKA GUARDIAN ஆகியவைகளின் கருத்தாழம் எம்மொழி எழுத்துகளுக்கும் வந்துவிட்டது. நூலாசிரியருக்கு ஆங்கிலத்தில் தேர்ச்சித் தரம் இருக்கிறது. ஆங்கில மோகத்தால் இதைச் சொல்லவில்லை. மொழிகளைக் கற்பதால் மூளை, பண்பாடு வளர்ச்சி பெறும்,மேலோங்கும். பிரான்சிய மொழியையும் கற்க முயற்சி எடுத்தேன். குறுகிய மனப்பான்மையைத் தவிர்க்க முடியாது. எந்தச் சக்தியும் பண்பாட்டை அழித்தால் அதைத் தவிர்க்க முனைய வேண்டும். புலம்பெயர்ந்தோர் திரிசங்கு நிலையில் இருக்கின்றனர். தமக்கான பண்பாடு எது என்பதில் அல்லாடுகிறார்கள். ஹொலன்டில் இருந்த போது விருந்தொன்றை வைத்தோம். வந்த வெளிநாட்டவர்கள் உணவைப் பிசைந்து கையால் சாப்பிட இலங்கையர்கள் முள்ளுக்கரண்டியால் அள்ளி உண்டனர். கனடாவில் சங்கானைச் சந்தை. ஆனால் இங்கே கோட்பாடு. இத்தகைய முரண்பாடுகள் பண்பாட்டு வளர்சியில் இருக்கின்றன.

1980களில் "பெண்ணின் குரல்" என்ற ஏட்டில் றோகினி வீரசிங்க வர்த்தக வலயத்தில் வேலை பார்க்கும் பெண்கள் அனுபவிக்கும் அவலங்களை விலாவாரியாக எழுதியிருந்தார். இங்குள்ள நிறுவனங்களில் வேலை பார்க்கும் பெண்களது கண்கள் பாதிக்கப்படுகின்றன. குருட்டுத் தன்மை ஏற்படுகின்றது. தூசிகளால் தொண்டை நோய், கான்சர் நோய்களுக்கு இவர்கள் ஆளாகும் நிலையுண்டு. றோகினி இவர்களது நிலையை மலேசியப் பெண்களது நிலைகளோடு ஒப்பிட்டிருந்தார். பெரும் தோட்டப் பெண்கள், வெளிநாடுகளில் வேலை பார்க்கும் பெண்கள் பெரும் கொடூரங்களுக்கு ஆளாகின்றனர். இந்நூலின் 45ஆம் பக்கத்தில் பெண்களின் நிலைகள் குறித்துச் சொல்லப்படுகிறது. தற்போது யாழ்ப்பாணத்தில் பாலியல் விடுதிகள் வந்துவிட்டன. டாக்டர் ஒருவர் சொன்னார், தான் இங்கு 150 பெண்களுக்குக் கருக்கலைப்புச் சிகிச்சை செய்ததாக. இதில் ஈடுபடுவோர் யார்? இப்பெண்களை அணுகுபவர்கள் யார்? இந்நாட்டவர்தானே!

இந்த விடயத்தில் நாமெல்லோரும் சேர்ந்து இந்தப் பண்பாட்டுச் சீரழிவை நிவர்த்தி செய்ய வேண்டும். எங்கள் சிந்தனை எதிர்ப்பரசியல் எங்கே? தன்னார்வ அமைப்புக்களில் (NGO) பெண்ணியவாதிகள் செற்பட முடியாது. KFC ஐ நாம் நிராகரித்தால் இலாபம் குறைய அவர்கள் போய்விடுவார்கள். இத்தகைய எதிர்ப்பு எம்மவரிடம் உண்டா? இவைகளுக்கான வழிவகைகளை எல்லோரும் சேர்ந்துதான் செய்ய வேண்டும். பெண்ணியவாதிகள் திரிக்கப்படுகிறார்கள். வர்க்கப் போராட்டத்தோடு பெண்கள் பிரச்சினைகளும் ஆராயப்பட வேண்டும். இந்நூலின் இறுதிப் பக்கத்தில் காணப்படும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆங்கிலப் பெயர்களைத் திருத்தியிருக்க வேண்டும். இத்தவறுகள் நூலின் மதிப்பைக் குறைக்கும். இத்தகைய நூல்கள் இன்னும் வரவேண்டும்.

**ஆய்வாளர் செ.கிருஷ்ணகுமார்**

நல்லதொரு நூல், உலகமயம் - பண்பாடு-எதிர்ப்பு அரசியல். எழுதிய படைப்பாளி இறந்து விடுவான். ஆனால் படைப்பு நின்று நிலைக்கும், லெனின் இன்றைய காலகட்டத்தில் அதிகமாகப் பேசி விமர்சிக்கப்படுபவர். சமர்ப்பணம் மார்க்சிம் கோர்க்கி, முருகையன். அவர்கள் வாழ்ந்த காலத்தில் செய்த போராட்டங்களைப் பேச வைக்கின்றது. சமூகம் குறித்து பேருரையாகவும் அமைகின்றது. பதிப்புரை நூலை அறிமுகம் செய்கிறது. உலக மயமாக்கலைச் சிந்திக்கும் மனிதர் தேவை என்பதை உணர்த்துகின்றது. முன்னுரை பொருள் பொதிந்தது. இரட்டை நிலை உலக மயமாக்குதலுக்குண்டு. தொடர்பாடல் மூலமாக உலகமயமாதல் ஆரம்பமாகின்றது. புதிய சந்தை வாய்ப்புக்காகவே உலக மயமாக்கலை உருவாக்கினர். பிரித்தானியா காலனித்துவ காலத்தில் ஆங்கில மயமாக்கலை உருவாக்கியது. தொலைக்காட்சி, சினிமா என்பன கழிசடைக் கலாசாரத்தைப் புகுத்தியதால் இளைஞர்கள் சிந்திக்க மறந்து விட்டனர். தமிழ்ப் புத்தக விற்பனையில் மிகவும் கூடுதலாக விற்பனையாகும் நூல் தரம் ஐந்திற்கான புலமைப் பரிசில் நூல்தான். இக்காலப் பெற்றோர் வாசிப்பதில்லை. மாலைக்கல்வி வியாபாரமாகி விட்டது. ஊதாரித்தனமான செலவுகள் வளர்க்கப்பட்டுள்ளன. பெண்கள் நாயிலும் கடையராக்கப் படுகின்றனரென நூலில் சுட்டப்பட்டுள்ளது. மதுபானம் இப்போ சமூக கலாசாரமாகிவிட்டது. உலகமயமாதல் முழுமையாக நிலைத்துவிட்டது. அமெரிக்க உணவு முறைகள் திணிக்கப்பட்டுள்ளன. பசுமைப் புரட்சி உலகமயமாக்கலின் இன்னொரு கட்டம். உரம் வெளிநாடுகளிலிருந்து வருகிறது.

போராட்ட உணர்வைத் தனியார் மயமாதல் நாசமாக்கி விட்டது. மலையகத்தில் மாற்றங்கள் சில வந்தன. இன்று தொழிலாளரை யார் மதிக்கின்றனர்? மாற்றுக் கலாசாரத்தை முன்னெடுக்க வேண்டுமென்கிறார் நூலாசிரியர் லெனின் மதிவானம். வர்க்கம் சார்ந்த விடுதலையே பெண்களின் விடுதலை. சுயமுரண்பாட்டைக் கொண்டுள்ளது. பெண்கள் குழந்தைகளை உற்பத்தி செய்யும் கருவியாக இருக்கும் நிலை மாற வேண்டும் என்ற குரலோசை நூலில் காணப்படுகின்றது. மேற்கோள்களின் ஊடாகக் கருத்துக்களைக் காட்ட வேண்டும். நூலில் பல இடங்களில் எழுத்துப் பிழைகள் காணப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பேராசிரியர் சபா ஜெயராசா**

சிறப்பான எண்ணக் கருவை நூல் கொண்டுள்ளது. உலமயமாதல், கோள மயதாதல், பூகோள மயமாதல் என GLOBALAIZATION க்குத் தமிழில் பல சொற்கள் உண்டு. கோளமயமாதல் பல நூறு ஆண்டுகளுக்கு முன்னரே தமிழ் மண்ணில் தோன்றிவிட்டது. சமூக மயமாக்கல் வேறு உலகமயமாதல் வேறு. உலகமயமாதலின் பின்னர் முதலாளித்துவம் வளர்ச்சி கொண்டது. மூலதனம் பெரும் நிறுவனங்களுக்குச் செறிந்து போய்க் கொண்டிருந்தது. சுரண்டல் நடக்கிறது. பரந்த கட்டமைப்புகளால் கட்புலன் பாதிப்பு, பல்லினப் பாங்கான பறிப்பு உண்டு, பெரும் நிறுவனம் கருத்தியல் வளத்தையும் திணிக்கும் தன்மையையும் நிலைநாட்டக் கூடியது. தகவல் நெடுஞ்சாலை சுரண்டும் வர்க்கத்துக்குச் சார்பானது. அபத்தங்கள் வெளிவருவதில்லை. மாயத் தோற்றத்தையே உலகமயமாதல் கொண்டிருக்கிறது. உலக வங்கி கல்வியில் கை வைத்திருக்கிறது. வேலையற்றோர் அதிகரித்துள்ளனர். ஆசிரிய கலாசாலையை மாற்றி அமைக்கக் கல்வியியற் கல்லூரிகளை அமைத்தனர். பயிற்சியைக் கடந்து பயமிழக்கச் செய்தனர்.

இன்று வேலை கொடுக்க முடியாத நிலை. பாடநெறிகள் நிறுத்தப் படுகின்றன. உலக மயமாக்கலின் நேரடி வெளிப்பாடாகச் சர்வதேசப் பாடசாலைகள் தோன்றியுள்ளன. நவீன அறிவு பயனுள்ள பங்கென்ற நோக்கம் உண்டுகிராமப் பாடசாலைகள் செய்யும் கல்விப் பங்களிப்பைக் கூட இவை செய்வதில்லை.

பெரும் அனர்த்தம் கல்விக்கு நடக்கிறது. விவசாயத்துறையில் ஏகபோக உரிமை கொண்டு எமது பயிர்ச் செய்கையைச் சீர்குலைக்கின்றன. தொழிலாளர் ஐக்கியம் பல விடயங்களில் குலைக்கப்படுகிறது. பிரிப்பதுக்கு நுண் உபாயங்களைப் பயன்படுத்துகிறார்கள். பெண்ணியத் தவறான புலக்காட்சி ஐக்கியப்படுவதை நிறுத்துகிறது. கணனியில் தட்டச்சு செய்வோருக்கு அடிப்படைப் பயிற்சி கொடுக்க வேண்டும். எனது நூலொன்று ஐந்து முறைபடி எடுத்தும் அதில் பிழை காணப்பட்டது. "அறிகை" என்ற சொல்லை "அறிக்கை" எனப் பல இடங்களில் தட்டச்சுச் செய்திருந்தனர். புதிய தமிழ்க் கலைச் சொல்லாக்கம் இன்றைய காலகட்டத்தில் மிகவும் அவசியம்.

**ஏற்புரை:**
**நூலாசிரியர் லெனின் மதிவானம்**
**(பிரதி ஆணையாளர், கல்வி அமைச்சு)**

இது எனது இரண்டாவது நூல். நூறு பக்கத்துள் கொண்டு வரலாமென நினைத்தேன். சூழ்நிலை 140 பக்கங்களாக்கிவிட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் கருத்துக்களில் மாற்றமில்லை. வெளியிட்ட இலங்கை முற்போக்குக் கலை இலக்கிய மன்றத்துக்கு நன்றி. நீர்வை பொன்னையன், இரவீந்திரன் மீண்டும் மீண்டும் வலியுறுத்தி எழுத வைத்தனர். செல்வி திருச்சந்திரன் எழுத்துப் பிழைகள் உண்டெனச் சுட்டிக் காட்டினார். தட்டச்சுச் செய்தவருக்கு இந்த விடயத்தில் அறிவு குறைவு. "தோழர்" என எழுதியது "தமிழர்" எனத் தட்டச்சு செய்யப்பட்டது.

பிழைக்கு நானே பொறுப்பு. கைலாசபதி, கல்கி நூல்களில் பிழைகள் காண்பதரிது. சரவை ஒப்பு நோக்கில் அப்போ அறிவு இருந்தது. ஆங்கிலமொழி ஊடாகவே உலகமயத்தைப் புரிந்து கொண்டேன். இது பிறமொழிக்கு எதிரல்ல. எமது தாய்மொழி சிங்கள மேலாதிக்கத் திணிப்புக்கு ஆளாகின்றது. நாயிலும் கடையர் எனப் பெண்ணியம் சுரண்டப்படுகிறது.

பாலியல் மலேசியாவில் மிகவும் மோசம். ஊதாரித்தனமான நாடுகள், இந்நாட்டினரைக் கடன்காரராக்குகின்றன. உழைக்கும் வர்க்கம் இங்கு வெகுவாகப் பாதிக்கப்படுகிறது. மனிதரைக் கோட்பாடுகள் பிரிக்கின்றன. இதைச் சிறப்பாக சபா.ஜெயராசா எடுத்துக் காட்டினார். இரு தேசியங்கள் பெருந் தாக்குதலை ஏற்படுத்தின. மார்க்சியத்தை லெனின் மறுவாசிப்புச் செய்தார். இந்தியக் காங்கிரஸ் காலனித்துவத்துக்கு எதிராக நிற்கத் தாழ்த்தப்பட்ட மக்கள் சமூக விடுதலைக்காக ஆங்கிலேயரோடு சேர்ந்தனர். இதன் முரண்பாட்டினை பாரதி கண்டு கொண்டார். இந்தியச் சூழல் பாரதியைக் கவனிக்கவில்லை. ஒடுக்கப்பட்ட மக்கள் ஐக்கியப்படவில்லை. தலித் போராட்டம் திரித்துப் பேசப்படுகிறது. மார்க்சியம் ஐக்கிய சக்தியைக் கொண்டுவர வேண்டும். பண்பாட்டுப் போராட்டம் தேவை. 1960 இல் கொம்யூனிஸ்ட் இயக்கம் இதை இலங்கையில் முன்னெடுத்தது. நூலில் தரப்பட்டவை தனிப்பட்ட மனிதக் கருத்தல்ல. இது பலருடன் பேசிப்பெற்ற வகைகளின் தொகுப்பு. இது இடதுசாரிகளின் பண்பு.

-26.08.2010

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 18

## தகவம் பரிசளிப்பு : 2009

படைத்தல், நயத்தல், மதித்தல், வளர்த்தல் என்ற நான்கு படிமங்களில்- ஈழத்துத் தமிழ்ச் சிறுகதைக்குப் புது இரத்தம் பாய்ச்சி, அதற்குச் சர்வதேசக் கவனத்தைக் கனியவைக்கும் தீட்சண்யமான இலக்கோடு - ஈழத்தில் இலக்கியப் பணியாற்றிக் கொண்டிருக்கும் தமிழ்க் கதைஞர் வட்டம் (தகவம்), '2009 ஆம் ஆண்டில் பிரசுரமான சிறுகதைகளில் - தகைசார் நடுவர்களால் தெரிவான சிறுகதைகளுக்கு விருது, சான்றிதழ், காசோலை என்பவற்றை வழங்கி உரிய கதைஞர்களைக் கௌரவித்தது. இதே வைபவத்தில் தடம் பதித்த மூத்த முற்போக்கு எழுத்தாளர் கே.ஆர்.டேவிட் சிறப்புக் கௌரவத்தையும் பெற்றார். மண்டபம் நிறைந்த இலக்கிய இரசனையாளர்களைக் கொண்டிருந்த இந்நிகழ்வு, கொழும்புத் தமிழ்ச்சங்க, சங்கரப்பிள்ளை மண்டபத்தில், 28.08.2010 ஆம் திகதி நடைபெற்றது. தகவத்தின் தலைவர் மாத்தளை கார்த்திகேசு தலைமை தாங்கினார்.

பேராசிரியர் சி.மௌனகுரு, பேராசிரியர் சபா ஜெயராசா, புரவலர் ஹாசிம் உமர், எழுத்தாளர் கே.ஆர்.டேவிட்,'மல்லிகை' டொமினிக் ஜீவா,'ஞானம்' தி.ஞானசேகரன்,'கொழுந்து' அந்தனி ஜீவா, வீ.தனபாலசிங்கம் (பிரதம ஆசிரியர் தினக்குரல்), சிவா சுப்ரமணியம் (பிரதம ஆசிரியர் தினகரன்), கவிஞர் ஜின்னாஹ் ஷரிபுத்தீன், மு. ரவீந்திரன் (தமிழ்ப் பிரிவு ரூபவாஹினி), கதிர்காம நாதன் (தலைவர், தமிழ்ச்சங்கம்) ஆகியோர் மங்கல விளக்கேற்றினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வி சௌத்தாமினி மோகனசுந்தரம் தமிழ் வாழ்த்துப் பாடினார். ஆ.விஜயகுமார் (பொதுச் செயலர் - தகவம்) வரவேற்புரை நிகழ்த்தினார்.

**தலைமையுரை:**
**மாத்தளை கார்த்திகேசு**

தன்னைச் சூழவுள்ள சூழலில் ஏற்படும் கொடுமைகள், அவலங்கள் என்பவற்றைக் கண்டும் காணாமல், பார்த்தும் பாராமல் செல்கின்ற நடைபாதை வழிப்போக்கனல்ல எழுத்தாளன். அவனுக்குச் சமூக அக்கறை இருக்க வேண்டும். அழுகையின் குரல் புரிய வேண்டும். அகிலத்தின் அவலத்தில் அவன் மூழ்கி எழ வேண்டும். அப்போது தான் அவன் படைக்கும் கதை மாந்தரும், சமூகத்தில் மின்னிச் சிறப்பார்கள். அவன் படைப்புக்கள் தான் எதிர்காலத்தில் பேசப்படும். 'எவனுடைய இதயம் ஏழைகளுக்காகக் கண்ணீர் வடிக்கிறதோ அவனையே நான் மகாத்மா என்பேன்' என்றார் சுவாமி விவேகானந்தர். 1975 இலிருந்து இயங்கி வரும் தகவத்தின் கடந்த காலச் சாதனைகளை நோக்கின் சிறுகதை வடிவம் பற்றிய உணர்வை எழுத்தாளர்களிடையே தகவம் வளர்த்துள்ளது.

வெறும் கதைகளை மட்டுமே படிக்கின்றோம் என்ற உணர்வின்றி, அவற்றின் வடிவம், சம்பவம், பாத்திர அமைப்பு ஆகிய இலக்கியக் கூறுகளையும் கவனிக்க வேண்டும் என்ற வாசக விமர்சன நோக்கையும் உருவாக்கியுள்ளது. சிறுகதை என்றால் என்ன? எப்படி அமைத்தல் வேண்டும்? என்பதை எளிதில் விளக்கி விட முடியாது. தமிழ் நவீன சிறுகதையின் முன்னோடி புதுமைப்பித்தன் 'சிறுகதை மனித உள்ளத்தின் அடைய முடியாத ஆசைகளின் எதிரொலி' என்றார். ஓர் அனுபவம், ஒரு நிகழ்ச்சி, ஓர் உணர்ச்சி, ஒரு செய்தி இவைகளில் எதுவானாலும் ஒரு சிறுகதையை உருவாக்க முடியும். ஆனால், அதில் இலக்கிய மணம் கமழ வேண்டும். படிப்பவன் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். எழுத்தாளர்களை அனுபவங்கள் வந்தடைய வேண்டும். அவைகளை வர்ணனையாகவோ, பரிதாபக் கூற்றுக்களாகவோ, உற்சாகம் மிக்கவையாகவோ, திடீர்த் திருப்பங்களுடனோ கதையாக்கினால் அது சிறுகதையாகாது. நல்ல கதையெனில் அது ஊற்றுக் கண்ணிலிருந்து பீறிட்டுக் கிளம்பி, பல திசைகளுக்குப் பாய்ந்து பல தளங்களைச் சுற்றிய பின் இலேசாகப் பட்டுப் பூச்சியைப் போல் மனதில் அமர்ந்து கொள்ளும். நிறைந்த அனுபவங்களை உடையவர்கள், மொழியாள்கையின் நுட்பத்தை உணர்ந்தவர்கள், சமூக முரண்பாடுகளை உணர்ந்தவர்கள், நிறைந்த நூற்பயிற்சி உடையோர், ஆகியோர்களால் தான் உன்னதமான சிறுகதைகளைப் படைக்க முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த நவீன யுகத்தில் கலை, இலக்கியம், பண்பாடு, அரசியல் ஆகியன புதிய நோக்கமும், புரட்சி வேகமும் கொண்டுள்ளன. இலக்கியத் துறையில் புதிய உத்திகளைப் புகுத்திப் பரிசோதனை செய்யும் நல்ல வளமான மனம் பல இலக்கியவாதிகளுக்கு வாய்த்துள்ளது. அதன் விளைவாக இலக்கியத்துறை, அதிலும் சிறப்பாகச் சிறுகதைத் துறை மிக வேகமான ஆற்றல் கொண்டு, மனித சமூகத்தின் கருத்துப் படிமங்களை ஆழமாகத் தாங்கி வளர்ந்து வருகிறது. இதைத் தகவம் மனதார வரவேற்கிறது. தகவத்தின் பரிசுக் கதைகள் மூன்றாம் தொகுப்பு வெளிவருவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

*சிறப்பு விருந்தினருக்குத் 'தகவம்' மு.தயாபரன் மாலை சூட்டினார்.*

## சிறப்பு விருந்தினர் உரை:
## பேராசிரியர் சி.மௌனகுரு

தகவத்தின் நேரக்கட்டுப்பாடு அதன் மேல் மரியாதையை ஏற்படுத்துகிறது. இம் மண்டபத்தில் பல தலைமுறைகளைச் சேர்ந்தவர்கள் குழுமி இருக்கின்றனர். செ.கணேசலிங்கன், டொமினிக் ஜீவா ஒரு தலைமுறை. கே.எஸ்.சிவகுமாரன், பேராசிரியர் சபா ஜெயராசா மற்றொரு தலைமுறை. தேவராசா, கோகிலா மகேந்திரன், மகேஸ்வரன் இன்னொரு தலைமுறை; இப்படியாக நான்கைந்து தலைமுறைகளைக் காணக் கூடியதாக இருக்கின்றது. இது பெரு மகிழ்வைத் தருகின்றது. தலைவர் மாத்தளை கார்த்திகேசு எனது பேச்சுக்கு அடித்தளம் தந்தார். வரைவிலக்கணம் பற்றிச் சொன்னார். ஈழத்துச் சிறுகதைகளில் சித்திரிப்புத் தான் அதிகம். ஆனால், தரிசனம் இல்லை. சிறுகதைகளின் சாரத்தைத் தேட வேண்டும். தத்துவத்தை வெளிப்படுத்துகிறதா? என்பது கேள்விக் குறியாக இருக்கின்றது. எமது விமர்சனங்கள் ஆழமானவையா? அதுவும் கேள்விக்குறி தான். பட்டாசு கொளுத்திக் கூறும் முறைமை உண்டு. ஆனால், ஒப்பீடில்லை. இலக்கியம் இல்லையா? என்ற விவாதம் வரும்.

ஓரளவுக்கு உலகத்தை அறிந்து கொண்ட காலகட்டமிது. சிந்திக்க வேண்டும். ஆறாந்தலைமுறைக்காக ஐந்தாம் தலைமுறை ஈழத்து இலக்கியத்தை வளர்த்தெடுத்தது. இந்த 6ஆம் தலைமுறை எமது இலக்கியத்தை மறு மதிப்பீடு செய்ய வேண்டும். எழுத்தாளர் யார்? மனித குலம் பதுமையாகிக் கொண்டு வருகிறது. இதை இனங்கண்டு வெளிக்கொணர்வது எழுத்தாளர் பொறுப்பு. சம கால அரசியலும், திரைப்படமும் தமிழ் வாழ்வைப் புரட்டிப் போட்டுள்ளன. எழுத்தாளனை வித்தியாசமான பிராணியாக்கியுள்ள எண்ம (Digital) உலகில் இன்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்கிறோம். நீராவியுகம், மின்சார யுகம், கொம்பியூற்றர் யுகம் தாண்டி மனித வாழ்வு வந்துள்ளது. நுகர்ச்சிக் கலாசாரம் விளம்பரம் பெருக்கி வியாபாரத்தில் நிற்கும் கலாசாரம், வெகுஜன கலாசாரச் செல்நெறி கலாசாரத்தை மலினப்படுத்தும். பரத நாட்டியத்தின் ஜீவன் போகிறது. இதை தொலைக்காட்சியும் வானொலியும் செய்கின்றன. எண்ம (Digital) கலாசாரம் மூன்று உண்மைகளைக் கொன்று விட்டது. நவீனத்தைக் கொல்கிறது. இவைகளை முதலாளித்துவ யுகம் பின்னாலிருந்து செய்கிறது. வாழ்வைக் கொன்று போலி வாழ்வைக் காட்டும் தொடர்களைத் தொலைக்காட்சி ஒளிபரப்புகின்றது.

இன்றைய தமிழ்க் கலியாணங்களில் மணமகன் வட இந்தியச் சர்வாணி அணிகிறான். இவைகளுக்கு அகப்பட்டிருக்கும் இளந்தலைமுறைக்கும் இவைகள் தெரியும். கிண்டல், பகிடி, நக்கல்கள் மூலமாக அவர்கள் தப்ப முயல்கின்றார்கள். இங்கு தான் எழுத்தாளரின் தார்மீகக் கடமை இருக்கிறது. தொலைக்காட்சி, கணனி,Digital தடையாக நிற்கிறது. இவைகளால் எமது பாரம்பரியம் தடைப்படுகிறது. இளைய சந்ததியினர் சீரழிக்கப் படுகின்றனர். எமது எழுத்தாளர்கள் நிமிர வேண்டும். ஆரவாரங்களற்ற வாழ்வின் நுட்ப கீதங்களைக் கேட்க,எழுத்தாளனால் தான் முடியும். ஆழமான பார்வை, தத்துவ நோக்கு எழுத்தாளருக்குத் தேவை.

தோசைக்கு உழுந்தை ஊறப்போட வேண்டும். அப்பத்துக்கு மாவைப் புளிக்க வைக்க வேண்டும். விதை நெல்லைப் போன்றவன் எழுத்தாளன். எழுத்தாளனின் பொறுப்பு பன்மடங்கானது. உலகத் தரத்தோடு ஒப்பிடக் கூடிய படைப்புக்கள் எம்மிடமில்லை. இதற்கெல்லாம் தடையாக இருப்பது Digital எழுத்தாளன் தான். வாசகருக்குச் சொல்ல வேண்டியதை, ஊறப்போட்டு, பிழிந்து நல்ல மொழியில் சிறந்த சித்திரமாகப் படைக்க வேண்டும். கே.ஆர். டேவிட்டை 1976 இல் சந்தித்தேன். இங்கு பல நண்பர்களை சந்திக்கக் கிடைத்தமை மகிழ்ச்சி. சுய விமர்சனம் எழுத்தாளனை மேலும் வளர்க்கும். விமர்சனங்கள் தட்டிக் கொடுத்து உற்சாகப்படுத்துபவையாக அமைய வேண்டும்.

*உருவ நேர்த்தியாலும் உள்ளடக்கச் செழுமையாலும் திறனாய்வாளர்களால் விதந்து பாராட்டப்பட்ட,ஈழத்துப் புனைவியல் இலக்கியத்துக்கு நிமிர்வைத் தந்த கே.ஆர். டேவிட்டையும் அவரது பாரியாரையும் தகவத்தின் தலைவர் மாத்தளை கார்த்திகேசு பொன்னாடை போர்த்தி, பூ மாலை அணிவித்து கௌரவித்தார். ஆர்.விஜயகுமார் தம்பதி, மு.தயாபரன் தம்பதி, மது சூதனன் ஆகியோரும் மாலை அணிவித்து அவரது எழுத்துப் பணியை மேன்மைப்படுத்தினர்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*இஸ்லாமியச் சகோதரருக்கு இம்மாதம் ரமழான் நோன்பு மாதம். மத ஒருமைப்பாட்டைப் பிரசித்தப்படுத்தும் நோக்கோடு இஸ்லாமிய, மதச் சார்பற்ற நிறுவனங்களும் இப்தார் நிகழ்வுகளை ஏற்பாடு செய்து இஸ்லாமியச் சகோதரர்களை மனங் குளிர வைப்பதை நாமறிவோம்.*

*அத்தகைய நிகழ்வொன்றைத் தினக்குரல் நிறுவனமும் நடாத்தியது தெரிந்ததே. இச் சுவட்டைப் பின்பற்றி தகவமும் இப்பரிசளிப்பு நிகழ்வு நடந்து கொண்டிருக்கையில் மண்டபத்துக்கு அருகே அமைந்துள்ள விநோதன் மண்டபத்தில் - விழாவுக்கு வந்த இஸ்லாமிய இலக்கிய அபிமானிகள் - அன்றைய நோன்பைத் துறந்து தமது மார்க்கக் கடமையைச் செய்வதற்கு ஒழுங்குகள் செய்திருந்தது; தகவத்தின் இன, மதம் சாரா நிலைப்பாட்டை வெளிப்படுத்துவதாக அமைந்திருந்தது.*

**பாராட்டு : மூத்த எழுத்தாளர் கே.ஆர்.டேவிட்**
**பாராட்டுரை:**
**சட்டத்தரணி சோ.தேவராஜா**

இன்றைய தலைமுறை, கே.ஆர்.டேவிட்டை எப்படிப் பாராட்ட முடியும்? மனதை உறுத்துகிறது. நூற்றுக்கும் மேற்பட்ட கதைகளைப் படைத்திருக்கிறார். இன்னும் தொகுப்பாக்க முடியவில்லை. அவைகளை வெளியிட ஏதாவது செய்ய முடியுமா? இந்தியாவுக்கு அனுப்ப முடியாது. அது ஒரு வழிப்பாதையாகி விட்டது. எமது நூல்கள் எல்லா வீடுகளுக்கும் செல்ல வேண்டும். அப்போது தான் இத்தகைய பாராட்டுக்களைச் செய்ய வேண்டும். தென்னிந்தியாவின் கொத்தடிமைகளாக ஐம்பது அறுபது வருடங்களாகச் சீரழிகிறோம். மீள முடியுமென்பதற்கு உத்தரவாதமில்லை. அப்படியொரு மீட்சி கிடைப்பின் இப்படியான பாராட்டுதல்களுக்கு அர்த்தமிருக்கும். 'உங்கள் கதை எனக்குத் தாக்கத்தை ஏற்படுத்தியது.' ஓர் எழுத்தாளரைக் கண்டு இப்படி வாசகரொருவர் கூறுவது அங்கீகாரமாகும்.

இத்தகைய அங்கீகாரங்களைப் பெற்றவர் கே.ஆர்.டேவிட். அவரது 'ஒரு சோறு' என்ற சிறுகதை வீரகேசரியில் வந்தது. வியர்வையின் கொடுப்பனவைப் பெற்றவன் 'ஒரு சோறு' ஊசியால் குத்திச் சாப்பிடுகிறான். மிச்சத்தையும் குப்பை வாளிக்குள் வீசாமல் சாப்பிடுகிறான். நடத்த வேண்டிய தனது வகுப்பை நிறுத்தி இக்கதையை ஆசிரியர் மாணவருக்கு வாசித்துக் காட்டுகிறார். அத்தகைய தாக்கமான கதை. இன்றைய ஆடம்பரப் பிரியர்கள் எளிமையைக் கேலி செய்கின்றனர். குறட்டணியம் சொல்லும் அவல நிலையில் இது பழஞ்சோறு. நந்தி, சொக்கன் ஆகியவர்கள் டேவிட்டைப் புகழ்ந்துள்ளனர். 'கண்ணீருக்குள் இலக்கியக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருவூலங்களை வெளிப்படுத்துபவர்' எனச் சிலாகித்திருக்கின்றனர். பொதுவுடைமை சார்ந்த தடம் பதித்த எழுத்தாளர், மிகச் சிரமமாக வாழ்கிறார். சமூக ரீதியாக அவருக்குக் கை கொடுக்க வேண்டும். அவரது முதல் நாவல் 'வரலாறு அவளைத் தோற்று விட்டது', 'பாலைவனப் பயணிகள்' குறுநாவலைச் 'சிரித்திரன்' வெளியிட்டது.

2009இல் இவரது சிறுகதைகள் முதுமாணிப்பட்டத்துக்காக ஆய்வு செய்யப்பட்டன. 'மட்டுவிலான்' எனக் கூப்பிடப்பட்ட மாணவனுக்கு அதே பாடசாலையில் கல்வி அதிகாரியாக வரவேற்பு. 'தலை குனிந்து படித்தால் தலை நிமிரலாம்' என்ற கல்வியை ஊக்குவிக்கும் வரிகளைப் பாடசாலையில் பொறித்தவர். 2005 இல் 'மல்லிகை' அட்டையில் டேவிட்டின் படம் வெளியாகியது. 2010 இல் 'ஞானம்' அட்டைப்படக் கௌரவம் கிடைத்தது.

1997ஆம் ஆண்டின் சிறந்த சிறுகதையாகத் 'தனியொருவனுக்கு உணவில்லையெனில்' என்ற சிறுகதையைத் தகவம் தெரிவு செய்தது. அதே தகவம் இன்று அவரைக் கௌரவிக்கின்றது. அவருக்கு வயது 65. திருமணம் 26 வயதில் நடந்தது. மூதூர், நிலாவெளி போன்ற இடங்களில் கடமை புரிந்தவர். 'முரசொலி' என்ற யாழ்ப்பாணப் பத்திரிகையிலும் தொழில் செய்தார். உருவாக்கியது மட்டுவில் மோகனதாஸ் சனசமூக நிலையம். கே. டானியல், நீர்வை பொன்னையனோடு நெருக்கமானவர். கோட்டோவியங்களை வரையக் கூடியவர். மண்டுவிலின் தியாகி, இரத்தினத்தைக் கோட்டோவியமாக்கி இருக்கிறார். சிறு, சிறு அசைவுகள் ஏற்படுத்தும் உந்துதல்களாலும் எழுதுபவர்கள் ஈழத்து எழுத்தாளர்கள். புத்தகப் பண்பாட்டை மேலோங்கச் செய்ய வேண்டும்.

**ஏற்புரை:**
**மூத்த எழுத்தாளர் கே.ஆர்.டேவிட்**

ஒரு மனிதன் தான் சந்திப்பவைகளையும், பார்ப்பவைகளையும் உரை மூலமும், எழுத்து மூலமும் உண்டாக்கும் உருவகத்தை சமூகத்துக்குக் கொடுப்பதே இலக்கியம். எழுத்தாளனின் அனுபவங்களுக்கும் மேலாக எழுத்துக்கு மூல காரணமாக அமைவது மொழி. தேசிய, சர்வதேச ஒத்திசைவு அமைய மொழி உதவும். ஆடம்பரங்களை விரும்ப மாட்டேன். தயாபரன், மாத்தளை கார்த்திகேசு கேட்ட போது இக் கௌரவத்தை ஏற்கச் சம்மதித்தேன். தகவம் பற்றிய எனது மனப்பதிவுகளுக் கூடாக இதை ஏற்றேன். சமுதாயத்தைப் பார்த்து செய்தி கேட்டு, உருவம் கொடுக்கும் எழுத்தாளர் நிலையில், சமூக அடிப்படையில் சிந்தித்துப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூமியைப் பிரித்து இரண்டாக்கும் நிலையில் நின்று தகவம் என்னை அழைக்கவில்லை.

மூத்தோர் கௌரவம், இளையோர் ஊக்குவிப்பு இப்படியாக வரண்ட சூழ்நிலையிலும் தகவம் நேர்மையாகச் செய்கிறது. தகவம் தந்த வ.இராசையா மரணித்த போது வெளியிடப்பட்ட 'அரவிந்தம்' அஞ்சலி இதழ் கட்டுரையில் 'இக்கால வரையில் தகவத்தின் முடிவுகள் மறுதலிக்கப்பட்டதில்லை' எனப் பேராசிரியர் கா.சிவத்தம்பி அபிப்பிராயம் கூறியிருக்கிறார். தகவம் உச்ச நீதிமன்றம். நடுநிலை, நேர்மை, பண்பு என்பவற்றை இன்றும் பேணி வரும் தயாபரன், வசந்தி இலக்கியத்துக் கான செழுமையான எல்லையை உருவாக்க வேண்டும். தகவம் உத்தமமாகச் செயற்படுவதால் இக்கௌரவத்தை ஏற்றேன். ஐந்து வருட சிறுகதைத் தேர்வில் எனது சிறுகதைகளை தமிழ்ச்சங்கத்தில் பேராசிரியர் சபா ஜெயராசா ஆய்வு செய்தார். இலக்கியத்தின் பிதாமகன் டொமினிக் ஜீவா 'மல்லிகை' அட்டையில் என்னைக் கௌரவித்தார். 'ஞானம்' அட்டையில் என் படத்தை வெளியிட்டது. இன்று தகவத்தின் கௌரவம் கிடைத்துள்ளது.

**'தகவம் பரிசுக்கதைகள் ஒரு பார்வை'**
**கோகிலா மகேந்திரன்**
**(எழுத்தாளர், உளவள ஆலோசகர்)**

பரிசு பெற்றவர்களில் சிலர் எனக்கு அறிமுகமானவர்கள். வேறு சிலரது முகத்தைக் கூட பார்த்திருக்க மாட்டேன். இருந்தும், எனது பார்வையில் எவ்விதமான பாரபட்சமுமில்லை. நல்ல சிறுகதைக்கு வரைவிலக்கணம் கூறுவது மிகக் கடினம். அகம் சார்ந்தது கலை, இலக்கியம். மேற்குப் பகுதியிலிருந்து வந்த இலக்கிய வடிவம் சிறுகதை.

நல்ல சிறுகதை சிக்கல் தன்மை குறைந்ததாக இருக்கும். உருவம், உள்ளடக்கம் முக்கியமானது. ஆரம்பமும் முடிவும் வாசகரைக் கவரக் கூடியதாக இருக்க வேண்டும். வாசகனுக்கு ஒழுக்க விழுமியங்களை அதிகமாக ஊட்ட விரும்புவது, கேள்விகளை எழுப்பும், கலைத்துவம், ஆக்கப்பண்புகளை முக்கியப்படுத்துவது நல்ல சிறுகதையாகும். தகவம் நல்ல கதைகளையே தெரிந்திருப்பது சந்தோஷமாக இருக்கின்றது. 2009 முதலாம் காலாண்டில் சிறப்புப் பாராட்டைப் பெற்றிருக்கும் கதையான 'கசிந்துருகிக் கண்ணீர் மல்கி' என்ற கதையை இந்துமதி எழுதியுள்ளார். இவர் தாமரைச் செல்வி என அறியப்படுகிறார். வன்னிப்போர் சம்பந்தமான கதை, மனதைப் பிசைய வைக்கின்றது. ஆவணக் கதை. அழுத்தாமல் சொல்லி இருப்பது அற்புதம். தெளிவானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதே காலாண்டில் முதலாம் பரிசைப் பெற்ற கதை 'மரண அறிவித்தல்' யோகேஸ்வரி சிவப்பிரகாசம் எழுதியது. முதுமை பற்றிப் பேசுகிறது. தன்மை நிலையில் நின்று சொல்கிறார். நேர்த்தியானது. நம்பகமிருக்கிற மாதிரியான எண்ணம் வருகிறது. கதை வேகமாகச் செல்கிறது. அமைதியாகவிருந்து இலக்கியப் பணி செய்பவர் யோகேஸ்வரி. 2 ஆவது காலாண்டில் சிறப்புப் பாராட்டைப் பெறுவது புலோலியூர் ஆ.இரத்தினவேலோனின் 'தாச்சிச் சட்டி'. படைப்பாளி எனது நெருக்கமான நண்பர். இப்போதெல்லாம் இவர் Autography (சுயசரிதை) Style இல் வித்தியாசமான பாணியில் கதை எழுதுகிறார். அநுபவித்த உண்மையான சம்பவங்களை எழுதுகிறார். வழக்கமான வடமராட்சிப் பேச்சு மொழியில் கதை நகர்கிறது. பாவிக்காத சொற்கள் வருவது ஒரு நன்மையாகும். வசனங்கள் ஒன்றுக்கு மேற்பட்ட அர்த்தங்களைத் தருகின்றன. இதே காலாண்டில் முதலாம் பரிசைப் பெற்ற கதை புலம்பெயர் எழுத்தாளர் டென்மார்க் வீ.ஜீவகுமாரனின் 'கிராமத்துப் பெரிய வீட்டுக்காரி'. என்னைக் கவர்ந்த கதை இது. காதல் கதை. அற்புதமான முறையில் சொல்லப்படுகிறது. பாத்திர வார்ப்பால் சிறப்புப் பெற்றது. மேகலா அற்புதமான வார்ப்பு. மனைவியை இழந்தவருக்கு நடப்பவைகளைச் சொல்கிறது. அன்பு பணத்தை விடப் பெரிதென்பதை வெளிக்கொணருகிறது. வெளிநாட்டு வாழ்க்கை அழகாகச் சித்திரிக்கப் பட்டுள்ளது. ஆத்மார்த்தமான நட்பு குறித்துப் பேசுகிறது. ஜீவகுமாரன் வாழ்க. 3 ஆம் ஆண்டில் சிறப்புப் பாராட்டைப் பெறும் கதை ச.முருகானந்தனின் 'சுடலை ஞானம்' சாதி வேற்றுமை குறித்தான செய்தியுண்டு. முடிவை அநுபவித்து எழுதியது போலிருக்கிறது. பிரிந்து நின்று கெட்டழிந்தோம். இனியாவது ஒன்று சேர வேண்டும் என்ற முடிவைப் பேசுகிறது. பிரசாரமாக இருக்கிறது. யோசிக்கத் தோன்றுகின்றது. இதே காலாண்டில் மேலுமொரு சிறப்புப் பாராட்டைப் பெறும் கதை 'முதலாவது அத்தியாயம் நிறைவு பெறுகிறது'. இதை எழுதியவர் கே.ஆர்.டேவிட். அவரோடு நெருங்கிப் பழகியிருக்கிறேன். இருவரும் உதவிக் கல்விப் பணிப்பாளராக இருந்துள்ளோம். அவர் கதை சொல்லும் முறையில் அழகு இருக்கிறது. கலைத்துவச் சிறப்பும் உண்டு. இயற்கை வர்ணிப்பும் உண்டு. இதே காலாண்டில் முதலாம் பரிசைப் பெறும் கதை 'குளம்' சுதர்ம மகாராஜன் எழுதியது. காணாமல் போனவர் பற்றிய கதை, சிறப்பான உத்தி. ஆழமாகக் கடுமையாகக் கருப்பொருளைத் தொடவில்லை.

4ஆவது காலாண்டில் முதலாம் பரிசைப் பெறும் கதை 'கோணல் சித்திரங்கள்' பதுளை சேனாதிராஜா எழுதியது. உலகம் ஒழுங்கில்லை என்ற கருத்தை வெளிப்படுத்துகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்ல பணியைத் தகவம் செய்துள்ளது. நல்ல சிறுகதைகளைத் தெரிவு செய்துள்ளது. இரசித்து வாசித்தேன். நல்ல கதைகளைப் பற்றிப் பேசுவது இனிமை. நெருக்கடி நிறைந்த இச்சூழலில் தமிழ் மக்கள் விரக்தியோடு வாழ்கின்றனர். இப்பணி மூலமாக அவர்களை ஊக்குவிக்க முடியும். பாராட்டும் போது பாராட்டைப் பெறுபவர் மேலும் உயர முடியும்.

*2009 இல் சிறுகதை படைத்து நான்கு காலாண்டுகளிலும் சிறப்புத் தெரிவைப் பெற்றோருக்கும், 1ஆம், 2ஆம், 3ஆம் நிலையை எட்டிய படைப்பாளிகளுக்கும் தகவத்தின் ஆத்மாவாக இருந்து இலக்கியப் பணி செய்து, அதை நெறிப்படுத்திய இலக்கியப் பெரியார் அமரர் வ.இராசையா நினைவுக் கேடயமும் சான்றிதழ்களும் காசோலைப் பரிசும் வழங்கப்பட்டன. நேரிலும் பிரதிநிதிகள் மூலமாகவும் பரிசுக்குரியவர்கள் பரிசுகளைப் பெற்றனர்.*

*நன்றியுரையை 'தகவம்' மு. தயாபரன் ஆற்றினார்.*

*'தகவம்' வசந்தி தயாபரன் தமிழ் வாழ்த்துப்பாடி நிகழ்வை நிறைவு செய்தார்.*

- 03/04.09.2010

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 19

## இதயராசனின் "முரண்பாடுகள்"

தேசிய கலை இலக்கியப் பேரவையின் 111ஆவது வெளியீடான இதயராசனின் "முரண்பாடுகள்" சிறுகதைத் தொகுப்பின் வெளியீட்டு விழா 21.08.2010 ஆம் திகதி கொழும்பு - 06, காலி வீதியில் அமைந்துள்ள பேரவையின் தலைமைப் பணிமனை கைலாசபதி கேட்போர் கூடத்தில் மண்டபம் நிறைந்த இலக்கிய ஆர்வலர் மத்தியில் நடைபெற்றது. பேராசிரியர் சி.சிவசேகரம் தலைமை வகித்தார்.

**தொடக்கவுரை:**
**சட்டத்தரணி சோ.தேவராஜா**

இதுவரை இதயராசன் இரு நூல்களை வெளியிட்டுள்ளார். முதல் நூல் "மீறல்கள்" கவிதை நூல். இன்று "முரண்பாடுகள்" சிறுகதைகள் நூல் வெளியிடப்படுகிறது. சமூக, கிராமிய அக்கறையுள்ள எழுத்தாளர் புத்தகப் பண்பாடு பரவ உழைப்பவர். எவ்வளவு நூல்களையும் வெளியிடலாம். ஆனால், அவைகளை விநியோகித்துப் பயன் கொள்ள வைப்பது தான் பெரும் சிரமமான காரியம். ஈழத்து நூல்கள் தமிழ்நாடு செல்ல முடியாது. ஆனால், அங்கிருந்து வந்து இங்கு குவிகின்றன. ஈழத்து நூல்களுக்கு வரவேற்பில் சவால்கள் இருக்கின்றன. இங்கு எழுத்தாளர்களே வெளியீட்டாளர்களாகவும், விநியோகஸ்தர்களாகவும் இருக்கும் நிலை இருக்கிறது. இச்சிரமங்களைத் தகர்க்க முயற்சிக்கிறோம். எமது பேரவை கடந்த மாதம் வவுனியா, மட்டக்களப்பு, கொழும்பு, மாத்தளை ஆகிய நகரங்களில் புத்தகக் கண்காட்சிகளை நடாத்தியது. சாதாரண மக்கள் இலங்கை நூல்களில் ஆர்வம் காட்டுவதை அறிந்து கொள்ள முடிந்தது. ஆனால் இத்தகையோருக்கு இவைகள் கிடைப்பது கஷ்டமாக இருக்கின்றது. இந்த வியடத்தில் இலங்கைத் தமிழ் நூல் வெளியீட்டாளர்கள் அனைவரும் ஒன்று சேர வேண்டும். இன்றைய சமூகம் சமூகமாக இல்லை. பண்பாடு கேள்விக் குறியாகப் போய்க் கொண்டிருக்கிறது. திருப்தியீனங்கள், மோதல்கள் ஏற்படுகின்றன. இவைகளை உடைக்க ஒன்றுபடுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தலைமையுரை:**
**பேராசிரியர் சி.சிவசேகரம்**

இந்நூலின் ஒரு பகுதியை ஏற்கனவே சஞ்சிகைகளிலும், வாசித்தேன். பின்னர் நூலின் முன்னுரைக்காகவும், வாசித்தேன். எம்மை நாம் திரும்பத் திரும்ப இந்தியாவோடு தான் ஒப்பிட்டுக் கொண்டிருக்கிறோம். எழுத்து வேறு, சமுதாயம் வேறு, இந்திய எழுத்து வணிகமயமானது கனதியானவையல்ல. இங்கு வணிக நோக்கம் இல்லை, தொடர்ச்சியாக மல்லிகை சஞ்சிகை வந்து கொண்டிருக்கிறது. ஏனையவற்றைக் கொண்டு வருவதில் சிரமம் இருக்கிறது. இப்போது வாசிப்புப் பழக்கம் குறைந்துவிட்டது. தமிழ் நூல்களை விலை கொடுத்து வாங்குவோரும் குறைவு. தமிழகச் சஞ்சிகைகளில் தொடர்கதைகள் வருகின்றன. இலங்கையில் அப்படியல்ல. இலங்கையில் நாவல் வாய்ப்பு இல்லை. அவைகளைத் தேடி வாசிப்போரும் குறைவு.

நன்கு அறியப்பட்ட பிரபலமானவர்களுடையவையைத்தான் வாங்குகின்றனர். சிறுகதையில் சொல்லக்கூடிய விடயங்களை நாவலில் சொல்ல முடியாது. இந்தியாவில் கவிதை வாசிப்பு மரபு விழுந்துவிட்டது. இங்கு தரமான பதிப்பாளர்கள் உண்டு. எமது எழுத்தாளர்கள் இலங்கை வாசகருக்காக எழுதுகின்றனர். புலம் பெயர்ந்த எழுத்தாளர்கள் தமது நூல்களை இலங்கையில் பதிப்பித்து வெளியிட வேண்டும். தமிழகத்தில் பதிப்பித்தல் மலிவாதானதாக இருக்கலாம். இங்கு பதிப்பதன் மூலம் இங்குள்ள பதிப்பகங்களை ஊக்குவிக்க முடியும். தமிழ் நூல்களைத் தடையின்றி இங்கு கொண்டுவர முடியும். ஆனால், எமது பதிப்புகள் அங்கு போவதற்கு முடியாது இந்தியத் தேசிய மொழிகளில் வெளியாகும் பிறநாட்டுப் பதிப்புகள் அங்கு செல்ல முடியாது. இது தவறு. பாதிப்பானது. 1970 களில் இலங்கையில் இந்தியத் தமிழேடுகள் கொண்டு வருவதற்கு அரசு கட்டுப்பாடு விதித்திருந்தது. அக்காலத்தில் ஈழத்து நூல்கள் சஞ்சிகைகளுக்கு இங்கு கிராக்கி இருந்தது. அத்தடை அப்போ இல்லாதிருப்பின் மல்லிகை, சிரித்திரன் போன்ற சஞ்சிகைகள் எமக்குக் கிடைத்திருக்கா. இயல்பு வாழ்க்கையைச் சினிமா சித்திரிக்க வேண்டும். சிங்களப் படங்களில் அத்தகைய தன்மை இருக்கின்றது. எமது கலை, இலக்கியப் படைப்புகளை இந்தியாவோடு ஒப்பிடும் பழக்கத்தை நிறுத்த வேண்டும்.

ஈழத்துச்சிறுகதைகளை "கலைமகள்" சஞ்சிகையில் வெளியிட கி.வா.ஜகந்நாதன் அக்கறை காட்டினார். "தாமரை" சஞ்சிகையும் அதைச் செய்தது. எமது பிரதேச மொழி அவர்களுக்குப் புரியக் கூடியதானதாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லை. அக்கிரகாரத்துப் பாஷை அவர்களுக்குப் புரியம். உயர் வகுப்பாரின் பாஷையைப் புரிந்து கொள்வர். தலித் இலக்கியம் தமிழிலக்கியத்தில் தோன்றிய பின்னர்தான் பிரதேச மொழிகள் இலக்கியத்தில் செழிப்படைந்தன. செல்வாக்கைப் பெற்றன. எமது எழுத்தாளர்கள் தைரியமாகப் பிரதேச மொழியைக் கையாளுகின்றனர். இந்நூலாசிரியர் இதயராசன் எந்த எழுத்தாளரையும் பின்பற்றவில்லை. சாதாரண மொழிப் பேச்சையே நூலில் காண முடிகின்றது. சிறுகதை புனைவு அல்ல. செறிவு படுத்துவதே புனைவு. நேரில் சந்தித்த மனிதர்களை இதயராசன் எழுதுகிறார். வாசகரை மாய உலகுக்குக் கொண்டு போய் அதிலிருந்து மீட்டெடுப்பதல்லச் சிறுகதை. நவீன குறுகிய எழுத்து வடிவம் தான் சிறுகதை.

இத்தொகுப்பின் கதைகளில் குறுகிய இனவாதம் தொட்டுக் காட்டப்பட்டுள்ளது. உலகின் நல்லவனென்றும் கெட்டவனென்றும் எவரும் கிடையாது. தனக்குப் பிடித்தமான மனிதரைப் பற்றி இதயராசன் பேசியிருக்கிறார். வாழ்ந்த பிரதேச மக்களைப் பற்றியும் தன்னைப் பாதித்த சம்பவங்களைத் தெட்டத் தெளிவாகவும் சொல்லியிருக்கிறார். இப்படியான அருமையான சிறுகதைகள் மிக அரிதாகவே எமக்குக் கிடைக்கின்றன. தமிழ் நாட்டில் பின் நவீனத்துவம் உண்டு. எதுவும் வரட்டும், எல்லாவற்றையும் நிராகரித்தால் நல்ல எழுத்தாளர் வரவை நிராகரிப்போம். இழப்போம். பாடசாலைகளில் இலக்கியம் ஊக்குவிக்கப்பட வேண்டும். இலக்கியம் படிக்கத் தூண்டும், ஆசிரியருக்கும் இப்போ கண்டனங்கள் வருகின்றன. இதனால் மாணவரின் சோதனைப் படிப்புப் பாதிக்கப்படுமென்று. இந்நிலையை மாற்ற வேண்டும்.

**வாழ்த்துரைகள்:**

**திறனாய்வாளர் தம்பு சிவா**

கொழும்புக்கு வந்த பின்னர் தான் இதயராசனை அறிந்து கொண்டேன். "முரண்பாடுகள்" சிறுகதைத் தொகுப்பில் கே.ஆர்.டேவிட் கொடுத்துள்ள அணிந்துரை மூலமாகவும் "ஓலை" சஞ்சிகையில் வாசித்தவைகள் மூலமாகவும் மேலும் அவரை அறிந்து கொண்டேன். நவீன இலக்கியத்தை வளப்படுத்தியது ஆங்கில மொழியே. தமிழ் மொழிக்கு இருபதாம் நூற்றாண்டிலேயே தான் நவீன இலக்கியம் வந்தது. போராட்ட உணர்வுகள், சமுதாய மாற்றம் என்பவற்றை எழுதுவோர் மக்களால் மதிக்கப்படுகின்றனர். மார்க்சிம் கோர்க்கி, லூசூன், மாவோ போன்றோர் மிகவும் முக்கியமானவர்கள். புதுமைப்பித்தனின் பெரும்பாலான கதைகள் சமுதாயத்தைப் பிரதிபலிப்பன. மனதை ரணமாக உறுத்திய சம்பவக் கதைகளை இதயராசன் இலகுமொழி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடையில் உலாவவிட்டுள்ளார். புடம் போட்ட எழுத்து. மனித உறவுகளைப் பின்தங்கிய மக்களோடு ஒப்பு நோக்குவது "பத்து சதம்" கதை. இரு ஆண்டுகளுக்கு முன் "தாயகம்" சஞ்சிகையில் வெளியானது. "வைரவி ஆச்சி" வாழ்வின் அவல நிலைகளை எடுத்துக் காட்டுகின்றது. "செய்வினை" மூட நம்பிக்கைகளைத் தொட்டுச் செல்கின்றது."வெள்ளைச்சி" யில் வரும் பசு, பையன் முக்கியமானவை. சிறுகதைகளில் சமுதாயத்தைப் படம் பிடித்துக் கண்ணாடியாகக் காட்டுவதில் இதயராசன் வெற்றி கண்டுள்ளார்.

## மல்லிகை டொமினிக் ஜீவா

இக்கூட்டத்தில் காணப்படும் முகங்கள் சந்தோசத்தைத் தருகின்றன. இதுவரை பார்க்காத முகங்கள். சகல இலக்கியக் கூட்டங்களுக்கும் இப்படித்தான் மக்கள் வர வேண்டும். இதயராசா என்றும் இதயராசன் என்றும் படைப்புகளில் படைப்பாளியின் பெயர் பதிவாகியிருப்பதைப் பார்த்திருக்கின்றேன். இது மயக்கத்தைத் தருகிறது. மேமன்கவி இது நமது இதயராசா தான் என்றார். இரண்டும் ஒருவரே என்றார். யாழ் கோட்டையில் இருந்து நகரத்தை நோக்கி செல்கள் ஏவப்பட்ட அந்த நாசகார நாட்களில் ஒருநாள் பூபாலசிங்கம் புத்தகசாலைக்கு முன்னர் நின்றேன். அப்போ ஒருவர் கைதட்டிக் கூப்பிட்டார். தபாலுறையொன்றைத் தந்தார். பிரித்துப் பார்த்தேன். அதற்குள் இந்த இதயராசனின் அன்பளிப்பு 200 ரூபா இருந்தது. அந்த இக்கட்டான சமயத்தில் அப்பணம் கிடைத்தது என்றும் மறக்க முடியாதது! அதுதான் இதயராசன். அவரை வாழ்த்த விரும்புகிறேன். ஈழ நாட்டவன் இன்று 52 தேசங்களில் பரந்து வாழ்கிறான். தமிழ் நாட்டார் இவர்களது மார்க்கட்டைப் பிடிக்க இரத்தக் கண்ணீர் வடிக்கின்றனர். ஆனால் இங்கு வெளியாகும் சஞ்சிகைகளுக்குத் தமிழ் நாட்டிலிருந்து ஒரு நாலு சந்தா இன்னும் இல்லை. அவர்களது ஏடுகளை வரிசையில் நின்று வாங்கிப் படிக்கிறோம். எமது நூல்களுக்குத் தமிழ் நாட்டில் மார்க்கட் இல்லை. கோவையில் செம்மொழி மகாநாட்டை நடத்தினர். தமிழ் உலக மொழி என இந்தியா சட்டம் இயற்ற வேண்டும். உங்களில் எத்தனை பேர் இலங்கை நூல்களை வாங்குகிறீர்கள். எமது நூல்களை வாங்கி வீட்டின் இறப்புகளுக்குள்ளாகிலும் செருகி வையுங்கள்! நிச்சயமாக அவைகளை எதிர்காலப் பல்கலைக்கழக மாணவன் தேடுவான்.

*நூல் வெளியீட்டில் முதல் பிரதியை றம்சா அசோசியேட்ஸ் தொழிலதிபர் வி.பாலச்சந்திரன், பேராசிரியர் சி.சிவசேகரத்திடமிருந்து பெற்றார். சிறப்புப் பிரதிகளை டொமினிக் ஜீவா, தம்பு சிவா, முனைவர் மா. கருணாநிதி, ஏ.எம்.அஹமட், வி.பாலச்சந்திரன் ஆகியோர் கலை, இலக்கியப் பிரமுகர்கள், ஆர்வலர்கள் ஆகியோருக்கு வழங்கினர். கௌரவப்பிரதிகளும் வழங்கப்பட்டன.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஆய்வுரை:**
**கலாநிதி மா. கருணாநிதி**

தொகுதியின் 15 கதைகளையும் வாசித்துப் பொருத்தப்பாட்டைப் பார்த்தேன். ஐந்தாவது கதையான "முரண்பாடுகள்" தொகுதியின் தலைப்பாக்கப் பட்டுள்ளது. சகல கதைகளுக்கும் எடுத்துக்காட்டாக இக்கதை விளங்குகிறது. வாசிப்போரை வழிநடத்தும் போக்கு இருக்கிறது. முரண்பாடுகளுக்கு இன்று பஞ்சமில்லை. அவைகளைச் சிந்திக்காமல் வாழ்கிறோம். அரசியல், சமூகம், பொருளாதார நிலைகளை மக்கள் எப்படி அறிகிறார்கள்? முரண்பாடுகள், பெரு முரண், நுண் முரண் என வகைப்படுத்தப்படுகின்றன. பெரு முரணை சிந்திக்காமல் விட்டுவிட முடியாது. இலங்கையில் முரண்பாடு 35 வருடங்களாக உள்ளேயும் வெளியேயும் உண்டு.

இன முரண்பாடு எப்படியான தாக்கத்தை ஏற்படுத்தியதென்பதை இதயராசனின் கதைகள் பேசுகின்றன. 35 ஆண்டுகளாக இதயராசன் கண்டு அனுபவித்து, சிந்தித்து, வழிமுறைகளைக் கூறுகிறார். 1970 இலிருந்து இன்று வரைக்கான அவரது சிறுகதை வளர்ச்சியைத் தொகுத்துக் காட்டுகின்றது. "பத்துசதம்" உட்படுத்தும் பையனின் முரண்பாடு உள் முரண்பாடு. "நம்பிக்கை" இரு நண்பர்களுக்குள் மறைப்பு ஏற்படுத்திய முரண்பாடு. இதில் உளவியல் அணுகுமுறை உண்டு. "ஜெயா" போன்ற கதைகளைச் சிங்களத்தில் மொழி பெயர்த்து வெளியிட்டால் மக்களது மனங்களை அறிய உதவும். வன்னிப் பிரதேச மக்கள் மொழி! கதைகளில் காணப்படுகிறது. அனுபவம், புவியியல் நிலை, தொழில் கோபம் கதைகள் ஊடாக வந்துள்ளன. மொழி நடையில் மண்ணின் இயல்பை இலக்கியமாகப் படைக்க வேண்டும். பொருத்தமான மொழி நடை மிக ஆழமாகவும், தெளிவாகவும் இருக்கிறது. கவர்ச்சியுமுண்டு. நாசூக்காகச் சொல்லும் திறன் ஆசிரியருக்குண்டு. மகிழ்ச்சியில் ஆழ்த்தும் கதைகள்.

**கருத்துரைகள்:**
**ஏ.எம்.அஹமட்**
**(பிரதிக் கல்விப்பணிப்பாளர்)**

வாடாத "மல்லிகை" ஆசிரியர் பேசியபோது அசந்துவிட்டேன். மீறல்கள், முரண்பாடுகள் மிக மலிவாக நடந்து கொண்டிருக்கின்றன. தான் வாழ்ந்த இடத்தைப் பிரதிநிதித்துவப்படுத்திய இலக்கிய சக்தி இதயராசா. எதிர்கால சந்ததிக்குப் பாடமாக ஒப்புவிக்கலாம். ஊக்கப்படுத்த வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவீனத்துவம், பின் நவீனத்துவம் எனச் சொல்லி காளான்களாக எழுத்தாளர்கள் தோன்றுகின்றனர். இலக்கிய இரசனையைத் தழும்ப வைக்காத படைப்புகள் தோன்ற வேண்டும். புதுக்கவிதையில் தமிழில்லை. இது தமிழின் மதிப்பைக் கெடுக்கும். ஆனால் அந்த நிலையில், இதயராசா இல்லை. பாரம்பரியத்தில் நவீனத்துவத்தைப் புகுத்த முடியாது. தமிழ்ச் சொற்களைக் கண்டபடி பாவிப்பது அழகல்ல. நூலின் "ஜெயா" என்ற கதை ஆங்கிலத்திலும் வரவேண்டும். இது தமிழ்ச் சிறுகதைக்கொரு முதுசொம். வெறுமனே எழுதவில்லை. இது சான்று. ஆவணத்தைச் சமர்ப்பித்துள்ளார். ஒப்பீட்டில் மூன்று அம்சங்களைக் கவனிக்க வேண்டும். கதை அம்சம், கதை அடைவு, மாற்றம்தான் அம்மூன்றும். கதைகள் பல வடிவங்களில், முறைமைகளில் படைக்கப்படுகின்றன. ஆனால் செரிமானம் வித்தியாசமானது. ஒவ்வொரு வாசகரும், ஒவ்வொரு அர்த்தத்தில் வாசிப்பர். இக்கதைகளில் பல படிப்பினைகள் உண்டு.

கதையொன்றில் இதயராசா இருக்கிறார். 1980க்கு பிந்தி 2008 க்கு உட்பட்ட காலத்துள், அனைத்தும் போருக்கும் பின்னரான காலத்தில் வெளியிடப்படுகிறது. மனிதம் தான் எந்தளவுக்குச் சீரழிக்கப்பட்டுள்ளது. அதை சீரழிக்கக் கூடாது. அதனால்தான் முரண்பாடுகள் தோன்றுகின்றன. இதயராசனின் முயற்சியைப் பாராட்ட வேண்டும். சமுதாய சௌஜன்யத்துக்கு இந்நூல் உதவும்.

## சபா. தனுஜன் (இலக்கிய விமர்சகர்)

நூலை வாசிக்கக் களிப்பு ஏற்பட்டது. முதல் வாசித்த கதை "ஜெயா". வரலாற்றைத் தந்தது. ஈழ நூல்களில் குறைபாடுகள் உண்டு. இந்நூல் சிறந்தது. பின்னட்டை பல விளக்கங்களைத் தருகின்றது. ஆசிரியர் மண்ணுக்குள் தோன்றுகிறார். இது சற்று மாற்றமான போக்கு, தற்போது பெரும்பாலும் நூலாசிரியர்களை பின்னட்டையின் மேல் பக்கத்திலேயே பதிப்பர். எழுத்துப் பிழைகள் குறைவாகவே உள்ளன. எந்த ஆக்கமும் முரண்பாட்டையே காட்டும். பொருத்தமான தலைப்பு. மக்களைக் காப்பதற்கு வந்தவர்கள் அவர்களை அழிப்பதே, கொல்வதே, மிகப் பாரிய முரண்பாடு. சமூக, உள, யுத்த முரண்பாடுகள் இந்நூலிலுண்டு. இங்கே சம்பவங்கள் ஒப்புவிக்கப்படுகின்றன. தீர்வு இல்லை. இறுதிச் சம்பவத்தைத் தொட்டு முன் செல்லும் கதை கூறும் உத்தி, எதிர்கால இளம் சந்ததிக்கும் உதவ கூடிய நூல். முன்பு பார்க்காதவைகள் இருக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லமொழி நடை "நம்பிக்கை". நீண்ட காலப் பாய்ச்சலின் தொடர்ச்சி அறுந்து போகும் நிலையுண்டு. "தியாகம்" தலைப்போடு பொருந்தவில்லை. "வெள்ளைச்சி" யில் பாத்திர முரண்பாடு உண்டு. வன்னி மண் வாசனைச் சொற்களில் தனித்துவம் இல்லை.

**ஏற்புரை:**

**நூலாசிரியர் இதயராசன்**

எனது எண்ணங்கள், நோக்கங்கள், சிந்தனைகள் இந்நூலிலுண்டு. "முருகண்டியிலிருந்து முள்ளிவாய்க்கால் வரை" எனத் தலைப்பிட முதலில் எண்ணினேன். பின்னர் "முரண்பாடுகள்" என மாற்றினேன்.

ஆரம்பத்தில் பாடசாலையில் கட்டுரைகளை எழுதினேன். ஆதாரங்களைத் தேடி எடுத்துத்தான் எழுதினேன். எட்டாம் வகுப்பில் நான் எழுதியவை ஏ.எல்.வகுப்பில் வாசித்துக் காட்டப்பட்டன. தரமான அதிக கவிதைகளை எழுதினேன். "புதுவசந்தம்" சஞ்சிகையில் கவிதை ஒன்றை வெளியிட்டேன். அதன் மையக் கரு சிறுகதைக்கு ஏற்றது. அதை வைத்துச் சிறுகதை எழுதென நண்பர்கள் சொன்னார்கள். அதன் பின்னரே சிறுகதைகளை எழுதினேன். மிகவும் எளிதானமொழி நடையில் வாசகருக்குக் கொடுக்க முயற்சித்திருக்கிறேன். கிளிநொச்சிப் பிரதேசத்தில் சிறுவனாக இருந்தபோது வாழ்ந்தேன். அவைகளை மையமாக வைத்தே கதை எழுதினேன். நூல் வெளியீடொன்றில் அனைவரும் நூலை வாங்குவது நடக்காத காரியம். ஆனால் அதின்று நடந்துள்ளது. ஒவ்வொருவர் கையிலும் நூலைக் காண முடிகின்றது. சந்தோசமாக உள்ளது.

- 20.09.2010

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 20

## சுதாராஜ் நூல்: "உயிர்க் கசிவு"

தமிழ் வாசகரைச் சிரிக்கவும் உரத்துச் சிந்திக்கவும் வைத்த அமரர் "சிரித்திரன்" சுந்தர் தமிழுக்குத் தந்த சிறுகதைப்படைப்பாளியே சுதாராஜ். இவரது 60 சிறுகதைகளை அடக்கிய பாரிய சிறுகதைத் தொகுப்பான "உயிர்க்கசிவு" 26.09.2010ஆம் திகதி கொழும்பு 06 காலி வீதியிலமைந்துள்ள தேசிய கலை இலக்கியப் பேரவைத் தலைமைப் பணிமனையின் கைலாசபதி கேட்போர் கூடத்தில் பெருந்திரளான இலக்கிய அபிமானிகள், முன்னிலையில் வெளியிடப்பட்டு, நூலின் சிறுகதைகள் சம்பந்தமான கருத்தாடல்களும் இடம்பெற்றன. சட்டத்தரணி சோ.தேவராஜா (பொதுச் செயலர், தேசிய கலை இலக்கியப் பேரவை) தலைமை வகித்தார்.

**வரவேற்புரை:**
**தேனுகா**

750 பக்க நூலை வாசிப்பது சிரமமாக இருக்குமெனத்தான் நினைத்தேன். முழுதையும் வாசித்து முடித்த பின் தொலைக்காட்சி, பத்திரிகை என்பவற்றைத் தரிசித்த மகிழ்ச்சி ஏற்பட்டது. பெரிய புத்தகமொன்றைத் தான் படிக்க வேண்டுமென்றே தெளிவைப் பெற்றேன். புத்தகங்களோடு வாழ்வது மெய்யாகவே புதுமையான அனுபவம்தான். இது ஒரு வித்தியாசமான நிகழ்ச்சியாகவே எனக்குத் தெரிகின்றது. புத்தகங்களை நேசிப்பவர்கள் நாட்டின் சகல பகுதிகளிலிருந்தும் இங்கு வந்து குழுமி இருக்கின்றனர். நாமெல்லாம் சிந்தித்துத் தெளிவைப் பெற்று நல்லதொரு சமூகத்தை உருவாக்க முன் வரவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சிறப்புரைகள் :**
**'மல்லிகை' டொமினிக் ஜீவா**

பேசுவதை விடச் சுதாராஜ் எழுதவே வேண்டும். "சிரித்திரன்" கண்டு பிடித்து மெல்ல மெல்ல அறிமுகப்படுத்தப்பட்டவர். அந்தளவுக்கு அவர் மேல் நேசிப்பு இருந்தது. சுதாராஜிடமிருக்கும் நல்ல அம்சம்தான் அவர் எழுத்தாளரை நேசிப்பது. சென்னையில் வெளியிடப்பட்ட தொகுப்பு "உயிர்க்கசிவு". NCBH இன் பிரதிநிதிகள் இம் மண்டபத்தில் இருக்கின்றனர். எம்மை நேசிப்போரை நாமும் நேசிப்போம். சுதாராஜிடம் அடிப்படை நோக்கொன்று உண்டு. அதுவே சகலரையும் அரவணைத்துப் போகும் பொது நோக்கு, அதுதான் அவரை இந்தளவுக்குக் கொண்டு வந்தது. இத்தொகுப்பிலுள்ள 22 சிறுகதைகள் மல்லிகையில் வெளியானவை. வரிக்கு வரி கதைகளைப் படித்தேன். தொழிலின் நிமித்தம் சுதாராஜ் சர்வதேச நாடுகளுக்குப் பிரயாணம் செய்து கொண்டிருப்பவர். அந்த அனுபவங்களை எழுத்தில் கொண்டு வருகிறார். தமிழுக்கு இது புதிய உத்வேகத்தைத் தருகின்றது. இந்த வகைப்பட்ட எழுத்தாளரும் எழுத்துக்களும் தமிழ் நாட்டில் கிடையாது. இது எமக்குக் கிடைத்துள்ள பெருங்கொடை.

சுதாராஜின் பெருஞ் சொத்து அவரது மனைவி. இலக்கியவாதிகள், இலக்கியம் பேசாத சந்திப்பு நிகழ்வுகளை யாழ்ப்பாணத்தில் சுதாராஜின் இல்லத்தில் நடாத்தினோம். அவரது மனைவி பூரண ஒத்துழைப்புகளைத் தந்து அந்நிகழ்வு வெற்றி பெறப்பெரும் பங்களிப்புச் செய்தார். நாற்பதுக்கும் மேற்பட்ட இலக்கியவாதிகள் ஒன்று கூடுவோம். ஒரு முறை தட்டித் தவறி இலக்கியம் பேசிவிட்டால் ஒரு ரூபாய் குற்றம். இக்குற்றப் பணம் மட்டும் 360 ரூபாவுக்கு மேல் சேர்ந்தது. இதன் இரண்டாம் கட்டத்தைப் புத்தளத்தில் தொடங்கினோம். அப்போ சுதாராஜ் அங்கு இடம் பெயர்ந்திருந்தார். வாழ்க்கை, பொருள் பண்டம், தொழில், கல்வி என்பன குறித்துக் கதைத்தோம். எழுத்தால் மனிதனாகக் காட்சி தருகிறார். அசல் மனிதனாக மனிதத்தோடு நடமாடுகின்றார். அவரது பார்வைகள் வித்தியாசமானவை. அற்புதமான எழுத்தாளராகக் கணிக்கப்படுவார்.

மக்களை நேசிப்பதே சுதாராஜின் மிகப்பெரிய கெட்டித்தனம். அவருக்கு யாரும் எதிரியில்லை. மனிதராகப் பழகுவோம். எழுத்தை நம்புகிறவர்கள், புதிய வரலாற்றை உருவாக்குவர். பாரிய நாசத்துக்குள்ளும் நிமிர்ந்து நின்றோம். இதுதான் எங்கள் பலம் ஆற்றல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பேராசிரியர் சபா ஜெயராசா**

எந்த இலக்கியமும், கருத்தியலை வைத்திருக்கும். சுதாராஜின் கதைகளில் பல சிறப்பம்சங்கள் உண்டு. சொற்சிக்கனம் உண்டு. பிரசங்கத்தில் சொற்சிக்கனம் இருக்கக் கூடாது. அவரது கதைகளில் பளிச்சிடும் சொற் பண்புண்டு. இவைகள் சாந்தன், மு.பொ.ஆகியோரிடமும் இருப்பதைக் காணலாம் . சுதாராஜ் மாறுபட்ட வகையில் எழுதுகிறார். சிறுகதை இலக்கணம் கலந்த வளர்ச்சி உண்டு. 70களில் கைலாசபதியால் முன் வைக்கப்பட்ட இலக்கியப் போக்குகளோடு சம்பந்தப்படாதவர். மன எழுச்சிகளின் இயங்கு நிலைதானாகத் தோன்றுவதில்லை. அதற்கு விதி உண்டு. இத்தொடர்பை மார்க்சியம் வெளிப்படுத்தியது. இதை விஸ்தரிக்க வேண்டும். இலக்கியம் தூல வடிவம். இலங்கையர்கோன், சம்பந்தன் கதைகளின் இயற்பியல் மேலோங்கி நின்றது. சமுதாய சிந்தனை இருக்கவில்லை.

**கருத்தாடல்கள்:**
**முனைவர் ந.இரவீந்திரன்**

ஒரு பறவையின் சிறகடிப்பைத் தாங்க முடியாமல் மெல்ல மெல்லப் புயலாக மாறிய காற்றும், இலங்கை மக்களும் என்ற தலைப்பிலேயே உயிர்க் கசிவுத் தொகுப்பை நோக்க விரும்புகிறேன். எல்லாக் கதைகளிலும் உயிர்க்கசிவு இழையோடி இருப்பது சிறப்பம்சமாகக் காணப்படுகிறது. சமூகப் பொறுப்புடைய கலைஞராகவும், சுதாராஜ் திகழ்கிறார். பேராசிரியர் எம்.ஏ.நுஃமான் அணிந்துரையில் கூறும் வடிவப் பரிசோதனை, உணர்வுப் போதை, சொற்சிக்கனப்பாணி என்பன குறித்தான கருத்துக்கள் சுதாராஜ் சிறுகதைகளின் முக்கிய அம்சங்களாகக் கணிக்கத்தக்கவை. தொகுப்பின் முதல் சிறுகதை "நாணயக் கயிறு" எஜமான் வேலைக்காரனை எழுப்பும்போது பேசுவது கதைக்கு மிகவும் முக்கியமாக அமைந்துள்ளது. "பலாத்காரம்" இரண்டாம் கதை சமூகமாற்றச் சங்கதிகளை அடக்கிய இக்கதை தவிர்க்க முடியாத தொன்று. காதல் உணர்வுகள் சார்ந்தது. மூன்றாவது கதையான 'தேவைகள்' 1977 இல் வந்துள்ளது. தொகுப்புகளில் ஆண்டோடு மாதத்தையும் குறிப்பிடுவது பயனுள்ளதாகும். 'ஒரு தேவதையின் குரல்' கதையின் தொடக்கம் அற்புதமாக இருக்கிறது. படைப்புக்கு முதல் வரி மிக முக்கியமானது. படைப்பில் புதிய புதிய சிந்தனைகள் அமைய வேண்டும். கடைசி வரி வாசகனுக்கு உற்சாகத்தை ஏற்படுத்த வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐந்தாவது "பொழுதுபட்டால் கிட்டா". இதில் பருவத்தைத் தவறவிட்ட விடயம் பேசப்படுகிறது. "சுகங்களும் சுமைகளும" ஆறாவது கதையில் அரசாங்க உத்தியோக நிலைமை வருகிறது. அன்றைய இரண்டு ரூபாத் தாளின் பெறுமதியை இன்றைய சந்ததிக்கு உணர்த்துகின்றது. "ஏக பத்தினி விரதம்" என்ற ஏழாவது கதைக்குப் பின்னர் வெளிநாடு செல்வது குறித்தான விடயம் தொடர்கிறது. "பாதைகளை" மாறினோம், "உதிரிகள் அல்ல" ஆகிய கதைகள் எட்டு, ஒன்பதாவது கதைகளாகத் தொகுக்கப்பட்டிருக்கிறன. "நன்றியுள்ள மிருகங்கள" பத்தாவது கதையாகும். முதல் பத்துச் சிறுகதைகள் பற்றியே பேசும்படி கேட்கப்பட்டேன். இப்பத்துக் கதைகளிலும் தடங்கலற்ற ஓட்டமுண்டு. வரலாற்று ஓட்டத்தைக் காண முடிகின்றது. சமகால விடயங்கள் எடுத்தாளப்பட்டுள்ளன. நாவலொன்றை வாசித்தது போன்ற உணர்ச்சி ஏற்படுகின்றது. நாவலொன்றை எடுத்துக் கொண்டால் அது பல சிறுகதைகளின் தொகுப்பென்றே கூறவேண்டும்.

## 'செங்கதிரோன்' த. கோபாலகிருஷ்ணன்

ஆர்ப்பாட்டமில்லாத மென்மைப் போக்காளர் சுதாராஜ். யன்னலூடாகக் கிடைக்கும் தரிசனத்தைத் தருவது சிறுகதை. நாவல் பரந்த முற்றம். பதினோராவதிலிருந்து இருபது வரையான கதைகள் பற்றியே நான் கூற வேண்டும். "கனிகின்ற பருவத்தில்" பதினோராவது கதை. புகையிரதப் பயணத்தையும் சுட்டியது. கச்சிதமாகவும் லாவகமாகவும் சொல்லப்பட்டுள்ளது. சிறுகதையாசிரியர்களின் எழுத்தில் சொற் சிக்கனம் தேவை என்ற பேராசிரியர் எம்.ஏ.நுஃமானின் கவனிப்பை மெய்ப்படுத்து கின்றது. பன்னிரெண்டாவது "கொடுத்தல்" நல்ல சிறுகதை. படைப்புகள் வாசகரைச் சிந்திக்கத் தூண்ட வேண்டும். இக்கதையின் முடிவில் சிந்திக்க வைக்கும் பண்பை உணர முடிகின்றது. அருமையான நேர்த்தியான கதை.

"படுக்கை" என்ற கதையில் விரசமான சொற்கள் இல்லாததே அதன் வெற்றி. சிலாகிக்கத்தக்க மொழி நடையில் படைக்கப்பட்டுள்ளது. ஒரு படைப்பின் வெற்றி என்பது அதற்கான மொழியைக் கையாளும் விந்தையில் தான் தங்கி இருக்கின்றது. "திருப்பங்கள்" கதை உயர்வு நவிற்சி உணர்வுக் கசிவை ஏற்படுத்த வல்லது. "தயவு செய்து கைபோடாதீர்கள்" கதைப் பாத்திரங்கள் பரிவு, வெறுப்பு என்ற உணர்வைக் கசிய வைக்கின்றன. "யாரோ ஒருவன்" கதையை வாசித்தபோது அது விபரணமாகவே பட்டது. "தொங்கல்" நல்ல செய்திகளைத் தருகின்றது. அங்கதச் சுவையைப் பிலிற்றுகின்றது. சிறுவர் உளவியலை அடக்கிய கதைகளையும் ஆசிரியரால் எழுத முடியுமென்பதை உணர்த்துகின்றது. பத்தொன்பதாவது கதையான "சைக்கிள்" குறியீட்டுக் கதை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பாலைவனத்திலும் புல் முளைக்கும்" இருபதாவது கதை. தன் வாழ்வில் சந்தித்த மனிதரோடான அனுபவங்களை, முரண்பாடுகளை ஆவேசம் கொள்ளாது கண்ணீர் மல்கிக் கசிந்துருகிச் சொல்வதே சுதாராஜின் வெற்றி. ஹைக்கூக் கவிதைகளில் முதல் இரண்டு வரிகளும் சாதாரணமான வைகளாக இருக்கும். மூன்றாவது வரியில் தான் பொருள் இருக்கும். அதேபோல் சில கதைகளில் சாதாரணமாகச் சொல்லி வாசகரைச் சிந்திக்க வைக்கும் பண்பு மேலோங்கி நிற்கின்றது. சிறுகதையொன்றை எப்படி முடிக்க வேண்டுமென்பதுக்கு இக்கதைகள் முன்னுதாரணமாக அமையும். வார்த்தைகளில் கூடச் சமூகக் கட்டுப்பாடு உண்டு. மிகுந்த பொறுப்போடு சுதாராஜ் எழுதுகிறார். நாசூக்காகப் பொருளை எடுத்துச் சொல்கிறார். வலிந்து சொற்களைக் கூறாமல் இயல்பாகவும் கதைக்கு ஒட்டியதாகவும் சுதாராஜ் சொல்லி இருக்கிறார்.

## தி.ஞானசேகரன் ("ஞானம்" ஆசிரியர்)

ஞானம் சஞ்சிகையில் வெளியான "உயிர்க்கசிவு" என்ற சிறுகதையின் தலைப்பே இப்பாரிய தொகுப்பின் தலைப்பாக்கப்பட்டுள்ளது, எனக்கு இன்ப அதிர்ச்சியைத் தந்தது. இதேபோலப் பிரமிளா பிரதீபனின் "பாக்குப்பட்டை" என்ற தொகுப்பின் தலைப்பும் ஞானத்தில் வெளிவந்த சிறுகதையின் தலைப்பே. அனைத்துக் கதைகளுள்ளும் ஒரு உயிர்க்கசிவு இருக்கின்றது. புலம் பெயர்ந்த எழுத்தாளர் அ.முத்துலிங்கம் 75 சிறுகதைகளை அடக்கிய தொகுப்பொன்றை வெளியிட்டிருக்கிறார். சுதாராஜுக்கும் அவருக்குமிடையில் ஒற்றுமை காணப்படுகின்றது. இருவரும் பல நாடுகளில் சஞ்சரித்தவர்கள். இதனால் கருத்தியல் ஒற்றுமை இருக்கின்றது. இடதுசாரியச் சிந்தனை, முற்போக்கு இலக்கியம் என்பவற்றால் பாதிக்கப்படாதவர்கள். அ.முத்துலிங்கம், இலக்கியம் அறிவோடு சம்பந்தப்பட வேண்டுமென்ற கோட்பாட்டாளர். கோட்பாட்டுத் தடை சுதாராஜின் இலக்கியத்துக்கு இல்லை.

21 தொடக்கம் 30 வரையான கதைகளையே எனது உரையின் பொருளாக எடுத்தாழ்கிறேன். "நிலைமாற்றம" என்ற கதையின் இறுதிப்பகுதி அழுத்தம் மிக முக்கியமானது. போர்க்கால விளைவுகளுக்கு ஆறுதல் சொல்லும் கதை "மீட்சி", இச் சூழ்நிலையில் ஏற்படும் அழிவுகளைத் தவிர்க்க முடியாதென உணர்த்துகின்றது. ஈழத்து மஹா கவியின் "மீண்டும் தொடங்கும் மிடுக்கு" நினைவுக்கு வந்தது. நெருக்கடிகளுக்குள் இருந்து தான் இலக்கியம் தோன்றும் என்பர். சமூக அக்கறை, கலைத்துவம் இக்கதையில் உண்டு. "சத்தியசோதனை" இல் எளிமை, இனிமை, சிந்திப்பு உண்டு. சிறப்பான நடை. "கால்கள்" முற்போக்குச் சிந்தனையானது. கதையின் கதாமாந்தரொருவர் சோறு கிடைத்த சந்தோசத்தைக் கார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓட்டுவதில் காண்பிக்கிறார். சகல உயிர்கள் மீதும் இரங்கும் தன்மை இந்நூல் ஆசிரியருக்கு உண்டு. "முயல்குட்டி" "அடைக்கலம்" வாசித்தால் மனைவியின் ஒத்தாசை எப்படிப்பட்டதென்பது விளங்கும். வாசகனைத் திகைக்க வைக்கிறது. "அடைக்கலம்" சமூகத்துக்கு சொல்ல வேண்டிய கதைதான். ஆனந்த விகடன் பரிசைப் பெற்ற சிறுகதை. குருவி வளர்ப்பில் போர்க்கால நிகழ்வுகள் இணைத்துப் பார்க்கப்பட்டுள்ளன. அகதி வாழ்வு சித்திரிக்கப்படுகிறது. உலகத்தின் சிறந்த சிறுகதைகளோடு வரக் கூடியது. பூரண தெளிவோடு எழுதியுள்ளார். கலாரூபமாகச் சொல்கிறார்.

எமது பல்கலைக்கழக அறிஞர்கள் சிறுகதைப் படைப்பாளிகளின் பட்டியலை வைத்திருக்கின்றனர். அதில் சுதாராஜ், அ.முத்துலிங்கம் போன்றோரது பெயர்கள் இல்லை. இவர்கள் மிகச் சிறந்த கதைகளைப் படைப்பவர்கள். இப்பாரிய தொகுப்பில் குறைந்தது ஐந்து சிறுகதைகளாவது உலகத் தரத்தையுடையவை.

## வெளியீடு

*"உயிர்க் கசிவு" சுதாராஜின் 60 சிறுகதைகள் தொகுப்பின் வெளியீட்டில் முதல் பிரதியைப் பூபாலசிங்கம் புத்தகசாலை அதிபர் பூபாலசிங்கம் ஸ்ரீதர்சிங் மல்லிகை ஆசிரியர் டொமினிக் ஜீவாவிடமிருந்து பெற்றார். சிறப்புப் பிரதிகளும் கலை, இலக்கிய, பொது, ஊடகப் பணியாளர்களுக்குப் பேராசிரியர் சபா.ஜெயராசாவால் வழங்கப்பட்டன. நூல் குறித்தான கருத்தாடல் தொடர்ந்தது.*

## கவிஞர் மு.மயூரன் (இலத்திரனியல் ஊடகவியலாளர்)

நான் கருத்துரைக்கப் போவது 31 இலிருந்து 40 வரையான சிறுகதைகள் பற்றி. இவை 1992 இலிருந்து 1998 வரையான காலப்பகுதிக்குள் வெளியிடப்பட்டவை. யாழ்ப்பாணச் சூழல் நேரடியான இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் இருந்த காலகட்டம். இக்காலகட்டத்தின் மெய்யான நிகழ்வுகளைப் பதிவு செய்வதென்பது சிக்கல் நிறைந்தது. கதைகளின் நிகழ்களமாகக் கொழும்பும் இருந்தது. கதைகளில் ஷெல்கள், விமானக் குண்டுகள் என்பவையும் பாத்திரங்களாக்கப்பட்டுள்ளன. போருக்குள் தான் வாழ்வு நடந்துள்ளது. அதையும் கதைகள் பதிவு செய்துள்ளன. ஆனால் வலிந்து பதிவு செய்யப்படவில்லை. வெறியூட்டும் சொற்கள் மூலமும் படைக்கப்படவில்லை. படைப்பாளி தன்னைச் சூழ இருள் இருந்ததைப் பேசியுள்ளார். போதை தராத வாசிப்புக் கிடைக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எங்கட அப்பா எப்ப வருவார்" 31ஆவது கதை. வெளிநாட்டில் தொழில் புரியும் தகப்பன் பற்றிப் பேசுவது, ஏழ்மையை அனுபவிக்காத குடும்பக் கதை. "மனோதர்மம்" ஏழ்மையோடு வாழ்ந்தும் மிருகமொன்றின் மேல் பாசம் காட்டுவதைக் குறிப்பது. "போகுமிடம்" கொழும்பில் வாழும் தாய் சம்பந்தப்பட்டது. "விளக்கு" குண்டுத் தாக்குதல், ஷெல் அடிச் சூழல் பற்றிய அகநிலை சார்ந்த கதை. "தெரியாத பக்கங்கள்" குழந்தைத் தொழிலாளிகள் சம்பந்தப்படும் கலாமெருகான படைப்பு. "அகதியும் சில நூல்களும்" போர்க்கால அநியாயத்தைப் பகிர்கிறது. சாதி ஏற்றத் தாழ்வு குறித்த கதையே "அப்பாச்சியும் ஊன்று கோல்களும்" ஒரு மூதாட்டியின் உணர்வுகளை வெளிக்கொணர்கிறது. "மரநிழல் மனிதர்கள்" பரிசோதனைக் கதை. கதை சொல்லும் பாணி பாராட்டத்தக்கது. மனிதரது மன நிலைகளை 39 ஆவது கதையான "புரியாதது" படம்பிடிக்கின்றது. "இட்ட அடி நோக" பல்கலைக்கழகச் சூழலைக் கொண்டு வருகின்றது. தடங்கலின்றித் தொடர்ச்சியாக எழுதப்பட்ட சுதாராஜின் இக்கதைகளின் சூழலில் ஏற்பட்ட மாற்றங்களைக் கண்டறிய முடிகின்றது.

இவைகள் 1970இற்கும் 2008 க்கும் இடைப்பட்ட கால கட்டத்துள் வாழ்வில் நிகழ்ந்தவை. தீவிர அரசியலைக் கதைகளில் காண முடியவில்லை. பாதகமில்லாத எழுத்தாளர். அ.முத்துலிங்கம் ஜனரஞ்சக இதழ்களிலும் எழுதுவார். யாருக்கும் பிரச்சினையற்ற சிக்கலற்ற விடயங்களை இக்கதைகள் கருவாக கொண்டுள்ளன. அதிகாரத்துக்குப் பிரச்சினை கொடுக்கும் விடயங்கள் பிரபல ஊடகங்களில் வராது. இக்கதைகளுக்கும் அதிகாரங்களுக்குப் பிரச்சினை கொடுக்காத தலைப்புகளே இடப்பட்டுள்ளன. யாருக்கும் பிரச்சனை இல்லாமல் எழுத வேண்டுமென்ற போக்குண்டு. வன்னிப் போராளிகளும் எழுதினர். அப்படைப்புகளில் போரைப் பேசாதவற்றைப் பார்க்க முடியாது. எதை எழுத வேண்டும் எழுதக் கூடாதென்பதை வாழும் சூழல்தான் தீர்மானிக்கும். படைப்பாளிகள் வாழ்ந்த சூழலைப் பேசியபோது அவை சிலரது மனங்களை நெருடியது. 1995இல் பாஸ் பிரச்சினை போன்ற வேறு பிரச்சினைகளும் இருந்தன. போராளி இயக்கங்கள் மக்கள் மீது நிகழ்த்தப்பட்ட அநியாயங்களை ஏன் இக்கதைகள் தொடவில்லை?

**கவிஞர் அஷ்ரப் சிஹாப்தீன்** (ஆசிரியர் "யாத்ரா")

சுதாராஜ் தொடர்ந்து எழுதுகிறார். கருக்கிடைப்பதில்லை. இப்படித் தடுமாறும் எழுத்தாளரும் இருக்கின்றனர். சுதாராஜ் அப்படியானவரல்ல. அவர் சிறந்த கதை சொல்லி, எனக்குக் கவிதையோடு தான் பரிச்சயம் உண்டு. தமிழ்ச் சிறுகதைக்கு உந்துதலை ஏற்படுத்தக் கூடியது **"உயிர்க்கசிவு"** சுதாராஜின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மனித தரிசனங்கள்'' என்ற நூல் என்னைக் கவர்ந்தது. உலகம் இருப்பதை அறிந்துள்ளவர். முன்பு இவரது கதைகளைப் படிக்கவில்லை. சிறுகதை எழுதுவதற்குப் பொறுமை தேவை. சிரமப்பட வேண்டும். சிலரது சிறுகதைகள் எனக்கு வயிற்றைப் பிரட்ட வைத்தன. இத்தொகுப்பில் நான்கு கதைகளையாவது படிக்க வேண்டுமென எண்ணினேன். "யாரோடு நோவோம்'' அற்புதமானது. "மனிதர்கள் இருக்கும் இடங்கள்'' கவித்துவமான தலைப்பு, மிக நேர்மையான பதிவு. சுதாராஜ் இரசித்துப் படிக்க எழுதும் படைப்பாளி என்பதை உணர்த்துகின்றது.

22 பக்கக் கதை "மனக்கணிதம்'', காதல் கதை. காம உணர்வு இல்லை. நளினமானது. வக்கிரமான கற்பனைத் தன்மை அற்றது. நுண்ணுதலான பார்வை உண்டு. பெண்ணியப் பெண்கள் இக்கதையைக் கட்டாயம் படிக்க வேண்டும். சாதாரண வாழ்க்கையைத் தான் சுதாராஜ் கதைகளில் சொல்லி இருக்கிறார். சம்பந்தமற்ற அம்சம் கதைகளுக்குள் இல்லை. சலிப்பான வார்த்தைகளையும் காணவில்லை. அழகான இளம் பெண்ணின் இடுப்பசைவை ஒத்தவை.

## திக்குவல்லை கமால்

சுதாராஜ் என்றால் "சிரித்திரன்" ஆசிரியர் ஞாபகம்தான் வரும். தன் அறுபது சிறுகதைகளைத் தெரிந்து, "உயிர்க்கசிவு'' என்ற தொகுப்பாக்கியுள்ளார். நாற்பத்தைந்துக்கும் மேற்பட்டவை சஞ்சிகைகளில் வெளிவந்தவை. சிறு சஞ்சிகைகளே சிறந்த எழுத்தாளர்களை உருவாக்கித் தருகின்றன.

தொகுப்பில் 1976 தொடக்கம் 2008 வரை வெளியான கதைகளை காலவரிசைக் கிரமத்தில் ஒழுங்கு முறையாகத் தொகுத்துள்ளார். எதிர்கால ஆய்வுகளுக்குப் பொருத்தமான இலக்கிய, சமூக, வரலாற்று நூல் இது. தன் கவிதைகளை இம்முறையில் கவிஞர் ஏ.இக்பால் வெளியிட்டிருக்கிறார். பள்ளிவாசல் பிரச்சினையை எம்.ஏ.நுஃமான் எழுதவில்லை. ஆபத்தை எதிர்ப்பாக்கும் எழுத்தாளர்களால் சிக்கலான பிரச்சினைகளைத் தொடமுடியாது. இனத்துவ முரண்பாடுகளைச் சுதாராஜ் நிதானமாகப் படைத்திருக்கிறார். எழுத்தில் எதுவிதமான ஆர்ப்பாட்டமும் இல்லை. குறியீடாகக்கூறும் போக்குண்டு. 'பாம்பு' என்ற கதையில், அரசியல் இருக்கிறது. "ஆண்களும் பூதமும்'' மனித உறவைக் காட்டுகின்றது. தாக்கமான சிறந்த கதை. ''மகனே'' என்காமல் "புத்தே'' என்பதுதான் கதையின் பொருள் கூறுவது. சிங்கள மொழியில் மொழிபெயர்க்கப்பட்ட கதை. "ஒவ்வொருவர் மறுபக்கம்" கொழும்பு ஆமர் வீதியிலிருந்து தெஹிவளை வரையான பஸ் பயணத்தின் கதை. புதுமைப் பித்தனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞாபகப்படுத்தியது. அவரது கதையொன்றோடு ஒப்பிடத்தக்கது. இலங்கையில் 1970 களின் காலகட்டமே இடதுசாரியக் காலகட்டம். அதைச் சுதாராஜ் மிகைப்படுத்தவில்லை. 2008 இலே எழுதுகிறார். எதிலிருந்து எதை எடுக்க வேண்டுமென்ற தெளிவோடு எழுதுகிறார். மிகச் சிறந்த எழுத்தாளர்.

*கூட்டத்தில் குழுமியிருந்த இலக்கிய ஆர்வலர் சிலரும் கருத்துரைத்தனர்.*

**பேராசிரியர் சி.சிவசேகரம்**

ஈழப்போர்க் காலத்தில் தான் மு.பொன்னம்பலமும் (மு.பொ.) எழுதினார். 1978 இல் தமிழ்த் தேசியம் தலையெடுத்தது. தீண்டாமையை இசுலாம் நிராகரிக்கின்றது. தனக்கு முக்கியமாகப்பட்டதை சுதாராஜ் எழுதினார். அரசியல் நோக்கமெனக் கருதமுடியாது. நடுநிலை என்பது கிடையாததொன்றாகும். 1970 இலிருந்து முற்போக்கு இலக்கியச் சரிவு ஏற்பட்டது.

**கவிஞர். மு.பொன்னம்பலம் (மு.பொ.)**

தனக்குத் தனக்குத் தெரிந்ததைத்தான் எழுதலாம். சொல்வது கலைத்துவமாக இருக்க வேண்டும். தீமை (THEME) ஆழமாக்க வேண்டும். "மனக்கணிதம்" காதல் கடிதம்.

**திருமதி தேவராஜா கலாலட்சுமி**

இஸங்களை "ஞானம்" மறுக்கிறது. ஞானசேகரன், கதைகளில் இஸம் இல்லை என்றார். இலக்கியம் நசுக்கப்பட்டது தெரிந்ததே. அஷ்ரப் சிஹாப்தீன் கதையின் நடையை ஒரு பெண்ணின் இடுப்புக்கு உவமானப்படுத்தியது வேதனை தருகிறது. இப்படியாகப் பெண் உடம்பு ஒப்பிடப்படுவதுக்கு எதிராகப் பெண்ணியவாதிகள் குரல் கொடுப்பார்களென்பதைக் கூற விரும்புகிறேன்.

*எழில்வேந்தன் (சக்தி தொலைக்காட்சி) தொகுப்பின் கதைகளைச் சுதாராஜின் சுயசரிதை என்றார்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஏற்புரை: சுதாராஜ்**

தொகுப்பின் கதைகளின் ஊடாகச் சொல்ல வேண்டியதைச் சொல்லி இருக்கின்றேன். முதலிரு வரிகளாலேயே வாசகரை கதைகளுக்குள் இழுத்துப் போகிறேன். சிந்திக்க வைக்கிறேன். ஒவ்வொரு கதைக்குள்ளும் ஒவ்வொரு நிலையில் நான் இருக்கிறேன்; சுயசரிதை என்றதற்கு அமைவாக. வருடக் கணக்காக என்னைச் சில கதைகள் உலுப்பி இருக்கின்றன. வீட்டில் வாழும் வாழ்க்கை சிக்கலற்றதாக இருக்க வேண்டும் என நண்பர்கள் கூறுவதுண்டு. கதைகளை உணர்வுபூர்வமாக எழுதுகிறேன். எழுதும்போது கண்ணீா் விட்டிருக்கிறேன். குருவிகளை, செண்பகங்கள் பிடித்ததைக் கவனித்தேன். எழுத்தாளா் நடுநிலையாக இருக்க முடியாது. உணர்வுகளை எழுதுதல், இரங்குதல் என்பவற்றிற்கு இயக்கத்தில் இருக்க வேண்டுமென்ற கட்டாயம் இல்லை.

*ச.தனுஜன் நன்றியுரை கூறினார்.*

- 15.10.2010

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 21

## ஐங்கரநேசனின் "ஏழாவது ஊழி"

பிரபல அறிவியல் கட்டுரையாளர் பொ.ஐங்கரநேசனின் "ஏழாவது ஊழி" என்ற கட்டுரைகளின் தொகுப்பு நூல் 02.10.2010 ஆம் திகதி கொழும்பு தமிழ்ச்சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில் வெளியிடப்பட்டது. பேராசிரியர். சோ.சந்திரசேகரம் தலைமை வகித்தார்

பேராசிரியர் சபா ஜெயராசா, பேராசிரியர் மா.கருணாநிதி, தினக்குரல் பிரதம ஆசிரியர் வீ.தனபாலசிங்கம், பூ.பத்மசீலன் (சேமமடு பொத்தகசாலை அதிபர்) ஆகியோர் மங்கல விளக்கேற்றினர்.

தமிழ் வாழ்த்து ர.சந்திரலிங்கம் பாடினார். தொடர்ந்து ஒரு நிமிட அக வணக்கம் செலுத்தப்பட்டது.

**வரவேற்புரை:**
**வி. ரி. ராஜேந்திரா**
**(தகவல் தொழில்நுட்ப முகாமையாளர், இலங்கை வங்கி)**

"ஏழாவது ஊழி" நூலின் ஆசிரியர் பொ.ஐங்கரநேசன் யாழ்ப்பாணம், திருநெல்வேலியைச் சேர்ந்தவர். எனது அயலவர், யாழ் இந்துக் கல்லூரியின் பழைய மாணவர். தாவரவியலில் யாழ் பல்கலைக்கழகத்தில் M.Sc பட்டம் பெற்ற கல்வியாளர். இந்தியாவிலும் பட்டங்களைப் பெற்றவர். இதழியலிலும் தகைமையுண்டு. பாடசாலை நாட்களில் - யாழ்ப்பாணம் கந்தர்மடத்தில் யுனிவேசல் கல்வி நிலையம் என்ற நிலையத்தை அமைத்து யாழ்ப்பாணக் கல்வி வளர்ச்சிக்குப் பெரும்பங்காற்றியவர். கணிதத்தை நான் கற்பிக்க அவர் விஞ்ஞானம் கற்பித்தார். 2000க்கும் மேலான மாணவர்கள் கற்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சனி, ஞாயிற்றுக்கிழமை வகுப்புக்களை நடாத்தினோம். ஐங்கரநேசன் மேல் கொண்டிருந்த பக்தியாலும், அபிமானத்தாலும் மாணவர்கள் பயிற்சிக் கொப்பிகளில் பிள்ளையார் சுழி போடுவதுக்குப் பதிலாக 'ஐங்கரன் துணை' என எழுதிப் பாடங்களைப் பதிவு செய்யத் தொடங்கினர்.

நாட்டில் இது போன்று இயங்கிய கல்வீ நிலையங்களில் மாணவர் வேறெங்கும் தலைவர் (PREFECTS) தெரிவு நடக்காத முறையில் இங்கு தேர்தல் மூலம் தெரிவை நடாத்திச் சாதனை புரிந்தோம். "நங்கூரம்" என்ற சஞ்சிகையை ஐங்கரநேசன் வெளியிட்டார். "தினக்குரல்" ஞாயிறு, வெளியீட்டில் தொடர்ச்சியாக அறிவியல் சூழலியல் கட்டுரைகளை எழுதுபவர். இந்திய ஏடுகளிலும் இவரது கட்டுரைகள் வெளியாகியிருக்கின்றன. 'தேநீ' என்ற அமைப்பை ஏற்படுத்தி இடம்பெயர்ந்தோருக்கு உதவினார்.

**தலைமையுரை:**
**பேராசிரியர் சோ.சந்திரசேகரம்**

ஏராளமான மக்கள் குழுமியிருக்கும் இத்தகைய நிகழ்ச்சிக்குத் தலைமை வகிப்பது பெருமையாக இருக்கிறது. ஐயங்கரநேசனின் "அன்னை பூமி நோயுற்றுக் கிடக்கின்றாள்" என்ற கட்டுரையைத் தினக்குரலில் வாசித்தேன். புத்தகக் கடைகளில் சமய, இலக்கிய, ஆத்மீக நூல்கள் வெளிவந்துள் ளதைத் தான் காணலாம். எமது தமிழ் நூல் வெளியீட்டுத்துறையில் ஆத்மீக, இலக்கிய நூல்கள் வெளியிடும் பண்புதான் இன்று நிலவுகின்றது. ஆன்மீகம், இலக்கியம் மட்டும் வாழ்க்கைக்குப் போதாது. புதிய நூற்றாண்டின் சவால்களை நாம் சந்தித்தாக வேண்டும். சூழல் பாதுகாப்புக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும். பூமியிலிருந்து கிடைக்கும் வளங்களைப் பயன்படுத்த வேண்டும். தவறாக பயன்படுத்தப்படுகின்றது. அன்னை பூமி நோகிறாள். கடல்கோள், சூறாவளிகளால் பாதிப்புகள் ஏற்பட்டன. சுவாத்திய நிலை மாற்றமடைந்துள்ளது. வெள்ளமும், புயலும் ஏற்படுகின்றன. மனிதன் இயற்கை வளங்களைச் சரியாகப் பயன்படுத்தவில்லை. சட்டத்தோடு மக்கள் இல்லை. விஞ்ஞான ரீதியான அறிவு மக்களுக்குத் தேவை. இதை அவர்களுக்கு ஊட்டுவது ஐங்கரன் போன்ற அறிஞர்கள் தான். விஞ்ஞான பாடங்கள் இன்று தமிழில் இல்லை. ஆங்கிலத்தில் தான் இருக்கின்றன. உயர்கல்வி நூல்கள் இல்லை. ஐங்கரநேசன் இந்த நூலை அனைத்துத் தமிழ் பேசும் மக்களுக்கும் பயன்படத்தக்கதாக எழுதியுள்ளார். குருகுலக் கல்விக்கு இலக்கியம், சமயம், ஒழுக்கசீலம் என்பன தான் குறிக்கோளாக இருக்கும். பாரம்பரிய கல்விச் சமுதாயத்தை நாம் மாற்ற வேண்டும். இந்நூல் பெரிய கல்விக் கடமையைச் செய்கிறது. ஓரளவுக்காவது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுற்றாடலைப் பாதுகாக்க உற்சாகப்படுத்தும் நல்ல தமிழில் விளக்கமாக எழுதப்பட்டுள்ளது. பல தகவல்களின் களஞ்சியமாகத் திகழ்கின்றது. தமிழ் மக்களது ஆதரவு இந்நூலுக்குத் தேவை.

**வெளியீட்டுரை:**
**தெ.மதுசூதனன் (ஆசிரியர் "அகவிழி")**

தமிழ் அறிவியல் சிந்தனைப் பரப்பில் இந்நூல் புதியது. இது பொதுமக்கள் மட்டத்துக்குப் போக வேண்டும். மக்கள் மத்தியில் சுற்றுச்சூழல் விழிப்புணர்வு இல்லை. பாடசாலைக் கல்வியே இவ்விடயத்தை மாணவர்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும். இன்றைய நெருக்குவாரங்களுக்கான காரணத்தை எடுத்துச் சொல்ல வேண்டும். அதுவேதான் ஐங்கரநேசனின் இந்த முயற்சி. வாழ்வியல் விடயங்களை விளங்கிக் கொள்வதற்காக எழுதியிருக்கிறார். நூலில் 41 கட்டுரைகள் இருக்கின்றன. கால நிலை மாற்றம் தொடர்பான பூமி சூடேறல், வாழ்வியல் நெருக்கடி என்ற நிலைகளை உணர்த்தும் கட்டுரைகள் உண்டு. பூமிவெப்பமடைதல் இந்நூற்றாண்டில் முதன்மை பெறுகிறது. இயற்கை, சமூக, மனித உறவு, மாற்றங்கள் இப்போது ஏற்படுகின்றன. வளங்கள் சூறையாடப்படுதல் பெருகுகின்றது. இயற்கை வளத்துக்கு இழப்பு ஏற்படுகிறது. நுகர்ச்சி, பண்பாட்டை அழிப்பதால் ஏற்படும் ஆபத்து, யாழ்ப்பாணக் கிணறு, கைத்தொலைபேசி ஆபத்து. அதன் தாக்கம் என்பன மிக விரிவாகக் கட்டுரைகளில் சொல்லப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணத்தில் சூழல் பிரச்சினை இல்லை என்பது துர்பாக்கியமானது. வாழ்வியல் சார்ந்த விடயங்கள் நூலில் முன்னுரிமை பெற்றுள்ளன. எடுத்துப் பேசுவதுக்குத் தயங்கும் விடயங்களும் இந்நூலிலுண்டு. இது காலத்தின் தேவை. அறிவியலை விருத்தியாக்கும் கூறுகள் இந் நூலில் காணப்படுகின்றன. எமது சூழலைத் திரும்பிப் பார்க்க வைக்கிறது. தமிழுக்கு இது முதன்மையான பங்களிப்பு.

*"ஏழாவது ஊழி" நூலை தினக்குரல் பிரதம ஆசிரியர் வீ.தனபாலசிங்கம் வெளியிட்டு, முதல் பிரதியைப் பெரியார் ரி.லோகநாதனுக்கு (அல்ரன்ஸ் பதிப்பகம்) வழங்கினார்.*

**கருத்துரை:**
**பேராசிரியர் அன்ரனி நோபேட்**

சேமமடு பதிப்பகம் சர்வதேச நூல்களுக்கு இணையாக அழகிய அட்டையுடன் நூலை வெளியிட்டுள்ளது. சூழல் சம்பந்தமான தமிழ் நூல்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிகக் குறைவு. 1854இல் அமெரிக்காவில் சியற்றஸ் என்ற செவ்விந்தியன் நிகழ்த்திய சர்வதேசப் புகழ்பெற்ற பேருரையே நூலைப் படித்தபோது ஏற்பட்டது. மனிதன் பூமிக்குச் சொந்தமானவன் என்பதே அச்சொற்பொழிவின் அடிநாதமாக இருந்தது. ஐக்கிய நாடுகள் சபை இதை அதிமுக்கியமான ஆவணமாக வெளியிட்டது. 1967 இற்குப் பின் மேற்குலகச் சூழலியல் சிந்தனை வளர்ச்சியில் எவ்வாறு மாற்றம் ஏற்பட்டது? சர்வதேசக் காலநிலை மாற்றம் இவற்றைச் சிந்திக்க வேண்டும். பனி உருகும் நிலை வந்துள்ளது. இதனால் உயிரினத்துக்குப் பாரிய பாதிப்பு. சுதேசி இன மக்கள் வாழ்விடங்களை இழக்கின்றனர். அபிவிருத்திப் போக்குச் சூழல் தொடர்புடையது.

1990 இலிருந்து சூழல் யுகம் உருவானது. "சாபத்தின் கனிகள்" என்ற சூழல் நூல் வெளியானது. சூழல் பாதுகாப்புக்கான குரல்கள் 1960 களின் பின்னரே எழத் தொடங்கின. "மௌனத்தின் வசந்தம்" நூலும் சூழல் பிரச்சினைகளை எடுத்துக் காட்டியது. காலநிலை மாற்றங்களையும் கருத்திற்கொள்ள வேண்டும். 1980இல் பனிப்படலம் குறைந்தது. சுதேசிய மக்களுக்குப் பனி அவசியம். பிரயாணம் செய்ய முடியாது. பயங்கரக்காற்றுக் கூடாரங்களை அள்ளிச் செல்லும். இத்தகைய சூழல் பாதிப்புகளுக்கு அமெரிக்காவே காரணமெனச் சொல்லப்படுகிறது. 2007 மார்ச் 1 இல் விவாதிக்க அமெரிக்கா ஏற்றுக் கொண்டது. பரம்பரை நிலங்கள் சுதேசிய மக்களுக்கு அவசியமானது. சூழல் அழிப்பு மனிதருக்குச் சேதத்தை ஏற்படுத்தும்.

நூலில் விடயங்கள் தெளிவான புதிய நடையில் சொல்லப்பட்டிருக்கின்றன. இத்தகைய நடை எந்நூலிலும் இல்லை. அரசியலா? சூழலா? இலக்கியமா? என்ற சந்தேகம் வாசித்தபோது ஏற்பட்டது. ஒவ்வொரு கட்டுரையிலும் கருத்துக்கள் கவித்துவமாகச் சொல்லப்பட்டுள்ளன. அண்மைக் காலங்களில் மக்களைக் கலக்கிய சூறாவளிகளுக்கு ஆண்களது பெயர்கள் இடவில்லை. கதரீனா போன்ற பெண்களது பெயர்களையே இட்டனர். கடலிலிருந்து சூறாவளி அமைதியாகப் புறப்பட்டுத் தரையை எட்டியதும் சூறாவளியாக மாறும். இத்தகைய சுபாவத்தையுடையவர்களே பெண்கள். கட்டுரைகளில் அரசியலையும் கலந்து ஐங்கரநேசன் சொல்கிறார். வசன நடை உச்சமாக இருக்கின்றது. தமிழகத்துக் கவிஞர் இன்குலாப்பின் கவிதைகளைப் போல.

ஆய்வு நோக்கான விஞ்ஞானக் கட்டுரைகள் இருக்கின்றன. எம்மைச் சுற்றி வாழும் சகல பிராணிகள், தாவரங்கள் பற்றியெல்லாம் ஆச்சரியப்பட வைக்கும் கட்டுரைகளை எழுதி இருக்கிறார். எல்லாமே அற்புதமானவை. ஏழாவது ஊழியைப் பற்றி இன்னும் விரிவாகச் சொல்லி இருக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துயரங்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. இலக்கிய இரசனை இருக்கின்றது. அமெரிக்காவில் எனில் இத்தகைய நூல் மூன்று இலட்சத்துக்கும் அதிகமாக விற்கும். வாசித்தபோது இந்நூல் மனநிறைவை ஏற்படுத்தியது.

**ஏற்புரை:**
**ஐங்கரநேசன் (நூலாசிரியர்)**

எனக்கு முன் பேசியவர்கள் விலாவாரியாகப் பேசினர். சொல்லப்பட்ட புகழாரம் எல்லாம் எனக்குரியதல்ல. யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் மாணவனாக நான் இருந்தபோது எனது ஆசிரியர் குகதாசன் எனக்கு ஊக்கமளித்தார். நாகர்கோவில் போன்ற யாழ் குடாநாட்டுப் பிரதேசங்களுக்கு எம்மைச் சுற்றுலா கொண்டு சென்று சூழலையும் இயற்கையையும் கண்டறிய வைத்தார். என் ஆர்வத்தைத் தூண்டி விட்டார். எழுத்து நடை குறித்தும் தமிழ் பற்றியும் சிலாகித்தது எனக்குப் பெருமையாக இருக்கின்றது. நல்ல சொற்களைத் தமிழில் அறிவியல் துறைக்கு ஆக்கிக் கொடுக்க முடியும். தமிழை வாசிக்க என்னைத் தூண்டியவர் பிரபல இலக்கியவாதி க.சட்டநாதன். அந்த வாசிப்பு எனது கட்டுரையாக்கங்களுக்குப் பெரிதும் துணை நிற்கின்றது. நூலை வடிவமைத்தது செட்டியார் அச்சகம். வடிவமைத்தவர் "சுதந்திரன்" பத்திரிகை ஆசிரியர் பீடத்தில் இருந்தவர். இப்போ எல்லாமே அரசியல் நிறைந்த சூழல்தான். அரசியல் இல்லாதது எதுவுமில்லை. 30 வருடப் போராட்டப் போர்க்காலத்தில் தமிழ் சூழலில் பேரழிவுகள் ஏற்பட்டன. வாழ்வு முழுமையாகச் சுரண்டப்படுகிறது. முழு இலங்கையுமே கண்டக்காடாகும் நிலை. இயற்கையை அழித்தால், அதனால் நீ அழிக்கப்படுவாய் என்ற பாடத்தை உணர வைக்கும் காலமிது. சூழலாலும் அகதியாக்கப்படும் நிலை நெருங்குகின்றது.

இதற்கெல்லாம், இந்த அவலங்களுக்கெல்லாம் அறிவியல் சமூகம்தான் பதிலளிக்க வேண்டும். மேற்குலகோடு ஒப்பிடும்போது நாம் ஏறத்தாழ 30 ஆண்டுகளுக்கும் மேல் பின்நோக்கி நிற்கின்றோம். மொஸ்கோவில் மழை பெய்தால் யாழ்ப்பாணத்தில் நாம் ஏன் குடை பிடிக்க வேண்டும் அன்று போல யாழ்ப்பாணம் இன்றில்லை. கிணற்று நீரால் புற்றுநோய் ஏற்படக் கூடிய நிலை வந்துள்ளது. அந்தக் காலத்தில் அறிவியலாளர் கொப்பனிக்கஸ் பூமி தட்டையானது அல்ல என்றார். ஏற்கவில்லை அன்றைய உலகு. மற்றொரு விஞ்ஞானியான கலிலியோ ஆதாரங்களைக் காட்டி நிரூபித்து வழி காட்டினார். ஏன்? எதற்கு? எப்படி? எனக் கேட்க வேண்டுமெனச் சமுதாயத்துக்குப் புகட்டிய தத்துவஞானி சோக்கிரட்டீசுக்கு மரண தண்டனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடைத்தது. அதிகார வர்க்கம் ஏற்கக் கூடிய முடிவுகளைத் தான் அறிஞர்கள் கொடுக்கிறார்கள். இன்றைய யாழ்ப்பாணம் இவர்களது பிடியில்தான் இருக்கின்றது. கட்டுரைகளை ஊன்றிப் படியுங்கள். மனித சமுதாயத்துக்குப் பாதகமான சூழலை ஏற்படுத்தும் பாதிப்புகளுக்கு எதிராகக் குரல் எழுப்ப வேண்டும்.

- 20.10.2010

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 22

## நீர்வை பொன்னையனின் 'காலவெள்ளம்' ஆய்வரங்கு

ஏற்கனவே ஏழு சிறுகதை தொகுப்புகளைத் தமிழ் இலக்கிய உலகுக்கு அளித்திருக்கும் மூத்த மார்க்சிய எழுத்தாளர் நீர்வை பொன்னையன் தனது எட்டாவது 'காலவெள்ளம்' என்ற சிறுகதைத் தொகுப்பை ஒரு வித்தியாசமான முறையில் அறிமுகப்படுத்தினார். கொழும்பு இதழியல் கல்லூரியின் விரிவுரையாளர் எம்.எஸ்.தேவகௌரியின், தமிழ் இலக்கியத்தில் சிறகசைக்க எத்தனிக்கும் நான்கு மாணவர்கள் ஆறு தசாப்தங்களுக்கு மேலாகத் தமிழ்ச் சிறுகதை படைத்துவரும் நீர்வை பொன்னையனின் இத்தொகுப்பைக் கொழித்துப் பார்த்துக் கருத்துரை நிகழ்தினர். நிகழ்வு 24.10.2010 ஆம் திகதி கொழும்பு 6, பெண்கள் ஆய்வு மையக் கேட்போர் கூடத்தில் கூடம் நிறைந்த பார்வையாளர் மத்தியில் நடைபெற்றது. பேராசிரியர் சபா ஜெயராசா தலைமை தாங்கினார்.

**தலைமையுரை:**
**பேராசிரியர் சபா. ஜெயராசா**

இரண்டு வகையான இலக்கியக் கோட்பாடுகள் இருக்கின்றன. ஒன்று மார்க்சியம் தழுவிய முற்போக்கு, மற்றது மார்சியத்துக்கு நேரெதிரான கோட்பாடு. அழகியல், இலக்கியம் என்பவை அவை சார்பான விதிகளால் இயக்கப்படுபவை. செங்கை ஆழியான், எஸ்.பொ. மார்க்சியத்துக்கு விரோதமான இலக்கியம் படைப்பவர்கள். நீர்வை பொன்னையன் மார்க்சியவாதி. சமூக முரண்பாடுகளின் அடியொற்றி இலக்கியத்துக்கு வந்தவர். மார்க்சியத் தடத்திலிருந்து என்றுமே பிறழாதவர். பூர்சுவாக் குணங்களைக் கொண்டவர்கள் உரிய பாதைகளை இழந்திருக்கின்றனர். தான் ஏற்றுக் கொண்ட, கொள்கையைப் பிசகாமல் நீர்வை தொடர்கிறார். இது அவரது 'மேடும் பள்ளமும்' தொகுப்பிலிருந்து இன்று வரை தெளிவாக இருக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மார்க்சியத்துக்கு எதிரானவர்கள், மார்சியப் படைப்புகள் சுலோகமானவை எனக் குற்றம் சாட்டுகின்றனர். கே.டானியல், செ.யோகநாதன், நீர்வை பொன்னையன் ஆகியோரது படைப்புகளில் சுலோகத் தன்மையைக் காண முடியாது. சமூகம் தழுவிய கலைப்பண்பு அவர்களிடம் இருந்தது. இ.முருகையன், சில்லையூர் செல்வராசன் கவிதைகளில் ஆழ்ந்த அழகியல் பண்புண்டு. அந்த வகையில், இங்கு குறிப்பிட்ட மார்க்சிய எழுத்தாளர்களது ஆக்கங்களில் சுலோகம் தள்ளுபடியானதாகவே இருக்கின்றது. நீர்வை தனித்துவமான மார்க்சியவாதி. கொல்கத்தாவில் தனது பட்டப் படிப்பை மேற்கொண்டவர். இவரது படைப்புகளில் தெளிவு ஆழ்ந்து வேரூன்றி இருக்கின்றது.

காலனியத்தை இரு வகைப்படுத்துகின்றனர். எமது மண்ணில் அது பல நிலைகளில் உண்டு. அடக்கி ஆளும் நிலை. மேட்டுக் குடியின் அடக்கியாளும் நிலை. கணவர்களால் பெண்கள் அடக்கப்படுவது. அதை எழுத்திலும் பிரசித்தப்படுத்தியவர். தவிர, மக்கள் ஒடுக்கப்படும் நிலையும் உண்டு. எழுத்தாளன் பார்வை வேறுபட்டது. நுண்மையான அலகுகளைக் கண்டு கொள்வர். பரிட்சயமற்ற விடயங்களைத் தருவர். இன, சமூக முரண்பாடுகள், எழுத்தாளரது நேரடியான REPORT ஆக விளங்கும், இப்படி எதிர்ப்புப் பேராட்டத்தில் நீர்வை பொன்னையன் நேரடியாகப் பங்கெடுத்தவர். வறுமை, சாதிய நெருக்கடிகளைக் கதைகளில் நீர்வை நுண்ணியமாகக் கொண்டு வருகிறார். அந்நியமயப்பட்ட விளைவைக் கொடுக்கின்றன. காணாத காட்சி, விநோதப்படுத்தல், மெருகூட்டல்களை கதைகளில் மிகச் செப்பமாகப் பயன்படுத்தியிருக்கிறார். குறியீடுகளாகக் கற்பனை வடிவெடுத்திருக்கிறது. மொழி சார்ந்த வடிவம் கிடைக்கிறது. லகான் கோட்பாடு மொழிக் குறியீட்டு ஐயப்பாட்டை ஆழ்மனம் சென்று தேடுவதுதான். தன்னைத் தாயின் வடிவம் எனக் குழந்தை கருதுகிறது, தானே கண்ணாடிகளைப் பார்த்த பின்தான் உண்மை நிலையை அறிந்து கொள்கிறது. இது எழுத்தாக்கத்துக்கு மிகவும் முக்கியமானது. முற்போக்கு எழுத்தாளர்கள் மிக முக்கியமானவர்கள். எழுத்தாளன் மாய்கிறார். வாசகன் மேலெழுகிறான். எழுத்தாளர் வாசகர் தளம் சமமாகும்போது குறுக்கீடுகள் எழா. வேறானால் குறுக்கீடு ஏற்படும்.

**எம்.எஸ்.தேவகௌரி**

**(விரிவுரையாளர், கொழும்பு இதழியல் கல்லூரி)**

அறிவியல் வெளிப்பாட்டை வைத்திருக்கிறோம். வாசக ரீதியாகப் படைப்புகளைப் பார்ப்பதில்லை. காலவெள்ளம் 30 ஆண்டுகால விடயங்களை அடித்து வருகிறது. ரி.ரவிவர்மன், வி.முகிலன், உ.ரகுவரன்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எஸ்.சில்மியா ஊடகத்துறையாளர்கள், பயிலுனர்கள். முகிலன் கவிஞர், ரி.ரவிவர்மன் கட்டுரையாளர், உ.ரகுவரன் இலக்கியத்தில் ஆர்வமுடையவர், எஸ்.சில்மியா கண்டியைச் சேர்ந்தவர். வடக்கு, கிழக்குப் பிரச்சினைகள் அவருக்குப் புதியவை. சிந்தனைத் திறன் மிக்க அணுகு முறை அவருக்குரியது. பிடித்ததைக் கூறுங்கள் எனத்தான் கேட்டேன். எதையும் இனங்காட்டிச் சொல்லவில்லை. தொகுப்பில் ஒரு கதை நாசூக்கானது. சாதியைத் தெரிந்தவர்களுக்குத்தான் சமபோசனம் என்னவென்பது புரியும். தெரியாதவருக்கு அது கடினந் தான். எனவே, தற்காலத்து இளைஞர் அதை எப்படி அறிந்து கொள்வர். அறிவதுக்குச் சிக்கல்தான்.

**கருத்தாடல்கள்:**
**ரி. ரவிவர்மன்**

வீடு, மூடு திரை, இந்திய அமைதிப்படையின் அட்டகாசத்தைச் சொல்கின்றன. மொழிநடை சிறப்பானது. ஊர்வாசத்தை தருகின்றன. அட்டைப்படம் 1943 இல் இந்தியாவில் வரையப்பட்டது. ஈழத்தின் சமகால நிகழ்வுகளோடு இணைத்துப் பார்க்க வைக்கின்றது. இந்தியாவிலும் அப்போது பிரித்தானிய ஆதிக்கம் இருந்தது. இங்கு இலங்கை அரசின் ஆதிக்கம். மோதகத்தைக் கொழுக்கட்டையாக 'வீடு' கதையில் நீர்வை பொன்னையன் தருகிறார். மிகவும் எளிமையான தெளிந்த நடை. அப்போது ஊடகங்கள் எதுவும் அவருக்குச் சந்தர்ப்பம் கொடுக்கவில்லை. படைப்புகளில் வெளிப்படையாகப் பிரச்சினைகளை முன் வைத்ததே இதற்குக் காரணம். 'மூடுதிரை' படைக்கப்பட்ட காலத்தில் ஆயுதத் தீர்ப்பு இருந்திருக்கின்றது.

இந்திய சமாதான படைக்காலந்தான் 265 உறுப்பினர்களைக் கொண்ட விவசாய விற்பனைப் பொருட்சங்கக்காலமும். விதை உருளைக்கிழங்கு வழங்கும் செயல்திட்டம். கந்தசாமி தலைவர். கதையின் நாயகன் .தங்கன் சங்கக் கூட்டத்துக்கு . இரண்டு விடலைகள் வந்தனர். கூட்டம் முடியும் வரை முறைத்து முறைத்துப் பார்த்துக் கொண்டு நின்றனர். அராஜகத் தன்மைதான் தோன்றியது. தங்கன் மனைவிக்கு வெள்ளைச் சீலை வருகிறது. அவர் கண்ணகியாக எழுகிறார். பொட்டு வைக்கப்பட்டுக் கம்பத்தில் தொங்குகிறார். நெற்றியில் சுடுவது பொட்டு. பூவைப்பது காதில். நாசூக்காகச் சொல்லப்படுகிறது. இது வெளிப்படையான கதை. ஆனால், சில கதைகள் கடினமானவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வி.முகிலன்

நீர்வை பொன்னையனின் படைப்புகளை முதல் முதலாக வாசித்தேன். வாசிக்க வேண்டுமென்ற ஆவலைத் தூண்டுகின்றது. ஒன்பதாவது தொகுதியை எதிர்பார்க்கிறோம். இனவாத யுத்தத்தில் பலியான எமது தாய்த் திருநாட்டின் அனைத்து மக்களுக்கும் 'காலவெள்ளம்' தொகுப்பைச் சமர்ப்பித்திருக்கிறார். சமவுடைமை மேலோங்கி நிற்கின்றது. அடுத்த தலைமுறைக்கான ஆவணமாக உதவக் கூடியது. காலவெள்ளம் கதையில் கனதி இருக்கின்றது. ஒன்பது பக்கங்களில் சொல்லப்பட்டுள்ளது. கிராம வாசனைக் கதை. மூன்று முறை வாசித்தேன். விளங்கவில்லை. பலதரப்பட்ட பிரச்சினைகள் குவிந்துள்ளன. படைப்பாளியின் ஆளுமை வெளிப்படுகிறது. புலமைத் தொடர்ச்சி இருக்கிறது. சாதியம் பேசுகிறது. உயர்சாதிக்காரனின் சேவை சொல்லப்பட்டுள்ளது. வாசகனை வசப்படுத்தக் கூடிய உத்தி. இறுதி முடிவு தெரியவில்லை. விசிறியைக் கையில் வைத்துக் கொண்டு தலையை ஆட்டுவது மேலானது. யதார்த்தம், கற்பனை கலந்தது. கவிதை வடிவமானது. 'பேய்களும் பிசாசுகளும்' இது குறியீட்டுக் கதை. பகலில் பேய் இரவில் பிசாசு. பாத்திரங்கள் பிடி கொடுக்காத நிலையில் படைக்கப்பட்டுள்ளன. வாக்கியத்தில் போர் சம்பந்தமான விடயமில்லை. சிறுவனொருவனின் வாழ்க்கை வரலாற்றை கூறுகிறது. நேர்காணல் போன்ற கதை, புதுக்கவிதை மரபுக்கு இணக்கமானது. தாழ்ந்த நிலையைச் சேர்ந்த சாதிதான் வரவேற்கிறான். சிந்திக்க வேண்டிய நிலைக்குக் கதை வாசகனைக் கொண்டு செல்கிறது.

## எஸ்.சில்மியா

நீர்வை பொன்னையன் முற்போக்குவாதி. பெருங்கடலைப் பூனை நக்கிக் குடிக்க முயல்வது போன்றதே எனது முயற்சியும். நினைத்தவற்றை மனிதன் யாருக்கும் தெரியப்படுத்த வேண்டும். நீர்வை பொன்னையன் நேர்மையாக விளங்குகிறார். 'காலவெள்ளம்,' 'தரிசனம்' நேரடியாகப் பங்கு பற்றியவை போல் தெரிகின்றது. 'தரிசனம்' இல் நகரத்தின் அமைதி சித்திரிக்கப்படுகிறது. வினா, விடையான பாணி மெச்சத்தக்கது. மக்கள் சக்தியின் பேரெழுச்சி கூறப்படுகிறது. இவைகள் ஓர் இலக்கியவாதியின் உணர்வலைகளாகவே கருத முடியும்.

ஜீவனோபாயப் போராட்டம் தெரிகிறது. போராட்ட வடிவம், சத்தியாக் கிரகத்தின் உண்மை கிடைக்கின்றது. 'தரிசனம்' பாத்திர வார்ப்பு பிரமாதம். கலகத்தை அடக்கும் பொலிஸ் அதிகாரி சௌத்ரி. அவனது கோரமுகத்துக்கு அரசாங்கப் பாராட்டுகள். புரட்சியின் தொட்டில் வங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்கிறார் படைப்பாளி. மனக்கொதிப்பை வாக்கியத்தில் உணர்த்தியுள்ளார். சொல்வதைத் திரும்பக் கூறல் பெருங்குறை அல்ல. ஆனால் நீக்கினால் படைப்புச் சிறப்பாக அமையும். காந்தி சிலைக்கு உயிரூட்டுகிறார் கதாசிரியர். வசன நடை ஆசிரியத்துவத்தின் மகிமையை வெளிக்காட்டுகிறது. 'போலிகள்' கதை திண்ணைப் பள்ளிக்கூடத்துக்குப் பொருத்தமானது. நவீன காலத்துக்குப் பொருந்துமா? என்ற கேள்வியை எழ வைக்கின்றது.

## உ. ரகுவரன்

'காவியமானான்' சிறுகதை மலையகத்தவரின் உழைப்பைப் பேசுகிறது. இளைஞரது வளர்ச்சியை அறிய வைக்கின்றது. தனக்கு மேலாக வந்து விடுவான் என்ற காரணத்துக்காகத் தளபதி தன் கீழுள்ள வீரனைச் சுடுகிறார். ஊருக்கு உடல் வருகிறது.மூத்த தளபதி சுடுவது செயற்கையானது. கதையோட்டம் இயல்பாக இருக்கின்றது. கதைக்குள் இடதுசாரியத் தன்மை நிற்கின்றது. இலங்கை இடதுசாரிகள் இனப்பேராட்டத்தை ஏற்கவில்லை. அதிகமாகச் சாடுகின்றனர். போராட்டம் தவறானதா? என்ற வினா எழுகின்றது. போராடிச் செத்தால் நல்லது. அரசியல் பற்றாக்குறை விமர்சனங்களை முன் வைக்கின்றனர். போராட்டத்தைக் கதை கிண்டல் அடிக்கின்றது. மொழிநடை இலகுவானது. தெளிவானது. தற்போது மக்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்த வேண்டும். 'தெளிவு' குடும்ப அமைப்பின் சிதைவை உணர்த்துகிறது. போட்டிகளை வெளிக்கொணர்கிறது. யாழ்ப்பாணச் சமூகத்துக்கு இது எப்படிப் பொருந்தும்? சினிமாப் பாணி இருக்கின்றது. மேசன் கதாபாத்திரம் எவ்வளவுக்குப் பொருத்தமானது?

'முனைப்பு' இதில் நல்ல மொழி நடை உண்டு. நீர்வையின் வங்கதேசப் படிப்பு அனுபவ விபரிப்பாக இருக்கின்றது. வெளிநாட்டு மாணவர்கள், வங்கதேசத்தில் இடதுசாரி இயக்கங்களில் இருந்திருக்கின்றனர். அங்கும் அப்போது பல போராட்டங்கள் நடந்துள்ளன. பிடல் காஸ்ட்ரோ, சேகுவேரா கொள்கை நிலைப்பாடுகள் இருந்துள்ளன. இப்போ குறைந்தளவிலுள்ளது. இதற்குக் காரணம் இன்றைய இடதுசாரிகளிடம் காணப்படும் குறைபாடுகளே! 'காலவெள்ளம்' என்ற தலைப்பும் பொருத்தமானது. பண்பாடு, கலாசாரத்தை கண்ணாடி போல் வெளிப்படுத்துகிறது. சொல்லும் பாணி சிறப்பானது. இன்றைய சந்ததிக்கு மூத்த எழுத்தாளரது கதை அனுபவங்கள் தேவை. இடதுசாரி எழுத்தாளரது எழுத்துக்களில் சின்னக் குறைபாட்டைக் காண முடிகிறது! சொந்த அரசியல், எல்லை மீறித் தலை நீட்டுகிறது. இது பலவீனம், படைப்புக்குச் சிதைவை ஏற்படுத்தும். இம்மாதிரியான தொகுப்புகள் மேலும் வெளிவர வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆய்வுரை: 'நீர்வையின் படைப்பாளுமை வளர்ச்சி'
## திக்குவல்லை கமால்

ஊடகவியல் இளம் பயிலுநர்கள் துணிச்சலாகச் சொன்னார்கள். அவர்கள் வாசித்த முதல் சிறுகதைத் தொகுதி இது. ஊடகவியல்துறை பொறுப்புகளை உணர வேண்டும். ஊடகத்துக்குரிய முக்கிய பண்பு இதுவாகும். தேவகௌரி வழி நடத்தலில் இக்கருத்தாடல் அமைந்தது, பெருமையைத் தருகிறது. நீர்வையை விட்டுவிட்டு ஈழத்துப் படைப்புகளைப் பேச முடியாது. வாழ்க்கை ஒருவிதம். படைப்பு இன்னொரு விதம். நீர்வையும் பாதிப்புக்குள்ளானவர். அவரது பெயரும் பொன்னையா எனப் பதியப்படவில்லை பொன்னையன் எனவே, பதிந்து காட்டியுள்ளார். எதிர்ப்பிலக்கியவாதியாகப் பேனாவைக் கையிலெடுத்தார்.

மார்க்சியம் கை கொடுத்தது. கம்யூனிஸ்ட் கட்சியின் முழு நேர ஊழியர். பாதிக்கப்பட்டோருக்கு உதவுகிறார். 60 ஆண்டுகளாக இதே நிலைதான். வெவ்வேறு கட்டங்களை முன்னோக்கினார். ஆரம்பத்தில் ஜனரஞ்சகச் சிறுகதைகளைப் படைத்தார். முற்போக்கு எழுத்தாளர் சங்கம் மார்க்சிய அடிப்படையானது. நீர்வை 1940, 1950,1960 களில் படிப்படியான வளர்ச்சியைத் தொட்டார். நீர்வை போன்ற முற்போக்கு எழுத்தாளர்கள் எடுத்த முயற்சிகளால் ஈழத்துப் படைப்பாளிகள் மத்தியில் பட்டுக்கோட்டை பிரபாகர் போன்றோரைக் காண முடியாது. நீர்வையின் 'மேடும் பள்ளமும்' சிறுகதைத் தொகுதியைப் படித்துவிட்டுத் திகைத்தேன். பிரமித்தேன். கதைகள் விடுபடாமல் என்னோடு இருந்தன. எழுத்துப் போக்குகளில் அரசியலைக் கண்டுள்ளோம். சுதந்திரம் ஒரே தன்மையானதல்ல. சாதிய ஏற்றத்தாழ்வைச் சரியென ஏற்றனர். வர்க்கப் பிரச்சனையையும் ஏற்றனர். எழுத்தாளர் மேலாதிக்கத்தால் பாதிக்கப்பட்டனர். படைப்புகள் ஏராளமாக வந்தது. நிதானமான படைப்புக்களை ஆரம்ப காலத்தவரால் தான் செய்ய முடியும்.

இளங்கீரன், கே.டானியல், பெனடிக்ற் பாலன், காவலூர் ராஜதுரை, என்.கே.ரகுநாதன் இவர்கள் காலத்திலும் எழுதி இன்று வரை எழுதிக் கொண்டிருக்கும் ஒரே எழுத்தாளர் நீர்வை பொன்னையன் தான். தொகுப்பில் 2 மாணவ காலத்துக் கதைகள், 2 பல்கலைக் கழககாலத்துக்க கதைகள், ஆசிரிய, மற்றும் போர்க்கால அனுபவக் கதைகள் 5 இருக்கின்றன. உள்முரண்பாட்டுச் சித்திரிப்பே முக்கிய விடயமாக இருக்கின்றது. இன்னமும் சொல்லப்படாத விடயங்கள் கதைகளில் சொல்லப்பட்டன. மக்கள் சக்தியே மகா சக்தி என்பதைக் கனம் பண்ணுகிறது. கதை அமைப்பில் வித்தியாசமுண்டு. கவிதை போன்ற வசனங்கள்; ஆனால், அவைகள் வசனமல்ல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கியத்தை வாசித்தால் விளங்க வேண்டும். நீர்வையின் மொழி நடை முன்னோடி மொழி நடை எனலாம்.

**கேட்போர் கருத்துரைகள்:**

**கே. விஜயன் (படைப்பாளி)**

நமக்கிடையில் திறனாய்வு முறை குறைவு. கொம்யூனிஸ்ட் ரஷ்யாவின் ஸ்ராலின்நடைமுறைகளால் கொம்யூனிசம் விமர்சனத்துக்குள்ளாகிப் பாதிக்கப்பட்டது. இதே வகையில்தான் பயங்கரவாதத்தையும் குறைத்து மதிப்பிடுகிறோம். ரகுவரன் போராட்டத்தைக் கிண்டல் பண்ணுவதாகச் சுட்டிக்காட்டினார். சாசகப் பார்வை வேறானதென்பதை விளங்கிக் கொள்ள வேண்டும்.

**கவிஞர் ஏ.இக்பால்**

யதார்த்தம் படைப்புக்கு மிகவும் முக்கியமானது. இலங்கையர் கோன் கதைகள் முற்போக்கானவை அல்ல. யதார்த்த மற்றவை நின்று பிடிக்கா. கூறியதைக் கூறத்தான் வேண்டும். தேவைப்படும்போது, அனுபவம் சகல விடயத்துக்கும் இடம் கொடுக்கும். நீர்வை யதார்த்தமாகப் படைத்திருக்கிறார்.

**டாக்டர் எம்.கே.முருகானந்தம்**

தொகுப்பின் கதைகள் வயதுக்கேற்ற சிந்தனைகளை வெளிப்படுத்துகின்றன. வித்தியாசமான கருத்துக்கள் கிடைக்கின்றன. போராட்டத்தின் ஒரு பக்கந்தான் எல்லோருக்கும் தெரியும். அதனோடு வாழ்ந்தோருக்குத் தான் சகலதும் விளங்கும். நீர்வையின் சில கதைகளைப் பத்திரிகைகள் வெளியிட மறுத்தன. எதிர்த்து நிற்பதே நீர்வைக்கு முக்கியமானது.

*தடம்பதித்த இலக்கியத் திறனாய்வாளர் மு.பொன்னம்பலம் (மு.பொ.) சில கதைகளின் கட்டமைப்புக் கருத்தாடலில் கூறியது போல் கவிதையல்ல. அந்த வடிவமைப்பு வசனந்தான் என்றார். எஸ்.ஆர்.பாலசந்திரனும் கருத்துரைத்தார்.*

**ஏற்புரை:**

**நீர்வை பொன்னையன்**

எனது சிறுகதையான 'வேட்கை'ஐப் பத்திரிகையொன்றுக்குக் கொடுத்தபோது பிரசுரிக்கவில்லை. அதேமாதிரி நான் எழுதிய சில

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதைப் பிரதிகள் திருப்பி அனுப்பப்பட்டிருக்கின்றன. இயக்கத்தைக் கிண்டல் செய்யும் தொனி இருப்பதாகக் கூறப்பட்டது. நான் குறை சொல்லவில்லை. இயக்கத்தின் பேரால் ஏற்படுத்தப்பட்ட தவறுகளைச் சுட்டிக்காட்டத்தான் வேண்டும். மக்களது அனுபவங்களைத் தெரியப்படுத்த வேண்டும். மக்கள் கடத்தப்பட்டனர். கொல்லப்பட்டனர். போராட்டத்தைக் கொச்சைப்படுத்தவில்லை. கதையில் சுட்டதாகக் காட்டியிருப்பது உண்மைதான். மக்களது வளங்களைப் பறித்து, அனுபவித்து அவர்கள் சிதைத்தனர்.

**தொகுப்புரை:**

**தலைவர் பேராசிரியர் சபா ஜெயராசா**

இங்கு கருத்தாடலில் பங்கு பற்றிய இளைஞர்கள் மிகத் துணிவாகக் கருத்துகளை முன் வைத்தனர். அவர்கள் இன்னும் வளர வேண்டும். கதைகள் எல்லாமே உச்சமாக அமையவில்லை. கூந்தல் கறுப்பு, குங்குமம் சிவப்பு என்ற கண்ணதாசன் கவிதைக்கு இப்போ விமர்சனங்கள் எழுந்துள்ளன. படைப்பு சொல்லாடலைப் பயன்படுத்தும்போது அழகியல் சிதறாது. கூடுதலாக மார்க்சியம் தென்பகுதி பல்கலைக் கழகங்களாலேயே கவனிக்கப்படுகிறது. தென்பகுதி மீண்டும் மார்க்சியத்துக்குச் செல்ல வேண்டும். வடக்கில் மார்க்சியம் இல்லை. இலக்கியம் சிறந்த வழிகாட்டி.

இலங்கை முற்போக்குக் கலை, இலக்கிய மன்றம் இந்நிகழ்வை ஏற்பாடுசெய்திருந்தது.

- 01.11.2010

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 23

## ‘நீலாவணன் காவியங்கள்’

ஈழத்துக் கவிதையை நவீனப்படுத்திய கவிஞர்களுள் நீலாவணனின் பாரிய பங்களிப்பும் பேசத்தக்கது. கிழக்கிலங்கைக் கல்முனைப் பிரதேசத்தில் பல கவிஞர்கள் உருவாக உந்து சக்தியாக இருந்தவர். கவிதை நாடகங்களை உருவாக்கித் தானும் மேடையில் நடித்தவர். இத்தகைய ஆற்றல் மிக்க நீலாவணனின் மூன்று காவியங்களை ‘நீலாவணன் காவியங்கள்’ என்ற பெயரில் அழகிய நூலாக்கி அவரது மகன் எழில்வேந்தன் வெளியிட்டுள்ளார். இதன் வெளியீட்டு விழா 20.11.2010ஆம் திகதி கொழும்புத் தமிழ்ச்சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில் நடைபெற்றது. கலாநிதி எம்.ஏ.நுஃமான்( ஓய்வு நிலைப் பேராசிரியர்) தலைமை வகித்தார். நீலாவணனின் மனைவியார் அழகேஸ்வரியும் நிகழ்வில் பிரசன்னமாகவிருந்தார்.

கலை, இலக்கியம், சமூகப் பணிப் பிரமுகர்கள் மங்கல விளக்கேற்றி நிகழ்வைத் தொடக்கி வைத்தனர். மூத்த எழுத்தாளர் பத்மா சோமகாந்தன் தமிழ் வாழ்த்துப் பாடினார்.

**வரவேற்புரை:**

**பிரபல ஒலிபரப்பாளர் எஸ்.எழில்வேந்தன்**

ஈழத்து நவீன கவிதை முன்னோடிகளில் ஒருவரான, எனது அப்பா கவிஞர் நீலாவணன் இறந்தபோது அவரது ஒரு நூல் கூட வெளியிடப் பட்டிருக்கவில்லை. அவர் மரணித்து 35 ஆண்டுகள் நிறைவு பெற்றுவிட்டன. வெளிவந்த முதல் நூல் ‘வழி’. இதன் பின்னர் 20 ஆண்டுகளாக ஒரு நூல்கூட வெளிவரவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முழுமை பெறாதிருந்த 'வேளாண்மை' காவியத்தை எழுத்தாளர் வ. அ. இராசரெத்தினம் வெளியிட்டார். 'பட்டமரம்' காவியம் 1957இல் ஈழகேசரியில் வெளிவந்தது. 'நீலாவணன் காவியங்கள்' என்ற இந்த நூலை நான்கு மாதத்துக்குள் அச்சிட்டு வெளியிட்டோம். இதற்குக் கலாநிதி எம்.ஏ.நுஃமான் அதிக உற்சாகம் தந்தார். சாந்த ஹோரத் அட்டைப் படத்தை அமைத்துத் தந்தார். சிங்களக் கலை, இலக்கிய அபிமானிகள் தமிழ்ப் படைப்புகள் சிங்களத்திலும் வெளிவர வேண்டுமென விரும்புகின்றனர்.

**தலைமையுரை:**
**கலாநிதி எம்.ஏ.நுஃமான்**

நீலாவணன் வாழ்ந்த காலத்தில் அவரது நூல்கள் வெளிவராதது. துக்ககரமானதே. அவர் மறைந்தும் 36 ஆண்டுகளாகிவிட்டன. 1982இல் வ.அ.இராசரெத்தினம் 'வேளாண்மை' காவியத்தை நூலாக்கி வெளியிட்டார். பின்னர் 19 ஆண்டுகளாக எதுவுமே வெளிவரவில்லை. பல சிரமங்களுக்கு மத்தியில் அவர் மகன் எழில்வேந்தன் நூல்களை வெளியிடுகிறார். இது 'மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி இவன் தந்தை என்னோற்றான் கொல் எனும் சொல்' என்ற திருக்குறளைத் தான் நினைவுபடுத்துகிறது. 'ஒத்திகை' 2001 இல் வெளிவந்தது. சிறுகதைகள் உருவகக் கதைகளைத் தொகுத்து எழில்வேந்தன் 2003 இல் வெளியிட்டார். கவிதை நாடகங்களும் வெளிவந்தன. இப்போது இங்கு வெளியிடப்படும் 'நீலாவணன் காவியங்கள்' அவரது ஐந்தாவது நூல். நீலாவணன் எழுதிய அனைத்தும் இன்னமும் நூலாக்கப்படவில்லை. பத்திரிகைக் கவிதைகளும் உண்டு.

நீலாவணன் சிறந்த கட்டுரையாசிரியராகவும் விளங்கினார். அவரது இலங்கையர் கோன் நினைவுக் கட்டுரை நூலாக்கப்பட வேண்டும். இலக்கியக் கடிதங்களைத் தொகுத்து வெளிவிட வேண்டும். 'வழி' நூல் இப்போது கிடைப்பதில்லை. அதன் மறுபதிப்பு வெளிவர வேண்டும். முழு எழுத்துக்களும் வெளிவந்தால் தான் நீலாவணனின் பூரணமான இலக்கிய ஆளுமையை முழுமையாகப் பார்க்க முடியும். உண்மையில் இது மிகவும் பாரிய பணிதான். ஆனால் இதையொரு தமிழ் இலக்கிய வரலாற்றுக் கடமையாகக் கருதிச் செய்ய வேண்டும். வேறு நாடுகளில் பழையவற்றைத் தேடி எடுக்கின்றனர். அத்தகைய வாய்ப்புகள் தமிழ் எழுத்தாளருக்குக் கிடைப்பதில்லை. ஈழத்தைப் பொறுத்த வரையில் எழுத்தாளர்கள் துர்ப்பாக்கியசாலிகளே. பிள்ளைகள், மனைவிமார் தான் இதைச் செய்ய வேண்டியிருக்கின்றது. மஹாகவியின் நூலை நான் வெளியிட்டேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மு.தளையசிங்கத்தின் எழுத்துக்களை அவர் சகோதரர் மு.பொன்னம்பலம் (மு.பொ.) வெளியிடுகிறார். சில்லையூர் செல்வராஜன் படைப்பை அவரது மனைவி கமலினி செல்வராஜன் வெளியிட்டிருக்கிறார். இப்படியாக வாரிசுகளோ குடும்பத்தினரோ இதைச் செய்ய வேண்டியுள்ளது. மு.சடாட்சரனின் ஒரேயொரு நூலே வெளிவந்துள்ளது. அதேபோல் இலங்கையர்கோன் நூலும் இதுவரை ஒன்றுதான் வெளிவந்துள்ளது. அ.ந.கந்தசாமி இறந்து 40 ஆண்டுகளாகிவிட்டன. இன்னும் ஒரு நூல் கூட இல்லை. பாண்டியூரானின் நூலும் இன்னும் இல்லை.

எழுத்தாளர் ஆக்கங்கள் நூலாக்கப்படாவிட்டால் பாரம்பரியம் தெரியாது போய்விடும். இதற்கான அச்சுப்பதிப்பகம் ஒன்று எமக்குத் தேவை. இத்தகைய இலாபகரமற்ற வேலைகளைத் தனியார் அச்சகங்கள் பொறுப்பேற்றுச் செய்யா. தமிழ் நாட்டில் 300 கோடி ரூபா செலவில் செம்மொழி மாநாட்டை நடாத்தினர். என்ன பிரயோசனத்தைக் கண்டனர்.? நான் அதற்கு போகவில்லை. ஜனவரியில் (2011) சர்வதேசத் தமிழ் எழுத்தாளர் மகாநாடு இங்கு நடக்க இருக்கின்றது. புலம்பெயர்ந்த தமிழ்ச் சமூகத்தினரிடம் இதற்கு எதிர்ப்புண்டு. இவற்றில் சிலுசிலுப்புத்தான் உண்டு. தமிழ் வளர்ச்சிக்காக எவ்வளவோ செய்ய இருக்கின்றது. அவைகளைச் செய்யலாம். எவ்வளவோ எழுத்தாளர்களது நூல்கள் வெளியிட இருக்கின்றன. புலம்பெயர்ந்த தமிழர்கள் இதற்காகப் பதிப்பகமொன்றைத் தொடக்கலாம்.

சர்வதேச எழுத்தாளர் மகாநாட்டின் செயல் திட்டங்களில் இதுவுமொன்றாக அமையலாம். மறைந்த எழுத்தாளர்களது படைப்புகளைக் கொண்டு வர வேண்டும். தமிழ்ப் படைப்புகளைப் பிறமொழிகளுக்கு மாற்ற வேண்டும். இவைகளைச் செய்து முடிக்க ஒரு பொதுப் பதிப்பகம் தேவை. இதை ஒரு வேண்டுகோளாக முன் வைக்கிறேன்.

நீலாவணனோடு சேர்ந்த பின்தான் எழுதத் தொடங்கினேன். அவருக்கு இலக்கியப் பசி இருந்தது. உலக இலக்கியங்கள் மற்றும் தமிழ் இலக்கியங்களில் அனுபவம் இருந்தது. பரந்த வாசிப்பு இருந்தது. அவரிடமிருந்து நாமும் இலக்கியத்தை அறிந்து எழுத்தாளரானோம். ஓர் இலக்கியப் பாரம்பரியத்தைக் கட்டி எழுப்பினார்.

மிக மிக முக்கியமான கவிஞர் நீலாவணன். நவீன கவிதையில் முக்கிய ஆளுமை கொண்டவர். பன்முகப்பட்ட கவிதைத் திறமையுடையவர். ஈழத்து நவீன கவிதையின் மூலக் கவிகள் மஹாகவி, இ.முருகையன், நீலாவணன் ஆகியோர் என ஈழத்து நவீன கவிதை வரலாறு பேசுகின்றது. நீலாவணன் கவிதை ஆற்றலை ஒரு சட்டகத்துக்குள் அடக்க முடியாது. ஆன்மீகம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யதார்த்தம், காதல், சமூகம் ஆகியவை குறித்துப் பாடினார். இருபத்திரெண்டு வருடங்களாக எழுதினார். 44ஆவது வயதில் காலமானார். மேதைமைக்கு அற்பாயுசென்ற விதியாக்கும்! மஹாகவி இறந்தபோது 44 வயது. மேதைகள் சின்ன வயதிலேயே இறந்து விடுகின்றனர். நீலாவணன் குறுகிய காலத்தில் சாதித்தது மிக அதிகம். தொடர்ந்து எழுதினார். 1974 வரை எழுதினார். அவரது சிறுகதையை 'ஈழகேசரி' வெளியிட்டது. தனக்கென்றொரு பாணியை வகுத்து எழுதினார். 'நீலாவணன் காவியங்கள்' என்ற இந்த நூல் மிக அற்புதமாக, குறைவான பிழைகளோடு வந்திருக்கிறது. நீலாவணன் எழுதிய கவிதை வரியொன்று மாற்றப்பட்டு வேறாக இருக்கிறது. அவர் எழுதியவாறே விட்டிருக்கலாம். அக்காலத்தில் பயன்படுத்தப்படாத சொற்களைத் தனது படைப்புகளில் பாவித்தார். இப்போ நிறையப் புத்தகங்கள் வந்து கொண்டிருக்கின்றன. உருப்படியாக வெளிக் கொணர்வது சிரமம். இந்நூலின் விலை 300 ரூபா தான். ஒரு நேரச் சாப்பாட்டுக்குப் போதாத காசு.

## நூல் அறிமுகவுரை:
## செங்கதிரோன், த.கோபாலகிருஷ்ணன்

கவிஞர் நீலாவணன் கல்முனையில் கவிதைப் பட்டாளமொன்றை உருவாக்கினார். அஷ்ரப் கவிதைத் தொகுப்பு முன்னுரையில் நீலாவணன் பிறந்த கல்முனை மண்ணில் அவரை மிஞ்சி வேறொரு கவிஞர் தோன்றவில்லை என எழுதப்பட்டிருக்கின்றது. பட்டமரம், வடமீன், வேளாண்மை காவிய மரபுக்கு உட்பட்டவை. காவியத்துக்கு உரையாசிரியர் விளக்கங்கள் தேவைப்பட்டன. புதிய வடிவங்கள் நவீன இலக்கிய காலத்தில் தோன்றின.

'பாஞ்சாலி சபதம்' மகாகவி சுப்ரமணிய பாரதி பாடினார். பாரதிதாசன் போன்றோரும் பாடினர். கவியரசர் கண்ணதாசன் 'யேசுகாவியம்' பாடினார். கவிஞர் ஜின்னாஹ் ஷரிபுத்தீன், காவியங்கள் பாடியுள்ளார். காவியங்கள் இதிகாச அடிப்படையானவை, மன்னர் பாட்டுடைத் தலைவர் போன்றோர் இவைகளில் காணப்படுவர். ஈழத்து நவீன கவிதைப் போக்கில் மஹாகவி, இ.முருகையன், நீலாவணன் ஆகியோர் முக்கியம் பெறுகின்றனர். 'பட்டமரம்' காவியத்தை நீலாவணன் 39 வெண்பாக்களில் 1956 இல் பாடினார். 'ஈழகேசரி'ப் பத்திரிகையில் வெளியானது. வெண்பா பாடுவது மிகவும் கஷ்டமானது. பெரியதம்பிப்பிள்ளை புலவர், புலவர் ஆ.மு.ஷரீபுதீன் ஆகியோர் ஈழத்தில் வெண்பாவுக்கு முக்கியமானவர்கள், பெயர் பெற்றவர்கள். இன்னும் ஒரு சிலர் இருக்கவே செய்கின்றனர். கனகரெத்தினம், ஜின்னாஹ் ஷரிபுத்தீன் ஆகியோரைச் சுட்டலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீலாவணன் தனது கன்னிக் காவியமான 'பட்டமரம்' ஐ வெண்பாவில் பாடினார். வித்தியாசமான வெளிப்பாடாக இருந்தது. பட்டமரம் கதை சொல்லியாக விளங்குகிறது.

கொழும்பில் வாழும் யாழ்ப்பாணத்துப் புதுமணத் தம்பதிகளின் பால் உணர்வுகளை எடுத்துக் காட்டுவது 'வடமீன்'. 47 விருத்தப்பாக்களில் காவியம் படைக்கப்பட்டுள்ளது. எஸ்.பொன்னுத்துரை (எஸ்.பொ.) இத்தகைய உணர்வுகளைக் கையாண்டு 'சடங்கு' நாவலைப் படைத்திருக்கிறார். 'வடமீன்' காவியத்தை நீலாவணன் தமிழ்ப் பண்பாட்டைப் பாதிக்காத வகையில் பாடி உள்ளார். இது இன்னமும் முற்றுப் பெறாத காவியமாகவே இருக்கின்றது.

நீலாவணனை வாசகர் மத்தியிலும் காவிய உலகிலும் பேச வைத்தது 'வேளாண்மை'. மட்டக்களப்பு வாழ்க்கைச் சித்திரிப்பை இக்காவியத்தில் பார்க்கலாம். இரு பகுதிகளாகப் பிரித்துப் படைத்துள்ளார். இதற்கு வ.அ.இராசரத்தினம் முன்னுரை எழுதியிருப்பது பொருத்தமாகவுள்ளது.

எளிதான பதங்கள். சிறப்பான சந்தம். பொதுசனம் விரும்பும் மெட்டு. இதில் பாரதியின் நோக்கை நீலாவணன் நிறைவேற்றி இருக்கிறார்.

வேளாண்மைக்கு மழை அவசியம். இன்று கொழும்பில் கொட்டிக் கொண்டிருக்கும் மழை அதையே புரிய வைக்கின்றது. இக்காவியத்தை மட்டக்களப்பைத் தரிசிக்கப்படைத்திருக்கிறார். கொழும்பு தமிழ்ச்சங்கம் 1998இல் கவிஞர் வாரத்தை கொண்டாடி ஈழத்துக் கவிஞர்களை மேன்மைப்படுத்தியது. இதில் நவாலியூர் சோமசுந்தரப் புலவர் போன்றோருடன் நீலாவணனின் இலக்கிய ஆளுமைகளும், விதந்து பேசப்பட்டது. கொழும்பு தமிழ்ச் சங்க ஏற்பாட்டில் நடைபெறும் நூல் நயம் நிகழ்ச்சியில் நான் நீலாவணன் கவிதைகளின் நயம் குறித்துப் பேசினேன். சோ.தேவராசா, ஜின்னாஹ் ஷரிப்புத்தீன் ஆகியோர் வேளாண்மையின் தொடர்ச்சியை எழுதும்படி கேட்டனர். 'விளைச்சல்' என்ற தலைப்பில் 'ஓலை' தமிழ்ச் சங்க ஏட்டில் எழுதி வந்தேன். 'ஓலை' இப்போ நின்று விட்டது. நான் எழுதியது விரைவில் நூலாகும்.

*'நீலாவணன் காவியங்கள்' நூலின் முதல் பிரதியைத் திருமதி அழகேஸ்வரி நீலாவணனிடமிருந்து, சமூக சேவையாளரும் சட்ட ஆலோசகருமான கே.எம்.தர்மராஜா, புரவலர் காசிம் உமர் ஆகியோர் பெற்றனர். சிறப்புப் பிரதிகளும் கலை, இலக்கிய, பொதுப் பணிப் பிரமுகர்களுக்கு வழங்கப்பட்டன. அட்டைப் படத்தை வடிவமைத்த சாந்த ஹேரத் பொன்னாடை போர்த்தி, மாலை அணிவித்துக் கௌரவிக்கப்பட்டார்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஆய்வுரை:**
**றமீஸ் அப்துல்லாஹ்**
**(சிரேஷ்ட விரிவுரையாளர்)**

கவிஞர் நீலாவணன் கிழக்கிலங்கையின் நவீன கவிதை முன்னோடி ஈழத்தில் நவீன கவிதை மரபு 1940 இல் முன்னெடுக்கப்பட்டது. யாழ்ப்பாணத்தில் மஹாகவி, கிழக்கிலங்கையில் நீலாவணன் முன்னோடிகளாக இருந்தனர். தனித்துவமான இடம் காவிய மரபுக்குண்டு. சோழர் காலமே காவிய காலமெனப்படுகிறது. பாரதியின் 'பாஞ்சாலி சபதம்' காவியத்தில் குறிப்பிடத்தக்கது.

நவீன காவியத்தின் அடிப்படை எளிமையும், ஓசையும்; மற்றது மொழி. காவியத்தை நெடுங்கவிதை எனவும் குறிப்பிடுவர். FICTION அதாவது புனைவு சார்ந்த நாவல், சிறுகதை, நெடுந்தொடர் அனைத்துமே நவீன இலக்கிய வடிவங்கள். குறும் காவியமும் நெடுங்கதையே. சண்முகம் சிவலிங்கத்தின் முன்னுரையில் முரணுண்டு. நவீன கவிதை முன்னோடிகள் நால்வர். கலாநிதி எம்.ஏ.நுஃமானையும் சேர்க்கத்தான் வேண்டும். நாட்டார் மரபிலும் காவிய மரபுண்டு. நாட்டார் காவிய மரபுக்கு 20ஆம் நூற்றாண்டு முக்கியமானது. அதிலும் பல காவியங்களுண்டு.

கவிஞர் நீலாவணன் இயற்கையைப் பாடவில்லை. சமூக வாழ்வின் யதார்த்தத்தைப் படம் பிடித்துக் காட்டியுள்ளார். மானுடத்தைப் பாடியுள்ளார். 'பட்டமரம்' காவியத்தில் சமூக விழுமியத்தின் வெளிப்பாடு உண்டு. குறியீடாகச் சொல்லப்படுகிறது. கேள்விகளை எழுப்புகின்றது. இதற்குள் 'பண்ணையார்' என்ற சொல்லாட்சி எப்படி வந்தது? இந்திய மரபின் சொல்லாட்சி இருக்கின்றது. இளமைக் காலத்தில் படைக்கப்பட்டது. தேசிய உணர்வு இல்லை. பணம் ஊடகத்துறையை பாதித்தைச் சொல்லியிருக்கிறார். வெண்பா யாப்பு மிகவும் அற்புதமாக இருக்கின்றது.

குறியீடு மிகவும் முக்கியமாகின்றது. 'வடமீன்' தமிழில் அருந்ததி நட்சத்திரமெனவும் சொல்லப்படுகிறது. மிகவும் அற்புதமாக வார்த்துள்ளார். கு.ப..ரா.என்ற தமிழகத்துப் படைப்பாளியின் 'கனகாம்பரம்' என்ற சிறுகதையில் காணப்படும் சிக்கல் போல் யாத்திருக்கிறார். இதில் பெண்கள் பற்றிய பார்வை உண்டு.

கிழக்கிலங்கை வாழ்க்கை முறையைத் தொடும் 'வேளாண்மைக்' காவியம் நீலாவணன் படைப்புகளில் மிக முக்கியமானது. புதிய உவமானங்கள் காணப்படுகின்றன. பறவை எச்சம் துர்ரதிஷ்டத்தை வெளிப்படுத்துகிறது. சொல்லாட்சி மிக அற்புதமாக இருக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காவியத்துள் கிராமிய விவசாய சமூக தொழில் முறைக் குடும்ப வாழ்க்கையைக் கொண்டு சென்றுள்ளார். கிழக்கிலங்கையின் வேளாண்மை தொழில் வாய்ப்பு என்பன சொல்லப்பட்டிருக்கின்றன. காவியத்துக்கும் நாட்டார் இலக்கியத்துக்கும் இடையில் இணக்கம் உண்டு. காதல் பண்புண்டு. நாட்டார் பாடல் ஆய்வுக்குச் சரியான வழியைக் காட்டியுள்ளார். நாட்டார் மரபு துலாம்பரமாக வெளிப்படுகிறது. இந்நூலொரு பெரிய ஆவணம்.

*காந்தன் எழில்வேந்தன் நன்றியுரை கூறினார்.*

- 03.12.2010

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 24

## 'ஊருக்கு நல்லது சொல்வேன்'

'தினக்குரல்' பிரதம ஆசிரியர் வீ.தனபாலசிங்கம் எழுதி வெளிவந்த தினக்குரல் பத்திரிகை ஆசிரியத் தலையங்கங்கள் 100 அடங்கிய 'ஊருக்கு நல்லது சொல்வேன்' என்ற நூல் 05.12.2010 ஆம் திகதி கொழும்பு தமிழ்ச்சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில் கோலாகலமாக வெளியிடப் பட்டது. உச்சநீதிமன்ற முன்னாள் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் தலைமை வகித்தார். நாடறிந்த ஊடகவியலாளர்கள், பொதுப் பணியாளர்கள் மங்கல விளக்கேற்றி விழாவைத் தொடக்கி வைத்தனர்.

திருமதி சொர்ணலதா தமிழ் வாழ்த்துப் பாடினார்.

**வரவேற்புரை:**
**அந்தனி ஜீவா**

தினக்குரல் பிரதம ஆசிரியர் வீ. தனபாலசிங்கத்தை மக்கள் எப்படி நேசிக்கிறார்களென்பது இம் மண்டபத்தில் நிறைந்திருப்போர் மூலமாக அறியக் கூடியதாக இருக்கின்றது. புரவலர் புத்தகப் பூங்கா வெளியீடுகளுக்கு 'ஊருக்கு நல்லது சொல்வேன்' சிகரமாக அமைகின்றது. ஒரு வித்தியாசமான நூல். பத்திரிகை ஆசிரியத் தலையங்கங்கள் மிக மிக முக்கியமானவை. சமூகத்தை நல்வழிப்படுத்துபவை. அவைகளில் தீர்க்கதரிசனமான பார்வை இருக்கும். ஆசிரியர் தலையங்கங்களை வாசிப்பது மிகவும் குறைவுதான். அரசியல் கற்கும் மாணவருக்கு இவை மிகவும் உதவக் கூடியவை. உயர்கல்வி கற்கும் மாணவர்கள், பாடசாலை ஆசிரியர்கள் ஆகியோருக்குப் பெரிதும் உதவக்கூடிய பெறுமதி வாய்ந்தவை. இது போன்ற விடயங்களையுடைய நூல்கள் தமிழில் வெளிவருவது மிகவும் குறைவு. 'ஈழநாடு' பத்திரிகையின் ஆசிரியராக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விருந்த சபாரத்தினம், தான் எழுதி வெளிவந்த தலையங்கங் களைப் புத்தகமாக்கியுள்ளார். அதைக் கொழும்புத் தமிழ்ச்சங்க நூலகத்தில் பார்க்கலாம்.

அது வெளிவந்த காலகட்டம் வித்தியாசமானது. ஊரடங்குச் சட்டம் நடைமுறையிலிருந்த கால கட்டம். ஆனால், இந்நூல் வெளிவரும் கால கட்டம் அப்படியானதல்ல. ஆசிரியத் தலையங்கங்களில் எழுத்தாளர்கள் பற்றிய விடயங்கள் வருவது குறைவு. ஆனால். தனபாலசிங்கத்தின் இந்நூலில் கவிஞர், எழுத்தாளர் சம்பந்தமான தலையங்கங்களும் காணப்படுகின்றன. கிரிக்கெட் விளையாட்டு வீரர் முரளீதரன் பற்றியும் எழுதப்பட்டுள்ளது. அமைச்சர் வாசுதேவ நாணயக்கார குறித்து எழுதியிருப்பது உன்னதமானது. அதை மொழிபெயர்த்துத் தரும்படி அமைச்சர் கேட்டார்.

*பிரதம அதிதியாக அழைக்கப்பட்டிருந்த பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி தவிர்க்க முடியாத காரணத்தால் வராததால் அவரது தொலைபேசி மூலமான அவரின் வாழ்த்துச் செய்தி ஒலிபரப்பப்பட்டது. ஊருக்கு நல்லது சொல்வேன் தமிழர் வரலாற்று நோக்கில் வாசிப்பதற்கான மிகப்பெரிய நூலெனவும் சிங்கள மக்களுக்கும் இதைத் தெரியப்படுத்த வேண்டுமெனவும் அவர் கூறியிருந்தார்.*

**கருத்துரை :**
**பேராசிரியர் சபா ஜெயராசா**

ஆனந்த விகடன் மணியன் தனது சுற்றுலாக் கட்டுரையை நூலாக்க முயன்றார். ஆனந்த விகடன் நிர்வாகம் அனுமதி கொடுக்கவில்லை. இதனால் மணியனுக்கும் நிர்வாகத்துக்கும் இடையில் முரண்பாடு ஏற்பட்டது. 'தினக்குரல்' அதிபர் எஸ்.பி. சாமி மனமுவந்து இதனை வெளியிட அனுமதி கொடுத்த பெருந்தன்மை தனித்துவமானது. தமிழில் மட்டுமல்லாது உலகம் பூராகவும் புனைகதை சாரா எழுத்தாக்கம் முன்னேற்றம் கண்டுள்ளது. இதில் பத்திரிகைகள் பெரும் பங்காற்றுகின்றன. அண்மையில் தமிழகத்திலிருந்து பிரமுகர் ஒருவர் வந்தார். இங்கு வெளியிட்டுள்ள நூல்களைப் பார்த்து அதிர்ந்தார். இந்தியாவில் வெளியிட அனுமதி கேட்டார். தினக்குரல் ஆசிரியர் தனபாலசிங்கத்தின் கருத்தியல் மிகவும் முக்கியமானது. இந்நூல் கட்டுரைகள் மனசாட்சியின் வடிவங்கள். புறவய, அகவய அணுகுமுறைகள் என இரண்டுண்டு.இரு அணுகுமுறைகளும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனபாலசிங்கத்துக்கு உண்டு. அகவயமும் புறவயமும் இணைகின்றன. இது அவரது வளர்ச்சியைத் தான் காட்டுகின்றது.

மக்கள் பத்திரிகைகளை வாசிக்கின்றார்கள். தொடர்ந்து வாசிக்க வேண்டும். தான் கடமை புரிந்த பத்திரிகை நிறுவனத்தோடு முரண்பட்டே ஏ.ஜே.கனகரத்னா பல்கலைக்கழகத்துக்கு வந்தார். இந்நூலாசிரியர் முன்னுரையில் சொல்ல வேண்டியவைகளைத் தெளிவாகக் கூறியுள்ளார். சூழலை, பாதுகாப்பை அறிந்து பத்திரிகை எழுத்துக்கு இன்னொரு வடிவத்தைக் கொடுக்க வேண்டும். அது இந்நூலில் மிகச் சிறப்பாக இருக்கிறது. சிறப்பாகச் சொற்கள் கையாளப்பட்டுள்ளன. புதிய சொல்லாக்கத்துக்குப் பத்திரிகைகளின் பங்கு மிகவும் முக்கியமானது. பழைய சொற்களுக்கும் புதிய சொல்லேற்றம் வேண்டும். பழைய சொற்கள் கேடுறுத்துவதைச் சொல்லியிருக்கிறார். நூல் வரலாற்று இயலில் இந்நூல் புதிய பரிமாணத்தை ஏற்படுத்தும். இது கனதியான வரவு. தனபாலசிங்கத்தின் பணி தொடர வேண்டும்.

*'ஊருக்கு.. நல்லது சொல்வேன்' நூலின் முதற் பிரதியை உதயன், சுடரொளிப் பத்திரிகைகளின் நிறுவுனரும் பாராளுமன்ற உறுப்பினருமான ஈ.சரவணபவன் தினக்குரல் நிறுவுனர் எஸ்.பி.சாமியிடமிருந்து பெற்றுக்கொண்டார்.*

*உதவியமைச்சர், பாராளுமன்ற உறுப்பினர்கள், அச்சு இலத்திரனியல் ஊடகவியலாளர்கள், பொதுப் பணியாளர்கள் ஆகியோருக்குச் சிறப்புப் பிரதிகள் வழங்கப்பட்டன.*

*நூலாசிரியர் வி.தனபாலசிங்கத்துக்கு புரவலர் புத்தகப் பூங்கா காசிம் உமர், பஷீர் சேகுதாவூத், சுரேஷ் பிரேமச்சந்திரன், எஸ்.பி.சாமி, வீ.ஏ.திருஞானசுந்தரம், கே.எம். தர்மராசா, வேலணை வேணியன், ஸ்ரீதரன் அரியேந்திரன், மனோ கணேசன் ஆகியோர் பொன்னாடை போர்த்தியும் மலர்மாலை சூட்டியும் கௌரவித்தனர்.*

*நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரன் தினக்குரல் பிரதம ஆசிரியர் வீ.தனபாலசிங்கத்தின் தந்தை ஆ.வீரகத்திக்கும் பொன்னாடை போர்த்தி கௌரவித்தார்.*

*நூலை வடிவமைத்த டிஸைன் லாப் நிறுவனத்தின் உரிமையாளர் எஸ்.அநூஜன் பொன்னாடை, விருது வழங்கப்பட்டுக் கௌரவிக்கப்பட்டார். சி.வி.விக்னேஸ்வரன்,எஸ்.பி.சாமி, ஈ.சரவணபவன், பேராசிரியர் சபா.ஜெயராசா ஆகியோருக்கு காசிம் உமர் மாலை அணிவித்தார். மல்லிகை ஆசிரியர்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*டொமினிக் ஜீவா, சட்ட நிபுணர் வி.ரி. தமிழ்மாறன் ஆகியோருக்கு சமூக ஜோதி றபீக் மலர்மாலை சூட்டினார். புகலிட எழுத்தாளர் லெ.முருகபூபதி, தனபாலசிங்கம் தம்பதிக்கு அன்பளிப்பு வழங்கினார்.*

**ஆய்வுரை :**

**வி.ரி.தமிழ்மாறன் (தலைவர், சர்வதேச சட்டத்துறை, கொழும்பு பல்லைக்கழகம்)**

'ஊருக்கு.. நல்லது சொல்வேன்', பத்திரிகை ஆசிரியத் தலையங்கங்கள் தொகுக்கப்பட்ட இலங்கையின் இரண்டாவது நூல். முதல் நூல் 'ஊரடங்கு வாழ்வு', 'ஈழநாடு' ஆசிரியர் ந.சபாரத்தினம் எழுதிய தலையங்கங்களைக் கொண்டது. அதற்கு என்னுடைய பணியும் இருந்தது. சபாரத்தினத்துக்கு ஆங்கிலத்தில் சிந்தித்துத் தமிழில் கொண்டு வருவது கஷ்டமாக இருந்தது. அப்போது நான் வைத்தீஸ்வராக் கல்லூரி மாணவனாக இருந்தேன். மாலை வேளைகளில் ஈழநாடு அலுவலகத்தில் தங்கியிருந்து உதவினேன். பொதுமக்களுக்கு உதவ வேண்டுமென்ற அக்கறை இருந்ததால் அப்படிச் செய்தேன். இன்றைய சமூகச் சூழலில் பத்திரிகை ஆசிரியத் தலையங்கங்கள் நூலாக வருவது சாத்தியமானதல்ல. தனது தலையங்கங்களைத் தொகுத்து தனபாலசிங்கம் இந்நூலில் தந்துள்ளார். எந்த வரிசையிலென்பதை ஊகிக்க முடியவில்லை.

சமூக அக்கறையை எழுத்தினூடாகக் கொண்டுவர வேண்டுமென்ற உள்ளுணர்வின் வெளிப்பாடாகவே இத்தலையங்கங்கள் இருக்கின்றன. நூலின் தலைப்பு பாரதி பாடலொன்றிலிருந்து எடுக்கப்பட்டுள்ளது. மீண்டும் மீண்டும் பார்த்தேன். அப்பாடலின் பின் வரிகள் தான் பொருத்தமென எனக்குப் பட்டது. ஊருக்கு நல்லது சொல்வேன் என்றால் அதன்பின் சேவகம் செய்ய வேண்டும். அந்த நிலையில் இருந்தே பணியைச் செய்தார். எந்த ஊருக்கு? என்றொரு கேள்வி எழுகின்றது. கோவம் என்ற அவலம், பட்டபாடுகளென்ன? எந்த நல்லதைக் கேட்பது? ஒரு பகுதி மக்களை நல்லவர்களெனில் அதை மற்றவர்கள் உணர்வார்களா? கடந்த சம்பவங்களை நூலில் சொல்லியிருக்கிறார்.

ஆசிரியர் தலையங்கம் எப்படி அமைதல் வேண்டும்? பொதுநலனை முதன்மைப்படுத்துவது நிலைத்து நிற்கும். உரிய நேரத்தில் உரியவைகளைச் சுட்டிக்காட்டுதல் பத்திரிகைத் தொழில்சார் கடமையாகும். இதைச் சிறுபான்மை இனப்பத்திரிகையொன்று நிறைவேற்றுவது இலகுவல்ல. ஊருக்கு நல்லது சொல்ல வேண்டுமாகில் வரலாற்றுக் கடமைகளை மீண்டும் ஞாபகப்படுத்த வேண்டும். ஊரின் சிந்தனை நூலின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாக்கமாக இருக்க வேண்டும். வாசிக்கும் போது ஏக்கம் ஏற்படும். பல்வேறு இன, மொழிக் குழுக்கள் உள்ள ஒரு நாட்டின் அரசியல் அமைப்பினைச் சிந்தித்திருந்தால், இவ்வூர் வேறுபட்டதாக இருந்திருக்கும். சிறுபான்மை மக்களின் பங்களிப்புச் சந்தேகத்துக்குரியது. பெரும்பான்மையினரின் விருப்புப் புலி அழிப்பு. இனி அபிவிருத்தி, பாதுகாப்பு என்ற பேச்சுத்தான். மூன்று விதச் சமூக அமைப்பு உள்ளது.

கொழும்பில் வீட்டின் கட்டமைப்பை மாற்ற முடியாது. இது தனிப்பட்ட வாழ்க்கை அடையாளம் பேணுதல். கட்டமைப்பைத் தாமே தீர்மானிக்க வேண்டும். தனித்தனி வீடு கட்டுவது சாத்தியமாகாது. தொகுதி வீடு தான் சாத்தியமாகும். இனி இது சாத்தியமா? ஒரே வீட்டுக்குள் ஒரே விதமான அடையாளமாக்கச் சட்டம் பாவிக்கப்படலாம். இனி இயலாது என்ற முடிவுகள் முடியுமா? கருத்தியல் கோட்பாடுகளுக்குள் நின்று சிரமப்படாது, தலை சாய்க்காது தனபாலசிங்கம் உரிய முறையில் செயலாற்றி இருக்கிறார். ஒரு மட்டத்தினரே ஆசிரியர் தலையங்கங்களை வாசிப்பதுண்டு. இதற்குக் காரணம் அவைகளது கடினமான நடையே. இது தமிழ்ப் பத்திரிகைகளுக்கும் பொருந்தும். ஆனால், தனபாலசிங்கத்தின் எழுத்துக்கள் எளிமையானவை. சாதாரண மக்களையும் சென்றடையக்கூடியவை. அந்த நோக்கத்தோடேயே எழுதுகிறார். நகைச்சுவையும் இருக்கின்றது. நாகரிகமாகச் சொல்கிறார். இது தொழில் தர்மத்தின் கடமை. பத்திரிகைத் தொழில் இந்த ஊரில் கடுமையானது. கூடுதலான பத்திரிகையாளர்கள் பலியாகி இருக்கின்றனர். சமூக அக்கறை கண்களைத் திறக்க வேண்டும். வாசகனைச் சிந்திக்க வைக்கும் நூல் "ஊருக்கு நல்லது சொல்வேன்."

*எழுத்தாளர் பருத்தியூர் பாலவைரவநாதன், துணைவியூர் கேசவன் ஆகியோர் கவிதை வாழ்த்துப் பாடினர்.*

**வாழ்த்துரைகள் :**

**மல்லிகை டொமினிக் ஜீவா**

பதினைந்து ஆண்டுகளாக வந்து கொண்டிருக்கும், தினக்குரல் பிரதம ஆசிரியரை யாழ்ப்பாணத்திலும் கொழும்பிலுமாக 45 ஆண்டுகளாக வெளிவந்து கொண்டிருக்கும் ஒரு சிற்றிலக்கிய ஏட்டின் ஆசிரியர் வாழ்த்துகிறேன். சொற்பொழிவாற்ற, கட்சி வேலைக்கென 32 மைல் தூரத்திலிருக்கும் பருத்தித்துறைக்குப் போவோம். பேராசிரியர் க.கைலாசபதி, கே.டானியல், நான் என நாங்கள் கொடுத்த விலை இது. 300 அட்டைப் படங்கள் மல்லிகையில் இதுவரை பதிவாகியிருக்கின்றன. 2008 ஆம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டு பெப்ரவரி மாத மல்லிகையின் அட்டையில் இந்நூலாசிரியர் தனபாலசிங்கத்தின் படம் பதிவாகியிருக்கின்றது. அதற்கான குறிப்பை அவுஸ்திரேலியாவில் வசிக்கும் லெ.முருகபூபதி எழுதியிருக்கிறார். அட்டைப்படக் கட்டுரைகள் அடங்கிய 4 புத்தகங்கள் இதுவரை வெளிவந்துள்ளன. இன்னும் நூறு வருடங்களின் பின்னரும் இப்புத்தகங்கள் பல்கலைக்கழகங்களில் இருக்கும். பிற்காலச் சந்ததி பார்க்கும்.

## சிரேஷ்ட ஊடகவியலாளர் என்.வித்தியாதரன்

நூலாசிரியர் எனது சம காலத்தவர். எனக்கு மூத்தவர். அறிவிலும் மூத்தவர். அவரை நான் வாழ்த்துவது பொருத்தமாக இருக்குமா? பத்திரிகைக் கலைத் தனிக்கலை. இன்றைய பாராட்டுகள் தமிழ் ஊடகங்களுக்குக் கிடைத்த கௌரவம். எஸ்.ரி.சிவநாயகத்தோடு இணைந்து பணியாற்றினேன். அப்போது நான் இளைஞன். அவரோடு நெருக்கமாகப் பழகினேன். அவரை ஜாம்பவான் என்பது எனக்கு நெருடலாக இருந்தது. ஏன் தமிழர் கூட்டணியிலிருந்து விலகி நிற்கிறீர்கள் எனக் கேட்டேன். 'எனது பணியை ஒரு சட்டத்தரணியின் பணியோடு ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். சட்டத்தரணி எடுத்த வழக்கை முன்வைக்க வேண்டும். வாதாட்டத்தை நுணுக்கமாக கையாளப் பார்க்க வேண்டும். நான் நிறுவனத்தின் கருத்தையே கொண்டு வருகிறேன்' என்றார்.

ஆனந்த விகடனில் பயிற்சி பெற்றேன். எம்.ஜி.இராமச்சந்திரன் முதல் அமைச்சராக இருந்த போது கார்ட்டூன் ஒன்றால் சர்ச்சை கிளம்பியது. தமிழ்நாடு சட்டசபை 2 மாதச் சிறை விதித்தது. இந்தியாவே கிளர்ந்தெழுந்தது. தண்டனையை எம்.ஜி.ஆர். வாபஸ் பெற்றார். திஸாநாயகம் எழுதிய கட்டுரைக்காக அவருக்கு 20 வருட சிறைத்தண்டனை. ஆனால், பதிப்பாளருக்கு விடுதலை. பொறுப்பை இருவருமே ஒன்றாகப் பொறுப்பேற்க வேண்டும். இதை ஒரே நீதிமன்றம் தான் செய்தது. இதில் எது கூடாது. பத்திரிகை ஆசிரியருக்குச் சுதந்திரம் கொடுக்க வேண்டும். சுதந்திரத்தை நான் அனுபவித்தேன். தனபாலசிங்கம் தனக்குப் பட்டதை எழுதியிருக்கிறார். பத்திரிகை ஆசிரியர்கள் தாம் கடமையாற்றும் பத்திரிகை சார்பாகப் பேச வேண்டியவர்கள்.

## புலம்பெயர் எழுத்தாளர் லெ.முருகபூபதி

இதுவரை காணாத பலரது முகங்களை நான் இன்று காண்கிறேன். பாராளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரனின் கையெழுத்தைப் பார்த்தேன். இன்று தான் அவரை நேரில் பார்க்கிறேன். பாராளுமன்ற உறுப்பினர் விநாயகமூர்த்தியைப் பார்க்கிறேன். எனது பத்திரிகையுலக வழிகாட்டிகளான நடராசா, சிவநேசச்செல்வன் இங்கு காணப்படுகின்றனர். தமிழக குறும்பட இயக்குநர் அருண்மொழி இருக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கிருந்து நல்ல செய்திகளைத் தமிழகத்துக்கு எடுத்துச் செல்வார். அற்புதமான காட்சியை இங்கு காண்கிறேன். சகல பத்திரிகை, சிற்றிதழ்கள் ஆசிரியர்கள் ஒரே இடத்தில் கூடியிருக்கின்றது இலங்கையில் தான் நடக்கிறது. ஒருவரது நேர்மை தான் முரண்பாடுகள். கடந்து வந்த பாதையை மறந்தால் வாழ்வு இருட்டாகும்.

இலங்கையில் 1977 இல் இனக் கலவரம் நடந்தது. ஒப்புநோக்குநர்கள் தேவையென வீரகேசரியில் விளம்பரப்படுத்தியிருந்தனர். விண்ணப்பித்தேன். தனபாலசிங்கத்துக்கும் மழைக்கும் நெருக்கம் இருக்கிறது. 1977 ஆம் ஆண்டு மழை நாளொன்றில் தான் வீரகேசரியின் முன் மண்டபத்தில் இருந்தேன். மெலிந்த உருவமொன்று குடையுடன் வந்தது. எழுத்து, நேர்முகப்பரீட்சைகள் நடந்தன. பரீட்சகர்களாக கா.சிவப்பிரகாசமும் எஸ்.பாலச்சந்திரனும் இருந்தனர்.

கடிதம் வந்தது தெரிவு செய்யப்பட்டிருப்பதாகவும் கடமையை ஏற்க வரும்படியும். நானும் அன்று குடையோடு வந்திருந்த தனபாலசிங்கமுமே தெரிவு செய்யப்பட்டிருந்தோம். மிகவும் அருமையானவர் தனபாலசிங்கம். வேலைக்கு நான் வரும் போது கொண்டுவரும் சோவியத் நாடு, மல்லிகை ஆகிய சஞ்சிகைகளையும் "தாய்" என்ற ரஷ்ய நாவலையும் என்னிடமிருந்து வாங்கிப் படித்தார். தீவிர வாசகர். நட்புக்கு உதாரணமானவர். 1983 இல் இலங்கையில் கலவரம் நடந்தது. வீரகேசரியில் வெற்றிடங்கள் ஏற்பட்டன. கார்மேகம் போன்ற மூத்த பத்திரிகையாசிரியர்கள் வெளியேறினர். பிரபல ஆசிரியர் பொறுப்பை ஆர்.சிவனேசச்செல்வன் கையேற்றார்.

பேராசிரியர் க.கைலாசபதியோடு இணைந்து நாவலர் நூற்றாண்டு விழாவை நடாத்தியவர் முருகபூபதி எங்கே? என வீரகேசரியில் விசாரித்தார். 'ரஸ ஞானி' என்ற என்னை ஆசிரியர் பீடத்தில் போடச் சிபாரிசு செய்தார். இன்னமும் ஆட்கள் தேவை எனச் சிவனேசச்செல்வன் சொன்னார். தனபாலசிங்கத்தை எடுக்கச் சொன்னேன்? 'பாரதிநேசன்' 'சின்னத்தம்பியின் மருமகன் என்பதையும் அறியப்படுத்தினேன். அடுத்த நிமிடமே தனபாலசிங்கத்தை அழைத்தார். உதவியாசிரியர் ஆக்கினார். மகாகவி பாரதி, ம.பொ.சி, ஜெயகாந்தன் இவர்களெல்லாம் அச்சுக் கோப்பாளர்களாகவோ, ஒப்புநோக்குநர்களாகவோ இருந்தவர்கள் தான். கடந்துவந்த பாதைகள் தான் தனபாலசிங்கத்தை இந்நிலைக்கு கொண்டு வந்தன. மொழிபெயர்ப்புகளை மிகச் சிறப்பாகச் செய்தார். உலகச் செய்திகளுக்குப் பொறுப்பாக இருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தக் கால யாழ்ப்பாணத்துத் தமிழரிடம் கோழி மேய்த்தாலும் 'கோரண மேந்தில்' மேய்க்க வேண்டுமென்ற ஆசை இருந்தது. ஆங்கில ஆசிரியர் நியமனம் கிடைத்தது. பலர் மறித்தும் போனார். வீரகேசரி வார வெளியீட்டுக்குப் பொறுப்பாகவிருந்த பொன்.ராஜகோபாலிடம் தந்தையார் சிங்காரி தான் காவேரி, காவேரி தான் சிங்காரி என்ற பாட்டை வேலை குறித்துப் பாடிக் காட்டினார்.

என்.சண்முகதாசன், குமார் பொன்னம்பலம் போன்ற அரசியல் தலைவர்கள் தனபாலசிங்கத்தைக் கேட்டு வீரகேசரிக்கு வந்தனர். சிவனேசச்செல்வன் விடுமுறையில் சென்றதால் இவரே வீரகேசரியின் ஆசிரியத் தலையங்கங்களை எழுதினார். அக்காலத்தில் ஊடகக் கல்லூரி இருக்கவில்லை. முரண்பாடுகளைக் கண்ணியமாக அணுகும் மனித நேயவாதி. பத்திரிகையாளர் என்.வித்தியாதரனுக்காகக் குரல் கொடுத்தார். இவரைப் போல் வி.தேவராஜாவும் குரல் கொடுத்திருக்கிறார். முன்மாதிரியான செய்தியாளர்கள் இப்போ செய்தியாகிவிட்டனர். தினக்குரல் தொடங்கிய போது நான் பயப்பட்டதுண்டு. 1985 இல் சோவியத் யூனியனில் மகாநாடு நடந்தது. இலங்கையில் இருந்து 4 ஊடகவியலாளர்கள் உட்பட 100 பிரதிநிதிகள் அழைக்கப்பட்டிருந்தனர். தமிழ்ப் பத்திரிகையாளனாக நானே அழைக்கப்பட்டிருந்தேன். எனக்கு அன்று வங்கிக் கணக்கு இருந்ததில்லை. தனபாலசிங்கம் 2500 ரூபா தந்தார். கட்டம் கட்டமாக வளர்ந்தவர் தனபாலசிங்கம். ஆங்கில ஆசிரியராக இருந்திருந்தால் 1001வது ஆசிரியராக இருந்து கரைந்து போயிருப்பார். இந்த நிலையேற்பட்டிருக்காது.

**ஏற்புரை:**
**வீ. தனபாலசிங்கம்**

தினக்குரலால் என்மீது அக்கறை கொண்டவர்கள்; என்னால் தினக்குரல் மீது அக்கறை கொண்டவர்கள்; இப்படி இருவிதமானவர்கள் இங்கு குழுமியிருக்கின்றீர்கள். எனது தலையங்கங்களை நூலாக்கும்படி முதலில் ஆலோசனை கூறியவர் பேராசிரியர் கா.சிவத்தம்பி. குமரனும் முயற்சித்தவர். எதிர்பாராத காரணங்களால் அது நிறைவேறாது போயிற்று. காசிம் உமர், கலைச்செல்வன், அந்தனி ஜீவா எடுத்த முயற்சிகளால் தான் இன்று நூல் வெளிவந்துள்ளது. பத்திரிகையாளர், கழுத்தில் கயிறு கட்டப்பட்ட மாடுகள். நிற்பதற்கு முரண்பட்ட நிலையில் நிற்பார்கள். எனக்கு நிர்வாகத்தின் கட்டுப்பாடு இருக்கவில்லை. நிறுவகர் சாமி ஒரு போதுமே கட்டுப்படுத்தவில்லை. தலையிடவில்லை. எவருமே இடையூறுகளும் செய்யவில்லை. எனது தொழிலை நான் வயிற்றுப்பிழைப்பென்று நினைக்கவில்லை. ஆசிரியர் தலையங்கத்தை ஆசிரியர் தான் எழுத

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டுமென்றில்லை. மற்றவர்களையும் எழுதச் சொல்வேன். நூலுக்கு என்ன பெயர் வைக்க வேண்டும் என்று கேட்டனர். காசிம் உமர் தான் எனக்கு பாரதி பாடல் நூலை வாங்கித் தந்தவர். தினமணி ஆசிரியர் தனது தலையங்கங்களை மூன்று தொகுதிகளாக வெளியிட்டிருக்கிறார். மகாகவி பாரதியின் முரசுப் பாட்டின் முதல் அடியின் கீழ் வரியை அவர் தனது நூலின் தலைப்பாக்கினார். மேல் வரியை நான் எனது நூலுக்குப் பெயராக்கியுள்ளேன். பாரதி பாடல்களை நான் மிகவும் விரும்பிப் படிப்பவன். என் மீது கொண்டிருக்கும் அபிமானத்தின் வெளிப்பாடே நீங்களெல்லாம் இம்மண்டபத்தில் குவிந்திருப்பது. அத்தோடு தினக்குரல் அபிமானமும் சேர்ந்துள்ளது. இம்மட்டுப்பேர் நன்றியுரைக்கு காத்து நிற்பது வழக்கமில்லை. பத்திரிகைத் தொழிலை ஒத்துழைப்பு இல்லாது செய்ய முடியாது. மற்றப்பத்திரிகைகளும் இப்படி செய்ய வேண்டுமென்பதே எனது விருப்பம். உண்மை எப்போதும் எளிமைக்குக் கிட்டவே இருக்கும். நிறையச் சாதாரண மக்களிடமிருந்தே படித்தேன். மக்கோனாவுக்கு அனுப்புவது போல் தான் எனது குடும்பம் என்னைக் கொழும்புக்கு அனுப்பியது. நான் மற்றவர்களோடு முரண்படுவது ஏனென்று விளங்கிக் கொண்டால் உண்மை தெரியவரும். மற்றவர்கள் முரண்படாததாக நடிக்கின்றனர். நான் அப்படிச் செய்வதில்லை. என்னைச் சிலர் புரிந்து கொள்ள முயற்சிப்பதில்லை.

புரிந்து கொள்ள முயற்சித்தால் மோட்சம் கிடைக்கும். என்னை மறைக்க வேண்டிய தேவையில்லை. இதுவே எனது பலமும் பலவீனமும். இங்கு பேசப்பட்டது போல் நான் ஓய்வு பெற மாட்டேன். இது ஒரு சமூகத் தொண்டு. இனி எதிர்க்கருத்துகள் அடக்கப்படும். பத்திரிகையாளன் சமூகத்தை நேசிப்பவன். அவன் பேசத்தான் வேண்டும்.

கலாபூஷணம் கலைஞர் கலைச்செல்வன் நிகழ்வுகளை தொகுத்து அறிவிப்புகளைச் செய்தார்.

-16/17.12.2010

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 25

## தம்பிஐயா தேவதாஸின் இரு நூல்கள் வெளியீடு

பிரபல ஒளி-ஒலிபரப்பாளரும் தொலைக்காட்சி நாடக நடிகரும் மொழி பெயர்ப்பாளருமான தம்பிஐயா தேவதாஸ் எழுதிய 'குத்துவிளக்கு: மீள்வாசிப்பு', 'இலங்கை திரையுலக சாதனையாளர்கள்' ஆகிய நூல்களின் வெளியீட்டு விழா 23.01.2011 ஆம் திகதி கொழும்பு தமிழ்ச்சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில் நடைபெற்றது. இதே நிகழ்வில் 'குத்துவிளக்கு' இலங்கைத் தமிழ்த் திரைப்பட டி.வி.டி.யும் வெளியிடப்பட்டது. வானொலி வித்தகர் வி.ஏ.திருஞானசுந்தரம் தலைமை தாங்கினார்.

கலையுலக, பொதுப்பணிப் பிரமுகர்கள் மங்கல விளக்கேற்றி விழாவைத் தொடக்கி வைத்தனர். அமரராகிய கலைஞர்களுக்காக இரு நிமிட மௌனாஞ்சலி செலுத்தப்பட்டது.

எஸ்.எம்.பெரோஸ் (அறிவிப்பாளர் இ.ஒ.கூ) வரவேற்புரை செய்து நிகழ்ச்சிகளைத் தொகுத்து அறிவிப்புகளையும் செய்தார்.

**தலைமையுரை:**
**வீ.ஏ. திருஞானசுந்தரம்**
**(முன்னாள் பதில் பணிப்பாளர் நாயகம்,**
**இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்)**

தம்பிஐயா தேவதாஸை எனக்கு நீண்டகாலமாகத் தெரியும். 1984 ஆம் ஆண்டு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் 'தமிழ்ஒலி' என்ற காலாண்டுச் சஞ்சிகையை வெளியிட்டது. இச் சஞ்சிகையின் ஆசிரியராக உமாகாந்தன் இருந்தார். அப்போது நான் தமிழ்ப் பிரிவின் பணிப்பாளராகப் பதவியேற்றிருந்தேன். உமாகாந்தன் பணிப்பில் தம்பிஐயா தேவதாஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னைச் செவ்வி கண்டார். இவரது தொழில் பாடசாலை ஆசிரியராக இருந்ததால் கல்வி ஒலிபரப்பில் பல நிகழ்ச்சிகளைத் தயாரித்து நடாத்தினார். தேசிய சேவையிலும் பகுதி நேர அறிவிப்பாளராக அவரை ஏற்றோம். இப்படியாக நிறையப் பங்களிப்புகளை வானொலிக்குச் செய்துள்ளார்.

அன்றிருந்த சுபாவங்களோடு தான் இன்றுமிருக்கிறார். எதிலும் அமைதிப் போக்கையே காட்டுவார். ஒன்பது புத்தகங்களை வெளியிட்டிருக்கிறார். எனக்குரிய கௌரவத்தை அளிக்கிறார். அவரது முதலாவது நூலுக்குமான வெளியீட்டு விழாவுக்கும் நானே தலைமை வகித்தேன். பல்துறைகள் சார்ந்த பணிகளைச் செய்து வருகிறார். கொழும்பு பல்கலைக்கழகத்தில் வருகை தரும் விரிவுரையாளர். சினிமா சம்பந்தமான பல தகவல்களை யுடைய நூல்களை எழுதி வெளியிடுகிறார். இது நிச்சயமாக அவரது கையைக் கடித்திருக்கும்! இன்று தினக்குரல் ஞாயிறு வெளியீட்டில் இலங்கை திரையுலக சாதனையாளர்கள் என்ற நூலைப் பற்றிச் சிறு விமர்சனமொன்றை இலங்கேஸ்வரன் என்பவர் எழுதியிருக்கிறார். அமரராகிவிட்ட சில கலைஞர்களை நூலாசிரியர் மறந்துவிட்டார். கலைஞர் டீன்குமார், மணிமேகலை, விஜயராஜா போன்றோரை இவர் ஏன் மறந்தார் எனக் கேட்டும் விமர்சகர் அமரராகிவிட்ட இசையமைப்பாளர் ரி.எல்.லதீப்பைப் பற்றி ஏன் எழுதவில்லை என்று தெரியவில்லை எனவும் விசனப்பட்டுள்ளார். ஆனால், இதைத் தொடர் பயணமாகவே கருத வேண்டும். இந்நூலோடு முடித்துக் கொள்ளவில்லை. விடப்பட்ட தகவல்களை நூலாசிரியர் மற்றொரு நூலில் எழுதுவார்.

இலங்கையில் தயாரான சிறந்த திரைப்படம் குத்துவிளக்கு. இதன் தயாரிப்பாளர் வி.எஸ்.துரைராசா. இப்பொழுது அவுஸ்திரேலியாவில் வாழ்கிறார். அவரது வேண்டுகோளுக்கு இணங்கவே நூலும் டி.வி.டி.யும் வெளியிடப்படுகிறது. சினிமா பற்றிய இந்த நூல்களில் சினிமா குறித்தான பல செய்திகள் இருக்கின்றன. தம்பிஐயா தேவதாஸின் வானொலிப்பணி மிகவும் முக்கியமானது. தொலைக் காட்சிக்கும் சினிமா சம்பந்தமான பேட்டிகளைக் கண்டு பங்களிப்புச் செய்கிறார். ஆசிரியர் தொழிலைக் காட்டிலும் தம்பிஐயா தேவதாஸ் ஊடகத்துறையிலேயே தடம் பதித்து வருகிறார் எனலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வாழ்த்துரை :**
**மு.கதிர்காமநாதன் (தலைவர், கொழும்புத் தமிழ்ச்சங்கம்)**

தம்பிஐயா தேவதாஸ் பல் பரிமாணங்களில் இயங்கிக் கொண்டிருப்பவர். கொழும்பு விவேகானந்தா கல்லூரியின் உயர்கல்வி மாணவனாக இருந்தவர். இலங்கையின் சினிமா வரலாற்று ஆசிரியர்களில் இவரைத் தவிர்த்து விட முடியாது. இன்று வெளியிடப்படும் இரு நூல்களும் காலத்தின் தேவைகள். பெறுமதிமிக்க ஆவணங்கள், அவரது இப்பணி தொடர வேண்டும்.

**சிறப்புரைகள்:**
**கவிஞர் அஷ்ரப் சிஹாப்தீன்**

தேவதாஸ் சாதுவான, தனித்துவமான நண்பர், நோகாமல் நடப்பார். எவருக்குமே வருத்தத்தை ஏற்படுத்தாதவர். இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் எனக்கு அறிமுகமானவர். அந்த நட்பு இன்றும் தொடர்கிறது.

தம்மைக் குறித்த புரிதல் சகலருக்கும் இருக்க வேண்டும். அது இவரிடமுண்டு. கொள்ளளவைத் தெரிந்தால் பிரச்சினை இல்லை. முடிந்ததை எழுதுகிறார். மேசையில் படுத்துக் கையை ஊன்றி வானொலி அறிவிப்புக்களைச் செய்வார். சிங்களம் பேசுவது அசூசை என்ற கால மொன்றிருந்தது. அவ்வேளையில் சிங்களத்தைக் கற்று அம்மொழியில் தேர்ச்சி பெற்றவர் தேவதாஸ். எண்ணங்களைப் பகிர்வது பல சிக்கல்களைத் தீர்க்கும். புகழ்பெற்ற சிங்கள நாவல்களைத் தமிழாக்கம் செய்துள்ளார். இலங்கையில் தமிழ்ச் சினிமா வளர வேண்டும் என்பதில் தமிழ் பேசுவோருக்கு அக்கறை இல்லை. அந்த அக்கறையை ஏற்படுத்துபவர் தேவதாஸ். இன்னமும் அடுத்த வீட்டுக்குள்ளே தான் எட்டிப்பார்த்துக் கொண்டிருக்கிறோம். அயல்நாட்டுத் தமிழ்ச் சினிமா எமது தமிழ்ச் சினிமா வளர்ச்சியைக் கட்டுப்படுத்துகிறது. அதைத் தகர்க்க வேண்டும். அதற்கான ஆரம்பப் புள்ளியாக நிச்சயமாக தேவதாஸின் இந்த முயற்சிகள் இருக்கும். இனிமேல் சினிமாப்படம் தயாரிக்கப் போகும் இளைஞர்களுக்கு இவரது நூல்கள் உதவும்.

**கலாபூஷணம் கலைஞர் கலைச்செல்வன்**

இலங்கையில் தமிழ்ச் சினிமா வளர வேண்டுமென்ற நோக்கோடு 29 திரைப்படங்களைத் தயாரித்தனர். முதல் படத்துக்கும் நடிகர்கள் காசு கொடுத்தே நடித்தனர். அதேபோல் இப்போது தயாராகிக் கொண்டிருக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

30 ஆவது படத்துக்கும் காசு பறிக்கிறார்கள். இந்த விடயத்தைப் பத்திரிகைள் பகிரங்கப்படுத்த வேண்டும். தும்புத்தடி விற்கும் கிழவரான நடிகரொருவர் 20 ஆயிரம் கொடுத்திருக்கிறார். இன்றும் அதே மோசடிகள் தான் சினிமாவுக்கு உள்ளது. எமது தமிழ் பேசும் இளைஞர்களைக் காப்பாற்ற வேண்டும். நமது நாடு, நமது மொழி, நமது கலைஞர் என்ற உணர்வு வருதல் வேண்டும். எதிர்காலச் சந்ததியை நாம் எதற்கும் அடுத்த வீட்டை எட்டிப் பார்க்க விடக்கூடாது. இங்கே கட்டப்பட்டிருக்கும் பனரில் (Banner) தென்னிந்திய நடிகரின் படம் இருக்கிறது. தோட்டக்காரி படத்தைத் தயாரித்த கிருஷ்ணகுமாரின் படத்தை ஏன் போட்டிருக்கக்கூடாது? இந்நாட்டுச் சினிமாக் கலைஞனை இனங்காட்ட வேண்டும். தம்பிஐயா தேவதாஸ் இல்லாவிட்டால் இலங்கைத் தமிழ்ச் சினிமாவைப் பற்றிச் சொல்ல இங்கு யாருமில்லை. எவருமே கைவைக்காத விடயத்தைத் தொட்டுள்ளார். இந்த விழா மகிழ்ச்சியைத் தருகிறது.

**என்.எம்.அமீன் (ஆசிரியர், நவமணி)**

தம்பிஐயா தேவதாஸின் முயற்சியைப் பாராட்டுவது எல்லோரதும் கடமையாகும். கொழும்பு பல்கலைக்கழகத்தில் என்னோடு ஊடகத்துறை விரிவுரையாளராகக் கடமை புரிகிறார். ஊடகத்துறை சம்பந்தமான தமிழ் நூல்கள் தமிழ் மாணவருக்குக் கிடைப்பதில்லை. ஆனால், சிங்களத்தில் ஏராளம் இருக்கின்றன. சினிமாத்துறைக்குத் தேவதாஸ் சிறந்த பங்களிப்புச் செய்து வருகிறார். அது சம்பந்தமான விடயங்களை ஆவணப்படுத்துகிறார், பத்திரிகைகளில் தகாதோருக்கு விளம்பரம் கொடுப்பதாகச் சொன்னார்கள். இன்றைய நிலையில் நேர்மையைக் கேட்க முடியாது. ஏமாற்றப்படுவது துர்ரதிர்ஷ்டம். ஊடகத்துறை இதைக் கட்டுப்படுத்த முடியாது. நல்ல சினிமாவை உருவாக்கினால் நிலைமாறும். தரப்படும் வசதிகளைப் பயன்படுத்த வேண்டும்.

**பிரதம விருந்தினர் உரை:**
**பிரபா கணேசன் (கொழும்பு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர்)**

கலைஞனாகவும் நடிகனாகவும் மக்கள் மனதில் இருந்தேன். நூல்களின் ஆசிரியர் தம்பிஐயா தேவதாஸ் சாதாரணமானவரல்ல. செய்யாததைச் செய்பவர்களே சாலச் சிறந்தவர்கள். வித்தியாசமான துறையில் தேவதாஸ் நூல்களை வெளியிடுகிறார். இந்தியச் சினிமாவே எம் மனதில் இருக்கிறது. இலங்கைச் சினிமா மனதில் இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த நிலையை மாற்ற எல்லோரும் முன்வர வேண்டும். பத்திரிகையில் இந்த நூல்களின் விடயங்கள் கட்டுரைகளாக வந்த போது வாசித்தேன். 1975 இல் ஈழத்தில் தமிழ்ச் சினிமாவை எடுத்தால் தோல்வியேற்படும் என்ற நிலையிருந்தது. எனது தந்தையார் அமரர் வி.பி.கணேசன் 'புதிய காற்று' எடுத்தார். அவர் தயாரித்த 'நான் உங்கள் தோழன்' இலங்கை தமிழ்ச் சினிமா வசூலில் ஒரு சாதனை ஏற்படுத்தியது. அதிக வசூலைப் பெற்றது. ஒளிப்பதிவாளராக வாமதேவன் இருந்தார். இப்படத்தைச் செம்மைப்படுத்திச் சிறக்க வைத்தவர் கலைஞர் கலைச் செல்வன். 'கோமாளிகள்', 'ஏமாளிகள்' ஆகிய இலங்கைப் படங்களும் நல்ல வசூலைப் பெற்றன.

யாழ்ப்பாணத்துச் சினிமா ரசிகர்களை எதிர்பார்த்தே இலங்கையில் தமிழ்ச் சினிமா எடுக்கப்பட்டது. இனக் கலவரத்தால் இலங்கையில் தமிழ்ச்சினிமா எடுக்க முடியாது போய்விட்டது. பயங்கரவாதம் தோற்கடிக்கப்பட்டிருக்கும் நிலையில், மீண்டும் இலங்கையில் தமிழ்ச் சினிமா வளர்ச்சி பெறும். இதற்காக எல்லோரும் ஒத்துழைக்க வேண்டும். சாம்பல் (பீனிக்ஸ்) பறவையைப் போன்று இலங்கைச் சினிமா எழுச்சி பெற வேண்டும். தம்பிஐயா தேவதாஸை கௌரவிக்கிறேன்.

*வீ.ஏ.திருஞானசுந்தரம் நூல்களை வெளியிட்டு முதல் பிரதிகளைப் புரவலர் ஹாசிம் உமருக்கு வழங்கினார். சிறப்புப் பிரதிகள் பிரபா கணேசனோடு (பா.உ.) கலை இலக்கியப் பொதுப்பணிப் பிரமுகர்களுக்கும் வழங்கப்பட்டது. நூல்களின் ஆசிரியர் தம்பிஐயா தேவதாஸுக்குத் தலைவர் வீ.ஏ.திருஞானசுந்தரம், ஜவாஹிர் ஆகியோர் பொன்னாடை போர்த்தினர். புரவலர் ஹாசிம் உமரும் மலர்மாலை சூட்டினார்.*

**வாழ்த்துரை :**

**எஸ்.சசிதரன் (விரிவுரையாளர், கிழக்குப் பல்கலைக்கழகம்)**

தமிழ்ச்சினிமா எண்பது ஆண்டுகளைக் கடந்துவிட்டது. இப்போது சினிமா மானுட மொழியாகிவிட்டது. இது சினிமா மொழியைப் படிக்கும் காலம். தம்பிஐயா தேவதாஸின் நூல்கள் ஈழத்துச் சினிமாவுக்கான தரவுகளைத் தரக்கூடியவை. இங்கு வெளியிடும் நூல்கள் பாடநூல்களாகவும் உதவக் கூடியவை. தகுதியானவை. பெறுமதியானவை. படித்துப் படித்துச் சுவைத்தேன். கலைஞர்கள் யார்? படங்கள் யாது? என்பவற்றை அறிய வைக்கின்றன. இந்நூல்களில் காணப்படும் தகவல்களைத் திரட்டத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவதாஸ் தேனியாக இயங்கியிருக்கிறார். தற்போது மறக்கப்பட்டுப் போன ஈழத்துச் சினிமாவின் வரலாற்றின் மூலங்களை இந்நூல்கள் தருகின்றன. கலைமொழியைத் தாண்டிய சாதனமாகச் சினிமா விளங்குகிறது. தமிழ்ச் சினிமாவின் பொற்காலம் இது. அச்சுவழியில் தேவதாஸ் கருத்துகளை வழங்கியிருக்கிறார். சினிமா அற்புதமான மொழி, அதை விளங்கிக் கொள்ள வேண்டும். தேவதாஸின் பங்களிப்பு இல்லையென்றால் ஈழத்துச் சினிமாவைப் பற்றி ஏதும் அறிய முடியாது. உலகை நோக்கிய சினிமாவுக்கான ஆற்றல் இங்கும் உண்டென்பதை மறக்கக்கூடாது.

வாழ்த்துப் பாவொன்றையும் வாசித்தார் விரிவுரையாளர் சசிதரன்.

**அறிமுகவுரைகள் :**
**விமர்சகர் தம்புசிவா: 'குத்துவிளக்கு - மீள் வாசிப்பு'**

மானுட சமுதாய முன்னேற்றத்துக்குக் கண்டுபிடிப்புகள் உதவுகின்றன. இத்தகைய கண்டுபிடிப்பொன்றின் வெளிப்பாடே சினிமா. இப்போ பெருந்தொழிற்றுறையாக வளர்ந்துவிட்டது. பொருளாதாரத்தை ஈட்டும் துறையாகப் பரிணமித்து விட்டது. போட்டிச் சந்தையைப் பெற்று விட்டது. மக்களுக்கு வேலை வாய்ப்பை வழங்கும் துறையாகி விட்டது. ஹொலிவூட் இதில் முக்கியத்துவம் வகிக்கின்றது. இந்தியாவில் வங்காளம், கேரளம், மராட்டி ஆகிய மாநிலங்கள் இதில் பெரு வளர்ச்சி கண்டு விட்டன. அற்புதமான திரைப்படங்களைச் சினிமா ரசிகர்களுக்கு தந்து கொண்டிருக் கின்றன.

இலங்கையில் சிங்கள சினிமா வளர்ச்சி பெற்றுள்ளது. 1960, 1970களில் தமிழ்த் திரைப்பட முயற்சி இங்கு மேற்கொள்ளப்பட்டது. சினிமாக் கலைஞர்கள் தோன்றினர். தேவதாஸின் 'இலங்கைத் திரையுலக சாதனையாளர், என்ற நூல் அற்புதமானது. வீரகேசரி, தினக்குரல், தினகரன் ஆகிய பத்திரிகைகள் மூலமாகத் தம்பிஐயா தேவதாஸ் வாசகர்களால் நன்கு அறியப்பட்டவர். ஈழத்துத் தமிழ்ச் சினிமாவுக்குப் புதிய திருப்பத்தைத் தந்தது - 'குத்துவிளக்கு'. கட்டிடக் கலைஞர் வி.எஸ்.துரைராசா தயாரித்து வெளியிட்டது. சகல துறைக் கலைஞர்களதும் கூட்டுப் பங்களிப்போடுதான் ஒரு சினிமாப் படத்தை உருவாக்க வேண்டும். 'பழம் பெருமை வாய்ந்த தமிழ்ப் பண்பாட்டை, வெளிநாட்டுக்குக் கொண்டு போக எத்தனித்தேன். யாழ்ப்பாணப் பண்பாட்டை அறிமுகப்படுத்துவதில் வெற்றி பெற்றேன்' இப்படித் தயாரிப்பாளர் வி.எஸ்.துரைராசா கூறுகிறார். 1960 இல் 'சமுதாயம்' என்ற ஈழத்துத் தமிழ்ச் சினிமாப் படம் வெளிவந்தது. அதன் பின்னர் ஏழு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படங்களுக்குப் பின்னரே 'குத்துவிளக்கு' வெளியானது. யாழ்ப்பாணம், வின்ஸர் திரையரங்கில் 40 நாட்கள் திரையிடப்பட்டது. வெள்ளி விழா வைபவத்தில், இந்தச் சினிமாவோடு சம்பந்தப்பட்டோருக்கு அன்பளிப்பாக குத்து விளக்கு வழங்கப்பட்டது. இப்படத்தின் உரையாடல்கள் பேச்சு வழக்கில் அமைக்கப்பட்டிருந்தன. சாதி, காதல் இப்படிப் பல்வேறு பிரச்சினைகள் இதன் கதையில் உள்ளீடாக எடுத்தாளப்பட்டன. நூலின் முன்னுரையில் 'வரலாற்றுப் பதிவு' என கூறப்படுகிறது. அடுத்துத் தயாரிப்பாளர் உரை காணப்படுகிறது.

வியாபாரத்துக்கு அழகு விளம்பரம், எனவே அதிக விளம்பரம் செய்தேன் எனத் தயாரிப்பாளர் கூறியுள்ளார். கபட உள்ளங் கொண்டோர் துன்புறுத்திய போதும் துணிந்து தயாரித்தேன் எனவும் அவர் கூறியிருக்கிறார். குத்துவிளக்கின் மூலக் கதையை வி.எஸ்.துரைராசா அமைக்க பிரபல சிங்கள ஒளிப்பதிவாளர் சுண்டிக்குளி சோமசேகரன் ஒளிப்பதிவாளராகக் கடமையேற்றிருந்தார். லீலா நாராயணன், பேரம்பலம், திருநாவுக்கரசு, ஸ்ரீசங்கர், பிலோமினா சொலமன், யோகா தில்லைநாதன், நாவாந்துறை தேவதாஸ், ராமதாஸ் ஆகியோர் நடித்தனர். கொழும்பில் நடைபெற்ற வெளியீட்டு விழாவில் பிரபல நடிகை சௌகார் ஜானகி கலந்து கொண்டார். துன்பியல் முடிவைக் கொண்ட 'குத்துவிளக்கு' படத்தை நாற்பது ஆண்டுகளுக்குப் பின்னர் இந்நூல் காண வைக்கிறது. திரைப்படத்துக்கான முழு நோக்கும் இந்நூலில் உண்டு. இந்த வகையில் ஈழத்துத் தமிழ்ச் சினிமா உலகு தம்பிஐயா தேவதாஸுக்குக் கடமைப்பட்டுள்ளதெனலாம். தயாரிப்பாளர் வீ.எஸ்.துரைராசாவை 'கற்பகம்'ஈழத்துச் சஞ்சிகை ஆசிரியராக இருந்த போது செவ்வி கண்டு பிரசுரித்தேனென்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

**முருகேசு ரவீந்திரன்: (சிறுகதைப் படைப்பாளி)**
**'இலங்கை திரையுலக சாதனையாளர்கள்'**

ஈழத்துச் சினிமா குறித்துத் தம்பிஐயா தேவதாஸ் எழுதிய போது இலக்கியவாதியும் ஒலிபரப்பாளருமான அமரர் ஜோர்ஜ் சந்திரசேகரன் வரவேற்றார். நல்லதொரு விடயமென்றார். 'இலங்கை திரையுலக சாதனையாளர்கள்' அட்டைப்படம் குறித்து இங்கு கருத்துகள் வெளிவந்தன. இப்படி அட்டை போடாவிடின் விளம்பர ரீதியில் நூலுக்கு வீழ்ச்சி ஏற்படும். தென்னிந்தியப் பட ஓவியத்தை அட்டை எடுத்துக் காட்டுகிறது. அனைவரையும் இணைத்தால் பெரிதாகிவிடும். எமக்கென்றொரு கலை வடிவமில்லை. நாட்டுக் கூத்தை கவனிப்பதில்லை. ஈழத்தின் முக்கிய நடிப்புக் கலைஞர்கள் பட்டியலில் காணப்படவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யேசுரத்தினம், அப்புக்குட்டி ராஜகோபால், செல்வம் பெர்னாண்டோ போன்றோரைக் குறிப்பிட்டிருந்தால் சிறப்பாக இருந்திருக்கும். வாடைக்காற்று, குத்துவிளக்கு, பொன்மணி போன்ற ஈழத்துத் திரைப்படங்கள் நல்ல கதாம்சத்தைக் கொண்டிருந்தன. ஆனால் தொழில்நுட்பத்தில் சிறப்புற வில்லை. முன்னேற்றம் காணாத காலத்தில் தான் ஈழத்துப் படங்கள் இதுவரை வெளிவந்துள்ளன. நிச்சயமாக இனி அப்படி இருக்காது. பாராட்டத்தக்க குறும்படங்கள் இப்போது எடுக்கப்படுகின்றன. தென்னிந்தியத் திரைப்படப் பாடல்களுக்கு ஈடான பாடல்கள் அக்காலத்தில் திரையிடப்பட்ட ஈழத்துத் திரைப்படங்களில் இருந்தன. அற்புதமான பாடல்கள். இப்போ டிஜிற்றல் தொழில்நுட்பம் வந்துவிட்டது. தேக்கம் 1983 கலவரத்துக்குப் பின் தான் வந்தது. இந்நூல் உந்து சக்தியைத் தரும். தென்னிந்தியத் திரைப்பட தொலைக்காட்சி நாடக மாயைகளிலிருந்து நாம் விடுபட வேண்டும். மக்களைக் குறை கூற முடியாது. ஜோர்ஜ் சந்திரசேகரன் சொல்வார் 'நாம் எதைக் கொடுக்கிறோமோ அதை மக்கள் ஏற்பர்' என்று.

**ஏற்புரை :**

**நூல்களின் ஆசிரியர் தம்பிஐயா தேவதாஸ்**

பதினெட்டு வயதாக இருந்த போது கொழும்பு, கொட்டாஞ்சேனை செல்லமஹால் தியேட்டருக்கு 'வெண்சங்கு' என்ற ஈழத்துச் சினிமாப் படத்தைப் பார்க்கச் சென்றேன். எனது பாடசாலை மாணவ நண்பன் பல்கலைக்கழக மாணவனாக இருந்து கொண்டு இத்தியேட்டரில் பகுதி நேர ஊழியராக வேலை பார்த்தான். ரிக்கற் கொடுப்பதே அவன் தொழில். முதல் நாள் ரிக்கற் பெற்றபோது நக்கலாகச் சிரித்தான். அடுத்த நாளும் சென்ற போது கூடுதலான நக்கல் சிரிப்பு. பின் மூன்றாம் நாள் அதே படத்தைப் பார்க்கச் சென்ற போது'உனக்கென்ன பைத்தியமா?' என்றான். இலங்கைத் தமிழ்ச் சினிமாவைப் பைத்தியங்கள் தான் பார்க்குமென்றொரு போக்கு அக்காலத்தில் இருந்தது! இதனால் தான் இலங்கைச் சினிமாவை எழுதத் தொடங்கினேன். தற்போது அவுஸ்திரேலியாவிலுள்ள வி.எஸ்.துரைராசாவின் வேண்டுகோளுக்காகவே 'குத்துவிளக்கு-மீள்பார்வை' என்ற நூலை எழுதினேன். 'குத்துவிளக்கு' அழிந்து போகுது, ஏதாவது செய்ய வேண்டுமென்றார். பாலேந்திரன் சி.டி.யில் கொண்டு வந்தார். 70 இற்கும் அதிகமான கலைஞர்கள் பற்றி எழுதி இருக்கிறேன் 'இலங்கை திரையுலக சாதனையாளர்கள்' என்ற நூலில். இனிவரும் நூலிலும் எழுதுவேன்.

-01.02.2011

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 26

## கலைஞர் கலைச்செல்வனின் இரு நாடக நூல்கள்

'நலிவுற்றவர்கள் அம்மணத்தோடு வாழ்ந்தாலும் மானம் காத்துக் கொள்கிறார்கள். நடுத்தர வர்க்கம் மானத்தோடு வாழ்வதாகக் காட்டிக் கொண்டு அம்மணத்தோடு விளையாடுகின்றது' என்ற அடிமட்ட மக்களின் உயர்வுக்காகத் தன் கலை, இலக்கிய ஊழியத்தை அர்ப்பணித்திருக்கும் கலாபூஷணம் கலைஞர் கலைச்செல்வனின் கலை, இலக்கியப் பணியின் பொன்விழாவைச் சிறப்பித்து ஆவணப்படுத்தும் முகமாகக் கொழும்பு - 06 இலக்கிய முற்றம் அமைப்பு 'சக்காராம் பைண்டர்','மனித தர்மம்' என்ற அவரது இரு நாடக நூல்களை வெளியிட்டுள்ளது. இவ்விரு நூல்களுக்கான வெளியீட்டு விழா 09.02.2011 ஆம் திகதி கொழும்பு 2, இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் தலைமையக, தாருஸ்ஸலாம் கேட்போர் கூடத்தில் தமிழ்த் தொண்டாளர், புரவலர் ஹாஸிம் உமர் முன்னிலையில் நடைபெற்றது.

ஸ்ரீ ரெலோ செயலர் ப.உதயராசா, வைத்திய கலாநிதி கவிஞர் ஏ.எல்.கே.தாஸிம் ஆகியோர் இணைத் தலைமையேற்று விழாவைச் சிறப்பித்தனர். மாண்புமிகு நீதியமைச்சர் ரவூப் ஹக்கீம் சிறப்பு விருந்தினராக வருகை தந்திருந்தார்.

**வரவேற்புரை :**
**எம்.தாஜ்மஹான்**

கூட்டத்துக்கு வருகை தந்தோரின் தொகை முக்கியமானதல்ல. வந்துள்ளோர் எப்படிப் பட்ட வகையினர் என்பது தான் அதிமுக்கியமானது. இந்திய பெருந் தலைவர்களான வல்லபாய் பட்டேல், காமராஜ் நாடார் ஆகியோர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமது சுயமுயற்சியாலேயே தலைவர்களாக உயர்ந்தவர்கள். முதலில் தோல்வியொன்றைக் கண்டுவிட்டால், சலித்து நின்று விடக்கூடாது. முயற்சியே பயிற்சியாகும் போது வெற்றி கனியும். எனவே முயற்சி என்ற ஆயுதத்தை எடுத்துப் போராடுவோம்.

**நூல் நயவுரை:**
**பேராசிரியர் சபா ஜெயராசா**

இலக்கிய மொழி தனித்துவமான மொழியாகும். கலைச்செல்வனின் தனித்துவமான சிந்தனைகளை இங்கு வெளியிடப்படும் இரு நூல்களும் வெளிப்படுத்துகின்றன. நூல்கள் முழுதும் தனித்துவமான மொழியே காணக்கிடைக்கின்றது. மனோரதியப் பாங்கு இழையோடி இருக்கின்றது. இலக்கியத்தின் சக்தி வாய்ந்த கருவி, மொழியாகும். மொழிக்கு இரு பரிமாணங்கள் உண்டு. குறிப்பான், குறிப்பிடுதல், என்பவையே அவ்விரண்டும், குறிப்பான் சொல்லை சுட்ட, குறிப்பிடுதல் பொருளைச் சுட்டும், இரண்டுக்கும் நேர் தொடர்புண்டு, இலங்கைப் பல்கலைக்கழகத்தில் அரங்கியல் ஒரு பாடமாக்கப்பட்ட பின் வெளியிலிருந்து வந்த ஆற்றல்கள் புறக்கணிக்கப்பட்டன. நாடகப் பிரதியை எல்லோராலும் ஆக்க முடியாது. அதுவும் தொழில்நுட்பம் சார்ந்தது தான். உடல் மொழி, இயக்கம் என்பன ஒன்றிணையும் போது தான் நாடகம் வெற்றி பெறும். அதுவொரு ஆற்றுகைக் கலையாகும். வெளியிடப்படும் இரு நூல்களிலும் கலைத்தன்மையை கலைச் செல்வன் செப்பமாக வெளிப்படுத்தியிருக்கிறார். மானுட சமுதாயத்தில் சமூக அரங்கு (SOCIAL THEATRE) மிகவும் முக்கியமானது.

மக்கள் கருத்துக்களை இது மூலம் தெளிவுபடுத்தி மாற்றலாம். இத்தகைய சமூக அரங்கை உருவாக்குவதில் இலங்கையில் கலைச் செல்வனின் பங்குப்பணி அதி முக்கியமானது. மராட்டிய நாடகமான 'சக்கா ராம் பைண்டர்' வட இந்தியாவில் பெருஞ் செல்வாக்கை ஏற்படுத்தியது. அங்கு காணப்பட்ட உளவியல் வாழ்வை வெளிப்படுத்திய நாடகம். ஒவ்வொரு சொல்லையும் நாடக ஆற்றுகையோடு கையாள்கிறார். வெறுமனே கொடுப்பது நாடகமல்ல. வாசகர்கள், பார்வையாளர் மனதில் தெறிப்பை ஏற்படுத்த வேண்டும். எமது நாட்டில் நாடகப் பிரதியாக்கம் வளர வேண்டும். அக்காலத்தில் பிரதி இல்லாது, அரங்கில் மனதில் பட்டதைச் சொல்லி நடித்த முறைமை இருந்தது. பிரதிகளின் முக்கியத்துவம் தோற்றம் காட்டியது. அதன் வழி வந்தவையே கலைச்செல்வனின் இவ்விரு நாடகங்களும். நாடகப் பிரதி தயாரிக்கும் முயற்சி எமது பல்கலைக் கழகத்தில் இல்லை. அந்த வெற்றிடத்தைக் கலைச்செல்வன் தனது நாடகங்கள் மூலமாக நிறைவேற்றி வருகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தலைமையுரை :**
**மருத்துவக் கலாநிதி, கவிஞர் தாஸிம் அஹமத்**

கலைச் செல்வன் சிறந்த கலைஞன். பல ஆளுமைகளைக் கொண்டவர். ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாகக் கலைத்தொண்டு செய்து வருகிறார். கலையும் இலக்கியமும் மனிதப் பண்புகளை வலியுறுத்த வேண்டும். விஞ்ஞானிகளும் கலை, இலக்கியத்தை ரசித்திருக்கின்றனர். இலக்கியங்களாக புகழ்பெற்ற ஆங்கிலக் கவிஞன் வேட்ஸ் வேத்தினின் (WORDS WORTH) கவிதைகள் மிகவும் ரசிக்கப்பட்டுள்ளன. கலைச்செல்வன் மூலமாகத் தமிழ்பேசும் மக்கள் பெருமைப்படுகின்றனர். அவரது நாடகங்கள் பல தடவைகள் மேடையேறியுள்ளன. மனிதாபி மானத்தை அடிப்படையாக்கி நாடகங்களைப் படைத்தளிக்கிறார். ஒருநாள் மஹரகம ஆஸ்பத்திரிக்குச் சென்ற போது RESPECT HUMANITY என்ற சுவரொட்டிகளைப் பார்த்தேன். இதை மதித்து வாழும் கலைஞர் கலைச் செல்வன்.

அதையே தனது நாடகங்ளின் கருப்பொருளாக்கி அதற்கு மரியாதையை வழங்குபவர். இங்கு கௌரவ நீதி அமைச்சர் பிரசன்னமாகி இருக்கிறார். அவர் முன் ஒரு வேண்டுகோளை முன்வைக்கிறேன். முஸ்லிம் கலைஞர்களுக்காக ஒரு நிதியத்தை ஏற்படுத்த வேண்டும். அத்தோடு இஸ்லாமிய நாடக விழாக்களும் நடத்தப்பட வேண்டும்.

**கௌரவிப்புகள் :**

*நிதி அமைச்சர் ரவூப் ஹக்கீம் - புரவலர் ஹாஸிம் உமர், ஸ்ரீரெலோ பொதுச் செயலாளர் ப.உதயராசா, மருத்துவ கலாநிதி, கலைஞர் தாஸிம் அஹமத், கலைஞர் கலைச் செல்வன் ஆகியோருக்குப் பொன்னாடை போர்த்தினார். பேராசிரியர் சபா ஜெயராசா, முத்தப்பன் செட்டியார், எம்.எஸ்.தாஜ்மஹான் ஆகியோர் மாண்புமிகு அமைச்சர் ரவூப் ஹக்கீமுக்குப் பொன்னாடை போர்த்தி மாலை அணிவித்தனர்.*

*நூல் வெளியீட்டில் முன்னாள் அமைச்சர் திருமிகு பெ.இராதாகிருஷ்ணன் முதல் பிரதிகளை நீதி அமைச்சருக்கும் ப.உதயராசாவுக்கும் வழங்கினார்.*

*'சக்காராம் பைண்டர்' நாடக முதல் பிரதியை 'நீதி அமைச்சர்' புரவலர் ஹாசிம் உமருக்கும் 'மனித தர்மம்' நாடக முதல் பிரதியை ப.உதயராசாவுக்கும் வளுழங்கினார்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறப்பு விருந்தினர் உரை : நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம்

நிறைவானதொரு மனிதன் கலைச்செல்வனென்பதை இவ்விழாவின் மூலமாக எனக்கு அறிய முடிந்தது. இந்நாட்டு முஸ்லிம்களும் கலையில் சளைத்தவர்களல்லவென்பதற்கு கலைச்செல்வன் உதாரணமாகத் திகழ்கிறார். இவ்விரு நூல்களின் வடிவமைப்பு மெச்சத்தகுந்ததாக இருக்கின்றது. இலங்கை நாடகத்துறைக்கு முஸ்லிம்களது பங்களிப்பு மிகக் குறைவு. தரமான நாடகப் பங்களிப்பைச் செய்பவர்களாக எம். அஷ்ரப்கானும் கலைச்செல்வனும் இன்றுள்ளனர். நூறு நாடகங்களுக்கும் மேல் இலங்கை வானொலியில் தந்தவர் அஷ்ரப்கான். இலங்கை வானொலியின் நாடகப் பிரிவில் பலர் பிரகாசித்திருக்கின்றனர். அபூநானாவை இன்றும் மறக்க முடியாது. தமிழராக இருந்தும் மரைக்கார் ராமதாஸ் முஸ்லிம்களின் பேச்சுத் தமிழை அச்சொட்டாகப் பேசி நடித்தார்.

சிங்கள நாடகத்துறை மிகவும் வளர்ந்து விட்டது. இதையிட்டுத் தமிழ் பேசும் நாம் வெட்கப்பட வேண்டும். நாடகத்துறையில் நாம் ஏன் பின்தங்கினோம். சிந்தித்து எமது நாடகத்துறையை முன்னேற்ற வேண்டும். வெசாக் காலத்தில் வீதி நாடகங்களை நடித்துக் காட்டுகின்றனர். சிங்களக் கலைஞர்கள் ஆர்வம் காட்டுகின்றனர். தமிழகத்தில் சட்டசபை உறுப்பினர் கனிமொழி தெருக்கூத்து நாடகங்களை ஊக்குவித்துக் கொண்டிருக்கிறார். அங்கு மிகப் பிரமாதமாகச் செய்கிறார்கள். சமயம், ஹாஸ்யம் சார்ந்தவை களாக இருக்கின்றன. தமிழ் நாடகத்துக்கு இங்கு ஊக்குவிப்பில்லை. நாடகப் போட்டிகளில் நடுவராகக் கலைச் செல்வன் இலங்கையின் மூலை முடுக்குகளுக்கெல்லாம் சென்று வருகிறார். நாடகத்துறையில் எமது முஸ்லிம் பாடசாலைகள் கூடியளவு ஈடுபாடு காட்டுவதில்லை. பாடசாலைகள் மட்டத்தில் நடாத்தப்பட்ட ஷேக்ஸ்பியர் நாடகப் போட்டி யொன்றிற்குச் சென்றேன். பாடசாலை மாணவர்களால் நடிக்கப்பட்ட நாடகங்கள் மிகவும் பிரமாதமாக இருந்தன. முதலாவது பரிசு கொழும்பு லேடிஸ் கொலிஜுக்குக் கிடைத்தது. அரங்கில் தளபாடங்கள் இருக்கவில்லை. நடிகர்களே தமது உடலமைப்பில் தளபாடங்களை ஏற்படுத்தி நடித்தனர். பார்ப்பதுக்கு மிக வியப்பாக இருந்தது. தம், தம் நாடகங்களை வெல்ல வேண்டுமென்ற நோக்கோடு நிறையச் செலவு செய்து நாடகங்களை அரங்கேற்றினர்.

இரண்டாவது பரிசு நீர்கொழும்பு பாடசாலைக்குக் கிடைத்தது. ஷேக்ஸ்பியரின் மிட்சமர்நைட்றீம் (MIDSUMER NIGHT DREAM) நாடகமும் இப்போட்டியில் மேடையேற்றப்பட்டது. சிங்கள நாடகக் கலைஞர் ஹென்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜெயசேனாவின் 'குணுவத்தே கதாவ' நாடகம் ஆயிரம் தடவைகளுக்கு மேலாக மேடையேற்றப்பட்டுள்ளது. தமிழ் நாடகங்களை எத்தனை பேர் வந்து பார்க்கின்றனர். தமிழ் நாடகத்தைத் தரத்தில் முன்னேற்ற வேண்டும். 'ஏகாதிபதி' என்ற தர்மஸ்ரீ சேனாநாயக்காவின் சிங்கள நாடகத்தை மூன்று முறை பார்த்தேன். புதுப்புது நுட்பங்களைச் சிங்கள நாடகத்தில் கையாளுகின்றனர். மக்களுக்குச் சொல்ல வேண்டியதை மிக ஆழமாகச் சொல்கின்றனர். சிங்கள நாடகத்துறையை நாம் மிகவும் கூர்மையாக அவதானிக்க வேண்டும். ஜனாதிபதியோடு நான் சீனாவுக்குச் சென்றிருந்த போது அவர்களோடு பேசியதன் பலனாக சீன உதவியில் கொழும்பில நாடக அரங்கொன்று அமைக்கப்படுகின்றது. அதை நாம் உரிய முறையில் பயன்படுத்தப் போகின்றோமா? எமது அடுத்த சந்ததியினருக்காக எதையாவது செய்ய வேண்டும். தமிழ் நாடகத்தில் ஆற்றல்களைக் காட்டியோருக்குப் பரிசு கொடுத்து முடிந்து விட்டது! இப்பொழுது நாடகத்துறை மிகக் குறுகியதாகச் சுருங்கிவிட்டது. இதிலிருந்து விடுபட வேண்டும்.

**கருத்துரைகள்:**
**கவிஞர் சு.முரளிதரன்**

சக்காராம் பைன்டர் 1972 ஆம் ஆண்டு இந்தியாவில் மேடையேற்றப்பட்ட மராட்டிய நாடகத்தின் தமிழ் வடிவம். எழுதப்பட்ட காலத்துச் சூழ்நிலையை யதார்த்தமாகப் படம் பிடித்துக் காட்டியதால் இந்தியாவில் தடை செய்யப்பட்டது. ஆணாதிக்கப் பின்புலத்தைக் கொண்ட கதையமைப்பு மிகத் தாக்கமானதாக இருந்ததால் பல மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு அரங்கேற்றப்பட்டது. ஆனால், தமிழ் நாட்டில் இதுவரை நடிக்கப்பட்டதாகத் தெரியவில்லை! முப்பது ஆண்டுகளுக்குப் பின்னர், கலைச்செல்வன் தமிழ்நாட்டு வாழ்க்கைப் பின்னணியைப் புகுத்தித் தமிழ் நாடகமாக்கியுள்ளார். பிரதான பாத்திரமான பைன்டர், பிராமணர். இரு பெண் பாத்திரங்களுமுண்டு. பாலியல் அடிமைப் பெண்களாக இவர்களை வைத்திருக்கிறார். மிகவும் வித்தியாசமான நாடகம். பாரதி சொன்ன சமுதாயப் பார்வை இருக்கின்றது. கொழும்பு பிரதேச நாடகத்தின் பரிணாமத்தை உணர முடிகின்றது. எமது இளைய தலைமுறைக்கு நிச்சயமாக ஒரு பாய்ச்சல் தேவை. இந்நாடகம் அமெரிக்காவிலும் மேடையேற்றப்படுகிறது. இதன் ஆசிரியர் விஜேய் டெண்டுல்கார் புரட்சிகரமான நாடகாசிரியர். 17 நாடகங்களைத் தந்தவர். இந்நாடகம் தமிழுக்கு வந்திருப்பது வரலாறே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திறனாய்வாளர் தம்பு சிவா**

கலைச்செல்வனின் கலை இலக்கியப் பங்களிப்புப் பெருமைக்குரியது. மனித ஆற்றல்கள் மற்றையோரைக் கவர வைக்கும் தன்மையுடையவை. சகலரிடமும் பல்துறைப் பரிமாணங்களைக் காண்பதரிது. இந்த வகையில் கலைச்செல்வன் இமயமாக உயர்ந்து நிற்கிறார். இலங்கையில் பல நாடகங்களை மேடையேற்றியவர். பல பரிசுகளைப் பெற்ற சாதனையாளர். 2004 இல் 'ஓதெல்லோ' என்ற நாடகத்தை நெறிப்படுத்தி நடித்தார். இது பல தடவைகள் மேடையேற்றப்பட்டு நாடக ரசிகனின் பாராட்டைப் பெற்றது. இலங்கை வானொலியின் முஸ்லிம் நிகழ்ச்சிப் பிரிவில் அநேக நாடகப் பிரதிப் பங்களிப்பையும் செய்து நடித்தார். அமரர் வி.பி.கணேசன் தயாரித்த 'நான் உங்கள் தோழன்' என்ற சினிமாப் படத்துக்கு கதை,வசனம் எழுதி நடித்துமிருக்கிறார். 'மனித தர்மம்' 1961 இல் தினகரன் நாடகப் போட்டியில் ஆறு பரிசுகளைப் பெற்ற சிறந்த நாடகம். இப்போட்டியில் கே.எம்.வாசகர், எஸ்.எஸ்.கணேசபிள்ளை (வரணியூரான்), பௌசுல் ஹமீட், ரகுநாதன் ஆகியோரது நாடகங்களும் போட்டிக்கு வந்தன. நடுவர்களாக சு.வித்தியானந்தன், கா.சிவத்தம்பி, தில்லைநாதன், எஸ்.எம்.கமால்தீன் ஆகியோரிருந்தனர். கலைச்செல்வனின் நாடகமே விருதுகளைப் பெற்றது. தென்னிந்திய சினிமா நடிகை சௌகார் ஜானகி விழாவில் கலந்து பரிசுகளை வழங்கினார்.

கலையரசு சொர்ணலிங்கம் பிரதம விருந்தினராக அழைக்கப்பட்டிருந்தார். பல பரிசுகளைப் பெற்ற 'மனித தர்மம்' இப்பொழுது நூலாக வெளிவந்திருப்பது சந்தோஷமானது தான். தமிழ் நாடக மேடையின் ஜெயகாந்தன் எனக் கலைச் செல்வனைக் கூறலாம். விளிம்பு நிலை மக்களின் சோக வரலாற்றைக் கலைச் செல்வனின் நாடகங்கள் வெளிக்கொண்டு வருகின்றன.

கலைப் படைப்புகள் விளிம்பு நிலை மக்களின் அவல வாழ்வை மாற்றியமைக்கத் துடுப்புகளாக அமைய வேண்டும். வெளிவேடங்களை ஒழித்துக் கட்டாத வரைக்கும் விடியல்களுக்கு வாய்க்கால் வெட்ட முடியாதென்கிறார் கலைச்செல்வன். நிச்சயமாக அது முடியாதது தான்.

**நன்றியுரை :**

**'கொழுந்து' அந்தனி ஜீவா**

அமைச்சர் அவருக்குக் கிடைத்த தவறான தகவல்களை வைத்துச் சில கருத்துகளை முன்வைத்தது கவலையைத் தருகின்றது! நாடகத் துறையில் நாம் சாதித்துத்தானிருக்கிறோம். சுஹைர் ஹமீட்டுக்கு நிகராக இந்நாட்டில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடகக் கலைஞர் இல்லை. அவரது நாடக ஒத்திகை ஒன்றைப் பார்த்துவிட்டுப் புகழ்பெற்ற சிங்கள நாடகக் கலைஞர் ஹென்றி ஜெயசேனா பாராட்டியிருக்கிறார். நமது தலைமைகளுக்கு எமது தேவைகள் தெரியாது. ஆனால், சிங்கள அரசியலாளர்கள் சிங்கள கலைஞர்களுக்கு நிறையவே செய்து வருகின்றனர். அவர்களுக்குக் கிடைக்கும் வாய்ப்புகள் தமிழ் கலைஞர்களுக்கு கிடைப்பதில்லை. எமது அரசியல் தலைமைகள் தமது சுய வாழ்வையே பார்க்கின்றனர். எமது கலைஞர்கள் மத்தியில் ஒற்றுமை இல்லை. இந்திய இலத்திரனியல் ஊடகங்கள் நாடகத்துறைக்கு நிறைய வாய்ப்புகளைக் கொடுத்து வளர்க்கின்றனர்.

தமிழ்க் கலைஞர்கள் பாதிக்கப்படுகின்றனர். வடக்கு, கிழக்கில் முப்பது ஆண்டு காலமாக யுத்தம் நடந்து கொண்டிருந்தது. இருந்தும் யாழ்ப்பாணத்தில் நாடகங்கள் அரங்கேற்றத்தான் பட்டன. ஆனால், கொழும்பு, மலையகப் பிரதேசங்களில் நாடகங்கள் இல்லாமல் போயின. நாடகங்களுக்கு மண்டபமொன்றைக் கேட்டோம். தமிழ் அமைச்சர் பேச மறுத்தார். கலைப் பணி வரலாற்றில் கொழும்புப் பிரதேசம் இருட்டடிப்புச் செய்யப்படுகின்றது. ஆனால், வடக்கு, கிழக்கு எழுப்பிப் பேசப்படுகிறது. கலைச் செல்வனுக்கு நாடகத் துறையில் ஐம்பதாண்டு கால வரலாறுண்டு. ஆனால், இன்னமும் பலருக்கு அவரை யாரென்றே தெரியாது. இங்கு வெளியிடப்பட்டிருக்கும் நூல்கள் அவரை அறிய வைக்கும்.

எமது பாவனைக்கென அரசிடம் துண்டு நிலம் கேட்டோம் கொடுக்கப்படவில்லை. அரச கலைக் குழுவில் சிங்களத்துக்கு எட்டு உறுப்பினர்கள்; தமிழுக்கு இருவர் மட்டுமே. தகுந்த ஆவணங்கள் எம்மிடமில்லை. நடிகவேள் லடீஸ் வீரமணி, சுஹைர் ஹமீட், மணிமேகலை இவர்களைத் தெரியாத அநேகர் எம்மிடமிருக்கின்றனர்.

*நூல்களின் ஆசிரியர் கலைச்செல்வன் நிகழ்வுகளை இணைத்து அறிவிப்புகளைச் செய்ததோடு சில உரைகளுக்கு விளக்கங்களையும் கொடுத்தார். கலைஞர் உதவி நிதியம் தமிழ்க் கலைஞருக்கும் ஏற்படுத்த வேண்டுமெனவும் கருத்துச் சொன்னார்.*

-21.02.2011

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 27

## இரா. சடகோபனின் 'கசந்த கோப்பி'

தடம் பதித்த கவிஞரும் மொழி பெயர்ப்பாளரும் மூத்த பத்திரிகை யாளருமான சட்டத்தரணி இரா.சடகோபனின் 'கசந்த கோப்பி' என்ற மொழிபெயர்ப்பு நாவல் 26.02.2011 ஆம் திகதி கொழும்புத் தமிழ்ச் சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில் வெளியிடப்பட்டது. பிரபல எழுத்தாளர் தெளிவத்தை ஜோசப் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவுக்குப் பேராசிரியர் சோ.சந்திரசேகரம் பிரதம அதிதியாக அழைக்கப்பட்டிருந்தார்.

நாவலாசிரியரின் தாயார் திருமதி இராமையாவோடு அவரது குடும்பத்தினர் சிலர், கல்விமான்கள், இலக்கிய அபிமானிகள் ஆகியோர் மங்கலச் சுடரேற்றி நிகழ்வைத் தொடக்கி வைத்தனர். வரவேற்புரையை ஜீ.சடகோபன் நிகழ்த்தினார்.

**பிரதம அதிதி உரை:**
**பேராசிரியர் சோ.சந்திரசேகரம்**

இலங்கை மலையகத் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு இன்று முக்கிய நாளாகும். ஆங்கில நாவலொன்று மீள் உருவாக்கம் பெற்று இன்று தமிழில் 'கசந்த கோப்பி' என்ற பெயரில் வெளியிடப்படுகிறது. இதன் மூலம் இரா.சடகோபன் முக்கியத்துவம் பெறுகிறார். அவர் இதன் மூலமாகச் சாதனையாளராகிறார்.

இது மிகவும் முக்கியமானதொரு பணி. பிறமொழிக் கவிதைகளை கே.கணேஷ் தமிழில் மொழி பெயர்த்துத் தந்தார். மு.சிவலிங்கம் ஆங்கிலத்திலிருந்து தமிழ் மொழி பெயர்ப்புகளைத் தந்தார். இவர்களது வரிசையில் இன்று இரா.சடகோபன் சேர்ந்து கொள்கிறார். மூல நூலை வைத்துக் கொண்டு தாமாகவே 'கசந்த கோப்பி' நாவலை எழுதியிருக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறார். இது மொழிபெயர்ப்பாகாது. இந்த மண்ணுக்குப் பொருத்தமான நடையில் எழுதப்பட்டுள்ளது. இந்நாவலுக்கு நிச்சயமாக விருது கிடைக்கும். ஏற்கனவே இவர் வெளியிட்ட 'உழைப்பால் உயர்ந்தவர்கள்' என்ற நூலுக்கும் விருதைப் பெற்றவர். மலையகப் பேச்சு வழக்கும் சொற்தொடர்களும் ஏராளமாக நாவலில் உள்ளன. 'தூரத்துப் பச்சை' என்ற மலையக நாவலைக் காலஞ்சென்ற கோகிலம் சுப்பையா படைத்தார். 'மலைக் கொழுந்து'நாவலை நந்தியும் 'குருதிமலை'யை தி.ஞானசேகரனும் எழுதினர். மாணவனாக இருந்த போது இவைகளைப் படித்தேன். 'சொந்தக்காரன்' நாவலை பெனடிக்றபாலன் எழுதினார். இப்பொழுது வெளியிடப்படும் 'கசந்த கோப்பி' நாவலின் மூல நாவலான BITTER BERRY யை கிறிஸ்ரின் வில்சன் என்ற வெள்ளைக்கார மாது எழுதினார். பெருந்தோட்டம் பற்றியது. நாவலின் பாத்திரங்களாக வெள்ளைக்காரர்கள் வருகின்றனர்.

யாரால் மலையகத் தோட்டத் தொழிலாளர்கள் அடக்கியொடுக்கப் பட்டனரோ,அந்தத் துரைமார்களது கதை. இங்கு வந்த ஆங்கிலேயர்கள் பெரும்பணம் சம்பாதிக்க முயன்றனர். 7000 மைல்களுக்கு அப்பாலிருந்து வந்தவர்கள், இதில் RISK TAKING இருக்கிறது. இதுவே புதிய சிந்தனைக்கு இடமளிக்கும் நவீன பண்பு. 16 ஆம் நூற்றாண்டில் வெள்ளைக்காரன் அயல் நாடுகளை நோக்கிப் புறப்பட்டான். கொலம்பஸ் புறப்பட்டான். வஸ்கொடகம, பத்தலோமியஸ் நாடுகளைக் காணப் படகில் புறப்பட்டனர். இந்தியாவுக்குச் சென்றனர். நாவலில் வரும் வெள்ளைக்கார கதாநாயகனுக்கு ஒருவன் ஆசை காட்டுகிறான். இலங்கையில் தோட்டத்தை வாங்கிக் கோப்பி வளர்க்க ஆலோசனை கூறுகிறான். அவன் சொன்னதை நம்பி கதாநாயகன் மனைவியோடு வருகிறான். இவர்கள் படும்பாடுகள் தான் நாவலாகப் படைக்கப்பட்டு, இன்று மொழி பெயர்ப்பு நூலாக வெளியிடப்படுகிறது. மாட்டுவண்டி, குதிரை வண்டிகளில் இவர்கள் மலைநாட்டுக்கு குடும்பமாக வந்தனர்.

குடிசையில் வாழ்ந்தனர். அட்டை, பாம்புகளின் உபத்திரவங்களை அனுபவித்தனர். நாம் மட்டுமல்ல, வெள்ளைக்கார அந்நியரும் கஷ்டப்பட்டனர். 19 ஆம் நூற்றாண்டின் மலையக வாழ்க்கையை இந்நூல் சித்திரிக்கின்றது. இந் நாவலாசிரியை கிறிஸ்ரின் வில்சன் 27.02.2010 இல் காலமானார். இங்கே தான் ஒரு சந்தேகம் ஏற்படுகின்றது. 20 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த இவர் 1830 இல் இருந்த மலையக வாழ்வை எவ்வாறு எழுதினார்? 19 ஆம் நூற்றாண்டில் கோப்பித் தோட்டங்கள் அழிந்தன. இக்கதைக்குள் இரா.சடகோபனின் கைச்சரக்கும் சேர்ந் திருக்குமோ என்ற சந்தேகமும் எழுகின்றது. இது குறித்து தெளிவத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜோசப்பிடம் கேட்ட போது ஆராய்ச்சிகள், தேடல்கள் மூலமாகத் தகவல்களைச் சேகரித்து எழுதியிருக்கிறார் எனச்சொன்னார். பேராசிரியர் பஸ்தியாம் பிள்ளையும் மலையகம் சம்பந்தமான கட்டுரைகளை ஆய்வு நோக்கில் எழுதியுள்ளார்.

**தலைமையுரை :**
**மூத்த எழுத்தாளர் தெளிவத்தை ஜோசப்**

2010 இல் காலமாகிய கிறிஸ்ரின் வில்சன் கோப்பிச் செய்கைக் காலத்துக் கதையை எழுதியிருக்கிறார். இதற்கு வரலாற்றை நன்கு தெரிந்திருக்க வேண்டும். கடுமையான ஆராய்ச்சி தேவை. இதை வெளியிட்டதற்காக அத்துலத் ஜெயக்கொடிக்கு நன்றி கூற வேண்டும். BITTER BERRYஎன்ற இந்த ஆங்கில மூல நாவலுக்கு சிங்கள மொழி பெயர்ப்பும் வந்துள்ளது. இப்போது இரா.சடகோபன் தமிழில் தந்திருக்கிறார். வெள்ளைக்காரர்கள் இலங்கைப் பொருளாதாரத்தை மாற்றியமைத்தனர். ஏற்றுமதிப் பொருளாதாரத்தைக் கொண்டு வந்தனர்.

கோப்பி, தேயிலை, தென்னைச் செய்கைகள் இதைச் சாத்தியப்படுத்தின. பொருளாதாரத்தை உயர் நிலைப்படுத்த இரு பிரதான சக்திகள் தேவை. ஒன்று தேவையான போதிய முதல். அடுத்தது உழைப்பு. அந்நிய முதல் இருந்தது. உழைப்பை நாம் கொடுத்தோம். மலையகத் தோட்டத் தொழில் குறித்து நிறையவே எழுதியிருக்கிறோம். முதல் போட்டவர்களைப் பற்றி எழுதியிருக்கிறோமா? அறிந்தோமா? வெள்ளைக்காரர் பட்ட கஷ்டத்தை நாம் அறியவில்லை. அதை இந்நூல் அற்புதமாகத் தருகிறது. இவைகளை அறிவதற்கு ஆசிரியர் சுவடிகள் திணைக்களத்தை (ARCHIVES) அணுகியிருக்கலாம். எனவே, நாம் ஆசிரியருக்கு நன்றிகூறக் கடமைப்பட்டவர்கள். தேவையான ஒத்துழைப்புகள் கிடைத்ததால் எழுதியிருக்கிறார். கோ.நடேசய்யர் 'ராமசாமி சேர்வையின் சரிதம்' என்ற கதையில் இந்தியாவிலிருந்து இந்தியத் தொழிலாளரைக் கூட்டிக்கொண்டு வந்ததைச் சொல்லியுள்ளார். BITTER BERRY இல் வரும் ரொம், மைத்துனரால் ஏமாற்றப்பட்டு இலங்கை வருகிறார். வந்து பட்ட சிரமங்களை இரா.சடகோபன் எழுதியிருக்கிறார். இதற்காகக் கடின உழைப்பைச் செய்திருப்பார்.

ரொம் கதாபத்திரம் மனிதாபிமானமுடையது. அராஜகத்தை எதிர்க்கிறான். அளவுக்கதிகமான பாரத்தை தொழிலாளியைத் தூக்க வைப்பது அராஜகமெனக் கண்டிக்கிறான். துரைமார் உழைத்துமிருக்கின்றனர். இவைகள் இந்நாவலில் மிகவும் அற்புதமாகச் சொல்லப்பட்டிருக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழிபெயர்க்கும் போது பல இடையூறுகள் வரும். மொழி பெயர்ப்பவன் படைப்பாளியாகவும் இருக்க வேண்டும். அமரர் கே.கணேஷ் 24 ஆங்கில நூல்களை மொழி பெயர்த்துத் தந்தவர். மொழி பெயர்ப்பு மலையகத்தை விட்டு விலகும் அறிகுறி தென்படுகிறது. சடகோபனின் இம்முயற்சி அதை மறுப்பதாக அமைகின்றது. 'கசந்த கோப்பி' நல்ல நாவல்.

*நூல் வெளியீட்டு நிகழ்வில் எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் லிமிற்றெட் நிறுவன முகாமைத்துவப் பணிப்பாளர் குமார் நடேசன். முதல் பிரதியைப் புரவலர் காசிம் உமருக்கு வழங்கி, சிறப்புப் பிரதியைப் பிரபல தொழிலதிபர் கே.துரைசாமி (ஜே.பி.) யின் பிரதிநிதிக்கு வழங்கினார்.*

*இவ்விழாவில் தகைசார் பிரமுகர்கள் சிலர் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டனர். 'கசந்த கோப்பி' நாவலாசிரியர் இரா.சடகோபனின் அன்னையார் திருமதி இராமையாவுக்கு மூத்த பத்திரிகையாளர் திருமதி அன்னலெட்சுமி இராஜதுரை பொன்னாடை போர்த்தினார். பேராசிரியர்கள் எம்.எஸ்.மூக்கையா,எம்.சின்னத்தம்பி, சோ.சந்திரசேகரம் மற்றும் எம்.வாமதேவன், அத்துல ஜயக்கொடி, குமார் நடேசன் ஆகியோரும் இக்கௌரவத்தைப் பெற்றனர்.*

**நூலறிமுக உரை :**
**எழுத்தாளர் மு.சிவலிங்கம்**

மொழி பெயர்ப்பு, தமிழில் மிகவும் மந்த நிலையிலேயே இருக்கின்றது. ஆனால், சிங்களத்தில் நிறைய உண்டு. சிங்கள மக்கள் நாவல்களையே அதிகமாக வாசிக்கின்றனர். இந்தியாவில் ஆங்கிலப் புலமை உண்டு. இந்த மொழிபெயர்ப்பு நாவல் அற்புதமாக இருக்கின்றது. நிலப்பசியுடைய அந்நியர்கள் இந்நாட்டைச் சூறையாடினர். பெருந்தோட்ட எழுச்சியின் மூலமாகவே முதலாளித்துவம் அறிமுகப்படுத்தப்பட்டது. இந்நாவலுக்குள் காதல் ஜோடியும் வருகிறது. 'கறுப்பு அடிமைகள்' என்ற நூல் தமிழில் இருக்கின்றது. ஆன்மீக ரீதியான புத்தகங்கள் எழுதியவர்கள் உள்நாட்டு யுத்தத்தை ஏற்படுத்தினர் என ஆபிரகாம் லிங்கன் கூறியுள்ளார். மொழிபெயர்ப்பில் நம்பகத்தன்மை இருக்க வேண்டும். கவனமாகச் செய்ய வேண்டும். 'தாய்' என்ற ரஷ்ய நாவலை சிதம்பர ரகுநாதன் மொழிபெயர்த்தார். நல்ல மொழி பெயர்ப்பல்ல எனக் கருத்துச் சொல்லப்பட்டது. இத்தகைய எழுத்துகளை TRANSLATION, TRANSCRIPTION, TRANSCREATION எனவும் வகைப்படுத்துவதுண்டு. 'ROOT' என்ற நாவலைக் கட்டாயம் படிக்க வேண்டும். 'கசந்த கோப்பி' கோப்பித் தோட்டம் பற்றியது. மொழி பெயர்ப்பு மிகவும் நுணுக்கமாக இருக்கிறது. களத்தின் அழகைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படம் பிடித்துக் காட்டுகிறது. ஈழத்துப் படைப்பாளி நீ.பி.அருளானந்தத்தின் நாவல்களிலும் இச்சிறப்புண்டு.

**நூலாய்வு :**

**பேராசிரியர் செ.யோகராசா (கிழக்குப் பல்கலைக்கழகம்)**

ஈழத்தில் நாவல் மொழி பெயர்ப்பு மிக அரிதாகவே நடக்கிறது. அல்லாமா எம்.எம்.உவைஸ், திக்குவல்லை கமால் சிங்கள நாவல்களை மொழி பெயர்த்திருக்கின்றனர். மொழி பெயர்ப்பு நாவல் முயற்சிகளை வளர்க்க வேண்டும். உற்சாகப்படுத்த வேண்டும். தமிழ் மொழி பெயர்ப்பில் க.நா.சுப்ரமணியம் மிகவும் முக்கியமானவர். மாற்றங்களை ஈழத்து எழுத்தாளர்கள் அறிய வேண்டும். ஈழத்துச் சமூக வரலாறு எழுதப்படாத சூழலில் அதை நாவல் எந்தளவுக்குப் பூர்த்தி செய்துள்ளது?

கோகிலம் சுப்பையாவின் 'தூரத்துப் பச்சை' நாவலும் 'கமுகம் சோலை' போன்ற நாவல்களும் வெளிவந்துள்ளன. இவைகளில் சில அடையாளங்களைக் காண முடிகின்றது. மலையகத்தின் தமிழ்ச் சமூக வரலாறு கோப்பித் தோட்ட வளர்ச்சியினூடாகவே ஆரம்பிக்கிறது. 'கசந்த கோப்பி' மலையக மக்களின் ஆரம்ப வரலாற்றைக் காட்டுகின்றது. இது ஆதார பூர்வமான நாவல். லண்டன் துரைமாரும் இங்கே கஷ்டப்பட்டே வந்தனர். நோய் வாய்ப்பட்டனர். இவைகளை மிகத் துல்லியமாகக் கலாபூர்வமாக இந்நாவல் காட்டுகின்றது. தனிமை வாழ்க்கை தொழிற்பற்றைக் குறைக்கின்றது. கோப்பியை விற்க முடியாத நிலை இருந்துள்ளது. இத்தகைய விபரங்கள் நாவலில் காணப்படுகின்றன. இந்த நாவல் பொருளாதார நோக்கிலான தொனிப்பொருளைக் கொண்டுள்ளது. கோப்பியே இதன் முக்கிய பாத்திரம். கொலரா நோயும் ஒரு பாத்திரம். இவ் வகையான நாவல்கள் தமிழில் மிகக் குறைவு. வங்க மொழியில் உண்டு. பாத்திர வார்ப்புச் சிறப்பாக இருக்கிறது. தொழிலை நேசிக்கும் பாத்திரங்களும் உண்டு. இவைகள் உண்மையாக வாழும் பாத்திரங்களே. எஸ். பொன்னுத்துரையின் 'மாஜினி', செ.யோகநாதனின் 'நேற்றிருந்தோம் அந்த வீட்டினிலே' நாவல்களில் இத்தகைய நிஜப் பாத்திரங்களைக் காணலாம். நூலுக்குத் தலைப்பு மிகவும் முக்கியமானது.

கவித்துவமான மொழிபெயர்ப்பும், உரை நடையும் உண்டு. தருமு சிவராமுவின் கவித்தன்மை உண்டு. சொந்த ஊரான படியால் சடகோபன் அழகைச் சேர்த்துப் படைத்திருக்கிறார். இப்படைப்பு ஒரு TRANSLATION ஆக இருக்காது. TRANSCREATION ஆகவே இருக்கின்றது. நெவில் பாத்திரப் படைப்பு ஏமாற்றத்தைத் தருகிறது. முதலாளித்துவத்தைப் பார்க்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழிலாளி சம்பந்தப்பட்ட பதிவுகள் குறைவு. பெருந்தேடல் நடந்துள்ளது. கடும் உழைப்புக் கொடுக்கப்பட்டுள்ளது. இரா.சடகோபனின் பல்துறை ஆற்றல்களைக் காண முடிகின்றது. ஈழத்தில் றப்பர்த் தோட்ட வாழ்க்கைப் படைப்பு. நாவல் இன்னமும் படைக்கப்படவில்லை. இரா.சடகோபன் தனது தேடலின் மூலமாக அத்தகைய நாவலொன்றைப் படைத்து ஈழத்து இலக்கியத்துக்கு வளத்தைச் சேர்க்க வேண்டும்.

வாசகரின் கவனத்தைப் பெற்றுவரும் கவிஞர் லுணுகலை ஸ்ரீ வாழ்த்துப் பாவொன்றை வாசித்தார்.

**விமர்சன உரைகள்:**

**எழுத்தாளர், சட்டத்தரணி பதுளை சேனாதிராஜா**

நானும் இந்நூலாசிரியர் இரா.சடகோபனும் ஒரே அறையில் வேலை செய்கிறோம். எந்த நேரமும் எழுதிக்கொண்டே தான் இருப்பார். அவரது இருவருடக் கடின உழைப்பில் வெளிவந்திருப்பது தான் இந்த நாவல். இத்தகைய நாவல்களை எந்தப் பிரதேச மொழியில் எழுதுவது? மொழி பெயர்ப்பாளருக்கு இதுவொரு பெரும் பிரச்சினை. மலையகத்தவரென்ற படியால் அப்பிரதேச மொழியைப் பாவித்திருக்கிறார். முடிவு எப்படி முடியுமென வாசகனுக்குத் தெரியாதிருக்கும் சிறுகதை தான் நல்ல சிறுகதையாகும். அவ்வகையானது தான் நாவலும். பின்னால் நடக்கப் போறவைகளை நாவல் வெளிப்படுத்துகிறது. சரா என்ற பாத்திரத்துக்கு துப்பாக்கிப் பயிற்சி எதற்கென நினைத்தேன். எனக்குத் தமிழ்ச் சினிமாப் படமே நினைவுக்கு வந்தது. அப்பயிற்சி தான் பின், மகனுக்கு ஆபத்தை ஏற்படுத்த வந்த மிருகத்தைச் சுட்டுக்கொல்ல உதவுகிறது. சில சொற்களை வெட்டி மொழி பெயர்த்துள்ளார் போல் தோன்றுகிறது. கையாண்ட சொற்கள் சுவாரஸ்யமாக இருக்கின்றன.

**விமர்சகர் சு.முரளிதரன் (பணிப்பாளர், கல்வி அமைச்சு)**

நாவல் இலக்கியத்தில் இப்படைப்பு இன்னுமொரு பரிமாணமாகத் தெரிகிறது. அழுத்தமான சிந்தனை. பக்கச்சார்பானது. புதிய வகையான எழுத்து. புதிய எழுத்தாளர் எழுதும் போது வித்தியாசமாக இருக்கும். கோப்பித் தோட்ட உருவாக்க மக்களின் எதிர்கால இடர்ப்பாடுகளைத் தருகிறது. மறு கண்ணோட்டமான பார்வையுண்டு. மொழி பெயர்ப்பில் மூலப் படைப்பாசிரியரின் ஆளுமை வெளிப்பாடு இருக்க வேண்டும். நாவலில் முரண்பாடுகள் இருக்கின்றன. யதார்த்தமானதாக உள்ளது. எதிர்வினையை நாடி நிற்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திறனாய்வாளர் லெனின் மதிவானம்
## (பிரதி ஆணையாளர், கல்வி அமைச்சு)

அந்நியர்கள் தமது இலாபத்துக்காகப் பெருந்தோட்ட மக்களின் உழைப்பைச் சுரண்டினர். உழைப்பின் பிண்டங்களாகவே இம்மக்களைக் கருதினர். அந்நியர்கள் யதார்த்தத் தளத்திலிருந்து விடுபட முடியாதிருந்தது நாவலில் தெரிகிறது. மனிதாபிமானமற்ற கண்ணோட்டம் இருக்கிறது. முழுக்க முழுக்க 'கசந்த கோப்பி' நாவல் கோப்பிக் காலத்துக்கே உரியது. வருகிற போது அனுபவித்த அனுபவங்கள் பல நாவலில் உண்டு. கோப்பிப் பயிரின் வீழ்ச்சியைக் கூறுகின்றது. சில கோப்பித் தோட்டச் சொந்தக்காரர்கள் தமது சொத்துக்களை இழந்து வீதிக்கு வந்திருக்கின்றனர். இந் நூலாசிரியர் சடகோபன் தேடுதல்களை மேற்கொள்பவர். கவனத்தில் கொள்ள வேண்டிய பக்கங்களை நாவலில் கொண்டு வந்துள்ளார். இது அவர் வாழ்ந்த தோட்டத்தின் கதை. மொழிபெயர்க்கும் போது இன்னொரு படைப்புத்தேறும். இலக்கிய மொழி பெயர்ப்பில் தாக்கத்தை ஏற்படுத்தியவர் கே.கணேஸ். அடுத்தவராக இரா.சடகோபன் காணப்படுகிறார்.

## எழுத்தாளர் சுதர்ம மகாராஜன்:

வித்தியாசமான வாசிப்பை 'கசந்த கோப்பி' தருகிறது. மொழி நடை மிக இலகுவானதாக இருக்கின்றது. புதுமொழியில் கொடுத்துள்ளார். இரா.சடகோபனின் முதல் மொழிபெயர்ப்பு நாவல் ஏமாற்றத்தைத் தந்தது. ஆனால் இது நம்பிக்கையைத் தருகிறது.

## மல்லியப்பூச் சந்தி திலகர்

இரா.சடகோபன் நல்லதொரு களத்தை அமைத்துக் கொடுத்திருக்கிறார். சிறந்ததொரு கிரிக்கெட் அணி போல் இருக்கிறது. இறுதித் துடுப்பாட்டக்காரனாக நான் களத்தில் நிற்கிறேன். நல்ல ஆங்கிலப் புலமையாளர் குமார் நடேசன் டில்லியில் நடைபெற்ற மாநாட்டில் மலையகக் கல்வி நிலை குறித்து ஆங்கிலத்தில் உரை நிகழ்த்தினார். நாவல் படைப்பாளிகள் நாவலோடு வாழ வேண்டும். சக்தி பாலய்யா, சி.வி. வேலுப்பிள்ளையின் படைப்பை மொழி பெயர்த்தவர். அதேபோல் இங்கு பல மொழி பெயர்ப்பாளர்கள் இருக்கின்றனர். கே.எஸ்.சிவகுமாரன், எம்.வாமதேவன், தெளிவத்தை ஜோசப், மு.சிவலிங்கம் ஆகியோருக்கும் இம்மொழிபெயர்ப்பு நாவலின் சிறப்புப் பிரதி வழங்கப்பட வேண்டும். இரா.சடகோபன் 'கசந்த கோப்பி' மொழி பெயர்ப்பு நாவல் மூலமாக எம்மை வாழ வைத்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*இக்கருத்தாடலின் இணைப்பாளராக எஸ்.பாக்கியராஜ் செயற்பட்டு நெறிப்படுத்தினார்.*

**எழுத்தாளர் ப.ஆப்டீன்**

இரா.சடகோபன் எனது ஊர்க்காரர். தொளஸ்பாகையைச் சேர்ந்தவர். இலக்கிய வளம் மிக்க பிரதேசம் நாவலப்பிட்டி. நாற்பது ஆண்டு காலமாக 'ஆத்ம ஜோதி' ஏடு இம் மண்ணில் தான் வளர்ந்தது. கு. அழகிரிசாமி, விஜயபாஸ்கரன், நா.பார்த்தசாரதி, கி.வ.ஜகந்நாதன் போன்ற புகழ் பூத்த தமிழ் இலக்கியவாதிகளை அழைத்துச் சொற்பொழிவாற்ற வைத்துத் தமிழ் இலக்கியப் பணி செய்தோம். நாவலப்பிட்டியின் இலக்கிய வளர்ச்சிக்கு நந்தி காலம் மிகவும் முக்கியமானது. நாவலப்பிட்டி பிரதேச நாவலே 'மலைக் கொழுந்து'; நந்தியால் படைக்கப்பட்டது. மொழிபெயர்ப்பில் சொற்களை மிகவும் கவனிக்க வேண்டும்.

**ஏற்புரை:**
**நூலாசிரியர் இரா.சடகோபன்**

எமது தாயார் கஷ்டப்பட்டு உழைத்து எம்மை இந்நிலைக்குக் கொண்டு வந்தார். நாவலில் நடமாடும் கதை மாந்தர் உண்மையில் வாழ்ந்தவர்கள். மெருகூட்டுவதுக்காகச் சில விடயங்களைச் சேர்த்துச் செய்திருக்கிறேன். அக்கால வாழ்வு பற்றி கிறிஸ்ரின் வில்சனுக்குச் சொல்ல முடியாத சில விடயங்களும் இருந்தன. கோப்பிப் பயிர்ச் செய்கை ஆரம்பிக்கவே பேராதனைப் பூங்கா ஏற்படுத்தப்பட்டது. கோப்பிப் பயிருக்கு நோய் வந்ததால் தோட்டச் சொந்தக்காரர்கள் நட்டமடைந்தனர். திரும்பி இங்கிலாந்துக்குப் போகவும் திண்டாடினர்.

- 04.03.2011

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 28

## மட்டுவில் ஞான குமாரனின் கவிதைத் தொகுதி வெளியீடு

'**யா**ருக்காக கவிதை நெய்தேனோ அவர்களின் உதடுகள் வீசும் பாராட்டுப் பூக்களை விடவும் வேறென்ன வேண்டும்.' என மனந்திறந்து தனது இரசிகரை இனங்காட்டும் மட்டுவில் ஞான குமாரனின் 'சிறகு முளைத்த தீயாக' என்ற கவிதைத் தொகுப்பு, தெஹிவளை காயத்திரி பப்ளிகேஷன் மூலம் வெளிவந்துள்ளது. இந்நூலுக்கான வெளியீட்டு விழா, 27.02.2011, ஆம் திகதி கொழும்பு தமிழ்ச் சங்க மண்டபத்தில் பெருந்திரளான இரசிகர்கள் முன்னிலையில் நடைபெற்றது. சட்டத்தரணி ஜி.இராஜகுலேந்திரா தலைமை வகித்தார்.

நூலாசிரியரின் தாயார் திருமதி சோ.சரோஜினிதேவி உட்பட பாராளுமன்ற, மாகாணசபை உறுப்பினர்கள், சஞ்சிகை ஆசிரியர்கள், எழுத்தாளர்கள், கல்விமான்கள் ஆகியோர் மங்கலச் சுடரேற்றி விழாவைத் தொடக்கி வைத்தனர்.

சங்கீத ஆசிரியை மைதிலி அமுதன் தமிழ் வாழ்த்துப் பாடினார். தொடர்ந்து வாத்திய இசைச்சங்கமம் நடைபெற்றது. வாத்திய இசைக் கலைஞர்கள், சிவநாதன் வாகீசன் (வீணை), வேலாயுதம் (கியுபோட்), சரவணபவன் (மிருதங்கம்), எஸ்.முகுந்தன் (கடம்), வி.பிரபா (அக்கோடியன்) ஆகியோர் இசை நாதம் பொழிந்தனர்.

**வரவேற்புரை :**
**கே.கே.உதயகுமார்**

மட்டுவில் ஞான குமாரனின் மூன்றாவது கவிதைத் தொகுப்பு. இலத் பிரான்ஸ், ஜேர்மன் மொழிப் பயிற்றுநராகவும் சேவை புரிபவர். ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தசாப்தத்துக்கும் மேலான கவிதை படைக்கும் அனுபவத்தை உடையவர். பிரபல கவிஞர்களான மு.மேத்தா, பா.விஜய் ஆகியோரது பாராட்டைப் பெற்ற கவிஞர். மேத்தாவின் தாக்கத்தை ஞானகுமாரனின் கவிதைகளில் காணலாம்.

என்.கே.அசோக் கவிதை வாசித்தார்.

**தலைமையுரை:**
**சட்டத்தரணி ஜி.இராஜகுலேந்திரா**

பாடலாக இருந்த சங்ககாலக் கவிதைக்கு யாப்பில்லை. மகாகவி சுப்பிரமணிய பாரதி புதுக் கவிதையை அறிமுகப்படுத்தினார். செய்யுள் வடிவம் இலகுவானது. கவிதை மரபை உடைத்துக் கவி பாடினர் வழி வழி வந்த கவிஞர்கள். தளைகளை உடைத்தவர் பாரதி. வில்லங்கம் இப்போது வந்துள்ளது. பாரதி, ந.பிச்சமூர்த்தி ஆகியோரைக் கடந்து நெடுந்தூரம் வந்து விட்டோம். சாமானியனிடம் கவிதை போக வேண்டும். அதுவே ஞான குமாரனின் எதிர்பார்ப்பும் சிறப்பும். எமதூரில் நிலம் இருக்க வேண்டும். கொழும்பில் சீதன வீடு இருக்க வேண்டும். இவைகள் இத்தொகுதிக் கவிதைகளில் சிறப்பாக உண்டு. அழகாக வடித்திருக்கிறார். எதிர்பாராத விதமாக, இவ்விழாவுக்கு ஏராளமான கல்விமான்கள் வந்துள்ளனர்.

**வாழ்த்துரைகள் :**
**பேராசிரியர் சோ.சந்திரசேகரம்**

இவ்விழா ஓர் இளம் கவிஞரின் கவிதை நூல் வெளியீட்டு விழா என்பதில் மகிழ்ச்சி தருகிறது. இளைஞனின் படைப்பாற்றலை வெளிப்படுத்துகிறது. இந்நாட்டில் இளைஞருக்கு அங்கீகாரம் இல்லை. அவர்களது குறைபாடுகளைக் கண்டு கொள்வதில்லை. அரசாங்கம் ஏற்படுத்தும் ஆணைக் குழுக்கள் பொய்யாகிவிட்டன. ஆணைக் குழுக்கள் தேவையில்லை என்பதை இவ்விழாவில் குழுமியிருக்கும் நீங்கள் நிரூபிக்கிறீர்கள்.

ஓர் இளைஞனைப் பாராட்ட வந்திருக்கிறீர்கள். இளைஞரது ஆக்கத் திறனுக்கு இடமில்லை. ஞான குமாரன் ஜேர்மனியில் 15 ஆண்டுகள் வாழ்ந்தவர். கனடாவிலும் இருந்தவர். ஆனால், தனது சொந்த மண்ணை மறக்காதவர். மொழியை மறக்கவில்லை. தமிழில் கவிதைகள் படைக்கிறார்.

மிகவும் அருமையான கவிதைகள். அவரது கவிதைகளில் சொல், பொருள், வளங்கள் உண்டு. தக்க தருணத்தில் தக்க இடத்தில் தக்கவாறு சொற்களைக் கையாள்கிறார். கவிதைத் துறையில் துறைபோன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிஞர்களது பாராட்டுகளைப் பெற்றிருக்கிறார். மனிதநேயம் உண்டென்று எம்.ஏ.நுஃமானும், கவித்துவமானதெனப் பேராசிரியர் கா.சிவத்தம்பியும் சான்றிதழ் வழங்கியிருக்கின்றனர். மலையகத்தையும் மறக்காது கவிதை பாடியுள்ளார். 'மதங்களுக்கு முதலிலே மருத்துவம் பார்ப்போம்..?' இப்படியாக ஏராளமான கவிதைகளைப் பாடியிருக்கிறார். தமிழ் வரலாற்றில் பல விதமான கவிதைகள் இருக்கின்றன. இன்னமும் சங்கப் பாடல்களைப் பயன்படுத்துகிறோம். சிலப்பதிகார அடிகளை நாம் மறப்பதில்லை. திருக்குறளைப் பாவிக்கிறோம். பாரதி பாடல்கள் மேற்கோள்களாகக் காட்டப்படுகின்றன. தான் கண்டவற்றை அனுபவித்து ஞான குமாரன் கவிதை ஓவியமாகத் தந்துள்ளார். அவர் கவிதையில் மிகுந்த ஈடுபாடு உள்ளவர். ஆரோக்கியமானதோர் வழியையும் நாடியுள்ளார். அவரையிட்டு நாம் பெருமைப்பட வேண்டும்.

## மு.கதிர்காமநாதன் (தலைவர், கொழும்புத் தமிழ்ச்சங்கம்)

'சிறகு முளைத்த தீயாக..' கவிதைத் தொகுப்பு மட்டுவில் ஞானகுமாரனின் மூன்றாவது சுகப்பிரசவம். வெளிநாட்டிலிருந்து இங்கு வந்தவுடனேயே தன்னைத் தமிழ்ச் சங்க ஆயுள் கால உறுப்பினராக்கிக் கொண்டார். சிந்தித்துக் கவிதை படைத்துள்ளார். கருத்து, மொழி மிகவும் அற்புதமாக இருக்கிறது. காலத்தால் அழியாத கருத்துக்களைக் கவிதைகளில் தந்திருக்கிறார். இதை நாம் ஊக்குவிக்க வேண்டும். தனக்குக் கிடைத்த வாய்ப்புகளை ஞான குமாரன் மிகச் சரியாகப் பயன்படுத்தியிருக்கிறார்.

## நூலறிமுகவுரை :
## ஆ.இராஜ்மோகன் (தயாரிப்பாளர், சக்தி வானொலி)

மட்டுவில் ஞான குமாரனின் இந்நூல் வெளிவருவதற்கு எத்தனையோ தடைகள் ஏற்பட்டன. சதிகள் நடந்தன. மக்கள் வருவதற்கும் தடைகள் உண்டாக்கப்பட்டன. அத்தோடு நடைபெற்றுக் கொண்டிருக்கும் சர்வதேச கிரிக்கெட் போட்டியில் சச்சின் டெண்டுல்கரும் மக்களைத் தடுத்துத் தன்பால் வைத்திருக்கப் பார்த்தார். இருந்தும் இம்மண்டபம் மக்களால் நிரம்பி இருக்கிறது. இது கவிதையோடு பாரம்பரியம் தொடர்பு தொடர் கிறதைக் காட்டுகிறது.

இத்தொகுப்பு என்னைப் புரட்டிப் போட்டு விட்டது. இதிலுள்ள கவிதைகளில் படிமம், குறியீடு என்பன இல்லை. நேரடியானவை. உதட்டுச் சாயம் பூசப்படாத நூல். மரபை நோக்கிக் கேள்வி எழுப்புகின்றது. சாமானியர்களும் தாமாக விளங்கிக் கொள்ளக் கூடியவை. மரபோடு முரண்படுகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருவருக்குமான நட்பு நீண்டது. ஊடகங்களின் மீது அவருக்குக் கோபம். தொப்புள் கொடியோடு நிற்கக்கூடாது. சென்னை வாசிகள் நாடோடிகள். வீடு, வீடாக மாறுவர். மட்டுவில் ஞான குமாரன் பூனைபோல் திரிந்தவர். ஆனால் பூனையல்ல. வளரத்துடிக்கும் கலைஞர், ஜேர்மன் மொழியைக் கசடறக் கற்றவர்.

**கருத்துரை:**
**'கொழுந்து' அந்தனி ஜீவா**

இதொரு வித்தியாசமான வெளியீட்டு விழாவாகக் காணப்படுகின்றது. பாரதிக்குப் பின் புதியதோர் கவிஞர் பரம்பரை ஈழத்தில் தான் தோன்றியுள்ளது. புதுக்கவிதைக்கு வழிகாட்டி சி.சு. செல்லப்பா. ஈழத்தவரான தருமு சிவராமு ஆற்றல் மிக்க இலக்கியவாதி. புதுமைப்பித்தனுக்குப் பின் ஆளுமைமிக்க நவீன இலக்கிய சிந்தனையாளன் தருமுசிவராமு எனலாம். எதற்கும் கோபப்படுவார். நவீன தமிழ் இலக்கிய விமர்சகரான வெங்கட் சாமிநாதனும் சுந்தர ராமசாமியும் இவரை இருட்டடிப்புச் செய்தே வந்தனர்.

இவரது படைப்புகள் தமிழ் வாசகரால் படிக்கப்பட வேண்டியவையாக இருந்தன. 'பிரமிள்' என்ற புனைபெயரில் கவிதைகள் படைத்தார். அவைகள் புதுக் கவிதைக்கு வழிகாட்டியாகின. இவரது படைப்புகளுக்கான தேடல் முயற்சிகள் தமிழ்நாட்டில் நடந்து கொண்டிருக்கின்றன. மட்டுவில் ஞானகுமாரனின் 'அம்மாவுக்கு..?' என்னைக் கவர்ந்த கவிதை.

**எழுத்தாளர் சித்தன்:**

சிந்தனையைத் தொட்ட பலதரப்பட்ட கவிதைகள் இத்தொகுப்பிலுண்டு. வடிவமைப்புப் பரவாயில்லை. மட்டுவில் ஞான குமாரன் தானாக எழுந்த சுயம்பு. பேராசிரியர்கள் அங்கீகாரம் கொடுத்தாலும், எழுத்தாளர்கள் கொடுக்க மாட்டார்கள். ஞானகுமாரன் இன்னொரு கவிதைத் தொகுப்பும் போட வேண்டும்.

நூல் வெளியீட்டு விழாவில் புரவலர் ஹாசிம் உமரும், பூ.ஸ்ரீதர்சிங்கும், கொழும்பு தமிழ்ச்சங்கத் தலைவர் மு.கதிர்காமநாதனிடமிருந்து முதல் பிரதியைப் பெற்றனர். சிறப்புப் பிரிதிகளும் பிரமுகர்களுக்கு வழங்கப்பட்டன.

நூலாசிரியரின் தந்தையார் ஐ.சோமசுந்தரம், ஜி.இராஜகுலேந்திரா ஆகியோருக்கு நூலாசிரியர் மட்டுவில் ஞானகுமாரன் பொன்னாடை போர்த்தினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எஸ்.முகுந்தன் (சூரியன் வானொலி), எழில்மொழி, கவிஞர் மன்னார் அமுதன், மதுரா, சசிதரன் ஆகியோர் 'சிறகு முளைத்த தீயாக..' கவிதைத் தொகுப்பலிருந்து கவிதைகளை வாசித்தனர்.

**நயவுரை:**

**கவிஞர் அஷ்ரப் சிஹாப்தீன்**

நூல் நயவுரை மிகவும் முக்கியமானது. ஆனால் அதைக் கேட்க இத்தகைய விழாக்களுக்கு வருகை தருவோர் காத்திருப்பதில்லை. புதுக் கவிதைகளுக்குப் பல நூறு கவிஞர்கள் வந்து விட்டனர். வசனத்தை உடைத்துப் போட்டால் கவிதையாகிறது. அவை நூலாக்கவும் படுகின்றன. கவிதை நூல் விற்பனையில் வீழ்ச்சி இருக்கிறது. வாங்குவது வீண் என்ற நிலை இருக்கிறது. இந்நிலைக்குக் காரணம் கவிஞர்களே. ஏற்கனவே வெளியான ஞான குமாரனின் இரு கவிதைத் தொகுப்புகளையும் வாசித்ததில்லை. இந்த மூன்றாவது தொகுப்பின் அட்டை, தொகுப்பைச் சிறுவர் பாடலாக அறிவிக்கின்றது. தொகுப்பைப் படிக்க முதல் அடிப்படித்தான் நினைத்தேன். 'அம்மா' கவிதை என்னைக் கவர்ந்தது.

வாசகனை நெக்குருக வைக்கிறார். ஆழமானது தாய்ப்பாசம். அநேகமான கவிதைகள் அரசியல் பேசுகின்றன. ஆர்ப்பாட்டம் நடாத்தும் அரசியல், ஒத்துழையாமை அரசியல் இப்படிப் பலவகையான அரசியல்கள். ஆர்ப்பாட்ட அரசியல் அமைதிப் போக்கான கவிதை எழுதலைத் தூசிக்கும்.

நசுக்கப்படும் மக்களை எழுதும் எழுத்தாளனின் எழுத்து நித்தியமானது. ஞான குமாரன் கவிதைகளில் வெற்று வார்த்தைகள் இல்லை. கலைநயம் இருக்கிறது. அரசியல் உள்ளீடு ஆழமானது. ஒரு கவிதையின் விடயத்தை மிகவும் சூட்சுமமாகச் சொல்லலாம். இவர் கவிதையில் தமிழ் இனத்துக்கு நேர்ந்த நிலை சொல்லப்படுகின்றது.

கோபத்தைத் துல்லியமாகப் பதிவு செய்கிறார். சில தனிப்பட்ட அனுபவங்கள், காதல் பிரிவு, வறுமை என்பன பாடுபொருளாக இருக்கின்றன. வடிகட்டும் வேலை செய்திருக்க வேண்டும். மூத்த கவிஞர்களது அபிப்பிராயத்தைப் பெற்றிருக்க வேண்டும். 2/3 பகுதியான கவிதைகள் தோதானவை எனலாம். கவிதைக்குப் படங்கள் தேவை இல்லை. படங்கள் கவிதை மேலான கவனத்தைச் சிதைப்பன. வடிவமைப்புச் சிறப்பாக இல்லை. எளிய கவிதை மொழியில் ஆழமான கவிதைகள் தொகுப்பில் காணப்படுகின்றன.

*ஐ. சோமசுந்தரம் (நூலாசிரியரின் தந்தை) நன்றியுரை கூறினார்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஏற்புரை :**
**மட்டுவில் ஞான குமாரன்**

நான் பேச வேண்டியவற்றை இந்நூல் உங்களோடு பேசும். என்னை உற்சாகப்படுத்தியதால் எழுதினேன். தமிழர்கள் உணர்வோடு இருக்கிறார்கள் என்பதை உணர்ந்துள்ளேன். எனது பார்வைகளைப் புரிந்துள்ளேன். தொடர்ந்து கவிதை படைப்பேன்.

-05.03.2011

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 29

## 'சரஸ்வதி' விஜயபாஸ்கரன் அஞ்சலிக் கூட்டம்

ஈழத்து நவீன தமிழ் இலக்கியத்தின் வீச்சைத் தமிழிலக்கிய உலகுக்குப் பரம்பல் செய்வதில் அதீத அக்கறை கொண்டிருந்த 'சரஸ்வதி' தமிழக இலக்கியச் சிற்றிதழின் சாதனைகளைத் தமிழிலக்கிய அபிமானிகள் இன்றும் பொச்சடித்துப் பேசுகின்றனர். அதன் ஆசிரியராக இருந்தவர் வ.விஜயபாஸ்கரன். இந்த இலக்கியப் பெருமகன் 11.02.2011 இல் காலமாகியது குறித்து இலக்கியவாதிகள் பேரதிர்ச்சி அடைந்தனர். பத்திரிகைகளில் இரங்கல் செய்திகள் வெளிவந்தன. இலக்கியப் பிரக்ஞை கொண்ட அனைவரும் பெரும் இழப்பாகக் கொள்ளக் கூடிய துயரம் இது, என 'ஞானம்' இலக்கியச் சிற்றிதழ் அதன் 130 ஆவது இதழில் தலையங்கம் வெளியிட்டது. அமரர் வ.விஜயபாஸ்கரனோடு நெருங்கிய தொடர்பு வைத்திருந்த 'மல்லிகை' ஆசிரியர் டொமினிக் ஜீவா அனுதாபக் கூட்டமொன்றை ஏற்பாடு செய்திருந்தார். மூத்த பத்திரிகையாளர் சிவா சுப்பிரமணியம் தலைமையில், இக்கூட்டம் கொழும்பு 13, ஸ்ரீ கதிரேசன் வீதியில் உள்ள மணிமஹால் மண்டபத்தில் 05.03.2011 ஆந் திகதி நடைபெற்றது.

அமரர் விஜயபாஸ்கரனுக்கு இரு நிமிடச் சபையின் மௌனாஞ்சலியோடு கூட்டம் ஆரம்பமானது.

**தலைமையுரை :**
**மூத்த பத்திரிகையாளர் சிவா சுப்பிரமணியம்**

இன்றும் 'சரஸ்வதி' இலக்கிய சஞ்சிகை பேசப்பட்டுக் கொண்டிருக்கிறது. அதன் ஆசிரியராக இருந்து நடாத்தியவர் விஜய பாஸ்கரன். சிற்றிதழ்களுக்கான விதி, 'சரஸ்வதி' யையும் விட்டு வைக்கவில்லை. குறுகிய காலமே அது தமிழ் இலக்கியப் பணி செய்தது. இருந்தும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நின்று போன பின்னரும் வெகுவாகப் பேசப்படுகிறது. இச் சஞ்சிகைக்குத் தனித்துவமுண்டு. இலக்கியவாதிகள் அக்காலத்திலும் அணிகளாகப் பிரிந்து இயங்கினர். 'சாந்தி'; 'தேசபக்தன்' போன்ற ஏடுகள் போல் சரஸ்வதி முற்போக்குக் களத்தில் தனது இலக்கியப் பணியைச் செய்தது. விஜய பாஸ்கரன் கொம்யூனிஸ்ட் கட்சியின் உறுப்பினராகாது ஆதரவாளராகவே இருந்தார்.

'சரஸ்வதி' முற்போக்குச் சித்தாந்தப் போராட்டம் நடாத்தியது. அக்காலத்தில் வெளிவந்து கொண்டிருந்த சக இலக்கிய ஏடான 'எழுத்து'வோடு முரண்பட்டுச் சித்தாந்தப் போராட்டம் நடாத்தியது. படைப்புகளை வெளியிட்டு ஈழத்து எழுத்தாளருக்கு ஊக்கமளித்தது. அவர்களது புகைப்படங்களை அட்டையில் வெளியிட்டது. ஈழத்துச் சிறுகதை மலரையும் வெளியிட்டது. 'சரஸ்வதி' க்குச் சந்தா சேகரிக்க விஜயபாஸ்கரன் இலங்கைக்கு வந்தார். அவருக்கு எஸ்.பொன்னுத்துரை (எஸ்.பொ.), கே.டானியல், டொமினிக் ஜீவா ஆகியோர் உதவினர்.பிரபல தமிழ் நவீன இலக்கியவாதிகளான சுந்தர ராமசாமி, ஜெயகாந்தன் ஆகியோர் இவரூடாகவே இலக்கிய உலகில் பிரபலமாகினர். ஆனால் 'சரஸ்வதி'யில் எழுதினவர்கள் காலப்போக்கில் தடம் மாறினர். இலங்கை எழுத்தாளர் இன்னமும் கொள்கையில் உறுதியாகத்தான் இருக்கின்றனர். இந்த அனுதாபக்கூட்ட ஏற்பாடு பொருத்தமானதே.

**அஞ்சலி உரைகள் :**
**மல்லிகை டொமினிக் ஜீவா**

விஜயபாஸ்கரனுக்கும் எனக்கும் ஐம்பதாண்டுத் தொடர்புண்டு. கடித மூலமான தொடர்புகளும் இருந்தன. யாழ்ப்பாணம் கே.கே.எஸ்.வீதியில் தமிழ்ப் பண்ணை என்ற புத்தகசாலை இருந்தது. ராமசாமி என்பவர் நடாத்தினார். 50 சரஸ்வதி இதழ்கள் இக்கடைக்கு வர ஏற்பாடு செய்தேன். இதன் விற்பனையில் தேக்கம் காணப்பட்டது தான். ஆனால் இலக்கியவாதிகள் கடையைத் தேடிச் சென்றது கடைச் சொந்தக்காரருக்கு சந்தோஷமாக இருந்தது. செ.கணேசலிங்கனுக்குக் கொழும்பில் திருமணம் நடந்தது. ஒழுங்கு செய்தது போல் மு.வ.((மு.வரதராசன்) வரவில்லை. விஜயபாஸ்கரனை அழைத்தோம். கலந்து கொண்டார். யாழ்ப்பாணம் வந்தபோது பலாலி விமான நிலையத்துக்கு யாழ்ப்பாணம் தேவனின் காரில் சென்று நானும் திருச்செல்வமும் அவரை அழைத்து வந்தோம்.

யாழ்ப்பாணம் லேக் வியு ஹோட்டலில் தங்கினார். அவரைப் பலர் சந்தித்தனர். கொழும்புக்கு யாழ்தேவியில் வந்தோம். கலியாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஜயபாஸ்கரன் தலைமையில் நடைபெற்றது. கொம்யூனிஸ்ட் கட்சியின் நீண்டகால அனுதாபி. கட்சி வெறியால் 'சரஸ்வதி' யை நாசமறுத்தனர். ப.ஜீவானந்தம் தலைமையில் நடைபெற்ற பாராட்டு விழாவில் கட்சி ஆதிக்கத்தைக் கண்டித்துப் பேசினேன். 'தாமரை' சஞ்சிகை வந்தது பிழையெனச் சுட்டிக் காட்டினேன். அரசியல் தளத்துக்கு அப்பாலானது நேசிப்பு. விஜயபாஸ்கரன் போன்றோர் ஆற்றல் காரணமாகவே பேசப்படுகின்றனர். அப்படியானவர் தான் ரஷ்ய எழுத்தாளர் அன்ரன் செக்கோவ்.

அக்காலத்தில் 'கலைமகள்' ஆசிரியர் கி.வா.ஜகந்நாதன் ஈழத்துப் படைப்புகளுக்கு அடிக்குறிப்புத் தேவை என்றார். 'அப்படியாகில், உங்களது அம்மாமித் தமிழுக்கும் அடிக்குறிப்புப் போடுவீர்களா?' என நான் கேட்டேன். கல்கி போன்ற எத்தனையோ தமிழக எழுத்தாளர்கள் இருந்திருக்கிறார்கள். இவர்கள் யாருக்காவது விழா வைக்கிறோமா? ஏன் விஜயபாஸ்கரனுக்கு வைக்கிறோம்? நன்றி உணர்வுண்டு. புதிய பரம்பரையை வளர்த்து விட்டார். விஜயபாஸ்கரனை மறக்க மாட்டோம்.

## சாஹித்திய ரத்னா தெளிவத்தை ஜோசப்

விஜயபாஸ்கரனுக்கும் ஈழத்து இலக்கியவாதிகளுக்குமிடையில் இருந்த இறுக்கமான தொடர்பை இக்கூட்டம் காட்டுகிறது. சந்தோஷமாக இருக்கிறது. அவருடைய பிறந்த மண்ணான தமிழகத்தில் இந்தளவுக்கில்லை. ஆனால் இங்கு நாம் அவருக்கு அஞ்சலி செய்கிறோம். 1960களில் எனக்கு விஜயபாஸ்கரனைத் தெரியாது. பின்னர் தேடல் மூலமாக அறிந்து கொண்டேன். கொம்யூனிஸ்ட் என்பதில் ஆணித்தரமாக இருந்தார். ஈழத்து எழுத்தாளரை மதிக்கும் பண்பு அவரிடமிருந்தது. 1955இல் தொடக்கப்பட்ட 'சரஸ்வதி' சிறிய சைஸிலேயே ஆரம்பத்தில் வெளிவந்தது. பின்னர் பெரிய சைஸில் வெளியிடப்பட்டது. சிற்றிதழ் அட்டையில் இலக்கியவாதிகளின் படத்தை வெளியிடும் கலாசாரத்தை தொடக்கி வைத்த முன்னோடி விஜயபாஸ்கரன். ஈழத்தவரான எச்.எம்.பி.மொஹிதீனின் படத்தைச் 'சரஸ்வதி' அட்டையில் வெளியிட்டார். எழுத்தாளர்களைக் கனஞ் செய்தார். இதற்கு முரண்பாடுகளும் வெளிப்பட்டதுண்டு.

'சரஸ்வதி'தியில் அரசியல் வரக்கூடாதென்ற போக்கில் அதை நடாத்தினார். அக்காலத்தில் முற்போக்கு இலக்கியத்தின் மூத்த தூணாக இருந்த பிரேம்சந்த் நடாத்திய பத்திரிகையின் பெயரும் 'சரஸ்வதி' என்பதே. விஜயபாஸ்கரனின் மனைவி பெயரும் சரஸ்வதி தான். ஈழம் வந்து திரும்பிய பின்னர் பதிப்பகமொன்றை ஆரம்பித்தார். எச்.எம்.பி.மொஹிதீனின் 'கார்க்கியைக் கண்டேன்' டொமினிக் ஜீவாவின் 'தண்ணீரும் கண்ணீரும்'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எஸ்.பொன்னுத்துரை (எஸ்.பொ.) யின் 'தீ' ஆகிய ஈழத்து நூல்கள் அவரது பதிப்பகத்தின் ஊடாகவே வெளியிடப்பட்டன. விஜயபாஸ்கரன் தமிழிலக்கியத்துக்குச் செய்த பணி மறக்க முடியாதது.

## 'கொழுந்து' அந்தனி ஜீவா

சர்வதேச கிரிக்கெட் போட்டி, மழை ஆகிய இக்கட்டான சூழலில் ஆத்மார்த்தமான இந்த அஞ்சலிக் கூட்டம் நடக்கிறது. கி.வா.ஜகந்நாதன் ஈழத்து இலக்கியப் படைப்புகளுக்கு அடிக்குறிப்புத் தேவை என்றார். இப்படிப் பல எதிர்க் குரல்கள் அக்காலத்தில் ஈழத்து இலக்கியத்துக்கு எழுந்தன. ஆனால் ஒரேயொரு குரல் எமக்கு அனுதாபம் காட்டியது. அதுதான் விஜயபாஸ்கரன். 'சரஸ்வதி' அட்டையில் எழுத்தாளர்களின் படங்கள் வந்தன. சோவியத் நாடு காரியாலயத்துக்கு தி.கா.சி.யோடு சென்று விஜயபாஸ்கரனைச் சந்தித்தேன். நன்றாக உபசரித்தார்.

'மணிக்கொடி'க்குப் பின் 'சரஸ்வதி' தமிழிலக்கியத்துக்குப் பெரும் பங்களிப்புச் செய்திருக்கிறது. இருந்தும் ஒதுங்கியே வாழ்ந்தார். தமிழ்ச் சிறு சஞ்சிகை வரலாற்றில் சரஸ்வதிக்கும் வ.விஜயபாஸ்கரனுக்கும் என்றும் அழியாத இடமுண்டு.

## திக்குவல்லை கமால்

1970 களில் எழுதத் தொடங்கிய காலத்தில் ஏ.எச்.எம்.ஷம்ஸ் மூலமாகக் கிடைத்த சரஸ்வதி இதழ்களை வாசித்தேன். அதில் வாசிப்பு வித்தியாசமிருந்ததைக் கண்டு விடுபடமுடியாது தொடர்ந்தேன். இந்த அஞ்சலிக் கூட்டத்தை மல்லிகை நடாத்துவது சரஸ்வதியின் வெற்றியைத் தான் காட்டுகிறது. அச் சஞ்சிகையில் எழுதிய எழுத்தாளர்கள் இன்று போற்றத்தக்க, ஆளுமைகளாகத் திகழ்கிறார்கள்.

## ப. ஆப்டீன்

1962 இல் விஜயபாஸ்கரன் நாவலப்பிட்டிக்கு வந்தார். நான் சரஸ்வதியின் தீவிர வாசகனாக இருந்தேன். 'ஆத்ம ஜோதி' முத்தையா அவரைச் சந்திக்க இலக்கிய ஆர்வலர்களைத் திரட்டச் சொன்னார். விடுதிக்குச் சென்றோம். அச்சந்திப்பில் விஜயபாஸ்கரனிடம் மனித நேயம் இருந்ததைக் கண்டோம். இரண்டு சரஸ்வதி இதழ்களை இலவசமாகத் தந்தார். அவரது இலக்கிய நோக்குப் புனிதமானது. இலக்கியப் படைப்பாளிகளை மட்டுமன்றி ஆர்வலர்களையும் மதித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'ஞானம்' தி.ஞானசேகரன்

விஜய பாஸ்கரனின் தந்தை தீவிர கொங்கிரஸ்காரர். இளமைக்காலத்தில் அவரும் அக்கறை காட்டி ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டு சிறையும் சென்றிருக்கிறார். சிற்றிதழ் வெளியீட்டுக்குச் 'சரஸ்வதி' இலக்கணம் வகுத்தது. 'மல்லிகை' இதழுக்கு ஆதாரம் 'சரஸ்வதி' தான். காவலூர் இராஜதுரையும் 'சரஸ்வதி'யில் எழுதியிருக்கிறார். இன்றெனக்கு முக்கியமான தனிப்பட்ட அலுவல்கள் பல இருந்தும்,'சரஸ்வதி' ஆசிரியர் விஜயபாஸ்கரனுக்கு அஞ்சலி உரை நிகழ்த்த வேண்டுமென்பதற்காக, அவைகளை விட்டுவிட்டு இங்கே வந்தேன்.

## மூத்த இலக்கியவாதி செ.கணேசலிங்கன்

பூனா சென்று எழுத்தாளர் காண்டேகரைப் பார்த்துவிட்டு, விஜய பாஸ்கரனைப் பார்க்கச் சென்னை சென்றேன். அவரோடு பிரபல எழுத்தாளர் ஜெயகாந்தன் இருந்தார். ஜே.கே. தான் 'சரஸ்வதி'க்கு புரூவ் பார்த்தார். மவுண்ட் றோட்டுக் ஹோட்டலுக்குச் சென்று காப்பி குடித்தோம். 'சரஸ்வதி' இன் கதை சோகமானது. புரட்சிகரமான வாழ்வை விஜயபாஸ்கரன் வாழ்ந்தார். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் படித்தவர். அங்கு மாணவர் எழுச்சி ஏற்பட்டது. தந்தையின் கொள்கைகளோடு விஜயபாஸ்கரன் முரண்பட்டார். அப்பொழுது கொம்யூனிஸ்ட் கட்சி பலமாக இருந்தது.

சோவியத் நாடு அலுவலகத்தில் தொழில் புரிந்த போது தமிழ், தெலுங்குப் பதிப்புகளுக்குப் பொறுப்பாளராக இருந்தார். அடிக்கடி நானவரைச் சந்தித்திருக்கிறேன். இரண்டு மகன்மார் இருக்கின்றனர். ஒருவர் வணிகத்தில் ஈடுபட்டுள்ளார். நான் 'THE HINDU' பத்திரிகையில் எழுதும் விமர்சனங்களைப் படித்தார். தபாலட்டையில் விமர்சனம் எழுதி எனக்கு அனுப்புவார். எனது புத்தகங்களை வாசித்தார்.

சுறுசுறுப்பானவர். எப்பொழுதும் சிரித்த முகத்தோடேயே காணப்படுவார். நெட்டையானவர், திரும்பிச் செல்ல இருந்தேன். அவரது மரணச் செய்தி கேட்டு அதிர்ச்சியடைந்தேன். பிரயாணத்தைப் பிற்போட்டு விட்டு இந்த அஞ்சலிக் கூட்டத்தில் கலந்து கொள்கிறேன்.'சரஸ்வதி' ஊடாக விஜயபாஸ்கரனின் ஆத்மாவைப் பார்க்கலாம். 'மணிக்கொடி' காலகட்டத்தவர்களான புதுமைப் பித்தன், கு.ப.ரா.போன்றோர் தமிழ்ச் சிறுகதையின் வடிவத்தைச் செம்மைப்படுத்தினர். 'சரஸ்வதி' தான் தமிழ்ச் சிறு கதையின் உள்ளடக்கத்தை முன்னேற்ற வைத்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத்து இலக்கியம் தான் தகுந்த இலக்கியமென உணர்ந்தவர் விஜயபாஸ்கரன்.ஆரம்பத்தில் மனோரதியமான சிறுகதைகள் தோன்றின. அடுத்த கட்டமாக இயற்பியல்வாதம் வந்தது. அதற்குப் பின்னரே யதார்த்த மார்க்சியப் பார்வைகள் படைப்புகளுக்கு வந்தன. இலக்கியத்தில் பேராசிரியர் கைலாலசபதி ஏற்றுக்கொண்ட மாற்றம் வேண்டும். புதிய சமுதாயமொன்றைக் கட்டியெழுப்ப வேண்டும். கலைஞன் பதிப்பகம் 'சரஸ்வதி' சிறுகதைகளைத் தொகுத்து வெளியிட்டிருக்கிறது. இது 'சரஸ்வதி'யைப் பிரபலப்படுத்தும். கட்சி ரீதியாகத் தமிழகத்தில் இச்சஞ்சிகையை ஒதுக்கினர். சரஸ்வதியையும் விஜயபாஸ்கரனையும் அடுத்த பரம்பரையும் பேசும். அவர் மறைந்து விட்டது எமக்குப் பெரிய இழப்பாகும்.

**நன்றியுரை :**
**மேமன்கவி**

சிற்றிதழ்ப் பரம்பலுக்கு 'சரஸ்வதி' தான் கால்கோளிட்டது. இதைச் சி.சு.செல்லப்பா கட்டுரையில் குறிப்பிட்டிருக்கிறார்.

புதுக் கவிதைகளைக் க.நா.சு.இச்சஞ்சிகையில் எழுதியிருக்கிறார். கலைஞர் பதிப்பகம் வெளியிட்டிருக்கும் சரஸ்வதி சிறுகதைகளின் தொகுப்புப் புதிய தலைமுறைக்கு உதவும்.

- 09.03.2011

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 30

## புலோலியூர் இரத்தினவேலோனின் 'புதிய பயணம்' நூல் அறிமுகம்

சிறுகதை எழு களத்தின் பண்பாட்டுக் கோலங்களைத் துளியும் பிசகாது புனைவுகளில் பதித்துக் காட்டுபவர் கதைஞரும் நூல் வெளியீட்டாளருமான தென்புலோலியூர் ஆ.இரத்தினவேலோன். கொழும்பு 06, மீரா பதிப்பகம் அவரது 'புதிய பயணம்' என்ற சிறுகதைத் தொகுதியோடு நூல் வெளியீட்டுத் துறைக்குள் சுவடிட்டது. இப்பதிப்பகத்துக்கு இது இராசியாகிவிட்டது போலும்.! இதுவரை 91 நூல்களை வெளியிட்டுக் கம்பீர நடைபோட்டுக் கொண்டிருக்கிறது. மீராவின் 'புதிய பயணம்' மீண்டும் இரண்டாவது பதிப்பைக் கண்டு 90 ஆவது நூலாக வெளிவந்துள்ளது.

இலங்கையின் தமிழ் நூல் பதிப்புத் துறையைப் பொறுத்த மட்டில் இதுவோர் அரிய சாதனை. வாழ்த்துக்கள். 'புதிய பயணம்' சிறுகதைத் தொகுப்பின் 2 ஆவது பதிப்பு நூலின் அறிமுக விழாவும் கருத்தரங்கும் 27.03.2011 இல் கொழும்பு - 6 பெண்கள் கல்வி ஆய்வு மையத்தின் கேட்போர் கூடத்தில் சிறப்பாக நடைபெற்றது. பிரபல எழுத்தாளர் ராணி சீதரன் தலைமை வகித்தார். வே.துஷ்யந்தி, அனா ஆகியோர் இனிய குரலில் தமிழ்த் தாய் வாழ்த்துப் பாடி நிகழ்வைத் தொடக்கி வைத்தனர்.

**வரவேற்புரை :**
**நூலாசிரியர் தென்புலோலியூர் ஆ.இரத்தினவேலோன்**

மீரா பதிப்பகத்தின் 1 ஆவது நூலாகப் 'புதிய பயணம்' 23.05.1996 இல் வெளிவந்தது. பிரபல எழுத்தாளர் தெளிவத்தை ஜோசப் தலைமையில் தமிழ்ச் சங்க மண்டபத்தில் இந்நூல் வெளியிடப்பட்டது. இப்போது அதன் இரண்டாவது பதிப்பை மீராவின் 90 ஆவது வெளியீடாக அறிமுகப்படுத்துகிறோம். கருத்தரங்கும் நடைபெறும். எனது இலக்கிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல்வெளியீட்டு முயற்சிகளுக்கு இந்நூல் தான் பிள்ளையார் சுழியிட்டது. எமது இளைய தலைமுறையின் தேவை கருதியே இந்த இரண்டாம் பதிப்பை வெளியிடுகிறோம். இலாபம் பெறும், பணம் சேர்க்கும் நோக்கத்துக்காகவல்லவென்பதை எமது அன்பர்களுக்கும் அபிமானிகளுக்கும் கூறிக் கொள்ள விரும்புகிறோம்.

பத்துக்கும் மேற்பட்ட எமது நூல்களின் முதல் பிரதிகளை வாங்கியவர் புரவலர் ஹாசிம் உமர். இந்நூலின் முதல் பதிப்பை வெளியிட்டு வைத்தவர் தெளிவத்தை ஜோசப். இதில் தலைமை வகித்துக் கொண்டிருக்கும் எழுத்தாளர் ராணி சீதரனின் 'தேன்சிட்டு' என்ற நூலையும் மீரா வெளியிட்டிருக்கிறது. ஆழ்வாப்பிள்ளை கங்காதரன், தர்மராஜா ஜே.பி, கலா அமிர்தலிங்கம், முத்தப்ப செட்டியார் ஆகிய பெரியோர்கள் சிறப்புப் பிரதிகளைப் பெற முன்வந்திருப்பது என்னைச் சந்தோசப்படுத்துகிறது.

**தலைமையுரை:**
**எழுத்தாளர் ராணி சீதரன்**

பல்வேறுபட்ட பரிமாணங்களில் இயங்கும் வேலோன் இரத்தினமானவர். பண்பே அவரது ஆளுமை. தனக்கென்றொரு பாணி அவரிடமுண்டு. ஆரவாரமில்லாது தன்பாட்டில் இயங்கிக் கொண்டிருப்பவர். இதைச் சிலர் கண்டுகொள்வதில்லை. எத்தனையோ எழுத்தாளர்களை ஊக்குவித்திருக்கிறார். நூல் பதிப்புத் துறையில் சாதனை படைத்திருக்கிறார். இப்பணி நூறையும் தொட்டு முன்னேற வேண்டும். 1999 இல் நான் வெளியிட்ட 'மாங்கல்யம் தந்து நீயே' என்ற நூலுக்கு அளித்த உரையில் தீர்க்கதரிசனமாக எழுதினார். தொடர்ந்து வேலோனின் உதவுகரம் எனக்குக் கிடைத்தது. 'தேன்சிட்டு' முதலில் 1000 பிரதிகள் வெளியிடப்பட்டது. மேலும் 1000 வெளியிட்டோம். இன்று அதன் பிரதிகள் என்கையில் இல்லை.

வேலோன் ராசியானவர். நிதானமுமானவர். 100 பிரதிகளைத்தானே கொள்வனவு செய்தார். இலாப நோக்கற்ற இலக்கிய சேவை செய்கிறார். மனித நேயமுடையவர். பத்திரிகையாளர், பதிப்பாளர், படைப்பாளி இப்படியாக இயங்கிக் கொண்டிருக்கிறார். வித்தியாசமான போக்குடையவர். இத்தொகுப்பின் ஆறு சிறுகதைகளில் வேலோன் பாத்திரமாக நிற்கிறார். அதே பெயரில் இப்படி எழுத்தாளர்கள் தம்மை இனங்காட்டுவதில்லை. பட்டறிவின் துணையோடு தான் நல்ல இலக்கியம் படைக்கப்படும் என உரத்த இலக்கியவாதிகள் கூறுவதுண்டு. அதை வேலோன் அங்கீகரிக்கிறார். 'நான் நானாகவே நின்று கதை சொல்வதையே பெரிதும் விரும்புகின்றேன்' என அறைகூவல் செய்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானுட வாழ்வில் காணப்படும் முரண்பாடுகள், குமுறல்கள் அவலங்கள் என்பவற்றை நையாண்டியோடும் எள்ளலோடும் சிறுகதைகளில் உட்படுத்திக் கதையை நகர்த்துவது அவரது படைப்புகளின் உத்தியாக அமைகின்றது. படைப்பை விடப் படைப்பாளி தான் மேலானவனாக இருக்க வேண்டும். அத்தகைய ஆளுமையே வேலோன். தான் வாழ்ந்த பிரதேசத்துள் நின்றே சிறுகதை புனைகிறார். இது அவரது தனித்தன்மையாகும். பிரதேச மொழியை அச்சொட்டாகக் கையாள்வார். நாம் எமது சுயத்தை இழக்கக் கூடாது. வேர்களைத் தேட வேண்டும். எம் கலாசாரம், பண்பாடு என்பன மறக்கப்பட்டு வருகின்றன. அவற்றை நாம் காப்பாற்ற வேண்டும். வேலோன் தனது படைப்புக்களின் மூலம் மண்வாசனையைப் பத்திரப்படுத்துகிறார். எதனதும் தனித்துவத்தைப் பேணும் நோக்கம், அக்கறை அவரிடமுண்டு. தன்னைப் பாதித்தவற்றை வாசகரோடு பகிர்ந்து கொள்கிறார்.

திருக்குறள் சொல்லப்பட்ட முறையால் தான் காலத்தால் சாகாது நிலைத்து நிற்கிறது. எப்படி ஒரு பொருளைச் சொல்லவேண்டுமென்ற விளக்கம், சொல்பவருக்கு இருக்க வேண்டும். எதையும் நுண்ணிதமாக ஆராயும் தன்மை வேலோனிடம் உண்டு. அவரது மனம் போல் வாழ்வும் அமைந்துவிட்டது. அவரது துணைவியார் கணவனின் இலக்கியப் பணியை ஊக்குவிக்கிறார். 'தினக்குரல்' பத்திரிகை இலக்கியத்துக்குச் செய்துவரும் பணியால் நானும் பயனடைந்து கொண்டிருக்கிறேன். எனது நூல் வெளியீட்டு விழாப்படங்கள் வெளியிடப்பட்டிருந்ததைப் பலர் எனக்குத் தெரிவித்தனர். அதேபோல் விழா நிகழ்வுகளும் பூரணமாக வெளியிடப்பட்டது என்னைச் சந்தோசப்படுத்தியது. இது இலக்கியத்தை வளர்த்தெடுத்து இலக்கியவாதிகளை ஊக்குவிக்கும் அரும்பணி.

*'புதிய பயணம்' இரண்டாம் பதிப்பு வெளியீட்டு விழாவில், முதல் பிரதியைப் புரவலர் ஹாசிம் உமர், சட்டத்தரணி ஆழ்வாப்பிள்ளை கங்காதரன் ஆகியோர் பிரபல இலக்கியவாதி தெளிவத்தை ஜோசப்பிடமிருந்து பெற்றனர்.*

*கௌரவப் பிரதிகளும் சிறப்புப் பிரதிகளும் பிரபல ஊடகவிலாளர்கள், சஞ்சிகையாளர் மற்றும் தகைசார் பெரியார்களுக்கும் வழங்கப்பட்டன.*

**நயவுரைகள்:**

**சட்டத்தரணி ஜி.இராஜகுலேந்திரா**

புதிய பயணம் சிறுகதைத் தொகுப்பைப் பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னரே பலர் படித்து அனுபவித்திருப்பார்கள். நானும் நூலாசிரியர் இரத்தினவேலோனும் பக்கத்துப் பக்கத்து ஊர்க்காரர்கள். 1981 இலிருந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1989 வரையான கால இடைவெளிக்குள் படைக்கப்பட்ட சிறுகதைகள் இந்நூலில் உள்ளன. இவற்றில் ஆறு சிறுகதைகளில் வேலோன் என்ற பாத்திரம் வருகிறது.

'தானம்' என்ற கதையில் கதிரன் என்ற பாத்திரம் வருகிறது. இவர் சார்ந்த பஞ்சப்பட்ட மக்கள் தேக்க மரத்தின் கீழ் தனித்து இருத்தப்படுகின்றனர். இவர்களுக்கு ஓலைப்பெட்டிகளின் மூடலில் தானச் சோறு போடப்படும். எமது ஊரில் அன்னதானத்தை வழங்குவதுடன் சொந்த பந்தங்களுக்குத்தான் பெரும்பாலும் அன்னதானம் கிடைக்கும். இது எமதூர் மேட்டுக்குடியினர் நடாத்தும் நாடகமே, இதில் சாமானியர்களான ஏழை பரதேசிகள் ஒடுக்கப்படுவர். இரத்தினவேலோன் போன்ற சமூக மாற்றத்தை விரும்பும் போராளிகளே இத்தகைய சிறுகதைகளை எழுதுகின்றனர்.

கதை ஒவ்வொன்றும் தேவையான எதையோ சொல்கின்றன. அவைகளைச் செயற்படுத்த நாம் முனைய வேண்டும். இலக்கியம் இரசனைப் பொருளாக இல்லாது சமூக எழுச்சிக்குப் பயன்பட வேண்டும். அத்தகைய படைப்புகள் தான் மக்கள் மனதில் நின்று நிலைக்கும். 'எழுச்சி' ஒரு சாதியை விட்டு இன்னொரு சாதியில் திருமணம் செய்வதன் விளைவுகளைப் பேசுகின்றது. சாதியம் என்ற விடயத்தில் தமிழனது போக்கு இன்றும் மாறவில்லை.

இப்போக்கிலிருந்து விடுபடப் போராட வேண்டும். இலக்கியத்தில் சொல்லப்படுபவை வாழ்க்கையில் பயிலப்பட வேண்டும். இந்து சமயத்தவர்களது திருமண விளம்பரங்களில் சாதியம் வற்புறுத்தப்படுகிறது. இதை நாம் மாற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும். ஒன்பது சிறுகதைகளும் சமூக மாற்றத்தைக் தான் வேண்டி நிற்கின்றன. இரத்தினவேலோன் கதையை நகர்த்தும் பாங்கில் மாற்றத்தைக் கொண்டு வரவேண்டும். 'ஒரு விடியலுக்கு முன்' என்ற சிறுகதையில் நீட்டுக்கு ஆங்கிலச் சொற்கள் வந்து கொண்டிருக்கின்றன. அதிர்வான நிகழ்வொன்றைத் தான் சிறுகதை சொல்ல வேண்டுமென்பர். இத்தொகுப்புச் சிறுகதைகள் சிந்திக்கவும் வைக்கின்றன.

*தினக்குரல் பிரதம ஆசிரியர் வீ.தனபாலசிங்கம் எழுத்தாளர் மா.பாலசிங்க (மா.பா.சி.)த்திற்கு மலர்மாலை அணிவித்துக் கௌரவப்படுத்தினார். ஞாயிறு தினக்குரல் ஆசிரியர் பாரதி ராஜநாயகன், 'புதிய பயணம்' சிறுகதைத் தொகுப்பு நூல் வடிவமைப்புச் செய்த லவன் தம்பதியினருக்குச் சிறப்புப் பிரதியொன்றை வழங்கினார்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**எழுத்தாளர்:**
**தம்புசிவா திறனாய்வாளர்**

ஈழத்துச் சிறுகதை 1930 இலிருந்து ஆரம்பம் கொண்டதென இலக்கிய வரலாற்றாசிரியர்கள் கூறுவதுண்டு. கலைமகள் போன்ற தென்னிந்தியச் சஞ்சிகைகள் ஈழத்துச் சிறுகதைகளுக்கு ஊக்கம் கொடுத்திருக்கின்றன. இலங்கையர்கோன், சம்பந்தன், வைத்தியலிங்கம் ஆகியோரது பங்களிப்பு சிலாகித்துப் பேசப்படுகிறது. வெள்ளிப்பாதசரம், பாற்கஞ்சி ஆகிய சிறுகதைகள் சிறுகதை உலகின் கவனத்தைப் பெற்றன. சிறுகதை சாளரத்தினூடாக வாழ்க்கையைப் பார்ப்பதாக இருக்க வேண்டும். அதற்கென்றொரு இலக்கு இருக்க வேண்டும். வாழ்க்கையைப் பிரதிபலிக்கும் கண்ணாடியாக இருக்க வேண்டும். இப்படியெல்லாம் சிறுகதையைப் புதுமைப்பித்தன், மார்க்சிம் கோர்க்கி, நீர்வை பொன்னையன் ஆகிய பிரபல எழுத்தாளர்கள் வரைவிலக்கணப்படுத்தி இருக்கின்றனர்.

முற்போக்கு இயக்கத்தின் பங்களிப்பு ஈழத்துச் சிறுகதைக்கு வரலாறு படைத்தது. புதிய பாய்ச்சலைக் கொடுத்தது. மீரா பதிப்பகத்தின் 90 ஆவது வெளியீடு 'புதிய பயணம்' தொகுப்பின் இந்த இரண்டாவது பதிப்பு. இதில் ஐந்து சிறுகதைகளை 'மல்லிகை' சஞ்சிகை வெளியிட்டுள்ளது. நான்கை வீரகேசரி வெளியிட்டுள்ளது. எழுத்தைத் தவமென்பர். இரத்தினவேலோன் தடம்பதித்த எழுத்தாளர். படைப்பாளிக்குச் சிறப்பான மொழி நடை தேவை. வேலோனின் மொழி நடைதான் அவரைப் பிரகாசிக்க வைக்கின்றது. நடையில் இறுக்கமும் தேவை. நான் நானாகவே நின்று கதை சொல்ல விரும்புகிறேன் எனக்கூறும் இரத்தினவேலோன், அதில் வெற்றியைக் கண்டுள்ளார். தொகுப்பின் இறுதி மூன்று சிறுகதைகளும் அனுபவச் சித்திரிப்புகளாகக் காணப்படுகின்றன.

'தானம்' சிறுகதையில் ஆசிரியரே கதாபாத்திரமாக மாறி நிற்கின்றார். கிராமத்து மண்வாசனை வீசுகிறது. மனித நேயம் சார்ந்த சிறுகதை, அன்னதானம் வசதி படைத்தோருக்கே. சாதியக் கண்ணோட்டத்தில் ஏழைகள் புறக்கணிக்கப்படுகின்றனர். 'பாரதி' திருமணத்துக்கு முன்னான பாரதிக்கும் அதன் பின்னான பாரதிக்கும் வித்தியாசம் காட்டுகிறது. ஆண்கள் மனைவிமாருக்கு விட்டுக் கொடுக்க வேண்டும்.

'புதிய பயணம்' யுத்த சூழலைச் சித்திரிக்கிறது. சிறுவர் மன நிலைகளை அறியக்கூடியதாக இருக்கின்றது. 'தப்புக் கணக்கு' ஒரு தலைக்காதல் பற்றியது. மன நிலைகளை வேலோன் மிகவும் நுண்ணிதமாக வெளிப்படுத்தியிருக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'தேன் சிந்துமோ வானம்?' பெண் சகோதர்களோடு பிறந்தவரின் கதை. தனக்குத் தனக்கு ஏதாவது ஆதாயம் இருந்தால் தான் எவரும் நேசிப்பர் என்பதை வெளிப்படுத்துகிறது.

'ஒரு விடியலுக்கு முன்' என்ற கதையில் முழுமையான யதார்த்தமும் கலாம்சமும் உண்டு. 'மகிழம்பூ' பெண் விடுதலை பற்றியது. 'மீறல்கள்' மனிதன் தியாகம் செய்தால் விடிவு கிட்டும். பழைய எல்லைக் கோடுகளை மீறிச் செயலாற்ற வேண்டுமென்ற விருப்பமில்லாத திருமண அவலங்களை வெளிப்படுத்தும் கதை. 'எழுச்சி' கலப்புத் திருமணத்தைப் பற்றியது. இரத்தினவேலோன் ஒரு முன் மாதிரியான எழுத்தாளர்.

நூலாசிரியர் தென் புலோலியூர் ஆ.இரத்தினவேலோன் ஏற்புரை செய்து நன்றியுரையையும் கூறினார்.

-05.04.2011

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31

## கவிஞர் மன்னார் அமுதனின் 'அக்குரோணி'

சமகாலத்தில் மன்னார் மாவட்டத்தின் இலக்கிய முகத்தை வெளிச்சப்படுத்தி வருபவர்களுள் கவிஞர் மன்னார் அமுதன் அதிமுக்கியமானவராகக் கருதப்படுபவர். காலத்தால் இளையவராக இருந்தாலும் இனம், சமூகம் சார்ந்த இவரது காத்திரமான இலக்கியப் படைப்புகள், மன்னார் மாவட்ட எழுத்துக்குத் தமிழிலக்கிய உலகின் கவன ஈர்ப்பைக் குவிக்கின்றன.

ஈழத்துக் கூத்து, நாடகம் என்பவைகளின் வளத்தை அகிலமெங்கும் பரம்பல் செய்துவரும் அருட்பணிப் பேராசிரியர் நீ.மரியசேவியருக்குச் சமர்ப்பணம் செய்திருக்கும் கவிஞர் மன்னார் அமுதனின் இரண்டாவது கவிதைத் தொகுப்பு 'அக்குரோணி' அண்மையில் வெளிவந்தது. இந்நூலின் வெளியீட்டு விழா கொழும்பு தமிழ்ச் சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில் 03.04.2011 ஆம் திகதி வெகுவிமரிசையாக வெளியிடப்பட்டது.

மருத்துவ கலாநிதியும் இலக்கிய இரசிகமணியுமான எம்.கே.முருகானந்தம் நிகழ்வுக்குத் தலைமை வகித்தார்.

*அருட்பணியாளர் தமிழ்நேசன் அடிகளார் உட்படப் பொதுப்பணி, கலை, இலக்கியம், ஊடகம் என்பவை சார்ந்த பிரமுகர்கள் மங்கலச் சுடரேற்றி விழாவைத் தொடக்கி வைத்தனர்.*

*வாழ்க நிரந்தரம், வாழ்க தமிழ்மொழி என்ற தமிழ் வாழ்த்தை இசை ஆசிரியை மைதிலி அமுதன் இனிய குரலில் பாடினார்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வரவேற்புரை:**
**அம்புறோஸ் பீற்றர் (திருமறைக் கலாமன்றம், கொழும்பு)**

மன்னார் மாவட்டத்தின் இலக்கியப் படைப்பாளி கவிஞர் மன்னார் அமுதன் கொழும்பு திருமறைக் கலாமன்றம் மாதாந்தம் நடாத்திக் கொண்டிருக்கும் நோன்மதி இலக்கியப் பாசறைக்குப் பெரும்பணியாற்றிக் கொண்டிருப்பவர். பல ஆலோசனைகளைக் கூறி நிகழ்வுகளை மேம்படுத்துபவர். ஏற்கனவே 'விட்டு விடுதலைகாண்' என்ற கவிதைத் தொகுப்பை வெளியிட்டுத் தமிழிலக்கிய உலகின் பாராட்டைப் பெற்றவர். இன்று 'அக்குரோணி'யை வெளியிடுகின்றார்.

இது இவரது இரண்டாவது கவிதை நூல். உண்மையில் மகனது இந்நற்பணி குறித்து மன்னார் அமுதனின் தாயார் அகமகிழ்வார். அவரது படைப்பு முயற்சிகள் மேலுந் தொடர வேண்டும். நூல்கள் வெளிவர வேண்டும். செம்மொழி மகாநாட்டை மன்னாரில் சிறப்பாக நடாத்தித் தமிழிலக்கிய உலகைப் பிரமிப்பில் ஆழ்த்திய தமிழ்நேசன் அடிகளார் இவ்விழாவுக்கு வருகை தந்திருப்பது எம்மையெல்லாம் சந்தோஷப்படுத்துகின்றது.

**ஆசியுரை:**
**தமிழ் நேசன் அடிகளார்**

கலைகளின் கால் கவிதை. உணர்ச்சிகளின் சிதறல்; உள்ளத்தில் உருவகிப்பது கவிதை என்றெல்லாம் கவிதையின் தன்மை, வரைவிலக்கணம் குறித்து இத்துறையில் புகழ்பெற்றோர் கூறியுள்ளனர். இவைகளை உட்கொண்டு கவிதை படைப்பவர் தான் கவிஞர் மன்னார் அமுதன். 'சின்னக்கடை அமுதன்' என்ற பெயரில் எழுத நினைப்பதாக என்னிடம் ஆலோசனை கேட்டார். மன்னார் சின்னக் கடைக் கிராமந்தான் அமுதனின் பிறந்த இடம். யாழ்ப்பாணம், மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களிலும் சின்னக்கடை இருப்பதால் அது இவரது அடையாளத்தைப் பிசக்குமெனச் சொன்னேன். அதன் பின்னரே மன்னார் அமுதனானார். மன்னார் எழுத்தாளர் பேரவையின் தலைவராகவும் இருந்து இவர் செய்துவரும் இலக்கியச் செயற்பாடுகள் நிச்சயம் மன்னார் மண்ணுக்குப் பெருமை சேர்க்கும். இளங்கவிஞரான மன்னார் அமுதனின் 'அக்குரோணி' என்ற இரண்டாவது கவிதை நூலை வெளியிடுவது மகிழ்ச்சியாக இருக்கின்றது. பாராட்டுக்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நூல் அறிமுகம் :**
**ஆ.இராஜ்மோகன் (நிகழ்ச்சித் தயாரிப்பாளர், சக்தி வானொலி)**

'அக்குரோணி' என்ற கவிதை நூலைப் பார்த்தகடன் முதல் எழும் எண்ணம், அதன் அர்த்தம் என்ன? என்பது தான். அதற்கான அர்த்தம் நூலின் அணிந்துரையில் கிடைக்கின்றது. பெரும்படைப்பலம். அதுதான் விளக்கம். சமுதாயத்தைத் திருத்தியெடுக்கப் படையொன்றின் பலத்தோடு செயற்பட வேண்டுமென்பதையே தொகுப்பின் கவிதைகள் அறிய வைக்கின்றன. படைப்பாளி துக்கத்தைப் படைத்துக் காட்டுவான். ஆனால் அரசியல்வாதியோ தமிழ் நாட்டில் நடந்தது போன்ற ஸ்பெக்ட்ரம் ஊழலைத்தான் படைத்துக் காட்டுவான். ஷேக்ஸ்பியர் கால அரசியல் தலைவர்களுக்குச் சரித்திரத்தில் இடமில்லை.

அவர்களை இன்று மக்களுக்குத் தெரியாது. ஆனால் இலக்கியவாதியான ஷேக்ஸ்பியர் இன்றும் வாழ்ந்துகொண்டு தான் இருக்கிறார். யானை உயிரை எடுக்கும் வரை ஓயாது. காளைச் சண்டையில் போராளி போராடுவான். 'அக்குரொணி' தொகுப்பில் காதல், ஊடல் போன்ற பல்வேறு இரசனையைத் தரும் கவிதைகள் இருக்கின்றன. கவிதை ஒவ்வொன்றும் படிமங்களை எழுப்புகிறது. வார்த்தைப் படிமம் அதிகமாகவே இருக்கிறது. சமூகக் களத்தை நோக்கி கவிதைகள் நடக்கின்றன. 'உன்னால் உணர்ந்தவை' தன்னளவில் மிகப்பெரிய இடத்தைப் பிடித்துள்ளது. 'அதிகார நாற்காலி' சக்கர நாற்காலி என்பதை உணர்ந்து கொண்டு கவிதை படைப்பவர் மன்னார் அமுதன். அவர் உருவத்தில் எனக்குத் தம்பி போல் தோன்றினாலும் கவிதைப் படைப்பில் தனக்கு ஆயிரம் படைகளின் வல்லமை இருப்பதாகக் காட்டி வருகிறார்.

**நூல் நயவுரை :**
**கவிஞர் அஷ்ரப் சிஹாப்தீன்**

எழுதுவது கவிதை தானா? வலிந்து எழுதுகிறேனா? இதை மற்றொருவர் எழுதியிருந்தால் சிறப்பாக இருக்குமா? வார்த்தைகளில் உயிர் உண்டா? என்பவைகளில் கவிஞர்கள் தெளிவடைய வேண்டும். நமது நிலையில் கவிஞர் கண்ணதாசனுக்கு மரணமில்லை. கவிதை வாசகனைப் பாதிக்க வேண்டும். அண்ணாந்து பார்க்க வைக்க வேண்டும். இப்போ திமிர் பரவிக் கொண்டு வருகிறது. எதையும் எள்ளி நகையாடிக் கொண்டிருக்கிறோம். ஐநூறுக்கு மேற்பட்ட புதிய தலைமுறைக் கவிஞர்கள் வாழ்கிறார்கள். இதில் நூறு கவிஞர்களை எடுத்துக் கொண்டால் இவர்களில் எத்தனை பேர் பாரதியைப் படித்திருப்பார்கள்? இருபது பேர் தேற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாட்டார்கள். கவிஞர் மன்னார் அமுதனிடம் நல்ல தெளிவுண்டு. கருத்தைக் குறிப்பால் உணர்த்துகின்றார். மரபுக் கவிதையைத் தெரிந்திருந்தால் இவர் இன்னமும் சோபிப்பாரென்ற எண்ணம் எனக்குண்டு.

ஓசையுடன் கவிதை படைக்கும் வல்லமை அமுதனுக்குண்டு. எளிய, உச்சமான வார்த்தைகளில் 'அக்குரோணி' கவிதைகள் பேசுகின்றன. நுண்ணிதமான பார்வையுண்டு. அமுதன் படைத்துள்ள புதுக்கவிதைகள் சிலாகிக்கத்தக்கவை. நான்கே நான்கு வரிகளில் அரசியல் கவிதையொன்றைப் படைத்திருக்கிறார். 'அதிகார நாற்காலி'யை இன்னமும் செதுக்கி இருக்கலாமென எனது மனம் நினைத்தது. அரசியல் கொலை, கட்சி மாறுதல் என்பவற்றைத் தன் எழுத்தில் காட்டியுள்ளார். ஐக்கிய நாடுகள் வரை இழுத்துச் சென்றுள்ளார். மக்களது அவலங்களுக்கு அரசியல்வாதிகள் மட்டுமல்ல அரச நிர்வாகிகளும் காரணமென்பதை சுட்டுகிறார். அமுதனிடம் மொழி கைகட்டி நிற்கிறது. வாலாயம் நன்கு கைவந்துள்ளது. கவனத்தைக் கவர்ந்துள்ள நம்பிக்கை தரக்கூடிய கவிஞர் மன்னார் அமுதன். மரபுக் கவிதைகளையும் அவர் படிக்க வேண்டும்.

**தலைமையுரை :**

**வைத்திய கலாநிதி எம்.கே.முருகானந்தம்**

'அக்குரோணி' நூல் அட்டைப்படம் கண்ணைப் பறிக்கின்றது. கவிஞர் மன்னார் அமுதன் இனிமையான குணமுடையவர். 'விட்டு விடுதலை காண்' அவர் 2009 இல் வெளியிட்ட கவிதைத் தொகுப்பு. வெகுவாகப் பேசப்பட்டது. வீச்சுடன் இயங்குபவர். இலக்கியத்துக்காகவே வாழ்பவர் போல் ஜீவநதி, ஞானம், இருக்கிறம், நீங்களும் எழுதலாம், படிகள் ஆகிய ஈழத்துச் சஞ்சிகைகளிலும் வீரகேசரி, தினக்குரல், தினகரன் ஆகிய பத்திரிகைளிலும் தனது ஆக்கங்களை இடைவிடாது வெளியிட்டுக் கொண்டிருக்கிறார். இணையத் தளத்தில் இவரது ஆக்கங்களைப் படித்துள்ளேன்.

சர்வதேச எழுத்தாளர் மாநாட்டில் ஆய்வுக் கட்டுரையொன்றைச் சமர்ப்பித்தார். இணைய இதழ்களில் தேடிய போது பெரும்பாலான இவரது கவிதைகளைப் பார்க்க முடிந்தது. இளம் கவிஞர்களுள் மன்னார் அமுதன் மிகவும் முக்கியமானவர். பரந்தவெளியில் பயணித்துக் கொண்டிருக்கிறார். அவர் எனது நண்பர். நாங்கள் FACE BOOK க்கால் நண்பர்களாகி விட்டோம். வேறு பாடின்றி நட்பைப் பெற்றுக் கொண்டுள்ளார். கவிதையோர் இனிய அனுபவமாகும். உணர்வைக் கற்பனையில் கலந்து தரும் இசை போன்றது. கருத்துச் செறிவு சொல்வளம் இருக்கும். அதில் கவித்துவத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நுகரக் கூடியதாகவும் இருக்க வேண்டும். அல்லாவிடில் பூவின்நறுமணத்தை நுகர முடியாதது போன்ற நிலை ஏற்படும். வாசகனைக் கவிதையோடு இணைய வைக்க வேண்டும். அப்போது தான் படிப்போருக்கு நிறைவு ஏற்படும்.

கவிதை தான் தமிழ் மொழிக்குப் பெரும் பாரம்பரியத்தை ஏற்படுத்தியது. கவிதைகளின் போக்கை மகாகவி பாரதி மாற்றினார். இலகு தமிழில் கவிதையைப் பாடினார். புதுக்கவிதை, நவீனகவிதை என்பன தோற்றம் பெற்றன. 1980களில் ஈழத்துக் கவிதை புதுவீச்சினைப் பெற்றது. எங்கும் ஈழக்கவிதை பேசப்பட்டது. போரைப் பேசியது. பல இளைஞர்கள் கவிதையில் இன்புறுகின்றனர். மன்னார் அமுதன் கவிதைகள் நிகழ்கால வாழ்வைப் பேசுகின்றன. பிரதிபலிக்கின்றன. பல்வேறு உணர்வுகள் அமுதனை அலைக்கழிக்கின்றன. சொல் அவலங்கள் இல்லை. எல்லோருக்கும் புரியும் விதத்தில் கவிதை படைக்கிறார். நிச்சயமாக இது தமிழுக்குக் கிடைத்த பெரும் பாக்கியமெனலாம். சமூக அக்கறையுடன் விளிம்பு நிலை மக்களைப் பாடியுள்ளார். அதிகாரத்துக்கு எதிரான குரலும் அமுதனின் கவிதைகளில் ஒலிக்கின்றன. மண் பற்றிப் பேசுகின்றன. அமுதன் இன்னும் பல நூல்களை வெளியிட்டுச் சமூகத்துக்குத் தொண்டாற்ற வாழ்த்துக்கள்.

**பிரதம அதிதி உரை:**
**வி.தேவராஜ் (ஆசிரியர், வீரகேசரி ஞாயிறு வெளியீடு)**

சில மாதங்களின் முன் வீரகேசரி ஞாயிறு வெளியீட்டில் வெளிவரும் எனது பத்தியில் தமிழ் மக்கள் நிலை மாலுமியற்ற படகு போன்றதாக இருக்கின்றதென எழுதியிருந்தேன். அக்கருத்தை மன்னார் அமுதனின் கவிதைகளில் காண்கிறேன். எமது மக்கள் ஆயிரமாயிரம் துன்பங்களை அனுபவித்துக் கொண்டிருக்கின்றனர். இலங்கையின் இலக்கிய உலகில் மன்னார் அமுதன் காத்திரமான படைப்பாளியாக இனங்காணப்படுகிறார். இவரது படைப்புகளில் வெறுமனே காதல் இல்லை. சமூகம், மனிதம் அல்லாதவற்றைப் பாடமாட்டார். சிறைச்சாலைக்குள்ளிருக்கும் இளைஞர்களும் ஆவலோடு வாசித்துக் கொண்டுதானிருக்கின்றனர். உண்மையாக இவர்களுக்கு நான் தலை வணங்குகிறேன். பல வலைப் பதிவுகளில் அமுதன் படைப்புகள் வந்து கொண்டிருக்கின்றன.

வலைப்பதிவுகளில் ஆக்கங்கள் உடனுக்குடன் வந்துவிடும். ஆனால், தேசிய பத்திரிகைகளில் அப்படியல்ல. ஆக்கங்களைத் தேசியப் பத்திரிகைகளுக்கு அனுப்புபவர்கள் காத்துக் கொண்டிருக்கும் நிலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்டு. இதைப் பத்திரிகைகள் தடுக்க முடியாது. அனைத்திற்கும் களம் கொடுப்பதே மிகவும் சிரமம். மன்னார் அமுதன் பணி தொடர வேண்டும்.

*'அக்குரோணி' கவிதைத் தொகுப்பு நூல் வெளியீட்டு நிகழ்வில் பிரதம அதிதி வி.தேவராஜிடமிருந்து மனித நேய மாமணி அல்ஹாஜ் ஹாசிம் உமர் முதல் பிரதியைப் பெற்றார். வைத்திய கலாநிதி எம்.கே.முருகானந்தம், மல்லிகை ஆசிரியர் டொமினிக் ஜீவா ஆகியோருக்கும் பிரதிகள் வழங்கப்பட்டன. தகைசார் பிரமுகர்களுக்கும் வைத்திய கலாநிதி எம்.கே.முருகானந்தத்தால் பிரதிகள் வழங்கப்பட்டன. நூலாசிரியர் மன்னார் அமுதனுக்குக் கொழும்புத் தமிழ்ச் சங்க உபபொருளாளர் சி.பாஸ்கரா பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார்.*

**சிறப்பு அதிதிகள் உரை:**
**சட்டத்தரணி சோ.தேவராஜா**
**(பொதுச் செயலாளர் - தேசிய கலை இலக்கியப் பேரவை)**

யாரைத் தான் நம்புவது? நேற்று (02.04.2011) திருப்பதியான் கைவிட்டு விட்டார். செம்மொழி வாழ வேண்டும். எமது நாட்டு 'மல்லிகை' சஞ்சிகையை இந்தியாவுக்கு அனுப்ப முடியாது. ஒற்றை வழிப்பாதையில் காரியங்கள் நடந்து வருகின்றன. எமது நாட்டுக் கடல் மீனை அள்ளிக் கொண்டு போகின்றனர். ஆனால் ஈழப் பொருட்களுக்கு அங்கு தடை. நாம் எம்மில் நம்பிக்கை வைக்க வேண்டும். தொப்புள்கொடி உறவாம். அது எங்கு போயிற்று? கோடி, கோடியாக பணத்தை ஊழல் மூலம் பெற்றுப் படகோட விட்ட பெரிய வியாபாரி ராஜா. ஈழத்து எழுத்தாளர் சுதாராஜ் தற்போது லிபியாவில். இங்கு வர முடியாத நிலையில் நிற்கிறார். இப்படியாக அகப்பட்டு விட்ட மக்களை மீட்க முடியாத இக்கட்டான நிலையிலுள்ளோம். கவிதை மனிதனில் உறைப்பதாக இருக்க வேண்டும். 'அக்குரோணி' கவிதைகள் சமூகத்தைப் பலப்படுத்த உதவ வேண்டும்.

**இரகுபதி பால ஸ்ரீதரன்**
**(பொதுச் செயலர் - கொழும்பு தமிழ்ச் சங்கம்)**

பெரும்பாலான கூட்டங்களில் நன்றியுரை நிகழ்த்தவே மேடையேறுவேன். ஆனால் இன்று சிறப்புரை நிகழ்த்த வந்திருக்கிறேன். இராஜமோகனுக்கு நன்றி தெரிவிக்க வேண்டும். 'அக்குரோணி' என்ற சொல்லுக்கு அர்த்தம் விளங்காது திகைத்தேன். அவரது உரை அத்திகைப்புக்கு முடிவை ஏற்படுத்தியது. கவிஞர் மன்னார் அமுதன் இன்னமும் பல நூல்களை வெளியிட வேண்டுமென வாழ்த்துகிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கருத்துரைகள் :**
**அசோக்பரன்**

என்னைக் கவர்ந்து விட்டது 'அக்குராணி' என்ற சொல். இச்சொல் கம்பராமாயணத்தில் உண்டு. இராமனது படைபலம் ஆயிரம் அக்குரோணி எனக் கம்பன் பாடி இருக்கிறான். இது 13.5 பில்லியனாகும். இன்றைய உலக சனத்தொகையில் நான்கு மடங்காகும். கவிதைகளை அமுதன் ஆழ்ந்து படைத்துள்ளார். மெல்லத் தமிழினிச் சாகும் என்பதைக் கேட்டு அதிர்ந்தேன். பாரதி அப்படிச் சொல்லவில்லை. பாரதியின் கவிதையை முழுவதும் படிக்காதவர்கள் அப்படி எண்ணுகின்றனர். தமிழ் வாழும் காலம் வரும் எனத் தான் பாடியுள்ளார். கம்பனுக்கு மன்னன் தண்டனை கொடுத்த போது 'மன்னனும் நீயோ' எனக் கம்பன் அரசனை விமர்சித்து கவி பாடினான். 'அக்குரோணி' தொகுப்பாசிரியரும் அமைச்சில் பணி செய்து கொண்டு விமர்சன ரீதியான கவிதைகளைப் பாடியுள்ளார். வாழும் சூழலைக் கவிஞன் கவிதையில் காட்டுபவன். அவன் சொல்வது போல் தானே வாழ்ந்தும் காட்ட வேண்டும். பாரதி போலி வேலை செய்யவில்லை. இன, மத பேதம் இருக்கக் கூடாது. இரத்தம் சிந்தாது ஜனநாயகத்தை நிலைநாட்ட அனைவரும் துணிய வேண்டும். சமுதாய மாற்றச் சிந்தனைகளை சீண்டிப் பார்க்கும் புத்தகம் 'அக்குரோணி'.

**கவிஞர் ஆர். சடாகோபன்**

'அக்குரோணி' நூல் குறித்தான நிறைவான உரைகளை இவ்விழாவில் கேட்க முடிந்தது. உணர்வுகள் பொதுமைப்பட வேண்டும். மக்களுக்குப் புரியாதது நல்ல இலக்கியமாகாது. பெரும்பாலான நவீன இலக்கியங்கள் விளங்காது. உணர்வு நிலைக்கு வந்த கவிஞன் மன்னார் அமுதன். உணர்ச்சி நடுத்தெருவுக்கு வரும். புதுக்கவிதை இன்றைக்கு மக்கள் கவிதையாகி விட்டது. பாரதி என்ன செய்தானோ அது போல் கவிதைகள் மக்களுக்கு வழிகாட்ட வேண்டும்.

**மு.கதிர்காமநாதன் (தலைவர், கொழும்புத் தமிழ்ச் சங்கம்)**

மன்னார் அமுதன் வெற்றி பெற்ற கவிஞராகிவிட்டார். சிறுவயதில் 'கல்வி' என்ற கவிதையோடு தனது கவிதை படைக்கும் ஆற்றலை வெளிக்காட்டினார். போட்டிகளை நடாத்திப் பரிசுகளை வழங்குகின்றோம். ஈழத்து நூல்களைப் பாதுகாக்க எமது சங்கத்தில் அலுமாரிகள் போதாது. இன்று ஒருவரைச் சந்தித்தோம். அரிய நூல்களைச் சங்கத்துக்குத் தருவதாகச் சொன்னார். அத்தோடு அவைகளைப் பாதுகாக்க அலுமாரியும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவதாகச் சொன்னார். இது எனக்குப் பலத்த சந்தோசத்தை ஏற்படுத்தியது. அத்தோடு அமுதனின் இந்த விழாவில் கலந்துகொண்டு உரை நிகழ்த்துவதும் அந்த மகிழ்வை அதிகரிக்கச் செய்கிறது.

**சட்டத்தரணி ஜி.இராஜகுலேந்திரா**

மன்னார் அமுதன் மிகச் சிறந்த கவிஞன். தொப்புள்கொடி உறவு குறித்து இங்கு பேசப்பட்டது. கருப்பையிலிருந்து குழந்தை வெளிவந்த பின் தொப்புள் கொடி வெட்டப்படும். அதுபோல் அந்த உறவு வெட்டப்பட்டு விட்டது. எதை எழுதுகின்றார்களோ அதன்படி நடக்க வேண்டும். எழுத்தாளர்கள், கவிஞர்கள் வாழ்ந்து காட்ட வேண்டும். இன்னமும் அவசரகாலச்சட்டம் இருந்து கொண்டு தான் இருக்கிறது. 2009 மே 15-19 வரை வன்னியில் மிகக் கடும் போரை ஏற்படுத்திப் பேரழிவைத் தந்ததும் 'அக்குரோணி' போன்ற தான் பெருஞ்சேனை.

**ஏற்புரை :**
**'அக்குரோணி' நூலாசிரியர் கவிஞர் மன்னார் அமுதன்**

இளைய சமுதாயத்துக்கு ஒரு தலைவர் வேண்டும். இன்னும் இல்லை. நாம் உருவாக்க வேண்டும். அனைத்து இனங்களுக்கும் சமத்துவம் கொடுத்து வாழ வேண்டும். எனது ஏற்புரையைக் கேட்கத் தற்போது இருக்கும் எண்ணிக்கையானோர் தான் எனது முதலாவது நூலான 'விட்டு விடுதலை காண்' என்ற நூல் வெளியீட்டு விழாவுக்கு வந்தனர்.

ஆனால் இந்த இரண்டாவது தொகுப்புக்கு ஏராளமானோர் வந்திருந்தது எனக்கு மகிழ்ச்சியாக இருக்கின்றது. சபை நிறையக் குழுமி இருந்தனர். எழுத்து, பேச்சுச் சுதந்திரம் ஒவ்வொருவருக்கும் மிகவும் முக்கியமானது.

திருலோகேஸ்வரன் இன்னிசைப் பாடல்களைப் பாட கோபால் ஏழுமலை என்பவர் பக்திப் பாடலொன்றைப் பாடிச் சபையோரை மகிழ்வித்தார்.

*அரிய குறிப்புகளோடு ஊடகவியலாளர் நிர்சன் இராமானுஜம் நிகழ்வுகளை ஒருங்கிணைத்து அறிவிப்புக்களைச் செய்தார்.*

- 08.04.2011

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 32

## தொழிற்சங்க இயக்கத்தின் தியாகிகளை நினைவு கூர்ந்த யாழ் நகர்க் கூட்டம்

இலங்கையில் கடந்த பல ஆண்டுகளாகத் தொழிற்சங்கங்களின் பெயர்களை உச்சரிக்கக் கேட்பதே மிக அரிதாக இருந்து வந்தது. இப்பொழுதோ அந்நிலை மாறிவருவதைக் காணமுடிகின்றது. இதற்கு உந்து சக்தியாக வாபஸ் பெறப்பட்ட தனியார்துறை ஓய்வூதியத் திட்டமும் இருந்ததென்பதை மறந்துவிட முடியாது! இச்சூழலை மேலும் வலுப்படுத்தப் பாரிய தொழிற்சங்க நடவடிக்கைகளில் உயிர்த்தியாகம் செய்த தோழர்கள் கந்தசாமி, சோமபால ஆகியோரது நினைவு கூரல் நிகழ்வொன்றும் 05.06.2011இல், யாழ்ப்பாணம் ஆரியகுளத்துக்கு எதிரில் அமைந்துள்ள உயர்கல்வி நிலைய மண்டபத்தில் நடைபெற்றது. இதை மார்க்சிய, தொழிற் சங்கவாதிகளின் ஒன்றுகூடலென்பதே மிகப் பொருத்தமானதாகும். குறைந்த எண்ணிக்கையானோர் பங்கு பற்றியிருந்தாலும், ஒவ்வொருவரும் ஆயிரம் பேருக்குச் சமமாகவிருந்து நிகழ்வுக்கு உரத்த கனதியை ஏற்படுத்தினர்.

முன்னாள் தொழிற் சங்கவாதி இராமச்சந்திரா, பிரபல இலக்கியவாதிகள் கே.ஆர்.டேவிட், கவிஞர் கே.கணேசவேல், நடிகர் தியாகலிங்கம் ஆகியோரும் இதில் காணப்பட்டனர். 'சிற்பி' சிவபாலன் இந்நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தார்.

இந்நிகழ்வில் கேட்டவைகளை திரட்டி வழங்குவதில் மகிழ்ச்சி அடைகிறோம்.

தொழிற்சங்கத் தியாகி கந்தசாமி மலேசியாவில் பிறந்து, யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டையில் வசித்தவர். மெற்றிக் கல்வித் தகைமையையுடையவர். அரசாங்க எழுதுவினைஞர் சேவையில் இணைந்து செயல்பட்டவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அர்ப்பணிப்போடு தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபட்டு, 1947 ஜூன் இல், இலங்கை வரலாறு கண்டிராத தொழிற்சங்க ஊர்வலமொன்றில் வந்து கொண்டிருந்த போது பொலிஸ் படை குண்டெறிந்து ஊர்வலத்தைக் கலைக்க முயன்றது. அதைப் பொருட்படுத்தாது தொழிற்சங்கவாதிகளின் ஊர்வலம் காலி வீதியில் முன்னேறிக் கொண்டிருந்த போது பொலிஸரால் துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டு, பல தொழிலாளர்கள் காயமுற்றனர்.

தோழர் கந்தசாமியும், மற்றொருவரும் படுகாயமடைந்தனர். கந்தசாமி உயிர்நீத்தார். அவரது பூதவுடல் காலிமுகத்திடலில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுப் பின்னர் வட்டுக்கோட்டைக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு இறுதிக் கிரியைகள் செய்யப்பட்டன. தொழிற்சங்க நடவடிக்கைகளோடு தோழர் கந்தசாமி தன் சொந்த ஊரான வட்டுக்கோட்டை மக்களுக்கும் பெருந்தொண்டு செய்தார். ஐக்கிய நாணய சங்கங்களை அமைக்க உதவுகரமாக இருந்தார். தொழிற்சங்கமொன்றைப் பதிவு செய்ய அக்காலத்தில் ஏழு உறுப்பினர்கள் போதுமானதாக இருந்தது. இக்காலகட்டத்தில் தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த ரி.பி.இலங்கரத்னா பின்னர் அரசோடு சேர்ந்தார்.

1980 இல் நடைபெற்ற அரசாங்க எழுதுவினைஞரின் வேலை நிறுத்தத்தில் தோழர் சோமபால அமரரனார். இவ்வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட எழுதுவினைஞர்களை அன்றைய அரசு வேலை நீக்கம் செய்து புதியவர்களைப் பணியில் அமர்த்தியது. அமைச்சுகள் தங்களுக்குப் பிடித்தவர்களுக்கு வேலை கொடுத்தன. யாழ்ப்பாணம் கச்சேரியில் அகில இலங்கை தமிழ் எழுதுவினைஞர் சங்கம் வேலை நிறுத்தத்தைக் கைவிட்டுப் பணிக்குத் திரும்பியது.

தோழர்கள் கந்தசாமி, சோமபால மற்றும் அண்மையில் கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலயத்தில் கொல்லப்பட்ட இருபத்தொரு வயதான தோழர் ரொசான் சானக்க ரட்ண சேகர ஆகிய தியாகிகள் மூன்று வெவ்வேறான அரசியல், இனத்துவக் கட்டங்களிலேயே இறந்தனர். இலங்கையில் ஒரே தேசிய நிலை இருந்த 1947 இல் தோழர் கந்தசாமி கொல்லப்பட்டார். சோமபால கொல்லப்பட்ட 1980 இல் இனவாதம் தலை காட்டத் தொடங்கியது. ரொசான் சானக்க ரட்ண சேகர கொல்லப்பட்ட 2011 இல் பேரினவாதம் நாட்டைக் கௌவியுள்ளது.

இலங்கை வரலாற்றில் ஜூன் 5 திற்குப் பெருங் கவனிப்புண்டு. முக்கியமானது, இதே நாளில் தான் சிங்களம் மட்டும் சட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு அமுலுக்கு வந்தது. இதே நாளில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான் கந்தசாமியும் சோமபாலாவும் தியாகிகளாகினர். அதுமட்டுமன்றித் தமிழ்த் தேசியம் முகிழ்ந்து வந்த காலத்தில் உயிர் நீத்த சிவகுமாரனும் இதே தினத்தில் தான் காலமானார். சிறுபான்மை இனமென்று இல்லையென்போர், ஏன்? பெரும்பான்மை இனமொன்று இலங்கையில் இல்லையென மாற்றிச் சொல்லக் கூடாது?

பல்கலைக்கழகங்களில் கற்பித்துக் கொண்டிருக்கும் கல்வியாளர்கள், தங்களிடம் கற்ற மாணவர்களில் சிலர் இப்பொழுது தம்மிலும் பார்க்க அதிக சம்பளம் பெறுவதாகக் குமுறுகின்றனர்.

பாடசாலைகளில் இன்று ஆசிரியர்கள் எதைத் தான் படிப்பிக்கின்றனர். எமது முன்னோடிகள் ஏற்கனவே செய்துள்ள தொழிற்சங்க நடவடிக்கைகளை இளைய சந்ததி அறிவதற்கான ஆவணங்கள் எம்மிடமில்லை. தற்போது வாழ்ந்து கொண்டிருக்கும் மூத்த தொழிற்சங்கவாதிகள் அத்தகைய ஆவணங்களைத் தயாரித்துத் தர வேண்டும். இது தொழிற்சங்க இயக்கத்துக்குச் செய்யும் பெருந்தொண்டாகும். இத்தகைய நூலொன்றைத் தோழர் என்.சண்முகதாசன் எழுதி வெளியிட்டிருப்பதாக அறிய முடிகின்றது. புலம்பெயர்ந்துள்ள நாடுகளில் வசிக்கும் பெரும்பான்மை இனத்தவர்களான சிங்களச் சகோதரர்கள் இலங்கையைப் பற்றி அறியக் கூடிய நூல்களை வாசிக்கின்றனர். வீடுகளில் பாதுகாக்கின்றனர். ஆனால் எமது தமிழர்கள் ஆனந்த விகடன், குமுதம் சஞ்சிகைகளைத் தான் விரும்பிப் படிக்கின்றனர். இன்றைய அரசியல் தலைவர்கள் செய்து கொண்டிருக்கும் மக்கள் விரோதச் செயல்களால் தங்களுக்குத் தாங்களே குழி தோண்டிக் கொள்கின்றனர்.

தொழிலாளர் சேமலாப நிதியை மீளளிப்புச் செய்த பின்னர் தனியார் துறைக்கான ஓய்வூதியத் திட்டத்தைச் சிபாரிசு செய்திருக்கலாமே! தானே வழங்கி வரும் அரசாங்க ஊழியரது ஓய்வூதியத்தைச் சீராக நடைமுறைப்படுத்த முடியாத அரசாங்கம் தனியார் துறைக்கு ஓய்வூதியம் வழங்க எப்படி எத்தனித்தது?

அக்காலத்தில் அமரர் ஹண்டி பேரின்பநாயகத்தின் தலைமையில் இயங்கிய யாழ்ப்பாண வாலிபர் கொங்கிரஸ் தேசியக் கொள்கையை முன்வைத்து அதற்காகப் பாடுபட்டது. ஆனால், இன்றைய சிங்கள அரசியல் ஆய்வாளர்கள் அதைத் தமிழ்த் தேசியமென்றே திரிபுபடுத்துகின்றனர்.

பாராளுமன்ற அரசியல் முறையால் நாட்டின் அபிவிருத்திக்கான மாற்றங்களை ஏற்படுத்த முடியாது. அரசியல் நடாத்த வேண்டுமெனில் அரசாங்கத்தில் இருக்க வேண்டுமென்ற கருத்து உருவாக்கப்பட்டுவிட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதே நோக்கத்தோடுதான் நாடறிந்த இடதுசாரியத் தலைவர்கள் கூட இன்று அரசாங்கத்தோடு ஒட்டிக் கொண்டிருக்கின்றனர்.

அரசாங்கத்துக்கு எதிராக ஆங்காங்கு எழுப்பப்படும் எதிர்க்குரல்கள் பயங்கரவாதம், இனவாதம் என்ற சாயம் பூசப்பட்டு ஒடுக்கப்படுகின்றன. பத்திரிகைகளில் இப்போ கட்டுரைகளை எழுதுவோர் உண்மையான வரலாற்றை அறியாது தவறான தரவுகளை மக்களுக்குக் கொடுத்துக் கொண்டிருக்கின்றனர்.

தொழிற்சங்கவாதி கந்தசாமி கொல்லப்பட்டது 1953 இல் எனத் தவறாகக் கட்டுரைகளில் எழுதுகின்றனர். 1947 இல் தான் அவர் கொல்லப்பட்டார். இத்தவறுகளைப் பெரும்பாலும் தமிழ்ப் பத்திரிகைக் கட்டுரையாளர்களே செய்துவருகின்றனர். இது இன்றைய சந்ததியினரைக் குழப்பத்திலாழ்த்தக் கூடியதாகும்.

இன்று நடந்து கொண்டிருக்கும் அரசியல், சமூகச் சீர்கேடுகளைச் செம்மைப்படுத்தி நல்லாட்சியையும் நல்லதொரு சமுதாயத்தையும் கட்டியெழுப்ப மக்கள் பேரெழுச்சியே இன்று அத்தியாவசியமானது. அதற்காகச் சகல இன மக்களும் ஒன்றிணைய வேண்டும்.

*யாழ்ப்பாணம் முற்றவெளியில் அன்று புற்றரையில் அமர்ந்திருந்து, இத்தகைய கூட்டங்களை இரசித்தவர்களுக்கு இக்கூட்டம் பழைய நினைவுகளையும் அன்றைய இடதுசாரித் தலைவர்களையும் மனதில் நிழலாட வைத்தது.*

-20.06.2011

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 33

## கே.ஏ.சுப்பிரமணியத்தின் 22வது நினைவுப் பதிவு

**வா**ழ்வாலும், சொல்லாலும், செயலாலும் பொதுவுடைமைக் கருத்தியலை வளர்த்தெடுத்து, பரம்பல் செய்து, ஒடுக்கப்பட்ட உழைக்கும் வர்க்க மக்களின் சிந்தனையில் எழுச்சி விதைகளை ஊன்றிய பொதுவுடை இயக்க முன்னோடி அமரர் தோழர் கே.ஏ.சுப்பிரமணியத்தின் (05.03.1931-27.11.1989) 22வது நினைவு தினக் கூட்டம் 27.11.2011 அன்று வெள்ளவத்தை தேசிய கலை இலக்கியப் பேரவையின் க.கைலாசபதி கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

**தலைமையுரை:**
**பேராசிரியர் சி.சிவசேகரம்**

தோழர் கே.ஏ.சுப்பிரமணியம் மனித உறவுகளை நன்கு பேணுபவர். தனது கருத்துக்களை எதற்காகவும் விட்டுக் கொடுக்கமாட்டார். தமிழரசு வாதியாக இருந்திருக்கிறேன். யூ.என்.பி.கட்சியோடு தமிழரசு வாதிகள் சேர்ந்த பின் தோழர் என்.சண்முகதாசனோடு தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டேன். சண்முகதாசன் அணியிலிருந்து 1969 இல் வெளியேறிய றோஹண விஜயவீர, மக்கள் விடுதலை முன்னணி (J.V.P.) என்ற அமைப்பை உருவாக்கினார். அந்த ஜே.வி.பி. 1971 ஏப்பரலில் முன்னெடுத்த கிளர்ச்சியின் பின்னர் கட்சிக்குள் பிளவு ஏற்பட்டது. செயலற்றது. அரசாங்கத்தால் தோழர்களுக்குப் பயங்கரவாதிகள் என்ற முத்திரை குத்தப்பட்டது. கொம்யூனிஸ்ட் கட்சிக்குள் உடைவு ஏற்பட்டது. இது சண்முகதாசன் இல்லாததாலேயே ஏற்பட்டது. 1977 ஆம் ஆண்டுத் தேர்தலில் சுதந்திரக் கட்சியை ஆதரிப்பதா? என்ற பிரச்சினை கொம்யூனிஸ்ட்டுகளுக்கு இருந்தது. சண்முகதாசன் அனுதாபம் கொண்டிருந்தார். 1978க்கு பின்னர் கட்சியை உடைத்துக் கொண்டு சில

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோழர்கள் தமிழ்த் தேசிய வாதத்தைப் பின்பற்றினர். சண்முகதாசனோடு தோழர் கே.ஏ.சுப்பிரமணியம் முரண்படவில்லை. கொம்யூனிஸ்ட் கட்சிக்குச் சண்முகதாசன் செய்த பங்களிப்புகளைச் சொன்னார்.

இந்தியாவில் வெளியாகிய 'படிகள்' என்ற அன்றைய சஞ்சிகை ஒன்றுக்குத் தேசிய வாதம் குறித்து தொடர்ச்சியாக எழுதினேன். அதற்கு வரதராசப் பெருமாள் மறுப்பெழுதினார். 1982க்குப் பிறகு 'செம்பதாகை' ஏட்டுக்கு எழுதினேன். சுப்பிரமணியமே கைலாசபதியையும் கொம்யூனிஸ்ட் கட்சிக்குள் கொண்டு வந்தார். அவரிடம் நேர்மை, நகைச்சுவை இருந்தது. எப்போதும் சிரித்த முகத்தோடு காணப்படுவார். பொருளாதாரப் பிரச்சினை இருந்தது. அதை யாருக்கும் சொல்ல மாட்டார். உதவிகளையும் கேட்க மாட்டார். இறுதிக் காலத்தில் மிகவும் கஷ்டப்பட்டார்.

எனக்கும் அவருக்குமிடையில் கடிதத் தொடர்புகள் இருந்தன. அவரது தூண்டுதலால் தான் 'தாயகம்'சஞ்சிகைக்கு எழுதினேன். எல்லோரையும் ஊக்குவிப்பார். கருத்துக்களைப் பரிமாறுவார். போர்ச் சூழலில் 'தாயகம்' சஞ்சிகையைக் கொப்பித்தாளில் அச்சிட்டு வெளியிட்டோம். இந்திய அமைதிப்படை இருந்த காலத்தில் கவிதை ஒன்றை எழுதினேன். அமைதிப்படை எதிர்த்தது. இரண்டு வரிகளைக் கழற்றினர். போராடினோம். அடுத்த இதழில் நான் எழுதிய அதே கவிதை எதுவித மாற்றமுமின்றி வெளியானது.

எழுத்தாளரைக் கேட்காது ஆக்கங்களில் எவ்வித மாற்றங்களையும் செய்ய மாட்டார். கட்சி உரிய விளக்கத்தைக் கொடுக்க வேண்டும். கலந்தாலோசிக்காது முடிவுகளைத் திணிக்கக் கூடாது என்பார். எல்.ரீ.ரீ.ஈ இயக்கக் காலத்தில் எமது கட்சி செயல்படாத நிலை இருந்தது. ஆனால், தனிமனித உறவுகளைப் பேணியே வந்தது. மரண தண்டனை, துரோகிகள் என்ற தண்டனைகள் எமது கட்சிக்கும் ஏற்பட்டது.

இந்த நிர்ப்பந்தங்களால் சுப்பிரமணியம் கட்சிப் பணிகளைச் செய்ய முடியாது குடிபெயர்ந்தார். புதிய ஜனநாயகக் கட்சியின் உருவாக்கத்திற்குக் காரணமாக இருந்தவர் தோழர் கே.ஏ.சுப்ரமணியந்தான். மே தின ஊர்வலங்களை ஏற்பாடு செய்தார். யாழ்ப்பாணத்தில் நடந்த சாதியப் போராட்டங்கள், தொழிலாளர் போராட்டங்கள் என்பனவற்றிற்கு உந்து சக்தியாக இருந்தார். சாதியப் போராட்டத்தில் ஈடுபட்ட போது பொலிசார் முதுகில் தாக்கியதால் காயம் ஏற்பட்டது. இதைப் பற்றிச் சொல்ல மாட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நினைவுச் சொற்பொழிவு :**
**'ஒரு பொதுவுடைமை இயக்க முன்னோடியின் நினைவுகளும் சமகால அரசியல் போக்குகளும்'**
**உரைஞர்:**
**சி.கா.செந்திவேல்**
**(செயலாளர், புதிய ஜனநாயக மார்க்சிய-லெனினிசக் கட்சி)**

தோழர் கே.ஏ.சுப்பிரமணியம் நினைவுக் கூட்டத்தை வருடாவருடம் கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் மலையகத்திலும் நடாத்தி வருகின்றோம். இது புகழாரத்தைச் சொல்லும் நினைவுக் கூட்டமல்ல. அவர் எத்தகைய நிலைப்பாட்டில் வாழ்ந்தார் என்பதை அறிந்து கொள்ள வேண்டும்.

கடந்த 10 ஆம் திகதி அவர் நினைவுக்கூட்டம் யாழ்ப்பாணத்தில் நடந்தது. கூட்டத்துக்குள் இராணுவம் புகுந்தது. ஏற்பாட்டாளர்களிடம் பல கேள்விகளைக் கேட்டது. அமளி துமளி ஏற்பட்டது. இருந்தும் அக்கூட்டம் தொடர்ந்து நடாத்தப்பட்டது. கோயில்களில் மணி அடிப்பது யாழ்ப்பாணத்தில் தடுக்கப்பட்டுள்ளது. தோழர் கே.ஏ.சுப்பிரமணியம் 1931 இல் கொல்லங்கலட்டியில் பிறந்தார். 1989 இல் இறந்தார். நோய்வாய்ப்பட்டிருந்த நிலையிலும் கூட வட புலத்தில் வாழ முடியாத நிலையில் இடம்பெயர்ந்து மலையகச் சிங்களக் கிராமமான தங்கொல்லவில் தலைமறைவாக வாழ்ந்து இறந்தார். இலங்கையின் பொது ஜன இயக்க முன்னோடிகளில் தோழர் கே.ஏ.சுப்ரமணியம் மிக முக்கியமானவர். 19ம் நூற்றாண்டிலேயே மார்க்சியம் உலகில் ஆரம்பமானது. பொதுவுடைமையிலிருந்து தான் மார்க்சிய லெனினிசம் வளர்ந்தது. 1940 ஆம் ஆண்டிலிருந்து பொதுவுடைமை இலங்கையில் வளர்ச்சி பெற்றது. பலர் பொதுவுடைமைக் கட்சியை வளர்த்தனர். அந்தப் பாரம்பரியத்தில் 1950 இல் கே.ஏ.சுப்பிரமணியம் பொதுவுடைமைக் கட்சியில் ஈடுபட்டார். தொழிலாளரை ஒன்று சேர்த்தார்.

1948 இல் இளைஞர் சுப்பிரமணியம் காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலையில் மேற்பார்வையாளராக இருந்தார். தொழிலாளர் ஒன்று கூடும் இடமாக அத்தொழிற்சாலை இருந்தது. அங்கிருந்த வெல்டரான சந்தியாப்பிள்ளை என்பவர் சுப்பிரமணியம் போன்ற சக தொழிலாளர்களுக்குப் பொதுவுடைமைக் கருத்துக்களை எடுத்துச் சொன்னார். 3500க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் இருந்தனர். வைதீகவாதிகளால் நிறைந்திருந்த அன்றைய யாழ் குடாவில் ஈ.வெ.ராமசாமி (ஈ.வெ.ரா) பெரியாரின் திராவிடக் கருத்து நிலை பரவலாகக் காணப்பட்டது. இது அன்றைய யாழ்ப்பாணச் சமூகத்துக்கு அதிர்ச்சியைத் தந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்திரிகைகள், சஞ்சிகைகளும் இருந்தன. பெருந்தொகையான இளைஞர்கள் ஈ.வெ.ரா.வின் கொள்கைகளை மட்டுமன்றி உடைகளையும் பின்பற்றத் தொடங்கினர். கே.ஏ.சுப்பிரமணியமும் ஈர்க்கப்பட்டார். வெல்டர் சந்தியாப்பிள்ளை புத்தகமொன்றைக் கொடுத்தார். கே.கே.எஸ். சிமெந்து தொழிற்சாலையில் முதலாவது தொழிற்சங்கம் ஆரம்பிக்கப்பட்டது.

இதன் காரணமாகச் சுப்பிரமணியம் போன்ற தொழிற்சங்கவாதிகள் வெளியேற்றப்பட்டனர். இதன் மூலம் சமூக அமைப்பை மாற்றும் முழு நேர அரசியல் ஊழியராகச் சுப்பிரமணியம் மாறினார். பொதுவுடை இயக்கத்தை ஏற்றுக் கொண்டு செயற்பட்டார். அன்று அவருக்கிருந்த கடினமான வாழ்க்கைச் சூழ்நிலையில் இது கடினமாகத் தான் இருந்தது. இருந்தும் அவர் தன்னையே அர்ப்பணித்தார். சுப்பிரமணியம் யாழ்ப்பாணத்து உயர் வேளாள சாதிக் கமக்காரக் குடும்பத்தில் பிறந்தவர். கொல்லங்கலட்டி அவரூர். வலிகாமம் வடக்கில் அக்காலத்தில் வைதீக மரபு தீவிரமாக நிலவிய போதும் தோழர்கள் பலர் அவரோடு இணைந்து பொதுவுடைமைக் கொள்கையை ஏற்றனர். மனித நேயத்தைக் காட்டினர்.

பேராசிரியர் சி.தில்லைநாதன், வீ.பொன்னம்பலம் ஆகியோர் இதில் இருந்தனர். அன்றைய சமூகம் ஏற்காத நிலையிலும் கொள்கையில் ஊன்றி நின்றனர். 1953ம் ஆண்டு நடந்த ஹர்த்தாலில், ஊர்வலத்தில் சுப்பிரமணியமும் இணைந்திருந்தார். இதில் தமிழரசுக் கட்சியும் பங்குபற்றியது. ஊர்வலத்தில் சென்று கொண்டிருந்த போது தோழர் அ.வயித்திலிங்கத்தைத் தொண்டையில் நெரித்துப் பொலிஸ் தள்ளியது. இத்தகைய பிரச்சினைகள் இருந்தும் அன்றைய தோழர்கள் தமது குடும்பங்களைத் துறந்து கொம்யூனிஸ்ட் கட்சியின் நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். அதன் பேறுதான் இன்று கொஞ்சமாவது நாம் சமத்துவத்தை அனுபவிப்பது. முன்னோடிகள் மாற்றத்தை ஏற்படுத்தினர். அவர்களது பாரம்பரியம் காப்பாற்றப்பட வேண்டும். பாதுகாக்கப்பட வேண்டும். சுப்பிரமணியம் மக்களை அணிதிரட்டினார். செயற்பாட்டில், நடைமுறையில், வழிகாட்டலில், நல்லதொரு முறைமையைக் கையாண்டார். கட்சியின் கொள்கை வகுப்பாளராகவும் இருந்தார். சமூக முரண்பாடுகளைப் புரிந்து கொள்ளல் அவரது விஷேட ஆற்றல். எது தீர்க்கப்பட்டால் நன்மை ஏற்படும் என்பதைப் புரிந்து கொள்ளும் ஆற்றல் அவரிடமிருந்தது. சர்வதேச ரீதியில் பொதுவுடைமைக் கட்சி பிளவுபட்ட போது நான் அவர் அணியில் சேர்ந்தேன். இறக்கும் வரை அவரோடிருந்து பணியாற்றினேன். ஒன்றாக வேலை செய்தோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருநாளும் வேறுபடவில்லை. ஏச்சும் வாங்கிக் கண்ணீரும் விட்டிருக்கிறேன். தோழர்கள் பலரை உருவாக்கினார். பொலிஸ் அடக்குமுறை, சாதி வெறியர்களின் அடக்கு முறையிலிருந்து தவறினோம். சிலர் எம்மை விட்டு ஓடினர். தோழர்களைப் படித்தறிய உதவினார். நான் மாணவனாக இருந்த காலத்தில் வீட்டுக்குக் கூட்டிச் சென்று, 'தூக்கு மேடைக் குறிப்பு!' என்ற நூலைப் படிக்கத் தந்தார். எம்மை தூர நோக்கில் வைத்திருக்க இந்நூல் உதவியது. அவரது அரசியல் வகுப்புக்களில் நல்ல விளக்கங்கள் கிடைத்தன. எமது வளர்ச்சியைத் தூர நோக்கில் நோக்கினார். 1966 க்குப் பின் உக்கிரமான வெகுஜனச் செயற்பாடுகளில் அவருக்கு மதிப்பிருந்தது. என்னைக் கூட்டங்களில் பேச வைத்தார். துண்டுப் பிரசுரங்களில் எனது பெயரைப் போடவில்லை. வளர்நிலையில் இருந்த தோழர்களைப் பழுதாக்க வேண்டாமென எச்சரித்தார். நீண்ட காலத் தோழர்களைக் கட்சிக்கு உண்டாக்கித் தந்தார். குடும்பத்திலும் அரசியலை நிலைப்படுத்தினார். கொம்யூனிஸ்ட் கட்சி வாழ்க்கைப் படியாக எமக்கு 60 ரூபா தந்தது. கிராமங்களில் மக்கள் எம்மை அக்காலத்தில் நன்கு போஷித்தனர். அவரோடு நீர்வை பொன்னையன், வி,ஏ.கந்தசாமி கட்சி ஊழியர்களாகப் பணி செய்தோம். எமது ஆற்றல்களை உகந்த முறையில் பயன்படுத்திக் கட்சியைக் கட்டியெழுப்பினார். மக்கள் மத்தியில் கொம்யூனிஸ்ட் கட்சி வேலைகளை விரிவுபடுத்தினார். நெல்லியடிச் சந்தியில் அன்றைய கால கட்டத்தில் தாழ்த்தப்பட்ட மக்கள் தேநீர்க் கடைகளில் வெளியிலே நின்று தான் தேநீர் குடிக்க வேண்டும். இதற்கான எதிர்ப்புப் போராட்டத்தை ஒக்டோபர் 21 போராட்டத்தில் சேர்த்தோம். இதைத் தீர்மானித்தவர் தோழர் கே.ஏ.சுப்பிரமணியம் தான்.கட்சியிலிருந்த சில ஆசிரியர்கள் சாதிப் போராட்டத்தை முன்னெடுத்தால் கொம்யூனிஸ்ட் கட்சி தனிப்பட்டு விடுமென அச்சுறுத்தினர்!

சாதி அமைப்பிற்கு எதிராக ஊர்வலத்தைச் சுன்னாகத்திலிருந்து நடாத்திய போது பொலிஸார் தடுத்தனர். கந்தசாமி, சூடாமணி, சுப்பிரமணியம் கடுமையாகத் தாக்கப்பட்டதோடு, மூவரும் கைது செய்யப்பட்டனர. பொலிசாருடன் எல்லோருமாகச் சேர்ந்து வாதாடி ஊர்வலத்தை நடாத்தினோம். சாதிக்காக அடிவாங்கினோம். நேர்மை, மனச்சாட்சி, மனிதாபிமானம், அர்ப்பணிப்பு அவரிடமிருந்தது. அவரது விவாதங்களில், தர்க்கங்களில் மனிதாபிமான இழை ஓடியிருந்தது. இலங்கையில் மார்க்சியக் கட்சி இருக்க வேண்டுமென்ற பேரவா அவரிடம் இருந்தது. 1964இல் சர்வதேச அரங்கில் கொம்யூனிஸ்ட் கட்சி இரண்டாக உடைந்தது. இந்தியாவில் மிகக் கூடுதலான அளவில் இது ஏற்பட்டது. மக்கள் இன்று திசை திருப்பப்படுகின்றனர். இளைஞர் மத்தியில் பொதுவுடையில் அக்கறை குறைவு. இலங்கையிலும் கூட மார்க்சியத்தை மீளப்பார்க்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ எல்லா இடதுசாரிகளும் எம்மோடு என்கிறார். புதிய ஜனநாயக மார்க்சிய-லெனினிசக் கட்சியாளரான நாம் தனித்தே நின்று இயங்குகின்றோம். ஒரு போதும் சீரழிய மாட்டோம். இன்றைய இலங்கை அரசியல் மிகவும் மோசமானது.

மக்கள் அக்கறையற்ற வரவு செலவுத் திட்டமே (2012) சமர்ப்பிக்கப் பட்டுள்ளது. அரசாங்கத்தின் முன்மொழிவுகள், உத்தேசங்கள் 95%உழைக்கும் பாட்டாளி மக்களுக்கு விரோதமானவை. இந்த உழைப்போருக்கு அரசாங்கம் எதைத்தான் தந்துள்ளது? காட்டியுள்ளது? இன்றைய நவகாலனித்துவ பொருளாதார அமைப்பில் ஒவ்வொருவருக்கும் தான் முன்னேறிவிட வேண்டுமென்ற நோக்குள்ளது. பரப்புரையும் செய்யப்படுகிறது. இன்றைய நிலையில் இராணுவத்துக்கு ரூபா 23000 கோடி எதற்கு? அன்று விடுதலைப் புலிகள் இயக்கம் வடக்கு, கிழக்கில் செய்தவைகள், இன்று அங்கு இராணுவத்தினரால் செய்யப்படுகிறது. செத்த வீடு, கலியாண வீடு, திவசம் என்பவற்றில் இராணுவத்தினரும் வந்து கலந்து கொள்கின்றனர். பனர்களைக் கட்டுகின்றனர்.

கண்ணீர் அஞ்சலி விழாவில் சிங்கக் கொடியைக் கட்டுகின்றனர். கோயில்களில் மணி அடிக்கக் கூடாது. அப்படி மீறி அடித்தால் தண்டனை. வடக்கு இராணுவ மயமாகி விட்டது.

இவர்களது உணவு, சீருடைக்கு 88% நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. நாட்டை இராணுவமயமாக்கி மக்கள் எழுச்சியை ஒடுக்கும் நிலைக்கான நடவடிக்கைகள் இதன் மூலமாக எடுக்கப்படுகின்றன. இது பாசிசமாக விரிவடையும். யு.என்.பி.க்குத் தாங்கள் ஆட்சிக்கு வர வேண்டும் என்ற நோக்கம். இன்றைய மக்கள் விரோத ஆட்சிக்கு முகவுரை எழுதிக் கொடுத்தது இந்த யு.என்.பி. தானென்பதை மக்கள் மறக்கக்கூடாது. சந்திரிகா குமாரதுங்க செய்ததைத் தான் இன்றைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ செய்கிறார். ஏகாதிபத்திய எதிர்ப்புவாதி என்பதெல்லாம் போலி வேடம். உலக வங்கியின் ஆலோசனையில் 3% நாணய மதிப்பிறக்கம் செய்யப்படுகிறது. இது பொருட்களை விலையேற்றுவதற்கான நடவடிக்கையே. இதனால் பாதிக்கப்படக் போகிறவர்கள் யார்? வெளிநாட்டு உல்லாசப் பயணிகளின் வசதிக்காக அதிவேக நெடுஞ்சாலை அமைக்கப்பட்டது. இது கிராமத்து விவசாயிகளின் விவசாய நிலத்தைத் துண்டு போட்டுள்ளது. இந்த விவசாயி தனது நிலத்தின் ஒரு பகுதியிலிருந்து மறு பகுதிக்குச் செல்ல நெடுந்தூரம் சென்று வீதியைக் கடந்து தான் மறு பகுதிக்குள் உள்ளிட வேண்டும். மக்களைப் பிரித்துவிட்டனர். போக்கு வரத்துக் கட்டணமாக 400 ரூபா, 2000 ரூபா அறிவிடப்படுகிறது. எதற்காக காபற் வீதிகளை அமைக்கின்றனர். நுகர்வுப் பண்பாட்டின் அடிப்படை இலக்கு இது. அதிவேக நெடுஞ்சாலை யாருக்காக அமைக்கப்பட்டது? நெடுஞ்சாலைக் கட்டணம் அறவிடப்படும். இதற்கான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளைவுகள் வந்த பின்னரே நாம் இவைகளின் நோக்கம் குறித்து அறியலாம்.

பொருளாதார வளர்ச்சி 8% தேறியுள்ளதாகச் சொல்லப்படுகிறது. அப்படி என்னதான் நடந்துள்ளது. இன்று புழக்கத்திலுள்ள பண நோட்டுக்கள் துப்பரவானவைகளாகக் காணப்படுகின்றனவா? ஒரு சில நாட்களுக்குள் கசங்கி அலங்கோலமாகி விடுகின்றன. இந்தக் காசு நோட்டுக்கள் மக்களின் வாழ்க்கைத் தரத்தைத் தீர்மானிக்கும். இங்கு பொருளாதார வளர்ச்சி உற்பத்தி மூலமாக வரவில்லை.

அமெரிக்காவின் முன் மொழிவைச் சாத்தியப்படுத்துவதே இந்நாட்டின் பொருளாதாரம். இளைஞர், யுவதிகள் வேலையற்றோராகத் திரிகின்றனர். இவையெல்லாம் மக்களுக்கு அடக்கி வாசிக்கப்படுகின்றன. பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் பெருகுகின்றன. பணக்காரர்கள் மேலும் பணக்காரர் களாகின்றனர். ஏழைகள் ஏழைகளாகவே இருக்கும் துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். இவைகளை மாற்றியமைக்க இந்நாட்டில் வலுவான மக்கள் இயக்கம் வேண்டும். தேசிய இனப்பிரச்சினை இன்னமும் தீர்க்கப்படவில்லை. 2009 இல் யுத்த முடிவோடு தேசிய இனப்பிரச்சினை முடிவுக்கு வந்துவிட்டதாக சொல்லப்படுகிறது. ஆனால், அதற்கான தீர்வு தான் இன்னும் இல்லை. இழுத்தடித்துக் கொண்டிருக்கின்றனர். யுத்தம் முடிந்து விடவில்லை. அது வேறு வடிவில் வரும். தேசிய இனப்பிரச்சினை மறைமுகமான நிலையில் இருந்து கொண்டு தான் இருக்கிறது. மக்கள் கொதித்துக் கொண்டிருக்கின்றனர்.

இது என்றோ ஒருநாள் போராட்டமாக வெளிப்படும். இதை இந்தியாவும் அமெரிக்காவும் உணர்ந்துள்ளன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை இவை அங்கீகரிப்பதில் வியப்பில்லை. கட்சிகள் இங்கு உடைகின்றன. ஜே.வி.பியை உடைத்து விட்டனர். உடைந்து போனவர்கள் சரியான நிலைப்பாட்டை எடுக்க வேண்டும். இச் சூழலை மாற்றுவதற்கான மாற்றுச் சக்தியொன்றை உண்டாக்க வேண்டும். புதிய கொள்கை தான் நடைமுறைத் தேவை. தமிழ் முற்போக்காளர் அனைவரும் அணி திரள வேண்டும். வெகுஜன எதிர்ப்புத் தேவை. கூடாங்குளம் போராட்டம் நியாயமானது. இங்கும் அதுபோல் போராட்டங்களை எடுக்க வேண்டும். சாதாரண மீனவர்கள் பாதிக்கப்படுகிறார்கள். இந்தியாவுக்கு எதிராக மஹிந்த ராஜபக்ஷ அரசு போகாது. பொருளாதார, அரசியல், சமூகத் தாக்கங்களில் இலங்கையில் நெருக்கடிகள் இருக்கின்றன. இவைகளுக்கு பரிகாரந்தேட இளைஞர்கள் உட்பட்ட வலுவான எதிரணி இன்று அத்தியாவசியமாகியுள்ளது.

*ச.தனுஜன் நன்றியுரை கூறினார்.*

-04/05.01.2012

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 34

## தம்பு சிவாவின் 'முதுசம்' வெளியீடு

பிரபல திறனாய்வாளரும் ஆக்க இலக்கிய கர்த்தாவுமான தம்பு சிவாவின் 'முதுசம்' சிறுகதைத் தொகுதியின் வெளியீடும், சிகரம் தொட்ட செம்மல்களுக்கான பாராட்டும், தம்பு சிவாவின் இலக்கிய எழுச்சி முயற்சிகளுக்குக் களம் ஈந்து- அவரைச் சிறந்த எழுத்தாளராகவும் இலக்கியவாதியாகவும் தமிழ் இலக்கிய உலகில் நிமிர வைத்த பத்திரிகை ஆசிரியர்கள்- சஞ்சிகை ஆசிரியர்கள் ஆகியோர்க்கு உயர் கௌரவிப்பு விருது வழங்கல் ஆகிய மூவம்ச இலக்கிய நிகழ்வுகளை உள்ளடக்கிய தமிழ் இலக்கியப் பெருவிழா 14.01.2012 ஆம் திகதி கொழும்புத் தமிழ்ச் சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில் மிகக் கோலாகலமாக நடைபெற்று ஈழத்து இலக்கிய உலகை வியக்க வைத்தது.

சிற்றுண்டிகளோடான தேநீர் விருந்தும் வாத்திய விருந்தும் மண்டபத்தில் குழுமியிருந்தோரை ஆசுவாசப்படுத்தத் தகைசார் பெரியோர்கள் மங்கல சுடரேற்றி இந்நீண்ட நிகழ்வைத் தொடக்கி வைத்தனர்.

சாகித்திய ரத்னா பேராசிரியர் சபா.ஜெயராசா தலைமை தாங்கினார்.
ரஜனி சந்திரலிங்கம் தமிழ்த் தாய் வாழ்த்துப் பாடினார்.
வரவேற்புரையை வ.சிவஜோதி நிகழ்த்தினார்.

**தலைமையுரை :**
**பேராசிரியர் சபா. ஜெயராசா**

வித்தியாசனமான நூல் அரங்கேற்றமாகத் தெரிகின்றது. சாதனையாளர்களைக் கௌரவித்தல் கலை, இலக்கியவாதிகள், எழுத்தாளர்கள் ஒன்றுகூடல் என்பவைகளைக் கொண்டதாக இருக்கின்றது. பல் பரிமாணங்களைக் கொண்ட சிறுகதைகளை முதுசம் தொகுப்புக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டுள்ளது. தொகுப்பின் ஆசிரியர் தம்பு சிவா பல் பரிமாணங்களில் இயங்கி வருபவர். சிறுகதைப் படைப்பாளி, கட்டுரையாசியர், திறனாய்வாளர், இதழ் எழுத்தாளர். இலக்கியத்தில் கட்டுரை மிக முக்கியமானது. இருந்தும் பல்கலைக் கழகங்களால் கட்டுரை இலக்கியங்கள் ஆராயப்படுவதில்லை. கட்டுரை இலக்கியமல்ல என்பது தவறான கருத்தாகும். ஏனைய இலக்கிய வடிவங்களுக்கு இல்லாத தனித்துவம் கட்டுரைக்கு உண்டு. அகலப் பண்பு, ஆழ்ந்த உள்ளடக்கம் என்பன கட்டுரையின் சிறப்பாக இருக்கின்றன. ஆறுமுக நாலவர், விபுலாநந்தர், க.கைலாசபதி போன்றோரால் கட்டுரைக் கலை சிறப்பாக வளர்த்தெடுக்கப்பட்டது. தம்பு சிவாவின் சிறுகதைகள் குறித்து தவறான கருத்துக்கள் உண்டு. யதார்த்தவாதம் முற்போக்கு இயக்கத்தால் வந்ததல்ல.

இலங்கையர் கோன், சம்பந்தன் போன்ற சிறுகதை முன்னோடிகள் அதை ஆரம்பித்து வைத்தனர். யதார்த்தவாதம் சோசலிச யதார்த்த வாதமல்ல. சமூக பிரக்ஞையான படைப்புகளை டொமினிக் ஜீவா, கே.டானியல் ஆகியோரே ஆரம்பித்து வைத்தனர் எனப் பேராசிரியர் கா.சிவத்தம்பி குறிப்பிட்டுள்ளார். பக்க அமைப்பை வைத்துச் சிறுகதையை அடையாளப்படுத்தினர். புதுமைப்பித்தன் மிக நீண்ட சிறுகதைகளையும் எழுதியுள்ளார். இரண்டே இரண்டு வரிகளைக் கொண்ட சிறுகதைகளும் ஆங்கிலத்தில் உண்டு. தமிழ்ச் சிறுகதை பற்றிய பல பரிசோதனைகள் நடந்துள்ளன. இன்று எம்முன் சிறுகதை எழுதுவதற்கான ஏராளனமான கருப்பொருள்கள் உண்டு. தம்பு சிவாவின் சிறுகதைகளில் வாழ்க்கை அனர்த்தப் பொறிகள் உண்டு. எமது எழுத்தாளர்கள் நகர, கிராம வாழ்வைப் பற்றி எழுதுகின்றனர். தமிழ் நூல்கள் வெளியீட்டால் இலாபம் ஈட்ட முடியாது. சேமமடு பதிப்பக அதிபர் பத்மசீலனின் பணி முக்கியமானது. இலக்கிய நூல்களைச் சிங்கள மக்கள் வாங்கிப் படிக்கின்றனர். பண்டாரநாயக்க ஞாபகார்த்த மண்டபத்தில் புத்தக கண்காட்சியொன்று நடைபெற்றது. அதில் ஐந்துக்கும் குறைவான தமிழரே வந்திருந்தனர்.

**நூல் அரங்கேற்றவுரை :**
**கலாநிதி கந்தையா ஸ்ரீ கணேசன்**
**(ஆங்கில மொழி சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ்ப்பாண பல்கலைக்கழகம்)**

கட்டுரை இலக்கியமாகும் போது எழுத்து நடைவந்து விடுகிறது. இலக்கியத்துக்கு அழகியலும் தேவை. சமூகப் பிரக்ஞையும் தேவை தான். பேராசிரியர் கா.சிவத்தம்பியும் பிற்காலத்தில் நடையியலும் அழகியலும் தேவை என்றார். கவித்துவமாக வந்து விழும் போது தான் படைப்பு எழுத்தோவியமாகும். பத்திரிகை எழுத்துகள் வேறானவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அ.முத்துலிங்கத்தின் கதையில் புகையிலை வாசத்தை முகரலாம். சிறு பொறியை வைத்து உலகத்தை வியாபிக்கலாம் என்பதை ரஞ்சகுமாரின் 'கோசலை' என்ற சிறுகதையில் காணலாம். தம்பு சிவா நாவலையும் எழுத வேண்டும்.

மிகப்பெரும் எழுத்தாளராக அவர் வரவேண்டும். மக்கள் பிரச்சினைகள் தீரும் நிலைமை வரவேண்டும். 'முதுசம்' தொகுப்பின் சிறுகதைகள் நிச்சயமாகத் தமிழ் பேசும் வாசகரைக் கவரும்.

*நூல் அரங்கேற்றத்தில் முதுசம் சிறுகதைத் தொகுப்பை சேமமடு பதிப்பக அதிபர் சதபூ பத்மசீலன் தமிழகப் பிரபல எழுத்தளார் கு.சின்னப்பபாரதிக்கு வழங்க, அவர் அதைத் தொகுப்பாசிரியர் தம்பு சிவாவுக்கு கையளித்தார். தொகுப்பின் கௌரவப் பிரதிகளையும் பேராசிரியர் சபா. ஜெயராசாவிடமிருந்து சமூகஜோதி ச.இலகுப்பிள்ளை, மு.கதிர்காமநாதன் (தலைவர், கொழும்புத் தமிழ்ச்சங்கம்) உதயராஜா (ஸ்ரீ ரெலோ), மார்க்கண்டு மகாதேவன், ஏ.எம்.சுப்ரமணியம் ஆகியோர் பெற்றுக் கொண்டனர்.*

**முதன்மை விருந்தினர் உரை :**
**பிரபல நாவலாசிரியர் வவுனியூர் இரா.உதயணன்**

தம்பு சிவா ஒரு தோப்பு. இலக்கியத்துக்குப் பாரிய பங்கினை ஆற்றி வருகிறார். அவரது தொகுப்பு 'முதுசம்' வெளிவருவது பெரு மகிழ்ச்சி. இலண்டனில் நடைபெற்ற தம்பு சிவாவின் புத்தக வெளியீட்டு விழாவுக்கு நான் தலைமை வகித்தேன். அங்கு மிகப் பெரும் ஆதரவு கிடைத்தது. 'தமிழ்த் தென்றல்' என்ற பட்டத்தையும் சூட்டி மகிழ்ந்தனர். இலக்கியம் மக்களைச் சென்றடைய வேண்டுமென்பது எனது கொள்கை. 'சொந்தங்கள்' சிறுகதைத் தொகுப்புக்குச் சின்னப்ப பாரதி விருதைப் பெற்றார். அவரது இரண்டாவது தொகுப்பான 'முதுசம்' இப்போ வெளிவந்துள்ளது. சிறந்த மனித நேய எழுத்தாளர். தமிழக சஞ்சிகைகளிலும் தம்பு சிவா எழுதுகிறார். 'இனிய நந்தவனம்' என்ற தமிழகச் சஞ்சிகையில் அவரது ஆக்கங்களைப் படித்துள்ளேன். சிறந்த பேச்சாளர் கவிதை, சிறுகதைகள் பற்றித் திறனாய்வுகளைச் செய்துள்ளார். இவரது அனைத்து எழுத்துக்களும் நூலாக வெளிவரவேண்டும். ஆற்றல் மிக்க இவரது எழுத்துக்களைப் படிக்க இலக்கிய உலகு ஆவலாக உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஆய்வுரை :**
**சிவா சுப்பிரமணியம்**
**(தினகரன் முன்னாள் ஆசிரியர் - அரசியல் நோக்கர்)**

கோட்பாடொன்றின் எல்லைக்குள் நின்று இலக்கியம் படைப்பவர் தம்பு சிவா. மார்க்சிம் கோர்க்கியைப் போல் தனக்குத் தெரிந்ததை எழுதுகிறார். கலைகளில் மக்களின் வாழ்வு நோக்கிற்கான தேடல் இருத்தல் வேண்டும். அதுவே மெய்யான கலையாகும். மக்களுக்கும் தேவையானது. நல்ல உருவமற்றது நல்லதொரு கலை இலக்கியப் படைப்பாகாது. கலை இலக்கியங்கள் மக்கள் மேம்பாட்டுக்கான தீர்வுகளைத் தேடல் செய்ய வேண்டும். உந்தலைக் கொடுக்க வேண்டும். அப்படியான கலையே அவசியமானதாகும். முட்டாள் மன்னன் ஒருவனின் சபைக்கு அறிஞன் ஒருவன் சென்றான். தன் திறன் காட்டி பரிசு பெற வந்தேன் என்றான். மகா பாரதம், இராமாயணக் கதைகள் தெரியுமா? என அரசன் கேடடான். ஆமென்றான் அறிஞன். ஒரு வரியில் சொல்ல முடியுமா? எனக் கேட்டான் முட்டாள் மன்னன். ஒரு நொடிக்குள் சொல்வேன். எறிந்த தேசிக்காயொன்று பூமியில் விழுமுன் சொல்ல வேண்டுமென நிபந்தனை விதித்தான் மன்னன். 'துரியோதனன் மண்ணுக்கு மாண்டான். இராணவன் பெண்ணுக்கு மாண்டான்' என அறிஞன் சொன்னான்.

கலை இலக்கியங்கள் எடுத்துரைக்கும் விடயங்கள் முக்கியமானவை. தம்பு சிவா முற்போக்காளர், இடதுசாரி அரசியல் தெளிவான நோக்குள்ளவர். சமூக மேம்பாட்டுக்கான சிறுகதைப் படைப்பாளி. அவரது முதுசம் சிறுகதைத் தொகுதியில் 19 சிறுகதைகள் உண்டு. கலை நயத்தோடு கருப்பொருளை எடுத்தாள்கிறார். அவலங்களை அப்படியே காட்டுகிறார். வாழ்க்கையின் வேதனைகளால் வேலைக்காக வெளிநாடு சென்ற ஒரு பெண்ணின் கதையை வாசித்த போது இத்தகைய வேதனைகளுக்கும் மத்தியில் ஏன் வெளிநாடு போகின்றனர்? என்ற தேடல் ஏற்பட்டது. அதிகாரிகளின் ஊழல்கள், பெண்களின் மனக்குமுறல்கள் பட்டும் படாமல் கதையில் தொட்டுக் காட்டப்பட்டுள்ளன. தொகுப்பின் தலைப்புக் கதை முதுசம், சொந்தக் காணிகளில் உள்ள பற்றுகளைப் பரம்பரை பரம்பரையாகக் கட்டிக் காக்க வேண்டுமென்ற வைராக்கியம் அல்லாத பட்சத்தில் குடும்ப கௌரவம் கெடும் என்ற எம் மக்களின் போக்கைச் சொல்கிறது. மண்பற்று இன்று அரசியல் பிரச்சினையாகி விட்டது. மனித இருப்புக்குக் காணி முக்கியமானது.

எமது இயல்பான சுபாவங்கள் வெறியாக மாறும் போது குடும்ப முன்னேற்றம் தடைப்படுமென்பதை உணர்த்துகின்றது. எம் மக்கள் அனுபவித்த யுத்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடுக்களை 'யாழ்ப்பாணம்' என்ற கதை விலாவாரியாகத் தெரியப்படுத்துகிறது. ஏ9 நெடுஞ்சாலை மூடப்பட்டது. கடல் மார்க்கப் போக்குவரத்து ஏற்பட்டது. பொருளாதாரத் தடை, சுட்டுக் கொல்லுதல், வியாபாரிகள் கொள்ளை இலாபம் அடித்தல் என்ற யுத்தகால அனுபவங்கள் சிறப்பாகச் சொல்லப்பட்டுள்ளன. இத்துன்பங்களில் இருந்து எம்மை விடுவிக்க வேண்டுமென்ற உணர்வை ஏற்படுத்துகிறது. இச்சிறுகதையில் மனதை உறுத்தும் விடயமாகத் தென்மராட்சிக்கு மக்கள் இடம்பெயர்ந்த காலத்தில் பெண்கள் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டனர் என்பது இருக்கிறது. இது மிகவும் மிகையான கணிப்பெனவே கருதுகிறேன்.

வித்தியாசமான கதையாக 'வாழ வைத்த தெய்வம்' இருக்கிறது. பட்டதாரி ஆசிரியன் அற்புதனை, வெளிநாடு செல்லும்படி மனைவி நச்சரிக்கிறார். புறப்படும் நேரத்தில் தாய் இறக்கிறார். மனதில் படியும் முறையில் தம்பு சிவா சிறுகதைகளைப் படைத்துள்ளார். மீண்டும் மீண்டும் யுத்தப் பாதிப்புகள் வருகின்றன. சமுதாயத் தேடல் பற்றிய சிந்தனை அவருக்கு வழிகாட்டுகின்றது.

**சிறப்பு விருந்தினர் உரை :**
**பிரபல நாவலாசிரியர் நாமக்கல் கு.சின்னப்ப பாரதி**

எழுத்தாளன் ஒரு போராளி. நான் கோட்பாட்டு எழுத்தாளன். சின்னப்ப பாரதி அறக்கட்டை ஒரு கூட்டு முயற்சி, பதினொரு படைப்புகளுக்குப் பரிசு வழங்கினோம். இவ்வாண்டு இரா.உதயணன் படைப்புக்கும் பரிசு கொடுத்தோம். தெலுங்கு மொழிப் படைப்புகளுக்கும் தரம் கண்டு பரிசு வழங்குகிறோம். ஒரு இலட்சம் ரூபா பணத்தை இதற்கென ஒதுக்குகிறோம். தம்பு சிவா, இரா. உதணாயன் படைப்புகள் யதார்த்த மற்ற கற்பனைகளென அரசல் புரசலான பேச்சுகள் அடிபட்டன. முல்லைத்தீவுக்குச் சுற்றுப் பயணம் சென்றிருந்த போது இதுபற்றி விசாரித்தேன். காழ்ப்புணர்ச்சியால் வேண்டுமென்றே சிலர் கதைகட்டுவதாக அறிந்தேன். இது மிகத் துர்ரதிஷ்டவசமானது.

படைப்பாளிகளுக்கு இப்படி வரக்கூடாது. இவர்களை நாம் அங்கீகரித்ததன் காரணத்தையும் வெளிப்படுத்தியிருக்கிறோம். மார்க்சிம் கோர்க்கி தன் படைப்புகளில் கலா அம்சம் இல்லை என்பார். படைப்பைக் கலை அம்சம் மேன்மைப்படுத்தும். காத்திரமான உள்ளடக்கம் கலை அம்சத்தைச் சிறப்பாக்கும். ஜோசப் ஸ்ராலின் எழுத்தாளனின் எழுத்து மனித இதயத்தைச் செம்மைப்படுத்தும் இயந்திரம் எனச் சொன்னார். உபாலி லீலாரத்தினாவின் இலக்கியப் பணி பற்றிப் பாராளுமன்றத்தில் பேசப்பட்டுள்ளது. சிங்கள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலொன்றுக்கு இந்தியாவில் தமிழ் நாட்டு கு.சின்னப்ப பாரதி அறக்கட்டளை தான்முதன் முதலாகப் பரிசு கொடுத்து முன்மாதிரி காட்டியுள்ளது. இலக்கியம் மனித நேயத்தின் விடிவு கால நட்சத்திரம். இலக்கியவாதி தனது படைப்புகளில் நெருக்கடிகளைச் சித்திரிப்பது அவனது கடமையாகும். கு.சின்னப்ப பாரதி அறக்கட்டளை அனைத்துத் தமிழ்ப் படைப்பாளிகளையும் தரம் கண்டு சிறப்பிக்கும்.

**இலக்கிய உரை :**
**சமகால இலக்கியத்தின் பலமும் பலவீனமும்**
**உரைஞர் : கலாபூஷணம் கே.ஆர்.டேவிட்**
**(நாடறிந்த முற்போக்கு எழுத்தாளர்)**

ஆழமும் அகலமுமான தலைப்புத் தரப்பட்டுள்ளது. குசினிக்குள் இருந்து தான் ஆரம்பிக்க வேண்டியுள்ளது. அதற்குள் தான் நதி மூலம் உண்டு. பானைக்குள் அவிந்து கொண்டிருக்கும் சோற்றைப் பதம் பார்ப்பதுக்குப் பெண்கள் சோற்றுப் பருக்கை ஒன்றைத்தான் எடுத்து நசித்துப் பார்ப்பார்கள். அடுப்பில் கொதித்துக் கொண்டிருக்கும் கறியில் கொஞ்சத்தைச் சட்டியிலிருந்து அகப்பையால் அள்ளி உள்ளங்கையில் தெளித்து நக்கி உப்பு,புளி பார்ப்பார்கள். சமகால இலக்கியத்தின் பலத்தையும் பலவீனத்தையும் வெளிப்படுத்தி எதிரிகளை ஏற்படுத்தலாம். இலக்கியத்தின் பலத்தையும் பலவீனத்தையும் எந்த அளவுகோலால் கண்டறிய வேண்டுமென்பதைத் தீர்மானிக்க வேண்டும். மட்டக்களப்பிலிருந்து ஒருவர் யாழ்ப்பாணம் வந்தார். திரும்பிப் போகும் போது கோழியொன்றை வாங்கிச் சென்றார். காட்டுவழியில் பஸ் பழுதாகி விட்டது. இரவைக் காட்டுக்குள் கழித்தார். வீட்டுக்குச் சென்றார். அவருக்குப் பசித்தது. மனைவியிடம் கோழியைச் சமைக்கச் சொன்னார். இதுவொரு கதையாக்கப் பட்டிருந்ததை வாசித்தேன். பசியைப் பசி தின்றது. இதில்படைப்பாளி வாசகனுக்கு எதைச் சொல்லவருகிறார். இதுவே படைப்பினதும் படைப்பாளியினதும் பலவீனமாகும். ஒரு பெண் திருமணமாகும் வயதாகியும் திருமணம் செய்யவில்லை. ஒருவனைத் திருமணம் செய்தார். பிள்ளை பிறக்கவேண்டும். தன்னை அம்மாவென அழைக்க வேண்டுமென இயல்பான பெண்ணாசை கொண்டாள். குழந்தை ஒன்று பிறந்தது. யுத்தமும் வந்தது. புருசனை இழந்தாள்.

அம்மா எனக் கூப்பிடச் சொல்ல பிள்ளை 'குண்டு' எனக் கூப்பிட்டது.இது நாட்டில் நடந்த உருக்கமானதொரு சம்பவத்தை மனதிற்குக் கொண்டுவருகின்றது. இதுதான் இலக்கியத்தின் பலம். எழுத்துக்கு ஒரு தளம் வேண்டும். மனித மீட்சிக்கானதாக இலக்கியம் அமையவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துப்பாக்கி ஓய்ந்துவிடலாம். ஆனால் பேனா ஓய்ந்துவிடக்கூடாது. சமுதாய வரலாற்றுச் சீரழிவுகளைப் படைப்பின் கருத்தாக நல்ல முறையில் விதைக்க வேண்டும். அதுவே நல்ல இலக்கியத்தின் பண்பாகும்.

இன்றைய சூழலில் இலக்கியம் சக்தி வாய்ந்ததாக இருக்கவேண்டுமெனப் பேராசிரியர் க.கைலாசபதி சொன்னார். மானுடத்தின் மேம்பாட்டுக்காய் உழைத்த உன்னதமானவர்கட்கு 'முதுசம்' தொகுப்பு சமர்ப்பணம் செய்யப்பட்டிருப்பது மிக உச்சமான காரியமாகும். பேராசிரியர் சபா ஜெயராசா ஒரு நெடுங்கோடு. தான் பிறந்த மண்ணுக்கும் மொழிக்கும் இலக்கியத்துக்கும் தொண்டு செய்துகொண்டு வாழ்கிறார். இன்றைய தமிழனுக்கு இருக்கும் சொத்து அவர். பல்லாண்டுகள் அவர் வாழவேண்டும்.

## சிறப்பு விருந்தினர் உரை:
## உடுவை எஸ்.தில்லைநடராஜா
### (எழுத்தாளர், முன்னாள் மேலதிகச் செயலாளர், கல்வி அமைச்சு)

'கற்பகம்' மூலம் தம்பு சிவா பனை மரத்தின் பலவளங்களைப் பயன்படுத்த முயற்சித்தவர். நாற்பதாண்டுகளுக்கும் மேலான தொடர்புண்டு. மனித மேம்பாட்டுக்குத் தேவையான விழா இது. உழைப்புக்கு முக்கியத்துவம் கொடுப்பது. பலரது பங்களிப்புக்கள் இதற்குண்டு. வட, கிழக்கு மாகாண சபையின் நூல் பதிப்புப் பிரிவிலிருந்து சேவை செய்தவர் தம்பு சிவா.புலமையாளர். இங்கு அவரது ஆளுமை அங்கீகரிக்கப்படுகின்றது. இரா.உதயணனும் சின்னப்ப பாரதியும் இவ்விழாவில் பங்குபற்றுகின்றனர். சினிமா பார்க்கத் தொடங்குவதற்கு முன் பத்திரிகைகள் சஞ்சிகைகளில் விமர்சனம் படிப்பேன். 'திருவிளையாடல்' என்ற திரைப்படத்தில் சிவாஜி கணேசன் சரியாகச் சிவபெருமான் போல் நடித்தாரென விமர்சனம் எழுதினர். இந்தாண்டு உலகம் அழியுமென ஒருவரும் அழியாதென மற்றொருவரும் ஹேஷ்யம் கூறினர்.

வலையைக் கடலுக்குள் வீசி எறிந்து இழுத்தபோது அதற்குள் ரின் மீன் வருகிறது. இது விளம்பரம், இத்தகைய போக்குகள் காணப்படுகின்றன. விருதுகள் பொருத்தமானவர்களைத்தான் சென்றடைகின்றன. எழுதுவதை எழுத்தாளர்கள் நன்றாக எழுத வேண்டுமானால் எல்லோருக்கும் வழி பிறக்கும்.

*தமிழியல், தமிழ்க் கலை - இலக்கியம், உற்பத்தி என்பவற்றில் சிகரத்தைத் தொட்ட சாதனையாளருக்குத் தங்கப்பதக்கம், பொன்னாடை, பூமாலை கௌரவங்கள் செய்யப்பட்டன. இக் கௌரவத்தை சாகித்திய ரத்னா*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராசிரியர் சபா.ஜெயராசா, சி.மயூரநாதன்,வவுனியூர் இரா.உதயணன், கலா பூஷணம் கலைச்செல்வன் ஆகியோர் பெற்றனர்.

'முதுசம்' சிறுகதைத் தொகுதியின் ஆசிரியர் தம்பு சிவா, தமிழ் இலக்கியத்துக்கு பணி செய்ய ஏணிகளாகவிருந்த பின்வரும் ஊடகவியலாளர்களும் கௌரவிக்கப்பட்டனர்: சிவா சுப்பிரமணியம் (முன்னாள் தினகரன் ஆசிரியர்), இராஜநாயகன் பாரதி (பொறுப்பாசிரியர் ஞாயிறு தினக்குரல்), டொமினிக் ஜீவா (மல்லிகை ஆசிரியர்), த.சந்திரசேகரன் (ஆசிரியர் இனிய நந்தவனம்), என்.பத்மசீலன்(சுடர் ஒளி), சற்சொரூபவதி நாதன்(இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்), வீ.தனபாலசிங்கம்(பிரதம ஆசிரியர் தினக்குரல்), ந.வித்தியாதரன்(உதயன், சுடர் ஒளி), அன்னலெட்சுமி இராசதுரை (கலைக்கேசரி), செஞ்சொற்செல்வர் ஆறுதிருமுருகன், செந்தில் வேலவர் (ஆசிரியர் - தினகரன் வார மஞ்சரி), த.கோபாலகிருஷ்ணன் (செங்கதிர் ஆசிரியர்), கே.பொன்னுத்துரை (படப்பிடிப்பாளர் - பத்திரிகையாளர்), அந்தனிஜீவா (கொழுந்து ஆசிரியர்),

இலண்டன் இணுவில் ஒன்றியம் தம்பு சிவாவுக்கு விருது வழங்கி கௌரவித்தது.

## கௌரவம் பெற்றோர் சார்பில் உரை:
## செஞ்சொற் செல்வர் ஆறுதிருமுருகன்

எனக்கும் கௌரவம் கிடைத்துள்ளது. கண்ணூறு பட்டுவிடக் கூடாது. தம்பு சிவா நல்ல எழுத்தாளர். கலைப்பாரம்பரியத்தைக் கொண்டவர். இணுவில் தம்பு சிவாவின் தந்தையாரை ஊரில் தம்பு அம்மான் என்று தான் அழைப்பார்கள். மகள் மாதுமையும் சிறுகதை எழுத்தாளர். தமிழ்த் தினப் போட்டியொன்றில் சிறுகதைத் தெரிவுக் குழுவில் இருந்தேன். பரிசளிப்பு விழாவில் மாதுமை பரிசு பெற்றுப் பரிசைப் பெற வந்தபோது தான் இன்னாரென அறிந்தேன். அகில இலங்கைச் சிறுகதைப் போட்டியில் மாதுமை பரிசைப் பெற்றார். இலக்கியம் காலத்தைப் படம் பிடித்துக் காட்ட வேண்டும். கல்வி சம்பந்தமான பெருந் தொகையான நூல்களை எழுதியிருப்பவர் பேராசிரியர் சபா.ஜெயராசா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சிறப்பு விருந்தினர் உரை:**
**சொ.அமிர்தலிங்கம்**
**(தலைவர், மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு, வடமாகாணம்)**

பாமர மக்களும் படிக்கக் கூடியதாக இலகு நடையில் எழுதும் முற்போக்கு எழுத்தாளர் தம்பு சிவா; பெரியதோ சிறியதோ இலக்கிய ஈடுபாட்டோடு உழைக்கிறார். எழுத்துக் கலை மிகச் சிரமமானது. இத்துறையில் தனக்கு நல்லதோர் வாசகர் கூட்டத்தைச் சேர்த்துள்ளார் தம்பு சிவா. நெறி பிறழாதவர். அசைக்க முடியாத கொள்கைப் பிடிப்புள்ளவர். அவரது படைப்புகளில் சொற்குற்றம், பொருட் குற்றம் காண்பதரிது. எழும் மனிதனுக்குக் கைகொடுத்து உதவத் தன் இலக்கியத்தைப் பாவிக்கிறார்.

**கலாநிதி சி.சிவநிர்த்தானந்தா**
**(பிரதிக் கல்விப் பணிப்பாளர்)**

இதொரு முன் மாதிரியான விழா. தமிழ்க் கலாசாரத்தைக் காண்கிறோம். பண்பாடு மனித நேயம் நிறைந்தது. வாசகர்கள் சிறுகதை, நாவல்களை ஏற்றுக் கொள்வர். முற்காலச் சினிமாவை அறியாத இரசிகர்கள் இன்று ஏராளம் உண்டு. நடிகர்கள் சிவாஜி கணேசன், எம்.ஜி.ராமச்சந்திரன் காலம் பொற்காலம். இன்றைய சூழல் பல்வேறு முறைகளில் எழுதப்பட்டு வாசிக்கப்படுகிறது. என்றைக்குமே மானுடம் சிகரந்தான். தம்பு சிவா நல்ல இலக்கியப் புலமையாளர், பேச்சாளர், விமர்சகர், ஆக்க இலக்கியத் திறனாய்வாளர். 350க்கும் மேற்பட்ட நூல்களை விமர்சித்திருக்கிறார். இவரது இயல்பான அடக்கம் இவரது உயர்நிலையைக் காட்டும். இலங்கை வானொலியின் 'கலைக்கோலம்' என்ற நிகழ்ச்சியில் 25ற்கும் மேற்பட்ட இலக்கிய உரைகளை நிகழ்த்தியுள்ளார். தமிழகத்தின் என்.சி.பி.எச். வெளியீட்டு நிறுவனமும் தம்பு சிவாவின் நூலை வெளியிட்டுள்ளது. தமிழகத்திலும் பிரபலமாகியுள்ளார். தான் பிறந்த இணுவில் மண்ணுக்கு பெருமை சேர்க்கிறார். லண்டனில் இயங்கும் லண்டன் இணுவில் ஒன்றியம் அண்மையில் 'தமிழ்த் தென்றல்' என்ற கௌரவத்தை இவருக்கு லண்டனில் வழங்கிக் கௌரவித்தது. சிலர் வாழ்வதற்காக எழுதுகிறார்கள். தம்பு சிவா எழுதுவதற்காக வாழ்கிறார். இவரது கடும் உழைப்பே இவருக்கு இத்தகைய பெருமையைத் தேடித் தந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கருத்துரை :**
**'கொழுந்து' அந்தனி ஜீவா**

தம்பு சிவா 'கற்பகம்' இல் இருந்த காலந்தொட்டு எனக்கு அவரோடு தொடர்பு இருந்து வருகின்றது. இணுவில் வீரமணி ஐயரோடும் எனக்குத் தொடர்பிருந்தது. பேராசிரியர் சபா.ஜெயராசா, கலாநிதி கந்தையா ஸ்ரீ கணேசன் ஆகிய உயர் கல்விமான்களும் இணுவில் மண்ணின் மைந்தர்கள். இணுவிலைச் சேர்ந்த பலர் புலம் பெயர்ந்து ஐரோப்பாவில் வாழ்கின்றனர். தம்பு சிவா கொழும்புத் தமிழ்ச் சங்கத்திலும் பணிபுரிந்தவர். இவரது மகள் மாதுமை அற்புதமான சிறுகதைப் படைப்பாளி. தம்பு சிவா சொன்ன பின்னரே அவரும் சிறுகதைப் படைப்பாளி என்பது எனக்குத் தெரியவந்தது. எண்பது சிறுகதைகள் எழுதி இருப்பதாகச் சொன்னபோது வியப்பிலாழ்ந்தேன். இந்த விழா தனி மனிதனொருவனின் சாதனையைக் காட்டுகின்றது. தனிமரம் தோப்பாகாதென்பர். ஆனால் இது தோப்பையும் மிஞ்சி விட்டிருப்பதைக் காட்டுகின்றது. உறவுகளைத் தம்பு சிவா நன்கு பேணி உள்ளார். தமிழுக்குத் தொண்டு செய்வோர் சாவதில்லை என அறிஞரொருவர் சொல்லியிருக்கிறார். இணுவிலூரின் புகழ் பூத்தவர்கள்பற்றி தம்பு சிவா எழுத வேண்டும்.

*'ஈழத்துத் தமிழ்ச் சிறுகதைகளில் முற்போக்கு கருத்தியல்' என்ற பொருள் குறித்துத் கலாநிதி வல்லிபுரம் மகேஸ்வரன் உரை நிகழ்த்தினார். விழா நாயகன் தம்பு சிவாவின் ஏற்புரையைத் தொடர்ந்து கரகாட்டம் நடைபெற்று இப்பெருவிழா நிறைவு பெற்றது. பங்குபற்றியோருக்கு இராப்போசன விருந்தும் அளிக்கப்பட்டது. எஸ்.திருச்செல்வம் நிகழ்ச்சிகளை ஒருங்கிணைத்து அறிவிப்புகளைச் செய்தார். இலண்டன் தனுசாந்தன், மாதுமை, நறுமுகை குடும்பத்தினர் அனுசரணையில் இவ்விழா நடைபெற்றது குறிப்பிடத்தக்கதாகும்.*

- 23/24.01.2012

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 35

## சுமதி குகதாசனின் ‘தளிர்களின் சுமைகள்’

இலங்கை முற்போக்குக் கலை இலக்கிய மன்றம் அதன் 25ஆவது நூலாகக் கவிஞர் சுமதி குகதாசனின் ‘தளிர்களின் சுமைகள்’ என்ற கவிதைத் தொகுப்பை வெளியிட்டுள்ளது. இந்நூல் வெளியீட்டு விழா 23.01.2012 ஆம் திகதி கொழும்புத் தமிழ்ச் சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில் தமிழிலக்கிய அபிமானிகள் வியக்கும் வகையில் எளிமையானதாகவும் வித்தியாசமானதாகவும் தனித்துவமானதாகவும் மண்டபம் நிறைந்த தமிழிலக்கிய இரசிகர்கள் மத்தியில் வெளியிடப்பட்டது.

க.சிவபுத்திரன் நிகழ்வுக்குத் தலைமை தாங்கி நெறிப்படுத்தினார். அவரது தலைமையுரை குறுகியதாகவே இருந்தது.

**தலைமையுரை:**
**க. சிவபுத்திரன் (முற்போக்கு இலக்கிய இரசிகர்)**

‘தளிர்களின் சுமைகள்’ நூலாசிரியர் சுமதி குகதாசன் ஓய்வு பெற்ற ஆசிரியை. சமூகச் சுமைகளை உள்வாங்கிக் கவிதைகளைப் பாடியுள்ளார். அனைத்துக் கவிதைகளும் அவரது அனுபவ வெளிப்பாடுகளாகவே தெரிகின்றன. ‘மாணவன்’ என்ற கவிதையோடு தொகுப்பைத் தொடக்கியுள்ளார். இன்றைய மாணவரது மன நிலையும் அவர்களுக்கான பாடசாலைக் கல்வியும் மிகச் சிறப்பாக, நுணுக்கமாகச் சொல்லப்பட்டுள்ளது இக்கவிதையில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நூல் வெளியீட்டுரை:**
**சிவா சுப்ரமணியம் (முன்னாள் தினகரன் ஆசிரியர்)**

முற்போக்குக் கலை இலக்கிய மன்றத்தில் இந்நூலாசிரியை சுமதி குகதாசன் மிகவும் உற்சாகமாக இயங்கிக் கொண்டிருப்பவர். மனிதம், சமூகம், இலக்கியம், விஞ்ஞானம், வாணிபம் போன்ற பல்துறை சார்ந்த நூல்களை இம்மன்றம் வெளியிட்டிருக்கின்றது. இடது சாரியச் சிந்தனை, முற்போக்குத் தாக்கங்கள் இத் தொகுப்பாசிரியை சுமதியிடம் உண்டு. இது அவரது கன்னி முயற்சி தான். நூலை வாசித்த பின் கவிதைத் துறையில் சுமதி ஏற்கனவே கால் பதித்திருக்க வேண்டுமென உணர்ந்தேன். இனித்தொடர்ந்து தொகுப்புக்களை வெளியிடுவாரென நம்புகிறேன். 'சிவப்பு' என்ற கவிதை ஐந்து வரிகளைத் தானுடையது. இன்றைய அரசியலில் பரவலாகப் பேசப்படும் விடயமொன்று அதற்குள் பொதிந்து கிடக்கிறது. அழகாகவும், அழுத்தமாகவும் எடுத்துரைக்கின்றார். நாசூக்காகப் பொருளை உணர்த்தும் திறமை சுமதிக்கு உண்டு. இன்று போற்றுகிறார்கள் என்பதற்காகப் பெருமைப் படக்கூடாது. இவர்களே நாளைக்குத் தூற்றவும் செய்வர். இந்த உண்மையைக் கவிதையில் வெளிப்படுத்துகிறார். தரிசனம், சிறப்பான தரிசனமொன்றைத் தருகின்றது. சுமதி மனத் தாக்கங்களைக் கவிதையாக்குகின்றார்.

அவர் மென் மேலும் கவிதைகளைப் படைக்க வேண்டும். அவைகளை தொகுத்து நூலாகத் தர வேண்டும்.

*நூல் வெளியீட்டில் 'தளிர்களின் சுமைகள்' கவிதைத் தொகுப்பை சிவா சுப்பிரமணியம் வெளியிட்டுத் தலைவர் க.சிவபுத்திரனுக்கு வழங்க அவர் அதை நூலாசிரியை சுமதி குகதாசனுக்குக் கையளித்தார்.*

**நூல் ஆய்வுரை :**
**வைத்திய கலாநிதி எம்.கே.முருகானந்தம்**

இலக்கியத்தின் அரசி கவிதை என்பர். காலத்தால் மூத்தது கவிதை. வாய்மொழி மூலமாக வந்தவையே நாட்டார் பாடல்கள். இலக்கிய எழுத்தில் கவிதையே முன்வந்தது. கம்பனையும் இளங்கோவையும் இரசிக்காத தமிழ் நெஞ்சங்களே இருக்க முடியாது. இவர்களது எழுத்துக்களை எல்லோராலும் புரிந்து கொள்ள முடியாது. பொழிப்புரைவேண்டும். விளக்கவுரை வேண்டும். இதற்காக சாதாரண படிப்பாளிகள் விளக்கங்களைப் பெற யாரையாவது நாட வேண்டிய நிர்ப்பந்தம் உண்டு. இந்நிலையை மாற்றியவர் மஹாகவி சுப்பிரமணிய பாரதியார். எளிமையான,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலகுவான, முற்போக்கான, சாதாரண மக்களும் விளங்கக்கூடிய கவிதைகளைப் பாரதி பாடினார். இதனால் கவிதைசாதாரண மக்களுக்குள் வரக்கூடியதாக இருந்தது. கவிதை ஆக்கும் வல்லமை சாதாரண மக்களுக்கும் ஏற்பட்டது. சினிமா மூலமாகக் கவியரசு கண்ணதாசன், பாட்டாளி மக்கள் கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் போன்ற நல்ல கவிஞர்கள் வெளிவந்தனர். இன்று கவிதை பாரதி யுகத்தை விட்டு விலகி விட்டது.

இன்று புரியாத சொற்களாலான புரியாத கவிதைகளைச் சஞ்சிகைகளில் காண முடிகிறது. இன்று கவிஞர்கள் அதிகமாகப் பெருகி விட்டனர். இன்று வெளிவந்து கொண்டிருக்கும் கவிதைகளைப் புரிந்து கொள்ள புதிய தேர்ச்சி வேண்டும். பயிற்சி வேண்டும். இன்று படைக்கப்படும் கவிதைகள் சாதாரண வாசகருக்கானதல்ல. சொல்லிறுக்கம் மொழியிறுக்கம் காணப்படுகிறது. விடுகதை, புதிர் என்பவைகளின் பாணியையொத்ததாக இருக்கின்றது. சிரமமான கருத்துப் பரிமாறல்களைச் செய்கின்றன. உளவியல் போன்ற உத்திகள் எல்லோருக்கும் ஏற்றதல்ல. பிரசுர ஊடகங்களும் வாசகருக்குப் புரியாத கவிதைகளைப் பிரசுரித்து வருகின்றன. இது இன்று இலக்கிய உலகில் பெரும் பிரச்சினையாக இருக்கின்றது. பத்திரிகைகள், சஞ்சிகைகள் பல தரப்பட்ட வாசகர்களையும் திருப்திப்படுத்த வேண்டும். கவிதை ஓர் இனிய அனுபவமாகும். கருத்துச் செறிவு இருக்க வேண்டும். கவிதையில் லயம் வர வேண்டும். கவித்துவம் தேவை. கட்டுக்குள் அகப்படாத அதி உயர் அனுபவத்தைக் கொடுக்க வேண்டும்.

நேர்த்தியான சொற்கள் அக நிறைவைக் கொண்டு வரும். கடைந்தெடுத்த சொற்களைத் தேர்ந்தெடுத்துக் கவிதையாக்க வேண்டும். கவிஞர் சுமதி குகதாசன் சமூகப் பற்றுடனும் முன்னேற்ற அக்கறையுடனும் பிரச்சினைகளை நோக்கியிருக்கிறார். ஆசிரியை, தாய், பொதுசனம், பெண்ணியவாதி இப்படிப் பல பாத்திரங்களில் இயங்குபவர் சுமதி. அவரது பார்வை ஒரேவிதமானதல்ல. கவிதையில் சுட்டிக்காட்டப்படாதவையும் நாம் அனுபவத்துக்கேற்றவாறு புரிந்து கொள்ளலாம். 'மாணவம்' என்ற கவிதை பல விதமான சிந்தனைகளை எழுப்புகின்றது. 'தளிர்களின் சுமைகள்' என்ற நூல் தலைப்புக் கவிதையில் மாணவர்களைத் தளிர்களாகக் காண்கிறார். மாணவர்களது சுமைகள் பலவிதமானவை. பெரிய மூட்டைக் கட்டைச் சுமந்து கொண்டு வெளியேறுகின்றனர். 'பாடங்களின் சுமைகள்' என்ற வரி அவர்களின் பல விதமான பாடங்களின் சுமைகளை வெளிப்படுத்துகின்றது. அவர்கள் கற்பதற்குத் தான் ஒரு நாளில் எத்தனை பாடங்கள். 'தண்டனைச் சுமைகள்' என்ற சொற்றொடர் அருமையானது. படிப்புப் பிள்ளைகளுக்குச் சுமையாக இருக்கும் போது பெற்றோர் டாக்டர்களாக எஞ்சினியர்களாக வரவேண்டுமென எதிர்பார்க்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றைய மாணவர்களின் கற்றல் பிள்ளைகளின் விருப்பமல்ல. பெற்றோரின் பெருமையைக் காட்டுவதற்காகவே உள்ளது. பகலில் பாடசாலைப் படிப்பு, மாலை நேரத்தில் ரியுசன் வகுப்புகள், 'தயாராயிரு' கவிதை பெற்றோரைத் தயாராக இருக்கச் சொல்கிறது. அதில் வரும் 'அம்மா நீ நல்லனீ' என்ற சொல்லடுக்கு அழகானது. பிள்ளைகள் தாய்மாரைப் பராமரிப்பதில்லை. சில வேளைகளில் சுடு சொற்களையும் வீசிப் பெற்றோரை மனம் நோக வைக்கின்றனர். 'அம்மா நீ நல்லனீ' என்று நாளைக்கு மகனும் சொல்ல மாட்டான். அதற்குத் தாய்மார்கள் தயாராக இருக்க வேண்டும். 'யதார்த்தம்' பல கவிதைகளில் பொதுவுடைமை நோக்கு இருக்கின்றது. மார்க்சியம் பல வருடங்களாக வர்க்க பேதத்தை எதிர்த்தும் அது இன்னமும் நிலவுகின்றதென்கிறது.

இந்த மன அழுத்தம் அனைவருக்கும் உண்டு. பச்சை மண்ணையும் சுட்ட மண்ணையும் ஒட்ட வைக்க வழிமுறைதான் என்ன? 'சீர்மை' முற்போக்கு முன்னோடியாகச் சொல்லிப் பிரயோசனமில்லை. நாம் அவர்கள் போல வாழ முன்வர வேண்டுமென்கிறது. இரண்டு அல்லது மூன்றே வரிகளுடைய கவிதைகள் பல கருத்துக்களை உடையவையாக அமைக்கப்பட்டுள்ளன. உலகில் மார்க்சியம் வேர் கொண்ட பின்னர் தான் வாழ்வின் போக்குகளில் மாற்றம் வந்தது. 'ஆட்சி' நாசூக்காகப் பெண்ணியத்தைப் பேசுகின்றது. பிழையான ஆட்சி நடந்தால் வீட்டிற்குள்ளேயே பூட்டிக்கிடக்கலாம். அதுவே வீட்டினுள் என்றால் பெண்கள் வெளியே செல்ல முடியாமல் அடங்கி வாழும் ஆற்றாமையைப் புட்டுக் காட்டுகின்றது., பெண்ணின ஏக்கம் தொனிக்கின்றது.

ஏராளமான மன வெளிப்பாடுகள் கவிதைகளில் தொற்றி நிற்கின்றன. கவிஞர் சுமதி குகதாசன் தனது ஆசிரியர் தொழிலை ஆத்மார்த்தமாக நேசித்துச் செய்ததை கவிதைகள் ஊடாகக் காண முடிகின்றது. மாணவர்களது சுமைகள், துன்பங்கள் நிதர்சனமாக உள்ளன. அறிவுபூர்வமான அணுகல் செய்யப்பட்டுள்ளது. தொகுப்பில் 49 கவிதைகள் பதிவாகி இருக்கின்றன. நாலு வரிகளில் ஏழு சொற்களாலும் கவிதைகள் பாடப்பட்டுள்ளன.

ஒன்பது கவிதைகள் சற்று நீளமாக உள்ளன. கவிஞர் நல்லவற்றை போற்றித் தீயவற்றைக் காய்ந்திருக்கிறார். சொற்களுள் ஒளிந்து கொள்ளாமல் தனது கருத்துக்களை வெளிப்படையாக முன்வைத்துள்ளார். ஓசை நயத்துக்காகக் கவிதையை தியாகம் செய்யாத போக்குத் தெரிகின்றது. இக்கவிதைகளைச் சிந்தித்துப் படித்தால் சொற்கடந்த அழகு, அதன் பொருட் செறிவு மேலெழும் எனத் தன் முன்னுரையில் கவிஞர் ஏ.இக்பால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருத்து வெளிப்படுத்தியுள்ளார். ஈழத்து இலக்கியத்துக்குச் செம்மைப்படுத்தல் (Editing) கிடையாது. எந்தவொரு படைப்பையும் இன்னொருத்தர் செம்மைப்படுத்த வேண்டும். படைப்புப் பற்றி இன்னொருவரோடு அலசி ஆராய்ந்தால் படைப்பில் நல்ல மாற்றத்தை ஏற்படுத்தலாம். வாசகனைப் படைப்பால் இன்புறுத்த வேண்டும்.

அட்டைப் படத்தை என்.எஸ்.ஞானகுருபரன் கவர்ச்சியாகத் தீட்டியுள்ளார். கவிதைகளின் கருத்துக்களை வெளிப்படுத்தும் ஓவியங்களை உள்ளே ஆர்.சீ.பிரதீப்குமார் வரைந்துள்ளார். உள்ளடக்கத்தின் தெளிவை இச்சின்னக் கோட்டோவியங்கள் வெளிப்படுத்துகின்றன. கவிதைகளைப் பெறுமதியாக்குகின்றன. சுமதி குகதாசன் இலங்கை முற்போக்கு அரசியல் முன்னோடி மு.கார்த்திகேசனின் மகள். மற்றவரின் திறமையால் புகழ் தேடக்கூடாது. தனது திறமைகளையே அதற்குக் கைகொடுக்க வைக்க வேண்டும். அப்போக்கை சுமதி குகதாசன் தனது தனித்துவமாகக் கொண்டிருப்பது தெரிகிறது. எனது வாழ்த்துக்கள்.

**கருத்துரை :**
**வீ.தனபாலசிங்கம் (பிரதம ஆசிரியர், தினக்குரல்)**

'தளிர்களின் சுமைகள்' நூலின் நூலாசிரியர் பொது நல அக்கறை கொண்டிருப்பதைக் காண முடிகின்றது. சமூகத்தின் சிறுமைகளைக் கண்டு கொதிக்கிறார். அவர் மார்க்சியச் சூழலில் வளர்ந்தவர். 'பாரதி நேசன்' சின்னதம்பி வழியில் நூலாசிரியர் எனக்கும் உறவினர். காத்திரமான பொருள் பொதிந்த கவிதைகள் தொகுப்பில் உண்டு. மிக எளிதாகச் சொல்லப்பட்டுள்ளது. இலங்கையில் இடதுசாரிய இயக்கம் இப்போ எள்ளி நகையாடப்படுகின்றது. மனிதாபிமான அடிப்படைக் கொள்கைகளை உடையது மார்க்சியம். சமுதாய முன்னேற்றத்துக்கான அடிப்படை முட்டுக்கட்டைகளை இன்றும் முதலாளித்துவம் ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது. அதற்கான தீர்வு இன்றும் இல்லை.

பொதுவுடைமைப் பின்னணி நூலாசிரியருக்கு உண்டு. அச்சிந்தனைகள் கவிதைகளில் தெரிகின்றன. நிதானமாகவும் துணிச்சலாகவும் சொற்கள் கையாளப்பட்டுள்ளன. மனிதாபிமானம் கவிதைகளில் முதல் இடத்தைப் பிடித்துள்ளது. முற்போக்குக் கலை இலக்கிய மன்றம் நூலாசிரியர் சுமதி குகதாசனுக்கு மேலும் ஊக்கம் கொடுக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஏற்புரை :**

**கவிஞை சுமதி குகதாசன் ('தளிர்களின் சுமைகள்' நூலாசிரியர்)**

எழுத்தில் இருக்கும் ஆளுமை எனக்குப் பேச்சிலில்லை. படிக்கும் காலத்திலே கிண்டல் கவிதைகளை எழுதியிருக்கிறேன். அது தவறானதென உணர்ந்தேன். முன்னுரையில் கவிஞர் ஏ.இக்பால் இவைகளைக் கவிதைகள் என எழுதியிருப்பதை பார்க்கும் போது எனக்கு மனக்கஷ்டமாக இருந்தது. மிகச் சுருக்கமாகவே எனது கவிதைகளை அமைக்கிறேன். எனது கருத்துக்களை மற்றவர்களுக்கும் எடுத்துரைக்க விரும்பியதால் தான் கவிதை எழுதத் தொடங்கினேன். எனது விருப்பத்தை ஈடேற்றினேன். நவீன உலகில் சுருக்கமாகச் சொல்வது தான் ஏற்றதாகுமென்ற நம்பிக்கை எனக்குண்டு. சந்ததி மாறச் சிந்தனைகளும் மாற்றமடையும்.

*இனிய சிற்றுண்டி, தேநீர் விருந்தோடு நிகழ்ச்சி நிறைவு பெற்றது.*

- 27.01.2012

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 36

## மல்லிகை 47வது ஆண்டு மலர்

தமிழ்ச் சிற்றிதழ் வரலாற்றில் அரை நூற்றாண்டை இன்னும் சில ஆண்டுகளில் தொட்டு, உலக சாதனை படைக்கவிருக்கும் மல்லிகை சஞ்சிகையின் 47வது ஆண்டு மலர் வெளியீட்டு விழா 23.01.2012 ஆம் திகதி பெருந்திரளான எழுத்தாளர்கள், இலக்கியவாதிகள் முன்னிருக்கச் சிறப்பாக நடைபெற்றது. மூத்த முற்போக்கு எழுத்தாளரும் இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்க முன்னாள் பொதுச்செயலாளருமான பிரேம்ஜி ஞானசுந்தரம் தலைமை தாங்கினார்.

**தலைமையுரை:**
**பிரேம்ஜி ஞானசுந்தரம்**

உலக வரலாறு பல அதிசயங்களைக் கண்டுள்ளது. அது போன்றதொரு அதிசயம் தான் இலங்கையில் மல்லிகைச் சிற்றிதழ் 47வது ஆண்டு மலரை வெளியிடுவதும். இது மல்லிகை ஆசிரியர் டொமினிக் ஜீவாவின் தனிமனித முயற்சி, உழைப்பின் சாதனையே. தனது கடும் உழைப்பையும் ஆவேசத்தையும் அடித்தளமாக வைத்தே அவர் இப்பெரிய சாதனையைப் பெற்றெடுத்திருந்தார். நாமெல்லாம் டொமினிக் ஜீவாவுக்குக் கடமைப் பட்டுள்ளோம். ஐம்பதாவது மல்லிகை மலரையும் அவர் சமர்ப்பிக்க வேண்டுமென்பதே எல்லோரதும் விருப்பு. நிச்சயமாக அவர் நிறைவேற்று வார். இச்சாதனை தத்துவார்த்த அரசியல் ரீதியில் என்னைச் சிந்திக்க வைத்தது. எப்போதும் கூட்டு முயற்சிக்கு நாம் முக்கியத்துவம் கொடுப்பவர்கள். அதை வற்புறுத்துபவர்கள்.

இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் வெளியிட்ட 'புதுமை இலக்கியம்' சஞ்சிகை இடைக்கிடைதான் வெளிவந்தது.இதில் எமது கூட்டு முயற்சி தோற்றது. மல்லிகை தனிமனித முயற்சி, தனித்துவமானது. கூட்டு முயற்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முக்கியமாக இருந்தாலும் தனிமனித முயற்சிகளையும் மறக்க முடியாது. புதுமைகளைத் தனிமனித-கூட்டுமுயற்சிகளின் சங்கமத்தால் தான் பெறமுடியும். ஈழத்து இலக்கிய எதிர்கால சந்ததி இந்த அனுபவத்தைக் கையேற்று நிச்சயமாகப் புதிய சாதனையை ஏற்படுத்தும். இந்த வெளியீடு அதற்கான தளத்தை ஏற்படுத்திக் கொடுக்கும்.

மூன்றாண்டுகளுக்கு முன் இலங்கை வந்தேன். போர் இறுதிக் கட்டத்தில் இருந்தது. கொடிய யுத்தம் முடிந்து இரண்டரை ஆண்டுகள் கடந்து விட்டன. யுத்தப் பாதிப்பால் ஏற்பட்ட மனித விழுமியங்களின் அழிவுகளை இங்கு காண முடிகிறது. அவைகளிலிருந்து சமூகத்தை நீக்க எழுத்தாளர்கள் எழுதவேண்டும். ஜனநாயகம் இம்மண்ணில் முழு மலர்ச்சி பெறவேண்டும். சிங்கள, தமிழ், முஸ்லிம் இனங்கள் ஒன்றிணைந்து வாழ்ந்தால் தான் பூரண ஜனநாயகம் உண்டாகும். மறக்கப்பட்ட இன சங்கம வரலாறு திரும்பவும் ஏற்படவேண்டும். தொடரும் சந்ததி நிச்சயமாக அதைச் செய்யும். அத்திருப்பம் கைகூடும்.

*மல்லிகை ஆசிரியர் டொமினிக் ஜீவா, மல்லிகை 47வது ஆண்டு மலரைப் புரவலர் காசிம் உமருக்கு வழங்கினார்.*

**கருத்துரைகள்**

**பேராசிரியர் சபா ஜெயராசா**

அரை நூற்றாண்டை எட்டும் மல்லிகைக்கு நண்பர்கள் ஆதரவாளர்களின் கூட்டு முயற்சி இருந்தது. இவைகளை ஒன்று சேர்த்தே ஜீவா மல்லிகைப் பணிகளை செய்தார். 'உயிர்மை' என்ற சஞ்சிகையின் நூறாவது இதழை வாசித்தேன். நூறு எழுத்தாளர்களைச் சந்தித்து அவர்களது அபிப்பிராயங்களை வெளியிட்டிருக்கிறது. அவர்களது அபிப்பிராயங்கள் தமிழிலக்கிய விமர்சனம் உலகளாவிய ரீதியில் குழப்பத்தில் இருப்பதைக் காட்டுகின்றது. டொமினிக் ஜீவா விமர்சனத்துக்கு அப்பாற்பட்டுப் பாராட்ட வேண்டியவர். ஒரு ஆழமான திறனாய்வு எம்மிடம் இருந்தது. அதை கட்டியெழுப்ப வேண்டும். 47வது ஆண்டு மலரிலிருந்தே ஆரம்பிக்கலாம். மல்லிகை மூலம் சிறந்த எழுத்தாளர்கள் தோற்றம் பெற்றுள்ளனர். மல்லிகைக்கு இதழியல் வரலாற்றில் ஒரு தனி இடம் உண்டு. இன்று வெளிவந்து கொண்டிருக்கும் பெரிய இதழ்களுக்கும் நவீன இலக்கியம் செல்வாக்கைக் கொடுக்கத் தொடங்கிவிட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**'ஞானம்' தி. ஞானசேகரன்**

ஒவ்வொரு விழாக்களிலும் புகழ்ந்து பேசுவது மரபாகி விட்டது. மல்லிகை ஜீவாவின் சாதனை பெரிது தான். எங்களிடம் மிகப்பெரிய பிரச்சினை உண்டு. 'படிகள்' சஞ்சிகை கவிஞர் அல் அஸுமத்தின் நேர்காணலை வெளியிட்டிருந்தது; இன்று இலக்கியத்துக்கு வழங்கப்படும் பரிசு பற்றிய குறைபாடுகளைச் சொல்லி இருந்தார். பரிசைப் பெற்றுக் கொடுப்பதற்கு இடைத்தரகர்கள் இருப்பதான தொனிப்பொருள் அவரது பேச்சில் இருந்தது. போட்டிப் பரிசுக்குரியவர்களை முன் கூட்டியே தீர்மானிப்பதாகவும் 'தீபம்' தொலைக்காட்சியில் ஒருவர் சொல்லி இருந்ததாகவும் அறிந்தேன். சின்னப்ப பாரதியும் இவ்விடயத்தில் கசமுசாக்கள் இருப்பதை ஒத்துக்கொண்டார்.

நாளாந்தம் இலக்கிய ஆளுமைகளை ஒரு குழுவினர் தமது நலனுக்காகப் பாவிப்பதாகச் செய்திகள் வெளிவருகின்றன. நண்பர்களுக்காக நலன் விரும்பிகளுக்காக இவைகள் திரைமறைவில் நடக்கின்றன. பரம இரகசியமாகப் போய்க்கொண்டிருக்கின்றது. இந்த இலக்கியத் தரகர்கள் மோசடிகள் குறித்து மல்லிகை ஆசிரியரும் எழுதினால் கனதி இருக்கும்.இதை இன்றைய இணையத் தளங்கள் பேசுகின்றன.

திறமையான நல்ல நூல்கள் பின் தள்ளப்படுகின்றன. இத்தகைய சீரழிவுகள் ஆரம்பமாகி வருவதாகப் பரிசு பெற்றவர்களே மனம் வருந்துகின்றனர். பரிசுகளை பெறுவோர் சந்தோஷப்பட வேண்டும். அந்த நிலை இல்லை. இச்சீர் கேடுகளை வழிகாட்டிகள் கவனித்துச் சீர்படுத்த வேண்டும். ஞானம் சஞ்சிகைக்கு டொமினிக் ஜீவா தான் வழிகாட்டி. முதல் இதழை வடி வமைக்க அவர் தான் எனக்கு உதவினார்.

**கவிஞர் எஸ்.ஐ. நாகூர் கனி**

பத்திரிகைகள் சஞ்சிகைகளை வெளியிடுவது கஷ்டமான காரியம். 47வது ஆண்டு மலரை டொமினிக் ஜீவா வெளியிடுவது பெருஞ் சாதனை தான். இது கூட்டு முயற்சியின் மொத்த உருவமே. அனைத்து இலக்கியவாதிகளுக்கும் பங்குண்டு. 50ஆம் ஆண்டு மலரை இரசித்துப் படிக்க காத்திருக்கிறோம்.

**பேராசிரியர் மா.கருணாநிதி**

தொழில்நுட்ப வளர்ச்சி எழுந்த பின் இலக்கியக் கருத்துக்களை வடிவமைப்பது இலகுவாகி விட்டது. எப்படி வாசகர்களையும் கவரும் வகையில் ஒரு சஞ்சிகையைக் கொண்டுவருவது என்பது சிக்கலானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசகர்கள் வித்தியாசமான முறைகளில் பார்க்கின்றனர். வாசகருக்கு ஆக்கங்களைத் தெரிந்துகொடுக்கும் பொறுப்பு பத்திரிகை, சஞ்சிகை ஆசிரியர்களுக்கு உண்டு. இலக்கிய நயம் சார்ந்த இலக்கு பெரும்பாலான இன்றைய ஆக்கங்களில் இல்லை. கதைகள் கட்டுரைகள் எமது பிரச்சினைகளை ஆராயவேண்டும். இன்றைய இலக்கியங்கள் சமூக மாற்றத்தை முன்வைப்பது குறைவாக உள்ளது. அதில் படைப்பாளிகள் கவனம் செலுத்தவேண்டும். தான் இல்லாத காலத்தில் தனது காலத்து இலக்கியப் போக்கை மல்லிகை இதழ்கள் காட்டுமென மல்லிகை ஆசிரியர் சொல்லியிருக்கிறார். மல்லிகையின் ஐம்பதாவது ஆண்டு மலர் எமது கைவசம் வரவேண்டும்.

**கே.எஸ்.சிவகுமாரன்**
**(திறனாய்வாளர்)**

அச்சுத் தொழில்நுட்ப வளர்ச்சியிலும் மல்லிகை கவனம் செலுத்த வேண்டும். மேமன் கவியின் உதவியால் கவர்ச்சியாக வெளிவந்து கொண்டிருக்கிறது. இணையத்தளத்திலும் மல்லிகையும் ஞானமும் இப்போ வெளிவருகின்றன.

**சிவா.சுப்பிரமணியம்**
**(அரசியல் திறனாய்வாளர், தினகரன் முன்னாள் பிரதம ஆசிரியர்)**

மல்லிகையைத் தொடங்க ஜீவா எத்தனையோ மாதங்களாக முயற்சித்தார். பல பெயர்கள் பரிசீலனைக்கு வந்தன. இறுதியில் மல்லிகை என்ற பெயர் தான் தெரிவாகியது. யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் அமைந்திருக்கும் ஜோசப் சலூனில் மாலை 4 அல்லது 5 மணிக்கு பிறகு 6 பேர் கூடி ஆலோசிப்போம். மல்லிகை இன் முதலாவது இதழில் எனது சிறுகதையும் உண்டு. அப்பவே, தான் வரலாறு படைப்பேன் என்று டொமினிக் ஜீவா உறுதி கொண்டிருந்தார். இதழ்களை வீடுகள் தோறும் கொண்டு சென்று விற்பார். ஓட்டைச் சைக்கிளொன்றில் அரச அலுவலகங்களுக்கு வருவார். உண்மையில் மல்லிகை ஜீவா வரலாறு படைத்துத் தான் இருக்கிறார். நான் இல்லாத காலத்திலும் மல்லிகை வெளிவரும் என்ற நிதர்சனத்தோடு வாழ்கிறார். பெரியதோர் எழுத்தாளர் கூட்டத்தையும் உருவாக்கியுள்ளார்.

**கலாபூஷணம் அந்தனி ஜீவா (கொழுந்து ஆசிரியர்)**

தமிழிலக்கிய பரிசுத் தெரிவில் மோசடி இருப்பதாக 'உயிர்மை' ஆசிரியர் மனுஸ்ய புத்திரனும் கூறியிருக்கிறார். இங்கும் பின் கதவுகளால் தான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது நடந்து கொண்டிருக்கிறது. இது பற்றி விசாரணையும் நடக்கிறது. ISBN இலக்கம் இல்லாத நூல்களுக்குப் பரிசு வழங்கக் கூடாதென்ற நடைமுறை தற்பொழுது தளர்த்தப்பட்டிருக்கிறது. ISBN இருக்கத்தான் வேண்டும். துணிவோடு எழுத வேண்டும். இந்த விடயத்தில் நழுவல் போக்குக் கூடாது. தாமரைக் கோபுரச் சுற்றுவட்டத்தில் ஆனந்த குமாரசுவாமி சிலை நீக்கப்பட்ட செய்தியை தினக்குரல் மட்டும் தான் வெளியிட்டது. சிங்கள ஆங்கில மொழிப் பத்திரிகைகளில் அதை எழுதுகிறார்கள். சிங்கள மொழியையும் கலாசாரத்தையும் காப்பாற்றிய பெரியவர் தான் ஆனந்த குமாரசுவாமி. இது குறித்து தமிழிலும் பரவலாகச் செய்திகள் எழுதப்படவேண்டும்.

வீரசேகர என்பவர் இதுபற்றி எழுதுகிறார். இந்தச் சூழலை ஆனந்த குமாரசுவாமி சதுக்கம் (ANANDA KUMARASWAMY SQUARE) எனப் பெயரிடும்படி உயரதிகாரிகளுக்கு வேண்டுகோள்களை வைக்கவேண்டும்.

இத்தகைய பண்பாட்டு கலாசார அழிப்புக்களைப் பேராசிரியர் க.கைலாசபதியும் பேராசிரியர் கா. சிவத்தம்பியும் வெளிச்சத்துக்கு கொண்டு வந்தனர். இப்போது அதைச் செய்யப் பேராசிரியர் சபா.ஜெயராசா இருக்கிறார். இவர்களது பின்னூட்டல் மல்லிகைக்கு இருந்தது. சி.சு.செல்லப்பாவும் வல்லிக்கண்ணனும் சுமந்து தான் தமது சஞ்சிகைகளை விற்றனர். இந்தியாவில் சஞ்சிகைகளைத் தேடி வாங்குவது போல் இலங்கையில் மல்லிகையை வாங்குவதில்லை.

**'தகவம்' மு.தயாபரன்**

இக்கூட்டத்தில் வித்தியாசமான சிந்தனையாளர்கள் கூடி இருப்பதைக் காணச் சந்தோஷமாக இருக்கின்றது. என்னை அடித்துப் பிடித்து ஞானசேகரனும் டொமினிக் ஜீவாவும் எழுத்தாளராக்கினர். மல்லிகை, இலக்கியத்துக்கு மிகவும் தேவையான சேவையைச் செய்துவருகின்றது. இலக்கியம் சம்பந்தமான தொடர்பே எனக்கும் ஜீவாவுக்கும் இடையில் உண்டு.

**எம்.எம்.மன்சூர்**
**(இலக்கியத் திறனாய்வாளர்)**

மல்லிகையால் நான் என் இலக்கிய ஆர்வத்தை வளர்த்து வருகிறேன். ஐம்பதாவது ஆண்டு மலர் மிகவும் சிறப்பாக வரவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏற்புரை
## 'மல்லிகை' டொமினிக் ஜீவா

இந்த வெளியீட்டுக்குப் பிரேம்ஜி ஞானசுந்தரம் தலைமை வகித்து நடாத்துவது எனக்குப் பெருமையாக இருக்கின்றது. நாங்களும் கோபப்படக்கூடாது. மற்றவர்களையும் கோபப்படுத்தக் கூடாது. 'முப்பெரும் நாடுகளில் முப்பது நாட்கள், பயணத்தை நான் மேற்கொண்டிருந்த வேளை இரவு நேரத்தில் எனக்குத் தொலைபேசி அழைப்பொன்று வந்தது. இத்தாலியிலிருந்து பேசுவது யாரெனத் தெரியுமா? என அழைப்பை எடுத்தவர் கேட்டார். நான் மௌனம் சாதித்தேன். நீங்கள் தந்த மல்லிகை இதழைத் தாறுமாறாகக் கிழித்து உங்களது முகத்தில் அடித்தவன் நான். நான் இப்போ இத்தாலியில் இருக்கிறேன், என அவன் சொன்னான்.

இச்சம்பவம் எனக்கு மின்னல் போல் மனதில் வந்தது. தமிழ் துரோகி களுக்கு இதுதான் பாடமெனப் பல ஆண்டுகளுக்கு முன் மல்லிகையைக் கிழித்து முகத்தில் அபிஷேகம் செய்தவன் இப்போ மன்னிப்பு கேட்கும் தொனியில் என்னோடு பேசினான். புளகாங்கிதமடைந்தேன். எதற்கும் கோபிக்காது சகிக்கும் போக்கே எனது வாழ்வைச் செப்பனிட்டது. எம்மை கொம்யூனிஸ்ட் கார்த்திகேசன் தான் வழி நடாத்தினார். கீழே இருந்து தான் இப்படி நிலைக்கு வந்தோம். அச்சுத்தாள் இல்லாத காலத்தில் மல்லிகையைக் கொப்பித் தாளில் அச்சிட்டு வெளியிட்டேன். யாரையும் அவமானப்படுத்த மாட்டேன்.

என்னால் எவருமே கோபப்படக் கூடாதென்ற கொள்கையோடு வாழ்கிறேன். எமது நடைமுறை வாழ்விலிருந்த வரலாற்றை மாற்றியவன் நான். எனது வாழ்க்கைச் சரிதத்தின் மூன்றாம் பகுதியை நிச்சயம் எழுதுவேன். நூலாக்குவேன். ஆனந்த விகடன் சஞ்சிகையைப் போல் மல்லிகையும் அழியாது நீண்டகாலம் இலக்கியத்துக்குச் சேவை செய்யும். இலக்கிய ஏடுகளைத் தொடங்கிய வல்லிக்கண்ணன், ஜெயகாந்தன் அதில் தோற்றனர். மல்லிகையின் 50 வது ஆண்டு மலரையும் வெளியிடுவேன். மல்லிகையில் இருந்து வந்த எழுத்தாளர்களெனச் சொல்லச் சிலர் வெட்கப்படுகின்றனர். அப்படிச் சொன்னால் பெண் குடுக்க மாட்டார்களாம். மல்லிகை மூலமாக அருமையான நண்பர்களைச் சந்தித்துள்ளேன். அனைவரையும் நேசிக்கிறேன். வாழும் வரை எனது இலக்கியத் திமிர் என்னோடு தான் இருந்து கொண்டிருக்கும். என் மகன் திலீபன் மல்லிகையைத் தொடர்ந்து நடாத்துவதாக எனக்கு வாக்குறுதி அளித்துள்ளான். காலங்காலமாக மல்லிகை வரத்தான் போகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிகழ்வுகளை நெறிப்படுத்தி அறிவிப்புக்களையும் கவிஞர் மேமன் கவி ஒலிபரப்பினார். அவர் கூறியதாவது, மல்லிகைக்கு மதிப்புக் கொடுத்துத் தேசிய தினசரியான 'தினகரன்' இந்நிகழ்வை முன்பக்க செய்தியாக வெளியிட்டது. ஏனைய பத்திரிகைகளும் செய்திகளை வெளியிட்டன. ஆனால் இந்நிலை தமிழகச் சூழலில் இல்லை. இணையத் தளங்களிலும் சிறு சஞ்சிகைகள் குறித்து விவாதிக்கப்படுகின்றன. பேசப்படுகின்றன. டொமினிக் ஜீவாவின் நீண்டகால உழைப்பே இந்நிலையை ஏற்படுத்தி இருக்கின்றது.

*கொழும்புத் தமிழ்ச் சங்க விநோதன் மண்டபத்தில் இந்நிகழ்வு நடைபெற்றது.*

-14.02.2012

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 37

## ‘குழந்தையும் தேசமும்’

**அ**ரசியல், சமூக சிந்தனைகளில் முற்போக்குக் கருத்தூன்றித் தமிழிலக்கியத்தின் பல்துறைகளிலும் ஆளுமையைப் பரத்திவரும் சி.சிவசேகரத்தின் ‘குழந்தையும் தேசமும்’ என்ற சிறுகதைத் தொகுதி நூல், சட்டத்தரணி சோ.தேவராஜா தலைமையில் 29.01.2012 ஆம் திகதி கொழும்பு, தேசிய கலை இலக்கியப் பேரவை, கைலாசபதி கேட்போர் கூடத்தில் வெளியிடப்பட்டது.

**வரவேற்புரை:**
**த. றஞ்சன்**

சமூக மாற்றக் கருவியாகக் கலைப்படைப்புக்கள் இருக்க வேண்டும். முரண்பாடுகளால் சூழப்பட்ட சமுதாயம் இது. வர்க்க, பால், தொழிலாளர் முரண்பாடுகள் உண்டு. சமூக அக்கறையுள்ள படைப்புகள் படைக்கப்பட வேண்டும். வெகு சிலரே இத்தகைய படைப்புகளைப் படைக்கின்றனர். காசால் சமூக மாற்றத்தைத் தீர்மானிக்க முடியாது. ‘குழந்தையும் தேசமும்’ சிறுகதைள் சமூக மாற்றத்தை ஏற்படுத்தக் கூடியவை.

**தலைமையுரை:**
**சட்டத்தரணி சோ.தேவராஜா**

‘குழந்தையும் தேசமும்’ நூல் வெளியீடு சம்பிரதாய பூர்வமான நிகழ்வல்ல. சமகால மக்கள் எதிர்கொள்ளும் சமூகக் குறைபாடுகள், இனப்பிரச்சினை நெருக்கடி என்பவற்றிற்கு விடை தேடும் முயற்சியே இதுவாகும். சிந்திக்கும் சமூகமாகத் தமிழ்ச் சமூகம் மாற வேண்டும். இல்லாது போனால் இந்நிலை இன்னமும் மோசமாகும். சமூக விமர்சகர்கள் சிக்கல்களை முன் வைக்கின்றனர். பல்துறை ஆற்றல் மிக்க ஒருவர் எம் பிரச்சினைகளுக்குச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்திக்கத் தூண்டும் பல கேள்விகளை இந்நூல் மூலமாக எழுப்பியுள்ளார். சி.சிவசேகரம் கவிஞர், இலக்கிய அரசியல் விமர்சகர், நாடகப்படைப்பாளி, யுத்த நெருக்கடி காலத்தில் சிறுகதைக்குள் நுழைகிறார். பல்தேசியக் கம்பனிகள், முதலாளியம் என்பவற்றினால் இப்போ ஆக்கிரமிக்கப்படுகிறோம்.

அன்ரன் செக்கோவ் என்ற எழுத்தாளர் சமூகத்தில் பல கேள்விகளை எழுப்பினார். மக்களைத் தூண்டும் விதமாக அவர் படைப்புகள் அமைந்தன. அப்படியான எழுத்துகள் தான் இங்கு எங்களுக்குத் தேவை. நச்சு இலக்கியச் சூழல் வியாபாரத்தை நச்சுவது, பொழுதை விழுங்குவது. அன்பு, இரக்கம், தியாகம், கற்பு, ஆன்மீகம் என்பனவான படைப்புகளைத் தொலைக்காட்சி ஒளிபரப்பி மனித நேசத்தை இல்லாமலாக்குகின்றது. பண்பாட்டு ஆக்கிரமிப்பு சமுதாயத்தை விழுங்கிவிட்டது. படைப்புகள் உணர்ச்சிகளைத் தூண்டி வாசகரை அமுக்குகின்றன. கடமை உணர்ச்சி தேவை. படைப்புகள் கேள்விகள் பலதை எழுப்ப வேண்டும். இன்றைய சமூகத்தில் சடங்கு, சம்பிரதாயங்கள் பெருகிக் கொண்டிருக்கின்றன. விழாக்களால் விழுங்கப்பட்டுள்ளோம். மனித நேயம் உண்டா? என்ற சமூக விமர்சனம் 'குழந்தையும் தேசமும்' தொகுதிக் கதைகளில் உண்டு. படைப்பாளி சி.சிவசேகரம் பல பிரதேசங்களை சிறுகதைகளில் பிரதிபலித்துள்ளார். விஞ்ஞானப் பார்வையைத் தருகின்றன. தர்மாவேசம், சமூக எழுச்சிக்கு வித்திடுகின்றது.

**நூலறிமுக உரை:**
**க. தணிகாசலம்**
**(பிரதம ஆசிரியர் 'தாயகம்')**

சி.சிவசேகரத்தின் 47 ஆவது நூல் 'குழந்தையும் தேசமும்,' அவரது முதலாவது சிறுகதை நூல். இதிலுள்ள சிறுகதைகளில் பெரும்பாலானவை 'தாயகம்' சஞ்சிகையில் வெளிவந்தவை. ஓயாமல் எழுதுபவர் சி.சிவசேகரம். நாடகம், சிறுகதை, கவிதை, கட்டுரை இப்படி எல்லா வகையான எழுத்துக்களிலும் ஈடுபாடு கொண்டிருப்பவர். ஓர் இளைஞனது வேகத்தோடு எழுதுகிறார். சமூகத்தில் புரையோடிப் போயிருக்கும் துயர் தோய்ந்த வாழ்நிலையை மாற்ற வேண்டுமென்ற வலிமையோடு எழுதுகிறார். சமூக அக்கறை அவரது எழுத்துகளில் நிறையவே உண்டு. அரசியல், கலை, இலக்கியங்களில் பிழையான அரசியல் பண்பாடு இருக்கின்றது. மறுபக்கங்களை நோக்காது பெரும்பான்மையோர் நடந்து கொள்கின்றனர். இதில் சிறிய வெளிச்சத்தை ஏற்படுத்தவே சிவசேகரம் எழுதுகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நூலின் அட்டைப் படம் காஸா நிலப்பகுதியில் எடுக்கப்பட்டது. ஈரான் நெருக்கடி மோசமான நிலைக்கு மாறினால் என்ன நடக்கும்? என்பதை எழுப்பிச் சமூகப் பெறுமானத்துக்குக் கொண்டு செல்கிறது. தொகுப்பில் 22 சிறுகதைகள் உள்ளன. சாதி, இன ஒடுக்கு முறைகள், பாதிப்புகள் கதைகளில் உண்டு. தீர்வுகளும் உண்டு. இன முரண்பாட்டுச் சிக்கல்கள் பெரும்பாலான கதைகளில் வருகின்றன. இவைகள் போர்ச் சூழலில் தான் ஏற்பட்டவை. இவைகளின் மூலமாகப் படைப்பாளியின் அஞ்சாமையை அவதானிக்க முடிகிறது. சகலதையும் ஆராய்ந்து சிவசேகரம் படைப்புகளில் நிதானமாக வெளிப்படுத்தியிருக்கிறார்.

சிக்கலான காலத்தில் யாழ்ப்பாணம் வந்து திரும்பினார். புலிக்குச் சாதகமானவரென்றனர்! ஒடுக்கு முறைக்குச் சார்பாக எழுத்து இருந்ததில்லை. இத்தகைய தன்மை இளம் எழுத்தாளருக்கும் வரவேண்டும். படைப்புகளில் வெறும் எழுத்தைக் கொட்டுவதாக இருக்கக்கூடாது. அதற்குச் சமூகப் பெறுமானம் இருக்க வேண்டும். பார்வையாளனை அது பாதிக்க வேண்டும். வாசகனை நல்ல நிலைக்கு இட்டுச் செல்ல வேண்டும். அதுவே பயனானதாக அமையும். அல்லாவிடில் மானுட அழிவுக்குத் தான் துணைபோகும். விழிப்பு நிலையைச் சிவசேகரத்திடம் கற்க முடியும். எழுத்தாளனுக்கு மொடல் கிடையாது. ஒரு எழுத்தாளனின் படைப்பிலிருந்து மேலும் எழுத்தாளர்கள் அப்படைப்பின் உள்கிடக்கையை முன்னுக்குக் கொண்டு போகக் கூடிய தூண்டலை ஏற்படுத்தத்தக்க படைப்பை ஆக்கலாம்.

எனது கதையொன்றிற்கும் சி.சிவசேகரம் மாற்றுச் சிறுகதையொன்றினை எழுதியிருக்கிறார். சடங்காசாரங்கள் இன்னமும் அற்றுப் போகவில்லை. பகுத்தறிவுச் சிந்தனையாளர் கூட மரணித்த பின் சடங்காசாரங்கள் செய்யப்படுவதைக் காண முடிகிறது, நீறு பூசி! சமாயாசாரங்களோடு இறுதிச் சடங்குகள் செய்யப்படுகின்றன. இன்று இவைகள் அவசியமற்றவை. தெணியான் நிலப்பாவாடையை எழுதப் போய் வித்தியாசமான கருத்துகள் எழுந்தன. இந்து மதம் சடங்காசாரத்தோடு தான் இன்னமும் நிற்கிறது. சிந்திப்பதற்கு நிறைய விடயங்களுண்டு. வெளிநாட்டுப் பணம் சடங்காசாரத்தை மேலும் வளர்த்தெடுக்கின்றது. எமக்கு நம்பிக்கை இருக்க வேண்டும். சுய முயற்சியால் நாம் முன்னேற வேண்டும். ஏகாதிபத்திய நுகர்வுக் கலாசாரம் நம்மை ஆட்கொண்டுள்ளது. மோசமான அழிவு நிலையில் தான் வாழ்கிறோம். ஆன்மீக நம்பிக்கை உள்ள சிலர் கூடச் சடங்காசாரங்களை தவிர்த்து வருகின்றனர். இத்தொகுப்பில் 'மதமாற்றம்' சிறுகதையில் ஆழமான கருத்துண்டு. வாசிப்பதற்கும் மனப்பக்குவம் தேவை. 'தம்பரின் இரும்பு பெட்டி' சந்திரிகா குமாரதுங்கவின் இனப்பிரச்சினைக்கான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீர்வுப் பொதியுடன் ஒப்பிடப்படுகிறது. சிறுகதையில் அரசியலைத் தொற்ற வைப்பதுக்கு இந்த இரும்புப் பெட்டிக் கதை சிறந்த எடுத்துக்காட்டு. நிதர்சனமான அரசியலைச் சிறுகதையில் சொன்னால் பிரசாரமெனக் குறை காண்கின்றனர்.

*'குழந்தையும் தேசமும்' சிறுகதை தொகுப்பின் சிறப்புரை வித்தியசமான முறையில் அமைந்திருந்தது. பிரபல எழுத்தாளர் தாமரைச் செல்வி, தொகுப்பின் 'டோன்ற் மென்ஷன்' என்ற சிறுகதையின் தொனிப்பொருளைத் தான் எப்படி அணுகுவார், கையாள்வாரென்பதை ஒரு சிறுகதையாக்கி அதை நிகழ்வில் வாசித்தார். அவரது இச் சிறுகதை அடுத்து வெளியாகவிருக்கும் 'தாயகம்' சஞ்சிகையில் வெளியாகுமென அறிவிக்கப்பட்டது.*

*இதேபோல் நூல் வெளியீடும் வித்தியாசமாகவே இருந்தது. பெயர் கூப்பிட்டுப் பிரதிகள் வழங்கவில்லை. ஓய்வுபெற்ற கட்டட ஒப்பந்தக்காரர் இலகுப் பிள்ளை எழுந்து வந்து எந்தவித விளம்பரமுமில்லாது தூய்மையாகப் பணி செய்து வரும் சி.சிவசேகரத்துக்கு எனது பாராட்டுக்கள் என வாழ்த்துரைத்துத் தாமரைச் செல்வியிடமிருந்து முதல் பிரதியைப் பெற்றார். தொடர்ந்து கலை இலக்கியவாதிகளும் ஆர்வலர்களும் பிரதிகளைப் பெற்றனர்.*

**ஏற்புரை :**

**நூலாசிரியர் சி.சிவசேகரம்**

தாமரைச் செல்வியும் க.சட்டநாதனும் யதார்த்தமாகவும் மனித நேயத்தோடும் சிறுகதை படைப்பவர்கள். தாமரைச் செல்வி தைரியமான எழுத்தாளர். விட்டுக் கொடுப்பற்றவர். மிகக் கஷ்டமான சூழலில் வாழ்ந்து கொண்டு எழுதினார். மிக நுட்பமாகத் தன் சிறுகதைகளைச் சொல்வார். சித்து விளையாட்டுக்கள் காட்டாதவர். அவரது இரு சிறுகதைகள் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டு வெளியாகியுள்ளன. இன்றும் புதுமைப் பித்தனே உச்சமான சிறுகதைப் படைப்பாளி! அவரை மீறிய சிறுகதை ஆசிரியரொருவர் இன்னமும் தமிழில் தோன்றவில்லை. அவரது சிறுகதைகளில் யதார்த்த, எள்ளல் பண்புகள் உண்டு. எனது சிறுகதைகளுக்கும் இன்னொரு சிறுகதை விமர்சனமாக எழுதப்படலாம். எவராவது ஒருவரைப் பாத்திரப்படுத்தி என் கதைகளில் நிறுத்தவில்லை. நான் சம்பந்தப்பட்ட சம்பவங்களையே சிறுகதையாக்கி இருக்கிறேன். நானே பாத்திரமாகவுமுள்ளேன். தொகுப்பின் சிறுகதையொன்றில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடம்பெற்றுள்ள பொலிஸ் ஸ்ரேசன் அனுபவம் எனக்கு நடந்ததே. அட்டைப்படம் பிரசாரப் படம். போர்ச் சூழலைக் காட்டுகிறது.

இது பலஸ்தீனச் சுவரொன்றிலுள்ளது. ஒருவருக்குப் பிடித்த விடயம் இன்னொருவருக்குபிடிக்காதிருக்கலாம். எனது கருத்துக்களை வலிந்து சொல்வதற்கு நான் எண்ணவில்லை. நீர்வை பொன்னையன், கே.டானியல், பெனடிக்ற் பாலன் போன்ற எழுத்தாளர்கள் வாழ்வின் போராட்டங்களை நல்ல முறையில் தொட்டிருக்கின்றனர். சிறுகதைக்கு வரைவிலக்கணம் இல்லை. தைரியமாகச் சொல்லும் இலக்கியச் சூழல் எம்மத்தியில் இருந்திருக்கிறது. சோ.தேவராஜாவின் வற்புறுத்தல் தான் என்னைச் சிறுகதை எழுத வைத்தது. பல சிறுகதைகளைத் 'தாயகம்' சஞ்சிகையில் எழுதியுள்ளேன்.

*எஸ்.தனுஜன் நன்றியுரை கூறினார்.*

-16.02.2012

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 38

## பொதுவுடைமைப் புரட்சிகர முன்னோடி நா.சண்முகதாசன் நினைவுப் பரவல்

**மா**ர்க்சியக் கற்கைகளுக்கான சண்முகதாசன் நிலைய ஏற்பாட்டில் ஈழத்துப் பிரபல மார்க்சிய முன்னோடியும், தொழிற்சங்கவாதியுமான தோழர் நா.சண்முகதாசனின் 19வது நினைவு தின நிகழ்வு 12.02.2012 ஆம் திகதி தேசிய கலை இலக்கியப் பேரவையின் வெள்ளவத்தை தலைமைப் பணியகக் கைலாசபதி கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. நாடறிந்த மார்க்சியவாதியும், கலை இலக்கியவாதியுமான சி.சிவசேகரம் தலைமை தாங்கினார்.

**தலைமையுரை: சி.சிவசேகரம்**

இலங்கை அரசியலில் முக்கிய திருப்பத்தை ஏற்படுத்திய முன்னோடி நா.சண்முகதாசன். விமர்சனத்துக்கு அகப்படாத எதுவுமே இல்லை. எவருமேயில்லை. கேள்வி எழுப்பாமலே பிறர் கருத்துகளைச் சண்முகதாசன் மதிப்பவர். அவரது பங்களிப்பு இல்லாதிருந்தால் இலங்கை கொம்யூனிஸ்ட் கட்சி உருப்படியாக வந்திருக்காது. சோவியத்தை நிராகரித்த போது விவாதங்கள் எழுந்தன. தவறான பார்வைகள் உண்டாகின. 1964 க்குப் பிறகு பல மட்டங்களில் விவாதங்கள் ஏற்பட்டன. கொம்யூனிஸ்ட் கட்சி இரண்டாக உடைந்தது. ரஷ்யப் பிரிவு, சீனப் பிரிவு என்பன தோன்றின. சண்முகதாசன் தமிழராகப் பிறந்தது தவறு. இதனால் திரிபுவாதம் ஏற்பட்டது. இடதுசாரிகள் எல்லோருடனும் சேருவர் என்ற படிமம் யாழ்ப்பாணத்தில் ஏற்பட்டது. மார்க்சியத்தின் சரியான அடிப்படைச் சிந்தனை முறைமையை வெளிக் கொணர்வதற்கு சண்முகதாசனின் மிகப்பெரிய பங்களிப்பு இருந்தது. 1963 தொடக்கம் 1965 வரை அவர் முன்னெடுத்த போராட்டங்கள் முக்கியமானவை. றொட்ஸ்கியத்துக்கு எதிரான போராட்டங்களை முன்னெடுத்தார். ஆய்வு நோக்கோடு நிறைய நூல்களை வாசித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரது தவறுகளை உரிய முறையில் விளங்கித் தெரிந்து கொள்ள வேண்டும். உலகம் மாறிவிட்டது. எனவே மார்க்சியம் தேவை இல்லை என்பதுக்கு எதிராக ஆதாரமான கருத்துகள் முன்வைக்கப்பட்டு விவாதிக்கப்பட வேண்டும். அதன் பின்னரே சரியான முடிவுக்கு வர வேண்டும்.

**சட்டத்தரணி இ.தம்மையா:**
**'இலங்கை மக்களின் விடுதலைக்கு மார்க்சியத்தின் ஏற்புடைமை'**

தோழர் நா.சண்முகதாசன் தத்துவார்த்த ரீதியில் தான் போராடினார். இடதுசாரிகள் றொட்ஸ்க்கிய அடிப்படைவாதிகளாக இருந்த வேளை புதிய கருத்தியலை முன்வைத்தவர் தோழர் சண்முகதாசன். அதற்காகப் போராடிக் காலத்துக்கேற்ற பங்களிப்பைச் செய்தார். கடந்த முப்பதாண்டுகளாக இலங்கையில் ஏற்பட்ட மோசமான யுத்தத்தால் மார்க்சியம் இங்கு செயலற்றுப் போனதெனக் கூறப்பட்டது. சோவியத் ஒன்றியம் சிதறுண்ட போது மார்க்சியம் தோற்றுவிட்டதாகப் பிரசாரம் செய்யப்பட்டது. மனிதாபிமானம் என்ற தத்துவமே மார்க்சியம்.

மார்க்சியம் கடவுள் எதிர்ப்புக் கோட்பாட்டின் படிமமெனவும் கூறப்பட்டது. உண்மையில் இதுவொரு பிழையான மதிப்பீடாகும்! மதம் அபின் என சொன்னதைத் திரிபுபடுத்தினர். மயக்க மருந்து புழக்கத்துக்கு வராத அந்தக் காலத்தில் அதற்குப் பதிலாகவே அபின் பாவிக்கப்பட்டது. எனவே தான் அப்படிச் சொல்லப்பட்டது. மார்க்சியம் ஒரு விஞ்ஞானக் கோட்பாடாகும். மதத்தை எதிர்ப்பது மார்க்சியத்தின் நோக்கமல்ல. சர்வாதிகாரத்தை ஏற்பது மார்க்சியம் என்ற கருத்து நிலையும் உண்டு. முதலாளித்துவத்தைச் சர்வாதிகாரத்தாலாவது தோற்கடித்துப் பாட்டாளி வர்க்க நிலையை மேம்படுத்துவதே மார்க்சியத்தின் எதிர்பார்ப்பாகும். அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி ஆபிரகாம் லிங்கன் மக்களால் மக்களுக்காக ஆளப்படுவது ஜனநாயகம் என வரைவிலக்கணம் சொன்னார். அந்த ஜனநாயகம் இன்று உண்டா? வாக்களிக்கிறோம். ஆனால் உரிமைகளைப் பேச முடிகிறதா? சுதந்திரம் என்ற போர்வையில் முதலாளித்துவ சர்வாதிகாரந்தான் அரங்கேறிக் கொண்டிருக்கிறது. மாவோ சோசலிசம், நூற்றாண்டுகள் நீடிக்குமென எதிர்வு கூறினார். மார்க்சியத்தின் படி புத்திஜீவிகளின் மதிப்பீடுகள் ஏற்க வேண்டிய சூழ்நிலையில் ஏற்கப்பட வேண்டும். அத்தோடு தனிமனித முக்கியத்துவமும் மதிக்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாளித்துவத்தை உடைப்பதே மார்க்சிய இலக்காகும். அது பயங்கரவாதமாகாது. வரையறுக்கப்பட்ட ஆயுதப் பிரயோகம் மக்கள் கிளர்ச்சி, எழுச்சி என்பவைகளை இவ்விடத்தில் கைக்கொள்கிறது. இதற்கான படையொன்றின் தேவையையும் நாடி நிற்கிறது. பெண் விடுதலை, சாதியம் என்பவற்றை மார்க்சியம் கண்டு கொள்வதில்லை எனவும் குறை காணப்படுகிறது. பெண் சுதந்திரம் பற்றி ஏங்கெல்ஸ் சொன்னளவிற்கு மேலாக வேறெதுவும் இல்லை. பெண்கள் உரிமைக்காகப் போராடக் கூடாதென மார்க்சியம் சொல்லவில்லை. சாதியப் போராட்டமும் மார்க்சியர்களால் நடாத்தப்பட்டன. தோழர் நா.சண்முகதாசன் தலைமையில் இலங்கையில் கொம்யூனிஸ்ட் கட்சி (சீன சார்பு) சாதியத்துக்கு எதிரான போராட்டத்தை முன்னெடுத்தது. காதல் போன்ற விடயங்களை மார்க்சியம் கவனிக்கவில்லை என்பதும் தவறாகும். சமூக ஏற்றத் தாழ்வுகளை மாற்றி அமைப்பதற்கான தத்துவமே மார்க்சியம். உலக பூர்வீகச் சமுதாயத்தில் ஏற்றத் தாழ்வுகள் இருந்ததில்லை என மார்க்சியம் சுட்டுகிறது. இந்நிலை பின்னர் மாற்றமடைந்தது. வக்கப் புரட்சியை நடத்துகிறது. சோசலிசம் நடந்து கொண்டிருக்கும் சுவிற்சர்லாபந்தில் கிறிஸ்தவ ஜனநாயகத்தில் மக்கள் விரோத நடவடிக்கைகள் காணப்படுகின்றன. பின் நவீனத்துவம் மார்க்சியக் கருத்தியலை எதிர்நிலையில் வைத்துத் தான் பார்க்கின்றது. முகர்ஜி என்பவர் இது பற்றிக் கருத்துரைக்கையில் பின் நவீனத்துவத்தில் சொற்களுக்கான போராட்டம் தான் உண்டு. ஏகாதிபத்தியத்திற்குப் பின்னாலான முதலாளித்துவத்தின் பின்னூட்டல் இதற்குண்டு என்கிறார். வார்த்தை ஜாலம் மார்க்சியத்துக்கு எதிரானதாகும். இலங்கை அரசு எத்தகையதென்பதைப் பார்க்க வேண்டும். வெளிப்படையான பயங்கரவாதத் திணிப்பு இங்குண்டு. காணாமல் போதல், கைது செய்தல் நடக்கின்றன. பிற்போக்கான அரசியல் வழிமுறையே இங்கு நடக்கின்றது. வெளியிலிருந்து வரும் ஏகாதிபத்தியங்களின் மூலதனம் இங்கு ஆதிக்கம் செலுத்துகின்றது. சொல்லப் போனால் பாசிச சர்வாதிகார ஆட்சி முறையே இங்கு நடக்கின்றது. இப்போது மக்கள் மீது திணிக்கப்பட்டிருக்கும் எரிபொருள் விலை அதிகரிப்புப் பிழையான கணிப்பால் ஏற்பட்டதாகும். நவகாலனியாக இந்நாடு மாறிவிட்டதற்கான எடுத்துக் காட்டே இந்த விலையேற்றம். ஒரே இனத்தின் ஏகாதிபத்தியம் இலங்கையில் இப்போதிருக்கின்றது. வடபுலத்துக்குச் சென்று வருவோருக்கு ஊக்குவிப்பு பணம் கொடுக்கப்படுகிறது. புத்திஜீவிகளுக்குச் சுதந்திரமாக குரல் கொடுக்க முடியாதிருக்கிறது. மக்களுக்கு விடுதலை தேவை. சுதந்திர இலங்கை எமக்கு வேண்டும். தேசிய ஐக்கியம் இந்நாட்டில் உடனடியாகக் கட்டப்பட வேண்டும். தேசிய இனப்பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும். சுய நிர்ணய உரிமை, தொழிலாளர் விவசாயிகள் உரிமைகள் வென்றெடுக்கப்பட வேண்டும். வாய் பேச முடியாத நிலையில் இன்றிருக்கின்றோம். எமது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளங்கள் கொள்ளை அடிக்கப்படுகின்றன. 1948 இலிருந்து இன்று வரை புதுப்புது வடிவத்தில் ஒரே விடயத்தையே பேசிக் கொண்டிருக்கிறோம். இதில் தேசிய இனப்பிரச்சினைக்கு இடமிருக்காது. பாசிசத்துக்கு எதிரான போராட்டம் இங்கில்லை. யு.என்.பியும் ஒரு பாசிசக் கட்சியே. மகிந்த சிந்தனையால் எமக்குத் தேவையான சுதந்திரத்தைப் பெற முடியாது. புரட்சிகரக் கொம்யூனிஸ்ட் கட்சி மக்கள் நலன் சார்ந்தது. அதன் சாதிய எதிர்ப்புப் போராட்டம் புரட்சிகரமானதாக இருந்தது. வீழ்ந்து விட்டது. அதைக் கட்டியெழுப்ப வேண்டும். புதிய ஜனநாயகக் கட்சி சுய நிர்ணய உரிமையை வலியுறுத்துகிறது. 'டாஸ்கப்பிட்டல்' போன்ற நூல்கள் வரவேண்டும். கொம்யூனிஸ்ட் அறிக்கையும் தேவை. மார்க்சியம் எமக்கு என்றும் தேவையானது.

**கவிஞர் மு.மயூரன்:**
**'நமது பண்பாட்டுச் சூழலில் மார்க்சியம் எதிர்கொள்ளும் சவால்கள்'**

இரண்டு ஆண்டுகளுக்கு முன் நண்பரொருவரை வெளிநாட்டுக்கு அனுப்புவதற்காகக் கட்டுநாயக்க விமான நிலையத்திற்குச் சென்றோம். திரும்பி வரும் வழியில் வான் பழுதாகிவிட்டது. வானுக்குள் இருந்தவர்களிடமிருந்து பல பேச்சுக்கள் எழுந்தன. கோயிலுக்கு நேர்த்தி வைக்கவில்லை. நாள் சரியில்லை. சிங்கள சாரதி! முழிவியளத்தில் விதவை. இத்தகைய பேச்சுகள் வந்தனவே தவிர பழுதடைந்த வாகனத்தைத் திருத்தி மீண்டும் பயணத்தை எப்படி ஆரம்பிப்பதென எவருமே பேசவில்லை. பழுதடைந்த டயரை மாற்ற யாரும் டயர்க் கடைக்குச் செல்ல யோசிக்கவில்லை. இது போன்று தான் இன்றைய எமது நாட்டரசியல் பண்புமாகும். எமது தமிழ்ப் பண்பாட்டில் நல்ல விடயங்கள் இருக்கின்றன. மோசமானவைகளும் உண்டு. இங்கு இந்தச் சாதியை இப்படித்தான் வைத்திருக்க வேண்டுமென்ற பண்பாடுமுண்டு.

இது மிகவும் சிக்கலானது. மற்றொரு பண்பாடு நுகர்வுப் பண்பாடு.

வாழ்ந்து வளர்ந்து கொண்டு வரும் கோட்பாடு மார்க்சியம். அதற்குத் தவறான விளக்கங்கள் தரப்படுகின்றன. தமிழ்ச் சூழலில் மார்க்சியத்தைச் சொன்னால் அடிவிழும். சுயநலத்தின் பின் எத்தனையோ பேரழிவுகள், எல்லா மக்களும் எல்லாம் பெறுவதில் சிக்கல் உண்டு. இதை மாற்ற வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கலந்துரையாடல் :**
**வீ.தனபாலசிங்கம்**
**(பிரதம ஆசிரியர், தினக்குரல்)**

எனது இளமைக் காலத்தில் தோழர் நா.சண்முகதாசனோடு நெருக்கமாக இருந்தேன். அதையொரு வரப்பிரசாதமாகக் கருதுகிறேன். கட்டுரை எழுதும்படி கேட்டுக் கொண்டேன். அவர் சொல்லச் சொல்ல நான் எழுதினேன். மார்க்சியத்தை மக்கள் மத்தியில் கொண்டு செல்வதில் அவர் வெற்றி கண்டார். தனிநாடு பற்றிய விவாதத்தில் தர்மலிங்கத்தோடு கலந்து கொண்டார். ஒறேற்றர் சுப்பிரமணியம் நடுவராக இருந்தார். தமிழீழக் கோரிக்கை பிழையானது. ராமர் பால் சோறு உண்ண மறுத்து நிலாவைப் பிடித்துத் தரும்படி அடம்பிடித்த போது வசிட்டர் கண்ணாடியொன்றைக் கொண்டு வந்து அதில் வானத்திலுள்ள சந்திரனின் விம்பத்தை விழுத்தி இந்தா பிடி சந்திரனெனக் கொடுத்தாராம். இதே நிலை தான் இன்றும் தொடருகின்றது. எம்மிடம் சரியான அரசியல் தந்திரோபாயங்கள் இல்லை. எத்தனையோ கண்ணாடிகள் காட்டப்பட்டு விட்டன. நிலைமையில் மாற்றம் இல்லை. சரியான நேர் சக்திகளை நாம் அடையாளம் கண்டு கொள்ளவில்லை. இடதுசாரி இயக்கம் பிழையான வழியில் நடாத்தப்படுவதையிட்டு வெட்கப்படுகிறேன். குண்டு போட்ட போது இடதுசாரி இயக்கம் எதுவும் செய்யவில்லை.

**க.த.இராஜரத்தினம் (இளைப்பாறிய பாடசாலை பிரதி அதிபர்)**

புரட்சிகர சமூகக் கோட்பாட்டாளர் கார்ல் மாக்ஸ் மனித நல வாதத்தை படம் பிடித்துக் காட்டினார். இயற்பியல் வாதம், பொருள் முதல் வாதம் என்பவற்றை அறிந்திருக்க வேண்டும். மார்க்சியம் விஞ்ஞானம் அல்ல எனக் கால்ஹோப்பர் என்பவர் கருத்து வெளியிட்டுள்ளார். விஞ்ஞானம் நிலைக்காது.

**சட்டத்தரணி சோ.தேவராஜா**

தோழர் சண்முகதாசன் மூன்று மொழிகளிலும் பேசக் கூடியவர். கருத்து மோதல்கள் சிநேகபூர்வமாக இருக்க வேண்டுமென எதிர்பார்த்தார். இது தமிழ்ச் சமூகத்தில் ஏற்பட வேண்டும். வாழ்க்கை மகிழ்ச்சிக்குரியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**எஸ்.கதிர்காமர்**

ஒரு கத்தோலிக்கப் பிதாவிடமிருந்து தான் நான் மார்க்சியத்தைக் கற்றேன். இளைஞர்கள் பொது அறிவுக்காவது மார்க்சியத்தை அறிந்து வைத்திருக்க வேண்டும்.

**நிறைவுரை:**
**சி.சிவசேகரம்**

மார்க்சியம் ஒரு நூற்றாண்டுக்கு முன்னர் ஏற்பட்ட விடயம். மாற்றங்கள் வந்து விட்டன. உழைப்பின் பகிர்வு மாறிவிட்டது. தொழிலாளர்கள் நாட்டுக்கு நாடு பெயர்ந்த வண்ணமிருக்கின்றனர். சீனத்தில் மாவோவுக்குப் பின் மாற்றங்கள் ஏற்பட்டன. மார்க்சிய சிந்தனையை நவீன சூழலில் வைத்து விளங்கிக் கொள்ள வேண்டும். சண்முகதாசன் கொம்யூனிஸ்ட் கட்சியின் பீஜிங் பிரிவில் இருந்தவர். இன்று சோவியத் சார்பு (மொஸ்கோ சார்பு) கொம்யூனிஸம் இல்லை. ரஸ்யாவும் சீனாவும் இலங்கையில் நடந்த யுத்தத்துக்கு ஆதரவு கொடுத்தன. தமிழ்நாட்டில் முல்லைப் பெரியாறு பிரச்சினைக்கான தீர்வு குறித்து இந்தியா மார்க்சியக் கட்சி தான் உருப்படியான கருத்தை முன்வைத்தது.

தேர்தல் வாக்குள்ள பக்கம் நின்று பேசும் நிலைதான் இன்று நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

- 20.02.2012

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 39

## பாரதியின் ஆன்மீக நாத்திகம் உரையும் கலைமுகம் - 52 பற்றிய வாசகர் நோக்கும்

திருமறைக் கலாமன்றக் கொழும்பு கிளை மாதாந்தம் நடாத்தும் நோன்மதி தின இலக்கியப் பாசறை நிகழ்வுகள், 07.02.2012 ஆம் திகதி கொழும்பு 13, புனித லூஸியாஸ் வீதி கவின் கலைகள் பயிலகக் கேட்போர் கூடத்தில் நடைபெற்றன. தமிழ்க்கலை, இலக்கியச் செயற்பாடுகளைக் கனடாவில் வளப்படுத்தி வரும் ஆர்.எல்.சேவியர் தலைமை தாங்கினார். சிறப்பு அதிதியாகக் கலாநிதி ந.இரவீந்திரன் கலந்து கொண்டார்.

திருமதி ஜெனோவா அற்புதன் தமிழ்த் தாய் வாழ்த்துப் பாடி நிகழ்வைத் தொடக்கி வைத்தார். திருமறைக் கலாமன்றக் கொழும்புக் கிளை இணைப்பாளர் அம்புறோஸ் பீற்றர் வரவேற்புரை நிகழ்த்தினார்.

**தலைமையுரை:**
**ஆர்.எல்.சேவியர்**

திருமறைக் கலாமன்றத்தின் ஆரம்ப கால உறுப்பினன் நான். இம்மன்றத்தின் இயக்குநர் அருட்திரு மரிய சேவியர் அடிகளாரைப் பள்ளிப் பருவத்திலிருந்து தெரியும். 1997 ஆம் ஆண்டில் கனடாவுக்கு இடம்பெயர்ந்தேன். ஒளிவிழா நிகழ்ச்சிக்கு வந்த இயக்குநர் செயலாளராகப் பணியாற்றும்படி கேட்டுக் கொண்டார். 1997 இலிருந்து 2002 வரை செயலாளராகப் பணியாற்றினேன். இளைஞருக்குச் சந்தர்ப்பம் கொடுக்க வேண்டும் என்பதற்காகச் செயலாளர் பதவியிலிருந்து ஓய்வு பெற்றேன். இயக்குநர் சபை உறுப்பினராக இருக்கிறேன்.

கனடாவில் திருமறைக்கலா மன்றம் மிகச் சுறுசுறுப்பாக இயங்குகின்றது. இன, மத பேதம் களைந்து தைப்பொங்கல் பண்டிகையைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டாடுகின்றோம். யேசு பிரானின் திருப்பாடுகள் காட்சிகளை நிகழ்த்திக் காட்டி வருகின்றோம். ஒளி விழா நடாத்துகின்றோம். நான் ரசிகன் மட்டும் தான். அடிக்கடி நிகழ்ச்சிகளுக்குச் சென்று பார்த்துக் குறிப்புகளை எழுதுவேன். என்னை நத்தார் தாத்தாவாக நடிக்கக் கேட்பார்கள். அவர்களது விருப்பத்தை நிறைவேற்றுவதுண்டு. கனடாவிலுள்ள பரத நாட்டியக் கலைஞர்கள் எங்களோடு நன்கு ஒத்துழைக்கின்றனர். இயக்குநர் அடிக்கடி கனடா வந்து எம்மை ஊக்கப்படுத்துவார். இன்னமும் நாங்கள் மல்லிகையின் பணியையும் டொமினிக் ஜீவாவின் இலக்கியப் பணிகளையும் மறக்கவில்லை. அவரது சாதனைகள் குறித்துப் பேசுவோம். ஒரு தமிழ்ப் பெண்ணைக் கனடாப் பாராளுமன்ற உறுப்பினராக்கியது பற்றிப் பெருமைப்படுகிறோம். ராதிகா சிற்சபேசன் கனடா பாராளுமன்ற உறுப்பினராக வரச் சில எதிர்ப்புகள் இருந்தும் நாம் ஒத்துழைத்தோம். இன்று கனடாப் பராளுமன்றத்தில் அவர் உறுப்பினராக வந்து விட்டார்.

## சிறப்பு அதிதி உரை : 'பாரதியின் ஆன்மீக நாத்திகம்'
## கலாநிதி ந.இரவீந்திரன்

குமுதம் வார இதழின் கேள்வி, பதில் பகுதியில் ஐந்தாண்டுகளுக்கு முன் 'உண்மையில் பாரதியொரு நாத்திகரா?' என்றதொரு கேள்வி கேட்கப்பட்டது. எல்லாம் வல்ல இறைவன் இயக்க, தான் ஒரு கருவியாக செயற்படுவது என்றில்லாமல், நான் கிருத யுகம் படைக்க. நீ ஆமென் என வழிமொழிந்து இரும் என்பது உட்பட, மக்கள் செயற்பாட்டுக்கான சக்தியாக மட்டுப்படுத்திக் கடவுளைக் காட்டும் பாரதி வரிகளை எடுத்துக் காட்டிய பின்னர், இப்படியெல்லாம் பார்க்கும் போது பாரதியை ஒரு நாத்திகராகவே காண முடிகிறது என்பதாக அக்கேள்விக்கு அரசு பதிலளித்திருந்தார். மனித சக்தியின் கருவியாகக் கடவுள் உணர்வை மடைமாற்றும் பாரதியின் அடிப்படைப் பண்பு இப்படி பாரதியை வெறும் நாத்திகராக பார்க்க அரசுவைத் தூண்டியிருக்கிறது. இருந்தும் பொது வழக்கில் பாரதி ஆன்மீகவாதியாகவே பார்க்கப்படுகின்றார்.

அவரது தேசியப் பாடல்கள் காலாவதியாகி விட்டன. ஆன்மீகக் கவிதைகள் வாயிலாகவே இன்றும் மக்களுள் வாழ்கின்றார் என்ற தீர்ப்புகளும் வந்து கொண்டிருக்கின்றன. அவர் ஆன்மீகவாதியுமல்ல, நாத்திகவாதியுமல்ல, அவரொரு ஆன்மீக நாத்திகர்! பாரதி உலகுக்களித்த புதுமைதான் ஆன்மீக நாத்திகம். பாரதியின் வாழ்வை நோக்கினால் அவரொரு பிராமணர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடும்ப வளர்ப்பு முறையால் ஆன்மீகக் குணாம்சம் அவரில் விதைக்கப்பட்டது. தந்தையின் வற்புறுத்தலால் ஆங்கிலக் கல்வியைக் கற்றார். கற்பதற்காகக் காசிக்கு அனுப்பப்பட்டார். சிறுவனாக இருந்த போதே 'பாரதி' என்ற பட்டத்தை எட்டயபுரம் மன்னரிடமிருந்து பெறும் வகையில் செய்யுள் ஆக்குந் திறனை வெளிப்படுத்தினார். காசியில் வாழ்ந்த காலத்திலே தான் ஆன்மீக உலகின் போலித்தனங்களை அவரால் அறிய முடிந்தது. ஒடுக்கப்பட்ட மக்கள் குழுவொன்று அங்கு 'பாரதி' எனும் பெயரில் உள்ளது. அதன் காரணமாயும் பாரதி தன்னை சுப்பிரமணியபாரதியாக அடையாளப்படுத்தினார்.

நாத்திகரான கவிஞர் ஷெல்லியின் பால் ஈர்க்கப்பட்டுத் தன்னை ஷெல்லிதாசன் எனவும் வெளிப்படுத்தினார். விடுதலைக்காக மக்கள் போராட்டத்துக்கு மக்களை அணிதிரட்ட வேண்டுமாயின் மக்களின் மொழியிலேயே பேச வேண்டுமெனும் போது மக்கள் நம்பும் வகையிலேயே கடவுளை முன் நிறுத்திப் பேசுகின்ற அவசியத்தை உடைய பண்பைப் பாரதி அடைந்த பின் தான் ஆன்மீக நாத்திகம் எனும் புதிய நிலை அவருக்குச் சாத்தியமாகியது. ஐரோப்பியச் சிந்தனையில் எட்டப்பட்ட நாத்திக வாதம் இந்தியாவில் அறிமுகமான வேளை, பாரதியும் அந்த அலையோடு இழுக்கப்பட்டார், ஏற்றார். அவர் ஸ்மார்த்த பிரிவைச் சார்ந்த அத்வைத நம்பிக்கையாளர். நானே பிரம்மம் என்றதை ஏற்பவர். பிராமணர்கள் பொதுவாகவே ஓதும் வேதம் இயற்கை முழுமையைக் கடவுள்களாய்க் காண்பதே அல்லாமல் இயற்கைக்கு அப்பாலான ஒரு கடவுளை ஏற்பதில்லை. ஆதிக்க சாதியின் பரம்பொருளுக்கு அனைவரும் கட்டுப்பட்டவர்களாயினும் இடைநிலைச் சாதியினர் கூடத் தமது கோயில்களில் அப்பரம்பொருளைப் பிரதிஸ்டை செய்ய முடியாது. தத்தமது சாதிக் கடவுளுக்கான கோயில்களைக் கொண்டிருக்கக் கூடிய இடைப்பட்ட சாதியினர் ஆதிக்க சாதியினரது கோயில்களுக்கு செல்ல முடியும். ஒடுக்கப்பட்ட சாதியினர் அவ்வாறு கோயிலினுள் செல்ல முடியாது.

இவ்வகையான சாதிச் சமூகத்தில் பல கடவுள் நம்பிக்கையை எவ்வாறு தகர்த்திருக்க முடியும்? நூற்றாண்டுகளுக்கு முன் நாராயண குரு சிவனைப் பிரதிஷ்டை செய்து, ஈழவர் சமூகம் வழி பட வைத்த போது ஆதிக்க சாதியினர் கண்டித்தனர். அப்போ இந்தச் சமூகம் தீண்டாமைக்கு உட்பட்டிருந்தது. அதை நிராகரித்து நாராயண குரு 'நீங்கள் உங்கள் சிவனை வழிபடுவது போல் நான் எனது சாதிச் சிவனை பிரதிஷ்டை செய்துள்ளேன், எனக் கூறி ஒடுக்கப்பட்டோர் சிவனை வழிபடச் செய்தார். ஈழவர் சமூகத்தின் அந்தஸ்து மேலோங்க நாராயண குருவின் பண்பாட்டுப் புரட்சியும் பெரும் பங்களிப்புச் செய்திருப்பதை மறக்கக் கூடாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது குறித்துப் பாரதியும் எழுதியுள்ளார். ஆதிக்க சாதியினருக்குரிய பெருங் கடவுளர்கள் மீது அவர் பாடலெதுவும் பாடவில்லை. மாறாகப் போர்க்குணம் மிக்க உழைக்கும் மக்களின் வழிபாட்டுக்குரிய காளி, திரௌபதி, கண்ணன், கணபதி ஆகிய கடவுளரே அவரது பாட்டுடைத் தெய்வங்களாக இருந்துள்ளனர்.

மாகாளி கடைக்கண் வைத்தாள், ஆகாவென்றெழுந்தது பார் கிருத யுகம் எனப் பாரதி ரஷ்யப் புரட்சி பற்றிப் பாடியதே அவரையொரு ஆன்மீகவாதியாக மயங்குவதற்கு ஆதாரமாகின்றது. கடவுள் இனிச் சமத்துவமே சாத்தியம் எனக் கருதி விட்டார் எனப் பாரதி எழுதியது உண்மைதான். ஆனால் கடவுளே படைத்தருள்வார், அவரைத் தொழுது பக்தி விசுவாசத்துடன் பூஜை புனஸ்காரங்களில் மூழ்கியிருங்கள் என அவர் கூறிவிடவில்லை. சமத்துவத்தைப் படைக்கும் காலம், கடவுள் வகுத்த விதி ஆகிவிட்டதால் கொடுங்கோல் மடைமைக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்து போராடுவோம் என்றே பாரதி முழக்கம் செய்தார்.

சென்ற நூற்றாண்டின் ஏழாம் ஆண்டில், சுதந்திரப் போராட்டக் கிளர்ச்சி தொடக்கம் பெற்ற போது, விஷ்ணுவின் பத்தாவது அவதாரம் தோற்றம் பெற்று விட்டதாகப் பாரதி எழுதினார். சுதேசியமே அதனது மந்திரம். பகிஷ்காரம் அதன் ஆயுதம் எனக் கூறி அவதாரக் கோட்பாட்டை மக்கள் உணர்வாகக் காட்டிப் பகிஷ்காரப் போராட்டத்தை முன் நிறுத்திய அறவழிப் போராட்டத்தையும் பிரசாரப்படுத்தினார். ஒரு தசாப்தத்தின் பின் ரஷ்ய மக்கள் சமத்துவம் படைக்கும் முதற்படியை வெற்றி கண்ட போது மாகாளி அங்கே கடைக்கண் வைத்தாள் எனப் புளகாங்கிதம் அடைந்தார்.

வருடமொன்றின் பின் ரஷ்ய கவிஞரொருவரும் இதே போன்ற பாடலை வடித்தார். பாரதியை அவர் கண்டிராத போதும் ஓரளவு பாரதியின் கருத்தியல் அவரது பாடலில் காணப்பட்டது. அலெக்சாண்டர் பிளாக் என்பவரது அந்தக் கவிதையை ஈழத்துக் கவிஞர் சோ.பத்மநாதன் தமிழில் தந்துள்ளார். ரஷ்யப் புரட்சியைச் சித்திரிக்கும் அக்கவிதை படையெழுச்சியின் முன்னணியில் சிலுவை போன்றதொன்றுடன் யாரோ அடையாளம் தெரியாதவர் போய்க் கொண்டிருப்பதாக இடையிடையே கூறியவாறு பேரெழுச்சியின் பல்வேறு போக்குகளையும் காட்டியவாறு வளர்ந்து செல்கிறது. முடிவில் முன்னால் சென்றவர் யேசு கிறிஸ்து என அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. இக்கவிதையை லெனின் ஏற்காது, மக்கள் பங்கேற்பில் சாத்தியப்பட்ட போராட்ட வெற்றியை, இறை அனுக்கிரகம் எனக் காட்ட முயல்கிறதா இக்கவிதை? எனச் சந்தேகம் எழுப்பினார். கொம்யூனிஸ்ட் கட்சி அதைத் தடைசெய்தது. ஆயினும் அக்கவிஞர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோசலிசத்துக்கான மாற்றியமைத் தலைப் பற்றுறுதியுடன் ஆதரித்து உழைத்து வந்தார்.

மாகாளியோ, யேசுவோ ரஷ்யப் புரட்சியின் பால் நாட்டம் கொள்வதாகக் காட்டுவதால் மக்கள் பங்கேற்பு மறுக்கப்படுவதாய்க் கொள்ள முடியாது. கொம்யூனிஸ்ட்டுகள் கோயில்களை இடித்துத்தள்ளும், கடவுளுக்கு விரோதிகள் என்பதை முறியடிப்பவைகளே இக்கவிதைகள். கடவுள் நம்பிக்கையுள்ள மக்களிடம் இச்சமூக மாற்றப் புரட்சி கடவுள் நம்பிக் கைக்குரியதென்பதைக் காட்டுபவையாகவும் அமைவனவாகும். ஆர்வத்தோடு மக்களை பங்கேற்கவும் தூண்டும். ரஷ்யாவுக்கு வெளியே ரஷ்யப் புரட்சியை ஆதரித்து முழு உலக அளவில் எழுதப்பட்ட முதல் கவிதை 'புதிய ரஷ்யா' என்ற பாரதி கவிதையே.

ருஷ்யாவில் 1906 இல் புரட்சி சாத்தியமான போதே அது குறித்துப் பாரதி தனது பத்திரிகையில் எழுதி ஆவணப்படுத்தினார். ஒடுக்கப்பட்டதை யும் எழுதினார். ஒக்டோபர் புரட்சியையும் சோசலிசத் தாயகம் எதிர்நோக்கிய நெருக்கடியையும் எழுதினார். இவைகளின் ஊடாக மாகாளி மக்கள் எழுச்சியின் படிமம் என்பதை விளங்கிக் கொள்ள முடியும்.

பாரதியின் கடவுள் அவரைக் கருத்து முதல்வாதப் பார்வைக்குரியவராக்கி விடவில்லை. கடவுள் சித்தப்படி அணுவும் இயங்கும் என்பதாயில்லை. எதற்குமான இயங்காற்றலுக்குரிய காரண காரியத்தைக் கண்டறிந்து அச்செயல் கடவுளால் சாத்தியப்படுவதாக அமைதி காணாது, தனக்குரிய பணியெனக் கருதி திடமனதோடு செயற்பட வலியுறுத்தி, கால சக்தியெனும் கடவுள் விருப்பமும் அதுவே எனக் காட்டும் அளவிலேயே பாரதியின் இறை தரிசனம் எல்லைப்படுகின்றது.

இத்தகைய ஆன்மீக கருத்தாடலில் பாரதியின் ஆன்மீகத்தில் நாத்திகம் வெளிப்பட்டிருப்பதைக் கண்டு கொள்ளலாம். இத்தகைய ஆன்மீக நாத்திகமே, இயங்கியல் பொருள் முதல்வாத உலக நோக்கை அவருக்குச் சாத்தியப்படுத்தியும் இருந்திருக்கின்றது. பெரியார் ஈ.வெ.ரா.சமூக மாற்றச் செயற்பாட்டை சாத்தியப்படுத்துவதற்கு கடவுள் நம்பிக்கையை விட்டொழிப்பதே முக்கியமென்றார். இது அவரது நாத்திகவாத நிலைப்பட்ட கருத்து முதல்வாதச் சிந்தனை. மாறாக கடவுள் என்ற கருத்தை விட்டொழித்தால் மட்டும் சமூக மாற்றம் இலகுவாகிவிடப் போவதில்லை. மார்க்சியர்களிடம் நாத்திக நிலைப்பாடு இருந்த போதிலும் கடவுளை ஒழித்துக் கட்டுவதே முதல் பணி என்ற நாத்திக வாதம் இருப்பதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மார்க்சியர் பலரது பொருள் முதல் வாதம், இயங்கியல் தன்மையற்று வரட்டுத்தனமானதாய் அமைந்திருந்தது.

அத்தகைய பல மார்ச்சியர்களது கருத்தியலை விடவும் பாரதியின் கருத்தியல் கூடுதலாகச் சரியானதாக இருப்பதைத் தெரிந்து கொள்ளலாம். இந்தியச் சுதந்திரம் வெள்ளையரைப் பறங்கித் துரை எனச் சொல்லும் அடிமைத் தனத்தை தகர்ப்பதாய் மட்டுமன்றி பார்பானை ஐயரென்று கூறும் சமூகப் பண்பாட்டு ஏகாதிபத்தியத்தை ஒழித்துக் கட்டுவதாகவும் அமைய வேண்டுமென வற்புறுத்தினார். மார்க்சியர்கள் பலர் வர்க்கத்தை மட்டும் நோக்கிய தோற்ற மயக்கத்தில் பிராமண தேசியத்தின் சமூக பண்பாட்டு ஏகாதிபத்தியத்தைக் காணத் தவறினர். இவ்விடயத்தில் இன்னமும் குறைபட்ட நிலைப்பாடுகளுடனேயே உள்ளனர். இத்தத்துவத் தேடல்களில் பாரதி இறங்காத நிலையிலும் அவரது நிலைப்பாடு மார்க்சியர் பலரை விடவும் சரியாக அமைவதுக்கு ஏற்றதாக அவரது ஆன்மீக நாத்திகச் சிந்தனையே அவரை வழிநடாத்தியுள்ளது.

**லெனின் மதிவானம்**
**(பிரதி ஆணையாளர், கல்வி அமைச்சு)**
**கலைமுகம்:**
**'இதழ் 52 - ஒரு வாசகர் பார்வை'**

பல சவால்களை எதிர்நோக்கிச் சிற்றிதழ்கள் இலங்கையில் நகர்ந்து கொண்டிருக்கின்றன. எதிர்நீச்சல் போடுகின்றன. ஆனால் டொமினிக் ஜீவா 47 ஆவது ஆண்டு மலரையும் வெளியிட்டு விட்டார். அதொரு வெற்றிதான். 'கலைமுகம்' மத அடையாளமா? என்பதை உற்று நோக்கும் போது அது மக்கள் சார்பானதென்பதே வெளிப்படுகிறது. கலைமுகம் இதழ் 52 ஐ பேராசிரியர் கா.சிவத்தம்பிக்குச் சமர்ப்பணம் செய்வது போல் அவர் பற்றிய பல பதிவுகள் இதழில் இடம்பெற்றுள்ளன. அவரது பணியை ஆய்வாளர்கள் நான்கு தளங்களில் வைத்துப் பார்த்துள்ளனர். முற்போக்கு, மார்க்சியம், மார்க்சியத்திலிருந்து பிரிந்த பின் கருத்தியல், தமிழ்த் தேசியம் என்பவைகளே அந்த நான்கு தளங்களும். சொல்லப் போனால் பேராசிரியர் சிவத்தம்பி பற்றிய காய்தல், உவத்தலற்ற பன்முக ஆய்வு வெளிவர வேண்டும். இவ்விதழில் ஆரோக்கியமான குறிப்புகள் நிறைந்த கட்டுரைகள் உண்டு. குழந்தை ம. சண்முகலிங்கம் பேராசிரியரின் நாடக ஆளுமை குறித்து எழுதியுள்ளார். பேராசிரியர் யாரையும் பகைத்துக் கொள்ளாதவர். உண்மையான மனித நாகரிகத்தோடு கருத்துகளை உள்வாங்குபவர். இது அவரது பலவீனமாகவும் கருதப்பட்டுள்ளது. அ. யேசுராசா ஒரு கலைஞனின் மறைவு என்ற தலைப்பில் சிங்களத் திரைப்பட நடிகர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜோ.அபேவிக்கிரம குறித்து எழுதியிருக்கிறார். இலகுநடையில் ஜோ.அபேவிக்கிரமவை அறிமுகப்படுத்தியுள்ளார். கவிதைகள் பதினொன்று

பிரசுரமாகியிருக்கின்றன. வாழ்வு பற்றிய சோகம், மக்களது நம்பிக்கை, இழப்பு, யுத்தத்திற்குப் பின் வாழ்க்கை அனுபவங்கள் என்பன பாடு பொருள்களாக அமைந்துள்ளன. முன்னோடிகளின் ஆளுமைகளைத் தேடி வெளிப்படுத்தல் மிகவும் அவசியமானதாகும்.

## கருத்துரை: மல்லிகை ஆசிரியர் டொமினிக் ஜீவா

பேசிப் பேசித்தான் தமிழ்ச் சாதி அழிந்தது. பார்ப்பனிய அழிப்பைப் பெரியார் ஈ.வெ.ரா.சுட்டிக்காட்டினார். ஆனால் இன்று தமிழ் நாட்டில் முதலமைச்சர் ஒரு பார்ப்பனத்தி. பேசிப்பேசி நாங்கள் அழியாமல் ஆரோக்கியமானதொரு தமிழ்ச் சமூகத்தை உருவாக்க வேண்டும். மாவிட்டபுரம் கந்தசாமி கோயில் ஆலயப் பிரவேச போராட்டத்தில் முன்னாள் அமைச்சர் சி. சுந்தரலிங்கம் ஒடுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட தமிழருக்கு எதிராக நின்ற காலத்தில் நெருக்கடியான சூழ்நிலையில் மல்லிகை சஞ்சிகையை ஆரம்பித்தேன். இது 47ஆவது வருடம். யாழ்ப்பாணத்தானின் நெஞ்சு கருங்கற்பாறை. நாங்கள் இத்தகைய கூட்டங்களைத் தவற விடக் கூடாது. அடிப்படை மனிதத் தன்மை இல்லாது துப்பாக்கியேந்தியதால் பலரை இழந்தோம். அன்புக்காக எனது வாழ்க்கையை அர்ப்பணித்தேன்.

அவமானங்களைக் கண்டு சறுக்கக் கூடாது. அவற்றைப் பசளையாக ஏற்க வேண்டும். மல்லிகையின் வளர்ச்சிக்கால கட்டத்தை சொல்வது சுய புராணமாகாது. மல்லிகை அதன் சொந்தக் கட்டிடத்தில் தான் வளர்ந்தது. வீட்டு முகவரிகளிலல்ல. இங்கு மட்டுமன்றி தமிழ் நாட்டிலும் எழுத்தாளர்கள் சிற்றிதழ்களைத் தொடக்கினர். நான் இன்று நாற்பத்தேழாவது ஆண்டில் ஐம்பதாவது ஆண்டு மலருக்கான விடயங்களைச் சேகரித்துக் கொண்டிருக்கிறேன்.

*திருமறைக்கலா மன்ற நாடக இயக்குநரும் கவிஞருமான யாழ்.ராஜன் நன்றியுரை நிகழ்த்தினார்.*

- 23.02.2012

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 40

## பேராசிரியர் அல்லாமா ம.மு.உவைஸ் நினைவு தின ஒன்று கூடல்

**பே**ராசிரியர் அல்லாமா ம.மு.உவைஸ் அறிவு, ஆற்றல், அன்பு, அடக்கம் என்பவற்றின் பெட்டகமாக வாழ்ந்தவர். பேரறிஞர்களின் பாராட்டைச் சுகித்தவர். இஸ்லாமிய தமிழிலக்கிய வரலாறு உவைஸ் எனும் வாய்க்கால் வழியாகவே ஓடி வளம் பெருக்கியது. இலங்கைக்கு தமிழகத்தில் புகழீட்டிய பெரியார்கள் வரிசையில் உவைஸின் பெயரும் இடம்பெறல் வேண்டும். தமிழ் இலக்கிய வரலாறு நன்றியுடன் போற்ற வேண்டிய பெயர்களுள் ஒன்று பேராசிரியர் ம.முஹம்மது உவைஸ் எனப் பேராசிரியர் கா.சிவத்தம்பி கருத்துரைத்துள்ளார். இஸ்லாமியரின் தமிழ் மொழிவல்லமைக்கு முன்னுதாரணமாகத் திகழ்ந்த இப்பெரியார் காலமாகி பதினாறு ஆண்டுகளை எட்டிவிட்டன. இப்பதினாறாவது நினைவு தினம் 25.03.2012 ஆம் திகதி மிகச் சிறப்பாக நினைவு கூறப்பட்டது. கொழும்பு தமிழ்ச் சங்கச் சங்கரப்பிள்ளை மண்டபத்தில் இந்த நினைவு தின ஒன்று கூடல் கௌரவ அல்ஹாஜ் ஏ.எச்.எம்.அஸ்வர் (பாராளுமன்ற உறுப்பினர்) தலைமையில் நடைபெற்றது.

கிறா அத் ஓதி, தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடி நிகழ்வு மங்களகரமாகத் தொடங்கப்பட்டது.

**வரவேற்புரை :**
**மணிப்புலவர் மருதூர் ஏ.மஜீத்**

அல்லாமா என்ற பட்டத்தைப் பெற்ற முதல் இலங்கைக் கல்விமான் அல்லாமா ம.மு.உவைஸ். தமிழுக்கு அரிய பணிகளைச் செய்தார். அவரை மொத்தமாக அளந்து பார்க்க முடியாதிருந்தது. கம்பன் இராமனைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றி 'தோள் கண்டார் தோளே கண்டார்' என்பது போல. 1964 ஆம் ஆண்டு கிழக்கிலங்கையின் மருதமுனையில் நடந்த மகாநாட்டுக்குவந்த போதே நான் அவரை முதன் முதல் கண்டேன். அவரைப் பற்றி கவிதை எழுதினேன். சரித்திரம் படைத்துக் காட்டிச் சாதனை புரிந்தவர் உவைஸ். இவர் பெயரைக் கேட்டால் இந்திய மண் மரியாதை செய்யும். இஸ்லாமிய இலக்கியத்தில் மறக்க முடியாத ஓர் அறிஞர். பல நூல்களை வெளியிட்டவர். மொழி பெயர்ப்புகளைச் செய்தார். மருதமுனைப் பேச்சு வழக்கு முஸ்லிம் தமிழிலக்கிய மரபு. அதை இஸ்லாமிய மரபென அடையாளப்படுத்தவில்லை. முஸ்லிம்களுக்கும் எனத் தனிக்கலை, கலாசாரமுண்டு.

**தலைமையுரை:**

**கௌரவ அல்ஹாஜ் ஏ.எச்.எம்.அஸ்வர்**

**(பாராளுமன்ற உறுப்பினர்)**

இருபதாம் நூற்றாண்டின் அதிசய மனிதர் அல்லாமா பேராசிரியர் ம.மு.உவைஸ். அல்லாமா, கலாநிதி, பேராசிரியர் எனப் பல பட்டங்களைப் பெற்ற பெரியார். யாருக்கும் பங்கமில்லாத வகையில் ஆழமான பணிகளைச் செய்தார். இவர் பெயரைக் கேட்டால் இந்தியாவில் எழுந்து நிற்பர். இன்றும் உலகம் மதிக்கும் உத்தமர். உவைஸை பேராசிரியராகத் தமிழ் நாடு ஏற்றது. சென்னை காமராஜர் பல்கலைக்கழகத்தில் பீடாதிபதியாக நியமிக்கப்பட்டார். இதற்கு அப்துல் சமதுவின் சிபாரிசோடு அன்றைய தமிழக முதல்வர் கலைஞர் மு.கருணாநிதியின் அனுமதியும் இருந்தது. சிங்களச் சூழலில் பாணந்துறையில் வாழ்ந்தவர் உவைஸ். தமிழை வளர்த்தார். தமிழ், சிங்களம், ஆங்கிலம், அரபு போன்ற பன்மொழித் தேர்ச்சி பெற்ற கல்விமானாகத் திகழ்ந்தார். 1953 ஆம் ஆண்டு இலங்கை வானொலியின் முஸ்லிம் சேவை உவைஸின் பொறுப்பில் வந்தது. இப்பொறுப்பிலிருந்து விலகிய போது தன்னிடமிருந்த இலங்கை வானொலிச் சொத்தான Transister Radio ஒன்றையும் அதிகாரிகளிடம் திருப்பி ஒப்படைத்த பின்னரே விலகிய கண்ணியவான். இவரது தந்தையார் மஹ்மூத்தையும் மறக்க முடியாது. அவருக்கு இவர் ஒரே மகன். உவைஸின் மனைவியாரும் அவரோடு இலக்கியக் கூட்டங்களில் கலந்து கொள்வதுண்டு. தமிழறிஞர்களோடு சேர்ந்து உவைஸ் செய்த பணி என்றும் மறையாது. மகாமகோபாத்தியாய போன்றவர் உவைஸ். அவரது பெயரில் அறக்கட்டளை ஒன்றை உருவாக்கி உயர் கல்வி மாணவர்களுக்கு உதவி வழங்க வேண்டும். இதை அவரது குடும்பத்தினர் ஒத்துக் கொண்டிருக்கின்றனர். பல கட்டுரைகளை, பிரயாணக் கட்டுரைகளை 'தினகரன்' பத்திரிகையில் எழுதினார். அல்லாமா உவைஸ் பற்றி சிறப்புரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாற்ற பேராசிரியர் எஸ்.தில்லைநாதனைத் தவிர வேறு ஒருவர் இருக்க முடியாது.

**சிறப்புரை :**
**பேராசிரியர் சி.தில்லைநாதன்**

எனக்கு மிகவும் பிடித்தமான நண்பர் அல்லாமா உவைஸ். அவரது நினைவு தின ஒன்று கூடலில் பேசுவது எனக்குக் கிடைத்த பெரும் பேறாகும். அவருக்கு அல்லாமா பட்டம் வழங்க ஏற்படுத்தப்பட்ட குழுவில் ஒருவராக இருந்த அல்ஹாஜ் ஏ.எச்.எம்.அஸ்வர் தலைமையில் பேசுவது இரட்டிப்பு மகிழ்ச்சியாக உள்ளது. 1961 ஆம் ஆண்டில் பேராசிரியர் சு.வித்தியானந்தன் எனக்கு உவைசை அறிமுகப்படுத்தினார். எனது தினகரன் சேவைக் காலத்தில் அங்கிருந்தார். வித்தியோதய பல்கலைக்கழக வருகை தரு விரிவுரையாளராக என்னை அறிமுகப்படுத்தியவர் ம.மு.உவைஸே. அவரோடு கூடி இருந்து பேசுவது மிகவும் மகிழ்ச்சியை ஏற்படுத்தும். அடிக்கடி அவரது காரில் செல்வோம். கதையோடு கதையாகக் கட்டுரை கேட்பேன். உவைஸ், பேராசிரியர் கணபதிப்பிள்ளை வீட்டுக்கு காரை ஓட்டிச் செல்வார்.

இருவரும் பேசிக் கொண்டிருப்பர். பேச்சு முடியாது. எனக்கு சங்கடமாக இருக்கும். சிறந்த சிறுகதை ஆசிரியரான புதுமைப்பித்தன், பிராமணர்களைப் போல் நேர அவகாசம் தெரியாது பேசிக் கொண்டிருக்க எமக்கு முடியாதென்பார். அதுபோன்ற பேச்சாகத்தான் கணபதிப்பிள்ளை, உவைஸ் பேச்சிருக்கும். ஆனால் உவைஸ் தன் காரியத்தில் கண்ணாகத் தான் இருப்பார். மறுநாள் காலையில் நான் கேட்ட கட்டுரை எனது மேசைக்கு வந்து சேரும். இத்தகைய பழக்கத்தை உடையவராக இருந்தபடியால் தான் நூல்களை எழுதினார். அறிவு பொதுச் சொத்து என்ற அசைக்க முடியாத உணர்வு உவைஸிடம் இருந்தது. நூல்களைக் கேட்டால் கொண்டு வந்து தருவார். அவரிடம் காணப்பட்ட பொறுமையை வேறெவரிடமும் காணமுடியாது. காரை யாரிடமாவது கொடுத்து விட்டு மணித்தியாலக் கணக்காக வாசலில் காத்து நிற்பார். சகிப்புத் தன்மை இருந்தது. அன்பான குடும்பத்தைக் கொண்டிருந்தார். மனைவி, பிள்ளைகள் அற்புதமாக உபசரிப்பார்கள். அன்பு காட்டுவார்கள். வைபவமொன்று உவைஸ் வீட்டில் நடந்த போது அயலிலுள்ள பிள்ளைகள் கேற்றுக்கு முன் குழுமி நின்றனர். உறவினரொருவர் கேற்றை மூடிவிட்டு தான் உள்ளே வந்தார். இதைக் கண்ட உவைஸின் மனைவியார் மறு வழியாக கேற்றடிக்குச் சென்று, கூடி நின்ற பிள்ளைகளை உள்ளே கூட்டி வந்து அவர்களுக்கு உணவு கொடுத்து உபசரித்தார். அந்தப் பிள்ளைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வறிய குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். உவைஸ் கண் வருத்தமாக இருந்த போதே கடைசியாக சந்தித்தேன். அப்படி இருந்தும் தொலைக்காட்சி பார்த்திருக்கிறார், புத்தகம் வாசித்தார். பெரியார் குணம், சான்றாண்மை இருந்தது. சீலம், உயர்வான மனிதாபிமானப் பணபாகும். பட்டங்களைப் பெற்ற பின்னரும் மானுட நிலை தழம்பாத தன்மைகள் அவரிடம் இருந்தன. தாய்மொழியைப் புறக்கணிக்காத தன்மையும் இருந்தது.

**கருத்துரைகள்:**

**அல்ஹாஜ் கே.ஹஸன் அலி**

**(தமிழக சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்)**

இலங்கை இப்பொழுது எப்படி இருக்கின்றதென்பதுக்கு இங்கு ஆங்கிலத்தில், சிங்களத்தில், தமிழில் பேசியது எடுத்துக் காட்டாக இருக்கின்றது. தமிழின் பெருமை இலங்கையில் மறக்கடிக்கப்பட்டு விட்டது. 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என 2000 ஆண்டுகளுக்கு முன் தமிழன் சொன்னான். அது தமிழ்ப் பண்பாடு. இலங்கையில் இனங்களின் இணைப்புகளுக்கான பாலந்தேவை. எனது பெரிய தந்தை கம்பன் கழகத்தால் பாராட்டப்பட்டவர். அவருக்கு துணை நின்றவர் அல்லாமா உவைஸ். எனவே உவைஸ் குடும்பத்தில் நானும் ஒருவன். சென்னை பல்கலைக்கழகத்துக்கு உவைஸ் விண்ணப்பித்த போது எமக்கு இலங்கையரா? தமிழ் கற்றுக் கொடுப்பது என்ற எதிர்ப்பு எழுந்தது. அந்த அலையில் இஸ்மாயில் சாஹிப் எழுந்து நூல்களைக் காட்டி 26 நூல்களைப் படைத்தவர் உவைஸ். இப்படி ஒரு மனிதன் இனி வர வேண்டுமே? என வாதாடினார். உவைஸின் பிள்ளைகள் நால்வரும் தமிழ் பேச தடுமாறுகின்றனர். தனக்கான வாரிசுகளை உவைஸ் விட்டுச் சென்றிருக்கவில்லை. அது வருத்தத்தை ஏற்படுத்துகின்றது. பேரர்களாவது அவர் நிலைக்கு வரவேண்டும். தமிழ், சிங்கள, இஸ்லாமிய உறவுப் பாலம் உவைஸ். பல்கலைக்கழகங்கள் அவர் பெயரைக் கூறும். வருடா வருடம் இது போன்ற நிகழ்வுகளை நடாத்தி அல்லாமா உவைஸின் சிந்தனைகளைப் பகிர வேண்டும். அவர் சிந்தனைகள் ஆயிரமாண்டுகளுக்கு வாழ வேண்டும்.

*அநுராதபுரத்திலிருந்து கடந்த எட்டாண்டுகளாக வெளிவந்து கொண்டிருக் கும் 'படிகள்' மாசிகைச் சிறப்பிதழைக் கொழும்பு முஸ்லிம் நூலக உபதலைவர் வைத்திய கலாநிதி அல்ஹாஜ் தாஸிம் அஹமது வெளியிட்டு, அதன் முதல் பிரதியை அல்ஹாஜ் ஏ.எச்.எம்.அஸ்வரோடு இணைந்து*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*அல்ஹாஜ் கே.ஹசன் அலிக்கு வழங்கினார். நீதி அமைச்சர் அல்ஹாஜ் ரவூப் ஹக்கீமுக்கும் வழங்கப்பட்டது. சிறப்புப் பிரதிகளை அரசியல், கலை, இலக்கிய, பொதுப்பணிப் பிரமுகர்கள் பெற்றனர்.*

**வாழ்த்துரைகள்:**

**மு.கதிர்காமநாதன் (தலைவர், கொழும்புத் தமிழ்ச்சங்கம்)**

அல்லாமா உவைஸ் 1975 ஆம் ஆண்டிலிருந்து 1996 வரை கொழும்பு தமிழ்ச்சங்கக் காப்பாளராகப் பணி புரிந்தார். இருபத்தொரு வருடங்கள் இப்பதவியில் இருந்தார். எமது பணிமனையில் பெரிய அளவிலான அவரது படத்தை வைத்து அவருக்கு எமது மரியாதையை அளிக்கின்றோம். சங்கத்தின் கல்வி சம்பந்தமான நிகழ்ச்சிகளில் பங்கு பற்றியிருக்கிறார். திருக்குறள் விழாக்களில் ஒரு அரங்கிற்கு அல்லாமா உவைஸ் அரங்கெனப் பெயரிட்டு அவரது தமிழ்ப் பணிகளைப் பெருமைப்படுத்தியுள்ளோம்.

**ஹஸன் அலி (இலங்கை பாராளுமன்ற உறுப்பினர்)**

தமிழ் புனிதமான மொழி, எனக்கு அரபு மொழி தெரியாது. இஸ்லாம் மதத்தை நான் தெளிவாகப் புரிந்து கொள்வதற்கு உதவியது தமிழ் மொழிதான்.

**எஸ்.எச்.எம்.ஜமீல்**

**(முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் அமைச்சின் முன்னாள் செயலாளர்)**

பேராசிரியர் அல்லாமா உவைஸின் பணிகளை 5 நிமிடத்தில் பேசுவதாகில் அப்பணிகளின் 5 சத வீதத்தைத்தான் பேச முடியும். பல பட்டங்களைப் பெற்றவர். இந்நாட்டில் முதன் முதல் அல்லாமா பட்டம் பெற்றவர் உவைஸ்தான். அவ்வேளை ஏ.எச்.எம் அஸ்வர் அமைச்சராக இருந்தார். நான் செயலாளர். அச்சந்தர்ப்பத்தில் 'வாழும் போதே வாழ்த்துவோம்' என்ற நிகழ்ச்சியை நடாத்தினோம். 4 வருடங்கள் 132 கலை, இலக்கியவாதிகளை அழைத்து கௌரவப்படுத்தினோம். 132 பேர் வாழ்த்தப்பட்டனர். இதில் 58 பேர் இவ்வுலகில் இல்லை, அமரராகி விட்டனர். இந்த ஆளுமைகளுக்குப் பொன்னாடை போர்த்தினோம். பொற்கிழி வழங்கினோம். இதில் உச்சகட்டமாக இருந்தது அல்லாமா பட்டம் தான். பேராசிரியர் உவைஸுக்கு அல்லாமா பட்டத்தை அனுமதித்த அன்றைய அரசு 1994 ஜூன் மாதத்தில் கலைக்கப்பட்டது. பட்டமளிப்பு ஒரு வாரம் தாமதமாகியிருந்தால் பேராசிரியர் உவைஸுக்கு அல்லாமா பட்டம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடைத்திருக்காது. ஒரு வாரத்தில் நாமெல்லாம் வெளியாகி விட்டோம். எனவே இன்றும் சந்தோசப்படுகிறோம், அது அவருக்கு கிடைத்ததையிட்டு. அவருக்கு மொழி முக்கியமாக இருந்தது. இலக்கியத்தை வளர்த்தார். அவரது பிள்ளைகளிடம் மாணிக்கச் செல்வம் உண்டு. தமது செல்வத்தின் மூலமாக பிள்ளைகளும் இலக்கிய வளர்ப்புச் செய்ய வேண்டும். பேராசிரியர் உவைஸின் நூல்கள் அவரது நாமத்தை இஸ்லாமிய இலக்கியத்திலும் தமிழ் இலக்கியத்திலும் என்றும் நிலைக்க வைக்கும்.

**அல்ஹாஜ் என்.எம்.அமீன்**
**(பிரதம ஆசிரியர், நவமணி)**

அல்லாமா உவைஸ் பல மொழி ஆளுமைகளை தன்னகத்தே கொண்டு வாழ்ந்தவர். அரபு மொழியைப் புறக்கணித்தோம். அம்மொழியைப் படிக்க வேண்டும். அது எமக்கு கை கொடுக்கும். ஆங்கில மோகமுண்டு. மூன்று மொழிகளையும் படிக்க வேண்டும். எமது இருப்புக்கு அது பாதுகாப்பாக இருக்கும். தமிழ்,சிங்களம், ஆங்கிலம், அரபு தெரியும் என்ற நிலை உருவாக வேண்டும். பேராசிரியர் உவைஸின் இஸ்லாமிய இலக்கியப் பணி பாரியது. திறனாய்வுகளைச் செய்திருக்கிறார். சிங்களத்தில் 10 நூல்களையும் ஆங்கிலத்தில் 4 நூல்களையும் வெளியிட்டுள்ளார். 1942 இல் கலைமானிப்பட்டத்தை வென்றார். இத்தகைய நினைவுப் பேருரைகள் தொடர்ந்து இங்கு நடாத்துவதோடு இந்தியாவிலும் நடாத்தப்பட வேண்டும்.

**கௌரவ அமைச்சர் அல்ஹாஜ் ரவூப் ஹக்கீம் (நீதி அமைச்சர்)**

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் விபுலானந்த அடிகளார் ஆற்றிய பணிகளுக்கு பின் உவைஸ் காமராஜர் பல்கலைக்கழகத்தில் ஆற்றிய பணிகள் பேசத்தக்கவைகளாக இருக்கின்றன. தென்கிழக்கு பல்கலைக்கழகம் அமைக்கப்பட்ட திகதியில் தான் உவைஸ் எம்மை விட்டுப் பிரிந்தார். மர்ஹூம் அஷ்ரப், உவைஸின் நூல்களைத் தென்கிழக்கு பல்கலைக்கழகத்துக்கு அன்பளிப்புச் செய்தார். அவைகளை இப்போது தென்கிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள் படிக்கிறார்கள். இதைப் பாராட்டுகின்றோம். நீண்ட ஆய்வு நூல்களை எழுதியுள்ளார்.

அவரது முயற்சியில் ஆக்கப்பட்ட இஸ்லாமிய தமிழ் அகராதி அபூர்வமானது. தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் இஸ்லாமிய தமிழ்த்துறை நிறுவப்பட வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நன்றியுரை:**
**வைத்திய கலாநிதி தாஸிம் அகம்மது**

தமிழறிஞர்களான சி.வை. தாமோதரம்பிள்ளை, பேராசிரியர் கா.சிவத்தம்பி ஆகியோரது ஆளுமைகளோடு ஒப்பிடத்தக்கவராக விளங்கியவர் அல்லாமா உவைஸ். வரலாற்று முக்கியத்துவம் பெற்றவர். வரன் முறைகள் காக்கப்படுவதற்கு ஒழுங்குகள் செய்யப்படல் வேண்டும். நூல் அட்டவணை ஒன்றைத் தயாரிக்க வேண்டும். புலமைப் பரிசில்கள், நினைவுப் பேருரை, இஸ்லாமிய தமிழ் ஆய்வு மையம் என்பவற்றை ஆரம்பிக்க யோசிக்கிறோம். சர்வதேச இஸ்லாமிய ஆய்வு மன்றமும் அமைக்கப்பட வேண்டும். இஸ்லாமிய தமிழிலக்கிய விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்.

*அமரதேவ மத்தும பண்டார (முன்னாள் பணிப்பாளர் கலாசார திணைக்களம்) சிங்களத்திலும் பிரதி அமைச்சர் பைஸல் முஸ்தபா ஆங்கிலத்திலும் உரை நிகழ்த்தினர்.*

*இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன மூத்த அறிவிப்பாளர் புர்கான் பீ.இப்திகார் நிகழ்வுகளைத் தொகுத்து அறிவிப்புக்களைச் செய்தார்.*

-06.04.2012

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 41

## 'நினைவுப் பெருவெளி' நூல் வெளியீடு

மூத்த பத்திரிகையாளரும் பிரபல இலக்கியவாதியுமான வீரகேசரியின் 'லக்ஷ்மி' அன்னலெட்சுமி இராஜதுரையின் 'நினைவுப் பெருவெளி' ஒரு பெண் பத்திரிகையாளரின் மனப்பதிவுகள் என்ற புனைகதை சாரா நூல் அண்மையில் கொழும்புத் தமிழ்ச்சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில் வெளியிடப்பட்டது. மூத்த இலக்கியவாதி பத்மா சோமகாந்தன் தலைமை தாங்கினார். கொழும்பு பொன்னம்பலவாணேஸ்வரர் கோயில் அறங்காவலர், பாராளுமன்ற உறுப்பினர் டி.எம்.சுவாமிநாதன் கௌரவ அதிதியாகவும் பேராசிரியர் சி. பத்மநாதன் சிறப்பு அதிதியாகவும் கலந்து கொண்டு இப்பெரு விழாவைச் சிறப்பித்தனர்.

கல்வி, சமயம், அரசியல், இலக்கியம், ஊடகத்துறை ஆகியவற்றைச் சார்ந்த நாடறிந்த பிரமுகர்கள் மங்கலச் சுடரேற்றி நிகழ்வைத் தொடக்கி வைக்க, ரி.ரிஷிகேசன் தமிழ் வாழ்த்துப் பாடினார்.

நடன ஆசிரியை சுபாஷினி பத்மநாதன் நெறிப்படுத்தலில் அவரது மாணவிகள் செல்விகள் மகேஸ்வரி மகேந்திர நாயகம், விதுமினி கௌசல்யா ஜயவர்தனா, செனுரி பிரசேகா பசநாயக்கா, ஹாசினி விஜேசிங்க ஆகியோர் வரவேற்பு நடனமாடினர். உமா பிரகாஷ் வரவேற்புரை நிகழ்த்தி நிகழ்ச்சிகளை ஒன்றிணைத்து அறிவிப்புக்களையும் செய்தார்.

**வாழ்த்துரைகள் :**
**கே.ஆர்.பிரபாகரன்**
**(பிரதம ஆசிரியர், வீரகேசரி நாளிதழ்)**

எனது நினைவுகள் இருபதாண்டுகளுக்கு முன் செல்கின்றன. வீரகேசரி அலுவலகத்தின் இடது பக்க மூலையில் அன்னலெட்சுமி இராஜதுரையைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டேன். எங்களுக்குத் தாயைப் போன்றவர். அவரது பேச்சு என்னை மிகவும் கவர்ந்தது. ஆணித்தரமாகப் பேசுவார். அது போலவே எழுதுவார். இலங்கையின் வடபகுதி எழுத்தாளர்கள் ஊடகவியலாளர்களாக முத்திரை பதிப்பது வீரகேசரிப் பத்திரிகையில் தான். தக்க ஆளுமையைப் பெற்ற பின் வேறு பத்திரிகைகளுக்கும் இவர்கள் நகர்ந்து விடுவதுண்டு. இருந்தாலும் அவர்கள் வீரகேசரியை மறப்பதில்லை. சகலதும் நினைவுப் பெருவெளியில் இருக்காது. எல்லாவற்றையும் ஞாபகப்படுத்தி வைத்திருக்க முடியாது. இத்தகைய முயற்சிகளுக்கு நிதானமும் பொறுமையும் தேவை. தனது மனவெளியில் பொறுக்கி வைத்த முக்கியமான விடயங்களை இந்நூலில் அன்னலெட்சுமி இராஜதுரை தொகுத்துக் கூறியுள்ளார்.

நினைவுப் பெருவெளி எமக்கு உண்டு. அவைகளைச் சிந்தித்தால் கவலைகள் போகும். அன்னலெட்சுமி இராஜதுரையை வாழ்த்திப் பேசக் கிடைத்தது எனக்குப் பெருமை தருகிறது. அச்சந்தர்ப்பத்தைத் தந்ததற்காக நன்றி.

**எஸ்.தில்லைநாதன் (பிரதம ஆசிரியர், தினகரன்)**

வீரகேசரியின் ஆசிரியர் பீடத்துக்கு நியமனம் பெறுவதற்காக 1962 ஜூன் மாதம் அன்னலெட்சுமி இராஜதுரை உட்பட நால்வர் நேர்முகப் பரீட்சைக்காக வீரகேசரி அலுவலகம் வந்தோம். தெரிவானோம். அன்னலெட்சுமி தொடர்ந்தும் இன்னமும் வீரகேசரியில் பணிபுரிகிறார். மேலும் தொடர வேண்டுமென விரும்புகிறேன். பத்திரிகைத் துறையில் மட்டுமன்றி அவர் வானொலியிலும் தனது திறமைகளைக் காட்டுபவர். நான் ஜேர்மனிக்குச் சென்று வந்த பின் அந்தப் பயணம் பற்றி தான் தயாரித்து ஒலிபரப்பும் நிகழ்ச்சியில் பேசச் சொன்னார். எனக்கு அத்தகைய அனுபவம் இருந்ததில்லை. பிரதியொன்றைத் தயாரித்துப் பேசினேன். இப்பேச்சானது பத்து நிமிடங்கள் ஒலிபரப்பானது. என்னைப் பாராட்டி உற்சாகப்படுத்தினார். எனது மூத்த சகோதரி போல் அன்பு காட்டுவார். ஸ்ரீதரின் 'காதலிக்க நேரமில்லை' சினிமாப்படம் அப்போது வெளிவந்திருந்தது. அதைப் பார்க்க வேண்டுமென்று வீரகேசரி ஆசிரியர் பீட நண்பர்கள் சிலருக்கு ஆசை. ரிக்கற் எடுப்பது பெரும் கஷ்டம். பெண்ணொருவரைக் கூட்டிச் சென்றால் இலகுவாக ரிக்கற் எடுக்கலாமென நண்பர் ஒருவர் ஆலோசனை சொன்னார். அன்னலட்சுமியின் ஞாபகம் வந்தது. அவரைக் கேட்ட போது YOU ARE BADLY MISTAKEN எனச் சினந்தார். சாது போல் தான் இருப்பார். ஆனால் அவரது கோபம் பொல்லாதது. என்னை ஊக்குவித்து தான் ஆசிரியராக இருந்த மித்திரன் வாரமஞ்சரியில் எனது கட்டுரைகளை வெளியிட்டார். அந்த ஊக்குவிப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லாதிருந்தால் நான் எழுதியிருக்க மாட்டேன். அவர் தொடர்ந்து தனது நூல்களை வெளியிட வேண்டும்.

**வீ.தனபாலசிங்கம்**
**(பிரதம ஆசிரியர், தினக்குரல்)**

என்னைத்தான் அன்னலெட்சுமி வாழ்த்த வேண்டும். அன்னலட்சுமி வீரகேசரியில் சேர்ந்த ஆண்டில் நான் பாடசாலை மாணவன். எனவே நான் அவரை வாழ்த்துவது விசித்திரமானது. 1977 ஆம் ஆண்டு தொடக்கம் அவரைத் தெரியும். நீண்ட காலம் பத்திரிகைப் பணியில் இருக்கிறார். மித்திரன் வாரமஞ்சரி ஆசிரியராக இருந்தார். யாரோடும் கண்டபடி கதைக்காத சுபாவமுடையவர். தன்னோடு பணிபுரிந்தவர்கள் அனைவரையும் பதிவு செய்திருப்பதை 'நினைவுப் பெருவெளி' நூலை வாசித்ததில் அறிந்தேன். வீரகேசரியை விட்டு நான் விலகிய பின்னரும் கூட என்னில் அக்கறை காட்டி வருகிறார். இங்கு நான் பேசுவது ஒரு திருப்பம். பத்திரிகைத் துறை முன்னோடிகள் இப்படி நினைவுப் பதிவு செய்வதை நினைக்கவில்லை. ஆனால் அன்னலெட்சுமி செய்து விட்டார். எந்தவொரு பத்திரிகையிலும் தங்கள் மனச்சாட்சிப்படி பணி செய்தவர்கள் தான் இப்படி மனப்பதிவுகளை எழுதுவார்கள். தனது மனச்சாட்சிப்படி தான் செய்யும் தொழிலின் மேன்மையை உணர்ந்திருக்காவிட்டால் அன்னலெட்சுமி இப்படி எழுதியிருக்க மாட்டார். அந்தக் காலத்தில் காணப்பட்ட ஆசிரிய பீட அலுவலகங்களின் ஊடாட்டத்தை இந்நூல் மூலம் அறிய முடிகின்றது.

இன்றைய பத்திரிகை ஆசிரிய பீடங்களில் அத்தகைய நேசிப்பு இல்லை. இன்று சுற்றி இருப்போர் மத்தியில் போட்டி, கழுத்தறுப்புக்கள் தான் காணப்படுகின்றன. அன்று பாலசிங்கம், கார்மேகம் நாமெல்லாம் சகஜமாகப் பழகினோம். அன்னலெட்சுமி சுமாரான காலம் கொழும்பில் வாழ்ந்திருந்தாலும் அவருக்குச் சிங்களம் உரிய முறையில் சரளமாகப் பேச வராது. இதைக் கார்மேகம் சந்தர்ப்பமொன்றை ஆதாரப்படுத்தி சொன்னார். தாங்கள் சென்ற வாகனம் சைக்கிளொன்றை மோதி விழுத்தி விட்டதாம். வாகனத்தை விட்டு இறங்கிய அன்னலெட்சுமி 'சமாவென்ட எப்பா!' (மன்னிக்க வேண்டாம்! எனச் சைக்கிளோட்டியிடம் சொன்னாராம். இத்தகைய சுவாரஸ்யமான சிறு நிகழ்வுகளும் நூலில் வந்திருக்க வேண்டும். தனது வளர்ச்சிக்கு உதவியாக இருந்தவர்களையும் நன்றியோடு பதிவு செய்துள்ளார். இத்தகைய நூல்கள் இனி வரப்போகும் பத்திரிகையாளர்களுக்கு நல்ல வழிகாட்டிகள். இதை மற்றவர்களும் பின்பற்ற வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தலைமையுரை :**
**மூத்த இலக்கியவாதி பத்மா சோமகாந்தன்**

பத்திரிகையொன்றில் ஒரு பெண் ஐம்பதாண்டு காலத்துக்கும் மேலாகப் பணி புரிவது வித்தியாசமானதும் புதுமையானதுமாகும். அன்னலெட்சுமி யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் பிறந்தவர். நாட்டின் நிலைகள் மிகவும் அசாதாரணமாக இருந்த காலத்தில் வீரகேசரிப் பத்திரிகை நிறுவனத்தில் தொடர்ச்சியாக ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாகப் பணி புரிகிறார். இப்பெருமை அன்னலெட்சுமிக்கு மாத்திரமின்றி வீரகேசரிக்கும் உரியதாகும்.

பெண் என்றால் கணவன், குடும்பம், வீடு என்ற அடிப்படைச் சிந்தனைகளைப் புரட்டிப் போடும் செயல் இதுவாகும். சாதனை புரிந்த பெண்கள் பட்டியலில் இடம்பெறத்தக்க பெண் அன்னலெட்சுமி. பத்திரிகை உலகிற்கு வரும் பெண்கள் தயங்கும் நிலையில் பல்வேறுபட்ட நெருக்கடிகளுக்கு முகம்கொடுத்துக் கத்தி முனையில் பத்திரிகைப் பணியைச் செய்திருக்கிறார். ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் உலக நிலை மிகவும் மாறுபட்டிருந்தது. பெண்கள் தொழில் பார்ப்பதைத் தாழ்ச்சியாகக் கருதிய காலமது. அக்காலத்தில் பிரபல தமிழ்த் தினசரியாக வீரகேசரி இருந்தது. NEWS (NORTH, EAST, WEST, SOUTH) திசைகளின் முதல் ஆங்கில எழுத்தால் உண்டாக்கப்பட்ட சொல் நான்கு திசைச் செய்திகளையும் திரட்டிப் பெற்றதென்ற கருத்துத் தருவது, ஓடித்திரிந்து செய்திகளைத் திரட்டி பத்திரிகையில் வெளியிட எப்படிப் பெண்களுக்குச் சாத்தியமாகும்? கவிதை, சிறுகதை, நாவல், கட்டுரை, நாடகம், உரைச்சித்திரம், நேர்காணல் என்ற வடிவங்களில் முத்திரை பதித்தவர். ஜோதி, மித்திரன் வாரமலர், கலைக் கேசரி எனப் பல ஏடுகளில் அன்னலெட்சுமி கனகச்சிதமான சேவை புரிந்தவர். புரிந்து கொண்டுமிருக்கிறார். தனது சக பணியாளர்கள் எவரோடும் முரண்படாது மாசு மறுவற்ற சேவைகளைப் புரிந்து தனக்கென்றதொரு ஸ்தானத்தை நிலைநாட்டி இருக்கிறார். பலரை எழுத்துத் துறையில் ஊக்குவித்து அத்துறையில் பிரகாசிக்க வைத்தவர். இதழியல் எழுத்தோடு வேறு பல அம்சங்களில் தன் திறமைகளைக் காட்டியவர். திறமை மிக்க பெண்களைப் பத்திரிகை மூலம் அறிமுகப்படுத்தினார். ஏராளமான பிரமுகர்களைப் பேட்டி கண்டுள்ளார்.

அன்னை தெரேசா, மகாகவி பாரதியாரின் பேத்தியார் போன்ற சர்வதேச புகழ்பெற்ற பல பெரியார்களைச் சந்தித்துப் பேட்டி கண்ட வாய்ப்பைப் பெற்றவர். பி.பி.சி. ஒலிபரப்பும் 'தமிழோசை' நிகழ்ச்சிக்கு இலங்கை மடல் எழுதினார். அக்காலத்தில் பெண்கள் கால்பதிக்காத இடங்களுக்கெல்லாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலைந்து திரிந்து வீரகேசரிக்கு REPORTING செய்தார். கொழும்புச் சூழலில் நடைபெற்ற நிகழ்ச்சிகளை எழுதினார். இது சிறு கைபேசிக்குள் (MOBILE PHONE) உலகை அடக்கும் கணனி யுகம். சீனத்தலைநகர் பீஜிங்கில் நடைபெற்ற சர்வதேச மகளிர் மகாநாடு, தமிழ் நாட்டில் நடைபெற்ற செம்மொழி மகாநாடு என்பவற்றில் பங்குபற்றினார். அன்னலெட்சுமி தனது எழுத்து மூலமாக மக்களுக்குச் செய்த சேவைகளின் திரட்டே 'நினைவுப் பெருவெளி' நூல். எண்பதாண்டுகளைத் தாண்டிய பணியில் இப்போது வீரகேசரி பயணிக்கின்றது. அதில் ஐம்பதாண்டுகளுக்கும் அதிகமான பணி அன்னலெட்சுமிக்கு இருக்கின்றது. 'சிற்பி' சரவணபவனின் 'கலைச்செல்வி' சஞ்சிகையில் 'யாழ் நங்கை' என்ற பெயரில் சிறுகதை, கட்டுரைகளை எழுதினார். இப்போது வெளிவந்து கொண்டிருக்கும் 'கலைக் கேசரி' சஞ்சிகைக்கு ஆசிரியராகப் பணிபுரிகிறார். கண்ணைப் பறிக்கும் படங்கள், கருத்தைப் பறிக்கும் பல அம்சங்களோடு இச்சஞ்சிகை வெளிவந்து கொண்டிருக்கின்றது. இதுவரை இலங்கையில் இப்படியொரு வடிவமைப்பில் சஞ்சிகையொன்று வெளிவந்ததில்லை. இது அன்னலெட்சுமிக்கே கூடுதலான பெருமையைத் தருகின்றது. இச்சஞ்சிகை யின் பொறுப்பை ஒரு பெண்ணிடம் கையளித்ததற்காக EXPRESS NEWS PAPERS நிறுவனத்துக்கு பெண்கள் சார்பில் நன்றி கூறுகின்றேன்.

**வெளியீட்டுரை :**
**ரி.தயாளன்**

எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் நிறுவனம் அதன் 82 ஆவது அகவையில் நூலொன்றை வெளியிடுவது அதன் புதிதான செயலல்ல. 1970 இல் இந்நிறுவனம் வெளியிட்ட மாதமொரு நூல்கள் மிகப்பெரும் வரவேற்பைப் பெற்றன. அப்பணி மீண்டும் தொடரவிருக்கின்றது. சிறந்த மாணவர்களுக்கான நூல்கள், கட்டுரை நூல்கள் வெளியிடவிருப்பதாக அறிகிறோம். இதே வரிசையில் இன்று அன்னலெட்சுமி இராஜதுரையின் 'நினைவுப் பெருவெளி' வெளிவந்துள்ளது. வீரகேசரியின் வளர்ச்சிப் படிகளையும் இந்நூல் மூலமாக அறியக் கூடியதாக உள்ளது. இரு தடவைகள் வாசித்தேன். இதற்கு நல்லாதரவு வழங்கி, ஆசிரியரைப் பெருமைப்படுத்த வேண்டும்.

**சிறப்புரை :**
**பேராசிரியர் சபா ஜெயராசா**

வீரகேசரி வெளியீட்டுப் பகுதியின் மிகப் பெரிய தடமிது. இந்நாட்டில் நிகழ்ந்த நான்கு வரலாற்று நிகழ்வுகளின் ஒன்றிணைப்பாக இந்நூல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணப்படுகிறது. அன்னலெட்சுமி இராஜதுரையின் வரலாறு தமிழியல் துறை வரலாறு, தமிழ்த் தேசிய வரலாறு, தமிழ்ப் பண்பாட்டு மாற்ற வரலாறு என்பனவற்றை இவ்வெழுத்துக்கள் தொட்டுச் செல்கின்றன. பொருத்தமான வகையில் தொடர்புபடுத்துகின்றது. மிக நேர்த்தியாக இருக்கின்றது. அக்காலத்தில் தமிழ்த் துறையில் இரு பெண்மணிகள் கவனத்தைக் கவர்ந்தவர்களாக இருந்தனர். அன்னலெட்சுமி இராஜதுரை, யோகா பாலச்சந்திரன் ஆகியோர்களே அவ்விருவரும்.

யோகா பாலச்சந்திரன் வெளிநாடு சென்று விட்டார். 1950 களுக்கு முன் தமிழிதழியல் துறைக்குப் பெண்கள் வருவதில்லை. இவர்கள் புதுவரவாக வந்தனர். வீரகேசரி பெண் பத்திரிகையாளர்களை மிகவும் கௌரவமாக நடத்தியது. வீரகேசரிக்குப் புதிய அச்சு இயந்திரம் வந்த போது அதன் பொத்தானை அமத்தி இயங்க வைக்கும் வாய்ப்பை அன்னலெட்சுமி இராஜதுரைக்கே கொடுத்தனர்!

ஒரு குடும்பமாகவே வீரகேசரி நிறுவனம் இயங்குகின்றது. அன்னலெட்சுமி யின் இதழியல் செவ்விகளை சாதாரண மக்களும் உணர்ந்து வாசிக்கலாம். MEDIA STYLE, CREATIVE STYLE என்ற இந்த இரு எழுத்து நடைகளும் சார்ந்த நிலையில் 'நினைவுப் பெருவெளி' நூல் அமைக்கப்பட்டுள்ளது. இருவித பிரபல எழுத்து நடைகளின் சங்கமத்தில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. தமிழ்த் தேசிய இன வளர்ச்சியோடு வளர்ந்து வந்தது வீரகேசரிப் பத்திரிகை. அதன் நாடியோட்டத்தை மக்களுக்கு எடுத்துச் சொன்னது இப்பத்திரிகை. எனவே வீரகேசரி ஒரு தலை சிறந்த நாளேடாகும். அன்னலெட்சுமி இராஜதுரையிடம் விடயங்களை நேராகப் பார்க்கும் பண்புண்டு. வாழ்க்கை நயப்புகளை இரசிக்கிறார். மற்றவர்களிடம் உள்ள சிறப்பே அவருக்குப் பெரிதாகத் தெரியும். அனைவரையும் நூலில் சொல்லியுள்ளார். அனைவரையும் அரவணைக்கும் பண்பாளர். அக்காலத்து PHOTO JOURNALIST (புகைப்படச் செய்தியாளர்) களையும் நூலில் குறிப்பிட்டுள்ளார். சகல நடவடிக்கைகளிலும் பங்கு கொண்டுள்ளார். அவரது ஐம்பது வருடகாலப் பத்திரிகை வரலாறு பதகளிப்பு நிறைந்ததாகும். இத்தகைய பதகளிப்புகள் ஆக்க சிந்தனையைத் தூண்டுபவை. அத்தகைய ஆவணமாகத் தான் இந்நூலும் அமைந்துள்ளது. கலைகள் அகவயமானவை. POST MODERNISM இதைத் தகர்க்கிறது. அகவயம், புறவயம் என்ற இரு எல்லைகளையும் இந்நூல் தகர்க்கின்றது. வழிகாட்டி நூலாகப் பயன்படத்தக்கது. இந்நோக்கில் எழுதப்படும் ஆக்கங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்பரிமாணங்களைக் கொண்டவையாகும். நினைவுப் பெருவெளி தன்னியல் நிறைகளை ஒட்டிய நூலாகும்.

*நூல் வெளியீட்டு நிகழ்வில் கௌரவ டி.எம்.சுவாமிநாதன் நினைவுப் பெருவெளி நூலின் முதல் பிரதியை புரவலர் ஹாஷிம் உமருக்கு வழங்கினார். சிறப்புப் பிரதிகள் தகைசார் பெரியோருக்கு வழங்கப்பட்டன.*

**கருத்துரை:**
**சாந்தி சச்சிதானந்தன்**
**(பணிப்பாளர், விழுது மையம்)**

அரசியலுக்கும் ஊடகத்துறைக்கும் முக்கிய பண்புண்டு. அதிகாரத்தன மொன்று இவைகளுக்குண்டு. தீர்மானம் எடுக்கும் அதிகாரம் அரசியலுக்குண்டு. கருத்துருவாக்க அதிகாரம் ஊடகத்துக்கு உண்டு. இச்செயற்பாட்டை இலேசுபட்டதாகக் கருத முடியாது. ஒரு புகைப்படம் உலக வரலாற்றில் மாற்றத்தை ஏற்படுத்தும். வியட்னாமில் ஜனாதிபதிப் பதவியிறக்கம் நடைபெற்றுள்ளது. நிதி வளங்களைக் கட்டி ஆளும் செல்வாக்கு ஊடக நிறுவனங்களுக்குண்டு. ஊடகத்துறைக்குள் பெண்கள் நுழைவது குறைவு. அன்னலெட்சுமி இராஜதுரை அக்காலத்திலேயே சாதனை படைத்தது பாராட்டத்தக்கதாகும். 'நினைவுப் பெருவெளி' நூல் முக்கியமானதொரு ஆவணம். அருமையான வாசிப்புத் தேறுகின்றது. நிகழ்வுகளை விலாவாரியாகத் தந்துள்ளார். 1990களில் நாங்கள் அர்ப்பணிப்பாளர்களாக இருந்தோம். எம்.ஜி.ராமச்சந்திரன் நடந்து வீரகேசரிக்கு வந்து தேநீர் குடித்து விட்டுச் சென்றிருக்கிறார். இப்படி ரஜனிகாந்த் இப்போது வர முடியுமா? இத்தகைய அனுபவங்கள் அன்னலெட்சுமி இராஜதுரைக்குக் கிடைத்ததை வாசித்த போது பொறாமையாகத் தான் இருந்தது.

நடிகவேள் எம்.ஆர்.ராதா, எம்.ஜி.ஆரைச் சுட்டதைப் பற்றியும் நூலில் உண்டு. ராதா ஏன் அப்படிச் சுட்டார்? என அறிய ஆவலாக இருக்கிறது. அதை அன்னலெட்சுமி சொன்னால் நன்று. எம்.ஜி.ஆரின் சொந்தக் காரரொருவரும் அக்காலத்தில் வீரகேசரியில் வேலை செய்ததுண்டாம். எழுத்தாளர்கள் தாமாகவே உதிப்பவர்களல்லர்.

-30.04.2012

*குறிப்பு: இந்நிகழ்வின் தொடர் பதிவு 01.05.2012 'தினக்குரலில்' வெளிவந்தது. அதனைப் பெற இயலவில்லை. மன்னிக்கவும்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 42

## சிற்பனை கீதா கணேஷின் 'எத்தனங்கள்' நூல் அறிமுகம்

உலகச் சிற்றிதழ்கள் சங்கக் கொழும்புக் கிளையின் ஏற்பாட்டில், சிற்பனை கீதா கணேஷின் 'எத்தனங்கள்' சிறுகதைத் தொகுப்பின் அறிமுக விழா பிரபல இலக்கியவாதி பத்மா சோமகாந்தன் தலைமையில் 13.05.2012 ஆம் திகதி கொழும்புத் தமிழ்ச் சங்க விநோதன் மண்டபத்தில் நடைபெற்றது.

கலாபூஷணம் அந்தனி ஜீவா வரவேற்புரை நிகழ்த்தினார்.

**தலைமையுரை:**
**பிரபல இலக்கியவாதி பத்மா சோமகாந்தன்**

அந்தக் காலத்துப் பெண்கள், தாம் உற்சாகமாக இருக்கும் பொருட்டு இன்ப துன்பங்களை, சிந்தனைகளை வேலைகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் போது ஒப்பாரியாகப் பாடியும் சொல்லியும் வெளிக் கொணர்வதுண்டு. அகத்துக்குப் பெண்கள் புறத்துக்கு ஆண்கள் என்ற நிலையே அன்றிருந்தது. இன்றைய பெண் கற்றுத் தானே தொழிலும் செய்கிறாள். பழைய நிலை மாறிவிட்டது. படித்த பெண்கள் தமது பார்வையைப் பரப்ப எத்தனிக்கின்றனர். பிறரோடும் தமது தொடர்புகளை ஏற்படுத்துகின்றனர். கருத்துக்களை இலக்கிய வடிவமாக்கிச் சிறுகதைகள், நாடகங்கள், கவிதைகள், கட்டுரைகள் மூலமாகப் பகிர்ந்து கொள்கின்றனர். 'எத்தனங்கள்' சிறுகதைத் தொகுப்பின் ஆசிரியை கீதா கணேஷ் சிறுகதை மூலமாக எம்முடன் பேச எத்தனித்துள்ளார். பற்றைகளை வெட்டிப்பாதை அமைத்த பவானி ஆழ்வாப்பிள்ளை, பூரணி, குந்தவை போன்றோரது சந்ததியைச் சேர்ந்தவள் நான். என்னோடு சேர்ந்து எழுத்துப் பணி செய்தவர்கள் அவர்கள். சாதி, சீதனம், வறுமை என்பவற்றின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுமைகளை அன்று நாம் பார்த்து ஆக்க இலக்கியம் படைத்தோம். இதைப் பெரும் புதினமாக அன்று சொன்னார்கள்.

இத்தகைய வழிகளில் பெண்கள் வெளிவருவதை ஆச்சரியத்தோடு நோக்கினர். அந்தக் காலத்தில் 'வீரகேசரி', பத்திரிகையின் மகளிர் பத்தியில் அறிவுள்ள கணவனா? அழகுள்ள கணவனா? பெண்ணுக்குத் தேவை என்ற விவாதம் நடந்தது. அறிவு தான் ஆணுக்கு அழகு என எனது வாதத்தை முன்வைத்தேன். பெரும் சர்ச்சை ஏற்பட்டது. 'சுதந்திரன்' பத்திரிகை பச்சை நிறத்தையும் அழகிய கணவனையும் நான் விரும்புவதாக நக்கலாக எழுதியது. இந்த வகையில் அன்று நாம் பற்றையை வெட்டிப் பாதை அமைத்தது சந்தோஷமாக இருக்கின்றது. மிகவும் அருந்தலாக அந்தக்காலத்தில் இரண்டோ அல்லது மூன்றோ பெண்கள் தான் பத்திரிகை, சஞ்சிகைகளில் எழுதினோம். டி.கே.பட்டம்மாள் பற்றி வீரசேகரி இல் கட்டுரை எழுதினேன். திருமணம் செய்ய முடியாமல் போய்விடும் என்றதுக்காகப் பட்டம்மாளின் தந்தையார் அவரைக் கச்சேரிகளில் பாடுவதுக்குச் சம்மதிக்கவில்லை. அன்றைய பெண்களைக் கோயில்களில் பலியிடும் கடாக்களைப் போல் தான் வளர்த்தனர். பெண் கல்வி நடைமுறைக்கு வந்த பின் பெண்ணுக்குச் சுதந்திரம் கிடைத்தது. சொல்லப் போனால் மிகக் கஷ்டப்பட்டே பெண்கள் இன்றைய நிலையைப் பெற்றனர்.

அன்றைய கணவன்மார்கள் பெண்களை எழுத விடமாட்டார்கள். இன்று பெண்களுக்குப் பல வாய்ப்புகளும் இருக்கின்றன. நேரமும் கிடைக்கின்றது. அப்போ காஸ் அடுப்புகள் இல்லை. தேடலுக்கான சாதனங்கள் பல்கிப் பெருகிவிட்டன. வாசிப்பு மிக, மிக அவசியம். இன்று நல்ல பல விடயங்களை அறிந்து கொள்ள வாய்ப்புகளுண்டு. கோயில், திருமணச் சடங்குகள் என்பவற்றில் தான் அன்று பெண்களைக் காண முடியும். இன்றைய மாறுபட்ட சூழல் பெண்ணுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தியிருக்கிறது.

பெண்கள் கற்பதுக்கான வாய்ப்புகள் நிறையவே உண்டு. பாடநெறிகள் உண்டு. ஞானத் தேடலுக்கான வசதிகள் உண்டு. வானொலி, தொலைக்காட்சி போன்ற அறிவை விசாலப்படுத்துவதற்கான பல தளங்கள் உண்டு. இவைகளை உகந்த முறையில் இன்றைய பெண்கள் பயன்படுத்தினால் பல அம்பைகளைத் தரிசிக்க முடியும். சிறுகதை எழுதுவது தவம். சமுதாயத்தைக் கட்டியெழுப்பும் பொறியியலாளர்கள் படைப்பாளிகள். அரைத்த மாவையே அரைப்பது, பழையனவற்றைப் பிரதி பண்ணும் போக்கே இன்றைய படைப்புகளில் காணப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றைய போட்டிகள் மூலமாக வெளிவரும் படைப்புகளும் இதையே தான் காட்டுகின்றன. சொல்ல நினைத்த விடயத்தைக் கூர்மையாகவும் வித்தியாசமாகவும் நுட்பமாகவும் எழுதினால் ஆரோக்கியமாக இருக்கும். பெண்களின் எழுத்துக்கு இலங்கையில் ஆதரவுண்டு. தமிழ்நாட்டில் பல குழுக்கள் இயங்குகின்றன. அங்கு நிறையப் பிரச்சினைகள் உண்டு. இருந்தும் தமிழகப் பெண் எழுத்தாளர்கள் தரமாக எழுதுகிறார்கள். நல்ல கருத்துகளைப் பெண் எழுத்தாளர்களும் வெளிப்படுத்த வேண்டும். இலங்கைக்குத் தமிழகப் பிரபல எழுத்தாளர் சிவசங்கரி வந்தார். எனது தலைமையில் சந்திப்பொன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அன்னலெட்சுமி இராஜதுரை, கமலினி செல்வராஜன் ஆகியோரும் வந்திருந்தனர். 'இலக்கு' என்ற சஞ்சிகையில் எழுத்தாளர் பிரபஞ்சன், பெண் எழுத்துக் குப்பை எனக்கருத்து வெளியிட்டிருந்தார். இது பற்றிச் சிவசங்கரியிடம் கேட்ட போது அது அவர் அபிப்பிராயம் என்றார். இத்தகைய கணிப்புகள் இங்குள்ள பெண் எழுத்தாளர்களுக்கு இல்லை. இதையொரு ஊக்கியாகக் கணித்து இங்கு 'ஹரிபோட்டர்' என்ற நாவல்களைப் படைத்த றோலிங் போன்ற உலகம் போற்றும் பெண் எழுத்தாளர்கள் உருவாக வேண்டும்.

**நூல் வெளியீட்டுரை :**
**மூத்த பத்திகையாளர் அன்னலெட்சுமி இராஜதுரை**
**(ஆசிரியர், கலைக்கேசரி)**

கீதா கணேஷ் வேலணையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். யாழ். பல்கலைக்கழகத்தில் தமிழைச் சிறப்புப் பாடமாகக் கற்றுப் பட்டம் பெற்றவர். சிறப்புப் பாடநெறிக்காக என்னோடு தொடர்பு கொண்டு நெருக்கமானவர். 'எத்தனங்கள்' சிறுகதைத் தொகுப்பை முதலில் யாழ். பல்கலைக்கழகத்தில் வெளியிட்டார். வீரகேசரி பத்திரிகையில் இப்போது பத்திரிகையாளராகக் கடமை புரிகிறார். எழுத்தாளராக வேண்டுமென்ற ஆர்வமுண்டு. நல்ல இலட்சியத்தையும் பண்பையும் தன்னகத்தே கொண்டவர். இவர் மேலும் எழுத்துத்துறையில் சிறக்க வேண்டுமென வாழ்த்துகிறேன். ஈழத்து எழுத்தாளர்கள் நாற்பதாண்டுகளுக்கு முன் சாதி, சீதனம், காதல் பிரச்சினைகளைக் கருப்பொருளாக்கிப் புனைகதை படைத்தனர். அது அமைதியான கால கட்டமாக இருந்தது. அரசியல் பிரச்சினைகள் இருக்கவில்லை. அந்தக் காலத்தில் புத்தகமொன்றை வெளியிடுவதென்பது பெரும் சுமையாக இருந்தது.

எழுத்தாளரொருவர் நூலொன்றை வெளியிடுவதாகில் 15 அல்லது 25 வருடங்கள் எடுக்கும். இப்போ இந்த நிலை மாற்றங்கண்டுள்ளது. தகவல் தொழில்நுட்பம் பாரிய மாற்றத்தைக் கொண்டு வந்துள்ளது. அவ்வாய்ப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களைச் சரியான முறையில் பயன்படுத்தித் தான் கீதா கணேஷ் 'எத்தனங்கள்' தொகுப்பை வெளியிடுகின்றார். இன்று வாழ்க்கைக்குப் பல சவால்கள் தோன்றியுள்ளன. எழுத்தாளர் பார்வையிலும் வித்தியாசங்கள் உண்டு. இந்திய சுதந்திரப் போராட்டக் காலத்தில் சுதந்திரத்துக்கான படைப்புகள் வெளிவந்தன. இலங்கையில் முப்பதாண்டு காலம் நீடித்த யுத்தச் சூறாவளியின் தூவானத்திலிருந்து இலங்கையர் இன்னமும் விடுபடவில்லை. வடக்கு, கிழக்கு மக்களின் வாழ்க்கை பல சவால்களுக்கு முகங்கொடுத்துக் கொண்டிருக்கின்றது. புலப்பெயர்ச்சி, பொருளாதார-கலாசாரச் சிக்கல் இவைகளை, எழுதும் எழுத்தாளர்கள் தமது படைப்பு களில் கையாண்டார்களா? என்ற கேள்வி எழுகின்றது. விதவைகள் உருவாகியிருக்கின்றனர். இக்கால கட்டத்தில் பிறந்தவர் தான் 'எத்தனங்கள்' ஆசிரியை கீதா கணேஷ். இவைகளின் பாதிப்பு அவருக்குமுண்டு. ஓர் இளம் மாணவி என்ற நோக்கில் தனது பார்வையைச் செலுத்தியுள்ளார். தொகுப்பின் பதினொரு கதைகளும் பல்வேறு கஷ்டங்களைக் காட்டுகின்றன.

இந்நூலாசிரியருக்கு நிறையவே காலமுண்டு. தனது பர்ர்வையை எதிர்காலத்தில் ஆழமாக்க நிறைய வாய்ப்புகளுண்டு. தகுந்த அனுசரணை களும் உண்டு. அவைகளைப் பயன்படுத்தி, தான் கையாளும் விடயங்களுக்கு நல்ல தீர்வுகளைத் தர வேண்டும்.

*காப்பியக் கோ ஜின்னாஹ் ஷரிபுத்தீன் கவி வாழ்த்துப் பாடி நூலாசிரியையை வாழத்தினார்.*

*நூல் வெளியீட்டில் மூத்த பத்திரிகையாளர் அன்னலெட்சுமி இராஜதுரை எத்தனங்கள் நூலை வெளியிட்டு அதன் முதல் பிரதியைப் புரவலர் ஹாசிம் உமருக்கு வழங்கினார்.*

*சிறப்புப் பிரதிகளைப் புரவலர் ஹாசிம் உமர், பேராசிரியர் சபா ஜெயராசா, மனநல வைத்திய நிபுணர் எஸ்.சிவதாஸ் ஆகியோர் தகைசார் பெரியோருக்கு வழங்கினர்.*

**'எத்தனங்கள் நூல்' பற்றிய கண்ணோட்டங்கள்:**
**தமிழ்த் தென்றல் தம்பு சிவா**

இத்தொகுப்பின் சிறுகதைகளில் படைப்பாளி தனது மன அழுத்தங்களை வெளிக் கொணரும் போக்குண்டு. விளிம்பு நிலை மக்களைச் சமுதாய உயர்மட்டம் சுரண்டுகின்றது. சமுதாயம் சீரழிகின்றது. இவைகளுக்காக இலக்கியம் எதிர்க்குரல் எழுப்ப வேண்டும். எழுத்தாளர் பேனாவைத் தூக்க வேண்டும். சுரண்டல், மூட நம்பிக்கை, வர்க்க பேதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவைகளுக்கான காத்திரமான தீர்வை எழுத வேண்டும். தொகுப்பின் பதினொரு சிறுகதைகளும் நடப்பியல் வாழ்க்கையை முன்னெடுத்து மனிதத்தைத் தேடுகின்றன. அநாதரவான இளம் பெண்கள், சிறுவர்கள், விதவைகள் இத்தகைய பல அம்சங்களைக் கதைகளில் காண முடிகின்றது. புதிய சிந்தனைகளைத் தூண்டுகின்றன. உறுத்தல்களை வெளிக்கொணரும் உந்தல் கீதா கணேஷிடமுண்டு. அவலங்களைக் கதைகளின் மூலமாக வித்தியாசமாகத் தரிசிக்க வைக்கிறார்

சமுதாயப் பார்வைக்குக் கதைகள் கட்டியம் கூறுகின்றன. 'கற்பூரம்' சிறுகதை மனித நேய வெளிப்பாடு. பிள்ளைகளின் முன்னேற்றத்தில் அக்கறை காட்டாது தொலைக்காட்சி நாடகத்தில் மூழ்கிக் கிடக்கும் பெண்ணை 'யார்க் கெடுத்துரைப்பேன்' தரிசிக்க வைக்கின்றது. 'பாகற்காய்' பெரியோரின் அங்கலாய்ப்புகளைத் தருகின்றது. யாழ்ப்பாண மக்களின் வாழ்வை, இருப்பைத் தேடி அப்பட்டமாக அறிய வைக்கின்றது. கீதா கணேஷின் சிறுகதைப் படைப்பு எதிர்காலத்தில் மேலும் கனதியாகுமென்பதை எத்தனங்கள் சிறுகதைத் தொகுப்பு உணர்த்துகின்றது. எஸ்.சிவதாஸ் வடிவமைத்த அட்டைப்படம் மீள்குடியேற்றத்தைச் சித்திரிக்கின்றது.

### சட்டத்தரணி. சுகந்தி ராஜகுலேந்திரா

மிகவும் பலம் வாய்ந்த இலக்கிய வடிவம் சிறுகதை. மக்களைச் சென்றடையக் கூடியது. பத்திரிகைகள், சஞ்சிகைகளில் பல்வேறுபட்ட சிறுகதைகள் வருகின்றன. மேலைத்தேயத்திலிருந்தே வந்ததெனச் சில ஆய்வறிஞர்கள் சுட்டுகின்றனர். ஈழத்துச் சிறுகதை வரலாறு என்ற நூலில் செங்கை ஆழியான், செய்யுள் வடிவிலேயே தமிழின் மரபு இலக்கியம் அமைந்திருந்தது எனக் குறிப்பிடுகிறார். வ.வே.சு.ஐயர், சுப்பிரமணிய பாரதியார், மாதவையா ஆகியோரே தமிழ்ச் சிறுகதைகளின் முன்னோடிகளென அறியப்படுகிறது. பாரதியின் 'துளசி பாய்' என்ற சிறுகதை தான் தமிழின் முதல் நவீன சிறுகதையென மாலன் சுட்டுகிறார். 1841 இல் இலங்கையில் வெளிவந்த 'உதயதாரகை' என்ற ஏட்டின் ஆசிரியர் ஜே.ஆர்.ஆர்னோல்ட் சதாசிவமும் அதில் பல சிறுகதைகளை எழுதினார். செங்கை ஆழியான் ஈழத்து இலக்கிய வளர்ச்சிக் காலங்களை வகுத்துள்ளார். 1961-1983 வரைக்கான காலப் பிரிவை முற்போக்குக் காலமெனவும், 1983க்குப் பின் தமிழ்த் தேசிய உணர்ச்சிக் காலமெனவும் வகுத்துள்ளார். 2009க்குப் பின்னரான காலத்தைப் போர் வடுக்களின் அவலக் காலமெனக் கூறலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொகுப்பின் கதைகளது கருவாக போர், அகதி, இழப்புகள் என்பன உள்ளன. பண்டைய வாழ்வை இழக்கக் கூடாது. சிறு கதைகளில் சுவராஸ்யம் இருந்தால் தான் அவை வாசகரின் வரவேற்பைப் பெறும். 'இருப்பைத் தேடி' அருமையான கதை. 'நிறத்தின் விலை' என்ற கதையில் போருக்குப் பின்னரும் எமது சமுதாயம் திருந்தவில்லை, சீதனம் கொடுக்க வேண்டுமென்போருக்கு எதிராக இன்னொரு யுத்தம் நடத்த வேண்டுமென கீதா கணேஷ் சொல்கிறார்.

**வாழ்த்துரை :**

**கௌரவ அதிதி எஸ்.சிவதாஸ் (மனநல வைத்திய நிபுணர்)**

'எத்தனங்கள்' அட்டைப் படம் ஒட்டிசுட்டான் பிரதேசத்தில் எடுக்கப்பட்டது. கொடுக்கப்பட்ட தகரத்தால் அமைக்கப்பட்ட கொட்டிலுக்குள்ளிருந்து பிள்ளைகள் பாடம் படிக்கின்றனர். புத்தகங்களை அடுக்கப்பாவிக்கும் அலுமாரியும் பழையது. இரவிலே இப்படத்தை எடுத்தேன். கதை சொல்வது பெரிய விடயம். கதைகள் நோய்க்குச் சிகிச்சை அளிக்கும் சக்தி வாய்ந்தவை. அதை நம்மவர்கள் சரியாகப் பயன்படுத்தவில்லை. அது பெருங்குறைபாடாகத் தெரிகின்றது. நான் முகாம்களுக்குச் சென்ற போது கேட்ட கதைகளைப் பதிவு செய்தால் மிகவும் உற்சமாக இருக்கும். முகாம்களிலிருந்த நோயாளிகளைக் கதையாடல்களின் மூலமாகக் குணப்படுத்தியுள்ளோம். இந்த விடயத்தில் எமது எழுத்தாளர்கள் தவறிவிட்டனரென்பதே எனது கருத்தாகும். ஆனால், மேலைத்தேயத்தவர்கள் இதைச் செய்திருக்கின்றனர். நோய்களைக் குணமாக்கும் கதைகளை கீதா கணேஷ் எழுத வேண்டும். ஆண்கள் மாறி விட்டார்கள் என்பது முரண்பாடானதாகும். திருமணத்தின் பின் பெண் எழுதுவதில்லை. இதுவும் முரண்படுகிறது. 'முகமூடிகள்' எந்தவாதத்துக்குப் பொருந்தும். இளம் எழுத்தாளர்கள் பல பிரச்சினைகளையும் எதிர்நோக்க வேண்டும்.

முள்ளிவாய்க்கால் யுத்தத்திற்குப் பின்னரும் ஆணாதிக்கம், சாதி வேற்றுமை அடிப்படையில் மாறவில்லை. குணப்படுத்தும் வழிகளுக்கு நாம் போக வேண்டும். பாதிப்புகளை ஓவியங்களும் காட்டின. கிளிநொச்சிப் பாடசாலையொன்றுக்கு மனநல நோய் சிகிச்சை நிபுணர் அணியொன்று சென்ற போது பிள்ளைகள் விளையாடிக் கொண்டிருந்தனர். காயப்பட்டவர்களை ஓடிப் போய் தூக்குவது, அழுவது, இது தான் அவர்கள் விளையாட்டு. இதன் மூலமாகத் தமது துயரங்களை வெளிப்படுத்தினர். இது அவர்களை ஆரோக்கியப்படுத்துவதற்கான செயற்பாடாகும். இதை எவரும் நிராகரிக்கக் கூடாது. அவர்களை விட்டுவிட வேண்டும். இதில் பல உண்மைகள் இருக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஏற்புரை :**
**நூலாசிரியர் சிற்பனை கீதா கணேஷ்**

யாழ்.பல்கலைக்கழகத்தில் இத்தொகுப்பின் முதல் வெளியீடு 2012 மார்ச் மாதத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. இந்த அறிமுக விழாவை நான் எதிர்பார்க்கவில்லை. கற்பனை கூடச் செய்யவில்லை. கொழும்பில் வீரசேகரியில் வேலை வாய்ப்புக் கிடைத்தது. அதிர்ஷ்டவசமாகிவிட்டது. இந்த வரவேற்பைக் காணும் போது இளம் எழுத்தாளர்களாகிய எமக்கு எதிர்காலத்தில் வரவேற்புக் கிடைக்குமென்ற நம்பிக்கை ஏற்படுகிறது.

பாடசாலையில் நடாத்தப்பட்ட தமிழ்த் தினப் போட்டியில் சிறுகதை எழுதினேன். இதழ்கள், சஞ்சிகைகள் எனது படைப்புகளை வெளியிட்டுக் கைபிடித்து வழிகாட்டின. ஆரோக்கியமான இலக்கிய ஊட்டத் தடத்தில் இலக்கியப் பணி செய்வேன்.

தமிழ் வாழ்த்துப் பாடலோடு அறிமுக விழா நிறைவு பெற்றது.

- 23.05.2012

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 43

## வசந்தி தயாபரனின் 'காலமாம் வனம்' நூல் வெளியீடு

கலை, இலக்கியச் செறிவான சொற்பொழிவுகளாலும் ஆழமான சிந்தனைகளையுடைய எழுத்துக்களாலும் தமிழ் மொழிக்கும் சமூகத்துக்கும் பெருந்தொண்டாற்றுபவர் 'தகவம்' திருமதி வசந்தி தயாபரன். இவரது முதல், சிறுகதைத் தொகுப்பு நூல் 'காலமாம் வனம்' 10.06.2012 ஆம் திகதி கொழும்புத் தமிழ்ச் சங்கச் சங்கரப்பிள்ளை மண்டபத்தில் கலாநிதி செல்வி திருச்சந்திரன் தலைமையில் வெளியிடப்பட்டது.

பெருந்திரளானோர் இந்நிகழ்வில் கூடிச் சிறப்பித்தது, அமரர் வ.இராசையா குடும்பத்தின் தேட்டத்தை அத்தாட்சிப்படுத்தியதோடு, தமிழ்க் கதைஞர் வட்டத் (தகவம்) தின் இலக்கியப் பணியையும் சங்கைப் படுத்துவதாக அமைந்திருந்தது.

பிரபல தமிழிலக்கியவாதி தெளிவத்தை ஜோசப்பும் அவரது பாரியாரும் மங்கல விளக்கேற்றி வைபவத்தைத் தொடக்கி வைக்க, ஆசிரியை சொர்ணலதா பிரதாபன் இனிய குரலில் தமிழ் வாழ்த்துப் பாடினார். வரவேற்புரையைத் 'தகவம்' மு.தயாபரன் நிகழ்த்தினார்.

**தலைமையுரை:**
**கலாநிதி செல்வி திருச்சந்திரன்**
**(பணிப்பாளர், பெண்கள் கல்வி ஆய்வு மையம்)**

நூல் வெளியீட்டு விழா தமிழ்ப்பாரம்பரியத்தில் வேறு விதமாக விளங்கப்படுகிறது. வெளிநாடுகளைப் பொறுத்த மட்டில் நூலாசிரியருக்கு வாழ்த்துக் கூறும் களியாட்டமாகவே இது கருதப்படுகிறது. இப்போதெல்லாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிழமைக்குக் கிழமை நூல் வெளியீட்டு விழாக்கள் இங்கு நடைபெறுகின்றன. ஒரு காலத்தில் நூல் வெளியிடுவதென்பது பகீரதப் பிரயத்தனமாக இருந்தது. இத்தகைய விழாக்களில், நூல் பாராட்டினை மேற்கொண்டு விமர்சனம் செய்வதைத் தவிர்க்க வேண்டும். தற்காலத்தில் நூலாசிரியரைப் புகழ்வது மரபாகிவிட்டது. நூல் நயக்கோட்பாட்டு மரபு நாட்டுக்கு நாடு வேறுபடும். 'கலை, கலைக்காக' என்ற கோட்பாட்டை அழகியல் வாதிகள் முன்வைத்தனர். இலக்கியம் மக்களுக்குப் பயனளிக்க வேண்டுமென்ற கருத்தை மார்க்சியர்கள் முன்வைத்தனர்; 'கலை, கலைக்காகவே' என்பதை நிராகரித்தனர். உணர்ச்சியோடு சம்பந்தப்பட்ட பொருந்தா நிலை கலைகளில் முன் வைக்கப்பட்டது. இது ஏற்றுக் கொள்ளப்படவில்லை. இது இலக்கியத்தை அந்நியப்படுத்தும். ஆனால் நாடகத்துக்குப் பொருந்தும் இரசிகர்களை அந்நியப்படுத்தும் பலம் இலக்கியத்துக்கு இருக்க வேண்டும். தன் நிலை மறந்து வாசகன் இலக்கியத்துக்குள் நிற்க வேண்டும். சுய சிந்தனை வளர வேண்டும். நூல் இயற்றிய பின் அதன் ஆசிரியர் இறந்து விடுவார். 'இறப்பார் என்பது அமங்கலச் சொல்; எனவே இல்லாது போவார்' என்பதே பொருத்தமானதாகும். தனித்துவப் பண்புகள் எம்மிடமில்லை. குழந்தை வளர வளரத் தன்னை உருவாக்கும். இலக்கிய ஆசிரியர் நடைமுறைச் சமூகத்தால் உருவாக்கப்படுகிறார். இதற்கு எதிர்வாதம் எழுந்தது. நூல் வெளியானதும் படைப்பாளி அழிந்து விடுவார் என்பதையும் ஏற்பதற்கில்லை. சிறுகதைக்கு வரைவிலக்கணம் இல்லை. அது வாய்மொழி மூலமாகவே தோன்றியது. வாய்மொழிக் கதைகளின் வளர்ச்சியே சிறுகதை. படைக்கப்பட்ட ஓர் இலக்கியப் படைப்புக்கு எவரும் வரைவிலக்கணமிட்டு அப்படைப்பை வியாக்கியானம் செய்ய முடியும்.

**வெளியீட்டுரை:**

**வைத்திய கலாநிதி எம்.கே.முருகானந்தம்**

'காலமாம் வனம்' நூலாசிரியர் வசந்தி தயாபரன் நுண்ணிய ரசனை உணர்வைக் கொண்டவர். எல்லோராலும் நன்கு அறியப்பட்டவர். பொதுப் பணிகளில் அர்ப்பணிப்பான ஈடுபாடு காட்டுபவர். கொழும்புத் தமிழ்ச் சங்கப் பணிகளில் மிகவும் சுறுசுறுப்பாக இயங்கி வருபவர். அவரிடமிருந்து வெளிப்படும் கருத்துக்கள் வியக்க வைக்கும். மிகுந்த வாசிப்பு இரசனை அவரிடமுண்டு. அவரது சிறுகதைகளை 'மல்லிகை'யில் வாசித்தேன். சிறுகதைகள் பல வகைப்பட்ட கதையாடல்களைக் கொண்டவை. சுவாரஸ்யமான சம்பவங்கள் கதைகளில் இருக்கும். வாசகரின் ஆர்வத்தைத் தூண்டும் நடை அவருக்குக் கைவந்துள்ளது. வாசிப்பில் தொய்வை ஏற்படுத்தாது. தொகுப்பிலுள்ள 'உயிர்க்கூடு' என்ற சிறுகதையின் ஒவ்வொரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரியையும் ஆழமாகப் படிக்க வேண்டும். சிறந்த கருத்துகள் குறியீடுகளுக்குள் கிடக்கின்றன. பிறந்த மண்ணை மறக்க முடியாத நிலையைக் காட்டும் நல்ல கதை. தொகுப்பின் முதல் கதையான 'புதியதோர் உலகம் செய்வோம்' குடும்பம் எப்படிப்பட்டதென்பதை அறிய வைக்கின்றது. இன்றைய வாழ்வைப் பாதிக்கும் பல விடயங்கள் அதற்குள் கிடைக்கின்றன. சமூக நிலையைக் காட்டுகிறது. படைப்பின் பலம் நடையில் தான் உண்டு. இரசனை மிக்க வாசகன் ஆக்கப்படைப்பாளியை ஆக்கத்தின் நடையிலிருந்தே அடையாளங்கண்டு கொள்வான். உமா வரதராசன் மனவெளியில் பயணிப்பவர். தனித்துவமான நடையைத் தன்னகப்படுத்தியுள்ளார். சாந்தன் நறுக்கென விடயத்தைச் சொல்வார். திக்குவலைக்கமால் வட்டாரத் தமிழ் வழக்கில் கதை சொல்வார். காலத்தின் செல்வாக்கை எழுத்து நடைகொண்டிருக்கும். வசந்தி தயாபரனின் எழுத்து நடையில் பல மாற்றங்களை அவதானிக்கலாம். ஒரே பந்தியிலேயே பல மாற்றங்களைக் காட்டுவார். மனித நேயத்தை வெளிப்படுத்தும் கம்பீர நடை அவருடையதாகும். சிறுகதைக்குச் சொல்லும் கோணமும், நோக்கு நிலையும் முக்கியமானவை. படர்க்கையில் நின்று கதை சொல்லக்கூடியவர். ஆசிரியரே பாத்திரமாகவும் கூடுமாறிக் கதை சொல்வார். 'எந்தையும் தாயும்' சுவாரஸ்யமாகக் குழந்தையொன்று கதை சொல்வது 'காலமாம் வனம்' கலை நேர்த்தி மிக்க சுவராஸ்யமான கதை. தொகுப்பின் சிறந்த கதை இது. இருமுறை வாசித்தே விளங்கிக் கொள்ள வேண்டும். வசந்தி தயாபரனுக்குக் கட்டுப்பாடான வாழ்க்கை; இலக்கியம், தந்தை அமரர் வ.இராசையா மாஸ்டர் வழியில் கிடைத்த முதுசம். அண்மையில் கொழும்புத் தமிழ்ச்சங்கச் சர்வதேச தமிழ் இலக்கிய மாநாட்டின் சிறுகதை அரங்கு மட்டுமே மிகவும் நேர்த்தியாக அமைந்திருந்தது. இதற்கு அமைப்பாளராக இருந்தவர் வசந்தி தயாபரன். சிறுவர் இலக்கியத்திலும் உச்சமான ஆர்வம் காட்டுபவர். கொழும்புத் தமிழ்ச் சங்க சிறுவருக்கு கதை சொல்லும் நேரம் நிகழ்ச்சியில் பங்குபற்றும் போது சிறுவர் மொழியில் மிக அழகாகக் கதைகள் சொல்வார். இராசையா மாஸ்டர் இன்று உயிரோடிருந்தால் மகளின் இந்த நூல் வெளியீட்டு விழா கண்டு சந்தோஷித்திருப்பார்.

*'காலமாம் வனம்' நூல் வெளியீட்டில் அதன் முதல் பிரதியைக் கலாநிதி செல்வி திருச்சந்திரன், புரவலர் ஹாசிம் உமருக்கும், சிறப்புப் பிரதியைக் 'கலைக்கேசரி' ஆசிரியர் அன்னலெட்சுமி இராஜதுரைக்கும் வழங்கினார்.*

*கௌரவப் பிரதிகளைச் செல்வி திருச்சந்திரன், எம்.கே.முருகானந்தம், ரமீஸ் அப்துல்லா, அன்னலெட்சுமி இராஜதுரை ஆகியோர் தகைசார் பெரியோருக்கு வழங்கினர்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கருத்துரை :**
**கலாநிதி ரமீஸ் அப்துல்லா**
**(தலைவர்:**
**மொழிகள் பண்பாட்டுத்துறை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்)**

எழுத்தாளரது கடமை வாசகருக்கு இலக்கிய விருந்தளிப்பதல்ல. சமூகத்தின் நிலையைச் சொல்ல வேண்டிய கடப்பாடுமுண்டு. ஈழத்தமிழரது நிலையைக் 'காலமாம் வனம்' தொகுதி வழங்குகிறது. படைப்பாளிகள் தான் மிகப்பெரிய போராளிகள். அவர்கள் முன்னால் நாமெல்லாம் ஆயுதங்களைப் போட்டு விட வேண்டுமெனப் பெரியாரொருவர் கூறியுள்ளார். மனதின் அனுபவ வெளிப்பாடே இலக்கியமாகும். சிறுகதை ஒரு சிறிய மனோ நிலையை எடுத்தாளும். அதில் உணர்ச்சி நிலை அதிகமானதாக இருக்கும். பாத்திரங்கள் முக்கியமானவை. பாத்திரங்களின் மனோ நிலையைச் சரியாக வெளிப்படுத்த வேண்டும். இத்தகைய பண்புகளை வசந்தி தயாபரனின் சிறுகதைகள் கொண்டிருப்பது அவருக்கு வெற்றியைத் தருகின்றன.

1930 இல் ஈழத்தில் சிறுகதைப் படைப்புத் தொடங்கியது. ஈழத்து 'மல்லிகை' சஞ்சிகை மிக முக்கியமான எழுத்தாளர்களுக்கு இடம் அளித்துள்ளது. விமர்சனத்திற்குச் சிறந்த பங்களிப்புச் செய்துள்ளது. 2000 இற்குப் பின்னர் வசந்தி தயாபரனுக்குக் களம் கொடுத்துள்ளது. ஒன்பதுக்கும் மேற்பட்ட இவரது சிறுகதைகளை வெளியிட்டுள்ளது. 1980 இற்குப் பின் புகலிட வாழ்வு, போர்ச் சூழல் என்பன ஏற்பட்டன. சிறுதைகளில் அதன் சித்திரிப்பு வரலாற்று ஆய்வாளர்களுக்கு முக்கியமானதாகும். 'உயிர்க்கூடு' சிறுகதையை வாசித்த போது சினிமாத் திரைப்படமொன்றைப் பார்த்தது போலிருந்தது. தமிழ்ச் சமூகத்தின் நிலை, வாலிபரின் நிலை, புதிய உத்தியில் சொல்லப்பட்டுள்ளன. சொல்லும் பாங்கில், ஓர் தேர்ந்த எழுத்தாளர் வெளிப்படுகிறார். 'பாத்திரமறிந்து..' கதையில் சாதாரண மனித உணர்வுகள் வெளிப்படுத்தப்படுகின்றன. பெண்ணிலைவாத அடையாளம் தெறிக்கிறது. 'கூர்ப்பு'வின் முடிவு செயற்கையாகக் காணப்படுகிறது. 'காலமாம் வனம்' இல் கிழவி தெய்வமாக மதிக்கப்படுகிறாள். 'நாதியற்று' மலையகச் சிறுமி கொழும்பில் வீட்டு வேலைக்காரியாக அமர்த்தப்படுவதைப் பேசுகிறது. தொகுப்பின் கடைசி இரு சிறுகதைகளும் ஒரே கருத்தையே பேசுகின்றன. முதல் சிறுகதையான 'புதியதோர் உலகு செய்வோம்' ஐ தொகுப்பில் சேர்க்காது விட்டிருக்கலாம். தொகுப்புக் கதைகள் தமிழ்ச் சமூகத்தின் வாழ்வின் சிதைவுகளைச் சித்திரிக்கின்றன. அரசியல் கலப்பற்ற சிறுகதைகள். வெளியே வராத பல செய்திகள் வெளிவந்துள்ளன. தொகுப்பை வாசித்த பின் சோகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலந்த மனநிலை ஏற்படுகின்றது. தமிழ்ச் சமூகம் இன விடுதலையை எதிர்கொள்ளத் தயாராக வேண்டும். வசந்தி தயாபரனின் முதல் சிறுகதைத் தொகுப்பான 'காலமாம் வனம்' ஒரு தேர்ந்த எழுத்தாளரை வெளிக்காட்டுகின்றது.

**ஏற்புரை:**
**'தகவம்' வசந்தி தயாபரன்**

'காலமாம் வனம்' சிறுகதைத் தொகுப்பை என் தந்தைக்குச் சமர்ப்பணம் செய்துள்ளேன். நானும் ஒரு போராளி தான். என் தந்தை எங்களை வாசியுங்கள், வாசியுங்கள் எனத் தூண்டுவார். எழுத்து எனக்குத் தந்தை தந்த பிச்சை தான். டொமினிக் ஜீவா, நீர்வை பொன்னையன் நூலொன்றை வெளியிடுமாறு நச்சரித்தனர். ஜீவா தொலைபேசி எடுத்தால் என்னம்மா செய்கிறாய் என்பார். அவருக்குப் பதில் அளிக்க எனக்குப் பயமாக இருக்கும். போராளிக்கு வெளிப்பூச்சுத் தேவையில்லை. என் தந்தை எனக்களித்த சொத்து அமைதி. இலக்கியமே என் சுவாசக்காற்று. நூல்கள் என் நண்பர்கள். அவையே என்னை இந்த மேடையில் நிறுத்தின. எவரோடும் எதற்காகவும் சமரசம் செய்ய மாட்டேன். பெண்ணை நசுக்கக்கூடாது. அதையே என் எழுத்தில் வெளிப்படுத்தி இருக்கிறேன். சூனியமென்பதே பல கருத்துக்களைக் கொண்டது. அது என்னையும் அலைக்கழிக்கிறது. எனது எழுத்தின் பலத்தை உணர்ந்து கொண்டேன். நம்பிக்கை உண்டு. என்மீது நீங்கள் கொண்டிருக்கும் பாசம் என்னை ஊக்குவிக்கும். கம்பவாரிதி இ.ஜெயராஜ் 'உயிர்க்கூடு' கதை நல்லதாக இருப்பதாகச் சொல்லி கரிசனை காட்டினார்.

*ரஜனி சந்திரலிங்கத்தின் தமிழ் வாழ்த்துப்பாடலோடு நிகழ்ச்சி நிறைவு பெற்றது.*

- ஜூன் 2012-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 44

## நோக்கு

'தினக்குரல்' பத்திரிகையின் பிரதம ஆசிரியர் வீரகத்தி தனபாலசிங்கம் எழுதி, தினக்குரல் பத்திரிகையில் வெளியான பத்திரிகை ஆசிரியத் தலையங்கங்கள் சில, 'நோக்கு' என்ற தலைப்பில் நூலாக வெளிவந்துள்ளன. அரசியல் பிரமுகர்கள், உயர்கல்விமான்கள், நாடறிந்த இலக்கியவாதிகள், ஊடகவியலாளர்கள் மற்றும் பொதுப் பணியாளர்கள் ஆகியோர் குழுமியிருந்த கொழும்புத் தமிழ்ச் சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில் இந்நூல் வெளியீட்டு விழா 29.07.2012 ஆம் திகதி அரசியல் விமர்சகர் சாந்தசீலன் கதிர்காமர் தலைமையில் அதிவிமரிசையாக நடைபெற்றது. சைவப் பெரியார் கா.சுந்தரமூர்த்தி தமிழ் வாழ்த்துப் பாட நூலாசிரியரின் தந்தை வீரகத்தி மங்கல விளக்கேற்றினார்.

**வரவேற்புரை:**
**அ.நிக்ஸன் (நூல் பதிப்பாசிரியர்)**

தினக்குரல் ஆசிரியரின் தலையங்கங்களை நூலாக்க 2007, 2008ஆம் ஆண்டுகளில் முயற்சி எடுத்தோம். இலங்கையில் ஏற்பட்டிருந்த அசாதாரண அரசியல் நிலவரங்களால் அதைத் தொடர முடியாது போய்விட்டது. ஊருக்கு நல்லது சொல்வேன் 'என்ற நூலை வெளியிட்டு' புரவலர் ஹாசிம் உமர் எங்களை முந்திக் கொண்டார். எமது நாட்டில், பாரிய பிரச்சினைகள் இருக்கின்றன. மக்களிடம் நிம்மதி இல்லை. ஊடகங்களின் பணி மிகவும் கஷ்டமானது. சமூக நிலைகளை அறிந்து அதை மக்களுக்குக் கொடுக்க வேண்டும். தினக்குரல் ஆசிரியர் தனபாலசிங்கத்தின் தலையங்கங்களின் தன்மையை நன்கறிந்த பின்னரே அவற்றை நூலாக்கி ஆவணப்படுத்த முயன்றோம். முன்வந்தோம். வீரகேசரியில் பணி செய்து கொண்டிருந்த போதே இத் தலையங்கங்களால் ஈர்க்கப்பட்டு நூலாக்க எத்தனித்தேன். தனபாலசிங்கத்தின் சில தலையங்கங்களுக்கு வெளிநாட்டுத் தூதரகங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடப் பதில் வழங்கியிருக்கின்றன. அந்தளவுக்கு கவனத்தைப் பெற்றவையாக இருந்தன. என்ன எழுதப்பட்டுள்ளதென மொழிபெயர்த்துப் படிக்கின்றனர். தனபாலசிங்கத்தின் தலையங்கங்களில் பல செய்திகள், தகவல்கள் வெளிவருகின்றன. அவைகளில் பிரச்சினைகளுக்கு கொடுக்கப்படும் தீர்வுகள் மிக முக்கியமானவையாகக் கவனத்தைப் பெறுகின்றன. இன்றைய ஊடகவியலாளர்களுக்கு உரிய வழிகாட்டல்கள் இல்லாத தன்மை உண்டு. சிங்களத்தில் பிராந்தியப் பத்திரிகைகள் இல்லை. யாழ்ப்பாணப் பிராந்தியப் பத்திரிகைகள் பல தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளன. ஊடகவியலாளருக்குச் சமூகத்தோடு பிரச்சினைகளும் உண்டு. செல்வாக்கும் உண்டு. ஊடகவியலாளரொருவன் இறந்தால் அவன் பற்றிய பேச்சுக்கள் அவனோடு போய்விடும். அவன் மேலான பற்று உணர்வு ரீதியாக மக்களுக்கு வர வேண்டும். அவனது பிரச்சினைகளை அவன் சார்ந்த நிறுவனங்களும் உகந்த முறையில் கவனிக்க வேண்டும். நூல்களை வெளியிடுவது ஊடகவியலாளருக்கு மிகவும் பிரச்சினையான காரியமாகும். 'நோக்கு' நூல் தனிப்பட்டோரது முயற்சியாலேயே வெளிவருகிறது. இவைகளை வெளி அமைப்புகளும் வெளியிட வேண்டும்.

**தலைமையுரை :**
**சாந்தசீலன் கதிர்காமர் (பிரபல அரசியல் விமர்சகர்)**

பேச்சுச் சுதந்திரம், பத்திரிகைச் சுதந்திரம் என்பன பயங்கரமான நிலையில் இன்று உள்ளன. பிரித்தானியர் காலத்தில் இங்கு கருத்துச் சுதந்திரம் இருந்துள்ளது. அதன் பின்னர் படிப்படியாக வீழ்ச்சி அடைந்தது. இத்தகைய சுதந்திரத் தடை இன்று போல் என்றும் இங்கிருந்ததில்லை. அபிவிருத்தி அடைந்த நாடுகளான கனடாவும் ஜப்பானும் பத்திரிகைச் சுதந்திரத்துக்கு முக்கியத்துவம் காட்டுகின்றன. தமிழ் ஊடகவியலாளர்கள் பல பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கின்றனர். அவர்களுக்கு என ஒரு நிதியத்தை ஏற்படுத்த வேண்டும். சுதந்திர ஊடகமில்லாது இலவச பல்கலைக்கழகம் இருக்க முடியாது. ஊடகவியலாளர்களைப் பாதுகாக்க வேண்டும். 'நோக்கு' போன்ற நூல்கள் ஆய்வுகளில் ஈடுபடும் மாணவர்களுக்கு வழிகாட்டியாகப் பயன்படும். தனபாலசிங்கத்தின் முதல் நூலான 'ஊருக்கு நல்லது சொல்வேன்' இல் பயனுள்ள எத்தனையோ விடயங்கள் உண்டு. சுதந்திரமான, சுதந்திரத்துக்கான சிந்தனை முக்கியமானது. அரிய ஆவணங்கள் யாழ்ப்பாணத்தில் அழிக்கப்பட்டுவிட்டன. ஆவணங்கள் காப்பகங்களில் சேர்த்து வைக்கப்பட வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சிறப்புரை:**
**வீ.ரி.தமிழ்மாறன் (முதுநிலை சட்ட விரிவுரையாளர்)**

சுயத்துவம் தனபாலசிங்கத்தின் எழுத்துக்களில் இழையோடியிருக்கும். நெருக்கடிக்குள்ளும் சுயத்தை இழக்காதிருத்தல் பெரும் சவாலுக்குரியதாகும். சுயத்துவம் விரவி நிற்பதே தனபாலசிங்கத்துக்குரிய முதல் தகுதியாகும். அவரது சுயநேர்மை அவரது எழுத்துக்களை மக்கள் வாசிக்கத் தூண்டும். பரந்த அவரது அறிவு, கருத்துக்களை, சிந்தனைகளை, ஒழுங்குபடுத்தும். தகவல்கள் சக்தி வாய்ந்தவை. சேகரித்து வைத்துள்ள தகவல்களை, ஒரு சிலரது கைகளுக்குள் முடங்கிக் கிடக்காது. மக்களுக்குக் கொடுக்க ஊடகவியலாளர்களால் தான் முடியும். அறிவு மக்களிடம் சேரும் போது அவர்கள் அதிகாரமுடையவராகின்றனர். அறிவைப் பெறல் அதிகாரத்துக்கு விடுக்கும் சவால் ஆகும்.ஊடகங்கள் தரும் தகவல்களின் மூலமாக அரசு கண்காணிக்கப்படுகிறது. அதிகாரம் கைமாறக் கூடாதென்பதால் அரசு ஊடகத்துக்குத் தடை போடும். தலையங்கங்கள் சேகரித்த தகவல்களிலிருந்து ஒரு புதிய செய்தியை வெளிப்படுத்தும். விற்பனைப் பொருட்களைப் போன்றவையே கருத்துக்கள். ஒரு சிலவற்றை தவிர்த்தே பொருட்கள் சந்தைப்படுத்தப்படும். அதேபோல் விரும்புவோர் கருத்துக்களை உள்வாங்க முடியும். அதிகாரத்தை உள்வாங்கிய மக்கள் முகவர்கள் மக்கள் எஜமானராவார்கள். நிறுவனங்களின் ஊழியருக்கு ஒழுக்காற்று நடவடிக்கை உண்டு. ஆனால் அரச அதிகாரம் வகிப்போருக்கு எவ்வித நடவடிக்கையும் கிடையாது. இங்கே தான் மக்கள் அறிவைப் பாவிக்க வேண்டும். இதற்கு எதிர்வரும் தேர்தல் மக்களுக்கு உதவும். அதற்கும் தாம் எச் சேவையைச் செய்ய வேண்டும் என்பதை தெரிந்தெடுக்க வேண்டும். இப்பணியை மக்களுக்கு ஊடகவியலாளர்கள் தான் செய்வர். பத்திரிகைகள் வாசகரை உணர்ச்சிப்படுத்தாமல் நல்ல வாசகர்களை உருவாக்க வேண்டும். தனபாலசிங்கத்தின் தலையங்கங்கள் வெறுமனே உணர்ச்சிக் கோர்வைகளல்ல. அவைகளில் அவ்விதமான எந்தவிடயமுமில்லை. தேசாபிமானத்தையும் மனிதாபிமானத்தையும் விட்டுக் கொடுக்க மாட்டார். தனபாலசிங்கத்தின் தலையங்கங்கள் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டு வெளியிடப்பட வேண்டும். மனிதாபிமானம் நெருக்கடிக்குள்ளாகும் போது பயங்கரவாதம் தோன்றும். கிரேக்க தத்துவஞானி பிளேட்டோ அரசியல் நல்லது செய்வதுக்கு மட்டுமே என்றார். எது நல்லது? எப்படித் தீர்மானிப்பது? ஊடகம் கருத்துக் களத்தை ஏற்படுத்தும் சக்தி வாய்ந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நயவுரை:**

**சாந்தி சச்சிதானந்தன் (பணிப்பாளர், விழுதுகள் ஆற்றல் மையம்)**

ஒரு தேசத்தின் மனச்சாட்சி பத்திரிகை. Arthur Miller என்ற அறிஞர் Good News is, a nation Speaking it self என்றார். பத்திரிகைத் தலையங்கம் பத்திரிகையின் குரலாகும். சமகால நடப்புகளை எப்படிப் பார்க்க வேண்டும் என்பதைச் சொல்லும். 'நோக்கு' என்ற சொல் தலைப்புக்கு மிகப் பொருத்தமானதாகும். தலையங்கமொன்றை எழுதப்பத்திரிகை ஆசிரியர் எத்தனையோ விடயங்களைப் பார்க்க வேண்டும். படிக்க வேண்டும். வெளிநாட்டு நடப்புகள் தலையங்கமாகும். சம்பந்தமில்லாத மக்கள், சம்பந்தமில்லாத விடயங்கள் தலையங்கமாகா. சிலவற்றிற்குச் சாட்டை அடியும் கிடைக்கும். பாராளுமன்றத்துக்குப் போகும் போது பாராளுமன்ற உறுப்பினர்கள் பத்திரிகைகளைக் கொண்டு செல்வதுண்டு. அங்கு அவர்கள் பேசும் பேச்சுக்கள் தினசரிகளின் தலையங்கத்தை ஒட்டியவையாகவும் அமைவதுண்டு. உலக மகாயுத்தங்களின் போது கூடப் பத்திரிகைத் தலையங்கங்கள் ஹிட்லர் போன்ற உலகப் பெருந்தலைவர்களுக்குச் சிம்ம சொர்ப்பனமாக அமைந்தன. 'நோக்கு' மிக முக்கிய கால கட்டத்தை மேவி வெளிவருகிறது. தமிழ், அரசியல் வெற்றிடத்தை எதிர்நோக்கும் காலகட்டம். சமாதானப் பேச்சுவார்த்தை தடுமாறிய காலகட்டம். ஊடகவியலாளருக்குப் பெரும் அச்சுறுத்தலான கால கட்டம். ஜனாதிபதியின் பதவிக் காலத்தை நீடிக்கும் 18வது அரசியல் சட்டத் திருத்தம் வந்தது. அமெரிக்காவின் ஜனாதிபதிப் பதவியைக் கறுப்பினத்தவரான பராக் ஒபாமா கையேற்றது, அரேபிய வசந்தம். இத்தகைய பல்வேறுபட்டவிடயங்களை மேவிவந்து 'நோக்கு' நூல் முக்கியத்துவத்தைப் பெறுகின்றது. சில தலையங்கங்கள் அறைகூவல்களாக இருக்கின்றன. தலையங்கத்திற்குரிய பொறுப்பு பல தரப்பட்டது. அது தேசத்தின் மனச் சாட்சியாக இயங்கும் பாத்திரத்தை வகிக்கின்றது. மனித உரிமைகளை ஸ்திரப்படுத்தும் சக்தியைக் கொண்டது. அத்தகைய தலையங்கமும் நூலிலுண்டு. நூலாசிரியர் ஜனநாயகத்துக்கு ஆதரவாக உள்ளார். சமாதானம் பற்றிய தலையங்கங்களும் இருக்கின்றன. கொசோவோ பிரச்சினை பற்றிய தலையங்கம் எமது பிரச்சினையோடு உரசிப் பார்க்க வைக்கின்றது. கொசோவோ சுதந்திரமடையலாம் என்றால் ஏன் இலங்கையில் தனித் தமிழ்நாடு வரக்கூடாது? இந்திய, இலங்கை பற்றிய தலையங்கம் இதுவரை இந்தியாவை நம்பியிருந்த நிலைப்பாட்டை மாற்ற வேண்டுமென வற்புறுத்துகின்றது. வேறு நாடுகள் பற்றிய பிரச்சினைகளை அறியும் போது தான் எமது பிரச்சினைகளையும் சிந்திக்க முடிகின்றது. 'இலங்கை நெருக்கடியும் மகா சங்கமும்' என்ற தலையங்கம் மிகச் சுவாரஸ்யமானதாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கின்றது. இருவேறு உலகம் என ஜயந்த தனபால ஊடகம் பற்றி பேசியது பற்றியது நகைச் சுவையைத் தருகின்றது. சமாதானத்துக்கான ஆதரவுக்குக் குரல் வரவில்லை என்பதைக் கோடுகாட்டுகிறது. தமிழ்க் கட்சிகள் ஒன்றுபட வேண்டும் என்ற ஆதங்கத்தைத் தலையங்கங்கள் வற்புறுத்துகின்றன. இது குறித்தான மூன்று, நான்கு உண்டு. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் இரண்டு பதவியேற்பு உரைகள் பற்றிய தலையங்கங்கள் போன்ற பல நூலிலுண்டு. ஆனால் விடுதலைப் புலிகள் பற்றிய ஆசிரியர் நோக்கு இல்லை. ஆட்கொலைக்கலாசாரம், அரசியல் நடவடிக்கைகளை முன்னெடுக்கத் தவறியமை போன்றன தலையங்கத்தில் கூறப்படவில்லை. இதுவொரு குறையாகவே தெரிகிறது. தலையங்கங்களில் ஊடக சுதந்திரத்தைச் சாடவும் தயங்கவில்லை. மனித நேயப் பண்போடு ஊடக சுதந்திரம் இயங்க வேண்டும். நபிகள் நாயகம் சம்பந்தமான கேலிச் சித்திரம் குறித்தும் எழுதப்பட்டுள்ளது. மனித உரிமைகள் பற்றிக் கூறுவது நூலின் சிறப்பம்சமாக உள்ளது. காலநிலை மாற்றத்தை, அதன் பாதிப்பை அமெரிக்க ஜனாதிபதி எப்படி கையாண்டார்? சிலி படைத்த வீர காவியமான 33 சுரங்கத் தொழிலாளர்களை மீட்டது பற்றிய எழுத்துக்கள் என் இதயத்தை தொட்டன. பிரித்தானியாவில் கட்டமைக்கப்பட்ட நிறவெறி அங்கு ஒரு கறுப்பினத்தவர் பிரதமராக வரத் தடையெனச் சொல்லப்பட்டுள்ளது. இங்கு ஒரு தமிழ் பேசுபவர், ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவராக வர முடியாத நிலை காணப்படுகிறது. இன்றைய மே தினக் கொண்டாட்டங்களை அர்த்தமற்றதெனத் தலையங்கம் சாடுகிறது. யார் பயங்கரவாதி? என்பதுக்கான வரைவிலக்கணத்தை ஐ.நா. எடுக்கவில்லை. இப்படியான பல்வேறு விடயங்கள் சார்ந்த தனபால சிங்கத்தின் நோக்குகளை இந்நூலில் முப்பரிமாண நோக்கில் காண முடிகின்றது.

*நோக்கு நூல் வெளியீட்டில் அதன் முதல் பிரதியை நூலாசிரியரின் தந்தை வீரகத்தி, சிரேஷ்ட சட்ட விரிவுரையாளர் வீ.ரி.தமிழ்மாறனிடமிருந்து பெற்றார். பல்துறைசார் பிரமுகர்களுக்குச் சிறப்புப் பிரதிகள் வழங்கப்பட்டன.*

-09.08.2012

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 45

## முற்போக்கு படைப்பாளிகளின் இலக்கியச் செழுமை

ஈழத்தமிழிலக்கியத்தின் செழுமைக்கு முற்போக்கு இலக்கியப் படைப்பாளிகளின் பங்குப் பணிகளைப் பரம்பல் செய்யும் இலக்கோடு மறைந்த முற்போக்கு இலக்கியப் படைப்பாளிகளின் நினைவுப் பேருரைகள் என்ற வினைப்பாட்டை முன்னெடுத்து, முற்போக்குக் கலை இலக்கிய மன்றம் அண்மையில் நிகழ்வொன்றை ஏற்பாடு செய்திருந்தது. பேராசிரியர் சபா.ஜெயராசா தலைமை தாங்கினார். கலாநிதி. ந.இரவீந்திரன், பிரபல விமர்சகர் லெனின் மதிவானம் ஆகியோர் அமரர்களான கே.கணேஷ், மருதூர்க் கனி, செ.கதிர்காமநாதன், யோ.பெனடிக்ற் பாலன் ஆகியோரை நினைவு கூர்ந்து உரைகள் நிகழ்த்தினர்.

**தலைமையுரை:**
**பேராசிரியர் சபா ஜெயராசா**

பண்டித மரபுகள் அக்காலத்தில் இரண்டிருந்தன. இறுகித் தடித்த பண்டிதர்கள், பேச்சு மொழி இழிசனர் வழக்கு என்றனர். முற்போக்குப் பண்டிதர்களாகச் சொக்கனும், வீரகத்தியும் காணப்பட்டனர். இலக்கியம் சமூக அவலங்களைக் கொண்டிருக்க வேண்டுமெனக் கருதினர். முட்டை எறிதல் எதிர்ப்புக்கான ஒரு குறியீடு. பிற்போக்குப் பாதையை எதிர்த்த முற்போக்காளர்கள் முட்டை எறிந்தனர். அவ்விழாவுக்குத் தலைமை தாங்கியவர் நடேச பிள்ளை. பண்டிதர்கள் வேட்டியை மடித்துக் கட்டி சண்டித்தனம் செய்ய முற்பட்டனர். முரண்பாடுகளை எதிர்த்துக் கூழ் முட்டையெறிதல் அந்தக் காலத்து வழக்கமாக இருந்தது. முற்போக்கு எழுத்தாளரிடந் தான் போர்க்குணம் இருந்தது. களத்தில் நின்று போராடுதல் அவர்களின் எதிர்ப்பின் முக்கிய பரிமாணமாக இருந்தது. சங்கானைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போராட்டத்தில் முற்போக்கு எழுத்தாளர் நீர்வை பொன்னையன் நின்றார். கே.டானியலும் களத்தில் நின்று போராடினார். நேரடிப் போராளிகளாக வெளிப்பட்ட இவர்கள் முற்போக்கு இயக்கத்தின் நேரடித் தரிசனத்தை மக்களுக்குக் காட்டினர். முற்போக்குப் படைப்புகளில் முற்போக்கு எழுத்தாளர் காட்டிய திறமையை விட்டுவிட முடியாது. எஸ்.பொன்னுத்துரை (எஸ்.பொ.), செங்கை ஆழியான், அ.யேசுராசா முற்போக்காளரிடம் அழகியல் இல்லை என்றனர். மேல் தட்டு வர்க்கத்தினரைக் காட்டிலும் ஒடுக்கப்பட்டோரது அழகியல் வேறானதாகும். இதற்கான பரிசோதனையொன்றை நடாத்தினோம். இணுவிலில் புகையிலை பதனிடும் கொட்டிலொன்றில் புகையிலைப் பதனிடும் தொழிலாளருக்குக் கர்நாடக இசைப் பாடலொன்றை இசைத்துக் காட்டினோம். அவர்கள் அதில் எவ்விதமான ஈடுபாடும் காட்டவில்லை. கிராமியப்பாடல் தான் பாட்டென்றனர். கர்நாடக இசை மேட்டுக் குடியினருக்கானது. அழகியலில் வர்க்கச் சாயல் உண்டு. இந்த மனோபாவத்தில் தான் முற்போக்கு இலக்கியத்தில் அழகியல் இல்லை என்றனர். எஸ்.பொன்னுத்துரையிடம் சிக்மண்ட் பிரயிட்டின் பாலியல் தழுவிய அழகியலுண்டு. இலங்கையர் கோனின் வெள்ளிப் பாதசரம் கதையில் மனோரதியமே இருந்தது.

**பிரபல விமர்சகர் லெனின் மதிவானம்**
**(உதவி ஆணையாளர், கல்வி அமைச்சு)**

இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் முற்போக்கு இலக்கிய முன்னோடிகளின் விளை நிலமாக இருந்தது. 1940, 1950 களில் மக்கள் மத்தியில் விடுதலை உணர்வு வளரத் தொடங்கியது. இது உலகளாவிய ரீதியில் ஆசியா, ஐரோப்பாவிலுங் கூட ஏற்பட்டது. பாசிஸத்துக்கு எதிரான இயக்கம் தலையெடுத்தது. இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் கலை கலைக்காகவே என்ற கருத்தியலுக்கு எதிராகப் போராடியது. பழைய வாதங்களை எதிர்த்துத் தலித்தியம், பெண்ணியம் ஆகியவற்றை மக்கள் முன் வைத்தது. இலக்கியம் ஒரு நல்ல சமுதாயத்துக்கான விளைநிலம். முற்போக்கு எழுத்தாளர் சங்கம் உண்மையின் பக்கமே நின்றது. அதன் தேசிய, மண் வாசனை இலக்கியக் கோட்பாடு உழைக்கும் பாட்டாளி வர்க்கம் சார்பானது. உதிரிகளாக இருந்த இடதுசாரி எழுத்தாளரை ஒரு கட்டுக்கோப்பான அமைப்புக்குள் கொண்டு வந்தது. முற்போக்கு இலக்கியத்தில் நீண்டகால அனுபவம் அமரர் கே.கணேஷுக்கு உண்டு. தலாத்து ஓயா கே.கணேஷ் உயர்கல்வியைத் தமிழ் நாட்டில் கற்றார். தீவிர கொம்யூனிஸ்டுகளான ப.ஜீவானந்தம், மாயாண்டி பாரதியைச் சந்தித்துள்ளார். இலங்கை எழுத்தாளர்களை உருவாக்கினார். கொம்யூனிஸ்டு முன்னோடியான கே.ராமநாதனோடு சேர்ந்து 'பாரதி'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சஞ்சிகையை வெளியிட்டார். ரஷ்ய எழுத்தாளர் மார்க்சிம் கோர்க்கியின் சிந்தனைகள் 'பாரதி'யில் வெளிவந்தன. ஏழு இதழ்கள் மட்டுமே வெளியாகின. 'கலாநேசன்' என்ற பெயரிலும் எழுதினார். கவிஞராக, சிறுகதை மொழிபெயர்ப்பாளராக இயங்கியுள்ளார். இருந்தும் ஒரு மொழிபெயர்ப் பாளராகவே முன் நிற்கிறார். கே.கணேஷ் ஒரு முக்கியமான ஆளுமை. சி.வி. வேலுப்பிள்ளையும் மலையகப் படைப்பாளி. மூத்த படைப்பாளியான தெளிவத்தை ஜோசப்பின் கதை சொல்லும் மரபு கே.கணேஷால் தொடக்கி வைக்கப்பட்டதே. இது பாரதி சஞ்சிகையின் மரபும் கூட. முற்போக்கு எழுத்தாளர்கள் மேல்நாட்டு இலக்கியங்களைத் தமிழ் மொழியில் கொண்டு வந்தனர். மக்கள் விடுதலை கீதமாக அமைந்த ரஷ்யப் படைப்புக்களைத் தமிழில் கொண்டு வந்தனர். சீனக் கவிஞனான லூசூன் கவிதைகளைக் கே.கணேஷ் தமிழ் வாசகருக்குத் தந்தார். பண்பாட்டை மொழியில் கொண்டு வர வேண்டும். முல்க்ராஜ் ஆனந்தின் 'தீண்டத் தகாதவன்', கோசிமினின் 'சிறைக் குறிப்புகள்' தமிழில் வந்துள்ளன. கே.கணேஷின் பேட்டி 'காலம்' என்ற சஞ்சிகையில் வெளிவந்தது. பேராசிரியர் எம்.ஏ. நுஃமான் எழுதியிருந்தார். இறுதிக் காலத்தில் கே.கணேஷ் மதத்தில் சங்கமித்தார் என்றதைப் பேட்டி வெளிப்படுத்தியிருந்தது. சமூக மாற்றப் போராட்டங்களை ஆராயும் போது கே.கணேஷின் பங்களிப்புகளும் ஆய்வுகளில் வெளிக்காட்டப்பட வேண்டும். அவரது சுதந்திரன், வீரகேசரிப் பத்திரிகைப் பங்களிப்புகள் கண்டு கொள்ளப்படல் வேண்டும். சமூக மாற்றத்துக்காக உழைத்த ஆளுமைகளைச் சீர்குலைக்கக் கூடாது.

இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்க மற்றுமொரு படைப்பாளி மருதூர்க்கனி. இலக்கியம் மனிதனின் ஆன்மா எனப் புகழ் பூத்த இலக்கியவாதிகள் சொல்லியுள்ளனர். யாழ்ப்பாணத்துச் சாதிய ஒடுக்குமுறையை இலக்கியம் உணர்த்தியுள்ளது. மலையகத்தின் வர்க்க முரண்பாடுகள் காட்டப்பட்டுள்ளன. முற்போக்கு இலக்கிய இயக்கத்திற்கு மருதூர்க் கனியின் படைப்புக்கள் ஆதாரமாகவே இருக்கின்றன. கிழக்கிலங்கையில் மனித மேம்பாடு நிலவியது. ஏழ்மைப்பட்ட சூழலில் பிறக்கும் இலக்கியங்கள் எத்திசையை நோக்கிச் செல்லும் என்பதற்கு அவரது படைப்புக்கள் சான்றாக உள்ளன. தமிழிலக்கியத்தில் பெண்களைச் சோகமாகக் காட்டும் மரபுண்டு. ஆனால் அவர்கள் ஏழ்மையிலும் தமது பண்புகளை இழக்காரென்பதைத் துலாம்பரமாகக் காட்டியுள்ளனர். சகல கதைகளிலும் அதிகார வர்க்கத்தின் துன்புறுத்தல்களைக் காட்டியுள்ளார். மனித உணர்ச்சிகளோடு ஒன்றியும் போகிறார். அனைத்து அம்சங்களும் நாட்டார் வழக்கில் காணப்படுகின்றன. மருதூர் கனி இலக்கியவாதி மட்டுமல்ல. அவரொரு அரசியல்வாதியுமாவார். மக்கள் மொழியில் முஸ்லிம் வெறிக்கு அப்பால் சென்று மானுடத் தன்மையோடு தனது படைப்புக்களில் பேசினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கலாநிதி ந.இரவீந்திரன்

எங்களது தேவைகளுக்காக எம்மால் போராட முடியுமென்ற நம்பிக்கை எம்மிடம் இல்லை. பெரும்பான்மைத் தேசியமும் அத்தகையதே. ரஷ்யாவிடம் இருந்து கற்ற பாடம் முக்கியமானது. நாமே போராடி எமது பிரச்சினைகளுக்கு வெற்றி காண வேண்டும். சமாதானம் அவசியமானது. முற்போக்கு எழுத்தாளர் செ.கதிர்காமநாதன் 1940 ஆம் ஆண்டு பிறந்து முப்பத்தியிரண்டு வயதில் இறந்தார். ஸ்ரீலங்கா நிர்வாக சேவை அதிகாரியாக இருந்தார். சிறிது காலம் வீரகேசரிப் பத்திரிகையின் உதவி ஆசிரியராக கடமை புரிந்தார். அவரது மரணம் இயற்கை மரணம். 'கொட்டும் பனி,' 'நான் சாக மாட்டேன்' ஆகிய நூல்களை வெளியிட்டுள்ளார். பேராசிரியர் க.கைலாசபதி அவரது நூல்களுக்கு முன்னுரை எழுதியுள்ளார். அவர் பற்றிய செ.யோகநாதன், காவலூர் ராசதுரை ஆகிய எழுத்தாளரது கருத்துக்களையும் நூலில் வெளியிட்டுள்ளார். ஒரு ஈகோ இல்லாத படைப்பாளி செ.கதிர்காமநாதன். ஈழத்துச் சோமு, சு.வேலுப்பிள்ளை, அ.ந.கந்தசாமி ஆகியோரது கருத்துக்களுக்கும் முன்னுரிமை காட்டியுள்ளார். 'எல்லாம் உனக்காக' அவரது முதல் சிறுகதையாகும். 'ஒரு கிராமத்துப் பையன் பாடசாலைக்குப் போகிறான்' என்ற சிறுகதையைத் தனது சொந்தக் கதையெனச் செ.கதிர்காமநாதன் ஒத்துக் கொண்டிருக்கிறார். வாழ்வின் சிதைவுகளை உள்வாங்கி எழுதினார் எனப் பேராசிரியர் க.கைலாசபதி குறிப்பிடுகின்றார். விவசாயிகள், படித்த இளைஞர், சாதியம், தொழிலாளர் பிரச்சினைகள் அவரது சிறுகதைகளின் கருவாக இருந்தன. அகவாழ்வு சார்ந்த வகைகளாகவே விளங்கின. கலையும் இலக்கியமும் மக்களுக்கானவை என்பதில் இறுக்கமாக இருந்தார். வாழ்க்கை சார்ந்த அம்சங்களை அவரது சிறுகதைகளில் காணலாம். ஆடு, மாடும் வந்துள்ளன. 'அதிர்ஷ்டம் உங்கள் பக்கம்!', படித்த இளைஞர் பிரச்சினை. 'பெரு மூச்சுத் தானே' சாதி உணர்வைச் சுட்டுகிறது. செ.கதிர்காமநாதனின் 'சில்லென்று பூத்த' என்ற சிறுகதை மிகவும் முக்கியமானது. இலங்கையர் கோனின் 'வெள்ளிப்பாதசரம்' என்ற சிறுகதையோடு ஒப்பிடலாம். அது உயர்வர்க்கத்தின் உளப் போராட்டத்தைக் காட்டுகிறது. 'சில்லென்று பூத்த' கதை வேறுபட்ட விடயத்தைக் கூறுகிறது. 'காதல் திருமணம்.' கருத்தொருமித்த காதலர் படைக்கப் பட்டுள்ளனர். மென்மையான மன உணர்வைச் சொல்லிச் செல்கிறார். வாழ்க்கை நெறி சார்ந்த ஊடல் தான் வெளிப்பட்டுள்ளது.

யோ.பெனடிக்ற் பாலனின் படைப்பாளுமையைச் 'சொந்தக்காரன்' இனங்காட்டியது. 'குட்டி,' 'தலைவிதியைப் பறிகொடுத்தோர்,' 'பலஸ்தீனம் அழைக்கின்றது,' 'விபச்சாரம் செய்யாதிருப்பாயாக' ஆகிய நூல்களையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியிட்டுள்ளார். அவரது 'லெனின் கல்விச் சிந்தனைகள்' என்ற நூல் வித்தியாசமானது. பட்டதாரி ஆசிரியராக இருந்து ஸ்ரீலங்கா கல்வி நிர்வாக அதிகாரியாக உயர்ச்சி அடைந்தவர். உதவிக் கல்விப் பணிப்பாளராக இருந்த போது பிரச்சினை கொடுக்காத அதிகாரியாகக் கடமை புரிந்ததாக அவரோடு பணி புரிந்தோர் சொல்வர். அதிகாரம் காட்ட மாட்டாராம். 'தலைவிதியைப் பறிகொடுத்தோர்' என்ற யோ.பெனடிக்ற் பாலனின் நூலுக்குப் பேராசிரியர் சி.தில்லைநாதன் அணிந்துரை அளித்திருக்கிறார். பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கும் ஊடகமாக அவர் இலக்கியத்தைக் கையாள்வதாகச் சி.தில்லைநாதன் குறிப்பிட்டுள்ளார். பெண்ணொடுக்கு முறை, சாதி ஒழிப்பு, இன ஒற்றுமை, இன ஒடுக்கல், பாலியல் என்பவைகளைத் தனது படைப்புக்களில் கொண்டு வந்துள்ளார். 'காதலித்தவருக்கு ஒரு கடிதம்' சாதியம் சம்பந்தமானது. ஏமாற்றிய உனக்கில்லாது எனக்கேன் இந்த அவமானம் எனக் கடிதப்பாங்கில் எழுதப்பட்ட சிறுகதை. கல்விக்கு ஊடாகவும் கலைக்கூடாகவும் சமூக மாற்றத்தைக் கொண்டு வரக் கல்விப் புலத்தில் இருந்து கொண்டு பெனடிக்ற் உழைத்தார். அவரது 'லெனின் கல்விச் சிந்தனைகள்' என்ற நூல் அத்தகையதானது. சமூக மாற்றத்திற்கும் கல்வி எப்படி முக்கியமானதென்ற இதன் ஆய்வு மிக முக்கியமானது. பாரதி புத்தகாலயம் 25 சிந்தனையாளர்களின் கல்விபற்றிய நூல்களை அண்மையில் வெளியிட்டிருந்தது, அவற்றில் லெனினின் கல்விச் சிந்தனை என்ற விடயத்துக்காகச் சவுத் விஷன் ஏற்கனவே வெளியிட்ட பெனடிக்கற்பாலனின் நூலையும் சேர்த்துக் கொண்டது அதன் முக்கியத்துவத்தை வெளிப்படுத்து வதாகும்.

*கலந்துரையாடலும் நடைபெற்றது. பேராசிரியர் சி.மௌனகுரு, கே.விஜயன்,மு.தயாபரன், கே.எஸ்.சிவகுமாரன் ஆகியோரோடு வேறு சிலரும் கலந்து கொண்டனர். மற்றொரு நிகழ்ச்சியில் பங்குபற்றத் தலைவர் இடையில் சென்றதால் முற்போக்கு எழுத்தாளர் நீர்வை பொன்னையன் தலைமை ஏற்றுத் தொடர்ந்து நிகழ்ச்சியை நடாத்தினார். வெள்ளவத்தை-பெண்கள் ஆய்வு மையத்தின் கேட்போர் கூடத்தில் இந்நிகழ்ச்சி நடைபெற்றது.*

- 03/04.10.2012

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 46

## மண்ணின் முனகல்

தமிழ்ப் புனைவு இலக்கியத்தில் வியத்தகு அதிர்வுகளைத் தருபவரும் உச்ச முற்போக்குச் சிந்தனையாளருமான கே.ஆர். டேவிட்டின் 'மண்ணின் முனகல், என்ற சிறுகதைத் தொகுப்பு வெளிவந்துள்ளது. தமிழ்க் கதைஞர் வட்ட (தகவம்) அனுசரணையுடன், இந்நூலுக்கான வெளியீட்டு விழா அண்மையில் முழுமதி நாளன்று வெள்ளவத்தை கொழும்புத் தமிழ்ச் சங்க மண்டபத்தில் நடைபெற்றது. ஞானம் சஞ்சிகை ஆசிரியர் வைத்திய கலாநிதி தி. ஞானசேகரன் தலைமை தாங்கினார்.

தகைசார் பெரியோர்கள் மங்கலச் சுடரேற்றி நிகழ்வைத் தொடக்கி வைத்தனர்.

**தொடக்கவுரை:**
**தமிழ்த் தென்றல் தம்புசிவா**

இந்த வெளியீட்டு விழாவின் நாயகன் கே. ஆர். டேவிட் தனித்துவமான எழுத்தாளர், ஆடம்பரமற்றவர், மனிதரை நேசிக்கும் பண்பாளர். முற்போக்கு அணி சார்ந்த மக்கள் இலக்கியப் படைப்பாளர். அடிமட்டஈ ஏழை எளிய மக்களின் பிரச்சினைகளைத் துணிவுடன் எழுதி வெளிப்படுத்துபவர். அவர்களைச் சுரண்டி வாழும் வர்க்கத்தவர்களுக்குச் சாட்டை அடி கொடுப்பவர். சிறந்த ஆசானாக, கல்வி அதிகாரியாகக் கல்விப் பணி புரிந்தவர்.

மலையகத்தில் பணி புரிந்த போது அம்மண்ணின் மக்களின் அவலங்களைப் படைப்புகளில் கொண்டு வந்தார். அதேபோல் மூதூரில் பணி செய்த போது அம்மக்களின் வாழ்வியல் பிரச்சினைகளை அம்பலப்படுத்தினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தலைமையுரை :**
**ஞானம் ஆசிரியர், தி. ஞானசேகரன்**

கே. ஆர் டேவிட் சிறுகதை,நாவல், குறு நாவல் என்பவற்றில் முத்திரை பதித்தவர். இவரது 'வரலாறு அவளைத் தோற்றுவிட்டது, என்ற நாவலே முதல் நூலாகும். 'மண்ணின் முனகல்' உட்பட ஆறு சிறுகதைத் தொகுப்புகளை இதுவரை வெளியிட்டுள்ளார். இவரது சகோதரர் கே. ஆர். திருத்துவராஜா எனது ஞானம் சஞ்சிகைக்கு எழுதுபவர். அவரது ஆக்கங்களைப் பார்க்கும்போது டேவிட்டின் ஞாபகம் எனக்கு ஏற்படும். அதேபோல் டேவிட்டின் படைப்புகள் எனக்குக் கிடைக்கும் போது திருத்துவராஜாவின் நினைவுகள் தோன்றும். டேவிட் இதுவரை பத்து நூல்களை வெளியிட்டுள்ளார். பொதுவுடைமை, மார்க்சியத் தத்துவங்களில் நம்பிக்கை உடையவர். நாற்பத்தாறு ஆண்டுகளாக இலக்கியம் படைக்கும் டேவிட்டின் 'புகலிடம்' என்ற சிறுகதையை 1966இல் 'சுதந்திரன்' பத்திரிகை வெளியிட்டது. நாடகம், சிற்பம், ஓவியம் ஆகிய கலைகளிலும் சிறந்த பரிச்சயமுள்ளவர். முற்போக்குத் தளத்தில் நின்று எழுதி வந்தவர்.

பின்னர், 1983ஆம் ஆண்டுக்குப் பின் தமிழீழப் போராட்டத்தை அடி நாதமாக்கி ஆக்கங்களைப் படைத்தார். 'தனி ஒருவனுக்கு' என்ற டேவிட்டின் சிறுகதையை ஆண்டின் சிறந்த சிறுகதையாகத் தமிழ்க் கதைஞர் வட்டம் (தகவம்) தெரிவு செய்து பரிசு வழங்கியது கொழும்பு தமிழ்ச் சங்கமும் இதைப் பாராட்டியுள்ளது. சந்திரவதனா முருகானந்தம் என்ற பல்கலைக் கழக மாணவி தனது பட்டப் படிப்புக்காக டேவிட்டின் சிறுகதைகளை ஆய்வு செய்துள்ளார். இலக்கியப் பாட நூலான 'தமிழ் மொழி' என்ற நூலிலும் இவரது சிறுகதை இடம் பெற்றுள்ளது. முற்றியபின் விருட்சம் கனி தராதென்பர். ஆனால் அதற்கு மாறாக மூத்த எழுத்தாளரான கே. ஆர். டேவிட் இன்னும் எழுதிக் கொண்டிருப்பது பாராட்டத்தக்கதாகும்.

**வெளியீட்டுரை :**
**தகவம் வசந்தி தயாபரன்**
**(பொதுச் செயலாளர், தமிழ்க் கதைஞர் வட்டம்)**

எனது தந்தையார் அமரர் வ. இராசையாவின் நண்பர் கே. ஆர்.டேவிட் நான் பாடசாலை மாணவியாக இருந்த காலத்திலிருந்து எழுதும் அவர் எனக்கு நரை விழுந்த பின்னரும் தனது எழுத்துப் பணியைத் தொடர்கிறார். அது மகிழ்ச்சிக்குரிய சங்கதி தான். 'மண்ணின் முனகல்' சிறுகதைத் தொகுப்பில் பன்னிரெண்டு சிறுகதைகள் உண்டு. அருமையன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டைப்படம். அடிமட்ட மக்களது வாழ்க்கை அவலங்களை இச் சிறுகதைகள் பேசுகின்றன. செய்யுள் காலத்திலேயே கதை கூறும் மரபு தமிழ் உலகில் இருந்தது. அவைகள் காதலையும், வீரத்தையும் பேசின. இப்போக்கை வ. வே. சு. ஐயர், மாதவையா போன்ற முன்னோடிகள் மாற்றினர். மகாகவி சுப்பிரமணிய பாரதியாரும் சிறுகதைகளை எழுதினார். புதுமைப்பித்தன் அன்றைய சமூகப் பிரச்சினைகளை எழுதினார். அவரே நவீன சிறுகதையின் தந்தை எனலாம். கே. ஆர்.டேவிட் சிறுகதைகளிலும் புதுமைப்பித்தன் சிறுகதைகளின் சாயல் உண்டு.

சமுதாயத்தை டேவிட் திறனாய்கிறார். சமூக மாற்றத்துக்காக எழுதுகிறார். அடித்தட்டு மக்களது அவல வாழ்வை ஆழமாக அலசுகிறார். முகத்தில் அறைவதுப் போல் எழுதுகிறார். இந்த முனகல் எமதானது. இத்தகைய முனகல்களை அடுத்த வீடுகளே கேட்காத சமூக அமைப்பில் வாழ்கிறோம். மண்ணுக்கும் சோகம் ஏற்படும். அதற்கு அனைவரும் செவி சாய்க்க வேண்டும். இத்தொகுப்புக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் 'மண்ணின் முனகல்' என்ற தலைப்பு மிக அருமையானது. கே. ஆர்.டேவிட் இசை ஈடுபாடுள்ளவர். அவரது எழுத்தில் காணும் வலிமைக்கு இசை தான் பக்க பலம். கலாநிதி ந. இரவீந்திரன் அணிந்துரை வழங்கியுள்ளார். எனது தந்தையார் அமரர் வ. இராசையா தலைமை வகித்துத் தகவத்தை வழிநடாத்திய 1977 காலப்பகுதியில் வெளிவந்த 'தகவம் பரிசுக் கதைகள்' என்ற தொகுப்பில் வெளியான கே. ஆர். டேவிட்டின் சிறுகதை பெரும் பாராட்டைப் பெற்றது.

**ஆய்வுரை :**

**லெனின் மதிவானம் (பிரதி ஆணையாளர், வெளியீட்டுப் பிரிவு, கல்வி அமைச்சு)**

இரண்டு தசாப்தங்களுக்கு முன் மாணவனாக இருந்த போது கே. ஆர். டேவிட்டின் 'வரலாறு அவளைத் தோற்றுவிட்டது ' என்ற நாவலை வாசித்தேன். அதில் வரும் குரு அம்மா பாத்திரம் இன்றும் நினைவில் நிற்கின்றது. சில ஆண்டுகளுக்கு முன் டேவிட் கல்வி அதிகாரியாக இருந்த போது சந்தித்தேன். சாதாரண அதிகாரிக்குரிய பண்புகளோடு பொது மக்களோடு பழகுவதை அவதானித்தேன். அவரது நாவலிலும் சிறுகதைகளிலும் இந்த ஈர உணர்வு இருக்கின்றது. எமது மரபுக்குள்ளும் கதை கூறும் போக்கு இருந்தது. காலக் கிரமத்தில் அது மேற்கத்திய புனைகதை மரபோடு இணைந்து கொண்டது. இன்றைய சிறுகதைகள் மக்கள் வாழ்வை ஒட்டியவைகளாக வெளிவருகின்றன. இன்று சிறுகதைக்குத் தான் இலங்கையில் அதிக மௌசு. இணையத் தளங்களில் ஆங்கிலத்துக்கு அடுத்ததாகத் தமிழே நிற்கிறது. இத்தகைய நிலையை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்படுத்தியது யுத்தம் தான். சிறுகதையை வாசிப்பது மிகவும் இலகுவானதாகும். இதில் பிரசார வசதி குறைவு. தமிழ் நாட்டில் இதற்கு மாறான நிலை உண்டு. நாவலுக்கே அதிக மௌசு உண்டு. ஆயிரம் பக்கங்களையுடைய நாவல்களைக் கூட அங்கு வெளியிடுகின்றனர். மக்களது பிரச்சினைகளைக் கே. ஆர்.டேவிட் யதார்த்தமாகச் சிந்திக்கிறார்.

கதைகளை வகை மாதிரியாகக் கூற வேண்டும். அவைகள் வாசகருக்கு மனப்பதிவை ஏற்படுத்த வேண்டும். இத்தொகுப்பிலுள்ள அனைத்துக் கதைகளும் யதார்த்தமானவை. முப்பதாண்டுக் கோர யுத்தம் மக்களை எப்படிப் பாதித்ததென்பதைத் தொகுப்பின் கதைகளில் காணமுடிகின்றது. 'நான் கேவலமானவன் அல்ல' என்ற சிறுகதை மிகவும் முக்கியமானது. அடி நிலை மக்களின் பாதிப்பைச் சொல்கிறது. இனவாதப் பாதிப்பை, மனித உணர்ச்சிகளைக் குருதி உறையும் படியாக கதைகளில் சொல்லப்பட்டுள்ளது. இந்த யுத்தம் வலதுசாரிகளின் யுத்தமே, கே. ஆர்.டேவிட் தமிழ்த் தேசியப் பாசிச சித்திரிப்பில் மௌனத்தைக் கடைப்பிடித்துள்ளார். ஆனால் இந்த விடயத்தில் மற்றொரு எழுத்தாளரான ஷோபாசக்தி அப்படி இல்லை. 'பாண் போறணை' என்ற டேவிட்டின் சிறுகதை மூதூர் பிரதேசக் கதை. அடித்தள மக்களுக்கான கரிசனை காணப்படுகிறது. உண்மைக் கலைஞன் மனிதாபிமானம் உள்ளவன். மகாகவி சுப்பிரமணியப் பாரதியார் 'காக்கை, குருவி எங்கள் ஜாதி' எனப் பாடியுள்ளார். டேவிட்டிடம் பாரதி, கோர்க்கி ஆகியோரின் தாக்கங்கள் இருக்கின்றன. 'ஊர்வலம்' என்ற கதையில் ஈர உணர்ச்சி காட்டப்படுகிறது. பணத்தின் ஆதிக்கம் மனிதத்தைச் சிதைக்கும். 'கஸ்தூரி'யில் கல்விப்பார்வை உண்டு. கல்வியுலகு தயவு தாட்சண்யமின்றி விமர்சிக்கப்படுகிறது. கல்வியின் முக்கியத்துவத்தைச் சுட்டிக்காட்டுகிறார். சமூக மாற்றத் தேவையை உணர்த்துகிறார். பாதிக்கப்பட்டவரின் கலக உணர்வை கே. ஆர்.டேவிட் தொட்டுக்காட்ட வில்லை.

*நூல் வருகைக்கும் வெளியீட்டுக்கும் உதாரணமாக நின்ற எழுத்தாளர் ஐயாத்துரை கணேசன், தமிழ்த்தென்றல் தம்புசிவசுப்பிரமணியம், விமர்சகர் மு. தயாபரன் ஆகியோருக்கு நூலாசிரியர் கே. ஆர். டேவிட் கௌரவப் பிரதிகளை வழங்கினார்.*

**ஏற்புரை :**

**கே. ஆர் டேவிட் (மண்ணின் முனகல் நூலாசிரியர்)**

இன்று கலாநிதிப் பட்டங்களுக்காகப் படும் அவலங்கள் அசிங்கமானவை, ஆனால் எனது நூலின் முதல் பிரதியைப் பெற்ற கே. சிவஞானம் ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாநிதியாக இருந்தும் அடக்கமாக இருக்கிறார். ஆய்வுரை நிகழ்த்திய லெனின் மதிவானம் இளவயதில் முதிர்ந்த ஆளுமையாளர்.

வெளியீட்டு விழாவொன்றில் ஆய்வாளர் மிக ஆழமாக நூலை ஆய்வு செய்து நூலாசிரியரைப் பாராட்டினார். விழா முடிந்து வெளியே வந்த போது கூட்டத்திலிருந்தவர்கள் கூடி நின்று விவாதம் நடாத்திக் கொண்டிருந்தனர்.

ஆய்வாளர் சரியென்றது எப்படிச் சரியாகும்? அப்படி ஒரு பிழை கூட இல்லையா? என வாதாடினர். இதெல்லாம் ஏன்? ஏதாவது குற்றம் சாட்ட வேண்டும் என்ற குரோத உணர்வின் வெளிப்பாடே இவைகள். இதனைக் கண்டு நான் மிகவும் வேதனைப்பட்டேன். எந்தவொரு விடயத்தையும் யாருக்குச் சொல்கிறோம் என உணர்ந்து சொல்ல வேண்டும். அல்லாத பட்சத்தில் விபரீதங்கள் தான் ஏற்படும். சக எழுத்தாளன் முன்னேற்றத்தைப் பொறுத்துக் கொள்ளாத நிலை பிழையான பண்பாடாகும். இதை நாம் மாற்ற வேண்டும். ஏதோ ஒரு வகையில் மனித நேயத்துக்கு ஊட்டமாகவிருந்து நாளைய சமுதாயத்தை உருவாக்கத் தக்க படைப்புக்களைப் படைப்பது மிக அவசியமானதாகும்.

*தமிழ்த் தென்றல் தம்பு சிவசுப்பிரமணியம் நிகழ்வுகளை ஒன்றிணைத்து அறிவிப்புக்களைச் செய்தார்.*

-17.10.2012

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 47

## சமூகஜோதி றபீக்கின் 'சங்கநாதம்' வெளியீடு

**ச**மாதானம் என்பது சட்டத்தின் மூலமாகவோ யுத்தத்தின் மூலமாகவோ ஏற்படுவதல்ல. சலனமற்ற உள்ளங்களின் சங்கமத்தின் மூலமாக ஏற்படுவது தான் நிலையான சமாதானம் எனச் சமாதானத்தை வரைவிலக்கணப்படுத்தி மனித நேயத்தை உச்சப்படுத்தும், சமூக ஜோதி எம்.ஏ.றபீக், பொது மேடைகளில் நிகழ்த்திய சொற்பொழிவுகளின் தொகுப்பு நூலான,'சங்க நாதம்' 07.10.2012 ஆம் திகதி கொழும்பு - 12, பிரைட்டன் றெஸ்ட் மண்டபத்தின் நாலாம் மாடிக் கேட்போர் கூடத்தில் மிக விமரிசையாக வெளியிடப்பட்டது.

தினக்குரல் ஞாயிறு வெளியீட்டின் ஆசிரியர் ஆர்.பாரதி தலைமை தாங்கினார்.

மௌன இறை வணக்கத்தோடு நிகழ்வுகள் தொடங்கப்பட்டன.

**வரவேற்புரை :**
**அல்ஹாஜ் என்.எம்.அமீன் (ஆசிரியர் - நவமணி)**

இத்தேசத்தின் முழு அவதானமும் இன்று நடைபெறவிருக்கும் 20க்கு 20 கிரிக்கெட் வெற்றிக் கிண்ணப் போட்டியிலேயே குவிந்திருக்கப் போகிறது. எனவே போட்டியின் முதல் பந்து வீசுவதற்கு முன் இவ்விழாவை நிறைவு செய்யும் நிர்ப்பந்தம் இருக்கிறது. புரவலர் புத்தகப் பூங்கா பல புதிய, புதிய முறைகளில் இலக்கிய நிகழ்வுகளை நடாத்தி வருகின்றது. கிரிக்கெட் போட்டியையும் பொருட்படுத்தாது, இங்கு கூடியிருப்போர் புரவலர் புத்தகப் பூங்கா, புரவலர் ஹாஸிம் உமர் சமூக ஜோதி றபீக்கை நேசிப்பவர்கள். தனது காத்திரமான சொற்பொழிவுகளால் இலங்கைக்குப் பெருமை தேடித் தருபவர் சமூகஜோதி. அற்புதமான பேச்சாளர். அறிஞர் அண்ணா, கலைஞர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருணாநிதி, நாவலர் இரா.நெடுஞ்செழியன் ஆகியோரை இவரது பேச்சுக்கள் ஞாபகப்படுத்தும். புரவலரென்றால் அது ஹாஸிம் உமர் தான். சமூக ஜோதி என்றால் அது எம்.ஏ.றபீக் தான்.

**தலைமையுரை :**

**இராஜநாயகன்பாரதி (ஆசிரியர், ஞாயிறு தினக்குரல்)**

கிரிக்கெட் ஆரவாரத்துக்கு மத்தியில் இம் மண்டபத்தில் இத்தனை பேர் கூடி இருப்பது ஆச்சரியத்தை ஏற்படுத்துகிறது. சமூகஜோதியின் அடுக்கு மொழிப் பேச்சை இந்த மண்டபத்தில் கேட்டுள்ளேன். குறிப்பாக பல துறைகள் பற்றியும் உரை நிகழ்த்தும் ஆற்றல் படைத்தவர். 'சங்க நாதம்' நூலில் அரிய பல சொற்பொழிவுள் உண்டு. அவர் உணர்ச்சி பாவத்தோடு பேசுவது புதுமையாக இருக்கும். சொற்பொழிவு ஒரு கலை. ஈழத்துச் சொற்பொழிவாளர்களுள் சமூக ஜோதி றபீக்கும் ஒருவர்.

**வாழ்த்துரை:**

**கம்பவாரிதி இ.ஜெயராஜ் (கொழும்பு கம்பன் கழகம்)**

இந்த விழா நடைபெறக் காரணமாக இருந்த புரவலர் ஹாசிம் உமரை வாழ்த்த வேண்டும். சொற்ப காலத்துக்குள் 31 புத்தகங்கள் புரவலர் புத்தகப் பூங்கா மூலம் வெளிவந்துள்ளன. இது தமிழிலக்கியத்துக்குக் கிடைத்த வரப்பிரசாதம். கல்வி இறைவன் கொடுக்கும் வரம். எவ்வளவு தான் சேர்த்தாலும் செல்வம் போதாதென்ற உணர்வையே தரும். ஓரிருவர் தான் கொடையாளியாகப் பிறப்பர். பிறவியிலிருந்து கொடைப் பழக்கம் வர வேண்டும். கேட்பவர் கேட்பதைக் கொடுப்பதல்லக் கொடை. தகுதி தெரிந்து கொடுப்பவர் தான் கொடையாளி. தன் தகுதி பார்த்துக் கொடுக்க வேண்டும். கொடை மடம் என்பர். முல்லைக்குத் தேரைக் கொடுத்தான் பாரி மன்னன்; நடந்து சென்றான். யாழ்ப்பாணத்திலிருந்து இடம் பெயர்ந்து கொழும்புக்கு வந்த போது சமூக ஜோதியைச் சந்தித்தேன். நல்ல மனிதர். நல்ல மனித இதயம் படைத்தவர். அவரைப் பார்க்கும் போதே மனதில் மகிழ்ச்சி உண்டாகும். அவரது சொற்களில் இன்பம் இருக்கும். இனிய சொல்லானது கடவுள் தந்த கொடையாகும். சிலர் சொற்களால் தலையில் மிளகாய் அரைத்து விடுவர்.

சமூக ஜோதியின் அன்பு மனமும் இன்சொல்லும் என்னை அவர் பால் ஈர்த்தன. புரவலர் ஹாசிம் உமரின் 'மல்லிகை' சஞ்சிகை அட்டைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படக் கட்டுரை எழுதுவதற்காக அவரைச் சந்தித்தேன். தன்னை முன்னிலைப்படுத்தாது புரவலர் பற்றியே சொன்னார். இது சமூக ஜோதி மீது எனக்கு மதிப்பை ஏற்படுத்தியது. புரவலரிடம் உதவி பெற்றே தான் உயர்ந்ததாகச் சொன்னார். தன்னைத் தாழ்த்தியும் புரவலரை உயர்த்தியுமே பேசினார். சொற்பொழிவின் ஆரம்பத்தில் இங்கிதம் இருக்க வேண்டும். கேட்போர் மனதில் ஏக்கத்தை உண்டாக்க வேண்டும்.

றபீக் மாற்றாரையும் மாற்றுக் கருத்துக்களையும் நேசிப்பவர், மதிப்பவர். சமூக ஜோதியின் முதல் பேச்சைக் கேட்டுச் சிலிர்த்தேன். அவரது பேச்சிலுள்ள இயல்பான கவிதை நடை சரஸ்வதியின் கொடையாகும். ஓசை நயமும் பேச்சில் உண்டு, பேச்சாளரின் சொற்கள் காதைச் சுகப்படுத்த வேண்டும். பேச்சில் சொல், பொருள், உணர்வு அழகாக இருக்க வேண்டும். சமயோசிதமாக இருக்க வேண்டும். இத்தகைய அழகுகள் சமூக ஜோதியின் பேச்சிலும் உண்டு. உளச் சுத்தத்தைச் சொற்சுத்தமாக்கிப் பேச்சில் பெருமை பெற்றவர் சமூக ஜோதி. இயல்பான நாதத்தோடும் பொருளோடும் சமயோசிதத் தோடும் பேச்சு வெளிப்பட வேண்டும். இத்தகைய பேச்சுக்கு அத்தாட்சியாகச் சமூக ஜோதியின் நூலில் தொகுக்கப்பட்டுள்ள பேச்சுகள் இருக்கின்றன.

**பதிப்புரை:**
**கலாபூஷணம் எஸ்.ஐ.நாகூர்கனி**

2007 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் பிரமிளா செல்வராஜாவின் 'பீலிக்கரை' என்ற சிறுகதைத் தொகுப்பை முதல் நூலாக வெளியிட்ட புரவலர் புத்தகப் பூங்கா இன்று முத்து நிலை கண்டுவிட்டது. உரைத் தொகுப்பு நூலொன்றை வெளியிட்டுள்ளது. வரலாற்றுச் சிறப்பு மிக்க பேச்சுகள் 'சங்க நாதம்' நூலில் தொகுக்கப்பட்டுள்ளன. தொடர்ந்து சிறந்த நூல்களைப் புரவலர் புத்தகப் பூங்கா வெளியிடும்.

*'சங்கநாதம்' நூலின் அட்டைப் படத்தை வடிவமைத்த சுஸானா சந்தியோகுவை, 'கலைக்கேசரி' ஆசிரியர் அன்னலெட்சுமி இராஜதுரை பொன்னாடை போர்த்தி மாலை அணிவித்துக் கௌரவித்தார். சமூக ஜோதி எம்.ஏ. றபீக்குக்குக் கம்பவாரிதி இ. ஜெயராஜ் பொன்னாடை போர்த்தினார். நூல் வெளியீட்டில் முதல் பிரதியைத் தேசமான்ய டபிள்யூ.எம். தெஹியான் புரவலர் ஹாஸிம் உமரிடமிருந்து பெற்றார்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஏற்புரை :**
**சமூகஜோதி எம்.ஏ.றபீக்**

எனது தாய்மொழி தமிழென்பதில் பூரிப்படைகின்றேன். தமிழை இகழ ஒரு போதும் விடமாட்டேன். எனக்குத் தமிழை ஊட்டி வளர்த்தவர்கள் என் பெற்றோர். யாருக்கும் தீங்கு நினைக்காதே எனப் புத்தி புகட்டினார் தந்தை. தீங்கு நினைக்காது இருக்க முடியும். அது எல்லோருக்குமே முடியாது. துணிவையும் தனித்துவத்தையும் என் தம்பியிடம் கற்றேன். எமது ஊடகத்துறை இல்லையென்றால் இந்த விழா இல்லை. ஹாஸிம் உமர் இந்நாட்டில் புதிய கலாசாரத்தை உருவாக்குபவர்.அவர் ஈகைப் புயல். தமிழ் மாமலையின் அடிவாரத்தில் நிற்கிறேன். சிகரத்துக்குச் செல்லவில்லை. சிகரத்துக்கு எவரும் போக முடியாது. தொட முடியாது. பயணித்துக் கொண்டிருக்கிறேன். நிமிர்ந்து பார்த்தால் தான் தெரியும் தலைக்கு மேல் இருப்பது. நான் இமயத்தைத் தொடவில்லை. வெல்க தமிழ். தமிழரின் தோல்வி தற்காலிகமானது. எக்காலத்திலும் தமிழ் தோற்காது.

*புகழ்பெற்ற வானொலி அறிவிப்பாளர் ஏ.ஆர்.எம்.ஜிவ்ரி நிகழ்ச்சிகளைத் தொகுத்து அறிவிப்புக்களைச் செய்தார்.*

- ஒக்டோபர் 2012

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 48

## தகவம் நிகழ்வில் தமிழறிஞர் சோ. சிவபாதசுந்தரம் நூற்றாண்டுச் சிறப்புரை

**பு**னைவிலக்கியத்தைப் படைத்தல், வளர்த்தல், மதித்தல், நயத்தல், உயர்த்தல் என்ற இலக்கோடு 37 ஆண்டுகளாக இயங்கி வரும் தமிழ்க் கதைஞர் வட்டத் (தகவம்)தின் - இலக்கிய ஆர்வலர்களால் ஆவலோடு எதிர்பார்க்கப்பட்டிருந்த 2011 ஆம் ஆண்டுக்கான சிறுகதைப் பரிசளிப்பு விழா 09.12.2012ஆம் திகதி கொழும்புத் தமிழ்ச் சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில் நடைபெற்றது. இந் நிகழ்வின் சிறப்பம்சமாக ஈழகேசரி பத்திரிகை ஆசிரியர் சோ. சிவபாதசுந்தரம் நூற்றாண்டு நினைவுச் சிறப்புரை அமைந்திருந்தது. தகவத்தின் தலைவர் மாத்தளை கார்த்திகேசு தலைமை தாங்கினார். நாடறிந்த பிரமுகர்கள் மங்களச் சுடரேற்றி நிகழ்வைத் தொடக்கி வைக்க சங்கீத ஆசிரியை நிலானி கோபிசங்கர் தமிழ் வாழ்த்துப் பாடினார்.

### தலைமையுரை : மாத்தளை கார்த்திகேசு

1975ஆம் ஆண்டில் இருந்து தொடர்ச்சியாகத் தகவத்தை நடாத்தி வருகிறோம். பரிசுக்கான சிறுகதைகளை மிகவும் நுட்பமாகத் தெரிவு செய்கிறோம். இதுவரை, நாம் மேற்கொண்ட மதிப்பீடெதிலும் பிழை ஏற்படவில்லை. தம்முன்னால் நடப்பதையே படைப்பாளி படைப்பாக்குகிறான். இதய சுத்தியோடு படைப்புகளாக்கி மக்களுக்குக் கொடுக்கிறான். நாட்டில் வேலை இல்லாப் பிரச்சினை, யுத்த அவலங்கள், அகதி நிலை இவைகளே பெரும்பாலான சிறுகதைகளின் பேசு பொருளாகின்றன. மக்களிடம் இருந்து விலகி நிற்கும் ஒருவரால் சிறந்த படைப்பாளியாக முடியாது. சிறுகதையில் இருந்து புதிய வாசனையை வாசகன் பெற வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றைய சில சிறுகதைகள் சினிமாப் பாணியை உணர்த்துகின்றன. வாசகனின் மனதைச் சிறுகதை தொட வேண்டும். மீளவும் படித்த சிறுகதையைப் படிக்க வேண்டுமென்ற தவிப்பை எழுப்ப வேண்டும். இலங்கைப் படைப்பாளிகளுக்கு இன்று சகல பிரச்சினைகளையும் எழுத முடியாத நிலை உண்டு. இம் மண்ணில் வாழாதவர்கள் இங்கு காணப்படும் கொடூரமான அவலங்களைப் படைப்புக்களாக்குகின்றனர். இனியாவது இந்நாட்டு எழுத்தாளர் இதுவரை தாம் எழுதப் பயந்தவற்றை எழுத வேண்டும்.

தகவம் - வருடாந்தம் வெளிவரும் சிறுகதைகளை மதிப்பீடு செய்து பரிசுகளை வழங்குவதோடு, சம்பந்தப்படும் ஆண்டில் வெளியான சிறுகதைகளையும் நாவல்களையும் தகுந்தவர்களைக் கொண்டு பரிசீலனை செய்து, ஆண்டின் சிறந்த சிறுகதையையும் நாவலையும் தேர்ந்தெடுத்து, கடந்த காலங்களில் பரிசளித்தும் வந்துள்ளது. இவ்வகையில் ஆண்டொன்றில் கே. ஆர்.டேவிட்டின் 'தனியொருவனுக்கு' என்ற சிறுகதையும், ஞானம் ஆசிரியர் தி. ஞானசேகரன் படைத்த 'குருதிமலை' நாவலும் பரிசு பெற்றமை மனப் பதிவிலுள்ளது. தகவத்தின் பரிசு பெற்ற சிறுகதைகள் இரு தொகுதிகளாக்கப்பட்டுத் தகவம் பரிசுச் சிறுகதைகள் என நூலாகவும் வெளிவந்திருப்பதைத் தமிழபிமானிகள் அறிவர். கால ஓட்டத்தில் தகவம் தன் பணிகளை மேலும் விஸ்தரித்து,ஈழத்துச் சிறுகதைக்குத் தமது புனைவாற்றலால் மெருகூட்டி, தமிழ்ச் சிறுகதை உலகால் வியந்துரைக்கத்தக்க வகையில் அதனை மேம்படுத்திய சிறுகதை வினைஞரை மூத்த எழுத்தாளர் என அண்மைக் காலமாகக் கௌரவித்தும் வருகின்றது. தடம் பதித்த இலக்கியவாதி மு. பொன்னம்பலம் ((மு.பொ.) கடந்தாண்டு (2011) இக் கௌரவத்தைப் பெற்றதை இலக்கிய அபிமானிகள் அறிவர், தனது நேர்த்தியான சிறுகதைகளால் கிழக்கிலங்கைப் பிரதேச மொழிச் சிறுகதைக்கு உன்னத ஊட்டத்தை ஏற்றி ஈழத்துச் சிறுகதைக்கு ஒரு நிமிர்வை ஏற்படுத்தித் தனது படைப்பின் தலைப்பான 'மக்கத்துச் சால்வை' என்ற அடைமொழியைத் தனது பெயரின் முன்னொட்டாக்கித் தமிழிலக்கிய உலகில் மிடுக்கோடு வலம் வருவர் 'மக்கத்துச் சால்வை' எஸ். எல். எம் ஹனிபா. இத்தகுதியான சிறுகதைப் படைப்பாளியை இனங்கண்டு தகவம் 2012ஆம் ஆண்டின் மூத்த எழுத்தாளராகக் கௌரவித்துப் பாராட்டுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பாராட்டுரை :**

**வைத்திய கலாநிதி எம். கே. முருகானந்தம்**

தொனிப்பொருளை மனதில் ஊறப்போட்டு செதுக்கிச் செதுக்கி நுணுக்கி, நுணுக்குச் சிறுகதை எழுதுபவர் மக்கத்துச் சால்வை எஸ். எல். எம். ஹனிபா. அநுபவத்தோடு படைக்கும் படைப்பே யதார்த்தமானதாகும். இவரது படைப்புகளில் கிழக்கு மாகாண மண் வாசனை வீசும், அம்மக்கள் பேசும் மொழி மணம் கமழும். இவரொரு வித்தியாசமான படைப்பாளி. மக்கத்துச் சால்வை என்ற இவரது சிறுகதைத் தொகுப்புக்கு எழுத்தாளர் எஸ். பொன்னுத்துரை (எஸ். பொ.)முன்னுரை வழங்கியுள்ளார். ஹனிபா நல்ல கதை சொல்லி. அவரது பேச்சைக் கேட்பது சுகானுபவமானது. நான் அவரது பேச்சின் ரசிகன். எழுத்தில் சத்தியமும் நேர்மையுமுண்டு. இவரது படைப்புக்களில் கிராமிய வனப்பைக் காண முடியும். உளவியல் பாங்கான பேசும் மொழி உண்டு. இவர் படைத்துள்ள பெண் பாத்திரங்கள் நினைவை விட்டு அகலக் கூடியவை அல்ல. நேரடியாகப் போதிப்பது சிறுகதை அல்ல என்ற அடிநாதத்தை ஹனிபாவின் சிறுகதைகளில் காணலாம். குடும்பச் சூழல், உழைப்பு, தேர்ந்த வாசிப்பு, கிராமிய வாழ்வு இவைகளே இவரது சிறுகதைகளின் வெற்றிக்குக் காரணமெனலாம். மாணவப் பருவத்தில் இருந்தே நல்ல எழுத்தாளர்களின் தொடர்புகளைக் கொண்டுள்ளார். எழுத்தாளர்களான எஸ். பொன்னுத்துரை (எஸ்.பொ.) பித்தன், ஆய்வறிஞரான வித்துவான் எஃவ். எக்ஸ். சி. நடராசா ஆகியோரது தொடர்புகளைத் தேடிச் சென்று ஏற்படுத்தியவர். 1946இல் ஹனிபா பிறந்தார். 1970 இன் பின்னரே சிறுகதைப் படைப்பாளி என்ற அவதாரத்தை எடுத்தார். 11ஆம் வகுப்புக்கான பாடசாலைத் தமிழ் மொழி நூலில் இவரத 'மக்கத்துச் சால்வை' சிறுகதை சேர்க்கப்பட்டுள்ளது. இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் ஆயுதக் கலாசாரம் தீவிரமாக இருந்த போதும் கூட தனது உறுதியைத் தளர்த்தாது கிழக்கில் வாழ்ந்தார். சத்தியமும் நேர்மையும் உள்ள எழுத்தாளர். தமிழ், முஸ்லிம் உறவு கலையாதிருக்க உதவியவர். எஸ்.எல். எம் ஹனிபாவுக்கு தகவம் வழங்கும் இந்தக் கௌரவம் மிகவும் பொருத்தமானதாகும்.

**ஏற்புரை:**

**மக்கத்துச் சால்வை எஸ்.எல்.எம் ஹனிபா**

நான் மருத்துவர்களிடம் சிகிச்சைக்காகப் போவதில்லை. புத்தகங்கள் தான் எனக்கு மாமருந்து. எனது மேடைப் பேச்சுக்களைத் தயாரித்துப் பேசமாட்டேன். இது என் இலக்கிய எழுத்தின் பொன்விழா ஆண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதினைந்து வயதில் எஸ். பொ.வை, பித்தனை, எஃவ் எக்சியைக் காண மட்டக்களப்புக்குப் போவேன். தூர இருந்து கொண்டே அவர்களது உரையாடல்களை ரசிப்பேன். கோஷ்டிப் பூசல் இருக்காது. பொடி வைத்துப் பேச மாட்டார்கள். ஆற்றல், உரத்த தேடல் இருக்கும். என்னோடு இருக்கும் வாசிப்புப் பழக்கம் எனது வாப்பாவிடமிருந்து தான் எனக்கு வந்தது. வாசிப்புக்கு வாசகரை ஆற்றுப்படுத்தும் சக்தி உண்டு. எனது மண் வாசனைப் படைப்புகளை ஊடகங்கள் கொச்சைத் தமிழென நிராகரித்தன. தினகரன் பத்திரிகையில் எனது சிறுகதைகள் வெளிவரவில்லை. எழுதவுமில்லை. எழுத்தென்ற கற்பைப் பாதுகாக்கிறேன். பேச்சு வழக்கு, மொழிக்கு உயிரென்பது தான் என் கட்சி. அதுவே, எனது பலமும். ஒரு சிறுகதையைத் திருத்தித் திருத்தி ஏழு தடவைகள் நான் எழுதுவேன். அப்படி எழுதுவது கூடத்திருப்திப்படாது.

எஸ்.பொன்னுத்துரை (எஸ். பொ.) நான் கொடுக்கும் சிறுகதைப் பிரதியைத் திருப்பித் தருவார். புதுமைப்பித்தனை ஞாபகப்படுத்துவார். எழுதுவதை ஒரு தவமாகக் கருதுகிறேன். இன்றைய எமது பத்திரிகைகள், சஞ்சிகைகளில் இலக்கியம் பூஜ்ஜியமாகத் தான் உள்ளது. தகவம் அமைப்புக்கொரு வேண்டுகோள். தகுதியற்ற சிறுகதைகளுக்குப் பரிசு கொடுக்க வேண்டாம். தற்காலத்தில் நல்ல சிறுகதையைத் தெரிவதுக்குத் திண்டாடுவதாகத் தமிழ் நாட்டின் 'இலக்கியச் சிந்தனை' அமைப்புக் கருத்து வெளியிட்டுள்ளது. இந்தக் ஹைக்கூக் காலத்தில் காப்பியம் எழுதுகிறார்கள். அவைகளுக்குப் பரிசும் கிடைக்கின்றன. காப்பியம் படிப்பதுக்கு இப்போ யாருக்குத் தான் நேரமுண்டு? யானை போன்ற பிரமாண்டமான படைப்பொன்றை எதிர்காலத்தில் படைத்துத் தமிழ் வாசகருக்கு கொடுப்பேன். தமிழ்ச் சிறுகதை படைப்பதில் எனக்கு ஆயிரத்தோராவது நிலை கிடைத்தாலும் அதை மகிழ்வுடன் ஏற்பேன்.

தகவம் ஆ. விஜயகுமார் மூத்த எழுத்தாளர் கௌரவத்தைப் பெற்ற மக்கத்துச் சால்வை எஸ்.எல்.எம். ஹனிபாவுக்குப் பொன்னாடை போர்த்தினார். பிரபல எழுத்தாளர் அமானுல்லா அனுப்பிய பொன்னாடையைத் திருமதி. ஆ. விஜயகுமார் மூத்த எழுத்தாளருக்கு வழங்கினார்.

*ஈழத்து இலக்கியத்துக்கு ஊற்றுக் கண்ணாகவிருந்து, அதை வார்த்தெடுத்ததில் ஈழகேசரிப் பத்திரிகையின் பங்களிப்பு என்றைக்கும் மங்காது ஒளிரத் தக்கதாகும். அதன் ஆசிரியராகவிருந்த அறிஞர் சோ. சிவபாதசுந்தரம்,ஈழகேசரி எழுத்தாளரென்ற காத்திரமான எழுத்தாளரணி யொன்றைத் தமிழிலக்கிய உலகுக்கு உருவாக்கித்தந்தார். இலக்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*கியத்துக்கு மட்டுமன்றி, இத்தமிழ்க் கலை, இலக்கியப் பெரியார், வானொலிக் கலைக்கும், ஆற்றிய பணி ஈழத் தமிழருக்குப் பெருமை சேர்க்கின்றது. இப்பெரியார் சோ. சிவபாத சுந்தரத்தின் நூற்றாண்டு இவ்வாண்டாகும். ஈழத்தின் எந்தவொரு திக்கிலும் இந்த நூற்றாண்டு விழா பேசப்படாத நிலையில் தகவத்தினர் அதை உரிய முறையில் கண்டு இவ் விழாவில் சிறப்புரையொன்றை ஏற்பாடு செய்திருந்தது அனைத்துக் கலை,இலக்கிய அபிமானிகளையும் மகிழ்வித்தது. தகவத்தின் ஸ்தாபகர் அமரர் வ. இராசையா, பெரியார் சோ. சிவபாதசுந்தரத்தின் அபிமானியென்பதையும் இச் செயற்பாடு நினைவுபடுத்துவதாக இருந்தது.*

**தமிழறிஞர் சோ. சிவபாதசுந்தரம் நூற்றாண்டுச் சிறப்புரை : உரைஞர் :**

**தெ. மதுசூதனன் (ஆசிரியர் 'ஆசிரியம்,' உதவி ஆசிரியர் 'சமகாலம்')**

தமிழ் நாட்டில் சோ. சிவபாதசுந்தரம் நூற்றாண்டு கொண்டாடப்படுவதாகச் சென்னையில் இருந்து வந்த நண்பர் சொன்னார். அப்போது தான் இச் செய்தி தெரியவந்தது. ஊர்காவற்றுறை, கரம்பொனில் பெரியார் சோ. சிவபாதசுந்தரம் 27.08.1912 ஆம் திகதி பிறந்தார். ஆங்கிலம், இலத்தீன், சமஸ்கிருதம் ஆகிய மொழிகளிலும் நன்கு தேர்ச்சிபெற்ற, இலங்கைப் பல்கலைக் கழகப் பட்டதாரி. இசையார்வம் உள்ளவர். எமது பழந்தமிழ் அறிஞர்களோடு நவீன இலக்கியத்தைப் பேச முடியாது. இப்பெரியார் அப்படியானவரல்ல! 1941இல் வீரகேசரி பத்திரிகையின் இலக்கியப் பகுதிக்குப் பொறுப்பாக இருந்தார். புதுமைப்பித்தனோடும் கடிதத் தொடர்புகளை வைத்திருந்தார். மாணிக்கவாசகர் அடிச்சுவட்டில், சேக்கிழார் அடிச்சுவட்டில், புத்தரின் அடிச்சுவட்டில் ஆகிய நூல்களின் ஆசிரியர் இவர். தனது பயண இலக்கியத்தில் பக்தி, மரபிலக்கிய மரபுகளைச் சங்கமிக்க வைத்து எழுதுவதில் ஆற்றல் மிக்கவர். சேக்கிழார் அடிச்சுவடு நூல் மூன்று சைவத் திருத்தலங்களைப் பற்றி எழுதப்பட்டதாகும். இந்நூலை எழுதப் பிரபல தமிழ் வானொலி அறிவிப்பாளரும், லண்டன் பி.பி.சி ஒலிபரப்பில் கடமை புரிந்தவருமான வானொலிக் கலைஞர் சுந்தா வீ. சுந்தரலிங்கத்தின் உதவியைப் பெற்றதாகவும், சுந்தா தனது நூலில் கூறியுள்ளார். சுந்தாவோடு மற்றொரு இலங்கை வானொலி அறிவிப்பாளரான 'பரா' எஸ்.கே. பரராசசிங்கமும் சென்னைக்குச் சென்று புகைப்படங்களை எடுத்துக் கொடுத்திருக்கின்றனர். இவர்கள் ஒரு மாத காலம் சோ. சிவபாத சுந்தரத்தோடு இருந்தனராம். கௌதம புத்தர் அடிச்சுவட்டில் நூலை எழுதத் தங்கத் தாத்தா சோமசுந்தரப் புலவரின் மகன் சோ. நடராசா உதவியுள்ளார். மகாவம்சம் பொய்யானதாக இருப்பதையும் இந்நூலில் சுட்டிக்காட்டியுள்ளார். இவைகளைச் சோ.சிவபாதசுந்தரம் ஒரு புதுவகையான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கிய எழுத்து மரபில் உண்டாக்கினார். இவர் 'வெளியிட்ட' ஒலிபரப்புக் கலை' நூல் தான், ஒலிபரப்புப் பற்றித் தமிழில் வந்த முதல் நூல். இதை 1954ல் வெளியிட்டுள்ளார். ஒலிபரப்புக் கலையைக் கற்பிக்க மிகப் பொருத்தமான நூலாக விளங்குகின்றது. லண்டன் பி.பி.சி. வானொலிச் சேவையில் 'தமிழோசை' என்ற முதல் தமிழ் வானொலிப் பிரிவைத் தொடக்கி வைத்த முன்னோடி சோ. சிவபாதசுந்தரம். 1950 இற்குப் பின் தமிழகத்தில் வாழ்ந்தார். சிட்டி சுந்தரராஜனும் சோ. சிவபாதசுந்தரமும் இணைந்து நல்ல தமிழ்ப் பணி புரிந்துள்ளனர். காமராஜர் பல்கலைக்கழகத்தில் தமிழ் நாவல் இலக்கியம் என்ற தலைப்புத் தொடர் சொற்பொழிவைத் தொடக்கி வைத்தார். தமிழ் நாவல் கதாபாத்திரங்கள் பற்றி சிட்டி சுந்தரராஜன் சொற்பொழிவாற்றினார். இச் சொற்பொழிவு நூலாகவும் வெளிவந்தது. 1950களில் தமிழ் நாட்டில் புகழ்பூத்த தமிழறிஞர் தெ.பொ. மீனாட்சி சுந்தரனாரோடு உறவு கொண்டிருந்தார். இவருடைய நூலுக்கு மீனாட்சி சுந்தரனார், ராஜாஜி ஆகியோர் சிறந்த அணிந்துரைகளை வழங்கியுள்ளனர். சோ. சிவபாதசுந்தரம் விட்டுச் சென்ற தடங்கள் தமிழ் வளத்தை உச்சமாக்கக் கூடியவை.

*கடந்தாண்டின் (2011) நான்கு காலாண்டுகளிலும் வெளியான சிறுகதைகளிலும் ஒவ்வொரு காலாண்டிலும் மூன்று சிறந்த சிறுகதைகளைத் தேர்ந்தெடுத்து தகவத்தின் ஸ்தாபகர் அமரர். வ. இராசையா விருதுக் கேடயமும், காசோலையும் சான்றிதழும் வழங்கப்பட்டன. மாத்தளை கார்த்திகேசு, வைத்திய கலாநிதி எம்.கே. முருகானந்தம், எஸ். எல். எம். ஹனிபா ஆகியோர் பரிசுகளை வழங்கினர். மூன்றாம் காலாண்டில் முதல் பரிசுக்கு எதுவும் தேறாதபடியால் சிறப்புப் பரிசு வழங்கப்பட்டது. நான்காம் காலாண்டின் அனைத்துப் பரிசுகளும் ஞானம் சஞ்சிகை வெளியிட்ட சிறுகதைகளுக்கே கிடைத்தன. பரிசுக் கதைஞர்களான சூசை எட்வேட், சுதர்கா்மராஜன், தேவமுகுந்தன் ஆகியோர் நேரில் வந்து பரிசுகளைப் பெற்றனர். சிலர் பிரதிநிதிகள் மூலம் பெற்றனர். இவ்விரண்டுக்குள் அடங்காத மற்றப் பரிசாளருக்கு வெகுவிரைவில் அவர்களது பரிசுகள் கிடைக்க நடவடிக்கை எடுக்கப்படுமெனத் தகவத்தின் செயலர் அறிவித்தார். தகவத்தின் செயலாளர் வசந்தி தயாபரன் நன்றியுரை கூறினார்.*

-21/22.12.2012

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 49

## முற்போக்குச் சிந்தனையாளர் வி. ரி. இளங்கோவனின் நான்கு நூல்கள்

**வை**தீகப் பழைமையில் ஊறித் திளைத்திருந்த வட இலங்கையின் தீவகத்தில் பொதுவுடமைப் புரட்சிக் கோட்பாடுகளில் தன்னை அடையாளப்படுத்தி, பதின்ம வயதிளைஞனொருவன் முகிழ்ந்தெழுந் தானெனில் இன்றும் எவருக்கும் அது ஆச்சரியமாகத்தானிருக்கும்! தோன்றிய குடும்பப் பின்புலத்தைக் கூடக் கண்டுகொள்ளாது அது நடந்தேறித்தானுள்ளது. அதை நடாத்திக் காட்டி இன்றும் தானொரு அசல் மார்க்சியராக உலா வந்து கொண்டிருப்பவர் மூத்த முற்போக்கு எழுத்தாளர் வி.ரி. இளங்கோவன். அண்மையில் இவர் புகலிடத்திலிருந்து இலங்கை வந்தபோது 'அழியாத் தடங்கள்,'; 'இப்படியுமா.?' 'தமிழர்கள் மருத்துவம் அழிந்து விடுமா?' ஹிந்தியில் மொழி மாற்றப்பட்ட சிறுகதைத் தொகுதி ஆகிய நான்கு நூல்களை வெளியிடும் இலக்கிய மாலை நிகழ்வொன்றை அதி சிறப்பாக நடாத்தினார். கொழும்புத் தமிழ்ச் சங்க விநோதன் மண்டபத்தில் 01.12.2012 ஆம் திகதி மூத்த பத்திரிகையாளர் அன்னலெட்சுமி இராஜதுரை தலைமையில் இந்நிகழ்வு நடைபெற்றது.

தமிழ் வாழ்த்தைப் ப.க. மகாதேவா பாடினார்.

**தலைமையுரை :**
**மூத்த பத்திரிகையாளர் அன்னலெட்சுமி இராஜதுரை**
**(ஆசிரியர் கலைக்கேசரி)**

வீரகேசரிப் பத்திரிகையின் நிலவரத்தை அறிய 1970இன் முற்பகுதியில் வீரகேசரி நிர்வாகம் பிராந்திய நிருபர்கள் கூட்டமொன்றை நடாத்தியது. அன்று நிருபராக இருந்த வி. ரி. இளங்கோவனும் அக்கூட்டத்திற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்திருந்தார். அதில் தான் அவரை முதலில் கண்டேன். கடந்த வருடம் நடந்த இலக்கிய விழாவிலும் சந்தித்தேன். அவரது துடிப்பையும், பரபரப்பையும் கண்டு ஆச்சரியப்பட்டேன். புங்குடுதீவில் கலை, இலக்கியவாதிகளை உடைய குடும்பத்திலிருந்து வந்தவர். இவரது சகோதரர்களான நாவேந்தன், துரைசிங்கம், நாடறிந்த இலக்கியவாதிகள். வீரகேசரி, தினகரன், சுதந்திரன், இலங்கை வானொலி ஆகியவற்றில் எழுத்துப் பங்களிப்புகள்.

இந்தப் பின்புலமே இளங்கோவனையும் இலக்கியத்துக்கு வரத் தூண்டியது. கே. டானியல் தலைமையில் இயங்கிய மக்கள் கலை இலக்கியப் பெருமன்றத்தின் பொதுச் செயலாளராக இளங்கோவன் கடமை புரிந்தவர். புலம்பெயர்ந்த எழுத்தாளர்; தாயக மக்கள் படும் துன்பங்கள், தாயகப் பற்று, ஏக்கங்கள் என்பவற்றைத் தான் பெரும்பாலும் படைப்புகளாக்கி உள்ளனர். ஆனால் இளங்கோவன் இவர்கள் பிரான்சில் எதிர்கொள்ளும் அநுபவங்களைக் காய்தல் உவத்தலற்ற நிலையில் படைப்புகளாக்கியுள்ளார். 'இப்படியுமா?' தொகுப்புச் சிறுகதைகள் இவரது அன்றைய சிறுகதைகளின் தொடர்ச்சியாகவே உள்ளன. நா. சண்முகதாசன், கே. டானியல், மா சேதுங்கின் சீனா போன்றவை பற்றிய கட்டுரைகள் நூலில் உண்டு. நாமறியாத பல விடயங்களை எம் மனக் கண்முன் கொண்டு வருகின்றன. 'தமிழர் மருத்துவம் அழியுமா?', நூலில் தமிழ்க் கலாசார வைத்திய முறைகளைக் கட்டுரைகளாகத் தந்துள்ளார். ஏற்கனவே வவுனியூர் உதயணனின் நாவலொன்று ஹிந்தி மொழியில் மாற்றப்பட்டு வெளிவந்துள்ளது. இப்போ இளங்கோவனின் சிறுகதைகள் சிலவற்றைக் ஹிந்தியில் மொழி மாற்றம் செய்து நூலாக வெளியிட்டுள்ளனர். இளங்கோவன் கவிஞர், விமர்சகர், இலக்கியச் செயற்பாட்டாளர், பேச்சாளர். அவரது சிறந்த பணிகள் மென்மேலும் தொடர வேண்டும்.

*நூல்களின் வெளியீட்டில் மூத்த பத்திரிகையாளர் அன்னலெட்சுமி இராஜதுரை புரவலர் ஹாசிம் உமருக்கு முதல் பிரதிகளை வழங்கினார்.*

*கொழும்பு மாநகர சபை உறுப்பினர் எஸ். பாஸ்கரா விழா நாயகன் வி.ரி. இளங்கோவனுக்குப் பொன்னாடை போர்த்தினார்.*

*சட்டத்தரணி க. மு. தர்மராசா உட்படச் சில பிரமுகர்களுக்கும் சிறப்புப் பிரதிகள் வழங்கப்பட்டன.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கருத்துரைகள்:**
**'யாத்ரா' அஷ்ரப் சிஹாப்தீன்**

நல்ல கதைகளை நான் வாசிப்பதுண்டு. முதல் வசனத்தில் கவர்ச்சி இருக்க வேண்டும்.

பொருத்தமான சொற்களால் சிறுகதைகளைப் படைக்க வேண்டும். இளங்கோவனின் சிறுகதைகள் 100 மீற்றர் ஓட்டம் போன்றவை. தொய்வு இருக்கக் கூடாது. வெளிநாடுகளுக்குச் சென்றவர்கள் அங்கு செல்வச் செழிப்போடு வாழ்கின்றார்களென்ற மாயை எம்மில் பலரிடமுண்டு. 'இப்படியுமா...?' சிறுகதைத் தொகுப்பின் சில கதைகளைப் படித்த பின் அப்படி இல்லை என்ற உணர்வே ஏற்படுகிறது. கிண்டல் தன்மையில் கதைகள் சொல்லப்பட்டுள்ளன. அழகான வர்ணனைகள் காணப்படுகின்றன. என்னால் இப்படி வர்ணித்து எழுதமுடியாது. எழுத்து நடைகள் மிகவும் இலகுவானதாக உள்ளன. பிரான்ஸில் இடம்பெயர்ந்தோர் வாழும் யதார்த்த நிலையைச் சொல்லியுள்ளார். மிகவும் சுவாரஸ்யமாக வாசிக்கக் கூடியவை. அட்டைப்படம் ஏதாவது ஒன்றைச் சொல்லும்படியாக அமைந்திருக்க வேண்டும்!

**கலாபூஷணம் தம்பிஜயா தேவதாஸ்**
**(எழுத்தாளர், வானொலி ஒலிபரப்பாளர்)**

கவிஞர் வி.ரி. இளங்கோவன் எனது புங்குடுதீவுக் கிராமத்தவராக இருப்பது எனக்குப் பெருமையைத் தருகின்றது. இவரது குடும்பத்தைப் பற்றி 'புங்குடுதீவு வாழ்வும் வளமும்' என்ற எனது நூலிலும் பதிவுகளை ஏற்படுத்தியுள்ளேன். இவ்வூரில் முதன் முதலில் இலங்கை சாகித்திய விருதைப் பெற்ற பெருமை இளங்கோவனின் மூத்த சகோதரர் நாவேந்தனையே சாரும்.

இவரது இன்னொரு சகோதரர் வி. ரி. துரைசிங்கம் நாடறிந்த சிறுவர் இலக்கியவாதி. கல்விப்பணிப்பாளராக இருந்தவர். இன்று பிரபல சட்ட வல்லுனராகத் திகழும் வி.ரி. தமிழ்மாறனும் இவரது சகோதரர்தான். மற்றவரான சிவானந்தன் வைத்தியத் துறையில் சேவை புரிகிறார். இளங்கோவனின் குடும்பத்தினரே எனது புத்தகத்தின் பெரும்பகுதியை ஆக்கிரமித்துள்ளனரென்றால் மிகையாகாது. சட்ட வல்லுனர் தமிழ்மாறன் தான் 'புங்குடுதீவு வாழ்வும் வளமும்' நூலுக்கு முன்னுரை தந்துள்ளார். வெளிநாடுகளிலும் யாழ்ப்பாணத்தார் பழைய மாணவர் சங்கங்களை நடாத்துகின்றனர். பழைய மாணவர் சங்கமென்றால் என்னவென்பதை இளங்கோவனின் கதையை வாசித்த பின்னர் தான் அறிந்தேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தி. ஞானசேகரன் (ஞானம், ஆசிரியர்)

சித்த ஆயுர்வேத வைத்தியம், ஆலோபதி வைத்தியம் என்பன தமிழில் உள்ளன. சுப்பிரமணியம், கவிஞர் ஜின்னாஹ் ஷரிபுத்தீன், ச. முருகானந்தன், இளங்கோவன், நான் சித்த ஆயுர்வேத வைத்தியர்களாகப் பணி செய்கின்றோம். எங்களில் சிலர் மக்களின் கை நாடியைப் பிடித்துப் பார்ப்பது போல் அவர்களது வாழ்வின் நாடியையும் பிடித்துப் பார்த்து இலக்கியமும் செய்கிறோம். 'தமிழர் மருத்துவம் அழிந்து விடுமா?' நூலாசிரியர் வி.ரி. இளங்கோவன் ஐக்கிய நாடுகள் சபைத் தொண்டராக பிலிப்பைன்ஸ் நாடுவரை சென்று ஆயுர்வேத பணியாற்றி விருதுகள் பல பெற்றவர். இருபது வயது வரை நான் ஒரு பனடோலைக் கூட எடுத்திருக்கமாட்டேன். என் தந்தையார் சித்த வைத்தியம் செய்தவர். எங்களது யாழ்ப்பாணத்துக் காணியில் இன்றும் தூதுவளை, துளசி, முருங்கை, சித்தரத்தை, இக்கிரி போன்ற பல மூலிகைச் செடிகளைக் காணலாம். இவையெல்லாவற்றையும் எனது தந்தையே வளர்த்தார். ஆயுர்வேத மூலிகை மருந்துகள் பக்க விளைவுகளை ஏற்படுத்தாதவை. பனடோலால் ஏற்படும் பக்க விளைவுகளைப் பற்றி நாம் சிந்திப்பதில்லை.

அது எமது ஈரலைப் பாதிக்கக் கூடியது. நாமெல்லோரும் தமிழர் மருத்துவமான சித்த வைத்தியத்துறையை வளர்த்தெடுக்க வேண்டும். இங்குள்ள சித்த வைத்தியர்களே அதை அழிக்கும் நிலை காணப்படுகிறது.

இந்த வைத்தியர்களிடம் நோயாளர்கள் சென்றால் இவர்கள் ஆங்கில மருந்துகளையே எழுதிக் கொடுக்கின்றனர். இவர்களுக்கு எதிராகக் கட்டாயம் நடவடிக்கை எடுத்து, ஆயுர்வேத மருந்துகளைக் கொடுக்க வைக்க வேண்டும். 'தமிழர் மருத்துவம் அழிந்து விடுமா?' நூலில் கருவேப்பிலையின் சிறப்புச் சொல்லப்பட்டுள்ளது. துளசியின் வைத்திய மகிமை உண்டு. தாய்ப்பால் பற்றியும் உள்ளது. மருத்துவம் சம்பந்தமான பழமொழிகளையும் அறிய முடிகிறது. 'ஆயிரம் வேரைக் கண்டவர் அரைப் பரியாரி.' இந்தப் பழமொழியைக் கண்டு ஆச்சரியப்பட்டேன். நாமெல்லாம் ஆயிரம் பேரைக் கொன்றவர் அரைப் பரியாரி என்றல்லவா சொல்லித் திரிகிறோம்!

அது பிழை என்பதை நூலை வாசித்த பின்னர் தான் அறிந்தேன். இப்படியாகப் பல ஆயுர்வேத வைத்தியம் சம்பந்தமான விடயங்களைத் 'தமிழர் மருத்துவம் அழிந்து விடுமா?' நூல் தருகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழிந்து விடக் கூடாதென்ற பிரக்ஞை காணப்படுகின்றது. எந்தவொரு ஆயுர்வேத வைத்தியரும் இப்படியானதொரு பொக்கிஷமான நூலை வெளியிடவில்லை. இதை இன்னமும் பெரிதாகத் தமிழர் மருத்துவம் சார்ந்த விடயங்களோடு வெளியிட வேண்டும்.

## தோழர் எம். ஏ. சி. இக்பால்

## (அகில இலங்கை தொழிற்சங்க யாழ். கிளை முன்னாள் பொதுச் செயலாளர்)

கவிஞர் இளங்கோவன் ஆயுர்வேத பாடசாலையின் நிர்வாக இயக்குநராக யாழ்ப்பாணத்தில் கடமை புரிந்தவர். அக்காலத்தில் அக்கல்லூரி மாணவர்கள் போராட்டம் நடாத்தினர். பணிப்பாளராக இருந்தும் இளங்கோவன் மாணவர் சார்பாகவே நின்றார். இதனால் அவருக்குப் பல பிரச்சினைகளும் ஏற்பட்டன. எம்மோடு தொடர்பு கொண்டார். மாணவருக்கு ஆதரவு கொடுத்து ஊர்வலம் நடாத்தினோம். நல்ல உள்ளம் படைத்தவர் இளங்கோவன். மேடையில் கவிதை பாடும் சிறந்த ஆளுமையைக் கொண்டிருந்தார். நாவலாசிரியர் கே. டானியலைப் பூரணமாக நம்பினார். தீண்டாமை ஒழிப்பில் டானியலோடு சேர்ந்து போராடினார். டானியலை ஆசானாக ஏற்றார். கொம்யூனிஸ்ட் கட்சியில் உறுப்பினராக இல்லாதிருந்தும் தீவிர கொம்யூனிஸ்ட் என்ற பெயரைப் பெற்றார்.

பொது மக்களுக்கு உதவும் சிந்தனைப் போக்காளர் இளங்கோவன். டானியலின் இறுதிக் காலத்தில் அவரது வைத்தியத்துக்காக இந்தியா சென்றார். டானியலின் பூதவுடலை நாத்திகருக்கான சேமக் காலையில் புதைப்பதற்கு ஏற்பாடுகளையும் செய்தார். 'அழியாத தடங்கள்' என்ற நூலில் டானியல், சண்முகதாசன் பற்றியும் இளங்கோவன் எழுதியுள்ளார். மாசேதுங்கை உளப்பூர்வமாக ஏற்றுக் கொண்டார். சண்முகதாசன் சீனாவை எதிர்த்த விடயமும் நூலில் உண்டு. இளங்கோவன் சண் பக்கம்தான் நின்றார்.

உள்நாட்டு - சர்வதேச நடவடிக்கைகளை உன்னிப்பாகக் கவனித்துள்ளார். அடக்கியொடுக்கப்படும், கஷ்டப்படும் மக்களைப் பற்றிச் சிந்திக்கிறார்.

## கலாபூஷணம் கலைஞர் தில்லை முகிலன்

தோழர் இளங்கோவன் பட்டங்களுக்காக யாரோடும் ஒட்டிக் கொண்டவரல்ல. பெரும் மார்க்சியத் தடத்தில் நடந்தவர். 'அழியாத் தடங்கள்' நூலில் 14 விடய தானங்கள் உள்ளன. அருமையான தகவல்கள் கிடைக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சண்முகதாசன், டானியல் தாக்கம், பாதிப்பு இளங்கோவனிடம் உண்டு. ஜே.வி.பி. கிளர்ச்சிக் காலத்தில் சண்முகதாசன், டானியல், சி.கா. செந்திவேல், சூடாமணி, சிவஞானம் போன்ற தோழர்கள் திருகோணமலைக்கு வந்து அங்கு தங்கியிருந்தனர். அவைகளையும் இந்நூலில் சேர்த்திருக்க வேண்டும். இளங்கோவனின் நோக்கு இப்போ மிகவும் கூர்மை கொண்டுள்ளது. அவரது 'தமிழர் மருத்துவம் அழிந்துவிடுமா? நூலும்' அருமையானது.

## எஸ். பாஸ்க்கரா (கொழும்பு, மாநகரசபை உறுப்பினர்)

வி. ரி. இளங்கோவன் தமிழ், ஹிந்தி மொழிகளிலான நூல்களை வெளியிடுகிறார். தனது நாட்டுப் பற்றைச் சொல்லும் தன்மை அவரிடம் நிறையவே உண்டு. குறைகள், பிழைகளைச் சொல்லத் தயங்கும் - பயப்படும் இக்கால கட்டத்தில் யாருக்கும் முதுகை வளைக்காது நேரிய முறையில் பிழைகளைச் சுட்டிக் காட்டுகிறார். சிறுவயதிலே தக்க ஆளுமைகளைத் தனதாக்கிக் கொண்டவர். அது அவரது குடும்பம் கொடுத்த கொடை. சரியானவைகளைச் சரியென எடுத்தும், பிழையானவைகளைப் பிழையென நீக்கியும் நாம் அடுத்த கட்டத்துக்குச் செல்ல வேண்டும். என்னைக் கொழும்புத் தமிழ்ச் சங்கத்தினர் வாழ்த்தினர். அத்தகைய ஆசீர்வாதங்கள் தான் இன்று முக்கியமானவை. அவைகளை நாம் இளங்கோவனுக்கும் செய்து வாழ்த்த வேண்டும்.

## வீ. தனபாலசிங்கம் (பிரதம ஆசிரியர், தினக்குரல்)

இளங்கோவன் நிறைவான பணிகளைச் செய்கிறார். பொதுவுடைமையை இன்னமும் கைவிடவில்லை. குறைந்தளவில் ஆட்கள் பங்கு கொள்ளும் இப்படியான கூட்டங்களில் தான் நல்ல விடயங்களைக் கேட்க முடியும். அந்தக் காலத்தில் நாங்கள் பங்கு கொண்ட அரசியல் வகுப்புகளும் இப்படித்தான், குறைந்த அளவிலான தோழர்களே பங்குபற்றுவார்கள். மக்களை நல்வழிக்கு வழி நடாத்திய மண்மறவா மனிதர்களை 'அழியாத் தடங்கள்' நூல் மூலமாக இளைய சந்ததியும் அறிய வசதி ஏற்படுத்துவது மகிழ்ச்சிக்குரிய சேவை. எழுத்தாளர் தோழர் டானியலை, இளங்கோவன் 'அப்பு' எனத்தான் அழைப்பார். தன் தந்தைக்குச் செய்யும் கடமையைப் போல் டானியலுக்குச் செய்தார். இளங்கோவனின் நூல்கள் இன்னும் வெளிவரவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கவிஞர் மேமன்கவி

ஹிந்தி போன்ற இந்திய மொழிகளில் இலங்கைத் தமிழ் எழுத்தாளரின் படைப்புகளும் மொழி பெயர்க்கப்பட்டு வெளியிடப்படுவது சந்தோசப்பட வேண்டிய விடயமாகும். அந்த வகையில் இளங்கோவனின் சில சிறுகதைகளும் ஹிந்தியில் மொழி பெயர்க்கப்பட்டு நூலாக வெளிவந்திருப்பது சந்தோசத்தைத் தருகிறது. புலம்பெயர்ந்த பின்னரும் இளங்கோவன் தொடர்ந்து இடதுசாரி இயக்கச் சிந்தனையுடன் செயற்படுகிறார். நான் நூல்களின் முன்னுரைகளை வாசிப்பதில்லை. என்னில் அவைகள் தாக்கத்தை ஏற்படுத்திவிடும் என்பதற்காக. 'இப்படியுமா?' சிறுகதைத் தொகுப்பில் 16 சிறுகதைகள் தொகுக்கப்பட்டுள்ளன. போர்ச்சூழல் மக்களுக்கு ஏற்படுத்திய அவலங்கள், புகலிடத்தில் தலைமுறை இடைவெளி, முதியோர் பிரச்சினைகள், இடதுசாரிய புத்திஜீப் போலிகளை அம்பலப்படுத்தல், புகலிடத்திலும் சொந்த மண்ணிலும் பெண்களின் நடத்தைக் கோலங்கள், ஆணாதிக்கம் ஆகிய தொனிப் பொருள்களில் இச்சிறுகதைகள் படைக்கப்பட்டுள்ளன. எளிய நடையில் அங்கதம் இழையோடக் கதைகள் படைக்கப்பட்டுள்ளன. சிறுகதைகள் படைக்கப்பட்ட காலம் தரப்படாதது குறைபாடாகத் தெரிகிறது.

## ஏற்புரை:
## கவிஞர் வி. ரி. இளங்கோவன்

யாழ். பல்கலைக்கழகத்தின் கலைப்பிரிவில் இன்று ஆயுர்வேத மருத்துவப் பிரிவு இயங்குகின்றது. இது ஏற்படுவதற்கு அன்று நாங்கள் நடாத்திய போராட்டமும் ஊர்வலமும் தான் காரணம். ஐக்கிய நாடுகள் சபையின் ஏற்பாட்டில் நான் பிலிப்பைன்ஸ் நாட்டுக்குக் கடமைக்காகச் சென்று இலங்கை வந்தபோது யாழ். ஆயுர்வேதக் கல்லூரியின் நிர்வாகப் பணிப்பாளராகப் பொறுப்பேற்றேன். அச்சமயம் ஆயுர்வேதக் கல்லூரிக்கு ஏற்ற கட்டிடம் இருக்கவில்லை. மாணவர்கள் குமுறினர். இப்பிரச்சினையைப் போராட்ட வடிவுக்குக் கொண்டு வந்ததால் இன்றைய நிலை ஆயுர்வேதம் கற்கும் மாணவர்களுக்குக் கிடைத்தது.

வைத்திய பீடத்தோடுதான் சேர்க்கும் படி கேட்டோம். எம்மைப் பகிடி செய்தனர். மூலிகை என்ற சஞ்சிகையையும் வெளியிட்டோம். தமிழர் மருத்துவத்தைப் பரப்புவதற்காக இச் சஞ்சிகையை வீடுவீடாகக் கொண்டு சென்று கொடுத்தோம். ஒவ்வொரு வீட்டிலும் முருங்கை மரம் வளர்க்கச் சொன்னோம். 'பஞ்சந்தாங்கி' என்ற பெருமை முருங்கைக்கு உண்டு. தீவுப் பகுதியிலிருந்து அன்று முருங்கைக் காய் யாழ்ப்பாணச் சந்தைக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விற்பனைக்கு வந்தது. மூலிகை சஞ்சிகையில் வெளியான சில கட்டுரைகளும் 'தமிழர் மருத்துவம் அழிந்து விடுமா?' என்ற எனது நூலில் உண்டு, 'அழியாத் தடங்கள்' கட்டுரைகள் எனது பத்திரிகைக் கட்டுரைகள். முற்போக்கு விடயங்களில் எனது மூத்தண்ணர் எழுத்தாளர் நாவேந்தனோடு வாதாடியிருக்கிறேன். அன்று வெளிவந்த 'தீப்பொறி' பத்திரிகை நாவேந்தனை 'நாய் வேந்தன்' என நக்கலடித்து எழுதியது. அடிமட்ட மக்களுக்கான சார்பு நிலையை டானியலிடம் கண்டு தீவுப் பகுதிக்கும் அவரை அழைத்துக் கூட்டங்கள் நடாத்தினோம். அவரது 'பஞ்சமர்' நாவலை இரவில் அவர் சொல்லச் சொல்ல நான் எழுதினேன். எனக்குத் தெரியாத விடயங்களைச் சொல்லித்தந்தார். தஞ்சாவூரில் அ. மார்க்ஸ் குடும்பம் டானியலுக்குச் செய்த உதவிகளை என்றும் மறக்கமுடியாது. டானியல் சத்தி எடுத்தபோது மார்க்ஸின் மனைவி அதைத் தனது கையால் ஏந்தி எடுத்தார். நான்கைந்து வருடங்கள் பரிசோதனையில் வைத்திருந்த பின்னரே டானியல் என்னை ஏற்றுக்கொண்டார். காலத்தின் தேவைகளைத்தான் நான் எழுதினேன். சீனா சரியா? பிழையா? என்ற விடயங்குறித்து இன்று பொய்யாக எழுதுகின்றனர். புலம் பெயர்ந்தோர் குரலாக ஒலிக்கும் ஹிந்தி மொழி பெயர்ப்புச் சிறுகதைத் தொகுப்பைப் புதுடில்லி ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகம் மொழி பெயர்த்தது.

- 29.12.1012

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 50

## ‘கண்ணீரினூடே தெரியும் வீதி’

**யா**ழ்ப்பாணம், புனித சம்பத்திரிசியார் கல்லூரிப் பழைய மாணவர்களை ஒன்று கூட வைத்த நல் விழாவாக - கொழும்பு, திறந்த பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளர் தேவமுகுந்தனின் ‘கண்ணீரினூடே தெரியும் வீதி’ சிறுகதைத் தொகுப்பின் வெளியீட்டு விழா அமைந்திருந்ததை அண்மையில் இலக்கிய இரசிகர்கள் கண்டு களித்தனர். இந்நிகழ்வு கொழும்பு தமிழ்ச் சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில் நடைபெற்றது. அதிதீவிர இலக்கியப் பற்றாளரும் வைத்திய கலாநிதியுமான எம்.கே.முருகானந்தம் தலைமை தாங்கினார். இலக்கியம் மற்றும் பொதுப் பணிப் பிரமுகர்கள் மங்களச் சுடரேற்றி நிகழ்வைத் தொடக்கி வைக்க லலிதாம்பிகை சண்முகநாதன் தமிழ் வாழ்த்துப் பாடினார்.

**வாழ்த்துரைகள்:**

**தி.ஞானசேகரன் (ஞானம் ஆசிரியர்)**

இதுவொரு மிக முக்கியமான வெளியீட்டு விழா. முக்கிய இலக்கிய கர்த்தாக்களான ‘இலக்கியத்துக்குப் பாரிய சேவை செய்துவரும்’ அலை அ.யோகராசா, தடம் பதித்த சிறுகதை எழுத்தாளர் உமா வரதராஜன், தகவம் வசந்தி தயாபரன், விமர்சகர் விமலன் சின்னராஜா பேசுவதற்காக இந்த மேடையில் இருக்கின்றனர். ஈழத்து இலக்கிய உலகால் அதிகம் பேசப்படுபவர் தேவமுகுந்தன். பலரது சிறந்த கணிப்பைப் பெற்றவர். ‘கண்ணீரினூடே தெரியும் வீதி’ தொகுதியிலுள்ள சிறுகதைகள் போர்க்காலத்தில் மக்கள் பட்ட சிரமங்களை நுட்பமாக அக்குவேறு ஆணிவேறாகக் காட்டுகின்றன. தேவமுகுந்தன் பதிவுகளுக்குச் சிறப்பான உருவத்தைக் கொடுத்துள்ளார். இதுவரை கிடைக்காத வேறுபட்ட வாசிப்புக கிடைக்கின்றது. பத்திரிகைகளுக்கு எழுதமாட்டார். எனது ஞானம் சஞ்சிகைக்குத் தனது சிறுகதைகளை அனுப்புவார். தனது படைப்புக்களைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுத்து அபிப்பிராயம் கேட்டு மெருகூட்டிச் சிறுகதைகளை எழுதுகிறார். இவ்வாறே சிறுகதை படைப்பதில் வெற்றி கண்ட ஜெயகாந்தனும் செய்வாராம். நெருக்கமான நண்பர்களை மெரீனா கடற்கரைக்கு அழைத்துத் தான் எழுதியதை வாசித்துக் காட்டுவாராம். சொல்லப்போனால் இந்த வகையில் படைக்கப்படுபவை தான் சிறந்த சிறுகதைகள் ஆகும். ஊறப் போட்டு மெருகேற்றிய பின்னரே வெளியிட அனுப்புவதால் தான் தேவ முகுந்தன் சிறுகதைகள் சிறப்பானவைகளாக அமைகின்றன. ஞானம் சஞ்சிகையோடு மிகவும் நெருக்கம் காட்டுகிறார். புதிதாக வரவுள்ள ஞானம் இதழை 25 ஆம் திகதியே விசாரிக்கத் தொடங்கி விடுவார். எனக்குத் தேவையானவற்றைச் செய்தும் தருவார். 'கண்ணீரினூடே தெரியும் வீதி,' தொகுப்பைச் சென்னை காலச்சுவடு பதிப்பகம் வெளியிட்டுள்ளது. ஈழத்து வாசகருக்கு இப்பதிப்பகத்தின் நூல்கள் கிடைக்க நூலாசிரியர்கள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

## பிரபல திறனாய்வாளர் கே.எஸ்.சிவகுமாரன்

கல்வித்தகைமை, எழுத்தாற்றல் என்பவைகளே தேவமுகுந்தனின் சிறப்பாளுமைகளாகும். மிகவும் நல்ல குணம் படைத்தவர். ஆடம்பரமற்ற எழுத்தாளர். மனைவி, குழந்தையுடன் பஸ்ஸில் சந்தித்தேன். அடையாளம் கண்டு ஆசனம் தந்தார். மறுத்தேன். எனக்கு யாரென்பது தெரியவில்லை! சுயமுயற்சி உள்ளவர். பிரதிபலனாக எதையும் எதிர்பாராதவர். எம்.ஏ.பட்டதாரி, மலேசியாவில் பயிற்சி பெற்றவர். பேராசிரியர் எம்.ஏ.நுஃமான் அணிந்துரை வழங்கியுள்ளார். சிறுகதைகளினூடாகக் கொழும்பு வாழ்க்கை முறையைச் சீராக அறிய முடிந்தது. மகனென நினைத்து தேவமுகுந்தனை வாழ்த்துகிறேன்.

## தலைமையுரை:
## வைத்திய கலாநிதி எம்.கே. முருகானந்தம்

தமிழ்க் கதைஞர் வட்டம் (தகவம்) சிறுகதைப் பரிசு உட்படத் தனது சிறுகதைகளுக்காகத் தேவமுகுந்தன் பல பரிசில்களைப் பெற்றுள்ளார். இருபதாண்டுகளாகச் சிறுகதைகளைப் படைக்கிறார். கணிசமான ஆண்டுகள் அஞ்ஞாத வாசமும் செய்து எழுதாதிருந்தார். குறிப்பிட்ட சஞ்சிகைகளுக்கு மட்டும் அதிகமாக எழுதி எல்லா வாசகருக்கும் அறிமுகமாகிவிட்டார். ஆக்கங்கள், சஞ்சிகைகளில் வெளி வரும் போது அவைகளைப் பாதுகாத்து காலங்கடந்தும் வாசிப்பதற்குச் சந்தர்ப்பம் கிடைக்கும். குறுகிய காலத்துக்குள் தேவமுகுந்தன் நல்ல காத்திரமான சிறுகதைகளைப் படைத்துள்ளார். தார்மீக கோபத்தை பிலிற்றுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரது சிறுகதைகள் சிறப்படைவதற்கு அ.யேசுராசா அக்கதைகளின் முதல்வாசகனாக இருப்பதே காரணம். அ.யேசுராசா மிகச் சிறந்த சிறுகதை எழுத்தாளரென்பது யாவரும் அறிந்ததே. சிறுகதை வெற்றுப் புனைவல்ல. எப்பவோ ஊற வைத்த சம்பவமொன்று சிறுகதையில் வெளிவரும். பல வருடங்களின் முன் மகாநாடொன்றுக்குச் சென்றேன். அதன் அனைத்து நடவடிக்கைகளும் சிங்களத்திலேயே நடந்தேறின. அதை எழுத வேண்டுமென நான் நினைக்கவில்லை. ஆனால் தேவமுகுந்தன் அப்படியல்ல. இப்படியான நெருடல்களையும் எழுதிவிடுகிறார். படைப்புக்கு அப்பால் தேவையற்றவைகளைப் பேசமாட்டார். அவரது சிறுகதைகளில் நம்பகத்தன்மை இருக்கும்.

சிறுகதைகளில் அவர் படைத்துள்ள அத்தனை பாத்திரங்களும் உயிர் ஓவியங்கள். இன முரண்பாட்டுப் போர் பற்றி எழுதியுள்ளார். ஆனால் ஷெல் அடி இல்லை. மாறாக அவரது மொழி அதையும் பேசுகின்றது. மாற்றினத்தோடான வன்மத்தைப் படைப்புகளில் காணவில்லை. இனப்பற்றாளர். ஆனால் அவரிடம் நிதானம் இருக்கின்றது. தன்னினப் பற்றைக் காட்டவில்லை. இத்தொகுப்பில் எனக்கு மிகவும் பிடித்தது 'இரட்டைக் கோபுரம்' சிறுகதை. ஏனைய இனங்களை விரோதிகளாகப் பார்ப்பது எமது தாழ்வு மனப்பான்மையைத் தான் வெளிப்படுத்தும். இன முரண்பாட்டைத் தேவமுகுந்தன் சிறுகதைகளில் அதி தீவிரமாகக் காட்டவில்லை. ஒதுக்கித் தள்ளி விட முடியாத சிறுகதைகள், படித்து முடிந்த பின்னரும் வாசகரோடு பேசக் கூடியவை. இது மிகச் சிறந்த விழா. சென்னை காலச் சுவடு பதிப்பகம் இந்நூலை வெளியிட்டுள்ளது. அந்த வகையில் மதிப்பைப் பெறும் நூல். காத்திரமான படைப்புகள் இந்நூலிலுண்டு. பேராசிரியர் எம்.ஏ.நுஃமான் முன்னுரை எழுதியுள்ளார். விழாவின் காத்திரத் தன்மையை அழைப்பிதழ் காட்டுகின்றது. படைப்பிலக்கியத்தில் சமரசத்துக்கு இடம்கொடுக்காத உமா வரதராஜன் பேசுகிறார். படைப்பிலக்கியவாதிக்குத் தேவையான தகைமைகள் தேவமுகுந்தனிடம் உண்டு. வளமான எதிர்காலம் நிச்சயம் அவருக்குண்டு.

**வெளியீட்டுரை :**
**தகவம் வசந்தி தயாபரன்**

'கண்ணீரினூடே தெரியும் வீதி' சிறுகதைகளின் படைப்பாளி புதுமையான எழுத்து நடையைத் தன் கையகப்படுத்தியுள்ளார். தேவமுகுந்தனின் சிறுகதையான 'வழிகாட்டிகள்' தமிழ்க் கதைஞர் வட்டத் (தகவம்) தின் பரிசைப் பெற்றது. அதன் மூலமாகத்தான் அறிமுகமானோம். இவரது படைப்பாற்றல் பற்றி திறனாய்வாளர் அஜந்தகுமார் 'ஜீவநதி' சஞ்சிகையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுதியுள்ளார். என்னுரை சுருக்கமாகவுள்ளது. முன்னுரை வாசகருக்குக் கடிவாளமிடத்தக்கது. எனவே அது இந்நூலில் பின்னுரையாக வந்திருப்பது பொருத்தமாக உள்ளது. நேரடியாகவும் நூலுக்குள் நுழைய முடிகிறது. சொல்ல வந்ததைத் திணிக்க முடியாத ஆர்ப்பாட்டமற்ற எழுத்துநடை தேவமுகுந்தனிடம் உண்டு. அத்தோடு சிறந்த துணிவுமுண்டு. படைப்பாளி முற்றுந் துறந்த முனிவர் என்பதை வாசகர்கள் அறிந்து கொள்ள வேண்டும்.

இனம் சார்ந்த, உணர்ச்சி சார்ந்த எழுத்தென்ற விமர்சனமும் உண்டு. படைப்பாளி கருத்தை அடக்கி வாசிக்கலாமே தவிர எல்லாவற்றையும் துறந்து விட முடியாது.

*'கண்ணீரினூடே தெரியும் வீதி' நூல் வெளியீட்டில் முதல் பிரதியை Room to Read நிகழ்ச்சித் திட்ட முகாமையாளர் ஆ.செல்வேந்திரன் பெற்றார். தகைசார் பிரமுகர்களுக்குச் சிறப்புப் பிரதிகள் வழங்கப்பட்டன.*

**மதிப்பீட்டுரைகள் :**
**உமா வரதராஜன் (தடம் பதித்த சிறுகதை, நாவல் எழுத்தாளர்)**

தேவமுகுந்தனின் படைப்புலகம் திக்குத் தெரியாத காடல்ல! எல்லோருக்கும் பரிச்சயமான தடங்களிலே செல்கிறார். வித்தை காட்டமாட்டார். கூலிப் படையின் ஆயுதமாகத் தன் எழுத்தைப் பயன்படுத்தமாட்டார். நான் முதலில் படித்த அவரது சிறுகதை 'சின்னமாமா'; பின் 'கூட்டத்தில் ஒருவன்' என்ற கதையைப் படித்தேன். 'கண்ணீரினூடே தெரியும் வீதி'த் தொகுப்பில் பத்துக் கதைகள் தொகுக்கப்பட்டுள்ளன. எம்மிருவரது நோக்குக்குமிடையில் நெருங்கிய தொடர்புகள் உண்டு. அவரும் ஒவ்வாத சூழலில் நெருக்குவாரத்துக்குள் தன்னைப் பொருத்திக் கொள்ள முடியாதவர். வாழும் சூழலில் நடக்கும் அபத்தங்களைக் கண்டு மனதுக்குள் குமுறுகிறார். கைகள் கட்டப்பட்டிருக்கும் மத்திய தர வர்க்கச் சிறுபான்மையினருக்கே உரிய மனப் புகைச்சல், ஆற்றாமை, சலிப்பு, தவிப்பு, வெறுப்பு இவற்றின் பார்வையாளராக இருக்க நேர்ந்து விட்ட அவலத்தின் மீதான கொதிப்பு; இவை தான் இத்தொகுப்பினூடாகத் தேவமுகுந்தன் காட்டியிருக்கும் அவரது படைப்புலகம். இத்தொகுப்புப் பற்றிப் பேராசிரியர் எம்.ஏ.நுஃமானின் முன்னுரை, பத்திரிகைகளில் வெளியான விமர்சனங்கள் என்பன தேவமுகுந்தனைத் தமிழியப் பற்றாளராகவும் தமிழ்த் தேசிய ஆதரவு எழுத்தாளராகவும் ஒரு சிமிழுக்குள் வைத்துப் பார்த்திருக்கின்றன. அரசியல் பதற்றம் மிகுந்த இன உறவு, பிளவுண்ட ஒரு சூழலில் உருவாகும் வெறுப்பையும் அதிருப்தியையும் கசப்புணர்வையுமே தேவமுகுந்தனின் படைப்புகளில் காண்கிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏதாவது ஒரு கொள்கை விளக்கத்துக்காக எழுதியதாக நான் உணரவில்லை. யுத்தத்தின் பிரதிபலிப்புகள் எதிரொலிக்கும் தலைநகர் கொழும்பில் ஒரு தமிழ் வாலிபன் எதிர்கொண்ட நாளாந்த நெருக்கு வாரங்களில் நூறிலொரு பங்கைத் தான் தேவமுகுந்தன் சிறுகதைகள் சித்திரிக்கின்றன. அவர் இருண்மை வாக்கியங்களிலும் அதிர்ச்சியான மொழிப் பிரயோகத்திலும் தனிநபர்த் தாக்குதல்களிலும் நம்பிக்கை கொள்ளாத படைப்பாளி. சுய அநுபவச் சூட்டுடன், தான் கண்டவற்றைத் தன் படைப்புகளில் பிரதிபலிக்கச் செய்யும் படைப்பாளி. 'மர நாய்கள்' சிறுகதை இந்திய அமைதி காக்கும் படை இங்கு நிலை கொண்டிருந்த காலத்துக்கு வாசகரை அழைத்துச் செல்கின்றது. தமிழர் பறி கொடுத்த சுதந்திரம் கோழியாகவும் இராணுவ அடக்குமுறை மரநாயாகவும் உருவாக்கப்பட்டுள்ளன. இக்குறியீடுகள் தேவமுகுந்தனின் கலைத்திறனுக்குத் தகுந்த அத்தாட்சிகள். இணைய முடியாத இரு இனங்களின் மனப் பாங்குகளை விபரிக்கும் மலேசியாவைக் களமாகக் கொண்ட 'இரட்டைக் கோபுரங்கள்' என்ற சிறுகதைத் தலைப்புப் பொருத்தமானதே. சிறுகதையை எங்கே தொடங்க வேண்டும். எங்கே முடிக்க வேண்டும் என்ற புரிதல் தேவமுகுந்தனுக்கு உண்டு. 'இடைவெளி' அதை உணர்த்துகின்றது. 'சிவா' என்ற சிறுகதையிலும் இது காணப்படுகிறது. தமிழ் இளைஞனொருவன் கொழும்புச் சூழலில் எதிர்கொள்ளும் சங்கடங்களை 'இடைவெளி' 'ஒரு சுதந்திர நாள்' ஆகியவை இயல்பாக வெளிப்படுத்துகின்றன. இரு தரப்பினருக்கும் மோதலில் ஏற்பட்ட துயரத்தைக் 'கண்ணீரினூடே தெரியும் வீதி' பேசுகின்றது. இத்தொகுப்பின் சிறந்த கதையாக இதையே கூற வேண்டும். அரச திணைக்களங்களின் பயிற்சி முகாம்களை 'வழிகாட்டிகள்,' கிண்டலடிக்கின்றது. 'கூட்டத்தில் ஒருவர்' இரட்சகர்கள் போல் தம்மைத் தாமே உருப்படுத்தி போலி முகம் காட்டும் உயர் வர்க்கத் தமிழர் சிலரின் நடத்தைகளை விமர்சிக்கின்றது. படித்து வேலையற்றுத் திரியும் ஓர் இளைஞனின் மன நிலையை விபரிக்கின்றது. தொகுப்பின் சிறப்பான கதை 'சின்ன மாமா'. எழுத்தாளரின் போலி முகத்தையும் அஞ்சலிக் கூட்டத்தில் உரையாற்றுவோரின் பொய் நாக்கையும் அம்பலப்படுத்துகின்றது.

பேராசிரியர் எம்.ஏ.நுஃமான் முன்னுரையில் கூறியிருக்கும் சில அபிப்பிராயங் கள் எனக்கு முரண்பாடானவை. தேவமுகுந்தன் ஒடுக்குமுறையை உரத்த குரலில் இல்லாவிட்டாலும் சிறுமுனகல் தொனியிலாவது எதிர்த்துப் பதித்துள்ளார். அறத்தின் பெயரால் ஓர் எழுத்தாளனின் கையைக் கட்டிப் போடுவது நியாயமான செயலாகுமென நான் நினைக்கவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விமலன் சின்னராஜா (திறனாய்வாளர்)**

தேவமுகுந்தன் தன்னைப் பற்றிய விமர்சனங்களை ஏற்றுக்கொள்பவர். தனது கருத்துகளை மற்றவர்களோடும் பகிர்ந்து கொள்வார். அச்சுக்குப் போகுமுன் இத்தொகுப்பிலுள்ள ஏழு சிறுகதைகளைப் படித்தேன். சம்பவத்தினூடாகவே சிறுகதை சொல்கிறார். தனது நிலைப்பாட்டில் இருந்து வாசகனை வேறு விதமாகச் சிந்திக்க வைக்கிறார். வாசகருக்குக் கொதிப்பை ஏற்படுத்தும் படைப்புகளைப் படைக்கிறார். அறத்தைப் பேணும் படைப்பாளி. இன்றைய யாழ்ப்பாணத்தில் சாதி ஒடுக்குமுறை முற்று முழுதாக விடுபட்டுப் போய் விடவில்லை. இன்னும் சாதிப் பாகுபாடு அங்குண்டு. 'கண்ணீரினூடே தெரியும் வீதி' தொகுப்பில் இரு இடங்களில் மட்டுமே சாதியப் பிரக்ஞையைக் காணமுடிகின்றது.

**பிரபல எழுத்தாளர் அ.யேசுராசா(ஆசிரியர் 'அலை')**

இளம் சந்ததியினரை, மாணவர்களை வளர்த்தெடுக்க வேண்டுமென்ற நோக்கில் 2004 ஆம் ஆண்டளவில் 'தெரிதல்' என்ற எட்டுப் பக்க இதழை நடாத்தினேன். சிறு சிறு அளவான பல்பரிமாணச் செய்திகளை அதில் வெளியிட்டேன். அதை வாசித்த தேவமுகுந்தன் என்னைத் தேடி என் வீட்டுக்கு வந்தார். முதல் வந்த போது நான் வீட்டில் இருக்கவில்லை. பின்னர் ஏற்பட்ட சந்திப்பில் தெரிதல் பற்றிய அபிப்பிராயங்களைச் சொன்னார். அன்றைய் யுத்தம் காரணமாக எட்டு இதழ்களோடு இப்பிரசுரம் வராது போனது. கொழும்புக்கு வந்த பின் தினக்குரல் பத்திரிகையில் வெளியாகும் இலக்கியக் கூட்டங்கள் பற்றிய விடயங்களை வெட்டி நறுக்குகளைத் தபாலில் எனக்கு அனுப்புவார். இத்தகைய தகவல்களை யாழ்ப்பாணத்தில் வெளியாகும் தினசரிகளில் பிரசுரிக்கமாட்டார்கள். எனவே தேவமுகுந்தன் இப்படிச் செய்வது கொழும்பின் இலக்கிய நடவடிக்கைகளை நானறிய மிகவும் உதவியாக இருக்கின்றது. அவரது சிறுகதைகளின் முதல் வாசகன் நான் தான். கருத்துகளைப் பரிமாறிக் கொள்வோம். சுய அநுபவ வெளிப்பாட்டுக் கதைகளையே அவர் எழுதுகிறார். சிறுகதைகளில் அவரே பாத்திரமாக நிற்கிறார். இலக்கியத்தை வெறும் பிரசாரக் கருவியாகவும் சமூக மாற்றத்துக்குமானதாகவும் கருதுவோர் அநுபவ வெளிப்பாட்டுக்கு முக்கியம் கொடுப்பதில்லை. கருத்துக்களுக்கு மட்டுமே முதன்மை அளிக்கின்றனர். இதனால் படைப்புகள் கட்டுரைகளாக, தயாரிப்புகளாக வரண்டு போகின்றன. சுய அநுபவ வெளிப்பாடே தேவமுகுந்தன் சிறுகதைகளுக்கு வலிமையைச் சேர்க்கின்றது. அறுபதாண்டு காலமாகச் சிங்கள, தமிழ் இனங்களுக்கிடையேயுள்ள முரண்பாடு, யுத்தமென்ற நிலைக்கு உயர்ந்து மாபெரும் இனப் படுகொலைக்குப் பின் முடிவுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்துள்ளது. இருந்தும் இரு இனங்களுக்குமான இடைவெளி தொடர்கின்றது. சிங்களச் சகோதரர்களை நாம் வெறுக்கவில்லை. நீதியான முறையில் தமிழ்ப் பிரச்சினை தீர்க்கப்படும் போதே இப் பாரிய இடைவெளி மறையும். இந்த இடைவெளி தேவமுகுந்தனின் சிறுகதைகளில் முக்கியமாகி அவரது சிறுகதைகளுக்குக் கனதியைக் கொடுக்கின்றது. சிவா, இடைவெளி, இரட்டைக் கோபுரம், ஒரு சுதந்திர நாள் ஆகிய சிறுகதைகளில் இத் தன்மையைக் காண முடிகின்றது. 'கண்ணீரினூடே தெரியும் வீதி' போரில் ஏற்பட்ட மரணங்கள் இரண்டு இனங்களுக்கும் அவலத்தையும் துயரத்தையும் ஏற்படுத்தியதைத் துல்லியமாகக் காட்டுகின்றது. 'மர நாய்கள்' இந்திய அமைதிப் படையைக் குறியீடாகக் கொண்டிருந்த போதும் பின்னர் வேறொன்றுக்குமாக அக்குறியீடு தாவியுள்ளது. அமைப்புகளின் சீர்கேடுகளை 'வழிகாட்டிகள்,' 'கூட்டத்தில் ஒருவன்' சிறுகதைகள் அவைகளின் உறுப்பினர்களின் அபத்தச் செயற்பாடுகளைக் கிண்டலாகவும் கோபமாகவும் வெளிப்படுத்தியுள்ளன. போலி எழுத்தாளனைப் பற்றிய நல்ல சிறுகதை 'சின்ன மாமா'. எழுத்தாளன் சமுதாயத்தில் ஓர் அங்கம். அவனது செயற்பாடுகளை எழுதும் போது பெயரைச் சுட்டாது உண்மைத் தன்மையோடும் கலைத்துவத்தோடும் சொல்ல வேண்டும். பின் நவீனத்துவம் என்ற போக்கில் பொய்யான புனைவுகளையும் சேர்த்துத் தார்மீக நிலைப்பாடில்லாமல் யாரையாவது இழிவுபடுத்தும் வக்கிரபுத்தி கொண்ட எழுத்தாளர் போலல்லாது தேவமுகுந்தன் இக் கதையைப் படைத்துள்ளார்.

தொகுப்பின் சிறுகதைகள் சாதாரண மொழியில், தெளிவானவையாகப் படைக்கப்பட்டுள்ளன. இது தமிழக எழுத்தாளர் அசோகமித்திரனை நினைவுபடுத்துகிறது. எல்லாருக்கும் பிடித்ததாகப் படைப்பாளி சிறுகதையொன்றை வழங்க முடியாது! புதிய தலைமுறையை வழி நடாத்தக் கூடியதாக மூத்த தலைமுறைகளிடம் இருந்து படைப்புகள் வெளிவர வேண்டும். இந்த மூத்த தலைமுறைகளே போலியான சிறுகதைகளைத் தருவதோடு அவைகளைக் கட்டுரை வடிவத்தில் தந்து கொண்டிருப்பதைக் காண முடிகின்றது. தமிழர் மீது திணிக்கப்பட்டதே யுத்தம். இந்த ஒடுக்கு முறை யுத்தம் நிறுத்தப்பட்டிருந்தால் தமிழரின் தற்காப்பு யுத்தம் நின்றிருக்கும். தேவமுகுந்தனும் அவரது இத்தொகுப்பான கண்ணீரினூடே தெரியும் வீதியும் முக்கியமான பாராட்டைப் பெறும் தகுதியைப் பெறத்தக்கவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கருத்துரை:**
**எஸ்.எல்.எம்.ஹனிபா (மூத்த படைப்பாளி)**

'கண்ணீரினூடே தெரியும் வீதி' சிறுகதைத் தொகுப்பை இரண்டு முறைகள் வாசித்தேன். ஒரு சிறுகதைத் தொகுப்பை இப்படி இரு தடவை படித்தது இது தான் முதல் முறை. தேவமுகுந்தன் தொடர்ந்து எழுத வேண்டும். போர்க்காலத்தில் கொழும்பில் மாட்டிக் கொண்ட இளைஞனின் பார்வை இத்தொகுப்பில் கிடைக்கின்றது. எழுத்தாளனுக்கு முன்னோக்கிய பார்வை இருக்க வேண்டும். ஆக்கமொன்றை ஆழமாக வாசிக்காது கருத்துச் சொல்வதில் எமது விமர்சகர்கள் கெட்டிக்காரர்கள். பக்கம் சாராது நின்று நடுநிலையில் கருத்துகளைச் சொல்ல வேண்டும். அறம் சார்ந்து நிற்க வேண்டும்.

*எந்தக் கோட்பாட்டையும் சித்தாந்தத்தையும் அடியொற்றித் தான் சிறுகதைகளைப் படைக்கவில்லை எனக் கூறி நூலாசிரியர் தேவமுகுந்தன் ஏற்புரையை நிகழ்த்தினார்.*

-31.01.2013 - 01.02.2013

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 51

## அருட்திரு தனிநாயகம் அடிகளார் நூற்றாண்டு சிறப்புரை

அர்த்தமுள்ள உழைப்பால் இனத்தை நெறிப்படுத்தி மேன்மை கொள்ளச் செய்த பெரியார்களை மறந்து வாழ்கிறோம். இளைய சந்ததிக்கும் அப்பெரியார்களையும் அவர்களது நற்பணிகளையும் அறியப்படுத்தி தொடர்ந்தும் அவர்களை எம்மோடு வாழவைக்க எத்தனிக்காதிருக்கிறோம். சமகாலத் தமிழினத்தின இத்தவறை நன்குணர்ந்த கொழும்புத் தமிழ்ச்சங்க நிர்வாகம் இப்பெரியார்கள் பற்றிய பரம்பலை ஏற்படுத்தக் காத்திரமான நடவடிக்கை எடுத்து நடைமுறைப்படுத்தியும் வருகின்றது. இம்முனைப்பில் 18.01.2013 ஆம் திகதி தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளாரின் நூற்றாண்டு விழாவையொட்டிச் சிறப்புரையொன்றை ஒழுங்கு செய்திருந்தது. இந்நிகழ்வு தமிழ்ச்சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில் பேராசிரியர் சபா ஜெயராசா தலைமையில் நடைபெற்றது.

எஸ்.சுந்தரமூர்த்தி தமிழ் வாழ்த்துப் பாடி நிகழ்வைத் தொடக்கி வைக்க, கொழும்புத் தமிழ்ச்சங்கப் பொதுச்செயலாளர் ஆழ்வாப்பிள்ளை கந்தசாமி, தமிழ்ப் பேரறிஞர் தனிநாயகம் அடிகளாரின் திருவுருவப்படத்துக்கு மலர்மாலை சூட்டி மரியாதை செய்தார்.

**வரவேற்புரை:**
**மா.கணபதிப்பிள்ளை**
**(கொழும்புத் தமிழ்ச்`சங்க நூலகச் செயலர்)**

நமக்கு அறிவூட்டிய பெரியார்களை நாம் மறக்கிறோம். சி.வை.தாமோதரம் பிள்ளைக்கு ஒன்றோ, இரண்டோ நூல்களை வெளியிட்டதோடு அவர் பற்றிய நினைவு கூரல்கள் நின்றுவிட்டன. அதேபோல் ஞானப்பிரகாசம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிகளாரையும் நினையாது வாழ்கிறோம். இதனால் இன்று அத்தகைய பெரியார்கள் உருவாகுதல் அற்றுப்போய்விட்டது. உண்மையில் இதைச் செய்ய வேண்டியவை பல்கலைக்கழகங்களே, இன்று பல்கலைக்கழகத் தமிழ்த் துறைகள் நான்குண்டு. அவை என்ன செய்கின்றன?

எமது தமிழ் மொழியின் செழுமையை உலகறிய வைத்தவர் தனிநாயகம் அடிகளார். 6 கோடி தமிழகத்தவர் செய்யாததை மலேசியாவில் செய்து காட்டித் தமிழினத்துக்கு விழிப்பு நிலையை ஏற்படுத்தியவர் அடிகளார். அங்கு முதல் தமிழாராய்ச்சி மகாநாட்டை நடாத்தினார். தனிநாயகம் அடிகளாரின் நூற்றாண்டு இதுவாகும். நாம் விழா எடுத்துக் கொண்டாட வேண்டும். அடிகளாரின் தந்தையார் கணபதிப்பிள்ளை நெடுந்தீவைச் சேர்ந்தவர். தனிநாயகம் அடிகளார் ஊர்காவற்றுறை கரம்பொனில் பிறந்தவர். அவரது சிறப்பாளுமையை இன்றைய இளம் சந்ததிக்குக் கொண்டு செல்ல நாம் கடமைப்பட்டுள்ளோம்.

'தமிழ்த்தூது' நூல் மீள்பதிப்பு செய்யப்பட வேண்டும். அடிகளாரின் நூற்றாண்டை இந்தியாவில் கொண்டாடியுள்ளனர். ஆனால், இலங்கையில் இதுவரை நடைபெறவில்லை. இலங்கைத் தமிழர்களாகிய நாம் பறக்கும் கடதாசி போல் நிச்சயமற்ற வாழ்க்கை வாழ்கிறோம். அநேகமான நூல்கள் எம்மிடம் இல்லை. அரிய நூல்களை வெளியிட நிதியமொன்றை ஏற்படுத்தியுள்ளோம். இதில் நூறு அபிமானிகளைச் சேர்க்கவிருக்கிறோம். ஒவ்வொருவரும் 1000 ரூபா அன்பளிப்புச் செய்ய வேண்டும். சேரும் இப்பணத்தில் சிறந்த தமிழ் நூல்களை வெளியிடத் திட்டமிட்டுள்ளோம். இது நாமொரு பெரியாருக்குச் செய்யும் அரும்பணியாகும்.

தனிநாயகம் அடிகளார் திருவாசகத்தை உலக அறிஞர்கள் மத்தியில் கொண்டு சென்ற கத்தோலிக்கத் துறவி. தமிழ்மொழி பக்திக்குரிய மொழியென்பதைப் பரம்பல் செய்தவர். அவரது பெயரை மறையாது, மறக்கப்படாது பாதுகாக்க வேண்டும். அடிக்கடி நினைவுபடுத்த வேண்டும். இங்குள்ள தமிழமைப்புகளோடு பேசி வருகிறோம். பாடசாலைகளில் தனிநாயகம் அடிகளார் நூற்றாண்டு விழாக் கட்டுரைப் போட்டிகளை நடாத்தவுள்ளோம். ஆய்வுக் கட்டுரைப் போட்டிகளையும் நடாத்தவுள்ளோம். கொழும்பு தமிழ்ச் சங்க தபால் உறைகளில் தனிநாயகம் அடிகளார் நூற்றாண்டென்ற வாசகத்தைப் பொறிக்கவுள்ளோம். அடிகளாருக்கு முத்திரையொன்றை வெளியிடவும் சம்பந்தப்பட்டவர்களை ஊக்கப்படுத்த வேண்டும். தமிழினத்தை நேசித்தவர் அடிகளார். அவர் மறையவில்லை. தொடர்ந்தும் நம்மோடு அவரை வாழவைப்பது நமது கடமையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தலைமையுரை:**
**பேராசிரியர் சபா ஜெயராசா**

தனிநாயகம் அடிகளாரின் வாரிசுகளில் நானுமொருவன். தமிழியல் ஆய்வை உலகப் பல்கலைக்கழக மட்டத்துக்கு அடிகளார் கொண்டு சென்றவர். தரம்மிக்க ஆய்வுகளை நடாத்திக் காட்டினார். அவர் மலேசியாவில் நடாத்திக் காட்டிய தமிழாராய்ச்சி மகாநாடு அவருக்குப் பெருமையைச் சேர்த்தது. இறையியல், கல்வியியல், தமிழியல் என்பனவற்றை வரன் முறையாகக் கற்றார். அடிகளாரினால் வெளியிடப்பட்ட Tamil Culture என்ற ஆய்விதழ் முக்கியமானது. தமிழரல்லாதவர்களுக்கும் தமிழ்மொழியின் செழுமையை அறிய வைத்தது. சிலோன் எக்ஸ்பிரஸ் பேப்பர்ஸ் நிறுவனம் 'கலைக்கேசரி' என்ற மாசிகையை வெளியிடுகிறது. இது புலம்பெயர் நாடுகளில் நல்ல வரவேற்பைப் பெற்று வாசிக்கப்படுகிறது. ஆனால், இலங்கையில் அந்தளவுக்கு அதை வாசிக்கும் ஆர்வம் இல்லை. இச்சஞ்சிகையில் அடிகளார் பற்றிய கட்டுரையொன்றை எழுதியுள்ளேன். கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் 'கலைக்கேசரி' சஞ்சிகையை வாசிக்க முடியும். Tamil Culture சஞ்சிகையின் சில பிரதிகளும் உண்டு.

**சிறப்புரை: 'தமிழ்த் தூதும் தமிழியலும்'**
**உரைஞர்: திறனாய்வாளர் தெ.மதுசூதனன் (இதழியலாளர்)**

தனிநாயகம் அடிகளார் தமிழியல் வளர்ச்சிக்கு ஆற்றிய பாரிய பணிகளை மறைத்துவிட முடியாது. அடிகளார் இலங்கை, இந்தியா, மலேசியா ஆகிய தேசங்களில் வாழ்ந்தவர். அவரால் தயாரித்து வெளியிடப்பட்ட Tamil capital "C" இல் என்ற ஆய்விதழ் சங்க இலக்கியங்களை உலக அறிஞர்கள் மட்டத்துக்குக் கொண்டு சென்றது. அதில் பல்வேறுபட்ட ஆய்வுகளை முன்வைத்தார். இனம், மொழி, இலக்கியம் சார்ந்த கட்டுரைகளை வெளிக்கொணர்ந்தார். மலேசியப் பல்கலைக்கழகத்தில் ஆய்வாளர் சிங்காரவேலரின் ஆய்வுகளை நெறிப்படுத்தினார். அடிகளாரின் முயற்சிகளுக்கு வ.வே.சுப்பிரமணியம் என்ற அறிஞர் தோளோடு தோள் நின்று உதவினார். அவரது சங்க இலக்கிய ஆய்வுக்கு அடிகளார் உதவினார். அடிகளாரது தமிழ்த் தூது பயணம் பல நாடுகளுக்கும் தமிழை எடுத்துக் கூறியது. தமிழியல் சிந்தனையை விரிவுபடுத்தினார். மொழி, இனம் சார்ந்த உணர்வுகளை உருவாக்க அடிகளாரின் பணிகள் பெரிதும் உதவின.

இப்போது வெளிநாடுகளில் தமிழ்மொழி, பண்பாடு குறித்த ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தமிழ் ஆய்வுத்துறைக்கு அடிகளார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பன்முகப்பரிமாணத் தளத்தை வழங்கினார். அண்ணாமலைப் பல்கலைக்கழக ஆய்வறிஞர்களால் பெரிதும் மதிக்கப்பட்டார். அக்காலத்தில் தமிழறிஞர் தெ.பொ.மீனாட்சிசுந்தரனாருக்கும் பல்கலைக்கழக நிர்வாகத்திற்கும் பிரச்சினை ஏற்பட்டது. அடிகளார் பல்கலைக்கழக அறையில் தங்கி இருந்தார். மீனாட்சி சுந்தரனாரை உபவேந்தர் பதவியிலிருந்தும் நீக்க வேண்டுமென்ற போராட்டம் நடந்தது. மீனாட்சி சுந்தரனாரை நீக்கக் கூடாதென வாதாடியவர்கள் அடிகளாரிடமும் ஆலோசனை கேட்டனர். ஆதரவாக மகஜரொன்றை எழுதி அடிகளார் கொடுத்தார். நியாயத்தின் பக்கம் நின்றார்.

இக்காலகட்டத்தில் நாவலர் நெடுஞ்செழியன், பேராசிரியர் அன்பழகன் ஆகியோர் பற்றிய பதிவுகளையும் வைத்திருந்தார். சிங்களம் மட்டும் சட்டம் இலங்கைப் பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட போது அடிகளார் அன்றைய பிரதமரான எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்காவைச் சந்தித்து அச்சட்டத்தால் ஏற்படப் போகும் விளைவுகளைச் சொன்னார். துண்டுப் பிரசுரமொன்றையும் வெளியிட்டார். சத்தியாக்கிரகப் போராட்டத்துக்கு நேரடியாக ஆதரவைத் தெரிவித்தார். யாழ்ப்பாணத்தில் தமிழாராய்ச்சி மகாநாட்டில் ஏற்பட்ட அசம்பாவிதத்தால் மிகுந்த கவலைக்குள்ளானார். இறையியலில் நாட்டம் கொண்டார். பயங்கரவாதச் சட்டத்தை எதிர்த்துக் கூட்டம் ஒழுங்கு செய்தார். இவைகளால் அரசின் அதீத கவனத்துக்குரியவராக இருந்தார். அடிகளாரது பணிகளை நாமும் முன்னெடுத்துச் செல்ல வேண்டும்.

*கொழும்புத் தமிழ்ச் சங்கத் துணைச் செயலாளர் மகாதேவா நன்றியுரை கூறினார். வரதா யோகநாதனின் தமிழ் வாழ்த்துப் பாடலோடு நிகழ்வு நிறைவு பெற்றது.*

-12.02.2013

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 52

## ‘விரல்கள் அற்றவனின் பிரார்த்தனை’

‘நமக்குப் பரிச்சயப் பட்டுப்போன தமிழ்ச் சூழல் கதைகளிலிருந்து சற்று விடுபட்டுக் கைக்குள் சுருங்கிப் போன உலகமே ஒரு பூலோகக் கிராமம் என்கிற நிலையிலிருந்தும் நமது பார்வையைச் செலுத்துவது அவசியம், என்ற கருத்தாளரான பல்பரிமாண இலக்கியவாதி அஷ்ரஃப் சிஹாப் தீனின் சிறுகதைகளின் தொகுப்பு நூல் ‘விரல்களற்றவனின் பிரார்த்தனை’ 03.03.2013 இல் கொழும்புத் தமிழ்ச் சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில் வெளியிடப்பட்டது. பிரபல கவிஞர் தமிழ் மாமணி அல் அஸூமத் தலைமை தாங்கினார். திரு.ப.க.மகாதேவா தமிழ் வாழ்த்துப் பாடினார்.

**தலைமையுரை:**
**தமிழ் மாமணி பிரபல கவிஞர் அல் அஸூமத்**

இறைநம்பிக்கை இலட்சக்கணக்கான ஆண்டுகளுக்கு முன் தோன்றியது. இலி என்ற சொல்லின் அர்த்தம் இல்லை என்பதாகும். அனைத்தையும் கடந்து இறைவன் எங்கோ உள்ளான். சித்தர் பாடல்களில் இலி என்ற சொல்லைக் காணலாம். இறைவன் வகுத்த முதல் மொழி எங்கள் தாய்த் தமிழ் மொழிதான். உண்மை ஓர் இடத்தில் தான் உண்டு. இலியே இலிங்கமானது. அல்லா என்ற சொல்லும் தமிழ்ச் சொல்தான். தொன்மையை நிறுவப் பலர் பாடுபட்டிருக்கின்றனர்.

ஐயாயிரத்துக்கும் அதிகமான சமஸ்கிருதச் சொற்கள் தமிழிலிருந்தே அம்மொழிக்கு வந்துள்ளன. ஆங்கிலத்தில் வேர்ச் சொற்களாக 2000 க்கும் மேற்பட்ட சொற்களுண்டு. இறைவன் இல்லையென விஞ்ஞானம் சொல்லவில்லை. விஞ்ஞானிகளே அப்படிச் சொன்னார்கள். இன்னும் பல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்டங்கள் உள்ளன. Universe என்ற ஆங்கிலப் பதப் பிரயோகத்தை நாம் multi verse எனத் தான் மாற்ற வேண்டும். விரல்களற்றவனின் பிரார்த்தனை நூலாசிரியர் அஷ்ரஃப் சிஹாப்தீன், சமயத்தில் நம்பிக்கை வைத்துக் கதைகள் படைப்பவர். சமயத்தை நம்பலாம். அமரர் சுஜாதாவும் பல விஞ்ஞானக் கதைகளை எழுதியுள்ளார். எழுத்தாளர் முற்போக்காக எழுத வேண்டும். நேர்மையாக இலக்கியம் படைக்க வேண்டும். வழிபட்டுக் கொண்டு எழுத வேண்டும். அத்தகையவரே அஷ்ரஃப் சிஹாப்தீன். தனது சிறுகதைகளை என்னிடம் காட்டுவார். எழுத்துப் பிழைகள் உண்டா? என விசாரிப்பார். சமுதாயத் தேவைகள் பற்றி மக்களை வாசிக்கச் செய்ய வேண்டும். பணத்துக்காக எழுத்தாளன் புத்தகம் வெளியிடுவதில்லை. பல பிரச்சினைகளுக்கு மத்தியில் எழுதுகிறோம்.

**வாழ்த்துரை:**
**எம்.எம். பீர்முகம்மத்**
**(செயலாளர், மாத்தளை இஸ்லாமியத் தமிழிலக்கியப் பேரவை)**

உலகில் எது நடந்தாலும் அதை மக்களுக்குப் பகிரங்கப்படுத்துவது எழுத்தாளர் தான். இலக்கியவாதியின் வீட்டில் வறுமை வசதியாக வாழும். அவர்களுக்கு ஓரளவில் கை கொடுத்து வருபவர் புரவலர் அல் ஹாஜ் ஹாசிம் உமர், 576 இலக்கிய நூல்களின் முதல் பிரதியை வாங்கியுள்ளார். தனக்கு முன்னால் நடக்கும் சம்பவங்களின் பாதிப்பாலேயே அஷ்ரஃப் சிஹாப்தீன் இலக்கியம் படைக்கிறார். அவைகளை எழுத்தாளன் சமூகத்துக்குச் சொல்லத் தான் வேண்டும்.

மதத்தைத் தாண்டிய மொழி நமது தமிழ் மொழி. எந்தவொரு மதத்தாலும் அதை அடக்க முடியாது. இது வேறெந்தவொரு மொழிக்கும் இல்லாத சிறப்பாகும். சிஹாப்தீன் இளம் வயதில் பாதிக்கப்பட்டிருக்கிறார். அவரது எழுத்து நடை தத்ரூபமானது. அவரது எந்தப் படைப்பிலும் அவரது சொந்த மண் ஒட்டி இருக்கும். மெல்லிய நையாண்டிகளையும் காணலாம். தூர நோக்குள்ள பாசாங்கற்ற படைப்பாளி. நிருவாகத்திறனும் உண்டு. நினைவில் நிற்கக் கூடிய சிறந்த கதைகளை அவரது சஞ்சிகையான 'யாத்ரா'வில் எழுதியுள்ளார். யாத்ராவின் இலக்கியப் பணி தொடரவேண்டும். இது நமது நாடு. அதற்காக நாம் வியர்வை சிந்த வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நூல் பற்றிய கருத்துரைகள்:**
**பிரபல விமர்சகர் 'தகவம்' மு.தயாபரன்**

ஒரு சிறுகதைகயின் முதற் பந்தி வாசகனைக் கவராது விட்டால் அது வாசகரைச் சென்றடையாது. உச்சத்தைத் தாண்டாது. இந்நூலாசிரியர் அஷ்ரஃப் சிஹாப்தீன் பல்பரிமாண இலக்கியவாதி. கவிஞர், மொழிபெயர்ப்பாளர், புனை கதையாசிரியர், இதழியலாளர், கட்டுரையாளர். இவைகளோடு அவரொரு ஊடகவியலாளராகவும் பணி செய்கிறார். எதையும் வித்தியாசமாகப் பார்க்கும் தன்மை அவருக்குண்டு. தயங்காமல் உண்மையைப் பேசுவார். நேர்மையைச் சர்வ சாதாரணமாக 'நாய்ப் பாசம்' கதையில் சொல்லியுள்ளார். நாயைக் கூட மிகக் கூர்ந்து அவதானிக்கும் பக்குவத்தை இந்தக் கதை மூலம் அறிய முடிகின்றது. கதைகளை எழுதுவதற்குச் சிஹாப்தீன் வார்த்தைகளைத் தேடி ஓடவில்லை. இயல்பாகவே வார்த்தைகள் பரத்தப்பட்டுள்ளன. கதைகளுக்குள் அரசியலைப் புகுத்தும் தன்மையும் காணப்படுகின்றது. நாய்களும் நமது சண்டியர்களைப் போல் தான் தமது எல்லையை வகுத்துக் கொள்ளும். எல்லை தாண்டினால் மோதல்கள் தான். நாய்ப்பாசம் வாசகரைச் சிந்திக்க வைக்கும் கதை.

'வெள்ளை வேன்'அருமையான கதை.. இதில் சலூன் கடைக்காரன் கடத்தல் காரர்களால் தூக்கப்படுகிறான். பின்னர் கொண்டு வந்து விடுகின்றனர். ஆனால், பொலிஸ் விடவில்லை. நடந்ததைப் பொலிஸுக்குச் சொன்னவன், சேட் பொக்கட்டுக்குள் வைத்திருந்த காசைப் பற்றி ஏதும் சொல்லவில்லை. கதாசிரியர் மக்களின் சிக்கன மனப்பான்மையை மிகச் சுளுவாகச் சொல்கிறார். பொதுப் பிரச்சினையொன்றை நாசூக்காகச் சொல்லி உள்ளார். 'வைத்தியம்' என்ற கதை, தடம்பதித்த சிறுகதை எழுத்தாளர் சாந்தனின் கடுகுக் கதை ஒன்றை எனக்கு ஞாபகப்படுத்தியது. 'விரல்களற்றவனின் பிரார்த்தனை' விரலற்ற கையால் மக்களைக் காப்பாற்றும் படி பிரார்த்திப்பவனைச் சித்திரிக்கின்றது. எழுத்து நடை அலாதியானது. கதைகளில் மனிதம் உண்டு.

**எஸ்.எம்.எம்.முஸார்ரஃப் (ஊடகவியலாளர்)**

'விரல்களற்றவனின் பிரார்த்தனை' சமகாலத்துக்குப் பொருத்தமான நூல். இது மக்கள் நசுக்கப்படும் காலகட்டம். தலைப்புகளைப் பார்த்த போது இப்படியொரு தலைப்பா? என ஆச்சரியப்பட்டேன். சொல்ல நினைத்தவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களைக் கதைகளில் தெளிவாகச் சொல்லியுள்ளார் நூலாசிரியர் சிஹாப்தீன. 'ஆசியாவின் அதிசயம்' கதையின் முடிவில் படைப்பாளியின் முழுப்பலமும் வெளிப்படுகிறது. சமூகத்தின் கண்ணாடியாகக் கதைகள் காணப்படுகின்றன. கனதியான விடயங்களைப் பேசுகின்றன. 'பட்டாக்கத்தி மனிதர்கள்' என்ற கதையில் அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி ஜோர்ஜ் புஸ் வருகிறார். கதைகளின் முடிவுகள் திருப்பத்தைத் தருகின்றன. 'டல் கோப்பி' என்ற கதை இல்லாதிருந்தால்! தொகுப்பு சிறப்பானதாக இருந்திருக்கும்.

சிஹாப்தீன் தன்னையும் கதாபாத்திரமாக்கிக் கதை எழுதியுள்ளார். 'பூனைக் காய்ச்சல்' வல்லாதிக்க நாடுகளின் சதிகளை எடுத்தாள்கிறது. கீழைத்தேய மக்களுக்கு மருந்துகளைக் கொடுத்து அவற்றின் தாக்கத்தை அறிய மேலைத்தேய நாடுகள் முனைவதை அம்பலப்படுத்துகிறது. உள்ளதை உள்ளபடி எழுதியிருக்கிறார். எல்லாத்துறை சார்ந்ததாகவும் வாசிப்பு இருக்க வேண்டும். கதைகள் கைகட்டி, வாய் பொத்தி நிற்க வைக்கின்றன. தமிழ்ச் சிறுகதை உலகில் அஷ்ரஃப் சிஹாப்தீனை அமர்த்தத் தனிப்பட்ட ஆசனமொன்றின் தேவையை 'விரல்களற்றவனின் பிரார்த்தனை' உணர்த்துகிறது.

*நூல் வெளியீட்டின் போது 'விரல்களற்றவனி'ன் பிரார்த்தனை. என்ற சிறுகதைத் தொகுப்பின் முதல் பிரதியை விழாவின் பிரதம அதிதி எம்.எஸ்.எஸ்.அமீர் அலி (கிழக்கு மாகாண சபை உறுப்பினர்) புரவலர் அல்ஹாஜ் ஹாஸிம் உமருக்கு வழங்கினார். கலை, இலக்கிய, பொதுப்பணிப் பிரமுகர்களுக்குச் சிறப்புப் பிரதிகளும் வழங்கப்பட்டன.*

**பிரதம அதிதி உரை:**
**எம்.எஸ்.எஸ்.அமீர் அலி (கிழக்கு மாகாண சபை உறுப்பினர்)**

சிறுபான்மைச் சமூகத்தவர்களது பிரச்சினைகள் இந்நாட்டில் ஊசலாடிக்கொண்டிருக்கின்றன. ஆனால் கவனிக்க வேண்டிய அரசியல்வாதிகள் அமைதியாக இருக்கின்றனர். எழுத்தாளரின் எழுத்துகள் சமூகத்தின் கண்ணாடியாக இருக்க வேண்டும். படைப்புகளை நூலாக்க வேண்டும். இந்த எழுத்துகள் அரசியல் தலைவர்களுக்கும் வழிகாட்டிகளாக அமையத் தக்கவை. மற்றவர்களைச் சந்தோஷப்படுத்துவது மகா சந்தோசத்தை ஏற்படுத்தும். அதை அஷ்ரஃப் சிஹாப்தீன் செய்கிறார். வெள்ளை வானுக்குப் பயப்பட முடியாது. செய்ய வேண்டியதைச் செய்தே ஆக வேண்டும். சந்தர்ப்பங்களைத் தவறாது பயன்படுத்த வேண்டும். இழக்கக் கூடாது. அரசியலில் சேர்வதன் மூலம் தான் எதையும் சாதிக்க முடியும். இப்போதெல்லாம் அனைத்துக்குமே அரசியல் சாயம் பூசும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்பாடு காணப்படுகிறது. இது முஸ்லிம்களுக்கும் சவாலான காலகட்டம். பிரச்சினைகளை எப்படி முடிப்பதென்ற பிரச்சினை இருக்கின்றது. எமது எழுத்தாளர் சமகால நிகழ்வுகளைத் தமது எழுத்துக்களில் பதிக்க வேண்டும்.

*நூலாசிரியர் அஷ்ரப் சிஹாப்தீன் எமது எழுத்தாளர் ஏகாதிபத்தியச் சுரண்டலைக் கண்டு கொள்ளாது குண்டு விழுவதையும் எறிகணை வீச்சையும் பற்றியே எழுதிக் கொண்டிருக்கிறார்களென்று தனது ஏற்புரையில் குறிப்பிட்டார்.*

*ஏ.எம்.தாஜ் (ஒலி, ஒளிபரப்பாளர்) நிகழ்ச்சிகளைத் தொகுத்து அறிவிப்புச் செய்தார்.*

-22.03.2013

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 53

## 'இலங்கையின் வன்னி மாவட்டங்கள் - ஒரு கையேடு' அறிமுகம்

**இ**லங்கை ஆங்கிலேயரின் நிர்வாகத்தில் இருந்த போது இலங்கையின் நிர்வாக அதிகாரியாகப் பதவி வகித்த ஜே.வி.லூயிஸ் என்பவரால் எழுதப்பட்ட "A manual of the vanni districts" என்ற நூலைக் க. ஐயம்பிள்ளையைத் தலைவராகக் கொண்ட நூல் தமிழாக்கக் குழு தமிழாக்கம் செய்து இலங்கையின் வன்னி மாவட்டங்கள் ஒரு கையேடு' என்ற நூலை வற்றாப்பளைக் கண்ணகி அம்மன் ஆலய பரிபாலன சபையின் ஏற்பாட்டில் வெளியிட்டுள்ளது. இந்நூல் அறிமுக விழா 17.03.2013 ஆம் திகதி கொழும்புத் தமிழ்ச் சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில் மிகப் பிரமாதமாக நடைபெற்றது. க.ஐயம்பிள்ளை தலைமை தாங்கினார். தகைசார் சான்றோர்களும் முன்னாள் அரச நிர்வாக அதிகாரிகளும் மங்களச் சுடரேற்றி நிகழ்வைத் தொடக்கி வைக்கப் பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி மாணவர்கள் தமிழ் வாழ்த்துப் பாடினர்.

**வரவேற்புரை :**
**மு.குகதாசன்**
**(தலைவர், வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயம்)**

கண்ணகி அம்மன் ஆலயம் சார்பில் இந்த நூலை வெளியிட வேண்டுமென்ற பொறுப்பு எமக்கு வந்தது. நலிந்து போயுள்ள வன்னி மாவட்டத்துக்காக அதை ஏற்க வேண்டிய கடப்பாடும் எமக்கிருந்தது. அம்மனின் அடியார்கள் பேரன்போடு அளித்த காணிக்கைகளைக் கொண்டே இந்நூல் வெளியீட்டைச் செய்தோம். வெளிநாடுகளில் இடம்பெயர்ந்து வாழும் அன்பர்களும் இம்முயற்சிக்கு நிதிஉதவி அளித்தனர். ஆனால் இதற்காக ஆலய வருமானத்தில் நாங்கள் கைவைக்கவில்லை. எமக்கு நொந்தவர்களுக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதவி செய்யும் பொறுப்புண்டு. அதையும் செய்கிறோம். வரலாற்று நூல்கள் பக்கச் சார்பானவை. ஆனால் வெள்ளைக்காரரான ஜே.வி.லூயிஸால் எழுதப்பட்ட இந்நூல் அப்படியானதல்ல. ஒழுங்காகப் பக்கச்சார்பற்ற நிலையில் எழுதப்பட்டுள்ளது. மார்ச் 21 ஆம் திகதி கண்ணகி அம்மன் கோவில் பொங்கல் விழா. உயிரைப் பணயம் வைத்துத் தூக்குக் காவடி எடுப்பர். இந்நூல் வெளியீட்டில் சேரும் பணம் ஆலயத்துக்குத்தான் கொடுக்கப்படும். இந்நூலுக்கு இன்று கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் அறிமுகவிழா நடாத்துவது எமக்கு பெருமை சேர்க்கிறது. பேராசிரியர் சி.பத்மநாதன் முன்னுரை, நூலுக்கு உயர் தகுதியைத் தருகின்றது.

**தலைமையுரை:**
**க.ஜயம்பிள்ளை (தலைவர், நூல் தமிழாக்கக் குழு)**

வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்களில் ஜே.வி.லூயிஸ் நிர்வாக அதிகாரியாக இருந்த காலத்துச் செய்திகளை ஆங்கில நூலாக்கி உள்ளார். வன்னி பற்றிச் சகலரும் அறிய வேண்டுமென்ற மன உந்தலால் தமிழில் நூலாக்க முனைந்தோம். லூயிஸின் நூல் இருக்கும் செய்தியை, முன்னாள் அரசாங்க அதிபர் கே.சி.லோகேஸ்வரனே தெரிவித்தார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகராக இருந்த போது இத்தகைய நூல்களைக் கண்டாராம். அவைகளது போட்டோக் கொப்பிகளை எடுத்திருந்தார். 2006 இல் அவைகளைப் பெற்றுக் குழுவொன்றை அமைத்துத் தமிழாக்கினோம். மொழி பெயர்த்துக் கொடுத்த பிரதியை மொழியாக்கக் குழுவின் செயலாளராக இருந்த தமிழ்மணி அகளங்கன் செம்மைப்படுத்தினார். இந்நூலுருவாக்கத்திற்கு வருடமொன்றும் நான்கு மாதங்களும் சென்றன. சர்வதேசத் தரமானதென இந்நூலைக் கண்ட தில்லைநடராசா பாராட்டினார். கொழும்பு, சேமமடு பதிப்பகம் மூலம் பத்மசீலன் நூலாக்கித் தந்தார். பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் இம்முயற்சிக்கு ஒரு இலட்சம் ரூபா தந்துதவினார். கண்ணகி அம்மன் கோவில் அறங்காவலர் குகதாசனும் ஒத்துழைப்புத் தந்தார்.

**நூல் அறிமுக உரை:**
**தமிழ்மணி கலாநிதி அகளங்கன்**

'இலங்கையின் வன்னி மாவட்டங்கள் - ஒரு கையேடு' என்ற நூலின் வெளியீட்டு விழா முல்லைத்தீவு வித்தியாசாலையில் நடைபெற்றது. அறிமுக விழாவொன்றை வவுனியாவிலும் நடாத்தினோம். இப்போ கொழும்பில் சிறப்பாகச் செய்கிறோம். இம்மண்டபத்தில் குழுமியிருக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைகளின் தரம் கண்டு மகிழ்கிறோம். சுப காரியங்களை 17 ஆம் திகதி செய்யக் கூடாதென்ற கருத்தொன்று எம்மத்தியில் உண்டு. ஏனென்றால் எட்டாம் எண். 'ஞானம்' ஆசிரியர் தி.ஞானசேகரன் மாலையில் விழாவை நடாத்துவது தான் நல்லதென்றார். காலை நிகழ்வுகளில் கொழும்பில் பார்வையாளர்கள் கூடுவது குறைவென்றார். எமது வரலாற்றை அழித்தவர்கள் மேல்நாட்டவர்களெனக் குற்றம் சுமத்துவதில் உண்மை உண்டு. 'சோதிடமாலை' என்ற நூல் தான் முக்கியமான நூலாம். அதற்கு முன் வரலாற்று நூல் இல்லையாம். எம்மத்தியில் ராஜராஜசோழன் வரலாறு உண்டு. தஞ்சைப் பெருங்கோயிலும் உண்டு. எமது ஆலயங்கள் அழிக்கப்பட்டன. கலாசாரத்தை, மொழியை அழிப்பதன் மூலமாக இனத்தை அழித்துவிடலாம். வன்னி பற்றிய வரலாற்று நூலை ஜே.வி லூயிஸ் எழுதியிருக்கிறார்.

பல பதிப்புகளைக் கண்ட அந்த ஆங்கில நூல் இப்போது தான் தமிழில் வெளிவந்துள்ளது. லூயிஸ் அன்றைய வன்னிப் பிரதேசத்தில் சப்கலெக்டராக உத்தியோகம் பார்த்தவர். பல ஏடுகளை ஆராய்ந்து அவர் எழுதிய நூல். வன்னி வரலாறு பற்றிய சிறப்பான நூல். வன்னி தமிழர் தேசமாகத் தான் இருந்தது. கி.மு. வன்னியில் தமிழர்கள் வாழ்ந்ததாக வரலாற்று ஆசிரியர்கள் தெரிவிக்கின்றனர். காக்கைவன்னியன் இருக்கவில்லை. அவன் காட்டிக் கொடுத்தவன் என்ற பழிகளைப் போட்டனர். அதே பழியை வன்னியர் மேலும் தொடர்ந்தனர். அதைத் துடைக்கவேதான் உண்மை வரலாற்றைத் தேடினோம். பல ஆய்வு நூல்களைத் தேடி எடுக்க முயன்றோம். இந்த விடயத்தில் புவனா ஐயம்பிள்ளை உரத்த அக்கறை காட்டினார். பண்டாரவன்னியன் வரலாற்றை ஜே.வி. லூயிஸின் நூலே காட்டியது. முன்னாள் அரசாங்க அதிபர் கே.சி.லோகேஸ்வரன் வவுனியா கச்சேரியில் பண்டாரவன்னியன் சிலையை நிறுவ ஆவன செய்தார். தேசிய வீரனாக அங்கீகரிக்கவும் நடவடிக்கை எடுத்தார். 1981 இல் பண்டாரவன்னியனுக்குப் பெருவிழா எடுத்தோம். விழா மலரொன்றையும் வெளியிட்டோம். லோகேஸ்வரன் ஐயா தமிழாக்கக் குழுவினரை அழைத்துச் சென்று பேராசிரியர் க.கைலாசபதிக்கு அறிமுகப்படுத்தினார். பொருத்தமானவர்களை நியமித்திருப்பதாகக் கைலாசபதி பாராட்டினார். விழா மலரில் லூயிஸின் படத்தை வெளியிட நினைத்தோம். அவரது படத்தை வன்னி மாநிலக் கச்சேரிகளில் வைக்க விரும்பினோம். அந்தப் புகைப்படம் யாழ்ப்பாணக் கச்சேரியில் தான் கிடைத்தது. அதையேதான் பாவித்து வருகிறோம். யானை உண்ட விளாங்கனி போன்றது தான், காட்டிக் கொடுத்தனர் என்ற பழிக்கதையும். தமிழரோடு முஸ்லிம்களுந்தான் வன்னி மாநிலத்தில் வாழ்ந்துள்ளனர். இங்கு தான் ஊர்களின் பெயர்களில் சாதி, சமூக அடையாளங்கள் இல்லை. ஆனால் இன்றோ அங்கே புதுப்புதுப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெயர்கள் உண்டாக்கப்படுகின்றன. எமது பாரம்பரிய பண்பாடுகள் அழிக்கப்படுகின்றன. இத்தகைய குறுகிய நோக்கோடான நடவடிக்கைகளை நீக்குவதற்கு பாடுபடுகின்றோம். எமது பாரம்பரியப் பெருமைகளை மக்கள் அறிய வேண்டும். அங்கு ஒற்றுமை உருவாக வேண்டும். நீண்டகாலமாக வன்னியர்கள் சுதந்திரமாக வாழ்ந்தவர்கள். அவர்களெவரும் வேறு பிரதேசங்களுக்குச் சென்று வாழ்ந்ததில்லை. ஆனால் ஏனைய பிரதேசத்தவர்கள் வன்னி மாநிலத்துக்கு வந்து, தமது வாழ்க்கையை அமைத்திருக்கின்றனர். இந்நூலில் உள்ள 33 அத்தியாங்களிலும் மொழிநடை பொதுவாக இருக்க வேண்டும் என்பதில் அக்கறையாக இருந்தோம்.

**சிறப்பு விருந்தினர் உரை:**
**சிவாநந்தினி துரைச்சாமி**
**(தலைவர், சைவ மங்கையர் கழகம், கொழும்பு)**

சிங்கள மக்கள் புரான் அப்பு, அநகாரிக தர்மபால போன்ற அவர்களது தலைவர்களைப் பற்றி அடிக்கடி பேசுவதுண்டு. அவர்கள் எமது தமிழ்ப் பெரியார்களையும் அறிந்திருக்க வேண்டுமென்பதற்காக, நான் எமது தமிழ்ப் பெரியார்களின் செயற்பாடுகள் குறித்தும் அவர்களுக்கு சொல்வதுண்டு. ஆறுமுகநாவலர் சைவப்பணி செய்த தமிழ்ப் பெரியார். புரான் அப்பு போன்ற வீரர்கள் வன்னியிலும் வாழ்ந்திருக்கின்றனர். எமது பெரியோர்கள் குறித்து சிங்கள, முஸ்லிம் மக்களும் அறிய வேண்டும். 2006 சுனாமி பேரழிவு ஏற்பட்ட போது அறங்காவலர் மு.குகதாசனோடு தொடர்பு கொண்டு வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயம் சென்று சைவ மங்கையர் கழகக்குழு பாதிக்கப்பட்ட மக்களை சந்தித்தது. ஆழ்ந்த கவலையோடு அம்மக்கள் இருந்தனர். இறந்து போன அவர்கள் சொந்தங்களின் அந்தியேட்டிக் கடமைகளைச் செய்ய முடியாத நிலையில் துக்கித்திருந் தனர். அக்கடமைகளைச் செய்ய உதவினோம். கடலுக்குள் இறங்க அஞ்சினார்கள். நாமே இறங்கி அவர்களுக்குக் காட்டினோம். இங்கு கடல் தண்ணீரில் அணையாத் தீபமேற்றுவது சிங்கள மக்களுக்குத் தெரியாது. இந்நூல் பற்றிச் சிங்கள மக்களும் அறியச் செய்ய வேண்டும்.

**க.த. இராசரத்தினம்**
**(பிரதி அதிபர், பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி)**

ஜே.பி லூயிஸால் 117 ஆண்டுகளுக்கு முன் ஆங்கிலத்தில் எழுதப்பட்ட நூல் இப்போ 2013 இல் தமிழாக்கம் செய்யப்பட்டு வெளிவருகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்காலத்தில் வன்னியில் கடமை புரியும் அதிகாரிகளுக்குத் தனது நூல் உதவுமென லூயிஸ் எழுதியுள்ளார். பதவிக் காலத்தில்தான் அறிந்ததை, அனுபவித்ததைப் பதிவு செய்துள்ளார். எமது வரலாற்றுத் தகவல்கள் யாழ்ப்பாண வைபவ மாலையிலும் உள்ளன. லூயிஸின் நூலிலும் நல்ல தகவல்கள் உண்டு. சத்திய தரிசனமான நூல். பேராசிரியர் சி.பத்மநாதன் ஆங்கில உயர் அதிகாரிகளால் எழுதப்பட்ட வரலாற்று நூல்கள் தலைசிறந்தவை எனக் கருதுகின்றார். ஏனைய மாவட்டங்கள் குறித்தும் இத்தகைய நூல் வெளிவர வேண்டும். மொழி பெயர்ப்பது மிகச் சிரமத்தைத் தரும் காரியம். ஆனால் இந்நூல் சிறப்பாக மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. மொழி வரட்சி காணப்படவில்லை. லூயிஸின் போட்டோவைச் சகல கச்சேரிகளிலும் வைக்க வேண்டும்.

*இலங்கையின் 'வன்னி மாவட்டங்கள் - ஒரு கையேடு' என்ற நூலை கே.சி.லோகேஸ்வரன் வெளியிட்டு அதன் முதற்பிரதியைத் தொழிலதிபர் செபமாலை செபமணி, ம.தனராஜ் (முகாமைத்துவப் பணிப்பாளர், மெட்ரோ ட்ரவல்ஸ், கொழும்பு - 06) ஆகியோருக்கு வழங்கினார். சிறப்புப் பிரதிகளும் வழங்கப்பட்டன.*

**வரலாற்றுச் சிறப்புரை: பேராசிரியர் சி.பத்மநாதன்**

வரலாற்று உணர்வு தமிழருக்கு இல்லை என்பார்கள். அதை நானும் ஒத்துக்கொள்கிறேன். அப்படி இருந்திருந்தால் 1947 இல் சரியான முடிவை எடுத்திருப்பர். இனிமேல் தமிழர் நிமிர்ந்து நிற்க வேண்டும். அதற்கு இலங்கையின் வன்னி மாவட்டங்கள் - ஒரு கையேடு' நூல் பங்களிப்புச் செய்யுமெனக் கருதுகிறேன். இந்நூலுக்கு அணிந்துரை எழுதித் தரும்படி கே.சி.லோகேஸ்வரனும், அகளங்கனும் கேட்டனர். இலங்கையின் வேறெந்த மாவட்டத்துக்கும் இப்படியொரு நூல் இல்லை என்றனர். புத்தளம் பற்றிய கையேடு ஒன்று உண்டு. ஆனால் கிடைக்கவில்லை. பேராதனைப் பல்கலைக்கழகத்திலும் தேடிப் பார்த்தேன். இப்போ செம்மையான மொழிபெயர்ப்பு இல்லை.

இத்தகைய நூல்களை எழுதுபவர்களையும் தேடிப்பிடிக்க முடியாது. இலக்கண வழுக்கள் இல்லாது எழுதமாட்டார்கள். றொபேர்ட் நொக்சின் சில நூல்கள் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. இத்தகைய வரலாற்று நூல்களைப் பல்கலைக்கழகங்கள் தான் படைக்க வேண்டும்.

பண்டாரவன்னியன் வரலாறு ஆதாரமாக உள்ளது. அப்போ வாழ்ந்த தமிழர்களை மலபார்கள் எனத்தான் குறிப்பிடுகிறார்கள். மலையாளி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களுக்கும், தமிழர்களுக்கும் வேறுபாடு இல்லை. எமர்சன் ரென்ட் எழுதியதால் இங்குள்ள தமிழர் வரலாறு முழுமையாக மாறியது. போர்த்துக்கேயரும் ஒல்லாந்தரும் உண்மையான தமிழர் வரலாற்றை நிலை நாட்டியுள்ளனர். 1796 இல் ஆங்கிலேயருக்கு ஒரு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. இலங்கையில் வடக்கு, கிழக்குப் பிரதேசங்களில் தமிழர்கள் வாழ்ந்ததாகபல ஒல்லாந்த வரலாற்று ஆசிரியர்கள் எழுதி இருக்கின்றனர். நீர்கொழும்பு தொட்டு வடபகுதிவரை தமிழ்மொழி இருந்ததாகவும் பதிவுகள் உள்ளன. 1973 இலிருந்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் வரலாற்றுத்துறை உண்டு. ஆனால் நவீன வரலாற்றாய்வுகள் செய்யப்படுவதில்லை. கிழக்கிலங்கை வந்தாறுமூலையில் இப்போதுதான் வரலாறு படிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் 15 ஆண்டுகளாக வரலாற்றுத்துறை இயங்குகிறது. இதை அமைப்பதற்கு நானும் பாடுபட்டிருக்கின்றேன். 1895 இல் உள்ள நிலைவேறு. இப்போதுள்ள நிலை வேறு. ஆய்வுகள் அரச கட்டுப்பாட்டுக்குள் உள்ளன. திருக்கேதீஸ்வரத்தில் அகழாய்வு செய்தவர்களைப் பொலிஸ் கைது செய்து நீதிமன்றத்தில் நிறுத்தியது. பிராமிய சாசனங்களில் பிராந்திய ரீதியில் தமிழ் இராஜ்ஜியமிருந்தது தெட்டத்தெளிவாகச் சொல்லப்பட்டுள்ளது. மஹியங்கனையில் துட்டகாமினி 32 தமிழரசர்களை வென்று அடக்கினானென மகாவம்சம் சொல்கிறது. இயக்கர், நாகர் வாழ்ந்ததாகவும் சொல்கிறது. ஆரம்பத்தில் தமிழர்கள் பௌத்தர்களாகவிருந்து பின்னரே சைவர்களாகினர். வன்னி வரலாறு கி.மு 5 ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்டது. பண்டாரவன்னியன் இறுதி வன்னி மன்னன். பலம் பொருந்தியவன். அவனை அடக்க ஆங்கிலேயர் மூன்றுமுறை முயன்றிருக்கின்றனர். ஒல்லாந்தரின் அறிக்கைகளைப் பார்க்க வேண்டும். ஆதிகாலம் பற்றிய வரலாற்றுக் குறிப்புகளைத் தேட வேண்டும். கைலாய வன்னியன் மிகவும் புகழ் பெற்றவன். திறை கொடுக்க மறுத்தவன், இப்போ அபாயச் சூழ்நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். எதையும். பேச இயலாது. சிந்தனையாளன் ரூசோ சொன்னான், 'இறைமை மக்களுக்கு உரியது. அரசுக்கு மட்டுமன்றிச் சகல மக்களுக்கும்' என. இருந்தவையும் போய்விட்டன. நிலைமை மாறும். ஆவணங்களைக் கிடைக்காது செய்துவிட்டனர். பொலன்னறுவை, மாதோட்டம், பதவியா தமிழர் ஆதிக்கத்தின் கீழ் இருந்தவை தான். தொடர்ச்சியான பிரதேசம் இலங்கைத் தமிழருக்கு இருந்தது. எமது வரலாற்றினை பொது மக்களுக்குச் சொல்லிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுக்க வேண்டும். இல்லாது போய்விட்ட பல வரலாற்று நூல்களை வெளியிடவும் ஆவன செய்ய வேண்டும்.

**கௌரவ விருந்தினர் உரை :**
**ஆர்.தர்மகுலசிங்கம்**
**(முன்னாள் அரசாங்க அதிபர், முல்லைத்தீவு மாவட்டம்)**

1985 தொடக்கம் 1999 வரை முல்லைத்தீவு மாவட்டத்தில் கடமை புரிந்தேன். இக்கட்டான காலகட்டத்தில் புதுக்குடியிருப்பில் ஓலைக் கொட்டிலில் அரச அதிபராக இருந்தேன். மக்களது அத்தியாவசியத் தேவைகளைச் சிந்தித்து கடமை புரிந்தோம். பென்சன் கொடுப்பதற்கு ஆவணங்கள் இருக்கவில்லை. பெருந்தொகையான உத்தியோகத்தர்கள் இளைப்பாற விண்ணப்பித்தனர். ஆனால் சுயவிபரக்கோவைகள் இருக்கவில்லை. அங்குமிங்குமாக ஆவணங்களைக் கேட்டெடுத்து கோவையாக்கி இளைப்பாற்று அளித்தோம். எமது முல்லைத்தீவு மாவட்டத்தின் காணி அலுவலகம் முழுமையாக அழிந்துவிட்டது. பிறப்புச் சான்றிதழ் எடுக்க முடியாத நிலை. கொழும்புத் தலைமையகத்திலிருந்து நிழற்படப் பிரதிகளை எடுத்துக் கோவை ஆக்கினோம். இரண்டு நிர்வாகத்தின் கீழ் கடமை புரிய வேண்டிய நிலையில் இருந்தோம். இருந்தும் மக்களுக்கான கடமைகளைச் செய்தோம் கொழும்பில் இருந்திருந்தால் சுய முன்னேற்றம் ஏற்பட்டிருக்கும். ஆனால் அல்லல்பட்ட எம் மக்களுக்குச் சேவை செய்ததையிட்டு மகிழ்கிறோம். ஒரு நூற்றாண்டுக்கு முன்னைய தகவல்கள் 'இலங்கையின் வன்னி மாவட்டங்கள் - ஒரு கையேடு' என்ற நூலில் அடக்கப்பட்டுள்ளன. அறிய வேண்டிய தகவல்களே. நாம் வாழ்ந்த முறைகளை நாமறியத் தான் வேண்டும்.

**உடுவை சி.தில்லை நடராசா**
**(முன்னாள் அரசாங்க அதிபர், வவுனியா மாவட்டம்)**

மர நிழலில் இருந்து அரசாங்க அதிபர் உத்தியோகம் பார்த்தேன். அம்மா பாவித்த ஆட்டுக்கல்லுக்குப் பதிலாக வீட்டுக்கு மிக்ஸி வந்தது. ஆட்டுக்கல் தாழ்வாரத்தில் போடப்பட்டது. 1990 களில் மின்சாரம் தடை செய்யப்பட்டது. மீண்டும் ஆட்டுக்கல் எங்கள் பாவனைக்கு வந்தது. மாற்றங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. பழைமைகளைப் பேசுவதும் எதிர்காலத் தேவைகளில் ஒன்றுதான். இந்நூலைப் படித்துப் பக்குவமாகப் பாதுகாக்க வேண்டும்.

**பிரதம விருந்தினர் உரை:**
**கே.சி.லோகேஸ்வரன்**
**(முன்னாள் அரசாங்க அதிபர், வவுனியா மாவட்டம்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வென்றவனை ஒரு போதும் 'நீ சொல்வது உண்மையா?' எனக் கேட்பதில்லை, எனக் ஹிட்லர் சொல்லியுள்ளார். முதலில் A Mannual of the Vanni District என்ற நூலைத் தந்த ஜே.வி.லூயிஸைப் பாராட்டவேண்டும். தற்போதைய நிர்வாக அதிகாரிகளுக்கு இது நல்ல அறிவுறுத்தல்களைத் தரும். வவுனியாவில் லூயிஸ் உதவி அரசாங்க அதிபராகக் கடமை புரிந்தவர். Leonard Woolf என்ற ஆங்கில எழுத்தாளரும் இவரின் கீழ் கடமை புரிந்தவர். லூயிஸ் கண்டியிலும் கடமைபுரிந்தவர். நிர்வாகிகள் பாரபட்சம் காட்டக் கூடாது.

துரிதமாகத் தீர்மானங்களை எடுக்கக் கூடியவர்களாக இருக்க வேண்டும். இன, மத பேதமற்ற செயற்பாடாக இருக்க வேண்டும். அரச நிதியை முறையாகக் கையாள வேண்டும். ஒதுக்கப்பட்ட நிதியை உரிய காலத்துக்குள் செலவு செய்ய வேண்டும். வெளிநாட்டு நிதி உதவிகளை முறையாகச் செலவு செய்வதில்லை. அவற்றில் 16% தையே செலவிடுவதாக அறிய முடிகின்றது. கீழுள்ள ஊழியர்களைச் சரியான முறையில் கையாள வேண்டும். அவர்களுக்குச் சரியான முறையில் பயிற்சி அளிக்க வேண்டும். தினக்குறிப்பைப் பேண வேண்டும். மிக முக்கியமான கடிதங்களின் நகல்களை பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டுமென பிறட்மன் வீரக்கோன் சொன்னார். கோயில் கடமைகளில் இத்தகையதொரு முக்கியமான நூலை வெளியிடல் முக்கியமான தொன்றாகும். இதையொரு முன்னோடிப் பங்களிப்பாகக் கருதிச் சபைகள் செய்ய வேண்டும். இதுவும் மக்கள் தொண்டே. Jaffna Lagoon Scheme என்ற நூல் மறையும் நிலையில் உண்டு. அதைப் பாதுகாப்பது அவசியம்.

ஏற்புரையைப் புவனா ஐயம்பிள்ளை நிகழ்த்த நன்றியுரையை சு. கிருஷ்ணமூர்த்தி நிகழ்த்தினார்.

-29/30.03.2013

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 54

## நாச்சியாதீவு பர்வீனின் 'மனவெளியின் பிரதி'

இலங்கை வடமத்திய மாகாணத்தில் தமிழிலக்கியச் செழுமை சமகாலத்தில் நாடு முழுவதும் பரம்பலாகி வருவது தமிழபிமானிகளுக்கு மட்டுமல்ல இன ஒருத்துவவாதிகளுக்கும் இங்கிதத்தை ஏற்படுத்துகிறது. இதன் மூலவர்களிலொருவராக எழுத்தாளர் நாச்சியாதீவு பர்வீன் இனங்காணப்படுகிறார். கவிதை, சிறுகதை, கட்டுரை என்பவற்றில் எழுத்தாளுமையைப் பரத்தித் தமிழுக்கு நற்பணி செய்கிறார். இலக்கிய நூல்கள் சிலவற்றை வெளியிட்டுள்ள இவரது 'மனவெளியின் பிரதி' என்ற கவிதைத் தொகுப்பை இன, ஒருமைப்பாட்டுக்காக அர்ப்பணிப்போடு பங்களிப்புச் செய்யும் எஸ்.கொடகே சகோதரர்கள் பிரைவேட் லிமிடெட் நிறுவனம் வெளியிட்டுள்ளது. இந்நூலுக்கான கருத்துப் பகிர்வு நிகழ்வு 15.06.2013 இல் கொழும்பு தமிழ்ச் சங்கக் குமாரசாமி விநோதன் மண்டபத்தில், பிரபல இலக்கியவாதி திக்குவெல்ல கமால் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வின் முக்கிய அம்சமாக மறைந்த பத்திரிகையாளர் மர்ஹூம் எம்.எச்.எம்.சம்ஸ் நினைவுப் பேருரை இடம்பெற்றது.

**தலைமையுரை:**
**திக்குவெல்ல கமால் (நாடறிந்த இலக்கியவாதி)**

இந்நிகழ்வின் முக்கிய உரை எம்.எச்.எம்.சம்ஸ் நினைவுப் பேருரை. நாச்சியா தீவு பர்வீனின் நிகழ்வில் இந்த உரையின் இணைப்புக்கான பொருத்தப்பாடுதானென்ன? பர்வீன் அநுராதபுர மாவட்டத்தைச் சேர்ந்தவர். சம்ஸ், திக்குவெல்லவைச் சேர்ந்தவர். இலக்கியத்தில் பர்வீனை நெறிப்படுத்தியவர் சம்ஸ் தான். தினகரன் பத்திரிகையில் சம்ஸ் 'புதுப் புனல்' என்ற தனது பத்தியில் அதைச் செய்து பர்வீனை வெளிச்சத்துக்குக் கொண்டு வந்தார். இப்பத்தியில் பல இளம் எழுத்தாளரை நெறிப்படுத்திச் சம்ஸ் அவர்களை இலக்கியவாதிகளாக்கினார். பர்வீன் அவரோடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்புகளைக் கொண்டிருந்தார். நேரடியாக உரையாடல்களையும் செய்தார். புதுப் புனலுக்கு வந்துள்ள ஆக்கங்களின் பட்டியலைச் சமஸ் வெளியிட்டார். செம்மைப்படுத்தினார். பிரசுரித்தார். திருப்பி அனுப்பியவர்களுக்கு அவைகளின் குறைபாடுகளையும் அறிவித்தார். ஆகவே சம்ஸ் காலமாகியும் நினைத்துப் பார்க்கத்தக்கவராக விளங்குகிறார். 1950 களில் தொடங்கி அவர் எழுத்துப் பணி செய்தார். இருந்தும், 1960 களில் தான் இலக்கியத்தைப் புரிந்து கொண்டு எழுதினார். அக்காலத்தில் 'இன்சான்' என்ற ஏட்டை இடதுசாரியான அபுதாலிப் நடாத்தினார். அந்த இதழ் எம்மால் பேசப்படுவதில்லை. விமர்சனத்துக்கான தளத்தை ஏற்படுத்தித் தந்த ஏடு 'இன்சான்'. சமூகம் எப்படி இருக்க வேண்டும், இருக்கக் கூடாது என்பவற்றை வாசகருக்குத் துணிவோடு சொல்லியது. இதன் படைப்பாளிகள் சிலர் ஈழத்துப் படைப்பிலக்கியத்துக்குத் திருப்பத்தைத் தந்துள்ளனர். இதன் ஆய்வு இன்னமும் இல்லை. கலைவாதி கலீல், மொகின் சமீம், எஸ்.எல்.எம்.ஹனிபா போன்ற இன்றைய இலக்கியவாதிகளை உருவாக்கித் தந்தது இன்சான் தான். இதன் தொடர்ச்சியே நாச்சியா தீவு பர்வீன். இன்சானைப் பேசாமல் சம்ஸைப் பேச முடியாது. சம்ஸ் இல்லையென்றால் பர்வீன் இல்லை. எமது இளையதலைமுறை இன்சான் பற்றி அறிய வேண்டும். நாம் அவர்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும். ஈழகேசரி, ஈழநாடு, மறுமலர்ச்சி, மல்லிகை ஆகியவற்றின் சிறுகதைத் தொகுப்புகள் வெளிவந்துள்ளன. அவைகள் போல் இன்சான் சிறுகதைத் தொகுப்பும் வெளியிடப்பட வேண்டும். அதற்கான முயற்சிகளை எடுப்போம்.

*'மன வெளியின் பிரதி' கவிதைத் தொகுப்பு வெளியிடப்பட்டு, அதன் முதல் பிரதி புரவலர் ஹாசிம் உமருக்கு வழங்கப்பட்டது. சிறப்புப் பிரதிகளும் வழங்கப்பட்டன.*

**பிரதம அதிதி உரை:**
**நீதியரசர் என்.எம்.எஸ்.கபூர் (மேல் நீதிமன்ற நீதிபதி)**

தமிழ்மொழி 2500 ஆண்டுகளுக்கு மேலான பழைமை வாய்ந்தது. நாச்சியாதீவு பர்வீன் எனது ஊரான அநுராதபுரத்தைச் சேர்ந்தவர். அவருக்கு மேலும் ஊக்கம் அளிக்கவே இந்நிகழ்வில் கலந்து கொள்கிறேன். முஸ்லிம் வாழ்வை இலக்கியமாக்க வேண்டும். முஸ்லிம்களின் தமிழிலக்கியப் பங்களிப்புகளைக் கண்டு கொள்ளாது, சில காலத்துக்கு முன் ஈழத்துத் தமிழிலக்கிய வரலாறு எழுதினர். அதை எதிர்த்து அல்லாமா எம்.எம். உவைஸ் முஸ்லிம்களின் பங்களிப்பை விபரித்து ஆய்வு நூல் வெளியிட்டார். 200 இற்கும் மேற்பட்ட முஸ்லிம் காப்பியங்கள் உள்ளன. 100 இற்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்பட்ட சிறுகதை, கவிதை, கட்டுரைத் தொகுப்புகளை முஸ்லிம் எழுத்தாளர்கள் வெளியிட்டுள்ளனர். இன்று நாச்சியாதீவு பர்வீனின் மனவெளியின் பிரதி வந்துள்ளது. இலங்கை வானொலியின் தமிழ்ப் பிரிவில் முஸ்லிம்களின் பங்களிப்பு உண்டு. உலகளாவிய அளவில் இஸ்லாமிய மகாநாடுகள் நடைபெறுகின்றன. இப்படிப் பெரும் பங்களிப்புத் தமிழுக்குண்டு. முஸ்லிம்கள் மேலும் மேலும் தமிழ் நூல்களை வெளியிட்டுத் தங்களது பங்களிப்பை விரிவுபடுத்த வேண்டும்.

**நூல் அறிமுகம்: பிரபல கவிஞர் மேமன் கவி**

சகோதர மொழி நூல்களையும் வெளியிட்டு வரும் சிங்கள நூல் பதிப்பு நிறுவனம், கொடகே நிறுவனம். நாச்சியாதீவு பர்வீனின் 'மனவெளியின் பிரதி' என்ற தமிழ்க் கவிதை நூலை வெளியிடுவதற்கும், அதுவே பொருத்தப்பாடாக அமைகின்றது. மொழி பெயர்ப்பு நூல்களையும் வெளியிடுவதற்கு இந்நிறுவனத்தினருக்கும் ஆர்வமுண்டு. இதைச் சம்ஸ் மொழி பெயர்புப் பணியின் தொடர்ச்சியென்றே கூற வேண்டும். பிரபல எழுத்தாளர் தோப்பில் முஹம்மது மீரானை, சம்ஸ் தான் பிரபலப்படுத்தினார். இலங்கை தான் அவரை இனங்காட்டியது. பர்வீனின் கவிதைகளில் சம்ஸின் தாக்கம் காணப்படுகிறது. பர்வீன் கவிதையியற்ற அத்திவாரமிட்டவர் சம்ஸ்.

**நினைவுப் பேருரை :**
**'பத்திரிகையாளர் மர்ஹூம் எம்.எச்.எம்.சம்ஸ்'**
**உரைஞர்:**
**பேராசிரியர் எஸ்.எம்.எஸ்.அனஸ்**
**(மெய்யியல்துறைத் தலைவர், பேராதனை பல்கலைக்கழகம்)**

சம்ஸைப் போன்ற இன்னொருவரை உருவாக்க முடியுமா என்ற? சந்தேகம் எனக்குண்டு. அவரை இலக்கியவாதியாகவே எல்லோரும் அழகு பார்க்கின்றனர். அதையெல்லாம் கடந்த புரட்சியாளர் தான் சம்ஸ். பெரியதொரு இடைவெளியை ஏற்படுத்திவிட்டுச் சென்றுவிட்டார். அவரைப் பற்றிய விரிவான ஆய்வுகள் நடாத்தப்படாத சூழல் இது. சிறப்பான எழுத்தாற்றல் அவரிடமிருந்தது. எதிர்ப்புக்களுக்கு அவர் வளைந்து கொடுக்கவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் பணி செய்த பெருந்தலைவர்களை மறக்கிறோம். அன்று உலகளாவிய ரீதியில் பேசப்பட்ட நாசரின் பெயர் மறைக்கப்பட்டுள்ளது. கார்ல் மார்க்ஸின் இறுதி ஊர்வலத்தில் ஆறு பேரே இருந்தனர். பதியுதீன் மொஹமட் நோய்வாய்ப்பட்டிருந்த போது அவரை எத்தனை பேர் சென்று பார்த்தனர்? யாரும் பார்க்கவில்லை. ஆனால், எம்.எச்.எம்.சம்ஸை நாம் மறக்கவில்லை. அதற்கு இந்த நிகழ்வு எடுத்துக்காட்டாகும். உலகை உலுக்கும் பிரச்சினைகள் நிலவிய காலத்தில் அவர் எழுதும் பணியைத் தொடர்ந்தார். சகலதையும் உதறிவிட்டு எழுத்தில் செயல்பட்டார். எல்லா விடயங்களிலும் எழுத்தாளராகவே சம்பந்தப்பட்டார். அவைகள் குறித்து நிறையப் பேசினார். புதியதோர் சமுதாயத்தை உருவாக்க எத்தனித்தார். பல் பரிமாணங்களில் இயங்கினார். திக்குவல்லையின் சம்பிரதாயங்களை வெளிக்கொணர்ந்தார். தனது இலட்சியத்துக்காகச் சிறுகதையைப் பயன்படுத்தினார். அதிரடியான இலக்கியங்களைப் படைப்பார். வெண்பாக்களை இயற்றினார். ஓர் இரவு லெ.முருகபூபதியும் திக்குவல்லை கமாலும் அவரோடு தங்கினர். இரவு பூராகவும் அவர்களைத் தூங்கவிடவில்லை. தனது தமாஷ் பேச்சுகளால் அவர்களைச் சிரிக்க வைத்தார். அவரது உரையாடலில் அங்கதச் சுவை நிரம்பி வழியும். நல்லதொரு கலைஞனாக வாழ்ந்தார். சம்ஸை ஆதர்சமாக்கி எழுதி எத்தனையோ பேர் எழுத்தாளராகியுள்ளனர். நாடக அநுபவங்களையும் கொண்டிருந்தார்.

அவரொரு இஸ்லாமியப் பாடகராகவும் செயல்பட்டார். இசையமைத்தார். பழைய பாடல்களை மீளெடுத்து அவைகளுக்கு உயிர் கொடுத்தார். மென்ரலின் வாத்திய இசையில் பரிச்சயமுள்ளவர். சிங்கள, முஸ்லிம் இளைஞர்கள் அவரை மாஸ்டர் எனத் தான் அழைத்தனர். இலக்கியக்காரரை நாம் சுதந்திரமாகப் பறக்கவிடுவதில்லை. அவர்களைத் துரத்தித் துரத்திப் பயப்படுத்துகிறோம். எதிர்க்கிறோம். 'கிராமத்துக்கனவு' என்ற நாவலை சம்ஸ் எழுதினார். அதற்கும் எதிர்ப்புக் கிளம்பியது. பழைமை வாதிகள் அதை எதிர்த்தனர். தனிமனிதனாக நின்று போராடினார். நக்கீரனைப் போல் இலக்கியத்தைப் பார்த்தார். இலக்கியம் மூலம் எம்மை பார்க்கலாம்; சினிமாவாக்கலாம். சகல மட்டங்களுக்கும் இலக்கியப் பாதையைத் திறந்துவிட்டவர் சம்ஸ். பிரபல நாவலாசிரியர்களான வைக்கம் பஷீர், தோப்பில் முஹம்மது மீரான் அக்காலத்தில் படைப்பிலக்கியத்தில் ஈடுபட்டிருந்தனர். 'கடலோரக் கனவு' பற்றி சம்ஸ் எழுதினார். இருவரது படைப்புக்களிலும் தொடர்புகள் இருந்தன. மீரான் மரபை எழுதினார். எமது முதலாவது ராஜ ராஜகுமாரன் சம்ஸே. தனது எழுத்துக்கள் மூலமாக வாசகருக்குச் சிறந்த உணர்வை ஊட்டினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவீன முறையில் சிறுகதைகளைப் படைத்தார். அவரது 'ஒட்டகம்' என்ற சிறுகதையில் ஒட்டகமே இல்லை! துணிவோடு கருத்துக்களைக் கொண்டு வந்தார். 1950 இல் வெளியான கையெழுத்துப் பிரதியொன்றில் தனது எழுத்துப் பணியை ஆரம்பித்தார். அவரது கவிதைகளில் ஆழமான சொற்களஞ்சியத்தைக் காணலாம். அவரிடம் சமதர்மம் இருந்தது. தான் மார்க்சியவாதி அல்ல எனச் சொன்னார். சிறப்பான பார்வை இல்லாத எந்த இலக்கிய எழுத்தும் நின்று பிடிக்காது. புகழ் பெற்ற உலகக் கவிஞர் அல்லாமா ஏ.இக்பால் கார்ல் மார்க்ஸைப் புகழ்ந்திருக்கிறார். அந்தப் பின்னணியில் காத்திரமானவற்றைத் தேடியெடுத்து இஸ்லாமியப் புரட்சிகர இலக்கியங்களைப் படைக்க சம்ஸ் வழிகாட்டினார். அவரொரு மறுமலர்ச்சிச் சிந்தனையாளர். முஸ்லிம் இலக்கியத்தைப் படைத்துத் தமிழிலக்கியத்தில் நவீன சூழலை ஏற்படுத்தினார். வீடு கொள்ளா இலக்கியவாதிகள், கலைஞர்கள் சம்ஸின் இல்லம் வந்து அவரது இலக்கியப் பணிகளை அங்கீகரித்தனர்.

*மனவெளியின் பிரதி கவிதைத் தொகுப்பின் கவிதைகள் பற்றிய பல் பரிமாணக் கண்டோட்டங்கள்:*

**கவிதைப் போக்கு:**

**உரைஞர் : எம்.சி.ரஸ்மின் (ஊடகவியலாளர்)**

பர்வீன் எமது அநுராதபுரத்தில் பல இலக்கியவாதிகளை உருவாக்கினார். அவர் பின் இழுபட்டவர்களுள் நானுமொருவன். எழுத்தாளனின் இலக்கியப் போக்கைப் பார்ப்பது மிகவும் சிக்கலானது. வாழ்க்கைப் போக்கு அடிக்கடி மாறுவதே இதற்கு அடிப்படை.பர்வீன் போக்குத் தொடர்ச்சியானது. இத்தொகுப்பில் காணப்படும் கவிதைகளில் சமூக மாற்ற மார்க்சிய சிந்தனைகளும் உண்டு. நாச்சியாதீவு பர்வீன் வளர் இளம் சிந்தனையாளர். மரபைத் தட்டி விட்டுப் போகாத போக்கும் கவிதைகளில் காணப்படுகிறது. தற்போதைய சிறுபான்மை இனங்களின் வாழ்க்கைச் சூழலைச் சூசகமாகச் சொல்கிறார். காதல் சம்பந்தமான பார்வைகளும் உண்டு. இதற்கு எடுத்துக காட்டாக 'சட்டியிலிருந்து அடுப்புக்கு......' என்ற கவிதையைச் சொல்லலாம். 'நிஜங்களின் வலிமை' போன்ற கவிதைகளில் அடக்குமுறைக்கு எதிரான போக்குக் காணப்படுகிறது. இத்தகைய போக்கை இன்றைய சிங்களப் படைப்பாளிகளிடமும் காணலாம். இரும்பையும் சீனச்சட்டியையும் சிறுபான்மை இனத்துக்குத் தின்னக் கொடுத்து, இரக்கங்காட்டுவதாகப் பெரும்பான்மை இனம், அணைத்துப் பின் தள்ளிவிட்டு சிறுபான்மை இனத்தைச் சாகடிப்பதாகச் சிங்களக் கவிஞரொருவர் பாட்டொன்றை இயற்றியுள்ளார். ஒரு சமாந்தரமான பார்வைப் போக்கையே இத் தொகுப்புக் கவிதைகள் காட்டுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சமூகப் பார்வை:**
**உரைஞர்: விஜிதா சிவபாலன்**
**(விரிவுரையாளர், இலங்கை மன்றக் கல்லூரி)**

இலக்கியப் படைப்பாளியைச் சமூகமே உருவாக்குகின்றது. படைப்பாளிகள் யதார்த்த வாதத்துக்குள் நுழைய வேண்டும். நவீன கவிதைகளில் எளிமைப் பார்வை இருப்பதைக் காணலாம். சமூகப் பின்புலத்திலேயே படைப்பாளிகள் நிற்கவேண்டும். ஆனால், அவர்களது அகவெளியில் கற்பனைக் காற்று வீசலாம். 'மனவெளியின் பிரதி' என்ற நாச்சியாதீவு பர்வீனின் கவிதைத் தொகுப்பின் தலைப்பு வாசகர் நெஞ்சில் பல கேள்விகளை எழுப்பக்கூடியது. வாசிக்கவும் தூண்டும். பர்வீன் கவிதைகள் அவரது உள்ளக் குமுறல்கள். கவிதைகளில் ஏங்கி, ஏங்கித் தவித்துக் கண்ணீர் விடுகிறார். கவிதைகள் வாசகரைச் சிந்திக்க வைக்கும் கற்பனையற்ற யதார்த்தக் கருத்துரைப்புகள். கவிதைகளில் அவைக்குரிய அம்சங்களோடு உணர்வைத் தரக் கூடிய பலமும் இருக்க வேண்டும்.

பர்வீன் கவிதைகளில் எம்.எச்.எம்.சம்ஸின் சிந்தனைப் போக்கு மேவி நிற்கின்றது. ஆனால், முழுக் கவிதைகளையும் ஆக்கிரமிக்கவில்லை. தானாகவே பர்வீன் எழுந்து நடந்துள்ளார். தனித்துவமாக இயங்குகிறார். 1980 ஆம் ஆண்டு ஈழத்துக் கவிதைகள் எதிர்ப்புக் குரலாக, வெளிப்பட்டன. அவற்றை மையம் கொண்டவையாகவே 'மனவெளியின் பிரதி'த் தொகுப்பின் கவிதைகளும் உள்ளன. மென்மையாகச் சொல்லியுள்ளார். அரசியல்வாதிகளின் போலி வேடத்தைக் கலைக்கப் பிரயத்தனம் செய்துள்ளார். சமூக மாற்றத்தைக் கடுமையாக அல்லாமல் மென்மை யாகவே சொல்கிறார். சொல்லாடலில் ஆவேசம் தொனிக்கவில்லை. குறியீட்டு முறையிலும் சொல்லியுள்ளார். கவித்துவப் பண்புமுண்டு.

தொகுப்பின் கவிதைகளில் பெண்கள் பிரச்சினைகள் இடம்பெறவில்லை. 59 கவிதைகள் தொகுக்கப்பட்டுள்ளன. சமூகம் சார்ந்த தன்னிலைப்பட்ட கவிதைகளாக இனங்காட்டுகின்றன. ஆன்மீகம், மழலை இன்பம், காதல் போன்றவற்றைப் பாடியுள்ளார். பெண்ணியம், இன ஒடுக்குமுறை, யுத்தம் என்பவற்றை மிக நுட்பமாகத் தான் கவிதைகளில் வைத்துள்ளார். அவைகளை தத்ரூபமாகவும் காட்சிப்படுத்தியுள்ளார். ஈழத்துக் கவிதை உலகில் நாச்சியாதீவு பர்வீனின் சுவட்டைப் பதிக்கின்றது மனவெளியின் பிரதி கவிதைத் தொகுப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**'எனது பார்வையில் நாச்சியாதீவு பர்வீன் கவிதைகள்'**
**உரைஞர்:**
**கவிஞர் வதிரி சி. ரவீந்திரன்**

கவிதை படைப்பதற்கு வரம் பெற்றிருக்க வேண்டும். இத்தொகுப்பில் பர்வீன் சமூகம் பற்றிப் பேசியுள்ளார். 'நாளை' மிகவும் தெளிவான கவிதை. 'நிலவு இராச்சியம்' கவிதை மொழி மிகவும் இலகுவானதாக உள்ளது. நாட்டின் அரசியல் நிலையை அதில் சுட்டிக்காட்டுகிறார். 'பழைய டயரி' வித்தியாமானது. முடிவடைந்த பிரச்சினையைப் பேசியுள்ளார். கவிதைகள் சாதாரண மொழியில் சொல்லப்பட்டுள்ளன. கவிதை அரங்குகளில் பர்வீன் மிகவும் கலகலப்பாகக் கவிதைகள் பாடுபவர். கவிதையை மேடைகளில் பாடுபவர்களுக்குக் குரல் வளமும் தேவை. அது பர்வீனுக்கு உண்டு. நாச்சியாதீவு பர்வீனிடமிருந்து கவிதை உலகு இன்னும் நிறையவே எதிர்பார்க்கின்றது. அவர் நிறையவே தர வேண்டும்.

**கருத்துரை:**
**என்.எம்.சஹீத் (உயர் நீதிமன்ற சட்டத்தரணி)**

தமிழிலக்கியத்தை மேம்படுத்துவதற்காக இங்கு வந்திருக்கிறார்கள். நோட்டுகளைக் கண்டால் சட்டத்தரணிகள் மக்களோடு பேசுவார்கள். அவர்கள் இப்போ மொபைல் தொலைபேசி போலாகிவிட்டனர். இத்தொகுப்பிலுள்ள 'அந்த நாள் எப்ப வரும்?' என்ற கவிதையில் வரும் 'பொத்தி வெச்ச செம்பகப் பூ மொட்டு பொசுக் கென்று பூத்தது போல்!' என்ற வரி எனக்கு மிகவும் பிடித்துள்ளது. நாச்சியாதீவு பர்வீனின் கவிதைகள் உலகமயப்படுத்தப்பட வேண்டும்.

**நூலாசிரியர் ஏற்புரை:**
**கவிஞர் நாச்சியாதீவு பர்வீன்**

காத்திரமான விமர்சனங்களை ஏற்பேன். எம்.எச்.எம்.சம்ஸின் இலக்கியப் பணிகள் குறித்துப் புதிய சமூகம் அறிய வேண்டும். அவரது நினைவுகளை மீளெழச் செய்வதுக்காகவே நினைவுரையைச் சேர்த்தேன். அடுத்த மாதமளவில் எம்.எச்.எம்.சம்ஸ் பற்றி முழுநாள் கருத்தரங்கொன்றை நடாத்த ஏற்பாடுகள் செய்து வருகிறோம்.

*எம்.ஸி.நஜிபுதீன் ('விடிவெள்ளி 'ஆசிரியர் பீடம்) நிகழ்வுகளைத் தொகுத்து வழங்கினார்.*

-28.06.2013

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 55

## உ.வே. சாமிநாத ஐயரும் - கி.வா.ஜகந்நாதனும்

மரபு இலக்கியத்துக்கும் நவீன இலக்கியத்துக்கும் சமவாய்ப்பை நல்கி தமிழின் இலக்கியச் செழுமையைப் பாதுகாத்து வரும் மூத்த சஞ்சிகையான 'கலைமகள்' இதழின் ஆசிரியர் கீழாம்பூர் எஸ்.சங்கரசுப்பிரமணியன் அண்மையில் இலங்கைச் சுற்றுலாப் பயணமொன்றை மேற்கொண்டிருந்தார்.

கொழும்புத் தமிழ்ச் சங்கம் இந்த இதழியலாளரை வரவேற்றுச் சிறப்புச் சொற்பொழிவொன்றை ஏற்பாடு செய்தது. சங்கத்தின் சங்கரப்பிள்ளை மண்டபத்தில் நடைபெற்ற இந்நிகழ்வு 01.06.2013 ஆம் திகதி மு.கதிர்காமநாதன் (முன்னாள் கொ.த.ச. தலைவர்) தலைமையில் நடைபெற்றது.

ஆசிரியை ரஜினி சந்திரலிங்கம் தமிழ் வாழ்த்துப் பாடினார்.

**வரவேற்புரை:**

**'தகவம்' மு.தயாபரன் (இலக்கியச் செயலர், கொ.தமிழ்ச் சங்கம்)**

தரமான சஞ்சிகையான 'கலைமகள்' சஞ்சிகையின் ஆசிரியர் கீழாம்பூர் எஸ்.சங்கரசுப்பிரமணியன். இச்சஞ்சிகைக்கென்று ஒரு பாரம்பரியமுண்டு. இதன் ஆசிரியராக இருந்த கி.வா.ஜகந்நாதனுக்கும் இலங்கைக்கும் அக்காலத்தில் நெருங்கிய தொடர்புகள் இருந்தன. நான் சிறுவனாக இருந்த காலத்தில் எங்கள் வீட்டுக்குக் கல்கி, அம்புலிமாமா, கலைமகள் ஆகிய தமிழகத்துச் சஞ்சிகைகள் வருவதுண்டு. இவைகளை வாசிப்பதில் எங்கள் வீட்டிலுள்ளவர்களுக்கிடையில் பலத்த போட்டி இருக்கும். இவை மூலமாகச் சிறு பராயத்திலேயே சுயவாசிப்பைப் பெற்றோம். கி.வா.ஜகந்நாதனின் சொற்பொழிவுகள் ஆற்றொழுக்கானவை. நகைச்சுவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யும் இருக்கும். மகுடி போன்று கேட்போரைப் பாதிக்கும். மனதை தொட்டு விடும். அக்காலத்துச் சிறுவர் இன்றும் அதை மறந்திருக்க மாட்டார்கள். சில பேச்சாளர்கள் பேசும் விடயத்தை விட்டு விலகாதிருப்பதற்கு 'அதனால்' 'அப்படி' என்ற வார்த்தைகளை துணைக்கழைப்பதுண்டு. இவைகள் செருகல் வார்த்தைகள். தமிழறிஞர் கி.வா.ஜகந்நாதன் இவ்வார்த்தைகளை 'ஊன்றுகோல்' வார்த்தைகளென விழித்து அன்று கட்டுரை எழுதியுள்ளார். கடினமான விடயங்களையும் எளிதாகக் 'கலைமகளில்' தந்த பேரறிஞர் கி.வா.ஜகந்நாதன்.

**அறிமுகவுரை:**
**தெ.ஈஸ்வரன் (தமிழ் ஆர்வலர்)**

இலக்கியம், ஆன்மீகம் என்பவற்றில் கலைமகள் ஆசிரியர் கீழாம்பூர் எஸ்.சங்கரசுப்பிரமணியன் ஆற்றல் மிக்கவர். தமிழகத்தில் பிரபலமாகவிருந்த அமரர்.பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் பற்றி நூலொன்றை எழுதியுள்ளார். சிறந்த பேச்சாளர், கட்டுரையாளர். நேர்காணல் செய்வதில் பாராட்டுகளைப் பெற்றவர். இப்படிப் பல சிறப்பாளுமைகளைக் கொண்டவர் இன்றைய கலைமகள் சஞ்சிகை ஆசிரியர். எமது எழுத்தாளரின் தரமான படைப்புகளை கலைமகளில் பிரசுரிப்பதாக உறுதி அளித்துள்ளார். எமது எழுத்தாளர்கள் இவ்வாய்ப்பை உரிய முறையில் பயன்படுத்த வேண்டும்.

**தலைமையுரை:**
**மு.கதிர்காமநாதன்**

கலைமகள் ஆசிரியரின் சிறப்புரையை ஏற்பாடு செய்து உதவிய தெ.ஈஸ்வரன் எல்லோர் மத்தியிலும் பிரபலமானவர். வந்தோரை வரவேற்க வேண்டுமென்ற மனத்தவர். கலைமகள் ஆசிரியர் கி.வா.ஜகந்நாதனை 1960 ஆம் ஆண்டு கொழும்பு ஜிந்துப்பிட்டி முருகன் ஆலயத்தில் சந்தித்தேன். 1966 இல் அவர் நயினா தீவு நாகபூஷணி அம்மன் ஆலயத்திற்கு வந்த போது, அப்போதிருந்த அன்னதான மடத்துக்கு 'அமுதசுரபி' என பெயர் சூட்டினார். அது இப்பவும் மிகச் சிறப்பாக அடியார்களுக்கு அரும்பணி செய்து வருவதை அனைவரும் அறிவர். கி.வா.ஜ.வுக்குச் சைவமும் தமிழும் இரண்டு கண்கள் போன்றவை. அவரது இலக்கிய எழுத்துக்களாலும் சொற்பொழிவுகளாலும் மக்கள் மத்தியில் அன்று கொடிகட்டிப் பறந்தார். அவர் வகித்த பதவியை இவ்வைபவத்தின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாயகன் கீழாம்பூர் எஸ்.சங்கரசுப்பிரமணியன் அலங்கரிக்கின்றார். தமிழ்த் தாத்தா இல்லையென்றால் தமிழ் எங்கே? எனக் கேட்க வைத்த உ.வே.சாமிநாத ஐயரின் சிஷ்யனாக இருக்கும் பேற்றைப் பெற்றவர் கி.வா.ஜ.

*தலைவர் மு.கதிர்காமநாதன் நிகழ்வின் கதாநாயகன் கலைமகள் ஆசிரியர் கீழாம்பூர் எஸ்.சங்கரசுப்பிரமணியனுக்குக் கொழும்புத் தமிழ்ச் சங்க சார்பில் சால்வை அணிவித்து அவரைப் பேச அழைத்தார்.*

**சிறப்புரை:**
**'தமிழ்த் தாத்தாவும் கி.வா.ஜ.வும்'**
**உரைஞர்:**
**கீழாம்பூர் எஸ்.சங்கரசுப்பிரமணியன்**

கலைமகள் இலக்கிய மாத சஞ்சிகையின் பிரதம ஆசிரியர் பொறுப்பை தயக்கத்தோடு தான் 1995 இல் ஏற்றேன். தமிழறிஞர் கி.வா.ஜகந்நாதன் ஆற்றிய தமிழ்ப் பணியை என்னால் செய்ய முடியாது. அவர் அமர்ந்து பணி செய்த பீடத்திலிருந்து என்னால் கோலோச்ச முடியாது. நிர்வாகிகளுக்கு நிபந்தனையொன்றை விடுத்தேன். 'எனக்குப் பிறிம்பானதொரு நாற்காலி தர வேண்டும். கி.வா.ஜ.அமர்ந்த இருக்கை தனியொரு இடத்தில் வைத்து மரியாதைக்குட்படுத்தப்பட வேண்டும்.' வேண்டுகோள் ஏற்றுக் கொள்ளப்பட்டு நான் தினசரி கி.வா.ஜகந்நாதனின் உருவப்படத்துக்கு மாலை சூட்டி வணங்கிய பின்னரே எனது அறைக்குச் செல்வேன். எனது தாத்தா என். சிவராமன் 54 ஆண்டுகள் 'தினமணி' பத்திரிகையில் பணி புரிந்தவர். அடுத்த மொழிகளையும் மதிக்க வேண்டுமென்ற சிந்தனை கொண்டவர். அவரே என்னைக் கூட்டி வந்து கலைமகள் ஆசிரியர் கதிரையில் அமர்த்தினார். கலைமகள் 1906 இல் வெளிவந்தது. திருக்குறள் மூலமாகவே கி.வா.ஜ.வுக்கு முதல் சம்பளம் கிடைத்தது. கிறிஸ்தவ பாதர் ஒருவருக்கும் அவரது மனைவிக்கும் திருக்குறள் படிக்க ஆசை. கற்பிப்பதற்கு கி.வா.ஜ.வை சிபாரிசு செய்தனர். தயக்கத்தோடு ஏற்றுக் கொண்டார். ஒரு நாள் விட்டு ஒரு நாள் படிப்பித்துக் கொடுக்க வேண்டும். மாதமொன்றுக்கு 25 ரூபா சம்பளம். தாயாருக்கு மிகுந்த சந்தோஷமாக இருந்தது.

உ.வே.சாமிநாத ஐயரைக் குருவாக மதித்தவர். கி.வா.ஜகந்நாதன் உ.வே.சாமிநாதஐயர் தனது சீடன் கி.வா.ஜ.வைப் புரோகிதராக்கவே விரும்பினார். ஆனால் தாயார் விரும்பவில்லை. ஆங்கிலம் கற்றால் கை நிறைய வருமானம் கிடைக்குமெனத் தாயார் மகனுக்கு ஆலோசனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொன்னார். சாமிநாத ஐயரிடம் தமிழ் படிக்க வேண்டும் என்பது மகனின் விருப்பமாக இருந்தது. உபந்நியாசம் செய்ய கி.வா.ஜ.வை அவர் தந்தையார் தன்னோடு கூட்டிச் சென்றார். திருவிளையாடற் புராணத்தை உபந்நியாசம் செய்தார். மிக அற்புதமாக மக்களைக் கவரும் வண்ணம் செய்தார். மக்கள் காணிக்கைகளை அள்ளிக் கொடுத்தனர். அம்மாவின் அன்பு பெருகியது. உபந்நியாசம் செய்யப்பட்ட ஊரில் அடுத்த நாள் மழை கொட்டத் தொடங்கிவிட்டது. 25 பேர் மட்டுமே கேட்க வந்திருந்தனர். திருவிளையாடற் புராணம் படித்தால் மழை வரும் என்ற நம்பிக்கை இருந்தது. மழை வராத ஊர்களுக்குக் கி.வா.ஜ.வை அழைத்துச் சென்று அங்கு படிக்க வைத்தனர்.

கி.வா.ஜ. இறைவன் மீது நம்பிக்கை கொண்டவர். பழுத்த சைவப் பெரியார். சோதிடத்தில் நம்பிக்கை கொள்ளாதவர். அவர் கலைமகள் ஆசிரியராக இருந்த காலத்தில் கலைமகளில் சோதிடம் பற்றி எதுவும் வெளிவரவில்லை. ஆனால் நான் இப்போது சோதிடத்துக்கும் இடம் கொடுக்கின்றேன். சிலேடையாகப் பேசுவதில். சமர்த்தர். ஈ. வெ. ராமசாமிப் பெரியாரோடு சேர்ந்து மது எதிர்ப்புப் பிரசாரம் செய்தவர். மதுவை எதிர்த்துக் கவிதைகளும் எழுதியிருக்கிறார். மனிதாபிமானத்தைச் செடி கொடிகளிடமும் காட்ட வேண்டுமென்பார். வீட்டுப் பூனை இறந்த போது அதன் வெற்றுடலை சமய அனுஷ்டானங்களோடு புதைத்த தமிழறிஞர்.

மகா மகோபாத்தியாய சாமிநாத ஐயர் அரும்பெரும் நன்மைகளை கி.வா.ஜ.வுக்கு செய்துள்ளார். ஒரு சமயம் அவரது வீட்டுக்குக் கி.வா.ஜ.சென்றபோது கேஸ் சம்பந்தமான கடிதங்கள் அடங்கிய கட்டொன்றைக் கொடுத்து, அதை சம்பந்தப்பட்ட வக்கீலிடம் கொடுக்கும்படி, சொன்னார். குருவின் பேச்சுக்கமைய சீடன் கட்டைத் தூக்கிக் கொண்டு வக்கீல் வீட்டுக்குச் சென்றார். குரலைக் காட்டி வீட்டுக்குள் சென்ற போது, இள மங்கை ஒருத்தி பாற்க கிண்ணத்தோடு அவர் முன் வந்தார். அவருக்குத் தர்ம சங்கடமாகி விட்டது. போன காரியத்தை முடித்துக் கொண்டு சாமிநாத ஐயர் வீட்டுக்குத் திரும்பினார்.

என்னை பெரிய சங்கடத்துக்குள்ளாக்கி விட்டீர்கள். அந்தப் பெண்ணின் முகம் எனது மனதில் இன்னமும் நிற்கிறதென்றார். அவளைத் தான் உனக்குப் பார்த்திருக்கிறேன் எனக் குரு பதில் சொன்னார். அதே அலமேலு அம்மையாரைத் தான் கி.வா.ஜ.தனது வாழ்க்கைத் துணைவியாராக்கிக் கொண்டார். கி.வா.ஜ.வின் பணிகள் சிறக்க இந்த அம்மையார் பெரிதும் உதவியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் நேசரான ஆந்திர மகானொருவரைச் சந்தித்தேன். தர்மசங்கடம் என்பதை விளக்கும்படி கேட்டேன். அந்தச் சுவாமி சிரித்தார். அதை விளக்கக் கதையொன்றைச் சொன்னார். முனிவர்கள், சந்நியாசிகள் ஒவ்வொரு ஊராகச் செல்ல வேண்டும். புதுப்புது மனிதர்களைச் சந்திக்க வேண்டும். மக்களை வாழ்த்த வேண்டும். ஒரு துறவி கிராமமொன்றுக்குப் போகிறார். மக்களை ஆசீர்வதிக்கிறார். நூறு பேர் கூடி நின்றனர். இதிலொருவர் கிளினிக் நடத்தும் வைத்தியர். அந்த 99 பேரையும் நலமாக வாழுங்கள் என ஆசீர்வதித்து விட்டு இந்தக் கிளினிக் நடத்தும் வைத்தியரை எப்படி ஆசீர்வதிப்பது? இது தான் தர்ம சங்கடமான நிலை என அந்த மகான் விளக்கம் சொன்னார்.

கி.வா.ஜ. தமிழ்த் தாத்தா உ.வே.சாமிநாத ஐயரின் வேண்டுகோளுக்காக ஊர் ஊராகச் சென்று தமிழ் மொழியின் பொக்கிஷங்களைக் கொண்டு வந்து உ.வே.சா. விடம் சேர்ப்பித்துள்ளார். திருநெல்வேலி மாவட்டத்தி லிருந்த லெட்சுமண முதலியாரிடம் ஓலைச் சுவடிகள் இருந்தன. அவை களைக் கொண்டு வந்து தரும்படி உ.வே.சா.சீடனிடம் சொன்னார். அதற்கமைய கி.வா.ஜ. திருநெல்வேலி சென்றார். உரிய விலாசத்தைப் பிடித்து வீட்டுக்காரரிடம் விடயத்தைச் சொன்ன போது அந்த ஓலைகளை மாமனார் எடுத்துச் சென்று விட்டதாகக் கூறினார். கி.வா.ஜ. வெறுங்கையோடு திரும்பினார். உ.வே.சா.வுக்கு மிகுந்த மனவருத்தம்! அதைக் கண்ட கி.வா.ஜ. மீண்டும் அவ்வீட்டுக்குச் சென்றார். வீட்டுக்காரர் சிவ பூஜையை முடித்துக் கொண்டு ஒரு மூட்டை ஓலைச் சுவடிகளோடு கி.வா.ஜ.விடம் வந்தார். கி.வா.ஜ.வுக்கு ஆச்சரியமாக இருந்தது. எப்படி வந்ததென விசாரித்தார். நான் போய் எடுத்து வந்தேன். என்னோடு மனஸ்தாபப்பட்டுச் சென்ற மாமனார் வீட்டுக்கு நானே சென்று எடுத்து வந்தேன். 'தமிழுக்காக மானங் கெடுவதில் தப்பில்லை' என்றார். கி.வா.ஜ.வுக்கு மகிழ்ச்சியோடு ஆச்சரியமாகவும் இருந்தது. உ.வே.சாமிநாத ஐயருக்குத் 'தமிழ் தாத்தா' என்ற கௌரவப் பெயரைக் கொடுத்தவர் 'கல்கி' கிருஷ்ணமூர்த்தி. உ.வே.சாவுக்கு ஆசான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை. வெங்கட்ராமன் என்றே பெற்றோர் உ.வே.சாவுக்குப் பெயரிட்டனர். ஆனால் சாமா என அழைத்தனர். சாமா எனத் தானே அழைக்கின்றனர், ஆனபடியால் சாமிநாதன் எனப் பெயரை மாற்றினால் பொருத்தமாக இருக்கும் என மீனாட்சி சுந்தரம்பிள்ளை விருப்பம் தெரிவித்தார். அதற்கமையவே சாமிநாதன் என்ற பெயர் வந்தது. மகாத்மா காந்தி சென்னைக்கு வந்த போது யார் வரவேற்புரையைத் தயாரிக்க வேண்டுமென்ற பிரச்சினை எழுந்தது. காந்திஜிக்கு ஹிந்தி மொழி தான் தெரியுமென்ற அபிப்பிராயம் அப்போது பரவலாக இருந்தது. ஆனால் காந்திஜிக்குத் தமிழில் பேசினாலும் விளங்கும். வரவேற்புரையை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யார்? மொழி பெயர்ப்பது, அதை யார் படிப்பது என்ற பிரச்சினைகளும் எழுந்தன. கி.வா.ஜ.தான் அதை படிக்க வேண்டுமென உ.வே.சா.சொன்னார். கூட்டத்தில் கி.வா.ஜ. தனது குருநாதர் உ.வே.சா. அருகே அமர்ந்திருந்தார். உ.வே.சா.வுக்கு அருகே இருப்பவர் யார்? என காந்திஜி ராஜகோபாலாச்சாரி (ராஜாஜி) யாரிடம் விசாரித்த போது, ராஜாஜி உங்களுக்கு மகா தேவர் தேசாய் எப்படியோ அப்படியே அந்தப் பையன் உ.வே.சா.வுக்கு எனச் சொன்னார்.

ஊர் ஊராகச் சென்று கி.வா.ஜ.நாட்டுப்புறப் பாடல்களை, பழமொழிகளைத் தொகுத்துள்ளர். உ.வே.சா.வைப் போல் தேடித் தேடிச் சேகரித்தார். திருக்குறளுக்குக் கி.வா.ஜ.எழுதிய உரைகள் உலகப் பிரசித்தமானவை. அவர் இலங்கைக்குப் பல முறை வந்திருக்கிறார். அவரது மணிவிழா இலங்கையிலும் கொண்டாடப்பட்டது. இலங்கைத் தமிழர்கள் அவரை நன்கு மதிக்கின்றனர்.

*ஆழ்வாப்பிள்ளை கந்தசாமி (பொதுச்செயலர், கொழும்புத் தமிழ்ச்சங்கம்) நன்றியுரை கூறினார். கொழும்புத் தமிழ்ச் சங்கக் கீதம் இசைக்கப்பட்டு நிகழ்வு நிறைவு செய்யப்பட்டது.*

- ஜுன் 2013

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 56

## மூத்த முற்போக்கு எழுத்தாளர் கௌரவிப்பு

ஒடுக்கப்பட்ட, நலிந்த அடிமட்ட மக்கள் பிரச்சினைகளை ஓங்கி ஒலிப்பது ஈழத்து முற்போக்கு இலக்கியம். 'ஒரே தேசியம்' மொழி இன சமத்துவம் என்பவற்றை அடிநாதமாக்கி மூன்று தசாப்தங்களாக இலக்கியப் படைப்புகள் குவிந்தன. இந்த எழுச்சியின் நாயகர்களாக விளங்கிய வாழும் முற்போக்குப் படைப்பாளிகளில் ஒன்பது இலக்கிய வாதிகளை இனங்கண்டு இலங்கை முற்போக்குக் கலை இலக்கிய மன்றம் பாராட்டிக் கௌரவித்தது. இந்நிழ்வு 30.06.2013 ஆம் திகதி கொழும்புத் தமிழ்ச் சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில் பெருந்திரளான இலக்கியவாதிகள் மத்தியில் நடைபெற்றது. 'வாழும் மூத்த முற்போக்குப் படைப்பாளிகள்' என்ற நூலும் இவ்வைபவத்தில் வெளியிடப்பட்டது. கலாநிதி செல்வி திருச்சந்திரன் தலைமை தாங்கினார்.

### தலைமை உரை: கலாநிதி செல்வி திருச்சந்திரன்

கொழும்பில் பூ மாலைகள் பொன்னாடைகள் மலிந்து விட்ட இவ்வேளையில் வரலாற்று முக்கியத்துவம் பெற்ற இந்நிகழ்வை நடாத்துகின்றோம். தகுதி தரம் மிக்கோரைக் கௌரவிக்க வேண்டும். இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்துக்கு வரலாறு உண்டு. முற்போக்கு இலக்கிய முன்னோடிகளில் ஒருவரான கே.கணேஷ் தனது பணிகளில் மலையகத்தை ஏனைய பிரதேசங்களோடு இணைத்தார். கலை 'இலக்கியங்கள் சமுதாய மாற்றத்தை ஏற்படுத்துபவைகளாக இருக்க வேண்டுமென்பதை' முற்போக்கு இலக்கியம் வற்புறுத்துகின்றது. மார்க்சியத்தை பரப்புவதென்றில்லாமல் அடிமட்ட மக்களின் விடுதலையையும் மையப்படுத்துவது முற்போக்கிலக்கியமாகும். எமது தமிழீழ மக்களுக்கு இடது சாரிக் கொள்கைகளில் நாட்டம் கிடையாது. இந்நிலையை மாற்ற முற்போக்கு இலக்கியம் பெரும் பங்கு வகிக்கின்றது. ஆனால் பெண்ணியத்துக்கு அந்தளவுக்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லை. கல்லெறியப்படும் முற்போக்காளர்கள் மார்க்சியத்தை முன்னெடுத்திருக்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பாராட்டுரைகள்:**
**பேராசிரியர் சபா ஜெயராசா: 'ஜனாப் முஹம்மது சமீம்'**

பெரிய பிரித்தானியாவிலேற்பட்ட கைத்தொழில் புரட்சியின் பின்னரே சோசலிசக் கருத்தியல் உருவாக்கம் பெற்றது. இது தொழிலாளர், பெண்கள் வாழ்வை முன்னேற்றுவதாக இருந்தது. ஆனால் இலங்கையில் வேறு படுத்தப்பட்டு மார்க்சியத் தளம் உருவாக்கப்பட்டது. விளிம்பு நிலை மக்களின் பேச்சு வழக்கைச் சோசலிச வாதிகள் இலக்கியமாக்கினர். அம்மக்கள் குழாத்திலிருந்தும் எழுத்தாளர்கள் உருவாகினர். ஒடுக்கப்பட்ட மக்களே வாய்மொழி இலக்கியங்களைப் பாதுகாத்திருக்கின்றனர். முற்போக்கு இலக்கியம் சாதியத்தை எதிர்த்துப் போராடியது. நீர்வை பொன்னையன் போன்றோர் அனுபவங்களை இலக்கியவெளிக்கு கொண்டு வந்திருக்கின்றனர். அழகியல் வர்க்க சார்புடையது.

பேராசிரியர் க.கைலாசபதி, பேராசிரியர் கா.சிவத்தம்பி, முஹம்மது சமீம் முற்போக்கு இலக்கியத்தில் மிகவும் முக்கியமானவர்கள். மூவருக்கும் மார்க்சியப் பின்னணி இருந்தது. இருந்தும் மூவரிடமும் ஆய்வணுகலில் வித்தியாசமிருந்தது. தேசிய நிலைப்பாட்டைச் சமீம் மார்க்சியத்தோடு வைத்துப் பார்த்தார். இலங்கைத் தமிழ் முஸ்லிம் வரலாற்றைச் சிறப்பாக அணுகினார். தனது பட்டத்திற்கு வரலாற்றைச் சிறப்புப் பாடமாக எடுத்தவர் சமீம். ஊகமற்ற நிலையில் ஆதாரங்களோடு வரலாற்றை எழுதினார். கன்னங்கராவின் இலவசக் கல்வித் திட்டம் அடிமட்ட மக்களுக்குப் பயன்படவில்லை. தாய்மொழிக் கல்விக்குப் பின்னரே இம்மக்கள் கல்வியைப் பெற்றனர். சமீம் படைத்த வரலாற்று நூல் மிகமுக்கியமானது. பல ஆளுமைகளைப் பற்றியெல்லாம் எழுதியுள்ளார். கவிஞர் சில்லையூர் செல்வராசன் பற்றி எழுதினார். பேச்சு மொழியில் செல்வராசனும் மஹாகவியும் வேறுபட்டிருந்ததைச் சுட்டிக்காட்டினார். மஹாகவி நடுத்தர வர்க்கப் பேச்சு மொழிக்கு முன்னுரிமை கொடுக்க, செல்வராசன் தாழ்த்தப் பட்ட மக்களின் பேச்சு வழக்கை முக்கியப்படுத்தியதாக சமீம் வெளிப்படுத்தினார்.

**பேராசிரியர் எஸ்.தில்லைநாதன்:**
**'மல்லிகை ஆசிரியர் டொமினிக் ஜீவா'**

டொமினிக் ஜீவா பற்றி நிறைய எழுதப்பட்டுள்ளது. அவரொரு திறந்த புத்தகம். ஏ.ஜே.கனகரட்னவுக்கும் நந்திக்கும், ஜீவா பற்றி நன்கு தெரியும். முற்போக்கு இயக்கத்தின் முன்னணியில் நின்று ஜீவா பதாகை தூக்கிச் சென்றவர். இலக்கியத்தை ஒரு கருவியாகப் பாவித்து மக்களுள் செல்ல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முயன்றவர். அநீதிகள் அடக்குமுறைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்துக் கோபித்து ஆத்திரப்பட்டார். யாழ்ப்பாணத்தில் சாதிப் பாகுபாடு மிக மோசமாக இருந்தது. பாடசாலைகளில் எத்தனையோ வழிகளில் தாழ்த்தப்பட்ட சாதி மாணவர்கள் அக்காலத்தில் புறக்கணிக்கப்பட்டனர். 'பாதகம் செய்தோரைக் கண்டால் நாம் பயம் கொள்ளலாகாது பாப்பா! மோதி மிதித்து விடு பாப்பா! அவர் முகத்தில் உமிழ்ந்து விடு பாப்பா!' என மகாகவி சுப்பிரமணிய பாரதியார் கவிதையில் பாடியதை, ஜீவா சிறுகதையில் சொன்னார். சொற்பொழிவுகளில் பேசினார். கலை கலைக்காக என்ற கருத்தியலை ஏற்றவர்கள் முற்போக்கை ஏற்கவில்லை. நடைமுறைக்கு எதிராக இருப்பதை பெரும்பாலான மக்கள் ஏற்பதில்லை. ஜீவாவின் 'மல்லிகை' சஞ்சிகையில் நவீன புனைகதை இலக்கியம் பொது மக்கள் சார்ந்த மொழியில் வளர்ந்தது. ஈழத்து முற்போக்கு இலக்கிய இயக்கத்தின் தேசிய இலக்கியப் பரம்பலைத் தமிழர் தான் செய்தனர். ஜீவா சைக்கிளில் ஓடித் திரிந்து பரப்பினார். பாப்ளோ நெரூடா என்ற அறிஞர் இலக்கியம் எல்லாருக்கும் சொந்தம், யாருக்கு எது தேவையோ அதை அறிந்து கொடுக்க வேண்டும், மக்கள் விருப்பு வெறுப்புகளை விளங்கி எழுத வேண்டுமெனக் கூறியுள்ளார்.

## பிரபல முற்போக்கு எழுத்தாளர் திக்குவல்ல கமால்: 'ஜனாப் ஏ. இக்பால்'

எனக்கு ஆதர்சக் குருவாக இருப்பவர் கவிஞர் இக்பால். அக்கரைப்பற்றைச் சேர்ந்தவர். தற்போது தர்கா நகரில் வசிக்கிறார். எனக்கு மல்லிகை சஞ்சிகையை அறிமுகம் செய்து வைத்தவர். ஆசிரியராக, விரிவுரையாளராக தமிழ்ப் பாடநூல் உயர் ஆலோசனைச் சபை உறுப்பினராகப் பல் பரிமாணங்களில் மக்கள் பணி செய்தவர். இவரது இல்லத்தில் தான் சில்லையூர் செல்வராஜன் போன்ற மூத்த முற்போக்கு இலக்கியவாதிகளைச் சந்தித்தேன்.

இக்பாலொரு தகவல் களஞ்சியம். எதையும் அதிரடியாகச் சொல்வார். அக்கரைப்பற்றில் முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தை ஏற்படுத்தி நடாத்தினார். தீவிர முற்போக்கு இலக்கியவாதிகளான பிரேம்ஜி ஞானசுந்தரம், எச்.எம்.பி.முஹைதீன், சில்லையூர் செல்வராசன், கா.சிவத்தம்பி அக்காலத்தில் அக்கரைப்பற்றுக்கு சென்ற போது, இக்பாலின் இலக்கியப் பணியைப் பார்த்து வியந்ததுண்டு. இதே காலகட்டத்தில் கல்முனையில் நீலாவணன், எஸ்.பொன்னுத்துரை (எஸ். பொ.) எம். ஏ. ரஹுமான், ஆகியோர் சேர்ந்து கல்முனை எழுத்தாளர் சங்கத்தை நடாத்தினர். ஆனால் இக்பால் இச்சங்கத்துக்கு எவ்விதமான பங்களிப்புகளையும் செய்யவில்லை. எம்.ஏ.நுஃமான் கல்முனை எழுத்தாளர் சங்கத்தோடு இணைந்து நின்றார். இரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கங்களுக்குமிடையில் பலத்த போட்டி இருந்தது. இக்பாலை 'வெற்று டப்பா' என மலினப்படுத்தியும் நுஃமான் எழுதினார்.

ஆனால் பிற்காலத்தில் இக்பாலைச் சரியாகக் கணிப்பிட்டு நுஃமான் கருத்து வெளியிட்டார். ஆனால் இந்த இருவருமே தமிழிலக்கியப் பரப்பில் முக்கியமான ஆளுமைகள். 1970 இல் எம்.ஏ.நுஃமானின் நடவடிக்கைகளில் திருப்பம் ஏற்பட்டது. அவர் இலங்கை முற்போக்கு அணியில் சேர்ந்தார். அக்காலத்தில் சமூகத்துக்குப் பொருத்தமானதை எடுத்தாண்ட 'இன்சான்' ஏட்டில் இக்பால் எழுதினார். தனது எழுத்துக்களாலும் சிந்தனையாலும் புதிய திருப்பத்தை உருவாக்கினார். புதிய இலக்கியப் பரம்பரையொன்று உருவாகியது.

**திருமதி.எம்.எஸ்.தேவகௌரி: (விரிவுரையாளர் ஊடகத்துறை) 'காவலூர் எஸ். ராஜதுரை'**

காவலூர் எஸ். ராஜதுரையின் முதல் சிறுகதை வெளிவந்த போது நான் பிறக்கவில்லை. இவர் முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் மூத்த உறுப்பினர். யாழ்ப்பாணத்திலுள்ள ஊர்காவற்றுறையில் கரம்பொன் கிராமத்தில் 1931 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 13ஆம் திகதி பிறந்தார். வானொலி நாடகம், படைப்பிலக்கியம் என்பவற்றில் சிறப்பாளுமை பெற்றவர். ஈழத்துக் கலை இலக்கியங்கள் சிங்களத் தரத்திற்கு மேம்பட வேண்டும் எனப்பாடுபட்டவர். ஈழத்து இலக்கியத்தின் மூன்றாவது தலைமுறையைச் சார்ந்தவர். இவர் தீவிரமாக இலக்கியம் பேசவில்லை, எழுதவில்லை என்ற பேச்சுகளுமுண்டு!

இதைப் பேராசிரியர் கா.சிவத்தம்பியும் சொல்லியுள்ளர். பெரும்பாலும் நகர வாழ்வை மையமாகக் கொண்ட படைப்புகளையே படைத்துள்ளார். 'குழந்தை ஒரு தெய்வம்', 'ஒரு வகை உறவு' என்பன இவரது சிறுகதைத் தொகுப்புகளாகும். இவர் புனைந்த 'தேவ கிருபையை முன்னிட்டு வாழும்' என்ற சிறுகதை இலங்கைத் தமிழ்க் கல்விப் பாடத்திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. இந்தியிலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. மூத்த முற்போக்கு இலக்கியவாதி அ.ந.கந்தசாமியின் 'மதமாற்றம்' என்ற நாடகத்தை மேடையேற்றினார். 'பொன்மணி' ஈழத்துச் சினிமாப் படத்துக்குத் திரைக்கதை வசனம் எழுதினார். வானொலியில் இவரது பங்களிப்புகள் விசாலமானவை. வானொலி நிகழ்ச்சிகளில் ஒன்றான 'கலைக்கோலம்' நிகழ்ச்சியில் பங்கு பற்றிக் காத்திரமான சினிமா, நாடக நூல் விமர்சனங்களை செய்தார். பின் இந்நிகழ்ச்சியைத் தானே பொறுப்பெடுத்து நடாத்திய போது விமர்சனம் வளர்ச்சி பெறத் தூண்டுதல் செய்தார். ஒலி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊடகத்தை கலை இலக்கியப் பணிக்கு கையாளும் வாய்ப்பு ராஜதுரைக்குக் கிடைத்தது. அதைத் திறம்பட செய்து காட்டினார்.

வானொலி நடிகர்களை இயல்பாகச் சாதாரணமாகப் பேசும்படி பயிற்சி கொடுத்தார். உச்சரிப்புகளில் கவனமெடுத்தார். பத்மினி என்ற சொல்லை உச்சரிக்க நடிகர் சங்கடப்பட்ட போது அச்சொல்லைப் பிரதியிலிருந்து நீக்கியதாக அறியமுடிகின்றது. இதன் மூலம் வானொலியில் இயல்புத் தன்மைக்கு முக்கியத்துவம் கொடுத்தார். வானொலிப் பேசு மொழியை ஜனரஞ்சகப் படுத்தினார்.

வசீகரா என்ற விளம்பர நிறுவனத்தை நடாத்தினார். பெண்களையும் விளம்பரத்தில் ஈடுபடத் தூண்டினார்.

ஈழத்து இலக்கியத்துக்கு அத்திவாரமிட்ட அனைத்து முற்போக்கு எழுத்தாளரையும் இப்படிப் பரம்பல் செய்வது கணிப்புக்குரிய பணியாகும்.

## வைத்திய கலாநிதி எம்.கே.முருகானந்தம்:
## 'நீர்வை பொன்னையன்'

இப்போ பலர் இலக்கியம் படைக்கின்றனர். சிலர் தமது அடையாளத்தை பதிப்பதற்காக எழுதுகின்றார்கள். வேறு சிலர் எல்லோரும் எழுதுகிறார்களே நாமும் எழுதுவோம் என்ற முனைப்போடு எழுதுகின்றார்கள். தாமேன் எழுதுகின்றார்கள் எனத் தெரியாமல் எழுதிக் கொண்டிருப்பவர்களும் எம்மிடையே உள்ளனர். ஆனால் நீர்வை பொன்னையன் போன்ற முற்போக்கு எழுத்தாளர்கள் தெளிந்த நோக்கோடு, இலக்கோடு தான் எழுதுகின்றனர். நீர்வை பொன்னையன் தனது எழுத்துப் பயணத்தில் பல கண்டங்களைத் தாண்டியவர். ஈழத்து முற்போக்கு இலக்கியத்துக்கு அத்திவாரமிட்ட பல இலக்கியவாதிகள் தமது காலத்தால் அழியாத படைப்புகளால் இன்று மக்கள் நினைவுகளில் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். நீர்வை பொன்னையன் இன்றும் தான் வரித்துக் கொண்ட கொள்கையில் தளர்ச்சியின்றி வாழ்கிறார். மாணவனாக இருந்த காலத்தில் அவரது எழுத்துகளைப் படித்தேன்.

யாழ்ப்பாணம் நீர்வேலி ஒல்லைக்குறிச்சிக் கிராமத்தில் 1930.03.24 ஆம் திகதி பிறந்தார். ஆரம்பக் கல்வியை அத்தியார் இந்துக் கல்லூரியில் பெற்றார். கல்கத்தாவுக்குப் படிக்கச் சென்று, முற்போக்கு மார்க்சியராக மாறினார். இலங்கை கொம்யூனிஸ்ட் கட்சியில் முழுநேர ஊழியராகப் பணி செய்தார். புரட்சி முனைப்போடு இயங்கினார். யாழ்ப்பாணத்தில் நடாத்தப்பட்ட தீண்டாமை ஒழிப்புப் போராட்டத்தில் நேரில் பங்கு பற்றினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது சொந்த நன்மைக்காக கொள்கையை விற்காதவர். ரஷ்யாவில் அச்சுக் கலை படிக்கக் கிடைத்த வாய்ப்பைத் துறந்தார். அதேபோல் பீஜிங் வானொலியில் பணியாற்றக் கிடைத்த சந்தர்ப்பத்தையும் ஏற்காது விட்டார்.

படைப்புகளில் உருவ நேர்த்தியை வற்புறுத்தினார். புதிய மாற்று வடிவங்களைத் தனது படைப்புகளில் தந்து வருகின்றார். ஆங்கில இலக்கியங்களை வாசிப்பார். 1960 இலிருந்து இன்று வரை சிறுகதை எழுதிவரும் இவர் 100 சிறுகதைகள் மட்டுமே எழுதியுள்ளார். 'மேடும் பள்ளமும்' இவரது முதலாவது சிறுகதைத் தொகுப்பாகும். மொத்தம் 9 சிறுகதைத் தொகுப்புகள் வெளிவந்துள்ளன. கலைச்செல்வி, தமிழன், வீரகேசரி, தினக்குரல் ஆகிய ஏடுகளில் இவரது சிறுகதைகள் வெளிவந்துள்ளன.

எழுத்துக்கு அப்பால் வெவ்வேறு செயற்பாடுகளிலும் நீர்வை பொன்னையனின் பணி செறிந்துள்ளது. வங்காளத்தில் புரட்சி மாணவர் அமைப்பு, இந்திய கலாசார மன்றம் என்பவற்றிலும் ஈடுபாடு காட்டினார். 'வசந்தம்' சஞ்சிகையின் ஆசிரியர் குழு, 'விபவி' அமைப்பு ஆகியவற்றில் உழைத்த நீர்வை பொன்னையன், இப்போ இலங்கை முற்போக்கு கலை இலக்கிய மன்றத்தின் இயக்கத்தில் பெரும் பங்காற்றுகிறார். இம்மன்றம் தோழர் மு.கார்த்திகேசன், பேராசிரியர் க.கைலாசபதி, கே.கணேஷ் போன்றோரது நினைவுச் சொற்பொழிவுகளை ஏற்பாடு செய்து நடாத்திவருகின்றது.

இந்த 83 வயதிலும், நீர்வை பொன்னையனின் மனதில் நடுக்கம் இல்லை. பட்டம் பரிசுகளை விரும்பாத இவர் தனது படைப்புகளை மற்றவர்களிடம் காட்டி ஆலோசனை கேட்டே படைக்கிறார்.

**பேராசிரியர் செ.யோகராசா:**
**'ஜனாப் எம்.ஏ.நுஃமான்'**

பேராசிரியர் எம்.ஏ.நுஃமான் படைப்பாளி, விமர்சகர், ஆய்வாளர் என்ற பல்பரிமாணத் தமிழ் இலக்கியப் பணியாளர். தனித்துவமானவர். முற்போக்காளரில் சற்று வித்தியாசமான ஆளுமை. முற்போக்கை விமர்சித்தவர். கவிதையில் தனது தமிழ் இலக்கியப் பணியை ஆரம்பித்தார். வித்தியாசமான வெளிப்பாட்டு முறையில் கவிதைகளைக் கொண்டு வந்தார். நாடகப் பாணி தெரிந்தது. கவிஞர் சேரன், சோலைக்கிளிக்குள் கவனம் இருக்கவில்லை. மார்க்சிய விமர்சனத்தில் முக்கியமானவர். மார்க்சியத்தை ஏற்று அதன் குறைபாடுகளை விமர்சித்தவர். இளம் முற்போக்கு அணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரை ஏற்றது. தமிழகத்து விமர்சகர் வெங்கட் சாமிநாதனுக்கு எதிராக இவர் வைத்த கருத்துகள் முக்கியமானவை. ஆதார பூர்வமாக மார்க்சியத்தை விமர்சித்தார். இத்தகைய விமர்சனங்கள் தமிழிலக்கியப் பரப்பில் குறைவு. நுஃமான் புதிய சிந்தனைகளையும் தந்தார். இவரது நூல்கள் தமிழகத்திலும் வெளியிடப்பட்டுள்ளன.

## விமர்சகர் லெனின் மதிவானம் : 'செ.கணேசலிங்கன்'

இலங்கை முற்போக்கு எழுத்தாளர் அணியில், அதிக படைப்பிலக்கிய நூல்களை வெளியிட்டவர் பிரபல நாவலாசிரியர் செ.கணேசலிங்கன். 47 நாவல்களையும் 7 சிறுகதைத் தொகுப்புகளையும் 18 கட்டுரைத் தொகுப்புகளையும் வெளியிட்டுள்ளார். 1980 களில் எனது தந்தையாரோடு தொடர்பிருந்தது. பேராசிரியர் க.கைலாசபதியின் எழுத்துக்களை என் அப்பா தரிசித்தது செ.கணேசலிங்கன் மூலமாகத்தான். 1960 இல் திருமணம் செய்து கொண்டவர். உரும்பிராயில் ஒரு விவசாயக் குடும்பத்தில் பிறந்தவர். அவரது எழுத்துகள் நாகரிகமானவை.

சைவப் பாரம்பரியத்தில் பிறந்த கணேசலிங்கனுக்கு அக்காலத்தில் காந்திய நாட்டம் இருந்தது. தோழர் மு.கார்த்திகேசன் மார்க்சியப் பாதைக்கு இவரைத் திருப்பினார். 1950-1981 வரை அரச பணியில் இருந்தார். தொடர்ந்தும் எழுதிக் கொண்டே இருக்கிறார். கொம்யூனிஸ்ட் கட்சிக்குள் உடைவு ஏற்பட்ட போது சீனச்சார்பைக் கணேசலிங்கன் எடுத்தார். இளைஞர் அணியில் ஈடுபாடு கொண்டிருந்தார். செ.கணேசலிங்கன் அவரது பிள்ளைகளுக்கு எழுதிய கடிதங்கள் மானுடத்தின் பரந்த பக்கங்களைத் தொடுபவையாக இருந்தன. அவரது 'நீண்ட பயணம்' சாதியம் பற்றிய நாவல். இது யதார்த்த நாவல்களுக்கு ஆரம்பமாக இருந்தது. இவரது 'அந்நிய மனிதர்' பெண்கள் கொடுமைகளை அடிநாதமாகக் கொண்டது. 'சடங்கு' இரு குடும்பங்களைப் பற்றியது. இனவன் முறை, புலம்பெயர் வாழ்க்கை, ஈழத்தமிழ் பேசும் மக்கள் படும்வதைகள் என்பனவற்றையும் தனது புனைவுகளில் பதிவு செய்துள்ளார். மலையகத்தில் வட்டிக்குப் பணம் கொடுப்பது பற்றியும் எழுதியுள்ளார். பரந்து பட்ட தளங்கள் இவரது படைப்புகளில் காணப்படுகின்றன. சமூகத்தைப் பற்றி எழுதும் போது சமூகத்துக்குரியவராக மாறுகிறார். பெண் நிலைப்பாடுகளை எழுதும் போது அதற்கு மாறியே எழுதும் தன்மையைக் காண முடிகின்றது.

செ.கணேசலிங்கன் பற்றிய பதிவுகள் மிகக் குறைவாகவே காணப்படு கின்றன. 5 பேட்டிகளுக்கு மேல் இதுவரை வந்திருக்காது, மிகக் குறைவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான் வரித்துக் கொண்ட கொள்கையை இன்னமும் கைவிடாது வாழ்கிறார். 85 ஆவது (1928.03.09) அகவையிலும் இலக்கியப் பணி செய்து கொண்டு வாழ்கிறார்.

## கவிஞர் மேமன்கவி:
## 'பிரேம்ஜி ஞானசுந்தரம்'

'ஞானா' வெனத் தோழமையோடு நண்பர்களால் அழைக்கப்படும் பிரேம்ஜி ஞானசுந்தரத்தோடு எனக்கு கால் நூற்றாண்டுக்கும் மேலான தொடர்புண்டு. இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தில் செயலாளராக இருந்து அதன் செயற்பாடுகளை வடிவமைத்தார். சமூகம், அரசியல், இலக்கியம் என்ற பின்புலங்களில் அவர் செயற்பாடுகள் அமைந்திருந்தன. முகாமைத்துவப் பண்பு மாற்றுக் கருத்துகளை ஏற்கும் விதம் தனித்துவமானது. தகுந்தவர்களைத் தேடிப் பிடித்து பணிகளை ஒப்படைத்தார். அர்ப்பணிப்போடு, பொதுப் பணி செய்து பலரை உருவாக்கினார். இயக்கச் செயற்பாட்டில் ஜனநாயகத்தைக் கையாண்டார்.

கண்டியில் நடந்த தேசிய சாகித்திய விழாவில் பிரேம்ஜி சமர்ப்பித்த அறிக்கை இன்றும் பொருத்தமாக உள்ளது. மாற்றுக் கருத்துகளை அவர் எதிர்கொண்ட விதம் அலாதியானது. புகலிடச் சூழலிலும் - இன்றும் பிரேம்ஜி தடம் புரளாது வாழ்கிறார்.

## கலாநிதி ந. இரவீந்திரன்:
## 'என். கே. ரகுநாதன்'

தமது சுக போகத்தைப் பெருக்க முயன்றோரைப் பிரயோகவாதிகள் தூக்கிப் பிடித்தனர். மக்களுக்கான சாதனைகளைச் செய்தோரைக் கணக்கெடுக்காது விட்டனர். பிரயோக வாதிகள் இன்று எல்லாவற்றையும் செய்து கொண்டிருக்கின்றனர்.

தன்னடக்கமான முற்போக்கு வாதிகளை மக்கள் முன் எவரும் கொண்டு வருவதில்லை. இதொரு முக்கியமான நிகழ்வு. முற்போக்கு அணிகள் கடந்த காலத்தில் பிளவுண்டு உடைந்தன. தங்களுக்குள் தாங்களே மோதின. நாமே சரியென்ற போக்கு அவர்களிடமிருந்தது. அதனால் ஏற்பட்ட அவலம் இன்று முற்போக்குச் சிந்தனையாளர்களால் உணரக் கூடியதாக உள்ளது. ஒரு மறுசீரமைப்புக்கான தொடக்க நிகழ்வாக இந்த நிகழ்வை எடுத்துக் கொள்ளலாம். முற்போக்குச் சிந்தனையோடு வாழ்ந்து கொண்டிருக்கும் முற்போக்குத் தீவிர செயற்பாட்டாளர்கள் 9 பேர் இன்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாராட்டப்படுகின்றார்கள். புதிய செல்நெறி ஒன்று இன்று தொடக்கி வைக்கப்பட்டுள்ளது.

என்.கே.ரகுநாதனுக்கும் எனக்குமிடையிலான தொடர்பு எழுபதுகளில் தான் தொடங்கியது. அவர்களது புரட்சிகர முற்போக்கு அணியில் நானும் சேர்ந்து இயங்கினேன். ஆரம்பத்தில் நெருக்கமாக இருந்த கே.டானியலும் ரகுநாதனும் பின்னர் பிரிந்தனர். என்.கே.ரகுநாதன் சாதியம் பற்றித்தான் அதிகம் பேசியுள்ளார். டானியல் மீது கடுமையான விமர்சனத்தை வைத்தார். ஈழத்து முற்போக்காளர்கள் சாதியை எடுத்தது போல் இந்தியாவில் செய்யப்படவில்லை. என்.கே.ரகுநாதன் முதல் சிறுகதை 'வெளியே நல்ல நிலவு' என்றதை ஈழத்துப் பத்திரிகையொன்றுக்கு அனுப்பினார். அது பிரசுரிக்கப்படவில்லை. பின் அ.ந.கந்தசாமி ஆசிரியராக இருந்த 'சுதந்திரன்' பத்திரிகைக்கு அனுப்பினார்.

சாதியத்தைச் சாடும் அற்புதமான சிறுகதையென விதந்துரைத்து அ.ந.கந்தசாமி தனது பத்திரிகையில் பிரசுரித்தார். இது பின்னர் 'நிலவிலே பேசுவோம்.' எனத் தலைப்பு மாற்றப்பட்டு முற்போக்கு சிந்தனையாளர் மத்தியில் பிரபலமானது. மது ஒழிப்பை செய்ய முற்பட்ட காந்தியவாதி, சாதி ஒழிப்பில் வக்கிரமாக இருந்ததை இச்சிறுகதை புட்டுக் காட்டுகிறது. இந்தக் காந்தியவாதியின் நோக்கம் மது ஒழிப்பல்ல. சாதியை வளர்ப்பது தான் அவர் உள்நோக்கம். இச்சிறுகதை தற்போது தரம் 11 தமிழ் பாடநூலில் இளைய சந்ததியினருக்குக் கற்பிக்கப்படுகிறது. பெண்விடுதலைக்கான காத்திரமான கருத்துகளை முற்போக்காளர்கள் மக்கள் முன் கொண்டு வந்தனர்.

*நீர்வை பொன்னையன், ஜனாப் முஹம்மது சமீம், கவிஞர் ஏ.இக்பால் ஆகியோர் இந்நிகழ்வுக்கு நேரில் வருகை தந்து கௌரவத்தைப் பெற்று மகிழ்ச்சியூட்டினர். இந்திய முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தில் தலைவராக இருந்த புகழ் பெற்ற எழுத்தாளர் முன்சி பிரேம் சந்த் படைத்த நாவலான 'கோதானம்' இன் தமிழாக்க நூல் இவர்களுக்கு வழங்கப்பட்டது.*

*இலங்கை முற்போக்குக் கலை இலக்கிய மன்றத்துடன் இணைந்து குமரன் புத்தக இல்லம் வெளியிட்ட 'வாழும் மூத்த முற்போக்கு படைப்பாளிகள்' என்ற நூலும் இந்நிகழ்வில் வெளியிடப்பட்டது. நூல் கட்டுரைகளைக் க.குமரன் தொகுத்துள்ளார்.*

*நன்றியுரையை கவிஞை சுமதி குகதாசன் நிகழ்த்தினார்.*

-12/13.07.2013

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 57

## ‘குதிரைகளும் பறக்கும்’ விமர்சன அரங்கு

ஈழத்து மலையகப் புனைவிலக்கிய எடுகோளில் நவீனத்துவத்தின் ஊடுருவல் செறிவடைவதை அவதானிக்க முடிகின்றது. இதற்கு அடித்தளமிடுபவர்களாகப் புதிய தலைமுறை எழுத்தாளர்களான சிவனு மனோகரன், பதுளை சேனாதிராஜா, பிரமிளா பிரதீபன் ஆகியோரைச் சுட்டலாம். அண்மையில் வெளிவந்துள்ள பதுளை சேனாதிராஜாவின் ‘குதிரைகளும் பறக்கும்’ என்ற சிறுகதைத் தொகுப்பும் இதை எண்பிப்பதாகவே காணப்படுகிறது. இந்நூலின் விமர்சன அரங்கு 16.06.2013 ஆம் திகதி கொழும்புத் தமிழ்ச் சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில் நடைபெற்றது. மலையகப் புனைவிலக்கியம் இலக்கியப் பரப்பில் முன்நகரப் பெரும் பங்காற்றியவர்களுள் ஒருவரான தெளிவத்தை ஜோசப் தலைமை தாங்கினார்.

நீதித்துறை, கலை - இலக்கிய, ஊடகத்துறைப் பிரமுகர்கள் மங்கள விளக்கேற்றினர். வரவேற்புரையை மல்லிகைப் பூச்சந்தி திலகர் நிகழ்த்தினார்.

**தலைமையுரை:**

**பிரபல எழுத்தாளர் தெளிவத்தை ஜோசப்**

பதுளை சேனாதிராஜா குதிரைகள் பறக்கும் சிறுகதைத் தொகுதிச் சிறுகதைகளில் என்ன சொல்ல வருகிறாரென்பதை இந்த விமர்சன அரங்கு ஆராயவுள்ளது. படைப்பு மிகவும் முக்கியமானது. ‘ஞானரதம்’ சஞ்சிகையில் ஜெயகாந்தன் படைப்பேதான் முக்கியமெனக் கூறியுள்ளார். எழுத்தாளனைப் படைப்பின் மூலமாகவே விமர்சனம் செய்கின்றனர். நிறையப் பேர் சிறுகதை எழுதுவது இலேசானதென நினைக்கின்றனர். அப்படியல்ல. சிறுகதை படைப்பதென்பது பிரசவ வேதனைக்கு ஒப்பானதென ஒப்பிடுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளத்திலிருந்து தான் படைப்பு மேலெழ வேண்டும். எனவே சிறுகதை எழுதுவது இலேசானதல்ல. சேனாதிராஜாவின் சிறுகதைகளை வாசித்த போது சந்தோஷமாக இருந்தது. நிர்ப்பந்தமான வாசிப்பு இருக்கவில்லை. களைப்பேற்படவில்லை. வார்த்தைகள் பொருத்தமாக ஓடி வந்து விழுந்துள்ளன. ஒவ்வொரு கதையிலும் ஒவ்வொரு செய்தியுண்டு. கதையை அநுபவ பூர்வமாகச் சொல்ல வேண்டும். மலையக எழுத்தாளர்கள் பல்துறை சார்ந்தவர்களாக இருக்க வேண்டும். மக்களது வாழ்நிலைகளோடு சேர்ந்து வாழ வேண்டும். வைத்தியர்கள் போன்ற வாய்ப்புக் கிடைத்தவர்கள் மலையக மக்கள் வாழ்வைத் தத்ரூபமாகப் படைப்புகளில் கொண்டு வந்துள்ளனர். அப்படி 'ஞானம்' ஆசிரியர் தி.ஞானசேகரன் செய்துள்ளார். இவர் கூடுதலான காலம் மலையகத்தில் வைத்தியராக தொழில் புரிந்தவர். சேனாதிராஜா தனது மலையக அநுபவங்களைச் சிறுகதைகளாக வார்க்கலாம். படைப்பொன்றுக்கு view point என்றொரு அம்சமும் இருக்க வேண்டும். இந்த view point என்றால் என்ன? எனச் சிங்கள இலக்கியவாதிகள் கேட்டனர். பதுளை சேனாதிராஜாவின் 'குதிரைகளும் பறக்கும்' என்ற சிறுகதைத் தொகுப்புக் கதைகளைப் படித்துப் பாருங்கள், பதில் கிடைக்கும் எனச் சொன்னேன்.

**வாழ்த்துரை:**
**தி.ஞானசேகரன் (ஞானம் ஆசிரியர்)**

நீண்ட இடைவெளிக்குப் பின் மலையகத்தில் பதுளை சேனாதிராஜா, சிவனு மனோகரன், பிரமிளா பிரதீபன் ஆகிய படைப்பாளிகள் தோன்றியுள்ளனர். இவர்கள் எத்தனையாவது தலைமுறை என்பதை ஆய்வாளர்கள் கவனத்துக்கு எடுக்க வேண்டும். பதுளை சேனாதிராஜா ஞானம் சஞ்சிகையில் எழுதுபவர். சிவனு மனோகரன் தனித்துவமானவர். மார்க்சியப் போக்கைச் சார்ந்தவர். பிரமிளா பிரதீபன் இயற்கையோடு ஒன்றிய வாழ்க்கையைப் படைப்பில் சித்திரிப்பவர். புதிய பரம்பரையை வளர்த்தெடுக்கும் 'ஞானம்' இவரது முதல் சிறுகதையைப் பிரசுரித்து இவரை அறிமுகப்படுத்தியது. சேனாதிராஜாவின் சிறுகதைகளின் வடிவம், உத்தி, உரையாடல், எடுத்துரைப்பு புதிய விதமானதாகவும் வித்தியாசமாகவும் உள்ளன. மலையகத்தின் இன்றைய எரியும் பிரச்சினைகளைக் குதிரைகளும் பறக்கும் தொகுப்புக் கதைகள் கொண்டுள்ளன. வீரத்தைப் பற்றியும் உண்டு. உரையாடல் மூலமாகக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதைகள் நகர்த்தப்பட்டுள்ளன. மலையக இலக்கியத்தின் சிறப்பினை இத்தொகுப்பு உயர்த்தத் தக்கது.

**வெளியீட்டுரை:**
**கவிஞர் மேமன்கவி**

இலங்கையின் இன ஒருமைப்பாட்டை வளர்த்தெடுக்கும் எஸ்.கொடகே சகோதரர்கள் பிரைவேட் நிறுவனம் 'குதிரைகளும் பறக்கும்' சிறுகதைத் தொகுப்பை வெளியிட்டுள்ளது. பதுளை சேனாதிராஜாவை மலையகத்தின் 4 ஆவது அல்லது 5 ஆவது தலைமுறையைச் சேர்ந்த இலக்கியவாதியாக எடுத்துக் கொள்ளலாம். அவரொரு சட்டத்தரணி என்பதனால் சட்டத்துறை அநுபவங்கள் அவருக்குப் பலமாக இருப்பது ஆச்சரியத்துக்குரியதல்ல. பழைய தீர்வுகளுக்குத் தனது சிறுகதைகளில் புதிய பரிமாணத்தைக் காட்டுகிறார். படைப்புகளுக்கான கருக்களை மக்களிடமிருந்தே பெற்றுப் படைப்புகளை ஆக்குகிறார்.

**விமரிசன உரைகள்:**
**கே.எஸ்.சிவகுமாரன்**
**(பிரபல திறனாய்வாளர்) 'குதிரைகளும் பறக்கும்'**

குதிரைகளும் பறக்கும் என்ற தொகுப்பின் முதல் சிறுகதையே நூலின் தலைப்பாக்கப்பட்டுள்ளது. விசித்திரமான தலைப்பாக உள்ளது. அதிகாரத்தைப் பயன்படுத்தி வலியார் மெலியாரைக் கொல்வதே இக்கதையின் அடிநாதம். மிகவும் அருமையான சிறுகதை. உள்ளடக்க வலிமையோடு உருவ நேர்த்தியையும் கொண்டுள்ளது. அன்ரன் செக்கோவ் பாணியில் எழுதப்பட்டுள்ளது. இயல்பான மலையக எடுத்துரைப்புக் காணப்படுகின்றது. சின்னதொரு சம்பவம் பெரிது படுத்தப்பட்டுள்ளது.

**கதைஞர் மு.சிவலிங்கம்**
**'நிலா இல்லாத பௌர்ணமிகள்', 'குறியீடுகள்'**

இலக்கியத்தில் இரு வகைகள் உண்டு. மக்கள் இலக்கியம், இரசனை இலக்கியம். மக்கள் இலக்கியத்தைப் படைக்கும் படைப்பாளிகளுக்கு மனிதாபிமானம் இருக்க வேண்டும். இவர்களை இரசனை இலக்கியகாரர்களோடு சேர்க்க முடியாது. மனிதனைப் பற்றி எழுதும் பலர் தாமொரு பூரண மனிதனாக வாழ்ந்து காட்ட வேண்டும். பதுளை சேனாதிராஜா சட்டத்துறை சார்ந்தவர். 'நிலா இல்லாத பௌர்ணமி'கள் காணாமல் போதலால் ஏற்படும் தவிப்பைச் சித்திரிக்கிறது. காணாமல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போனவனின் மனைவி 30 ஆண்டுகள் அவன் வருவானென எதிர்பார்த்துத் தாலியைக் கழற்றாதிருக்கிறாள். இதைத்தான் இச்சிறுகதை சித்திரிக்கிறது. பிள்ளைகள் தேடப்படுகின்றனர். இவற்றையெல்லாம் எம்மை வழிநடாத்த வந்த தலைமைகள் எப்படி அணுகாமல் நடமாடுகின்றன என்பதையும் காட்டுகிறது. அமெரிக்கப் படை செய்யாதவற்றை நம் நாட்டு இராணுவம் செய்தது. தாய் முன் மகன் கொல்லப்பட்டதை இராணுவத்தினர் ரசித்தனர். மனிதத்தைப் பேசுகிறது இச்சிறுகதை 'குறியீடு'. அடையாள அட்டை உயிரைக் குடிக்குமென அமரர் கோவிந்தராஜன் தனது சிறுகதையொன்றில் அடையாள அட்டையைக் குறியீடாக்கியுள்ளார். தமிழனுக்கு ஒரு தழும்பிருந்தால் போச்சு, சட்டத்தை மீறப்படுவது குறியீடாகும்.

**உடுவை தில்லைநடராஜா:**

**(எழுத்தாளர் - பொதுச்சேவை ஆணைக்குழு உறுப்பினர்) 'கோணல் சித்திரங்கள்'**

சொல்ல வேண்டிய செய்தியைப் பதுளை சேனாதிராஜா சிறுகதையில் முழுமையாகச் சொல்லியுள்ளார். 'கோணல் சித்திரங்கள்' சிறுகதைக்கு நிகழ்களமாகச் சலூன் உள்ளது. பிரபல எழுத்தாளர் எஸ்.பொன்னுத்துரை (எஸ்.பொ.) சலூனைக் களமாக்கி 'அணி' என்ற சிறுகதையை எழுதியுள்ளார். பாத்திரமொன்றின் மூலமாகக் கதை நிகழ்த்தப்படுகிறது. இப்போது வெளிநாடுகளில் Appointment எடுத்தே முடிவெட்ட வேண்டிய சூழ்நிலை உள்ளது. இச்சிறுகதைகளின் சொற்செட்டு, நடை ஏற்கத் தக்கவைகளாக இருக்கின்றன. சிறுகதையின் முடிவு முடிவற்ற முடிவாக இருக்க வேண்டும். எதிர்பாராததாக முடிய வேண்டும். அத்தன்மை 'கோணல் சித்திரங்கள்' கதையிலும் உண்டு. இச்சிறுகதைக்குத் தமிழ்க் கதைஞர் வட்டம் (தகவம்) ஆண்டொன்றின் காலாண்டில் முதற் பரிசு கொடுத்துள்ளது பொருத்தமானதாகவே உள்ளது.

**ரிம்ஸா முஹம்மது (ஆசிரியர், பூங்காவனம்) 'அட்டைகள்'**

யதார்த்தத்தை உணர்த்தும் சிறுகதை 'அட்டைகள்'. தோட்டத் தொழிலாளரின் வறுமை நிலையைப் படமிட்டுள்ளது. களுத்துறைப் பாடசாலையொன்றின் அவலம் இதில் காட்டப்பட்டுள்ளது. யதார்த்தமான உவமானங்கள், நகைச்சுவை என்பன இச்சிறுகதையில் ஓடி ரசிக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைக்கின்றன. மலையக மாணவரை அதிபர்கள் அட்டைகளாக உறிஞ்சி அவர்கள் எதிர்காலத்தை நாசமாக்குவதை இச்சிறுகதை உணர்த்துகின்றது.

## எழுத்தாளர் ப. ஆப்டீன் 'கனவுகளுக்கு விடுமுறை'

(ப. ஆப்டீன் பிரதியை மேமன்கவி வாசித்தார்)

சேனாதிராஜாவின் இக்கதையில் புதிய கண்ணோட்டம் உண்டு. அத்தோடு கதை வார்ப்பும் புதிதாக இருக்கின்றது. மாற்றங்களை மலையகத்தில் கொண்டுவர எழுத்தைப் பயன்படுத்துகிறார். மலையகச் சமூகம், பொருளாதாரம், பண்பாடு என்பன மாற்றம் பெற்று வருகின்றன. இச்சிறுகதையில் மண்வாசனை மிகச் செம்மையாக உள்ளது. நல்ல பல கருத்துகள் உள்ளன. சிறுகதையொன்றைப் படைப்பதென்பது இலேசான காரியமல்ல. கதைப் பொருளை, வடிவத்தை மனதில் ஊறப்போட்டே சிறுகதை எழுத வேண்டும்.

*குறிப்பு: இதன் தொடர்ச்சி வேறொரு தினத்தில் வெளியாகியிருக்க வேண்டும். கவனக் குறைவினால் தவிர்க்கப்பட்டுவிட்டது.*

-27.07.2013

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 58

## ‘முடியா நெடும் பகல்’ கவிஞர் இ.முருகையன் நினைவுப் பேருரை

‘இரண்டாயிரம் ஆண்டுப் பழைமைச் சுமை எங்களுக்கு, பண்பாட்டின் பேரால் பல சோலி எங்களுக்கு’ எனத் தான் வாழ்ந்த காலத்துத் தமிழ் வாழ்வு முறைமையையும் அதன் அசைவியக்கத்தையும் மிக்க காட்டமாக விமர்சித்தவர் ‘முடியா நெடும்பகல், மூத்த கவிஞர் இ.முருகையன். இவர் தேசிய கலை இலக்கியப் பேரவையின் முன்னாள் தலைவர். இவரது நினைவுப் பரவல் நிகழ்வைப் பேரவை, 14.07.2013 ஆம் திகதி பேராசிரியர் சி.சிவசேகரம் தலைமையில் நடாத்தியது. வெள்ளவத்தை, ஹம்டன் ஒழுங்கை, 121 ஆம் இலக்கத்திலுள்ள பேரவையின் தலைமைப் பணியகக் கைலாசபதி கேட்போர் கூடத்தில் இந்நிகழ்வு நடைபெற்றது.

**வரவேற்புரை:**
**இரா. ரஞ்சன்**

கவிஞர் இ.முருகையன் மக்களுக்காகக் கவிதை பாடியவர். மக்கள் சார்பாகச் சிந்தித்தவர். இன்று இந்நாட்டில் சிறுபான்மை இனங்கள் ஒன்று மில்லாத நிலையில் வாழ்கின்றன. பண்பாடு சுரண்டப்படுகிறது. புதிய பண்பாட்டை முன்னெடுக்க வேண்டிய நிலை எமக்குள்ளது. மக்கள் சார்பாக உழைத்தவர்களைப் பாராட்டுவதென்றால் அவரது கோட்பாட்டுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். அதன் பிரயோகத்தை மக்களுக்குச் சொல்ல வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தலைமையுரை:**
**பேராசிரியர் சி.சிவசேகரம்**
**(பொதுச்செயலாளர், தேசிய கலை இலக்கியப் பேரவை)**

கவிஞர் முருகையனிடம் ஒரு பரிமாணத் தெளிவு இருந்தது. பல்வேறு ஆளுமைகளைக் கொண்டிருந்தார். மொழி பெயர்ப்பிலும் ஆற்றல் கொண்டிருந்தார். ஆங்கிலக் கவிதைகளைத் தமிழில் மொழி பெயர்த்தார். சமூக மாற்ற, பலஸ்தீனக் கவிதைகளை மொழி பெயர்த்தார். தமிழ்த் தேசியப் பிரச்சினையை மற்ற மக்களோடும் சேர்த்துப் பார்த்தார்.

தன்னோடு முரண்பட்டோருக்கு முருகையன் பகைமை காட்டமாட்டார். எவரையும் தனிப்பட்ட முறையில் தாக்கமாட்டார். தவறுகளைச் சுட்டிக்காட்டத் தவற மாட்டார். கருத்துச் சொல்ல முடியாத கால கட்டத்தில் வாழ்ந்தார். இடதுசாரியத்தை விட்டுக் கொடுக்கவில்லை. இருந்தும், முருகையனுக்குத் தமிழ்த் துரோகியென முத்திரை குத்தப்படவில்லை. போராளிகளை மதித்தார். அவர்கள் மீது விமர்சனமும் வைத்தார். அவரிடம் செய்யுள் நடை இருந்தது. 1980க்குப் பின்னரே புதுக் கவிதையை ஏற்றார். கால ஓட்டத்தோடு சேர்ந்து தனது பார்வையில் மாற்றத்தைக் கொண்டு வந்தார். சொல்லாடலில் கட்டுப்பாடாக இருந்தார். பரிசோதனை முயற்சிகளைச் செய்தார். கைலாசபதியின் பண்புகளை முருகையனிடமும் காண முடிந்தது. 1983 இல் நடைபெற்ற சம்பவங்களை மிகக் கடுமையாகக் கவிதைகளில் பாடினார். மனச்சாட்சியும் மனிதாபிமானமும் அவரிடம் இருந்தன.

முருகையனின் படைப்புகள் பல அச்சிடப்படாது இன்னமும் கைவசம் உள்ளன. இவைகள் மக்களைச் சென்றடைய வேண்டும். வணிக நோக்கில் இதை நாம் செய்ய முடியாது. இப்போதெல்லாம் ஏராளமான நூல் வெளியீட்டுக் கூட்டங்கள் நடைபெறுகின்றன. இவைகளில் 200 பிரதிகள் விற்பது பெருஞ் சாதனை தான்! கூட்டங்களில் நூல்களை வாங்குபவர்கள் அவற்றை வாசிக்கின்றனரா? நல்லவற்றைத் தெரிந்து வாங்கும் பழக்கம் எம்மவரிடம் இல்லை. புத்தகம் வாசிக்கும் பழக்கத்தை நாம் வளர்த்தெடுக்க வேண்டும். பாடசாலை மாணவரிடம் இன்று வாசிப்பு இல்லாது போய்விட்டது. ஊக்குவிப்போரையும் இந்த நிறுவனங்கள் தடை செய்கின்றன.

நூல்களைத் தேடி வாசிக்கும் பழக்கம் பாடசாலையில் ஆரம்பமாக வேண்டும். தமிழ் நாட்டைக் காட்டிலும் இலங்கையில் தான் சிறப்பான வாசகர்கள் இருந்தனர். இன்றைய இளைய தலைமுறை வெளிநாடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வதற்கே ஊக்கம் காட்டுகின்றது. அவர்களிடம் சமூக அக்கறை இல்லை. சோதனையில் பாஸ் பண்ண வேண்டுமென்பதே மாணவரின் அக்கறையாக உள்ளது. பல்கலைக்கழகங்கள் ரியூற்ரறிகளின் நிலைக்கு வந்துவிட்டன. சுயமாக யோசித்துப் படிக்கும் மாணவருக்கு வாசிப்புப் பயனுள்ளதாக இருக்கும்.

**நினைவுப் பேருரை : 'முருகையனும் ஈழத்துத் தமிழ் நாடகமும்'**
**உரைஞர் : துணைவியூர் கேசவன்**

இ.முருகையன் நாடகத்துறையில் தனக்கென்றதொரு முத்திரையைப் பதித்துச் சென்றவர். அரை நூற்றாண்டு காலமாக நாடகாசிரியராகப் பணி செய்தார். ஈழத்து நாடகச் செல்நெறிக்குத் தன்னை இயைபுபடுத்தினார். கௌரவத்தைத் தாண்டி நாடகப் போக்கின் வளர்ச்சிக்குச் செயற்பட்டார். ஈழத்தின் நவீன நாடகத் தோற்றம் 20 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் தான் ஏற்பட்டது. கூத்திலிருந்து நாடகத்துக்கான சகாப்தம் ஏற்பட்டது. நாடக சபாக்கள் 1913, 1914 ஆம் ஆண்டுகளில் தோன்றின. கலையரசு சொர்ணலிங்கம் போன்றோர் நவீன நாடகங்களில் ஆர்வம் காட்டினர்.

நவீன நாடகங்கள் உத்தியில் காட்டிய கவனத்தைக் உள்ளடக்கத்தில் காட்டவில்லை. பேராசிரியர் கணபதிப்பிள்ளை வடமராட்சித் தமிழை நாடகத்துக்குக் கொண்டு வந்தார். பேராசிரியர் சு.வித்தியானந்தன் பாரம்பரிய கூத்துகளைத் தேடியெடுத்து, நவீனப்படுத்தி மேடைக்குக் கொண்டு வந்தார். இவற்றைத் தொடர்ந்து சங்காரம், கந்தன் கருணை போன்ற நவீன நாடகங்கள் குறிப்பிடத்தக்கவைகளாக இருந்தன.

ஈழத்து நாடக வளர்ச்சியில் 20 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் மாற்றங்கள் ஏற்பட்டன. ஈழத்து நாடகத்தின் மற்றொரு பரிமாணம் தென்பட்டது. பல்கலைக் கழகங்கள் நாடகத்தை முன்னெடுத்தன. நாடகப் பேச்சுமொழியில் மாற்றம் ஏற்பட்டது. பரிசோதனை முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. தொழிலாளர் போராட்டங்களை மையப்படுத்தும் நாடகங்கள் அரங்குக்கு வந்தன. பேராசிரியர் கா.சிவத்தம்பி, நா. சுந்தரலிங்கம், சுஹைர் ஹமீட் போன்ற நாடக நெறியாளர்கள் அறிமுகமானார்கள். 1980 களில் குழந்தை சண்முகலிங்கத்தின் வரவு மேலும் ஈழத்து நாடகத்துக்குப் புதியவற்றைக் கொண்டு வந்தது. நாடகக் கருத்தரங்குகள் பல பிரதேசங்களில் நடாத்தப்பட்டன. தயாரிப்பு அளிக்கை உள்ளீட்டு முறைமைகளில் நவீனத்தைத் துலங்க வைத்த 'மண்சுமந்த மேனியர்' நாடகம் முத்திரை பதித்த நாடகமாகப் பாராட்டப்பட்டது. 1990 களில் பார்வையாளர்கள் அரங்காற்றுகையில் பங்களிப்புச் செய்யும் முறைமை ஈழத்து நாடகத்தில் கொண்டு வரப்பட்டது. இதில் சிதம்பரநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பிடத்தக்க நெறியாளர். கூட்டு முயற்சிகள், கலைஞர்களோடு கலந்துரையாடித் தயாரித்தலும் 1990 களில் செய்யப்பட்டன. 'உயிர்த்த மனிதர் கூத்து'ம் இவ்வாண்டில் அரங்குக்கு வந்தது.

கவிஞர் முருகையன் 1950 ஆம் ஆண்டு தொடக்கம் 2000 ஆம் ஆண்டு வரை நாடகத்துறைக்குப் பங்களிப்புச் செய்துள்ளார். அவரது 24 நாடகங்களில் 18 நூலாக்கப்பட்டுள்ளன. 'நித்திலக் கோபுரம்' என்ற வானொலிப் பா நாடகமே அவரெழுதிய முதல் நாடகமாகும். இதை 1953 இல் எழுதினார். தழுவல், மொழிபெயர்ப்பு நாடகங்களையும் எழுதியுள்ளார். மானுடவிடுதலையே கருப்பொருளாக இருந்தது. செய்யுள், கவிதை நடையே நாடகங்களில் இருந்தது. பேச்சோசைப் பண்பும் இருந்தது. அவரிடம் கவித்துவப் பலம் இருந்தது. யதார்த்தத்தைப் பூடகமாகவே நாடகங்களில் வெளிப்படுத்தினார். 1950-2002 காலப்பகுதியில் நாடகத்தில் பலமாற்றங்கள் வந்தன. தன்னை இயைபுபடுத்திக் கொள்வதில் வெற்றி கண்டார். 'கடூழியம்' முருகையனின் சொந்தக் கற்பனை. நெறியாளர் நா.சுந்தரலிங்கத்தோடு கலந்துரையாடி 'இரு துருவங்கள்' நாடகத்தைப் படைத்தார். நடிகர்களோடும் சேர்ந்து கலந்துரையாடி 'உயிர்த்த மனிதர் கூத்து'த் தயாரிக்கப்பட்டது. கவிஞர் என்ற பிம்பத்தைப் புறந்தள்ளி சிதம்பரநாதனோடு சேர்ந்து வசனம் எழுதினார். நெகிழ்ச்சி கொடுக்கும் பெருந்தன்மை அவரிடமிருந்தது, முருகையன் மூன்று தலைமுறைகளோடு சேர்ந்து நாடகப் பங்களிப்பைச் செய்தார். அவரது பங்களிப்புகள் நிராகரிக்க முடியாதவையாகும்.

**கருத்துரைகள் :**
**'முருகையனும் மொழியியலும்'**
**உரைஞர்: க.ஆதித்தன்**

கவிஞர் முருகையன் பல துறைகளிலும் தமிழ்மொழி பயன்படுத்த வேண்டுமென்ற இலக்கோடு வாழ்ந்தார். இலக்கிய முயற்சிகள் அறிவுத் துறையைப் புறக்கணிக்கக் கூடாது - பல துறைகளையும் முன்னேற்ற மொழியின் பயன்பாடு இருக்க வேண்டுமென்றார். பிற துறைகளோடும் சேர்ந்து தமிழ்மொழி செயற்படவில்லை. குறுகிய வட்டத்துக்குள் தான் நிற்கிறோமெனக் கவலைப்பட்டார். பயன்படுத்தப்படாத சொற்கள் மறைந்துள்ளன. இலக்கணம், சட்டம் போலில்லாது விஞ்ஞானம் போன்றதென இலக்கணத்துக்கு வரைவிலக்கணம் சொன்னார். இலக்கியத்தில் மாற்றம் ஏற்படுவதைத் தவிர்க்க முடியாதெனவும் கருத்துரைத்தார். மொழிப் பண்பாட்டுக்கு எழுத்துத் தேவையானதென்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**'முருகையனும் கவிதையும்'**
**உரைஞர்: தி.அனோஜன்**

முருகையன் கவிதைக்குச் சிறப்புண்டு. அது அவரது பலம்பெற்ற வரம். கவிதைக்குக் காத்திரமான சேவை புரிந்துள்ளார். மொழி பெயர்ப்புத் தொகுதிகளை வெளியிட்டுள்ளார். அவரது கவிதைகளில் பொதுத்தன்மை, நிதானம், எளிமை, தொனிப்பொருளை ஆழமாக வெளிப்படுத்தல் என்பவற்றைக் காணலாம். மக்கள் இலக்கியத்தைப் படைத்தார். மொழி மாற்றம் செய்தல் மட்டும் போதாது. சமூகப் பிரச்சினைகளில் தெளிவு, விழிப்புணர்வு உள்ள மக்கள் கவிதை இலக்கியம் படைக்க வேண்டுமென விரும்பினார். கவிஞர் முருகையனிடமும் அரசியல் கொள்கை இருந்தது. ஆரம்பத்தில் தமிழ்த் தேசியம் பேசிய முருகையன் காலப்போக்கில் மார்க்சிய இலக்கியம் படைத்தது அவரது மனித நேயத்தை உயர்த்தியது. மொழிப் பிரச்சினை குறித்துக் கவனமாக இருந்தார். மரபுக் கவிதைகளைப் பெரும்பான்மையாகப் படைத்தார். புதுக்கவிதையை எதிர்த்தவர், அவற்றில் நேர்த்தியானவற்றைப் பாராட்டினார். அவரது கவிதைகள் இன்றும் மக்களோடு பேசுகின்றன.

*செ.நந்தமோகன் (பொருளாளர், தேசிய கலை இலக்கியப் பேரவை) நன்றியுரை கூறினார்.*

-01.08.2013

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 59

## இசைத் தமிழ் 'வளமும் வரலாறும்' ஆய்வரங்கு

மங்கள இசையான நாதஸ்வரம் அடங்கலாகச் சமகாலத்தில் நிகழ்வுகளில் மட்டுமன்றி இலத்தினியல் ஊடகங்களிலும் இன்தமிழிசை கேட்கப்படாதிருப்பது, முத்தமிழிலொன்றான தமிழிசைப் பிரியர்களுக்கு உரத்த ஆதங்கத்தை ஏற்படுத்தியிருப்பதை அறிய முடிகின்றது. அந்தக் காலத்தில் இலங்கை வானொலி பேரக்கறை ஊன்றி தமிழிசை நிகழ்ச்சிகளை ஒலிபரப்பி இசைப் பிரியர்களுக்கு இசைவிருந்தளித்ததை இன்றும் இசைத் துறையினர் நினைவுகூருவதுண்டு. இப்போது வானொலியில் என்ன நடக்கிறதென்பதைக் கூட அறியாத நிலையில் பெரும்பான்மையான தமிழ் மக்கள் உள்ளனர். குடம் குடமாகக் கண்ணீரைச் சொரிய வைக்கும் தொலைக்காட்சி மெகா நாடகங்கள் இவர்களையெல்லாம் கபளீகரம் செய்துவிட்டது.

இதை நன்கறிந்து தான் போலும், கொழும்புத் தமிழ்ச் சங்கம் தமிழோடிசை பாடல் - இசைத் தமிழ் விழாவை நடாத்தியது. இது பிரமாண்டமான 5 நாள் நிகழ்வாக நடாத்தப்பட்டது. தமிழ் பேசும் மக்கள் இசை மழையில் மட்டுமன்றி கருத்தாழமிக்க சொற்பொழிவு மழையிலும் நனைந்து திழைத்தனர். நடனவிருந்தும் கிடைத்தது. விழா நிகழ்வுகள் - கொழும்புத் தமிழ்ச் சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில் அமைக்கப்பட்ட முத்துத் தாண்டவர் அரங்கு (31.07.2013), அருணாசலக் கவிராயர் அரங்கு (01.08.2013), மாரிமுத்தபிள்ளை அரங்கு (2.08.2013), ஆபிரகாம் பண்டிதர் அரங்கு (03.08.2013) தவில் மேதை தட்சணாமூர்த்தி அரங்கு (03.08.2013), இயலிசை பாவாரிதி வீரமணி ஐயர் அரங்கு (04.08.2013) ஆகியவற்றில் நடைபெற்றன. மு.கதிர்காமநாதன், ஆருகமூர்த்தி, காப்பியக்கோ ஜின்னாஹ் ஷரிபுத்தீன், பேராசிரியர் சபா ஜெயராசா, இராஜகுலேந்திரா ஆகியோர் இவ்வரங்குகளுக்குத் தலைமை தாங்கிச் சிறப்பாக நிகழ்ச்சிகளை நடாத்தினர்.

தமிழிசை இன்றும் இளமையோடு கம்பீர நடைபோடுகின்றதென்பதை அத்தாட்சிப்படுத்துவதாக இசைக் கலைப் பயிலுநர்கள், இசைப் பிரியர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரங்குகளை நிறைத்திருந்தது கண்நிறை காட்சியாக இருந்ததோடு தமிழிசையைக் கண்டுகொள்ளாதிருக்கும் இன்றைய சில வெகுஜன ஊடகங்களுக்கும் படிப்பினையைப் புகட்டுவதாகத் தென்பட்டது.

03.08.2013 காலை (9-12.30) ஆபிரகாம் பண்டிதர் அரங்கில் கேட்டவைகளில் சுருக்க உரைகளை வாசகர் நலன்கருதி கீழே தருகிறோம். சாகித்திய ரத்னா பேராசிரியர் சபா ஜெயராசா நிகழ்வுகளுக்குத் தலைமை தாங்கினார்.

**தலைமை உரை:**
**பேராசிரியர் சபா ஜெயராசா**

முரண்பாடுகள் இன்றும் கர்நாடக இசையில் உள்ளன. பேராசிரியர் கல்கி கிருஷ்ணமூர்த்தி, நகைச்சுவை நடிகர் என்.எஸ்.கிருஷ்ணன், நாதஸ்வரச் சக்கரவர்த்தி இராஜரத்தினம்பிள்ளை ஆகியோரும், தமிழிசை இயக்கத்தை முன்னெடுத்துப் பணி செய்ததால் அவ்வியக்கம் வெற்றிபெற்றது. சுதா ரகுநாதன், பலர் ஒரு காலத்தில் தமிழிசைக்கு கனதியான உருப்படிகள் இருந்திருக்கவில்லையெனவும் இன்று அந்நிலை தீர்ந்து விட்டதெனவும் கருத்துரைத்துள்ளார். தியாகராஜரும் தமிழிசையின் உதவியோடுதான், அதிலிருந்து பெற்றுத் தான் அவரது புகழ்பெற்ற தியாகராஜ கீர்த்தனைகளைத் தெலுங்கில் அமைத்ததாகச் சொல்லப்படுகின்றது. பரத நாட்டியத்தில் இன்னமும் சமஸ்கிருத ஆதிக்கம் உள்ளது. அது இன்னமும் தமிழ் மயப்படவில்லை.

**தொடக்கவுரை :**
**கலாபூஷணம் டபிள்யூ.எஸ்.செந்தில்நாதன்**

இசைத் தமிழ் விழா அழைப்பிதழ் கம்பன் விழா அழைப்பிதழை ஞாபகப்படுத்துகிறது. சொந்த மண்டபத்தில் கொழும்புத் தமிழ்ச் சங்கம் இவ்விழாவை நடாத்துவது பெருமையாக இருக்கின்றது. இத்தகைய விழாக்களை கம்பன் கழகமும் சிறப்பாக நடாத்துகின்றது. ராக அளிக்கை நிகழ்ச்சிகளை நடாத்துகின்றனர்.

நானும் கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் உறுப்பினராக இருந்திருக்கிறேன். இசை நிகழ்ச்சிக்குப் பொறுப்பாக இருந்து நடாத்தி வந்துள்ளேன். இதில் பங்குபற்றும் பாடகருக்குக் குறைவாகவே பக்க வாத்தியங்களை ஏற்பாடு செய்து வந்தேன். ஒரு சமயம் தமிழ்ச் சங்கத்தில் செல்வாக்குள்ள ஒருவர் வந்து தனக்குப் பிடித்த ஒருவருக்கு நிகழ்ச்சியொன்றை ஒழுங்கு செய்யும் படியும் பக்க வாத்தியங்களை அதிகரிக்கும் படியும் கேட்டுக்கொண்டார். அவரது நண்பருக்கு நிகழ்ச்சி கொடுத்தேன். ஆனால் பக்க வாத்தியத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகரிக்கவில்லை. யாழ்ப்பாணம் சென்றும் கர்நாடக இசையை வளர்க்க முயற்சிகள் எடுத்தேன். ஆனால், அப்போது அங்கிருந்த அசாதாரண நிலைகளால் அது தடைப்பட்டது. இசைக்கான சஞ்சிகையொன்றை நடாத்தினேன். 'கீர்த்தனை மாலை' என்ற நூலை வெளியிட்டேன். இந்நூலைத் தமிழகமும் பாராட்டியது.

*இசைத் தமிழ் வளமும் வரலாறும் என்ற பொருளை முன்நிறுத்திய ஆய்வரங்கு நடைபெற்றது. கலாநிதி மீரா வில்லவராயர் தலைமை தாங்கினார். அவர் கூறியதாவது: தமிழை இயல், இசை, நாடகம் என மூவகைப் படுத்தியுள்ளனர். தமிழிசை தொன்மையானது, இறைவனையே வசப்படுத்தும், ஆட்கொள்ளும் ஈர்ப்புத் தமிழிசைக்குண்டு. இசைத் தமிழ், தமிழ் மொழியை வெளிப்படுத்தும் கருவியாகவே கொள்ளப்படுகிறது. தமிழிசைக்கும் இலக்கணம் உள்ளதென்பதை இசை வரலாறு காட்டுகின்றது.*

**ஆய்வுரைகள்:**

**ஆய்வுப் பொருள்:**

**'ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்திலும் அதன் பின்னரும் தமிழ் நாட்டில் இசை'**

**ஆய்வறிஞர் :**

**இசைத் திருமதி நிர்மலேஸ்வரி பிரசாந்**

**(விரிவுரையாளர், கிழக்குப் பல்கலைக்கழகம்)**

ஆங்கிலேயரால் தமிழ்மொழி அன்றைய தமிழகத்தில் ஒடுக்கப்பட்டது. அப்போது பிராமணர்கள் தான் ஆற்றல் மிக்கவர்களாக இருந்தனர். இவர்கள் வேளாளரின் எழுச்சியை எதிர்த்தனர். தமிழிசையை வளர்த்த பிதாமகராக வைத்திய நாதய்யர் கொண்டாடப்படுகிறார். தமிழிசையால் அவர் தமிழ்மொழிக்கு மாலை சூட்டினார்.

ஆங்கிலேயரின் வருகைக்குப் பின் ஆங்கில இசை மெட்டுக்கள் பின் பற்றத் தொடங்கின. இன்று தமிழிசையில் பின்னணியிலுள்ள வயலின் வாத்தியம் மேற்குத் தேயத்ததாகும். பான்ட் வாத்தியமும் எமக்குத்தக்கதெனப்பட்டதாகப் பயன்பாட்டுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. கூர்ம வீணை, அச்சுக் கலை என்பனவும் தமிழிசையின் மேம்பாட்டுக்கு உதவின. ஆங்கிலேயர் தமிழரது இசைப் புலமை கண்டு வியந்தனர். மகாகவி சுப்ரமணிய பாரதியார் தமிழ் மொழியை வீறு கொண்டெழ வைத்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆப்பிரகாம் பண்டிதரின் காலம் 1859 -1919 ஆகும். தமிழிசையை உலகறியச் செய்தவர்களுள் இவருமொருவராவர். தமிழ்ப் பண்ணை ஏற்கச் செய்தார். தமிழிசை மகாநாடுகளைக் கூட்டித் தமிழிசையைப் பரம்பச் செய்தார். இசை பற்றிய நூலை வெளியிட்டார். ஏ.எம்.சின்னசாமி முதலி கத்தோலிக்க மதத்தைச் சேர்ந்தவர். மேலைத்தேய இசையிலும் பாண்டித்தியம் கொண்டிருந்தார். தமிழ் நாட்டின் சமஸ்தானங்கள், தமிழிசை மேம்பாட்டுக்குப் பெரிதும் உதவியுள்ளன.

சுவாமி விபுலானந்த அடிகளாரின் காலம் 1892 -1947 ஆகும். இவர் இலத்தீன் மொழியிலும் தேர்ச்சி பெற்றிருந்தார். பதினான்கு ஆண்டுகளாக ஆராய்ச்சி மேற்கொண்டிருந்து, 1947 இல் அவருக்குப் புகழ் தேடித் தந்த யாழ்.நூலை வெளியிட்டார். தமிழிசைக்குப் பங்களிப்புச் செய்த முஹம்மது நெல்லை மாவட்டத்தைச் சேர்ந்தவர். தமிழக அரசு விருது வழங்கிக் கௌரவித்தது. பிரபலம் மிக்க அண்ணாமலைச் செட்டியார் தமிழியக்கத்தை முன்னெடுத்தார். தமிழிசைச் சங்கம் ஏற்படுத்தப்பட்டது. இசைக்கல்லூரி நிறுவப்பட்டது. பெண்களும் தமிழுக்கும் தமிழிசைக்கும் பங்களிப்புச் செய்துள்ளனர். இவ்விடயத்தில் காரைக்கால் அம்மையார் வரலாறு படைத்தார்.

தற்போது இசைப்பாடல்கள், நாட்டார் தாலாட்டு, கும்மிப் பாட்டுகள் பாடப்பட்டு வருகின்றன.

இந்த நவீன யுகத்தில் தமிழிசைக்குச் சினிமாத் திரை இசை புதியதோர் பரிமாணத்தை ஏற்படுத்தியிருக்கிறது. பிறநாட்டு இசைக் கலப்பில் மெல்லிசை உள்ளது. 1913 இலிருந்து இன்று வரை தமிழ்த் திரை இசை தொடர்கின்றது. 'காளிதாஸ்' முதல் தமிழ் பேசும் திரைப்படமாகும். அனைத்துத் தமிழிசை ராகங்களும் திரை இசைக்குப் பயன்படுத்தப் படுகின்றன. பாபநாசம்சிவன், எம்.எஸ்.சுப்புலட்சுமி போன்றோர் திரைப்பாடல் எழுச்சியின் முன்னோடிகள்; எம்.ஏ.தியாகராஜ பாகவதர், பி.யூ.சின்னப்பா ஆகியோரது பங்களிப்பும் உச்சமானது. 'காற்றினிலே வரும் கீதம்' என்ற எம்.எஸ்.சுப்புலட்சுமியின் பாடல் இன்றும் இசைப் பிரியரைக் கௌவிப்பிடிக்கின்றது. சுப்பராமன், கே.வி.மகாதேவன், இளையராஜா, விஸ்வநாதன்- ராமமூர்த்தி ஆகியோர் திரை இசைக்குப் புதிய பாய்ச்சலை ஏற்படுத்தினர்.

இன்றைய விஞ்ஞான தொழில்நுட்ப வளர்ச்சியில் வைத்தியத்துறை சத்திர சிகிச்சைக்கு இசையைப் பயன்படுத்துவது இசைக்கு மேலுமொரு புதிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிமாணத்தை ஏற்படுத்தி, அதற்கு உச்சவளர்ச்சியைக் கொடுத்துள்ளது. இது இசை வரலாற்றில் பெருந் திருப்பமாகும். தமிழிசை மிகத் தொன்மமானது. நாமதை மறக்காது மேலும் மேலும் முன்னெடுக்க வேண்டும்.

**ஆய்வுப் பொருள் :**
**'சிலப்பதிகாரக் காலம் வரையில் தமிழில் இசைப்பாடல்கள்'**

**ஆய்வறிஞர் :**
**இசைத் திருமதி கிருபாசக்தி கருணா (விரிவுரையாளர், இசைத்துறை, பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்)**

கலைகள் 64 உண்டென்பர். கலைகளைக் கொண்டு மனித நாகரிகத்தை அறிந்து கொள்ளலாம். பண்பாட்டை எடுத்துக்காட்டும் கண்ணாடி அதுவாகும். இசைக் கலை மிகவும் சிறப்பானது. செவி வழி புகுந்து உடல் நாளங்களைத் தழுவி மனதுக்கு இன்பம் பயப்பது இசை. தமிழிசைக்கு இலக்கண, இலக்கியங்கள் உண்டு. பல்வேறு வகைப்பட்ட இசைப்பாடல்களைத் தொல்காப்பியம் விளக்கும். கூட்டுக் குழு வாழ்க்கையின் ஆரம்பக் காலத்தில் பயிர் சிறக்க, நோய், துன்பங்கள் நீங்க இசைப்பாடல்கள் பாடி ஆடப்பட்டன. அதன் மூலமாகத் தமது செயற்பாடுகளில் வெற்றி பெறலாமென அக்காலத்தவர்கள் நம்பினர். தொல்காப்பியக் காலத்திலும் இவை வளர்ந்தன.

தொல்காப்பியம் பல்வேறு வகை இசைப்பாடல்களை விளக்கும். பரிபாடல் இசைப் பாடலைச் சார்ந்தது. பரிபாடல்ப் பரிந்து பாடல் எனவும் அர்த்தப்படும். இதில் பாணர் பாடும் முறை, இசைக் கருவிகளென்பன தெளிவாகக் கூறப்பட்டுள்ளன. சங்க காலத்தில் இசைப்பாடல் தெளிவாகக் பாடப்பட்டது. பொருணை ஆற்றுப் படையில் திருமாவளவன் பெருமை கூறப்படுகிறது. சங்க காலப் பாடல்கள் இசைத் தன்மை கொண்டவை. சிலப்பதிகாரப் பாடல்களிலும் இசைத் தன்மை உள்ளது. 'திங்களைப் போற்றுதும்..... திங்களைப் போற்றுதும்' என்ற சிலப்பதிகாரப் பாடல் இயற்கையை வணக்கம் செய்யும் பாடலாகும். தமிழகத்திலும் கடவுள் வாழ்த்துப் பாடலுக்கு முன் திங்களைப் போற்றுதும்..... என்ற இயற்கை வணக்கப் பாடல் பாடப்படுவதைக் கேட்டுள்ளேன். சிலப்பதிகாரப் பாடல்கள் இசை, நாட்டிய அரங்குகளுக்கும் ஏற்றவையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஆய்வுப்பொருள் :**
**'பல்லவர், சோழர் காலப் பக்தி இலக்கியங்களில் இசை'**

**ஆய்வறிஞர்:**
**இசைத் திருமதி ஹம்சானந்தி தர்மபாலன்**
**(ஆசிரியை, கொழும்பு புனித அந்தோனியார் பெண்கள் மகா வித்தியாலயம்)**

மனதைப் பரம்பொருளுக்கு இட்டுச் செல்ல இசை மூலமாகிறது. இசை ஊடாக இறைபக்தியைச் செலுத்த முடியும். தொண்டை மண்டலத்தைப் பல்லவ மன்னர்கள் ஆண்டனர். காரைக்கால் அம்மையார் தொடக்கி வைத்த பக்தி இலக்கியத்தைப் பல்லவ மன்னர்கள் வளர்த்தெடுத்தனர். சைவமும் வைஷ்ணவமும் இவர்கள் காலத்திலேதான் எழுச்சி கொண்டன. சைவத்தின் முதற் குரவர் திருஞான சம்பந்தராவார். நாயன்மாரும் ஆழ்வார்களும் இறை பக்தியை முன்னெடுத்துப் போராடினர். பல்லவ மன்னரின் அயரா உழைப்பும் இப்பக்தி இயக்கத்துக்குக் கிடைத்தது. ஆண்டாள் திருப்பாவையை இயற்றினார்.

பல்லவ மன்னன் மகேந்திரவர்மன் இசை ஈடுபாடுள்ளவனாக இருந்தான். தமிழிசை வளர்ச்சிக்கு நற்பணி செய்தான். வீணை இசையில் ஆர்வம் கொண்டவன். ராஜசிம்மன் தமிழிசையில் புலமை உள்ளவன். சோழ மன்னர்கள் கோயில் திருப்பணிகளையும் செய்துள்ளனர். இவர்களது ஆட்சி 400 ஆண்டுகள் நடைபெற்றிருக்கிறது. கலை, அரசியல் என்பவற்றிற்கு சோழ மன்னர் காலம் பொற்காலமாகும். அக்காலத்தில் கோயில்கள் தமிழிசை வளர்ப்பின் களஞ்சியங்களாகத் திகழ்ந்திருக்கின்றன. சோழ மன்னர் காலத்தில் தான் சைவ சமயம் உச்ச நிலையை அடைந்தது. இவர்களது அரிய செயற்பாடுகளைக் கல்வெட்டுக்களின் மூலமாக அறிய முடிகின்றது. பெரிய புராணம், சோழர் காலத்து கந்தபுராணம் கச்சியப்பசிவாச்சாரியாரால் இயற்றப்பட்டது. தஞ்சைப் பெருங்கோயிலை ராஜராஜ சோழன் கட்டினான். இசை, நாட்டியக் கலைஞர்களைக் குடியமர்த்தினான். இவன் காலத்திலே தான் சிலைகள் பல வடிவமைக்கப்பட்டன.

**ஆய்வுப் பொருள்:**
**'விஜய நகர நாயக்கர் காலத் தமிழகத்தில் இசை'**
**ஆய்வறிஞர் :**
**இசைத்திரு. நவரட்ணம் பரந்தாமன்**
**(விரிவுரையாளர், இசைத்துறை, யாழ். பல்கலைக்கழகம்)**

நாயக்க மன்னர்கள் தமிழிசையை வளர்த்துள்ளனர். தமிழிசையின் மூலவரான அருணகிரி நாதரின் திருப்புகழ் செய்யுள்கள் சந்தத்தைப் புலப்படுத்தும். அனைத்துத் திருப்புகழ் பாடல்களும் ஒவ்வொரு நடையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளன. தமிழ் மொழியை அமிர்த மொழியாகக் கண்டார் திருஞானசம்பந்தர். திருப்புகழ் பாடல்களில் குறில் நெடிலாகவும் நெடில் குறிலாகவும் வருவதைக் காணலாம். இதுவே அதன் சிறப்பாகும். சித்தர்கள் நூறு பேர் இருந்துள்ளனர். பாம்பாட்டிச்சித்தர் 'ஆடு பாம்பே.... ஆடு பாம்பே....' எனப் பாம்புக்கும் முக்கியத்துவம் கொடுத்துப் பாடியுள்ளார். இசை மணம் கமழுபவை குமர குருபரர் பாடல்கள்.

*ஆய்வுரைகள் பற்றிய கலந்துரையாடலும் நடைபெற்றது.*

*கொழும்புத் தமிழ்ச்சங்கத் தலைவர் பேராசிரியர் சபா ஜெயராசா, ஆய்வறிஞர்களுக்கு விருதுக் கேடயத்தை வழங்க, கலாநிதி மீரா வில்லவராயர் சான்றிதழ்களை வழங்கினார்.*

*ரஜனி சந்திரலிங்கம் நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்கினார்.*

*ஐந்தாம் நாள் விழாவின், தலைக்கோல் விருது வழங்கலில் இசைத் திரு.ஏ.கே.கருணாகரன், கலைஞர் வேல் ஆனந்தன், கலாநிதி எம்.நவரட்ணம் ஆகியோர் கௌரவிக்கப்பட்டனர்.*

*கொழும்புத் தமிழ்ச் சங்க பொதுச் செயலாளர் ஆழ்வாப்பிள்ளை கந்தசாமி நன்றியுரை கூறி ஈப்பெருவிழாவை நிறைவு செய்தார்.*

-17/20.08.2013

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 60

## சுவாமி விவேகானந்தரின் 151 ஆவது அகவை

கடமை புனிதமானது. அர்ப்பணிப்போடு அதைச் செயற்படுத்துவது சிறந்த கடவுள் வழிபாடாகும். ANY DUTY IS HOLY. DEVOTION TO DUTY IS BEST WORSHIP OF GOD எனக் கடமையின் மகிமையை மானுடத்திற்குக் கற்பித்த, அறிவுக்கடல் சுவாமி விவேகானந்தரின் 151வது அகவை, கொழும்பு-13 விவேகானந்த சபையின் தலைமைச் செயலகக் காணியில் கம்பீரமாக எழுந்து நிற்கும் சுவாமி விவேகானந்தரின் உருவச்சிலை நிறுவப்பட்டு 17 ஆண்டுகள் நிறைவு என்பவற்றைக் கொண்டாடுமுகமாக கொழும்பு விவேகாநந்தா சபை, அகில இலங்கை இந்து மா மன்றத்தோடு இணைந்து பொதுக் கூட்டமொன்றை ஏற்பாடு செய்திருந்தது. இந்நிகழ்வு 18.01.2014 ஆம் திகதி கொழும்பு விவேகானந்த சபை அமைந்துள்ள அதன் மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது. சபைத் தலைவர் சட்டத்தரணி இ.சுரேந்திரன் தலைமை தாங்கினார்.

சுவாமியின் திருவுருவச் சிலைக்கு பூசகர் தீபாராதனை செய்யப் பிரமுகர்கள் மலர் தூவி அஞ்சலி செய்தனர். இரத்மலானை சக்தி இல்ல மாணவிகள் 'வீர நரேந்திர விவேகானந்தா வீர சேவையே சிவ சேவை..' என்ற பக்திப்பாடலைப் பாடினர்.

**தலைமையுரை:**
**சட்டத்தரணி இ.சுரேந்திரன்**
**(தலைவர், கொழும்பு விவேகானந்தா சபை)**

இப்படியான நிகழ்வுகளின் மூலமே இளைய தலைமுறையினருக்கும் சிறுவர்களுக்கும் சுவாமி விவேகானந்தர் பற்றி அறிய வைக்கலாம். இந்தப் பூப்பந்தின் பல பாகங்களுக்கும் சுவாமி விவேகானந்தர் சென்று இந்து மதத்தைப் பரப்பியவர். இலங்கை விஜயத்தில் யாழ்ப்பாணத்திற்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்றார். வீதிக்கு வீதி பந்தல் நிறுவி சுவாமிகளுக்கு அன்றைய யாழ்ப்பாண மக்கள் பெரு மரியாதை செய்தனர். விவேகானந்த சபை சமுதாயத்துக் கானது. அந்த மக்களுக்காகவே பணி செய்கிறோம்.

கௌரவ விருந்தினராக இந்நிகழ்வில் கலந்து கொண்ட இந்தியத் தூதரக முதன்மைச் செயலாளர் திருமதி.நிஷா ஸ்ரீ வத்சலா ஆங்கிலத்தில் குறுஞ் சொற்பொழிவாற்றினார்.

**சிறப்பு விருந்தினர் உரைகள்:**
**கந்தையா நீலகண்டன் ('தலைவர்'**
**அகில இலங்கை இந்து மா மன்றம்)**

மலை போல் சாதனைகளைச் செய்த சுவாமி விவேகானந்தரின் பிறந்த தினத்தை வருடந்தோறும் தவறாது கொண்டாடி வருகிறோம். சுவாமிகளின் திருவுருவச் சிலைக்கு மரியாதை செய்கிறோம். மனிதருக்கு மட்டுமல்ல நாமனைவரும் அனைத்து உயிர்களுக்கும் நற்பணியாற்ற வேண்டும். சுவாமிகள் சிக்காக்கோ நகர் சென்று இந்து மதத் தத்துவத்தின் சிறப்பைப் பரப்பினார். இந்து, சைவ மதங்கள் பற்றிய அவரது கருத்துக்களை அனைவரும் ஏற்கின்றனர். சத்திய சாயி பாபாவும் அதை ஏற்கிறார். உடன் பிறப்புகளுக்காகச் சேவை செய்ய வேண்டும்.

கடமை முக்கியமானது. சைவ சமயமும் அவரது இக்கருத்தைத் தான் வற்புறுத்துகிறது.

சுவாமிகளிடம் காணப்பட்ட அன்பை முதன்மைப்படுத்திய தத்துவமே அவரை யுக புருஷராக்கியது. சிறுவர்கள், பெற்றோர்களை மகிழ்வித்தால் கடவுள் மகிழ்வார். ஆசிரியரை மாணவர்கள் பேணி நடக்க வேண்டும். பெற்றோர்கள் தமது பிள்ளைகளை ஒருபோதும் மறக்கக் கூடாது. இதைத்தான் சுவாமி விவேகாநந்தரும் வற்புறுத்தினார். சிறுவர்கள் சுறுசுறுப்பாக இருக்க வேண்டும். சுவாமிகள் சோராது உழைத்தார்கள். அருட்புனல் இராமகிருஷ்ணர் சிறப்பாக வாழ்ந்து வாழ்வைச் செம்மைப்படுத்தினார். எனவே தான் நாமவரை நினைவுகூருகின்றோம். இந்து மதத் தத்துவங்களோடு முரண்பட்டோருக்கு, அற்புதமான விளக்கங்களைக் கொடுத்து சந்தேகங்களைத் தெளிய வைத்த பெருமை, சுவாமி விவேகானந்தரையே சாரும். இதில் பௌத்த குருக்களும் அடங்கினர். கப்பல் கடலில் நிற்க வேண்டும். கடல் கப்பலுக்குள் வந்து நிற்கக் கூடாது என்ற உண்மையை உணர்த்தினார். பன்றி மீது நீ ஏறு. உன் மீது பன்றியை ஏற விடாதே என்றார். பிள்ளைகள் இணையத்தளத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாமி விவேகாநந்தர் பற்றிப் பல விடயங்களை அறிந்து கொள்ளலாம். சுவாமிகளின் போதனைகளும் உண்டு. உரையையும் கேட்கலாம். பிள்ளைகள் தமது கடமைகளைத் தவறாது செய்ய வேண்டும்.

## திருமதி சாந்தி நாவுக்கரசன்
## (பணிப்பாளர், இந்து கலாசார அமைச்சு)

இதுவொரு சிறப்பான நிகழ்வு. எதற்காகச் சுவாமி விவேகாநந்தரின் பிறந்த தினம் கொண்டாடப் படுகின்றதென்பதை நாமெல்லாம் சிந்திக்க வேண்டும். குழந்தைகள், பெரியோர்கள், சமயப் பெரியோர்கள் காட்டிய வழிகாட்டலை நன்கறிந்திருக்க வேண்டும். மூடப்பழக்க வழக்கங்களை அடியொற்றி வாழ வேண்டாமெனச் சுவாமிகள் அறைகூவல் செய்தார். தியானத்தின் மூலமாக நற்பண்புகளைப் பெறலாமென்றார். எதையும் சிறுவர்கள் அர்த்தத்தோடு செய்ய வேண்டும். மானிடத்தை ஒருமைப்படுத்தும் பண்பை எடுத்துச் சொன்னார். எம்மை நாமே உணர்ந்து கொண்டு வெற்றி பெற வேண்டும். மனித நேயம் ஜீவ சேவை. அது மனிதருக்குச் செய்யும் மாபெரும் சேவையாகும். எமது துன்பங்களுக்கெல்லாம் நாமே காரணமாக உள்ளோம். எனவே அதற்கு நாமே பரிகாரம் தேட வேண்டும். உங்கள் எதிர்காலத்தை நீங்களே அமைக்க வேண்டும். சமயம் ஆன்மீகத் தேடலை ஏற்படுத்த வேண்டும். சுவாமி விவேகாநந்தர் சிக்காக்கோவில் இந்து சமயத் தத்துவத்தை விளக்கி பிரசங்கம் செய்தார். அந்த மகாபுருஷரின் பாதையைப் பின் பற்றி நாமெல்லாம் வாழ்க்கையில் வெற்றி பெறுவோம்.

## கலாபூஷணம் வித்துவாட்டி வசந்தா வைத்திய நாதன்

இந்திய, தத்துவ ஞானத்தின் சின்னம் விவேகாநந்தர்; பரமஹம்சர் கண்டெடுத்த முத்து. குருவின் சிறப்பை வாழ்வில் பதித்தவர். பாரதமென்றால் விவேகானந்தர் என்ற நிலையை ஏற்படுத்திய பெரியார். மேல் நாட்டினரைக் கீழைத்தேயம் நோக்கித் திரும்பிப் பார்க்க வைத்த மகான். இப்படி யாரிடமும் காண முடியாது.

பல ஆளுமைகளைத் தன்னகத்தே கொண்டிருந்தார். விவேகாநந்தரின் சிந்தனைகளை மதித்து ஆங்கிலேயர்கள் அவரது சீடராக மாறினர். வேதாந்தத்தில் ஒழுகி வாழ்ந்தார். வேதாந்தத்தின் விகசிப்பு பாரதம். விவேகானந்தரின் வேதாந்தம் மேலானதாகக் கொள்ளப்பட்டது. வேதாந்தத்தை அனைவரும் புரிய முடியாதிருந்தது. சுவாமி விவேகாநந்தர் அதை மிகவும் இலகுவான முறையில் மக்களுக்குப் போதித்தார். நுண்மையான விளக்கங்களைக் கொடுத்தார். உள்ளங்கை நெல்லிக் கனியாக வேதாந்தத்தைத் தன்னகப்படுத்தி இருந்தார். வேத ஞானத்தைக் கேட்கக் கூடாது, கற்கக் கூடாது என்ற நிலையை கட்டுடைப்புச் செய்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதத்தைப் புரிந்து கொள்ள ஆன்மா வேண்டும். ஆண்டவனும் ஆன்மாவும் ஒன்றென்றார். விவேகானந்த சுவாமிகள் வாழ்ந்த காலம் கொஞ்சமென்றாலும் பல சாதனைகளையும் செய்தார். இதே சமயம் ஆதி சங்கரரும் குறுகிய காலமே வாழ்ந்து புரட்சி செய்த மகாபுருஷர் தான். யாகம் என்பது தியாகம். மனிதருக்கு உள்ளுணர்வு தேவை. மன ஒடுக்கம் வேண்டும். உடல் பணிந்தால் அகம் பணியும். கிரியைக்கு மன ஒடுக்கம் வேண்டும். பாமரரும் உணரும் வகையில் வேதத்தை எளிமைப்படுத்த வேண்டும். அதையே சுவாமி விவேகானந்தர் செய்தார். பரமஹம்சருக்கு வாய்த்த மாணிக்கமே அவர். பாடசாலையில் விவேகாநந்தரின் திருவாக்குகளை எழுதி வைத்துப் பரப்பச் செய்ய வேண்டும். ஒவ்வொரு குழந்தையும் அறிவுக்கடல் விவேகாநந்தரைப் பற்றி அறிந்திருக்க வேண்டும்.

*கலாசார நிகழ்வில் சக்தி இல்ல மாணவிகள் குழுப்பாடலிசைத்து சபையோரை மகிழ்வித்தனர். லக்சுமி ஸ்ரீதரன் தயாரிப்பில் செல்வன் சத்தியமூர்த்தி நடனமாடினார்.*

*கொழும்பு விவேகானந்த சபை பொதுச் செயலாளர் எஸ்.விவேகானந்தன் நன்றியுரை தெரிவிக்க நிகழ்வு தேவாரப் பாடலோடு நிறைவு பெற்றது.*

- 23.01.2014

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 61

## 'புதிய தளம்' சஞ்சிகை ஆய்வு

இலங்கை சுதந்திரமடைந்து ஆறு தசாப்தங்களுக்கும் மேலாகிவிட்டது. அது போக்குக் காட்டும் சுதந்திரமாகவே இந்நாட்டின் நற்பிரஜைகளால் உணரப்படுகின்றது. இந்நாட்டின் அரசியல், மக்கள் பண்பாடு என்பவற்றில் வெளிநாடுகளின் மேலாதிக்கமே இதற்குக் காரணமாக அமைகின்றது. அந்நியநாடுகள் எம்மைப் பகடைக்காயாக்கிக் கொண்டிருக்கும் இந்நிலையிலிருந்து மக்களை மீட்டெடுக்கும் இலக்கில் அவர்களுக்கு உரிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக புதிய பண்பாட்டுத் தளம் என்ற அமைப்பு 'புதிய தளம்' என்ற இரு திங்கள் சஞ்சிகையை வெளியிடுகின்றது. இதன் வெளியீட்டு விழா, மூத்த முற்போக்கு எழுத்தாளர் நீர்வை பொன்னையன் தலைமையில் 05.12.2013 ஆம் திகதி கொழும்பு தமிழ்ச் சங்க விநோதன் மண்டபத்தில் நடைபெற்றது.

**வரவேற்புரை:**

**லெனின் மதிவானம் (உதவிப் பணிப்பாளர், பாடநூல் வெளியீட்டுப் பிரிவு கல்வி அமைச்சு)**

புதிய பண்பாட்டுத் தளம் தனது செயற்பாட்டின் முதலாம் ஆண்டினை நிறைவு செய்துள்ளது. வெகுஜன அமைப்பாகவே இது அதன் செயற்பாடுகளை முன்னெடுக்கும். கடந்த காலத்தில் சமூக மாற்றத்துக்காகச் செயற்பட்டுள்ளோம். இங்கு வெளியிடப்படும் 'புதிய தளம்' சஞ்சிகை இந்த அமைப்பின் ஆன்மாவாகத் திகழும் மார்க்சியப் பிரயோகத்தில் ஆழ்ந்த அக்கறை கொள்ள வேண்டும். நேச சக்திகளை அந்நியப்படுத்தும் நோக்கமில்லை. எந்தவொரு கட்சியையும் குழுமத்தையும் சார்ந்ததல்ல இந்த அமைப்பு. கடந்த காலத்தவறுகள் சில அமைப்புகளை பின் நகரவும் செய்துள்ளன. சமூக மாற்ற விமர்சனம் பற்றிப் பார்க்க வேண்டிய கடப்பாடும் உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தலைமையுரை :**
**நீர்வை பொன்னையன் (மூத்த முற்போக்கு எழுத்தாளர்)**

புதிய பண்பாட்டுத் தளம் புதிய ஜனநாயகம், புதுவாழ்வு, புதிய பண்பாட்டுத் தளத்தை நோக்கிப் பயணிக்கும். இதற்குச் சஞ்சிகையொன்றின் தேவையைத் தெரிவித்தனர். 'புதிய தளம்' சஞ்சிகையை ஆரம்பித்துள்ளோம். இதன் இலக்கை மணி எழுதியுள்ள கவிதை வெளிப்படுத்துகிறது. புதிய சிந்தை, புதிய தேடல்கள், புதிய அறிமுகம், புதிய அறைகூவல், புதிய அரவணைப்பு, புதிய ஆக்கங்கள், புதிய தீர்மானம், புதிய அனுபவம், புதிய வேலைகள், புதிய வெற்றிகள், புதிய பரிமாற்றம், புதிய தோல்விகள், புதிய விடியல்கள், புதிய செயல்முறை, புதிய நிறைவுகள், புதிய திருப்திகள் இவையே இதன் நோக்கமாகும்.

இச் சஞ்சிகையின் ஆசிரியர் குழுவில் அறுவர் உள்ளோம். தேசாபிமானி, தொழிலாளி, வசந்தம் ஆகிய ஏடுகளின் ஆசிரியர் குழுவில் நான் ஏற்கனவே இருந்துள்ளேன்.

**கருத்துரை :**
**கலாநிதி ந. இரவீந்திரன்**

புதிய பண்பாட்டுத் தளம் மக்களிடம் உண்டு. அமைப்புகளும் உண்டு. எமது அமைப்புச் சம்பந்தமாக அட்டன், வவுனியா, கொழும்பு நகரங்களில் கருத்துப் பகிர்வு ஒன்று கூடல்களை நடாத்தினோம். இதில் எல்லோரும் பங்குபற்றினர். ஆராய்ந்தோம். புதிய பண்பாட்டுத் தளம் கூட்டு முயற்சியாகும்.

எந்தவொரு அமைப்பின் திணிப்புகளுக்குள்ளும் அகப்படமாட்டோம். நாமென்ற மேலாதிக்கப் போக்கும் எமக்கு வராது. மிகசி சரியான கருத்து நிலையில் இருப்போர் நாங்களெனச் சமூகத்தைப் பிரிப்பது தவறு. மேலாதிக்கம் தலையெடுத்தால் இருந்ததும் இல்லாது போகும்.

மகாத்மா காந்தி அகில இந்திய காங்கிரஸுக்குள் செயற்பட முடியாதிருந்தது. அவரை மற்றவர்கள் விடவில்லை. அவரிடம் சர்வாதிகாரப் போக்கிருந்திருந்தால் தொடர்ந்து இருந்திருப்பார். அவரது இலக்காகவிருந்த இந்திய நாட்டின் சுதந்திரம் கிடைத்த பின் காங்கிரஸ் கட்சியை விட்டு வெளியேறினார்.

பல கருத்தியல்களோடு இந்தப் புதிய பண்பாட்டுத் தளத்தில் இருப்பவர்கள் சந்தித்து நல்ல முடிவுக்கு வருவோம். இதில் அரசியல் இல்லை. புதிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்பாட்டை உருவாக்குவதே இதன் செயற்பாடு. இங்கு அரசியல் கட்சி சார்ந்தவர்களும் இருக்கிறோம்.

ஆனால், அரசியல் இல்லை. வெவ்வேறு பாதைகளில் பழக்கப்பட்டோர் ஒன்று சேர்ந்த தீர்மானங்களை எடுக்கிறோம். புடம் போட்டு எடுக்கிறோம். விலகல் எங்குண்டென்பதைக் கண்டுபிடித்து அமைப்புகளுக்குள் ஐக்கியத்தை ஏற்படுத்த முடியும். கருத்துக்களை ஜனநாயகப் பண்போடு விவாதிக்க முடியும். மாசேதுங்கும் கூட்டு முடிவைத் தான் வற்புறுத்தினார். புதிய தளம் சஞ்சிகையில் மக்கள் நலன் சார்ந்த ஆக்கங்களே வெளியாகும்.

**ஆய்வுரை :**

**ஆய்வறிஞர் வ.செல்வராஜா (உப பீடாதிபதி, ஸ்ரீபாத கல்வியியல் கல்லூரி)**

இலங்கை மக்கள் வேறு வேறான திசைகளில் இயங்கிக் கொண்டிருக்கின்றனர். ஒன்றுபட்ட இலக்கில் செல்வதற்கு இடமில்லை. கிறிஸ்தவர்களில் கைவைக்க ஆரம்பித்தனர். பின் முஸ்லிம்களில் பகைமை காட்டினர். சிங்களவர், தமிழர் ஒன்றிணைவும் காலப்பபோக்கில் முடக்கப்பட்டது. இந்நாட்டின் பொருளாதாத்தின முதுகெலும்பாக உழைப்பவர்கள் மலையகத் தொழிலாளர்கள் அவர்களது வாக்குரிமை பறிக்கப்பட்டு அவர்களையும் முடக்கினர். அவர்கள் அரசியல் அநாதைகளாக்கப்பட்டனர். உழைக்கும் மக்களுக்கு எதிரான செயற்பாடு இதுவாகும். தொழிலாளருக்கு எதிராக அடக்கு முறை கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது. இன்று மலையகத்தில் போராட்டங்கள் செய்ய முடியாத நிலை உண்டு. இது முழு இலங்கைக்குமான பிரச்சினை.

இப்பிரச்சினை சம்பந்தமான கட்டுரை தரமானதாகவுள்ளது. சிங்கள மக்கள் தங்கள் மத்தியிலும் பிரச்சினை உள்ளதென்பதைப் புரிந்துக் கொள்ள முடியாத நிலையில் உள்ளனர். நீர் நஞ்சாகும் தன்மை அங்கிருப்பதை நாடறியும். இங்குள்ள சிறுபான்மை மக்களது பிரச்சினை மிகவும் ஆழமானதாகும். சிங்கள மக்கள் மத்தியில் எந்தளவுக்குப் பிரச்சினை உண்டென்பதை 'புதிய தளம்' கட்டுரை சுட்டுகிறது. ஆனால், பிரச்சினை இல்லையென்றதை நம்ப வைக்க முயற்சிகள் நடக்கின்றன. கட்டுரையில் பிரச்சினைகள் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளன.

சர்வதேசங்கள் பிரச்சினையை தீர்த்து வைக்குமெனத் தமிழ்த் தலைவர்கள் ஆரூடம் சொல்கின்றனர். தமிழ்ப் பிரச்சினை இப்போது சர்வதேசப் பிரச்சினை ஆக்கப்பட்டுள்ளது. இந்தியா எம்மை அனுசரிக்கவில்லை. ஜவஹர்லால் நேருவந்த போது மலையகத் தமிழருக்கென்றொரு அமைப்பை அமைக்கச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொன்னார். சோழர் ஏன் எமது பிரதேசங்களைப் கைப்பற்றினர்? இங்கொரு சோழப் பேரரசை உருவாக்குவதே அவர்கள் நோக்கமாக இருந்தது. இந்நாட்டை இந்தியா தனது நலனுக்காகவே பயன்படுத்துகின்றது. இந்தியாவே இயக்கங்களையும் வளர்த்தது. இந்தியா பிராந்திய நலனை முன்வைத்து செயற்படுகின்றது. தமிழ்நாடு தனது ஆட்சி நலனுக்காக இலங்கைத் தமிழர் பிரச்சினையைப் பயன்படுத்துகின்றது. எவரிடத்திலும் நேர்மை இல்லை. ஒரு காலத்தில் அமெரிக்க மேலாதிக்கம் இருந்தது.

இன்று சீனா அதைச் செய்கிறது. அமெரிக்கா சீனாவிடம் கடன் வாங்குகின்றது. இவைகள் மூலமாகச் சாதாரண பொது மக்கள் தான் பகடைக் காய்களாக மாறுகின்றனர். வீதிகள் ஏன் விஸ்தரிக்கப்படுகின்றன? இராணுவம் உடனடியாக வேண்டிய இடத்துக்குச் செல்வதற்கு. புதிய தளங்களுக்குப் பொருட்களைக் கொண்டு செல்வதற்காக தாராளமயம், உலகமயமாக்கல் இவைகள் மூலமாகச் சாத்தியமாக்கப்படுகின்றன.

எழுத்துப் பிழைகள் புனை கதைகளை விளங்கிக் கொள்ளத் தடையாக இருக்கும். புதிய தளம் சஞ்சிகையில் பிரசுரமாகியிருக்கும் சிறுதைகளிலும் அது காணப்படுகின்றது. வாக்கியங்கள் ஒழுங்காக அமையவில்லை. புதிய தளத்தின் தேடல், நெடுந்தீவு என்ற கட்டுரையில் அருமையான தகவல்கள் உண்டு. இதுவரை எந்தவொரு சஞ்சிகையிலும் இத்தகைய கட்டுரை வெளிவரவில்ல. இதைப் படித்த போது மலையகத்தின் நினைவு தான் வந்தது. இப்படி ஒவ்வொரு ஊருக்கும் கட்டுரை எழுத வேண்டும். இது நல்லதொரு எடுத்துக்காட்டு.

றிஸ்வானின் இலங்கையின் பொருளாதாரம் என்ற தலைப்பிலான கட்டுரை பொருளியல் மாணவருக்கு உரியதாகும். தேயிலை, இறப்பர் இந்நாட்டுக்கு நல்ல வருவாயை ஈட்டித் தந்தன. மலையக மக்களின் பிரதேசங்கள் சிங்கள மக்களுக்குக் கொடுக்கப்பட்டதால் மலையகத் தமிழருக்கு நட்டமே ஏற்பட்டது. தனியார் கொம்பனிகள் இலாபத்தைக் கருத்தில் கொண்டவை. தோட்டங்களை சரியாகப் பராமரிப்பதில்லை. இலங்கைத் தேயிலை தரத்தில் மதிப்பானது. அதை இந்தியத் தேயிலையோடு கலப்படம் செய்து அனுப்புகின்றனர். சந்தைப்படுத்துகின்றனர். இதனால் இலங்கைத் தேயிலையின் மதிப்புக் குறைகின்றது.

'கைபேசி' கட்டுரையும் மாணவருக்கு ஏற்றது. வரலாறு பேசுகின்றது. மணி புத்திரியின் மத்ராஸ் கஃபே சினிமாப் பட விமர்சனம் நல்லது. இந்திய தமிழ்ச் சினிமாவுக்கு இங்குள்ள இனப்பிரச்சினை நல்ல தினியாக இருந்துள்ளது. கன்னத்தில் முத்தமிட்டால், ஊமை விழிகள் ஆகிய படங்கள் அத்தன்மையானவையே. அத்தன்மையைக் கட்டுரை சொல்கிறது. மாற்றான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுதியுள்ள 'சிப்பிலியாட்டம்,' கட்டுரை எனக்குப் பிடித்தமாக இருந்தது. சிறுவயதில் விளையாடிய கீச் சுக் கீச்சுத் தம்பளம்.. நினைவுக்கு வந்தது. இவ்விளையாட்டை இன்றைய அரசியலோடு ஒப்பிட்டுள்ளார். கட்டுரையை மேலும் விரிவுபடுத்தியிருக்கலாம். எமது விடுதலை தொலைகின்றது. எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

'தருவது நாங்கள் தீர்மானிப்பது நீங்கள்' என்ற போக்கானது ஊடகங்களின் போலி முகம் இலங்கை வரவு - செலவுத் திட்டம் பண முதலைகளைத் தான் பாதுகாக்கின்றது. ஊடகத் தகவல்களை வைத்தே தீர்மானிக்கப்படு கிறது. எது தீர்மானிக்கப்பட வேண்டும் என அவர்கள் விரும்புகிறார்களோ, அதற்கு ஏற்ற தகவல்களையே தேர்ந்து தருகிறார்கள் என்கிறது புதிய தளம். Credir Card ஆல் அதை வழங்கும் நிறுவனத்துக்கே இலாபம். மா.பாலசிங்கம் (மா.பா.சி.) நேர்காணல் வாசிக்க வேதனையாக இருந்தது. சாதி வேற்றுமை பார்த்தல் இன்றும் உண்டு. இதனால் ஆளுமை உள்ளவர்கள் முன்னுக்கு வர முடியாதிருக்கின்றது. இந்த விடயத்தில் புரட்சிகர தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தின் பணி மிக முக்கியமானதாகும். முதல் முதலில் ஆயுதப் போரட்டத்தில் ஈடுபட்டது. இதுவேயென்றும் சொல்லலாம்.

மலயகத் தேசியம் பற்றிய தோழர் இளஞ்செழியனின் 'சமூக நோக்கும் பங்களிப்பும்' என்ற பொருளில் லெனின் மதிவானம் எழுதியுள்ளார். மலையக மக்களின் இந்த வளர்ச்சியில் இளஞ்செழியனுக்குப் பெரும் பங்குண்டு. இலங்கை திராவிட முன்னேற்றக் கழகத்தை அமைத்து இயங்கினார். 1948 ஆம் ஆண்டு மலையகத் தமிழரின் பிரஜாவுரிமையைப் பறித்தது. இந்த மண்ணோடு சொந்தம் கொண்டாட அவர்களுக்கு தடையாக இருந்தது இந்த மண்ணுக்காக உழைக்கும் நாங்கள் இந்த மண்ணுக்குச் சொந்தமென்ற கருத்தை இளஞ்செழியன் முன்வைத்தார். இப்போது இந்தியாவுக்கோ இலங்கையின் வடக்கு, கிழக்குக்கோ போவதற்கு மலையகத் தமிழர் தயாரில்லை.

ஒரு சர்வதேச போர்ராளியின் உயிர்ப்பும் அர்ப்பணிப்பும் என்ற தலைப்பில் ந. இரவீந்திரன் டாக்டர் நார்மன் பெத்யூன் பற்றி எழுதியுள்ளார். மக்கள் போராட்டம் அன்பு மார்க்கமானதாக இருக்க வேண்டும். இன, மத, சாதி, பிரதேச அணுகுமுறை இருக்கக்கூடாது. பேராசிரியர் க.கைலாசபதியின் 'பழமையும் புதுமையும்' என்ற கட்டுரை மறுபிரசுரம் செய்யப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு காலத்திலும் காலத்துக்கு ஏற்ற வகையில் இலக்கியம் வளரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழலக்கியத்தின் புதிய சகாப்தத்துக்குள் அடியெடுத்து வைத்தவர் மகாகவி சுப்ரமணிய பாரதியார் தான்.

இலக்கிய வாதிகள், அரசியல்வாதிகள், ஆர்வலர்கள் ஆகியோரது காத்திரமான கலந்துரையாடலோடு நிகழ்ச்சி நிறைவு பெற்றது.

-28.01.2014

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 62

## நடராஜா ஜனகனின் 'இலங்கையில் இடதுசாரி இயக்கத்தின் வரலாறு' ஆங்கில நூல்

முடியாட்சியின் அட்டூழியத்தால் மக்கள் பல விதங்களில் அல்லல் பட்டதால் அதை நிராகரித்து ஜனநாயக இடதுசாரிய ஆட்சிகள் உலகில் நிலை கொண்டன. சீனா, ரஷ்யா போன்ற நாடுகளில் கார்ல்மார்க்ஸ், மாசேதுங் ஆகியோரின் பொதுவுடைமைத் தத்துவத்தை உள்வாங்கி சாதாரண மக்களுக்கு உரிய இடத்தைக் கொடுக்கும் சோசலிச ஆட்சிகள் அமைந்தன. இவ்வலை உலகம் முழுவதும் பாய்ந்தது. இலங்கையில் 1930 களில் செறிவைப் பெற்றது.

1950, 1960 கள் இலங்கை இடதுசாரிய இயக்கத்துக்குப் பொற்காலமாக அமைந்தன. இப்பாதையை ஏற்றுக் கொண்ட டாக்டர் என்.எம்.பெரேரா இந்நாட்டின் எதிர்க்கட்சித் தலைவரானார். ஒரு நாட்டின் எதிர்க்கட்சித் தலைவரே அடுத்த அரசாங்கத்தின் தலைவரென்ற ஜனநாயகப் பாரம்பரியம் ஒரு காலத்தில் இருந்தது. ஆனால் அது இலங்கையில் பேணப்படவில்லை. முற்று முழுதான இடதுசாரிய ஆட்சி இங்கு மலரவில்லை. இதற்குரிய காரணத்தை அறிவதற்கு இலங்கை இடதுசாரிய இயக்கத்தின் வரலாற்றை அறிந்திருக்க வேண்டும். இதைச் சாத்தியப்படுத்தும் இலக்கோடு வெளிவந்துள்ள நூலே History of Left Movement in Sri Lanka. எழுதியவர் நடராஜா ஜனகன்.

இந்நூலின் வெளியீட்டு விழா 30.01.2013 ஆம் திகதி கொழும்புத் தமிழ்ச் சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில் நடைபெற்றது. தோழர் வி.திருநாவுக்கரசு தலைமை தாங்கினார். சோஷலிசத்துக்காகப் போராடி உயிர் நீத்த தோழர்களுக்காகச் சபையில் இரு நிமிட மௌனம் அனுட்டிக்கப்பட்டது. தோழர் முத்து மாதவன் கவிதை வாசித்தார். தலைமையுரை ஆங்கிலத்தில் நிகழ்த்தப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நூல் மதிப்பீட்டுரை :**
**கலாநிதி நிர்மல் ரஞ்சித் தேவசிறி**
**(கொழும்பு - பல்கலைக்கழகம்)**

இடதுசாரிகள் தமிழ் உரிமைப் போராட்டத்துக்கு ஆதரவாகவே உள்ளனர். முன்னர் கலாசாரத்தை அறியாதவர்களென்ற குற்றச்சாட்டு இடதுசாரிகள் மீது சுமத்தப்பட்டது. 15 ஆண்டுகள், பொதுவுடைமை கோட்பாடுகளின் தந்தை கார்ல் மார்க்ஸ் பிரித்தானியாவில் வாழ்ந்தே அவரது தத்துவத்தை எழுதினார்.

இடதுசாரி இயக்கத்தைப் பற்றி எழுத முனைவது ஒரு சவாலான முயற்சியாகும். இருந்தும் தோழர் ஜனகன் பொறுப்புணர்ச்சியோடு துணிந்து 'History of Left Movement in Sri Lanka' என்ற ஆங்கில நூலை எழுதியுள்ளார். இடதுசாரிகள் தொழிலாளர் வர்க்கத்தைச் சாராத வர்க்கத்தினரின் ஆதரவையும் பெற்றவர்கள். இந்நூலாசிரியர் இடதுசாரித் தத்துவார்த்தப் பாரம்பரியத்தையும் தொடர வேண்டும். 1960, 1970 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற இடதுசாரிகள் சம்பந்தப்பட்ட நிகழ்வுகளையும் எழுத வேண்டும். இலங்கையிலேற்பட்ட புதிய அரசியல் திருப்பு முனைகள் 1953 ஆம் ஆண்டில் நடைபெற்ற நாடாளவிய ஹர்த்தாலையும் விலாவாரியாக ஆவணப்படுத்த வேண்டும். தொழிற்சங்க வாதிகள் முற்று முழுதாகப் புரட்சிக்காரர்களாக இருக்க முடியாதெனத் தோழர் பாலா தம்பு கருத்துரைத்துள்ளார். எதிர்காலத்தில் இடதுசாரிகள் எப்படி இருக்க வேண்டும் என்பது பற்றிய நூல்களும் எழுதப்பட்டு வெளிவர வேண்டும்.

(ஆங்கில உரையின் சுருக்கமான தமிழாக்கம்)

**கருத்துரைகள் :**
**எஸ். ஏ. ஜோதிலிங்கம்**
**(அரசியல் ஆய்வறிஞர்)**

தோழர் ஜனகன் இந்நூலை எழுதியதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன். யுத்த நிறுத்த காலத்தில் மொழி ஆய்வுமையத்தின் ஊடாகத் தமிழர் பிரச்சினைகளைச் சிங்கள மக்கள் மத்தியில் கொண்டு சென்றோம். அநுராதபுரம், குருநாகல், களுத்துறை போன்ற சிங்கள ஊர்களில் சமாதானப் பயிற்சிப் பட்டறைகளை நடாத்தினோம். அவைகளில் இந்நூலாசிரியர் ஜனகனும் உரையாற்றினார். அப்போது இலங்கை இடதுசாரி இயக்க வரலாற்றை நூலாக்க வேண்டுமென்று அவரிடம் சொன்னேன். அது இப்போது எமக்குக் கிடைத்திருப்பது பெரு மகிழ்ச்சியாகும். 1935

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல் லங்கா சமசமாஜக் கட்சியும், 1947 இல் இலங்கை கொம்யூனிஸ்ட் கட்சியும் தொடக்கப்பட்டன. இந்த இடதுசாரிகள் தொழிலாளரைத் திரட்டி அவர்களது நலன்களுக்காகப் போராடினர். வெற்றியும் பெற்றனர்.

பல்லின நாடுகளில் சுய நிர்ணய உரிமை வழங்க வேண்டுமெனப் போராடிய போது இடதுசாரிகளும் பங்குபற்றினர். பாராளுமன்ற ஆட்சி முறையில் அக்கறை காட்டியதாலேயே இங்கு இடதுசாரி இயக்கம் நலிந்தது. சிங்களம் மட்டும் என்ற சட்டத்தை இடதுசாரிகள் ஏற்கவில்லை. ஐக்கிய முன்னணி அரசாங்கம் அமைக்கப்பட்டது. 1964 இல் ஸ்ரீமா- சாஸ்திரி ஒப்பந்தம் கொண்டு வரப்பட்டது. அதை அரசிலிருந்த இடதுசாரிகள் எதிர்க்கவில்லை. 1965 இல் டட்லி - செல்வநாயகம் ஒப்பந்தத்தை எதிர்த்தனர். 1972 அரசியல் யாப்பு இடதுசாரித் தலைவராலேயே உண்டாக்கப்பட்டது. இப்படியான சறுக்கல்களே இடதுசாரிகளை நலிய வைத்து, இன்றைய நிலைக்கு கொண்டுவர வைத்தன. தமிழ் மக்களின் நம்பிக்கையை இழக்கவும் வைத்தன.

நவ லங்கா சமசமாஜக் கட்சித் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன தமிழ் பேசும் மக்களின் நம்பிக்கையையும் அனுசரித்துச் செயற்படுபவர். நவ லங்கா சமசமாஜக் கடசி இடதுசாரியக் கொள்கைகளிலிருந்தும் சறுக்காமலே செயல்படுகின்றது. அடி நிலை மக்களையும் விடுதலை இயக்கங்கள் கவனிக்க வேண்டும். அனைத்துத் தரத்தினரையும் இணைத்த ஐக்கிய முன்னணியே தேவை. ஒடுக்கப்படும் மக்கள் மத்தியில் மாற்றுச் சிந்தனையை உண்டாக்க வேண்டும். தொழிலாளர் இயக்கங்களைக் கட்டியெழுப்ப வேண்டும். அணி திரட்ட வேண்டும்.

தமிழ்த் தேசியப் போராட்டம் வெற்றி பெறவில்லை. அது முள்ளி வாய்க்காலோடு முடிந்துவிட்டதாக முடிவு செய்வது தவறாகும். இன்று சர்வதேசக் கதவுகள் திறந்துள்ளன. பேராசிரியர் கா.சிவத்தம்பி சர்வதேசங்களால் எமது கனவு நிறைவேற்றப்படும் என்று அன்று சொன்னார். தமிழ்த் தரப்பினர் தமிழ் அரசியலைச் சர்வதேச மயப்படுத்த வேண்டும். வடக்கில் தற்போது நடந்து கொண்டிருக்கும் ஆக்கிரமிப்புகளைத் தடுக்க முயற்சிக்க வேண்டும். மன்னராட்சிக் காலத்து ஆக்கிரமிப்பு அங்கு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. நிலம், மொழி, கலாசாரம், பொருளாதாரம் எல்லாமே ஆக்கிரமிப்புக்கு உட்பட்டுள்ளன. யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு விஞ்ஞான ரீதியான உதவிகளை ஏற்படுத்த வேண்டும். தாயக மக்களும் இடம்பெயர்ந்தோரும் இணைந்து இதைச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்ய வேண்டும். இதற்குத் தமிழ்நாட்டோடு சேர்ந்து வேலைத்திட்டமொன்றை ஏற்படுத்த வேண்டும். (தோழர் எஸ்.சிவகுருநாதன் இவ்வுரையைச் சிங்களத்தில் மொழிபெயர்த்துப் பேசினார்).

**க.மு.தர்மராசா**
**(சட்ட ஆலோசகர்: பிரசித்த நொத்தாரிசு)**

கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன நன்றி மறக்காதவர். தனக்கு 40 வருடங்களுக்கு முன் செய்த உதவியொன்றை நினைவு கூர்ந்து அவர் சில தினங்களுக்கு முன் பத்திரிகைகளில் எழுதியிருந்ததைப் படித்தேன். நீதிமன்ற வழக்கொன்றில் அமரர் குமார் பொன்னம்பலம், தோழர் விக்கிரமபாகுவுக்காகப் பத்து வருடங்கள் பேசியுள்ளார். கண்டியில் இருவரும் சந்தித்த போதே இந்த வழக்குக் குமார் பொன்னம்பலத்துக்குத் தெரியவந்தது. தான் பேசுவதாக ஒப்புக் கொண்டு தோழர் விக்ரமபாகு வுக்காகப் பேசியுள்ளார். இதன் மூலமாக இன ஒருமைப்பாட்டுக்குப் பலம் கொடுத்தார். 1947 ஆம் ஆண்டு ஜீ.ஜீ.பொன்னம்பலம் இந்நாட்டில் இடதுசாரி அரசொன்றை அமைக்கும்படி கேட்டார். அது நடந்திருந்தால் இக்கால அனர்த்தங்கள் எதுவும் நடந்திருக்காது. யாழ்ப்பாணத்தில் நடந்த போராட்டங்களில் கட்சிகளோடு இணைந்து போராடிய, இனவாதம் பாராட்டாத பெருந்தலைவர் தோழர் விக்ரமபாகு. இத்தகையோருக்கு உதவும் கடமைப்பாடு சகல மக்களுக்கும் உண்டு. ஒவ்வொரு தமிழனுக்கும் உண்டு.

**சிறப்புரை:**
**கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன**
**(பொதுச்செயலாளர், நவ லங்கா சமசமாஜக் கட்சி)**

நவ லங்கா சமசமாஜக் கட்சி இன்று சரியான வழியில் தான் சென்று கொண்டிருக்கின்றது. இங்கு சொல்லப்பட்டது போல் அன்றைய இடதுசாரிக் கட்சிகள் போல் பிழையான வழிகளில் செல்லவில்லை. இன்றைய அரசியல் நிலையைத் தான் அரசியல் கட்சிகள் தற்போது எடுத்தாள வேண்டும். மார்க்சிய சிந்தனைகளைச் சரியான வழியிலேயே எடுத்துச் செல்கிறோம். இடதுசாரிய இயக்கம் தான் இந்நாட்டில் நிலப்பிரபுத்துவத்துக்கு எதிராகவும் ஏகாதிபத்தியத்துக்கு எதிராகவும் போராடியது.

புதிய தாராள வாண்மைவாதம் வந்த சூழலில் இனவாதிகள் பேரினவாதத்தைக் கொண்டு வந்தனர். இதை ஒழிப்பது எம் கடமையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்த்துச் செயற்பட வேண்டும். நவ லங்கா சமசமாஜக் கட்சியினராகிய நாங்கள் தமிழ்ப் போராட்டத்தை ஆதரித்தோம். 1988, 1989 களில் ஜாதிக விமுக்தி பெரமுனவின் (ஜே.வி.பி.) போராட்டங்கள் மிக மோசமான முறையில் இங்கு அடக்கப்பட்டன. இது சம்பந்தமாகக் கலந்தாலோசிக்க அன்றைய அரசு வட்டமேசை மாநாடொன்றைக் கூட்டியது. நாமதில் கலந்து கொள்ளவில்லை.

எமது தோழர் மகேந்திரன், தமிழ்ப் பிரச்சினையை ஜெனீவாவில் எடுத்தாள ஒத்துழைத்தார். தமிழர் போராட்டம் வெற்றி பெற அனைத்து தமிழரும் ஒன்றுபட வேண்டுமெனக் கோரினார். புலம்பெயர் அமைப்புகளோடு இணைந்து பணியாற்ற உள்ளோம். 2010 ஆம் ஆண்டில் ஐம்பதாயிரத்துக்கும் மேற்பட்டோர் கூடிய கூட்டத்தில் பங்கு பற்றினோம்.

நான் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வந்திறங்கிய போது, அன்றைய மீன்பிடி பிரதியமைச்சர் கைது செய்ய நடவடிக்கை எடுத்தார். நிறைவேறவில்லை. எனது வாகனம் நொருக்கப்பட்டது. இருந்தும் நான் உயிர் தப்பினேன்.

தமிழ் நாட்டில் கலைஞர் மு.கருணாநிதி கூட்டிய ரெசோ மகாநாட்டில் பங்கு பற்றினேன். ஐ.ரி.என்.தொலைக்காட்சி என்னைத் துரோகி எனப்பிரசாரம் செய்தது. இப்படியாக யாழ்ப்பாணத்தில் நடக்கும் போராட்டங்களுக்கும் ஒத்துழைப்பு வழங்குகின்றோம்.

புலம் பெயர்ந்தோர் அமெரிக்கா, பிரித்தானியா போன்றவை மீது அதீத நம்பிக்கை வைத்துள்ளனர். சோனியா காந்தி பிரச்சினையைத் தீர்த்து வைப்பார் என எதிர்பார்த்தனர். இதே அமெரிக்காவும் பிரித்தானியாவும் சோனியா காந்தியுமே போரை வெல்ல மகிந்த அரசுக்கு உதவினர். இன்று நடாத்தப்படுவது சர்வாதிகாரமும் பாஸிஸமுந்தான். இராணுவத்தினர் பொலிஸாரின் கடமைகளையும் செய்கின்றனர். வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் செய்யும் இராணுவம் பற்றிய முறைப்பாடுகளுக்கும் மத்திய அரசு எதுவித நடவடிக்கையும் எடுப்பதில்லை. செவிசாய்ப்பது மில்லை. இத்தகைய சர்வாதிகார, பாஸிஸப் போக்கு வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மட்டுமல்ல தென்னிலங்கையிலும் தொடர்கின்றது. சாதாரண மக்களது காணித்துண்டுகள் வடமாகாணத்தில் அபகரிக்கப்படுகின்றன. தென்னிலங்கையில் 1000க்கும் மேற்பட்ட வீடுகள் உடைக்கப்பட்டுள்ளன. தோட்டத் தொழிலாளர்கள் இடமாற்றப்படுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படிப்பட்ட மோசமான அரசின் ஆட்சியில் நாமெல்லோரும் பாரிய அளவில் ஒன்றுபட வேண்டும். நவ லங்கா சமசமாஜக் கட்சி ஐக்கிய தேசியக் கட்சியோடு கூட்டுச் சேரவில்லை. ஆனால், மக்கள் போராட்டத்தில் அதனோடு இணைந்தோம். பௌத்த பிக்குகள் கூட்டத்தை குழப்ப முன்வந்தும் கூட்டத்தை தொடர்ந்து நடாத்தினோம். எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுவோம். மக்கள் எங்களுக்கு ஆதரவு தர வேண்டும்.

(சிங்கள உரையை எஸ்.சிவகுருநாதன் தமிழில் மொழி பெயர்த்துப் பேசினார்)

*நூல் வெளியீட்டில் முதற் பிரதியை ஸ்ரீதுங்க ஸ்ரீ ஜயசிங்க பெற்றார். சிறப்புப் பிரதிகளும் வழங்கப்பட்டன.*

*நூலாசிரியர் நடராஜா ஜனகன் ஏற்புரை நிகழ்த்தினார்.*

-08.02.2014

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 63

## துரை விஸ்வநாதனின் 83ஆவது பிறந்த தினம்

சமூகத்தின் விழிப்புக்கும் மேம்பாட்டிற்கும் இலக்கியம் விசை கொடுக்கு மென்பதை நன்குணர்ந்து, இலக்கியச் சேவையில் சுவடிட்ட வர்த்தகப் பெரியார் 'துரைவி,' துரை விஸ்வநாதன். நொந்து போய்க் கொழும்பு வந்த தனக்கும் மல்லிகைக்கும் மீண்டுமொரு விடியலை ஏற்படுத்தித் தந்தவர் துரை விஸ்வநாதனென இன்றும் மல்லிகை ஜீவா பொச்சடித்துச் சொல்வார். ஈழத்து இலக்கியப் படைப்பில் இத்தகைய கணிப்பைப் பெற்ற பெரியார் துரை விஸ்வநாதனின் 83 ஆவது பிறந்த தினத்தை அவரது மகன் ராஜ் பிரசாத், இலக்கியவாதிகள், அபிமானிகளைக் கொழும்புத் தமிழ்ச் சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில் 01.03.2014 ஆம் திகதி அழைத்து இலக்கிய விழாவாகக் கொண்டாடினார். இந்நிகழ்வில் துரை விஸ்வநாதன் பிறந்த 83 ஆவது தினம், 2013 ஆம் ஆண்டுக்கான துரைவி விருது வழங்கல், விஷ்ணுபுரம் விருதைப் பெற்ற தெளிவத்தை ஜோசப்புக்குப் பாராட்டு ஆகிய மூன்றம்சங்களடக்கப்பட்டு, Three in one விழாவாகக் கொண்டாடப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும்.

முதலிரு நிகழ்வுகளுக்குப் பிரபல இலக்கியவாதி தெளிவத்தை ஜோசப்பும், மூன்றாம் நிகழ்வுக்குத் துரைவி ராஜ் பிரசாத்தும் தலைமை தாங்கினர்.

மங்கல விளக்கேற்றலின் பின் பெரியார் துரை விஸ்வநாதன் படத்துக்குத் துரைவிஸ்லநாதன் ராஜ் பிரசாத் மலர் மாலை சூட்டி மரியாதை செய்தார்.

அமரர்கள் துரை விஸ்வநாதன், கவிஞர் சக்தி ஏ.பாலையா, பொதுவுடைமை வாதி பிரேம்ஜி ஞானசுந்தரம் ஆகியோருக்கு 2 நிமிட மௌனாஞ்சலி செலுத்தப்பட்டது. கவிஞர் மேமன் கவி வரவேற்புரை நிகழ்த்தினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தலைமையுரை :**
**பிரபல இலக்கியவாதி தெளிவத்தை ஜோசப்**

துரை விஸ்வநாதன் பெரிய முதலாளி அல்ல. மத்திய தர வர்க்கத்தை விடச் சற்றுயர்ந்த Upper Middle Class ஐத் தான் சேர்ந்தவர். தேர்ந்த இலக்கிய வாசகர். புரவலர் ஹாசிம் உமரைப் போல் துரைவி கலந்து கொள்ளாத இலக்கியக் கூட்டங்கள் எதுவுமிருக்காது. ஏராளமான எழுத்தாளர்களை அறிந்து வைத்திருந்தார். புத்தகங்களை வாங்கி வாசித்து விமர்சனம் சொல்வார்.

எனக்கு எட்டத்தில் தானிருந்தார். அவரை நெருங்க நானும் கூச்சப்பட்டேன். 1996 ஆம் ஆண்டிலிருந்து நெருக்கமானோம். மல்லிகை ஆசிரியர் டொமினிக் ஜீவா அடிக்கடி அவரைப் போய்ச் சந்திப்பதுண்டு. 'இலக்கியத்தில் நாட்டம் மிக்கவராக இருக்கிறீர்கள். உங்கள் பெயரை இலக்கியத்தில் பதிவு செய்ய வேண்டும். துரைவி பதிப்பகமொன்றை உண்டாக்குங்கள்' என்ற ஆலோசனையைத் துரைவியின் முன் வைத்தார். 'அதன் மூலம் மலையக எழுத்தாளருக்கு உதவுங்கள்' எனவும் ஜீவா சொன்னார். 'தங்களது நூல்களை' வெளிக்கொணருவதற்கு மலையகப் படைப்பாளிகள் சிரமப்படுகின்றார்கள். மலையகச் சிறுகதைத் தொகுப்புப் போடுவோம். தெளிவத்தையிடம் சிறுகதைகள் கிடைக்கும் எனவும் சொல்லி வைத்தார்.

எனக்குத் தொலைபேசியில் தகவல் தந்தனர். ஐம்பது மலையகச் சிறுகதைகளைக் கொண்ட மலையகச் சிறுகதைகள் தொகுப்பை வெளியடத் தீர்மானித்தோம். கோ.நடேசய்யரின் 'ராமசாமிச் சேர்வையின் கதை'யை முதலாவதாகக் கொண்ட 33 சிறுகதைகளடங்கிய தொகுப்பைத் துரைவி பதிப்பகத்தினூடாக வெளியிட்டோம். 'ஈழத்துச் சிறுகதை'யின் மூலவர்கள் இலங்கையர்கோன், சம்பந்தன், வைத்தியலிங்கம் என்ற நிலைப்பாடிருந்தது. தொகுப்பில் நடேசய்யரின் சிறுகதை வந்த பின்னர் அது சில பிரச்சினைகளுக்கு அடி எடுத்துக் கொடுத்தது. துரை விஸ்வநாதனுக்கு இலக்கிய மனம் இருந்தது. மலையக மக்களின் பிரச்சினைகள் பற்றி மலையகம் சாராத படைப்பாளிகள் எழுதிய சிறுகதைகளையும் இரண்டாவது தொகுதியில் போடச் சொன்னார். இதில் அத்தகைய 50 சிறுகதைகள் தொகுக்கப்பட்டன. எங்களை ஏன் 2 ஆம் பாகத்திற்கு ஒதுக்கி வைத்தீர்களெனப் பெனடிக்ற் பாலன் கேட்டார். இரண்டாவது தொகுதியான 'உழைக்கப் பிறந்தவர்கள்' புதுமைப்பித்தனின் 'துன்பக் கேணி' என்ற சிறுகதையையும் அடக்கியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துரை விஸ்வநாதன் செய்த இப்பணிகளுக்காக அவருக்கு விழா எடுக்கிறோம். பாராட்டுகிறோம். பொருத்தமான 15 நூல்களை இலக்கிய உலகிற்குப் போட்டுத் தந்தார். ஒரு இலட்சம் ரூபா சிறுகதைப் போட்டி நடத்தினார். அற்புதமான காரியங்களைச் செய்தார். ரவீந்திர நாத் தாகூர், ஏற்படவிருந்த மரணத்திலிருந்து தப்பிய பின் நூலொன்றை வெளியிட்டார். அப்படித் துரை விஸ்வநாதனும் திடீர் வியாதியிலிருந்து தப்பியெழுந்திருந்தால் இலக்கிய உலகுக்கு நூலொன்றும் கிடைத்திருக்கும்.

**நினைவுப் பேருரை:**
**இணையத்தில் இலக்கியம்**
**உரைஞர்:**
**எம். எஸ். தேவகௌரி**
**(சிரேஷ்ட விரிவுரையாளர், இலங்கை ஊடகவியற் கல்லூரி)**

1970 களில் அடித்தளமிடப்பட்ட இணையத்தில், கடந்த ஆறாண்டுகளாக விஸ்பரூபமெடுத்திருக்கும், சமூக வலைத் தளங்கள் வரை இலக்கியம் பரிணமித்திருக்கிறது. இது இலக்கியவாதிகளின் ஒட்டு மொத்த எழுத்துச் சூழலையும் மாற்றியுள்ளது. இலக்கியம் படைப்பது இலக்கியவாதிக்கும் பிரசவமாகவே இருந்துள்ளது. கதையொன்றை எழுதிச் செம்மை பார்த்து வெகுஜன ஊடகத்திற்கு அனுப்ப வேண்டும். அது வெளியிடப்படலாம். இல்லாமலும் இருக்கலாம். வெளிவரின் நூலாக்கி, அறிமுகப்படுத்தி, விமர்சனத்தைப் பெறும் பொறிமுறைகள் இலக்கியவாதிகளின் சிந்தனைகளில் எழலாம். நீண்ட காலத்தோடு கடும் பொறுமையும் இதற்குத் தேவையாகும். இணைய வெளியீட்டு வசதி இதை மாற்றியிருக்கின்றது. இத்தகைய வெளிப்படுத்தல்களை எண்ம இலக்கியம் (இலத்திரனியல் இலக்கியம்) என்பர். இணையத்தைக் கையாளத் தெரிந்தவர்கள் தமது எழுத்தாற்றலை மிகச் சுதந்திரமாக இதனூடாக மக்கள் முன் வைக்கின்றனர். இது எண்ணங்களைப் பகிருவதற்கான சாதனமாகியும் விட்டது. அதற்குமப்பால் சுகதுக்கங்களையும் பகிருகின்றனர்.

சம காலத்தில் இணையம் இளம் எழுத்தாளரை உருவாக்கும் களமாகவும் உள்ளது. இதன் பயனாளிகளாகப் பெரும்பாலும் 18 முதல் 45 வரையிலான வயதினரே இருப்பதாக ஆய்வுகள் அறியத்தருகின்றன.

மரபார்ந்த ஊடகங்கள் மற்றும் பொருள் உற்பத்தி நிறுவனங்கள் எவ்வாறு சமூக ஊடகங்களைத் தமது உற்பத்தி நடவடிக்கைக்குப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயன்படுத்துகின்றனவோ அது போல் எழுத்தாளர்களாக இருந்தவர்கள் உற்பத்திச் சூழலை மாற்றியுள்ளனர். அது கட்டாயமாகி உள்ளது. அச்சிட்ட சிற்றிதழ்கள் பல இணையத்திலும் வெளியாகின்றன. இணையத்துக்கான இதழ்களையும் இணையத்தில் வாசிக்க முடிகின்றது. 'திண்ணை' என்ற இதழே சமூக இணையத்தளத்தின் முதல் தமிழ் இதழாக நோக்கர்களால் கொள்ளப்படுகிறது. தமிழ் முழக்கம், வரலாறு, தங்க மீன், சொல்வளம், வல்லமை, தமிழோவியம், திசைகள், பதிவுகள் இவையும் இணையச் சஞ்சிகைகளே!

இப்புதிய இணையக் கலாசாரச் சூழல் சுதந்திரமானது. செலவு குறைந்தது. இதனால் அபரிமிதமான இலக்கிய ஆக்கங்கள் கிடைக்கின்றன. இந்நிலையில் இந்தச் சமூக இணையத்தளம் நவீன இலக்கியத்தைக் கடந்து, புத்தாக்க வடிவங்களைக் கோருகிறது.

முகநூல், இலக்கியக்காரருக்கு ஒரு சுதந்திரக் களம். எவரும் எதையும் எழுதலாம். இலங்கையில் 2013 இல் எடுக்கப்பட்ட தகவலின் படி 1.5 மில்லியன் முகப்புத்தகப் பயனாளிகள் உள்ளனர். இதில் 68% ஆண்கள். 32% பெண்கள். இந்தச் சமூக வலைத்தள இலக்கியங்கள் வரம்பு மீறுவதாக அபிப்பிராயங்களும் வெளிப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இதில் வேதனை, கோபம் போன்ற உணர்வுகள் தென்படுகின்றன.

இணைய இலக்கியத்தில் ஜனநாயக முறைமை உள்ளது. அதிகார அரசியல் கிடையாது. குரலற்றவர்களாகவிருந்த விழிம்பு நிலை மக்கள், பெண்கள் இதனூடாகக் குரல் கொடுக்கும் வாய்ப்பு உள்ளது. பேசப்படாத பொருட்கள் பேசப்படுகின்றன. இந்தப் பிரவகிப்பு மொழியின் போதாமையைக் கூட இலக்கியக்காரருக்கு உணர்த்துகின்றது.

இணைய இலக்கியம் நிஜ அனுபவங்களையே முன்வைக்கின்றது. இணைய இலக்கியவாதியான சஞ்சயன் செல்ல மாணிக்கம் தானெழுதுவது சாதாரண மாணவனின் கற்பனை கலக்காத கதைகள் என்றே கூறுகிறார். யோ.கர்ணன் எழுதுபவைகளையும் அப்படித்தான் பார்க்கிறேன். அஷ்ரப் சிகாப்தீனின் முகநூல்ப் பதிவுகள் உண்மையை மறைமுகமாகத் தான் சுட்டுகின்றன.

ஒருவர் தனது கோணத்தில் இருந்து எழுதும் உண்மைகள் தான் இறுதி உண்மையாக இருக்காது. இணைய இலக்கியத்தில் மற்றவர் தன் பக்க உண்மையைப் பதிலாக எழுதுகின்ற போது உண்மையின் முகங்கள் பலவாகிவிடுகின்றன. ஊடக தர்மத்தின் மிக முக்கிய கோட்பாடும் இதுவே. செய்தி உண்மையாக இருக்க வேண்டும். ஒரு செய்தியில் பல பக்கக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருத்துக்கள் பதிவாக வேண்டியுள்ளன. இதை இணையம் சாத்தியப் படுத்துவதால் அது ஊடகவியலாளருக்கு வரப்பிரசாதமாகின்றது.

இணைய இலக்கியம், இலக்கியத்தைக் குடுவைக்குள் அடக்கிப் பார்க்க முடியாத தன்மையை ஏற்படுத்தியுள்ளது. இலக்கியம் சமூகத்தின் கண்ணாடி அல்ல. அது சமூக வரலாறு, தனி மனித வரலாறு. முகப்புத்தகப் பதிவுகளில் இவை இரத்தமும் சதையுமாக உள்ளன. இணைய இலக்கியம் இதுவரை தொடர்ந்த புனித எண்ணங்களைப் புரட்டிப் போடும் புதிய இலக்கிய வடிவமாக முன்னிற்கிறது. விமர்சகர் என்ற தனி அலகை நெகிழ்வு படுத்துகிறது. இணைய இலக்கியப் பணிகளின் சொல், பொருள், வளங்களென்பன விரிவடைந்திருக்கும். உலகெங்கும் சிதறிக்கிடக்கும் தமிழரின் வாழ்வை, சுகதுக்கங்களைத் தெரிந்து கொள்ளும் வசதி இதிலுண்டு. 2020 இல் முழு உலகமுமே முகப்புத்தகத்தில் நிற்குமாமென ஆய்வொன்று கூறுகின்றது.

கம்பராமாயணம், திருக்குறள், புதுமைப்பித்தன் சிறுகதைகள், போல் அல்லது எஸ்.பொ., டொமினிக் ஜீவா, நீர்வை பொன்னையன், திக்குவல்லை கமால் போன்றோரது படைப்புகளைப் போல் இன்றைய சிறுகதைகள் நின்று நிலைக்குமா? என்ற கேள்வி எழுகின்றது. அப்படியாகில் அவைகளை எண்ணிமப்படுத்துவது தான் ஆக்கபூர்வமான செயலாகும். அதுவும் இணையத்தில் நடந்து கொண்டு தான் உள்ளது. பழந்தமிழ் இலக்கியங்கள், நவீன இலக்கியங்கள் எண்ணிமப்படுத்தப்பட்டு எதிர்காலச் சந்ததிக்காகப் பாதுகாக்கப்படுகின்றன. நிலைப்பதெல்லாம் தரமானது, அழிவதெல்லாம் தரமற்றதென்ற கதைக்கு இணையச் சூழலில் இடமில்லை.

இணைய வாசிப்புக்கு எவ்வளவு நீளமாகவும் எழுதலாம். வெட்டுக் கொத்துக்கு இடமில்லை. கதை, கவிதைகள் எந்தளவில் இருக்க வேண்டுமென்பதை எழுத்தாளர் தீர்மானிப்பார். எடுத்துக்காட்டாக முகப்புத்தகத்தில் ஞானதாஸின் கதை 'சொல்லடா தமிழா!' வைப்பார்க் கலாம். அதில் புதியவையும் பழையவையும் முன்வைக்கப்படுகின்றன. ட்விட்டர் என்ற இணையத்தளத்தை எடுத்துக் கொண்டால் அதில் 140 எழுத்துக்களில் மட்டுந்தான் பதிவு செய்ய முடியும். இன்று செய்தி அளித்தலுக்கு உலகெங்கும் பிரபல்யமாக இருக்கும் ஒரு சமூக வலை. திருக்குறள் எழுத்து வடிவத் தன்மையான எழுத்துருக்களையே இது கோருகின்றது. எனவே புதிய இலக்கியவடிவத்துக்கான வழியை இது திறந்து விட்டுள்ளது.

அறம்சார் பிரச்சினைகள் இணைய இலக்கியத்தில் எழுகின்றன. இச்சுதந்திரக் களம் எதையும் எங்கிருந்தும் பார்த்து எடுக்க அனுமதித்திருக்கிறது. அவதூறை விடுத்து அறம் பிழைப்போரை நிறுத்தி வைத்துக் கேள்வி கேட்கும் சூழலை நாம் உருவாக்க வேண்டும். இப்புதிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணைய இலக்கியச் சூழல் இலக்கியத்துக்குப் புதிய இரத்தத்தைப் பாய்ச்சும், அதேநேரம் புதிய பரிணமிப்புகளையும் பரிணாமங்களையும் இலக்கியத்தில் ஏற்படுத்தியுமுள்ளது. இந்த இணையத்தை நாம் எப்படிப் பயன்படுத்துகிறோம் என்பதில் தான் வெற்றி உள்ளது. வளர்ச்சி உள்ளது.

*2013ம் ஆண்டில் வெளிவந்த சிறந்த திறனாய்வு, மொழிபெயர்ப்பு நூல்களுக்குத் துரைவி விருது வழங்கலில் போர்க்காலச் சிங்கள இலக்கியங்கள் என்ற நூலை வெளியிட்ட எம்.சி.ரஸ்மின், தேசமான்ய சுமண ஸ்ரீ கொடகேயிடமிருந்து விருதைப் பெற்றார். 'மொழி வேலி கடந்து' என்ற மொழி பெயர்ப்பு நூலுக்காக மேமன் கவி, புரவலர் ஹாசிம் உமரிடமிருந்து விருதைப் பெற்றார்.*

**தலைமையுரை:**
**துரைவிஸ்வநாதன் ராஜ் பிரசாத்**

இலக்கியம் எம்மைச் சேர்த்து வைக்கிறது. 1996 இல் ஏற்பட்ட உறவு இன்றும் இடைவெளியில்லாது பழகி வருகின்றோம். முதலாவது விருது வழங்கலில் லெனின் மதிவானம், திக்குவல்லைக் கமால் ஆகியோர் விருதுகளைப் பெற்றனர். இம்முறையும் திக்குவல்லைக் கமால் வெளியிட்டிருந்தும் போட்டிக்கு அனுப்பவில்லை. புதியவர்களையும் ஊக்குவிக்க வேண்டும் என்ற அவரது பெருந்தன்மையைப் பாராட்டுகிறேன்.

**பாராட்டுரை:**
**மல்லியப்பூச் சந்தி திலகர்**

ஐயா தெளிவத்தை ஜோசப்போடு பழகும் வாய்ப்பு எனக்கு இல்லாதிருந்தது. விஷ்ணுபுரம் விருது எமக்கிடையில் நெருக்கத்தை ஏற்படுத்தியது. ஐயாவின் 'குடை நிழல்' நூலைக் கொடுக்கத் தமிழகம் சென்றேன். தமிழகத்திலும் அதை வெளியிட விரும்பினர். குடை நிழல் நூலைப் படித்து விட்டு அலெக்ஸ், தெளிவத்தை ஜோசப் நல்ல கதை சொல்லி எனப் பாராட்டினார். தமிழகப் பதிப்புக்கு ஜெயமோகனை முன்னுரை எழுத ஒழுங்கு செய்தனர். இணையத்தளம் மூலம் இச்செய்தி உலகெங்கும் பரவியது.

ஆதவன் தீட்சண்யா, ஜெயமோகன் வழங்கும் விஷ்ணுபுரம் விருதைத் தெளிவத்தை ஜோசப் ஏற்கக் கூடாதெனக் கருத்துரைத்தார். நாங்கள் விளக்கம் கொடுத்தோம். தமிழகத்திற்கு நாங்கள் தொப்புள் கொடி உறவினர். எமது இலக்கிய ஆற்றலைத் தமிழகம் அறிய வேண்டும் என்பதற்காகத் தெளிவத்தை ஜோசப் மூலமாக அதைக் கொண்டு செல்கிறோம் என்றோம். தீட்சண்யா சமாதானமானார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முழுச்செலவையும் நாம் பொறுப்போம். திருமதி ஜோசப்பும் வர வேண்டுமென விழா ஏற்பாட்டாளர்கள் நிபந்தனையை முன்வைத்தனர். அவசரமாகச் சீனாவுக்குச் செல்ல வேண்டிய அலுவல் எனக்கிருந்தது. நெருக்கடியில் இரு பயண ஏற்பாடுகளைச் செய்தோம். நானும் எனது பயணத்தை மேற்கொண்டேன். ஐயாவும் மனைவியும் தமது பயணத்தை மேற்கொண்டனர்.

தமிழகத்திலுள்ள சிலோன் காலனியில் சிலோன்காரர்கள் வாழ்கின்றார்கள். அங்கு சென்று உறவினர்களைச் சந்தித்தனர். தெளிவத்தை ஜோசப்பை வாசிப்பில் அக்கறை கொள்ள வைத்த அவரது தமையனார் ஞானப்பிரகாசம், விருது விழாவில் தம்பி ஜோசப்பைச் சந்தித்தார். பலவாறான கதைகளைப் பரிமாறிக் கொண்டனர். மலையகத் தோட்டத்தில் கணக்கப்பிள்ளையாக தெளிவத்தை ஜோசப் கடமை புரிந்த போது மறுமலர்ச்சிக் கழகம் என்ற அமைப்பை நடாத்தியுள்ளார்.

பாடசாலை ஆசிரியராகவும் ஐயா வேலை செய்ததுண்டு. இவரது எழுத்துக்கள் அதிகார மையங்களைச் சாடுவதாக இருந்ததால் தோட்டத்தை விட்டு வெளியேறச் சொன்னார்கள்; அல்லது எழுதுவதை நிறுத்தும்படி கேட்டார்கள். அக்கோரிக்கையை ஏற்காமல் மலையகத்தை விட்டு வெளியேறித் தெளிவத்தை ஜோசப் கொழும்பில் ஸ்டார் கொன் பெக்சனரியில் இணைந்தார்.

தமிழகத்தில் காலமான மலையகத்தைச் சேர்ந்த செந்தூரன், இரா.சிவலிங்கம், முதல்வன் ஆகியோரது நினைவு மையங்களுக்கும் ஐயாவும் மனைவியும் அஞ்சலி செலுத்தினர். விருது விழாவிற்கு 200 இற்கும் 250 இற்கும் இடைப்பட்ட எண்ணிக்கையிலான பார்வையாளர்கள் வந்திருந்தனர். உரையாடலின் போது தெளிவத்தை ஜோசப்பின் எழுத்தில் அரசியல் உண்டென ஜெயமோகன் சொன்னார். 'மீன்கள்' தொகுப்புக் கதைகள் சிலவற்றில் அப்படி இருப்பதாகச் சொன்னார். காந்தீயக் கதைகள் தொகுப்புக்களில் ஐயா எழுதிய 'கத்தி இன்றி இரத்தமின்றி' என்ற கதை பற்றி ஐயா கேட்டார். அதுவும் அப்படியா? விசாரித்தார். நீங்கள் தானே மகாத்மா காந்தியைப் போட்டுத் தள்ளினீர்கள் எனப் பதிலடியும் கொடுத்தார். மிகச் சுவாரஸ்யமான உரையாடலாக இருந்தது.

இந்திரா பார்த்தசாரதி தெளிவத்தை ஜோசப்பின் 'கூனல்' சிறுகதை உலகத்தரமானதென்றார். ஐயாவின் தீவிர வாசகனான சுரேஷும் பேசினார்.

துரை விஷ்வநாதனின் வாரிசு ராஜ்பிரசாத் நன்றியுரை செய்தார்.

-20.03.2014

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 64

## ஈழத்துச் சோமு நினைவுப் பரவல்

**அ**மரர் நா.சோமகாந்தன் (ஈழத்துச்சோமு) தேசிய முற்போக்கு இலக்கியத்தில் அழியாச் சுவடு பதித்த நாடறிந்த தமிழ் இலக்கியவாதி ஆவார். சோமகாந்தன், கலாமதி, கருணையூர்ச் சோமு, புதுமைப் பிரியன், ஈழத்துச் சோமு என்ற புனை பெயர்களில் அர்ப்பணிப்பான எழுத்தூழியம் செய்து ஒடுக்கப்பட்ட, உரிமை பறிக்கப்பட்ட மக்களுக்காக இயங்கியவர். அரச பணியிலிருந்து இளைப்பாறிய உத்தியோகத்தர். இலக்கியம், ஆத்மீகம் என்பவற்றால் ஈர்க்கப்பட்டவர். 28.04.2006 ஆம் திகதி காலமானார். சோமகாந்தனின் இடைவிடா ஆலோசனைகளாலும், பணிகளாலும் முன்னேற்றம் கண்டு இன்று இலக்கியக் கனதியோடு வெளிவந்து கொண்டிருக்கும் ஞானம் ஈழத்துச் சிற்றிதழ், சோமகாந்தன் பற்றிய அரிய தகவல்களை அடக்கிய - பேணிப் பாதுகாக்கக் கூடிய கைந் நூலொன்றை வெளியிட்டு அஞ்சலி செய்தது.

அமரர் நா.சோமகாந்தனின் நினைவாக இவரது குடும்பத்தினர் 'அழியாச் சுவடுகளின் நினைவுப் பரவல்' என்ற முழு நாள் நிகழ்வை நடாத்தினர். 18.02.2012 ஆம் திகதி கொழும்பு தமிழ்ச்சங்க, சங்கரப்பிள்ளை மண்டபத்தில், மண்டபம் நிறைந்த அமரரின் நண்பர்கள், அபிமானிகள் முன்னிருக்க இது நடைபெற்றது.

இந்நிகழ்வுக்கு சாகித்திய இரத்தினா பேராசிரியர் சபா ஜெயராசா தலைமை தாங்கினார். கொழும்பு 6, சைவ மங்கையர் வித்தியாலய மாணவிகள் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடித் தொடங்கி வைத்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தலைமையுரை :**
**பேராசிரியர் சபா ஜெயராசா**

புனைகதை ஐரோப்பாவில் தோற்றம் பெற்றது. ஏனைய நாடுகளும் ஏற்றன. மன உதிர்வுகளின் எழுத்து வடிவமே சிறுகதை, வாழ்வின் பொறியொன்றை வெளிப்படுத்துவது. இரண்டு வரிச் சிறுகதைகளும் உண்டு. நாற்பது பக்கச் சிறுகதைகளும் உண்டு. இதில் பரிசோதனைகளும் நடாத்தப்படுகின்றன. இன்றைய சிறுகதைகளில் பின் நவீனத்துவத்தின் செல்வாக்கும் காணப்படுகிறது. உலக முதலாளியத்திற்கு அனுசரணை தந்து தொழிலாளி வர்க்கத்தை உதிரியாக்குவது பின் நவீனத்துவம். TEXT என்ற ஆங்கிலப் பதத்தை பிரதி என இந்தியாவில் தமிழ்ப் படுத்துகின்றனர். Copy யே பிரதியாகும். இலங்கையில் இப் பதத்தை நூலியம் எனத் தமிழ்ப்படுத்திப் பாவிக்கிறோம். எவ்வளவுக்கு மார்க்சியத்தை எதிர்க்கிறதோ அதைப் பின் நவீனத்துவம் என்கின்றனர். தத்துவம் என்பது பெருங்கதையாடல் எனப் பின்நவீனத்துவம் கூறுகிறது. அது மாக்சியத்துக்கு எதிரானது. இந்நாட்டில் தத்துவம் கருத்தில் கொள்ளப்படுவதில்லை. புதிய கோட்பாடுகளை நாம் கண்டடைய வேண்டும்.

**சிறப்புகரைகள்**
**வைத்திய கலாநிதி எம்.முருகானந்தம்**
**கதைகளின் கதை**

நாற் திசைகளிலிருந்தும் நமது சிறுகதைகள் வந்து குவிகின்றன. கிடுகு வேலிகளுக்குள் இருந்து வெளியேறி விட்டோம். கடும் உழைப்பு இருக்கின்றது. அக்காலத்தில் சுவையான கதைகளைத் தந்தனர். ஆனால் மண்ணின் பிரச்சினைகளை வெளிப்படுத்தவில்லை. கருவுக்கு முன்னுரிமை கொடுக்கவில்லை. மனோரதியம் சிறுகதைகளில் மேலோங்கி நின்றது. செ.யோகநாதன், செங்கை ஆழியான், செம்பியன் செல்வன் போன்றோர் மண்வாசனைக் கதைகளை எழுதியுள்ளனர். ஆனந்தன் என்ற சிறு கதைப் படைப்பாளி 'தண்ணீர்த் தாகம்' என்ற சாதியம் சம்பந்தமான சிறுகதையை எழுதியுள்ளார். யதார்த்தமான தரமான சிறந்த சிறுகதை. இலங்கையர்கோன் 'வெள்ளிப் பாதசரம்', சம்பந்தன் 'துறவி', வைத்தியலிங்கத்தின் 'ஒரு பிடிசோறு' என்பன சிறந்த கதைகள். மலைநாட்டு எழுத்தாளர்களான கோ.நடேசய்யர், கணேஸ் ஆகியோரும் எழுதியுள்ளனர்.

மூதூர் வ.அ.இராசரத்தினம் 'தோணி' என்ற சிறுகதையைப் படைத்துள்ளார். பொழுது போக்கிலிருந்து ஈழத்துச் சிறுகதையை இலங்கைமுற்போக்கு எழுத்தாளர் சங்க இயக்கம் முற்போக்குச் சிந்தனைகளுக்கு நகர்த்தியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முற்போக்கு அணி அதற்கு எதிரான அணி என்பவைகளால் இருகூறாகச் சிறுகதைகள் படைக்கப்பட்டன. பேராசிரியர் க.கைலாசபதியும், கா.சிவத்தம்பியும் தாம் சார்ந்த முற்போக்கு அணியினர் படைப்புகளைப் பாராட்டியதை மறுக்க முடியாது. நந்தி, சாந்தன் உட்படச் சிலர் தேசிய உணர்வை ஊட்டும் கதைகளைப் படைத்திருக்கின்றனர். மு.தளையசிங்கம் சார்ந்த அணியினர் ஈழத்துச் சிறுகதைக்குப் பலமான பங்களிப்பைச் செய்துள்ளனர். செ.கணேசலிங்கன், அ.ந.கந்தசாமி, நீர்வை பொன்னையன், டொமினிக் ஜீவா, கே.டானியல் முற்போக்குச் சார்ந்த நல்ல சிறுகதைகளைப் படைத்துள்ளனர். ஈழத்துச் சோமுவின் 'ஆகுதி' சிறுகதைத் தொகுப்பு அருமையான சிறுகதைத் தொகுப்பு.

நந்தினி சேவியரும் நல்ல சிறுகதைகளைப் படைத்துள்ளார். எமது விமர்சகர்கள் ஏனோ அவரை இன்னமும் கண்டு கொள்ளாதிருக்கின்றனர். எஸ்.பொன்னுத்துரை (எஸ்.பொ.) எப்பவுமே தனித்துவமான படைப்பாளி தான். அ. யேசுராசா, முனியப்பதாசன் ஆகியோரிடமும் வித்தியாசமான பார்வை உண்டு. முனியப்பதாசன் படைப்பை மௌனியின் படைப்புக்கு நிகராகச் சொல்ல முடியும். மு.தளையசிங்கத்தின் ஆத்ம சிந்தனைகள், சிறுகதைகளில் வெளிவரவில்லை. எந்த படைப்புமே நடுநிலையாக இருக்க முடியாதென் பார் மு.பொன்னம்பலம், அ.முத்துலிங்கம் சிறுகதையில் புதிய தரிசனங்களைத் தந்துள்ளார். ஈழத்து இலக்கியத்துக்குச் சோமகாந்தனின் பங்களிப்புப் பெரியது. பாரதி நூற்றாண்டு விழா மலர், ஆறுமுக நாவலர் மலர் என்பவை சிறப்பாக வெளிவர உதவினார். எமது படைப்புகளில் கருத்தியலோடு, அழகியலும் மேம்பட வேண்டும். பல படைப்புகள் பத்திரிகைச் செய்திகளைப் போல் வெளிவருகின்றன. உரிய முறையில் செதுக்கப்பட்ட படைப்புகள் வெளிவர வேண்டும்.

**கவிஞை திலக பாமா (தமிழ்நாடு) 'கடன் பெற்றோமா கதைகளை:'**

கடந்த முறை இலங்கை வந்த போதே சோமகாந்தன் ஐயாவோடு முதல் சந்திப்பு ஏற்பட்டது. ஒரு வாரம் அவர் குடும்பத்தோடு தங்கி இருந்தேன். நான் விரும்பியது போல் அவரே முடிவெடுத்து ஒரு வாரத்தை நான் எப்படி இங்கு கழிப்பதென்பதைத் தீர்மானித்தார். அவர் போலவே நாமும் செயற்பட வேண்டும். எனது தளம் அவரதை விட வித்தியாசமானது. சிறுகதை ஐரோப்பாவிலிருந்து தான் வந்தது என்பதான பேச்சுகளைக் கேட்க முடிகின்றது. எமது வரையறைகளை விட்டு விட்டு அப்டிச் சொல்கிறோம். கதை சொல்லும், கேட்கும் மரபு எம்மிடம் இருந்தது. ஓவியங்களில் கதைகள் வந்துள்ளன. செய்யுள், கவிதை, நாட்டியம், நாடகம் என்பவற்றைப் பேணிய மரபு எம்முடையது. வடை சுடும் பாட்டியின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதை போன்ற எவ்வளவோ கதைகள் இன்னமும் உலா வந்து கொண்டிருக்கின்றன. ஒவ்வொருவரிடமிருந்தும் கதைகள் வித விதமாக வெளிவரும். நாம் மேற்குலகைத் தேடி ஓட வேண்டியதில்லை.

பாட்டி கதைகள் எத்தனையோ தலைமுறைகளுக்கு உரியவையாக இருக்கின்றன. அநுபவமொன்று புதிதான தகவலாக இருந்தால் சொல்வோம். கவிதை பெண்ணுக்குச் சாத்தியமானது. சிறுகதை அப்படியல்ல. காலம், இடம், வாழ்வு மூன்றையும் சிறுகதை கொண்டிருக்கிறது. நல்ல கதையானால் அது காலத்தைக் கடந்து வாழும். காத்திரமான விமர்சகர்கள் தமிழில் இல்லை. குழு நிலைவாதம் இருக்கிறது. இதற்குக் கருத்தியல் கோட்பாடுகளே அடிப்படை. தாம் சார்ந்த குழுக்களுக்குச் சாத்தியமான கதைகளைத் தான் படிக்கின்றனர். அனுபவ விசாரணையோடு எழுதப்படும் வடிவம் கடிதமாகும். எந்த வரையறையும் காலக்கிரமத்தில் மாற்றமடையும்.

**பேராசிரியர் செ.யோகராசா:**
**'நினைவுகளும் நிகழ்வுகளும்'**

சோமகாந்தனின் ஊரான கரணவாய் தான் எனது ஊரும். அவர் கருணையூர் சோமு என்ற புனைபெயரில் எழுதியிருக்கிறார். நானும் கரவை யோகன் என்ற புனைபெயரில் எழுதியிருக்கிறேன். சந்திக்கும் போது ஆத்மார்த்தமான உணர்வுகளோடு பேசிக் கொள்வோம். இருவருக்கும் இடையில் தலைமுறை இடைவெளியிருந்தது. புலமை சார்ந்த நாட்டம் எங்களிடையில் இருந்தது. கொழும்பு பல்கலைக்கழகத்தில் நான் கற்ற போது உறவு நீடித்தது. அதுஈழத்து இலக்கியம் எழுச்சி கொண்ட காலம். 1942 இலே முற்போக்கு எழுத்தாளர் சங்கம் ஏற்பட்டது. ஆறுமுக நாவலர் சம்பந்தமான சிந்தனையை மாற்றியதில் இச்சங்கத்துக்கும் பங்குண்டு. சோமகாந்தனும் நாவலருக்குக் கணிசமான விளம்பரத்தைச் செய்ய உதவினார். மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் ஞான குரு யாழ்ப்பாணத்துச் சாமியார் என்பதை நிறுவியதில் முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் பணி மிகப் பாரியதாகும். சோமகாந்தன் ஈழத்துச் சஞ்சிகைகள் குறித்து சொல்வதுண்டு.

மல்லிகை மீது நல்ல அபிப்பிராயம் வைத்திருந்தார். எனது கட்டுரைகள் வெளிவரக் காரணமாக இருந்தார். முற்போக்கு இலக்கியச் செயற்பாடுகளுக்கு அப்பாலும் அவர் இயங்கினார். மண்வாசனை இலக்கியத்தை இலங்கை முற்போக்கு இயக்கமே முதன் முதல் படைப்புகளில் எடுத்தாண்டதென்ற கருத்தாடல் இருக்கின்றது. முற்போக்கான பணியே மண்வாசனை இலக்கியம் படைப்பது. இதற்குச் சோமகாந்தனின் பங்களிப்பும் இருந்ததுண்டு. இலங்கையில் நடாத்தப்பட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறுமுக நாவலர் விழா, நவாலியூர் சோமசுந்தரப் புலவர் விழா என்பன சிறப்புற பணி செய்தார். இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் வெளியிட்ட மலர் மிகவும் முக்கியமானது. தமிழ் எழுத்தாளர் பலரை இங்கு வரவழைத்து எமது இலக்கிய முயற்சிகளை அவர்கள் அறிய வைத்தார். மலையக எழுத்தாளரை ஊக்கப்படுத்தினார். சோமகாந்தன் பற்றிச் சாரல் நாடன் எழுதியிருந்தது ஆச்சரியமாக இருந்தது. கொழும்பில் சோமகாந்தன் முக்கியமான பிரபலஸ்தர் எனப் பேராசிரியர் கா.சிவத்தம்பி ஐயா அபிப்பிராயம் சொன்னார். ஈழத்துச் சோமு என்ற அவரது புனைபெயர் தேசிய அடையாளத்தை வெளிப்படுத்துகின்றது.

**எழுத்தாளர் பா.வெங்கடேசன்**
**(தமிழ்நாடு) 'சரித்திர நாவல்களும் நாவல்களின் சரித்திரமும்'**

பேராசிரியர் சபா.ஜெயராசா பின் நவீனத்துவம் மார்க்சியத்தோடு முரண்படுகின்ற தென்றார். இதை மறுபரிசீலனை செய்ய வேண்டும். யுத்தத்துக்குப் பின்னரான இக்காலத்தில் இலங்கையில் போர் தந்த படிப்பினைகளை நோக்கிச் செல்வதை இலக்கியம், படைப்பு வடிவங்கள் பரிசீலிக்க வேண்டும். உலக மயமாக்கல் மக்கள் மீது தனது கோரப்பிடியை வைத்துள்ளது. அகிலன், கல்கி, சாண்டில்யன், சுஜாதா சரித்திரக் கதைகளை எழுதியிருக்கின்றனர். சுவாரஸ்யமாக எழுதுகின்றனர். அக்கால கட்ட நடப்புகளை இப்படைப்புகள் யதார்த்தப் போக்கில் சொல்லும். இவைதான் சரித்திரமா? இவைகளில் இந்நாவல்கள் எழுந்த மண்ணின் குடி மக்களின் போக்குகள் அறிமுகப்படுத்தவில்லை. இச்சமயத்தில் அமைப்பியல், இருப்பியல் கோட்பாடுகள் Text (நூலியம்)ஐ உடைத்துப் பார்த்தன.

ஒரு பொருளைப் பற்றி எழுதுவது சரித்திரமாகாது. ஒவ்வொரு மனிதனும் ஒவ்வொரு சரித்திரந்தான். அதுவே எழுதப்பட வேண்டும். நாவல் எதுவுமே சரித்திர நாவலாக இருக்க முடியாது. எந்தவொரு Text இலும் ஒரு சரித்திரமுண்டு. இலங்கையில் உண்மையான சரித்திரந்தான் எழுதப்பட வேண்டும். அடக்குமுறைகளைப் படைப்புகள் தந்திரமாக அடக்கக் கூடியவை. அந்த வகையில் இலங்கையில் புதிய வடிவங்கள் தேவை. கோட்பாட்டுப் படைப்புகளைப் புரிந்து கொள்ள வேண்டும். தெரிந்து கொள்ள வேண்டும். உலகம் முழுவதும் சரித்திர நாவல்கள் படைக்கப்படுகின்றன. சரித்திரம் எப்படி நாவலில் எழுதப்பட வேண்டும் என்பதைத் தெரிந்து கொண்டு படைக்க வேண்டும். அகர வரிசையில் நாவலொன்று எழுதப்பட்டுள்ளது. போர்க்குணமுள்ள எந்தவொரு வாசகனும் கூட நாவல் ஒன்றில் தான் சார்ந்த செய்திகளை எடுத்துக் கொள்வான். 'சரித்திரத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிந்த நிழல்கள்' என்ற தமிழ் நாவல் தமிழக அரசியலைக் கிண்டல் செய்து படைக்கப்பட்டுள்ளது. 'உப பாண்டவர்'ள என்ற எஸ். இராமகிருஸ்ணன் நாவல் மகாபாரதக் கதைகயைத் திருப்பி நோக்க வைக்கின்றது.

இன்றைய சரித்திரமாக எழுதப்படுகிறது. 'கொற்றவை' இல் ஜெயமோகன் கண்ணகி கதையைத் திருப்பி எழுதியுள்ளார். எழுத்தாளர் கோணங்கியின் எழுத்துக்கள் புரிவதில்லை என்ற கருத்துண்டு. குற்றச்சாட்டாகச் சொல்லப்படுகிறது. கோணங்கி சரித்திரத்தைக் கேலிக்குரியதாகப் படைக்கிறார். 'கொரில்லா' நாவலை ஈழத்து நாவலாசிரியர் ஷோபாசக்தி பைபிள் நடையில் படைத்துள்ளார். சல்மாவின் நாவல் இஸ்லாமிய வாழ்வின் அறியப்படாத பக்கங்களைக் காட்டும். சரித்திரம் நாவலாவது போல் நாவல் சரித்திரமாகாது. கோட்பாட்டு அடிப்படையான நாவல்களை மட்டும் வாசிக்கக் கூடாது. கோட்பாட்டின் துணை கொண்டு எழுந்த படைப்புகளைப் படிக்கும் போது பலவீனங்கள் எழும்.

*சோமகாந்தனின் 'விடிவெள்ளி பூத்தது' என்ற நாவலின் சிங்கள் மொழி பெயர்ப்புப் பிரதியைக் கலாபூஷணம் சுமண ஸ்ரீ கொடகே புரவலர் காசிம் உமருக்கு வழங்கினார். பொன்னாடை போர்த்தி நினைவுச் சின்னம் வழங்கி ஸ்ரீ கொடகே கௌரவிக்கப்பட்டார். சிங்கள மொழியாக்கம் செய்த எழுத்தாளர் உபாலி லீலா ரத்னா பொன்னாடை போர்த்தி பூமாலை சூட்டிக் கௌரவிக்கப்பட்டார்.*

**நூல் அறிமுகவுரை :**
**அந்தனி ஜீவா**
**(கொழுந்து ஆசிரியர்)**

ஆறுமுக நாவலருக்கு முக்கியத்துவம் கொடுக்கத் தூண்டிய முன்னாள் அமைச்சர் பீற்றர் கெனமனை நாமெல்லாம் மறந்தே விட்டோம். தேசிய கலை இலக்கியப் பேரவை பேராசிரியர் க.கைலாசபதியை நினைவு கூருகின்றது. கடந்த தடவை பிரேம்ஜி ஞான சுந்தரம் இங்கு வந்த போது இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தை மீள இயங்க வைக்க முயற்சி எடுத்தார். உரியவர்களிடம் அது கையளிக்காத படியால் இப்போதும் இயங்காமலேயே இருந்து வருகின்றது.

இம்முறை வந்திருக்கும் சந்தர்ப்பத்தை பாவித்து அவர் இ.மு.எ.ச.வை பொறுப்புள்ள தகுதியானவர்களிடம் கையளித்து அதை மீண்டும் இலக்கியப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணியில் ஈடுபடச் செய்ய வேண்டும். இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் இலக்கியப் பணிகள் பதியப்பட வேண்டும்.

இந்த விடயத்தில் இளங்கீரன் மறக்க முடியாதவர். இன்று பேராசிரியர் சபா ஜெயராசா முக்கியமானவர்.

அவரை உரிய முறையில் நாம் பயன்படுத்த வேண்டும். சோமகாந்தனுக் கான இவ்விழாவை அவர் மனைவி பத்மா சோமகாந்தன் எடுத்துள்ளார். அவருக்கு வாழ்த்துரைக்க வேண்டும்.

## நினைவுப் பகிர்வுகள்
## பிரேம்ஜி ஞானசுந்தரம்

இலக்கியம், சமூகம் எனப் பல துறைகளில் இயங்கி அனுபவங்களைப் பெற்றுக் கொண்டவர் சோமகாந்தன். ஈழத்து இலக்கியத்தின் திசை தெரியாமல் திரிந்தோருக்கு ஈழத்து இலக்கியத்தின் பிதாமகர் நல்லை நகர் ஆறுமுக நாவலர் என்பதை எண்பித்தோம். இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கமே ஈழத்து இலக்கியத்துக்குப் புதிய பார்வையை ஏற்படுத்தியது. எமது இலக்கிய நடவடிக்கைகளை இலங்கை அரசு அங்கீகரித்தது. நாவலரை மக்கள் அறிய வைக்கும் நடவடிக்கைகளுக்குச் சோமகாந்தனைத் தெரிவு செய்தோம். நாவலர் விழா பெருமெடுப்பில் நடைபெற்றது. நல்லூரில் நாவலர் சிலை நாட்டுவதற்குச் சோமகாந்தன் தன்னாலானவற்றைச் செய்தார். தமிழர் பிரதேசங்களின் விவகாரங்களை நிர்வகிக்க மாநில சுயாட்சி முறைமையை வற்புறுத்தினோம். அதன் வரைவு ஆவணத்தை அன்றைய இலங்கைப் பிரதமரிடம் சமர்ப்பித்தோம். தேசிய ஒருமைப்பாட்டு மகாநாட்டை நடாத்தி ஒரு வரலாற்றுத் திருப்பத்தை ஏற்படுத்தினோம். அதற்குச் சோமகாந்தனின் அயராத முயற்சிகள் தான் அடித்தளமாக அமைந்தன. மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் நூற்றாண்டு விழாவை மிகப் பெரியளவில் முற்போக்கு எழுத்தாளர் சங்கம் நடாத்தியது. நீதியரசர் எச்.டபிள்யூ.தம்பையா தலைமையில் நடந்தது.

இதைச் சிறப்பாக நடாத்துவதற்குக்குச் சோமகாந்தனின் ஊக்க சக்தி பேருதவியானது. 1986 இல் முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் அன்றைய நிலைப்பாடு குறித்து மகா நாடொன்றை நடத்தினோம். பல சமூக, சமயப் பிரமுகர்கள் கலந்து கொண்டு கருத்துரைத்தனர். ஆயுத இயக்கங்களைச் சார்ந்தவர்களும், ஆயுததாரிகளாக வந்து கலந்து கொண்டனர். இதிலும் சுய நிர்ணய உரிமைக்கு எமது ஆதரவைச் சொன்னோம். பேரினவாதம் தடைசெய்யப்பட வேண்டும் என்பதை ஆதாரபூர்வமாக வெளியிட்டோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெகுஜன சக்தியாக இருந்தால் அதற்கு முற்போக்கு சக்திகளின் ஆதரவு இருக்குமென்பதைப் பிரகடனப்படுத்தினோம். இதில் டொமினிக் ஜீவா, சோமகாந்தன் ஆகியோர் முக்கிய பாத்திரத்தை வகித்தனர். ஆறு தசாப்தங்களுக்கும் மேலாக ஈழத் தமிழர் அரசியல் பிழையானதாகக் காணப்பட்டது. எனவே நாம் புதிய பாதைக்குச் செல்ல வேண்டி ஏற்பட்டது. இந்தப் பிழையான அரசியல் முறைமை நல்லூரில் ஒரு சிறுமியைக் காயப்படுத்தியதிலிருந்தே ஆரம்பித்தது. அது இனித்தேவைப்படாது. இனி நாம் மாநில சுயாட்சியைப் பெறுவதற்கான நடவடிக்கைகளுக்கு நகர வேண்டும். காய் நகர்த்த வேண்டும். அதை வென்றெடுக்க முதலாளிய, ஜனநாயக சக்திகள் இணைய வேண்டும். தேசிய ஒருமைப்பாட்டு மகாநாட்டில் சோமகாந்தன் வகித்த பாத்திரத்தை இனி நாம் ஏற்றுப் பணிகளைச் செய்ய வேண்டும். அனைத்துச் சகோதர இனங்களும் சகோதரத்துவத்தோடு வாழ்வதே ஆக்க பூர்வமான பாதையாகும்.

**மு.கதிர்காமநாதன்**
**(தலைவர், கொழும்பு தமிழச்சங்கம்)**

சோமகாந்தனை விட நான் இளையவன். பத்தாண்டுகளாக அந்நியோன்ய மாகப் பழகினோம். எளிமையானவர், நல்ல சிந்தனையாளர் அவரிடமிருந்து ஏராளமானவற்றைக் கற்றேன். நல்ல உள்ளம் படைத்தவர். அவரது குடும்பம் இலக்கிய, இலட்சியக் குடும்பம். அவர் தலைமையில் நீர்கொழும்பில் நடாத்திய விழாவில் பேசினேன். ஒருவர் செய்த நற்பணிகள் பதிவாக்கப்பட்டால் அது மக்களுக்குப் பாடமாக உதவும். இங்கு தமிழக எழுத்தாளர் திலக பாமா மிக அற்புதமாகச் சோமகாந்தனை நினைவு கூறினார். சோமகாந்தன் மக்களுக்கும் இந்நாட்டுக்கும் செய்த காத்திரமான பணிகளை நாமும் முன்னெடுக்க வேண்டும்.

**அன்னலெட்சுமி இராஜதுரை (ஆசிரியர், கலைக்கேசரி)**

சோமகாந்தன் இனிய சுபாவமுடைய பண்பாளர். எடுப்பான தோற்றமுடையவர். அவரது சிரிப்பு என்றுமே மறக்க முடியாதது. அவர் மறைந்து வருடங்கள் ஆறாகிவிட்டன. உரிய முறையில் அவரை இங்கு நினைவு கூரவில்லை என அவரது துணைவியார் பத்மா சோமகாந்தன் அபிப்பிராயப்படுவதுண்டு. பேராசிரியர் கா.சிவத்தம்பியும் இப்படிக் கவலைப்பட்டதாகத் துணைவியார் சொன்னார். இந்த விழா அந்த ஆதங்கங்களை போக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்துறை ஆளுமைகளைத் தன்னகத்தே கொண்டிருந்தவர் சோமகாந்தன். ஆத்மீகவாதி. கருணையூர்ச் சோமு என்ற புனைபெயரில் தனது இலக்கியப் பணிகளை ஆரம்பித்தார். பின் ஈழத்துச் சோமுவாக இலக்கியத்தில் வளர்ந்தார். சாதாரண மக்கள் மீது அக்கறை காட்டுபவர். இரக்கம் காட்டுபவர். பரந்த மனங்கொண்டவர். அவரது எழுத்தில் சமூகப் பார்வை இருக்கும். இளவயதிலேயே முற்போக்குச் சிந்தனையைப் பெற்றார். 'ஆகுதி' அவரது சிறுகதைத் தொகுப்பு நூலாக 1980 இல் வெளிவந்தது. 1950 இல் எழுத்துலகில் பிரவேசித்த அவர் 30 ஆண்டுகளின் பின்னரே சிறுகதைத் தொகுப்பொன்றை வெளியிட்டார். அக்காலத்தில் தமது படைப்புகளை நூலாக வெளியிடுவதற்கு எழுத்தாளருக்குப் பல சிரமங்கள் இருந்தன. 'விடிவெள்ளி பூத்தது' அவரது நாவலாகும். மிகச் சிறந்த மேடைப் பேச்சாளர் அவர். திருமணத்துக்குப் பின்னரே முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தில் சேர்ந்தார். சோமகாந்தனின் பங்களிப்புகள் மறக்க முடியாதவை. இது தேவையானதொரு நினைவு கூரல். அவரது துணைவியார் எழுத்தாளர் பத்மா சோமகாந்தனுக்கு நாம் எல்லாம் நன்றி கூற வேண்டும்.

**தி.ஞானசேகரன் (ஆசிரியர், ஞானம்)**

சோமகாந்தனுக்கு பல முகங்கள் உண்டு. நட்பின் முகம் ஈஸ்வரன். பிரேம்ஜி, அன்னலெட்சுமி இராஜதுரை எழுத்துலக இலக்கிய முகம். கம்பவாரிதி சமூக முகம். இப்படியான முகங்கள். ஈழத்து இலக்கியத்தைச் சோமகாந்தனை விட்டு விட்டு எழுத முடியாது. ஞானம் 72 ஆவது இதழை அச்சில் ஏற்றி இருந்த போது சோமகாந்தன் காலமான துக்கச் செய்தி வந்தது. அவரது அஞ்சலிக் குறிப்பு வராது அந்த இதழ் வரக்கூடாதென்ற காரணத்தால் அச்சடிப்பதை நிறுத்தச் சொன்னேன். அவர் தொடர்ந்து ஞானத்தோடு தொடர்புகளை வைத்திருந்தார். இறப்பதுக்கு ஒரு மணித்தியாலத்துக்கு முன் கூடத் தொலைபேசியில் எடுத்துப் பேசினேன். 1964 ஆம் ஆண்டு இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் ஒரு தேசிய அமைப்பாக எழுச்சி பெறப் பெரிய பாய்ச்சலைக் கொடுத்தவர். முன்நின்று பல விழாக்களை ஒழுங்கு செய்து நடாத்தி முடித்தவர்.

தமிழ், சிங்கள உறவு மேம்பட அக்கறை காட்டினார். நாடு பூராவும் பத்து நாட்கள் ஆறுமுக நாவலர் சிலையைக் கொண்டு சென்று மக்கள் தரிசனத்துக்கு வைத்த பின் நல்லூரில் அதை நாட்டிய பெருமை சோமகாந்தனுக்கே உரியது. வல்லமை மிக்க ஆளுமை. 1989 ஆம் ஆண்டு பல நெருக்கடிகளுக்கு மத்தியிலும் யாழ்ப்பாணத்தில் உள்ளூராட்சித் திணைக்கள இலக்கிய விழாவை நடாத்தி முடித்தார். எதற்கும் துணிந்தவர். 1970 இல் எனது 'கால தரிசனம்' நூல் வெளிவந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போது அவரோடு நெருங்கிப் பழகினேன். வானொலியில் விமர்சனத்தை ஒழுங்கு செய்தார். 1996 இல் நடந்த இலக்கிய விழாவில் தமிழக எழுத்தாளர் பொன்னீலன் கலந்து கொள்வதற்கு முக்கிய பங்காற்றினார் நாவலருக்கு வெளியிட்ட சிறப்பு மலரைப் போல் இன்றுவரை வேறெந்த மலரும் வரவில்லை. இதில் சோமகாந்தனின் பங்களிப்பும் இருந்தது. நாவலர் சபை, இந்துமாமன்றம், சின்மியா அமைப்பு என்பவற்றோடும் பணி செய்தார். சோமகாந்தனின் அருமையை இப்போ தான் உணருகிறோம்.

'ஆகுதி' சிறுகதைத் தொகுப்புக்கு சாகித்திய மண்டலப் பரிசு கொடுக்கத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. ஆனால் அடுத்த நாள் மறுக்கப்பட்டது. இது அவரோடு சேர்ந்திருந்தோரது கைங்கரியமாகவே இருந்தது. இதை அவர் ஞானம் நேர்காணலில் பதிவு செய்துள்ளார். இலங்கை முற்போக்கு எழுத்தாளர் யாழ்ப்பாணத்தில் நடந்த சாகித்திய விழாவுக்கு கூழ் முட்டை எறிந்து அதைக் குழப்ப முயற்சித்தனர். இந்த இரு சம்பவங்களும் அவமானமெனக் கருத்துரைத்தார். அல்வாயில் நடந்த புத்தக வெளியீட்டு விழாக் கருத்தாடலில் நவீன போக்குகள் புரிய வேண்டுமென வலியுறுத்தப்பட்டது. இதை மூத்த எழுத்தாளரொருவர் மறுத்தார்.

பல இலக்கியப் பிரச்சினைகளை எதிர் நோக்குகிறோம். எமது முயற்சிகள் போதாது. உலக எழுத்தின் போக்குகளுக்கு ஈடு கொடுத்து நாம் எழுத வேண்டும். இதையே பேராசிரியர் சபாஜெயராசாவும் குறிப்பிட்டார். இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் சோமகாந்தன் வாழ்ந்து கொண்டிருந்தால் இன்றும் இயங்கிக் கொண்டிருக்கும். மூத்த இலக்கியவாதிகள் இதைக் கவனிக்க வேண்டும். சோமகாந்தனுக்கு ஏற்ற மனைவியாக பத்மா சோமகாந்தன் வாழ்ந்தார். பாராட்டுகிறேன்.

## டொமினிக் ஜீவா (ஆசிரியர், மல்லிகை)

கூழ் முட்டை எறிந்த சம்பவம் அன்றைய அரசியல் முரண்பாட்டின் செயற்பாடாகும். தவறைச் சொல்லிப் பகிரங்கமாக மன்னிப்புக்கேட்டோம். திருப்பித் திருப்பி அதனைத் தவறெனப் பிரசாரப்படுத்துவது அர்த்தமற்ற வழவழவாகும். முற்போக்கு எழுத்தாளர் சங்கம் நடாத்திய விழாக்கள் வெற்றி பெறச் சோமகாந்தனின் தனிப்பட்ட கெட்டித்தனம் மட்டுமல்லாது முற்போக்கு அணியின் காத்திரமான கொள்கையும் இருந்தது. இலங்கை எழுத்துக்கள் இன்று 45 நாடுகளில் படிக்கப்படுகிறது. ஒரு காலத்தில் தமிழ்நாடு, சிங்கப்பூர் ஆகிய நாடுகளிலேயே படிக்கப்பட்டது. அரசியல் நெருக்கடி தான் இடப்பெயர்வை ஏற்படுத்தியது. யாழ்ப்பாண நூல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையத்தை எரிக்க வந்தவர்களில் ஒருவர் எனது வீட்டு அருகில் இருந்த ஹோட்டலில் தங்கி இருந்தார். அவரது முகம் எனக்கு ஞாபகமாக இருக்கின்றது.

கொடகே நாற்பது தமிழ் நூல்களை வெளியிட்டுள்ளார். புரவலர் காசிம் உமர் குஜராத்தி இனத்தைச் சேர்ந்தவர். நூலையும் பதிப்பித்து வெளியீட்டு விழாவையும் நடாத்தி எழுத்தாளனுக்கு சேர்ந்த காசையும் கொடுத்து மிஞ்சிய நூலையும் கொடுக்கிறார். மேமன் கவி வியாபாரி. அவரும் குஜராத்திக்காரர். அர்ப்பணிப்போடு தமிழ்க் கவிதைகளைப் படைக்கிறார். இத்தகைய மனிதர்களை எமக்குத் தந்தது முற்போக்கு இலக்கியக் கொள்கைகள் தான். பத்மா சோமகாந்தன் யாழ்ப்பாணத்தில் சிவலிங்கப் புளியடியில் வசித்தவர். புதுமைப் பிரியை என்ற புனைபெயரில் எழுதினார். சந்திக்க வேண்டுமெனக் கடிதம் எழுதினார். அவரோடு கதைத்த போது தலைவிறைத்தது. வேலை மாற்றம் பெற்று ஈழத்து சோமு சோமகாந்தன் யாழ்ப்பாணம் வந்தார். புதுமைப் பிரியை பத்மா சோமகாந்தன் ஆனார். மனைவி என்றால் இப்படித் தான் இருக்க வேண்டும். சோமகாந்தனின் பெருமையை நாம் விளங்கிக் கொள்ள வேண்டும்.

இது எழுத்தாளனுக்கான முழுநாள் விழா. புதிய வரலாற்றை உருவாக்குகிறோம். தமிழினம் நன்றி உள்ளது. இரு தரப்புக்குமிடையில் சகோதரத்துவம் இருக்க வேண்டும். புதிய நம்பிக்கையை ஏற்படுத்துவோம். வளர்ப்போம்.

### பிரபல நாவலாசிரியர் செ.கணேசலிங்கன்

பத்மா சோமகாந்தன் சிறந்த எழுத்தாளர். எஸ்.டி.சிவநாயகம் சுதந்திரன் பத்திரிகையில் பத்மாவை அறிமுகப்படுத்தச் சொன்னார். யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணையில் போய்ச் சந்தித்தேன். அதனால் பல விவாதங்களும் வந்தன. நாவலர் விழா சம்பந்தமாகக் குமரன் புத்தகக் கடைக்கு வந்த போது சோமகாந்தனோடு பழகத் தொடங்கினேன். பத்மாவின் எழுத்துக்களால் அக்காலத்தில் சோமகாந்தன் பாதிக்கப்பட்டிருக்கலாம். 'நிகழ்வுகளும் நினைவுகளும்' சோமகாந்தனின் ஆளுமையையும் பின் பற்றிய கோட்பாட்டையும் அறிய வைக்கக்கூடிய சிறந்த நூல். போராடும் தன்மை அவரிடம் இருக்கவில்லை.

அன்பு அவரிடம் இருந்தது. பிராமணராக இருந்தும் அனைவரோடும் பழகினார். நாவலர் சமய குரவர்; சோமகாந்தன் சமயத்தையும் எழுதினார். அவரை அவரது ஊர் ஏற்றுக் கொள்ளவில்லை. பெண்ணியத்தில் மதிப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்திருந்தார். அளவுக்கு மிஞ்சிக் கண்டிக்காத நடுநிலைப் பேச்சாளர் சோமகாந்தன்.

## கம்பவாரிதி இ. ஜெயராஜ்

டொமினிக் ஜீவா பேச்சின் ரசிகன் நான். சாதி பற்றிய தவறைத் திரும்பத் திரும்பப் பேச வேண்டுமா? அதை நிறுத்தச் சம்மதித்தால் நாமும் கூழ் முட்டை எறிந்ததை சொல்வதை நிறுத்துவோம். சோமகாந்தன் நல்ல பிராமணன். நல்ல இலக்கியவாதி. கருத்து, காட்சி என்பவைகளின் வடிவமே இலக்கியம். இலக்கியம் உலகை அழகு செய்ய வேண்டுமெனக் கம்பன் சொன்னான். உண்மையில் இப்போது உலகை அசிங்கம் தான் செய்கின்றனர். இலக்கியவாதியின் முகத்தில் மலர்ச்சி இருக்க வேண்டும். அது சோமகாந்தனிடம் இருந்தது. அவரைக் காண்பதே மகிழ்ச்சி.

உள்ளத்தில் நல்லெண்ணம் இருந்தது. உலகம் உயர வேண்டுமென நினைத்தார். நல்லதைத் தேடிச் சென்று அதைத் தனதாக்குவார். மானப் பிரச்சினை பார்க்காதவர். உயர்ந்த மனிதர். யாழ்ப்பாணத்தில் அவர் இருந்த போது எம்மிடையில் முரண்பாடு நிலைத்தது. அவர் ஏற்பாட்டில் உருவாக்கப்பட்ட நாவலர் சிலையை பிழை எனக் கூறி அதை வைக்கக் கூடாதெனக் கருத்துச் சொன்னேன். அதன் பின்னர் அசம்பாவிதங்களின் நிமித்தம் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்குப் புறப்பட்டேன். கொழும்பில் என்னையும் சேர்த்துப் பொலிஸ் அடைத்து வைத்தது. என்னை வெளியே எடுப்பதற்கு அப்போது எவருமே பொலிஸ் நிலையத்துக்கு வரவில்லை. சோமகாந்தன், பிரேம்ஜி ஞான சுந்தரத்தோடு வந்து என்னை விடுவித்தார். ஆறுதல் சொன்னார். நாவலர் சிலையை நிராகரித்ததை வைத்து அவர் என்னைப் பழிவாங்கி இருக்கலாம். அப்படிச் செய்யவில்லை. அதுவே சோமகாந்தனின் பெருந்தன்மை. அதன் பின்னரும் எனக்குக் கொழும்பில் உதவினார். கொழும்பில் நடந்த விழாக்களில் என்னைப் பங்கு பற்ற வைத்து, விழா ஏற்பாட்டாளர்களிடமிருந்து காசும் வாங்கித் தந்தார்.

கவிதை வாசிப்பு நிகழ்ச்சிக்கு கவிஞை திலகபாமா தலைமை தாங்கினார். கவிஞர்கள் ஔவை விக்னேஸ்வரன், சடாகோபன், லறினா ஹக், பா.வெங்கடேசன் ஆகியோர் கவிதை வாசித்தனர்.

நன்றியுரை, தமிழ்த்தாய் வாழ்த்துக்களோடு நிகழ்ச்சி நிறைவு பெற்றது. எஸ். எழில்வேந்தன், சுகந்தி ராஜகுலேந்திரா ஆகியோர் நிகழ்வுகளைத் தொகுத்து அறிவிப்புக்களைச் செய்தனர்.

- 27/28.02.2012

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 65

## க. கோபாலபிள்ளையின் 'யாரிலிகள்' நூல் வெளியீடு

'**வ**லிந்து கதை சொல்லும் முறைமைக்கு மாற்றாகக் கோபாலபிள்ளையின் கதைகள் விளங்குகின்றன. கோபாலபிள்ளையிடம் இடதுசாரிச் சிந்தனை உள்ளது. அவர் ஒரு மக்கள் இலக்கியவாதியென ஒரு சட்டத்தரணி வைத்து வாதிட வேண்டிய அவசியம் எனக்கில்லை'. 'யாரிலிகள்' சிறுகதைத் தொகுப்புக்குப் பின்னுரையாக உள்ள எழுத்துருவில் சிறுகதைத் தொகுப்புக்குச் சாகித்தியப் பரிசைப் பெற்ற கதைஞர் நந்தினி சேவியர் இப்படிக் கருத்து வெளியிட்டுள்ளார். கொழும்பு 10, எஸ்.கொடகே சகோதரர்கள் பிரைவேட் லிமிடெட் ஊடாக வெளிவந்துள்ள 'யாரிலிகள்' சிறுகதைத் தொகுப்புக்கான வெளியீட்டு விழா 22.03.2014 ஆந் திகதி கொழும்புத் தமிழ்ச் சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில் சாகித்திய ரத்னா பேராசிரியர் சபா ஜெயராசா தலைமையில் நடைபெற்றது.

தகைசார் பிரமுகர்கள் மங்கலச் சுடரேற்றி நிகழ்வைத் தொடக்கி வைத்தனர்.

**தலைமையுரை:**
**பேராசிரியர் சபா ஜெயராசா**

சிறுகதை, கவிதைக்கென எமது விமர்சகர்கள், திறனாய்வாளர்கள் சில வாய்ப்பாடுகளை வைத்திருக்கின்றனர். சிறுகதையென்றால் இலங்கையர்கோன், ரஞ்சகுமார் இதுவே அவர்களது வாய்ப்பாடாகிவிட்டது. இலங்கையில் பல சிறுகதைப் படைப்பாளிகள் உள்ளனர். அவர்கள் பார்வையிலிருந்து விடுபட்டுள்ளார்கள். 'யாரிலிகள்' சிறுகதைத் தொகுப்பின் ஆசிரியர், அவரது தொழில்நுட்பக் கல்லூரி காலத்திலிருந்து சிறுகதை எழுதி வருகிறார். ஆனால் இவர் தொடர்ந்து எழுதிக் கொண்டிருப்பதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விமரிசகர்களும் கண்டுகொள்வதில்லை. விமர்சகரது கவனத்தைப் பெறாத படைப்பாளிகளும் சிறந்த சிறுகதைகளைப் படைத்துள்ளனர். வித்தியாசமான சிறுகதைகளைத் தந்துள்ளனர்.

தமிழ்ச் சமூகத்தால் மறைக்கப்பட்டவைகளை வெளிச்சத்துக்குக் கொண்டு வருவன க.கோபாலபிள்ளையின் சிறுகதைகள். எதிர்விசைப்பு இலக்கியம் பலஸ்தீனத்தில்தான் தோற்றம் பெற்றது. அது ஒடுக்கப்பட்ட மக்களது மனச் சாட்சியாகும். இந்த எதிர்விசைப்பு இலக்கியம் உலகெங்கும் பரவி உள்ளது. ஒடுக்குமுறைகள் பல நிகழ்ந்து கொண்டுதானிருக்கின்றன. க.கோபாலபிள்ளையின் படைப்புக்களில் அதைக் காணமுடிகிறது.

இந்நூலாசிரியர் இலங்கைப் பாராளுமன்ற உரைபெயர்ப்பாளர். மூல மொழியை இலக்கு மொழிக்குக் கொண்டு வர வேண்டும். மொழி பெயர்ப்பாளர் மொழிக் களஞ்சியமாக இருத்தல் வேண்டும். அதை கோபாலபிள்ளையின் எழுத்துக்களில் காண முடிகின்றது. படைப்பின் மொழி நடைமுக்கியமானது. எதிர்விசைப்படி இலக்கியத்துக்கு தனித்துவமான மொழிநடை வேண்டும். இத்தொகுப்பில் யாழ்ப்பாணச் சமூகத்தை அடிப்படையாகக் கொண்ட சிறுகதைகள் உள்ளன. ஊர்களின் பண்பாடுகளில் காணப்படும் வேறுபாடுகள் கையாளப்பட்டுள்ளன. க.கோபாலபிள்ளை மிக நுண்ணிதாகச் சிறுகதைகளில் அலசியுள்ளார்.

**வெளியீட்டுரை :**
**பிரபல கவிஞர் மேமன் கவி**

யாரிலிகள் சிறுகதைத் தொகுப்புக் கொடகே வெளியீடாகும். தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளில் இந்நிறுவனம் நூல்களை வெளியிட்டு வருகின்றது. தமிழ் நூல்களை மிகத் துடிப்போடு வெளியிட்டு வருகின்றனர். சிங்கள நூல்களுக்குக் காட்டாத சலுகைகளைத் தமிழ் நூல்களுக்கு மிகுந்த பெருந்தன்மையோடு காட்டுகின்றனர். ஆத்மார்த்தமான பற்றுதலோடு இதைச் செய்கின்றனர். சனி, ஞாயிற்று கிழமைகளில் சிங்கள இலக்கியக் கூட்டங்கள் நடப்பதில்லை. அக் கூட்டங்கள் மாலை 4,5 மணிக்குப் பின் நீடிக்காது. கொடகே நிறுவனத்துக்கான இணையத்தளமுண்டு. நல்ல தரமான தமிழ் நூல்களையே வெளியிடுகிறோம். க.கோபாலபிள்ளை 1973 இலிருந்து எழுதுகிறார். அவரது சிறுகதைத் தொகுப்பைக் கொடகே வெளியிடுவது பொருத்தமானதாகும்.

*(இவ்வுரையைப் பாராளுமன்றச் சமகால மொழி பெயர்ப்பாளர் கே.ராகுலன் சிங்கள மொழியில் மொழி பெயர்த்துப் பேசினார்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*நூல் வெளியீட்டில் யாரிலிகள் நூலின் முதல் பிரதியைத் தேசமான்ய சுமன கொடகே சட்ட ஆலோசகர் க.மு.தர்மராசாவுக்கு வழங்கினார்.*

*சிறப்புப் பிரதிகளும் வழங்கப்பட்டன.*

*'தாயக ஒலி' இரு திங்கள் சஞ்சிகையின் ஆசிரியர் த.சிவசுப்பிரமணியம் (தம்பு சிவா) நூலாசிரியர் க.கோபாலபிள்ளைக்குப் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார்.*

**கருத்துரைகள் :**
**'தகவம்' வசந்தி தயாபரன்**

எனது தந்தையார் அமரர் வ.இராசையாவின் உற்ற நண்பராக இருந்தவர் க.கோபாலபிள்ளை. கதை கூறல், கேட்டல் தமிழில் வழிவழியாகத் தொடருமொரு பழக்கமாகும். சிறுகதை இலக்கிய வடிவத்தை ஒரு நூற்றாண்டுக்கு முன் மேற்கிடமிருந்து கடன் வாங்கினோம். தமிழ்ப் பாரம்பரியத்திலும் உண்டு. சிறுகதை காலத்துக்குக் காலம் தன்னைப் புதுப்பித்துக் கொண்டது. க.கோபாலபிள்ளையின் சிறுகதைகளில் சமூக அசைவியக்கம் உண்டு. மண்வாசனை உண்டு. பண்பாடு செறிந்த தொகுப்பு. சிறுகதைகளைப் புதிய கோணத்தில் படைக்க வேண்டுமென இப்போ கூறுகின்றனர். வலிந்து எழுதும் போக்கே இப்போ காணப்படுகின்றது. கோபாலபிள்ளை சிறுகதைகளை நேர்மையாகச் சொல்லியுள்ளார். யாரிலிகள், அகப்பிரசவம், சத்தியம் ஆகிய சிறுகதைகள் ஆகிய சிறுகதைகள் தூக்கலாக உள்ளன. சமுதாயத்தின் பல்வேறுபட்ட முகங்களை வெளிப்படுத்துகின்றன. பத்துச் சிறுகதைகளிலும் மனிதாபிமானம், மனித நேயம் நேர்த்தியாக வெளிப்படுகின்றன. பல்வேறுபட்ட வித்தியாசமான பாத்திரங்கள் கதைகளில் நடமாடுகின்றன. மனித மனதில் உருவாகும் உணர்ச்சிக் குவியல்கள் படைப்புக்களில் அழகாக, கையாளப்பட்டுள்ளன. வாழ்க்கை அனுபவங்களைக் கதைகளாக்கியுள்ளார்.

புதிய சொற்கள் கிடைக்கின்றன. எதிர்காலம் எப்படியிருக்குமென்பதை ஊகிக்க முடிகிறது. யாழ்ப்பாணப் பிரதேசத்தின் பூகோள அமைப்பை மிகக் கூர்மையாகப் பார்த்துள்ளார். படைப்புகளில் கிராமிய மணம் கமழ்கிறது. எனக்கு முத்திரைக் கதையாகப்படுவது 'பிரகடனம்'. இதில் சமூகம் கேள்விக்கு உட்படுத்தப்படுகிறது. நடப்பவைகளுக்கெல்லாம் நாம் தலையாட்டிக் கொண்டுதான் இருக்கிறோம். ஆனால் க.கோபாலபிள்ளை துணிந்து கேள்வி கேட்கிறார். யாரிலிகள் என்பது பொருத்தமற்ற தவறான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல். எதிர்மறையான கருத்தைக் கொடுக்கும். கோபாலபிள்ளையின் எழுத்துப் பணி தொடர வேண்டும்.

## கலாநிதி என். இரவீந்திரன் ('புதிய தளம்'- ஆசிரியர் குழு)

க.கோபாலபிள்ளை 1973 முதல் சிறுகதை எழுதுகிறார். அதை முப்பது ஆண்டுகள் தொடராது விட்டுவிட்டார். தனது சிறுகதைகள் பிரசுரத்துக்கு ஏற்றுக் கொள்ளாத படியால் எழுதாது விட்டதாகச் சொல்லியுள்ளார். சமூகத்துக்குத் தேவையானதைத் தான் எழுதியுள்ளார். மீள் வாசிப்புக்குரிய வாழ்நிலையை எழுதியுள்ளார். பண்பாட்டுத் தளத்தில் பற்று வைத்துக் கோபாலபிள்ளை எழுதுகிறார். 1970 களில் ஒடுக்கப்பட்ட மக்களின் வாழ்க்கையை டானியல் எழுதினார். அவைகளுள் 3 சிறுகதைகள் மட்டுமே சாதிபற்றியனவாயிருந்தன. 1990 களில் அவரது பஞ்சமர் நாவல் அதிகமாக வந்தன. சாதிபற்றியனவாயிருந்தன.

யாரிலிகள் பாவிக்கப்படாத சொல். கவிஞர் இ.முருகையன் மக்கள் புழக்கத்திலில்லாத சொற்களைத் தனது கவிதைகளில் பாவிப்பார். அது பற்றிக் கேட்டால் அதுவொரு ஆற்றல்மிக்க கவி பாவித்த சொல்லென்பார். ஆளுமையுள்ள கவிஞர் பயன்படுத்திவிட்டால் அச்சொல்லை ஏற்க வேண்டும். இலக்கணமும் சொல்லலாம். அந்த ஆளுமை மிக்க கவி யாரெனக் கேட்டபோது முருகையன் சொன்னபதில்: 'கவிஞர் முருகையன்' என்பதாகும். யாரிலிகள் யாரும் இல்லாதவர்கள். கோபாலபிள்ளை தான் வாழும் சூழலை வைத்தே தனது கருத்துருவாக்கங்களைச் செய்கிறார். 'பிரகடனம்' முக்கியமான சாதி எதிர்ப்புக் கதை, 'உழைப்பு'க் கதையின் எடுத்துரைப்பு நல்லது. 'பலி' யில் கிடாய் வளர்ப்பு அழகாகச் சொல்லப்பட்டுள்ளது. 'மிளகாய் செல்லையா' நல்ல தலைப்பு.

யாரிலிகள் தொகுப்புக்கு நந்தினி சேவியர் பின்னுரை எழுதியுள்ளார். கே.டானியலின் 'பஞ்சமர்' நாவலில் 30, 40 களில் வட இலங்கையில் காணப்பட்ட சாதிய ஒடுக்குமுறை 60 களோடு பொருத்திச் சொல்லப் படுகிறது. 1970, 1980 களில் சாதி ஒடுக்குமுறைகள் எப்படி இருந்தன என்பதை ஆவணப்படுத்த வேண்டுமென டானியல் சிந்தித்திருந்தார். அவரது 'அடிமைகள்' 100 வருடங்களுக்கு முன்பிருந்த சாதி சார்ந்த அடிமை நிலையையே எடுத்தாள்கிறது. சாதியம் இன்னமும் மறையவில்லை. அண்மையில் கட்டுவன் என்ற யாழ்ப்பாணக் கிராமத்தில் மோட்டார் சைக்கிளில் வந்து சாதியொடுக்குமுறைக்கு உட்பட்ட மக்களை அச்சுறுத்தியுள்ளனர். பஞ்சமக்கள் பயத்தால் கோயிலில் தஞ்சம் புகுந்தனர். கேள்விப்பட்டு சம்பவம் நடந்த இடத்திற்குச் சென்றோம். இளைஞர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நின்றனர். ஊடகங்களில் எழுதிவிடுவோம் என்ற பயத்தில் கவனமாக விளக்கந் தந்தனர். ஆசிரியரொருவர் நிதானமாக விளக்கங்களைச் சொன்னார். இந்த அப்பாவி மக்களை மிரட்டியது காடையரின் சேஷ்டையெனவும் சொல்லி நாங்கள் தமிழ்த் தேசியத்தை விட்டுக் கொடுக்க மாட்டோமெனவும் சொன்னார்கள். இவை, அவை என்ற சொற்களைப் பாவித்தே உரையாடல் செய்தனர். உயர் சமூகத்தவர்கள், இவற்றை யெல்லாம் பார்த்துக் கொண்டு எல்லாத்தையும் மூடிக் கட்டிக் கொண்டு எல்லாம் நல்லா இருக்குது என்கிறனர்.

இன்னும் நாம் நசிவான போக்கில்தான் வாழ்கிறோம். விழிப்பாக இருக்க வேண்டும் - ஹிட்லரின் செயற்பாடுகள் ஜேர்மன் மக்களுக்கும் எதிரானதே. எதிரான பண்பாட்டுத்தளமொன்று ஏற்படுத்தப்படுகிறது. எதிர் இலக்கியம் உண்டாக்கப்படுகிறது. வெளிப்படையான இலக்கியங்கள் தேவை. சிலப்பதிகாரத்தின் கண்ணகி தனிப்பெண் சாதிக்க முடியாததைச் சாதித்துக் காட்டியவர். மகாகவி பாரதியார் போர்க் குணத்தைப் பாடியுள்ளார். கம்பராமாயணம் அநியாயத்தைத் தகர்த்தது. தமிழகம் முழுவதும் பண்பாட்டு நிலையை ஏற்படுத்தியது. எமது இலக்கியங்கள் வாழ்க்கையைப் பேசவேண்டும்.

*யாரிலிகள் நூலாசிரியர் க.கோபாலபிள்ளை, இங்கு வெளிப்படுத்தப்பட்ட கருத்துக்களுக்கு அமைய எதிர்காலத்தில் எனது படைப்புக்களைச் செம்மைப்படுத்துவேன்; இத்தகைய கருத்துக்களை ஏற்காதவர்கள் படைப்பாளிகளாக மாட்டார்கள் எனக் கூறி ஏற்புரை நிகழ்த்தினார்.*

-07.05.2014

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 66

## ‘அமுதிலும் இனிய சொற்புலவர் ஔவை’

‘**வி**தைகள் முளை கொள்ளும் போதே தக்கபடி பசளையிட்டுப் பேணுவது போல் - விருட்சமாகச் செழிப்புற்று வளரவுள்ள விதைகளான சிறுவர்களுக்கு ஒழுக்கம், நேர்மை, நற்பழக்க வழக்கங்கள், குணநலன்கள், கட்டுப்பாடுகள் என்பவற்றை இளமையிலேயே அவர்கள் மனதில் ஊன்றிவிட்டால் எதிர்காலம் சுபீட்சமாக விளங்கும் என்பதில் சந்தேகமில்லை.’

இச் சிந்தனா உந்தலால் - தமிழில்லங்கள் தோறும் தினசரி பேசப்பட்டு வருபவரும் வழிபாட்டுக்குரிய தெய்வமுமாகி விட்டவருமான பெண்பாற் புலவர் ஔவைக்குச் சிறப்பானதொரு விழா எடுக்கப்பட்டது. இவ்வரிய பணியைச் செய்து, ஔவையின் அறிவு மேம்பாட்டை இன்றைய தலைமுறைக்குப் பரம்பல் செய்தவர்கள் ஔவை இலக்கிய வட்டம், விழுது ஆற்றல் மேம்பாட்டு மையம், பூரணம் மன்றம் ஆகிய அமைப்பினராவர். இவ்விழா 11.05.2014 ஆம் திகதி வெள்ளவத்தை இராமகிருஷ்ண மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது. ஈரமர்வுகளாக நடைபெற்ற இவ்விழாவில் ஆய்வரங்கம், கவியரங்கம், கலை நிகழ்ச்சிகள் என்பன இடம்பெற்றன. பிரபல இலக்கியவாதி பத்மா சோமகாந்தன் இவ்விழாவுக்குத் தலைமை தாங்கினார். தகைசார் பிரமுகர்கள் மங்களச் சுடரேற்றி நிகழ்வுகளைத் தொடக்கி வைத்தனர்.

### தலைமையுரை : பிரபல இலக்கிவாதி பத்மா சோமகாந்தன் (தலைவி - ஔவை இலக்கிய வட்டம்)

இன்று அன்னையர் தினம். பொன்னான நாள். புலவரென்றால் ஆண்களேயென்ற பிம்பத்தைக் கட்டுடைப்புச் செய்த ஔவையை இன்று கொண்டாடுவது மிகப் பொருத்தமானதாகும். இலங்கை இலக்கியச் சூழலில் ஔவைக்கு விழா எடுக்கப்படுவதில்லை. அமைப்புகள் இதைச் செய்யவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒளவைகள் பலர் வாழ்ந்தனரென்ற குழப்பம் எமது தமிழ்ச் சூழலில் உண்டு. பன்முக ஆளுமைகளைக் கொண்டவர் ஒளவை. சங்க காலம், சோழர் காலம் என்பவற்றில் ஒளவைகள் வாழ்ந்துள்ளனரென வரலாறு சொல்கிறது. எது எப்படி இருப்பினும் எமக்குத் தனிப்பெரும் செல்வமாக விளங்கும் ஒளவையை ஒரு போதும் இழக்கமாட்டோம். ஒளவையைப் பற்றிப் பாரதியாரும் பாடியுள்ளார்.

அமெரிக்காவிலுள்ள நாசா ஆய்வுகூட விளம்பரப் பலகையில் 'கற்றது கை மண்ணளவு; கல்லாதது உலகளவு' என்ற ஒளவையின் சமுதாயத்தை நெறிப்படுத்தும் வாக்கும் உள்ளது. ஒரு தமிழ் நாட்டுப் பெண்மணியின் வாக்கு இப்படி அங்கு வைக்கப்பட்டிருப்பது, தமிழ்ப் பெண்ணின் நுட்பமான அறிவைப் பாராட்டுவதாகும். ஒளவையின் பாடல்கள் பெரும் சக்தியை நமக்குத்தரவல்லன. ஒளவையின் சிந்தனைகளைக் குழந்தைகள் மத்தியில் கொண்டு செல்வது நமது கடமையாகும். ஒளவை இலக்கிய வட்டம் போட்டிகளை வைப்பது, ஒளவையின் கருத்துகளை பரவலாக்கு வதற்கேயாகும்.

**ஆய்வரங்கம் :**

**தலைமையுரை:**

**சாகித்திய ரத்னா, பேராசிரியர் சபா ஜெயராஜா**

ஒளவை பற்றிய வரலாறு சிக்கலானது. பல ஒளவைகள் இருந்துள்ளனர். செவி வழி, இலக்கிய வழி ஆதாரங்களை வைத்துச் சொல்கிறோம். சமூகவியல், மானுடவியல், அகழ்வாய்வு ஆதாரங்களை அடியொற்றியதாக இருந்தால் தான் இது சரியாக அமையும். ஒளவையின் கதையை சினிமாவாக்க ஆரம்பத்தில் புதுமைப்பித்தனைத் திரைகதை வசனம் எழுத ஒப்பந்தம் செய்தனர். அவர் எழுதிய திரைக்கதை படமாக்கப்படவில்லை. ஒளவை அற்புதங்கள் செய்தாரென்பதைப் புதுமைப்பித்தன் திரைக்கதை பிரதிபலிக்காததால் அது ஏற்றுக் கொள்ளப்படவில்லை.

பொருளேற்றம் வளர்ச்சி அடையத் தொடங்க சமுதாயத்தில் ஆண், பெண் என்ற வேறுபாடு முனைப்புக் கொண்டது. சொத்து குவிப்பு நிலை கொண்டு, ஆண்களும் பெண்களும் காடுகளுக்குச் சென்று பொருள் திரட்டலை ஏற்படுத்தினர். பெருந்தொகையான செல்வம் சேர்க்கப்பட்டது. பெண்ணை முதன்மைப்படுத்தும் சமூக நிலை தோன்றியது. இதிலிருந்து தான் ஒளவையும் தோன்றி இருக்க வேண்டும். இதில் பெண்ணுரிமை இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழில் வேறுபாடுகள் ஔவை பற்றிய புலக்காட்சியில் முக்கியம் பெற்றன. கடல் கடந்த தொழிலும் பெண்ணிடம் வந்தது. இந்நிலையில் ஆணின் மேலாதிக்கம் தோன்றத் தொடங்கியது. ஔவையைக் கிழவியாகக் காட்டினர். காடுகளில் பொருள் தேடுவோரைப் பேய் மகள் என இகழ்ந்தனர். ஔவையை இழிந்த நிலையில் கணித்தனர். ஆணாதிக்கம் மேலோங்கியது. நல்லதைச் சொல்ல வேண்டும் என்பர். வாழ்க்கைப் பேச்சு வழக்கில் ஔவைக்கு முக்கிய பதிவுண்டு. பிள்ளைகள் தவறு விடும் போது ஔவையிடம் முறையிடும் மரபுண்டு. ஔவை ஏன் எதிர்மறையாகக் கொள்ளப்படுகின்றார்? அவர் பற்றிய ஆய்வு முக்கியமானதாகும்.

**ஆய்வுரைகள் :**

**பேராசிரியர் வ. மகேஸ்வரன்**

**(கலைப்பீடாதிபதி - பேராதனைப் பல்கலைக்கழகம்)**

ஔவை அமுதிலுமினிய சொற்கிழவி. அவரது சான்றாண்மையை அவரது நீதி நூல்கள் அறியத் தரும். சோழர் காலத்தில் தனிப்பாடல்களைப் பாடியுள்ளார். முருகனைத் தொடர்புபடுத்தி நீதி நூல்களை இயற்றியுள்ளார். வெகுஜன ஆக்க இலக்கியங்களிலும் ஔவை நிலை பெற்றுள்ளார்.

கன்னட மாநிலச் சூழலிலும் ஔவை என்றொருவர் உண்டாம். இப்படி அறுபது ஔவைகள் உண்டாம். புறநானூறு என்ற நூலில் 91 பாடல்கள் உண்டு. நீண்ட காலம் வாழக் கூடிய காய கல்பமாக மன்னன் அதியமான் ஔவைக்கு நெல்லிக்கனி கொடுத்ததாகச் சொல்லப்படுகிறது. அந்த வகையில் நீண்ட ஆயுளால் ஔவை ஒரேயொருவரெனவும் சொல்லப் படுகிறது. ஔவை கூனல் கிழவியாகவே காட்சிப்படுத்தப் படுகிறார். அவரது அறிவின் முதிர்ச்சியை வைத்தே அவரைக் கிழவியாகக் காட்டப்படுவதாகக் கருதப்படுகின்றது. ஔவையின் காலம் சங்க காலத்துக்குரியதெனவும், கி.பி 10 ஆம் நூற்றாண்டிலும் ஔவை இருந்ததாகவும் பேசப்படுகின்றது.

மகாகவி சுப்பிரமணிய பாரதிக்குப் பாடுவதற்குத் தளமமைத்துக் கொடுத்தது ஔவையின் தனிப்பாடல்களே. அவரது பாடல்கள் ஒரு பொது நிலையைக் கொண்டு வருகின்றன. மேலதிகமாக முருகனுடன் தொடர்புபடுத்துகின்றன. ஔவை முருகனோடு சம்பாஷணை செய்தார். சுட்ட பழம் வேணுமா? சுடாத பழம்வேணுமா? என முருகன் கேட்டதாகப் படிக்க முடிகின்றது. ஔவையின் தோற்றம் பாடகி கே.பி. சுந்தரம்பாளுக்கு உண்டு. தனது பாடல்களின் மூலம் ஔவை பல தளங்களை உருவாக்கி உள்ளார். அவை இன்று வாழ்வில் நிலை பெற்றுள்ளன. ஔவையைப் பேயாகப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்த்தோம். கிழவி ஆக்கியுள்ளோம். அத்தோடு புலையர் சமூகத்தைச் சேர்ந்தவரெனவும் அடையாளப்படுத்தியுள்ளோம். தாழ்ந்த குலத்தைச் சேர்ந்த ஔவை பிராமணனை மணந்ததாகவும் கதைகள் உண்டு. இருந்தும் முருகனோடு பேசிய மேல் நிலையாக்கமும் ஔவைக்கு உண்டு. ஔவையைப் பண்பாட்டுத் தளத்தில் வைத்துப் பார்த்தால் இன்னும் பல சங்கதிகள் கிடைக்கும்.

**கலாநிதி நதிரா மரியசந்தனம்**
**(சிரேஷ்ட விரிவுரையாளர்)**

நீண்ட பாரம்பரியத்திலிருந்து வந்தவர் ஔவையார். அவரைப் பற்றிய ஆய்வுகள் அவதானமாக இருக்க வேண்டும். தனித்துவம் தொனிக்கும் முக்கியமான பாடல்களைப் பாடியுள்ளார். அவரது பாடல்களில் மொழி அழகும் கவித்துவமும் தனித்துவமாகக் காணப்படும். அனுபவத் தனித்துவம், மென்மையான சொற்கள் என்பன காணப்படும். பெண் மைய நிலையும் உண்டு. அவரது எடுத்துரைப்பு உத்தி முதன்மையானது. இத் தன்மைகளை ஆண்டாள் பாடல்களிலும் காணலாம்.

கவிதை மொழிக்குப் படிமங்கள் முக்கியமானவை. பண்பாட்டுக்கு நெருங்கிய உறவுண்டு. ஔவை பாடல்களில் தாய்மை பற்றிய படிமம் உண்டு. அகப் பாடல்களில் காதலைச் சொல்லும் போது தாய்மையைப் பயன்படுத்துகிறார். தாழ்வுணர்வோடு காமத்தைக் குறிப்பிடுகிறார். பல்வேறு வகைகளில் வெளிப்படையாகவும் கூறுகிறார். பிரிவுத் துயரத்தைக் குறிப்பிடுகையில் நீர் சார்ந்தே படிமத்தைப் பயன்படுத்துகிறார். படிமப் பயன்பாடு ஔவை பாடல்களுக்குத் தனிச் சிறப்பைக் கொடுக்கின்றன. அகப் பாடலுக்குச் சொற் பயன்பாடு முக்கியமானது. இசை தொடர்பான விடயங்களும் பாடல்களில் உண்டு. ஔவை யார்? விறலியா? பாடினியா? விறலி என்பதுக்கு ஔவையின் பாடல்களில் சான்றுகள் உண்டு.

**தேவகௌரி சுரேந்திரன்**
**(ஊடகத்துறை, மூத்த விரிவுரையாளர்)**

ஔவையை வயோதிபப் பெண்ணாகப் பார்க்கும் தன்மை இன்றும் எம்மத்தியில் உண்டு. இதை எம்மால் ஏற்க முடியவில்லை. அவர் காதல், காமம் என்பவைகளையும் பாடியுள்ளார். அவரது சொற்பிரயோகங்கள் அவர் இளமையானவரென்பதையே உணர்த்துகின்றன. மரணத்தை வெல்ல அவருக்கு நெல்லிக்கனி கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர் அறிவுத் திறன் கொண்டவர். எனவே தான் மன்னர்களுக்கிடையில் தூது சென்றுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புறத்திணையில் அதிக பாடல்கள் உண்டு. மனதளவில் ஔவையை வீர மங்கையாகக் கண்டுள்ளோம். கோபக் கனல் பொங்கக் கூடிய பெண் வடிவம் ஔவை. மிக இளமையானவர் சங்ககால ஔவை. வரலாறு அவரை அப்படிக் காட்ட விரும்பவில்லை.

மதத்தின் அடிப்படையில் பெண் இரண்டாம் பட்சமே. நல்ல, கெட்ட பெண் என்பதெல்லாம் ஆண்களால் தான் உருவாக்கப்பட்டன. 'தையல் சொல் கேளாதே' என்பதைச் சொன்னது ஆணாகத்தான் இருக்க வாய்ப்புண்டு. 'உண்டி சுருங்குதல் பெண்டிற் கழகு' இதை ஔவை சொல்லி இருக்க முடியுமா? முரணாகவே தெரிகின்றது. ஔவை என்ற பெயரில் யாரும் எழுதியிருக்கலாம். நல்வழி காட்டிய ஔவையாக இருக்க முடியாது. எமது நாட்டிலும் ஔவை உண்டு. இவர் மஹாகவி உருத்திர மூர்த்தியின் மகள். இப்போது கனடாவில் வாழ்கிறார். பெண்ணியம், அடக்குமுறை பற்றிய சிந்தனைகளையுடைய ஔவைகள் தோன்ற வேண்டும்.

**க.இரகுபரன் (சிரேஷ்ட விரிவுரையாளர், தென்கிழக்குப் பல்கலைக்கழகம்)**

ஔவை இளமையானவரா, முதுமையானவரா? என்ற பிரச்சினை எழுந்துள்ளது. இதைக் கண்டறிவது இந்தக் காலத்தில் கஸ்டம். ஔவை ஆளுமையுள்ள பெண். ஆளுமை வருவது வயதாலல்ல. ஔவை என்பது அக்கா என்பதைப் போன்றதாகும். மூத்தவரென்ற பொருளைத் தரும் மரியாதைச் சொல்.

சங்க கால ஔவையின் பாடல்கள் முக்கியமானவை. எப்போ இந்த ஔவை இருந்தார்? அதிகமானைப் பாடியுள்ளார். அப்போ அவன் எக் காலத்தவன்? அசோக சக்கரவர்த்தியின் காலமாக நிர்ணயிக்கப் பட்டுள்ளது. கல்வெட்டில் எழுதியுள்ளதாகவுள்ளது. எனவே இக்கால கட்டத்துக்குரியவரே ஔவை எனக் கொள்ள இடமுண்டு. பாரி வள்ளலைப் பாடிய கபிலர், வெள்ளி வீதியார் ஆகிய புலவர்கள் ஔவையின் கால கட்டத்தவரே. ஔவையின் சமயத்தைப் புறநானூறு, சமணம் என்கிறது. இது வேத வழக்குகள் கலந்த கால கட்டமாகும். வரலாற்றை நியாயப்படுத்தும் ஔவை பாடல்களும் உண்டு. அவரது பாடல்களில் கவித்துவமான சொற்களும் உண்டு. பாவனைக்குரிய கவிதைகள் நிறைய உண்டு.

*(நேர அவகாசம் கருதி ஆய்வுரைகள் சுருக்கமாக நிகழ்த்தப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*கவிஞை லரினா ஹக் தலைமையில் கவியரங்கம் நடைபெற்றது.*

**இரண்டாம் அமர்வு :**
**வரவேற்புரை: செல்வி சச்சிதானந்தம் (தலைவி - பூரணம் மன்றம்)**

இதுவொரு பரீட்சார்த்தமான நிகழ்வு தான். ஔவைக்கு விழா எடுக்க வேண்டும் என்ற எண்ணமே இன்று ஔவை இலக்கிய வட்டமாகப் பரிணமித்துள்ளது. இத்தகைய செயற்பாடுகளில் மாதர் பிரச்சினைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்க முடியும். இதை அடியொற்றிச் சிறுவர்கள் மத்தியில் போட்டிகளை நடாத்தினோம்.

*'பிள்ளையார் வணக்கம்' நிருத்திய நடன நிகழ்ச்சி நடைபெற்றது.*

*கம்பர், ஔவை இருவருக்கிடையிலான கருத்துப் பரிமாறல்களை வெளிப்படுத்தும் வில்லுப்பாட்டுக் கச்சேரியைச் சைவ மங்கையர் கழக மாணவிகள் நடாத்தினர்.*

*ஆத்திசூடி, கொன்றை வேந்தன், மூதுரை, நல்வழி ஆகிய ஔவைப் பாடல்களை மனனப் போட்டியில் பங்குபற்றி முதலிடம் பெற்ற சிறுவர்கள் பக்க வாத்தியங்களோடு பாடி சபையோரைப் பரவசப்படுத்தினர்.*

**பிரதம அதிதி உரை:**
**செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு திருமுருகன்**

அறஞ் சொன்ன தாய் எனப் போற்றப்படுபவர், தமிழ் மூதாட்டி ஔவை. அவர் தமிழுக்குக் கிடைத்த மாபெரும் சொத்து. நல்ல கருத்துகளைப் புகுத்தினார். தர்மத்துக்கு விளக்கம் கொடுத்து ஔவைப் பாடல்கள் மக்களை நல்வழிக்கு ஆற்றுப் படுத்துகின்றன. தாயின் வடிவத்தில் நின்று இலக்கியம் படைத்தார். அடுத்தடுத்த சந்ததியும் நினைக்க வைத்தார். எல்லாருக்கும் நல்ல செய்திகளை சொன்னார்.

அரச சபையொன்றில் பல புலவர்கள் இருந்தனர். புலவர்கள் அரசனைப் போற்றினர். ஔவைக்கு ஆழமான தமிழ்ச் சொல்லாற்றல் இருந்தது. 'வரப்புயர......' எனச் சொல்லி விட்டு ஔவை இருந்து விட்டாள். எல்லாரும் ஆச்சரியப்பட்டனர். 'நீருயரும்..... நீருயர நெல்லுயரும்... நெல்லுயரக் குடியுயரும்.... குடியுயரக் கோல் உயரும்.... கோல் உயரக் கோன் உயர்வான்' நெல் விளைந்தால் பஞ்சம் இராது. செங்கோலும் சரியாக இருக்கும். பெண் புலவரான ஔவை அறத்தைச் சொல்லி இப்படி வாழ்த்தினார். அரசனின் தகுதியைச் சொன்னாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஔவை முருகனைச் சந்திக்கிறாள். மாடு மேய்க்கும் இளைஞன் முருகன் நாவல் மரக்கொப்பில் இருக்கிறான். களைப்பில் நாவல் மரத்தின் கீழிருந்த ஔவை முருகனிடம் நாவல்பழம் கேட்கிறாள். முருகன் சுட்ட பழமா? சுடாதா பழமா? எனக் கேட்கிறான். சுட்ட பழமென்கிறாள். முருகன் கொப்பை ஆட்டப் பழம் மண்ணில் விழுகின்றது. அதை எடுத்து ஊதினாள். சுடுகிறதா? என முருகன் கேட்டான். மாடு மேய்ப்பவனிடம் தோற்று விட்டேனே எனக் வெட்கப்பட்டாள். பெரும் புலவர்களை யெல்லாம் வென்ற நான் இப்படித் தோற்றேனே என உணர்ந்து 'கற்றது கை மண் அளவு, கல்லாதது உலகளவு' எனக் குவலயத்துக்குப் புகட்டினார்.

கல்வி உளவியலைக் கற்பித்தவள் ஔவை. கைத்தொலைபேசியில் எத்தனையோ விடயங்கள் இருக்கின்றன. எம் போன்ற முதியவர்கள் பலருக்கு அது விளங்காது. ஆனால் இளம்பிள்ளைகளுக்கு அதைப் பற்றித் தெரியும். எனவே தான் கற்றது கை மண்ணளவு கல்லாதது உலகளவென்பது பொருத்தமாக உள்ளது. தங்களது படிப்பு முடிந்து விட்டதென்று சொல்பவர்கள் அறிவு பெரும் சமுத்திரமென்பதை விளங்கிக் கொள்ள வேண்டும். அதைத்தான் மிக நேர்த்தியாகவும் அழகாகவும் ஔவை சொன்னார்.

கற்றது கை மண்ணளவு கல்லாதது உலகளவென்பதை மொழி பெயர்த்து வேற்று மொழிக் காரரையும் படிக்க வைத்தால் அவர்களும் ஔவையைத் தேடுவர். திருவள்ளுவரை வெளிநாட்டவர் தேடுகின்றனர். திருக்குறள் பல மொழி பெயர்ப்புகளைக் கண்டுள்ளது. திருவள்ளுவருக்குச் சிலையும் வைத்து மரியாதை செய்கின்றனர். முருகன், நீயே தமிழுக்குத் தலைவியென ஔவையைப் புகழ்ந்தார். கோபத்தை வளர்ப்பது உலகம். அழிக்கத் தான் கோபத்தை வளர்க்கிறது. 'ஆறுவது சினம்' என ஔவை சொன்னார். ஏககாலத்துக்கும் பொருத்தமான செய்தி அவரிடமுண்டு.

ஒருவரை வாழ்த்துவது எப்படி? மனதார வாழ்த்த வேண்டும். நண்பன் இல்லாத இடத்தில் அவனை வாழ்த்த வேண்டுமென அறிவுறுத்தியுள்ளார். ஆசிரியரை மாணவர்கள் மறக்கக் கூடாது. விளக்கைப் போன்றவர்கள் ஆசிரியர்கள். ஒளியூட்டுபவர்கள். மாணவர்கள் தமது ஆசிரியர்களை கும்பிடுவது கடமை. மனைவியைப் பள்ளியறையில் தான் வாழ்த்த வேண்டும். மைந்தரை நெஞ்சால் தான் வாழ்த்த வேண்டும்; புறத்தில் வாழ்த்தக் கூடாது. வேலையாளை வேலை செய்து முடிந்த பின் வாழ்த்த வேண்டும். இந்த உளவியலை, நாகரிகத்தை உலகுக்குச் சொல்லிக் கொடுத்தவர் ஔவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர்ந்த கருத்துகளை, ஆழமான செய்திகளை ஔவை உலகுக்குச் சொன்னார். எமது பாடத்திட்டம் எல்லாவற்றையும் தலைகீழாக்கி விட்டது. ஔவை பற்றிய விடயம் ஒருங்கிணைக்கப்படவில்லை. எமக்குப் பெறுமதி தெரியாது போய்விட்டது. அடுத்த சந்ததி கற்பதற்கு நாம் வாய்ப்பை ஏற்படுத்த வேண்டும். பாடத்திட்டத்தில் ஔவையின் விடயங்கள் சேர்க்கப்பட வேண்டும்.

எமது பெண்கள் எப்படிக் கல்விமான்களாக இருந்துள்ளனர்? இன்று யாழ்ப்பாணத்துப் பிள்ளை சந்திரமண்டலம் போய் விட்டதை அறிகிறோம். அக்காலத்தில் பெண்கள் சைக்கிள் ஓடுவது தவறென மதிக்கப்பட்டது. கட்கின் என்ற வெளிநாட்டுப் பெண் உடுவிலிலிருந்து கோப்பாய்க் கிறிஸ்தவக் கல்லூரிக்குச் சைக்கிளில் சென்றார். இதைக் கண்ட விவசாயிகள் பெண்கள் சைக்கிள் ஓடக் கூடாதெனத் தடுத்தனர். சேவை செய்வதுக்கே இங்கு வந்தேன் என அப்பெண்மணி சொன்னார். பின் தனது சைக்கிளை வீட்டு முகட்டில் கட்டி தொங்க விட்டார். இன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் 60% மாணவிகள் கற்கின்றனர்.

*'அகவிழி' ஆசிரியர் எஸ்.இந்திரகுமார் பிரதம அதிதிக்குப் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார். கொழும்பு, நுண்கலாலயக் கலைஞர்கள், 'ஔவையின் கதை' என்ற பொருளில் உரையிடையிட்ட கதாகாலாட்சேபம் செய்து மகிழ்வித்தனர்.*

**சிறப்புரை : சாந்தி சச்சிதானந்தன்**
**(நிறைவேற்றுப் பணிப்பாளர், விழுது ஆற்றல் மேம்பாட்டு மையம்)**

ஔவை படாடோபத்துக்கு ஆளாகவில்லை. நாலாயிரம் புலவர்கள் கேலி செய்ய ஔவை 'பாலும் தெளிதேனும் பாகும் பருப்புமிவை நாலும் கலந்துனக்கு நான் தருவேன்' எனப் பாடினார். எதற்காக? சங்கத் தமிழ் மூன்றும் தா எனக் கேட்டார். 'கற்றார்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு' என அன்றே ஔவை கூறியுள்ளார். அதியமான், பாரி மன்னர்களிடம் ஆழமான நட்பு கொண்டிருந்தார். தொண்டமானிடம் அதியமான் ஔவையைச் சமாதானத் தூதராக அனுப்பினார். அரசியல் நெறியையும் அறிந்திருந்தார். நீதி உணர்வு இருந்தது. எளிமையையும் அடக்கத்தையும் உருவாக்க வேண்டுமென்றார். தொண்டமானின் ஆயுதக் களஞ்சியத்தைப் பார்த்து விட்டு அதியமானின் ஆயுதங்களெல்லாம் நெய் பூசப்பட்டு இருக்கின்றன என்றார். இருப்பதைப் பகிர்ந்துண்பவன் நெருப்புக்கும் அஞ்சமாட்டானென்றார். மக்களைக் கொன்று குவித்துப் போரில் வெல்வதை விட ஏழை மக்களை வாழ்விப்பது நல்லதென நல்வழி புகட்டினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒடுக்கப்பட்ட, விளிம்பு நிலை மக்களுக்கு முன்னுதாரணமாக விளங்குபவர் ஔவை.

*ஔவை பாடல் மனனம், கட்டுரைப் போட்டி என்பவற்றில் வெற்றி பெற்றோருக்கு மேல் மாகாண சபை உறுப்பினர் சண்.குகவரதன் (ஜனநாயக மக்கள் கட்சி) பரிசுகளை வழங்கினார்.*

*நன்றியுரையோடு நிகழ்வு நிறைவு பெற்றது.*

-22.05.2014

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 67

## காப்பியக்கோ ஜின்னாஹ் 'ஷரிபுத்தீனின் 'எல்லாள காவியம்'

*வரலாற்றைக் காவியமாக்கும் ஆற்றல்மிக்க கவிஞர் ஜின்னாஹ் ஷரிபுத்தீன், தனது கவிதா ஆற்றலால் தமிழகத்தவரைத் தன்பாலீர்த்த கவிதா வல்லுநர். தன்னைச் சான்றோன் என்ற நிலைப்படுத்திதன் தாயை ஈன்ற பொழுதின் பெரிது உவக்க வைத்தவர். என்நோற்றான் கொல் எனத் தந்தையை உலகத்தார் வியக்க வைத்த பெருமகன். இத்தகைய பெருஞ் சிறப்புகளையுடைய ஜின்னாஹ் ஷரிபுத்தீனின் பத்தாவது காவியம் 'எல்லாள காவியம்' 04.05.2014 இல் கொழும்புத் தமிழ்ச் சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில் அமைக்கப்பட்ட பத்திரிகை ஜாம்பவான் எஸ்.டி.சிவநாயகம் அரங்கில் வெளியிடப்பட்டது.*

*மூத்த கவிஞர் மு.பொன்னம்பலம் (மு.பொ.) திறனாய்வாளர் கே.எஸ்.சிவகுமாரன், மூத்த ஒலிபரப்பாளர் வீ.ஏ.திருஞானசுந்தரம் மங்களச் சுடரேற்ற, வரதா யோகநாதன் தமிழ்த் தாய் வாழ்த்துப் பாடினார்.*

சாகித்திய ரத்னா, பேராசிரியர் சபா ஜெயராசா விழாவுக்குத் தலைமை தாங்கினார்.

**வரவேற்புரை :**
**கலாபூஷணம் தம்பு சிவசுப்பிரமணியம்**
**(பொதுச்செயலாளர், கொ.த.சங்கம்)**

காவியத்தின் ஊடாக எல்லாள மன்னனின் வரலாற்றை அறிய வேண்டுமென்பதற்காகக் காப்பியக்கோ ஜின்னாஹ் ஷரிபுத்தீன் எல்லாள காவியம் நூலை வெளியிட்டுள்ளார். 40 வருடங்களாக எல்லாளன் இலங்கையின் ஒரு பகுதியில் கோலோச்சியவன். பிரபல இலக்கியவாதியும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரலாற்றாசிரியருமான செங்கை ஆழியானின் 'ஈழ மகாராஜா எல்லாளன்' நூலை அடியொற்றி இந்நூல் படைக்கப்பட்டது. நயவுரையில் கனதியாக உள்ளது, மகிழ்ச்சி எனப் புகழ்ந்துள்ளார். செங்கை ஆழியான், முற்றும் பொருந்தக் கூடிய காவிய வடிவமாக உள்ளது, எதிர்காலச் சந்ததிக்கு ஈழராசா எல்லாளனைப் புரிந்து கொள்ள உதவும் எனவும் சுட்டுகிறார். 'வாடுகின்றவர்களை மகிழ்ச்சி கொள்ளப் பாடுபவனே கவிஞன்' என வித்துவான் வேந்தனார் குறிப்பிட்டுள்ளார். இக்கருத்துரைப்புக்கு மிகப் பொருத்தமானவர் இந்நூலாசிரியர் காப்பியக்கோ ஜின்னாஹ் ஷரிபுத்தீன். சோ.பத்மநாதன் (சோ.ப.) பாயிரம் வழங்கியுள்ளார்.

பண்டாரவன்னியன் காவியத்தைக் தந்த காப்பியக்கோ, எல்லாள காவியம் தந்துள்ளார். எல்லாளன் தமிழ்ப் பெயர், ஆனால், 'எல்லாள' என்பதில் தமிழைக் காணவில்லை. எதிர்காலத்தில் நூலாசிரியர் இதைச் சரிப்படுத்த வேண்டும்.

**தலைமையுரை :**
**சாகித்திய ரத்னா பேராசிரியர் சபா ஜெயராசா**

கனதியான மேடை, கனதியான அவை. ஜின்னாஹ் ஷரிபுத்தீன் படைத்த காப்பிய வரலாற்றுப் பதிவுகள் மிகவும் முக்கியமானவைகளாகும். மனிதருடைய புவியியல் சார்ந்த அசைவியக்கத்தோடு காப்பியங்களுக்குத் தொடர்புண்டு என்கிறார்கள். இடம்பெயர்ந்து சென்ற போது உணர்வு விருத்தியடைகின்றது. அந்த அனுபவம் காப்பியமாக மாறும். திருமுருகாற்றுப்படையும் அப்படியே. மேலை நாட்டு இலியட், ஓடிசி என்பனவும் அப்படியே. கம்பன் மிகக் கூடிய சொற்களை எழுதினான். ஆங்கிலக் கவிஞர் ஷேக்ஸ்பியரும் அப்படியே. காப்பியம் படைக்கக் கூடுதலான சொற்கள் வேண்டும். ஜின்னாஹ்வின் தனித்துவம் கூடுதலான புதிய புதிய சொற்களைப் பயன்படுத்துவது. காவியம் நவீன தேவைகளை உள்ளடக்கி இருக்கிறது. 'பாஞ்சாலி சபதம்' இல் மகாகவி சுப்பிரமணிய பாரதியார் பேச்சு வழக்குச் சொற்களைக் கொண்டு வந்தார். கவிதையில் புதுப் பரிமாணங்கள் பாரதி வழி வந்தவையாகும். பாரதிதாசன், வாணிதாசன், இ.முருகையன், மஹாகவி, நீலாவணன் ஆகிய கவிஞர்களும் காவியங்களைப் பாடியுள்ளனர். மணி முடியாக விளங்குபவர் காப்பியக்கோ ஜின்னாஹ் ஷரிபுத்தீன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகாவம்சம் பாட்டுடைத் தலைவனாகத் துட்டகைமுனுவை முதன்மைப் படுத்தியது. துட்டகைமுனுவுக்கும் எல்லாளனுக்குமிடையில் நடந்த யுத்தம் தமிழ் - சிங்கள இனங்களுக்கிடையில் நடந்த யுத்தமல்ல. வெண்பாவில் ஆற்றல் கொண்டவர் 'எல்லாள காவியம்' ஆசிரியர். ஜின்னாஹ் ஷரிபுத்தீன் மிகக் கூடுதலான பாவடிவங்களைக் கையாள்பவர். அவர் மேலும் பல காவியங்களைப் படைக்க வேண்டும்.

ஒவ்வொரு கால கட்டக் காவியமும் அந்தக் காலகட்டத்தின் அதிகார வடிவமாகும் என்கிறார் ஃபூகோ. அதிகாரத்தைத் தக்கவைப்பதே காவியமாகும்.

**தொடக்கவுரை:**
**ஆ. ரகுபதி பாலஸ்ரீதரன்**
**(தலைவர் - கொ.த.சங்கம்)**

காப்பியக்கோ ஜின்னாஹ் ஷரிபுத்தீன் பல பட்டங்களைப் பெற்றவர். 24 நூல்களை இதுவரை வெளியிட்டுள்ளார். 'எல்லாள காவியம்' அவரது பத்தாவது காவியமாகும். தமிழ்ச் சங்கத் துணைத் தலைவர். இந்நூலை கொழும்புத் தமிழ்ச் சங்கத்தால் வெளியிட ஆட்சிக்குழு ஏகமனதாக சம்மதத்தைத் தந்தது. நூலில் 1464 செய்யுள்கள் உள்ளன. நூலாசிரியர் ஒரு சிறந்த வைத்தியராகவும் கணிக்கப்படுபவர். தமிழியல் விருதையும் பெற்றுள்ளார்.

**பிரதம அதிதி உரை : பேராசிரியர் எஸ்.தில்லைநாதன்**
**(தலைவர், தேசிய கலை இலக்கியப் பேரவை)**

பத்திரிகையுலக ஜாம்பவான் அமரர் எஸ்.டி.சிவநாயகத்தின் திருவுருவப் படம், இவ்விழாவில் திரை நீக்கம் செய்யப்பட்டது மகிழ்ச்சியைத் தருகின்றது. ஜின்னாஹ் ஷரிபுத்தீன் மக்களுக்குப் பயன்படத்தக்க வகையில் எழுதுகிறார். மருத்துவப் பாரம்பரியத்தில் வந்த பாவலர். அவரது 'சூறாவளி' என்ற காவியம் நல்ல காவியமாகும்.

எஸ்.டி.சிவநாயகம் மற்றவர்களது ஆற்றலைத் திறந்த மனதோடு உற்சாகப்படுத்துவார். அவரது நல்ல பண்பாக, ஆற்றலுள்ளோரை முன்னுக்கு செல்ல வைப்பது இருந்தது. நான் மாணவனாக இருந்த போது எனது எழுத்துப் பிரதியொன்றைத் தபாலில் அனுப்பினேன். சுதந்திரன் பத்திரிகையில் அதைப் பிரசுரித்தார். பல தனிச் சிறப்புகளோடு சுதந்திரன், வீரகேசரி ஆகிய பத்திரிகைகளில் ஆசிரியராக இருந்தவர் எஸ்.டி.சிவநாயகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜின்னாஹ் ஷரிபுத்தீன் இந்தியாவாலும் அங்கீகரிக்கப்பட்டவர். அவரது முகத்தில் எப்பொழுதும் சிரிப்புத் திகழும். நல்ல நண்பர். எதற்கும் எதிலும் தன்னை முன்னிலைப்படுத்தமாட்டார். இன்பம் பயக்கும் தன்மை காவியத்துக்கு இருக்க வேண்டும். கவிதை சிறப்படையும் போது காவியமாகும். காவியத்தைப் படிக்கும் போது சுதந்திர உலகில் மகிழ்ந்து உலாவுவது போலிருக்கும். காவியத்தின் மூலமாக வாழ்க்கையை விளங்கிக் கொள்கிறோம். ஜின்னாஹ்வின் அவதான சக்தி குறிப்பிடத்தக்கதாகும். அவர் மற்றவரை மதிக்கும் பண்பாளர். கொள்கையில் உறுதி உண்டு. பன்முகப் பாடல் பல விதமானது. இக்காவியத்தில் வாழ்க்கை முறைகளைக் கொண்டு வந்துள்ளார். பேச்சு வழக்கு வித்தியாசப்படும். உவமை அழகுண்டு. பன்முகத்தன்மையை நாம் பலப்படுத்த வேண்டும்.

**வெளியீட்டுரை:**
**க.இரகுபரன்**
**(முதுநிலை விரிவுரையாளர், தென்கிழக்குப் பல்கலைக்கழகம்)**

'எல்லாள காவியம்' என்பதில் உள்ள 'எல்லாள' என்ற சொல் தமிழல்ல என இங்கு ஐயவினா எழுப்பப்பட்டது. கம்ப காவியம், இராமகாவியம் என்றிருக்கும் போது நாமது பற்றிக் கவலைப்படத் தேவை இல்லை. 'தீபவம்சம்' என்ற வரலாற்று நூலில் எல்லாளன், துட்டகைமுனு யுத்தம் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. எல்லாளனை நீதியான அரசனாகச் சித்திரிக்கின்றது. ஆறாம் நூற்றாண்டில் மகாவம்சம் எழுதப்பட்டது. கைமுனுவின் தந்தை தமிழரோடு சண்டையிடுவதை வெறுத்தார். தந்தையைப் பெண்ணெனக் கைமுனு கேலி செய்தான். 'ஒரு பக்கம் கடல், மறுபக்கம் தமிழர். இப்படியிருக்க ஒழுங்காகக் கால் நீட்டிப் படுக்கத் தான் முடியுமா?' எனக் கைமுனு வாதிட்டான். பிரித்தானியர் ஆட்சியில் தமிழ்த் தேசியத்தை அடையாளமாக நாம் கொள்ளவில்லை. தமிழைப் பிரச்சினையாகக் கொள்ளவில்லை. எல்லாளன் பற்றிய நாவலை செங்கை ஆழியான் எழுதியுள்ளார். 2009 மேக்குப் பின்னெனில் இப்படி எழுதியிருக்கமாட்டார். இந்நாவலை இப்போ ஜின்னாஹ் ஷரிபுத்தீன் காப்பியமாக்கி உள்ளார். கவிதை எப்பவுமே இனிமை தருவது. செங்கை ஆழியானின் நாவலை அடியொற்றி எல்லாளன் சிறப்புக் காட்டப்பட்டுள்ளது. ஜதீகம் தேரவாதப் பிரிவைச் சேர்ந்த மகாவம்சத்தில் கூறப்படுகிறது. எல்லாளன் நீதியைக் காப்பாற்றியவன். செங்கை ஆழியான் தவிர்த்துள்ளார். *எல்லாள காவியம் நூலை வெளியிட்டுப் பேராசிரியர் சபாஜெயராசா, நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையைச் சேர்ந்த ஆ.மா.சுப்பிரமணியத்துக்கு வழங்கினார்.*

சிறப்புப் பிரதிகளும் வழங்கப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விமர்சன உரை:**
**கலாநிதி ஸ்ரீபிரசாந்தன்**
**(முதுநிலை விரிவுரையாளர், ஜெயவர்த்தனபுரப் பல்கலைக்கழகம்)**

குடும்பத்தோடு நாங்கள் யாழ்ப்பாணம் போன போது பாட்டி ஒடியல் கூழ் காய்ச்சினார். இன்றைய சிறுவர்கள் கொறிச்சுச் சாப்பிடுபவர்கள். நொறுக்குத்தீன், சிற்றுண்டி தின்பார்கள். அப்போ எதுக்குக் கூழ்? எனப் பாட்டியைக் கேட்டேன். நான் இப்படி நெடுக இருக்கமாட்டேன். கூழை எப்படிக் காய்ச்சுவது என்பதை அறியவைக்கவே காய்ச்சுகிறேன் எனப் பாட்டி சொன்னார். அதைத் தான் இப்போ காப்பியக்கோ ஜின்னாஹ் ஷரிபுத்தீனும் செய்துள்ளார். யாப்பைத் தமிழ்ப்பேசும் மக்கள் மறக்கக் கூடாதென்பதற்காக எல்லாள காவியத்தை தூக்கிப் போட்டுள்ளார்.

பெருங்காப்பியம் வேறு. சிறுகாப்பியம் வேறு. பாரதியின் 'பாஞ்சாலி சபதம்', 'எல்லாள காவியம்' சிறு காப்பியங்களாகும். காதல் காவியங்கள் ஒருவகையானவையாகும். வரலாற்றுப் புதினங்களை நயமாகக் கொண்டுள்ளது 'எல்லாள காவியம்'. சிறுகாப்பியம் சமுதாயத்தோடு ஒட்ட வேண்டும். சமகாலச் சமுதாயத்துக்கு சாட்டையால் அடித்துப் பாரதி பாடினான். நவீன காப்பியத்தின் தொடக்கப் புள்ளியாக அமைந்தது பாஞ்சாலி சபதமாகும்.

நாட்டுப்படலம், நகரப்படலம் என்பவை தரப்படுவது காப்பிய மரபாகும். மஹாகவியின் கண்மணியாள் காதையும் காவியமாகும். நிகழ்களத்தில் மழை இல்லை. வேலை ஏதும் இல்லை. உழவரின் வியர்வை அவர்களது மலைபோன்ற தேகத்தின் ஊடாக ஆறுபோல் பாய்கிறது. பலரும் சிந்திக்க விடயத்தை எடுத்துரைக்கிறார்.

ஜின்னாஹ் ஷரிபுத்தீன் இந்நூலில் இலங்கை வளத்தையும் பாடியுள்ளார். இலங்கையில் மலை, கடற்கரைகளை மூன்று மணி நேரத்துள் பார்த்துவிடலாம். ஆனால், கனடா போன்ற நாடுகளில் அப்படியல்ல. நாங்கள் கனடா சென்ற போது நாம் அங்கேயே தங்கி விடுவோமெனச் சந்தேகப்பட்டனர். சொற்பொழிவாற்றும் போது கம்பவாரிதி ஜெயராஜ், அந்தச் சொர்க்கத்தை விட்டு இங்கு நிற்க மாட்டோமெனப் பதிலடி கொடுத்தார்.

சொல்லாற்றலற்றவர்கள் கவிதைத் துறைக்கு வரக்கூடாது. தமிழில் சில சொற்கள் இல்லை. பரத்தைக்கு நிகரான ஆண்பால் சொல்லில்லை. 'மனைவன்' என்ற சொல்லை இந்நூலாசிரியர் உருவாக்கியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுபான்மைக்குச் செய்தி உண்டு. இன்றைய சமுதாயத்துக்குச் செய்தி உண்டு. நூலாசிரியரின் நோக்கம் மிகச் சரியானதே.

**ஆசியுரை:**
**கம்பவாரிதி இ.ஜெயராஜ்**

தமிழுறவு எனது சொந்த உறவெனப் பழகிவிட்டேன். கொழும்புக்கு இடம்பெயர்ந்து வந்தபின் எனக்குக் கிடைத்த நல்ல உறவு ஜின்னாஹ்வின் உறவு. இன்று காவியத்தைப் படிக்காத நிலையுண்டு. அறிவின் விரிசலில் உணர்ச்சி சுருங்கிவிட்டது. சொல்லப் போனால் நாம் இலக்கியத்தை இழந்துவிட்டோம். அறிவு வளர்ச்சி சுருங்கியதால், மனிதன் கல்போலாகிவிட்டான். எமது இலக்கியம் எமது வாழ்வுக்கு ஓர் இயக்கத்தைத் தந்தது. எல்லாவற்றையும் குழப்பிவிட்டோம். நமக்கின்று இலக்கியம் இல்லை. நீண்டகாலம் வாழும் தொன்மம் எமது தமிழ்மொழிக்கு உண்டு. 5000 ஆண்டுகளுக்கு முற்பட்டது. நமக்கென்றதொரு வாழ்வுமுறை உண்டு. அதை இலக்கியம் பிரதிபலிக்க வேண்டும்.

மரபு பிடித்ததால் அத்தோடு நின்றேன். அறிவு சார்ந்த கல்வி உலகு முழுதும் ஒன்றே. உணர்ச்சியில் மாறுபாடு இருக்கும். பிரதேசத்துக்குப் பிரதேசம் இலக்கியத்தை ஒன்று படுத்த முடியவில்லை. அதுவேறுபடும். எமது தனி அடையாளங்களைத் தொலைத்துள்ளோம். இப்போ திணறுகிறோம். இலக்கியப் பதிவே மரபிலக்கியம். கவிதைக்குக் கம்பனிடந்தான் செல்ல வேண்டும்.

கவிதையை மலினப்படுத்தி விட்டோம். மரபுக் கவிதை கஷ்டமானதென புதுக்கவிதை பாடமுனைந்தோம். புதுக்கவிதை என்ற பெயரே பிழையானதாகும். வேலியை வெட்ட முதல் யோசிக்க வேண்டும். மரபுக் கவிதையில் அப்படியொரு கஷ்டமுமில்லை. அதற்குச் சாட்சியாக உள்ளவர் ஜின்னாஹ் ஷரிபுத்தீன். பத்துக் காவியங்களைப் படைத்துள்ளார். பழைய பொருளுக்கு இன்னமும் மதிப்புண்டு. சங்கீதம் இன்னமும் கெடவில்லை. பழைய பொருட்களைத் தேடி எடுப்பார்கள். புதுக்கவிதையில் ஓர் அடையாளமுமில்லை. ஜின்னாஹ் ஷரிபுத்தீன் இலக்கியத்தில் நிலைத்து நிற்பார்.

**ஏற்புரை:**
**காப்பியக்கோ ஜின்னாஹ் ஷரிபுத்தீன்**

சிறுகதை காப்பியம் எழுத என்னைத் தூண்டியவர் அமரர் எஸ்.டி.சிவநாயகம். பண்டார வன்னியன் காவியத்தையும் படைக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்தவர் அவரே. எழுத எனக்குக் களந்தந்து உதவினார். அவர் எனக்குக் குருமட்டுமல்ல. வழிகாட்டி. நானொரு இஸ்லாமியன். எனது முதல் காவியம் இஸ்லாத்தை அடிப்படையாகக் கொண்டதாகும். மற்றச் சமூகத்தவர்களும் அறிய வேண்டுமென்பதற்காக அதைப் படைத்தேன். எல்லாள காவியம் எழுத ஊக்குவித்தவர் செங்கை ஆழியான். அவரது நாவலைப் பெற யாழ்ப்பாணத்துக்குச் சென்றேன். உட்கார்ந்த நிலையில் நாவலை என்னிடம் கையளித்தார். எனது பத்தாவது காவியமாக அதைச் செய்யும் படி வேண்டுகோள் விடுத்தார். அவரது எழுத்தில் எனக்கு நம்பிக்கை உண்டு. நாவலைப் படிக்காமலே கவிதை எழுதத் தொடங்கினேன். நூறு கவிதைகளை அவருக்கு அனுப்பினேன். இலக்கியமும் கவிதையும் எனக்கு எனது தந்தை வழி வந்த முதுசமாகும்.

கருவையும் கதைப் போக்கையும் நாவலைப் படித்து உள்வாங்கினேன். எல்லாளனுக்குத் திருமணம் செய்து வைக்க எண்ணினேன். இந்துத் திருமண முறையில் செய்து வைக்க வேண்டும். சைவப் புலவர் செல்லத்துரை அது பற்றிய தனது நூலைத் தந்தார். அதன் படி எனது காவியத்தில் வரும் எல்லாளன் திருமணத்தைச் செய்து வைத்தேன். அது எனக்குத் திருப்தியாக இருந்தது. குற்றமிருந்தால் வாசகர்கள் மன்னிக்கவும்.

நூலுக்கு அணிந்துரை எழுத சொ.பத்மநாதனைக் கேட்டேன். வாழ்த்துக் கவிதை, பாயிரமாவது தாருங்களென ஈ மெயில் அனுப்பினேன். அற்புதமான முறையில் கட்டளைக் கலித்துறை எழுதி அனுப்பினார். ஆசை இராசையாவின் அட்டைப்படம் நூலுக்கு அணி செய்கிறது. அற்புதமான அட்டைப் பட ஓவியம்.

**கருத்துரை:**
**எஸ். எழில்வேந்தன்**
**(மூத்த ஒலிபரப்பாளர்)**

ஜின்னாஹ் ஷரிபுத்தீன் தந்தை தமிழ்மணி ஆ.மு. ஷரிபுத்தீனை மிஞ்சிய தனயன். தந்தையார் 17 நூல்கள் வெளியிட இவர் 24 நூல்களை வெளியிட்டுள்ளார். மருதமுனையிலிருந்து புலவர் மணி ஆ.மு. ஷரிபுத்தீன் குடும்பம் மக்கா பயணமான போது அவர்களைக் கால்நடையாக வழியனுப்ப அழைத்துச் சென்றோம். நானப்போ மாணவனாக இருந்தேன். பாதையில் இரு மருங்கிலும் நாங்கள் மாணவர் நின்று வாழ்த்தினோம். இதற்கு இன்று இரகுபரன் சாட்சியாக உள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்டாரவளையில் காப்பியக்கோவின் 'பனிமலையில் பூபாளம்' வெளியீடு. தலைவர் வரவில்லை. நான் தலைமை தாங்கினேன். மதிய போசனவேளையில் அங்கு பனிமழை பொழிந்ததைப் பார்த்தோம். இன்றைய பத்திரிகைகளுக்கு சந்தத்துக்கும் சத்தத்துக்கும் வித்தியாசம் தெரியாத நிலையுண்டு. காப்பியக்கோ பற்றிய கட்டுரையொன்றில் இத்தவறைப் படித்தேன். புலவர் மணி ஆ.மு.ஷரிபுத்தீனின் 105 ஆவது பிறந்த தினத்தில் மகன் ஜின்னாஹ் ஷரிபுத்தீன் இன்று தனது நூலை வெளியிடுகின்றார். எனது தந்தை நீலாவணனின் இறுதிக் கிரியையில் காப்பியக்கோ சமரகவி பாடினார்.

*(நிகழ்ச்சிகளை ஒன்றிணைத்து, அறிவிப்புகளைச் செய்தபோதே, எஸ்.எழில்வேந்தன் மேற்படி கருத்துரைகளைப் பரிமாறினார் என்பது குறிப்பிடத் தக்கதாகும்)*

-23.05.2014

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 68

## புதுமைப் பித்தனின் 108 ஆவது பிறந்த தின விழா

**உ**ள்ளடக்கத்தாலும் உருவத்தாலும் அக்காலத்துச் சிறுகதையை உன்னதப்படுத்தி, அதற்குப் புது இரத்தம் பாய்ச்சித் தமிழ்ச் சிறுகதையைச், சிறுகதை உலகில் வீறு நடை கொள்ள வைத்தவர் சொ.விருத்தாசலம் என்ற இயற்பெயரை உடைய புதுமைப்பித்தன் ஆவார். இன்றைய தமிழ்ச் சிறுகதையின் பிதாமகரும் அவரே தான்.

அவரது 108 ஆவது பிறந்த தினத்தைக் கொழும்புத் தமிழ்ச்சங்கம் மிகச் சிறப்பாக அதன் சங்கரப்பிள்ளை மண்டபத்தில் கொண்டாடி அந்தச் சிறுகதை மன்னனின் சாதனையைப் பரவல் செய்தது. சாகித்திய ரத்னா பேராசிரியர் சபா ஜெயராசா தலைமையில் இந்த இலக்கிய நிகழ்வு கடந்த 3.5.2014 ஆம் திகதி நடைபெற்றது. இலக்கிய வாதிகள் மங்கலச் சுடரேற்றி நிகழ்வைத் தொடக்கி வைக்கப் பவானி முகுந்தன் தமிழ் வாழ்த்துப் பாடினார்.

**வரவேற்புரை:**
**திருமதி பத்மா சோமகாந்தன்**
**(துணைத் தலைவர் - கொழும்புத் தமிழ்ச்சங்கம்)**

புதுமைப் பித்தனின் 108 ஆவது பிறந்த தினத்தைக் கொண்டாடுகிறோம். 108 என்ற எண் மிக முக்கியமானதாகும். அதன் கூட்டெண் ஒன்பதாகும். எமது தமிழ்ப் பண்பாட்டுப் பாரம்பரியத்தில் நவதானியங்கள், நவக்கிரகங்கள், நவராத்திரி, நவாம்சம், நவரசம் என 9(நவ)க்கு முக்கியத்துவம் கொடுக்கிறோம். எனவே தான் புதுமைப்பித்தனின் 108 ஆவது அகவையும் முக்கியப்படுத்தப்பட்டு கொண்டாடப்படுகிறது. புதுமைப்பித்தன் இலக்கியத் துக்காக வாழ்ந்தவர். அவரது ஆத்மாவைப் பிரதிபலிப்பதற்காகவே மங்கலச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுடரேற்றுவதற்கு இலக்கியவாதிகளை அழைத்தோம். இது கொழும்புத் தமிழ்ச்சங்கத்தினர் புதுமைப் பித்தனுக்குக் கொடுக்கும் பெரிய மரியாதை யெனக் கருதுகிறோம்.

புதுமைப்பித்தன் 1906 இல் பிறந்தார். தனக்கு இப்படியான பெயரை அவர் வைத்துக் கொண்டது அக்காலச் சூழலில் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. பிரபல தமிழிலக்கிய விமர்சகர் க.நா.சு. கூடக் கேலி செய்தார். பித்தம் பிடித்தவர் எனவும் கணித்தனர்.

பழையனவற்றிலும் தனது நவீன சிந்தனைகளை நிலை நிறுத்தித் துணிந்து புதிதாகப் படைத்தவர் புதுமைப்பித்தன். ஒழுங்கான முறையில் தனது சிறுகதைகளை எழுதினார். அவரது சிறுகதைகளில் காணப்பட்ட ஆழமான கருத்துக்கள் வாசகரின் மனதைத் தொட்டன. மகாகவி சுப்பிரமணிய பாரதியாரை நினைக்க வைத்தன. பாரதியாரைப் போல் புதுமைப்பித்தனும் தமிழ் வசன நடைக்கு அழகு சேர்த்தார். பாரதி 39 வயதில் இயற்கை எய்தினார். புதுமைப்பித்தன் 42 வயதில் காலமானார். அவரது சிறுகதை எடுத்துரைப்புப் பாணி எல்லோரையும் கவரத்தக்கது.

கொழும்புத் தமிழ்ச் சங்கம் புதுமைப் பித்தனுக்கு விழா எடுப்பது இன்றைய சிறுவர்கள், இளைஞர்கள் மத்தியில் அவரது சாதனைகளையும் ஆற்றலையும் வெளிப்படுத்த வேண்டுமென்ற நோக்கத்திற்காவே, புதுமைப்பித்தன் வரலாறு, படைப்பாளுமை என்ற விடயங்களில் பேச்சுப் போட்டி நடாத்தினோம். கடந்த ஆண்டு (2013) சிறுகதைக்கும் நோபல் பரிசு கொடுத்துள்ளனர். கனடாவில் ரொறொன்றோவில் பிறந்த ஆலிஸ் மொன்றோ இப்பரிசைப் பெற்றார். ஆலிஸ் மொன்றோ வறுமைப்பட்ட குடும்பத்தைச் சேர்ந்தவர். புத்தகக்கடை, உணவகம் என்பவற்றில் தொழில் புரிந்துள்ளார். தனது தொகுப்பை 37 வயதில் வெளியிட்டார். ஏன் தமிழ்ச் சிறுகதைக்கும் நோபல் பரிசு கிடைக்கக் கூடாது?

அதற்காகவே தமிழ்ச்சங்கம் போட்டிகளை நடாத்தி ஊக்கப்படுத்துகிறது. இந்த விதைகள் எதிர்காலத்தில் நல்ல பலனைத்தர முடியும். எமது போட்டிக்கு நல்ல வரவேற்பு இருந்தது. கொழும்புப் பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்கள் சிறந்த பங்களிப்புச் செய்து போட்டியைச் சிறப்பித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தொடக்கவுரை :**
**ஆ.இரகுபதி பால ஸ்ரீதரன்**
**(தலைவர் - கொழும்புத் தமிழ்ச்சங்கம்)**

எமது தமிழ் மொழிக்கும் மக்களுக்கும் தொண்டு செய்த ஆளுமைகளுக்கு விழா எடுக்கிறோம். இளைய சமுதாயத்துக்கு அவர்களை நினைவுபடுத்துவதே இதன் நோக்கமாகும். இது காலத்தின் கட்டாயமாகும். எமது தலையாய கடமையுமாகும்.

புதுமைப் பித்தனின் இயற் பெயர் சொக்கலிங்கம் விருத்தாசலமாகும். 26 ஆம் திகதி ஏப்ரல் மாதத்தில் பிறந்தார். நடுத்தரக் குடும்பம். மிகக் கஷ்டப்பட்டுத்தான் படித்தார். 25 ஆவது வயதில் கலைப்பட்டதாரியானார். கமலாம்பாளின் கண்களைப் பார்த்து விரும்பி மணந்தார். மூன்று பத்திரிகைகளில் இலவசமாக வேலை செய்திருக்கிறார்.

அவருக்கு இருமல் வியாதி இருந்தது. வைத்தியரிடம் போகாது கைமருந்தே செய்தார். புதுமைப்பித்தன் திரைப்படங்களுக்கு பாட்டெழுத ஒத்துக்கொண்டார். 'ராஜபக்தி' என்ற எம்.கே. தியாகராஜ பாகவதர் நடித்த படத்துக்குப் பாட்டெழுத ஒப்பந்தம் செய்தனர். முதலாவது குழந்தை இறந்து போனது. இரண்டாவது குழந்தை தான் தினகரி. சிறுகதை பொழுது போக்கானதல்ல என்பதில் உறுதியாக இருந்தார். கவனிக்கப்படாத இருமல் வியாதி முற்றியதால் காலமானார். புதுமைப்பித்தன் இன்றும் எம்முடன் அவரது சிறுகதைகள் மூலம் வாழ்கிறார்.

**தலைமையுரை:**
**சாகித்தியரத்னா பேராசிரியர் சபா ஜெயராசா**

நவீனத்துவம் ஆங்கிலக் கல்வி வழியாகவே வந்தது. மகாகவி சுப்பிரமணிய பாரதியாரும் புதுமைப்பித்தனும் அதைத் தமிழிலக்கியத்தில் கொண்டு வந்தனர். அக்காலத்துக் கவிதை மரபைப் பாரதியார் கட்டுடைப்புச் செய்தார். எல்லா நாடுகளிலும் சிறுகதை இருக்கவில்லை. சிறுகதை ஒரு புதிய வடிவம். ஆனால், கதை சொல்லும் பாரம்பரியம் இருந்ததுண்டு. புதுமைப்பித்தன் சிறுகதைகளில் தரச்சிறப்புண்டு. தேய்வியம்பியல் எடுத்தாளலிலிருந்து தமிழ்ச் சொல்லாட்சியை மீட்டெடுத்தார். வித்தியாசமான அணுகுமுறை அவரிடம் இருந்தது.

முதல் முதல் இலங்கை மலையக வாழ்வைப் படைப்பில் கொண்டு வந்த தமிழக எழுத்தாளர் புதுமைப் பித்தன் தான். அத்தகையானதொன்றே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரது 'துன்பக்கேணி' சிறுகதை. புலப்பெயர்வு, புலச்சிதறல் என்பவைகள் வெவ்வேறுபட்டவை. புலப்பெயர்வு பொருளாதாரத்துக்காகப் புலத்தை விட்டுச் செல்வதாகும். புலச்சிதறல் எதிர்பாராத காரணத்தால் வதிவிடத்தை விட்டகலல். 'துன்பக் கேணி', போன்ற புதுமைப்பித்தனின் சிறுகதைகள் இந்தியாவில் குறுந்திரைப் படங்களாக்கப்பட்டுள்ளன. விமர்சன ரீதியில் தொன்மங்களை சிறுகதையில் எடுத்தாளுவதைத் தொடக்கி வைத்தவர் புதுமைப்பித்தன் தான். அவரது 'பொன்னகரம்' சிறுகதை முதல் முதல் பாலியல் விழுமியங்களை உடைத்த படைப்பாகும்.

பேராசிரியர் க.கைலாசபதி, புதுமைப்பித்தன் சிறுகதைகள் பல்கலைக்கழகப் பாட நூல்களில் இடம்பெறச் செய்தார். ஆனால், இந்தியாவில் அப்படி இல்லை. சென்னை பல்கலைக்கழகத்தில் 'துன்பக்கேணி,' 'பொன்னகரம்' சிறுகதைகள் கற்பிக்கக் கூடாதென எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

*கொழும்புத் தமிழ்ச் சங்கம் சென்றாண்டு (2013) நடாத்திய பேச்சுப் போட்டியில் செல்வன் தபேந்திரா மயூரன் (கொழும்பு றோயல் கல்லூரி) முதலாவது பரிசையும், செல்வி நிவாஸினி கோபால கிருஷ்ணன் (கொழும்பு இந்துக் கல்லூரி), செல்வி செ.தரிசிகா (கொழும்பு விவேகானந்தா கல்லூரி) ஆகியோர் இரண்டாம் பரிசையும், செல்வன் சி.சதீஷ் (கொழும்பு றோயல் கல்லூரி) மூன்றாவது பரிசையும் பெற்றனர்.*

*பேராசிரியர் சபா.ஜெயராசா பரிசுகளை வழங்கினார்.*

**பரிசுப் பெற்றவர்களது உரைகள்**

**செல்வன் தபேந்திரா மயூரன்**

20 ஆம் நூற்றாண்டின் சிறுகதை, சம்பவங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்ததே தவிர உண்மையான வாழ்க்கையை யதார்த்தப் பாங்கில் படம் பிடித்துக் காட்டவில்லை. இந்நிலையில் புதுமைப்பித்தன் ஒரு விபச்சாரியின் சிறுகதையைப் படைத்து வெளியிட்டுப் புரட்சியை ஏற்படுத்தினார்.

அவரது சிறுகதையில் ஆழமும் கனதியும் சொல்லாற்றலும் காணப்பட்டன. கட்டுரை, கவிதைகளையும் எழுதியிருந்தாலும் அவரது சிறுகதைகள் மட்டுமே அவரை வாசகர் மத்தியில் கொண்டு சென்று பெயர் பதிக்க உதவின. அடிமைப்பட்ட, ஒடுக்கப்பட்ட, பஞ்சப்பட்ட மக்களின் வாழ்க்கையைச் சிறுகதைகளில் காட்டினார். வறுமையின் கொடுமையை அவரது 'ஒருநாள் கழிந்தது' மிக அழகாகச் சித்திரிக்கின்றது. பெண்ணடிமைத் தனத்தைக் 'கல்யாணி' வெளிப்படுத்துகிறது. அவரது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதைகள் ஆவேசமானவை. இந்த 108 ஆவது பிறந்த தினத்தையல்ல, இவரது 508 ஆவது பிறந்த தினத்தையும் நிச்சயம் தமிழுலகு கொண்டாடும்.

## செல்வி நிவாஸினி கோபாலகிருஸ்ணன்

சிறுகதை மன்னன் புதுமைப்பித்தன் இந்தியாவிலுள்ள திருநெல்வேலியைச் சேர்ந்தவர். தந்தை தாசில்தார் உத்தியோகம் பார்த்தார். எட்டு வயதில் பெற்ற அன்னையை இழந்து சிற்றன்னையோடு வாழும் நிர்ப்பந்தத்துக் குள்ளானார். மாற்றாந்தாய்க் கொடுமைகளையும் அனுபவித்தார். தந்தையின் வேலை மாற்றத்தால் புதுமைப் பித்தனும் ஊர் சுற்றினார். இருபத்தைந்தாவது வயதில் பட்டம் பெற்றார். மகனை வக்கீலாக்கத் தந்தை ஆசைப்பட்டார். கமலம்பாளைத் திருமணம் செய்து வைத்தார்.

புதுமைப் பித்தனின் நாட்டம் இலக்கியத்திலேயே இருந்தது. கல்லூரிக் காலத்தில் ஆங்கில நாவல்களைப் படித்தார். அவரைப் பத்திரிகைகள், சஞ்சிகைகளில் எழுதத் துண்டினர். 'சுதந்திரச் சங்கு', 'மணிக்கொடி' ஆகிய ஏடுகளுக்கு எழுத்துப் பங்களிப்புச் செய்தார். எழுத்தாளர் ஆக வேண்டும் என்ற வேட்கை அவரிடமிருந்தது.

வீட்டை விட்டு வெளியேறிய புதுமைப்பித்தன் பெரும் பிரச்சினைகளை அனுபவித்தார். சென்னையிலிருந்து தனது மனைவிக்கு எழுதிய கடிதங்கள் 'கண்மணி கமலாவுக்கு..' என்ற நூலாக வெளிவந்துள்ளன. தனது கொடூரமான வறுமையைப் போக்க புதுமைப்பித்தன் சினிமாப் பிரவேசமும் செய்தார். 1948 ஆம் ஆண்டு கொடிய காச நோய் காரணமாக தனது சிறுகதைகளால் தமிழ் வாசகரைக் கட்டிப் போட்ட புதுமைப்பித்தன் இயற்கையெய்தினார். மகாகவி சுப்பிரமணிய பாரதியார் தனது கவிதைகளால் இன்றும் மக்கள் மத்தியில் வாழ்கின்றார். அதே போல் புதுமைப்பித்தனும் தனது சிறுகதைகளால் இந்த 21 ஆம் நூற்றாண்டிலும் தமிழ்ச் சமுதாயத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்.

**சிறப்புரை:**
**'புதுமைப்பித்தனின் படைப்பு ஆளுமை'**
**உரைஞர்:**
**செல்லத்துரை சுதர்சன்**
**(தமிழ்த் துறை விரிவுரையாளர், பேராதனைப் பல்கலைக்கழகம்)**

புதுமைப் பித்தன் வீரகேசரிப் பத்திரிகைக்கு உதவியாசிரியராக வரவிருந்தார். அது தடைப்பட்டு விட்டது. அவரை விட்டு விட முடியாது. அவர் செய்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணிகள் அவரை முன்னிறுத்தும். நாற்பத்தியிரண்டு ஆண்டுகளே வாழ்ந்தார். பன்னிரு வருடங்களாகச் சிறுகதைகளைப் படைத்தார். எழுதத் தொடங்கி ஐந்து வருட காலத்துக்குள் பெரிதாக பேசப்பட்டார்.

யதார்த்தமான படைப்புக்கள் தோன்ற புதுமைப்பித்தன் கடுமையாகச் செயற்பட்டார். படைப்பாற்றல் படைப்பாளரின் ஆளுமை சார்ந்ததாகும். எனது சிறுகதைகளுக்குக் கவர்ச்சியை ஏற்படுத்துவது 'புதுமைப்பித்தன்' என்ற எனது புனைபெயர் தான் எனப் புதுமைப்பித்தன் கூறியுள்ளார். தமிழ்ச்சிறுகதையின் 3 ஆவது காலகட்டத்துக்குரியவர் புதுமைப்பித்தன். வ.வே.சு. ஐயர் 2 ஆவது காலகட்டத்தைச் சேர்ந்தவர். கல்கி பற்றி மிகக் காரசாரமாக விமர்சித்துப் புதுமைப்பித்தன் கல்கியின் பொய் முகத்தை வெளிப்படுத்தினார். எழுத்தாளர்கள் படைப்புக்களில் இயல்பான செய்திகளைத் தான் பதிவு செய்ய வேண்டுமென்றார். தமிழ்ச் சிறுகதையில் தள மாற்றத்தை ஏற்படுத்தினார். சிறுகதை ஒரு பொருளைப் பற்றியது. பொருளை அடிப்படையாக வைத்தே படைக்க வேண்டும். பக்கங் களையல்ல. படைப்பாளிக்குத் தற்றுணிவு இருக்க வேண்டும்.

புதுமைப் பித்தனின் 'பொன்னகரம்' பரத்தையர் சம்பந்தப்பட்டது. தமிழர் பாரம்பரியம் பரத்தையர்களை ஒதுக்கியே வைத்தது. இந்நிலையைப் புதுமைப்பித்தன் மாற்றினார். ஓர் உயிரைக் காப்பாற்றவே இது செய்யப்பட்டதெனத் தனது சிறுகதையில் சித்திரித்தார். சமுதாயப் பிரச்சினைகளோடு தான் பரத்தையரின் நடவடிக்கைகளை அணுக வேண்டுமென்பதை உணர்த்தினார். அவரது 'சாப விமோசனம்' என்ற சிறுகதையும் வெகுவாகப் பேசப்படுகின்றது. இது இராமபிரானின் இரட்டைத்தனத்தை வெளிப்படுத்துகிறது. இராமனின் கால் தூசி பட்டு அகலிகைக் கல் அகலிகையாக அவதாரமெடுக்கிறது. இதற்கு இராமனுக்கு உரிமை உண்டா? எனப் புதுமைப்பித்தன் தனது சிறுகதையில் வினாவெழுப்புகிறார். கற்பைப் பற்றிச் சிந்திக்க வளமானதொரு சிந்தனா சக்தியை ஏற்படுத்தினார். அவரது எழுத்தில், நடையில், கருவில் சிறப்பான மாற்றம் காணப்பட்டது. இது புதுமைப்பித்தனைப் பெருமைப்படுத்தும் சிறந்த விழா.

*இந்நிகழ்வில் நாட்டார் பாடல்கள் பாடப்பட்டன.*

*கொழும்புத் தமிழ்ச்சங்க பொதுச் செயலாளர் தம்பு சிவா சுப்பிரமணியம் (ஆசிரியர் - தாயக ஒலி) நன்றியுரை கூறினார்.*

- 27.05.2014

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 69

## 'நல்லிணக்கத்திற்கான ஆக்கங்கள்' நூல் ஆய்வரங்கு

இனங்களுக்கிடையேயான ஒருத்துவத்தையும் புரிந்துணர்வையும் வளர்த்தெடுக்கும் எத்தனிப்போடு, இலங்கை முற்போக்குச் சிந்தனையாளர், ஆயிரத்துத் தொளாயிரத்து ஐம்பதுகளிலிருந்து பெருமெடுப்பில், இலங்கையில் தேசிய இலக்கிய இயக்கத்தை முன்னெடுத்திருக்கின்றனர். ஆனால் அவ்விலக்கு அடையப்படாது முப்பதாண்டு காலப்போரே இலங்கையில் அரங்கேறியது. போரடக்கப்பட்டும் ஐந்தாண்டுகளாகி விட்டன. போர் அனர்த்தங்களால் ஏற்பட்ட பல்வேறு இழப்புகளால் வாழ்வை இழந்து நிற்கும் மக்களுக்கு மறுவாழ்வு கொடுக்க சர்வதேச ரீதியாகவும் வினைப்பாடுகள் செய்யப்படுகின்றன. அதேசமயம் இத்தகைய நாசகாரப்போர் மீண்டும் இலங்கையில் ஏற்படக்கூடாதென்ற எதிர்பார்ப்போடும் போர்தின்ற, மக்களது மனக்காயங்களை ஆற்றும் வகையிலும் இலக்கிய முயற்சிகளும் எடுக்கப்படுகின்றன.

இலங்கை சமாதானப் பேரவையின் இனங்களுக்கிடையிலான நல்லிணக்கச் செயற்பாடுகளில் இதுவுமொன்றாகும். பிரபல ஆங்கில இலக்கியவாதி ஷியாம் செல்லத்துரை இப்பேரவையைச் சேர்ந்தவரே. இவ்வெடுகோளை மையமாக வைத்து ஆங்கிலத்தில் தொகுப்பு நூலொன்றை வெளியிட்டுள்ளார். இதன் தமிழாக்கமே 398 பக்கங்களையுடைய 'நல்லிணக்கத்திற்கான ஆக்கங்கள்' என்ற நூலாகும். தேசியமுக்கியத்துவம் மிக்க பிரச்சினையை எடுகோளாகக் கொண்டுள்ள இந்நூல் ஆய்வரங்கு, இலங்கை முற்போக்குக் கலை இலக்கிய மன்ற ஏற்பாட்டில், கொழும்பு - 06 பெண்கள் ஆய்வுமையக் கேட்போர் கூடத்தில் 20.07.2014 ஆந் திகதி நடைபெற்றது. வைத்திய கலாநிதி எம்.கே.முருகானந்தம் தலைமை தாங்கினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தலைமையுரை:**
**வைத்தியகலாநிதி எம்.கே.முருகானந்தம்**

இன்றைய சூழலில் 'நல்லிணக்கத்திற்கான ஆக்கங்கள்' நூல் முக்கியமானதாக உள்ளது. இலங்கையில் துருவங்களாக இன்று மனிதர்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். போரினால் ஏற்பட்ட பின்னடைவுகள், உயிரிழப்புகள் புரிவதில்லை. மற்றைய சமூகத்தவரின் உணர்வுகளைக் கண்டு கொள்வதில்லை. படித்தவர்கள் கூடத் தன்னலத்தோடுதான் பேசுகின்றனர். நஞ்சை உமிழ்கின்றனர். மற்றவர்களது குறைகளைத் தூக்கிப் பிடிப்பவர்கள், தம்மால் ஏற்படுத்தப்படும் பிரச்சினைகளைக் கண்டு கொள்வதில்லை. தாம் செய்த குற்றத்தை ஏற்று அதைப் பகிரங்கப்படுத்துவதில்லை. போர் என்பது உருவேற்றப்பட்ட பேயாட்டம். அடக்குமுறையானது. போரினால் நீதி, நியாயம் மரணிக்கப்படும். இந்நூல் மூன்று இனத்தவர்களின் அநுபவப் பகிர்வு தான் என்ற நிலையிலிருந்து விலகி எழுதப்பட்டது. பட்டறை நடாத்தி, விடயங்கள் கலந்துரையாடப்பட்டு சிறுகதை, கவிதை, கட்டுரைகளாக எழுதப்பட்டன. ஆக்க கர்த்தாக்களுக்குக் குறுந் திரைப்படங்களும் காட்டப்பட்டன. வெளிநாட்டிலிருக்கும் ஆக்ககர்த்தாக்கள் இலங்கை வந்தனர். ஷியாம் செல்லத்துரை நெறிப்படுத்தினார். இந்த விடயத்தில் சினிமாப் படங்களும் வெளிவந்துள்ளன. AFTER FORGETTING, ROAD FROM ELEPHANTPASS என்பன அவற்றுள் சில. இவைகள் நல்ல புரிந்துணர்வை வெளிப்படுத்தி உள்ளன. ஒவ்வொரு துறைக்கும் இத்தகைய நூல்கள் வரவேண்டும். போரில்லாத நாடாக இலங்கையைத் தொடர வைக்க இத்தகைய பணிகள் தொடரவேண்டும்.

**கருத்துரைகள் :**
**பேராசிரியர் மா.செ.மூக்கையா**

இலங்கையில் கலாசார வழிமுறையில் சமாதானம் ஏற்படுதலை எப்படி ஊக்குவிக்கலாமென்ற இலங்கைத் தேசிய சமாதானப் பேரவையின் தேடலே இந்நூல். இலங்கையின் உள்முரண்பாட்டு யுத்தம் பற்றி இப்போது பரந்து பேசவேண்டிய அவசியமில்லை. யுத்தம் முடிந்து விட்டது. சமாதானம் ஏற்பட வேண்டிய காலகட்டத்தில் கண்டறிய வேண்டிய நீதியான பயன்பாடுகளை உலக அணுகுமுறையில் பேச வேண்டும்.

நடந்தது நடந்ததாகவே இருக்க வேண்டும். போரை விசாரிக்க ஆணைக்குழுக்கள் ஏற்படுத்தப்பட்டன. குற்றவாளிகளை இனங்காட்டினர். நடந்ததென்ன? தென்னாபிரிக்காவில் அடையாளத் தண்டனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழங்கப்பட்டது. உண்மையில் போரினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு விமோசனம் வழங்க வேண்டும். மீள்வாழ்வை அமைத்துக் கொடுத்தல் வேண்டும். மனக்காயங்களை ஆற்ற வேண்டும். சொத்திழப்புக்கள், ஆள் இழப்புக்கள் அந்த யுத்த காலத்துக்கு - இந்த யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களைக் கொண்டு செல்ல வேண்டும். விசாரணைக் குழுக்களால் விமோசனமில்லை. இவைகள் நல்லிணக்கத்தை வற்புறுத்திப் பொறுப்புக் கூறுவதாக இல்லை. தருஸ்மன் அறிக்கை இரு சாராரின் நல்லிணக்கத்தை வற்புறுத்தியது. நல்லிணக்க காலத்தில் உரியதைச் செய்யாததால் இன்று அநுபவிக்கிறோம். ஆபத்தை நெருங்கிக் கொண்டிருக்கிறோம்.

கலாசார ரீதியாக இந்நாட்டில் மக்களிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியுமா? ஷியாம் செல்லத்துரை முடியுமென்ற நோக்குடையவர். நோர்வே அரசின் ஆதரவோடு அவரது நூலைக் கொண்டு வந்திருக்கிறோம். இதற்கு இலங்கை சமாதானப் பேரவையும் ஆதரவைத் தந்தது. 27 இளம் எழுத்தாளர்களை தெரிவு செய்தோம். வழிகாட்டினோம். எமது அனைத்து எழுத்தாளர்களும் தம் தம் சமூகத்தைப் பற்றியே பார்க்கின்றனர். இதை இளம் எழுத்தாளர் மாற்ற வேண்டுமென ஷியாம் செல்லத்துரை ஆலோசனை சொன்னார். வாய்ப்புகளை கொடுத்தோம். கொழும்பு, யாழ்ப்பாணப் பிரதேசங்களில் பட்டறைகளை நடாத்தினோம். ஒன்றாகக் கூடி உணவுண்டு, கலந்துரையாடி ஆக்கங்களை உருவாக்கினோம். இந்நாட்டில் பிறக்காத இளம் எழுத்தாளர்களும் இங்கு வந்தனர்.

இந்த நூலை உண்டாக்க மூன்று மாதகால அவகாசமே தரப்பட்டது. எழுத்தாளர் மூலமாகச் சமூக நல்லிணக்கத்தை முன்னெடுக்கலாம். இந்நூல் முழுமையானதென்று கூறவில்லை. பரீட்சார்த்த முயற்சியே. இந்நூல் பொழுது போக்க ஆக்கப்பட்டதல்ல. வாசிக்கத் தூண்டுவதற்காக புனைவுகளை ஏற்படுத்தினோம்.

## கே. நாதன் (ஆசிரியர்)

இன, மத, கலாசாரங்களைப் புரிந்து கொண்டு - மதித்துச் செயற்படுவது நல்லிணக்கமாகும். இதற்கான மாநாடுகளும் எடுக்கப்படுகின்றன. இவைகளின் வெளிப்பாடுகள் எப்படி மக்களைச் சென்றடையுமென்பதைக் கண்டறிய வேண்டும். இனங்களுக்குள்ளும் பல்வேறு பிரிவுகள் உண்டு. இவைகளுக்குள் நல்லிணக்கம் தேவை. இவ்விடயத்தில் 'நல்லிணக்கத்திற்கான ஆக்கங்கள்' தொகுப்பு நூல் வரவேற்கத் தக்கதொன்றாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்வேறுபட்ட இன, மொழி எழுத்தாளர்கள் ஒன்று கூடும் போது ஒருவரையொருவர் அறிந்து கொள்ள வாய்ப்பு ஏற்படும். பயிற்சிப் பட்டறைகளும் அவ்வகையானதே. தனிமையிலிருக்கும் கலாசாரத்தைப் பயிற்சிப் பட்டறை வெளிக்கொணர்கிறது. எமது கலாசாரம் மாறிவருகிறது. இதைச் சரியான பாதைக்குத் திருப்ப வேண்டும்.

இந்நூலின் தலைப்புப் பொருத்தமானது. மூலமொழியில் வாசிப்பது போல் உள்ளது. சாம்பவி சிவாஜியின் ஆக்கம் வினைத்திறன் வாய்ந்தது. இதில் மனித நேயப்போக்கு மூன்று துறைகளில் வெளிப்படுத்தப்படுகிறது. காதல் இனப்பிரச்சினையை உடைக்கின்றது. நிக்கினி ஜயதுங்கவின் 'அந்தப் பப்பாளி மரம்' ஒரு வெற்றிப் படைப்பு. தத்துவத்தை வெளிப்படுத்துகிறது. 'தேசியக் கொடி' சிலோஹினி சுமேந்திரன் எழுதியது. பெற்றோரின் தவறான கருத்துக்கள் இளஞ் சந்ததியைப் பாதிப்பதை வெளிப்படுத்துகின்றது. சான் திசாநாயக்காவின் 'பிழைத்திருக்கும் அந்த நம்பிக்கை' தத்ரூபமானது. அமிர்தாஞ்சலி சிவபாலனின் 'நிலத்தின் கீழ்வாழ்வோர்' போராளிக்குத் தண்ணீர் கொடுக்கக் கஷ்டப்படுவதைக் காட்டுகின்றது. இந்நூலின் ஆக்கங்கள் மனிதநேயம் மக்களுக்குத் தெரியாதிருப்பதை வெளிக்காட்டுகின்றன. தகுந்த தருணத்தில் தான் இந்நூல் வெளிவந்துள்ளது. இனங்களுக்கிடையிலான நல்லிணக்கத்துக்கான சிந்தனைகளை ஏற்படுத்தத் தக்க இத்தகைய நூல்கள் மென்மேலும் வெளிவரவேண்டும்.

**பவானி சிவகுமார்**
**(பாடசாலை உதவி அதிபர், எழுத்தாளர்)**

'நல்லிணக்கத்திற்கான ஆக்கங்கள்' தொகுப்பு நூலில் மூவின எழுத்தாளர்கள் சம்பந்தப்பட்டுள்ளனர். ஈழத்துச் சிறுகதைகளின் தொடக்ககாலம் 1930 களாகும். ஆக்கங்களில் சொல்லப்பட்டிருக்கும் விடயங்கள் நெஞ்சை நிறைக்கின்றன. 18 வயதுக்கும் 21 வயதுக்கும் இடைப்பட்ட எழுத்தாளர்கள் சம்பந்தப்பட்டுள்ளனர். 'பிழைத்திருக்கும் அந்த நம்பிக்கை' விறுவிறுப்பாக உள்ளது. சாலினி அபேசேகரவின் 'காதலுக்காக' முப்பது பக்கங்களில் உள்ளது. ராதிகா காளிராஜாவின் மூன்று கவிதைகள் தொகுப்பில் உள்ளன. சர்மதா சந்திரசேகரம் எழுதிய 'மரணத்தீவு' கவிதை நன்று.

இத்தொகுப்புக்கு ஆக்கப் பங்களிப்புச் செய்துள்ள ஏழு எழுத்தாளர்கள் ஆங்கில இலக்கிய ஆசிரியர்கள், நன்றாக எழுதியுள்ளனர். ஆக்கங்களுக்கான பக்கங்கள் அதிகமாக உள்ளன. சுருக்கமாகச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லியிருக்க வேண்டும். உரையாடல் மூலமாக கருத்தைச் சொல்லியிருக்க வேண்டும். செம்மைப்படுத்தியிருக்கலாம்.

நூலுக்கு ஆக்கப் பங்களிப்புச் செய்துள்ள நிப்ராஸ் றிபாஸ், பதும் புஞ்சிஹேவா ஆகியோரும் நிகழ்வில் கலந்து கொண்டு தமது படைப்புக்கள் பற்றிய கருத்துக்களை வெளிப்படுத்தினர்.

கலந்துரையாடலும் நடைபெற்றது. கலாநிதி ந.இரவீந்திரன் கூறியதாவது:

எமது இனத்தின் தவறுகள் என்ன வென்பதை நாம் கண்டு கொள்வதில்லை. சிங்கள மக்களின் உணர்வுகள் தமிழ் மக்களுக்குத் தெரியாது. சிங்களப் பத்திரிகைகள் தமிழ் மக்கள் பற்றிய செய்திகளை வெளியிடுவதில்லை. அவைகளைச் சிங்கள மக்களுக்கு கொண்டுபோகும் பொறுப்பும் எமக்குண்டு. உலகில் உன்னதமான ஐந்து இனங்களைத் தேர்ந்தெடுத்தால் அதற்குள் சிங்கள் இனம் இருக்கும். பிறருடன் விட்டுக்கொடுத்து இணக்கமாக வாழுதல், ஜனநாயகப் பண்பு, வரலாற்று உணர்வு, மாற்றங்களை உள்வாங்கும் இயல்பு என்பவற்றால் சிங்கள மக்கள் அத்தகைய தன்மையுடையவர்கள். அவர்களுக்கும் கேடானதாகவுள்ள சிங்களப் பேரினவாதம், ஒடுக்குமுறையைத் தமிழருக்கு எதிராக மேற்கொள்கிறது என்பது வேறொரு விடயம். விடுதலைக்காகப் போராட வேண்டிய எம்மிடம், ஆண்டபரம்பரை மேட்டிமைக் குணம் மேலோங்கி உலகின் கேடான இரு இனங்களில் ஒன்றாக நாம் இருக்கிறோம், மற்றது இஸ்ரேலிய யூதர். எமக்கான சுயவிமர்சனம் தேவை. இன்றைய நிலை ஒரு முற்றுப்புள்ளி அல்ல. ஏகாதிபத்தியங்கள் நல்லிணக்கத்துக்குத் தீங்கு விளைவிக்கின்றன. நாம் இந்திய ஏகாதிபத்தியத்தால் ஒடுக்கப்படுகிறோம்.

'புரியாத சிணுங்கல்கள்' வெளிப்படுத்தும் உணர்வு முள்ளி வாய்க்கால் போரில் நடைபெற்றவைக்கும் பொருந்தும்.

-04.08.2014

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 70

## ப. ஆப்டீனின் 'கொங்காணி'

'இந்த மண்ணில் இலங்கை முற்போக்கு எழுத்தனர் சங்கம் விதைத்த இலக்கியக் கோட்பாடுகளை உள்வாங்கி இலக்கியம் மூலமும் சமூக சேவை செய்யலாம் என்ற உந்தல் என் உள் மனதில் துளிர் விட்டதன் விளைவே என் சிறுகதைகள்.'

தனது தமிழிலக்கியப் பிரவேசத்துக்கும், சிறுகதைப் புனைவுக்கும் - நெம்புகோலாக இருந்ததை மேற்கண்டவாறு நாடறிந்த இலக்கியவாதி ப.ஆப்டீன் வெளிப்படுத்துகிறார்.

இன ஒருத்துவத்தை, வற்புறுத்தும் இவரது சிறுகதை தொகுதி 'கொங்காணி' 17.02.2015 ஆம் திகதி பம்பலப்பிட்டி ஏ.ஜி.எஸ். கலையரங்கில் வெளியிடப்பட்டது. சாகித்திய ரத்னா பேராசிரியர் சபா ஜெயராசா தலைமை தாங்கினார்.

மங்கலச் சுடரேற்றி நிகழ்ச்சி தொடக்கி வைக்கப்பட்டது.

**வரவேற்புரை:**
**கலாபூஷணம் கே.பொன்னுத்துரை**

இம்மண்டபத்தில் நடைபெறும் முதலாவது நூல்வெளியீடு இதுவாகும். நாவலப்பிட்டியில் மூவின மக்களும் வாழ்ந்தனர். இந்துக்கோயில் திருவிழாக்களுக்கு முஸ்லிம்களும் உதவுவதுண்டு. பள்ளிவாசல்களில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாமி ஊர்வலத்தின்போது இந்துக்களுக்கு நீர் வழங்குவார்கள். விழா நாயகன் ப.ஆப்டீனின் சொந்த ஊர் நாவலப்பிட்டியாகும்.

**நூலாசிரியர் பற்றிய அறிமுக உரை:**
**உரைஞர் - கலாபூஷணம் அந்தனி ஜீவா**

மலையக இலக்கியத்தால் பேசப்படாத படைப்பாளி 'கொங்காணி' சிறுகதைத் தொகுப்பின் ஆசிரியர் ப.ஆப்டீன். ஆங்கில இலக்கிய ஆர்வம் உள்ளவர். ஆங்கிலச் சிறுகதைகளைப் படித்து மொழிபெயர்ப்புச் செய்யச் சொல்லியுள்ளேன். 'கொங்காணி'த் தொகுப்புச் சிறுகதைகளைப் படித்த போது, அமரர் என்.எஸ்.எம்.ராமையாவின் 'ஒரு கூடைக்கொழுந்து' சிறுகதைகளைப் படித்தது போல் இருந்தது. அவரது சிறுகதைகளும் மனித நேயம், யதார்த்தம் என்பவற்றை வெளிப்படுத்துபவை. மிக நுட்பமாக எழுதுவார். அவர் எழுத்தில் சத்திய வேட்கை இருந்தது. கொழும்பில் இன்று வாழும் மலையகத்தவர்களும் எழுதுகின்றனர். ஆனால் என்.எஸ்.எம்.ராமையா கொழும்பு வந்தபின் 'மலையக வாழ்க்கை பற்றிச் சிறுகதை எழுதமாட்டேன்' என்றார். இன்று மலையகம் அக்காலத் திலிருந்ததைப் போல இல்லை. மாறிவிட்டது. பேராசிரியர்கள், டாக்டர்கள், சட்டத்தரணிகள் இப்படிப் பலதரப்பட்டவர்கள் அங்கு வாழ்கின்றனர். இன்றைய தொடர்பு ஊடகங்களிலும் கணிசமான அளவில் ஊடகவியலாளர்கள் பணி செய்கின்றனர். பேராசிரியர் நந்தி, ஆப்டீனை இலக்கியத் துறையில் ஊக்கப்படுத்தினார். இருவரும் சமகாலத்தில் நாவலப்பிட்டியில் வாழ்ந்தனர். அதுபோல் மல்லிகை ஆசிரியர் டொமினிக் ஜீவாவும் இவரது இலக்கிய வளர்ச்சியில் அக்கறை காட்டியுள்ளார். மல்லிகைப் பந்தல் ஊடாக ஆப்டீனின் 'இரவின் ராகங்கள்' வெளிவந்த 'நான் பயணித்த புகைவண்டி' இவரது மற்றொரு சிறுகதைத் தொகுதியாகும். மலையக எழுத்தாளர் தமக்கான பாதையைத் தாமே வெட்டிப் பயணித்தவர்களென்பதை நாம் மறந்துவிடக் கூடாது. ப.ஆப்டீன் தொடர்ந்து சிறுகதைகள் படைக்க வேண்டும்.

**தலைமையுரை:**
**பேராசிரியர் சபா ஜெயராசா**

ஆப்டீனின் 'கொங்காணி' சிறுகதைத் தொகுப்பு வெளியீட்டு விழா வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது. ஏ.ஜி.எஸ்.கலையரங்கத்தின் முதல் வெளியீட்டு விழாவாக அமைவதாலேயே அத்தகைய முக்கியத்துவத்தைப் பெறுகின்றது. இந்த விழா மண்டபங்கள் இன்று பேசப்படுபவைகளாக உள்ளன. யாழ்.பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள 'கைலாசபதி அரங்கு' பற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆய்வொன்றும் செய்யப்பட்டுள்ளது. சிறுகதையை ஒடுக்கப்பட்டவர்களின் கலை வடிவம் என்பதுண்டு. மனித மனம் சிதறிய நிலையில் எழுதப்படுவது இதுவாகும். ஒடுக்கப்பட்ட மக்களின் கலைகளைக் காலப்போக்கில் மேட்டுக்குடியினர் தமதாக்கிக் கொண்டனர். பரத நாட்டியமும் அத்தகையதே. தேவ அடியார்களாலேயே ஆடப்பட்டுவந்தது பரதம். இதை மேட்டுக்குடி பெயரையும் மாற்றித் தமதாக்கியுள்ளது. பல இலட்சம் செலவில் நடன அரங்கேற்றங்கள் மேட்டுக்குடியினரால் நடாத்தப்படுகின்றன. ப.ஆப்டீனின் தாய்மொழி மலாய். மிகவும் முக்கியமான படைப்பாளி. ஆசிரிய பரம்பரையைச் சேர்ந்த எழுத்தாளர். இப்பரம்பரை பண்டிதமணி கணபதிப்பிள்ளையிலிருந்தே ஆரம்பிக்கின்றது.

இன்று மேற்கத்திய நாடுகளில் YOUNG ADULT LITERA TURE என்ற புதிய இலக்கிய வடிவம் உண்டாகியுள்ளது. வெளிநாடுகளில் கூடுதலாகப் புத்தகங்களை வெளியிடுகின்றனர். சிங்களத்தில் பெருந்தொகையான எழுத்தாக்கங்கள் வெளிவருகின்றன. ஆசிரியமரபோடு புழங்குகின்றனர். ஆப்டீனின் எழுத்துக்களும் அத்தகையனவாக உள்ளன. மரபு மார்க்சியம், நவ மார்க்சியம் இவைகளுக்குப் பின்னரே பின்நவீனத்துவம் வந்தது. அது இன்னமும் வளர்ச்சி பெறவில்லை. அதை விளங்கிக் கொள்ள வேண்டும். ப.ஆப்டீனின் சிறுகதைகளைப் பின் நவீனத்துவத தளத்தில் வைத்து ஆய்வு செய்ய வேண்டும்.

*'கொங்காணி' நூலை வெளியிட்டுப் பேராசிரியர் சபாஜெயராசா அதன் முதல் பிரதியை புரவலர் ஹாசிம் உமருக்கு வழங்கினார். சிறப்புப் பிரதிகளை பீ.நயீம் கீடின், ராஜ் பிரசாத் ஆகியோர் பெற்றனர். கலைஞர் கலைச்செல்வன் நூலாசிரியர் ப.ஆப்டீனுக்கு பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார்.*

**கருத்துரைகள்:**
**செல்வி ஜீவா சதாசிவம்**
**(பத்திரிகையாளர், வீரகேசரி 'சங்கமம்')**

ஈழத்துத் தமிழிலக்கியச் சூழலில் மலையக இலக்கியம் தனித்துவம் வகிக்கின்றது. மலையக இலக்கிய முன்னோடியாக விளங்குபவர் சி.வி.வேலுப்பிள்ளை. இப்போது பல இலக்கிய நூல்கள் வெளிவருகின்றன. பெரும் போராட்டங்களுக்கு மத்தியிலேயே இவை வெளியிடப்படுகின்றன. இன்று ப.ஆப்டீன் 'கொங்காணி' சிறுகதைத் தொகுப்பை வெளியிட்டுள்ளார். கொங்காணி மலையக சமூகத்தைப் பிரதிபலிப்பது. மலையக வாழ்வில் முக்கிய மாற்றங்கள் ஏற்பட்டுக் கொண்டிருக்கும் இப்போது 'கொங்காணி'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொகுப்பின் வருகை முக்கியமாகின்றது. இதன் ஆசிரியர் ப.ஆப்டீன் நல்ல சிறுகதைப் படைப்பாளி. நாவலப்பிட்டியைச் சேர்ந்தவர். ஈழத்தின் பல பிரதேசங்களில் தொழில் புரிந்தவர். முற்போக்குச் சிந்தனையில் சமூகத்தை நோக்குபவர்.

இத்தொகுப்பில் 12 சிறுகதைகள் உள்ளன. படிக்க விறுவிறுப்பாக உள்ளன. பிரதேச வழக்கு சிறுகதைகளில் உண்டு. ஐந்து சிறுகதைகளில் கல்வி முன்னிறுத்தப்படுகின்றது.

அந்தக் காலத்தில் மலையகத்தில் பாடசாலை வசதி இல்லை. கல்வியா? தேயிலைத் தோட்ட வேலையா? என்ற பிரச்சினை மலையகத் தமிழருக்கு இருந்தது. கொங்காணி சீருடை மலையக மக்களின் பிரதானமான அடையாளமாக இருந்தது. மலையக மக்கள் கல்வியைத் தொடர முடியாமைக்கு பொருளாதாரப் பிரச்சனையும் இருந்தது. மலையக மக்களைக் கல்வியில் ஊக்கங் கொள்ள வைக்கின்றது 'கொங்காணி' சிறுகதை. 'மொட்டைப் பனை', 'மனச் சங்கமம்' என்பவைகளும் சிறப்பாக உள்ளன. 'ரோதை முனியை', ப.ஆப்டீன் சிறப்பாகக் கையாண்டுள்ளார். இதுபோன்ற நூல்கள் பெரும் எண்ணிக்கையில் வெளிவர வேண்டும்.

## பதுளை சேனாதிராசா (கதைஞர், சட்டத்தரணி)

'கொங்காணி' சிறுகதைத் தொகுப்பின் ஆசிரியர் ப.ஆப்டீன் கண்ணியமான படைப்பாளி. அவர் சமூகத்தைக் கூர்மையாகப் பார்க்கின்றார். எப்படித்தான் இப்படிக் கதைகளைப் புனைகிறார் என்பதில் ஆச்சரியமாக இருக்கின்றது. எனது சிறுகதைகள் போன்று அவரது சில கதைகளும் உள்ளன. 'தழும்பு', 'மையத்து முகம்' போன்ற சிறுகதைளின் தொனிப் பொருளை நானும் கையாண்டுள்ளேன்.

'சிதைவுகள்' எனக்குப் பிடித்தமான சிறுகதை. பன்முகத் தன்மை கொண்டது. பின்நவீனத்துவத் தெறிப்புண்டு. கற்கும் மாணவருக்கு எவ்வகையிலும் இடைஞ்சல் இருக்கக் கூடாது. ஆசிரியர் பாடத்தை ஆயத்தம் செய்து மாணவருக்குக் கற்பிக்க வேண்டும். மாணவர்களை மட்டமாக நினைக்கக் கூடாது. நண்பனாகப் புழங்க வேண்டும். நையாண்டியாகக் கதையை எடுத்துரைக்கும் வல்லமை ப. ஆப்டீனுக்கு உண்டென்பதைச் சில சிறுகதைகள் நிரூபிக்கின்றன. கருத்தியலும் உண்டு.

கதாசிரியர்கள் சம்பாஷணை ஊடாகப் பாத்திரத்தின் தன்மையைச் சித்திரிக்க வேண்டுமென 'எழுத்து' சி.சு.செல்லப்பா சொல்வார். ப.ஆப்டீன் அதைப் பின்பற்றுகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திக்குவல்ல கமால் (இலக்கிய விமர்சகர்)

ஞாயிறு தினக்குரல் பத்திரகையொன்றின் முழுப் பக்கத்திலும் 'கொங்காணி' சிறுகதை வெளிவந்திருந்தது. மார்க்சிம் கோர்க்கி என்ற பெயரும் இரட்டைக் கொம்பில்லாது 'கார்க்கி' என வந்திருப்பதைக் கண்டிருக்கின்றேன். அத்தகையதா? என விசனம் கொண்டேன். அதை முழுதும் வாசித்தபின் உண்மை தெரிந்தது. பின்னொரு சந்திப்பில் ஆப்டீன் மேலதிக விடயங்களைச் சொன்னார். எழுத்தாளர் நந்தியின் தொடர்புகள் ஆப்டீனுக்கு நிறைய இருந்ததுண்டு. முஸ்லிம் வாழ்வைச் சித்திரித்து சிறுகதைகள் எழுத வேண்டுமென நந்தி ஆலோசனை கூறினார். முற்போக்கு இலக்கியச் சிந்தனையாளர்களாகிய மல்லிகை ஆசிரியர் டொமினிக் ஜீவா, பிரேம்ஜி ஞானசுந்தரம் ஆகியோரோடு தொடர்புபடுத்தினார். டொமினிக் ஜீவா மல்லிகையில் ஆப்டீனுக்கு முக்கியத்துவம் கொடுத்தார்.

அநுராதபுரத்தில் ஐந்தாண்டுகள் வாழ்ந்து ப.ஆப்டீன் 'கருக்கொண்ட மேகங்கள்' நாவலைப் படைத்தார். சிங்கள, முஸ்லிம் இனத்தவர்கள் நீர்ப் பிரச்சினையை முன்வைத்து பிரிந்து மோதுகின்றனர். தொடர்ந்து வந்த சந்ததி சமரசமாகப் பிரச்சினையைத் தீர்க்கின்றது. இதுதான் இந்நூலில் வாசகனுக்கு எடுத்துரைக்கும் செய்தி. இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் நடைபெற்ற புத்தகக் கண்காட்சியொன்றில் இந்நாவல் பற்றியும் பேச்செழுந்தது. இதைச் சிங்களத்தில் மொழிபெயர்த்துச் சிங்கள வாசகருக்குப் படிக்கக் கொடுக்க வேண்டுமெனப் பௌத்தபிக்கு ஒருவர் சிபாரிசு செய்தார். மொழிபெயர்ப்பு இப்போது நடந்துகொண்டிருக்கின்றது.

'இரவின் ராகங்கள்' முன்னுரையில் நந்தி, ஆப்டீனின் எழுத்து நடை சமாதான நடை எனவும் அவர் எவரையும் பகைக்க மாட்டாரெனவும் கூறியுள்ளார். 'நாம் பயணித்த புகைவண்டி' தொகுப்பு ஆய்வு செய்யப்பட்டுள்ளது. அழகியல் சார்ந்த தத்துவார்த்தச் சிறுகதைகளை ஆப்டீன் படைத்துள்ளார். அவரது பன்முக நோக்குடைய தனித்துவத்தைக் காட்டும் புனைவுகளை பல்கலைக்கழக மட்டத்தில் ஆய்வு செய்ய வேண்டும்.

தான் சார்ந்த மலாய் சமூகத்துக்கு ஆப்டீன் இன்னும் சற்று அதிகமாக பணி செய்ய வேண்டும்.

நூலாசிரியர் ப. ஆப்டீன் நன்றியுரை செய்தார்.

கவிஞர் மேமன் கவி நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்கினார்.

-05/06.03.2015

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெயர்ச் சுட்டி

## அ - ஔ

01. அகளங்கன் - 357
02. அகிலன் - 78, 430
03. அசோக். என். கே - 203
04. அசோக்பரன் - 60, 63, 226
05. அசோகச் சக்கரவர்த்தி - 447
06. அசோகமித்திரன் - 345
07. அண்ணாதுரை சீ.என்.- 72,110, 322
08. அண்ணாமலை செட்டியார் - 399
09. அத்துல ஜயக்கொடி - 196, 197
10. அந்தனி ஜீவா - 33, 58, 63, 94, 106, 110, 115, 123. 170, 177, 192, 205, 210, 246, 248, 258, 294, 431. 472
11. அநகாரிக தர்மபால - 359
12. அப்துல் காதர் - 23
13. அப்துல் லத்தீப் - 21. 52
14. அப்புக்குட்டி ராஜகோபால் - 186
15. அபே விக்கிரம. ஜோ. - 279
16. அம்புறோஸ் பீற்றர் - 67, 70, 84. 85, 221
17. அமரதேவ மத்தும பண்டார - 286
18. அமானுல்லா - 328
19. அமிர்தலிங்கம் சொ. - 247
20. அமிர்தாஞ்சலி சிவபாலன் - 469
21. அமீர்அலி எம். எஸ். எஸ். - 354
22. அமீன் என்.எம். - 182, 285, 321
23. அமுதன் மன்னார் - 57, 58, 206, 220, 221. 222, 223, 224, 225, 226, 227
24. அருண்மொழி - 176
25. அருணகிரிநாதர் - 402
26. அருணாசலம் ஏ.ஈ. - 48
27. அருளானந்தம் நீ. பி. - 198
28. அல் அஸூமத் - 351
29. அல்பிரட் கிச்கொக் - 110
30. அல்பிரட் துரையப்பா - 115
31. அலமேலு அம்மை - 374
32. அலெக்சான்டர் பிளாக் - 276
33. அழகிரிசாமி. கு. - 201
34. அழகேஸ்வரி நீலாவணன் - 167
35. அறவாணர் - 82
36. அன்ரன் செக்கோவ் - 210, 263, 388
37. அன்ரனி நோபேட் - 151
38. அன்பழகன் - 350
39. அன்னலட்சுமி ராஜதுரை - 108, 112, 115, 197, 246, 287, 288, 289, 290, 291, 292, 293, 296, 297, 303, 323, 331, 332, 433, 434
40. அன்னை தெரேசா - 290
41. அனஸ். எஸ். எம். எஸ் - 366
42. அனா - 214
43. அனுாஜன் எஸ். 172
44. அஹமட் ஏ. எம். - 135
45. அஸீஸ் ஏ. எம். ஏ. - 11. 23
46. அஷ்ரப் - 166, 285
47. அஷ்ரப் சிஹாப்தீன் - 145, 181, 206, 222, 333, 351, 352, 353, 354, 355
48. அஷ்வர் ஏ. எச். எம்.-95, 280, 281, 283
49. ஆதவன்தீட்சண்யா - 424
50. ஆதித்தன் க. - 394
51. ஆப்டீன் ப. - 211. 390, 471, 472, 473, 474, 475
52. ஆபிரகாம் பண்டிதர் - 399
53. ஆர். வி. - 78
54. ஆர்னோல்ட் ஜே. ஆர். - 298
55. ஆருக மூர்த்தி - 396
56. ஆலிஸ் மென்றோ - 462
57. ஆழ்வாப்பிள்ளை கங்காதரன் - 215, 216
58. ஆழ்வாப்பிள்ளை கந்தசாமி-376, 402
59. ஆறுதிருமுருகன் - 240, 448
60. ஆறுமுகநாவலர் - 78, 240, 359, 429, 432, 435, 436
61. ஆனந்தன் (க. சச்சிதானந்தன்) - 102, 427
62. ஆனந்தி - 76
63. இக்பால் ஏ. - 51, 78, 161, 252, 368, 379, 380, 385
64. இக்பால் எம். ஏ. சி. - 335
65. இக்பால் எம். எஸ். எம். - 52

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

66. இதயராசன் எஸ். (இதயராஜா) - 73, 75, 92, 131, 134, 135, 136, 137, 138
67. இரகுபதி பாலஸ்ரீதரன்- 255,454,462
68. இரகுபரன் க. - 57, 447, 455
69. இரத்தினவேலோன் புலோலியூர் ஆ. - 105, 109, 130, 214, 215, 216, 217, 218, 219
70. இரவீந்திரன் ந. - 77, 79, 81, 82, 91, 92, 93, 95, 122, 141, 273, 274, 311, 314, 318, 384, 408, 411, 441, 470
71. இராசரத்தினம் குரும்பசிட்டி - 41
72. இராசரத்தினம் பி. கே. (வடகோவை இராசரத்தினம்) - 5, 6
73. இராசரத்தினம் பிள்ளை - 397
74. இராசரத்தினம் வ. அ. - 164, 427
75. இராசையா வ. - 78, 131, 301, 303, 318, 329, 330, 440
76. இராதாகிருஷ்ணன் பெ. - 189
77. இராமகிருஸ்ணன் எஸ். - 431
78. இராமச்சந்திரன் எம். ஜி. (எம்.ஜி.ஆர்.) - 247, 293
79. இராமசாமி ஐயர் - 2
80. இராமானுஜம் கப்பல் - 4
81. இராமையா திருமதி - 194, 197
82. இராஜ்மோகன் ஆ. -204, 222, 225
83. இராஜகுலேந்திரா ஜி. - 202, 203, 206, 216, 227, 396
84. இராஜரத்தினம் க. த. - 271, 359
85. இலகுப்பிள்ளை கு. - 241, 265
86. இலங்கேஸ்வரன் - 180
87. இலங்கையர்கோன் - 62, 217, 240, 312, 427, 438
88. இளங்கோ - 250
89. இளங்கோவன் வி. ரி. - 332, 333, 334, 335, 336, 337
90. இளங்கீரன் சுபைர் - 15, 16, 17, 18, 19, 20, 21, 22, 23
91. இளஞ்செழியன் - 411
92. இளையராஜா - 399
93. இந்திரகுமார் எஸ். - 450
94. இன்குலாப் - 152
95. ஈழத்துப் பூராடனார் - 41
96. ஈஸ்வரன் தெ. - 50, 372, 434
97. உதயகுமார் கே. கே. - 202
98. உதயகுமார் சீ. சமரபாகு - 76
99. உதயணன் இரா - 241, 245, 246
100. உதயணன் வவுனியூர் - 41, 332
101. உதயராசா ப. - 187, 189
102. உதயராஜா - 241
103. உபாலி லீலாரத்னா - 243, 431
104. உமா பிரகாஷ் - 287
105. உமா வரதராசன் - 303
106. உவைஸ் எம். எம். (ம. மு.) - 11, 280, 281, 282, 283, 284, 285, 286, 366
107. எமர்சன் ரெனட் - 360
108. எல்லாளன் - 453, 454
109. எழில் மொழி - 206
110. எழில் வேந்தன் - 147, 163, 169, 437, 458
111. ஐங்கரநேசன் - 149, 150, 151, 152, 153
112. ஐயாத்துரை கணேசன் - 319
113. ஐயம்பிள்ளை க. - 356, 357
114. ஔவை - 443, 444, 445, 446, 447, 448, 449, 450, 451
115. ஔவை விக்னேஸ்வரன் - 437

## க

116. கச்சியப்ப சிவாச்சாரியார் - 401
117. கண்ணதாசன் - 64, 65, 166, 222, 251
118. கணபதிப்பிள்ளை - 13, 282
119. கணபதிப்பிள்ளை மா. - 347
120. கணபதி ரவீந்திரன் - 41
121. கணேசபிள்ளை எஸ். எஸ். (வரணியூரான்) - 192
122. கணேசலிங்கன் செ. - 20, 23, 125, 209, 212, 383, 428, 436
123. கணேசவேல் கே. - 228
124. கணேசன் சா. - 72
125. கணேசன் வி. பி. - 183, 192
126. கணேஸ் கே. - 10, 59, 61, 197, 311, 312, 313, 377, 382, 427
127. கதிர்காமநாதன் செ. - 311, 314
128. கதிர்காமநாதன் மு. - 181, 193, 194, 195, 196, 197, 198, 199, 200, 201, 204, 205, 226, 241, 284, 371, 372, 373, 396, 433

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

129. கதிர்காமர் எஸ். - 272
130. கந்தசாமி - 229, 230, 231
131. கந்தசாமி அ. ந. - 21, 51, 52, 314, 380, 428
132. கந்தசாமி வி. ஏ. - 236
133. கந்தவனம் வி. - 37, 39, 41, 43, 44, 45
134. கந்தையா எஸ். - 86
135. கந்தையா பொன் - 15
136. கந்தையா நீலகண்டன் - 404
137. கந்தையா லயன் - 97
138. கபிலர் - 447
139. கம்பன் - 28, 82, 226, 250, 280, 437
140. கமலாம்பாள் - 462, 464
141. கமலினி செல்வராசன் - 165, 296
142. கமால் திக்குவல்ல - 93, 105, 106, 146, 160, 211, 303, 364, 379, 423, 424, 425, 475
143. கமால்தீன் எஸ். எம். - 192
144. கருணாகரன் ஏ. கே. - 70, 402
145. கருணாகரன் ரி. - 25
146. கருணாநிதி மா. - 93, 135, 136, 149, 257
147. கருணாநிதி மு. - 78, 110, 322, 417
148. கல்கி கிருஸ்ணமூர்த்தி - 59, 122, 375, 397, 430, 465
149. கல்யாணசுந்தரம் பட்டுக்கோட்டை - 251
150. கலாலட்சுமி தேவராஜா - 147
151. கலா அமிர்தலிங்கம் - 215
152. கலிலியோ - 153
153. கலைச்செல்வன் - 110, 112, 178, 181, 187, 188, 189, 190, 191, 192, 193, 473
154. கலைவாதி கலீல் - 64. 365
155. கன்னங்கரா சி. டபிள்யு. டபிள்யு-12. 378
156. கனகசபாபதி - 39
157. கனகரத்தினா ஏ. ஜே. - 8. 23. 378
158. கனகராசன் மு. - 93
159. கனகரெத்தினம் - 166
160. கனிமொழி தேவதாசன் - 68
161. காசிம் உமர் (ஹாஸிம் உமர்) - 108, 110, 167, 172, 178, 183, 187, 189, 197, 200, 205, 215, 216, 225, 256, 292, 297, 303, 306, 322, 323, 324, 354, 365, 431, 436, 473
162. கார்த்திகேசு மாத்தளை - 124, 126, 128, 325, 330
163. கார்த்திகேசன் மு. - 1, 2, 3, 6, 15, 253, 260, 382, 383
164. காந்தன் எழில்வேந்தன் - 169
165. காந்திஜி (மகாத்மா காந்தி)-375, 408
166. கார்மேகம் - 109, 112, 115, 289
167. கார்ல் மார்க்ஸ் - 53, 54, 271, 367, 368, 413, 414
168. காமராஜ் நாடார் - 187
169. காரைக்கால் அம்மையார் - 87, 399, 400
170. கிருஸ்ணகுமார் செ. 120
171. கிருபாகரன் வி. - 87
172. கிருபாசக்தி கருணா - 400
173. கிருஸ்ணமூர்த்தி ஐயர் - 25
174. கிருஸ்ணன் என். எஸ். - 397
175. கிறிஸ்ரின் வில்சன் - 195, 201
176. கீதாகணேஷ் - 294, 296, 297, 298, 299, 300
177. குகதாசன் மு. - 153
178. குணசேன விதான- 16, 17, 21, 22
179. குந்தவை - 294
180. கு. பா. ரா.(கு. பா. ராஜகோபாலன்) - 168, 212
181. குமரன் க. - 177, 385
182. குமார் - 45
183. குமார் பொன்னம்பலம் - 177, 416
184. குமார் நடேசன் - 197, 200
185. குமாரி ஜெயவர்த்தனா - 4
186. குலசீலநாதன் - 71
187. கைலாசபதி க. (கைலாஸ்) - 1, 2, 8, 13, 19, 27, 31, 51, 52, 59, 122, 176, 213, 232, 240, 259, 314, 358, 378, 382, 383, 393, 411, 428, 463
188. கைலாசநாதக் குருக்கள் - 53
189. குலமணி மா. - 45

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

190. குலேந்திரன். பொன் - 41
191. குவேனி - 41
192. குறமகள் - 41
193. கேசவன் துணவியூர் - 174, 393
194. கொடகே எஸ். - 388, 424, 431, 436, 440
195. கோகில ரூபன் - 58
196. கோகிலா மகேந்திரன் - 125. 129
197. கோகிலம் சுப்பையா - 198
198. கோசிமின் (ஹோசிமின்) - 313
199. கோணங்கி - 431
200. கோதை அமுதன் குமார் - 42
201. கோபால் ஏழுமலை - 227
202. கோபால கிருஸ்ணன் த. - 142, 166, 246
203. கோபாலபிள்ளை க. - 438, 43(. 440, 441, 442
204. கோவிந்தராஜன் - 389
205. கோவைஞானி - 56, 59

ச

206. சக்திதரன் செ. - 56, 61, 62
207. சக்தி பால ஐயா - 200, 419
208. சகுந்தலா மனோகரன் - 23
209. சங்கர சுப்பிரமணியன் கீழம்பூர் எஸ். - 371, 372, 373
210. சங்கரலிங்கம் - 105
211. சச்சின் டெண்டுல்கர் - 204
212. சசிதரன் எஸ். - 183, 184, 206
213. சடகோபன் இரா. - 73, 194, 197, 199, 200, 201
214. சடகோபன் ஜி. - 194
215. சடாகோபன் கவிஞர் ஆர்.-226, 437
216. சண்முகம் சோக்கல்லோ - 20
217. சண்முகலிங்கம் எஸ். - 35
218. சண்முகலிங்கம் குழந்தை ம. - 278, 393
219. சண்முகதாசன் நா. - 177, 232, 233, 267, 268, 269, 271, 272, 332, 335, 336
220. சண்முகவரதன் - 451
221. சதாசிவம் ஆ. - 31
222. சதாசிவம் புலோலியூர் க. - 102
223. சதாம் ஹுசைன் - 113
224. சதீஸ் எஸ். - 63
225. சதீஸ் சீ. - 463
226. சந்தியாப்பிள்ளை - 234
227. சந்திரகாந்தா முருகானந்தம் - 101
228. சந்திரசேகரம் சோ. - 5, 102, 150, 194, 197, 203
229. சந்திரசேகரன் த. - 246
230. சந்திரலிங்கம் ஏ. - 149
231. சபாரத்தினம் ந. 173
232. சபா ஜெயராசா - 5, 51, 52, 121, 122, 123, 125, 129, 141, 144, 149, 155, 171, 188, 189, 239, 241, 245, 246, 248, 256, 259, 291, 297, 311, 347, 349, 378, 396, 397, 402, 426, 427, 430, 432, 435, 438, 444, 452, 453, 455, 460, 462, 463, 471, 472, 473
233. சம்பந்தன் - 217, 240, 427
234. சம்பந்தன் இரா. - 41
235. சம்ஸ் எம். எச். எம். - 364, 365, 366, 367, 368, 369, 370
236. சமீம் எம். ஏ. எம்.- 13, 36, 378, 385
237. சர்மதா சந்திரசேகரம் - 469
238. சரத் பொன்சேகா - 114
239. சரவணபவன் - 202
240. சரவணபவன் ஈ. - 172
241. சரோஜினிதேவி சோ. - 202
242. சல்மா - 431
243. சற்சொரூபநாதன் - 246
244. சஜீத் என். எம். - 370
245. சாண்டில்யன் - 72, 430
246. சாந்தசீலன் கதிர்காமநாதர் - 306, 307
247. சாந்தன் - 428
248. சாந்தான் பாவிலு அண்ணாவியார் - 65
249. சாந்திகுமார் அருட்பணியாளர் - 66
250. சாந்தி சச்சிதானந்தன்-293, 309, 450
251. சாந்தி நாவுக்கரசன் - 405
252. சாம்பவி சிவாஜி - 469
253. சாமி எஸ். பி. - 25, 108, 110, 171, 172, 178

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

254. சாமிநாதய்யர் உ.வே. (உ.வே.சா.) 371, 373, 374, 375
255. சாரல் நாடன் - 430
256. சாலினி அபேசேகர - 469
257. சிக்மன்ட் பிராய்ட - 59, 312
258. சிங்காரவேலர் மா. - 349
259. சிட்டி சுந்தரராஜன் - 33, 330
260. சித்தன் - 205
261. சிதம்பரநாதன் - 393
262. சிதம்பர ரகுநாதன்(தொ.மு.சி.)- 30, 197
263. சிவகுமார் எஸ். - 25
264. சிவகுமாரன் கே. எஸ். - 33, 97, 108, 109, 115, 125, 127, 340, 388, 452
265. சிவகுருநாதன் எஸ். 418
266. சிவசக்தி - 42
267. சிவசங்கரி - 29
268. சிவசங்கரி - 296
269. சிவசண்முகமூர்த்தி - 72
270. சிவசேகரம். சி. - 77, 82, 132, 135, 147, 232, 262, 263, 264, 265, 267, 272, 391, 392
271. சிவஞானசுந்தரம் 'சிரித்திரன்'- 93
272. சிவஞானம் - 336
273. சிவஞானம் கே. - 319
274. சிவஞானம் மா.பொ. (மா.பொ.சி) - 176
275. சிவத்தம்பி கா. - 2, 7, 8, 9, 10, 11, 13, 52, 59, 61, 82, 171, 177, 192, 204, 240, 259, 278, 280, 286, 378, 379, 415, 428, 430, 433
276 சிவதாஸ். எஸ். - 297, 298, 299
277. சிவநாதன் வாகீசன் - 202
278. சிவநந்தினி துரைச்சாமி - 359
279. சிவநாயகம் எஸ். டி. - 86, 112, 436, 452, 454
280. சிவநிர்த்தானந்தா சி. - 247
281. சிவப்பிரகாசம் - 9
282. சிவபாதசுந்தரம் சோ. - 33, 325, 328, 329, 330
283. சிவபாதம் சு.க. - 37, 44
284. சிவபுத்திரன் க. - 249, 250
285. சிவராமன் என். - 373
286. சிவலிங்கம் இர. - 425
287. சிவலிங்கம் மு. - 194, 197, 388
288. சிவனேசச் செல்வன் ஆ. - 25, 44, 112, 176
289. சிவனு மனோகரன் - 387
290. சிவஜோதி வ. - 239
291. சிவா சுப்பிரமணியம் - 123, 208, 241, 246, 250, 258
292. சிவானந்தன் வி. ரி. - 333
293. சிவாஜி கணேசன் - 64, 65, 247
294. சில்மியா எஸ். - 157, 158
295. சிலோஹினி சுமேந்திரன் - 469
296. சிற்பி - 30, 61
297. சிற்பி சரவணபவன் - 291
298. சிற்பி சிவபாலன் - 228
299. சிற்றரசு சி.பி. - 110
300. சின்னசாமி முதலி ஏ.எம். - 399
301. சின்னத்தம்பி எம். - 197
302. சின்னத்தம்பி (பாரதிநேசன்) - 176, 253
303. சின்னப்ப பாரதி கு. - 241, 243, 244, 245, 257
304. சின்னனப்பா பி.யு. - 399
305. சுகந்தி இராஜகுலேந்திரா - 298, 437
306. சுகைதா ஏ.கரீம் - 68
307. சுதர்ம மகாராஜன் - 130, 200, 330
308. சுதா ரகுநாதன் - 397
309. சுதாராஜ் - 139, 140, 143, 144,145, 146, 148, 225
310. சுந்தரம் பெரி - 4
311. சுந்தா வீ. சுந்தரலிங்கம் - 329
312. சுந்தரமூர்த்தி இ. - 82
313. சுந்தரமூர்த்தி எஸ். - 347
314. சுந்தரமூர்த்தி கா. - 306
315. சுந்தர ராமசாமி - 59, 205, 209
316. சுந்தரலிங்கம் சி. - 279
317. சுந்தரலிங்கம் நா. - 393, 394
318. சுப்பராமன் - 399
319. சுப்பிரமணியபாரதி (பாரதியார், மகாகவி) - 28, 42, 48, 58, 79, 80, 88, 89, 103, 122, 166, 176, 178, 203, 204, 222, 224, 226, 250, 274, 275, 276, 277, 278, 290, 298, 318, 319, 398, 412, 429, 432, 441, 445, 453, 461, 462, 464
320. சுப்பிரமணியம் ஆ.மா, - 241,455
321. சுப்பிரமணியம் ஏ. - 50
322. சுப்பிரமணியம் எம். சி. - 2
323. சுப்பிரமணியம் க.நா.(க.நா.சு.) 78, 213, 462

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

324. சுப்பிரமணியம் கே. ஏ. - 232, 233, 234, 235, 236
325. சுப்பிரமணியம் நா. - 41
326. சுப்பிரமணியம் வ.வே. (வ.வே.சு. ஐயர்) - 88, 465
327. சுப்புலட்சுமி எம். எஸ். - 399
328. சுபத்திரன் - 73
329. சுபாஷினி பத்மநாதன் - 287
330. சுமதி குகதாசன் - 249, 250, 251, 252, 253, 254, 385
331. சுரேந்திரன் இ. - 403
332. சுரேஷ் பிரேமச்சந்திரன் - 172
333. சுல்தான் எம்.எம். - 23
334. சுவாமிநாதன் டி.எம். - 287, 292
335. சுஸானா சந்தியோகு - 323
336. சுஹைர் ஹமீட் - 192, 193, 393
337. சுஜாதா - 78, 352, 430
338. சூசன் - 45
339. சூசை எட்வேர்ட் - 330
340. சூடாமணி - 236, 336
341. செங்கை ஆழியான் (குணராசா.க.) - 30, 35, 59, 155, 312, 427, 455
342. செந்தில்நாதன் டபிள்யூ. எஸ். 397
343. செந்தில்வேலவர் - 246
344. செந்தில்வேல் சி.கா. - 234, 336
345. செந்தூரன் (திருச்செந்தூரன்) -425
346. செபமாலை செபமணி - 360
347. செபரெத்தினம் வித்துவான் - 41
348. செம்பியன் செல்வன் - 427
349. செல்லத்துரை சி. - 40, 43
350. செல்லத்துரை சுதர்சன் - 464
351. செல்லப்பா சி. சு. - 203, 205,259, 475
352. செல்வம் - 90, 91, 94, 98
353. செல்வம் பெர்னாண்டோ - 186
354. செல்வராசன் சில்லையூர் - 44, 51, 52, 156, 165, 378
355. செல்வநாயகம் - 13
356. செல்வரத்தினம் கு. - 110
357. செல்வராஜா - 41
358. செல்வராஜா வ. - 409
359. செல்வா இலங்கையன் - 42
360. செல்வி திருச்சந்திரன் - 92, 118, 301, 303, 377
361. செல்வி சச்சிதானந்தம் - 448
362. செழியன் - 41
363. செனுரி பிரசேகா பசநாயக்கா - 287
364. சேக்கிழார் - 329
365. சேதுபதி - 112
366. சேரன் - 41, 382
367. சேவியர் ஆர். எல் - 273
368. சேனாதிராஜா பதுளை - 76, 130, 199, 386, 387, 388, 389, 390, 474
369. சொக்கன் - 39, 127
370. சொர்னலதா - 170
371. சோ. - 72
372. சோக்கிரட்டீஸ் - 153
373. சோமகாந்தன் (ஈழத்து சோமு) - 44, 102, 314, 426, 428, 429, 430, 431, 432, 433, 434, 435, 436
374. சோமசுந்தரப்புலவர் நவாலியூர் - 167
375. சோமசுந்தரம் மாவை - 50
376. சோமசுந்தரம் ஐ. - 206, 207
377. சோமசேகரன் சுண்டிக்குளி - 185
378. சோமபால - 229, 230
379. சோலைக்கிளி - 382
380. சௌகார் ஜானகி- 185, 192
381. சௌத்தாமினி மோகனசுந்தரம் -124

## ஞ

382. ஞானகுமாரன் மட்டுவில் - 73, 202, 203, 204, 205, 206, 207
383. ஞானசேகரன் தி. - 9, 13, 25, 27, 55, 61, 93, 106, 123, 142, 195, 212, 256, 316, 317, 326, 334, 339, 358, 387, 434
384. ஞானப்பிரகாச அடிகளார் - 347
385. ஞானாம்பிகை ஞானசேகரன் - 7

## ட

386. டட்லி செல்வநாயகம் - 415
387. டாவின்சி - 88
388. டானியல் கே. - 2. 59. 60, 62,156, 160, 209, 240, 266, 312, 326, 332, 335, 336, 385, 428, 441

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

389. டீன் குமார் - 180
390. டொமினிக் ஜீவா - 2, 10, 19, 25, 32, 66, 90, 91, 92, 93, 94, 95, 96, 97, 98, 104, 105, 108, 111,123, 125, 129, 135, 140, 144, 173, 174, 208, 209, 210, 240, 246, 255, 256, 257, 259, 260, 261, 274, 278, 279, 304, 378, 379, 419, 420, 423, 428, 435, 437, 472, 475
391. டேவிட் ராஜு ஈ.வீ. - 108, 109, 110, 111, 112, 113, 114, 115
392. டேவிற் கே. ஆர். - 34, 123, 126, 127, 128, 228, 243, 316, 317, 318, 319, 326

த

393. தணிகாசலம் க. - 263
394. தபேந்திரா மயூரன் - 463
395. தம்பிராசா வே. - 46
396. தம்பிஐயா தேவதாஸ் - 179, 180, 181, 182, 183, 184, 185, 186, 333
397. தம்பு சிவா (சிவசுப்பிரமணியம் தம்பு) - 18, 81, 134, 135, 184, 192, 217, 239, 240, 241, 242, 243, 246, 248, 250, 297, 316, 319, 320, 440, 452, 465
398. தம்பையா இ. -268
399. தம்பையா எச்.டபிள்யு. - 432
400. தம்பையா வீ. - 91, 95, 98
401. தமிழ் நேசன் அடிகளார் - 64, 65, 66, 68, 69, 220, 221
402. தமிழ்மாறன் வி.ரி. - 173, 308, 310, 333
403. தயாபரன் மு. - 96, 125, 126, 128, 129, 130, 259, 315, 319, 353, 371
404. தயாளன் ரி. - 291
405. தர்மகுலசிங்கம் ஆர். -362
406. தர்மராஜா - 215
407. தர்மராஜா க. மு. - 167, 172 332, 416
408. தர்ம ஸ்ரீ சேனநாயக்க - 191
409. தரிசிகா சி. - 463
410. தருமு சிவராம் (பிரமிள்)-58,198, 205
411. தளையசிங்கம் மு. - 165, 428
412. தனபாலசிங்கம் வி. - 34, 96, 114, 123, 149, 170, 171, 172, 175, 176, 177, 217, 246, 253, 271, 289, 306, 307, 308, 336
413. தனராஜ் தை. - 3, 5
414. தனராஜ் ம. - 360
415. தனராஜ் (வைத்திய கலாநிதி)- 86
416. தனிநாயகம் அடிகளார் - 347, 348, 349, 350
417. தனுசாந்தன் லண்டன் - 248
418. தனுஜன் ச. (சபாதனுஜன்) - 137, 147, 238, 266
419. தாமரைச் செல்வி - 129, 265
420. தாஜ் ஏ. எம். -355
421. தாஜ் மகான் எம். - 187, 189
422. தாஸிம் ஏ. எல். கே. - 187
423. தாஜிம் அஹமத் - 189, 283
424. தியாகராஜ பாகவதர் எம். கே. -399, 462
425. தியாகராஜா சி. - 86
426. தியாகலிங்கம் - 228
427. திருக்குமரன் - 35
428. திருச்செல்வம் எஸ். - 41, 130
429. திருச்செல்வம் மு. - 37
430. திருஞானசம்பந்தர் - 401,402
431. திருஞானசுந்தரம் வீ.ஏ. - 172, 179, 183, 452
432. திருமாவளவன் - 400
433. திருநாவுக்கரசு - 185
434. திருலோகேஸ்வரன் -227
435. திருவள்ளுவர் (வள்ளுவர்)- 28, 78, 79, 80, 81, 449
436. தில்லைநடராசா எஸ். - 16, 17, 245, 357, 362, 389
437. தில்லைநாதன் எஸ்.-112,192,288
438. தில்லைநாதன் சி. - 7, 235, 292, 315, 454
439. தில்லை முகிலன் -335
440. திலக்பெரேரா - 108, 110
441. திலகநாயகம் போல் - 70, 71, 72, 73
442. திலகபாமா - 428, 433, 437
443. திலகர் மல்லியப்பூ சந்தி - 200, 386, 424

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

444. திலீபன் டொ. - 98, 260
445. திவ்வியராஜன் - 41
446. தினகரன் வே. (பத்தனையூர்) - 57
447. திஸ்ஸ காரியவாசம் - 25, 27
448. துட்ட காமினி (கைமுனு)- 361, 454, 455
449. துடாவை - 3
450. துரைசிங்கம் -332, 333
451. துரைமனோகரன் - 57
452. துரைராஜா வி. எஸ். - 179, 184, 185, 186
453. துரைவிஸ்வநாதன் (துரைவி) - 95, 107, 419, 420, 421, 425
454. துறையூரான் - 41
455. துஷ்யந்தன் வே. - 214
456. தெணியான் - 102
457. தெய்வநாயகம்பிள்ளை வி. ரி. வி. - 46, 47, 48, 49, 50
458. தெஹியான் டபிள்யு. டபிள்யு.- 324
459. தேவகௌரி சுரேந்திரன் (எம்.எஸ்)- 155, 156, 160, 380, 421, 446
460. தேவதாஸ் நாவாந்துறை - 185
461. தேவமுகந்தன் - 330, 339, 340, 341, 342, 343, 344, 345, 346
462. தேவராஜ் வி. - 177, 224, 225
463. தேவராஜா சோ. 23, 35, 104, 125, 127, 131, 139, 167, 225, 262, 266, 271
464. தேவிபரமலிங்கம் - 43
465. தேனுகா - 139
466. தோப்பில் முகம்மது மீரான்- 367

## ந

467. நக்கீரன் - 41
468. நடராசா - 176
469. நடராசா எஸ். பி. - 40
470. நடராசா வீ. 86
471. நடராஜா எஃவ். எக்ஸ். சி. - 327, 328
472. நடராஜா சோ. - 329
473. நடராஜா ஜனகன் - 413, 414, 418
474. நடேசபிள்ளை -311
475. நடேசய்யர் கோ. - 420, 427
476. நடேசன் சிவசண்முகமூர்த்தி - 7
477. நதிரா மரிய சந்தனம் - 446
478. நந்தமோகன் செ. - 395
479. நந்தி - 127, 201, 472, 475
480. நந்தினிசேவியர் - 438
481. நயீம் கீடின். பீ. - 473
482. நர்மதா ராமலிங்கம் - 34
483. நல்லசிவம் - 50
484. நவரட்னம் பரந்தாமன் - 402
485. நறுமுகை - 248
486. நஜிபுதீன் எம்.சி. - 370
487. நாகராசன் இ. - 39
488. நாகூர்கனி எஸ். ஐ. - 257, 323
489. நாகேஸ்வரன் க. - 43
490. நாதன் கே. - 468
491. நாராயணகுரு - 275
492. நாவேந்தன் - 332, 333
493. நிக்கினி ஜயதுங்கா - 469
494. நிக்ஷன் அ. - 306
495. நிர்சன் இராமாநுஜம் - 227
496. நிப்ராஸ் நிபாஸ் - 470
497. நிர்மல் ரஞ்சித் தேவசிறி - 414
498. நிர்மலேஸ்வரி பிரசாந் - 398
499. நிரஞ்சனா சந்துரு - 42
500. நிவாஸினி கோபாலகிருஸ்ணன் - 463, 464
501. நிஷா ஸ்ரீ வத்சலா - 404
502. நீர்வை பொன்னையன் - 1, 117, 122, 155, 156, 160, 161, 217, 236, 266, 304, 312, 315, 381, 382, 385, 407, 408, 423, 428
503. நீலாவணன் - 27, 58, 163, 164, 165, 166, 167,168, 453, 459
504. நெடுஞ்செழியன் இரா (நாவலர்) - 322, 350
505. நேசபூபதி நாகராஜன் - 45
506. நுஃமான் எம்.ஏ. - 27, 58, 59, 63, 163, 164, 168, 204, 313, 340, 341, 342, 343, 379, 380, 382, 383

## ப

507. பஞ்சாட்சரம் சா.வே. - 24
508. பட்டம்மாள் டி.கே. - 295
509. பண்டாரநாயக்கா எஸ்.டபிள்யு.ஆர்.டி. - 104, 350
510. பண்டாரவன்னியன் - 358, 360, 453

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

511. பத்தினி அம்மாள் - (சிதம்பர பத்தினி) - 71
512. பத்மசீலன் என். - 246
513. பத்மசீலன் சதபூ - 13, 149, 240, 241
514. பத்மநாதன் சி. - 287, 360
515. பத்மநாதன் சோ. (சோ.ப.) - 276, 453
516. பத்மா சோமகாந்தன் - 16, 44, 48, 287, 289, 294, 432, 436, 443, 460
517. பத்மினி - 42
518. பதியுதீன் மொஹமட் - 367
519. பர்வீன் நாச்சியாதீவு - 364, 365, 366, 368, 369, 370
520. பதும் புஞ்சிஹேவா - 470
521. பரமஹம்சர் (ராமகிருஷ்ணர்) - 405
522. பரராஜசிங்கம் எஸ். கே. - 71, 329
523. பராக் ஒபாமா - 309
524. பரிமேலழகர் - 78
525. பவானி ஆழ்வாப்பிள்ளை - 294
526. பவானி சிவகுமார் - 469
527. பவானி மகாதேவன் - 37
528. பஸ்தியாம்பிள்ளை - 196
529. பஷீர் சேகுதாவுத் - 172
530. பாக்கியராஜ் எஸ்.- 201
531. பாப்ளோ நெரூடா - 379
532. பாபநாசம் சிவன் - 399
533. பார்த்தசாரதி நா. (மணிவண்னன்) 15, 201
534. பாரதிதாசன் - 28, 32, 166
535. பாரதி ராஜநாயகன் (பாரதி ரா. / இராஜநாயகன் பாரதி) - 109, 217, 246, 321, 322
536. பாரி - 322
537. பாலச்சந்திரன் எஸ். ஆர். 90, 97, 102, 104, 161
538. பாலச்சந்திரன் கே. எஸ். - 41
539. பாலச்சந்திரன் வி. - 135, 136
540. பாலசிங்கம் - 289
541. பாலசுந்தரம் - 41
542. பாலசுப்பிரமணியம் ஐயர் கே. எஸ். 71
543. பாலசுப்பிரமணியம் சி. - 46
544. பாலவைரவநாதன் பருத்தியூர் - 174
545. பாலமுரளி கிருஸ்ணா - 72
546. பாலா சபாரத்தினம் - 50
547. பாலா தம்பு - 414
548. பாலுமகேந்திரா -34
549. பாலேந்திரன் - 186
550. பானுமதி - 65
551. பாஸ்க்கரா எஸ். - 332, 336
552. பிக்காசோ - 88
553. பிச்சமூர்த்தி ந. 203
554. பித்தன் -102
555. பிரதீப்குமார் ஆர்.சி. - 253
556. பிரபஞ்சன் - 34, 296
557. பிரபாகணேசன் - 182, 183
558. பிரபா வி. - 202
559. பிரபாகரன் கே. ஆர். -287
560. பிரமிளா செல்வராஜா (பிரமிளா பிரதீபன்) - 323, 387
561. பிரவீனன் மகேந்திரன் - 103
562. பிரேம்ஜி ஞானசுந்தரம் - 35,51, 255, 260, 384, 419, 432, 434, 437, 475
563. பிலோமினா சொலமன் - 185
564. பிளேட்டோ - 308
565. பிறட்மன் வீரக்கோன் - 363
566. பீர்முகம்மத் எம்.எம். - 352
567. பீர்முகம்மது சை. - 57, 352
568. புதுமைப்பித்தன் (செக்கலிங்கம் விருத்தாசலம்) - 62, 103, 205, 217, 240, 212, 329, 421, 423, 460, 461, 462, 463, 464, 465
569. புர்கான் பி. இஸ்திகார் - 286
570. புரான்அப்பு - 359
571. புவனா ஐயாம்பிள்ளை - 358, 363
572. புனிதம் திருச்செல்வம் - 38
573. பூந்தான் ஜோசப் - 67
574. பூரணி - 294
575. பெரியதம்பி - 102
576. பெரியதம்பிப்பிள்ளை - 166
577. பெரேரா என். எம். - 413
578. பெரோஸ் எஸ்.எம். 179
579. பெனடிக்ற் பாலன் - 31, 160, 195, 266, 311, 314, 315
580. பேரம்பலம் - 185
581. பேரன் நெல்லை க. - 104
582. பைஸல் முஸ்தபா - 286
583. பொன் இராமநாதன் - 53
584. பொன்சக்திவேல் - 55, 61

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

585. பொன்னம்பலம் மு. (மு.பொ.) - 27, 147, 161, 165, 326, 428, 452
586. பொன்னம்பலம் வீ. - 416
587. பொன்னீலன் - 31, 34, 435
588. பொன்னுத்துரை கே. - 246, 471
589. பொன்னுத்துரை எஸ். (எஸ்.பொ.) - 42, 54, 55, 56, 59, 61, 62, 155, 167, 198, 209, 210, 312, 327, 328, 389, 429, 428
590. பொன்னையா விவேகானந்தன்- 41
591. பௌசுல் ஹமீட் - 192

## ம

592. மக்பூல் - 23
593. மகாதேவர் தேசாய் - 376
594. மகாதேவன் கே.வி. - 37, 41, 399
595. மகாதேவா த. ச. - 350
596. மகாதேவா ப.க. - 331
597. மகேந்திரன் - 417
598. மகேஸ்வரன் வ. - 125, 248, 445
599. மகேஸ்வரி மகேந்திர நாயகம் - 287
600. மணி - 75
601. மணிபுத்திரி - 410
602. மணிமேகலை - 180, 193
603. மணியம் கே. எல். - 90, 91, 94, 95, 97, 98
604. மணியன் 'ஆனந்தவிகடன்' - 171
605. மதிமகன் வே. அ. - 40
606. மதுசூதனன் தெ. - 126, 151, 329, 349
607. மதுரா - 206
608. மதுவர்மன் மௌ. - 77
609. மயில்வாகனம் - 41
610. மயூரநாதன் சி. 246
611. மயூரன் மு. - 144, 270
612. மரியசேவியர் நீ. - 220
613. மருதூர்க்கனி - 311, 313
614. மன்சூர் எம். எம் - 259
615. மனுஷ்ய புத்திரன் - 258
616. மனோகணேசன் - 172
617. மஹ்மூத் - 281
618. மஹாகவி (உருத்திரமூர்த்தி. து.) 24, 27, 28, 44, 58, 63, 164, 165, 166, 168, 378, 453, 456
619. மஹிந்த ராஜபக்ச - 237, 238
620. மஜீத் மருதூர் ஏ. - 280
621. மாஓ சேதுங் (மாவோ) - 268, 272, 332, 413
622. மாணிக்கவாசகர் ஞா. - 78
623. மாதவையா - 318
624. மாதுமை - 248
625. மா.பா.சி. (மா. பாலசிங்கம்) - 217, 411
626. மாயாண்டி பாரதி - 312
627. மார்க்கண்டு மகாதேவன் - 241
628. மார்க்சிம் கோர்க்கி - 217, 243, 313, 475
629. மார்க்ஸ் அ. - 338
630. மார்க்ஸ் பிரபாகர் - 73
631. மாவை வரோதயன் - 37, 38, 41, 45
632. மானா மக்கீன் - 108, 110
633. மீரா வில்வராயர் - 398, 402
634. மீனட்சி சுந்தரம்பிள்ளை - 375
635. மீனடாட்சி சுந்தரனார் தெ. பொ. (தெ.பொ.மீ.) - 330, 350
636. முகர்ஜி - 269
637. முகிலன் வி. - 156, 157, 158
638. முகுந்தன் எஸ். - 202, 206
639. முத்தப்பன் செட்டியார் - 108, 189, 215
640. முத்து மாதவன் - 413
641. முத்துலிங்கம் அ. - 59, 428
642. முத்தையா ஆத்மஜோதி - 211
643. முரளிதரன் சு. - 103, 191, 199
644. முரளிதரன் மு. - 171
645. முருகபூபதி லெ. - 109. 175. 176. 367
646. முருகவேள் பரமநாதன் - 41
647. முருகானந்தம் அ. செ. - 107
648. முருகானந்தம் ச. - 95, 99, 100, 102, 103, 105, 106, 107, 334
649. முருகானந்தம் எம். - 427
650. முருகானந்தம் எம். கே. - 220, 223, 225, 250, 302, 303, 327, 330, 339, 340, 381, 466, 467

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

651. முருகையன் இ. - 27, 58, 59, 63, 75, 156, 165, 166, 391, 392, 393, 394, 395, 441, 453
652. முல்க்ராஜ் ஆனந்த் - 313
653. முல்லைமணி - 62
654. முனியப்பதாசன் - 428
655. முனுசாமி - 78
656. முஹம்மது - 399
657. முஹம்மது மதானி - 113
658. முஸ்ஸார்ரஃவ் எஸ்.எம்.எம். - 353
659. மூக்கயைா மா.செ. - 24, 25, 197, 467
660. மேத்தா மு. - 203
661. மேமன் கவி - 67, 69, 75, 91, 213, 261, 337, 366, 384, 388, 420, 436, 439, 475
662. மைதிலி அமுதன் - 202, 220
663. மொகின் சமீம் - 365
664. மொழிவாணன் - 86
665. மொஹிதீன் எச். எம். பி. - 210
666. மோகன் ராஜ் - 86
667. மோகனதாஸ் - 92
668. மோசேஸ் எஸ். - 84, 85, 86, 89
669. மௌனகுரு சி. - 65, 123, 125, 315

ய

670. யாழ்ராஜன் - 279
671. யேசுரத்தினம் - 186
672. யேசுராசா அ. - 278, 312, 341, 344, 428
673. யோக தில்லைநாதன் - 185
674. யோகநாதன் செ. - 30, 31, 32, 33, 34, 35, 36, 156, 198, 314, 427
675. யோகர் சுவாமி - 9
676. யோகராசா செ. - 102, 382, 429
677. யோகா பாலச்சந்திரன் - 292
678. யோகேஸ்வரி சிவப்பிரகாசம் - 130

ர

679. ரகுநாதன் - 192
680. ரகுநாதன் என்.கே. - 160, 384, 385
681. ரகுவரன் உ. - 156, 157, 159, 161
682. ரஞ்சகுமார் - 91, 94, 241, 438
683. ரஞ்சன் இரா. - 391
684. ரவிவர்மன் ரி. - 156, 157
685. ரவீந்திரநாத் தாகூர் (தாகூர்) - 421
686. ரவீந்திரன் மு. - 86, 123, 185
687. ரவீந்திரன் வதிரி சி. - 63, 86,370
688. ரவூப் ஹக்கீம் - 187, 189, 190, 285
689. ரஸ்மின் எம். சி. - 368, 424
690. ரஜனிகாந்த் - 293
691. ரஜனி சந்திரலிங்கம் - 239, 304, 371, 402
692. ராகுலன் கே. - 439
693. ராணி சீதரன் - 214, 215
694. ராணி செல்வரத்தினம் - 37
695. ராதா எம். ஆர். - 41, 293
696. ராதிகா காளிராஜன் - 469
697. ராதிகா சிற்சபேசன் - 274
698. ராமசாமி ஈ. வெ. (பெரியார்/ ஈ.வெ.ரா) - 234, 235, 277, 279, 374
699. ராமதாஸ் - 185
700. ராமநாலதன் (சுருட்டர்) - 16
701 ராமநாதன் கே. - 312
702. ராமையா என்.எஸ்.எம்.- 115, 472
703. ராஜ் பிரசாத் - 419, 424, 425, 473
704. ராஜ் மீரா - 41
705. ராஜகோபால் பொன் - 177
706. ராஜசிம்மன் - 401
707. ராஜதுரை காவலூர் - 51, 160, 212, 314, 380
708. ராஜ ராஜ சோழன் - 357, 401
709. ராஜப்பன் - 110
710. ராஜஸ்ரீகாந்தன் - 102
711. ராஜா - 67
712. ராஜாஜி (ராஜகோபாலாச்சாரியார்) - 72, 330, 376
713. ராஜேந்திரா வி.ரி. - 149
714. ரிம்ஸா முஹம்மது - 389
715. ரிஷிகேசன் - 287
716. ரூசோ - 361
717. ரூபவதி சிவத்தம்பி - 7
718. ரெங்கன் (ரங்கன்) - 96


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ல


719. லக்சுமி ஸ்ரீதரன் - 406
720. லடீஸ் வீரமணி நடிகவேள் - 114, 193
721. லலிதாம்பிகை சண்முகநாதன் - 339
722. லறீனா ஹக் - 437, 448
723. லியோனார்ட் வூல்ஃவ் - 363
724. லீலா நாராயணன் - 185
725. லுணுகலை ஸ்ரீ. - 199
726. லூசூன் - 313
727. லூயிஸ் ஜே. வி. - 356, 357, 358, 359, 360, 363
728. லெனின் - 54, 79, 96, 276, 315
729. லெனின் மதிவானம் - 79, 117. 118. 120, 121, 200, 278, 311, 312, 318, 383, 407, 424
730. லேனா தமிழ்வாணன் - 35
731. லோகநாதன் - 151
732. லோகேஸ்வரன் கே. சி. - 357, 358, 360, 362
733. லோசன் எம். ஐ. 63
734. லோசன் கே. ஆர் - 76
735. லோங் பிதா - 66


## வ


736. வசந்தா நடராசன் -41
737. வசந்தா வைத்தியநாதன் - 405
738. வசந்தி தயாபரன் - 103, 129,130, 301, 303, 304, 305, 317, 330, 339, 341, 440
739. வசிட்டர் - 271
740. வரதர் - 59, 61
741. வரதராசன் மு. (மு.வ.) - 15, 32, 78, 82, 209
742. வரதராணி - 64
743. வரதா யோகநாதன் - 350
744. வ. ரா. - 112
745. வல்லபாய் பட்டேல் - 187
746. வல்லிக்கண்ணன் - 259, 260
747. வ.வே.சு. ஐயர் (வ.வே. சுப்பிரமணியம்) - 318, 349
748. வாசகர் கே. எம். 192
749. வாசுகி சின்னராசா - 42
750. வாசுதேவநாணயக்கார - 171
751. வாமதேவன் எம். 197
752. வான்மீகி - 87
753. வாஸ் கே. வி. எஸ். - 112
754. விக்கிரமசிங்க எச். எச். - 115
755. விக்கிரமபாகு கருணாரத்னா - 415, 416
756. விக்கினேஸ்வரன் சி.வி. - 170, 172, 417
757. விசுவநாதன் - ராமமூர்த்தி - 399
758. வித்தியாதரன் ந. - 175, 177, 246
759. வித்தியானந்தன் சு. - 11, 31, 65, 192, 282, 393
760. விதுமினி கௌசல்யா ஜயவர்தனா - 287
761. விபுலாநந்த அடிகள் -11, 240, 399
762. விமலராஜா வே. - 9, 12
763. விமலன் சின்னராசா - 339, 344
764. விவேகாநந்தர் - 403 404, 405, 406
765. விவேகானந்தன் எஸ். - 406
766. விஜய் பா. - 203
767. விஜயகுமார் அ. - 124, 328
768. விஜயகுமார் ஆர். - 126
769. விஜயபாஸ்கரன் வ. (சரஸ்வதி) 201, 208, 210, 211, 212, 213
770. விஜயராஜா - 180
771. விஜயன் கே. 161, 315
772. விஜிதா சிவபாலன் - 369
773. வீரகத்தி ஆ. - 172, 306, 310
774. வீரசேகர - 259
775. வீரமணி ஐயர் - 248
776. வீரமா முனிவர் - 45
777. வெங்கட் சாமிநாதன் - 205
778. வெங்கட் ராமன் - 375
779. வெங்கடேசன் பா. - 430, 437
780. வெள்ளிவீதியார் - 447
781. வேணியன் கங்கை - 110
782. வேணியன் வேலணை-111, 172
783. வேர்ட்ஸ் வேர்த் - 189
784. வேல் அமுதன் - 37, 39, 41
785. வேல் ஆனந்தன் - 402


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

786. வேலாயுதம் - 202
787. வேலுப்பிள்ளை சு. (சு.வே.) - 314
788. வேலுப்பிள்ளை சி.வி. - 200, 316, 473
789. வைக்கம் பஷீர் - 367
790. வைத்த மாநிதி - 47
791. வைத்தியலிங்கம் - 217, 427

## ற

792. றஞ்சன் த. - 262
793. றபீக் எம். ஏ. - 321, 322, 323, 324
794. றமீஸ் அப்துல்லா - 167, 303, 304
795. றில்சாட் பஷீர் - 80
796. றிஸ்வான் - 410
797. றொசாரியோ பெர்ணாண்டோ - 3
798. றோலிங் - 196
799. றோஹன விஜயவீர - 232

## ஃ

800. ஃபூகோ - 454

## ஸ - ஷ - ஹ - ஜ - ஸ்ரீ


801. ஸ்ரனிஸ்லொஸ் - 112
802. ஷகி எம். - 84
803. ஷரிபுதீன் ஆ.மு. - 86, 166, 459
804. ஷியாம் செல்லத்துரை- 467
805. ஷெல்லி - 275, 276
806. ஷேக்ஸ்பியர் - 222, 4353
807. ஷோபா சக்தி - 431
808. ஹசன் அலி - 283, 284
809. ஹம்சானந்தி தர்மபாலன் - 401
810. ஹன்டி பேரின்பநாயகம் - 230
811. ஹனிபா எஸ்.எல்.எம். - 326,: 327, 328, 330, 346, 365
812. ஹாசினி விஜேசிங்க - 287
813. ஹிட்லர் - 309, 442
814. ஹென்றி ஜெயசேனா - 33, 191, 193
815. ஜகந்நாதன் கி.வா. - 83, 133, 201, 210, 211, 371, 372, 373, 374, 375
816. ஜவகர்லால் நேரு - 410
817. ஜவாஹிர் - 183
818. ஜிவ்ரி ஏ. ஆர். எம். - 324
819. ஜின்னாஹ் ஷரிபுதீன் - 17, 25, 28, 86, 123, 166, 297, 396, 452, 453, 454, 455, 456, 457, 458, 459
820. ஜீவ குமாரன் வீ. டென்மார்க் - 130
821. ஜீவா சதாசிவம் - 473
822. ஜீவானந்தம் ப. - 210, 312
823. ஜெகதீசன் - 39
824. ஜெமீல் எஸ்.எச்.எம்.- 10, 284
825. ஜெயகாந்தன் (ஜே.கே.) - 30, 59, 60, 176, 192, 209, 212, 260, 386
826. ஜெயசீலன் - 58, 75
827. ஜெயபாலன் வ. ஐ. ச. - 29
828. ஜெயமோகன் - 424, 425, 431
829. ஜெயராஜ் இ. - 24, 25, 27, 49, 304, 322, 323, 437, 457.
830. ஜெயவர்த்தனா ஜே.ஆர். 111, 118
831. ஜெனோவா அற்புதன் - 273
832. ஜொஸிற்றா பீற்றர் - 84
833. ஜோசப் தெளிவத்தை - 62, 94, 102, 107, 108, 112, 115, 193, 196, 200, 210, 215, 216, 301, 313, 386, 419, 420, 424, 425
834. ஜொஸப் ஸ்ராலின் - 243
835. ஜோதிலிங்கம் எஸ். ஏ. 414
836. ஜோர்ஜ் சந்திரசேகரன் - 186
837. ஸ்ரீகணேசன் கந்தையா - 240, 248
838. ஸ்ரீ சங்கர் - 185
839. ஸ்ரீதர் - 288
840. ஸ்ரீதரசிங் பூ. - 13, 25, 36, 144, 205
841. ஸ்ரீதரன் அரியேந்திரன் - 172
842. ஸ்ரீதுங்க ஸ்ரீஜயசங்க - 418
843. ஸ்ரீ பிரசாந்தன் - 24, 25, 26, 27, 28, 29, 63, 456
844. ஸ்ரீமா-சாஸ்திரி - 415

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மா.பா.சி. என அறியப்படும் மா. பாலசிங்கம் 26.11.1939 அன்று யாழ்ப்பாணம் கொட்டடியில் பிறந்தவர். சென். பற்றிக்ஸ் கல்லூரி மாணவர். எழுதுவினைஞராக பணியாற்றி ஓய்வுபெற்ற மா.பா.சி. நீண்ட காலமாக கொழும்பில் வசித்து வருகிறார். 'ஏமாற்றம்' எனும் சிறுகதை(தினகரன் வாரமஞ்சரி) வாயிலாகப் படைப்புலகில் அறிமுகமாகி, 'இப்படியும் ஒருவன்' (மல்லிகைப் பந்தல் வெளியீடு - 2002), 'எதிர்க்காற்று' (2008) எனும் இரு சிறுகதைத் தொகுதிகளைத் தந்துள்ளார். குறுநாவல்களும், நாவல்களும் வெளிவர வேண்டியனவாக அவரிடம் காத்திருக்கின்றன.

இலக்கிய அரங்குகளில் கேட்டவற்றை "தினக்குரல்" நாளேட்டில் பதிவு செய்துவந்த மா.பா.சி. யின் கட்டுரைகள் வாசக உலகில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தின. அவற்றின் தொகுப்பு இது. நூல் வெளியீடுகள் மற்றும் நினைவுப் பரவல் போன்ற கூட்ட நிகழ்வுகளைப் பதிவு செய்ததன் வாயிலாக இசை, கூத்து, நாடகம், ஊடகத்துறை, நாவல், சிறுகதை, காவியம், சினிமா, கோட்பாட்டுப் பரப்புரை சார்ந்த பல தளங்களின் பல்வேறு ஆளுமைகளையும் இங்கு வெளிப்படுத்தியுள்ளார். வேறுபட்ட பல அமைப்புகளது பரிமாணங்களை இங்கு தரிசிக்க இயலுகிறது. கூட்ட உரைகளின் விவரணம், பத்திரிகைத் தமிழ், இலக்கிய இரசனைப்பாங்கு என்பவற்றின் சங்கமிப்போடு கூடிய இந்த நூலின் நடையியல் தமிழுக்குப் புதிது. 2007 - 2014 ஆகிய ஆண்டுகளுக்கு இடைப்பட்டதான காலகட்டத்தின் எமது கலை - இலக்கிய - சமூக அரங்குகளின் இயங்காற்றல் - செல்நெறிப் பரிணமிப்புகள் என்பவற்றை வெளிப்படுத்தும் வடிவத்தினாலும், புதிய பாணி நடையியல் வீச்சுக் காரணமாயும் இந்த நூல் பெரும் கவனிப்புக்குரியது!

ISBN 978-955-41109-2-2

புதிய பண்பாட்டுத் தளம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org